திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் ஆய்வு மாலை

திருவளர்திரு கயிலைமாமுனிவர் காசிவாசி
முத்துக்குமாரசாமித் தம்பிரான்சுவாமிகள் அவர்கள்
அருளாணையின்வண்ணம் வெளியிடப்பெற்றது



காற்றாகி எங்கும் கலந்தாய்போற்றி, கயிலை மலையானே போற்றி போற்றி

பதிப்பாசிரியர்

த.கோ. பரமசிவம்

ந. முருகேசன்

கோ.ப. நல்லசிவம்

திருநாவுக்கரசர் இலக்கிய ஆய்வு மாநாடு
வாரணாசி - 2003

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் ஆய்வுமாலை

தொகுதி இரண்டு

திருவளர்திரு கயிலைமாமுனிவர் காசிவாசி
முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின்
அருளாணையின்வண்ணம் வெளியிடப் பெற்றது.

பதிப்பாசிரியர்
த.கோ. பரமசிவம்
ந. முருகேசன்
கோ.ப. நல்லசிவம்

திருநாவுக்கரசர் இலக்கிய ஆய்வு மாநாடு
குமாரசாமித் திருமடம் - வாரணாசி
2003

- திருநாவுக்கரசர் ஆய்வுமாலை
  தொகுதி இரண்டு

- திருப்பனந்தாள் காசித்திருமடமும்
  களம்பூர் கோவிந்தசாமி அடிகளார் அறக்கட்டளையும் இணைந்து
  நடத்திய திருநாவுக்கரசர் ஆய்வு மாநாட்டின் வெளியீடு

- திருவள்ளுவராண்டு 2034, புரட்டாசி 7, 8, 9
  (24, 25, 26.9.2003)

- முதற்பதிப்பு : 2003 செப்தம்பர்

- பதிப்பாசிரியர்

  முனைவர் த.கோ. பரமசிவம்
  தலைவர், ஓலைச் சுவடித்துறை,
  தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

  முனைவர் ந. முருகேசன்
  இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
  ஸ்ரீ கா.சு.சு. கலைக் கல்லூரி
  திருப்பனந்தாள்

  தேவார இசைமணி திரு கோ.ப. நல்லசிவம்
  விரிவுரையாளர், தமிழ்த்துறை
  ஸ்ரீ கா.சு.சு. கலைக் கல்லூரி, திருப்பனந்தாள்.

- விலை : உரூபாய் 250/-

- நூல் கிடைக்குமிடம் : மேலாளர் அவர்கள்
  காசித்திருமடம்
  திருப்பனந்தாள் - 612 504

- கணினி அச்சு : சபாநாயகம் பிரிண்டர்ஸ்
  176, கீழ ரத வீதி, சிதம்பரம். ✆ : 223040, 223020

- அச்சாக்கம் : யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ்
  101-D, ராயப்பேட்டை நெடுஞ்சாலை
  லஸ், மயிலாப்பூர், சென்னை - 600 004.
  ✆ : 24984693, 24661807

திருநாவுக்கரசர் ஆய்வுமாலை

ஆய்வு மலர்கள்

(தொகுதி இரண்டு)

1. நாவுக்கரசரும் அடியார்களும்

அரு. அப்பாசாமி, புதுவை.

திருமுறைகள், தமிழகத்தில் தோன்றிய சிவனருட் செல்வர்களால் அருளிச் செய்தவை. இறைவனைப் பாடுவதற்கென்றே எழுந்த திருமுறைப் பாடல்களில் அடியார்களையும் பரவுவன விரவிவருதல் காணலாம். ''சமயக்குரவர்கள் அனைவரும் அடியார் சீரினைப் பரவியிருப்பினும் அவருள் சுந்தரர் அருளிச் செய்துள்ள 'திருத்தொண்டத் தொகை' அடியார் சிறப்புக்கு மூல நூலாகப் போற்றப் பெறுவது. நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்த திருத்தொண்டர் திருவந்தாதி, ஆளுடைய பிள்ளையார் பெயரிற் பாடிய திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக்கோவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை என்ற பிரபந்தங்களும், அப்பரைப் பாடுபொருளாகக் கொண்டு போற்றிய திருநாவுக்கரசர் திரு ஏகாதசமாலையும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வழி நின்று அடியார் பெருமையினை மேலும் விரித்துப் பரவும் பான்மையின. பன்னிரண்டாம் திருமுறையாக அமையும் பெரியபுராணம் திருத்தொண்டர் புராணமாக விரிவு பெற்றுத் தொண்டின் பெருமையையும், தொண்டர்களின் சிறப்பினையும், பரம்பொருளின் அருட்செயலையும் போற்றிப் பரவும் இனிய இலக்கியமாகத் திகழ்தல் காணலாம்'' (திருமுறை இலக்கியம்)

திருத்தொண்டர் புராணத்தில் வரும் தனியடியார் அறுபான் மூவர் நாயன்மார்களில் ஒரு சிலரைத் திருநாவுக்கரசர் தம் பதிகங்களில் சிறப்பித்துப் பாடியுள்ள திறத்தினைச் சான்றோர்கள் எடுத்துக் காட்டி யுள்ளனர். (தருமையாதீனம் தேவாரம் (1963) நாயன்மார் வரலாற்றுக் குறிப்பு) அவ்வடியார்களில் சிலரைப் பற்றி அறிவதே இவ்வுரை.

அப்பூதியடிகள்

'திருஞானசம்பந்தர்' என்னும் பெயரை உணர்ந்தும், நுகர்ந்தும் கூறியுமே சிவமாம் தன்மைப் பெருவாழ்வு பெற்றாள் 'திருமயிலைப்பூம் பாவை'; 'நம்பியாரூரர்' என்னும் திருப்பெயரை நினைந்தும் கூறியுமே திருப்பெருகு வாழ்வு பெற்றார் புத்தூர்ச் சடங்கவி சிவாச்சாரியார் 'மகளார்'; அவ்வாறே, 'திருநாவுக்கரசு' என்ற பெயரை எழுதியும் கூறியுமே என்றும் துன்பில் பதம் பெற்றார் அப்பூதியடிகள். இவ்வாறு கூறுவது சைவ மரபு. (திருநாவுக்கரசு ஓர் ஆய்வு)

"அப்பூதியடிகள் நன்முத்திப் பேரின்பப் பெருவாழ்வைப் பெறுவதற்காக அவர் தவம் முதலிய எந்த ஒரு வழியையும் பின்பற்றவில்லை. 'திருநாவுக்கரசு' என்ற ஒப்பற்ற சொல்லை இடைவிடாமல் எழுதியும் சொல்லியும் பெற்றுவிட்டார். அப்பரடிகளுக்கு உரிய பெயராக இறைவன் அறிமுகப் படுத்திய சொல்லே திருநாவுக்கரசு என்று கூறுவர்." (மு.சு. நூல்)

அப்பூதியடிகள் நாவுக்கரசரைக் காணாதிருந்தும், அவர்பால் கொண்ட அன்பினால் அவர் பெயரையே எல்லோருக்கும், எல்லாவற்றிற்கும் வைத்து, அவர் பெயரால் தண்ணீர்ப் பந்தல் வைத்திருந்தார். திங்களூர் சென்ற நாவுக்கரசர் இச்செய்தியறிந்து அப்பூதியடிகளிடம் சென்று, நீர், உம்முடைய பெயரால் தண்ணீர்ப்பந்தல் வையாமல் வேறொருவர் பெயரால் அமைத்த காரணம் யாதென வினவ, அப்பூதியடிகளார் நாவுக்கரசரை அறியாமல், 'சமண்சமயத்தினின்றும் நீங்கிக் கல்லைத் தெப்பமாகக் கொண்டு கடலைக் கடந்த அவர் பெயரினும் வேறுபெயர் சிறப்புடையதோ? சைவராக இருந்தும் இவ்வாறு கேட்கும் நீர் யார்? என்று வெகுண்டு கேட்க 'நாவுக்கரசர்', "சமண் சமயத்தினின்றும் கரையேற இறைவனால் சூலை கொடுத்து ஆட்கொள்ளப் பெற்றுய்ந்த சிறுமையேன் யான்" என்றார். சைவ அடியார்தாம் நாவுக்கரசர் என்று அடையாளம் கண்டு கொண்ட அப்பூதியடிகள் ஆனந்தக் கடலில் மூழ்கித் திளைத்து நாவுக்கரசரை வணங்கித் திருவமுது செய்ய அழைக்க, அதற்கிசைந்தார். அமுது பரிமாற இலை பறிக்கச் சென்ற அப்பூதியடிகளின் மகன் வாளரா தீண்டப்பட்டுப் போந்தான் என்றறிந்து சிவபெருமான் முன் சென்று "ஒன்று கொலாம்" என்னும் பதிகம் பாடி அம்மகனை உயிர்ப்பித்தெழச் செய்தார் நாவுக்கரசர்.

அப்பூதியடிகள் உபசரிக்கச் சில நாள் திங்களூரில் தங்கியிருந்த நாவுக்கரசர், அடிகளின் ஒழுக்கத்தின் விழுப்பத்தினையும், சிவனடிமைத் தொண்டினையும் சிறப்பிக்கும்படியாக அகப்பொருள் துறையமையப் பாடிய சிறப்பு ஓர்ந்துணரத்தக்கது.

"வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய வழலோம்பு மப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே".

(4.12.10) என்பது, 'என் வளைகளை வஞ்சித்துக் கவர்ந்த பழனத்தான் வாராமல் என்னை இடர்ப்படுத்துவானேயானாலும் பஞ்சின் மெல்லடியும் சிறகும் உடைய அன்னப்புள் பரந்து ஒலிசெய்யும் திருப்பழனத்திறை வனுடைய 'சேவடி', சிவபூசையின் ஓரங்கமான சிவாக்கினி காரியத்தை நாடோறும் வழாது புரிந்து அவ்வேள்வியாகிற நல்வினையால் நாட்டில் வறுமை இல்லாதவாறு செய்யும் அப்பூதியடிகளது 'தலைமுடிப் பூவாய்'

விளங்குவது என்ற கருத்தமைய உள்ளது. இதனால் நாவுக்கரசர். அப்பூதியடிகள்பால் வைத்த பெருமதிப்பு இனிது விளங்கும்.

அமர்நீதி நாயனார்

"அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கடியேன்" என்று சுந்தரர் போற்றும் அமர்நீதிநாயனார் திருத்தொண்டின் சிறப்பைக் காண்போம்.

திருநல்லூரில் திருமடம் அமைத்துத் திருத்தொண்டு புரிந்து வந்தார் பழையாறைப் பதிவணிகர் குலத் தோன்றலாகிய அமர்நீதி நாயனார். சிவபெருமான் சிவனடியார் வடிவில் தோன்றி அமர்நீதி நாயனார்பால் கோவண ஆடையொன்றைக் கொடுத்துப் பாதுகாத்துத் தரும்படிக் கூறிக் காவிரியாடச் சென்றார். அவ்வாறு கூறிச் சென்றவர், அக்கோவணம் மறையுமாறருளி, காவிரி நீராடிவந்து, நாயனாரிடம் அடைக்கலப் பொருளாகத் தந்த கோவண ஆடையைப் பெற முடியாமல், வேறொன்றைத் தருகிறேன் என்று நாயனார் கூற, சிவனடியார் நான் கொடுத்ததற்கொத்த கோவணம் என்னிடம் உள்ளது. அதற்குத் தகுந்தது உன்னிடம் உளதெனில் நிறுத்துத் தருக எனக் கூறித் தம் கோவணத்தை நிறையிடை வைத்தார். நாயனாரிடம் உள்ள எல்லாப் பொருள்களையும் ஈடாக வைத்தும் கோவண நிறைக்கு அவை ஒவ்வாமையால் அத்துலைத்தட்டில் அஞ்செழுத்தோதித் தாமும் தம் மனைவியும் தம் புதல்வனும் ஏறினர். கோவணமும் நாயனாரின் அடிமைத் தொண்டும் ஒத்தலால் நேர் நின்றது துலை. இவ்வடியாரை இறைவன் ஆட்கொண்டதனை நாவுக்கரசர்,

> **"நீட்கொண்ட கோவணங் காவென்று சொல்லிக் கிறிபடத்தான்**
> **வாட்கொண்ட நோக்கி மனைவியொடு மங்கொர் வணிகனை**
> **ஆட்கொண்ட வார்த்தை யுரைக்குமன் றோவிவ் வகலிடமே"**

(4.97.7) என்று நாயனாரின் அன்புத் திறனைப் பாராட்டினார்.

கணம்புல்லர்

'கடியார் கணம்புல்லர்' என்று பூந்துருத்தி நம்பிகாட நம்பி போற்றும் கணம்புல்லர் பற்றிக் காண்போம்.

இருக்குவேளூரில் பெருஞ் செல்வராயிருந்த 'கணம்புல்லர்', "செல்வத்தின் பயன் திருக்கோயில்களில் விளக்கேற்றுதலே" என்னும் உறுதி பூண்டு திருத்தொண்டு செய்து வந்தார். நாளுக்கு நாள் செல்வம் குறைந்து வறுமையெய்தித் தில்லைப் பதியையடைந்து கூத்தப் பெருமானை வழிபட்டு இல்லத்துப் பொருள்களை விற்றுத் திருத்தொண்டு முட்டாமல் நடத்தி வந்தார். பொருள்களும் ஒழிந்தன. கணம்புல்லறுத்து விற்றுக் கிடைக்கும் பொருள் கொண்டு விளக்கெரித்தார். அதனால்

அவருக்குக் 'கணம்புல்லர்' என்ற பெயருண்டாயிற்று. கணம்புல்லும் விலைபோகாதது கண்டு அதனையே திரித்து விளக்கெரித்தார். புற்கள் போதாமையால் தம் முடியை மடுத்தெரிக்கலானார். இவ்வாறு அடியார் இருவினையறுத்த ஏற்றத்தைச் சேக்கிழார்..... 'தந்திருமுடியை, என்புருக மடுத்தெரிந்தார் இருவினையின் றொடக்கெரித்தார் (கணம்.7) என்று போற்றுவர்.

பிறவிப்பிணி தீர்க்கும் அரிய தவத்தையுடைய கணம்புல்லர் பற்றி நாவுக்கரசர்,

''அணங்குமை பாகமாக அடக்கிய ஆதிமூர்த்தி
வணங்குவார் இடர்கள் தீர்க்கும் மருந்துநல் லருந்தவத்த
கணம்புல்லர்க் கருள்செய்து காதலா மடியார்க்கென்றும்
குணங்களைக் கொடுப்பர்போலும் குறுக்கை வீரட்டனாரே.''

(4.49.9) என்றும்,

....''எண்ணி றைந்த குணத்தினாலே
கணம்புல்லன் கருத்துகந்தார் காஞ்சி யுள்ளார்
கழிப்பாலை மேய கபாலப்பனார்
மணம்புல்கு மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே''

என்று போற்றிச் சிறப்பிக்கின்றார்.

கண்ணப்பர்

'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்' (218) என்று மாணிக்கவாசகர் போற்றும் கண்ணப்பர், காளத்திமலை மீதிருக்கும் குடுமித் தேவரைக் கண்டு வழிபட்டு மனம் கசிந்து பூசனை புரிய எண்ணி, வாயே கலசமாகப் பொன்முகலியாற்று நீரை வாயிலும் மலர்களைப் பறித்துத் தலைமுடியிலும், பதம்பார்த்த இறைச்சியை ஒரு கையிலும் அம்பும் வில்லும் ஒரு கையிலுமாகக் கொண்டு சென்று, வாயிலுள்ள நீரால் காளத்தியப்பரைத் திருமஞ்சனமாட்டிப் பூக்களைச் சூட்டி வழிபட்ட மாண்பினர்.

நாடோறும் சிவபூசை செய்யும் சிவகோசரியாருக்குத் திண்ணனாரின் இச்செய்கை அனுசிதமாகப் படவே மிகுந்த வருத்தத்துடன் சிவபூசை முடித்துச் சென்றார். அன்றொரு நாள் அவர் கனவில் திண்ணனாரின் மெய்யன்புத் திறங்களைக் கூறிய இறைவன் பணித்தவாறே, வழக்கம் போல் பூசனை முடித்துத் திண்ணனாரின் அன்பின் பெருக்கினைக் காண விழைந்து சிவகோசரியார் மறைந்திருந்தார்.

வழக்கம் போலவே பூசனை யியற்றவந்த வந்தார் திண்ணனார். சிவலிங்கத்தின் வலக்கண்ணில் குருதிசிந்தக் கண்டு மனம் பதைத்து பல மூலிகைச் சாறுகளைப் பிழிந்து விட்டும் கண்ணில் குருதி நிற்காதது கண்டு 'ஊனுக்கு ஊனிடல் வேண்டும்' என்ற வாய்மை நினைவுக்கு வரவே தமது கண்ணை அம்பினால் தோண்டி அப்பினார். குருதி நின்றது கண்டு ஆனந்தக் கூத்தாடினார். அடுத்த இடது கண்ணிலிருந்தும் குருதி வடிவது கண்டு தமது மற்றொரு கண்ணைத் தோண்டி அப்ப முயன்றார். அப்பொழுது 'நில்லு கண்ணப்ப நில்லு' என்று இறைவன் திருவாய் மலர்ந்து தடுத்துத் தமது வலப்புறம் இருக்குமாறு பணித்தான்.

இக்கண்ணப்ப நாயனாரின் வரலாற்றைத் தமது திருப்பாடல்களில் சுருக்கமும் அழகுந் தோன்றக் குறிப்பிடுகின்றார் நாவுக்கரசர்.

''காப்பது ஓர்வில்லும் அம்பும் கையதுஓர் இறைச்சிப்பாரம்
தோள்பெருஞ் செருப்புத் தொட்டு தூயவாய்க் கலசம்ஆட்டி
தீப்பெருங் கண்கள் செய்ய குருதிநீர் ஒழுகத் தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார் குறுக்கை வீரட்டனாரே''

(4.49.7)

என்று சுட்டியுள்ளார்.

தவச்சிறு வேடரைத் தவபெருந் தேவராகச் செய்தருளியதைத் திருநாவுக்கரசர்,

குவப்பெருந் தடக்கை வேடன்
கொடுஞ்சிலை இறைச்சிப் பாரம்
துவர்ப் பெருஞ் செருப்பால் நீக்கி
தூயவாய்க் கலசம் ஆட்ட
உவப்பெருங் குருதி சோர
ஒருகண்ணை இடந்து அங்குஅப்பத்
தவப்பெருந் தேவு செய்தார்
சாய்க்காடு மேவினாரே. (4.65.8)

என்று உருக்கமாகக் கண்ணப்பர் வரலாற்றினைப் பாடுதல் அறியத்தக்கது.

கண்ணப்ப நாயனார் வழிபட்ட செய்தியை நினைந்து உருகி அருளியதனை அப்பர் பெருமான்,

''கண்ணப்பன்கண் அப்பக்கண்டு உகந்தார்
கழிப்பாலை மேய கபால (அ)ப்பனார்
வண்ணப்பிணி மாயயாக்கை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போதும் நாமே''

என்றும் குறிப்பிடுகின்றார். (6.12.6)

கோச்செங்கணான்

என்னே! செங்கண்ணானோ! என்று தன் தாய் கமலவதியார் கூறிய செங்கணான் பற்றிக் காண்போம்.

முற்பிறவியில், காவிரிக் கரையிலமைந்த அழகிய சோலையில் உள்ள வெண்ணாவல் மரத்தடியில் சுயம்புவாக வெளிப்பட்டிருந்த சிவலிங்கத்தின் மேல் சருகு விழாதபடி தன் வாயின் நூலினால் வலை கட்டி வழிபட்ட சிலந்தி சிவ புண்ணியத்தினால் பின்னைப் பிறவியில் கோச்செங்கண்ணானாகப் பிறந்தமையினை அருளாசிரியர்கள் பலரும் பாடியுள்ளனர். சிலந்தியைப் போலவே சிவ பக்தியில் முன்னின்ற யானை தன் துதிக்கையால் நீர்முகந்து சிவலிங்கத்தை நீராட்டி வழிபட்டதால் அத்தலம் 'ஆனைக்கா' எனப் பெயர் பெற்றது.

செங்கணான் வரலாற்றைச் சற்று விரித்து நாவுக்கரசர்,

''சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழல் பந்தர்செய்து
உலந்து அவன்இறந்த போதே கோச்செங்கணானும்ஆக
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனில் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே.
(4.49.4)

என்று இசைத்துள்ளார்.

இதனால் கோச்செங்கட்சோழ நாயனார் புராணம் உணர்த்தப் பெறுகிறது. திருநிழற்பந்தர் சமைத்து இழிந்த சிற்றுயிரும் பேரறிவுடைய மக்கள் செய்யும் சிவபுண்ணியத்தை மேற்கொண்ட உயர்வு குறித் துணர்தல் தக்கது.

சிலந்தி தன் வாய்நூலினால் பந்தர் செய்வதற்குரிய ஏதுவைச் சாய்க்காட்டுப் பதிகத்தில் நாவுக்கரசர்,

''அரணிலா வெளிய நாவல் அருநிழல் ஆகாசன்
வரணிய லாகித் தன்வாய் நூலினாற் பந்தர்செய்ய
முரணிலாச் சிலந்தி தன்னை முடியுடை மன்னனாக்கித்
தரணிதா னாள வைத்தார் சாய்க்காடு மேவினாரே'' (4.65.3)

என்று குறிப்பிடுவர்.

சண்டேசுர நாயனார்

நிரை மேய்த்தலையே தம் திருத்தொண்டாகக் கொண்ட விசாரசருமர், 'அங்கண் முன்னை யருச்சனையின் அளவின் தொடர்ச்சி விளையாட்டாக' மண்ணியாற்றங்கரையில் திருவாத்தியின் கீழ் மணலால் சிவலிங்கம் அமைத்துப் பால் கறந்தாட்டி வழிபடுவாராயினர். தனயன் செயலைக்

காணப் பொறாத தந்தை திருமஞ்சனத்திற்குரிய பாற்குடத்தைக் காலால் இடறினான் தந்தை மேல் தனயன் வீசிய கோல் மழுப்படையாக அவன் கால்களைத் தடிந்தது. விசாரசருமர் அது பற்றி எண்ணாது சிவ பூசையில் கருத்தூன்றினார். அம்மையப்பராகக் காட்சி தந்த சிவபெருமான் கொன்றைமலர் மாலையினை அவர் முடியிற் சூட்டித் தொண்டர்க்குத் தலைவனாக்கிச் சண்டீசப்பதம் தந்து ஆண்டு கொண்டார். அது முதல் இயற்பெயரானன்றி சிறப்புப் பெயராகிய சண்டேசுரர் என்றே இந்நாயனார் அழைக்கப் பெற்றார். இவர் வரலாற்றைத் திருநாவுக்கரசர் பலவிடங்களில் சுட்டிக் கூறியுள்ளார். அவற்றுள் ஒன்றிரண்டைச் சுட்டுவோம்.

"அண்டமார் அமரர் கோமான் ஆதிஎம் அண்ணல் பாதம்
கொண்டவன் குறிப்பினாலே கூப்பினான் தாபரத்தை
கண்டவன் தாதை பாய்வான் காலற எறியக் கண்டு
தண்டியார்க் கருள்கள் செய்த தலைவர் ஆப்பாடியாரே".

என்னும் (4.48.4) இப்பாடலினால் நன்மை, தீமை, புண்ணியம், பாவம் என்பன செய்யப்படும் குறிக்கோளை நோக்கி அமைவன என்ற சித்தாந்தக் கருத்து தெளிவாதல் காணத்தக்கது. உண்மையான பக்தி உலகியல் பாசங்களைக் கடந்து நிற்பதென்பது சண்டீசர் செயலால் புலனாம். மேலும், திருக்குறுக்கை வீரட்டப் பதிகத்தில்,

"தழைத்ததோ ராத்தியின் கீழ்தாபர மணலாற் கூப்பி
அழைத்தங்கே யாவின் பாலைக் கறந்துகொண் டாட்டக்கண்டு
பிழைத்ததன் தாதைதாளைப் பெருங்கொடு மழுவால்வீசக்
குழைத்ததோ ரமுத மீந்தார் குறுக்கை வீரட்டனாரே"

என்று குறிப்பிடுகின்றார். (4.49.3)

திருச்சாய்க்காட்டுப் பதிகத்தில் நாவுக்கரசர் பிறவிப் பிணிக்கு மருந்தாகிய திருவடி வழிபாட்டினை மறவாத சண்டேச நாயனார்க்குக் கொன்றைத் தாமம் ஈந்தார் பெருமான் என்பதனை,

"ஆமலி பாலுநெய்யு மாட்டியர்ச் சனைகள் செய்து
பூமலி கொன்றை சூட்டப் பொறாத தன்தாளைக்
கூர்மழு வொன்றா லோச்சக் குளிர்சடைக் கொன்றைமாலைத்
தாமநற் சண்டிக் கீந்தார் சாய்க்காடு மேவினாரே." (4.65.6)

என்றும் குறிப்பிடுவர்.

திருச்சேறைப் பதிகத்தில் நாவின் மன்னர் இறைவன் சூடிய எழில் மிக்க மாலைகளை ஏற்றுக்கொள்ளுதற்குரிய பதவி ஆதலின், 'எழில்கொள் சண்டீசன்' என்கிறார். பிதாவைக் கொலை புரிந்தானைக் குற்றங் கடிந்தானாக்கி அரனடிக்கன்பர் செய்யும் பாவமும் அறமதாகும் என்று உணருமாறு,

''நிறைந்தமா மணலைக் கூப்பிநேசமோ டாவின்பாலைக்
கறந்துகொண் டாட்டக்கண்டு கறுத்ததன் றாதைதாளை
எறிந்தமா ணிக்கப்போதே யெழில்கொள்தண் டீசனென்னச்
சிறந்தபே ரளித்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே''

(4.73.5)

என்று குறிப்பிடுகின்றமை காண்க

திருக்குறுந்தொகையில், பிரமசாரியாகிய சண்டேசர் பசுக்களின் பாலைக் கறந்தாட்டி வழிபட நீண்ட உலகம் பலவற்றையும் ஆளும் அதிகாரத்தைக் கொடுத்தவன் என்பதை நாவுக்கரசர்,

'மாணி பால்கறந் தாட்டி வழிபட
நீணு லகெலாம் ஆளக் கொடுத்தவன்
ஆணியைச் செம்பொன் அம்பலத் துள்நின்ற
தாணு வைத்தமி யேன்மறந் துய்வனோ'' (5.2.4)

என்றும் போற்றுகின்றார்.

சாக்கிய நாயனார்

திருச்சங்கமங்கை வேளாளர் குலத் தோன்றலாகிய சாக்கிய நாயனார் நன்ஞானம் அடைவதற்குரிய வழியை நாடுவாராய்க் காஞ்சியை அடைந்தார். பௌத்த சான்றோர்களின் உபதேசம் பெற்று, 'எந்நிலையில் நின்றால் என்ன, எக்கோலம் கொண்டால் என்ன சங்கரன் திருவடியை மறவாதிருத்தலே பொருள் என்ற பரந்த உணர்வு அவர்பால் தோன்றிற்று. அதனால் பௌத்த வேடந்தாங்கிய நாயனார் சிவனடியைச் சிந்தித்து வந்தார்.

நாயனார் சிவலிங்கத்தைக் கண்டு வழிபட்ட பின்னரே உண்ணுதல் வேண்டும் என்று உறுதி கொண்டிருந்தார். தனியிடம் ஒன்றில் சிவலிங்கத்தைக் கண்ட நாயனாருக்கு வழிபாட்டு எண்ணம் தோன்றவே, கல்லை எடுத்துச் சிவலிங்கத்தின் மீது எறிந்தார். கல்லெறிந்து வழிபடுதலையே தொண்டாகக் கருதியவர், ஒருநாள் நியதித்தொண்டை மறந்து உண்ணப்புக்கார். தொண்டு நினைவுக்கு வரவே சிவலிங்கமிருக்கும் இடம் சென்று கல்லெடுத்தெறிந்து வழிபட்டார். இதனை நாவுக்கரசர்,

''கல்லினா லெறிந்து கஞ்சி தாமணுஞ் சாக்கியனார்
நெல்லினாற் சோறுணாமை நீள்விசும் பாளவைத்தார்''

என்பது (4.49.6), 'கஞ்சி உண்ணும் சாக்கியனார், உமைபங்கன் கழலே மறவாது கல்லெறிந்து அன்பு மலரால் வழிபட்டார். கஞ்சியுண்ணும் அவர்க்கு நெற்சோறுணவும் வேண்டாதவாறு பிறவி தீர்ந்து சிவலோகம் ஆள வைத்துப் பழவடிமைப் பாங்கு அருளினார் பரமனார்.

"....புத்தன் மறவாதோடி யெறிசல்லி புதுமலர்களாக்கி னான்காண்" (6.52.8) என்னும் திருவீழிமிழலைப் பதிகத்தில் நாவுக்கரசர், சாக்கிய நாயனார் கல்லெறிந்ததை மலர்கள் போல் ஏற்றுக் கொண்டான் இறைவன் என்பதைப் புலப்படுத்தக் காணலாம்.

திருஞானசம்பந்தர்

திருவீழிமிழலையில் பஞ்சம் ஏற்பட்டபோது அடியார் துயர் துடைக்கத் திருவுளங்கொண்டு சிவபெருமான், நாவுக்கரசர், ஞானசம்பந்தர் ஆகிய இருவருக்கும் பொற்காசு அருளினான். சம்பந்தர் பெற்ற காசு வாசியுடையதாயிருக்க, "வாசிதீரவே காசு நல்குவீர்" என்ற திருப்பதிகம் பாடி வாசியில்லாக் காசு பெற்றார் ஞானசம்பந்தர். இதனை நாவுக்கரசர்,

"பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு
வாடி வட்டம் தவிர்ப்பார் அவரைப்போல்,
தேடிக் கொண்டு திருவாய் மூர்க்கே எனா
ஓடிப்போந்து, இங்கு ஒளித்த ஆறு என்கொலோ!" (5.50.7)

என்று குறிப்பிடுகின்றார்.

திருமறைக்காட்டில் நீண்டகாலம் அடைத்திருந்த கோயிற் கதவினைத் திறக்கப் பாடிய அப்பர், ஒரு பாட்டினால் அதனை அடைக்கப் பாடிய சம்பந்தரது பாடலை வியந்து நாவுக்கரசர் பாடியது.

"திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி யடைப்பித்தா ருந்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத் திருவாய்மூர்ப்
பிறைக்கொள் செஞ்சடை யாரிவர் பித்தரே." (5.50.8)

என்பது குறிப்பிடத்தக்கது.

தம் தந்தை வேள்விக்காகத் திருவாவடுதுறை அரனைப் பொற்காசு வேண்டிப் பெற்றார் ஞானசம்பந்தர். அந்நிகழ்ச்சியை நாவுக்கரசர், "கழுமலவூரர்க் கம்பொன், ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடுதுறையனாரே" (4.56.1) என்பது, சம்பந்தரைப் பெயர் சுட்டாமல் வேறு வகையினால் நாவுக்கரசர் குறித்துள்ளார் என அறியலாம்.

நமிநந்தியடிகள்

திருவாரூர் அரநெறியப்பர்க்குப் பங்குனி உத்திரத் திருநாளில் நீரால் விளக்கெரித்து அற்புதம் நிகழ்த்தியவர்; வீதிவிடங்கப் பெருமான் வீதியுலா வருவது கண்டு பலருடன் சென்று வழிபட்டு வந்ததால் இல்லத்தில் உட்புக மனமில்லாமல் புறக்கடையில் உறங்கினார். அவர் கனவில் வீதிவிடங்கப் பெருமான் தோன்றி திருவாரூர்ப் பிறந்தாரனைவரும்

நமது சிவகணங்கள் எனக் கூறக் கேட்டு, அடியார் உள்ளே சென்று சிவவழிபாட்டை முடித்துப் பொழுது விடிந்ததும் திருவாரூர் சென்று திருவாரூர் பிறந்தாரனைவரையும் சிவகணங்களாகக் கண்டு தரிசித்தார். இதனை நாவுக்கரசர்,

''ஆராய்ந் தடித்தொண்ட ராணிப்பொ னாரூரகத் தடக்கிப்
பாரூர் பரிப்பத்தம் பங்குனி யுத்திரம் பாற்படுத்தான்
நாரூர் நறுமலர் நாத னடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிளக் கிட்டமை நீணா டறியுமன்றே'' (4.102.2)

எனக் குறிப்பிட்டுள்ளார் என அறியலாம்.

இதுவரை, நாவுக்கரசர் அடியார்கள் சிலரைப் பற்றிப் பாடிய திறத்தினை அறிந்தோம். ஏனைய அருளாசிரியர்கள் பாடிய அடியார்கள் திறத்தினைப் பற்றியும் அறிந்து கொள்வது நம் கடன்.

2. நாவுக்கரசரின் திருத்தாண்டகங்கள்

வ.ச. அபிராமவல்லி, சென்னை.

தாண்டகம் யாப்பு வகையுள் ஒன்றாகும். இருபத்தாறு எழுத்தின் மிக்க அடியால் வருவன தாண்டகமாகும். இத்தாண்டகம் இரு வகைப் படும். ஒன்று அளவியற்றாண்டகம். மற்றொன்று அளவழித்தாண்டகம்.

அறுசீரினும், எண்சீரினும் இயன்ற ஒன்றிய நான்கடி கொண்ட செய்யுள்கள் உடையன, அளவியற்றாண்டகமாகும். ஒவ்வாதன அளவழித் தாண்டகமாகும்.

திருநாவுக்கரசர் தாண்டக யாப்பினைப் பயன்படுத்தியுள்ளமை சிறப்பாகும். இவர் தாண்டகத்திலே துறை போகியவர் என்பதால் 'தாண்டக வேந்தர்' என்றும் 'தாண்டகச் சதுரர்' என்றும் போற்றப் பெறுகிறார்.

திருநாவுக்கரசர் இரு வகைத் தாண்டகங்களையும் எடுத்தாள்கிறார். இவரது ஆறாம் திருமுறையில் தாண்டக யாப்பில் பாடப்பெற்ற தலங்கள் இருபத்தொன்பது ஆகும். இதில் சிறப்பாக மூன்று தலங்கள் மீது பாடப்பெற்ற தாண்டகங்கள் அகம் சார்ந்த நிலையில் அமைந்தவை யாகும். இவை திருவாமத்தூரிலும், திருமுண்டீச்சரத்திலும், திருவெண்காட்டிலும் பாடப்பெற்றவையாகும். திருப்புன்கூர், திருநீடூர் என இரு தலங்களைச் சேர்த்துப் பாடப்பெற்ற திருத்தாண்டகம் ஒரு பதிகமாக அமைந்துள்ளமை சிறப்பு. பாடல் அடிகளாலும், பாடப் பெற்ற பொருள்தன்மையாலும் அப்பதிகங்களுக்கு அடை கொடுத்துத் தாண்டகம் எனச் சிறப்பித்தமையும் உண்டு. இவ்வாறு, அமைந்தவை, மறுமாற்றுத் திருத்தாண்டகம், ஏழைத் திருத்தாண்டகம், திருவடித் திருத்தாண்டகம், காப்புத் திருத்தாண்டகம், பெரிய திருத்தாண்டகம், புக்க திருத்தாண்டகம் முதலியன.

மறுமாற்றுத் திருத்தாண்டகம்

தருமசேனர் சைவ சமயம் சார்ந்து விட்டார். இனி நம் சமயம் வீழும் என்று எண்ணியவராகச் சமணர், மன்னனிடம் கூற, மன்னனும் சிலரைத் தருமசேனரிடம் அனுப்பி அவரை அழைத்து வருமாறு பணித்தார். வந்தவர்க்குத் தருமசேனர் மறுமொழி தருகின்றார். அம்மறுமொழி கொண்டு அமைந்தவையே மறுமாற்றுத் திருத்தாண்டகம். இத்

திருத்தாண்டகத்தில் எவருக்கும் அஞ்ச வேண்டியதில்லை; பணியவும் வேண்டியதில்லை; இறைவன் சேவடியே அடைக்கலமென வாழ்வோம் என்கிறார். சான்றாக,

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம் மலர்ச்சே வடிஇணையே குறுகினோமே. (11)

என்ற பாடல் அமைந்துள்ளது.

ஏழைத் திருத்தாண்டகம்

கல்லையே தெப்பமாகக் கொண்டு கரையேறிய திருநாவுக்கரசரைத் திருப்பாதிரிப்புலியூர் அடியவர் வரவேற்று அனைவரும் இறைவனை வணங்கித் திருவதிகை போந்து, வீரட்டானம் சென்றனர். அங்குத் தாண்டக வேந்தர் இறைவனை வணங்கி, ''ஏழையேன் பண்டு இகழ்ந்தது என்'' எனப் பரிவால் புகன்ற திருப்பதிகமே ஏழைத் திருத்தாண்டகம். ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் "ஏழையேன் நான் பண்டிகழ்ந்தவாறே" என வருவதால் இப்பதிகம் ஏழைத் திருத்தாண்டகம் எனப் பெயர் பெற்றது. சமண சமயத்தில் இருந்து சிவபெருமானை இகழ்ந்தது ஏன்? எனக் குறித்துப் பேசப்படுவதாக உள்ள இப்பதிகத்தினின்று சில பாடல் வரிகள்:

''இரு பிறப்பும் வேறுவியராய் இருந்தார்''

''மாசுபூசி வழிகாணாதவர் போல்வார் மனத்தனாகி
அரு பிறப்பை யறுப்பிக்கும் அதிகையூரன்''

என்பன. இவ்வரிகள், இம்மைப் பயனும் துய்க்காமல், மறுமைக்குரிய நிலையையும் பெறாது கழித்த இப்பிறப்பை வீணாக்கினேன் என்றும், மாசுபூசியராய் (சமணர் நீராடார். அதனால் புறம் மாசு கொண்டது) இருந்து, வழி காணாக் குருடனாய்த் திருவற்ற அமணர்களுடன் இரங்கத்தக்க நிலையில்தாம் இருந்ததை நாவுக்கரசர் குறிக்கிறார். அரு பிறப்பையறுப்பவனைப் பண்டு இகழ்ந்தது ஏன் என்று இரங்கிப் பாடுவதாக இப்பதிகம் அமைந்துள்ளது.

அடையாளத் திருத்தாண்டகம்

திருநாவுக்கரசர் திருவதிகையில் தங்கித் திருத்தொண்டு இயற்றுங்கால், இறைவனின் திரு அடையாளங்களைக் கூறிச் சிறப்பித்துப் பாடப்பெற்ற

திருப்பதிகம் அடையாளத் திருத்தாண்டகமாகும். இப்பதிகத்தில், சிவபிரானை, செய்யன், கரியனேகண்டம், பைங்கண்வெள்ளெயிற்றரவினன், தண்கொன்றைமிலைத்த சென்னிச் சடையன், மழுச் சூலம் ஏந்தும் கையன், ஏறேறியேழுலகம் உழிதர், பர அரவந்தட மார்பர், கருப்புவில் காமற் காய்ந்த ஐயன், பணிவெண் திங்கள் சூடியவன் என அடையாளச் சின்னங்கள் குறிக்கப் பெறுகின்றன.

போற்றித் திருத்தாண்டகம்

திருவதிகையில் தங்கித் திருப்பணிகள் பல செய்து வரும் நாளில் திருநாவுக்கரசர் பாடியருளிய திருப்பதிகம் இது. தொடர்களின் பின் போற்றி என வருவதால் இத்திருப்பதிகம் 'போற்றித் திருப்பதிகம்' என வழங்குகின்றது. வடமொழியில் 'நம' என்பது போல் தமிழில் 'போற்றி' என்று கூறுவது அறிந்ததே. 'போற்றி' என்பது 'வணக்கம்' எனப் பொருள் தரும். திருவதிகையில் மட்டுமன்றித் திருவாரூரிலும் நாவுக்கரசர் போற்றித் திருத்தாண்டகம் பாடியுள்ளார். இத்திருப்பதிகத்தில், இறைவன் தோற்றப் பொலிவின் சிறப்பும், அதன் தொடர்பாக உள்ள புராணச் செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

நீறேறு நீலமிடற்றாய், ஆறேறு சென்னியுடையாய், வேழத்துரி வெருவப் போர்த்தாய், நாகம் அரைக்கசைத்த நம்பா, வில்லால் வியனரணம் எய்தாய், கொல்லுங் கூற்றொன்றை உதைத்தாய், தொக்கணா வென்றிருவர். தோற்கை கூப்புத் துளங்கா தெரிசுடராய் நின்றாய் எனப் பலவாறாக விளித்து வணங்குதலைக் காண்கின்றோம். திருநீறணிந்த ஏற்றினை வாகனமாக உடையவன்; விடத்தினை அருந்தியதால் நீலமிடற்றன், கங்கையாற்றினைத் தலையிலே சூடியவன்; யானையின் தோலினைப் போர்த்தியவன்; நாகத்தினை அரையிலே அணிந்தவன்; திரிபுரம் எரித்த விரிசடையான்; மார்க்கண்டேயனுக்காக கூற்றுவனை உதைத்தவன்; அடிமுடி காணாது திருமாலும், நான்முகனும் தோல்வியை ஒப்புக்கொண்டு கை கூப்ப அழல் வடிவாய் காட்சியளித்தவன் எனப் போற்றியமை விளங்கும்.

திருவடித் திருத்தாண்டகம்

திருநாவுக்கரசர் திருவதிகையில் தங்கி இருந்த நாளில் இப்பதிகம் பாடப்பெற்றது. இத்திருத்தாண்டகப் பாடல்கள் அனைத்திலும் இறைவனின் திருவடியைச் சிறப்பித்துப் பாடியுள்ளதால் இத்திருப்பதிகம் திருவடித் திருத்தாண்டகம் என வழங்கலாயிற்று.

திருவடிப் பெருமையை ஆறாம் திருமுறையில் மட்டுமின்றி நான்காம் திருமுறையில் திருவையாற்றுத் திருவிருத்தம், திரு இன்னம்பர் திருவிருத்தம் ஆகியவற்றிலும் நாவுக்கரசர் உரைக்கின்றார்.

திருவடித் திருத்தாண்டகத்தில், நறு மலராய் நாறும் மலர்ச் சேவடி, அடியார்கட்கு ஆரமுதமாயவ்வடி, மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்லவ்வடி, அரக்கனையும் ஆற்றலழித்தவ்வடி, நெய்தொழுது நாமேத்தி ஆட்டும்மடி, அரவணையான் சிந்தித்தரற்றும்மடி, அருமறையான் சென்னிக் கணியாமடி, பதைத்தெழுந்த வெங்கூற்றைப் பாய்ந்தவ்வடி எனத் திருவடிப் பெருமையினைப் போற்றியுள்ளார்.

காப்புத் திருத்தாண்டகம்

திருவதிகை வீரட்டேசுவரரிடம் பேரன்பு கொண்ட நாவுக்கரசர் திருவாய் மலர்ந்தருளிய பதிகம். இறைவனுடைய காப்புகள் (இடங்கள்) என்றே அனைத்துப் பாடல்களும் முடிவதால் இதனைக் காப்புத் திருத்தாண்டகம் என்பர்.

காப்பு என்னும் தொழிற்பெயர் காக்கப்படுவதாகிய இடத்தினைக் குறித்தது. இறைவன் நீங்காதுறையும் இடங்கள் இவை என்பதை இத்திருத்தாண்டகம் உணர்த்துகின்றது. இதன்கண் தொண்ணூற்று ஐந்து திருப்பதிகளும், இருபத்து நான்கு வைப்புத் தலங்களும் குறிக்கப் பெறுகின்றன. சான்றாக,

சிறையார் புனற்கெடில வீரட்டமும்
திருப்பா திரிப்புலியூர் திருவா மாத்தூர்
துறையார் வனமுனிக ளேத்த நின்ற
சோற்றுத் துறைதுருத்தி நெய்த்தானமும்
அறையார் புனலொழுகு காவிரிசூழ்
ஐயாற் றமுதர் பழனம் நல்ல
கறையார் பொழில்புடை சூழ்கானப்பேரும்
கழுக்குன்றும் தம்முடைய காப்புக்களே. (189)

என்ற பாடலில், கெடிலயாற்றின் கரையிலுள்ள வீரட்டத்தில் உள்ளவர், திருப்பாதிரிப்புலியூர், திருவாமாத்தூர், திருசோற்றுத்துறை, திருத்துருத்தி, திருநெய்த்தானம், திருவையாறு, திருப்பழனம், திருக்கழுக்குன்றம் முதலான ஊர்களிலும் எழுந்தருளி, நமக்குக் காப்பாக விளங்குகிறார் என்கிறார் நாவுக்கரசர். இத்திருத்தாண்டகம், இவ்வாறு ஈசன் உள்ள ஊர்களின் பெயர்களைக் கொண்டு விளங்குகிறது.

பெரிய திருத்தாண்டகம்

திருநாவுக்கரசர் தில்லையம்பதியில் தங்கியிருந்த நாளில் இறைவனைப் பாடிய பதிகமாக இப்பதிகம் விளங்குகிறது. புலிக்கால் முனிவர்க்குச் சிறந்த உறைவிடமாகத் தில்லை இருந்ததால் பெரும்பற்றப்புலியூர் எனப் பட்டது. பெரும்பற்றப்புலியூரானைப் போற்றாத நாளெல்லாம் பிறந்தும் பிறவா நாட்கள் எனவும், பயன்படா நாட்கள் எனவும், வாழ்பவர்

நடைபிணங்களே எனவும் கூறுகிறார். இத்தாண்டகம் அளவழித் தாண்டகமாக அமைந்துள்ளது. தில்லை பாடல் பெற்ற தலமாக இருப்பதால் ‘பெரிய’ என்ற அடைமொழி கொடுத்தார் போலும். ஒவ்வொரு பாடலின் இறுதியடியும், ‘பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே’ என்று வந்துள்ளமை வள்ளுவரின்,

உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர்அனையர் கல்லா தவர் (406)

என்ற குறளினை நினைவு கூர்வதாக உள்ளது. கல்லாதார் எதற்கும் பயன்படா களர் போல்வர் என்பது போல், பெருமானைப் பேசா நாள் வீணாளே என்பது விளங்கும். இப்பதிகத்தில் இரு சபைகளைப் பற்றிக் குறிக்கின்றார். பொற்சபையாகிய தில்லை. சித்திர சபையாகிய குற்றாலம்.

இதனை,

குற்றாலத் தமர்ந்துறையுங் குழகன் தன்னைக்
கூத்தாட வல்லானைக் கோனை ஞானம்
பெற்றானைப் பெரும்பெற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. (363)

என்கிறார்.

புக்க திருத்தாண்டகம்

எல்லாத் தலங்களிலும் வீற்றிருக்கும் பெருமான் திருச்சிற்றம்பலத்தில் புகுவார் என்ற கருத்து விளங்க, ‘புலியூர்ச் சிற்றம்பலமேபுக்கார் தாமே’ என்று பாடல்கள்தோறும் அருளியமையால் இது புக்க திருத்தாண்டகம் எனப் பெயர் கொண்டது. தில்லையம்பதியின் சிறப்புப் பெயராகப் புலியூர் என்பது விளங்குகிறது. இத்திருத்தாண்டகத்தில் நாவுக்கரசர் பதினெண் தலங்களைக் குறிக்கிறார். தக்களூர் வைப்புத் தலமாக அமைந்துள்ளது. அகத்துறைச் சார்ந்த பாடலாக,

சந்தித்த கோவணத்தர் பெண்ணூல் மார்பர்
சங்கரரைக் கண்டிரோ கண்டோ மிந்நாள்
பந்தித்த வெள்விடையைப் பாய வேறிப்
படுதலையி யென்கொலோ ஏந்திக் கொண்டு
வந்திங்கென் வெள்வளையுந் தாமு மெல்லா
மணியாரூர் நின்றந்தி கொள்ளக் கொள்ளப்
பொன்றீ மணிவிளக்குப் பூதம் பற்றப்
புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே. (394)

என்ற பாடல் விளங்குகிறது. தலைவி இப்பாடலில், தன் வெள்ளிய வளையல்களைக் கவர்ந்தார். அவரைக் கண்டீரோ என வினவுவதாக அகத்துறைச் சார்ந்துள்ளது.

திருத்தாண்டக யாப்பில் அமைந்த மற்றத் திருப்பதிகங்கள் திருமுதுகுன்றம், திருக்கழிப்பாலை, திருநாரையூர், திருப்புள்ளிருக்குவேளூர், திருவலம்புரம், திருச்சாய்க்காடு, திருப்பந்தணை நல்லூர், திருஓமாம்புலியூர், திருக்கஞ்சனூர், திருக்கோடிக்கா, திருவாவடுதுறை, திருவிடை மருதூர், திருநாகேச்சரம், திருநல்லூர், திருக்கருகாவூர், திருவெண்ணியூர், திருச்சோற்றுத்துறை முதலிய பதினேழு தலங்களில் பாடியவை. இவை இறைவனைப் பொதுவாகப் போற்றிப் புகழ்வதாக உள்ளன. திருவாவடுதுறை இறை பற்றி மூன்று பதிகங்களும், திருவிடைமருதூர் இறை பற்றி இரண்டு பதிகங்களும் திருத்தாண்டகங்களாக அமைந்தமை சிறப்பாகும்.

திருநாவுக்கரசர் இவ்வாறு தாண்டகங்களைச் சிறப்புறக் கையாண்டுள்ளமை விளங்கும். அளவியற்றாண்டகமும், அளவழித் தாண்டகமும் ஒருங்கே எடுத்தாளப் பெற்றமை அவர் 'தாண்டக வேந்தர்' என்பதை மெய்ப்பிக்கிறது.

3. நாவுக்கரசரில் அறிவியல் சிந்தனைகள்

அண்டாயினெட் ரமோலா எலிசபெத், தஞ்சை.

தேவாரம் அமுது தமிழ்ப் பாற்கடலில் தோன்றிய புதுப் புராண புனைவு பொங்கிய காலம் அது. இறையருள் அன்றி வேறெதுவும் கருதாத திருவருட் செம்மாப்புடைய பேருளாளர் வழி உணர்வு பொங்கிய காலம் அது. அவ்வமுதப் பாக்கள் ஆயிரம் ஆயிரமாகத் தமிழ் உலகில் வழிந்தோடின் இறையன்பு என்ற ஊற்றுக் கண்ணிலிருந்து தமிழகத் திருக்கோயில்களிலேயும், தமிழகத் தெருக்களிலேயும் பெருகியோடிய அந்தப் புதிய தமிழின் வேகத்தையும், அக்காலத் தமிழரின் தாகத்தையும் மறக்கவியலாது. தேவாரத்தின்கண் பொதிந்துள்ள இயற்கை, அறிவியல் சிந்தனைகள் அனைத்தையும், இந்த ஒரு கட்டுரையில் எடுத்துரைத்திட இயலாது எனினும் ஆங்காங்குக் காணப்பெறும் கற்பனை வளத்தை, அறிவியல் அறிவை, இயற்கை ரசனையைச் சுட்டுதல் நம் குறிக்கோளாகும்.

விலங்கியல் சிந்தனை

நம் திருநாவுக்கரசர் ஒவ்வொரு பாட்டிலும் ஒரு விலங்கையோ, மீனையோ, பறவையையோ, இதைப் போன்று அனைத்து உயிரினங் களையும் கையாண்டிருக்கிறார். ஒவ்வொரு பாட்டையும் உற்று நோக்குங்கால் வியப்பாக உள்ளது. ஒவ்வொரு உயிரினத்தின் தன்மை, ஓசை, ஒலி, செயல் இதை எப்படி ஆராய்ந்து எழுதினார் என்பது உண்மையில் அதிசயம். இயற்கையோடு அவர் ஒன்றி இருந்திருக்கிறார் என்றுதான் கூற முடியும்.

வகைப்பாட்டின்படி, விலங்கியலில் உயிரினங்களை இரண்டு தொகுதிகளாகப் பிரிக்கலாம். ஒன்று முதுகு நாணுள்ளவை, மற்றொன்று முதுகு நாணற்றவை. முதுகு நாணுள்ளவைகளில் சுறாமீன், மீன்கள், தவளை, ஊர்வன, பறப்பன மற்றும் பாலுட்டிகள் அடங்கும். முதுகு நாணற்றவைகளில் புழுக்கள், வண்டுகள், சிலந்திகள், பவளம், எறும்பு போன்றவை அடங்கும். உலகின் அழகைக் கண்டு வியந்து போற்றும் இயல்பு நம்மிடம் இல்லை. துன்பங்களைக் கண்டு நொந்து கவலைப் படும் இயல்பே நம்மிடம் உண்டு. ஆனால் அழகு கூத்தாடும் இயற்கைச் செல்வத்தை அறிந்து, உணர்ந்து, பாராட்டிசைக்கும் பண்பு பாவலனிடத்தேயே உள்ளது.

''கவிஞனுடைய கண் விண்ணுக்கும் மண்ணுக்கும், மண்ணுக்கும் விண்ணுக்குமாக சுழல்கின்றது. சுழன்று நோக்கி கற்பனை வடிவங்களைப் படைக்கின்றது. அவ்விழுமியோனுடைய எழுதுகோலால் அறியப்படாத பொருள்கள் வடிவம் பெறுவதுடன் உயிர்த் தன்மையையும் எய்துகின்றது. - **ஷேக்ஸ்பியர்.**

முதுகு நாணற்றவைகளை நாம் முதலில் பார்ப்போம்.

சிலந்தி

''நலந்திகழ் வாயின் நூலாற் சருகிலைப் பந்தர்செய்த
சிலந்தியை அரசதாள அருளினாய்''

''வாயின் நூலாற்'' என்பதை எப்படித் தன் பாட்டில் கையாண்டிருக் கிறார். சிலந்தி தன் வாயினின்று வரும் நூலைக் கொண்டு பந்தர் இழைத்தது பற்றிய அறிவு அவரிடம் இருந்தது.

பவளம்

அப்பவளத் திரள், ஒண்பவளத் திரளை, செம்பவளத் திரள் போல்வான் காண், நன்பவளம், பவளக்குடி, பவளக் குன்றை, பவளக் கொழுந்தினை, பவளம் அவள் நிறமே. பவளம் போல் நிறத்தை வைத்தார், வான்பவளக் கொழுந்தை, செம்மானப் பவளத்தை என்று பாடியிருக்கிறார். சிவபெருமானை, 'செம்பவளத் திரள் போல்வான் காண்' என்கிறார்.

எறும்பு

'இருதலை மின்னுகின்ற கொள்ளி மேல் எறும்பு என் உள்ளம்' இருதலையிலும் தீப்பற்றிக் கொண்டுள்ள கொள்ளியின் மேல் எறும்பைத் தமக்கு உவமையுரைக்கின்றார்.

புழு

''புழு பெய்த பண்டி'' புழுப் பொதிந்த போர்வை, புழுப் பொதி பொள்ளல் ஆக்கை, புழுவாய்ப் பிறக்கினும், புழுவினாய் கடையேன், புழுவுக்கிங்கெனக்குள்ள பொல்லாங்கில்லை.

இத்தொடர்களில் தம் தாழ்வு மனப்பான்மையையும், இறந்தப் பின் உடம்பு புழுவினால் அழிக்கப்படும் என்பதையும் சுட்டுகிறார்.

அலவன் (நண்டு)

''அலைப் பிரிந்த அலைவன் போய்ப் புகுதந்த காலமும்''

என்கிறார். அலையிலிருந்து பிரிந்த நண்டுக்கு தம்மை உவமைப்படுத்துகிறார்.

வண்டு

திருநாவுக்கரசருக்கு நம் பாட்டிசைப் புலவர்க்கு வண்டின் மீது உள்ள அறிவு அதிகம்.

''வண்டிசைக்கும் நறுங்கொன்றை'', ''வண்டுண்டு பாடும் கொன்றை'', ''வண்டு பண்பாடும் கொன்றை''

கொன்றை மலரையும், வண்டையும் இணைத்தே பாடுகிறார். கொன்றை மலரில் தேன் அதிகம் என்பதை நன்கு உணர்ந்திருக்கிறார்.

''கவ்வை வரி வண்டு பண்ணே பாடும்'',
''தேனைத் திளைத் துண்டு வண்டுபாடும்''.

''வண்டு பாடும்'' என்பதை அப்பர் அறிந்துள்ளார். இவர் கூற்று சரிதான். தன் இறக்கைகளை வேகமாக சுழற்றி, பாடுவது போன்ற ஒலியை எழுப்பும்.

''நிழ லுமிழ் சோலை சூழ நீல் வரி வண்டினங்கள்
குழலுமிழ் கீதம் பாடும்''.

''அந்தா மரை மலர்மேல் அள்ளி வண்டி யாழ்செய் ஆமாத்தூர்''

வண்டின் ரீங்காரம் யாழ், குழலிருந்து வரும் இசைப்போல இருந்ததாக திருநாவுக்கரசர் கூறியதிலிருந்து அவருக்கு இசை உணர்வு இருப்பதை அறிய முடிகிறது.

வண்டு மது உண்ணுதல்

''மடை வாய்க் குருகினம் பாளை விரிதொறும் வண்டினங்கள் பெடை வாய் மது உண்டு பேராதிருக்கும்'', ''வண்டுகள் மதுக்கள் மாந்தும்'', ''வண்டு கொப்புளித்த தீந்தேன்''

(கொப்புளித்த - regurgitation.) வண்டு பூச்சாற்றை உண்டு, கொப்புளித்து பின் தேனாக மாற்றும். வயிற்று ஜீரணிப்பில் வாயிலுள்ள உமிழ்நீர் என்சைம் கூட்டு சர்க்கரையை எளிய சர்க்கரையாக மாற்றும் ஒரு அறிவியல் நிகழ்வினை அன்றே உணர்ந்து திருநாவுக்கரசர் பாடியுள்ளார்.

''ஆறுகால் வண்டு மூசிய கொன்றையன்'' என்பது விலங்கியலில் 'தொகுதி ஆர்த்ரோபோடா' குணங்களில் ஒன்று. பூச்சிற்கு ஆறுகால் உண்டு என்பது அவருக்குத் தெரிகின்றது. மேலும் வண்டின் பல வகை களையும் தெரிந்துள்ளார். வரிவண்டு, பொரி வண்டு, கருநீல வண்டு, சுரும்பு, களி வண்டு என்பன.

''பண்ணார் களி வண்டு பாடியாடும்'',
''பண்மாலை வரி வண்டு பண் மிழற்றும்''

தேனைக் குடித்து, வண்டுகள் ஆடுவது, பூச்சியினத்தின் சிறப்பான பண்பு, இக்குணத்தை ரசித்து தம் பாட்டில் கையாண்டிருக்கிறார் நம் அப்பர். வண்டுகள் ஆடுவது பூச்சியின் செய்தி பரிமாற்ற குணமே ஆகும்.

இனி நாம் அவருக்குள்ள முதுகு நாணுள்ள விலங்கினங்களின் அறிவினை அறியலாம்.

சுறலம் – (சுறாமீன்)

''சுறா வேந்தன்'', ''தூமன் சுறலம்''

சுறா வேந்தன் என்பது மன்மதனைக் குறிக்கும்.

''களிறடைந்த தன் கழனி''

இதில் 'களிறு' எனும் சொல் ஆண் சுறாவைக் குறிக்கும்.

மீன்

முதுநீர் மலங்கு, இளவாளை, செங்கயல், சேல், கெண்டவரால், கொய் எனும் மீன் வகைகளைப் பற்றிய அறிவு கொண்டுள்ளார்.

''கொய் எனும் மீன் 8½ அங்குலம் நீளமுள்ளதும், நன்னீரில் வாழ்வதும் ஆகும். இது பசிய நிற மீன்.

கயல் மீன்

''கயல் பாயக் கடுங்கலுழிக் கங்கை'', ''மடையேறிக் கயல் பாய'' ''செங்கயல் சேல்கள் பாய்ந்து தேம்பழம் இனிய நாடி'', ''வயலெலாங் கயல்பாய் வள்ளியூர்''

கெண்டை மீன்

''கெண்டை போல் நயனம்'', ''கெண்டை கொப்புளித்த தெண்ணீர்''

''கெண்டை மீன் துள்ளுவதால், தண்ணீர் இறைந்து சிதறுவதை அழகாக விவரிக்கிறார்.

வாளை மீன்

''மடுக்களில் வாளைபாய வண்டினம் இழிந்த பொய்கை''

இளவாளை, செய்த்தலை வாளைகள் பாய்ந்துகளும், மடையிடையே வாளை உகளும் பொய்கை, வாளையுடைப்புனல், இம்மீன்களை இயற்கைச் சூழ்நிலைகளில் படம் பிடிக்கிறார்.

வரால் மீன்

''நரி வரால் கவ்வச் சென்று''

நரி வரால் மீனை கவ்வச் சென்று தன் வாயிலிருந்த நல்ல தசையினை இழந்தது போல் என்கிறார். இந்த வரியில் அப்பரின் விலங்கியல் சிந்தனை தெரிவது தெள்ளெனத் தெரியும்.

"பருவரால் வயல் சூழ்ந்த பழனத்தான்", "பருவரால் குதி கொள்ளும் பழனம்", "வரிவரால் உகளுந் தெண்ணீர்க் கழனி"

இவைகள் வாழும் மடை, பொய்கை, ஆற்றுப் படுகையோடு குறிப்பிடுகிறார். வியக்க வைக்கிறது அவரது சிந்தனை.

தவளை, தேரை

"பைங்கால் தவளை பறை கொட்ட", "பாம்பின் வாய்த் தேரை போலப் பலபல நினைக்கின்றேனே" பாம்பின் வாயினுள் அகப்பட்டத் தேரையைப் போல் தான் அல்லல்படும் நிலையை விவரிக்கிறார் அப்பர். பாம்பின் உணவு தவளை என்பதைத் தெளிவாக்குகிறார்.

ஆமை

"கூவலாமை குரைகட லாமையைக் கூவலோ டொக்குமோ"

கிணற்று ஆமை, கடல் ஆமை என வகைப்படுத்துகிறார்.

"உலையை ஏற்றித் தழல்எரி மடுத்தநீரில் திளைத்துநின்
றாடுகின்ற ஆமை போல் தெளிவிலாதேன்"

பாம்பு (அரவம்)

"அரவுமிழ்', 'மணிகொள் சோதி", "அழலே உமிழும் படம் பொத்தரவு", "மணி பிணைத்த அரவம்" இதனை நோக்குங்கால், பாம்பு தன் வாயிலிருந்து மாணிக்கக் கல்லை உமிழ்ந்து இரைதேடும் என்ற செய்தி அப்பர் காலத்திலேயே இருப்பதை அறியலாம். கோளரவம், பையாடரவம், கிடந்த பாம்பு, பட முக்கப் பாம்பு, பொறியிலங்கு பாம்பு, விடமூக்கப் பாம்பு என்று பல வகையான பாம்புகளைப் பற்றி கூறியிருக்கிறார். இதில் விடமூக்கப் பாம்பு என்பது விஷத்தை கக்கும் பாம்பின் குணம் திருநாவுக்கரசரால் தெரியப்படுத்தப்படுகிறது. இன்றைய அறிவியல் உலகில் இந்த வகைப் பாம்பின் விஷம் புற்று நோய்க்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. அப்பர் எப்படி இவ்வளவு கூர்மையாக ஒவ்வொரு உயிரினத்தையும் நோக்கினார் என்பது பெரும் ஆச்சரியமே.

பறவைகள்

அன்னம்

அன்னத்தை நாம் பார்த்ததில்லை. ஆனால் திருநாவுக்கரசரின் கண்ணில் பட்டுள்ளதே. பாடி விட்டார். "அணிகிளர் அன்ன வண்ணம்", "அன்னமேயும் அந்தாமரை", "அன்னநடை மடவாள்", "அன்னமார் வயல்", "பலவும் அன்னங்கள் பன்மவர் மேல் துஞ்சும்" என்கிறார். இந்த அன்னங்கள் தற்பொழுது மறைந்து போன பறவையினங்களில் ஒன்று.

''பஞ்சிக்காற் சிறகன்னம்'' இந்த வரியை நோக்குங்கால், அப்பர் பஞ்சினைப் போன்ற சிறகு எனக் குறிப்பிட்டுள்ளார்.

கிளி

''தேனோக்கும் கிளி மழலை உமை'', ''பைங்கிளி பேடையோ, டாடிப் பரந்து வருவன கண்டேன்'' என்கிறார். கிளியின் மழலை அவ்வளவு இனிமையானது என்று கூறுகிறார்.

குயில்

''அறையினம் பூங்குயில் ஆலும் ஐயாறு, குயிலாய மென்மொழியார், குயிலாடும் பொழில், கொய்யிலா மலர்ச் சோலைக் குயில் கூவ மயிலாலும் ஆரூர், பைம்பொழிற் குயில் ஆலந்துறை, வரிக் குயில் பேடையொடாடி வைகி வருவன கண்டேன். குயில் கூவும் என்பது அறிவியல் செயல். குயில் காணுமிடம் பொழில், சோலை போன்றவை அவ்வாழுமிடத்தோடு பாடுகின்றார்.

குருகு

''நெய்தற் குருகுதன் பிள்ளையென் றெண்ணி நெருங்கி'' நெய்தல் என்பது கடலும் கடல் சார்ந்த இடமும், குருகு என்பது கடற் சார்ந்த பறவை என்பதை திருநாவுக்கரசர் அறிந்திருக்கிறார்.

''குருகினம் கூடி ஆங்கே கும்மலித்து இறகு உலர்த்தி'', ''இறகு உலர்த்துவது'' (Preening) கூட்டமாக இருத்தல், இறகு உலர்த்துதல் பறவையினங்களுக்கே உள்ள சிறப்பான குணம். அடியார் இந்தக் குணத்தைக் கூட உன்னிப்பாக கவனித்து தம் பாடலில் இக்கருத்தைப் புகுத்திவிட்டார்.

கொக்கு

கொக்கமரும் வயல், கொக்கின் இதம், கொக்கினம் பயில் சோலைக் குரக்குக்கா, கொக்கினம் வயல் சேரும் குரக்குக்கா என்று கொக்குகள் வயல்களோடு இணைந்தவை என்பதை அழகாகத் தெளிவாக்குகிறார். கொக்கிருந்த மகுடத்தெங் கூத்தன், கொக்கிறகின் தூவல், கொக்கிறகு. இந்த வரிகளிலிருந்து சிவபெருமான் திருமுடியில் சூடும் கொக்கின் இறகு பஞ்சு போன்று மென்மையானது என்பதைத் திருநாவுக்கரசர் அறிந்திருக்கிறார். இதன் மூலம் பறவைகளைப் பற்றிய அவரின் அறிவு நமக்குப் புலனாகின்றது.

நாரை

''துணையார முயங்கிப் போய்த் துறை சேரும் மடநாராய்''

"நற்றுணைப் பேடையொ டாடிநாரை வருவன கண்டேன்".

"பொங்கோத மால் கடலிற் புறம் புறம் போய் இரைதரும் செங்கால் வெண்மட நாராய்"

நாரையின் கால் சிவப்பு என்பது தெளிவு.

காக்கை

காக்கைக்கே இரையாகி, முயல் விட்டுக் காக்கைப்பின் போனவாறே என்கிறார். "மோத்தையைக் கண்ட காக்கைகள் அதனைக் கூடி மொய்த்து உண்ணுவது போல" என்ற வரிகளிலிருந்து பறவைகளுக்கே உரித்தான பகிர்ந்துண்ணுதல், கூடி வாழ்தல் குணங்களை அறிந்துள்ளார். இது இவரது சமூக சிந்தனையின் வெளிப்பாடே!

மயில் (மஞ்ஞை)

ஆலு மாமயில், கலவ மஞ்ஞைகள் வெள்குறும் உலவு பைம்பொழில், களிமயில், கார்மயில், கானார் மயில், கானெடுத்து மாமயில்கள் ஆலும் கோலை, கோல மிஞ்ஞைகள் ஆலும் குரக்குக்கா, தோகை, நீலமாமயில், மயிலுயர்தி முருகவேல் என்கிறார். தலந்தோறும் பெயர் வைக்கும் பொழுது மயில் ஆலும் ஆரூர், மயில்கள் ஆலும் வலஞ்சுழி என்றே வைக்கப்பட்டது. "மழைக் கண் மாமயில் ஆலும் மகிழ்ச்சியான்", "கவரும் பறையும் ஆர்ப்ப கல்லவடங்கள் பரந்தெங்கும்", "கலவ மஞ்ஞை காரென்றெண்ணிக் களித்து வந்தலமராரூர்" நமது திருநாவுக்கரசருக்கு மேகத்தையும், மயிலின் களி நடனத்தையும் பற்றிய அறிவு அன்றே காணப்பட்டது எனலாம்.

பாலூட்டிகள்

சிங்கம்

அரிகுலம் மலிந்த அண்ணாமலை, நஞ்சுண்டு சாவா மூவாச் சிங்கமே என்று அதன் வலிமையை வர்ணிக்கிறார்.

வேங்கை (புலி)

கொல் வேங்கை, மிகத்தான் பெரியதோர் வேங்கை, வேங்கை அதள், வேங்கை வரிப்புலி, பாய் புலித்தோல், புலியுரி அதழனார், புலியுரி அரையினானே என்று பாடுகிறார். இவர் பார்வையில் புலப்பட்ட புலித்தோலுக்கு இன்றுமே மவுசுதான்.

யானை

ஆனை யீருரிபோத்து, பைங்கண் ஆனை, வெள்ளானை, கடமா உரித்த உடைதோல், கூமா முகத்தினான், மாகயானை கம்பயானை என்று யானையைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

மான்

வெள்ளி போற் புள்ளி உழைமான், உழை உரித்த மானுரி தோல், கருமானின் உரியதளே, புள்ளி உழைத்தோல், புள்ளி மான், புள்ளி யுழை மானின் தோலான், மான்மறி, மானை ஏந்திய கையினர் என்கிறார் புலவர். மான் தோல் இன்றளவும் பிரசித்தம் பெற்றது.

எருது

எருதலால் ஊர்வதில்லை, எருதேறி, எருதினை இசைய ஏறி, கனைத்து வரும் எருது, பெரிய இடிக்குரல் வெள்ளெருது என்று அதன் செயலையும், ஓசையைப் பற்றியும்கூட தெளிவு கொண்டவர்.

பசு

"ஆவுற்ற ஐந்தும் உகந்தார் தாமே" பசுவின்கண் பொருந்திய ஐந்து என்பது பால், தயிர், நெய், நீர், சாணம் இவற்றைச் சிவபெருமான் விரும்பினார்.

பன்றி

இடிகுரல் அன்னதொர் ஏனம், ஏனத் தெயிறு, பன்றி போல் அளற்றிற்பட்டு, பன்றி எய்த கானவனை, வராகத்தின் பின்னே சென்ற கானவனை என்று கூறுகிறார். பன்றிக்கு கொம்புண்டு என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? வராகம், ஏனம், கேழல் என்று பன்றியைக் குறிப்பிடுகிறார்.

நரி

இடுகாட்டிடை நரியினார், குறுநரிகள் நீடுங்குழல் செய்ய, நரிபுரி சுடலை, நரி விரவு காட்டகத்தில் ஆடலானை என பாடல்களில் காணப்படுகின்றன.

குரங்கு

குரங்கினம் குதி கொள்ளும் குரக்குக்கா, குரங்காடு துறை, குரங்குசேர் பொழிற் கோடிகா, மந்திபாய் பொழில் சூழுமாற்பேறு என்று கூறப்படுகிறது.

தாவர சிந்தனை

திருநாவுக்கரசருக்கு இயற்கையின் மீதிருந்த அதிக ஈடுபாடு காரணமாக தாவரவியல் சிந்தனையும் அவருடைய பாடல்களில் ஆன்மீகத்தோடு கலந்து வெளிப்படுகின்றன.

கொன்றை மலர்கள்

அலர்ந்த கொன்றை ஏடு, அழகார் கொன்றை, இலைமறித்த கொன்றை, கடிக்கொன்றை, கந்த மலர்க் கொன்றை, கள்ளார்ந்த கொன்றை, கார்

கொள் கொன்றை, கார் மல்கு கொன்றையந்தாரார், காருடைக் கொன்றை, நறவாரும் பூங்கொன்றை, நாறு பூங்கொன்றை, வம்புலவு கொன்றை என்று வகை வகையாக ரசிக்கின்றார். கொன்றை மலர்களின் வாசனை, செயல், நிறம், மகரந்தம், அதனால் கவரப்படும் வண்டுகள் என்று விலாவாரியாக உன்னிப்பாக கவனித்துப் பாடியுள்ளார். இணர்ந்து கொன்றை பொன் தாது சொரிந்திடும், கமழ் பூங்கொன்றை, சுரும்பமரும் கொன்றை, சுரும்புண விரிந்த கொன்றை, தேன் சொட்டச் சொட்ட நின்றட்டுந் திருக்கொன்றை, தேனாருங்கொன்றை, பூவிரியும் மலர்க் கொன்றை, பொன் பிதிர்ந்தன்ன பைங்கொன்றை, மடல்தேன் கொன்றை, வண்டமரும் மலர்க் கொன்றை, வண்டிசைக்கும் நறுங்கொன்றை, வண்டுபடுமலர்க் கொன்றை, வண்டுலவு கொன்றை, விரைகமழும் மலர்க் கொன்றை என்கிறார். பூ விரிகிறதாம், பொன்தாது நிறைந்துள்ளதாம், நறுமணம் கமழ்கின்றதாம், தேன் சொட்டுகிறதாம், வண்டுகள் அமருகின்றதாம்! என்ன அருமையான அறிவியல் சிந்தனை, இதுதான் தாவரவியலார் கூறும் மகரந்த சேர்க்கைக்கான (pollination) படிநிலைகள் என்று நாம் இன்று கற்கிறோம்.

தாமரை

அந்தாமரை, கொடித் தாமரை, செந்தாமரை, தண்டாமரை, திருமகள் தாமரை, பொங்கு தாமரை, குல மலர், மடலாழித் தாமரை, மணங்கமழ் மலர்ந்த தாமரை, அன்னமேவும் தாமரை, வண்டேங்கு செங்கமலம் என்கிறார்.

தாழம்பூ

தாழம்பூ மணம் நாறிய தாழ் பொழில், தாழை, பூங்குந் தாழை எனப் பாடியுள்ளார்.

நெல்

கெந்த சாலி, செந்நெல், திப்பியம், பிரம்புரி, பெரிய செந்நெல் என நெல் வகைகளாக குறிப்பிட்டுள்ளார்.

புன்னை

இவர் கன்னியம் புன்னை, சுரக்கும் புன்னை, திகழும் புன்னை, புன்னைக் கானல், புன்னைத் தாது, பெரும் புன்னை, பொங்குசேர் மணற்புன்னை, மன்றத்துப் புன்னை என விளக்கியுள்ளார். புன்னைப் பூக்களில் மகரந்தம் அதிகம் உண்டு (புன்னைத் தாது) என்று கூறுகிறார்.

மல்லிகை

கொழுந்தகை மல்லிகை, நாறு மல்லிகை என இனம் கண்டுள்ளார்.

முல்லை

கொல்லை முல்லை, புரவணி முல்லை, முல்லை முகை எனப் பிரிக்கிறார்.

கமுகு

இலையார் கமுகு, பாளையுடைக் கமுகு ஓங்கி, கமுகின் பழம் என்று பாடியுள்ளார்.

பழங்கள்

அதம்பழம், இலை கொள் மாங்கனிகள், கொக்கினியகனி, கொழுங்கனி, தெங்கின் பழம், தேம்பழம், பழத்தினிதில் இரதம், பழம் விழும்படப்பை, மாதுளங்கனி, வாழை எனப் பழங்களையும் ரசித்துப் பாடலில் புகுத்தியுள்ளார்.

வேளாண்மை சிந்தனை

வயல்களைப் பற்றிய வர்ணனை நோக்குங்கால், திருநாவுக்கரசரின் வேளாண்மை சிந்தனை புரியும். அள்ளலார் வயல், அன்னமார் வயல், கண்டங்கார் வயல், கார்கோள் நீர் வயல்; காவிரி இட்ட நீர் வயல், காவிரி செய் அனைத்திலும் சென்றிடும், காவிரி பாய் வயல், குளிர் கொள் நீர் வயல், கூழைபாய் வயல், கொக்கமரும் வயல், செந்நெல் வயல், செங்கமல வயல், செய்யுலாங்கயல் பாய வயல்கள் சூழ்ந்த திருப்புன்கூர், சேம்பாடு வயல், சேலுகளும் வயல், தண் வயல், திருந்து வயல், தொக்கநீர் வயல், நிறைவயல், நீர்வயல், நெய்தல் ஆம்பல் நிறைவயல், நெல்லு நீள் வயல், பொருந்து புனல் தழுவு வயல், மண் மலிந்த வயல், மல்லார் வயல், மலங்கு பாய் வயல், வாளையுடைப் புனல் வந்நெறி வாழ் வயல் என்று கூறியுள்ளார்.

இவ்வாறே மருத்துவ சிந்தனை, புவியியல் சிந்தனை, கணிதவியல் சிந்தனை எனப் பல அறிவியல் சிந்தனைகளுக்கு முன்னோடியாக அவர்தம் பாடல்கள் காணப்படுகின்றன.

4. அப்பரின் அறவியல் சிந்தனைகள்

கா. அரங்கசாமி, கோபி.

அப்பராம் திருநாவுக்கரசர் சிவனாகவே வழிபடப்பட்டவர். அவர் தம் தோற்றமே பக்தியின் வடிவம், சிவம் அறத்தின் திருவடிவம். அப்பர் அருட்பணியின் உருவாகத் திகழ்ந்த உழவாரப் படையாளி. தமிழ்ச் சித்தர்கள் முதலாகத் திருமந்திரம் ஈறாகக் கண்ட சிவமும் அவரே. மங்கையொரு பங்காக அறம் வளர்த்த நாயகியுடன் அருள் வடிவம் கொண்ட சிவம் அறத்தின் அன்பின் வடிவம். உள்ளத்தில் சித்த மலம் அறுத்துச் சிவமாக்கி அருளும், அப்பர் பெருமான் அண்ணல் காந்தியாருக்கு முன்னரே அறப்போராட்டம் நடத்தியவர். அத்தகு வரலாற்றுச் சிறப்புமிக்க அப்பரின் அறவியல் சிந்தனைகளை இங்குச் சுருக்கமாகக் காண்போம்.

அறவியல் விளக்கம்

உலகினில் உள்ள அனைத்துக்கும் தீமை கலவாத நன்மையே அறம். அனைத்துலக அன்னை ஆதி சக்தி 32 அறங்களைச் செய்பவர். ''அறனாராகிய நம் தம்பிரான்'' என்று சிவத்தைக் காட்டும் திருக்கோயில் யாவும் பண்டு அறநிலைகளாயின. அறு என்னும் வினையடியாகப் பிறந்த அறம் உலகினில் நல்வழி படைத்துத் தீயன தடுத்து மக்களை அறவியல் ஆட்சியில் மாட்சிபட வைப்பதற்காகவே தோற்றம் பெற்றது. இதனையே திருவள்ளுவர் ''அறத்தான் வருவதே இன்பம்'' என்பர். ''அதனை மறப்பதே கேடு'' என்றும் இடித்துரைப்பார். நீதி என்னும் வடசொல் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் பெருங்கதையில் இடம் பெற்றுத் தமிழில் வழக்குப் பெற்றது. ''நீ'' என்னும் அடிச்சொல்லுக்கு ''அழைத்துச் செல்'', ''நடத்து'', ''வழிகாட்டு'', ''ஆட்சிசெய்'', ''இயக்கு'' என்னும் பல்வேறுபட்ட பொருள்களைத் தருவர். அறத்தின் அடித்தளத்தில் அமைந்த நீதியே சமூகத்தை வழிநடத்தும் என்பதால் திருவள்ளுவர் நீதியை ''நயன்'' என்று சொல்லுவார்.

''குறள் கூறும் அறவியல் மனித குலத்துக்கு மட்டும் உரித்தன்று உயிர்ப் பொருள் உயிரல் பொருள் யாவற்றினுக்கும் உரிய அறவியல் அடித்தளம் கொண்டது குறள். இதனை ''அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின் நோய் தன் நோய் போல் போற்றாக்கடை'' (315) என்ற

குறளும், ''செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து இயற்கை அறிந்து செயல்'' (637) என்ற குறளும் உணர்த்தும், இவ்விரு குறள்வழி இயற்கை இறைமைக்கு முரண்பட்டவை தீமை என்றும் சூழலுக்குக் கேடு தரும் என்பதும் அந்நோய் வராமல் காக்கும் தூய அறநெஞ்சமே அறத்தின் பயன் என்பதும் பெறப்படும்.

''இறைக்கோ வினைக்கோ உலகில் உள்ள எதற்குமோ இல்லாத பேராற்றல் அறத்துக்கு உண்டு என்பது திருக்குறள் கோட்பாடு. அறன் வலியுறுத்தல் அதிகாரத்துடன் 50-க்கும் மேற்பட்ட இடங்களில் அறத்தின் அளப்பரிய பன்முகப் பேராற்றலைக் குறள் விளக்கும். வள்ளுவர் கூறும் அறம் அண்டங்களில் உள்ள அனைத்தின் வளத்துக்கும் நலத்துக்கும் அடிப்படை. அது மாசு கலவாத மாண்புடையது. எனவே அறம் கொன்றானை அறமே தண்டிக்கும் (204) அறத்தைப் போற்றினால் அது தருவது பேரின்பம் (39) ஆதலால் குறளறத்தின் அடித்தளமே உலக நலம். அதுவே பேரின்பம்''.

அப்பர் பெருமானின் ஆளுமை

ஆளுமை என்பது உடலின் புறத்தோற்ற அமைவால், அகச் செம்மையால், அறிவாற்றல் நலனால் புறத்தார்க்குப் புலனாகும் சிறப்பாகும். அத்தகைய ஆளுமைத் திறத்தால் யாவரையும் ஆட்கொண்டவர் அப்பர் பெருமான். மக்கட் பணியே மகேசன் பணி என்பதற்கு இலக்கணம் அவர். அதனைச் சேக்கிழார் ''திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறி வாழ வருஞானத் தவ முனிவர்'' என்றும், ''அறந்தரு நாவுக்கரசும் ஆலால சுந்தரரும் பிறந்தருள'' என்றும், ''அலகில் கலைத்துறை தழைப்ப அருந்தவத்தோர் நெறி வாழ உலகில் வரும் இருள் நீக்கி ஒளி விளங்குகதிர் போல - மருள்நீக்கியார் வந்தார்'' என்றும் அப்பரின் தோற்றமே சைவ அறத்தின் வெற்றி எனக் குறிப்பர். பின்னர் ''நம்பர் அருட் குறைவால் சமணம் புக்க அப்பர் ஈசன் அருளால் சூலை தந்து ஆட்கொள்ளப்பட்டார். அதனால் சுடச் சுடரும் ஆன்ம ஞான மெய்யறிவு ஒளி பெற்றார் என்பதைத் தெய்வச் சேக்கிழார், ''தூய வெண்ணீறு துதைந்த பொன் மேனி, நாயகன் சேவடி தைவரு சிந்தை, நைந்துருகிப் பாய்வது போல் அன்பு நீர்பொழிகண், பதிகச் செஞ்சொல் மேய செவ்வாய்'' உடையவராகச் சிவக்கோலம் கொண்டார் என்று அவர் தம் தோற்றப் பொலிவைக் காட்டுவார். திருநெறிய தமிழ் தந்த சம்பந்தரால் ''அப்பர்'' என்றும், தம்பிரான் தோழரால் ''கைத் திருத்தொண்டு செய்த பதியைமிதியேன்'' என்றும் போற்றப் பெற்ற பெருமைக்குரியவர். அவர் தம் ஆளுமையே அறமும் அன்புமாகிச் செம்மையும் சிவமுமாகியது. அவர் தம் அறப்பணியின் ஆற்றலைப் பாடவந்த சேக்கிழார், ''எல்லாம் எய்தி உண்க என இரண்டு பொழுதும் பறை நிகழ்த்திச் சொல்லால்

சாற்றிச் சோறிட்டார் துயர்கூர் வறுமை தொலைத்திட்டார்'' என்றும், ''கைத்திருத்தொண்டாளும் படிமையினால் வாசியில்லாக் காசு பெற்றார்'' என்றும் புகழ்ந்துரைப்பார். வடலூர் வள்ளலாருக்கு முன் தமிழகம் கண்ட வள்ளலார் அப்பர் எனின் அது பெரிதும் பொருந்தும்.

''யாமார்க்கும் குடியல்லோம்'' என உரிமை முழக்கமிட்ட அப்பர் இருமை வகை தெரிந்து ஈண்டறம் பூண்டவர், வேண்டுதல் வேண்டாமை இல்லாதவர், இருள்சேர் இருவினை துறந்தவர்; நெஞ்சமே கோயிலாக்கிச் சிவகதி பெற்றவர், உலகினில் சிவப்பேறும் செம்மையும் விளையச் செய்தவர்.

அப்பரின் அறவியல் சிந்தனைகள்

1. விடுதலை உணர்வும் அறத்தின் அடித்தளமும்

நடுவு நிலையோடு கூடிய உரிமை உணர்வும் விருப்பு வெறுப்பற்ற சான்றாண்மையுமே அறம்பிறக்கும் அடித்தளம். அதனைத் தம் தேவாரத்தில் அப்பர் பெருமான் பாடியுள்ள பாங்கினைப் பின்வரும் பாட்டுக்கள் காட்டும்.

''அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்சவருவதும் இல்லை''
(முதல் திருமுறை, ப. 11)

''துகள் ஏதும் இல்லானை மாசற்ற சோதியனை''
(முதல் திருமுறை, ப. 68)

''மெய்மையாம் உழவைச் செய்து, விருப்பு (பக்தி) என்னும்
வித்தை வித்திப் பொறை என்னும் நீருபாய்ச்சித் தம்மையும்
நோக்கிக் கண்டு தகவு என்னும் வேலி இட்டுச் செம்மையில்''
நிற்பதே சிவகதி''

என்றும், மெய்யறம்,

''தகவுடையார் நெஞ்சு இருக்கை கொண்டான் (6-வது பா. 6)

''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம் ஏமாப்போம்
பிணியறியோம் பணிவோ மல்லோம்'' (6-வது ப. 529)

''இரு நிலத்தில் எமக்கெதிரா வாருமில்லை''

என்றும் (6-வது ப. 5) கூறும் வைரத் தொடர்கள் அப்பரின் சிவம்பெருக்கும் தூய சிந்தையையும் அஞ்சிந்தையில் நிறைந்து பொங்கிய அறவியல் ஆற்றலையும் உணர்த்தும்.

2. அறமும் புறமும்

உலகியல் இருமையுடையது. ஆதலால் அறத்தையும் அதற்குப் புறம்பானவற்றையும் சான்றோர் எடுத்துரைப்பர். அவ்வகையில் நாவரசர்தம் நற்றமிழ் மாலை கூறும் செய்திகளைக் காண்போம்.

அப்பர் புறச்சமயம் புகுந்து துயர் பல பட்டவர், அதனை அவரே, ''அறமிருக்க மறம் விலைக்குக் கொண்டவாறே'' (முதல் திருமுறை, ப. 44) என்றும், அச்செயல் ''பாழூரில் பயிக்கம் (பிச்சை) புக்கு எயித்தவாறே (1-வது ப. 49) என்றும் இழித்துரைப்பார். மேலும் அவர்;

''புனிதன் கண்டாய் - பொய்யிலியாய் நின்றான்,

(6-வ்து பா. 4)

''நீதியைக் கெட நின்றமனே'' (6-வது ப. 170)

''காமியஞ் செய்து காலங்கழியாதே
ஓமியஞ் செய்தங்கு உள்ளத்து உணர்மினே'' (குடமூக்கு - 8)

''மெய்யானை''

''பொக்கம் பேசிப் பொழுது கழியாதே'' (திருநல்லம் - 2)

''குறியில்லேன் குணமொன்றில்லேன்... நெறிபடு
மதியொன்றில்லேன் அறிவிலேன்'' (திருநேரிசை - 7)

''கள்ளத்தை ஒழி .... பொய்க்கோலம் போலி ஆர்வம்
செற்றம் குரோதம் நீக்கச் சீலம் நோன்பு வரும்''

(செம்பொன்பள்ளி - 6)

''தொல் நரகம் நன்னெறியால் தூர்ப்பான்''

(திருக்குறுந்தொகை - 9)

என்பன போன்ற தொடர்களால் அறத்தினையும் அதற்குப் புறம்பான தீவினைகளான பொய், அநீதி, காமியம், பாவம், பொக்கம், குறிக்கோள் இன்மை, குணமில்லாத் தீயறிவு, கள்ளம், மறம் போன்ற கேடுகளைக் களைய வேண்டும் என்று கூறுகின்றார்.

3. அறமே சிவம்

சைவம் சிவனை அறத்தின் திருவடிவம் என்றும் அவனது ஊர்தியை அறமே என்றும் அம்மையை அறம் வளர்த்த நாயகி என்றும் போற்றும் இச்செய்தியை அப்பரடிகளும் பரக்கப் பேசுவார். ''ஆலின் கீழ் அறம் உரைத்தது'' (1-வது ப. 61)

''கோவினுக்கு அருங்கலம் கோட்டம் இல்லது'' (1-வது ப. 105)

"அறஞ்சூழ் அதிகை வீரட்டம்" (1-வது ப. 139)

"அறத்தையே புரி மனத்தர்" (1-வது ப. 204)

"நீதியான்" (ப. 722)

"நிலையும் பெருமையும் நீதியுஞ்சால" (திருக்கழுமலம் - 6)

"தூநெறிக்குத் தூநெறியாய் நின்றான்" (6-வது பா. 1)

"அறங்கண்டானை" (திருத்தாண்டகம், பா. 8)

"நற்றவத்தின் நல்லானை"

"பொய்யிலா மெய்யன்" "மெய்த் தவன் காண்" (திருத்தாண்டகம்)

"தூயவன்காண்" (திருவன்னியூர், ப. 4)

"தூநெறியாய் நின்றான்" (திருத்தாண்டகம், ப. 7)

என்பன போன்ற தொடர்களால் சிவம் தென்முகக் கடவுளாகி அறம் உரைத்தும் அம்மை அறம் புரிந்தும், அவர்கள் உறையும் இடமெல்லாம் அறம் உறையும் இடம் என்றும் காட்டுகின்றார். அத்துடன் சிவன் அறம்புரி நீதியான், தூநெறியான், நற்றவத்தன், மெய்யன் எனக் கூறுவதால் நல்லறமே நற்சிவம் என்பதும் பெறப்படும்.

4. அறமே அவனது ஆட்சியும் மாட்சியும்

அறத்தால் வருவது மட்டுமே இன்பம், அறம் திறம்பினால் வருவது கேடு அதாவது அறம் சூழும் சூழ்ந்தவனுக்குக் கேடு என்பது திருக்குறள். இதனையே அப்பரடிகள் சிவனது ஆட்சியாகவும் மாட்சி யாகவும் நிறுவுகின்றார்.

"நீதியார் நீதியாய போருடை விடை" (1-வது ப. 346)

"முறை முறை நெறிகள் வைத்தார்" (1-வது ப. 380)

"இரப்பவர்க்கு ஈயவைத்தார் ஈபவர்க்கு அருளும் வைத்தார்"

"அன்பலாற் பொருளுமில்லை" (1-வது ப. 391)

"மெய்மையால் நினைவார்கள் வல்வினை தீர்ப்பார்" (5-வது பா. 4)

"குணங்கள் தோள் எட்டு" (1-வது பா. 7)

எனவரும் தொடர்களால், சிவபெருமானின் அறத்தின் ஆற்றல் நினைப்பவர் மனத்தைத் தெய்வமாக்கி உலகெங்கும் தெய்வநிலை பெற்ற மக்களைப் படைக்கும் என்பதையும் அதற்கு அறமும் நீதியுமே அடிப்படையாக நின்று சிவனது ஆட்சிக்கும் மாட்சிக்கும் உறுதுணையாம் என்பதையும் அறியலாம்.

5. அறமே அவனை அடையும் வழி

சிவனின் அருள்வழியே அறம் எனின் அவனை அறிந்துணர்ந்து தேர்ந்து தெளிந்து அடையும் வழியும் அதுவேயாம். இதனைப் பின்வரும் தொடர்களால் உணரலாம்.

''வாயான மனத்தானை மனத்துள் நின்ற கருத்தானை
கருத்தறிந்து முடிப்பான் தன்னை'' (6-வது பா. 7)

''ஞானத்தால் கள்ளத்தை ஒழி''

- அதுவே சிவ நிலை (1-வது ப. 444)

''நீதியாய் நியமமாகி நின்ற நெய்த்தானனாரே'' (1-வது ப. 372)

''மனத்தினுள் மாசு தீர்ப்பார்'' (1-வது ப. 331)

''சீலமும் நோன்பும் ஆவார்'' (1-வது ப. 289)

''நீதியாய் நினை செய் நெஞ்சே'' (1-வது ப. 255)

''நெஞ்சினைத் தூய்மை செய்து'' (1-வது ப. 237)

''அறத்தையேபுரி மனத்தர்'' (1-வது ப. 204)

''அறஞ்சூழ் அதிகை வீரட்டம்'' (1-வது ப. 139)

அடியார் தம் மனத்தினைக் கோயிலாக்கிச் சிவப்பேறு தந்து அவர்கள் வழியாக அறம்புரிந்து அகிலமனைத்தையும் ஆட்கொண்டு அருளும் சிவம் சக்தி தன்னை ஆன்மாவின் இருப்பாற்றலாய், இயங்காற்றலாய்க் கண்டவர்கள் சைவப் பெரியோர்கள். இதனையே அப்பர் பெருமானின் பதிகங்கள் அழகு கொழுக எடுத்துக் காட்டுவதை மேலே கண்டோம். செம்மையே நிறைந்த செம்மையில் நின்று சிவகதி என்னும் சிவப்பேறு அடைய அறமொன்றே அருந்துணை என்பதையும் அப்பர் தம் அருட்பாடல்கள் எடுத்துக்காட்டிய பாங்கினையும் கண்டோம்.

உலக உயிர்கள் யாவும் விடுதலை பெற்றுச் சாவா, மூவாப் பேரின்பப் பெருவாழ்வில் நிறைவடைய வேண்டும் என்பதே குறிக்கோளாகக் கொண்டவர் அப்பரடிகள். அந்நிலை அடைய அறம் ஒன்றே துணையாம். தூய மெய்யறிவு பெற்றுச் சிவப்பேறு தரும் அறத்தின் ஆட்சியும் மாட்சியும் அப்பரடிகளின் பாடல்களில் அருள்விளக்காக அமைந்து இலங்குவதைக் காணலாம். காட்சி நெறியறிந்து சிவம்பெருக்கும் சீர் உள்ளம் பெறுவதே அறத்தின் பயனாகும்.

5. நாவுக்கரசரின் அனுபவங்கள்

சு. அரவிந்த், உடுமலை.

இவ்வுலகம் என்று ஈசனால் தோற்றுவிக்கப்பட்டதோ, அன்றிலிருந்து இன்று வரை இறை நம்பிக்கை என்பது நாளுக்கு நாள் வளர்ந்த வண்ணமே உள்ளது. ஒவ்வொரு காலகட்டத்திற்கும் ஏற்றாற்போல வழிபாடுகளும், செயல்பாடுகளும் மாற்றம் பெற்று வந்துள்ளமையை வரலாறும் வெளிக்காட்டுகிறது. ஆதியில் ஈசனின் உடுக்கை ஒலியில் தோன்றிய இசை, ஒளியாகி, ஒலியுமாகி வெளியெங்கும் மொழியானது, அம்மொழி கொண்டு, 'பாக்களாலும், பூக்களாலும்' இறைவனை அடியவர்கள் போற்றி வணங்கினார்கள். அவ்வாறு வணங்கிய அடியார்களை, நாயன்மார் என்று சைவம் குறிக்கின்றது. அவர்களின் வழிபாட்டை, வாழ்க்கையை, 'சேக்கிழார் நாயனார்' தொகுத்தருளினார். நாயன்மாரில் நால்வர் முதன்மையானவர்கள் என்று சிறப்பிக்கப்படுகின்றார்கள். அவர்களை, 'சமயக் குரவர்கள்' என்று சைவ சமயம் போற்றுகின்றது. அவ்வாறு போற்றுதலுக்குரிய "சுந்தரர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர்" ஆகியவர்களில் இறைவனால் நாவுக்கரசர் என்றும், திருஞானசம்பந்தரால் 'அப்பரே' என்றும் அழைக்கப்பெற்ற 'தாண்டக வேந்தராகிய "திருநாவுக்கரசு நாயனாரின் அனுபவங்களைத்" திருமுறைகள் வழி நின்று காண்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வு அணுகுமுறை

திருநாவுக்கரசரின் அனுபவங்கள் என்ற இவ்வாய்வானது

1. இளமைப் பருவத்தில் நேர்ந்த அனுபவங்கள்.
2. சமண சமயத்தைச் சார்ந்தபோது நேர்ந்த அனுபவங்கள்
3. சைவ சமயத்திற்கு மாறியபோது நேர்ந்த அனுபவங்கள்.
4. இறை பணியில் நேர்ந்த அனுபவங்கள்.

என்ற முறையில் பகுக்கப்பட்டு, முதன்மை மற்றும் துணைமை ஆதாரங் களுடன் விளக்கப்படுகின்றது.

இளமைப் பருவத்தில் நேர்ந்த அனுபவங்கள்

சோழ வள நாட்டிற்கும், தொண்டை நாட்டிற்கும் இடைப்பட்ட நடுநாட்டின் கூறாகிய திருமுனைப்பாடி நாட்டில், 'திருவாமூரில்' சைவ

வேளாளர் குலத்தில் குறுக்கையர் குடியில் புகழனாருக்கும், மாதினியாருக்கும் மகனாக, திலகவதியாருக்குப் பின் அவதரித்தார். மருணீக்கியார் என்பதே இவர்தம் இயற்பெயர். இளமையிலேயே, தொண்டுள்ளமும், அறப்பணியும் செய்து ஈசனை நாடி இருந்தார். திலகவதியாருக்கும் கலிப்பகையாருக்கும் திருமணம் நிச்சயித்தபோது போருக்குப் போகும் நிலை வருகின்றது. பெற்றோர்களும் வினைப்பயனால் இறைவன் திருவடியை அடைகின்றனர். கலிப்பகையாரும் போரில் வீரசொர்க்கம் அடைகின்றார்.

இந்நிலையில் திலகவதியார் ''எந்தையும் எம் அன்னையும் அவருக்கு எனைக் கொடுக்க இசைந்தனர், ஆதலினால் இந்த உயிர் அவருயிரோடு இசைவிப்பன'' என்று கூறித் துணிகின்றார். மருணீக்கியாரோ, நீரே எம் அம்மையும் அப்பனும் ஆவிர். உன்னையும் இழந்தால் யானும் உயிர் நீப்பேன் என்கிறார். இதனைச் சேக்கிழார், ''இனித் தனியாக விட்டேகுவீரெனில் யானும் முன்னம் உயிர் நீப்பன்'' என்று குறிப்பிடுகின்றார். தம்பியார் வாழவும், திருக்கோயிலுக்குத் தொண்டு செய்யவும் சிவனருளால் திலகவதியார் உயிர் தரித்து, இளமையில் கொள்ள வேண்டிய அணிகளைக் களைந்து துறவு மேற்கொள்கிறார். தமக்கையார் இவ்வாறு மனைத்தவம் புரிந்தபோது தம்பியார் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் உயரிய அன்பு வழியையும், அறவழியையும் கைக்கொண்டு எளியோருக்கும் வறியோருக்கும் தொண்டு புரிந்து வந்தார். தம் அறிவுப்பசியாலும், வினைப்பயனாலும், சமணர் களின் வழியைக் கண்டு அதுவே சிறந்தது என்றெண்ணி, பாடலிபுத்திரம் செல்கின்றார். அங்குள்ள சமணப் பள்ளியில் கல்வி கேள்வி போன்ற வற்றைக் கற்கின்றார். இதனை,

''நல்லாறு தெரிந்துணர நம்பரரு ளாமையினாற்
கெல்லாமைமறைந்துறையு மமண் சமயங் குறுகுவார்''

என்கிறார் சேக்கிழார்.

இவ்வாறு முன் வினைப்பயனால் அறச்சமயம் விட்டுத் தம்பியார் புறச்சமயம் புகுந்தது கேட்டுத் திலகவதியார் சுற்றத்தாரை விட்டு கெடில நதி பாயும் திருவதிகையை அடைந்து திருப்பணிகள் பல செய்து எம்பிரானிடம் ''என்னை ஆண்டருளும் நீராகில் அடியேன் பின் வந்தவனை ஈண்டு வினைப் பரசமயக் குழி நின்று எடுத்தருள வேண்டுமெனப் பலமுறையும் விண்ணப்பஞ் செய்தனரால்''

சமணம் சார்ந்தபோது நேர்ந்த அனுபவங்கள

உலகமெல்லாம் உய்ய, அருள் புரியும் சிவ மார்க்க வழியை விட்டு, அருளே இல்லா மருளே கொண்ட அமணர்களிடம் மந்திர

தந்திரங்களில் மனம் கொடுத்த மருணீக்கியார் ''வீடறியு நெறியிதுவே யென மேற் போற்றங்களுடன் கூட வருமுணர் கொளக் குறி பலவுங் கொளுவினார்'' சமண சமயத்தில். கூர்ந்த மதியும் ஞானமும் பெற்ற இப்பிள்ளையை நம் தலைவராகக் கொள்வோம் என்றெண்ணிச் சமணர்கள் தம் கலைகளையும் நூற்களையும் ஓதுவித்து ''தருமசேனர்'' எனப் பெயர் கொடுத்துப் பாடலிபுத்திரத்தில் சமணப் பள்ளிக்குத் தலைவராகவும் போற்றினர் என்பது

''அங்கவரு மமண் சமயத் தருங்கலை...தருமசேனரெனும் பெயர் கொடுத்தார்'' என்ற பாடல்வழி உணர முடிகின்றது. தம்பியார் சமணப் பள்ளிக்குத் தலைமை ஏற்றது கேட்டு வருத்தமுற்ற திலகவதியாருக்கு ஈசன் கனவில் தோன்றி, உன் மனக் கவலையை ஒழித்துக் கொள். உன் பின்னவன் முன்னமே முனியாகித் தவமுயன்று என்னை அடைய எண்ணினான், அவனை இனிச் சூலை நோய்கொடுத்து ஆட்கொள்வோம் என்றார். இறைவனின் திருக்கருணையினால் தருமசேனருக்கு, வடவாக்கினியையும் விட கொடிய வெம்மையும், விடங்களை விட கொடிய வச்சிரமும், ஈண்டு உலகிலுள்ள கொடியனயெல்லாம் கலந்து ஒன்றாய் வயிற்றினுள் சூலை நோய் ஆட்கொண்டது.

சூலை நோயால் துன்பமுறல்

சூலை நோயானது, தருமசேனர் வயிற்றினுள், ஊழியினுள் மிக்க கொடுந்தீயான வடவாக்கினியைப் போலவும், குடலினை அறுக்கும் கொடிய வயிரப்பொடியைப் போலவும் துன்புறுத்தியது. அவர் நிலை கண்ட சமணர்கள், மந்திரத்தாலும் தங்களுக்குத் தெரிந்த தந்திரத்தாலும் குளிர்விக்க முயன்றனர். ஆனால் அந்நோயோ முன்னிலும் மிகுந்து துன்புறுத்தியது. சூலை நோய் அதிகரித்தது கண்டு மயங்கிய சமணர்கள் தங்களால் இயலாததெனக் கைவிட்டனர். அப்போது ''பண்டையுற வுணர்ந்தார்க்குத் திலகவதியாருளராக் கொண்டவர்யா லூட்டுவொன்றனை'' என்று தம் தமக்கையருக்குத் தம் நிலையை உணர்த்தினார் சேனர். அறச்சமயமன்றி, புறச்சமயம் உள்ள இடத்திற்கு வரேன் என்று திலகவதியார் உரைக்க, சமணப் பாழியை விட்டு, திருவதிகை நோக்கி, சமணச் சின்னங்களை களைந்து வந்தார் தாண்டக வேந்தர்.

சைவ சமயத்திற்கு மாறியபோது நேர்ந்த அனுபவங்கள்

கொடுமையான சூலையுடன் வந்த தம்பியரைக் கண்ட திலகவதியார், இது கற்றை வேணியர் அருளாலே தோன்றியது, இனி ஈசன் பணியே செய்வீர் எனப் பணித்து, ஐந்தெழுத்து மந்திரமாம் நமசிவாய என்றோதித் திருநீற்றைக் கொடுத்தார். நாவுக்கரசரும் உடலெங்கும் அணிந்து தமக்கையர் பின் தொடர்ந்தார்.

நீறணிந்து, அதிகைப் பெருமானைக் கண்டு ''கூற்றாயினவாறு'' என்று தொடங்கும் பதிகம் பாடினார்; நோய் நீங்கியது. திருநீற்றின் அருளால் இறைவனுக்குப் பாமாலை பலவும் சூட்டி மகிழ்ந்த வாகீசருக்கு நாவுக்கரசு என்று இறைவன் பெயர் தந்தான்.

சமணர்கள் திருநாவுக்கரசரைத் துன்புறுத்த எண்ணிப் பல்லவனிடம், நம் ஆதி சமயமாகிய சமணத்தை அழித்தத் தருமசேனன் பொய்ப் பிணி கொண்டு ஏமாற்றினான். அதனால் அவனைத் தண்டிக்க வேண்டுமென்றார்கள். மன்னனும், நாவுக்கரசரை அழைக்க, அவரோ ''நாமார்க்குங் குடியல்லோம்'' நமனை யஞ்சோம்நரகத்தி லிடர்ப்படோம்; நடலையில்லோம் ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம் என்று பாடல் கூறி மறுக்கின்றார்.

மன்னன் சமணர்களின் தூண்டுதலால் நாவுக்கரசரை ஏழுநாட்கள் கொடுமையான நீற்றறையினும் வைக்கின்றான். நாவுக்கரசோ ''வெய்யநீற் றறையதுதான் வீங்கிளவே னிற்பருவந், தைவருதென் றலனை'' என்ற பதிகம் பாட நீற்றறை குளுமையான தடாகம் போன்று இன்புறுத்தியது.

கொடும் விடமுடைய பாலை அருந்தச் செய்தபோது ''நாதனடியார்க்கு நஞ்சும் அமுதாம்'' என நினைத்து அருந்தினார், விசத்தின் பயன் இன்றிக் காணப்பட்ட நாவுக்கரசர் மேல் யானையைக் கொண்டு இடரச்செய்யத் தூண்டினர் சமணர்கள். யானையை உரித்து ஆடையாகக் கொண்ட சிவனின் அடியாரைக் கண்டு யானை வலம் வந்து வணங்கித் துதித்தது, பின் ஏவியவர்களையே துன்புறுத்தத் தொடங்கியது.

திருநாவுக்கரசர், தண்டனைகளில் எல்லாம் உயிர் பிழைத்தது. நம் ஆதி சமயமான சமணத்தில் இருந்ததினாலும், நம் நூல்களைக் கற்றதினாலும் என்று மன்னனிடம் கூறி, நாவுக்கரசரைக் கல்தூணில் கட்டிக் கடலில் விடுவோம். அதுவே பொய்ப் பிணி கொண்ட தருமசேனருக்குத் தக்க தண்டனை ஆகும் என்றனர் சமணர்கள். நாவுக்கரசரோ, நமசிவாய வென்ற ஐந்தெழுத்தை ஓதிச் ''சொற்றுணை வேதியன்'' என்ற பதிகம் பாடக் கற்றூண் தெப்பமாகியது, அதுவே திருப்பாதிரிப் புலியூரில் கரையேற்றியது.

மன்னன் சைவம் ஏற்றல்

ஈசனின் கருணையால் அனைத்தையும் வென்ற திருநாவுக்கரசர் கொண்ட சமயமே மெய்யான அன்பர்களும், மேலான அடியவர்களும் இருக்கும் இடம் என்பதை அறிந்து தன் சமணச் சின்னங்களை மட்டு மின்றி, பாடலிபுத்திரத்தில் உள்ள சமணப் பள்ளிகளையும், பாழிகளையும் கலைத்து, நாவுக்கரசர் அடிபணிந்தான் பல்லவன். காடவன் திருவதிகையில்

அப்பர் அடிபணிந்து திருநீறு பெற்றுச் சைவனானதோடு "குணபரவீச்சரம்" என்னும் திருக்கோயிலையும் எடுப்பித்தான். "மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழி" என்ற பழமொழிப்படி மக்களும் பொய்யான சமயம் விட்டு மெய்யன்பர்கள் நிறைந்த சைவம் ஏற்றனர்.

இறைபணியில் நேர்ந்த அனுபவங்கள்

தமக்கையார் பணித்தது போல், நாவுக்கரசர் உழவாரப் படை கொண்ட, திருக்கோயில்களைச் சுத்தம் செய்தும், ஆடல்வல்லானின் புகழ்பாடியும் பெருந்தொண்டாற்றியிருந்தார். உமைப்பால் உண்ட ஞானக்குழந்தையான திருஞான சம்பந்தரைக் கண்டு, திருவடி பணிந்தார். சிவனடியார்கள் அனைவருக்கும் அடியவன் தான் என்பதைக் காட்டுவது போல், பேரன்போடு அடிபணிந்த திருநாவுக்கரசரை, சம்பந்தர் தடுத்து "அப்பரே" என்று போற்றினார்.

"பழுதழைத்துக் கொண்டவர்த மப்பரே யெனவவரு படியே னென்றார்" அப்பரும் ஆளுடைய பிள்ளையும். பல சிவதலங்களுக்குச் சென்று பாமாலை தொடுத்து இறைவனைத் தரிசித்தனர். திருவீழிமிழலையில் அன்பர்களுக்கு அருள்புரிந்த இறைவன் நாளும் படிக்காசு வைத்தார். சம்பந்தர் திருமகனாகியதால் காசை வாசியுடன் பெற்றார். அப்பரோ, கைத்தொண்டே மெய்த்தொண்டென அடியவர்களுக்கெல்லாம் அடியவன் என்பதால் வாசியில்லாமலே காசு பெற்றார். மறைக்காட்டில் திருக்கதவம் திறக்கவும், அடைக்கவும் இருவரும் பாடல் பாடினார்கள்.

திங்களூரில் அப்பூதியடிகளைக் கண்ட திருநாவுக்கரசர், அவரின் மூத்த பிள்ளையான பெரிய திருநாவுக்கரசை அரவம் தீண்டியபோது "யொன்றுகொலா மெனப்பதிக மெடுத்துடையான் சீர்பாடப் பின்றை விடம் போய்நீங்கிப் பிள்ளையுணர்ந் தெழுந்திருந்தான்" என்ற பதிகம் பாட இறைவன் அருளால் பிழைத்தெழுந்தான். திருநாவுக்கரசர் திருப்பைஞ்ஞீலியில் உள்ள திருக்கோயிலைக் காணச் சென்றபோது, சோர்வும், தாகமும் கொண்ட அப்பருக்கு இறைவனே, உணவும், நீரும் (கொடுத்து) முன்னம் பல்லாண்டு நட்பாயிருந்தார்போல் கொடுத்தார். "காவுங் குளுமு முன் சமைத்துக் காட்டி வழி போங்கருத்தினால" என்பதில் அறியலாகின்றது.

திருவண்ணாமலையில் சோதியாய் வீற்றிருந்த இறைவனைக் கண்ட அப்பர், உலகுக்கெல்லாம் அரசரான சிவனைக் கண்டு வழிபட்டும், பாடியும், திருத்தொண்டு செய்வதுமே வீட்டின்பத்திற்கும் மேலானது என்ற அனுபூதியை உணர்ந்து பதிகமாய்ப் பாடினார். அங்க ணரசைத் தொழு தெழுந்து திளைத்துத் திருநாவுக்கரசர் தங்கு பிறப்பே வீட்டினுக்கு மேலான பெருமை எனச் சாதித்தார்.

திருக்கயிலாயம் செல்லல்

தேவர்களும் முனிவர்களும் வந்து துதி செய்து போற்றும் திருக்கயிலாயம் சென்று, உமையொருபாகனான இறைவனைக் காண அப்பர் அன்பர்களோடு காசி சென்று, தனித்தே, கயிலாய மலை ஏறினார், மனிதர்களால் போக முடியாத கடினமான மலையில், கொடும் அரவங் களும், விலங்குகளும் நிறைந்த கானக வழியாக இரவு பகல் பாராது, இடைவிடாமல் அப்பர் சென்றார், இருளில் விளக்கென அரவங்கள் தம் மணியை இட்டன. விலங்குகள் அப்பரைக் கண்டு அஞ்சி விரைந்து மறைந்தன. இவையனைத்தும் ஈசன் செயல் என்றெண்ணி, கைகளையும், கால்களையும் இழந்து மார்பால் உந்தியும் ஊர்ந்தும் சென்ற அப்பரைத் தடுத்த சிவனடியார் வேடங்கொண்ட ஈசனிடம், ''வாளு நாயகன் கயிலையி லிருக்கை கண்டல்லான்மாளு மிவ்வுடல் கொண்டு மீளே னென மறுத்தார்'' ஈசன், தனதுரு மறைத்து, இப்பொய்கையில் மூழ்கி திருவையாற்றில் வாவியில் எழும் அங்குத் திருக்கயிலாய தரிசனம் தருவோம் என்றார்.

''பனிவரைப் பொய்கையின் மூழ்கி'' என்கிறார் சேக்கிழார் குளத்தில் இருந்து வரும்போது ஊறுகள் போய் நீருடன் வந்ததைக் கண்டு உலகத்தார் வியந்தனர். குளக்கரையில் இருந்து திருக்கோயில் முன் வரும் வரையிலும், கயிலையின் காட்சியைக் கண்டு எந்நின்ற யோனிகளாக இறைவனையே எண்ணி கயிலை மலையுள் போனார் அப்பர். அத்திருக்கயிலாயக் காட்சியை ''காணுமப் பெருங் கோயிலுங் கயிலைமால் வரையாய் பேணுமாலய...தாணு மாமறை யாவையுந் தனித்தனி முழங்க'' என்ற பதிகத்தால் தம் அனுபவத்தைக் குறிக்கின்றார். தென்னாடு சென்று எந்நாடுடைய சிவனின் புகழ் பரப்பிய திருஞான சம்பந்தர் திருப்பூந்துருத்திக்கருகில் வரும்போது, அவர் அறியாமல் அப்பர் சம்பந்தரின் சிவிகையைத் தாங்குகின்றார் ''யெங்குற்றா ரப்பரென வுருகாநின் நும்மடியே னும்மடிக டாங்கி வரும்'' என்றார்.

இறைவன் திருவடிகளையே எண்ணியெண்ணிச் சிந்தையெங்கும் சிவச்சின்னங்கள் நிறைந்திருந்த அப்பருக்கு, நவமணிகளும், முத்தும், மணியும், பொன்னும் உயர்வாகத் தெரியாமல் மண்ணும், ஓடும் போன்ற தாகவே எண்ணினார். மண், பொன், பெண் என்ற பேதங்களை எண்ண முடியாத சிவயோக சிந்தையில் பேதமின்றி எங்கும் சிவமாய்க் கண்டார். அரம்பையர்களும், காமனும் ஈசன் கருணையினால் தோற்றொழிந்தனர். இறைவன் அருளால், இப்பூலோகம் விடுத்துச் சிவலோகம் சென்று இறைவனின் பாதாரவிந்தங்களை அடைந்தார். ''புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றே'' என்ற பதிகம் பாடிச் சிவானந்த சேவடியை அடைந்தார்.

திருநாவுக்கரசரின் அனுபவங்கள்வழி அறிவது

1. இளமையில், தந்தையையும், தாயையும் இழந்த அடியவர் தமக்கையரால் சிவனடி சார்தல்.
2. அறிவுப்பசியால் நன்மை, தீமை உணராது, புறச்சமயம் சென்ற போது, இறைவனால் சூலை கொடுத்து ஆட்கொள்ளப்படுதல்.
3. மெய்யான உழவாரப் பணியே மேலானதென்று உணர்ந்து, சிவச்சின்னங்களுக்கும், அடியவர்களுக்கும் பணி செய்தல்.
4. நமச்சிவாயத்தின் அருளால் சமணர் சூழ்ச்சிகளை அழித்து, மெய்யான சைவத்தின் அருள் பரப்பி மன்னனையும் மக்களையும் சைவம் ஏற்கச் செய்தல்.
5. மாண்டவரையும் மீண்டெழச் செய்யும் ஐந்தெழுத்து மந்திரத்தின் அருமையுணர்தல்.
6. இறைத் தொண்டு செய்வதே, மேலான வீடுபேறு பெறுவதைவிட இன்பமானது என்பதை உணர்தல்.
7. இடைவிடாத இறைப்பணியும், மனவுறுதியும் மகேசனைக் காட்டும் என்பதைத் தெளிவுபடுத்துதல்.
8. பொன்னும், மணியும், போகம் நிறைந்த பெண்ணும் ஈசனுக்கு முன்னால் பெரிதன்று, சிவன் அருளே மேலானது என்று உலகுக்கு உணர்த்தியது போன்ற அனுபவங்களை அறியலாம்.

6. திருநாவுக்கரசர் வரலாறு

வி. அருண்குமார், கோவை.

திருநாவுக்கரசர் அடியார்களிலேயே தலைசிறந்தவர் ஆவார். தொண்டு நெறியில் மிகச் சிறந்த தவமுனிவராய்த் திகழ்ந்தவர் திருநாவுக்கரசர். அவர் வரலாறு வாழ்வாங்கு வாழ்ந்த தவச்சீலரின் வரலாறு. அவ்வரலாறு கற்றுத் தரும் பாடம் பல. அவற்றைக்கூற விழைகின்றேன்.

நாவுக்கரசரின் பிறப்பு

திருமுனைப்பாடி நாட்டில் (தென் ஆர்க்காடு மாவட்டம்) திருவாமூரில் வேளாளர் குலத்தில் புகழனார், மாதினியார் தம்பதியினருக்குத் திலகவதியார் என்ற பெண் மகவு பிறந்தது. அக்குழந்தை பிறந்து பல ஆண்டுகள் கழிந்தபின் சிவனருளால் மருள்நீக்கியார் என்ற அப்பர் அவதரித்தார். அவர் இளமை முதலே கற்பன கற்று இறையன்போடு வளர்ந்து வந்தார்.

திலகவதியாரின் சிறப்பு

சிவபக்தியிற் சிறந்த திலகவதியாரைத் திருமணம் செய்து தரும்படி கலிப்பகையார் கேட்டார். திருமணத்திற்கு நாள் குறிக்கப் பெற்றது. அச்சமயத்தில் மன்னன் வேற்று நாட்டின் மீது படையெடுக்கக் கலிப்பகையாருக்கு ஆணையிட்டான். தளபதியாகிய கலிப்பகையார் தன்னலம் மறந்து, நாட்டு நலத்தையே பெரிதாக நினைத்தார். எனவே திருமணத்தைத் தள்ளிப்போட்டுவிட்டு எதிர் நாட்டின் மீது படையெடுத்தார். இதற்கிடையில் திலகவதியாரின் பெற்றோர் இறந்தனர். பெற்றோருக்குப் பின் தம் தம்பியை நன்கு வளர்த்தார். ஒருநாள் போரில், கலிப்பகையார் விழுப்புண் ஏற்று மரணம் அடைந்தார். அதையறிந்து திலகவதியார் தீ மூழ்கிச் சாக முயன்றார், மருள்நீக்கியார் தமக்கையைச் சாகாவாறு தடுத்தார். தமக்கு யார் துணையென்று கேட்க, சற்றே யோசித்த திலகவதியார் தம்பிக்காக உயிர்வாழ முடிவு செய்தார். எனினும் கணவன் என்று உறுதிசெய்யப் பட்டவர் காலமாகி விட்டபடியால், வேறு ஒருவரையும் மணக்காமல் கன்னியாகவே இருந்து சிவபக்தியில் மூழ்கிச் சிவத்தொண்டாற்ற உறுதி பூண்டார். இதன் வாயிலாகத் திலகவதியாரின் தம்பியை வளர்க்கும் பொறுப்புணர்வினையும், கற்பின் திண்மையையும் அறியலாம்.

சமண மதத்தைத் தழுவுதல்

மருள்நீக்கியார் பல நூல்களையும், கலைகளையும் கற்று மேதை ஆனார். சோலைகளை வளர்த்தும், குளம் தோண்டியும் வந்தோர்க்கு ஈந்தும், விருந்தளித்தும் நாவலர்களுக்கு வளம் பெருகக் கொடுத்தும் வந்தார். உலக நிலையாமை கண்டு துறவு பூண்டார். ஆனால் சமயங் களில் நன்மார்க்கந் தெரிந்துணர இறைவன் திருவருள் கிட்டவில்லை. அதற்குத் திருவருளும், குருவருளும் வேண்டும், அது கிடைக்காத படியால் கொல்லாமை என்ற போர்வைக்குள் ஒழுகும் சமண சமயம் சேர்ந்தார். தமக்கையார் எவ்வளவோ அறிவுரை கூறியும் அவர் கேட்கவில்லை. சமணர்களின் தலைநகரமாகிய பாடலிபுத்திரத்திற்கு மருள்நீக்கியார் போய் விட்டார். அங்கே தலைசிறந்த வரவேற்பு கொடுக்கப்பட்டது. சமணர்களின் நூல்களையும், நுணுக்கங்களையும் கற்றுப் பேரறிவு பெற்றார். சமணர்கள் அனைவரும் மருள்நீக்கியாரைத் தமது தலைவராகக் கொண்டனர். அவருக்குத் தருமசேனர் என்ற பெயர் சூட்டப்பட்டது.

சூலைநோய் தாக்கல்

திலகவதியார் தம் தம்பி விரைவில் சைவ மதத்திற்குத் திரும்ப அருள் புரியுமாறு இறைவனிடம் வேண்டினார். இந்நிலையில் தருமசேனருக்குக் கொடிய சூலை நோய் ஏற்பட்டது. சமணர்கள் எவ்வளவோ முயன்றும் அதனைத் தீர்க்க முடியவில்லை. வலி பொறாத தருமசேனர் தம் தமக்கையை நினைத்தார். அவரால் சூலை நோயைத் தீர்க்க முடியுமென எண்ணித் தமது ஆட்களை தமக்கையிடம் அனுப்பி அவரை அழைத்து வரச் சொன்னார்.

சைவ சமயத்தைத் தழுவுதல்

திலகவதியார் தாம் செல்ல மறுத்துத் தம்பியைத் திருவதிகைக்கு வருமாறு பதில் விடுத்தார். நோயின் கடுமை பொறாத தருமசேனர் வேறு வழியின்றித் திருவதிகை திரும்பினார். அவரைத் திலகவதியார் கோயிலுக்கு அழைத்துச் சென்று திருநீறு வழங்கினார். தருமசேனர் சிவனையே முழுமுதற் கடவுளாக எண்ணி வழிபட்டார். உடனே பாடும் ஆற்றல் கிடைத்தது. சிவபெருமான் மகிழ்ந்து அவரது நோயை நீக்கினார். அதின்றி அவரது மொழியில் மயங்கி அவருக்கு நாவுக்கரசர் என்ற பட்டத்தையும் அசரீரியாக வழங்கினார். அன்று முதல் அவர் திருநாவுக்கரசர் என்ற பெயரைப் பெற்றார்.

குற்றச்சாட்டு

தருமசேனர் திருநாவுக்கரசராக மாறிச் சைவ மதத்தில் சேர்ந்ததால் சமணர்கள் அஞ்சினர், அதனுடன் ஆத்திரமும் கொண்டனர். எனவே

அவரைத் தண்டிக்க விரும்பினர். காஞ்சியை ஆண்ட மகேந்திரவர்மன் என்ற மன்னன் சமண மதத்தைச் சார்ந்தவன். அம்மன்னனிடம் சென்று இல்லாததையெல்லாம் கூறி நாவுக்கரசரைத் தண்டிக்குமாறு வற்புறுத்தினர். வராத நோய் வந்ததாகக் கூறி, சைவ மதத்தில் சேர்ந்ததால் தீர்ந்து விட்டதாகக் கபட நாடகம் நடித்து, சமண மதத்தின் பெயரைக் கெடுத்து விட்டதாகவும் குற்றம் சாட்டினர்.

மன்னன் சினம்

சினம் கொண்ட மன்னன் நாவுக்கரசரை அழைத்து வருமாறு காவலர்க்கு ஆணையிட்டான். காவலர்கள் நாவுக்கரசரை அழைக்க, அவர் தாம் யாருக்கும் அடிமையில்லை; ஆகையால் வர இயலாது என்று பதில் கூறினார். அதன்பின் காவலர்கள் கெஞ்சித் திருநாவுக்கரசரை மன்னன் முன் அழைத்து வந்தனர். மன்னன் திருநாவுக்கரசரை சுண்ணாம்புக் காளவாயில் வைத்துக் கொல்லப் பணித்தான். அவ்வாறே அவரைச் சுண்ணாம்புக் காளவாயில் வைத்துச் சுட்டனர். ஆனால் திருநாவுக்கரசர் சிவபெருமானின் சிந்தனையிலேயே இருந்தார். ஒருவாரம் கழித்துத் தீயை அணைத்துச் சுண்ணாம்புக் காளவாயைத் திறந்து பார்த்தனர். அதில் திருநாவுக்கரசர் பத்திரமாக இருந்தார். கொடிய வெப்பம் மிக்க காளவாய் சிவனருளால் இனிமையாக இருந்ததாக அவரே பாடுகிறார்.

**''மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே''**

என்று காளவாய் பற்றி வர்ணித்தார் நாவுக்கரசர், மன்னன் வியந்தான். ''நம் சமயத்தில் முன்பு இருந்ததால் இவர் சில சக்திகளைப் பெற்றுள்ளார். அதனால் பிழைத்து விடடார். எனவே இவருக்கு நஞ்சு ஊட்ட வேண்டும்'' என்று சமணர்கள் கூறினர். அவ்வாறே நாவுக்கரசருக்கு நஞ்சூட்டிய உணவு கொடுத்தனர். அப்பொழுதும் அவர் பிழைத்திருந்தார். பிறகு யானையைக் கொண்டு நாவுக்கரசரைப் பூமியோடு தேய்த்துக் கொல்ல முயன்றனர். அப்பொழுது அந்த யானை நாவுக்கரசரை வணங்கிவிட்டுச் சமணர்களைக் கொன்றது. பிறகு திருநாவுக்கரசரைக் கல்லில் கட்டிக் கடலில் போட்டனர். அப்பொழுது நாவுக்கரசர்,

**''சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருத்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.''**

என்று பாட, கல் கடலில் தெப்பமாக மிதந்தது. நாவுக்கரசர் கரை சேர்ந்தார். பின் திருப்பாதிரிப் புலியூர் அடைந்தார். அடியார்கள் அவரை

அன்போடு வரவேற்றுக் கோயிலுக்கு அழைத்துச் சென்றனர். பிறகு ஒவ்வொரூராகச் சென்று பாடல் பாடிப் பரமனை வழிபடலானார்.

மன்னனின் மன மாற்றம்

மகேந்திரவர்ம மன்னன் திருநாவுக்கரசர் பிழைத்த செய்தியும், அவரது சிறப்பும் அறிந்து தான் அவருக்குச் செய்த கொடுமைக்கு வருந்தினான். அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். தானும் சமண சமயத்தைத் துறந்து சைவ சமயத்தில் சேர்ந்தான்.

நாவுக்கரசர் திருவதிகை சென்று வீரட்டாணேசுவரரையும், தமக்கையையும் வணங்கி ஆசி பெற்றுப் பெண்ணாடம் சென்றார். அங்குத் தூங்கானை மாடம் என்னும் கோயிலுட் சென்று சிவபெருமானை வணங்கினார். தாம் சமண சமயத்தில் சேர்ந்த தவற்றை இறைவன் முழுவதும் மன்னித்து விட்டாரா என்று அறிய விரும்பினார். மன்னித்தது உண்மையானால் தம் மீது சிவச் சின்னமாகிய சூலம், காளை முத்திரைகளைப் பொறிக்குமாறு பதிகம் பாடி வேண்டினார்.

சிவனருளால் ஒரு சிவபூதம் தோன்றி நாவுக்கரசரின் தோளில் சூலம், காளை முத்திரைகளை இட்டுச் சென்றது. இறைவன் மன்னித்ததை நாவுக்கரசர் மகிழ்ந்து, பின் தில்லை சென்று நடராசரை வணங்கி, பதிகம் பாடிப் பரவினார். திருநாவுக்கரசர் திருக்கழிப்பாலை சென்றும் இறைவனை வணங்கினார்.

அப்பர் - சம்பந்தர் சந்திப்பு

திருஞானசம்பந்தரைக் காணும் பொருட்டுச் சீர்காழிக்குப் புறப்பட்டுச் சென்றார். திருநாவுக்கரசர் வரும் செய்தி அறிந்த ஞானசம்பந்தர் அடியார் களோடு எல்லைக்கு வந்து நாவுக்கரசரை வரவேற்றார். இருவரும் வணங்கினர்.

ஞானசம்பந்தர் நாவுக்கரசரை "அப்பரே!" என்றழைத்தார். அன்றுமுதல் நாவுக்கரசர் அப்பர் ஆனார். பிறகு இருவரும் சென்று ஆண்டவனைப் பாடி வணங்கினர். நாவுக்கரசர் சில நாட்கள் சீர்காழியில் தங்கிய பின் திருக்கோலக்கா, கரும்பறியலூர், புன்கூர், நீடூர், குறுக்கை, நின்றையூர் நனிபள்ளி, செம்பொன் பள்ளி, மயிலாடுதுறை, திருவாவடுதுறை, திருவிடைமருதூர், திருநாகேசுவரம், பழையாறை, சத்திமுற்றம், திருநல்லூர் முதலிய பல தலங்களுக்குச் சென்று இறைவனை வணங்கி எண்ணற்ற பதிகங்கள் பாடினார்.

நாவுக்கரசரும் அப்பூதி நாயனாரும்

பல தலங்களுக்கும் சென்ற நாவுக்கரசர் திங்களூரை அடைந்தார். அங்கு அந்தண மரபைச் சேர்ந்த அப்பூதியடிகள் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் நாவுக்கரசர் மீது எல்லையற்ற அன்புடையவர். அவர்

திங்களூரில் ஏராளமான அற நிலையங்கள் அமைத்திருந்தார், அன்னச் சத்திரம், கிணறு, குளம், நந்தவனம் ஆகிய அனைத்துக்கும் தம் பெயர் இடாமல் நாவுக்கரசர் பெயரே சூட்டியிருந்தார். மேலும் தமது புதல்வருக்கும் அப்பெயரே சூட்டினார். பல நிலையங்களிலும் தமது பெயரைப் பார்த்த நாவுக்கரசர் அவற்றை அமைத்த அப்பூதி அடிகளைக் காணச்சென்றார்.

அப்பூதி அடிகள் நாவுக்கரசரை அடையாளம் தெரிந்து கொள்ள வில்லை. ஏனெனில் இருவரும் இதற்கு முன் சந்தித்ததில்லை. எனவே அப்பூதி அடிகள் நாவுக்கரசரை ஒரு சிவனடியாராகக் கண்டதனால் மகிழ்ச்சியோடு வரவேற்று அடிபணிந்தார். மனைவியும், புதல்வரும் வணங்கினர்.

திருநாவுக்கரசர் அப்பூதி அடிகளிடம் ஒரு சந்தேகம் கேட்க விரும்புவதாகக் கூறினார், அவரும் கேட்கச் சொன்னார். ''தாங்கள் அமைத்த அறநிலையங்களுக்குத் தங்கள் பெயர் வைக்காமல் வேறு ஒருவர் பெயர் வைக்கக் காரணம் என்ன?'' என்றார். அது கேட்ட அப்பூதி அடிகள் சினந்து, ''என்ன வார்த்தை சொன்னீர்! திருநாவுக்கரசர் வேறு ஒருவரா? தாங்கள் ஓர் அடியாராய் இருந்தும் இவ்வாறு பேசலாமா? தாங்கள் யார்?'' என்றார். உடனே திருநாவுக்கரசர், ''நான் தான் அந்தத் திருநாவுக்கரசன்'' என்றார். அப்பூதி அடிகள், ''தவறு இழைத்து விட்டேன். மன்னிக்க வேண்டும் என் தெய்வமே'' என்று திருநாவுக்கரசர் காலில் விழுந்து வணங்கினார், குடும்பத்தாரும் அவரை வணங்கினர்.

திருநாவுக்கரசர் அப்பூதி அடிகள் வீட்டில் உணவுண்ண இசைந்த பின் கோவிலுக்குச் சென்று நீராடி இறைவனை வணங்கி வருவதாகக் கூறிச்சென்றார். உணவு தயாராகியதும் அப்பூதியடிகள் தம் மகனிடம் தோட்டத்திற்குச் சென்று தலைவாழை இலை அறுத்து வரும்படி கூறினார். அவன் அவ்வாறே சென்று இலையறுக்க, இலையில் மறைந்திருந்த பாம்பு அவனைத் தீண்ட நஞ்சு தலைக்கேற அயராமல் ஓடிவந்து இலையைத் தாய்மடியில் போட்டு விட்டு மடிந்தான். மகன் இறந்த நிலையிலும் பெற்றோர்கள் உள்ளம் நாவுக்கரசருக்கு அமுது படைப்பதிலேயே இருந்தது. எனவே மகன் மாண்டதை மறைத்து நாவுக்கரசரை உணவுண்ண அழைத்தனர். நாவுக்கரசர் திருவுள்ளத்தில் இறையருளால் ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது. ''மூத்த திருநாவுக்கரசு எங்கே'' என்று கேட்டார்.

''அவன் இப்போது இங்கு உதவான்'' என்றார் அப்பூதியடிகள். ''ஏன்?'' என்றார் நாவுக்கரசர். இனி உண்மையை ஒளிக்கக் கூடாது என்று எல்லாச் செய்திகளையும் கூறினார். உடனே நாவுக்கரசர் இறந்த குமரனின் உடலை அவ்வூர்க் கோயிலின் முன் கொண்டு வரச்செய்து ''ஒன்றுகொலாம்'' என்று தொடங்கும் பதிகம் பாடினார். பாடி முடித்ததும் மூத்த திருநாவுக்கரசு உயிர் பெற்று எழுந்தான். அனைவரும் வியந்து போற்றினர்.

அப்பூதியடிகள் இல்லத்தில் திருநாவுக்கரசர் அனைவருடனும் ஒன்றாய் அமர்ந்து உணவு உண்டார். பிறகு திருப்பழனம் சென்றார். அப்பூதி அடிகளைப் பாராட்டி ஒரு பதிகத்தில் பாடினார்.

திருநாவுக்கரசர் திருவாரூருக்குச் சென்றார். அடியார்கள் கூடி அவரை வரவேற்றனர். தியாகேசப் பெருமான் கோயிலுக்குச் சென்று புற்றிடம் கொண்ட பெருமானைப் போற்றிப் பாடினார். அங்குச் சில நாட்கள் தங்கி, பின் திருப்புகலூர் சென்றார். அங்கே வந்திருந்த ஞானசம்பந்தருடன் பேசி மகிழ்ந்து, இறைவணங்கி இன்புற்றனர். திருப்புகலூரில் முருகநாயனார் என்பவரின் மடத்தில் இருவரும் தங்கியிருந்தனர். அச்சமயம் சிறுத்தொண்ட நாயனார், திருநீலநக்க நாயனார் ஆகிய இருவரும் அங்கு வந்து இருவரையும் வணங்கி உரையாடினர்.

பிறகு திருநாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் பல தலங்களை வணங்கித் திருவீழிமிழலை அடைந்தார்கள். அங்கு மழை இன்மையால் மக்கள் பஞ்சத்தால் வாடினர். அவர்தம் துயர் நீக்குமாறு அடியார் இருவரும் இறைவனை வேண்டினர். அன்று இரவு இருவர் கனவிலும் இறைவன் தோன்றி "அடியார் துயர் தீர்க்க இனி உங்கட்கு நாள்தோறும் பொற்காசு வழங்குவோம்" என்றார். அவ்வாறே மறுநாள் முதல் கோயிலின் கிழக்கு மேற்கு வாயிற்படிகளில் பரமசிவன் படிக்காசு வைத்து அருளினார். அவற்றைக் கொண்டு நாயன்மார் இருவரும் பொருள்கள் வாங்கி அடியார்கட்கு அன்னமிட்டனர். ஞானசம்பந்தர் தாம் பெற்ற படிக்காசுக்கு வட்டம் கொடுத்து மாற்றம் செய்தார். ஆனால் நாவுக்கரசர் பாடற் பணியோடு உழைப்பும் பணியும் செய்து வந்ததால் வட்டமின்றிப் படிக்காசை மாற்றி வந்தார். அவர்கள் இருவரின் பணியால் அவ்வூரில் பசி நீங்கியது. இறையருளால் மழை பொழிந்து இன்பம் பெருகியது.

மறைக் கதவும் திறத்தல்

பின்னர் நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் வேதாரணியம் (திருமறைக்காடு) அடைந்தனர். கோயிலுக்குச் சென்றனர், அங்குள்ள கதவு நெடுங்காலமாக அடைக்கப்பட்டிருந்ததை அறிந்தனர். எனவே பக்தர்கள் அனைவரும் ஒரு சிறு கதவு வழியாகக் கோயிலுக்குள் செல்வதைக் கண்டனர். இதைக் கண்ட சம்பந்தர், நாவரசரிடம் கதவு திறக்கப் பாடும்படி கூறினார். அவ்வாறே நாவரசர் ஒரு பாடல் பாடினார், கதவு திறக்கவில்லை, உருக்கத்தோடு பத்து பாடல்கள் பாடினார். பாடி முடித்ததும் கதவு திறந்தது.

பிறகு இருவரும் உள்ளே சென்று இறைவணங்கினர். பின்னர், கதவு அடைக்கப் பாடுமாறு ஞானசம்பந்தரை வேண்டினர் நாவரசர். அவ்வாறே கதவடைக்க ஒரு பாடல் பாடினார் சம்பந்தர், உடனே கதவு அடைத்தது. ஊர்மக்கள் அனைவரும் அடியார் இருவரையும் வணங்கினர்.

சமணப்பள்ளியில் சிவனுரு தோன்றல்

நாவுக்கரசர் பழையாறை சென்று, சமணர்கள் சிவபெருமான் உருவத்தை மறைத்துச் சமணப் பள்ளியாக்கிவிட்ட செய்தியை அறிந்தார். இறைவன் தன் உருவத்தைக் காட்டாவிட்டால் தான் உணவுண்பதில்லை என்று நாவுக்கரசர் உண்ணாவிரதம் இருந்தார். இறைவன் அன்று இரவில் அரசனின் கனவில் தோன்றி "என்னைச் சமணர்கள் மறைத்துள்ளனர். அதனை நீக்கி என் உருவத்தை நாவுக்கரசருக்கு காட்டு" என்றார். அவ்வாறே அரசன் மறுநாள் சமணப்பள்ளிக்கு வந்து அங்கிருந்த சமணர் களை விரட்டிச் சிவபெருமானின் உருவம் தெரியுமாறு செய்தான். நாவரசர் இறைவனை வணங்கி, மகிழ்ந்து பதிகம் பாடினார்.

பிறகு திருவண்ணாமலை, திருவேகம்பம், திருவொற்றியூர் முதலிய தலங்கள் சென்று வழிபட்டார். பின்பு திருப்பாசூர், திருவாலங்காடு, திருக்காளத்தி, திருப்பருப்பதம், காசி முதலிய தலங்களை வணங்கினார்.

கயிலைக்காட்சி

கயிலாய மலையில் இறைவனைக் காண உறுதியோடு முனைந்து சென்றார் திருநாவுக்கரசர், காய், கனி, கிழங்குகளை அருந்திச் சென்றார். கால்கள் சோர்ந்தன, கையால் நடந்தார். கைகள் தேய்ந்தன, மார்பால் ஊர்ந்தார், மார்பும் தேய்ந்து மயங்கினார். ஆனால் உறுதி தளரவில்லை. அவருக்கு அருள் புரியச் சிவபெருமான் விரும்பினார். எனவே வழியில் ஒரு குளத்தை உண்டாக்கி முனிவர் வேடத்தில் அங்குத் தோன்றினார். சிவபெருமான், அவரைப் பார்த்து, "எங்கே செல்கிறீர்?" என்றார். "கயிலைக் காட்சியைக் காணச்செல்கிறேன்" என்றார் அப்பர். "தேவர்களாலும் அடையமுடியாத கயிலையை மனிதராகிய உம்மால் அடைய முடியாது பேசாமல் திரும்பிப்போம்" என்றார் முனிவர். "முடியாது, சிவபெருமானின் கயிலைக் காட்சியை கண்டால்தான் போவேன் இல்லாவிட்டால் உடம்பில் உயிர் இருக்கும்வரை ஊர்ந்தே செல்வேன்" என்றார். முனிவர் உடனே மறைந்தார். ஓர் அசரீரி தோன்றியது, "நாவுக்கரசரே! இந்தக் குளத்தில் மூழ்கித் திருவையாற்றில் எழுந்திரும், உடல் நலம்பெறும். திருவையாற்றுக் கோயிலில் கயிலைக் காட்சியைக் காணலாம்" என்றது. அவ்வாறே அப்பர் அங்கிருந்த குளத்தில் மூழ்கித் திருவையாற்றில் உடல் நலத்தோடு எழுந்தருளினார். பிறகு கோயிலுக்குச் சென்றார். அங்கே கயிலை தோன்றியது. சிவபெருமான் பொன் ஆசனத்தில் பார்வதியோடு வீற்றிருந்தார். அக்காட்சியைக் கண்டு அப்பர் மனமுருகி மகிழ்ந்து பாடினார். பிறகு மழபாடி வணங்கி திருப்பூந்துருத்தியில் மடம் கட்டித் திருத்தாண்டகம், திருவங்கமாலை முதலிய பதிகங்கள் பாடினார்.

பல்லக்கு தூக்கும் பேறு

திருப்பூந்துருத்தியில் அப்பர் வாழும் செய்தி அறிந்த சம்பந்தர், அப்பரைக் காணப் பல்லக்கில் சென்றார். சம்பந்தர் வரும் செய்தி யறிந்த அப்பர் அவரை எதிர்கொண்டழைக்க எல்லைக்குச் சென்றார். அடியார் குழாத்தில் புகுந்து அப்பர் யாரும் அறியாமல் சம்பந்தரின் பல்லக்கைத் தானும் தாங்கிக் கொண்டு வந்தார். ஊர் வந்ததும் சம்பந்தர் பல்லக்கினுள் இருந்தவாறே அடியார்களிடம் ''அப்பர் எங்குற்றார்?'' என வினவினார். அதற்கு அப்பர் ''தங்கள் பல்லக்கைத் தாங்கும் பேறு பெற்று இங்குற்றேன்'' என்றார். உடனே சம்பந்தர் கீழே இறங்கி அப்பரை வணங்கினார். அப்பர் சம்பந்தரை வணங்க அடியார்கள் யாவரும் இருவரையும் வணங்கினர்.

உழவாரப்பணி

அப்பர் திருப்புத்தூர், மதுரை, திருப்புவனம், இராமேசுவரம், திருநெல்வேலி, திருக்கானப்பேர் வணங்கித் திருப்புகலூர்க் கோயிலில் உழவாரப் பணி புரிந்தார். அப்பொழுது சிவபெருமான் பொன்னும், மணியும் புழுதியில் கிடக்கச் செய்தார். தொண்டிலும், துறவிலும் முதிர்ந்த அப்பர் அவற்றையும் கூட்டி அள்ளிக் கொட்டினார். பின்னர் அரம்பையரை அவர்முன் நடனமாடச் செய்தார். அப்பர் அவர்களைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அரம்பையர்கள் அப்பரை வணங்கி மறைந்தனர்.

புகழுடம்பு நீத்தல்

பழுத்த வயது வரை சமயப்பணி புரிந்த அப்பர் தள்ளாத வயதில் சித்திரைத் திங்களில் சதய நட்சத்திரத்தில் ''புண்ணியா - உன்னடிக்கே போதுகின்றேன் பூம்பூகலூர் மேவிய புண்ணியனே'' என்று தாண்டகம் பாடி இறைவன் திருவடியை அடைந்தார்.

திருநாவுக்கரசர் வாழ்வில் திலகவதியார் தனியிடம் பெறுகின்றமையைக் கண்டோம். தமக்கையின் வேண்டுதலால் சைவ சமயத்திற்கு மாறிய திருநாவுக்கரசருக்கு இறைவன் படிக்காசு நல்கல், கல்லைத் தெப்பமாக மிதக்கச் செய்தல், நஞ்சை நல்லுணவாக்கல், சூலை நோயைப் போக்கல் என்று பல்வேறு அற்புதங்களைச் செய்தார். கயிலைக் காட்சியைக் கண்ட பெருமைக்குரியவராகவும் திகழ்கின்றார். அப்பூதி அடிகளாரின் மகனை இறையருளால் உயிர்ப்பித்த பெருமைக்குரியவர். என்றும் எங்கும் வாழும் மக்களுக்கும் ''சமூக சேவை'' என்பதன் பொருளை உணர்த்தியவர். இவர் தம் வரலாறு ஒவ்வொரு தனிமனித மேம்பாட்டிற்கும், சமூக வாழ்விற்கும் வழிகாட்டியாக அமையும். திருநாவுக்கரசர் அடியை வணங்கி பெரும்பேறு பெறுவோம்.

7. நாவுக்கரசர் சுட்டும் புராணச் செய்திகள்

மு. அவையாம்பாள், கோவை.

தமிழிலக்கியத்தில் சங்ககாலம், நீதிநெறிக் காலத்திற்கு அடுத்ததாக அமைவது பக்திநெறிக் காலமாகும். இக்காலக் கட்டத்தில் சைவமும், வைணவமும் செழித்து விளங்கின. 'அன்பே சிவம்' என்னும் சைவ நெறியை நாயன்மார்கள் தங்கள் பாடல்களின் மூலமாக மக்களிடையே பரப்பினர். அத்தகைய நாயன்மார்களுள் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வரும் 'சைவசமயக் குரவர்கள்' எனப் போற்றப்படுகின்றனர். இந்நால்வரில் திருநாவுக்கரசர் பதிகங்களின் வாயிலாகச் சுட்டும் புராணச் செய்திகளை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

புராணம் சொற்பொருள் விளக்கம்

புராணம் என்ற வடசொல்லிற்கு நேரிய பொருள் தொன்மை, பழமை என்பனவாகும். (மணிமேகலை, உ.வே.சா. பதிப்பு, ப. 310)

அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்றும் வியாசமுனிவரால் இயற்றப் பட்டதும் சருக்கம், பிரதிசருக்கம், வமிசம், மன்வந்தரம், வமிசானுசரிதம் இவற்றைப் பற்றிக் கூறுவதான பழைய நூல் புராணம் என்று தமிழ்ச்சொல் அகராதி விளக்கம் தருகிறது. (தமிழ்ச்சொல் அகராதி, ப. 2772)

''எது தொன்றுதொட்டு இன்று வரையில் பரவியிருக்கிறதோ அதுவே புராணமாகும்'' என்று வாயுபுராணம் கூறுகிறது. (The Puranas Vol - 1 - 11, P. 2)

புராணம் ஆங்கிலத்தில் மித்து (myth) என வழங்கப்படுகிறது. ''ஆங்கிலத்திலுள்ள மித்து (myth) என்ற சொல் 'முதோஸ்' (muthos) என்ற கிரேக்கச் சொல்லின் வழிப்பட்டது. இது கதை, வாயினால் உரைக்கப்படுவது எனப் பொருள்படும். மேலும் பொருட்பரப்பு நோக்கில் ஓர் அறிக்கை, ஒரு கதை, ஒரு நாடகக்கரு என்றெல்லாம் பொருள் தரும். இச்சொல்லை முதன் முதலில் எடுத்தாண்ட அறிஞர் பிளேட்டோ 'முத்தோலோஜியா' (muthologia) என்பதற்குக் கதை கூறுதல் என்று பொருள் கொண்டார். இன்று ஆங்கிலத்தில் 'மிதாலஜி' (mythology) என்பது புராணக்கதை ஆய்வு. புராணக் கதைப் பொருளமைதி, புராணக் கதை வகை எனப் பல்வேறு பொருள்களைத் தருகிறது. (G.S. Kirk, myth, University of California Press, 1973, P. 8)

பல்வேறு பண்பாடுகளுக்கேற்ப இம்மித்து வகை வேறுபடுகிறது. சில மித்து வகைகள் முற்றிலும் வேறுபட்டும் காணப்படுகின்றன. ஒரு சில பண்பாட்டு வளர்ச்சியில் பழங்கதைகளாகவும் (legend) நாட்டுப்புறக் கதைகளாகவும் (folktale) அவை வழங்குகின்றன. மித்துக்களின் தோற்றத்தை ஆய்ந்தால் இவை இரண்டில் போய் முடியும். (Ibid, P. 11)

புராணம் என்ற வடசொல்லிற்கு இணையாகத் தமிழில் தொன்மை, பழமை என்ற சொற்கள் எடுத்தாளப்படுகின்றன. இப்புராணம் அன்று முதல் இன்று வரை பரவி வளர்ந்துள்ளது. 'முதோஸ்' என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து 'மித்து' என்னும் ஆங்கிலச் சொல் தோன்றியது. மிதாலஜி என்பது புராணக் கதையைக் குறிப்பது போன்ற செய்திகளை மேலே கூறிய விளக்கங்களின் வாயிலாக உணர முடிகிறது.

இலக்கண நூல்களில் புராணம்

தொல்காப்பியம் குறிப்பிடும் வனப்பு எட்டனுள் 'தொன்மை' என்பது புராணத்திற்கு ஏற்புடையதாகத் திகழ்கின்றது.

"தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே" (தொல். 1493)

"புராணங்கள் அளவைகளுக்கு அடங்காதவை. எனினும் அமரசிம்மன் போன்ற நிகண்டாசிரியர்கள் புராணத்தில் உலகத் தோற்றம், ஒடுக்கம், மனுவந்தரம், முனிமரபு, அரசமரபு என்ற ஐந்து இலக்கணங்கள் அமையப் பெற்றிருத்தல் வேண்டும் என்று குறிப்பிடுகின்றனர். (கலைக்களஞ்சியம், தொகுதி 7, ப. 436, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை)

தொல்காப்பியம், பாட்டியல் நூல்கள், நிகண்டுகளில் புராணத் திற்கான இலக்கணம் குறிப்பிடப்பட்டுள்ளது.

புராணம் - தமிழறிஞர்கள் கருத்து

புராணங்களைக் குறித்து தமிழறிஞர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்துள்ளனர். "புராணங்கள் தமிழ்நாட்டின் முதல் நூல்கள் அல்ல. புராணங்கள் வேறு உலகினின்றும் நந்தமிழ் நாட்டில் குடியேறியவை. புராணம் தமிழ்நாட்டில் புகுந்த பின்னர் தமிழரும் புராணம் என்னும் சொல்லை ஆட்சியில் கொணர்ந்தார்" என்பர் திரு.வி.க. (கல்யாண சுந்தரனார், திரு.வி. முருகன் அல்லது அழகு, ப. 107)

"புராணம் என்பதற்குப் பழைய மரபு என்னும் பொருள் வழங்கு வதால் உரையாசிரியர்கள் மா புராணம் என்ற இலக்கண நூலில் இருந்து வெண்பா வடிவிலான சில மேற்கோள்கள் காட்டுவதால் அது பழைய இலக்கண மரபுகளைக் கூறும் நூலாதல் வேண்டும்" என்கிறார் தெ.பொ.மீ. (மீனாட்சி சுந்தரனார், தெ.பொ. கலைக் களஞ்சியம், ப. 467)

"புராணங்கள் வேதங்களுக்கு அடுத்தபடியாக ஐந்தாவது வேதமாகக் கருதப்படுகிறது. மகாபாரதத்தைப் போலவே இப்புராணங்களும் சமய இலக்கியமாகவே கருதப்பட்டு வந்துள்ளன. அமைப்பிலும், பொருளிலும் இதிகாசங்களுடனும், ஸ்மிருதிகளுடனும் ஒப்பிடத்தக்கன" என்கிறார் மருததுரை (மருததுரை, அரு., புராண இலக்கியச் சிந்தனைகள், ப. 4)

புராணங்கள் வேற்று உலகிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்தன. புராணங்கள் இலக்கண மரபு கூறும் நூல்கள்; புராணங்கள் ஐந்தாவது வேதம் என்று புராணம் குறித்து அறிஞர்கள் எடுத்துரைக்கின்றனர்.

திருநாவுக்கரசர் தேவாரம்

சைவநெறியைப் பரப்பிய நாயன்மார்கள் பாடிய பாடல்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் திருநாவுக்கரசர் பாடிய பாடல்கள் நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாக அமைந்துள்ளன. நான்காம் திருமுறையில் 113 பதிகங்களும் 1,069 பாடல்களும் உள்ளன. இப்பாடல்கள் அனைத்தும் பண்முறைகளின் அடிப்படையில் அமைந்தனவாகும்.

ஐந்தாம் திருமுறையில் 100 பதிகங்களும், 1,015 பாடல்களும் உள்ளன. இப்பாடல்கள் குறுந்தொகை என்ற யாப்பு முறையில் அமைந்துள்ளதனால் 'திருக்குறுந்தொகை' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. ஆறாம் திருமுறையில் 99 பதிகங்களும், 980 பாடல்களும் உள்ளன. இப்பாடல்கள் திருநாவுக்கரசரால் அருளப்பெற்ற 'தாண்டகம்' என்ற யாப்பு முறையில் அமைந்ததனால் 'திருத்தாண்டகம்' என்ற சிறப்புப் பெயரால் வழங்கப்படுகின்றன.

அப்பர் தேவாரத்தில் சுட்டும் புராணச் செய்திகள்

இறைவனது அருளாடல் என்றென்றும் நிகழ்வன. அவையே புராணங்களாக மலர்கின்றன. இறைவனின் புகழ்பாடும் தேவாரத்தில் புராணச் செய்திகள் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றன. திருநாவுக்கரசரும் தமது பாடல்களில் புராணங்களை விரிவாகவும், தெளிவாகவும் பல இடங்களில் எடுத்துரைக்கிறார். அவற்றுள் சிலவற்றை இங்குக் காணலாம்.

அருச்சுனன் பாசுபதாஸ்திரம் பெற்றது

பாண்டவர்கள் துரியோதனனுடன் சூதாடி நாடிழந்து வனவாசம் சென்றனர். பாரதப் போரில் துரியோதனனை வெற்றி கொள்ள வேண்டும் என்பதற்காக அருச்சுனன் 'பாசுபதாஸ்திரம்' வேண்டி சிவனை நோக்கித் தவம் செய்தார். அப்பொழுது மூகன் என்னும் அரக்கன் பன்றியுருவம் கொண்டு அருச்சுனனைக் கொல்ல வந்தான். அருச்சுனன் அப்பன்றியைக்

கொல்ல அம்பு தொடுத்தான். அது சமயம் சிவபெருமான் வேடனாக வடிவம் கொண்டு அப்பன்றியை அடித்தார். அருச்சுனனுக்கும், வேடனுக்கும் இடையே போர் மூள, இறுதியில் வேடனாக வந்திருந்த பெருமான் தமது உண்மை வடிவை அருச்சுனனுக்குக் காட்டி வரமும், பாசுபதாஸ்திரமும் அளித்தார். (பாரதம்; சபா பருவம் - அருச்சுனன் தவநிலைச் சுருக்கம்) இந்நிகழ்ச்சியை அப்பர் பெருமான்,

"வேடனாய் விசயன்தன் வியப்பைக் காண்பான்
வில்பிடித்துக் கொம்புடைய ஏனத்தின்பின்
கூடினார் உமையவளுங் கோலங் கொள்ளக்
கொலைப்பகழி உடன் கோத்து" (6-83-5)

என்றும்,

.........அருச்சுனற்குப் பாசுபதம் (4-7-10)
கொடுத்தானை

........அருச்சுனற் கம்பும் வில்லும்
துடியுடை வேடராகித் தூயமந்திரங்கள் சொல்லிக்
கொடிநெடுங் தேர்கொடுத்தார்.... (4-50-1)

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சனகாதி முனிவர்களுக்கு அறம் உரைத்து

பார்வதி இமவானின் மகளாகத் தோன்றித் தவம் செய்கையில், சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் முதலிய நான்கு முனிவர்களும் தவம் செய்தும் ஞானநிலையை அடையவில்லை. அவர்கள் சிவபெருமானைத் திருகையிலையில் கண்டு வணங்கிட சிவாகமத்து உட்பொருளைத் தங்களுக்கு உணர்த்தியருள வேண்டினர். இறைவனும் தட்சிணாமூர்த்தியாய்க் கல்லாலமர நிழலில் எழுந்தருளிடச் சிவாகமத்தின் முதல் மூன்று பாதமாகிய சரியை, கிரியை, யோகங்களை உபதேசித்து நான்காவது பாதமாகிய ஞானத்தை "ஞானமுத்திரை அமைந்த திருக்கரத்தைத் தம் மார்பில் வைத்து ஒரு கணப்பொழுது யோகம் செய்வது போல் இருந்து உணர்த்தினார். (கந்தபுராணம் - மேருப்படலம்)

இதைத் திருநாவுக்கரசர்,

"மடற்பெரிய வாலின்கீ ழறநால்வர்க்
கன்றுரைத்தான்...." (4-6-10)

என்றுரைக்கிறார். இச்செய்தியை (4-109.6; 5-25-10; 5.59-2) முதலிய பாடல்களிலும் கூறியுள்ளார்.

பாற்கடலில் தோன்றிய நஞ்சினை சிவன் உண்டது

இறவாத் தன்மையை அளிக்கும் அமுதம் வேண்டித் தேவர்களும், அசுரர்களும் ஒன்றாகக்கூடி பாற்கடலைக் கடைய விழைந்தனர். மந்திர மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு திருப்பாற்கடலை அவர்கள் கடைந்தனர். கயிறாகப் பயன்பட்ட வாசுகி விடத்தைக் கக்கியது. விடத்தைக் கண்டு அஞ்சிய அனைவரும் சிவபெருமானிடம் தஞ்சமடைந்தனர். பெருமானும் அணுக்கத் தொண்டராகிய சுந்தரர் மூலம் விடத்தைக் கொணர்ந்து அருந்தி அனைவரையும் காத்தருளினார். (கந்தபுராணம் - ததீசியுத்திரப்படலம்)

இதனை வாகீசர்,

''வடங்கெழு மலைமத் தாகவனவர் அசுரரோடு
கடைந்திட எழுந்த நஞ்சங் கண்டு பஃறேவரஞ்சி
அடைந்துநுஞ் சரணமென்ன அருள்பெரி துடையராகித்
தடங்கடல் நஞ்சம் உண்டார் சாய்க்காடு மேவினாரே''

(4-65-2)

என்றுரைக்கிறார். இச்செய்தி 5-53-6; 6-99.2 முதலிய பாடங்களிலும் இடம் பெற்றுள்ளது.

காலனைக் காலால் உதைத்தது

மிருகண்டு முனிவர் மக்கட்பேறு வேண்டி சிவபெருமானைக் குறித்து தவம் இயற்றினார். இறைவனின் அருளினால் 16 வயதே உயிர் வாழக்கூடிய நற்குணங்களையுடைய மகனைப் பெற்றார். அவனுக்கு மார்கண்டேயன் எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார். குழந்தை நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்தது. அவனுக்கு 16 வயது நெருங்குவதையறிந்து பெற்றோர்கள் வருந்தினர். அதன் காரணம் அறிந்த மார்கண்டேயர் பெற்றோர்க்கு ஆறுதல் கூறிவிட்டுச் சிவனாரை நாள்தோறும் வழிபட்டார். ஆயுள் முடியும் நேரத்தில் மார்கண்டேயர் சிவனாரின் இலிங்கத் திருமேனியைத் தழுவியபடி வணங்கியிருக்கும் வேளையில் எமன் பாசக்கயிறு வீச பெருமான் மார்கண்டேயருக்கு அபயம் அளித்து இலிங்கத் திருமேனியிலிருந்து வெளிப்பட்டுத் தனது இடது காலால். எமனை உதைத்தார். மார்கண்டேயர் என்றும் பதினாறு வயதுடையவரானார். (கந்தபுராணம் - மார்கண்டேய படலம்)

இதனைப்

''பாலனை யோட வோடப் பயமெய்து வித்த உயிர்
வவ்வுபாசம் விடுமக்
காலனை வீடுசெய்த கழல்போலும்''

(4-14-6)

என்றுரைக்கிறார். இச்செய்தி 4-31-9; 4-49-2; 4-64-1; 4-100-2; போன்ற பல பாடல்களில் இடம் பெற்றுள்ளது.

உமையவள் சிவனாரைத் தழுவியது

திருக்கையில் ஒருநாள் உமையவள் சிவபெருமானின் கண்களைத் தனது கைகளால் மூடினாள். அதனால் இவ்வுலகம் முழுவதும் இருள் சூழ்ந்தது. அது கண்டு உமையவள் கைகளை எடுத்ததும் உலகம் ஒளிமயமாக இயல்பாகத் திகழ்ந்தது. சிவனின் கண்களை மூடி உலகை இருளடைய செய்ததற்காகப் பூவுலகம் சென்று தம்மை வழிபடவேண்டும் என இறைவன் அருளினார். அவ்வாறே உமையவளும் காஞ்சிபுரத்தில் மாமரத்தடியில் மண்ணால் சிவலிங்கம் செய்து வழிபட்டு வந்தார். ஒருநாள் இறைவன் கம்பமாநதியைப் பெருக்கெடுத்து ஓடச் செய்தார். வெள்ளம் கண்டு திகைத்த உமையவள் இறைவனைத் தழுவிக் கொள்கிறாள். (காஞ்சிப் புராணம் - தழுவக் குழைந்த படலம்)

இவ்வரலாற்றைக்

"கொழும்பவளச் செங்கனிவாய்க் காமக் கோட்டி
கொங்கையினை அமர்பொருது கோலங்கொண்ட
தழும்புளவே வரை மார்பில்....." (6-4-10)

என்றுரைக்கிறார்.

திருமால் சிவனை வழிபட்டுச் சக்கராயுதம் பெற்றது

குபன் என்னும் அரசன் காரணமாகத் ததீசி முனிவருடன் போரிட்டுச் சக்கரத்தை இழந்த திருமால் சக்கரப்படை வேண்டி நாள்தோறும் 1000 தாமரை மலர்களைக் கொண்டு சிவபெருமானைப் பூசித்தார். திருமாலுக்கு அருள்புரிய திருவுள்ளம் கொண்ட பெருமான் ஒரு தாமரை மலரை மறைத்தார். அர்ச்சிக்கும் மலர்களில் ஒன்று குறைந்ததனால் தாமரைக் கண்ணனான திருமால் தமது கண்ணைப் பறித்து மலராக இட்டு வழிபட்டார். அதனால் மனம் மகிழ்ந்த சிவபெருமான் அவருக்குச் சுதர்சனச் சக்கரத்தையம், கண்ணையும் அருளினார். (சிவபராக்கிரமம்)

இச்செய்தியை அப்பர் பெருமான்,

"ஏறுடன் ஏழடர்த்தான் எண்ணி ஆயிரம் பூக்கொண்டு
ஆறுடைச் சடையினானை அர்ச்சித்தான் அடியிணைக் கீழ்
வேறுமோர் பூக்குறைய மெய்ம்மலர்க் கண்ணை மிண்டக்
கூறுமோர் ஆழிஈந்தார் குறுக்கைவீ ரட்டனாரே" (4-49-5)

எனக் கூறுகிறார்.

புராணம் என்ற வடச்சொல்லுக்குத் தொன்மை, பழமை என்பது பொருளாகும். இதனை ஆங்கிலத்தில் மித்து (myth) எனக் கூறுவர். தெய்வத் தத்துவங்களைப் பலரும் அறியும் வகையில் புராணங்கள் எடுத்துரைக்கின்றன. இப்புராணங்களைப் படிப்பவர்கள் இறைத் தத்துவங் களை உணர்வு பூர்வமாக அறிகின்றனர். அத்தகைய புராணச் செய்தி களை அப்பர் தமது தேவாரத்தில் பல இடங்களில் சுட்டிச் செல்கிறார். கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள புராணச் செய்திகளைத் தவிர பல செய்திகள் அவரது தேவாரங்களில் காணப்படுகின்றன. வேதங்களின் சாரமாகத் திகழும் புராணங்களைத் தமது அனுபவத்தின் வாயிலாக உணர்ந்து தேவாரப் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார் அப்பர் பெருமான். அத்தகைய பாமாலைகளை நாமும் எடுத்தோதி இறைவனது தத்துவங்களை உய்த்து உணர்ந்து கொள்வது நமது தலையாய கடமையாகும்.

8. அப்பரின் எதிர்காலச் சீர்திருத்தங்கள்

ஆர். கே. அழகேசன், மதுரை.

அப்பர், திருவாமூரில் அவதரித்துத் திருப்புகலூரில் ஐக்கியம் அடைந்தவர். கயிலைப் பொய்கையில் மூழ்கித் திருவையாறு வாவியில் எழுந்தவர். பூட்டிய கதவுகளைத் திறந்ததுடன் நம் நெஞ்சக் கதவு களையும் எதிர்காலக் கண்கொண்டு திறக்க வைத்தவர். தம் சமகாலச் சூழலில், தமக்கேற்பட்ட நலக்கேடுகளை, ஒளிவு மறைவின்றி எடுத்துரைத்து இனி வருகிற மக்களை ஆற்றுப்படுத்தியவராகவும் அவரைக் கருதலாம்.

எச்சரிக்கைகள்

மக்களுக்காக மனந்திறந்து பேசிய அவரது காப்புரைகள், காலத்தால் அழியாதவை. "உடல் கழுவாத சமணர், குண்டர், தலையின் மயிரைப் பறித்துண்ணும் குணத்தர். நின்றுண்ணும் பருத்தர். மூக்கொலியால் முனகுவார்கள். எனவே மனை துறந்த அவ்வல் அமணர்களை அண்டாதே; துவர் நிறமுடைய பௌத்தர்களின் பொய்யினையும் மெய்யென நம்பாதே" என்று எச்சரிக்கை தந்திருக்கிறார். இங்ஙனம் தாம் வாழ்ந்த காலத்திருந்த சமயச் சூழலையும் தம் வாழ்வுக்கு நேர்ந்த கெட்டழிவு களையுஞ் சுட்டிக்காட்டி நம்மை உய்ய வைத்திருப்பார் அப்பரடிகள்.

'திருவதிகை' எனும் ஊரில் ஒரு வேண்டுகோள் பதிகத்தைப் பாடுவார். அது அவருக்கு மட்டுமன்று எதிர்கால மக்களை வழிப்படுத்து வதற்காக வந்த பதிகம் அது. "தட்டிக்கேட்கும் தலைவர் தமக்கு இல்லை. அதனால் மனை துறந்தேன். பொருளும், ஒழுக்கமும் போயிற்று. வஞ்சமில்லாத எனக்கு, வாழ்வு வெறுத்தது என்கிறார்.

உண்மைகளைக் கண்டறிந்தார்

அமண் சமயத்தில் இருந்தபோது 'தருமசேனர்' என்றழைக்கப்பட்டார். அதன் தலைமைப் பதவியையும் பெற்றார். பிறகு அங்கிருந்து சைவத்திற்கு அடைக்கலமானார். அப்போதுதான் அவர் வாழ்வின் உண்மைகளை அறிய வந்தார்.

1. மாற்றுக் கருத்துக்கள் சொன்னாலும் ஏற்றுக் கொள்வான், எம் இறைவன்.
2. அவன் யாருக்கும் பொதுவானவன் வெறுப்பார்க்கும் விருப்பமானவன்.

3. அவனைப் பற்றிய ஆரா நினைவிருப்பின் யாருக்கும் அருள்வான். உருதெரிவான்.
4. "கரைந்து கைதொழுவாரையுங் காதலன் வரைந்து வைதெழுவாரையும் வாடலன்" (திருவீழிமிழலைப்பதிகம்)
5. உண்மையான கடவுளுக்குரியவர் அவரா இவரா என்று ஐயப்படு வார்க்கெல்லாம் "மாதவனல்லால் தேவர் மற்றில்லை" அதுவரை பக்தி செய்வதென்பதை நான் அறிந்திலேன் என்பது வாகீசரின் வாக்கு. அது மட்டுமன்று. தீ நெறிக்கண் சென்றேன். அதனால் தூயன் நான் அல்லன் என்கிறார். திருக்கோடிகா பதிகத்தில்,

"கன்னியர் கண் வலையில் மயங்குகிறவனாகத் தன்னைப் பற்றிப் பகிரங்கமாக அறிவித்தார். "பனிநீரை, கடலாகப் பாவித்தேன்", "விளக்கிருக்க மின் மினித் தீய்க்காய்ந்தேன்" என்று நொந்து கொள்கிறார்.

திருவாரூர்ப்பதிகத்தில்,

"தீவினைகளே புண்ணியங்களே
வறுமையே செல்வமே
வெகுட்சியே மகிழ்ச்சியே"

என்று ஆரம்பித்து சற்றுக் கோபமாக உலகத்தையே அரித்துத் தின்கிறீர்களே. உங்களுக்கு இந்த உலகம் போதவில்லையா? உங்களுக்கு உலகில் வேறு ஆள் தான் இல்லையா? உங்களின் ஆணைகளை ஏன் என்னிடம் செலுத்துகின்றீர்? எனக் கூப்பாடு போடுகிறார். அந்த அளவிற்குத் தம் எதிர்காலத்தைத் தமக்குப் பிறகுள்ள சமூகத்திற்காக அறிவிக்கிறார். மனதில் ஒருமைப்பட்டு நிற்கும்போது மாசிலா இறைவன் நெருங்கிடுவார் என்பது அப்பரடிகள் ஆய்ந்து கண்ட உண்மை.

"என்னிலாரும் எனக்கினி யாரில்லை
என்னிலும்மினி யானொருவன் உளன்"

அவனை நான் 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' என்கிறார். 126 தலங்களுக்குச் சென்று 312 திருப்பதிகங்கள் பாடும்போது எதிர்காலக் கனவுகள் அவரிடம் வந்தன; வளர்ந்தன.

தன்னை அறிதல்

தம் நெஞ்சுக்குள் தெளிவு பிறந்த பிறகு தான் அடுத்தவர்களுக்கு எதிர்கால மேம்பாட்டை அப்பர் வழங்குகிறார். இது அவரின் அடிநெஞ்சத்து எண்ணம்.

"புலன்கள் ஐந்தால் ஆட்டுண்டு போதும் போக்கி
புறம்புறமே திரியாதே போது நெஞ்சே"

என்று திருவாரூரில் கலங்கி நின்றார். அதன் பிறகு அவ்வூரில் பழுத்த அனுபவ முதிர்ச்சி பெற்றார்.

திருக்கடவூரில்,

"பற்றிலா வாழ்க்கை வாழ்ந்து பாழுக்கே நீர் இறைத்தேன்
உற்றலாற் கயவர் தேறார் என்னுங் கட்டுரையோடு ஒத்தேன்"

இனி நான் என் செய்வேன், இடும்பையால் ஞானமேதும் கற்றிலேன் என்று கண்டறிந்தார். எனவே புதிய எதிர்காலத்திற்குத் தாம் அடியெடுத்து வைக்கும்போது முதலில் தன்னை நொந்து கொண்டு சீரமைத்துக் கொள்வதைப் பார்க்க முடிகிறது.

"கெடுவதிம் மானிட வாழ்க்கை காண்தோறும் இவர்களோடும் அடியனேன் வாழமாட்டேன்" என்று முடிவெடுக்கிறார். அதன் பிறகு நீ யாரைச் சார்ந்து வாழ வேண்டுமென்றால் "அடியார்கட்கு எளியானைத் துதி செய். காலை மாலை அஞ்செழுத்து ஓது. அரண் அடிகளுக்கு நன்மை அது" என்று அறிவுறுத்துகிறார். அம்முடிவைப் பதிவாக்கி வருங்கால மக்களுக்கு வகைப்படுத்தி அறிவிக்கை செய்கிறார்.

அறிவிக்கைகள்

பாவைநல்லார் இணக்கத்தினால் பெறும் பேரின்பத்தைவிட சிறந்தது இறைவனின் திருவடி வணக்கம் என்கிறார். காசிக்கு வந்திருக்கும் மக்களைப் பார்த்தும் இனி வர இருக்கிற அன்பாளர்களையுந் தனவந்தரை நோக்கியும் தமது சீர்திருத்த எண்ணங்களை வீசுகிறார்.

புறத்தொண்டுகளால் ஈர்த்துவிடலாமா?

'கங்கை காவிரி குமரித் துறைகள் ஆடிலென், வேதம் ஓதிலென்
வேள்விகள் செய்யிலென் நீதி நூல் பல பயிற்றிலென்'

என்று பக்தர்களிடம் 'கேள்வியின் நாயகனாய்'க் கிளர்ந்தெழுகிறார்? புறத்தொண்டுகளால் இறைவனை ஈர்க்க நினைப்பது எந்த வழியில் நியாயம்? அகத்துள் இறையுணர்வு, அனைத்தையும் விட சாலச்சிறந்த தென்று அறிவிக்கிறார்.

இறைவனது ஆலயங்கள் தோறும் அலைந்து திரிந்து அவன் ஆட்கொள்ளுவான் என்று நினைப்பதை விட, இருக்குமிடத்திலேயே இருந்து வழிபடும் 'நெஞ்சக நினைவே' சாலச் சிறந்தது என்று அறிவிக்கிறார். இது, எதிர்காலத்து மக்களுக்காக தலந்தோறும் சென்று வந்த அப்பர் அருளிய தத்துவம் இது.

உள்ளம் பெருங்கோயில்

எந்தத் தலத்தில் இருக்கிற இறைவனை வணங்குவது? எந்த உருவில் அமைந்திருக்கிறவனை வணங்கினால் நல்லது? என்ற கேள்விகளுக்குரிய ஏற்ற விடையைத் திருத்தாண்டகத்தில் வழங்கியுள்ளார். ஏழிரண்டாண்டுகள் தவமிருப்பதும் பூழிவெங்கானம் நண்ணிப் புண்ணியத் துறைகளாடுவதும் அவிசொரிந்து ஆயிரம் வேள்விகளைச் செய்வதும் தர்ம சாஸ்திரங் களைப் பாராயணம் பண்ணுவதெல்லாம் வெட்டிப் பந்தாவாக அவர் கருதினார். இது ஒரு மாபெருஞ் சீர்திருத்தமே.

தொடுக்கும் கேள்விக்கணைகள்

எது பிணிக்கு மருந்து (நடலைக்கு நற்றுணை) குற்றேவல் செய்யும் குணம் யாருடையது? எமன் வருமுன் எவருஞ் செய்ய வேண்டியது எது? அரசர்கள் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு அடியார்களை வதை செய்தால் என்னவாகும்? பற்றொன்று இல்லார்க்கு உற்ற துணையானவன் எவன்? மானிட வாழ்க்கையில் வருகின்ற குறைகளைத் தீர்க்கும் வழி முறை யாது? வாழ்வு மேம்பட பிற தெய்வங்களை நம்பலாமா? ஈசனுக்கு ஒப்பான வேறு தெய்வமுண்டா? மீண்டும் பிறக்க வேண்டாம் ஒருவேள்ளை பிறந்து விட்டால் இறக்காமலிருக்க எதிர்காலத்தில் என்ன செய்ய வேண்டும்.

"விதி வசத்தால் எதை எதையோ செய்கிறோம்
அதன் போக்கினால் ஆண்டவனையே மறக்கிறோம்"

அப்போது நாம் என்ன செய்ய வேண்டும்.

அழகான மேனியை வைத்துக்கொண்டு அருமையானதொரு குடிவாழ்க்கையை அமைத்துக் கொள்ள முடியுமா? சுயநம்பிக்கையில் அனைத்துலகும் ஆளலாமென்று பேசலாமா? தந்தை யாரோ? தாய் யாரோ? வந்த உறவுகள் எப்படியோ? போகும் நெறி எங்ஙனமோ? ஆரவார உறவுகளான

"சீர்த்த நன்மனையாளும் சிறுவரும் ஆர்த்த சுற்றமும்"
"வைத்த மாடும் மனைவியும்"

நிலைத்த பற்றுக்கோடு உடையவர்கள் தானா? என்னும் எத்தனையோ எதிர்கால கேள்விகளுக்கு நாவுக்கரசர் நல்ல விதமான பதில்களை வழங்கியிருக்கிறார். இவ்வளவு வினாக்களுக்கும் இரண்டு வரிகளில் தீர்வு சொல்லியது அருமை.

1. "இறையருள் சார்ந்து நிற்க"
2. "வீண் சுகபோக நினைவின்றி வாழ்"

என்பனவே அவரளித்த சரியான வழிகாட்டுதல்களாகும். மேற்காட்டிய வினாக்கள் அனைத்துமே எதிர்காலவியற் பற்றிய சிந்தனைகள் தான்.

பணிவுடையன் இன்சொலனாதல்

சம்பந்தர் தன்னைக் காட்டிலும் சிறியவர் என்ற போதிலும் அப்பரடிகள் அவரிடம் தமது பணிவைத் தெரிவித்திருப்பார். இதற்குத் தேவாரத்தில், பெரிய புராணத்துள் மிகுதியான சான்றுகள் உண்டு. ''பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவர்க்கு அணி என்னும் தகைமையை, மண்ணில் காட்டினால் நல்ல வண்ணம் வாழலாமென்றவர்'' நாவுக்கரசர்.

சிவனுக்கு அன்பராகில் அவர் தொழுநோயரானாலும் பரவாயில்லை. மாட்டுத் தோலை உரித்துத் தின்றுழலும் ஈனப் பிறவி கூட மாண்புடைய வர்கள் தான். அவர்களை நாம் தொலைவில் நின்று பார்க்கக் கூடியவர் களாக கருதுதல் கூடாது. தொழக் கூடியவர்களாகக் கருதுதல் வேண்டும் என்கிறார்.

மனிதம் இல்லாதபோது

வெளுத்ததைச் சுமந்து கொண்டு வருகிற வண்ணாரப் பெருமகனைப் பார்த்த பின், சாதி இனம் பார்க்காமல் வெளுத்த நீறு உடலெங்கும் அப்பியிருப்பதாகக் கண்டு அவரையும் சேரமான் வணங்கினார்.

அவர் காலத்திய மக்களுக்கு இப்படி ஒரு அணுகுமுறை இல்லை என்பதால் தாமே ஒரு கதாபாத்திரமாகியவர் அவர்.

பொதுவாக எதிர்கால நல்வாழ்விற்கு ஏற்ற விளக்கங்களைக் கூறியவர்கள் பலருண்டு. அவர்களுள் சீர்திருத்த சிந்தனைகளை வழங்கிய வராக அப்பரையும் நினைக்கலாம்.

எதிர்காலஞ் சிறக்க

அப்பர், கீழ்க்கண்ட தேவாரத் திருத்தலங்களுக்குச் செல்லுங்கள் என்று அறிவுறுத்துகிறார். நிகழ்கால நன்மைக்காக அங்ஙனம் சொல்ல வில்லை. புள்ளிருக்கும் வேளூர் தலத்தில் கூறியதைப் போல எதிர்காலத்தில் வீடு பேறு அடைவதற்காக நாம் செய்ய வேண்டியதைப் பட்டியல் போட்டு அடிகளார் தெரிவித்திருக்கிறார். அவற்றுள் சில,

பூந்துருத்தி	- மூச்சு வாங்காத சதையில்லா உடலைப் பெற
ஐயாறு	- அல்லல்கள் தீரும்.
திருவாஞ்சியம்	- பற்றே இல்லாதவர்களுக்கு ஒரு துணை வரும்.
திருநாகேஸ்வரம்	- மருந்தானவன்
திருச்சேறை	- அரசர்கள் எதிர்த்தால் அண்ட வேண்டிய தலம்
திருவீழிமிழலை	- விதிமாறிட, வைது பேசியவர் அண்டிட

திருச்சேறை - தீவினை கெட்டுப்போகும்.
பூவனூர் - நூறு நூறாயிரம் பாவஞ்செய்தோர் பாவந் தொலைய
குரங்காடுதுறை - குற்றங்கள் கெடும்
திருநெய்த்தானம் - ஆங்காரம் தவிர்க்க
திருவாட்போக்கி - மெய்பயங்கெட
மயிலாடுதுறை - மானிட வாழ்வில் வரும் குறைகள் தீர

புதிய சீர்திருத்தப் பார்வை

உடன்பாட்டு முறையில் சொல்வதை விட எதிரிடையாகச் சொல்லி நெறிப்படுத்தினால் அது வெகு சீக்கிரம் மனதைக் கவ்வும்.

''நாத்திகம் பேசாதீர்'' என்று திருவானைக்காவலில் பேசி, நரகரைத் தேவராக்கலாமென்று ஆரூரில் தெளிந்து, கண்டபடி வசைபாடுவோரையும் நாடுபவன் என்று திருவீழிமிழலையில் தெரிவித்து, அத்தகையோனைப் பேசாத நாளெல்லாம் பிறவாத நாளென்று திருவாடுதுறையில் தீர்க்க தரிசனம் கண்டு, அவ்வாறே இனி வருஞ் சமூகம் பின்பற்ற,

''எதிர்காலத்தில் கேடில்லை புகழுண்டு காண்'' என்றவர், அவர். அந்த வகையில் அப்பரடிகளைக் கணிக்கும்போது மேன்மை கொள் சைவ நீதி உலகமெல்லாம் பரவும் வகை செய்தவராகக் கருதுவதை விட, மேன்மை கொள் மனித முக்தி உலகமெல்லாம் கிடைக்க வகை செய்தவராகக் கருதலாம்.

9. இறை ஒப்பீடு

அன்னி தாமசு, சென்னை.

'இறைமை' என்பதை விளங்கிக் கொள்ளுதல் அத்துணை எளிதானது அன்று. அருவ, உருவ, அருவுருவ வகையூடெல்லாம் இறையை - இறைமையை - இறைவனை விளக்க முயல்வதும், விளங்கிக்கொள்ள முயல்வதும் இறைத்தேட்டமுடைய மனிதரிடமும் இறை நாட்டமுடைய படைப்பாளரிடமும் காணப்படும் பாங்காகும். பல்வகையான உருவும் வடிவும் கற்பித்துக் காண்டல் ஒருபால் அமைய, இறையின் தன்மையும், பண்பும், செயலும் புலப்பட ஒருபுடை ஒப்புமையுடைய பொருட்களை எடுத்துக்காட்டி உணர்த்துதல் மறுபால் அமையும். இவற்றை, இறைமைக்குக் கொடுக்கப்படும் உருவங்களாக அன்றிப் படிமங்களாகக் கொள்ள முடியும். உருவகமாக, உருவாக்கமாக, குறியீடாகத் தரும் முயற்சியாகவும் எண்ணிப் பார்க்க இயலும்.

அப்பர் தேவாரத்தின் 114 பதிகங்களாலமையும் நான்காம் திருமுறையைக் களனாகக் கொண்டு இறை ஒப்பீட்டை அணுகும்போது பன்முகப் பார்வையும் பல்கோண அணுகுமுறையும் வெளிப்படுவது தெரிகிறது. முன்னிலைப் பரவலிலும், படர்க்கைப் புகழ்தலிலும், விளியாகவும், சுட்டிக்கூறலாகவும் இறைமையைத் தரும்போது பல்வேறுபட்ட சார்புகளுடன் தருவது பக்திப் பரவச வெளியீடு என்பதும் தெரிய முடிகிறது.

ஐம்பொறியறிவின் புலப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிற்பதாயினும், இறைமையைப் புலனறிவால் அறிந்து கொள்ள முடிகின்ற பொருண்மை களில் ஒப்பவைத்துக் காண்டல் ஒரு நிலை. இயற்கையும் ஐம்பூதங் களும் கைப்படு பொருண்மைகளும் இவ்வாறு ஒப்பீட்டுத் தளம் ஆகின்றன. அரியதும், உயர்வானதுமாக இக்கைப்படு பொருள்கள் அமைதல் இயல்பு என எதிர்பார்த்தல் கூடும். உள்பொருளோடு இல்பொருளும், மரபு காரணமாகவோ மனார்ப்பு காரணமாகவோ ஒப்பீட்டுக்கு இடம் வழங்குகின்றன. பிறக்கும் போதே உறவுகளுடன் பிறந்து, வாழ்க்கை யிலும் தனிவட்ட, சமூக உறவுகளோடு பிணைப்புண்டு வாழும் மனிதன் இறைமையிலும் அதனை ஏற்றிக் காண்கின்றான். வாழ்வின் இரு முனைகளான - முனைப்புகளான அகமும் புறமும் கூட மனிதனில்

கொண்ட செல்வாக்கு, அப்பார்வையிலும் இறையை ஒப்பிட்டு அணுக வைக்கின்றது. சமயத் தத்துவங்களும் சமயம் சார்ந்த புராணக் கருத்துகளும் ஒப்பீட்டுக்கான அடிப்படை வழங்கும்போது, பருப்பொருள் ஒப்பீடாக அன்றி நுண்பொருள் ஒப்பீடாகவும் வெளியீடு மாறிவருவது புலப்படுகின்றது. படைப்பாளி, ஒரு கவிஞன் என்ற நிலையில் இவை கவியுத்தியாக அமையக் கூடும்; எனினும் பக்திப் பாவலன் என்ற பாங்கில், இறையனுபவம் இவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது என்பது கோட்பாடாக அமையலாம்.

ஒரு குறிப்பிட்ட காலம், சமயம், மொழி, சமூகம் தான் இத்தகு இறை ஒப்பீடு வழங்கும் என்பதற்கில்லை. இடத்தாலும் பிற எல்லா வகையிலும் அகன்றமையும் விவிலியக் களனையும் ஒப்பீட்டுப் பாங்கில் இங்கு அணுக முடியும். சிந்தனை ஒருமை ஒருபால் புலப்படுகின்றது என்றால், வேறுபட்ட தனித்த பாங்கும் இரு தளத்திலும் வெளிப்படுதல் காணமுடியும். ஆறுதல் நாடும் மனித மனம், பாதுகாப்புக்கு ஏங்கும் சூழ்நிலையில், இனியதும் நிறைவு தருவதுமான பொருட்களில் நெஞ்சம் தோய்ந்து அவற்றை இறையொப்பீட்டுக்கு வாய்ப்பாக்குகின்றது. ஏமாற்றம், சங்கடம், துன்பம், தோல்வி ஆகியவற்றால் பாதிப்புற்ற இறையன்பன், இவ்விவ்வாறெல்லாம் இறைவன் இருப்பான் - இருக்கின்றான் என்ற எதிர்பார்ப்பு நோக்குடன் தன்னைத் தேற்றிக் கொள்வதிலும் இறையொப்பீட்டில் புதிய இணைமைகள் சேர்கின்றன.

யாருக்கு என்னைச் சாயலும் சமமுமாக்கி
யாருக்கு நான் ஒப்பாகும்படிக்கு
என்னை ஒப்பிடுவீர்கள்? (ஏசாயா. 46.5)

எனக் கர்த்தரின் குரல் விவிலியத்தில் அமையினும் உவமப்படுத்தலும் ஒப்பிடலும் அங்கு அமையத்தான் செய்கின்றன.

இயற்கையில் இறையைக் காண்பதும் இறையில் இயற்கையைச் சார்த்திக் காண்பதும் பொதுமையான அடிப்டையாகலாம். ஐம்பூதங்கள் மட்டுமன்றி, வான்சுடர்களும் இதில் இணைகின்றன. அப்பர் தேவாரம் காட்டும் மரபு இவ்வாறாக, விவிலியம் இதனை அறவே மாற்றி, பூதங்களை இறைவனின் படைப்பாகவும் இருப்பிடமாகவும் அமைக்கின்றது. எனினும் விண் சுடர் பற்றிய கருத்தில் ஒப்பீட்டிற்கு வாய்ப்பு காணப்படுகிறது.

.....மலை நிலம்நீர் தீ வளி ஆகாசமாம், ஈசனை (7.6)
நீரவன் தீயினோடு நிழலவன் எழிலதாய
பாரவன் விண்ணின் மிக்க பரமவன்.... (36.4)
நீருமாய்த் தீயுமாகி நிலனுமாய் விசும்புமாகி (54.8)
அலைக்கின்ற நீர் நிலம் காற்று அனல் அம்பரம் ஆகி நின்றீர்
(96.3)

என்று காட்டப்படல் ஒருபாலமையினும், இறை இவற்றைக் கடந்தவன் எனும் கோட்பாட்டால் போலும் பூதங்களில் அவன் அடங்காமையும் அப்பரால் சுட்டப்படுகின்றது.

.... விண்ணும் நிலனும்
திரிதரு வாயுவல்லர் செறுதீயுமல்லர்
தெளி நீருமல்லர் தொயில்..... (8.2)

'பாவநாசத் திருப்பதிகம்' (15) தொடர்ந்து, பல முறை சிவனைச் சுடராக, ஞாயிறாக, மதியாக, நிலவாகக் காட்டுவது தனித்த சிந்தனைக் குரியது. 'வெற்றியூரில் விரிசுடரை' (1), 'மதியைச் சுடரை' (2), 'மதியங்கண்ணி ஞாயிற்றை' (3), 'உலகம் விளக்கு ஞாயிற்றை' (4), 'காண்டற்கரிய கதிரொளியை' (6), 'மாலைத் தோன்றும் வளர்மதியை' (8), 'நெய்த் தானத்தெம் நிலாச் சுடரை' (9) எனும் இவ்வருகைகள் ஒளியாக, ஒளிவடிவாக ஒப்பிட்டுக் காணும் முயற்சியில் சமயத்தில் உருவாகியிருக்க வேண்டும். 'தேவனாகிய கர்த்தர் சூரியனும் கேடகமுமானவர்' (சங். 84.11) என்ற விவிலியத் தொடர் இங்கு ஒப்பிடத்தக்கது. சபை வழிபாட்டிற்குரிய கிறித்தவப் பாமாலைகளும் கீர்த்தனைகளும், 'மெய் ஜோதியாம் நல் மீட்பர்' (40.1), 'நீரே நித்ய சூரியனும்....' (87.5), 'விடிவெள்ளி ஈசாய் வேரே' (91.5), 'காயொளியில் கதிர் பரப்பும் களங்கமில் நீதியின் சுடரை' (162.6) எனத் தரும் வெளியீடுகளும் இக்கருத்துத் தொடர்பையும் தொடர்ச்சியையும் காட்டுகின்றன.

ஐம்பூதங்கட்குச் சுட்டியது போல, இங்கும், ஞாயிறோ மதியோ ஒப்பீடாகாதென மறுக்கும் பாங்கு, 'விரிகதிர் ஞாயிறல்லர் மதியல்லர் வேத விதியல்லர்' (8.2) எனப் புலப்படுத்தும் நிலையிலுள்ளது.

இறையை 'நிழலவன்' (36.4) என அப்பர் தந்து, ஒப்பீடாக அமைந்த தீயிற்கும் ஒளிக்கோளங்களுக்கும் எதிர்நிலையாக்குவது தனித்துக் கருதத் தக்கது. வெப்பமான சுற்றுச்சூழலிலும், நீற்றறை போன்ற நெருக்கடியிலும் தண்மையாக, மென்நிழலாக இறையுணர்தல் ஏற்படல் தனித்த அனுபவ மாகும். வள்ளலாரும் 'கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ள வகை கிடைத்த குளிர் தருவே தரு நிழலே' (திருவருட்பா-4091) என்கிறார். விவிலியம்,

உன்னதமானவரின் மறைவி லிருக்கிறவன்
சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான் (சங். 91.1)

கர்த்தர் உன் வலது பக்கத்திலே
உனக்கு நிழலாயிருக்கிறார் (சங். 121.5)

என ஒத்துணர்வுக்கு இடம் தருகின்றது.

கூடி வாழ்வதாலும், மணம் - குருதியுறவு போன்றவற்றாலும் அன்பும் நெருக்கமும் கொள்கின்ற சமுதாய உறுப்பினர்கள் தம் உறவு வட்டத்திற்குள் இறைமையையும் இணைத்து ஒப்பீட்டுக்குக் களம் வழங்குகின்றனர். கட்புலனுக்கு உட்பட்ட உறவுகளை அவ்எல்லை கடந்து நிற்கும் இறையில் பொருத்திக் காண்டல் என்பது சமயப் பொதுநிலையுமாகலாம். தந்தை, தாய், மணவாளன் ஆகிய உறவொப்பீட்டுடன் இறையை அணுகுவதை அப்பரிலும் விவிலியத்திலும் காண முடிகின்றது. இவை குடும்ப உறவுகளாகும்.

எம்மான் ஈசன் எந்தை என்அப்பன் என்பார்கட்கு (21.6)

எந்தையும் எந்தை தந்தை தந்தையுமாய ஈசர் (64.7)

எனத் தனித்தமைத்தலும்,

தந்தையும் தாயுமாகித் தானவன் ஞானமூர்த்தி (29.4)

ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய் (95.1)

எனத் தந்தையும் தாயுமாக இணைத்தமைத்தலும் உளது.

பரமண்டலங் களிலிருக்கிற எங்கள் பிதாவே (மத். 6.9, லூக். 11.2)

இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று

உங்கள் பரம பிதா அறிந்திருக்கிறார் (மத். 6.32)

பரலோகத் திலிருக்கிற உங்கள் பிதா... (மத். 7.11)

என இறைவனைப் பிதாவாகக் காட்டுகிறது. விவிலியம். சபை வழிபாட்டுக்குரிய கிறித்தவப் பாடல்கள்,

அன்னையும் தந்தையும் ஆளும் பொருளும் நீயே (85.3)

அன்னையாய் அப்பனாய் அன்றுதொட்டு இன்றுமட்டும் (132.3)

தாதாவும் எமைப் பெற்ற மாதாவும் நீயே (148.3)

எனத் தாய் ஒப்பீட்டை இணைப்பது தமிழ் பக்தியிலக்கியக் கோட்பாட்டின் தோய்வும் ஆகலாம்.

அகஞ்சார் அருளியல் நிலையில், இறை தலைவனாக - கிழவோனாக - மணாளனாக அணுகப் பெறல் பொதுமையுடையதாகத் தெரிகிறது. ஆன்மா அல்லது பக்தன் தலைவியாயமைதல் என்ற பாங்கு விரிவடைந்து, பக்தர் கூட்டத்தை உட்படுத்த முடியும். இறை மணாளனாக, சபை மணவாட்டியாகக் கிறித்தவத்தில் இணைவுறல் சான்றாகும்.

நிழலார் சோலை நெடுங்களத்து நிலாய நித்த மணாளனை (15.7)

மறைக்காட்டு உறையும் மணாளனை (15.8)

போன்று அப்பர் பதிக அடிகள் அமைகின்றன.

மணவாளன் மணவாட்டியின்மேல் மகிழ்ச்சியாயிருப்பது போல
உன்தேவன் உன்பேரில் மகிழ்ச்சியாயிருப்பார் (ஏசா. 62.5)
ஆட்டுக்குட்டியானவருடைய மனைவியாகிய மணவாட்டி (வெளி. 21.9)

என விவிலியத் தொடர்கள் அமைகின்றன. 'உடன் தோன்றினராய்' (95.1) எனச் சகோதரத்துவமும், 'மைந்தா' (21.2) என மகவு முறையும், மாமன் எனப் பொருள்கொளவியலும் 'அம்மான்' (15.7, 15.9, 79.1) எனும் வருகையும் அப்பரிலமைவனவாகும்.

குடும்ப வட்டத்திற்கு வெளியே, சமூக வளாகத்துக்கு விரியும்போது, குருவாக, நீதித்தலைவராக, அரசராக, மருத்துவராக, வழிகாட்டியாக, வீரராக எல்லாம் காண்டல் இறை ஒப்பீட்டு வாய்ப்பாகும். தலைவனாக, உருவாக்கினவனாக, 'எஜமானாக'ப் பார்க்கும்போதே, பக்தனால், இறையைத் தொழிலாளியாகவும் இணைத்துக் காணமுடியும் எனத் தெரிகிறது. விவிலியம் இறைவனைக் குயவனாக, மேய்ப்பனாக, தோட்டக்காரனாகக் காண்பதில் இவ்எண்ணம் வெளிப்படுகின்றது.

'நம்பனே எங்கள் கோவே' (26.1) எனவும் 'பழனத்தரசே' (87.1...5,6,7...) எனவும் அப்பரில் வர, 'என் ராஜாவே என் தேவனே' (சங். 5.2), 'கர்த்தர் சதா காலங்களுக்கும் ராஜாவாயிருக்கிறார்' (சங். 10.16), 'தேவனே நீர் என் ராஜா' (சங். 44.4), 'கர்த்தர் சதா காலங்களிலும் அரசாளுகிறார்' (சங். 146.10) என அரசக் குறிப்புகள் விவிலியத்தில் பல்கி வருகின்றன. அப்பர், 'நீருடைச் சடையுள் வைத்த நீதியார்,' 'நீதியாய, போருடை விடையொன்றேற வல்லவர்' (35.3) என்கிறார்; 'கர்த்தர் நியாயம் செய்பவர்' (சங். 146.7) எனவும் 'இவர் நீதியுள்ள நியாயாதிபதி' (சங். 7.11, 9.4) எனவும் வருவன விவிலிய ஒப்பீடாம். 'என்னைக் குணமாக்கும்' (சங். 6.2) என பக்தன் கேட்பதாலும்,

இருதயம் நொறுங்குண்ட வர்களைக் குணமாக்குகிறார்
அவர்களுடைய காயங்களைக் கட்டுகிறார் (சங். 147.3)

என வருவதாலும் இறையை மருத்துவராகக் கண்டமை புலப்படும். அப்பர் 'மருந்து' என இறைமையை அணுகுதல் இதனுடன் இணைத்துக் கருதத் தக்கது.

மதியங் கண்ணி ஞாயிற்றை மயக்கம் தீர்க்கும் மருந்தினை... (15.3)

வைத்தேன் என்தன் மனத்துள்ளே மாத்தூர்மேய மருந்தையே (15.10)

இத்தகு கருத்துகளின் தாக்கம் பற்றிப் போலும், கிறித்தவ சபைப் பாடல், 'ஒரு மருந்து அரும் குரு மருந்து - உம்பரத்தில் கண்டேனே' (106.1) எனத் தொடங்கிப் பன்முக நோக்கில் இறையை மருந்தாகக் காணும் (106, 107).

ஆருயிர் மருந்தாக அமையும் இறைமை, சாவாமை வழங்குகின்ற அமுதாகக் காட்டப்படலும் இத்துடன் ஒருங்குவைத்து எண்ணற்குரியதாம். 'அடியவர்கட்கு ஆர் அமுதாம் ஆரூரர்' (5.6), 'இருங்கடல் அமுதம் தன்னை' (74.3), 'அமுதனே, அமுதம் ஒத்து நீயுமென் நெஞ்சினுள்ளே நிலாவினாய்' (76.6), 'அம்மானை அமுதன் தன்னை ஆதியை' (79.1) என இவ்வருகை பயிலும். கீழைநாட்டுத் தொன்மக் கருத்தாக அமையும் அமுதம் விவிலியத்தில் ஒப்பீடாக இடம் பெறல் வாய்ப்பில்லை; எனினும், சபை வழிபாட்டுப் பாடல், 'தேனே கனியே என்றும் திகட்டாத அமிர்தமே' (85.1), 'கஷ்ட நோய்ப் படுக்கையிலே கைகண்ட அவிழ்தமும்' (193.3) என இயைபு புலப்படுத்துகின்றமை உண்டு.

சுவையுணரும் வாய்ப்புலன் சார்ந்த இணைமைகள், இறையனுபவ இன்பத்தை, ஆனந்தக் களிப்பைப் புலப்படுத்தும் பாங்கினவாகக் கருதத் தக்கன. கனி, கரும்பு, தேன் போன்ற இனிய பொருட்கள் இறைமைக்கு ஒப்பீடாகுதல் அப்பரிடம் முன்நிற்கின்றது. 'மதி தந்த ஆரூரில் வார் தேனை வாய் மடுத்துப் பருகி உய்யும் விதியின்றி' (5.7), 'ஆலங்காட்டிலந் தேனை..' (15.5) என்பனவற்றுடன், பதிகப் பாடலனைத்திலும், 'திருவையாறு அமர்ந்த தேன்' (39.1...10) என வருவதும் கண்கூடு. 'கரும்பினும் இனியான் தன்னை' (74.3), 'கானூர் முளைத்த கரும்பினை' (15.2), 'ஆலைக் கரும்பின் இன்சாற்றை' (15.8) எனக் கரும்பும்; 'சிற்றம்பலத்தெம் திகழ் கனியை' (15.1), 'பாலில் திகழும் பைங்கனியை' (15.5) எனக் கனியும் ஒப்பீடாவதும் இணைத்து நோக்கத் தக்கன. விவிலியம் இத்தகு இணைமை கருதாதபோதும், சபை வழிபாட்டுப் பாடலில், 'தேனே கனியே' (85.1), 'தேனே மரிமகனே' (177.1) எனும் வருகைகள் காணப்படுகின்றன.

பொன், மணி போன்ற விலை மதிப்புடைய பொருட்களையும், இறையொப்பீட்டிற்குப் பயன் கொள்ளல் பல் வகைப்பாட்டுடன் அப்பர் தேவாரத்தில் வெளிப்படுகின்றது. 'மணியே பொன்னே' (21.2), 'முத்தினை மணியைப் பொன்னை முழுமுதற் பவள மேய்க்கும் கொத்தினை வயிரமாலைக் கொழுந்தினை' (74.1), 'பாசூர் நிலாய பவளத்தை' (15.1)

'புறம்பயத்தெம் முத்தினைப் புகலூரிலங்கு பொன்னினை' (15.4), 'கோலக் காவிற் குருமணியை....பராய்த் துறை எம் பசும் பொன்னை' (15.5), 'மருகல் உறை மாணிக்கத்தை' (15.6) எனச் சான்று பல்கும். கிறித்தவ சபை வழிபாட்டுப் பாடலில் ஓரளவு இணைமை காட்டும் சூழல் அமைகின்றது.

காயொளியில் கதிர்பரப்புங் களங்கமில் நீதியின் சுடரைப்
பாயொளிகொள் பசும்பொன்னை பணிக்கருஞ் சிந்தாமணியைத்
தூயொளிகொள் நித்திலத்தைத் தூண்டாத சுடர்விளக்கைச்
சேயொளிகொள் செம்மணியைச் சிலுவைமிசைக் கண்டேனே.
(162.6)

நேர்நிலை ஒப்பீடாகத் தென்படும் மேற்கண்ட பல சான்றுகளை நோக்க, இறையைக் 'கள்வனாக'க் காட்டல் எதிர்நிலைத் தோற்றம் காட்டுகிறதோ என்ற ஐயம் ஏற்படுகின்றது. இப்பாங்கும் தமிழுக்கு மட்டுமன்றிப் பிற மொழியிலக்கியத்துக்கும் சமயத்துக்கும் பொதுமை காட்டக் கூடும் என்பதும் அதிர்ச்சி தரக் கூடியதாகலாம். அமெரிக்கப் பெண்புலவரான எமிலி டிக்கின்சன் இறையை 'தந்தையே' என்று மட்டும் அழைக்காது கொள்ளையிடுவோனாக (கள்வன்?), வங்கியாளனாக ஒருங்கு முன்னிலைப்படுத்துவார் ('Burgler, banker, father...') அப்பர், 'கள்ளரோ புகுந்தீர்' (75.9) எனக் காட்டுவது, 'என் உள்ளம் கவர் கள்வன்' என ஞானசம்பந்தர் (1.1) கூறுவதுடன் இணைத்துக் காணத்தக்கது. நினையாத நேரத்திலும் எதிர்பாராத வேளையிலும், யாரும் அறியாமல் திருடன் வருவான் என்பதால், விவிலியம், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பற்றிய கருத்தாக்கத்தில் கள்வனைச் சார்த்தித் தருகின்றது.

திருடன் இன்ன நேரத்தில் வருவான் என்று வீட்டெஜமானுக்குத் தெரிந்திருந்தால், அவன் விழித்திருந்து, தன் வீட்டைக் கன்னமிட வொட்டான்..... அந்தப்படியே நீங்கள் நினையாத நேரத்தில் மனுஷகுமாரன் வருவார்.... (லூக். 2. 39, 40)

என நற்செய்திப் பகுதியில் வருவதுடன், ஒத்த கருத்து, 'வெளிப்படுத்த'லிலும் அமைகின்றது.

நீ விழித்திராவிட்டால் திருடனைப் போல் உன்மேல் வருவேன்.

நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய்.
(வெளி. 3.3)

இதோ, திருடனைப்போல் வருகிறேன். (வெளி. 16.15)

பக்தனின் சொற்களில் கள்வன் ஒப்பீடமைதல் அப்பரிலும், இறைவனின்- கிறிஸ்துவின் - சொற்களிலேயே அவ்வொப்பீடமைதல் விவிலியத்திலும் காணப்படுதலை ஒற்றுமையில் வேற்றுமை எனலாம்.

அஃறிணை உயிர்களோடும் இறையொப்பீடு செய்யப்படுதல் என்பது இரு தளத்திலும் காணக் கூடியதாகும். எந்த உயிரினம் என்பதில் ஒருமையோ வேற்றுமையோ அமையலாம் என்பதும் தெரிகிறது. களிறு, ஏறு, சிங்கம் எனச் சில விலங்குகளை அப்பரிடம் காணமுடிகிறது. இயற்கையில் இறையைப் பொருத்திக் காண்பதன் ஒரு விரிவாக, ஐம்பூதத்துடன் நில்லாது உயிரினங்களிலும் இயைபு தேடுவதாக இதனைப் புரிந்துகொள்ளலாம். 'மானக் கயிலை மழ களிற்றை' (15.2), 'ஆதிகை வீரட்டத்து அரிமான் ஏற்றை' (15.4), 'எழிலார் இராச சிங்கத்தை..... எழில் ஏற்றை' (15.7), 'அடல் ஏற்றை' (15.9), 'பூவணத்து எம் போரேற்றை' (15.10) என்று வருவன சில சான்றுகளாகும். ஆட்டுக்குட்டி, ராஜசிங்கம், கோழி எனும் ஒப்பீடுகளைக் கிறித்தவ இலக்கியத்தில் காணமுடிகிறது. 'யூத ராஜ சிங்கம்' என்பது சபைப் பாடலில் அமைகின்றது (324-பல்லவி).

மேய்ப்பனும், ஆடும், விவிலியத்தில் பன்முறையும் பயன்படும் படிமங்களாகும். 'கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்' (சங். 23.1) என இறைமை, மேய்ப்பனாகக் காட்டப்படல் ஒருபால் அமைய,

> அடிக்கப்படும்படி கொண்டு போகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும் அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார் (ஏசா. 53.7)

என ஆடாக - ஆட்டுக்குட்டியாகக் கிறித்து இணைக்கப்படல் மறுபாலமையும். இறைவன் கோழியாகவும் அவரிடம் அடைக்கலம் நாடும் மக்கள் கோழிக்குஞ்சுகளாகவும் காட்டப்படல் அருகிய வரவுடையதாகும்.

> கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளில் கீழே கூட்டிச்
> சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனை தரமோ
> உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக் கொள்ள
> மனதாயிருந்தேன் (மத். 23.37; லூக். 13.34)

என இறைக் கூற்று அமைகிறது.

அறியாதோருக்கு, அறிந்த பொருட்கள் வழியாகக் கருத்துக்களை அறிவித்தல் என்ற நோக்கு, இத்தகு இறையொப்பீட்டு உத்திக்குக் காரணம் எனல் தகும்.

உயிரில்லாத அஃறிணைப் பொருட்களும் இத்தகு ஒப்பீட்டுக்கு இடம் தருவதும் இங்கு இணைத்துச் சிந்திக்கத் தக்கது. இயற்கைப் பொருட்களாகவோ, செயற்கைப் பொருட்களாகவோ, இயங்கு நிலையினவாகவோ இயங்காதனவாகவோ இவை அமைந்து காணப்படுகின்றன.

பழம்பதி (15.1), வலம்புரி (15.2), விளக்கு (15.3), மலர் (15.5), மாலை (15.6), கடல் (15.9) எனப் பல ஒப்பீடுகளை அப்பரின் பாவநாசத் திருப்பதிகம் தருவது சுட்டத்தக்கது. இவற்றிற்கு வேறாக, மலை, கோட்டை, கேடயம் போன்றன விவிலியக் களத்தில் ஒப்பீடாகின்றன. பரியாயச் சொற்களின் பயன்பாட்டையும் காண முடிகின்றது. 'தேவன் தங்கள் கன்மலை என்றும்' (சங். 78.35), 'எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்கள்' (சங். 121.1) என மலையும்; 'என் கோட்டையும் நீரே' (சங். 31.3), 'நீர் எனக்குப் பலத்த துருகமும் எனக்கு அடைக்கலமான அரணுமாயிரும்' (சங். 31.2) எனக் கோட்டையும் பரியாயச் சொற் பயன்பாட்டைத் தருகின்றன. 'கர்த்தாவே நீர் என் கேடகமும்....' (சங். 3.3) எனக் கேடயம் அமைகிறது. முருகுணர்வுடனான ஒப்பீடுகள் அப்பரிடமும், பாதுகாப்புணர்வுடனான இணைமைகள் விவிலியத்திலும் அமைவது இவற்றில் வெளிப்படுகின்றன.

இருவேறுபட்ட களங்களில் இறையொப்பீடாக அமையும் சில பொருண்மைகள் இங்கே எடுத்துக்காட்டப் பெற்றன. ஒரு பெருமுழுமையின் பிறைமம் (Segment) மட்டுமே இவை. புராணப் பாங்கும் தத்துவ நோக்கும் மற்றுமொரு பரிமாணத்துடனான ஒப்பீடுகளைத் தருவது ஆழாய்வில் புலப்படும்.

10. தொண்டுக்கிழவர் திருநாவுக்கரசர்

அனுராதா ஸ்ரீநிவாசன், சென்னை.

"கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்
கூடும் அன்பினில் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்." - சேக்கிழார்.

எண்பத்தோராண்டு பூவுலகில் வாழ்ந்து, சிவப்பழமாய்த் திருத்தொண்டு செய்து, தெய்வீக அருட் கவிதைக் கனிகளை கல்லுங்கரைய, கேட்டோர் உள்ளங்குவிய வாரி வழங்கிச் சிவமுக்தி பெற்றவர் சொல்லின் செல்வர் திருநாவுக்கரசர். உடல் தளர்ந்தும் மனம் தளராமல் கைலை மலைக் காட்சி காண விடாமுயற்சியுடன் புறப்பட்ட அவரது உள்ளத் திண்மைக்கு ஈடேது? இணையேது? இறைவன் திருவருள் புரிந்து தென்நாட்டில் **ஐயாற்றில்** கைலை மலைக் காட்சிதந்து பேரருள் புரிந்தான்.

ஆளுடைய பிள்ளை பாடிய பதிகங்கள் பதினாராயிரம்; ஆளுடைய நம்பி அருளிய பதிகங்கள் முப்பத்தேழாயிரம்; ஆளுடைய அரசாம் தொண்டுக்கிழவர் திருவாய் மலர்ந்த திருப்பதிகங்கள் 49000 - என்பர். திருநாரையூர் நம்பியின் திருவருளால் கிடைத்த பதிகங்கள் முறையே திருஞானசம்பந்தர் பாடிய பதிகங்கள் 384. ஆரூரர் அருளிய பதிகங்கள் 101; நம் வாகீசர் வாய்ப்பிறந்த பதிகங்கள் 312 மட்டுமே. இவை 4,5,6, திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன.

திருமேனி, திருத்தலம், திருநீறு "திரு" என்ற அடைமொழி தெய்வீகத்துடன் இணைந்தது. உலகவர்க்குச் செய்யும் சமுதாயத் தொண்டு வேறு; தெய்வத்திற்குச் செய்யும் திருத்தொண்டு வேறு. முதலது புற உலகைச் சார்ந்தது. பின்னது அக உலகைச் சார்ந்தது. அகத்தில் புறத்தையும், புறத்தில் அகத்தையும் காண்பவனே உண்மையில் ஞானி; யோகி; உண்மையாம் பக்தன். இத்தகு நிலையில் வாழ்ந்தவர் திருவருட்செல்வர் திருநாவுக்கரசர்.

தன்னில் உலகையும், உலகைத் தன்னுளும் கண்டு சிவயோகத்தில் திளைத்தவர் திருநாவுக்கரசர். மருத்துவமனை கட்டியும் மற்றும் பலப்பல செயல்களாலும் பேரும் புகழும் பெறத் துடிப்பவர் பலர். ஆனால் தொண்டுக்கிழவர் திருநாவுக்கரசர் திருத்தொண்டோ முற்றிலும் வேறுபட்டது.

இத்தகு அறச்செயல்களை குறைத்து மதிப்பிடுபவரும் அல்லர் வாகீசர். அதனால்தான்,

> "இரப்பவர்க்கு ஈய வைத்தார்
> ஈபவர்க்கு அருளும் வைத்தார்
> கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநர
> கங்கள் வைத்தார்"

என்றும் பாடி ஊக்கம் தருகிறார்.

தொண்டு எண்ணத்தால், சொல்லால், செயலால் முக்கரணங்களும் இயைந்து ஆற்றப்பட வேண்டும். வாகீசர் அருளிய 'திருஅங்கமாலை' ஒன்றே போதும் அவரது முக்கரணங்களும் ஒன்றுபட்ட நிலையில் அவர் வாழ்ந்தவர் என்பதையும், தெய்வீகத்துடன் தன்னை இணைத்துக் கொண்டவர் என்பதையும் எடுத்துக்காட்ட.

சிவபரம்பொருளைப் பாடுவதே தம் பிறவிப் பணியெனக் கொண்டார்; திருக்கோயில்களில் உழவாரப்பணி செய்து, 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று செயலால் வாழ்ந்து காட்டினார்.

அன்பர் பணியில் இன்ப நிலை கண்டவர் இவர். பண்களும், திருவிருத்தமும், திருநேரிசையும் தொகுக்கப்பட்டு நாலாம் திருமுறை யாகவும், திருக்குறுந்தொகை ஐந்தாம் திருமுறையாகவும், திருத்தாண்டகம் ஆறாம் திருமுறையாகவும் ஒளிவீசித் திகழ்கின்றன. 'கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள் முப்போது முடிசாய்த்துத் தொழ நின்ற முதல்வனை' எப்போதும் நெஞ்சகத்திருத்தி வழிபட்டவர் சொல்லின் வேந்தர்.

சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் நாவுக்கரசர் வரலாற்றைத் தொடங்குகிறார்.

> "திருநாவுக் கரசுவளர் *திருத்தொண்டின்* நெறிவாழ
> வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
> பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்"

எளிமையும், பொருட்பொலிவும், அழகும் கொண்ட அற்புதச் சொற்கள் சொற்கோவின் சொற்கள். கையில் உழவாரப் படையோடு தமிழகத்துத் திருக்கோயில்களில் அறுபத்து மூவர் வரிசையில் காட்சி தரும் இவர், அன்று இதே உழவாரப் படையுடன் தமிழகத்துத் திருக்கோயில்கள் தோறும் மெய்யன்பர் புடை சூழ வழிபட்ட வரலாறு நம் சிந்தனையில் தேக்கத் தகும். எண்ணமெலாம் சிவனினைவு; சொல்லெலாம் சிவன் புகழ்பாடும் தெய்வத் தமிழ்ச் சொற்கள்; செயலோ உழவாரத் திருப்பணி. இன்றைய ஆலயங்களின் அவல நிலை போக்க இத்தகு உழவாரப்

படையாளிகள் ஊர்தோறும் பவனி வரவேண்டும். ஊரும், நாடும், உள்ளமும், உலகும் அமைதி பிறக்க இவர்வழி தலைப்பட்டோர், பயன் கருதாப் பணியில், பலன் கருதா பக்தியில் திளைத்தெழுந்து திருப்பணி செய்தால் சைவமும், தமிழும், சமயமும், சமுதாயமும், அகமும், புறமும் ஒளிவீசும் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

இன்றைய மனிதன் அறிவிலே உயர்ந்தவன்தான். ஆனால் அவனது சிந்தனை புறவயப்பட்டது. அகவழிப்பட்ட, அறவழிப்பட்ட, ஆன்மீகச் சிந்தனையால் மட்டுமே உலகில் அமைதி நிலவ முடியும். இறைவன் நம் புலன்களைப் புறநோக்காய்ப் படைத்திருக்கிறான். அவற்றை அகவழித் திருப்பினாலன்றி உண்மைப் பொருளை உணர முடியாது. அகவழித் திருப்பினால், 'கள்ளப் புலன் ஐந்தும் காளாமணி விளக்காய்' மாறும். காணாத காட்சிகளைக் காண, கேளாத சொற்களைக் கேட்க, உணராத உணர்ச்சிகளை உணர ஐம்புலன்களும் தெவிட்டாத அமுதத்தை அளிக்கும் என்பதை ஞானியர் பலரும் அறுதியிட்டு உரைத்தபடி இருப்பினும் அகநோக்கு இன்மையால் அவதியுறுகிறோம்; அமைதி இழக்கிறோம்.

வினைப் பயனால் விளையும் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு, மேலும் வினையேற்றாது திருவடித் தொண்டு இறைவனுக்கும், அவனடித் தொண்டர்க்கும் ஆற்றின் இறைவன் எல்லையிலாப் பேரின்பம் தந்தருளுவான் என்பது வாகீசர் வாய்மொழி. 'கூற்றாயினவாறு விலக்ககிலீர்' எனத் தொடங்கும் இவர் தம் முதற் பதிகத்தால் இவர்பட்ட உடற் பிணிகள் நம் மனக்கண்ணில் தோன்றும்.

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்ந்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே".

என்ற பாடலால் முக்கரணங்களும் முக்கண்ணனுக்குத் தொண்டு புரியவே அளிக்கப்பட்டன என்பதைக் கூறுகிறார்.

"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந் தீங்கினும் உன்னை மறந்தறியேன்
உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்"

இத்தகு நிலை மக்களாய்ப் பிறந்த ஒவ்வொரு உயிர்க்கும் உறுதுணை. இத்தகு நிலையில் இன்று நாம் ஆயிரத்தில் ஒருவராவது உள்ளோமா? ஆயிரத்தில் ஒரு பங்கு இந்நிலை நம்மிடம் உள்ளதா? பூசித்தல், துதித்தல், இறைவனை மறவா நிலை இவை மட்டுமா? நலமே விளையினும், துன்பமே தொடரினும் இறைவனை மறவா நிலை. இத்தகு நிலை சித்திக்கப்பெற்றோர் படிப்படியாக சிவமுக்தி பெறுவர் என்பதில் ஐயமில்லை.

உழவாரப் பணி புரியுங்கால் பொன்னும், மணியும் கிடைக்கப் பெற்றும் அவற்றை உதறி எறிந்தவர் நாவரசர். அரம்பையர்கள் மயக்க வரினும் சித்தத்தைச் சிவன்பால் நிறுத்தி வெற்றி கண்டவர். மூவாசை கடிந்த உத்தமர். பசு கரணத்தைச் சிவகரணமாக்கி சிவனொடு கலந்தவர்.

மதியிலா மன்னன் அமணர் சொற்கேட்டு இவருக்கு விளைத்த இன்னல்கள் ஏராளம்! நஞ்சு கலந்து ஊட்டினான்; மதங்கொண்ட வேழத்தை ஏவினான்; சுண்ணாம்புக் காளவாயில் இட்டான்; கல்லிலே கட்டிக் கடலிலே தள்ளினான். இறைவன் திருவருள் துணையெனக் கொண்டோர் அல்லல் உறுவரோ?

''தலையே நீ வணங்காய்! கண்காள் காண்மின்களோ! செவிகாள் கேண்மின்களோ! மூக்கே நீ முரலாய்! வாயே வாழ்த்து கண்டாய்! நெஞ்சே நீ நினையாய்! கைகாள் கூப்பித் தொழீர்'' என்று திருஅங்க மாலையில் ஐம்புலன்களுக்கும் ஆணை பிறப்பிக்கிறார். இறைவனது திருக்கோயில் வலம் வந்து பணிந்து போற்றி வழிபடுவதே உடலால் பெற்ற பெரும் பயன்! இறைவன் திருக்கோயில், கோபுர தரிசனம், மூலவர் தரிசனம் செய்ய இயலாக் கால்களால் பயனில்லை. இறக்கும் போது துணை இறைவன் ஒருவனே, அவனது திருவடி நிழல் இணைந்து, சிவனடித் தொண்டரோடு வாழ்வதே தனக்குப் பெருமை என இறுமாந் துரைக்கிறார். ''தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் உண்டு கொலோ'' என்பார் அப்பர் பெருமான். ''தொண்டாகிப் பணிவார்க்குத் தொல்வான் ஈயவல்லான் காண்'' என்று தொண்டர்க்கு இறைவன் அருளும் சிறப்பை எடுத்தியம்புகிறார். 'நாக்கொண்டு பரவும் அடியார் வினை போக்க வல்லான்' என்றும் பேசுவார்.

'உள்ளமே தகளி', 'நெஞ்சத்துள் விளக்கு', 'உள்ளத் தேறல்', 'சிந்தையுட்சிவம்' என்றெல்லாம் இவர் கூறுவது நம் சிந்தனைக்கு உரியது. நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன் அல்லவா இறைவன்? 'சிந்தையால் நினைவார்களைச் சிக்கெனப் பந்துவாக்கி உய்க்கொளும் காண்' என்பார்.

சாதாரணமாக இறைவனை மலர்கொண்டு அருச்சிப்பது புறவழிபாடே. எண்குணத்தானாய இறைவனைக் கொல்லாமை, புலனடக்கம், பொறுமை, இரக்கம், அறிவு, வாய்மை, தவம், அன்பு எனும் எண்மலர்களால் வழிபடுவதே அக வழிபாடு. வழிபாட்டின் பொருளுணர்ந்து வழிபாடு செய்யின் இறைவன் திருவருளும் விரைவில் சுரக்கும்.

''மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தைவித்திப்

பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப்பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகில்
சிவகதி விளையுமன்றே''

ஆன்மயோகம், ஞானயோகம், சிவயோகம் என்பன மூவகை யோகநிலை. தன்னுயிர் தானறப் பெறுதல் ஆன்மயோகம், அவனருளே கண்ணாகப் பெற்று அருள்மயமாதல் ஞானயோகம், அச்சிவஞானத்தால் சிவனைப் பெறுதல் சிவயோகம். பாச ஞானத்தாலும், பசு ஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரனுக்கு அப்பதி ஞானமே வடிவம். ஒருத்தராலும் அறியவொண்ணாத் திருவுருவும் அதுவே. தேகமான அதுவே தேகியான சிவனையும் காட்டும் என்பர் மேலோர்.

சிவ தாரகமாய்த் திகழும் 'சிவ' எனும் சொல் சிவ சக்தி ஒருமை காட்டும். வகாரம் சக்தி, சிகாரத்தை அடைய-(சிவனை அடைய) உறுதுணை வகாரம் என்பதை உணர்ந்து வழிபடின் சாலோகமாதி முக்தி நான்கும் கிட்டப் பெறுவர்.

''சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே''

- திருமூலர்

தொண்டர்தம் பெருமை சொல்லவும் அரிதே

ஞானக் கிழவியாம் ஔவை மூதாட்டி பெரியது கேட்கின் எரி தவழ் வேலோய்? - ...... எனத் துவங்கும் பாடலில் 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் அரிதே' என முடிக்கிறார். நம்பி ஆரூரரும், நம்பியாண்டார் நம்பிகளும், சேக்கிழார் பெருமானும் தொண்டர்தம் பெருமை சொல்லி நம்மை நல்வழியில் நாட்டம் கொள்ள வழிகாட்டுகின்றனர். 'தொண்டர் சீர் பரவுவார்' எனும் பெருமைக்குரிய சேக்கிழார் போன்றே திருநாவுக்கரசரும் தொண்டர்தம் பெருமை சொல்லியுள்ளதை சிந்தனையில் கொணர்வோம்.

'கழுமல ஊரர்க்கு அம்பொன் ஆயிரம் கொடுப்பர் போலும்' என்று ஞானக் குழந்தைக்கு ஆவடுதுறையான் ஆயிரம் பொன் நல்கிய பெருமையைக் காட்டுகின்றார்.

திருநாவுக்கரசரிடத்து நீங்காத பேரன்பு கொண்ட அப்பூதியடிகளின் பெருமையை,

"அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குறிஞ்சிப் பூவாய் நின்ற சேவடியாய்"

எனப் பாடிப் பரவுகிறார் வாகீசர்.

'ஆமலி பாலும் நெய்யும் ஆட்டிஅர்ச் சனைகள் செய்து
பூமலி கொன்றை சூட்டப் பொறாததன் தாதை தாளை
கூர்மழு வொன்றால் ஓச்சக் குளிர்சடைக் கொன்றை மாலைத்
தாமநற் சண்டிக்கீந்தார் சாய்க்காடு மேவினாரே'.

சண்டீச நாயனார்க்கு இறைவன் புரிந்த திருவருளை நாவரசர் நாவாற் கேட்டோம். ஆறே நாட்களில் இறையருள் பெற்ற வேடன் திண்ணப்பன் பற்றியதோர் பாடல் இது:

"குலப்பெருந் தடக்கை வேடன் கொடுஞ்சிலை இறைச்சிப் பாரந்
'துவர்ப் பெருஞ் செருப்பால் நீக்கித் தூய வாய்க் கலசமாட்ட
உவப்பெருங் குருதி சோர ஒருகணை இடந்து அங்கு அப்பத்
தவப்பெருந் தேவு செய்தார் சாய்க்காடு மேவினாரே"

செங்கணான்

"சிலந்தியும் ஆனைக் காவில் திருநிழற் பந்தர் செய்து
உலந்தவன் இறந்தபோதே *கோச்செங் கணானுமாகக்*
கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர்தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே".

சாக்கிய நாயனார்

"கல்லினால் எறிந்து கஞ்சி தாமுணும் *சாக்கியனார்*
நெல்லினாற் சோறுணாமே நீள்விசும்(பு) ஆளவைத்தார்".

அமர்நீதி நாயனார்

"...
கீட்கொண்ட கோவணம் காவென்று சொல்லிக் கிறிபடத்தான்
வாட்கொண்ட நோக்கி மனைவியொடும் அங்கோர் *வாணிகனை*
ஆட்கொண்ட வார்த்தை உரைக்கு மன்றேஇவ் அகலிடமே".

கணம்புல்ல நாயனார்

"*கணம்புல்லர்க்கு* அருள்கள் செய்து காதலாம் அடியார்க்கென்றும்
குணங்களைக் கொடுப்பர் போலும் குறுக்கை வீரட்டனாரே"

நமிநந்தியடிகள்

"அடித்தொண்டர் ஆணி.........
பங்குனி உத்திரம் பாற்படுத்தான்......

நாதன் அடித்தொண்டன் நம்பி நந்தி
நீரால் திருவிளக்கிட்டமை நீணாடு அறியுமன்றே''.

நமிநந்தியடிகள் திருநாவுக்கரசர் திருவாக்கால் 'தொண்டர்க்கு ஆணி' எனும் பெருமையினைப் பெற்றவர். சேக்கிழார் பெருமான் பாடுகிறார்.

''தொண்டர்க்கு ஆணி எனும் பேறு திருநாவுக்கரசர் விளம்பப்
பெற்ற பெருமையினார்''

என்பதோடு 'நாதன் அருளால் திருவிளக்கு நீரால் எரித்தார் நாடறிய' எனவும் இயம்புவார். தில்லைவாழ் அந்தணரும், காரைக்கால் அம்மையாரும் நாவுக்கரசர் நாவினாற் பாடப்பட்ட அடியார்கள்.

தெய்வத் திருத்தொண்டில் ஆழங்காற்பட்ட திருநாவுக்கரசரைத் **'திருத்தொண்டின் உறைப்பு'** என்று அழகுற சித்திரிக்கிறார் குன்றத்தூர்ச் செல்வர். தொண்டுக்கிழவர் ஞானக் குழந்தையுடன் திருவீழிமிழலையில் தம் பக்தித் திறத்தால் பரமனிடம் பொற்காசு பெற்று சிவனடியார்களின் அரும்பசியைக் களைந்த வரலாறு சிந்தனைக்குரியது. படமாடுங்கோயில் பகவற்கு ஒன்று ஈதலினும் நடமாடுங்கோயில் நம்பற்கு ஒன்று ஈவது சாலச் சிறந்தது என்பதை உணர்ந்து இவர்கள் ஆற்றிய அருஞ்செயல் இது.

'தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே'

என்ற இவரது சொற்களைத் திருவீழிமிழலைத் திருத்தலத்தில் இறைவன் மெய்ப்பித்தான் என்றே கூறலாம்.

திருமால், இராமன், பகீரதன், மாபலி, இந்திரன், திருமகள், அர்ச்சுனன், ஐராவதம், சடாயு போன்ற பலரது வழிபாடுகளையும் எடுத்தியம்பியுள்ளார் திருநாவுக்கரசர். நாக்கைக் கொண்டு அரன் நாமம் நவில்வதும், 'பூ' கைக்கொண்டு பூசனை புரிவதும் தொண்டே என்னும் கருத்தினை வெளிப் படுத்தியுள்ளார். 'நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே' என்று நவில்வதும், ஐந்தெழுத்தின் பெருமை பேசுவதும் தொண்டின் பாற்பட்டதே.

''பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பக்தராகி
அரும்பொடு மலர்கள்கொண்(டு) அங்கு ஆர்வத்தை
உள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத்தூபம் விதியினால் இடவல்லார்க்குக்
கரும்பினிற் கட்டிபோல்வார் கடவூர் வீரட்டனாரே''.

என்று மலர்க்கொண்டு பூசை செய்யும் தொண்டை அப்பர் பாடுகிறார்.

தொழுதல், அகங்குழைதல், மேவுதல், தொட்டிமையுடைமை, அழுதல் அனைத்தும் உண்மைத் தொண்டர் இயல்பு. இத்தகையோர் உள்ளத்தை

உறைவிடமாகக் கொள்வது இறைவன் இயல்பு என்பதை திருவாரூர்த் திருப்பதிகம் ஒன்று சுட்டி நிற்கின்றது.

“தொழுது அகங் குழையமேவித் தொட்டிமையுடைய தொண்டர்
அழுதகம் புகுந்து நின்றார்”

என்பது அப்பர் அருள்வாக்கு.

ஆலயத்தைத் தூய்மையுறத் திருவலகிடல் சிறப்பு. ஆலயத்தை மெழுக்குவார் (கழுவுவார்) பெறும் பலன் அதினிலும் பதின்மடங்கு. நறுமணமுடைய நல்ல மலர்களைத் தொடுத்தணிவிப்போர் மேலுலகாம் சுவர்க்க உலகைச் சென்றடைவர். ஆலயத்தில் திருவிளக்கு ஏற்றுவித்தோர் பெருமை சொல்லிற்கடங்கா, அவர்கள் பெறுவது ஞானச்செல்வம். இறைவன் திருக்கோயிலில் தெய்வப்பா ஏத்திசைப்போர்க்கு இறைவன் பேரருள் பாலிப்பான் என்கிறார்.

“விளக்கினார் பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றியாகும்
துளக்கினன் மலர் தொடுத்தால் தூயவிண் ணேறலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்ஞ்நெறி ஞானமாகும்
அளப்பில கீதம் சொன்னார்க்(கு) அடிகள்தாம் அருளுமாறே.”

‘திருக்கோயிலிலே திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருப்பள்ளித்தாமம் தொடுத்தல், திருவிளக்கிடுதல், சிவகீதம் இசைத்தல்’ எனும் சிவபுண்ணியச் சிறப்பினை விளக்குவது இப்பாடல். சரியை, கிரியை, யோகம், ஞானம் பயக்கும் சிவப்பணிகளை எப்பொழுதும் மேற்கொண்டு வாழ்வார்க்கு சிவனருள் கைகூடும் என்பதில் ஐயமில்லை.

“திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்தன் அடியார்க்கும் அடியேன்” - சுந்தரர்.

11. திருநாவுக்கரசரும் சோழநாடும்

சா. ஆதிரை, ஈரோடு.

தமிழ் மக்களது தவப்பயனாகத் தமிழகத்தில் தோன்றிய அருளாளர்கள் திருவருள் இன்பத்துள் திளைத்துத் தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறும்படி திருவாய் மலர்ந்தருளிய தெய்வத் தமிழ்ப் பாடல்களே திருமுறை என வழங்கப் பெறுகின்றன. இத்திருமுறைகளுள் நான்கு, ஐந்து, ஆறாந் திருமுறைகளை அருளிச் செய்தவர் திருநாவுக்கரசர். இவர் ஆளுடைய் பிள்ளையாராகிய திருஞானசம்பந்தரோடு ஒத்த காலத்தில் வாழ்ந்தவர். இவர் அருளிய திருப்பதிகங்கள் 312 ஆகும். தீதகன்று உலகம் உய்யத் தோன்றிய நாவுக்கரசர் தொண்டின் வடிவமாக நின்றவர் என்பதை, ''தொண்டலால் துணையும் இல்லை'' எனவும் ''என் கடன் பணிசெய்து கிடப்பதே'' என்னும் திருவாக்குகளால் அறியமுடிகிறது. கயிலைநாதன் எழுந்தருளியுள்ள தலங்கள் பலவற்றையும் சென்று தரிசிக்க வேண்டும் என்ற பேரவா சிந்தையில் எழுகின்றது. ஆகவே பல தலங்களைத் தரிசிக்கின்றார். அவ்வகையில் சோழநாட்டில் உள்ள திருத்தலங்கள் 190. இத்தலங்களை மூன்று சுற்றுக்களில் சேவிக்கின்றார்.

இறைவனைப் பரவுதல்

நாயன்மார் தாம் வணங்கும் தெய்வத்தைப் பரவியும் பார்த்தும் பெற்ற இன்ப அனுபவங்களை இசை நலஞ்சான்ற பாடல்களில் தேக்கி வழங்கி யுள்ளனர். சிவனடியாராகிய திருநாவுக்கரசர் தாமுகந்த சிவபெருமான் திருக்கோலத்தைக் கண்ட கண்களால் காண்பதற்கு வேறொன்றுமில்லை என்பதை,

''..

ஆள வுடைக்கழல் சிற்றம்பலத்தரன் ஆடல் கண்டால்
பீளை யுடைக்கண் களாற்பின்னைப் பேய்த்தொண்டர்
காண்பதென்னே''

என்று தெளிவுபடுத்தியுள்ளார். இதே நிலையை மாணிக்கவாசகரும்,

''..

நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ''

என்ற திருக்கோத்தும்பீ பகுதியில் சுட்டியுள்ளார்.

சோழநாட்டுத் திருத்தலப் பயணம்

முதற்சுற்று

சோழநாட்டில் உள்ள திருத்தலங்களை மூன்று சுற்றுக்களில் தரிசித்தார் திருநாவுக்கரசர். முதல் சுற்று திருமுண்டீச்சரம் தலத்தில் தொடங்கி தில்லைத் திருப்பதியில் முடிவடைகின்றது. திருவதிகையிலிருந்து திருமுண்டீச்சரம் என்னும் திருத்தலத்திற்கு வந்த திருநாவுக்கரசர் ''ஆர்த்தான் காண் அழல்நாகம் அரைக்கு நாணா அடியவர்கட்கு அன்பன் காண்'' என்ற முதற் குறிப்பினையுடைய திருத்தாண்டகச் செந்தமிழ் மாலையைப் பாடிப் போற்றுகின்றார். பின்னர் திருவாமாத்தூர், திருக்கோவலூர், திருப்பதிகளில் உள்ள இறைவனைப் போற்றிப் பரவுகின்றார்.

சூலக்குறியும் இடபக்குறியும் பெறுதல்

திருநாவுக்கரசர் திருத்தூங்கானை மாடம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனைத் தொழுது ''பெருமானே புன்மை மிக்க நெறியாகிய சமண் சமயத்தில் தொடக்குண்டு வருந்திய இவ்வுடம்புடனே இனி உயிர் வாழ்ந்திருக்கத் தரியேன். அடியேன் இவ்வுடம்பினைப் பொறுத்திருப்பதற்கு இசைவாக நின்னுடைய சூலமும் இடபமும் ஆகிய இலச்சினையை என்மேல் பொறித்தருள வேண்டும் என விண்ணப்பிக்க, இறைவனும் திருநாவுக்கரசரின் திருத்தோள்களில் மூவிலைச் சூலமாகிய இலச்சினையை இடப இலச்சினையுடன் பொறித்துச் செல்லுகின்றார். இந்நிகழ்ச்சியைச் சேக்கிழார் பெருமான்',

''...சிவபூதம்
மாடொருவர் அறியாமே வாகீசர் திருத்தோளில்
சேடுயர்மூ விலைச் சூலஞ் சினவிடையி னுடன்சாத்த''

என்று கூறியுள்ளார்.

தூங்கானை மாடத்து இறைவனிடம் விடைபெற்ற திருநாவுக்கரசர் திருநெல்வாயில் அரத்துறை, திருமுதுகுன்றம் ஆகிய தலங்களை வழிபட்டார்.

தில்லையை அடைதல்

பழமலை நாதரை வணங்கி விடை பெற்றுக்கொண்டு வெள்ளாற்றங் கரை வழியே ''ஊனாலும் உயிராலும் உள்ள பயன் கொள நினைந்து'' எல்லையில்லாச் செல்வம் நிறைந்த தில்லையை நோக்கி வருகின்றார். தில்லைப்பதியின் எழுநிலைக் கோபுரத்தை வலம் வருகின்றார். வலம் வந்தவர் கனக சபையினைக் கண்ணுற்று மன்றுள் ஆடும் நடராசர் முன் அணைகின்றார். இறைவன் 'என்று வந்தாய்?' என வினவும் அருள் நோக்குடன் காட்சி தர இறைவனுக்குப் பதில் கூறும் பொருட்டு,

"பத்தனாய்ப் பாட மாட்டேன்
பரமனே பரம யோகீ
எத்தினாற் பத்தி செய்கேன்
என்னைநீ இகழ வேண்டா
முத்தனே முதல்வா தில்லை
அம்பலத் தாடு கின்ற
அத்தாவுன் ஆடல் காண்பான்
அடியனேன் வந்த வாறே"

என்ற நேரிசையினைப் பாடித் துதிக்கின்றார். பின்னர் தில்லை முன்றில் களிலும் திருவீதிகளிலும் உழவாரத்தினால் கூடிய பணிகள் செய்து தொண்டு புரிகின்றார். இந்நிலையில் "அன்னம் பாலிக்கும்", "பனைக்கை மும்மதம்" என்ற குறுந்தொகைப் பதிகங்கள் பாடி மகிழ்ந்திருக்கின்றார். கூத்தப் பெருமான் மீது அப்பர் பெருமான் 'எட்டுப் பதிகங்கள்' பாடியுள்ளார்.

இரண்டாம் சுற்று

திருநாவுக்கரசரின் இரண்டாம் சுற்றுப் பயணம் திருகருப்பறியலூர் என்னும் திருத்தலத்தில் தொடங்கி திருப்பழனம் என்னும் திருத்தலத்தில் முடிவடைகின்றது.

திருகுரக்குக்கா, திருப்புள்ளிருக்குவேளூர், திருப்புன்கூர் அகிய தலங்களில் இறைவனை வழிபட்டுப் பல செந்தமிழ்ப் பதிகங்களைப் பாடினார். பின்னர் திருநீடூர், திருநின்றியூர், நனிபள்ளி ஆகிய தலங் களையும் சென்று வழிபட்டார்.

அகப்பொருட்துறையில் அமைதல்

திருவலம்புரம் என்ற தலத்திற்கு வந்த திருநாவுக்கரசர் இரண்டு பதிகங்கள் பாடி வழிபடுகின்றார். இதில் "மண்ணளந்த" என்ற திருத்தாண்டக செந்தமிழ்மாலை அகப்பொருள் துறையிலமைந்துள்ளது. இது தலைவியின் கூற்றாக அமைந்துள்ளது. "பட்டுடுத்துப் பவளம் போன்ற மேனியில் பசும் சாந்தம் அணிந்து பாதம் நோவ நடந்து வந்த அவரை 'எவ்வூரீர்?' என்று நான் வினவினேன். அவரே என் ஆவி அழியுமாறு செய்து விரைந்து என்னை நோக்கி விட்டு வேறோர் பதி புகுவார் போலக் காட்டி, 'வட்டணைகள் படநடந்து மாய வார்த்தைகள் பேசி வலம்புரத்தினுட் சென்று மன்னினார்' என்று சொல்லித் தலைவி வருந்துகின்றாள். இவ்வாறு அகப்பொருட் சுவையும், கற்பனைப் பாவனையும் கலந்து அற்புதமாக இப்பதிகம் அமைந்துள்ளது. இதன் பின்னர் திருவாப்பாடி, திருக்கோடிக்கா, திருக்கஞ்சனூர், திருக்கோழம்பம், திருவாவடுதுறை ஆகிய தலங்களுக்கும் சென்று வழிபடுகின்றார்.

திருப்பாத மலரைச் சூட்டியருளுதல்

'எம் பெருமானே, கொல்லுந் தொழிலையுடைய கூற்றுவன் என் உயிரை இவ்வுடம்பினின்று பிரித்து வருத்துவதற்கு முன்னமே நின்னுடைய செந்தாமரை போலும் அழகிய திருவடிகளை என் சென்னிமீது சூட்டி யருள்வாயாக' என்று திருநாவுக்கரசர் இறைஞ்ச இறைவன் 'நல்லூருக்கு வா' எனப் பணித்தருள்கிறார். திருநாவுக்கரசரும் நல்லூர் சென்று இறைவனை வணங்க இறைவனும் "நின் நினைப்பை முடிக்கின்றோம்" என உணர்த்தி அவர்தம் சென்னிமிசைத் தம் திருப்பாத மலரைச் சூட்டியருள்கின்றார். அப்பர் பெருமான் இறைவனின் பெருங்கருணைத் திறத்தை வியந்து,

"நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
....
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூர்எம் பெருமானார் நல்லவாறே"

என்று போற்றுகின்றார்.

மூன்றாவது சுற்று

திருநாவுக்கரசர் மூன்றாம் சுற்றைத் திருவலஞ்சுழியில் தொடங்கித் திருமருகல் என்னும் திருத்தலத்தில் நிறைவு செய்கின்றார்.

திருவலஞ்சுழி, குடமூக்கு, குடந்தை கீழ்க்கோட்டம், நாலூர் மயானம் ஆகிய தலங்களை வழிபட்டுத் திருவாரூர் சென்றடைகிறார்.

திருவாரூரில் வழிபடுதல்

தேவாரப் பாடல்கள் பெற்ற தலங்களுள் திருவாரூர் பல சிறப்பு களை ஒருங்கே பெற்றுள்ளது. இத்தலத்திற்கு அதிகமான பதிகங்கள் அருளியவர் அப்பர் பெருமான். இவர் இத்தலத்தை வழிபட்ட பதிகங்கள் 21. சரியைப் பணியை மேற்கொள்ளக்கூடிய ஒருவனுடைய கடமைகளை,

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுகுமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி
...."

என்று சுட்டியுள்ளார். இப்பாடலில் நாவுக்கரசர் தமது நெஞ்சைத் தனியே நிறுத்திச் சொல்வது சீவகோடிகள் அனைத்திற்கும் சொல்லும் பாவனையில் அமைந்துள்ளது.

திருஞானசம்பந்தர் சந்திப்பு

திருவாரூர்ப் பெருமானை வணங்கி அவரிடம் விடைபெற்றுக் கொண்டு திருப்புகலூரை அடைகின்றார். நாவுக்கரசரின் வருகையைக்

கேள்வியுற்ற சம்பந்தர் அடியார்களுடன் எதிர்கொண்டு வரவேற்கின்றார். இருவரும் ஒருவரையொருவர் வணங்கி மகிழ்கின்றனர். இச்சந்திப்பைச் சேக்கிழார் பெருமான்,

> "இரண்டுநில வின்கடல்கள் ஒன்றாகி
> அணைந்தனபோல் இசைந்த அன்றே"

என்று கூறி மகிழ்வர். அப்பர், ஞானசம்பந்தரிடம் "வீதிவிடங்கப் பெருமானது ஆதிரைத் திருநாளின் பெருமையினை இன்ன தன்மைத்து என்று 'முத்துவிதானம்' என்ற திருப்பதிகத்தால் விளக்குகின்றார். பின்னர் திருப்பெருவேளூர், திருவாஞ்சியம், திருவிளமர், திருகன்றாப்பூர், திருப்பயற்றூர் என்னும் தலங்களை வழிபட்டு உய்ந்தார்.

இவ்வாறு பல தலங்களையும் வழிபட்ட திருநாவுக்கரசர் சோழ நாட்டை மூன்று சுற்றுகளாகச் சுற்றி 190 திருத்தலங்களையும் வழிபட்டுப் பல திருப்பதிகங்கள் பாடியுள்ளமை இக்கட்டுரையின் மூலம் புலப்படுகின்றது.

12. நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும்

த. ஆறுமுகம், சென்னை.

திருஞானசம்பந்தர் வரலாற்றில் திருவீழிமிழலையில் இறைவன் அவருக்கு மாற்று குறைந்த பொற்காசு கொடுத்தார் என்று நீண்ட காலமாக வழங்கி வருகிறது. இந்த நிகழ்ச்சி திருஞானசம்பந்தர் வரலாற்றில் ஒரு களங்கமாக இருந்து வருவது என்னை நீண்டகாலமாக உறுத்தியும் வருத்தியும் வந்திருக்கிறது. என் போன்ற பலரையும் உறுத்தியிருப்பதாகத் தெரிகிறது. அந்தக் களங்கம் இயற்கையாக அமைந்துவிட்டதொன்றா அல்லது செயற்கையானதா என்றும் நீண்டகாலமாக சிந்தித்து வந்தேன். அது செயற்கையானதே என்ற கருத்து என்னிடம் வலுப்பெற்று அதற்கான விளக்கங்களும் புலப்படத் தொடங்கின. அதனை ஒரு கட்டுரையாக வரைந்தேன். ஏறக்குறைய முப்பது அறிஞர்களின் பார்வையில் வைத்தேன். பலரும் என் கருத்தைப் பொருத்தமானதென்று பாராட்டினார்கள். ஒரு சிலர் இக்கருத்தை ஏற்கத் தயங்கியவாறே பொருத்தமின்மையை எடுத்துக்காட்டுவதற்கும் தயங்குவது தெரிந்தது. பொருத்தம் என்று தெரிவித்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் திருமுறை மாமணி, திரு. ஜெ. மகாதேவன், தலைவர், சேக்கிழார் மன்றம், திரு. சிவ. ஆ. பக்தவச்சலம், சிவனடியார் திருக்கூட்டம், குடியேற்றம், திரு. ந. ரா. ஆடலரசு, தலைவர், தெய்வீக சித்தாந்த இலக்கிய மன்றம், திரு. சி. மாசிலாமணி, எம்.ஏ.எல்.எல்.பி. தலைவர், உலக சைவப் பேரவை இந்தியக்கிளை ஆவர்.

இக்கட்டுரை இன்னும் பலருடைய கருத்துக்குச் சென்றடைந்தால் நல்லது தானே என்றுபட்டது. எனவே இதனை வெளியிட எண்ணம் கொண்டேன். இக்கட்டுரையின் நோக்கம் திருஞானசம்பந்தர் மீது எப்படியோ படிந்துவிட்ட ஒரு சிறு தூசினைத் துடைத்து அவர் அருள் உருவைப் பளிச்சிடச் செய்ய வேண்டுவதே.

வாசியில்லாக் காசு - புதிய விளக்கம்

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருப்பயணமாகத் திருவீழிமிழலை வந்து சேர்ந்தனர். அங்கே அடியார்களுடன் சில நாட்கள் தங்கியிருந்தனர். அப்போது பெய்ய வேண்டிய மழை பொழிய வில்லை. ஆதலால் ஆறுகளில் நீரோட்டம் இல்லை. மக்களுக்கு உணவு

கிடைக்காததால் பெரும் பசி எங்கும் பரவிற்று. நாவரசும் ஞானசம்பந்தரும் தம் உடன் இருந்த அடியார்களுக்குக் கவலை நேருமோ என்று வருந்தினர்.

அப்போது இறைவன் அவ்விருவர் கனவிலும் தோன்றி ''பசிநோய் உங்களை அடையாது. எனினும் உங்கள் உடனிருக்கும் சிவனடியார்களின் வாட்டம் நீக்குவதற்காக நாள்தோறும் ஒவ்வொரு காசு கோவிலின் கிழக்குப் பீடம் மேற்குப் பீடத்தில் அளிப்போம். இந்த பஞ்சகாலம் நீங்கினால் காசும் நின்றுவிடும்'' என்றார்.

மறுநாள் திருக்கோவிலை வலம் வந்த திருஞானசம்பந்தர் கிழக்குப் பீடத்தில் காசு கண்டார். தொழுது அதனை எடுத்து ''சிவனடியார் நாள்தோறும் விருந்துண்ண வருக'' என்று பறை அறைவித்தார். அதன்படி அடியார் உணவு பெற்று வந்தனர். இவ்வாறே நாவரசும் படிக்காசு பெற்றுத் தம் அடியார்களுக்குத் தம்மடத்தில் உணவு அளித்து வந்தார்.

திருநாவுக்கரசர் மடத்தில் உரிய காலத்தில் அடியார்களுக்கு உணவு கிடைத்து வந்தது. திருஞானசம்பந்தர் மடத்தில் உணவு படைக்கக் காலம் தாழ்ந்தது. அவர் சமையற்காரரை அழைத்துக் காரணம் கேட்டார். அவர்கள் ''எங்களுக்குச் சரியாகத் தெரியவில்லை. உங்களுக்கு இறைவன் கொடுத்த காசுக்குக் கழிவுப்பணம் வாங்கிக் கொண்டு பண்டங்கள் கொடுத்திருக்கிறார்களாம். வாகீசர் பெற்ற காசுக்கு உடனே பண்டங்கள் கிடைத்து விடுகின்றன'' என்றனர்.

ஞானசம்பந்தர் சிந்தித்தார். ''ஒரு காசுக்குக் கழிவுப் பணம் கேட்கிறார்கள். மற்றொரு காசுக்குக் கழிவுப் பணம் கேட்பதில்லை என்றால் நாவரசர் உடல் தொண்டு செய்வதால் பெறும் காசு போலும், நாளை முதல் நான் பெறப்போகும் காசு, கழிவுக்கு உட்படாத காசாக இறைவனிடம் பாடிக்கேட்பேன்'' என்றார். அவ்வாறே மறுநாள் ''வாசி தீர்த்தருளும்'' என்று பாடி வேறு காசு பெற்றார். அந்தக் காசைக் கடைத் தெருவில் ''இந்தக் காசு சால நன்று'' என்று ஏற்றுக் கொண்டு பண்டங்கள் உடனே கொடுத்தார்கள்.

இந்தச் செய்தி பெரியபுராணத்தில் திருநாவுக்கரசர் வரலாற்றிலும் வருகிறது. இவ்வரலாறுகள் வழி அறியக் கிடப்பன :

1. இறைவன் அளித்த காசுகளில் ஏற்றத் தாழ்வு - வேறுபாடு இருந்தது. இறைவன் வேண்டுமென்றே இப்படிச் செய்திருக்கிறார்.

2. திருநாவுக்கரசருக்கு இந்தக் காசால் ஒரு குறைவும் இல்லை. குறைவு வரக்கூடாது என்று இறைவனே கருதியிருக்கிறார்.

3. ஞானசம்பந்தருக்குக் குறைவு நேர்ந்துவிட்டது. அவர் காசு உடனே மாறவில்லை. அதனைக் கடைத்தெருவில் ஆய்வு செய்து ஏற்றுக்

கொண்டதால் காலம் தாழ்ந்தது. அதனால் அடியார்களுக்கு உணவு கிடைப்பதில் காலம் தாழ்ந்தது.

4. இந்த ஏற்றத் தாழ்வுக்கு திருஞானசம்பந்தர், தாமே ஒரு காரணத்தை அமைத்துக் கொண்டார். அது, திருநாவுக்கரசர் உரைத் தொண்டுடன் உடல் தொண்டும் செய்கிறார். தமது தொண்டு உரைத் தொண்டு மட்டுமே என்பது பெரியபுராணத்தில் சேக்கிழார், இந்த வரலாற்றை எழுத அவருக்குக் கிடைத்த அகச்சான்று எது என்று பார்த்தால் ஞானசம்பந்தரின் அடியிற்கண்ட பாடலே,

"வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசில் மிழலையீர், ஏசல் இல்லையே"

இந்த நிகழ்ச்சி ஆராய்ச்சிக்கு உரியதாக, ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளத்தக்கதாக அமைந்திருக்கிறது.

வாசி என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் அகராதியில் உள்ளன. இந்த வரலாற்றுச் சூழ்நிலைக்கு ஏற்ப அச்சொல்லுக்குப் பொருந்தும் பொருட்கள்.

வாசி - அதிகம் - மிகுதி - (பெருமை)
வாசி - வேறுபாடு
வாசி - வட்டம்
வாசி - வட்டிக்கு மேல் அதிகமாகக் கழித்து எடுக்கும் கழிவுப் பணம்.

வாசி என்ற சொல்லுக்கு "வட்டிக்கு மேல் அதிகமாக கழித்து எடுக்கும் கழிவுப் பணம்" என்ற பொருளைப் பொருத்தியே இந்த வரலாற்று நிகழ்ச்சிக்குப் பலராலும் விளக்கம் சொல்லப்பட்டு வருகிறது.

வாசி என்ற சொல்லுக்குச் சொற்பொருள் வேறுபாடு, அதிகம், வட்டம், சொற்றொடர்ப் பொருள் "வட்டிக்குமேல்..... பணம்" என்பது. வட்டம் என்ற சொல்லுக்கு முழுமை என்ற பொருளும் வழங்குகிறது. இந்த நிலையில் வாசி என்ற சொல்லுக்கு வேறுபாடு, மிகுதி என்ற பொருட்களைப் பொருத்தி இந்த நிகழ்ச்சியை ஆராய்வதற்கு நல்ல வாய்ப்பும் பொருத்தமும் காணப்படுகின்றன.

திருமடத்தில் அமுது சமைப்போர் கூற்றாக வருவது: "படிக்காசு... கொண்டு ..... சென்றால் வாசிபடவேண்டும் என்பார்" என்பது, இதற்கு "வேறுபாடு நீங்க வேண்டும்" என்று பொருள் கொள்ளலாம். அன்றாடம் புழக்கத்தில் இருந்த காசுக்கும் இறைவன் ஞானசம்பந்தர்க்குக் கொடுத்த காசுக்கும் வேறுபாடு தெரிகிறது. அது நீங்கவேண்டும் என்பது பொருள். திருஞானசம்பந்தர் சிந்தனையாக வருவது, "ஒரு காசு வாசிபட மற்றக்

காசு நன்றாக வாசிபடாது ஒழிவான்'' என்பது. இதற்குப் பொருள்: ''ஒரு காசு வேறுபடுகிறது. மற்ற காசு வேறுபடவுமில்லை. நன்றாகவும் இருக்கிறது'' என்பது. அடுத்து ''வாசி தீரப்பாடுவன்'' என்பதற்கும் ''வேறுபாடு நீங்கப்பாடுவன்'' என்று பொருள் கொள்வது பொருத்தமாக அமைகிறது.

இவற்றை வேறு வகையாக சிந்திப்போம். சிவபெருமான் உள்ளபடியே திருநாவுக்கரசரை உயர்த்தித் திருஞானசம்பந்தரைத் தாழ்த்த எண்ணம் கொண்டாரா? அல்லது நாவரசர் பெருமையை ஞானசம்பந்தர்க்கும் அவர் அடியார்களுக்கும் - நமக்கும் உணர்த்தக் கருதினாரா? அல்லது சேக்கிழார்க்கு இப்படி ஒரு விளக்கம் தருவது கருத்தா? இவை ஆராயத்தக்கன.

ஞானசம்பந்தர் சிவபெருமானுக்கு மகன் முறை என்பதும் வாகீசர் தொண்டர் முறை என்பதும் வழக்கில் உள்ளனவே. ஒரு தலைவர் தம் மகனைவிடத் தம் தொண்டரைப் பெரிதும் போற்றுவார் என்பது அரிதாக நிகழ்வதொன்று. அதாவது மகனிடம் குறையிருந்தால் அல்லது மகனைவிடத் தொண்டர் திறம் மிகுந்திருந்தால் தொண்டரைப் பாராட்டலாம் என்பது. அப்படி ஞானசம்பந்தர் வரலாற்றில் குற்றம் குறைக்கு இடமில்லை. சம்பந்தர் சிறுவராக இருந்த போதே இறைவன் இவருக்குப் பொன் தாளம் கொடுத்தார். பிறகு முத்துச் சிவிகை முத்துச் சின்னம் முத்துக்குடை கொடுத்தார். அதற்கும் பிறகு முத்துப்பந்தர் அளித்தார். இவையனைத்தும் அவர் கேளாமலே இறைவன் தந்தார். திருவீழிமிழலையில் மட்டும் மாற்றுக் குறைந்த காசு கொடுத்து அவரை வருந்த வைத்தார் என்று கருதுமாறு இல்லை.

மற்று திருநாவுக்கரசரோ தம் வாழ்வில் எவ்வளவோ துன்பங்களுக்கு ஆட்பட்டவர், உணவு கிடைக்காமல் ஒரு முறை வருந்தியபோது இறைவனே கட்டுச்சோறு கொடுக்க வேண்டிய நிலையில் இருந்தார். அப்படிப்பட்ட எளிய நிலையில் இருந்தவரை இந்த வீழிமிழலை நிகழ்ச்சியினால் மட்டும் உயர்த்தத் தேவையில்லையே.

திருநாவுக்கரசர் கைத்தொண்டு செய்தார். அதைச் சிறப்பிக்க மாற்றுக் குறையாத காசு இறைவன் கொடுத்தார் என்று சொல்லுவதானால், திருஞானசம்பந்தர் கைத்தொண்டைப் போற்றாதவரா? திருநீலகண்டப் பதிகத்தில் ''கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றதும் நாமடியோம், செய்வினை வந்தெமை தீண்டப்பெறா திருநீலகண்டம்'' என்று தம் அடியார்களுக்குக் கைவினையின் சிறப்பை அறிவுறுத்தி இருக்கிறாரே.

காசுகளில் வேறுபாடு எப்படி இருந்திருக்கக் கூடும்? ஒரு உய்த்துணர்வு. தொண்டராக இருந்த அரசுக்கு அக்காலத்தில் புழக்கத்தில் இருந்த ஒரு

காசாகக் கொடுத்தார். சம்பந்தருக்கு, மகன் முறையானதால் புத்தம் புதுக்காசு ஒன்றைப் படைத்துக் கொடுக்க எண்ணியிருக்க வேண்டும். இறைவன் படைத்த புதுக்காசில் என்ன புதுமை? ஒரு பக்கம் இடபம் மறுபக்கம் சூலம் பொறித்திருக்கலாம். நாவரசர் பெற்ற காசில் அக்கால சோழ அரசன் பெயர் ஒரு புறம், புலிச் சின்னம் மறுபுறம் பொறித்திருக்கலாம்.

காசு வேறுபாடு பற்றிய திருநாவுக்கரசர் வரலாற்றில் வரும் பாடல் இவ்வாராய்ச்சிக்குப் பெரிதும் துணை செய்வதாகும். அப்பாடல்,

"ஈசர் மிழலை இறையவர் பால் இமயப்பாவை திருமுலைப்பால்
தேசம் உய்ய உண்டவர்தாம் திருமா மகனார் ஆதலினால்
காசு வாசியுடன் பெற்றார், கைத் தொண்டாகும் படிமையினால்
வாசி இல்லாக்காசு பெற்றுவந்தார் வாகீசர்."

இங்கே சேக்கிழார் ஞானசம்பந்தருக்கு பயன்படுத்திய அடைமொழித் தொடர்கள்

ஈசர் மிழலை இறையவர் பால்
இமயப்பாவை திருமுலைப் பால்
தேசம் உய்ய உண்டவர்
திருமா மகனார்

என்பதாம். இறைவன் மாற்றுக் குறைந்த காசு கொடுத்திருப்பாரானால் இந்த அடைமொழிகளுக்குப் பயனில்லாமற் போகும். வாசி என்ற சொல்லுக்கு மிகுதி, பெருமை என்று பொருள் கொண்டால் மட்டுமே இந்த அடைமொழிகளுக்குப் பொருத்தமிருக்கும்.

ஈசர் மிழலை இறையவர் பால் இமயப் பாவை திருமுலைப்பால் தேசம் உய்ய உண்டது குற்றமா? அல்லது இறைவனுக்கு திருமாமகனார் ஆனது குற்றமா? அவற்றிற்கு தண்டனையாக மாற்று குறைந்த காசு பெற்றாரா? இல்லையே!

திருநாவுக்கரசர் கைத் தொண்டாகும் படிமையினால் வாசியில்லாக் காசு (வழக்கத்தில் புழக்கத்தில் இருந்த புதுமையோ தனிப்பெருமையோ வேறுபாடோ இல்லாத காசு) பெற்று வந்தார். ஞானசம்பந்தர் திருமாமகனாரானதால் மதிப்பில் மிகுந்த காசு பெற்றார் என்பதே இப்பாடலுக்குப் பொருத்தமான பொருள்.

சேக்கிழார் மாமகனார் என்று திருஞானசம்பந்தரை ஏன் குறிப்பிட வேண்டும்? எண்ணிப் பார்ப்போம், ஈசர்க்கு மகனார் பலர். பிள்ளையார், முருகன், சண்டீசர், வீரபத்திரர் முதலியோர், திருஞானசம்பந்தரை இவர் களினும் மேம்பட்டவராக சேக்கிழார் கருதியிருக்கிறார் போலும்! மாமகனார் என்றார். ஈசர்க்கு மகன் என்பது பெரியபுராணத்தில் பல இடங்களில் வருகின்றது.

இருவருக்கும் தெரிவரியார் திருமகனார்	பாடல்	996
இறைவர் திருமைந்தர்	பாடல்	540
ஆறு சூடினார் திருமகனார்	பாடல்	1074
வானவர் நாயகனார் மகனார்	பாடல்	314
நஞ்சணிகண்டர்தம் திருமகனார்	பாடல்	655
செய்யமேனியர் திருமகனார்	பாடல்	707
அண்டர்பிரான் மகனார்	பாடல்	236 } நாவரசர் புராணம்
புரமெரித்தார் மகனார்	பாடல்	401 } நாவரசர் புராணம்

இன்னும் பல தொடர்கள் விரிக்கப் பெருகும். இப்படிப்பட்ட தம் மகனார்க்கு இறைவன் தம் தொண்டரைக் காட்டினும் மதிப்பு குறைந்த காசு தந்தார் என்பது பொருந்துமா? திருஞானசம்பந்தர் மாமகனார் ஆனதால் காசு வாசியுடன் - வேறுபாட்டுடன் - பெருமையுடன் பெற்றார். கைத்தொண்டாகும் படிமையினால் வாசியில்லாக் காசு - புழக்கத்தில் இருந்த காசு - வேறுபாடோ - தனிச்சிறப்போ இல்லாத காசு நாவரசர் பெற்றோர் என்பதே நன்கு பொருந்துவது.

சோழப் பேரரசில் மாற்றுக் குறைந்த காசு மாற்றுக் குறையாத காசு என இருவகை காசுகள் புழக்கத்தில் இருந்தனவா என்பதும் சிந்திக்கத்தக்கது.

இங்கே இறைவன் நினைத்தது ஒன்று. நிகழ்ந்தது வேறொன்று. ஞானசம்பந்தராகிய தம் மகனாரை மகிழ்விக்க - சிறப்பிக்க செய்த செயல் வேறுவகையாகிவிட்டது. பொதுவாகக் கடைத்தெருவில் ஒரு புதுக்காசு புழக்கத்துக்கு வந்தால் உடனே ஏற்கமாட்டார்கள். தயங்குவார்கள். திருப்பித் திருப்பிப் பார்ப்பார்கள். அடுத்தவரிடம் காட்டுவார்கள். அவர்கள் ஆமாம் ''புதுக்காசு இது'' என்றால் வாங்கிக் கொள்வார்கள். அப்போது கூட சிலர் ''பழைய காசு இருந்தால் கொடுத்துவிடுங்கள்'' என்பர், இவை எல்லாம் இன்றும் நாம் காணக்கூடியவை.

ஞானசம்பந்தர் பெற்ற காசு புதுமையாக இருந்ததால் அக்காசு அவரே படைத்துக் கொடுத்தாரோ என்று ஆவண வீதியில் தயக்கம் காட்ட வாய்ப்பிருந்தது. காரணம் ஞானசம்பந்தர் பல அற்புதங்கள் செய்தவர். இரசவாதத்தால் காசு செய்துவிட்டாரோ என்று வணிகர் ஐயம் கொள்வது இயல்பு தானே! எனவே இறைவன் கொடுத்த புதுக்காசு பலர் பார்வைக்குச் சென்று முடிவில் ஏற்றுக் கொள்ளப்பட்டதால் காலம் தாழ்ந்தது என்று கொள்ள இடமிருக்கிறது.

திருஞானசம்பந்தர் பெற்ற காசு உள்ளபடியே மாற்றுக் குறைந்திருந்தால் என்ன நேர்ந்திருக்க வேண்டும்? திருநாவுக்கரசருக்குக் கொடுத்த காசுக்கு எவ்வளவு பண்டங்கள் கிடைத்தனவோ அவற்றை விட குறைவாகவே

பண்டங்கள் கிடைத்திருக்கும். அதனால் பல அடியார்களுக்கு உணவு கிடைக்காமல் போயிருக்கும். ஆனால் அப்படி வரலாறு சொல்ல வில்லையே. பண்டங்கள் பெறுவதில் காலம் தாழ்ந்தது அவ்வளவே. புதுமையான காசு இதுவரை வெளிவராத காசு என்பதால் அதைத் தமக்கே உரிமையாக்கிக் கொள்ள ஆவண வீதியில் போட்டியாலும் காலம் தாழலாம். மேற்கூறியவை உய்த்துணர்வு முறையால் பார்த்தவை. இனி அகச்சான்று பார்ப்போம், திருஞானசம்பந்தர் பாடிய பதிகத்தின் இரண்டாவது பாடல்:

"இறைவ ராயினீர் மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை, முறைமை நல்குமே"

கறை - மாசு, கருமை நிறம். பலர் கையாண்டதால் கறைபடிந்த காசு - கறைகொள் காசு. "புதிய காசு வேண்டா. அதனால் ஆவண வீதியில் காலம் தாழ்கிறது. எனவே கறை கொள் காசு கொடுங்கள். திருநாவுக்கரசருக்குக் கொடுத்த அதே முறையில் எனக்கும் கொடுங்கள்" என்று ஞானசம்பந்தர் கேட்டார் என்று கொள்ளும்படி இருக்கிறது. மற்றொரு அகச்சான்று திருநாவுக்கரசர் வாய்மூர் பாடல்:

"பாடிப்பெற்ற பரிசில் பழங்காசு
வாடிவாட்டம் தவிர்ப்பார் அவரைப் போல்
தேடிக் கொண்டு திருவாய் மூர்க்கே எனா
ஓடிப் போந்திங்கே ஒளித்தவாறென் கொலோ"

"பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு" என்ற தொடர் தரும் செய்தி என்ன? பழங்காசினைப் பாடிப் பெறவேண்டிய நிலை யாருக்கு? ஏன்?

திருஞானசம்பந்தரோ, திருநாவுக்கரசரோ, திருவீழிமிழலையில் பஞ்சம் வந்தபோது படிக்காசு வேண்டும் என்று இறைவனிடம் முறையிட்டுப் பாடவில்லை, பாடாமலே இறைவன் காசு கொடுத்தார். திருநாவுக்கரசருக்குப் பழைய காசாகவே கொடுத்துவிட்டதால் மேல் விளைவு ஒன்றுமில்லை. திருஞானசம்பந்தர் புதிய காசு பெற்று, அது மாறுவதில் ஆவண வீதியில், காலம் தாழ்ந்ததால், பழைய காசைப் பாடிப் பெற்றார். புதிய காசு பெற்றவர், "அது வேண்டாம் பழைய காசு கொடுங்கள்" என்று பாடிப் பெறுகிறாரே என்ற இரக்கக் குறிப்பும் இதில் தெரிகிறது.

முடிவாக, திருஞானசம்பந்தர் முதலில் பெற்ற காசு, புதிய காசு, புழக்கத்தில் இல்லாத காசு இறைவன் படைத்துக் கொடுத்த காசு மாற்றுக் குறைந்த காசல்ல - என்பது பொருத்தமான விளக்கமாகும்.

மதமாற்றத்தைத் தடுத்த நாவுக்கரசர்

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியோடு வானாளத் தருவரேனும்

மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லராகில்
அங்கமெலாம் குறைந்து அழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே!

இந்தத் **திருநாவுக்கரசர்** பாடலை வைத்துச் சில புலவர்கள், இறை வழிபாடு செய்பவர் புலால் உண்டால் தவறில்லை என்று கூறி வருகிறார்கள். உள்ளபடியே திருநாவுக்கரசர் புலால் உண்பதைத் தவறாகக் கருதவில்லையா? அல்லது ஏன் அப்படிப் பாடிவிட்டார் என்பவை ஆராயத்தக்கன.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் காலத்திலும் அதற்கு முன்னரும் தமிழகத்தில் தீண்டாமை இருந்து வந்தது. தீண்டத்தகாதோர் என்போர் கோவிலுக்குள் சென்று வழிபட முடியாநிலையும் இருந்தது.

அக்காலத்தில் சமணர் செல்வாக்கும் ஓங்கி இருந்தது. சமணர், தீண்டத்தகாதவரைத் தம் சமயத்தில் சேர்த்துக் கொண்டால் தம் சமய மக்கள் தொகை மிகுந்து, தம்சமயமும் வலுப்பெறும் என்று கருதினர். அப்படி பலரை சமணர்களாக மாற்றி விட்டனர் என்று தெரிகிறது.

சமணர் பாடல்களில் இரண்டில் இந்த கருத்துக்களுக்குச் சான்றுகள் உள்ளன.

ஒன்று ''**அருங்கலச்செப்பு**'' என்ற நூலுள் உள்ளது. அப்பாடல்:

''பறையன் மகன் எனினும் காட்சி உடையான்
இறைவன் என்று உணரற் பாற்று''

இதன் பொருள் : தாழ்வாகக் கருதப்படுவானாயினும் நற்காட்சி உடையவன் ஆனால், தலைமகன் என உணரப்படுவான். (நற்காட்சி - உண்மைப் பொருளை ஆராய்ந்து தெளிவடைதல்)

இந்தப் பாடலை இயற்றியவர் வரலாறும் பெயரும் தெரியவில்லை. ஆனால் இவர் காலம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு என்று கூறப்படுகிறது. இந்தப் பாடல் வடமொழியில் உள்ள நூலின் மொழிபெயர்ப்பாம். வடமொழியில் இந்நூலின் பெயர் ''**இரத்தின கரண்டகம்**'' (இரத்தின கரண்டக சிராவகாசாரம்) (விலை உயர்ந்த இரத்தினங்களால் ஆன அணிகலன்களை வைக்கும் பேழை) (தமிழில் **அருங்கலச் செப்பு**) இதன் ஆசிரியர் சமந்தபத்திர ஆசாரியர் என்னும் சமண முனிவர். இவர் கி.பி. 6-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று முனைவர் சதித்சந்திர வித்யாபூஷண் என்பவரும், கி.பி. 2-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்

என்று இதன் உரையாசிரியர் கவிபூஷண் அமுதலால் ஜெயின் என்பவரும் கூறி இருக்கின்றனர்.

எப்படியோ இவ்வாசிரியர் திருநாவுக்கரசர் காலத்தவர் அல்லது அவருக்கும் முற்பட்டவர் என்று தெரிகிறது.

மற்ற ஒரு பாடல் பிற்காலத்தது. "திருநூற்று அந்தாதி" என்ற நூலின் 28-வது பாடல், இந்நூலை இயற்றியவர் அவிரோதி ஆழ்வார் (வைணவராக இருந்து சமணராக மாறியிருக்கலாம்)

"அந்தர மேலோரு மந்தரம் வந்தென அம்மலர் மேல்
வந்த பிரானடிக் கன்பிலராயின் மறையவரே
நிந்தர்கள் சாதியில் நீசர்கண்டீர் அந்த நீசரும்
சுந்தர நேசர்களாயின் விண்ணோரினும் சுத்தர்களே"

பொருள் : மலர் மேல் வந்த பிரானாகிய அருக தேவருக்கு அன்பில்லாதவர் மறையவரானாலும் தாழ்ந்தவர்; நிந்தனைக்குரியவர். தாழ்ந்தவராயிருந்து அருக தேவருக்கு நேசரானால் வானோரைவிட தூய்மையானவர்.

இப்படியெல்லாம் கருத்துக்களைப் பரப்பி சமணர் தீண்டத்தகாத வரைத் தம் சமயத்துக்கு மாற்றிவிட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

இத்தகைய சமய மாற்றத்தைத் தடுக்கவே திருநாவுக்கரசரும் "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கை வார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்று பாடித் தீண்டத்தகாதவரைத் தழுவிக் கொண்டார் என்று தெரிகிறது.

{ இதுவரை "அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்ற தலைப்பில் வெளியிட்ட திருக்கோயில் திங்கள் இதழுக்கு (ஏப்ரல்-2002) நன்றி }

திருநாவுக்கரசரைப் பின்பற்றி நம்மாழ்வாரும் வைணவர்கள் சமண சமயத்தில் சேராவண்ணம் தடுக்க பின்வருமாறு பாடியுள்ளார் என்பதும் பொருத்தமாகும்.

குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழ் இழிந்து எத்தனை
நலந்தான் இலாத சண்டாள சண்டாளர்கள் ஆகிலும்
வலந்தாங்கு சக்கரத்து அண்ணல் மணி வண்ணற்கு ஆளென்று உள்
கலந்தார் அடியார்தம் அடியார் எம் அடிகளே.

திருநாவுக்கரசர், அக்காலத் தீண்டத்தகாதவர் மதமாற்றத்தைத் தடுக்கப் பாடிய பாடலை வைத்து மற்றவர்கள் புலால் உண்ணலாம் என்று கொள்வது பொருந்தாது. அதன் பொருட்டே புலால் உண்பவர்கள்

துன்பத்தில் உழல்வார்கள் என்பதைத் தவறாமல் குறிப்பிட்டிருக்கிறார். ''ஆவுரித்துத்தின்றுஉழலும்'' என்பது அத்தொடர்.

சிவபெருமானுக்கோ, சமய ஆசிரியர்களுக்கோ அவர்கள் வழிநின்ற சிவனடியார்களுக்கோ, மக்களில் பிறப்பால் தாழ்ந்தவர், உயர்ந்தவர் என்று வேறுபடுத்திப் பார்க்கும் வழக்கம் இல்லை என்று அறுபத்துமூவர் வரலாற்றைக் கொண்டு துணியலாம்.

1. திருநீலகண்ட யாழ்ப்பாணர் அக்காலத்தில் தாழ்த்தப்பட்டவராகக் கருதப்பட்டவர். அவரது சிவநேயத்தைக் கண்ட அந்தணரான திருஞானசம்பந்தர் தம் அருகிலேயே அவரையும் அவர் மனைவி யாரையும் யாழ்வாசிப்பராகவும் வாய்ப்பாட்டு பாடுபவராகவும் தமக்குத் துணையாக வைத்துக் கொண்டார்.

ஒரு நாள் இரவு அந்தணரான திருநீலநக்கர் இல்லத்தில் அவர்கள் தங்க நேர்ந்தபோது யாழ்ப்பாணருக்கும் அவர் மனைவியாருக்கும் அவர்கள் சிவநேய உயர்வு கருதிச் சிறந்த இடமாக அவ்வீட்டு வேள்விமேடை அருகில் தங்க இடமளித்தனர் என்றும் அதனால் அணையா வேள்வித் தீ வழக்கத்தினும் மிகுதியாக சுடர்விட்டு ஒளிர்ந்தது என்றும் திருத்தொண்டர் புராணத்தில் சொல்லப்பட்டுள்ளது.

1857 நின்ற அன்பரை நீலகண் டப்பெரும் பாணர்க்கு
இன்று தங்க ஓர் இடம் கொடுத் தருளுவீர் என்ன
நன்றும் இன்புற்று நடுமனை வேதியின் பாங்கர்ச்
சென்று மற்றவர்க்கு இடங்கொடுத் தனர்திரு மறையோர்.

1858 ஆங்கு வேதியில் அறாதசெந் தீவலம் சுழிவுற்று
ஓங்கி முன்னையில் ஒருபடித் தன்றியே ஒளிரத்
தாங்கு நூலவர் மகிழ்வுறச் சகோடயாழ்த் தலைவர்
பாங்கு பாணியா ருடன் அருளாற்பள்ளி கொண்டார்.

திருஞானசம்பந்தர் யாழ்ப்பாணரை ஐயரே என்று அழைத்துப் பேசியமையும் குறிப்பிடத்தக்கது.

2031 அளவிலா மகிழ்ச்சியினார் தமைநோக்கி *ஐயர்* நீர்
உளமகிழ இங்கணைந்த உறுதியுடை யோம்என்றே
இளநிலா நகைமுகிழ்ப்ப இசைத்தவரை உடன் கொண்டு
களநிலவு நஞ்சணிந்தார் பாலணையும் கவுணியானார்.

2348

வீக்குநரம் புடையாழினால் விளைந்த திது என்றங்கு அதனைப்போக்கி
ஓக்குதலும் தடுத்தருளி *ஐயரே* உற்ற இசை அளவினால் நீர்

ஆக்கிய இக்கருவியினைத் தாரும் என வாங்கிக்கொண் டவனிசெய்த
பாக்கியத்தின் மெய்வடிவாம் பாலாறாவாயர் பணித் தருளுகின்றார்.

2349

*ஐயர்*நீர் யாழ் இதனை முரிக்குமதென் ஆளுடையாளுடைனே கூடச்
செய்ய சடையார் அளித்த திருவருளின் பெருமை எலாம் தெரியநம்பால்
எய்திய இக் கருவியினில் அளவுபடு மோநந்தம் இயல்புக் கேற்ப
வையகத்தோர் அறிவுற இக்கருவி அளவையின் இயற்றல் வழக்கே
என்றார்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் மதுரைக் கோவில் வாயிலில் நின்றுபாடக் கண்ட சிவபெருமான் அவரைத் தம் சந்நிதி முன் அழைத்து வருமாறு தம் அடியார் கனவில் சொல்ல அவரை அழைத்து வந்தனர். சந்நிதியில் பாடும்போது அவர் யாழுக்குக் குளிர்ச்சி தாக்காதிருக்கப் பொன்பீடத்தின் மீதிருந்து பாடச் செய்தார்.

4217 மற்றவர் கருவிப்பாடல் மதுரைநீ டால வாயில்
கொற்றவன் திருவுள்ளத்துக் கொண்டுதன் தொண்டர்க்கெல்லாம்
அற்றை நாள் கனவில் ஏவ அருட்பெரும் பாணனாரைத்
தெற்றினார் புரங்கள் செற்றார் திருமுன்பு கொண்டு புக்கார்.

4220 அந்தரத்தெழுந்த ஓசை அன்பினில் பாணர்பாடும்
சந்தயாழ் தரையில் சீதத் தாக்கல் வீக்கழியும் என்று
சுந்தரப் பலகை முன்னர் இடும் எனத் தொண்டர் இட்டார்
செந்தமிழ்ப் யாழ்ப் பாணனாரும் திருவருள் பெற்றுச் சேர்ந்தார்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் திருவாரூர் சென்றபோது வாயிலில் நின்றுபாட, அவர் மூலத்தானத்தில் வந்து பாடவேண்டும் என்று விரும்பி இறைவன் அவர் வருவதற்காக சிறப்பு வாயில் ஒன்று ஏற்பாடு செய்தார்.

4222 கோயில் வாயில் முன்னடைந்து கூற்றம் செற்ற பெருந்திறலும்
தாயின் நல்ல பெருங்கருணை அடியார்க்களிக்கும் தண்ணளியும்
ஏயும் கருவியில்தொடுத்து அங்கு இட்டுப் பாடக் கேட்டு அங்கண்
வாயில் வேறு வடதிசையில் வகுப்பப்புகுந்து வணங்கினார்.

2. திருநாளைப்போவாரும் (நந்தனார்) அக்காலத்தில் தீண்டத் தகாதவராகக் கருதப்பட்டார். சிவபெருமான் அவரது சிவநேயத்தைக் கண்டு அவருக்காகத் திருப்புன்கூரில் நந்தியை விலகச் செய்து காட்சி தந்தார்.

1057 சீரேறும் இசைபாடத் திருத்தொண்டர் திருவாயில்
நேரேகும் பிடவேண்டும் என நினைந்தார்க் கதுநேர்வார்

காரேறும் எயில் புன்கூர்க் கண்ணுதலார் திருமுன்பு
போரேற்றை விலங்க அருள் புரிந்தருளிப் புலப்படுத்தார்.

சிதம்பரத் தலத்தில் நந்தனாரைக் கோவிலுக்குள் அழைத்து வரும்படி தில்லைவாழ் அந்தணர்க்கு இறைவன் கட்டளையிட அவர்கள் திருநாளைப்போவாரை 'ஐயரே' என்று அழைத்துக் கோயிலுக்குள் இட்டுச் சென்றனர்.

1070 *ஐயரே* அம்பலவர் அருளால் இப்பொழுது அணைந்தோம்
வெய்ய அழல் அமைத்து உமக்குத் தரவேண்டி எனவிளம்ப
நையுமனத் திருத்தொண்டர் நான் உய்ந்தேன் எனத்தொழுதார்
தெய்வமறை முனிவர்களும் தீயமைத்த படிமொழிந்தார்.

3. திருநாவுக்கரசர் வரலாற்றில் அந்தணரில் மேம்பட்ட அப்பூதிஅடிகள் வேளாளரான அவரைத் திருவடிப் பூசை செய்து அந்த நீரைத் தாமும் தம் குடும்பத்தார் மீதும் தெளித்து வாயிலிட்டும் உட்கொண்டார்.

1802 மனைவியர் உடன் மக்கள் மற்றுள்ள சுற்றத்தார்
அனைவரையும் கொண்டிறைஞ்சி ஆராத காதலுடன்
முனைவரை உள்ளெழுந்தருளு வித்து அவர்தாள் முன் விளக்கும்
புனைமலர் நீர்தங்கள் மேல் தெளித்து உள்ளும்பூரித்தார்

4. கழறிற்றறிவார் நாயனார் வரலாற்றில் அரசரான சேரமான் யானை மீதேறி நகர் வலம் வந்த போது, மழையில் நனைந்ததால் உவர் மண்ணெல்லாம் கரைந்து திருநீறாகக் காட்சியளிக்கும்படி எதிரே வந்த வண்ணானைச் சிவனடியாராகக் கருதி யானையிலிருந்து இறங்கி வந்து வழிபட்டார்.

தான் அடிமை வண்ணான் என்று அவன் சொல்லியும் தான் அடிச்சேரன் என்று மறுமொழி கூறி வண்ணானை அமைதி பெறச் செய்தார்.

3765 மழையில் கரைந்தங்கு உவர்ஊறி மேனிவெளுத்த வடிவினார்
உழையில் பொலிந்த திருக்கரத்தார் அடியார் வேடம் என்றுணர்ந்தே
இழையில் சிறந்த ஓடைநுதல் யானைக் கழுத்தின் நின்றிழிந்து
விழையில் பெருங்காதலினால் விரைந்து சென்று கை தொழுதார்.

3766 சேரர்பெருமான் தொழக் கண்டு சிந்தைக் கலங்கி முன் வணங்கி
யார் என்று அடியேனைக் கொண்டது அடியேன் அடி வண்ணான் என்னச்
சேரர் பிரானும் அடிச்சேரன் அடியேன் என்று திருநீற்றின்
வாரவேட நினைப் பித்தீர் வருந்தாது ஏகும் என மொழிந்தார்

எனவே சைவர்கள் பிறப்பால் யாரையும் உயர்வாகவோ தாழ்வாகவோ கருதக்கூடாது. தகுதிக்கேற்ப மதிப்பளிக்க வேண்டும்.

13. திருநாவுக்கரசரும் பெரியபுராணமும்

பூ. இந்துமதி, பல்லடம்.

பெரியபுராணத்தில் இடம் பெறும் அறுபத்தி மூன்று நாயன்மாரும் ஏதோ ஒரு வகையான தொண்டில் ஈடுபட்டனர் என்று கூறலாம். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் குறிக்கோள்களுடன் வாழ்தல் வேண்டும். திருநாவுக்கரசு நாயனார் வாழ்வு குறிக்கோளுடன் கூடிய தாகும். பெரியபுராணத்துள் திருநாவுக்கரசு நாயனார் புராணம் வழி வெளிப்படும் நாவரசரின் மனிதப் பண்புகளை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அறச்செயல்கள்

திருநாவுக்கரசரின் சமுதாயத் தொண்டுகள் இளமையிலேயே தொடங்குகின்றது எனலாம். உலக வாழ்வு நிலையாமை உடையது என்பதை உணர்ந்து அறச் செயல்களைச் செய்கின்றார். உலகத்தில் புகழ் விளங்கும்படி, செல்வத்தைப் பிறருக்குத் தந்தும், அறச்சாலைகளையும், தண்ணீர் பந்தல்களையும் அமைத்துச் சமுதாயத் தொண்டாற்றியுள்ளார் நாவரசர்.

பூஞ்சோலைகளை வளர்த்தும், குளங்களைத் தோண்டியும் அறச் செயல்களைச் செய்கின்றார். இதனைப் பின்வரும் அடிகளால் அறியலாம்.

''கா வளர்த்தும் குளந்தொட்டும் கடப்பாடு வழுவாமல்
மேவினருக்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்''

''நீரின்றி அமையாது உலகு'' என்பதற்கேற்ப உயிர்கள் வாழ்வதற்குரிய நீரின் தேவையை உணர்ந்து குளங்கள் தோண்டி அறச்செயல்கள் புரிந்துள்ளார், பூஞ்சோலைகளை வளர்த்துச் சுற்றுப்புறத்தையும், இயற்கையையும் காத்துச் சமுதாயப் பணி ஆற்றி இருப்பது புலப்படுகிறது.

நாவரசர் சமண சமயத்தில் இருந்து சூலை நோய் ஏற்பட்டுச் சைவ நெறிக்கு மீண்டபின் இறைத் தொண்டில் ஈடுபடுகின்றார். சைவ நெறியில் திருநாவுக்கரசர் மனம், சொல், உடலால் பொருந்திய சிவப்பணியைச் செய்கின்றார். அதற்கு ஏற்றவாறு சிவச் சின்னங்களான திருநீற்றையும், உருத்திராக்கக் கண்டிகையும் பூண்டார் என்பதை

அறிய முடிகிறது. நாவரசர் மெய்யாலும், வாக்காலும் இறைவனுக்குத் திருப்பணிகளைச் செய்கின்றார். இதனைப் பின்வரும் பாடல் வரியால் அறியலாம்.

"கையார்ந்த திருத்தொண்டு கழியமிகிற் காதலொடுந்
செய்யாநின் றேயெல்லாச் செந்தமிழ் மாலையும் பாடி"

என்பதில் இருந்து மனம், சொல், செயல் ஆகிய ஒருமைப்பாட்டு உணர்வோடு உழவாரப் படைமூலம் கைத்தொண்டு செய்ததையும், மிகுந்த காதலோடு இறைவன் மீது செந்தமிழ்ப் பாடல்கள் பாடிய உண்மைத் தன்மையையும் அறிய முடிகிறது.

அஞ்சாமை

நாவரசர் பெருமானுக்குப் பொறிபுலன்களை வெல்ல உதவியாக இருப்பது திருவீரட்டானத்து இறைவரின் திருவடிப்பற்றே ஆகும். அகப்பகை ஆகிய பற்றை வென்றவர்க்கு அச்சம் என்பது கனவிலும் வராது. இந்த அடிப்படையில் வீரட்டானத்து அடியவராகிய தமக்கு 'அஞ்சுவது யாதொன்றுமில்லை' என்று உறுதியுடன் பாடுகின்றார். இதனைப் பின்வரும் வரிகள் தெளிவுறுத்துகின்றன.

"வெஞ்சுடர் மூவிலைச் சூல வீரட்டர் தம் அடியோம் நாம்
அஞ்சுவதில்லை என்றென்றே அருந்தமிழ் பாடி உறைந்தார்"

நாவரசர் சமணத்தில் இருந்து சைவத்திற்கு மீண்டபொழுது சமணர் தந்த புறத்துன்பங்களை வென்று புறப்பகையை வென்றவராய் தம்மை நிலைநாட்டிக் கொண்டார். இறைவன் நாவரசரின் அகத்தைச் சோதிக்க அரம்பையர்களால் துன்புறுத்திய காலத்து 'அகப்பகையை' வென்று அகப் பண்பை நிலைநாட்டிக் கொண்டார். அவ்வாறு 'அகப்பகை' மற்றும் 'புறப்பகை' வென்றவர் யாவருக்கும் அஞ்சுவது இல்லை என்கிறார். மன அமைதி தேடிய நாவுக்கரசருக்குச் சைவ நெறியில் நின்றபின் மன அமைதி, மனத்திடம், மனவலிமை ஆகியவை கிடைத்து விட்டன என்பது புலப்படுகிறது.

நட்பு பாராட்டல்

நாவரசர் சிவபிரானிடம் அன்பு கொண்ட சிவனடியார்களின் தொண்டினைப் பற்றியும், நாவுக்கரசர் அவர்களிடம் நட்புப் பாராட்டியதையும், அடியவர்கள் தொண்டின் சிறப்பைப் பதிகத்தில் வைத்துப் பாடிச் சிறப்பித்ததையும் காணலாம்.

ஆளுடையபிள்ளையும், ஆளுடைய அரசும் ஒன்றுபட்ட உள்ளத்தை உடையவர்கள். திருநீலநக்க நாயனார், சிறுத்தொண்ட நாயனார், முருகநாயனார், அப்பூதியடிகள் போன்றோரும், மற்ற அடியவர்களும்

குங்குலியக்கலய நாயனார் திருமடத்தில் இனவேறுபாடு கருதாமல் உணவு அருந்துகின்றனர்.

நமிநந்தியடிகளின் தொண்டின் நலச்சிறப்பை இறைவனைப் போற்றுகின்ற திருவிருத்தப் பதிகத்துள் வைத்துப் பாடுகின்றார்.

நண்பரின் துயர் களைதல்

சிவனிடம் அன்பு கொண்ட நாவரசர், தம் மீது அன்பு பாராட்டு கின்ற அப்பூதியடிகளாரின் துயர் களைகின்றார். நாவுக்கரசர் உணவு உண்பதற்காக இறந்த தம் மைந்தனின் சவத்தை மறைத்துவிட்ட அப்பூதியடிகளின் அன்பின் திறத்துக்கு அளவற்ற கருணை உடைய வராகிறார். அப்பூதியடிகளின் மைந்தன் சவத்தை திருக்கோயில் முன்பு கொணரச் செய்கின்றார். சிவன் அருளைப் பாட மைந்தனின் உடலில் தங்கிய நஞ்சானது நீங்கப் பெற்று உயிர் பெறுகின்றான். இதனைக் கீழ்வரும் சான்றால் அறியலாம்.

"கொன்றைநறுஞ் சடையார்தம் கோயிலின் முன் கொணர்வித்தே
ஒன்றுகொலாம் எனப்பதிகம் எடுத்துடையான் சீர்பாடப்
பின்றைவிடம் போய் நீங்கிப் பிள்ளையுணர்தெழுந்திருந்தான்"

என்பதில் இருந்து, மைந்தனை இழந்து, துன்புற்ற காலத்துத் துயர் களைந்த நாவரசரின் பண்பு நலன் மற்றும் மனித நேயப்பண்பு இச்செயலால் புலப்படுகிறது.

பசிக்கொடுமையைக் களைதல்

திருவீழிமிழலையில் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் வறுமைத் துன்பத்தால் அவதியுறுகின்றனர். திருவீழிமிழலைக்குத் தலயாத்திரை சென்ற நாவுக்கரசர் அங்கு மக்கள் படும் துயரைக் காண்கின்றார். திருவீழிமிழலை நாதரைப் பாடி, நாவரசர் வாசு இல்லாத காசைப் பெறுகின்றார். மக்களுக்கு உண்டி இடுவதற்காக மடம் அமைத்து மக்களின் பசிப்பிணியைப் போக்கினார் எனலாம். மக்களின் பசிப்பிணியைப் போக்குபவரைப் பற்றி மணிமேகலை பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"ஆற்றா மாக்க ளரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர் கொடுத்தோரே"

என்ற பாடலுக்கேற்ப நாவுக்கரசர் மக்களின் பசிப்பிணியைப் போக்கி உயிர் கொடுக்கின்றார் எனலாம். இதனைப் பின்வரும் பாடல் தெளிவுறுத்துகிறது.

"பரமன் அடி யாரானார்கள் எல்லாம் எய்தி உண்கவென
இரண்டு பொழுதும் பிறைநிகழ்த்திச் சொல்லால் சாற்றிச்
சோறிட்டார்
துயர் கூர் வறுமை தொலைத்திட்டார்"

முழுமுதற் கடவுளான சிவபெருமானின் அடியவர் எல்லாரும் வந்து உணவு உண்ணுக என்று எடுத்துச் சொல்லி, நாளின் இரு போதும் சாற்றுவித்துச், சொல்லினால் தெரிவித்து உணவு இட்டார். இதனால் வறுமை எய்தி மக்கள் பசிக் கொடுமையால் துன்புற்ற காலத்து மக்களின் பசிப்பிணியைப் போக்கிய நாவரசரின் மனித நேயப் பண்பினை அறியலாம்.

பற்றற்ற நிலை

1. **செல்வத்தை வெறுத்தல் :** திருநாவுக்கரசர் செல்வத்தில் நாட்டம் இல்லாமல் பற்றற்ற நிலையில் வாழ்ந்தார் எனலாம். இதனை உலகம் அறிவதற்காக இறைவன் உழவாரம் நுழைந்த இடத்தில் எல்லாம் பொன்னோடு நவமணிகளையும் குவியலாக வெளிப் படுமாறு அருள் செய்கின்றார். இதனை நாவரசர் மனம் கொண்டு பாராமல் அருகில் இருந்த பள்ளத்தில் உழவாரப் படை மூலம் வாரிக்கொட்டிவிட்டார். இதனைப் பின்வரும் பாடல் வழி அறியலாம்.

"செம்பொன்னும் நவமணியும் சேண்விளங்க ஆங்கெவையும்
உம்பர்பிரான் திருமுன்றில் உருள்பருக்கையுடன் ஒக்க
எம்பெருமான் வாகீசர் உழவாரத்தினில் ஏந்தி
வம்பலர்மென் பூங்கமல வாவியினிற் புக ஏறிந்தார்"

செம்பொன், நவமணிகள் போன்றவற்றை உழவாரப்படையில் ஏந்தி, மற்ற பருக்கைக் கற்களுடன் பொய்கையில் வீசி எறியும் தன்மை புலப்படுகிறது. அதனால் செல்வத்தில் பற்று இல்லாத நிலையில் திருநாவுக்கரசர் விளங்கக் காணலாம்.

2. **காமத்தை வெல்லுதல் :** அரம்பையர்கள் நாவரசரை எல்லாவிதத்திலும் காமச் செயல்களைச் செய்து துன்புறுத்துகின்றனர். ஆயின் நாவரசர் இறைவன் மீது கொண்ட அன்பு ஒன்றே குறிக்கோளாக அவற்றை ஏறெடுத்தும் பார்க்காமல் இறைவனுக்குத் தொண்டாற்றுகின்றார்.

"உம்மால்எற் கென்னகுறை உடையேன் திருவாரூர்
அம்மானுக் காளானேன்"

என்ற வரிகளின் மூலம் காமத்தை வென்று சிவனிடம் கொண்ட அன்பை அறியலாம். மேலும் புண்ணியா உன் அடிக்கே போதுகின்றேன் என்கிறார். செல்வத்தில் பற்று அறுத்து, காமத்தை வென்று, நாவரசர் தம் உள்ளத்தின்

நிலைமையின்று மாறுபடாமல், ஒருமைப்பட்ட உணர்வோடு, சிவனடியைச் சேர வேண்டும் என்ற குறிக்கோளை அடைவது புலப்படுகிறது.

1. பூஞ்சோலைகளை வளர்த்தும், தண்ணீர்ப் பந்தல்களை அமைத்தும், குளங்களைத் தோண்டியும், உழவாரப் படைமூலம் சுற்றுப்புறத்தை தூய்மை செய்வதும் ஆகிய சமுதாயப் பணிகளை அறியலாம். இதனில் நாவரசர் சமூகத்தின் மீது கொண்ட அன்பு வெளிப்படுகிறது.

2. சைவநெறியில் நின்று 'அகப்பகை' மற்றும் 'புறப்பகை' வென்றவராகிய நாவரசர் அஞ்சாமை உணர்வுடன் செயலாற்றும் மனத்தன்மை பெற்றவர் என்பது அறியப்படுகிறது. சமுதாயப் பணி ஆற்றும் நாவரசரின் 'அகப்பகை' வெல்லும் குணத்தால் அவரின் தனிமனித ஒழுக்கப் பண்பு நிலைநாட்டப்படுகிறது எனலாம்.

3. சிவனடியார்களிடம் அன்பு பாராட்டுவதையும், அடியவர்களின் தொண்டின் சிறப்பைப் பதிகத்தில் வைத்துப் பாராட்டும் நாவரசரின் குணநலன்களை அறியலாம்.

4. நாவரசரிடம் அன்பு கொண்ட அடியவரின் துன்பம் களையும் மனிதப் பண்பை அறிய முடிகிறது.

5. மக்கள் பசிக்கொடுமையால் துயர் உற்ற காலத்து, அவர்களின் பசிப்பிணியைப் போக்கி, உயிர் கொடுத்த நாவரசரின் மனித நேயப் பண்பு தெளிவுறுத்தப்படுகிறது.

6. செல்வத்தை வெறுத்தும், காமத்தை வென்றும் பற்றற்ற நிலையினைப் பெறுகின்றார் எனலாம்.

7. சமுதாயப் பணியில் ஈடுபட்ட நாவரசரின் தனி மனித ஒழுக்கப் பண்பும், வரும் துயரங்களை வென்று சிவனடியைச் சேரவேண்டும் என்ற குறிக்கோள் வாழ்வில் வெற்றி பெறும் திறமும் வெளிப்படுகிறது.

14. நாவுக்கரசரின் திருத்தலங்கள்

க. இரமேஷ், கோவை.

பாரதநாடு சமயத்தை உயிரினும் மேலாகப் பாவித்துப் பாதுகாக்கின்றது. அதனாலேயே திருத்தலங்கள் நிறைந்த நாடாக காணப்படுகின்றது. நமது முன்னோர்கள் "கோயிலில்லா ஊரில் குடியிருக்காதே" என்றனர். இப்பழமொழிக்கேற்ப தமிழகத்தில் இன்றளவும் புதிது புதிதாய் திருத்தலங்கள் எழும்பிய வண்ணம் உள்ளன.

திருத்தலங்களை இரண்டு வகைகளாக வகைப்படுத்துவது மரபு.

1. பாடல் பெற்ற தலம் 2. வைப்புத் தலம்

திருநாவுக்கரசர்

மூவர் பாடிய தேவாரத்தில் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளில் 3067 பாடல்கள் உள்ளன. மூவர் பாடிய தேவாரத்தில் 237 தலங்கள் உள்ளன. திருநாவுக்கரசர் 166 திருத்தலங்களுக்குச் சென்று தரிசித்துள்ளார். மூவருள் அதிக திருத்தலங்களைத் தரிசித்தவர் திருநாவுக்கரசரே.

தேவாரத் திருத்தலங்கள்

தொண்டைநாட்டுத் திருத்தலங்கள் (காவிரி வடகரை)
சோழநாட்டுத் திருத்தலங்கள் (காவிரி தென்கரை)
பாண்டிய நாட்டுத் திருத்தலங்கள்
கொங்கு நாட்டுத் திருத்தலங்கள்
மலைநாட்டுத் திருத்தலங்கள்
வடநாட்டுத் திருத்தலங்கள்

என வகைப்படுத்தலாம்.

திருநாவுக்கரசர் தரிசித்த திருத்தலங்கள்

தொண்டைநாட்டுத் திருத்தலப் பயணம்
சோழநாட்டுத் திருத்தலப் பயணம்
திருக்கயிலாய திருத்தலப் பயணம்

என வகைப்படுத்தலாம்.

பாண்டிநாட்டுத் திருத்தலப் பயணம்

திருநாவுக்கரசர் தமிழகத்தில் மேற்கொண்ட புனிதப் பயணமான பாண்டி நாட்டில் உள்ள தலங்கள் 14. இவற்றுள் 6 திருத்தலங்களுக்கு மட்டுமே திருநாவுக்கரசர் சென்றார். திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டுத் திருத்தலங்களைத் தரிசித்துள்ளார். சமணர்களை அனல் புனல் வாதத்தில் வென்றது, தென் தமிழ்நாட்டில் திருநீறு பரப்பியது ஆகிய செய்திகளைத் திருநாவுக்கரசரிடம் கூறுகிறார். இவற்றைக் கேட்ட திருநாவுக்கரசர் உளம் மகிழ்ந்து, பாண்டி நாட்டுத் திருத்தலங்களை வழிபடத் திருவுளங் கொள்கிறார். அங்குச் சென்று பக்திப் பதிகங்களைப் பாடுகிறார். அவை: திருப்புத்தூர், ஆலவாய், திருப்பூவணம், இராமேஸ்வரம், திருநெல்வேலி, கானப்பேர் ஆகியவை.

திருநாவுக்கரசர் பாண்டி நாட்டில் பதிகம் பாடிய திருத்தலங்கள்

வ. எண்	பதிக எண்	தலங்கள்	பதிக தொடக்கம்	பண்	பாடல்	திருமுறை
289	76	திருப்புத்தூர்	புரிந்தமரர்	-	10	6-ஆம் திருமுறை
62	62	திருஆலவாய் (மதுரை)	வேதியா	கொல்லி	10	4-ஆம் திருமுறை
18	18	திருப்பூவணம்	வடிவேறும்	-	13	6-ஆம் திருமுறை
231	61	இராமேஸ்வரம்	பாசமும்	கொல்லி	11	4-ஆம் திருமுறை

நெல்வேலி, கானப்பேர் பதிகம் இல்லை. திருநாவுக்கரசர் பாடிய பதிகங்களில் ஏதாவது ஒரு அடியில் அத்திருத்தலத்தின் பெயர் இருக்கும்.

திருப்புத்தூர்

தலம் : திருப்புத்தூர், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் இத்தலம் அமைந்துள்ளது. காரைக்குடியிலிருந்து 15 கல் தொலைவில் உள்ளது.

இறைவன் - ஸ்ரீதளீஸ்வரர், ஸ்ரீதளிநாதர், திருத்தளிநாதர்

இறைவி - சிவகாமி

தீர்த்தம் - ஸ்ரீதளி (திருத்தளி தீர்த்தம்)

தலமரம் - சரக்கொன்றை

தல அமைப்பு

பெருமான் ஆடியருளிய கௌரி தாண்டவத்தைக் கண்டு இலக்குமி வழிப்பட்டு, இத்தலத்திற்கு வேண்டிய பேற்றை பெற்றதால் இக்கோயில் தொடர்புடைய அனைத்தும் இலக்குமி சம்பந்தமுடையதாகவே அமைந்துள்ளது. இத்தலத்தில் கோபுரமில்லை. இக்கோயிலில் மூன்று பிரகாரங்கள் உள்ளன.

திருத்தலத் தெய்வங்கள்

விநாயகர், நந்தி, முருகப்பெருமான், பைரவர், சூரியன், மகாலட்சுமி, வீரபத்திரர், மகாவிஷ்ணு, துர்க்கை, நடராசர் சந்நிதிகள் உள்ளன. நடராசர் சபையில் வெளியில் உள்ள சிற்ப வேலைப்பாடுடைய 5 கற்றூண்களும் இசைத்தூண்களாக அமைந்துள்ளன. இங்குள்ள சிற்பங்களைத் தட்டினால் இசை வரும். இங்குப் பெருமான் ''கௌரிதாண்டவம்'' ஆடினார். சிவலிங்க திருமேனி, கிழக்கு நோக்கிய சந்நிதி.

திருநாவுக்கரசர் பாமாலை

சிவபெருமானை ''புரிந்தமரர்'' என்று உளம் உருகிப் பதிகத்தைத் தொடங்குகிறார். திருத்தளி (மாம) என்ற முதற்குறிப்புடைய பாமாலை பாடுகிறார். மேலும்,

மின்காட்டுங் கொடிமருங்குஞ் உமையாட்கென்றும்
....
தென்காட்டுஞ் செழும்புறவில் திருப்பத் தூரில்
திருத்தளி யான்கான்; அவனென் சிந்தை யானே (3)

என்று பாமாலையின் மூன்றாவதாக அமைந்தது இந்நறுமலர். இப்பாடலின் மூலம் சிவபெருமானிடம் கொண்ட பக்தியையும், திருப்புத்தூர் என்ற ஊரினைப் பற்றியும் அறிகிறோம். சம்பந்தர், அப்பர் பாடல் பெற்ற தலம்.

ஆலவாய் (மதுரை)

தலம்: தமிழகத்தில் புகழ்பெற்ற மாவட்டங்களில் ஒன்று. தமிழ்ச் சங்கங்கள் அமைந்து தமிழ் வளர்த்த நகரம். சிவபெருமான் 64 திருவிளையாடல்களை நிகழ்த்திய தலம். நாகம் உமிழ்ந்த விடத்தினை இறைவன் அமுதத்தால் மதுரமாக்கியதால் மதுரை எனப்பட்டது.

இறைவன் - சோமசுந்தரக் கடவுள், சொக்கலிங்க நாதர், சொக்கேசர், ஆலவாய் அண்ணல் ஆகிய பெயர்கள் உள்ளன.
இறைவி - மீனாட்சி, அங்கயற்கண்ணி என்ற பெயரும் உண்டு.
தலமரம் - தடம்பு
தீர்த்தம் - பொற்றாமரைத்தலம்

தல அமைப்பு

நான்கு கோபுரங்களைக் கொண்ட நகரின் நடுவே அழகாய் அமைந்துள்ளது. அன்னை மீனாட்சிக்கே முதலில் வழிபாடு நடைபெறும். எட்டு சக்திகள் கொண்ட எட்டுப் பெருந்தூண்கள் அமைந்துள்ளன. இந்திரன் வழிபாட்டிற்காகப் பொன் மலர் பறித்த பொற்றாமரைக் குளம் காணப்படுகிறது. பல மண்டபங்கள் அமைக்கப்பட்டுள்ளது. ஆயிரங்கால் மண்டபம் சிறப்பு வாய்ந்தது. மண்டப வாயிலின் மேற்புறத்தில் தமிழ் ஆண்டுகள் அறுபதையும் குறிக்கும் சித்திரம் உள்ளது. சுவாமி அம்பாள் புறப்பாடு நிகழும் வீதி "ஆடிவீதி" எனப்படுகிறது. வடக்கு ஆடிவீதியில் பெரிய கோபுரத்தை அடுத்து 5 இசை தூண்கள் உள்ளன. ஒவ்வொரு தூணிலும் 22 சிறு தூண்கள். இவைகளைத் தட்டினால் விதவிதமான இனிய ஓசை எழும்பும்.

திருநாவுக்கரசர் பாமாலை

சோமசுந்தரரை "வேதியர்" என்று பதிகத்தினைத் தொடங்குகிறார். "முளைத்தானை யெல்லார்க்கும்" (6:19) என்ற முதற்குறிப்பினையுடைய திருப்பதிகம் பாடுகின்றார். மேலும்,

> "நலந்திகழ் வாயின் சருகிலைப் பந்தர்செய்த
> சிலந்தியை அரசதாள அருளினாய் என்று திண்ணங்
> கலந்துடன் வந்து நின்தாள் கருதிநான் காண்பதாக
> அலந்தனன் ஆலவாயில் அப்பனே அருள் செய்யாயே"

என்று ஆலவாய் அப்பனை பாடிப் பரவசமடைகிறார்.

திருப்பூவணம்

தலம் : திருப்பூவணம் (பூவணம்) பிரம்மன் வழிபட்ட பதி, காசிக்கு சமமான தலங்களுள் ஒன்று. பாண்டிய நாட்டுத் தலங்களுள் மூவர் பாடலும் பெற்ற சிறப்புமிக்க தலம். மதுரை மானா மதுரை செல்லும் வழியில் அமைந்துள்ளது.

இறைவன் - புஷ்பவனேஸ்வரர், பூவணநாதர்

இறைவி - சௌந்தரநாயகி, மின்னனையாள்

தலமரம் - பலா

தல அமைப்பு

வைகைக் கரையில் அமைந்துள்ளது. "மூவர் மண்டபம்", நடராச தீர்த்தம், பொன்னனையாள் கிள்ளிய சிவலிங்கம். இத்தலத்திற்குக் கந்தசாமி புலவர் தலபுராணம் பாடியுள்ளார்.

திருநாவுக்கரசர் பாமாலை

திருநாவுக்கரசர், பூவண நாதரை "வடிவேறும்" என்னும் பதிகத்தினைத் தொடங்கி "பாசமும் கிழிக்க கில்லா" என்று பாசத்தினைப் பாடுகிறார். மேலும்,

செறிகழலும் ....
....
பொறியரவும் இளமதியும் பொலிந்து தோன்றும்
பொழில் திகழும் பூவணத்தெம் புனித னார்க்கே

என்று இத்திருப்பதிகத்தின் எட்டாவது வாடாமலராகப் புஷ்பவனேஸ்வரனுக்கு பாமாலையாக்கிச் சூட்டுகிறார்.

இராமேச்சுரம் (இராமேஸ்வரம்)

தலம் : சென்னை - இராமேஸ்வரம் இருப்பு பாதையில் உள்ளது. காசிக்குச் செல்பவர்கள் கங்கை தீர்த்தம் கொண்டு வந்து இராமலிங்க மூர்த்தியைத் திருமுழுக்காட்டுவித்துக் காசிப் பயணத்தை முடிப்பது வழக்கமாக இருந்து வருகின்றது.

இறைவன்	- இராமநாதசுவாமி, இராமலிங்கேஸ்வரர்
இறைவி	- பர்வத வர்த்தினி, மலைவளர் காதலி
தீர்த்தம்	- கோயிலுக்குள்ளே உள்ள 22 தீர்த்தங்களும் கோயிலுக்கு வெளியே 22 தீர்த்தங்களும்

தல அமைப்பு

இத்தலம் ஒரு தீவு, ஜோதிர்லிங்கத் தலங்களுள் ஒன்றாகும். சீதை, மணலால் அமைத்த லிங்கம், இராமநாத சுவாமி ஆனார். மிகப்பெரிய கோயில், வளர்ந்த கோபுரங்கள் மூலலிங்கத்தையும், கருவறையையும், அம்பிகைக் கோயிலையும் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் இலங்கை மன்னன் "பராகிரம பாகு" என்பவன் கட்டியதாகச் சான்றுகள் இருப்பதாகத் தலவரலாறு கூறுகிறது. இராமலிங்கம் சீதையால் அமைக்கப்பட்டது. அநுமன் கொண்டு வந்த மூர்த்தம் விசுவலிங்கம். அம்பாள் சந்நிதியில் உள்ள ஸ்ரீசக்கரம் பூசிக்கத்தக்கது. மூலவர் சிவலிங்க மூர்த்தி, அம்பாள் நின்ற கோலம் தரிசிக்கத்தக்கது. இக்கோயிலில் பிற சந்நிதிகள் பத்து ஆகும். வாழ்க்கையில் ஒரு முறையேனும் செல்லுதல் சிறப்பு. இத்தல புராணம் தேசிகரால் (சேதுபுராணம்) பாடப்பட்டுள்ளது.

திருநாவுக்கரசரின் பாமாலை

கோடி மாதவங்கள் செய்து, குன்றினார் தம்மை எல்லாம்
வீடவே சக்கரத்தால் எறிந்து, பின் அன்பு கொண்டு

தேடி மால்செய்த கோயில் திருஇரா மேச்சுரத்தை
நாடிவாழ் நெஞ்சமே! நீ நன்னெறி ஆகும் அன்றே.

என்று தனது நெஞ்சுக்கு சொல்கிறார். "பாசமும்" என்ற பதிகத் தொடக்கத்தினைக் கொல்லிப்பண்ணில் பாடுகிறார்.

திருநெல்வேலி

தலம் : திருநெல்வேலி (நெல்வேலி) மதுரை - திருநெல்வேலி இப்பாதி வழியில் திருநெல்வேலிச் சந்திப்பிலிருந்து 2 கல் தொலை விலுள்ளது. இறைவனுக்குத் திருவமுது ஆக்குவதற்கு உலரப் போட்டிருந்த நெல், மழையால் நனையாதவாறு இறைவன் வேலியிட்டுக் காப்பாற்றியமையால் இறைவனுக்குத் திருநெல்வேலி நாதர் என்று பெயர் சூட்டப்பட்டது.

இறைவன் - நெல்லையப்பர், வேணுவனநாதர், வேய்முத்தநாதர், நெல்வேலிநாதர், சாலிலாடீசர், வேணுவனேஸ்வரர், வேணுவன மகாலிங்கேஸ்வரர், மூலவர் சுயம்புமூர்த்தி.

இறைவி - காந்திமதி அம்மை, வடிவுடையம்மை

தலமரம் - மூங்கில்

தீர்த்தம் - பொற்றாமரைக்குளம் (ஸ்வர்ணபுஷ்கரணி)

தல அமைப்பு

இத்திருத்தலம் 14 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. கோயிலுக்குள் பொற்றாமரைக் குளம் உள்ளது. மண்டபங்கள் நிறைந்து காணப்படு கின்றன. மூன்று தெப்பக்குளங்கள் உள்ளன. ஐந்து கோபுரங்கள் உள்ளன. தேவாரப் பாடசாலை உள்ளது. நடராசரின் 5 சபைகளுள் இங்குள்ளது தாமிரசபை. காந்திமதி அம்பாள் கோயிலுக்கு முன்புள்ள மண்டபத்தில் உள்ள இரு தூண்கள் இசைத்தூண்கள். இத்தலத்திற்குத் தலபுராணம் உள்ளது. "காந்தியம்மை பிள்ளைத்தமிழ்" சிறப்புடைய நூலாகும். பதிகம் இல்லை.

திருக்கானப்பேர்

தலம் : திருக்கானப்பேர் (திருக்கானபேரூர்) சென்னை - இராமேஸ்வரம்; திருச்சி - மானாமதுரை இருப்புப் பாதைகளில் உள்ள நாட்டரசன் கோட்டை இருப்புப் பாதை நிலையத்தில் இறங்கி அண்மை யிலுள்ள இத்தலத்தை அடையலாம். இத்திருக்கோயிலில் மூன்று சந்நிதிகள் உள்ளன.

காளீஸ்வரர் - சொர்ணவல்லி

சோமேசர் - மீனாட்சி

சுந்தரேசர் - மீனாட்சி

தல அமைப்பு

சோமேசர் சந்நிதிக்கு எதிரில் உள்ள பெரிய கோபுரத்தின் மீதிருந்து பார்த்தால் மதுரை கோபுரம் தெரியும். அதனைக் கட்டியவர் மருது பாண்டியன் என்பவர். சிறிய கோபுரம் வரகுண பாண்டியனால் கட்டப் பட்டது. சுந்தரர் கனவில், காளை வடிவில் வந்து ''யாம் இருப்பது கானப்பேர்'' என மறைந்தார் காளீஸ்வரர். இங்கு வேதாந்த மடாலயம் ஒன்று உள்ளது. பதிகம் இல்லை.

பன்னிரு திருமுறைகளையும் எந்தெந்தக் காலத்தில் ஓதுதல் வேண்டும் என்பதை ஆன்றோர் வகுத்துள்ளனர். இவற்றுள் நாவுக்கரசரின் திருமுறைகள் ஓதும் காலம்.

திருமுறை	காலம்	நாட்கள்
நான்காம் திருமுறை	ஆடி	1-ஆம் நாள்
ஐந்தாம் திருமுறை	ஆவணி	1-ஆம் நாள்
ஆறாம் திருமுறை	ஆவணி	2-ஆம் நாள்

நாவுக்கரசர் சிவபெருமானை நினைந்து பதிகங்கள் பல பாடிய பாண்டிய நாட்டுத் திருத்தலங்களில் திருப்புத்தூர், மதுரை, திருநெல்வேலி திருத்தலங்களில் மட்டுமே இசைத் தூண்கள் உள்ளன. தலபுராணங்கள் தெய்வ நம்பிக்கையையும், சமய நம்பிக்கையையும் வளர்ப்பவை. கிடைக்கின்ற தல புராணங்களில் திருநெல்வேலி தலபுராணம் மிகுதியான பாடல்களைக் கொண்டது. 6892 செய்யுள்களை உடையது. இத்தகைய தலபுராணம், திருப்பூவணம், இராமேஸ்வரம், திருநெல்வேலி திருத்தலங்களில் மட்டுமே காணப்படுகின்றன. தமிழில் செய்யுளில் அமைந்த தல புராணங்கள் 382. உரைநடையில் அமைந்தது 4084. பாண்டிய நாட்டுத் திருத்தலங்களின் மூலம் சிவபெருமானின் பல்வேறு அவதாரங் களையும், பெயர்களையும் மற்றும் சிவத்தலங்களின் அமைப்பையும், வரலாற்றையும், தலங்களுக்குச் செல்வதன் மூலம் ஏற்படும் பயனையும் அறியலாம். மனிதன் அறிவியல் துணைக் கொண்டு அணுவைப் பிளந்து ஆராயும்போதும் ஆலயங்கள் செல்லத் தவறியதில்லை.

15. நாவுக்கரசரில் பழமொழிகள்

இரெ. இராசபாண்டியன், சென்னை.

பழமொழிகள் காலங்காலமாக மக்களால் சொல்லப்பட்டு வருகின்றன. அவை இவரால் எழுதப்பட்டவை என்று குறிப்பிட்டுச் சொல்ல இயலாத தன்மை கொண்டவை. மக்களின் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்பட்டு ஒரு சில மாற்றங்களைப் பெற்றுப் பின்னர் நிலைத்த வடிவுடன் காலம் காலமாகச் சொல்லப்பட்டு வருகின்றன. பல சொற்றொடர்களால் விளக்கப்படும் கருத்தை ஒரு சில சொற்கள் கொண்ட ஒரு பழமொழியின் உதவியால் எளிதில் விளக்கிவிட இயலும்.

பழமொழியை முதுமொழி என்னும் சொல்லால் தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ளது.

நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும்
மென்மையும் என்று இவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி என்ப (பொருள். 479)

என்னும் நூற்பா பழமொழி என்றால் என்ன? என்பதை விளக்குகிறது.

நுட்பமாகவும் சுருக்கமாகவும் பளீரென்றும் மென்மையாகவும் சொல்ல வரும் கருத்தை விளக்குவதற்கு உதவி செய்வது பழமொழி எனப்படும் என்பது இந்த நூற்பாவின் மூலம் நமக்குத் தெரிய வருகிறது.

மாமூலனார் பாடிய அகநானூற்றுப் பாடல் பழமொழியைப் பழமொழி என்னும் சொல்லாலேயே குறிப்பிட்டுள்ளது.

அம்ம வாழி தோழி! 'இம்மை
நன்று செய் மருங்கில் தீது இல்' என்னும்
தொன்றுபடு பழமொழி இன்று பொய்த்தன்று கொல் (101)

என்னும் பாடலில் 'நன்மை செய்தால் தீமை வருவது இல்லை' என்னும் பொருள்கொண்ட பழமொழியும் இடம்பெற்றுள்ளது. இந்தப் பழமொழி தற்காலத்தில் 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்று பயன் படுத்தப்படுகிறது. மேலும் இந்தப் பாடலில் பழமொழி காலங்காலமாகச் சொல்லப்பட்டு வருகிறது என்னும் குறிப்பும் 'தொன்றுபடு' என்னும் சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று பழமொழி என்னும் பெயராலேயே குறிக்கப்படுகிறது. அதில் உள்ள நானூறு பாடல்களிலும் பாடலுக்கு ஒரு பழமொழி வீதம் நானூறு பழமொழிகள் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு பழமொழிகள் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மக்களின் பேச்சு வழக்கில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை நாம் அறிய முடிகிறது.

சைவ சமய குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசர் பாடிய தேவாரப் பாடல்கள் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. மொத்தம் உள்ள 3066 பாடல்களில் பல பழமொழிகளைத் திருநாவுக்கரசர் பயன்படுத்தியுள்ளார்.

1. கனி இருப்பக் காய் கவர்தல். (தே. 4200)
2. முயல் விட்டுக் காக்கைப்பின் போதல். (தே. 4201)
3. இருட்டறையில் மலடு கறத்தல். (தே. 4205)
4. விளக்கிருக்க மின்மினித் தீக்காய்தல். (தே. 4206)
5. கரும்பிருக்க இரும்பு கடித்தல். (தே. 4209)
6. மன்றத்துப் புன்னை போல் மரம்படு துயரம். (தே. 4424)
7. நரி வரால் கவரச் சென்று நற்றசை இழந்தது. (தே. 4431)
8. மத்துறு தயிரே போல மறுகும் என் உள்ளம். (தே. 4664)
9. மோத்தையைக் கண்ட காக்கை போல. (தே. 4890)
10. மத்தார் தயிர்போல் மறுகும் என் சிந்தை. (தே. 5093)
11. ஆற்றில் கெடுத்துக் குளத்தினில் தேடிய ஆதர். (தே. 5106)
12. கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டுவித்தல். (தே. 5115)
13. தோளாத சுரையோ தொழும்பர் செவி. (தே. 6114)
14. கூவல் ஆமை குரைகடல் ஆமையைக் கூவலோடு ஒக்குமோ கடல் என்றல் போல். (தே. 6238)

முதலான பழமொழிகள் திருநாவுக்கரசர் தேவாரத்தில் இடம்பெற்றுள்ளன.

மேற்காணும் பழமொழிகள் அனைத்தும் மனித மனத்தை மையமாகக் கொண்டவையாகவே உள்ளன. அவற்றில் ஆறு பழமொழிகள் திருநாவுக்கரசர் சமண மதத்தில் இருந்ததற்கு வருந்திக் கூறப்பட்டவையாக உள்ளன. மூன்று பழமொழிகள் மனித வாழ்க்கையின் இன்னல்கள் சார்ந்த கருத்துகளைத் தெரிவிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மூன்று பழமொழிகள் மனித மனம் துன்பத்தில் உழல்வதைச் சித்திரிக்கின்றன. இரண்டு பழமொழிகள் சிவபெருமானின் பெருமையை வெளிப்படுத்துவனவாய் உள்ளன.

சமணம் சார்ந்ததற்கு வருத்தம்

கனியிருப்பக் காய் கவர்தல்
முயல்விட்டுக் காக்கைப் பின் போதல்
இருட்டறையில் மலடு கறத்தல்
விளக்கிருக்க மின்மினித் தீக் காய்தல்
கரும்பிருக்க இரும்பு கடித்தல்
கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டுதல்

என்னும் ஆறு பழமொழிகளும் அவர் சமண சமயத்தில் சேர்ந்து இருந்ததை நினைத்து வருந்தும் வகையில் அமைந்துள்ளன.

கனியிருப்பக் காய் கவர்தல்

சிவன் உடம்பு முழுவதும் வெண்ணீறு பூசியவன். அந்தச் சிவனை வழிபடாமல் வீடுபேறு அடையலாம் என்று எண்ணி, சமண சமயத்தில் சேர்ந்து கையில் உறியுடன் அலைந்து திரிந்து விட்டேன். திருவாரூரில் மலர்ச் சோலைக்கு நடுவே வீற்றிருக்கும் இறைவனை வழிபடாமல் நான் சமண சமயத்தில் சேர்ந்தது, உண்பதற்குரிய கனியை ஒதுக்கிவிட்டுக் காயை உண்பது போன்றது என்று பாடியுள்ளார்.

முயல்விட்டுக் காக்கைப்பின் போதல்

எலும்பும் தசையும் கொண்டு எனக்கு ஓர் உருவத்தைக் கொடுத்தவன் சிவன். இன்பங்களை நுகரச் செய்தவன் சிவன். முன்பு நான் செய்த வினையினால் தொடரும் பாவங்களை எல்லாம் போக்கி அருளியவன் சிவன். இவ்வாறு என் வாழ்வுடன் ஒன்றிய சிவபெருமானை விடுத்து, நான் சமணத்தில் சேர்ந்து செயலிழந்து விட்டேன் என்று வருந்தும் பாடலில் இந்தப் பழமொழியை உவமையாகப் பயன்படுத்தியுள்ளார். முயல் பிடிப்பதற்கு எளிதானது. உண்பதற்கும் சுவையானது. காக்கை பிடிப்பதற்கு எளிதானது அல்ல. உண்பதற்கும் உகந்தது அல்ல. முயலைப் போன்ற சிவ வணக்கத்தை விட்டு, காக்கை போன்ற சமணத்தில் வீழ்ந்து விட்டேனே என்று வருந்திப் பாடியுள்ளார்.

இருட்டறையில் மலடு கறத்தல்

இணையில்லாக் கலைகள் அனைத்தையும் எனக்கு உணர்வித்தவன் சிவன். என் உள்ளத்தே வீற்றிருப்பவன் சிவன். உறுதிப் பொருள்களை விளக்குபவன் சிவன். இத்தகைய ஆரூர்ப் பெருமானைப் போற்றாமல் இருட்டறையில் மலட்டுப் பசுவிடம் பால் கறக்க முயன்று உதைபட்டு வருந்துவதைப் போல் பயனில்லாச் சமணத்தில் இருந்தேனே என்று வருந்துகிறார்.

விளக்கிருக்க மின்மினித் தீக்காய்தல்

திருவாரூர்ப் பெருமானை வணங்கி நல்லறிவு பெறாமல் சமணத்தில் இருந்து தலைமயிரைத் துறந்து, ஊர்தோறும் சென்று பிச்சைபெற்று உண்டு ஏளனப்பட்டேனே! விளக்கு இருக்கும்போது மின்மினி வெளிச்சத்தில் தீக்காய நினைப்பது எவ்வாறு மடமையோ அதைப் போல் சிவானந்தத் தேனை விட்டு, சமணனாய் அலைந்தேனே என்று பாடியுள்ளார்.

கரும்பிருக்க இரும்பு கடித்தல்

கயிலை மலையைத் தூக்க முயன்ற இராவணனை நசுக்கியவன் சிவன். பிரம்மனின் தலைகளில் ஒன்றைப் பறித்தவன் சிவன். விடமுண்டு கண்டத்தை நீலம் ஆக்கியவன் சிவன். இத்தகைய சிவனைப் போற்றாமல் சமணத்தில் சேர்ந்து என் வாழ்நாளின் முற்பகுதியைக் கெடுத்து விட்டேனே. கரும்பு இருக்கும் போது இரும்பைக் கடிப்பது போல் சிவனது திருவடியைப் போற்றாமல் சமணத்தில் வீழ்ந்தேனே என்று ஏக்கத்துடன் பாடியுள்ளார்.

கொத்தைக்கு மூங்கர் வழிகாட்டுதல்

குருடனுக்கு ஊமை வழிகாட்டுவது போல் சமணத்தின் வழி காட்டுதலைப் பின்பற்றிக் கெட்டேன் என்று பாடியுள்ளார்.

இந்த ஆறு பழமொழிகளின் வாயிலாகத் தாம் சமண சமயத்தில் சேர்ந்து தமது வாழ்நாளின் முற்பகுதியை வீணாக்கியதைத் திருநாவுக்கரசர் வெளிப் படுத்தியுள்ளார். இந்தப் பழமொழிகள் நான்கில் சிவனை உயர்வுபடுத்திச் சமணத்தை இழிவாகப் பாடியுள்ளார். அவ்வாறு அமைந்த பழமொழிகள்,

1. கனியிருக்கக் காய் கவர்தல்
2. முயல் விட்டுக் காக்கை பின்போதல்
3. விளக்கிருக்க மின்மினித் தீக்காய்தல்
4. கரும்பிருக்க இரும்பு கடித்தல்

என்பவை ஆகும்.

சைவம்	-	**சமணம்**
கனி	-	காய்
முயல்	-	காக்கை
விளக்கு	-	மின்மினி
கரும்பு	-	இரும்பு

இவற்றில் கனி, முயல், விளக்கு, கரும்பு முதலியவை உயர்வுப் பொருளிலும் காய், காக்கை, மின்மினி, இரும்பு முதலியவை இழிவுப் பொருளிலும் இடம்பெற்றுள்ளன. ஏனைய இரு பழமொழிகளிலும் சைவத்தின் உயர்வுத் தன்மையைக் குறிக்கும் வகையில் எப்பொருளும் இடம்பெறவில்லை.

மாறாக, சமணத்தின் இழிவை உணர்த்தும் வகையில் மலட்டுப் பசுவும், ஊமையும் இடம்பெற்றுள்ளன.

மனித வாழ்க்கையின் இயல்பு உணர்த்தும் பழமொழிகள்

மனித வாழ்க்கையின் இயல்பை உணர்த்தும் வகையில் மூன்று பழமொழிகள் இடம்பெற்றுள்ளன.

1. நரி வரால் கவ்வச் சென்று நற்றசை இழந்தது
2. மோத்தையைக் கண்ட காக்கை போல்
3. ஆற்றிற் கெடுத்துக் குளத்தினில் தேடுதல்

என்பவை அப்பழமொழிகள்.

நரி வரால் கவ்வச் சென்று நற்றசை இழந்தது

நரி ஆற்றைக் கடக்கும்போது அருகில் செல்லும் வரால் மீனைக் கவரச் சென்று தன் வாயில் முன்பு பற்றியிருந்த தசைத் துண்டத்தையும் இழந்தது போல், கிடைக்காத ஒன்றுக்காக, கிடைத்ததையும் இழக்கும் மனிதர்கள் என்று திருநாவுக்கரசர், மனிதர் இயல்பைத் தெளிவுபடுத்தி யுள்ளார். இவ்வாறு மனத்தை மயக்கும் மனநிலையை மாற்றித் தரும்படி சிவபெருமானிடம் வேண்டுகிறார்.

மோத்தையைக் கண்ட காக்கை போல்

பிணத்தைக் கண்ட காக்கைகள் அதை மொய்ப்பதைப் போல என் தீவினைகள் என்னைச் சூழ்ந்து நிற்கின்றன. அந்தத் தீவினைகளை மாற்றி என்னைச் சிவானந்தத்தில் மூழ்கச் செய் என்று சிவபெருமானிடம் வேண்டுகிறார். இந்தப் பாடலில் மனிதன் தீவினைகளைச் செய்து அதன் பிடியிலிருந்து மீளாமல் துன்பப்படுகிறான் என்பதை விளக்கப் **பிணத்தைக் கண்ட காக்கைகள் அதைவிட்டு நீங்காமல் மொய்ப்பதை** உவமையாகக் கூறியுள்ளார்.

ஆற்றில் கெடுத்துக் குளத்தினில் தேடுதல்

ஆற்றிலே தொலைத்த பொருளைக் குளத்திலே தேடினால் அந்தப் பொருள் கிடைக்காது. அதைப்போல இறைவன் அருகிலே இருக்கும் இடத்தை விடுத்து, அவனைத் தேடிக் காற்றைவிட விரைவாக வேறு வேறு ஊர்களுக்குச் செல்கிறார்கள் என்று திருநாவுக்கரசர் பாடியுள்ளார். அருகில் இருக்கும் திருநல்லூரிலேயே இறைவனை வணங்குவதை விடுத்து, தொலைதூரங்களில் இறைவனைத் தேடி அலைவதை விளக்க **ஆற்றில் கெடுத்துக் குளத்தில் தேடுதல்** என்னும் பழமொழியைத் திருநாவுக்கரசர் பயன்படுத்தியுள்ளார்.

இங்கே இடம்பெற்றுள்ள மூன்று பழமொழிகளிலும் மனிதன் தன் வாழ்வில் பெறும் இன்னல்களைத் திருநாவுக்கரசர் சுட்டியுள்ளார். முதலாவதாக,

ஒன்று இருக்கும்போது கிடைக்காத மற்றொன்றின் மேல் ஆசைகொண்டு துன்பம் அடைவதைக் குறிப்பிட்டுள்ளார். இரண்டாவதாக, மனிதன் தீவினைகளில் ஆழ்ந்து போய்க் கிடக்கிறான் என்பதை வெளிப்படுத்தி யுள்ளார். மூன்றாவது பழமொழியில் அருகில் இருக்கும் இறைவனை வணங்காமல் எங்கெங்கோ அலைந்து திரிகிறார்கள் என்று தெரிவித்துள்ளார்.

மனத்துயரை உணர்த்தும் பழமொழிகள்

மனிதன் அனுபவிக்கும் இன்னல்களை வெளிப்படுத்தும் வகையில் இரண்டு பழமொழிகள் திருநாவுக்கரசர் தேவாரத்தில் இடம்பெற்றுள்ளன.

1. மன்றத்துப் புன்னை போல மரம்படு துயரம்
2. மத்துறு தயிரே போல

என்பவை அப்பழமொழிகள்.

மன்றத்துப் புன்னை போல மரம்படு துயரம்

ஊர்ப் பொதுமன்றத்தில் இருக்கும் புன்னைமரத்தின் மீது எல்லோரும் கல்லெறிந்து அதை அலைக்கழிப்பார்கள். அதைப் போல் நானும் ஐம்பொறி களாலும் அலைக்கழிக்கப்படுகிறேன் என்று தனது மனம்போன போக்கில் வாழ்க்கை அமைத்துக்கொண்டு பட்ட இன்னலைத் தெரிவித்துள்ளார். இதில் மன்றத்துப் புன்னைமரம்படு துயரம் என்பது பழமொழி ஆகும்.

மத்துறு தயிரே போல்

'மத்துறு தயிரே போல்' என்னும் பழமொழியைத் திருநாவுக்கரசர் இரண்டு பாடல்களில் பயன்படுத்தியுள்ளார். தேவாரத்தின் 4664-ஆம் பாடலில் 'மத்துறு தயிரே போல மறுகும் என் உள்ளம்' என்றும் 5093-ஆம் பாடலில் 'மத்தார் தயிர்போல் மறுகும் என் சிந்தை' என்றும் இப்பழமொழி இடம்பெற்றுள்ளது.

சிவனைச் சிந்தையில் நிறைக்கும் செயலைச் செய்யவிடாமல் ஐம்புலன்களும் என்னைச் சிதைக்கின்றன. மத்தினால் கடையப்படும் தயிரானது தத்தளிப்பதைப் போல் என் மனம் தத்தளிக்கிறது என்று இரண்டு பாடல்களிலும் தன் மனம் அலைக்கழிக்கப்படுவதை விளக்கியுள்ளார்.

இறைப் பற்றால் ஏற்படும் நன்மை

சிவனைப் பணிந்து போற்றுவதால் ஏற்படும் நன்மைகளை இரண்டு பழமொழிகள் வாயிலாகத் திருநாவுக்கரசர் விளக்கியுள்ளார்.

1. கதிரவனைக் கண்ட பனி போல
2. கூவல் ஆமை குரைகடல் ஆமையைக் கூவலோடு ஒக்குமோ கடல் எனல்

என்பவை அப்பழமொழிகள்.

கதிரவனைக் கண்ட பனிபோல

சிவபெருமானின் புகழைத் தொடர்ந்து போற்றிப் பாடுங்கள். அவ்வாறு செய்தால் மலையில் கதிரவன் தோன்றுவதைக் கண்டதும் புல் நுனியில் உள்ள பனித்துளிகள் அழிவதைப் போல் உங்கள் தீவினைகள் கெடும் என்று திருநாவுக்கரசர் பாடியுள்ளார்.

கிணற்று ஆமை கடல் ஆமையிடம் கிணற்றளவு கொண்டதா கடல் எனல்

சிவபெருமானின் பெருமை கடல் போல் பரந்தது; ஆழமானது. அந்தப் பெருமையை யாராலும் அளவிட முடியாது. சிவனின் பெருமையை அளக்க நினைப்பது எதற்கு ஒப்பானது என்றால், கிணற்றில் வாழும் ஆமை. கடலில் வாழும் ஆமையிடம் தான் வாழும் கிணற்றைக் காட்டி இதைப் போன்றதா கடல்? என்று கேட்பதற்கு ஒப்பானது ஆகும் என்று திருநாவுக்கரசர் பாடியுள்ளார்.

திருநாவுக்கரசர் பாடல்களில் பழமொழிகள் இடம்பெறக் காரணம்

திருநாவுக்கரசர் எண்பத்தொரு வயதுவரை வாழ்ந்துள்ளார். இந்த வயது அனுபவத்தின் பயனாகப் பல்வேறு தரப்பட்ட மக்களை அவர் சந்தித்திருப்பார். மேலும் உழவாரப்பணியை அவர் கோயில்கள் தோறும் மேற்கொண்டதால் சாதாரண மக்களுடன் கலந்து வாழும் பேறும் அவருக்குக் கிடைத்திருக்கிறது. எனவே அவரால் மக்களின் பேச்சுவழக்கில் நிலவிய பழமொழிகளை அவரது பாடல்களில் இடம்பெறச் செய்ய முடிந்திருக்கிறது.

திருநாவுக்கரசர் புலால் உணவு உண்ணாமல் மரக்கறி உணவு மட்டுமே உண்டு வாழ்ந்தவர். அத்தகைய பெரியார் பயன்படுத்திய பழமொழிகளில் புலால் உணவு பற்றிய குறிப்பும் உள்ளது. 'முயல் விட்டுக் காக்கைப் பின் போதல்' என்னும் பழமொழியில் இறைச்சிக்காகப் பிடித்த முயலை விட்டுக் காக்கையின் பின்போதல் என்னும் குறிப்பு உள்ளது. இதைப்போன்றே 'நரி, வரால் கவ்வச் சென்று நற்றசை இழத்தல்' என்னும் பழமொழியில் நரி, தசையைக் கவ்விச் சென்றதையும் வரால் மீனைப் பிடித்துத் தின்ன ஆசை கொண்டு அந்தத் தசையை அது இழந்ததையும் திருநாவுக்கரசர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு புலால் உணவு தொடர்பான செய்திகளைத் திருநாவுக்கரசர் தாமே அனுபவித்த அனுபவங்களின் மூலம் அறிந்திருக்க இயலாது. தாம் மக்களோடு கொண்டிருந்த தொடர்பால் மட்டுமே அறிந்திருக்க இயலும்.

திருநாவுக்கரசர் தமது அனுபவத்தின் வாயிலாகவும் மக்களோடு கலந்து பழகிய தன்மையின் காரணமாகவும் பல பழமொழிகளைத் தம் பாடலில் பயன்படுத்தியுள்ளார். அப்பழமொழிகள் வாயிலாகத் தாம் தெரிவிக்க விரும்பிய செய்திகளை எளிதாகத் தெரிவித்திருக்கிறார் என்று தெளிய இயலும்.

16. நாவுக்கரசர் உணர்த்தும் அறம்

இ.மா. இராமச்சந்திரன், நெல்லை.

நாவுக்கரசரின் வாழ்க்கை வரலாற்றை இரு பகுதியாக பிரித்துப் பார்ப்பது சிந்தனைக்குப் பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகின்றேன். ஒன்று அப்பரடிகள் சமண மதம் சார்ந்து சமணர்களின் சொற்கேட்டு அவர்களுடன் வாழ்ந்து உயர்நிலை அடைந்து, பின்னர் சைவ சமயம் திரும்பிச் சமணர்களும், பல்லவ மன்னனும் இழைத்த தீமைகளும் அவற்றிலிருந்து வென்று வாழ்ந்த வாழ்வு வரை ஒரு பகுதியாகவும், சிவநெறியில் நின்று அதில் வளர்ந்து அதனால் பெற்ற இன்ப ஆக்கமும் செம்மை வாழ்வும் மறு பகுதியாகவும் காணலாம். இவை இரண்டையும் பின்பற்றக் காரணமாய் இருந்தது எது? என்பதை ஆய்ந்தால் ''கொல்லாமை'' என்ற அறமே அப்பரடிகள் சமண சமயம் சார்வதற்கு காரணமாய் அமைந்தது எனலாம். கொல்லாமை என்ற அறம் தவிர வாய்மை, உண்மை, பொய்யாமை போன்ற அறங்கள் சமண மதத்தில் இல்லாமையால் மீண்டும் சைவ சமயம் சார்வதற்கும் அந்த அறச்செயல்களே காரணம் என்று அறியலாம்.

அறத்தை அப்பரடிகள் ஆணித்தரமாக உறுதிப்பாட்டோடு பின்பற்றக் காரணம் அவர் பிறந்த குடும்பம், அவருடைய பெற்றோர்கள், மூதாதையர்கள் அறத்தின் வழி வாழ்ந்த செம்மல்களாக திகழ்ந்ததால் ''தாயைப் போல பிள்ளை'' என்பதற்கேற்ப அப்பரின் உள்ளத்தில் அறக் கொள்கைகள் ஆழமாக பதிந்திருந்தன. கொடுத்துச் சிவந்த கரங்களுக்கு சொந்தக்காரர்கள் அப்பரின் பெற்றோர்கள். சமுதாய அறங்கள் எது என்றால் ஏழைகளுக்கு வாரி வழங்குதல் ஆகிய ஈகையே. அவை பன்னோக்குப் பார்வையாக அப்பரிடம் அமைந்திருந்தது தமது குடும்பத்தினர் செய்த செயல்களைக் குழந்தைப் பருவத்திலிருந்து பார்த்த அப்பரடிகள் அதையே தம்முடைய வாழ்வின் முதுகெலும்பாகப் பற்றிக் கொண்டு வாழ்ந்தார். சிவகதியை அடைவதற்கு அறநெறியே சிறந்த உயர்ந்த அருள்நெறி எனக் கொண்டு வாழ்ந்தார் அப்பரடிகள்.

இன்றைய சமுதாயத்தில் அறம் சார்ந்த வாழ்க்கை நெறி என்பது கேள்விக் குறியாக உள்ளது. அறம் சார்ந்த வாழ்க்கையே சிவகதி அடையச் செய்யும் என்ற நம்பிக்கையை உலக மக்களுக்கு ஊட்டியவர் அப்பர். அறம் சார்ந்த வாழ்க்கை நாட்டில் எப்போது சீர்குலையத் தொடங்கு

கின்றதோ? அப்போதெல்லாம் சான்றோர்கள் தோன்றி அன்பின் தழைத்த வாழ்க்கையை, அறிவறிந்த வாழ்க்கையை, மீண்டும் தழைக்கச் செய்தார்கள்.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டு, தமிழக வரலாற்றில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது எனலாம். அடியவர்கள் தோன்றி அற்புதம் நிகழ்த்திய காலம். அந்தக் காலத்தில் தான் இருள் கடிந்து எழுகின்ற ஞாயிறு போன்று அப்பரடிகள் தோன்றி ஒரு பொற்காலத்தையே உருவாக்கினார். அவர்கள் அவதரித்து உலா வந்த காலம் வரலாற்றுச் சிறப்புமிக்க காலம். சிவனடியே சிந்திக்கும் சிவஞானம் பெற்றவர். தொண்டின் வழியே வாழ்ந்தால் இறைவனை எளிதில் அடையலாம் என்று எண்ணம் கொண்டு துறவு வாழ்க்கை வாழ்ந்து மக்களுக்குத் தொண்டு செய்வதே மகேசனுக்கு உகந்தது என்று வாழ்ந்தவர், "தொண்டலால் துணையு மில்லை" என்று உலகறிய வாழ்ந்து காட்டியவர். 20-ஆம் நூற்றாண்டில், 21-ம் நூற்றாண்டில் பேசப்படுகின்ற சீர்திருத்தத்திற்கு 7-ம் நூற்றாண்டிலேயே சிந்தித்துச் செயலாற்றி திருக்கோயில் தொண்டு முதல் தெரு வீதி பெருக்கும் தொண்டு வரையில் செய்தவர் "பார் வாழத் திரு வீதி பணிவார்" என்று சேக்கிழார் பாராட்டுவார்.

உலக வரலாற்றில் மனிதன் அரசுக்கு அடிமை இல்லை. மக்களுக்காக அரசா? அரசுக்காக மக்களா? என்பதை எல்லாரும் புரிந்து கொள்ள செய்தவர். மனிதனின் உரிமைகளைப் பாதுகாக்கவே அரசு என்று முடியாட்சியை எதிர்த்து குரல் எழுப்பிய முதல் மனிதர். சாதிகளை, சமயப் பூசல்களை எதிர்த்தவர். சமயத் துறவிகளிடையே இணைப்பைக் கண்டவர். வேற்றுமையைக் களைந்து ஒருமை நிலையை உருவாக்கியவர். நாடு முழுவதும் நடைப் பயணமாகவே நடந்து மக்களுக்கு நானும் நன்மையளிக்கும் அறநெறியைப் போதித்து அதன் மூலம் அருள்நெறிக் கொள்கைகளைப் பரப்பியவர்.

நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்திலிடர்ப்படோம் நடலையல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே யெந்நாளும் துன்பமில்லை.

என்று ஆணித்தரமாக கூறியவர். தம்மையும் கடவுளையுமே நம்பி வாழ்ந்த தமிழர்கள் திசைமாறி செல்லத் தொடங்கினார்கள். கி.பி. 2-ம் நூற்றாண்டிலிருந்தே தமிழனின் ஒருமைப்பாடு குலைந்து போகத் தொடங்கியது. சமயத்தையும், சமயநெறிகளையும் பாதுகாப்பதிலும், அவற்றைப் பேணுவதிலும் மிகுந்த தொய்வு ஏற்பட்டது. கொள்கைக் கோட்பாடுகளில் கலப்படம் ஏற்பட்டது. மக்களின் அறிவு கெட்டு அதனால் அவர்களுடைய ஆள்வினைத் திறம் குறைந்து அறநெறிகள் வழியில் வாழப் பிறந்தவர்கள் இவைகளை மறந்து வாழத் தொடங்கினார்கள்.

"வாய்ந்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்", என்று எழுஞாயிறாய் தோன்றி, படுவீழ்ச்சிக்கு சென்று கொண்டிருந்த தமிழகத்தை மீட்கப் பேரொளியாய் எழுந்து, நாடு முழுவதும் நடைப் பயணம் சென்று ஒளி வெள்ளம் வீசிட, கண்மூடித்தனமான மூடப்பழக்கங்கள் மண்மூடிப் போகத் தமிழக மக்களை தட்டி எழுப்பி ஏற்றம் பெறச் செய்தவர் அப்பரடிகள்.

சமய வாழ்வையும், தனிமனித வாழ்வையும், பொது வாழ்வையும், அற இயலோடு இணைத்து அறத்தின் அடிப்படையில் அனைத்து நிலை வாழ்வியல்களையும் அமைத்து வாழ்தலே சிறப்பு என எண்ணியவர் அப்பரடிகள். அனைத்து வாழ்வியல் பொருட்களுக்கும் மூல முதற் பொருளாக அமைவது அறமே. அத்தகைய அறத்தை, "செம்மை" என்பதாக ஆய்ந்து கண்டு, அதன் தனிநிலைப் பொருளில் நின்று தொண்டாற்றி வெற்றி பெற்றவர் அப்பரடிகள்.

அவருக்கு அறச்சிந்தனையும், அறவழியிலேயே நடக்க வேண்டும் என்றும், எல்லாச் செயல்களுக்கும் மூலம் அறமே எனக் கொண்டதற்குக் காரணம் அவருடைய வாழ்க்கை முறையின் அமைப்பே ஆகும். முற் பிறவியில் அவர் அறநெறிச் செம்மலாக வாழ்ந்து, கொல்லாமையே சிறந்த அறம் என உணர்ந்தவர். இப்பிறவியிலும் தனக்கு வாய்த்த பெற்றோர்கள் அறநெறிச் செம்மல்களாகவே வாழ்ந்தவர்கள். அறச்செயலாகிற கொல்லாமை என்ற நெறி சமணர்களிடமிருந்ததாலேயே சமண சமயம் சார்வதற்குக் காரணமாக அமைந்தது. அது போன்றே "பொய்யாமை" என்ற அறம் அங்கு இல்லை என்பதால் அவர் மீண்டும் சைவமதம் சார்வதற்குப் பொய்யாமை என்ற அறமே காரணமாகும். சூலைநோய் தந்து தன் நிலையை உணரச் செய்து சைவம் சார்வதற்கு காரணமாகிய இறைவனிடம் செய்ந்நன்றி என்ற அறத்தில் நின்று போற்றினார். அவரை உறுதியுடன் நிற்க வைத்தது வாய்மை என்ற பேரறமே ஆகும். வாய்மையில் வாழ்ந்த சான்றோர்களை உலகம் என்றுமே மறந்ததில்லை. மறக்க முடியாது.

அறமானது தன்னை நோக்கிய அறம் என்றும், பிற உயிர்களை நோக்கிய அறமெனவும், தொடர்பு பற்றிச் செய்யும் அறமெனவும், தொடர்பு பற்றாது செய்யும் அறமெனவும், அறிவினால் செய்யும் அறமென்றும், அன்பு முதலிய உள்ளத்து உணர்ச்சிகளில் மேற்கொள்ளும் அறமென்றும் பகுத்துப் பார்க்கும்போது அறவாழ்வானது அதன் வழியிலேயே இயங்கும் போது அறிவும் அனுபவமும் சேர்ந்து செம்பொருள் இது என்று காட்டும் தன்மை உடையது. ஆகையால் ஒருவன் அறவாழ்வைத் தொடங்கினால் அது ஏனையவற்றிற்கு வழிகாட்டி நெறிப்படுத்தும் ஆற்றல் உடையது. எல்லா உயிர்களும் பெறுகின்ற வளர்ச்சி நிலைக்கேற்ப பயிற்சி பெற்று

வளர்ந்து வருவது அறவாழ்வு அதன் எல்லையாக பொருளாராட்சி. அது என்ன? என கேட்போமானால் அறத்தின் நிலையை அதன் உண்மைத் தன்மையை உள்ளவாறு அறிந்து நடுநிலைப் பொருள் உண்டு என தெளிந்து அத்தகைய செம்பொருளைப் பற்றி வாழ்வதும் அதில் நின்று வாழ்வதுமே அறவாழ்வு என காட்டுகின்றார்.

செம்மையுள் நிற்றல் என்ற அறத்தில் அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்ததாலே தான், தனக்கு கொடுமை செய்த சமணர்களுக்குப் பதில் கொடுமை செய்யவில்லை. அவர்கள் சிவபரம்பொருளை அறியாது செய்தது, அவர்களிடமும் சிவ பரம்பொருள் உண்டு, ஆனால் அவை மறைக்கப் பட்டுள்ளது, அதனால் சிவ பரம்பொருளை உணராது செய்கின்றார்கள் என எண்ணி அவர்களுடைய செயலுக்கு வருத்தமுற்றார். அதுபோன்றே பல்லவ மன்னன் செய்த கொடுமைக்கும் வருத்தமுற்றார். "அறியாமையே தீவினையின் மூலவேர்" என்ற பிளாட்டோ கருத்துப்படி அவர்கள் அறியாமல் செய்ததாகக் கருதுகின்றார். அறவழியில் தொண்டு செய்து உய்வதே வாழ்க்கையின் நெறிமுறை.

தொண்டு செய்து என்றும் சோற்றுத்துறையார்க்கே
உண்டு நீ பணி செய் மட நெஞ்சமே.

என அப்பரடிகள் கூறுகின்றார்.

அறவழியில் செய்யும் பக்தியும், தொண்டுமே உய்வைத் தரும் என்பதும் ஆண்டான் அடிமை வேறுபாட்டை கடந்து அடைவானும் அடையப் பெறுவானும் தொண்டர்களே என்ற நிலையில் தொண்டருக்குத் தொண்டராம் புண்ணியம் எய்துவர் என்பது அப்பரின் அறக் கொள்கை. மெய்மை எனும் அற அனுபவமும், வாய்மை எனும் அற அனுபவமும் நிறைவு பெற்றால் உண்மை அறம் முழுமையான முதன்மை அறமாக விளங்கி அதிலிருந்து அன்பே தலைப்பட்டு நின்று செயல்படும் அறத்தை நெறிப்படுத்தவும், அறவழியில் வாழ்ந்து துய்க்கவும் அன்பே அடிப்படை யாகும். அத்தகைய அன்போடு கூடிய அறம் சாராது சமய வளர்ச்சியோ சமுதாய வளர்ச்சியோ அமைய முடியாது.

அறம் என்பதை ஒருவகையான மூலப் பொருளாக, முழுமை பெற்றதாக கொள்வோமானால் அதனை செயற்படு நிலையில் நிறுத்தி ஆராய்ந்தால் அது இரு மாறுபட்ட பக்கங்களைக் கொண்டதாக அமையும். தனி மனிதனை, ஊண் உயிர் என இரண்டாக நிறுத்தி அறிதல் அறம் என்பது முதல் நிலை. அதற்குச் சான்றாக அம்மை, அப்பர் நிலையில் ஈசன் இருப்பதைக் காண்கின்றார், நமக்கு காட்டுகின்றார். அறத்தை அறிந்து செயற்படுத்தும் முதல் நிலையே இல்லறம் ஊனையும், உடலையும் தனித்தனியாக நிறுத்தி அவைகளால் அவ்விரண்டிற்கும் அப்பாற்பட்ட நிலையில் உள்ள பொருளைப் பயன்கொள்ள வேண்டும்.

"அறத்தின் வழுவாது நின்றாரைப் பொருள்என
நிறுத்தியவன் ஆரூரான்"

என்பார் அப்பரடிகள். அறநெறியில் நின்ற தம்முள் புகுந்த சிவம் பின்னர் சிவனுள் தன்னைப் புகச் செய்தது என்பார். சமய உலகில் அறவழியில் நிற்றலே கடவுளை நேர்நிறுத்திக் காணமுடியும் என்ற ஆய்வினை வழங்கிய வள்ளல் பெருமானே அப்பர்தான் அதை விளக்கும் பதிகமே திருப்பாதிரிப்புலியூர் பதிகமாகும். "உடையார் ஒருவர் தமர் நாம்" என்பதே இறைவனுக்கும் நமக்குமுள்ள உறவாகும். இதை நன்றியோடு நினைந்து நாம் அறவாழ்வில் வாழ்ந்தால் இறைவன் நம்மிடையே நிச்சயம் வெளிப்பட்டு நிற்பான் என்பது அப்பரின் அறிவார்ந்த சிந்தனை யாகும். அடிமை என்கின்ற உறவை மூலமாக வைத்து அறமெனும் கயிற்றால் இழுத்துச் செயல்படுத்தினால் "தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலியூர் அரனே" என்பதாகும்.

வாய்மை, செய்ந்நன்றி உணர்வு என்ற இரண்டு அடிப்படை அறங்கள் வாழ்வியல் அறங்களாக நிற்க கொல்லாமை போன்ற நல்லறங்கள் துணை நிற்க திருத்தொண்டு பேணி உயர் நலம் பெற்றார் அப்பரடிகள். அறமே கடவுள் எனவும், மெய்மை, வாய்மை, கொல்லாமை, உண்மை என்ற அறத்தினைத் தொன்மை என்ற தொண்டில் நின்று செம்மை என்ற வழியில் வாழ்ந்து உயர்ந்தார் அப்பரடிகள்.

அப்பரடிகளின் வழியில் வாழ்ந்து நாமும் நானிலம் சிறக்க வாழ்வோமாக.

"இடையறாப் பேரன்பும் மழைவாரும்
இணைவிழியும் உழவாரத்திண்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான்
திருவடிக்கே பதித்தநெஞ்சம்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப்
பெருந்தகைதன் ஞானப்பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப்
பொலிவழகும் துதித்து வாழ்வாம்"

- காஞ்சி புராணம்.

17. சமூகத் தொண்டில் நாவுக்கரசர்

வே. இராஜா, கோவை.

சிவபெருமானின் கருணையினை மற்ற மக்களுக்கு எடுத்துக் கூறும் நெறியில் வாழ்ந்தவர் வாகீசர் என்றும் அவருடைய பெருமையினை உணர்ந்த சேக்கிழார் உலக மக்களுக்கு அவரை,

"....வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லறுகின்றேன் உணராதேன்" (தி.பு. பா. 1)

என்ற பாடல் வரிகளால் விளக்குகிறார்.

ஆட்சி மாறுதலுக்கேற்ப சமுதாயத்திலும் பல மாற்றங்கள் நிகழும். பல்லவர் காலம் முடிந்து, சோழர் காலம் தொடங்கியது. சோழர் காலத்தில் வாழ்ந்த சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் திருநாவுக்கரசரின் கால சூழலைப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

திருமுனைப்பாடி நாட்டுவளம்

நாடு என்பது எல்லா வளங்களும் நிறைந்திருப்பதாக அமைய வேண்டும். இயற்கை வளம், மானிடரின் மனவளம் மிகுந்த நாடே மேன்மையுடையதாய் கருதப்படும்.

"நாடென்ப நாடு வளர்த்தன என்பார்" பொய்யில் புலவர் பெண்ணையாற்று நீர், வாய்க்காலில் வழிந்தோடி, வயல்களில் பாய்ந்து உழவுத்தொழில் சிறப்புற்று விளங்கும் இயற்கை வளம் நிறைந்ததென்பதை சேக்கிழார்,

"......... இனப்பண்ணை உழும்பண்ணை எறிந்துலவி எவ்வுலகும்
வனப்பெண்ணை வரும்பெண்ணை மாநதிபாய் வளம் பெருகும்"
(தி.பு. பா. 1208)

பாடலின் மூலம் உணரலாம்.

கரும்பும், நெல்லும், கதளியும், தேனும், மீனும், முத்துக்களும் அகில் மணமும் நிறைந்த இந்தத் திருநாட்டைச் சோலைகள் சூழ்ந்திருக்கும் சைவ சமயப் பெரியார் திருநாவுக்கரசர் தோன்றிய திருமுனைப்பாடி நாட்டிலே இறையனரால் தடுத்தாட் கொள்ளப்பட்ட சுந்தரமூர்த்தி நாயனாரும் தோன்றியவர் என்பதை,

"........ அறந்தரு நாவுக்கரசும் ஆலால சுந்தரரும்
பிறந்தருள உளதானால் நம்மளவோ பேருலகில்
சிறந்த திருமுனைப்பாடித் திறம்பாடுஞ்...." (தி.பு. பா. 1276)

என்னும் சேக்கிழார் பாடலால் அறியலாம்.

அப்பர் பெருமானும், சுந்தரர் பெருமானும் தோன்றியதால் திருமுனைப்பாடி நாட்டிற்குப் பெருமையும் சிறப்பும் மேலோங்கியது.

திருவாமூர்ச் சிறப்பு

உழைக்கும் திறனும் உயர்ந்த நெறிகளும் ஒருங்கே இணையப் பெற்ற மாந்தர் நிறைந்த ஊர் திருவாமூர். எத்தகைய நன்மையினின்றும் வழுவாத பண்புகள் நிறைந்த குற்றமற்ற இல்லறத்தில் மேம்பட்ட மக்கள் வாழ்வதை,

"நலத்தின் வழுவாத நடைமரபின் குடிநாப்பண்
விளக்கின் மனை ஒழுக்கத்தின் மேதக்க நிலை வேளாளர்
குலத்தின் கண்...."
(தி.பு. 1280)

என்னும் பாட்டால் சேக்கிழார் குறிப்பிடுவதன் வாயிலாக அந்தச் சமுதாய மாந்தர் வாழும் நிலை தெளிவாகின்றது.

திருமண முறை

திருநாவுக்கரசர் புராணத்தில் இரண்டு இடங்களில் திருமணம் பற்றிய செய்திகளைச் சேக்கிழார் கூறியுள்ளார். திருநாவுக்கரசர் இளமை யிலேயே துறவு வாழ்க்கை மேற்கொள்கிறார். அதனால் அவருக்குத் திருமணம் நிகழவில்லை. திருநாவுக்கரசரின் பெற்றோர் திருமணத்தையும் தமக்கையரான திலகவதியாருக்குச் செய்யும் திருமண ஏற்பாடுகள் பற்றியும் சேக்கிழார் சுட்டுகிறார்.

மாதினியார் புகழனார் திருமணச் செய்தியைச் சேக்கிழார்,

"புகழனார் தமக்குரிமைப் பொருளில் குலக் குடியின்கண்
மகிழவரு மணம் புணர்ந்த மாதினியார்..."

(தி.பு.பா. 17)

என்று கூறுவதால் குலம், குடி, உரிமை என்பது மணஞ்செய்யும்போது பெரியோர்களால் உறுதி செய்யப்படுவதென்பது தெரிகிறது. ஒரே குலமும் மணம் செய்வதற்குரிய உறவு முறையும் உரிமையும் ஆராயப்பெற்றே திருமணம் உறுதி செய்யப்படுகிறது.

திருநாவுக்கரசர் காலத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் மணம் செய்வதற்குரிய வயது வரையறை செய்யப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கோவலனுக்குப் பதினாறு வயதும்,

கண்ணகிக்கு பன்னிரண்டு வயதும் நிரம்பி இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இதே வழக்கம் திருநாவுக்கரசர் காலத்திலும் இருந்துள்ளது. இதனைச் சேக்கிழார்,

"அந்நாளில் திலகவதியாருக்கான் டாறிரண்டில்"

(தி.பு. பா. 22)

என்று கூறுவதால் திலகவதியாருக்குத் திருமணம் பேசி முடிக்கும்போது பன்னிரண்டு வயது நிரம்பியுள்ளதைக் காணமுடிகின்றது. ஆனால் கலிப்பகையாருக்கு வயது கூறும்போது உரிய வயது என்று மட்டும் பொதுவாகக் கூறப்படுகிறது. ஆதலால் இவருடைய வயது பதினாறாக இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

கலிப்பகையார் புகழனார் குடும்பத்தில் பெண்கொள் விரும்பி மேலோரைத் திருமணம் பேசி வருமாறு அனுப்பினார். அவர்கள் திலகவதியாரின் வீட்டிற்குச் சென்று முறையாகப் பெண் கேட்கின்றனர். திலகவதியாரின் பெற்றோரிடம் குலம், குணம் பற்றிப் பேசுகின்றனர். இதனைச் சேக்கிழார்,

"குணம் பேசிக் குலம் பேசிக் கோதில் சீர்ப் புகழனார்
பணங் கொணர கைலல்குற் பைந் தொடியை மண நேர்ந்தார்"

(தி.பு. பா. 24)

என்று விளக்குகிறார். ஆதலால் அக்காலத்தில் ஒரே இனத்தைச் சார்ந்தவர்கள் குலம் பற்றி அறிவதோடு மட்டுமன்றிப் பெண்ணின் குணத்தையும் அறிந்து திருமணம் செய்துள்ளனர் என்று புலனாகிறது.

சமுதாய பழக்க வழக்கங்களுக்கேற்பத் திருமண நிகழ்ச்சிகள் அமைகின்றன. நாவரசர் வாழ்ந்த சமுதாயத்திலும் திருமணத்திற்கு முன்பே பெண் கேட்டல் குலம், குணம், காணுதல், உறுதி செய்தல் திருமணம் செய்வதற்குரிய வயது வரம்பு ஆகியவற்றை அறிந்த பின்பே திருமணம் நடைபெற்றது என்பதை அறிய முடிகிறது.

அடிகளின் பாடற்பணி

சிவபெருமானே தன்னைப் பாடுமாறு பணித்தார் என்பதனை,

"பக்திமையால் பணிந்தடியேன் தன்னைப் பன்னாள்
பாமாலை பாடப் பயில்வித்தானை" (தி.தே. பா. 6–53–3)

என்ற வரிகளின் வாயிலாகப் புலப்படுத்துகிறார். நாவுக்கரசர் நம்முயிர் கடவுளுடன் கலக்க அவன் திருவடிகளைப் புகழ்ந்து பாடவேண்டும். அவன் புகழ் பாடும்போது அவன் நினைவே நம்முள்ளத்தில் நிற்கும். அவனை நெருங்க நெருங்க மாந்தர் நல்லோராவர். பேரன்பராவர்.

அவன் போல் அருளுடையவராவர். சமய நெறிகளின் நோக்கமே மாந்தனைத் தூயனாக்கி அவனை இறைவன் நிலையினை அடையச் செய்வதாகும்.

"அனுச யப்பட்டது இது என்னாதே
கனிமனத்தொடு கண்களும் நீர் மல்கிப்
புனித னைப்பூவ னூரணைப் போற்றுவார்
மனிதரில் தலையாய மனிதனே" (தி. தே. பா. 5:65:6)

என்ற பாடலின் வாயிலாக இறைவனைப் போற்றுகிறார்.

படி திகழ் மடங்கள் தண்ணீர்ப்
பந்தர்கள் முதலாய் உள்ள
முடிவி இலா அறங்கள் செய்து
முறைமையால் வாழும் நாளில்" (தி.பு.பா.2)

என்ற பாடலின் மூலம் சேக்கிழார் விளக்குகிறார்.

திருவீழிமிழலை சேர்தல்

நாவரசரும், ஞானசம்பந்தரும், திருவீழிமிழலையை அடைந்தனர். நகரத்தார் தோரணங்கள், பொற்குடங்கள் அமைத்தும், நறும்புகை எழுப்பியும் விளக்கு ஏந்தியும், பூத்தூவியும், பல்லியங்கள் முழங்கியும் பெரியோர்களை வரவேற்றுத் திருக்கோயிலுட் கொண்டு இறைவன் முன் நிறுத்தினர்.

அன்பே உருவானத் தலைவரும், அருளையே உயிராகக் கொண்டத் தலைவரும் திருவீழிமிழலையில் வீற்றிருக்கக் கூடிய இறைவனை வணங்கிப் போற்றினர். அவ்விறைவன் மேல் கொண்டப் பற்றினால் சில காலம் அங்கு தங்கினர். அப்பொழுது,

"....மாரி சுருங்கி வளம் பொன்னி
நதியும் பருவம் மாறுதலும்
நீரின் இயன்ற உணவு அருகி
நிலவும் பல மன்னுயிர்கள் எலாம்
பாரின் மலிந்த இலம்பாட்டில்
படர்கூர் வறுமை பரந்ததால்" (தி.பு.பா. 225)

வான் பொய்யினும் தான் பொய்யாக் காவிரியில் நீர் இன்மையால் உணவு பற்றாக்குறை ஏற்பட்டது என்று சேக்கிழார் விவரிக்கிறார்.

மக்கட் சமுதாயத்தை வருத்திக் கொண்டிருக்கும் பசிப்பிணி என்னும் கொடிய பிணியை மாற்ற வேண்டும் என்பதை,

"பசியுறும் ஆருயிர் மக்கள் பலராவர்" (மணி. பா.18)

என்ற பாடல் வாயிலாக விளக்கிய சாத்தனார் அப்பிணியைப் போக்க வேண்டும் என்று விளக்குகிறார்.

தொண்டர்களுக்கு உணவளிக்கும் பொருட்டு நாம் உங்களுக்குப் படிக்காசு தருகின்றோம் என்று கூறி விண்ணழி விமானத்தின் மேற்குப் பீடத்திலும் கிழக்குப் பீடத்திலும் அவ்விருவருக்கும் நாள்தோறும் படிக்காசு வைத்தருளினார்.

''.........எல்லாம் எய்தி உண்க என
இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச்
சொல்லால் சாற்றிச் சோறு இட்டார்
துயர் கூர் வறுமை தொலைத்திட்டார்'' (தி.பு.பா. 257)

என்ற பாடலின் வாயிலாக இருவரும் அடியார்களுக்கு உணவளித்த முறையினை விளக்குகிறார் சேக்கிழார்.

திருநாவுக்கரசர் சிவபெருமானுக்குக் கைத்தொண்டு புரியும் அடியவராதலால் அவர்பெறும் காசு வாட்டமின்றி வணிகர்களால் ஏற்றுக்கொள்ளப்பெற்றது. அதனால் அவருடைய திருமடத்தில் நாள்தோறும் உரிய காலத்தில் அடியார்கள் திருவமுது செய்தார்கள். இதனையே சேக்கிழார்,

''.....கைத்தொண்டும் ஆகும் படிமையினால்
வாசி இல்லாக் காசு படி
பெற்றுத் தந்தார் வாகீசர்'' (தி.பு.260)

என்று இயம்புகின்றார்.

திருஞானசம்பந்தர் இறைவனுடைய ஞானப்பால் உண்டு திருமகனாக ஏற்றுக் கொள்ளப் பெற்றமையால் அவர் பெறும் காசு வணிகர்களால் ஏற்றுக் கொள்ளப் பெறவில்லை. ஆதலால் உணவுப் பொருள்கள் வாங்க காலம் தாழ்ந்தமையால் ஞானசம்பந்தர் திருமடத்தில் அடியார்கள் காலந்தாழ்ந்து அமுது செய்ய வேண்டிய நிலைமையேற்பட்டது. அதனை யுணர்ந்த ஞானசம்பந்தர் வீழிமிழலைப் பெருமானையிறைஞ்சி,

''வாசி தீரவே காசு நல்குவீர்
மாசிர் மிழலையீர் ஏசவில்லையே'' (தி.தே.பா. 1-92-1)

என்று பாடுகிறார். இதிலிருந்து உடற்தொண்டாலும் இறைவனின் அருளைப் பெறலாம் என்றும் உழைப்பிற்கு இழிவில்லை என்ற உண்மையினையும் அறிந்து கொள்ள முடிகிறது. பின்னர் எங்கும் மழை பெய்து உணவுப் பொருள்கள் நிறைய விளைந்தமையால் பஞ்சம் நீங்கியது. இவ்வாறு திருவீழிமிழலையில் ஏற்பட்டிருந்த பஞ்சத்தினைப் போக்கி மக்களை தன் இறையருளால் பசிப்பிணித் தீர்த்தார்கள்.

திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் திருமறைக்காட்டிற்குச் செல்கின்றனர். அங்குள்ள சிவபெருமான் கோயில் கதவுகள் திருக்காப்பிடப் பட்டு மக்கள் இறைவனை வணங்குவதற்குத் தடையாக இருந்ததைக் கூறுகின்றனர். ஞானசம்பந்தர் அப்பர் பெருமானை முறைகள் அடைந்துள்ள இத்திருத்தலங்கள் திறக்கப் பாடுவீர்கள் என்றார். அடிகளார் சிவபிரானை நோக்கி,

''பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணினுர் வலஞ் செம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே'' (தி.தே.பா.4-10-1)

என்று பத்துப்பாடல்கள் பாடினார். ஆனால் கதவு திறக்கவில்லை. பத்துப் பாடல்கள் பாடியும் கதவுகள் திறக்காதபடியினால் நாவரசர்,

''அரக்கனை விரலா லடர்த்திட்ட நீர்
இரக்க மொன்றி லீரெம் பெருமானீரே
சுரக்கம் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க விக்கத வந்திறப் பிம்மினே'' (தி.தே.பா. 4-10-11)

என்று பாடினார். அவ்வளவில் கதவுகள் தாமாகத் திறந்து கொண்ட அதன் பின் இறைவனை என்புருக ஊனுருக உயிருறுக வணங்கித் தமிழ்ப் பாமாலைகள் பாடிப் போற்றினார்.

திறக்கப்பட்ட கதவுகளை என்றும் அடைக்கவும் திறக்கவும் பாடுமாறு ஞானசம்பந்தரை வேண்டினார் நாவுக்கரசர். அவ்வாறே சம்பந்தர் பதிகம் பாடத் தொடங்கிய உடனே முதற்பாட்டிலேயே தாமாக அடைக்கவும், திறக்கவுஞ் செய்தன. பின்னர் அங்குள்ள மடத்திலிருந்து கொண்டு சில நாட்கள் சமயப் பணியைச் செய்கின்றனர்.

திருவையாற்றிற் கயிலைக் கோலம் கண்டு மகிழ்தல்

நாவுக்கரசர் இறைவனைப் பாடுவதிலும் சமயப் பணியாற்றுவதிலும் உழவாரப் பணி செய்வதிலுமே தன்னுடைய வாழ்நாட்களைக் கழித்தார். தமிழ்நாட்டில் உள்ள எல்லாத் தலங்களிலும் தொண்டு புரிந்து கொண்டிருந்த அவர் இறைவனின் கயிலைக் கோலம் காண ஆசைப்பட்டார். முதுமையை எய்திவிட்டமையால் அவரால் கடக்க இயலவில்லை. இருப்பினும் இறைவனைக் காணவேண்டும் என்ற எண்ணத்தால் அவர் வடக்கே கயிலை நோக்கிப் புறப்பட்டார். தமிழகத்திற்கு வடக்கேயுள்ள பல நாடுகளைக் கடந்து சென்றார். அவரது ஆர்வத்தையும் துணிவையும் கண்ட இறைவன் அவருக்கு வெள்ளி மலையின் மேற் பவளமலை யொன்று மரகதக் கொடியுடன் விளங்குவது போன்று திருக்கயிலாயத்திலே செம்மேனியம்மானாகிய சிவபெருமான் நீலமேனி நேரிழையாகிய

உமாதேவியாருடன் வீற்றிருந்தருளினார். அழகிய அத்தெய்வக் காட்சியை திருஐயாற்றில் காணப்பெற்று மகிழ்ந்த திருநாவுக்கரசர் தலைமேல் கைகுவித்திறைஞ்சி நிலத்தின்கண் வீழ்ந்து பணிந்தார்.

''வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
....
....
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி'' (தி.தே.பா. 6.54-1)

என வரும் பதிகம் பாடி இறைவனைப் போற்றினார். எல்லையற்ற திருவருளாகிய இன்பக் கடலில் மகிழ்ந்தார்.

நாவரசரின் கைத்தொண்டும் வாய்த்தொண்டும் இறைவனிடம் கொண்ட பக்தியும் விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும்தான் நேரடி யாகவே இறைவனைக் காணும் பாக்கியத்தைத் தந்தது என்பதில் சிறிதும் ஐயமில்லை. நாவரசர் வாழ்ந்த வாழ்க்கை தனக்கென வாழாமல் மக்களின் நன்மைக்காகவே வாழ்ந்தவர் என்று கூறுவது பொருத்தமானதாகும். அவர் ''மக்கள் தொண்டே மகேசன் தொண்டு'' என்ற நிலையில் அவர் ஊருக்காக வாழ்ந்தவர்.

18. செல்கதிக்கு வழிகாட்டுஞ் சிவன்

கே.ஏ. இராஜு, சென்னை.

''உலகெலாம் உணர்ந் தோதற் கரியவனாகிய'' சிவபெருமானைச் சரியை நெறியில் நின்று பத்தி செய்தவர் ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்த நாவுக்கரசர் பெருமான். ''அப்பரே''யெனத் திருஞான சம்பந்தப் பெருமானால் அழைக்கப் பெற்ற நாவுக்கரசரின் இயற்பெயர் மருணீக்கியார்.

சிறப்பாக - தொண்டு நெறியின் நின்ற, நாவுக்கரசர், நமக்காகத் தம் மேல் ஏற்றிப் பாடிய பதிகங்கள் 312. அவை உணர்த்தும் 'அறம்' இஃதென அறிய முயற்சிப்பதே இவ்வாய்வின் நோக்கம்.

''அறந்தரு நாவுக்கரசும்'' என்னும் தொடரைத் தெய்வச் சேக்கிழார் பெரியபுராணத்தில் கையாண்டுள்ளதன் மூலம் திருநாவுக்கரசர் பெருமான் அறத்தை உணர்த்தியிருக்கும் சிறப்பு அறியலாகிறது; நம் ஆய்வுக்குத் துணையாகிறது.

கோதில் சிவச் சின்னம் தாங்கி,

தேச நெறி நிலையாமை கண்டு அறங்கள் செய்வாராய் ஆசில் அறச் சாலைகளும் தண்ணீர்ப் பந்தரும் அமைத்த நாவுக்கரசர் தம் பதிகங்கள் வழியாக அறங்களை உணர்த்தியமை அதிசயமன்றன்றோ?

நம்மை நாம் உணரவும், அநாதி சிவபரம் பொருளை உணர்ந்து திருவடிப் பேற்றினை அடையவும் நாவுக்கரசர் உணர்த்தும் அறம் நமக்கு உதவுகிறது என்பதை மறுக்க இயலாது; உண்மையே!

கூற்றாயினவாறு விலக்ககலீர்

நாவுக்கரசரின் பதிகங்கள் யாவும் இறைவனின் பெருமைகளையும் திருநாமத்தையும் போற்றும் வகையில் தோத்திரங்களாக அமைந்துள்ளதைப் பார்க்கிறோம்; பத்தியை வெளிப்படுத்தும் பாங்கும் விளங்குகிறது.

முதல் பதிகமாகிய ''கூற்றாயினவாறு விலக்ககலீர்'' எனத் தொடங்கும் பதிகத்தை நாவுக்கரசர் பாடியதைச் சேக்கிழார் குறிப்பிடுகையில்,

நீற்றால் நிறைவாகிய மேனியுடன் நிறை அன்புறு சிந்தையில் நேசமிக,

மாற்றார் புரம் மாற்றிய வேதியரை -
மருளும் பிணி மாயை அறுத்திடுவான் -
"கூற்றாயினவாறு விலக்ககலீர்" என,
நீடிய கோதில் திருப்பதிகம்
போற்றாலுல கேழின் வருந்துயரம் போமாறு
எதிர் நின்று புகன்றனரால்"

என்கிறார்.

பின்னர், 'நாவுக்கரசு' என்னும் திருநாமம் உலகேழினும் நயப்புற மன்னுதல் பெற்றார் என்று சேக்கிழார் குறிப்பிட்டுச் செல்கிறார்.

இதன் மூலம்,

நாவுக்கரசரின் பதிகங்கள் வினைத்துன்பங்களைப் போக்குவன;
நீறணியப் பெற்ற மேனியே நிறைவாகிய மேனி;
நிறை அன்புடைய மனதில் நேயம் மிகும்;

என்பவைகளையெல்லாம் உணரப் பெறுகிறோம். "அமண் தவிர்ந்துன்றன் சரண்புகுந்தேன்" என்று, தருமசேனர் சமண மதத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்றம் பெற்று 'நாவுக்கரசு' என்னும் பெயர் பெற்ற காலமே திருநாவுக்கரசின் தோற்றக் காலமாகக் கொள்வது ஏற்புடையதாம்!

"கருமானின் உரியதளே உடையா வீக்கிக்கனை கழல்கள்
....
அருமான வாண்முகத்தா ளமர்ந்து காண அமரர்கணம்
முடிவணங்க ஆடுகின்ற
....
பெருமானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே!!"

(பெரிய திருத்தாண்டகம்)

எனில், நம் பிறவி எப்போது? உணர்வோமாக!

அப்பர் பெருமான் இறைவன் திருவடியை எய்தியபோது பாடிய இறுதிப்பதிகம் "எண்ணுகேன் என் சொல்லி" எனத் தொடங்கும் பதிகமாகும்.

எம்பெருமான் திருவடி அல்லால் மற்றொரு துணை இல்லை; உடம்புள்ளேயுள்ள ஒன்பது வாயில்களும் ஒன்றுசேர அடைக்கும் போது சிவன் திருவடியொன்றினையே எண்ணுதல் அன்றி வேறு செயல் உண்டோ? என்றும்

"உற்றார் இலாதவர்க்கு உறுதுணையாவன
....
.... ஐயாறன் அடித்தலமே"

என்றும் முடிவுரைக்கக் காண்கிறோம்.

தொண்டர்க்கு அணிய! (அண்மை)

அத்தகைய இறைவனின் திருவடியானது,

"சீலத்தராகித் தொடர்ந்து விடாத தொண்டர்க்கு அணிய".

ஆயின்,

"தேவர்க்கு சேய".

("அயனொடு மா லறியாத ஆதியான்" சிவபெருமான்)

என்னும் அப்பர் வாக்கு சரியை நெறியின் (தொண்டு) மேன்மையை நமக்கு அறிவுறுத்துகிறது; காண்க,

"இராப்பகல்,
தொண்டராகித் தொடர்ந்து விடாதவர்க்(கு)
அண்டம் ஆளவும் வைப்பர் ஆருரரே".

உருவ வழிபாடு, மலர் கொய்து மாலையாக்கி இறைவனுக்குச் சூட்டுதல், இறைவன் புகழ்பாடுதல், உழவாரப்பணி, மூர்த்தி, தலம், தீர்த்தம் போற்றி வழிபடுதல் போன்ற உடலியக்கத் தொண்டு நெறியை உணர்த்த,

"பெரும்புலர் காலை மூழ்கிப் பித்தற்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங் கார்வத்தை யுள்ளே வைத்து
விரும்பி நல் விளக்குத் தூபம் விதியினால் இடவல் வார்க்குக்
கரும்பினிற் கட்டிபோல்வர் கடவூர் வீரட்ட னாரே".

என்பார் அப்பர்.

மேலும், வினை தீர்க்கும் வழியென,

"உரைசெய் நூல் வழி (சிவாகம விதிப்படி) ஒண்மலர் எட்டிடத்
திரைகள் போல் வரு வல்வினை தீர்ப்பரால்" (5-3-7)

என்று கூறுகிறார்.

அரன் கோயில் வலம் வந்து அகத்தும் புறத்தும் வழிபாடு செய்திடாவிடில், ஆக்கையால் பயன் என்ன? வாகீசர் இவ்வாறு வினாவுகிறார்.

"ஆக்கையாற் பயனென் - அரன் கோயில் வலம் வந்து
பூக்கையால் சுட்டிப் போற்றி யென்னாத இவ்
ஆக்கையாற் பயனென்ன?"

நன்னெறி காட்டும் 'நமச்சிவாயம்'

"எண்ணி ஆயிரம் பூக்கொண்டு
ஆறுடைச் சடையினானை அர்ச்சித்தான்

அடியிணைக் கீழ்
வேறுமோர் பூக்குறைய மெய்ம் மலர்க் கண்ணை
மிண்டக் கூறுமோர் ஆழி ஈந்தார் - குறுக்கை வீரட்டனாரே''.

எனப் பூக்கொண்டு இறைவனை போற்றும் திறத்தை வெளிப்படுத்துவது போன்று, இறைவனின் திருநாமமாகிய ஐந்தெழுத்து 'நமச்சிவாய' செப்பாராகில் தொடர்ந்து பிறவிக்கு ஆட்படுவர் என்பதை,

''திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்......
....
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே!

என்பதன் மூலம் தெரிவிப்பதோடு,

திருக்கோயில் வலம் வருதல், மலர் பறித்து இறைவனுக்கு அர்ச்சித்துப் பின்னர் உண்ணுதல், நோய்கள் நம்மைவிட்டு நீங்கும்படியாக வெண்ணீறு அணிதல் ஆகியவற்றை மேற்கொள்பவர் இறையருளுக்கு உரியவரா கின்றார் என்பதை நாவுக்கரசர் பெருமான் வலியுறுத்துகிறார்.

அவரே, தமக்குப் பாதுகாப்புப் படைக்கலமாக விளங்கியதும், துன்பகாலத்தில் நற்றுணையானதும் இறைவனின் திருநாமமே என்பதையும்,

''படைக்கலமாக உன் நாமத்தெழுத்து அஞ்சு என் நாவில்
கொண்டேன்''

''கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே''

என்றும் தன்மேல் ஏற்றி நமக்காகப் பாடுகிறார்.

எனவே, உயிரானது எப்பொழுதும் உரைக்க வேண்டியதும் போற்ற வேண்டியதும் இறைவன் நாமத்தையேயாம்; அவ்வாறு இறைவன் நாமத்தை உரைத்திடாத உயிர் உடலைவிட்டு நீங்குவதற்குக் காரணமாக எத்தனை நோய்களை உடம்பு பெற்றாலும் என்ன? என்பதை,

''நின்றன் நாமம் உரையா உயிர்போகப் பெறுவேனாகில்
உறுநோய் வந்து எத்தனையும் உற்றால் என்னே?''

என்னும் பாடல் மூலம் அறிகிறோம்.

இத்தகைய இறைவன் திருநாமத்தை நாவுக்கரசர் பயின்ற தன்மையை எடுத்துக்காட்டும் வகையில் அமைந்த பாடல்

''கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூர்அரனே''.

என்பதாம்.

எனவே அவரது உரையை நமது உரையாகக் கொண்டு இறைவனை வேண்டற்பாலதாவது,

"நின்நாமம் பரவி நமச்சிவாய என்னும் அஞ்செழுத்தும்
சாமன்று உரைக்கத் தருதி கண்டாய்"

என்பதே. கச்சி ஏகம்பன், அஞ்செழுத்து நினைவார்க்கு என்றும் மருந்தவன் காண்! - மருந்தும், நல்மருத்துவனும் அவனே.

அன்பலாற் பொருளுமில்லை

இவ்வாறு இறைவனுக்கு தொண்டு செய்தும், அஞ்செழுத்தோதியும் பத்தி செய்வது நன்றி கலந்த அன்பின் வெளிப்பாடாகும்.

"வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன்",

எந்தை, ஈசனுடைய இணையடி நீழலானது,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும்"

போன்றது.

உயிர்கள் எல்லாம் இறைவனுக்கு எல்லையில்லதோர் அடிமை பூண்டால்,

"அல்லல் என்செய்யும் அருவினை என்செய்யும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செய்யும்"

என்பார் அப்பர் பெருமான்.

"பரசுவது நம் பெருமான் கழல்கள் என்றால் பழுதனையாது"
(பெ.பு. 616, ஞானசம்பந்த சுவாமிகள் புராணம்)

என்பதையும் கருத்தில் கொள்ளல் நன்றாம்.

அத்தகைய இறைவனின் உரிமைப் பொருளைப் பற்றி வாகீசர், உளம் நெகிழ்ந்து, இறைவனுக்கு,

"என்பலாற் கலனுமில்லை எருதலால் ஊர்வதில்லை
புன்புலால் நாறுகாட்டின் பொடியலால் சாந்துமில்லை
(வாசனைப் பொடி)
துன்பிலாத் தொண்டர் கூடித் தொழுது அழுது ஆடிப்பாடும்
அன்பலாற் பொருளுமில்லை" ஐயன் ஐயாறனார்க்கே.

என்று போற்றுவதிலிருந்து இறைவனுக்கு அன்பு செய்வதே பத்தி என அறிவுறுத்தப் பெறுகிறோம்.

எனவே நன்றி கலந்த அன்பினை இறைவனிடம் செலுத்தும் நோன்பினை அறமாகக் கொள்ளலாம் என்பது துணிபாம்.

அவ்வன்பினைச் செலுத்துவதற்கு உள் நின்று உறையும் இறைவனை நாடுக!

''என்னுளே உயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே!''

என்கிறார் ஆளுடைய அரசர்.

அகமலாற் கோயிலில்லை

அத்தகைய ஈசன், உள்ளத்துள்ளே ஊறும் தேன் போன்றவன்; தன்னைக் கொண்டாடும் அடியவர்தம் மனத்தான் ஆம். இதனை,

''அஞ்சு மாடல் அமர்ந்தடி யேனுடை
நெஞ்ச மாலய மாக்கொண்டு நின்றதே''

என்பதன் மூலமாக அறியலாம். அத்துடன்,

தன்னை மனதில் நினைப்பவர்களைத் தானே உறவாக்கிக் கொண்டு உயக் கொள்வது இறைவன் இயல்பாம் என்பதையும்,

''முகமெலாம் கண்ணீர் மல்க முன்பணிந் தேத்துந் தொண்டர்
அகமலாற் கோயிலில்லை''

என்பதையும் அரசர் வழிநின்று சிந்திக்கும்போது,

''மனமே கோயிலாக இருந்தான்''

என்னும் வாகீசர் வாக்கு - இனிப்பேயாம்.

மனதையே கோயிலாகக் கொண்டுள்ள இறைவனை அடையப் பற்றினை விடல் வேண்டும்.

ஒன்றைப் பற்றுதல் என்பது மனதின் இயல்பாம். பற்றியதை விடுவதும், விட்டபின் வேறொன்றைப் பற்றுவதுமான மன இயல்புக்கு நாவுக்கரசர் பெருமான் ஊசலைக் காட்டாகக் குறிப்பிடுகின்றார்;

''உறுகயிறு ஊசல் போல ஒன்றுவிட் டொன்று பற்றி
மறு கயி றூசல் போல வந்துவந் துலவு நெஞ்சம்''.

கயிறு அறுந்த ஊசல் தரையை அடைவது திண்ணமாம் போன்று, (பாசம்) பற்றைவிட்ட ஆன்மாவானது இறைவனை அடையும் என்பதாம்.

அதனை அடைய,

''வினையின் பாசம் மறைவிலே புறப்பட்டு
ஏறும் வகை எனக்கு அருள்''

என்று நமக்காகத் தன்மேல் ஏற்றி இறைவனை வேண்டுகிறார் நாவுக்கரசர் பெருமான்.

"ஓர் உடம்பில் இருவராகி........
.... பயின்ற எம்பரமமூர்த்தி"

என்னும் அடிகள் அருள்சக்தியைத் தம்முள் கொண்டுள்ள இறைவனின் ஒருமைத் தன்மையை நமக்கு உணர்த்துவதால்,

"தானன்றி வேறொன்றில்லாத் தத்துவன்" சிவன் என்பதும், நமக்கு அருள்பவன் அவனன்றி வேறொருவர் இல்லை என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனியாம்.

அனைத்துமாய் நிற்கும் இறைவனைப் போற்றும் நெறியாய் சரியை நெறியை மேற்கொண்ட நாவுக்கரசர் பலவாறாக நமக்குணர்த்தும் ஞானக் கருத்துகள் அனேகம்; அவை அறக் கருத்துகளே!

"கடுக நும் வல்வினையைக் கழற்ற லாமே!"

19. நாவுக்கரசரும் சம்பந்தரும்

க. இலக்குமி நாராயணி, சென்னை.

ஆளுடைய அரசும், ஆளுடைய பிள்ளையும் - முதற் சந்திப்பு

தில்லையில் 'அரியானை' எனத் தொடங்கும் பெரிய திருத்தாண்டகமும், 'செஞ்சடைக் கற்றையும்' என்னும் நேரிசையும் பாடிக் கூத்தபிரானைத் தொழுது, 'தஞ்செயலின் ஒழியாத திருப்பணியாம் உழவாரப்பணியும் செய்யும் நாளில், உமையவளின் திருமுலைப்பாலுண்டு அருள்ஞானம் பெற்ற ஆளுடைய மறைப் பிள்ளையார் வரலாற்றை அடியார்கள் சொல்லக் கேட்டருளினார். அதனால் 'அதிசயமாங் காதல் கூர, வாழ்வு தரும் அவரது மலர்க் கழல்கள் வணங்குவதற்கு மனத்துள் எழுந்த விருப்பம் வாய்ப்ப', அப்பொழுதே கூத்தபிரானை வணங்கி விடை பெற்றவராய்த் திருநாரையூர் வந்தடைந்தார்.

அதன்பின் தொண்டர் குழாம் தம்மைச் சூழ்ந்து வர, தொழுதேத்தும் கரத்தோடும், திருநீறு துலங்கும் கோலத்தோடும் வந்த ஆளுடைய பிள்ளையைக் கண்டார். காண்பவர் தம் மனங்களெல்லாம் கரைந்து உருகும்படி கருணை பொழியும், கடலில் கல்லே மிதப்பதாக ஊர்ந்து கரையேறிய திருநாவுக்கரசர், சீகாழிப் பதி பக்கத்தில் வந்து சேர்ந்தார்.

இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற அரசுகள் எழுந்தருளிய செய்தி கேட்டதும் ஆளுடைய பிள்ளையாரும், 'காண்டகைய பெருவிருப்பு மிக்க திருவுள்ளக் கருத்தினோடு மூண்டஅருள் மனத்தன்பர் புடைசூழ எழுந்தருளி முன்னே வந்தார்.'

இருவரும் இணைந்த காட்சியை இறைமாட்சியொடு சேக்கிழார் பெருமான், "தொழுதணைவுற் றாண்டவர சன்புருகத் தொண்டர் குழாத் திடையே சென்று பழுதில் பெருங் காதலுட னடிபணியப் பணிந்தவர் தங்கரங்கள் பற்றி, எழுதரிய மலர்க்கையா லெடுத்திறைஞ்சி விடையின் மேல் வருவார் தம்மை, யழுதழைத்துக் கொண்டவர்தாம் "அப்பரே"யென அவரும் "அடியே"னென்றார், என நம் நெஞ்சுருக மனக்கண் முன் நிறுத்துகிறார்,

அடிபணிந்த அப்பரைக் கண்டு, ஆண்டால் மூத்தவர் தம்மை அடிபணிவதா? என மனம் மிகப் பதைப்பெய்தி, அன்பின் வடிவாம்

அரசைக்கண்டு அருள் வடிவாம் பிள்ளை "அப்பரே" எனப் பொருந்த அழைத்தார். இவ்வாறு ஒருவரை ஒருவர் அடியார் வணங்குதல் அன்பினால் நிகழ்வதாம். "அப்பரே" எனப் பிள்ளையார் அருமையாக அழைத்ததால், ஆளுடை அரசுக்கு "அப்பர்" எனும் பெயர் பயின்று வழங்கலாயிற்று. அச்சொல்லின் கண் உள்ள ஏகாரம், 'நீவிர் தந்தை யன்றோ', ஆதலின் அடிபணிதல் தகாது என்ற கருத்து காட்டி நின்றது. "அப்பர்" என்ற சொல் ஐயர், தலைவர் - தந்தை போன்ற பொருள் கொண்டது. அரசுகளும், 'அடியேன்' என்னல் - அப்பராம் தன்மையில் வைத்து நீர் அருளினாலும் நான் என்றும் உமது அடியவனேயாம். ஆதலின் அடிபணிதலே எனக்குத் தகுதி என்பது குறிப்பு. சைவத் திறத்திற் கூறும் பணிவுக்கு - நாயனாரே சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். என்றும் பணியுமாம் பெருமை அன்றோ.

திருத்தோணிபுரத்துப் பிரானாரைப் பாடும்படி அப்பரைப் பிள்ளையார் வேண்ட "பார் கொண்டு மூடி..." எனத் தொடங்கும் பதிகம் பாடி மகிழ்வித்து, பிள்ளையார் தம் திருமடத்தில் எழுந்தருளி அமுது செய்து, மருவிய அன்பு அற்றை நாள் போல் வளர்ந்தோங்கப் பல நாட்கள தங்கினார். அந்நாட்களில் அப்பரும் ஆளுடையப் பிள்ளையும் ஒருவரோடு ஒருவர் அளவளாவி பெருமகிழ்ச்சி பெற்றனர். உவப்பத் தலை கூடி உள்ளப்பிரிதல் புலவர் - அடியவர் பண்பன்றோ! சோழ நாட்டில் சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருத்தலங்களைத் தரிசிக்க விழைந்த நாவுக்கரசர் தம் கருத்தியம்ப, ஆளுடைய பிள்ளைகளும் அதற்கு இயைந்தனர்.

நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் - இரண்டாம் சந்திப்பு

நாவுக்கரசர், திருவாதிரைத் திருநாளில் வீதிவிடங்கப் பெருமான் எழுந்தருளும் திருவுலாவில் கலந்து கொள்ள விழைந்தவராய்த் தம் அடியாருடன் சென்றார். இறைவன் திருக்கோயிலை அடைந்து, மேனி புளகமெய்த, விழிநீர் மல்க, போற்றித் திருத்தாண்டகம் பாடித் துதித்தனர் "கண்டலே கருத்தாய் நினைந்திருந்தேன்" என்ற பதிகத்தாற் இறைவனைத் துதித்துக் கோயில் வலம் வந்தார். திருமுன்றில் முன் சார்ந்து, "ஆருரரைக் கையினாற் தொழா தொழிந்து கனியிருக்கக் காய் கவர்ந்த கள்வனேன்" என்னும் திருப்பதிகத்தால் போற்றித் தங்கி இருந்தனர். அதன் பின்னர் பிற பதிகளையும் சென்று பணிந்தனர்.

ஆளுடைய பிள்ளையார் சீர்காழியிலிருந்து புறப்பட்டு, பிற தலங்களைத் தரிசித்த பின், பூம்புகலூர் வந்து இறைவனை வணங்கி, முருகநாயனார் திருமடத்திற் தங்கிய காலத்து, நாவுக்கரசர் திருவாரூரை விட்டு நீங்கி, திருப்புகலூர் நோக்கி எழுந்தருளினார் என்னும் செய்தி

கேட்டார். அவரை எதிர் கொண்டழைக்கும் பெரு விருப்பத்தால் தொண்டர் குழாம் சூழச்சென்றார். இச்செய்தி கேட்டு நாவுக்கரசர் மகிழ்ந்தார். திரண்ட பெருந் திருநீற்றுக் கூட்டமிரண்டும் நிலவொளிப் பிழம்பாகிய இரு கடல்கள் இணைந்தன போலப் பொருந்தின.

பிள்ளையார் அப்பரிடம் திருவாரூர் நிகழ் பெருமையினைக் கூறும்படி வேண்டினார். அவரும் திருவாரூர் திருவாதிரைத் திருநாளின் சிறப்பை,

"முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே
பக்தர்களோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்த னாரூ ராதிரை நாளா லது வண்ணம்!"

எனப் பதிகமாய் அருளினார். பிள்ளையார் தென் திருவாரூர் சென்று கும்பிட்டு வந்திங்கு உடன் அமர்வேன் எனக் கூறிச் செல்ல, அப்பர் பெருமான் தண்பணை சூழ் திருப்புகலூர் புகுந்தனர்.

சில நாட்கள் சென்ற பின்னர், துப்புறழ்வேணிக் கண்ணுதலாரை ஆரூரில் தரிசித்த பின்னர் திருப்புகலூர் வந்து விருப்பொடு வாகீசர் உடனுறைந்தார். அந்நாளில் வள்ளலாகிய சிறுத்தொண்ட நாயனாரும் திருநீலநக்க நாயனாரும் வந்து சந்தித்தனர். முருக நாயனார் திருமடத்தில் ஒருப்படு சிந்தையினராய் அடியவர்கள் உடனுறைந்து சிவானந்தமாகிய பெரும் பயனைப் பெற்றனர். அந்நாளில் சிவத்தலங்கள் பலவற்றையும் தொழ நினைந்து பிள்ளையாரும் நாயனாரும் திருப்புகலூர் தொழுது புறப்பட, ஏனைய அடியார்கள் விடைபெற்று ஏகினர். திருவம்பர் சென்று வணங்கிய பின்னர் இருவரும் திருக்கடவூர் சேர்ந்து, கூற்றுவனை உதைத்தருளிய பொன்னடிகளைத் தொழுது, குங்கிலியகலய நாயனார் திருமடத்தில் சிவனடியார்களுடன் அமுது செய்தருளினர். திருக்கடவூர் மயானத்தையும், திருவாக்கூரையும் வணங்கிய பின், திருவீழிமிழலை சென்று அடையும் முன் அடியாரும், மறையோரும் அன்புடன் நிறைகுடம் ஏந்தி வரவேற்கத் திருக்கோயிலின் வாயிலை அடைந்தனர். கோயிலை வலம் வந்த நாவுக்கரசர் 'விழுந்தார், எழுந்தார் விம்மினார், போரானை' எனத் தொடங்கும் திருத்தாண்டகம் பாடினார்.

சில நாட்கள் சென்ற பின் மழை இன்றி, வளம், பொன்னி நதியும் பருவம் மாறிற்று. நீரால் விளையும் உணவு அருகிற்று. உயிர்கள் உணவின்றி வாட்டமுற்றன. வீழிமிழலையுடைய பெருமான் இரு பெருமக்களின் கனவிலும் தோன்றினார். "உம்மை வழிபடுவார்க்கு அளிக்க அளிக்கின்றோம், என்று கூறி, ஞாலமறிய படிக்காசு நித்தம் வைத்தார். அண்டர் பிரானருளால் படிக்காசு பெற்ற இருவரும் தத்தம் மடங்களில் பரமனடியார் எல்லாருக்கும் வளம் பெருகச் சோறிட்டு உலகம் காத்தனர்.

பிள்ளையார் திருமகனாராதலினாற் காசு வாசியுடன் பெற்றார். கைத்தொண்டாகும் அடிமையினால் வாகீசர் வாசியில்லாக் காசு பெற்றார், இவ்வாறு திருவருளின் பெருமையினால் உலகம் போற்றியிருக்கும் நாளில் மழை பெய்ய உலகம் செழித்தது. பிற தலங்களை வணங்க எண்ணித் திருவீழிமிழலை விட்டு நீங்கித் திருமறைக்காட்டில் இருவரும் சென்று சேர்ந்தனர்.

அங்குத் திருக்கோயிலின் கதவம், மறைகள் அருச்சனை செய்து திருக்காப்பிட்ட நாள் தொட்டு இதுவரை அடைத்துக் கிடக்க, அதனை நீக்கவல்ல அன்பர் வராமையால், பக்கத்தில் உள்ள வாயில் வழியே சென்று இறைவனை வணங்கி வருவதைக் கேட்டறிந்தனர்.

பிள்ளையார் நேர்வாயிலில் சென்று வணங்குதற் பொருட்டு, கதவம் திருக்காப்பு நீங்கப் பாடும்படி அப்பரை வேண்டிட, அப்பர் பெருமானும்,

''பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே''

என்னும் திருப்பதிகம் பாடினார், "இரக்க மொன்றிலீர் எம் பெருமானீரே" என்னும் இறுதிப் பாடலின் போது மணிக்கதவம் காதலன்பர் முன்பு காப்பு நீங்கியது. கலைமொழிக்கு நாதராம் அப்பரும் ஞான முனிவராம் பிள்ளையும் தொழுது விழுந்தனர். கடலொலியெனத் தேவரார்ப்பும் மறையொலியும் எழுந்தன.

ஆண்ட அரசும் சிவக் கன்றும் ஆனந்த வெள்ளத்திடை மூழ்கிக் கோயிலுள் சென்று பெருமானைப் பணிந்து போற்றிப் பரவி, என்பும் கரையும் வண்ணம் உள்ளம் உருகப் பாடி, கோயிலின் புறம் வந்து சேர்ந்தனர்.

அப்போது அப்பர் பெருமான் கவுணியரை நிறைக் கதவம் அடைக்கும் வகை நீரும் பாடியருளும் என்று பண்பின் மொழிந்த உரைகேட்டு சதுரம் மறை என்னும் பதிகம் பாடியபோது திருக்கதவம் அடைத்துக் கொண்டது.

அங்கு நிகழ்ந்தவற்றைக் கண்ட அடியவர்குழாம் அதிசயித்து, புளகமெய்திட கண்களில் அன்பு நீர் பொழிந்திட இணையில்லாத இருவர் பாதங்களையும் வணங்கினர். இருவரும் புறம்போந்து திருமடங்களிற் தங்கியருளினர். அது முதல் அக்கதவம் திறக்கவும் அடைக்கவுமாக நிகழ்ந்தது. அன்றிரவு வாய்மை திறம்பா வாகீசர் தாம் அரிதில் திறக்கப் பாடியமையினையும், பிள்ளையார் அடைக்கப் பாடிய எளிமையையும்

எண்ணி 'நம்பர் திருவுள்ள மறியா தயர்ந்தேன்' என்று அஞ்சி அவ்வுணர்விற் துயில் கொண்டார். இறைவன் அவரது கனவிற் றோன்றி "வாய்மூரில் இருப்போம், தொடர வா" என்று அருளி மறைந்தார். நாயனார் உடனே, "வா என்று போனார், அது என் சொல்", என்று பாடி, இது எம்பெருமானருள் ஆகில், யான் அங்குச் செல்வேன் என திருவாய்மூரை நோக்கிப் புறப்பட்டனர். இறைவன், நாயனார் தம்மைப் பின் தொடர, அணுக முடியாதபடி முன்னே சென்று, பொற்கோயில் ஒன்று காட்டி அதனுள் புகுந்து மறைந்தனர்.

இச்செய்தி கேட்டுப் பிள்ளையாரும் அங்கு எழுந்தருள அப்பர் அவரிடம் நிகழ்ந்ததனைக் கூறி வருந்தினார். பிழைத்துச் செவ்வியறியாதே திறப்பித்தேனுக்கே ஒளிக்கலாமேயன்றித் தமிழ் உறைப்புப் பாடி அடைப்பித்த பிள்ளையார் ஈண்டு வந்துள்ளார். அவருக்கு ஒளிக்கலாமோ? என்று நாயனார் பாடி அருள, இறைவன் பிள்ளையார் காணக்காட்சி தர அவர் பாடித் தொழுது, அரசுகளுக்கு காட்டக்கண்டு "பாட வடியார் பரவக்கண்டேன்" என்று பாடித் தொழுதனர். பின்னர் மீண்டும் திருமறைக்காடு சென்று ஆதி முதல்வனைப் பணிந்து இருந்தனர். அப்போது பாண்டிமாதேவியாராலும், குலச்சிறையாராலும் அனுப்பப்பட்டவர் சிலர் பிள்ளையாரைக் காண அங்கு வந்தனர். வந்தவர்கள் அமணர் கொடுஞ்செயல் ஆற்றாதவராய் அவதியுறும் தன்மை கூற அதைக் கேட்ட ஆளுடைய பிள்ளை அங்குச் செல்லத் துணிய, அன்பு கொண்ட வாகீசரோ பிள்ளையாரை அங்கு அனுப்ப அஞ்சி அமணர் முன்னாளில் தமக்கிழைத்த தீமை பலவாகும். எனவே இதற்கு இசையேன் என மறுத்தருளினார். தன்னைக் காணும் கருத்துடைய திருநீற்றைப் போற்றும் அரச மாதேவியையும் அமைச்சரையும் கண்டு சைவ நெறி வளர்த்தல் அல்லால் வேறு ஏதும் செய்யேன். ஆணை உமது என்றார் ஆளுடைய பிள்ளை. மேலும் அப்பரை நோக்கி நீர் அங்குப் போதப் போதா; அவ்வமணர் தீ மாயையினை யானே போய்ச் சிதைத்து வருகிறேன், என்றார். அதை மறுக்க மாட்டாதவராய் நாவுக்கரசர் அங்கேயே தங்கிவிடப் பிள்ளையார் பாண்டி நாடு சென்றார்.

நாவுக்கரசர் சிவபெருமான் எழுந்தருளிய பற்பல தலங்கட்கும் சென்று பாடிப் பரவினார். கச்சி ஏகம்பனையும் காளத்தி நாதனையும் கண்டு வணங்கிப் போற்றியவர். உத்தர திசை நோக்கிச் செல்லும் விருப்போடு திருக்கயிலை நோக்கிச் சென்றார். இரவும் பகலும் நடந்தார்; கால்கள் பரட்டளவும் தேய்ந்தன; கயிலையில் வைத்த ஆசையினால் கைகளினால் தாவிச்சென்றார்; மணிக்கட்டளவும், மார்பினால் வருந்தி உந்திச் சென்றார்; தசை நைந்து எலும்புகள் முறிந்தன; புரண்டு சென்றார்; உடம்பு முற்றும் தேய தமிழாளியார் தங்கினர். சிவபெருமான்

முனிவர் வேடம் கொண்டு அவர் முன் தோன்றி உடம்பு அழியும்படி இக்கொடிய காட்டில் வந்தது ஏன்? என வினவியபோது, திருக்கயிலையில் இறைவன் உமையவளுடன் வீற்றிருக்கும் திருக்காட்சியைக் காண வந்ததாக உரைத்தார். இறைவன் பல கூறித் தடுத்தும், அப்பர் தம் கருத்தில் உறுதியாய் இருந்த துணிபு கண்டு, அசரீரியாய், ''ஓங்கு நாவுக்கரசனே! எழுந்திரு!'' எனப் பணிக்க நாயனார், ஊறுபாடு முற்றும் நீங்கிய திருமேனியுடன் எழுந்தார். அங்குள்ள பொய்கையில் மூழ்கிட, திருவையாற்றிலே கயிலைத் திருக்கோலத்தைக் காண்பாய் எனப் பணித்தார் ஈசன். "வேற்றாகி மண்ணாகி", என்னும் திருத்தாண்டகங்களால் துதித்து அருளாணையின்படி பொய்கையுள் மூழ்கினார். திருவையாற்றில் ஒரு வாவியின் மேல் வந்தெழுந்தார். ஐயாற்றில் சர அசரமாயின; எல்லாம் சிவமும் சக்தியுமாய்ப் பொலியக் கண்டு திருக்கோயில் முன் வந்தார்; அக்கோயிலே கயிலை மலை ஆயிற்று. மால், அயன், இந்திரன் முதலிய தேவர்கள் போற்றினர். மரகதக்கொடியுடன் விளங்கும் பவளமலை போலச் சிவபெருமான் விளங்கினார். தாம் கண்ட காட்சித் திறத்தை ''மாதர்ப் பிறைக் கண்ணியானை'' என்ற திருப்பதிகத்தாற் போற்றினார். பின்னர் அத்திருத்தலத்தில் தங்கித் திருத்தாண்டகங்கள், திருக்குறுந்தொகைகள், நேரிசைகள், திருவிருத்தங்கள் முதலிய பதிகங்களாற் போற்றிக் கைத் திருத்தொண்டும் செய்தருளினார்.

அப்பரும் பிள்ளையாரும் – மூன்றாம் சந்திப்பு

வாகீசர் பொன்னி வலமாகச் சூழ்ந்து செல்லும் திருப்பூந்துருத்தியிற் எழுந்தருளியிருந்தாராக, அமணரை வாதிற் வென்று, தென்னவனாம் பாண்டியனின் கூன் நிமிர்த்தும், திருநீற்றின் ஒளிகண்டும் சண்பை நகர் வந்து சேர்ந்தார் சம்பந்தர். வாக்கினுக்கு வேந்தர் வளம்பதி வந்தார் எனும் செய்தி கேட்டு, விரைவாய் அவரிடம் சென்று சேர்வேன் என வந்தணைந்தார்.

சீகாழித் தமிழ் விரகர் வரும் சேதியை மண் பரவும் பெருங்கீர்த்தி வாசராம் நாவுக்கரசரும் கேட்டு, மனம் மகிழ்ந்து கண்டு இறைஞ்சும் காதலினால் அடியவர் திருக்கூட்டத்தினுள் கூடிச் சேர்ந்து, பிள்ளையார் தம்மைக் காணாதவாறு அவரைத் தொழுது கொண்டு, வேறொருவரும் அறியாதபடி, அணிமுத்தின் சந்தமணிச் சிவிகையினைத் தாங்குவாருடன் தாங்கிச் சிந்தை களிப்புற வந்தார்.

திருப்பூந்துருத்திக்கு அருகணைந்ததும் ஆளுடைய பிள்ளை, ''எங்குற்றார் அப்பர்'', என வினவ, மனம் மிக உருகி ''உம் அடியேன உம் அடிகள் தாங்கி வரும் பெருவாழ்வு வந்தெய்தப் பெற்று இங்குற்றேன்'' என்றார். அம்மொழிகளைக் கேட்ட அளவில் ஆளுடைய பிள்ளை

உள்ளம் மிகப் பதைப்பெய்தி, அரசுகளை வணங்க வள்ளலாராகிய வாகீசர் அவர் வணங்கா முன் தாம் வணங்க, இவ் அருட்காட்சியைக் கண்ட தொண்டர் குழாம் எல்லாம் தொழுது, அரவோசை முழக்கி ஆர்த்தனர். இருவரும் திருப்பூந்துருத்தித் தலத்தில் எழுந்தருளிய பிரானைத் தொழுது போற்றினர்.

வாகீசர் ஆளுடைய பிள்ளை அமணர்களை வாதில் வென்றதையும் வழுதியின் கூன் நிமிர்த்தியதையும், திருநீற்றுப் பெருமை வளர்த்ததையும் கேட்டு உளம் உவந்தார். ஞானத் தலைவராம் பிள்ளையார், பண்புடைய மங்கையர்க்கரசியாரின் மாண்பையும், நண்புடைய அமைச்சர் குலச்சிறையாரின் அருமையையும் விருப்பம் மிகும்படி கூறியருள வாகீசர் 'தமிழ் நாடு' எனப்படும் பாண்டி நாட்டைக் காணும் விருப்புடையரானார். திருஞான சம்பந்தரைத் தொண்டை நன்னாட்டுக்கு எழுந்தருளி அங்கு உள்ள திருத்தலங்களைப் போற்றிப் பதிகங்கள் பாடி அருளும்படி திருநாவுக்கரசர் கூறியருள, அவரும் அதற்கு இசைந்து திருப்பூந்துருத்தியைத் தொழுது புறப்பட்டருளினார்.

நாவுக்கரசரும் சம்பந்தரும் ஒருங்கு சேர்ந்தபோது நடந்த நிகழ்ச்சிகளினின்றும், ஒருவர் மீது ஒருவர் கொண்ட பெருவிருப்பும், பெருமதிப்பும், பேரன்பும் பெரும் பரிவும், பணிவும் கனிவும் பற்றி நாம் உணர்ந்து அறியும்போது நம் உள்ளம் நெகிழ்கின்றது, மகிழ்கின்றது, வியப்பிலாழ்கின்றது.

20. நாவுக்கரசரின் நற்றமிழ்

சீ. இலட்சுமணன், சிங்கம்புணரி.

உலகில் உயிரினங்கள் தோன்றிய காலத்திலேயே மொழியும் தோன்றிவிட்டது. உயிரினங்கள் தம் உள உணர்வுகளாகிய மகிழ்ச்சி, சீற்றம், வெறுப்பு ஆகியவற்றை ஒலிகளால் வெளியிட்டன. இவை ஓசை, ஒலி எனப் பெற்றன. இவ்வொலிகள் காலப்போக்கில், ஒலி எழுத்து களாயின. அப்பர் பெருமானும், ''ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே'' (6.321) என இறைவனைக் குறித்துப் பாடுவது இங்கு சிந்தனைக்குரியதாகும். காலப் போக்கில் இவ்வொலிகள் மொழியின் உறுப்புகளாயின. பின் இது ஒலி எழுத்து, வரியெழுத்து எனப் பெயர் பெற்றதாக ஆய்வறிஞர்கள் குறிப்பர்.

ஒரு மொழி அதன் தொன்மையால் மட்டும் சிறந்த மொழியாகி விடாது. இலக்கணக் கட்டுக்கோப்பு, பொருள் நிறைந்த சொற்கள், காலத்தின் ஏலத்தால் தாக்குறா ஆழ்ந்த பொருளுடை சொற்றொடர், நிலைத்து நிற்கும் இலக்கியம் ஆகியவற்றால்தான் ஒரு மொழி சிறப்புப் பெறும். இத்தகைய சிறப்புடைய மொழிகளிலே தொன்மை சான்ற தமிழும் ஒன்று. தமிழ் ''உயர்தனிச் செம்மொழி'' எனும் சிறப்பைப் பெற்று வாழ்கின்றது.

இன்று நாட்டில் சாதி, மத வேறுபாடுகள், உலகில் இன, மொழி, பணம் அடிப்படையான பிரிவுகள் நிறைந்து ஒன்றுக்கொன்று முறைத்துக் கொண்டிருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். இந்நிலையில் உலகில் வாழ் பல சான்றோர்களும், அமைதிக் குழுக்களும் மனித இன ஒற்றுமைக்குப் பாடுபடுகின்றன. அவற்றின் கோஷமும், குறிக்கோளும் ''மனித இனம் ஒன்றே'' என்பதுதான். இவ்வரிய சிந்தனையைச் சங்க காலச் சான்றோர் ''யாதுமூரே யாவரும் கேளிர்'' என உலகிற்குணர்த்தினர். இச்சொற்றொடரின் பொருளின் ஆழத்தைச் சிந்தித்தால், உணர்ந்தால் தமிழ் மொழியின் சிறப்பு, உயர்வு, பண்பு நன்கு வெளிப்படும்.

இத்தகைய பொருள் பொதிந்த, நிறைந்த சொற்களையும் சொற்றொடர் களையும், சங்க காலத்தைத் தொடர்ந்து வந்த சைவ, வைணவ, சமண, பௌத்த இலக்கியங்களிலும், காணலாம். தமிழோடு இசை பரப்பிய ஞான சம்பந்தப் பெருமான் தமிழைச் ''செந்தமிழ், நற்றமிழ், ஒண்டமிழ், அருந்தமிழ்'' எனப் பலவாறாகப் பாராட்டுகிறார்.

அவர் காலத்தவராகிய "தொண்டு நெறி தழைக்க அவதரித்த நற்றமிழ் நாவுக்கரசப் பெருந்தகையும் தமிழைச் "செந்தமிழ்" (5.506) என்றே குறிக்கின்றார். "பன்னிய தமிழ்பாடுவித்து என் சிந்தை மயக்கறுத்த திருவருளினான்" என்று சிவபெருமானைப் போற்றுகிறார் (6.835). மேலும் இறைவனை "முத்தமிழும் நான் மறையுமானான்" (6.240), "வடமொழியும் தென் தமிழும் மறைகள் நான்கும் ஆனான்" (6.860) எனவும் குறிக்கிறார். இறைவனைத் "தமிழ்படிமக்கலத்தால் பாடுவோம்" (4.988) என்று நம்மையும் அழைக்கின்றார்.

அப்பர் பெருமான் பாடல்களில் அமைந்த பொருள் நிறைந்த சொற்றொடர்களைப் பார்ப்போம்.

"சிந்திப்பார் சிந்தையுள்ளான்" (4.371)
"சொல்லும் நற் பொருளுமாவார்" (4.406)
"என் கடன் பணி செய்து கிடப்பதே" (5.192)
"தன்னடியார்க்கு எளியன்" (6.332)
"பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" (6.345)

வாகீசரின் பாடல்கள் "தமிழ்பாற் கடல்" அதனைச் சிறுகையால் சிறிதளவு தானே அள்ளிப் பருக முடியும்.

இலக்கண முறை தப்பாமல் சீர் சிதையாமல் மோனை முறியாமல் பல பாடல்கள் இருப்பினும் அவை பயனற்ற வெற்றுப்பாக்களே. பாடல்கள், படிப்போர் உளத்தில் ஆழப் பதிந்து, நினைக்க நினைக்க மகிழ்வூட்ட வேண்டும். இதற்காகவே பாடல்களில் உவமை, உருவகமாய உறுப்புகளிடம் பெறுகின்றன. உருவகமாகத் தமிழ்ப் பாடல்கள் பலவற்றை அப்பர் யாத்துள்ளார். அவற்றிலொன்று

ஒருவன் தோணியில், சில பொருட்களை ஏற்றிக் கொண்டு சிறிய துடுப்பின் உதவியுடன் கடலில் சென்றான். அலைகடலின் அடியில் பாறைகள் மறைந்திருப்பதை அவனறியான்: பாறையொன்றில் படகு மோதிப் பழுதுபட்டது. அப்போது மனங்கலங்கிய மனிதன் யாது செய்வேன் என்று கலங்கினான் உதவுவார் உளரோ?வென உளம் பரிதவிக்கும் போது உதவுவார் யாரோ!

இப்பாடலில் மனம் தோணியாகவும், அறிவு துடுப்பாகவும், சினம் சரக்காகவும், மனதிலுள்ள உலக ஆசை பாறையாகவும் உருவகிக்கப் படுகின்றன. அப்பரின் தமிழ்க் கவிதை உயர்விற்கு இப்பாடல் சான்றாகும்.

மனமெனுந் தோணிபற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கையேற்றிச் செறி கடலோடும்போது

மதனெனும் பாறைதாக்கி மறியும்போது அறியவொண்ணாது
உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூருடைய கோவே
(4.455)

மற்றொரு பாடல் வேளாளர் குலப் பெருமகன் விவசாயத்தை எடுத்துக்காட்டி "சிவகதி"யாகிய பயிர் விளைவிக்க வழிகாட்டுகிறார்.

மெய்மையாம் உழவைச்செய்து விருப்பெனும் வித்தை வித்தி
பொய்மையாம் களையை வாங்கி பொறை எனும் நீரைப் பாய்ச்சி
தம்மையே நோக்கிக்கண்டு - தகவெனும் வேலியிட்டு
செம்மையுள் நிற்பாராகில் சிவகதி விளையுமன்றோ.

பொதுவாக ஒரு மொழியிலுள்ள பாடல்களை மூன்று பிரிவில் ரசித்து மகிழலாம். அவை இசை, வருணனை, கருத்து என்பனவாம். பிறமொழி இசைப்பாடல்களைக் காதால் கேட்டு கண்ணை மூடிக் கொண்டு தலையை ஆட்டி மகிழ்கிறோம். அப்பாடலின் பொருள் புரிந்ததா? இசை நம்மை ஆட்கொண்டு ஆட்டுவித்தது.

தண்டலைமயில்களாட தாமரை விளக்கம் தாங்கக்
கொண்டல்கள் முழவின் ஏங்க குவளை கண்விழித்து நோக்கத்
தெண்டிரை எழினி காட்ட தேம்பிழி மகரயாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருந்த மாதோ.
(கம்பன்-பாலகா.35, சக்தி பதிப்பு)

இப்பாடலின் இயற்கை வருணனை நம்முளத்தை மகிழ்விக்கிறது.

ஆனால் அதே கம்பனில் இராமன் குகனை நோக்கி "அன்புள இனிநாம் ஓர் ஐவர்கள் உளரானோம்" (கம்ப-அயோத்-688-சக்தி) எனக் கூறியபோது அக்கருத்து நம்முளத்தில் ஒரு சிலிர்ப்பை, வியப்பை, மகிழ்வை ஏற்படுத்தவில்லையா? அதேபோல் அப்பர் பெருமானின் நற்கருத்தமைந்த தமிழ்ப்பா ஒன்றையும் பார்ப்போம்.

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே (4.111)

நாவுக்கரசரின் தமிழ் இல்லக விளக்கு முதல் பலரும் காணும் விளக்கு வரை சுட்டிக்காட்டி "நல்லக விளக்கு நமச்சிவாயமே" என்ற கருத்தை உளத்தில் ஆழப்பதித்து விட்டதல்லவா?

ஒவ்வொரு மொழியிலும் அச்சொல்லைக் கையாளும் முறையால், அப்பாடல் படிப்போரின் உணர்வுகளைத் தட்டி எழுப்பும், சொற்கள் அமைகின்ற முறையால் படிப்போருக்கு இன்பம், நெகிழ்வு, சோகம்,

எழுச்சி, வீரம் போன்ற உணர்ச்சிகள் ஏற்படும். உலக வழக்கில் கூட ஒரு சொல்லை உச்சரிக்கும் முறையால் ஏற்படும் மாற்றங்களை நாமும் அறிகிறோமல்லவா?

பாரதியார் பாடலொன்று விடுதலைப் போராட்ட காலத்தில் மக்களைத் தட்டியெழுப்பும் வலிய ஆற்றல் பெற்றிருந்தது என்பர். அப்பாடலைப் பாடியோர், பாடக்கேட்டோர் வீறுகொண்டெழுவர் என்பர் தேசிய விடுதலைப் போராட்ட வீரர்கள். அப்பாடல்,

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
இச்செகத் துளோரெலாம் எதிர்த்து நின்றபோதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
துச்சமாக எண்ணி நம்மைத் தூறுசெய்த போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே.
(பாரதி-ப.156-சக்தி)

பாரதியின் இத்தகைய வீரத்தமிழுக்குதவியது நாவுக்கரசர் தமிழ் என்றால் வியப்பில்லை.

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினை தெந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர் சிற்றம்பலவ னார்க்(கு)
எல்லை யில்லாதோர் அடிமை பூண்டேன் உனக்கு (5-4)

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை அல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான
சங்கரன் நல்சங்கவெண் குழைஓர் காதில்
கோமாற்கே நாம்என்றும் மீளாய் ஆளாய்க்
கொய்மலர்ச் சேவடி இணையே குறுகினோமே (6.961)

இவ்விரு பாடல்களும் படிப்போர் உளத்தில் எழுச்சியையும் தைரியத்தையும் எழுப்பும் என்பதிலய்யமில்லை. அப்படி எழாவிடில் படிப்பவர் உணர்வு மீது நாம் ஐயங்கொள வேண்டியதுதான். இவற்றை வீரத்தமிழ்ப் பாக்கள் எனக் கூறினாலும் மிகையாகாது. இவைதாம் நாவுக்கரசரின் ''வண்மைசான்ற தமிழ்ப்'' பாக்களாம்.

எம்மொழிப் பாடலாகவிருந்தாலும் தான் கூறவந்த கருத்தைத் தெளிவாகக் கூற வேண்டும். பாடலைப் பலமுறை படித்துப் படித்து படிப்போர் மகிழவேண்டும். இறைத்தன்மையைத் தெளிவாகக் கூறும்

தமிழ்ப் பாக்கள் பல நாவுக்கரசர் தேவாரத்திலுள் சான்றாக ஒன்றைக் காண்போம்.

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானை கருத்தறிந்து முடிப்பான் தன்னை
தூயானை தூவெள்ளேற்றான் தன்னைச்
சுடர்திங்கள் சடையானை தொடர்ந்து நின்றஎன்
தாயானை தவமாய தன்மை யானை
தலையாய தேவாதி தேவர்க்கு என்றும்
சேயானைத் தென்கூடல் திருஆலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே. (6.197)

தமிழ்க் கவிதைக்கென ஒரு மரபு சங்ககாலம் தொடங்கி இன்று வரை இடையீடின்றித் தொடர்ந்து வருகிறது. அம்மரபுதான் அகம், புறம், அகத்துறைப் பாடல்கள் தலைவன் தலைவியின் தாமே உணரும் மனவெழுச்சி, தொடர்பு, துய்ப்பு, மகிழ்வு, பிரிவு, துன்பம் என பல உணர்வுகளை அடியாகக் கொண்டவை. சமய இலக்கியத்தில் அகத்துறைப் பாவிற்கு இடமுண்டா? என வினவலாம். ஆனால் நம் சமயம் (சைவம்-வைணவம்) இவ்வகத்துறையை ஏற்றுக்கொண்டு இறைவனைத் தலைவனாகவும் உயிர்களைத் தலைவியாகவும் கொள்கிறது. இம்மரபைப் போற்றும், காக்கும் வகையில் வாகீசப் பெருமான் ஒரு பா இயற்றி யுள்ளார்.

ஒரு தலைவி தலைவன் ஒருவனின் பெயரை முதன் முறையாகக் கேட்டாள். அப்பெயர் அவள் செவிவழி மனதைச் சென்றடைந்து அங்கே கால் கொண்டது. பின் அவன் நிலையைக் கேட்டாள். தன்னை அறியாமலேயே அவனுக்கடிமையாகி விட்டாள். உலகியல் பற்றுகள் அவளைக் கை விட்டுவிட்டன. தானே அவனுக்கடிமையாகி விட்டாள்.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே. (6.258)

இறைத்தன்மையையும், அவனை வழிபடும் முறையையும், தமிழனத்திற்கேயுரிய நடராசத் திருமேனியையும் நாவுக்கரசரின் தமிழ்வழி காண்போம்.

இறைவனை இத்தன்மையன் என ஒருவராலும் எடுத்துக் கூற இயலாது. மணிவாசகப் பெருமானும் இறைவனை ஓங்கி, ஆழ்ந்து, அகன்ற, நுண்ணியன் (சிவபுராணம் - 44) எனவும், அவன்

"சித்தமும் செல்லாச்சேட்சியன் காண்க
பக்திவலையில் படுவோன் காண்க
கண்ணால் நானும் கண்டேன் காண்க"
(திரு அண்டப்பகுதி-50, 51-59)

எனவும் குறிக்கிறார். அத்தகைய இறைவனை வழிபடுவதால்

"பெருகலாம் தவம் பேதமை தீரலாம்
திருகலாகிய சிந்தை திருத்தலாம்
பருகலாம் பரமாயதோர் ஆனந்தம்
மருகலானடி வாழ்த்தி வணங்கவே" (5.864)

என்று அப்பர் பெருமான் பாடுகின்றார்.

இறைவனை எப்படி வழிபடுவது. அடர்ந்த காட்டினுள் அமர்ந்து உணவு, உறக்கம் நீக்கி, உடலைக் குறுக்கித் தவம் செய்ய வேண்டுமா? உள்ளங்கால் வெள்ளெலும்பு தேய புண்ணியப் பதிகள்தோறும் நடைப் பயணம் செய்ய வேண்டுமா? இல்லை இல்லை.

பெரும்புலர் காலைமூழ்கி பித்தருக்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள்கொண்டு ஆங்குஆர்வத்தை உள்ளேவைத்து
விரும்பிநல் விளக்குத்தூபம் விதியினால் இடவல்லார்க்குக்
கரும்பினில் கட்டி போல்வார் கடவூர் வீரட்டனாரே (4.307)

ஓர் உருவம் ஒரு நாமம் இல்லா இறைவனுக்குப் பல திருவுருவங் களும், பல நாமங்களும் அமைத்து நாம் வழிபடுகின்றோம். அருவுருவத் திருமேனியாகிய இலிங்கத் திருமேனி முதல் நடனத் திருக்கோலம் வரை பல உருவத் திருமேனிகளுள் மனித்தப் பிறவின் நோக்கம் மீண்டும் பிறவாமை. ஆனால் நாவுக்கரசரோ தமக்கு மனிதப் பிறவி வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறார் ஏன்?

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிழ்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே (4.783)

21. நாவுக்கரசர் ஊட்டும் நம்பிக்கை

அமுத. இளவழகன், காஞ்சிபுரம்.

தமிழ்மொழித் தலைவர்

இலக்கிய வரலாற்றில் ஏழு, எட்டாம் நூற்றாண்டுகளில் சிறப்பிடம் பெறுவன திருமுறைகள். இலக்கியச் செவ்வி முழுவதும் நிரம்பி அதற்கு மேலும் இறையுணர்வைப் போற்றி வாழ்வியலை வளமுறச் செய்த பெருமை திருமுறைகளுக்கு உண்டு. திருமுறை ஆசிரியர்களில் முதலிடம் பெறுகின்றவர்கள் அப்பரும், சம்பந்தரும்: அவருள்ளும் அப்பரடிகளைத் தமிழ்மொழித் தலைவர் என்று போற்றுவார் சேக்கிழார். (சம்பந்தரின் இசைத்திறம் கருதி இயலிசைத் தலைவனார் என்பார்).

சொற்குறுதிக்கு அப்பர்

ஏழெழு நூறு இரும் பனுவல் பகர்ந்தவர் என்று சுந்தரர் புகழ்ந்து போற்றும் அப்பரடிகளின் திருவாக்கில் இசைத்திறம் பொருந்திய பதிகங்கள் சிலவே. ஏனைய பகுதிகள் திருக்குறுந்தொகையும் திருநேரிசையும் திருவிருத்தமும் திருத்தாண்டகமுமாக யாப்பியல் வகையால் பெயர் பெற்றவை. **சொற்குறுதிக்கு அப்பர்** என்று சொல்லும் அளவுக்கு உறுதி கூறும் உண்மை உரைகளால் நிரம்பியவை. பல்துறை ஆய்வுகளுக்கும் இடந்தரவல்ல பல்சுவைக் களஞ்சியமாகத் திகழ்பவை. எழுபது ஆண்டு களுக்கு முன்பே கலாநிலையம் என்ற இதழில் **அப்பரும் அறுபத்துநான்கு கலைஞானங்களும்** என்ற தொடர் வெளிவந்துள்ளமை கருதுவதற்குரியது.

எந்நாளும் இன்பமே

பல்துறைக் களஞ்சியமாக விளங்கும் நாவுக்கரசர் பாடல்களில் வையத்துள் வாழ்வார்க்கு நம்பிக்கை ஊட்டும் துணிவுரைகளாக அமைந்துள்ள வற்றை எண்ணிப் பார்ப்பது நமக்கு எழுச்சி ஊட்டுவது; ஏற்றத்தைத் தருவது; துணிவை அளிப்பது; துணையும் ஆவது.

நிறைமொழி மாந்தராகிய திருநாவுக்கரசரின் மறைமொழிகளில் ஒன்றுதான் **இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை** என்பது. அடிகளின் துணிவுரைகளில் இதுவே முதன்மை வாய்ந்தது என்றும் கூறலாம்.

இவ்வுலக வாழ்க்கையில் மக்கள் இன்ப துன்பங்களுக்கு இடைநின்று போராடிக் கொண்டிருக்கிறார்கள். இன்பத்தைத் தேடிச் செல்பவர்களுக்கு அது எட்டுவதில்லை. துன்பத்தைக் கண்டு ஓடுகின்றவர்களையோ அது

துரத்துகின்றது. இதுவே இரு வேறுலகத்தியற்கை என்று கூடக் கூறலாம் போலும். இந்த இன்ப துன்பப் போராட்டங்களுக்கு இடையிலேதான் **இன்பமே எந்நாளும் துன்பமில்லை** என்ற அடிகளின் திருவாக்கு நமக்குத் துணிவைத் தருகின்றது; துணையாய் வருகின்றது.

துன்பம் தந்த துணிவு

அடிகள் வாழ்விலும் துன்பங்கள் பல தொடர்ந்தன. இளமையிலேயே தந்தையார் திருவடிநீழலை அடைந்தார்; தாயாரும் அவரைத் தொடர்ந்தார்; தமக்கையாருக்கு மணம் பேசிய கலிப்பகையார் போர்க்களத்தில் உயிர்கொடுத்துப் புகழ் கொண்டார்; தமக்கையாரும் உயிர்விடத் துணிந்தார். இளமைப் பருவத்திலேயே இத்தனை இடர்ப்பாடுகளைக் கண்ட அடிகள் சமண்சமயம் புகுந்து துறவு மேற்கொண்டார். அங்கேயும் துன்பம் தொடர்ந்தது; வயிற்றுவலியாக வந்தது. மீளவும் சைவரானார். தங்கள் சமயத்துக்கு வந்தபோது மகிழ்ந்தவர்கள் திரும்பிச் சென்ற போது சீற்றங்கொண்டனர்; சிறுமைகள் செய்யத் தொடங்கினர்.

அப்போதுதான் **நாமார்க்கும் குடியல்லோம்** என்னும் உரிமைக் குரல் எழுந்தது; **இன்பமே எந்நாளும் துன்பமில்லை** என்ற துணிவுரையும் தோன்றியது.

வள்ளுவர் காட்டும் வாழ்வியல்

இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற துணிவுக்கு அடிகள் சொல்லும் காரணத்தைக் காண்பதற்கு முன் இடைப்பிறவரலாக, இன்ப துன்பப் போராட்டங்களுக்கிடையில் வாழ்வாங்கு வாழ்வது எப்படி என்று திருவள்ளுவர் கூறிய நெறிமுறைகளையும் நினைத்துப் பார்ப்பது ஏற்புடையது.

ஆள்வினை உடைமை கூறிய வள்ளுவர் அதனை அடுத்து மறவாமல் இடுக்கண் அழியாமையும் கூறுகின்றார். இடும்பை வருவது இயல்பு; ஆதலின் இடுக்கண் வருங்கால் நகுக; இன்னாமையையே இன்பம் எனக் கொள்க என்றெல்லாம் கூறுகின்றார். துன்பத்தைக் கண்டு துயரங்கொள்ளாமல் இருந்தால் துன்பத்துக்கே துன்பம் தரலாம் என்றும் கூறுகின்றார்.

இங்ஙனம் வள்ளுவர் கூறும் வாய்மொழிகளைப் பின்னணியாகக் கொண்டு **இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை** என்னும் துணிவுரையினை நோக்கும்போது அந்தத் துணிவுரையின் பொருட் சிறப்பு மேலும் சிறந்து விளங்குகின்றது.

மலையே வந்து வீழினும்....

நாவுக்கரசர் கூறும் துணிவுரைகள் எல்லாம் அவருடைய வாழ்வியல் பின்னணியும் உடையவை. அந்த வகையில் இடுக்கணுக்கு அழியாதிருக்கும்

படி அவர் எடுத்துரைக்கும் திருக்குறுந்தொகைப்பாடல் ஒன்றும் இங்கே எண்ணுவதற்கு ஏற்றதாக உள்ளது.

மலையே வந்து வீழினும் மனிதர்காள்
நிலையின் நின்று கலங்கப் பெறுதிரேல்
தலைவ னாகிய ஈசன் தமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றிடுகிற்குமே.

என்று கூறுகின்றார்.

நிலையாக நிற்பது மலை. அதுவே புரண்டு விழுந்தாலும் நீங்கள் உங்கள் நிலையிலிருந்து கலங்காதீர்கள் என்று கூறுகின்றார். நிலையில் திரியாது நிற்பவர்கள் தோற்றம் மலையினும் பெரிதன்றோ!

அஞ்ச வருவதும் இல்லை

அடிகள் வாழ்வில் எதிர்ப்பட்ட ஓர் இடர்ப்பாடு இங்கே நினைப்பதற்கு உரியது. அடிகள் தமக்கே உரிய சிவநெறிக்கு மீண்டதனால் சீற்றங் கொண்டவர்கள் அவர் தலையை இடறுவதற்காக மதயானையை ஏவினார்கள்; மலை புரண்டு வருவது போலவே அந்த மதயானை வந்தது. ஆயினும் அடிகள் தம் நிலையிலிருந்து கலங்கவில்லை. அடிகள் அஞ்சா திருந்தது மட்டுமன்று; அவருடைய அஞ்சாமை உணர்வு அருட் பாடலாகவும் மலர்ந்தது.

திண்ணென் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதுஒன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை.

என்று பாடினார். வந்த மதவேழம் வணங்கியது.

துணிவுக்குக் காரணம்

அடிகளின் துணிவுக்குக் காரணம் என்ன? அவர் உள்ளத்தில் வேழத்தை உரித்த பரம்பொருள் விளங்குகின்றது; காலனை உதைத்த கழல் குடிகொண்டிருக்கின்றது; நஞ்சினை அமுது ஆக்குவித்த நாயகன் அவர் உள்ளத்தே வீற்றிருக்கின்றான். எனவே அடிகள் உள்ளத்தில் அச்சம் இல்லை; அவலம் இல்லை.

விடையான் விரும்பிஎன் உள்ளத்து இருந்தான்; இனி நமக்கு
அடையாஅவலம்; அருவினை சாரா; நமனை அஞ்சோம்

என்றும்,

தப்பி வானம் தரணிகம் பிக்கிலென்
ஒப்பில் வேந்தர் ஒருங்குடன் சீறிலென்

செப்பமாம் சேறைச் செந்நெறி மேவிய
அப்பனார் உளர்; அஞ்சுவது என்னுக்கே?

என்றெல்லாம் அவர் கூறும் உரைகள் ஓதுகின்றவர் உள்ளத்தில் அஞ்சாமையைத் தோற்றுவிக்கும்; அஞ்சுகின்ற உள்ளத்தில் அச்சத்தை அகற்றி நம்பிக்கையை ஊட்டும்.

இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை என்று கூறும் போதும் அடிகள் இதனையே குறிப்பிட்டுக் கூறியுள்ளார். தாமார்க்கும் குடியல்லாத் தன்மையாளனைப் புகலடைந்தோம் ஆதலின் நாமார்க்கும் குடியல்லோம் என்கிறார்.

உள்ளத்துள் இருப்பவன் சங்கரன். அவன் இன்பத்தைச் செய்பவன். ஆதலால் இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை என்று கூறுகின்றார்.

இன்பத்தை அளிப்பவன்

தன்னைச் சரண் என்று தாள் அடைந்தேன் தன்அடிஅடையப்
புன்னைப் பொழில்புகலூர் அண்ணல் செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத்து என்வினைக் கட்டறுத்து ஏழ்நரகத்து
என்னைக் கிடக்கல் ஒட்டான் சிவலோகத்து இருந்திடுமே.

என்ற பாடலில் புகலூர் அண்ணல் தன்னைச் சரண் என்று தாள் அடைந்த தம்மைச் சிவலோகத்து இருத்தும் என்று கூறுவது நாமும் அவனைப் புகல் அடைந்தால் நம்மையும் வினை மாசகற்றி வீடுபெறச் செய்வான் என்ற நம்பிக்கையை நமக்குத் தருகின்றது. திருச்சாய்க்காட்டுத் திருநேரிசைப் பதிகம் முழுவதும் இந்த நம்பிக்கையை நமக்கு அளிப்பதாக உள்ளது.

அருள் செய்த வரலாறு

திருச்சாய்க்காட்டுத் திருநேரிசைப் பதிகத்தில் தன் பேரருளும் பேராற்றலும் விளங்க இறைவன் செய்த அருட்செயல்களை எடுத்துக் காட்டியுள்ளார்.

1. மார்க்கண்டேயன்... பாதமே சரணம் என்னக் காலன் மாளச் சாடினார்.
2. நஞ்சம் கண்டு தேவர் அஞ்சி அடைந்து நும் சரணம் என்ன அருள்பெரிது உடையராகித் தடங் கடல் நஞ்சம் உண்டார்.
3. நூலினால் பந்தர் செய்யச் சிலந்தி தன்னைத் தரணிதான் ஆளவைத்தார்.
4. பார்த்தற்கு அன்று சரம்பொலி தூணி ஈந்தார்.
5. தக்கன் வேள்வியைத் தகர்த்த ஞான்று சந்திரற்கு அருளிச் செய்தார்.

6. குளிர்சடைக் கொன்றை மாலைத் தாமம் நற்சண்டிக்கு ஈந்தார்.
7. பகீரதன் வரங்கள் வேண்ட, வையகம் நெளியப் பாய்வான் வந்திழி கங்கை என்னும் தையலைச் சடையில் ஏற்றார்.
8. தடக்கை வேடன் ஒரு கண்ணை இடந்து அங்கு அப்பத் தவப்பெரும் தேவு செய்தார்.
9. திருமால் மென்மலர் ஒன்று காணாது, ஒக்கும்என் மலர்க்கண் என்று ஒரு கண்ணை இடந்து அப்பச் சக்கரம் கொடுத்தார்.
10. அரக்கன் ஓடி மலையைப் பேர்க்க விரல் சிறிது ஊன்றி, மீண்டே சயம் பெற நாமம் ஈந்தார்.

என்பன அப்பதிகம் குறிப்பிடும் அருள் வரலாற்றுச் சான்றுகள்.

இவ்வாறே தசபுராணம் என்ற பதிகத்திலும் இறைவன் அருள்புரிந்த வரலாறுகளைச் சுட்டிக்காட்டிச் ''சிவனாயமூர்த்தி அவனாம் நமக்கு ஓர் சரணே'' என்று கூறுகின்றார்.

பெரியாரைத் துணைக்கோடல்

தம்மில் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை.

செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

என்றெல்லாம் திருவள்ளுவர் உலகியல் வாழ்விலேயே தக்கவர்களின் துணையும் நட்பும் தேவை என்பதனைக் கூறுகின்றார். உலகியல் வாழ்வில் உற்ற துணையாவோர் உலகினைக் கடந்த நிலையில் உறுதுணையாகமாட்டார். 'செத்தால் வந்து உதவுவார் ஒருவர் இல்லை' என்றும் 'உயிர்கொண்டு போம்பொழுது உற்றார் ஆருளரோ' என்றும் அடிகளே குறிப்பிட்டுள்ளார். இப்பாலும் அப்பாலும் எப்பாலும் வந்து அருள்செய்பவன் இறைவனே. அவனை அம்மையப்பனாகக் காண்பது போன்றே தோழனாகவும் துணைவனாகவும் தலைவனாகவும் காண்பர்.

தனக்கு உவமை இல்லாதான்

உலகத்துத் தலைவர்களில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் உண்டு; சிற்றரசர் பேரரசர்க்குப் பணிவர்; பேரரசர் பெரும்பேரரசரைப் பணிவர்; இறைவனோ தாமார்க்கும் குடியல்லாத் தன்மையானவன்.

அதியனை நீலமணிமிடற்று ஒருவன்போல் நிலை பெற்று வாழ்க என்று கூறலாம். ஆனால் நீலமணிமிடற்றோனுக்கு அப்படி உவமை கூற ஒருவரும் இல்லை. ஆம்! இறைவன் தனக்கு உவமை இல்லாதவன்.

மனக்கவலை மாற்றல்

உலகியல் வாழ்வுக்குரிய அறிவுரைகளைப் பலவகையாகக் கூறிய திருவள்ளுவரும் தொடக்கத்திலேயே தனக்கு **உவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்கே மனக்கவலை மாற்றமுடியும்** என்பதனை எடுத்துரைத்துள்ளார். தனக்குவமை இல்லாதான் தாள்சேர்தலே திருமுறைகளின் உரிப்பொருள். தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனார்க்கு எல்லை இல்லதோர் அடிமை பூண்டேன். ஆதலின்

அல்லல் என் செய்யும் அருவினை என்செய்யும்
தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என்செயும்

என்று அடிகள் கூறுகின்றார்.

'எல்லை இல்லதோர் அடிமை' என்பது பொதுநீக்கி இறைவனையே வழிபடுவது. இறைவன் அடியவர்க்கு அருந்துணை என்று பொதுவாகக் கூறியவர் பொது நீக்கித் தனைநினைய வல்லவர்க்கே பெருந்துணை என்றார்.

தொடர்ந்து விடாத தொண்டர்

இறைவன் இருக்கின்றான் என்பது உண்மையானாலும் அவன் எல்லார்க்கும் எளிவந்து இன்னருள் செய்யவில்லை என்பதனை அருந்துணை பெருந்துணை என்ற வேறுபாடே காட்டும். பிறிதோரிடத்தில், ஐயாறன் அடித்தலம் சீலத்தராகித் தொடர்ந்து விடாத தொண்டர்க்கு அணியன என்று கூறுகின்றார். இறைவன் திருவடிக்கு அணுக்கம் உடையவராக வேண்டும் என்றால் தொடர்ந்து விடாத தொண்டராக இருக்கவேண்டும். ஏன்? இறைவன் ஒரே ஒரு முறை வேண்டிக்கொள்வதனால் அருள் செய்வதில்லை. பலமுறையும் பணிந்து இரந்தவர்க்கே அருள் செய்வான். ஆதலின் தொடர்ந்துவிடாத தொண்டராக இருக்க வேண்டும்; இறைவன் விரைவில் அருள் செய்யவில்லை என்று கருதி வழிபாட்டினை - தொண்டினை - விட்டு விடாதவர்களாக இருக்க வேண்டும்.

படைக்கலமாக உன்நாமத்து எழுத்து அஞ்சுஎன் நாவிற்கொண்டேன்;
இடைக்கலம் அல்லேன் எழுபிறப்பும் உனக்கு ஆட்செய்கின்றேன்;
துடைக்கினும் போகேன்; தொழுது வணங்கித் தூநீறு அணிந்து உன்
அடைக்கலம் கண்டாய் அணிதில்லைச் சிற்றம்பலத்து அரனே.

என்றும்,

பவன்எனும் நாமம் பிடித்துத் திரிந்து பன்னாள் அழைத்தால்
'இவன் எனைப் பன்னாள் அழைப்பொழியான்' என்று எதிர்ப்படுமே

என்றும் கூறுகின்றார்.

நற்றுணையாவது

இந்த இரண்டு பாடல்களிலும் படைக்கலமாக நாமத்து எழுத்து அஞ்சினைக் கொள்ளுதலையும், பவன் எனும் நாமம் பிடித்துத் திரிந்து பன்னாள் அழைத்தலையும் குறிப்பிடுகின்றார். எங்கும் நிறைந்த இறைவன், உணரமாட்டாமையால் சிலர்க்கு எட்டாத் தொலைவில் இருப்பினும், அவன் பெயரையேனும் சொல்லலாம் அல்லவா? அந்தப் பெயர்கள் பலவற்றுள்ளும் சிறந்தது ஐந்தெழுத்தே அன்றோ? ஆதலின் அந்த ஐந்தெழுத்தின் ஆற்றலைச் சொல்லும் போது,

கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே

என்று கூறுகின்றார்.

வரலாற்றுப் பின்புலம்

அடிகள் கூறும் உறுதி உரைகள் அடிகளுடைய வரலாற்றுப் பின்னணி உடையவை என்பதனை முன்னரும் கண்டோம். இவ்விடத்து நற்றுணையாவது நமச்சிவாயவே என்பது வரலாற்றுப் பின்னணி வேண்டாத பொதுவான பொருள்மொழி போலவும் தோன்றும். ஆனால் திருநீலக்குடித் திருப்பதிகத்தில்,

கல்லினோடு எனைப்பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கஎன் வாக்கினால்
நெல்லு நீர்வயல் நீலக் குடிஅரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந்தனே.

என்று கூறுவதனை நோக்குவார்க்கு நமச்சிவாயப் பதிகத்தை ஓதும்போது, **வருணன் முன்பு செய்த மாதவத்தால் கருணை நாவரசினைத் திரைக் கரங்களால் சிரத்தில் தாங்கிய காட்சி** தோன்றவே செய்யும்.

அஞ்செழுத்தின் ஆற்றல்

"ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக்கு அழுந்தும் அளறு"

என்றபடி அளவற்ற துன்பங்களுக்குக் காரணமான தீமைகளைச் செய்து குவித்துள்ளோமே, அஞ்செழுத்துமே அதனைப் போக்குமோ எனில், வானைத் தொடும் அளவு அடுக்கிய விறகினை வெவ்வழல் அழிப்பது போன்று **பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை நமச்சிவாயவே நண்ணி நின்று அகற்றும்** என்று நமக்கு நம்பிக்கை தருகின்றார்.

அடுக்கல் கீழ்க் கிடப்பினும் அருளின் நாம் உற்ற
நடுக்கத்தைத் தீர்ப்பது நமச்சி வாயவே.

என்றும் கூறுகின்றார்.

நலம் மிகக் கொடுப்பது

தொடர்ந்து விடாத தொண்டராக இருந்தால் மட்டும் போதுமா! சீலத்தராக இருக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார். சீலம் என்பது ஒழுக்கமே. மெய்ம்மையாம் உழவைச் செய்தல், பொய்ம்மையாம் களையை வாங்கல் போன்ற பொது ஒழுக்கங்களோடு திருநாமம் அஞ்செழுத்தும் செப்புதல் தீவண்ணர் திறம் பலகால் பேசுதல் போன்ற சிறப்பு ஒழுக்கங்களும் சீலம் என்பதனால் கொள்ளப்படும். இத்தகைய ஒழுக்க நலங்கள் இல்லாதவராயினும் அவர் திருநாம எழுத்து ஐந்தும் சொல்லத் தொடங்குவரானால் அதுவே புகுமுகமாக அவர்க்குச் சீலமும் நோன்பும் படிப்படியே வந்து சேரும். இதனையே,

குலம் இலராகிலும் குலத்துக்கு ஏற்பதோர்
நலம்மிகக் கொடுப்பது நமச்சி வாயவே

என்று கூறினார்.

நமச்சிவாயம் சொல்லவல்லோம்

நமச்சிவாய என்று சொல்ல வல்லவர்களுக்கு என்னென்ன நலங்கள் வந்துசேரும் என்பதனையும் தம் நுகர்வுகளின் வாயிலாக எடுத்துரைக்கின்றார்.

உறவாவார் உருத்திரப்பல் கணத்து ளோர்கள்;
 உடுப்பனகோ வணத்தொடுகீள் உளவாம் அன்றே;
செறுவாரும் செறமாட்டார்; தீமை தானும்
 நன்மையாய்ச் சிறப்பதே; பிறப்பில் செல்லோம்;
நறவார்பொன் னிதழிநறுந் தாரோன் சீரார்
 நமச்சிவாயம் சொல்ல வல்லோம் நாவால்,
சுறவாரும் கொடியானைப் பொடியாக் கண்ட
 சுடர்நயனச் சோதியையே தொடர்வுற் றோமே.

என்பதனால், ஐந்தெழுத்தே எண்ணுகின்றோம்; அரன் அடியே தொடர் கின்றோம்; உயர்ந்தவரே உறவாவார்; உலகியல் தேவைகளைக் குறைத்துக் கொண்டோம்; பகைவர்களும் தீமை செய்யமாட்டார்; தீமைகளும் கூட எமக்கு நன்மையாகவே அமையும் என்ற குறைவிலா நிறைவுடைய பெருமித நிலையை நாம் எட்டலாம் என்று கூறுகின்றார்.

இன்பம் தழைக்க இருக்கலாம்

நற்றுணையாகிய நமச்சிவாய மந்திரத்தைச் சொன்னால் செறுவாரும் செறமாட்டார்; தீமைகளும் நன்மையாயச் சிறக்கும் என்றால் **இன்பமே எந்நாளும் துன்பமில்லை** என்பதற்கு யாதும் ஐயுறவு இல்லை அன்றோ! எனவேதான்,

நன்று நாள் தொறும் நம்வினை போய்அறும்
என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்

சென்று நீர்திரு வேட்களைத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே.

என்று உறுதி கூறுகின்றார்.

கலங்கரை விளக்கம்

சொற்குறுதிக்கு அப்பர் என்ற புகழுக்கு உரியவராக விளங்கும் நாவுக்கரசர் திருவாக்கில் நம்பிக்கை ஊட்டும் நல்லுரைகள் இன்னும் பலப்பல உள்ளன. அவ்வுரைகள் ஓதுகின்றவர்களுக்கு ஊக்கத்தை அளிப்பவை; தொடர்ந்து விடாத தொண்டரை இன்பக் கரைமுகந்து ஏற்கும் ஏற்றம் மிக்கவை. 'கவலைக்கடலில்' வினை அலையில் கனத்த மனமாகிய மடுவில், கைநீச்சாக நீந்த என்றால் கரைதான் அடுத்துக் கிட்டவில்லை' என்று கவலைப்படுகின்றவர்களுக்கு இன்பக்கரை இது என்று காட்டும் கலங்கரை விளக்கமாக விளங்குவன. அவ்வுரைகளை ஓதுவோம்! உணர்வோம்! உணர்ந்தவாறு ஒழுகுவோம்! உயர்வோம்!

22. நாவுக்கரசர் கண்ட திருநடனம்

நா. உஷாதேவி, நெல்லை.

ஊனாலும் உயிராலும் உணர்ந்து துய்க்கக் கூடிய அற்புதத் திருக்காட்சி, தில்லைச் சிற்றம்பலத்தே சிவனார் ஆடும் திருநடனக் காட்சியாகும். கோயில் என்றாலே அது தில்லைக் கோயிலையே குறிக்கும். அக்கோயிலில் நட்டம் நின்ற நிறைவுடையோன் நடராச மூர்த்தி குடிகொண்டுள்ளார். திருமுறை ஓதும்போது 'திருச்சிற்றம்பலம்', என்று தொடங்கித் 'திருச்சிற்றம்பலம்' என்று முடிப்பது ஓதுவார் மரபு. 'அன்னம் பாலிக்கும் அணிதில்லை சிற்றம்பலம். அதற்கு மேலும் பொன்னம் பாலிக்கும். தில்லைக் கூத்தன் திருக்கோயிலை வலம்வந்தால் அன்பு ஆலிக்கச் செய்யும். அதைக் கண்டு இன்புற இப்பூமிசை இன்னம் இப்பிறவியைப் பாலிக்குமோ?' என்று வியந்து வேண்டுகிறார் திருநாவுக்கரசர்.

உயிரும் உடலும்

உயிரும் உடலும் தம்முள் முரண்பட்டவை. உடம்பானது உயிரோடு ஒற்றுமைப்பட்டு நிற்கிறது. அதனால் உடம்பு வாழும் நிலையைப் பெறுகிறது. அவ்வாறு உயிரானது உடலுடன் ஒன்று என ஒருமை நெறியில் இணைந்து நிற்பதால் உணர்வைப் பெறுகிறது. உயிரையும் உடலையும் இணைத்துச் செயற்படுத்தும் வகையில் இறைவன் இருவகை நடனம் இயற்றுகின்றான். அவை ஊனநடனம், ஞானநடனம் எனக் கூறப்பெறும். ஐந்தெழுத்தால் நின்று ஐந்தெழுத்தால் ஐந்தொழில் இயற்றி, ஐம்பொறிகள் என நின்ற உடலைத் தில்லை குழகன் அறிவு நிலையமாக ஆக்குகிறான். இவ்விரணடு நடனத்துக்கும் அப்பால், 'ஓம்' என்ற எழுத்தினால் உமை காண ஆடுவது நாதாந்த நடனம் எனப்பெறும். குடமுழவம் வீணை தாளம் குறுநடைய சிறுபூதம் முழங்க நின்றாடும் கூத்தன் செயலெல்லாம் ஆன்மாக்களுக்கு அறிவைக் கொடுத்து, அறியாமையைக் கெடுத்து, ஆனந்தத்தில் ஈடுபடுத்தவே திருநாவுக்கரசர், உடம்பால் அம்பலத்தில் பிறைமல்கு செஞ்சடை தாழ நின்றாடிய பிஞ்ஞகன் கூத்தனைக் கண்டு மகிழ்ந்து இன்புற்றுத் தொழுதல், திருக்கூத்து நாதனுடன் இணைந்து நின்று அறிவால் அறிந்து இன்புறுதலாகிய உயிரால் பெறும் பயனடைதல் ஆகிய இருநிலைகளில் இன்பந் துய்க்கிறார். தாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற, நாவாரத் தேவாரம் பாடியுள்ளார்.

வேடநிலை

பிறவியை அமைத்ததன் நோக்கம் உடம்பால் உயிரும், உயிரால் உடம்பும் பயன்பெற வேண்டும் என்பது அன்று. மாறுபட்ட இரண்டை ஆராய்ந்து உணரும் நிலையில் இரண்டனோடும் தொடர்புடைய மெய்ப் பொருள் ஒன்று உண்டு என்பதை உணர்வதே ஆகும். அந்த மெய்ப் பொருள் அன்பு ஆலிக்குமாறு கண்டு இன்புறுவதற்கு உரிய வாய்ப்பாக அமைந்து, பிறவி, தில்லைச் சிற்றம்பலக் கூத்தைக் காணும்போது உயிரில் நெகிழ்ச்சி ஏற்படுகிறது.

> **''பொன்னொத்த மேனிமேல் வெண்ணிறணிந்து புரிசடைகள்**
> **மின்னொத்து இலங்கப் பலிதேர்ந்து உழலும் விடங்க வேடர்**
> **சின்னத்தினான் மலிதில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்**
> **என்னத்தன் ஆடல்கண்டு இன்புற்றதால் இவ்விருநிலமே.''**

பொன்ஒத்த மேனியனாய், வெண்ணீறணிந்து, சடைகள் ஆகியன மின்னலை ஒத்து இலங்க, அத்தன் ஆடல்கண்டு இவ்விரு நிலம் இன்புற வேண்டும் என்று பாடுகிறார் சேக்கிழார்.

> **''குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்**
> **பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்**
> **இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்**
> **மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.''**

என்று 'திருநட்டம்' ஆடிய வேடநிலையில் உள்ளம் பறிகொடுத்தார் வாகீசர்.

விடங்கநிலை

ஆடல், கூத்து என்ற இரண்டற்கும் வேறாய் அவர் தன்னுண்மை நிலையில் - இயற்கை நிலையில் - அமைந்த விடங்கநிலை கோலத்தையும் திருநாவுக்கரசர் பாடியுள்ளார். அந்நிலைக்கு ஆட்பட்டு, தம்மை அடைக்கலப் படுத்தி விடுகிறார். இதனை,

> **''படைக்கலமாக உன்னாமத் தெழுத்தஞ்சும்**
> **என்னாவிற் கொண்டேன்**
> **இடைக்கலம் அல்லேன் எழுபிறப்பும் உனக்கு**
> **ஆட்செய்கின்றேன்**
> **துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித்**
> **தூநீறணிந்து உன்**
> **அடைக்கலம் கண்டாய் அணிதில்லைச்**
> **சிற்றம்பலத்து அரனே''.**

என்ற திருவிருத்தத்தால் அமைத்துப் பாடியுள்ளார்.

தில்லையில் நடராசர்

'தில்லைச் சிற்றம்பலம்' என்ற அமைப்பில் நின்று, அறைகழலும் திருவடி மேற் சிலம்பும் ஆர்ப்ப, அவன் பொதுமைக் குறிக்கோளான, 'அனைத்துயிர்க்கு இன்பம் அமைத்தல்' என்ற நிலையில் ஆடமுற் படுகிறான். தில்லைச் சிற்றம்பலத்தில் இந்த ஆட்டத்தை ஆடிய பிறகுதான் அனைத்துயிர்களும் 'இன்பத்துய்ப்பு' என்ற அனுபவத்தைப் பெற்றன. தில்லையில் ஆடிய அம்மான் ஆட்டம் காண, அன்பு ஊற்றெடுக்கும். அதன் வெளிப்பாடு உடம்பில் மெய்ப்பாடாக அரும்பும். வாய் அரன் நாமத்தை அரற்றும் உரோமம் சிலிர்க்கும். கரம் குவியும். இதயம் மலரும் கண்களிகூரும் இன்பமே அன்பாய் நிறையும் ஆக்கையாக இந்த உடல் அமையும்.

"ஊன் நிலாவி உயிர்க்கும் பொழுதெலாம்
நான் நிலாவி இருப்பன் நாதனைத்
தேன் நிலாவிய சிற்றம் பலவாணர்
வான் நிலாவி இருக்கவும் வைப்பதே."

என்று இந்த அனுபவ நிலையைப் பாடுகிறார் திருநாவுக்கரசர்.

கூத்தன் ஆடிய பெருநடம்

குயிலாய மென்மொழியாள் குனிந்து நோக்கக் கூத்தாடும் குழகர் உயிர்கள் அறிவுத் தெளிவு பெறத் தில்லையில் ஆடுகிறார்.

"தேடும் பிரமனும் மாலும் தேவரும் முதலா
யோனிகள் தெளிவு ஒன்றா
ஆடும் கழல்புரி அமுதத் திருநடம்."

என்று சேக்கிழார் இத்திருநடனக் காட்சியை விளக்குகிறார். உயிர்கள், தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்று ஏழுவகைகளில் எண்பத்து நான்கு லட்சம் அனுபவ உறுப்பு வேறுபாடு களைக் கொண்டவைகளாக உள்ளன. உயிர் பிறப்பை அடையும்போது அதன் அடிப்படையில் அறிவைப் பெறும். பல்வேறு யோனிகளை (பிறப்பமைப்பு முறை) அமைத்து படிப்படியாக முன்னேறும் அறிவு முறையை அமைத்து, இன்பம் என்ற பொதுமைக் குறிக்கோளுடன் அறிவு என்ற சிறப்புநிலைக் குறிக்கோளையும் இணைப்பதற்காகப் பெருநட்டம் ஆடுகின்றான்.

மாநடமாடும் அம்மான் அழகு

'தில்லைச் சிற்றம்பலத்து நட்டம்' ஆடும் ஆடல் வல்லானின் ஆடலைத் தனக்குரியதாகத் திருநாவுக்கரசர் கண்டு களிக்கும்போது, அது அவர் அனுபவிக்கும் கூத்தாகிறது. பாதம் ஒன்றே. மத்தம், நெற்றிக்

கண்ணின் நோக்கு, முறுவலிப்பு, துடிகொண்டகை, வெண்ணீறு, சுரிகுழலாளபாகம், புலித்தோல் என்ற ஏழையும் தாங்கிய வீரக் கழலோடு நெஞ்சில் புகுவதாகிய தனி அனுபவம், கூத்து காணும்போது நிகழ்கிறது.

எடுத்த பொற்பாதம்

தக்கன் வேள்வியில் சந்திரனைத் தண்டிக்க எடுத்ததும், காலனை வீட எடுத்ததும், நாரணனும் நான்முகனும் தேட எடுத்ததும் என நின்ற ஒற்றைத் திருவடியே தில்லையுள் ஆட எடுத்த திருவடியாக - இனித்தமுடன் எடுத்த பொற்பாதமாக அமைகிறது.

> ''பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்
> நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவன்
> அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
> தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ''

என்று திருநேரிசையில் அம்பலக் கூத்தினிற் கூத்துவல்லானைப் போற்று கிறார் திருநாவுக்கரசர். தில்லைக்கு இறைவன் என்பது அவனுடைய தன்னுண்மைநிலை. அதுவே அவன் இயற்கைநிலை எனப் பெறும் விடங்கநிலை. அம்பலத்தில் அவனைக் காணும்போது தில்லைக்கு இறைவனே இங்கு அனைத்தையும் வேடமாக ஏற்று நிற்கும் நிலை யினனாக இருப்பதை உணரவேண்டும்.

அனல் எரியாடுதல்

அனல் வடிவமாகத் தன்னை நிறுத்திக் கொண்டு கையில் அனலை ஏந்திக்கொண்டு எரியும் நெருப்பில் இடைநின்று ஆடும் பெரும் நடனம் உயிர்களுக்கு ஞானத்தைத் தருவதற்காக ஆடப்பெறுவது என்று காரைக்காலம்மையார் கருதுகிறார். திருவாலங்காட்டில் ஆடப்பெறும் இந்த 'அனல் எரியாட்டம்' தில்லையிலும் உண்டு என்று கூறுகிறார் திருநாவுக்கரசர்.

> ''விண்ணிறைந்ததோர் வெவ்வழல் இன்னுரு
> எண்ணிறைந்த இருவர்க்கு அறியொணாக்
> கண்ணிறைந்த கடிபொழில் அம்பலத்து
> உன்நிறைந்து நின்றாடும் ஒருவனே.''

என்று திருக்குறுந்தொகைப் பதிகத்துள் குறிப்பிடுகிறார்.

நடுநின்று ஆடும் நட்டம்

'தில்லை திருத்தமுற்று நிற்க, சிற்றம்பலம் ஞானம் பிறங்கும் சோதியாய் திகழ்ந்து நிற்க, தில்லை, சிற்றம்பலம் என்ற இரண்டையும் தனித்தனியே நிறுத்தி நீ நடுவனாய் நின்று ஆடும் நிருத்தம் காண நான் நேர்பட வந்தேன்' என்று கூறுகிறார் திருநாவுக்கரசர்.

"ஒருத்தரால் அறிய வெண்ணாத்
திருவுரு உடைய சோதி
திருத்தமாம் தில்லை தன்னுள்
திகழ்ந்த சிற்றம்பலத்தே
நிருத்தம்நான் காண வேண்டி
நேர்பட வந்தவாறே."

வண்டு பண்பாடுஞ் சோலைமல்கு சிற்றம்பலத்தே, எண்டோள் வீசி, அருள்திறல் மாநடமாடும் அம்மான், உயிர்களுக்கு இன்பமும் ஞானமும் அருள்கிற வேடநிலையில் அருள்பாலிக்கிறார். அந்நிலையில் அன்பு ஆலிக்கும் இன்பநிலை அடைந்த உயிர் அருளுருவாய் நிற்கும். அத்தகு அருளுருவாய் நின்ற திருநாவுக்கரசர் மானுடம் தழைக்கச், சிவகதி பெறத் தொண்டுநெறி வளர்த்து கூத்தனைத் தன்னுள் கண்டின்புற்று பாடித் தொழுதார்.

23. நாவுக்கரசர் தேவாரத்தில் உயிரினங்கள்

எழிலரசி பாலசுப்பிரமணியன், சென்னை.

தேவாரம் பாடிய மூவருள் திருநாவுக்கரசர் வயதால் மூத்தவர், எண்பத்து ஒரு வயது வரை வாழ்ந்தவர். புகழனாருக்கும் மாதினியாருக்கும் திருமகனாய், இவர்களின் தலைமகள் திலகவதிக்குப் பின் பிறந்த உடன் பிறப்பாய், மருள்நீக்கியாராகப் பிறந்தவர் திருநாவுக்கரசர். தமக்கையின் மணவாழ்வில் தோன்றிய சோகத்தால் சமண மதத்தைச் சேர்ந்து தருமசேனராய் வாழ்ந்த திருநாவுக்கரசர், திலகவதியாரின் வேண்டுதலால் சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டார்.

சிவபெருமான் அளித்த சூலைநோய் சமணரால் தீராதபோது, திலகவதி அளித்த திருநீறு அதை நீக்கியது. இதை நடத்தி அருளிய திருவீரட்டானத்துறை நாதரையும் அதிகை நாயகியையும் ''நெஞ்சில் வைத்து'' (2) சைவம் பரப்பினார் அப்பராகிய திருநாவுக்கரசர். அவர் தம் பாடல்களில் காணப்படும் உயிரினங்களைப் பற்றி ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பாம்பு

எல்லா உயிரினங்களிலும் பரமசிவன் கழுத்திலிருக்கும் பாம்பிற்கு உள்ள மரியாதை தனியானது. இந்தப் பாம்பைத் திருநாவுக்கரசர் அரவு, நாகம், பாம்பு, மாசுண வேளம் (133) என்னும் பெயர்களால் சுட்டுகின்றார். இவை திருநாவுக்கரசரால் பொறி அரவு, புள்ளி வரி நாகம், ஐந்தலை நாகம், மாமணிநாகம், பொறிபடக் கிடந்த நாகம், பகுவாய் அரவு, பட அரவம், கருநாகம், கோளரவம், ஆடரவம், படநாகம், அழல்நாகம், புற்றரவம், இளநாகம், பொங்கரவம், பைகொள் பாம்பு, பையரவு, கோணாகம், அழல்வாய் நாகம், வெங்கண்நாகம், தழலுமிழ் அரவு, நீளரவு என்று பலவாறாகப் பாடப்படுகின்றது.

இந்தப் பாம்பு சிவபெருமானின் சடை, உடை, அரை, கை, மார்பு ஆகியவற்றை அணி செய்கின்றது. தனது சடைமுடியில், பாம்பும் மதியும் புனலும் தம் பகை தீர்ந்து உடன் இருக்க வைத்த பண்பாளன் சிவபெருமான் (170). புற்றரவை ஆடையாக அணிந்த (225) திருமுண்டீச்சர சிவலோகநாதன் அதையே பூணூலாயும் அணிந்துள்ளார். (225, 338, 405, 413). இந்நாகம் ஈசனின் அரையில் கச்சாகவும் கிடக்கின்றது

(160, 163, 172, 220, 351, 387, 522). இத்தகைய சிறப்புள்ள நாகம் பெருமானின் கையிலும் தவழ்கின்றது (518) கங்கணமாயும் கிடக்கின்றது (347).

பாம்பு சிவனின் அணிகலனாயும், ஆடையாயும் அமைந்தது மட்டுமன்றி மேரு மலையாகிய மத்தைக் கடைய வாசுகி என்னும் வடமாயும் அமைந்ததை நாவுக்கரசர் சுட்டுகின்றார் (52). இந்தப் பாம்பு திருமாலின் பஞ்சணையாய் அமைந்ததையும், அரவணையான் (71) அரவத்தணையான் (474) என்று திருமாலைச் சுட்டுவதன் மூலம் காட்டுகின்றார்.

ஏறு

சிவனடி சேர்ந்த விலங்கினங்களில் பாம்பிற்கிணையான சிறப்பைப் பெற்றது அவரின் ஊர்தியான காளையாகும். இது நாவுக்கரசரால் ஏறு, எருது, விடை, பெற்றம், ஆன் (159) என்றெல்லாம் சுட்டப்படுகின்றது. இந்தச் சிவ ஊர்தி மணி வெள்ளேறு, பருத்துயர்ந்த ஆன், வெஞ்சின வெள்ளேறு, வீறுடைய விடை, கடிய விடை, நரை விடை, கனவிடை, பொருவிடை, போரேறு, போரார் விடை, கொல் ஏறு, கடி நடை விடை, சின விடை எனப் பலவாறாக அப்பரால் பாடப்படுகின்றது.

விடையேறுதலால் சிவபெருமான், விடையான், விடையேறி, ஏறேறி, ஏற்றினான், ஏறூர்ந்த பெம்மான், ஆனேறி, கானேறேறி என்றெல்லாம் பெயர் பெறுகின்றார்.

உருளுடைய தேர்புரவி யோடும் யானை
யொன்றாலுங் குறைவில்லை யூர்தி வெள்ளேறு

எனச் சிறப்பிக்கப்படும் இந்த ஏறு சிவபெருமானின் நற்கொடியாயும் அமைகிறது.

புலி

பாம்பைப் போன்றே அரைக்கு ஆடையாகத் தோலளித்த மற்றொரு விலங்கு புலியாகும். புலி, வேங்கையென்றும் நாவுக்கரசரால் குறிக்கப் படுகின்றது. இந்தப் புலி பாய்புலி, புள்ளி கொண்ட புலி, கொல் வேங்கை என்றெல்லாம் சுட்டப்படுகின்றது. புலித் தோல் அரை ஆடையாகவும் போர்வையாகவும் (396) கோவணமாகவும் (166) மிளிர்கின்றது.

பாம்பும், புலியும் அரைக்கு ஆடையளித்த போதும் யானையின் தோலே சிவனின் ஆடையாக பல இடங்களில் பெருமை கொள்கின்றது. சிவன் அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்றான வழுவூரில் உமை அஞ்சி விலகும்படி யானையின் தோலுரித்து முடை நாற்றத்துடன் அதைத் தன் மீது போர்த்தியருளினார்.

யானை

யானை நாவுக்கரசரால் யானை, அத்தி, கரி, வேழம், களிறு, கயம் (511) தும்பி (699), குஞ்சரம் (718, 841) வாரணம் (729) என்று பலவாறாக அழைக்கப்படுகின்றது. இது காரானை, பைங்கண் யானை, பனைக்கை மும்மத வேழம், கானிரியவேழம், பருவெண் கோட்டு பைங்கண் மத வேழம், வெங்களிறு, கணபதி என்னும் களிறு, மாமதக்கரி, கொலை யார்ந்த குஞ்சரம், பிளிறு வாரணம் என்றும் வருணிக்கப் படுகின்றது. எல்லா இடங்களிலும் யானையின் தோல் சிவனின் போர்வை யாகச் சுட்டப்படுகின்றது.

மான்

பாம்பு, புலி, யானை போன்றவற்றின் தோல் மட்டுமின்றிப் புள்ளி மானின் தோலும் சிவனுக்குகந்த ஆடையாகின்றது (216). மான், மறி, மரை என்று அப்பரால் சுட்டப்படுகிறது. சிவபிரானின் ஒரு கையில் மழுவிருக்க மறுகையில் மான் தவழ்கிறது. இதை மான் மறி கையன், தாமரையினான் (335) போன்ற சிவநாமங்கள் தெளிவு படுத்துகின்றன. உயிருடன் சிவனை அணையும் பெருமை அரவிற்கும் மானிற்கும் மட்டுமே கிடைத்த தனிச்சிறப்பு.

பன்றி

ஏனம் என நாவுக்கரசரால் சுட்டப்படும் பன்றியின் பல் சிவபெருமான் அணியும் மாலையின் மணிகளாகும். "கண்டத்து இலங்கும் ஏனத்து எயிறு" (381) என்னும் தொடர் இதைத் தெளிவுபடுத்துகின்றது (158, 511).

ஆமை

பன்றியின் பல்லுடன் ஆமையின் ஓடாகிய எலும்பும் சிவனணியும் மாலையின் மணியாகி அணிகலனாகிறது (580, 620).

வண்டு

சிவபெருமானின் முடியும் அடியும் வண்டு இசைக்கும் பொய்கைக்கு ஒப்பானது. வண்டுகள், வண்டு, சுரும்பு என்னும் பெயர்களால் சுட்டப் படுகின்றன. சிவபெருமான் முடியில் சிறப்பிடம் பெறும் கொன்றை மலரை நாடிவரும் வண்டு சிவனுடன் உறையும் உயிருள்ள மற்றொரு உயிரின மாகும். (பாம்பு, மான்) இதனால் இறைவனும் வண்டுலவு கொன்றையங் கண்ணினான் எனும் பெயர் பெறுகிறான். கொண்டையில் சூடிய கொன்றையில் அமரும் வண்டு மட்டுமன்றி, கங்கையுடன் வரும் மலர்களிலும் வண்டு மொய்ப்பதை "சுரும்பு கொப்பளித்த கங்கை" என்று நாவுக்கரசர் சுட்டுகின்றார். சிவனின் திருவடி வண்டினங்கள் சூழ்ந்த நல்லடி (180) என்று போற்றப்படுகிறது.

வண்டுண்டு பாடும் கொன்றை, வண்டு பண்பாடும் கொன்றை, வண்டார் கொன்றை வண்டுலவு கொன்றை, சுரும்பார் மலர்க்கொன்றை போன்ற தொடர்கள் வண்டிற்கும் கொன்றைக்கும் உள்ள தொடர்பை உரைக்கும். வண்டு சிவனிடம் மட்டுமன்றி உடையுடனும் உறவு கொண்டது. சுரும்பு கொப்பளித்த இன்சொல் உமை, ஒளி வண்டார் கருங்குழலி (337) வண்டு வார் குழலாள் (430) எனும் தொடர்கள் வண்டுகள் உமையின் குழலில் குடி கொண்டதை உணர்த்தும்.

வண்டுகள் நிறைந்திருத்தல் சிவ தலங்களின் பெருமையாக நாவுக்கரசரால் சுட்டப்படுகின்றது. வண்டு பண்பாடும் சோலை மல்கு சிற்றம்பலம் (276) மதர்த்து வண்டு அறையும் சோலை (371) வண்டுகள் மதுக்கண் மார்ந்தும் திருவலம்புரம் (508) தேனைத் துளைத்துண்டு வண்டு பாடும் தில்லை (538) என்றெல்லாம் சிவன் இருக்கும் தலங்கள் நாவுக்கரசரால் போற்றப்படுகின்றது.

பவளம்

மேற்கூறிய விலங்குகள் மட்டுமன்றிச் சிவனுடனும் உமையுடனும் இணைத்துப் பேசப்படும் மற்ற உயிரினங்கள் பவளமும் முத்துமாகும். முதுகெலும்பற்ற மிக எளிமையான ஒரு குழியுடலியான பவளம் தன் வளர்ச்சி நிலைக்கேற்ற நிறமுடையது. இளமையில் வெண்ணிறமாயும் இடையில் ரோஜா வண்ணத்துடனும் முதுமையில் பெண்களின் கண்களைக் கவரும் சிவந்த நிறத்துடனும் இருக்கும், இந்தப் பவள நிறமே சிவனின் மேனி நிறம் எனப் பாடுகின்றார் திருநாவுக்கரசர். பவள மேனியன், பவளக்குன்று, பவளத்திரள் மாமணி, செழும் பவளக் குன்றொப்பான், 'பவளம் போல் மேனி (265) முளைத்தெழுந்த செழும் பவளக் கொழுந்தொப்பான் (254), செம்பவளம் புரைமேனி, பவளக் கொழுந்து (461) என்று திருநாவுக்கரசர் சிவனுக்குக் கொடுக்கும் அடைமொழி அனைத்தும் சிவனின் சிவந்த மேனி நிறத்தைச் சுட்டும். பவளத்திண் தோள், பவள அடி (185) பவளத்தடவரையே போல் வானடி (186) என்பன தோளின் நிறமும் திருவடி நிறமும் பவள நிறமே என்பதை உணர்த்துகிறது.

''கனபவளம் சிந்தும் மேனிப் பவளம் அவள் நிறமே'' என்னும் தொடர் உமையின் மேனி நிறமும் பவள நிறம் என்பதை உணர்த்தும். ''அனபவள மேகலையொடு'' என்ற சொல் ஆட்சி பவளம் மேகலையான அழகு சொல்லும்.

முத்து

முத்து, சிப்பி எனும் நத்தை வகையினுள் விளையும் ஒரு பொருள். பெண்களின் தீராக் காதலுக்கு ஆளான இந்த முத்தும் சிவபெருமானின் மேனிக்கு உவமையாகின்றது. ''முத்தினை, என்மணியை மாணிக்கத்தை'',

முத்தும் வயிரமும் மாணிக்கமும் (384), நன் பவளந்திகழும் முத்து (410), முத்தை வளரொளியை (461) எனும் வருணனைகள் சிவபிரானின் நிறம் முத்துப்போல் வெண்மை ஒளிவீசுவது என்பதை உணர்த்துகின்றது. சிப்பியுள் முத்து வளர்தலை, இறைவனின் சத்தியை வியக்கும் நாவுக்கரசர் சங்கினுள் முத்தம் வைத்தார் எனும் தொடரால் சுட்டுகின்றார்.

பருந்து

அரவணையான் என்று சுட்டப்படும் திருமால் திருநாவுக்கரசரால் புள்ஊர்தியான் (61) என்றும் பாறேறுவான் (157) என்றும் பாடப்படு கின்றார். திருமாலின் கருடவாகனம் இவ்வாறு சுட்டப்படுகின்றது.

இதுவரை காட்டப்பட்ட விலங்குகள் யாவும் சிவபெருமான், உமை மற்றும் திருமாலின் ஊர்தியாகவும் அணிகலனாயும் உடனுறையும் விலங்குகளாகவும் அமைந்தவை. இவையன்றி மேலும் பல விலங்குகள் சிவ தலங்களின் இயற்கை வளம் சுட்டும்போது குறிப்பிடப்படுகின்றன. அவற்றில் முதலிடம் பெறுவது மீன்களாகும். நீர் வளம் நிறைந்த தலங்களில் மீன் வளமும் பெருகிக் காணப்படுகிறது. மீன்களின் வகைகளாக வாளை, கயல், கெண்டை, வரால், கூழை ஆகியவை சுட்டப்படுகின்றன.

மீன்

கெடில ஆறு மற்றும் சிதம்பரம், திருக்கடம்பூர், திருக்கோழம்பம் ஆகிய தலங்களின் வயல்களில் மீன்கள் நிரம்பிக் காணப்படுகின்றன. மீனைத் தண் புனல் வாளைபாயு மல்கு சிற்றம்பலம் (274) வாளையுடைபுனல் வந்து ஏறி வாழ்வயல் தில்லை (376) பருவரால் குதிகொள்ளும் பழனம் சூழ் கடம்பூர் (651) தேன்சொரிய மீன்துள்ளும் திருசாய்க்காடு (540) கூழை பாய் வயல் (730) என்னும் தொடர்கள் இதை விளக்குகின்றன.

உமையின் விழிகளைப் பாடும் நாவுக்கரசர் அது கெண்டை போன்றது என நினைவு கூருகின்றார். கெண்டை போல் நயனத்து இமவான் மகள் என்னும் தொடர் (430) இதைக் காட்டும்.

தவளை

ஒரே ஒரு இடத்தில் குறிப்பிடப்படும் தவளை நீர் நிறைந்த வயல்களில் நிறைந்திருக்குமாதலால் தவளையும் தலவளம் சுட்டவே நாவுக்கரசரால் பயன்படுத்தப்படுகிறது எனலாம். வயலில் காணப்படும் பசியநிற கால்களை உடைய இத்தவளை பறை கொட்டுவதாக நாவுக்கரசர் பாடுகின்றார் (பைங்கால் தவளை பறைகொட்ட - 128)

கொக்கு

மீன் நிறைந்த நீர் நிலைகளில் கொக்கினத்திற்குக் குறைவிருக்காது. எனவே கொக்குகளும் திருநாவுக்கரசரால் தேவாரத்தில் பாடப்படுகின்றன.

கொக்கினம் பயில் சோலை குரக்குக்கா, கொக்கினம் வயல் சேரும் குரக்குக்கா எனத் திருக்குரக்குக்காவைப் பற்றி விரியும் வருணனைகள் கொக்கைப் பாடுகின்றன. கொக்குகள் நாவுக்கரசரால் குருகினம் என்றும் குறிப்பிடப்படுகின்றன. செங்கால் குருகு (128) பழம் விழும் படப்பை எல்லாம் குருகினம் கூடி (515) மனைக் காஞ்சி இளங்குருகு (938) மடை வாய்க் குருகு என்பன குருகு எனப்படும் கொக்கு வகைகளையே குறிக்கின்றன.

நாரை

திருப்பழனம் பறவைகளின் சரணாலயமாகவே நாவுக்கரசரால் காட்டப்படுகின்றது. திருப்பழன வயல்களில் காட்டப்படும் பறவைகள் பலவாகும்.

> பொங்கோத மால்கடலிற் புறம் புறம்போய் இரைதேடும்
> செங்கால் வெண் மட நாராய் (986)
>
> துணையார முயங்கிப் போய்த் துறை சேரும் மடநாராய்

என்னும் பாடல் அடிகள் திருப்பழன உறை நாரையைச் சுட்டுகின்றன.

அன்னம்

> பஞ்சிக்கால் சிறகன்னம் பறந்தாற்கும் பழனத்தான்

எனச் சிவனுக்குச் சொல்லப்படும் அடைமொழி பஞ்சுபோல் வெண்நிறம் கொண்ட அன்னத்தைச் சுட்டுகின்றது.

குயில்

திருப்பழனச் சோலைகளில் வசிக்கும் குயிலினங்களும் நாவுக்கரசருக்கு இணையாகச் சிவபெருமானிற்குச் சொல்மாலைகள் அளிக்கின்றன. "சொல்மாலை பயில்கின்ற குயிலினங்காள" (981) என்பது அத்தொடராகும்.

மயில்

நாவுக்கரசரால் பாடப்படும் மற்றொரு பறவை மயில். வயல் நிறைந்த சோலைகளில் காணப்படும் மயில்கள் நிலவளத்தையும் மக்களின் மன வளத்தையும் குறிப்பிடும். கானெடுத்து மாமயில்களாடும் சோலை எனத் திருக்கழிப்பாலையையும் (335) கோல மஞ்ஞைகள் ஆலும் குரக்குக்கா என்றும் (444) தல வளத்தை மயில்களைக் கொண்டு குறிப்பிடும் நாவுக்கரசர் மயிலை உமைக்கும் உவமையாக்குகின்றார். திருநாரையூர் உறை பெருமானுடன் சேர்ந்திருக்கும் உமையவளை நல்மயில் சேர் திருநாரையூர் என்று சுட்டுவதாலும் சிவபிரானை மயிலியல் மலைமாதின் மணாளன் (726) என்று குறிப்பிடுவதாலேயும் இதை உணரலாம்.

சிங்கம்

மேருமலையை மத்தாக்கி வாசுகியை வடமாக்கி, பாற்கடலைத் திருமால் கடைந்த பொழுது தோன்றிய நஞ்சை உண்டு இறவாமல் இளமையுடன் நின்ற சிவபெருமான் சிங்கம் போன்றவர் என வியக்கின்றார் அப்பர்.

காக்கை

பூக்களால் சிவன் அடி போற்றாமல், நாக்கினால் சிவ நாமம் நவிலாமல் உடலுக்கு மட்டும் உணவு தேடி அலைவோர் உணவால் வளர்ந்த தம் உடலை காக்கைக்கு உணவாக்கி அழிவர் என்று காகத்தையும் தேவாரத்தில் இடம் பெற வைத்துள்ளார் நாவுக்கரசர்.

சில தலங்களின் நில வளம் மற்றும் நீர் வளம் குறிக்க அப்பரால் விலங்குகளும் பறவைகளும் பாடப்படுவதன்றி இயற்கை நிகழ்வுகளைச் சொல்லவும் இவை பயன்படுகின்றன. நாவுக்கரசர் விரிக்கும் இயற்கை நிகழ்வுகள் மிகவும் அரிதே என்ற போதிலும் அவரையும் இயற்கை ஈர்த்திருப்பது தனிச் சிறப்புள்ளதே ஆகும்.

இயற்கை நிகழ்வுகள்

சிவபிரானின் குமிழ் சிரிப்பு உலகைத் தன்வயப்படுத்துவது. அச்சிரிப்புக்குக் காரணமாக நாவுக்கரசர் ஒரு காட்சியைக் காட்டு கின்றார். சிவபெருமானின் மேல் கிடந்த பாம்பைக் கண்டு உமையவள் திகைக்க பாம்பு உமையை மயில் எனக் கருதிப் பதறியது. சடையில் பாய்ந்த கங்கையின் நெருக்கம் கண்டு பிறை ஏங்க இந்தக் குழப்பங்கள் கண்டு கெடிலவாணர் நகுவதாக நாவுக்கரசர் காட்டுகின்றார்.

கிடந்த பாம்பு அருகுகண்டு அரிவை பேதுறக்
கிடந்த பாம்பு அவளையோர் மயில்என்று ஐயுறக்
கிடந்த நீர்ச் சடைமிசைப் பிறையும் ஏங்கவே
கிடந்து தான் நகுதலைக் கெடில வாணரே. (79)

கெடிலவாணர் உறையும் கெடில ஆற்றங்கரை செழிப்புடையது. தேன் உண்ணச் சென்ற மந்தி தேன் கூட்டைக் கலைக்க அதிலிருந்து சொட்டும் தேன் கெடில ஆற்றின் நீருடன் கலந்து பாயும். நீர் நிலை களில் உள்ள தாமரையின் மீது எருமைகள் பாலைச் சொரிய அதனுள் இருந்த தேனுடன் கலந்த பால் கெடில ஆற்றுடன் கலந்து ஓடும் (81).

தனக்குக் கிடைத்த ஊன் உணவைக் கவ்விக் கொண்ட நரி ஆற்றைக் கடக்க அந்த ஊனைக் கவ்வி இழுக்கும் விரால் மீன்கள் நிறைந்த கழனி சூழ்ந்த வயல்களால் அதிகை வீரட்டனார் சூழப்பட்டுள்ளார் (116).

தாழைப் புதரிலுள்ள தாழை மடல்களின் கூர் முனைகளைத் தன் பிள்ளையின் அலகென்று எண்ணி நெருங்கிச் சென்ற கொக்குகள் தாம் கொணர்ந்த உணவை அதனுள் இட்டுச் செல்வதாகக் காட்டும் காட்சி திருக்கழிப்பாலைக்கு உரியது (323).

திருவையாற்றை அடைந்த நாவுக்கரசர், கயிலையில் சிவனுடன் உமை அமர்ந்தது கண்ட கோலம் உலகத்து உயிர்களிலெல்லாம் அவருக்கு இறைவனையும் இறைவியையும் காட்டுகின்றது. காதல் மடப் பிடியொடு களிற்றையும், கோழியொடு பெடையையும், வரிக்குயிலொடு அதன் பெடையையும், இளம் குயில் பேடையுடன் அதன் சேவலையும், பெண்மயிலுடன் ஆண் மயிலையும், அன்றில் இணையையும், ஏனத்து ஜோடியையும், நாரையின் துணையையும், பைங்கிளியை அதன் பேடையொடும், இளமானைத் தழுவிய அதன் ஏறையும் கண்ட நாவுக்கரசர் அவற்றில் திருவையாறு உறை செம்பொற் சோதியையும், அறம் வளர்த்த நாயகியையுமே கண்டு ஆனந்தித்திருக்க வேண்டும்.

சிவ பூசை செய்து உயர்ந்த விலங்குகள்

எலி

திருகுறுக்கை வீரட்டனார் தம்மை வணங்கிய எலிக்கு மறுபிறப்பில் மாவலியாய் பிறக்கும் பாக்கியம் அருளியவர். சிவபிரான் முன் எறிந்த தீபத்தை இடறி எலி ஓட அதனால் அத்தீபம் தூண்டப்பட்டது. இது நிகழ்ந்த நாள் சிவராத்திரியாதலால், சிவராத்திரியன்று சிவபிரானுக்குத் தீபம் இட்ட புண்ணியம் சேர மறுபிறவியில் எலி மாவலியாய் பிறந்து திருமால் மண்ணளக்கச் சிரம் காட்டிய பேறு பெறுகின்றது.

சிலந்தி

வலை பின்னிச் சிவபிரான் மேல் சூரியன் சுடாமல் காத்த சிலந்தியின் செயல் அதற்குச் சிவபுண்ணியத்தை ஈட்டித்தர அடுத்த பிறவியில் அச்சிலந்தி கோச்செங்கண் சோழனாய்ப் பிறந்து சிவனடி தொழுது உயர வழிகாட்டியது.

ஐராவதம்

''வெள்ளானை வேண்டு வரங்கொடுப்பார்'' திருவெண்காடுறை ஈசர் என்னும் நாவுக்கரசரின் வாக்கால் ஐராவதமும் சிவபூசை செய்து உயர்ந்ததை உணர்கின்றோம்.

சிவபூசைக்கு உகந்த விலங்குப் பொருள்

சிவபூசைக்குப் பயன்படும் ஒரே விலங்குப் பொருள் பசுவினிட மிருந்து பெறப்படும் பஞ்சகௌவியமாகும். ஆனஞ்சாடிய ஆமாத்தூர்

ஐயன் (208) ஆவகத்தஞ் சாடினான் (223) ஆனஞ்சும் ஆடுவர் (295) ஆனெய் ஆட வைத்தார் (315) ஆனஞ்சுமாடும் ஆதிரையினார் (338) ஆமலி பாலு நெய்யும் ஆட்டி அர்ச்சனைகள் செய்து (533) என்பன பஞ்சகௌவிய மகிமையைச் சொல்லும்.

மேற்காட்டிய அப்பர் தேவாரப் பாக்கள் வழி அறியலாகும் செய்திகள் பின்வருமாறு :

★ சிவபெருமானைக் கண்டு அவன் உருவத்தைக் கருத்தில் இருத்தியபோது அவன் முடி முதல் அடி வரை காணப்படும் விலங்குகளை மட்டுமே நாவுக்கரசர் பாடுகின்றார்.

★ சிவபெருமான் அருளும் திருத்தலங்கள் அனைத்திற்கும் நீண்ட பயணம் மேற்கொண்ட நாவுக்காசர் அந்தத் தலங்களில் நிறைந் திருந்த விலங்குகளிலும் சிவனைக் காண்பதால் அவற்றைப் பாடுகின்றார்.

★ திருநாவுக்கரசரின் சிவ சிந்தனையையும் தாண்டி அவரைக் கவர்ந்த திருத்தல இயற்கை நிகழ்வுகளும் உண்டு. அவை தேவாரத்தில் பதிவாகிப் பயில்வோர் கண்முன் அக்காட்சிகளை விரிக்கின்றன.

★ திருநாவுக்கரசர் விலங்குகளுக்கு அளித்துள்ள அடைமொழியால் அவற்றின் குணநலம் மிகத் துல்லியமாய்த் தெரிகின்றது.

24. நாவுக்கரசரின் இலக்கிய வகைகள்

இரா. கண்ணன், சென்னை.

தமிழ் மொழியில் இலக்கியங்கள் தோன்றிய காலம் இதுவே என அறுதியிட்டுக் கூற இயலாவிடினும், வழக்கிலுள்ள இலக்கியங்களில் காலப் பழமையுடையன இன்றைக்குச் சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் முகிழ்த்தவை என்பதில் முரண்படுவாரிலர். ஈராயிரமாண்டுகளாகத் தொடர்ந்து தொய்வின்றி வளர்ந்து வரும் தமிழிலக்கியம் காலந்தோறும் புதுப்புது இலக்கிய வகைகளையும் வடிவங்களையும் கொண்டு பொலிவுடனும் பொன்றாச் சிறப்புடனும் வளர்ந்து வந்துள்ள பாங்கினைத் தமிழிலக்கிய வரலாற்றினை நோக்குவோர் எளிதின் உணருவர். இவ்வாறு காலந்தோறும் எழுந்த பற்பல புத்திலக்கிய வடிவங்களையும் வகைகளையும் வகுத்தும் தொகுத்தும் விளக்கியும் உரைக்கும் போக்கு ஏழாம் நூற்றாண்டளவில் தனித்துறையாகத் தோற்றம் காட்டியது. அதுகாறும் தமிழ் மொழியின் எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு எனும் உறுப்புகளுக்கு மட்டுமே இலக்கணம் காணும் மரபு வழங்கி வர, கி.பி. ஏழாம் நூற்றாண்டளவில் இலக்கிய வகைகளுக்கான இலக்கணம் காணும் முயற்சி ஏற்படலாயிற்று. அவ்வாறு இலக்கிய வகைகளின் இலக்கணம் உரைக்கும் நூல்கள் பாட்டியல்கள் எனப்பட்டன. பாட்டியல் நூல்கள் எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு ஆகியவற்றின் இலக்கணம் உரைக்கும் இலக்கண நூல்களைக் காட்டிலும் மிகப் பலவாகத் தோன்றின. கி.பி. பத்தாம் நூற்றாண்டளவில் எழுந்ததாகக் கருதப்படும் பன்னிரு பாட்டியலுக்கு முன்னரே பதின்மூன்று பாட்டியல் நூல்கள் வழக்கில் இருந்தமையை அறிய முடிகிறது. இவைகளேயன்றி இன்றும் வாழ்வனவாகப் பதினொரு பாட்டியல்கள் காணப்படுகின்றன. எனவே நாம் முன்னர்க் கூறியவாறு எழுத்து முதலானவற்றிற்கு இலக்கணம் கூற எழுந்த இலக்கண நூல்களைக் காட்டிலும் இலக்கிய வகைகளின் இலக்கணம் கூற எழுந்த பாட்டியல் நூல்கள் மிகப் பலவாக உள்ளன என்பது தெளிவு.

இவ்வாறு பாட்டியல்கள் மிகப் பலவாகப் பல்கிப் பெருகியமைக்குக் காரணம் தமிழ் மொழியில் காலந்தோறும் தோன்றி வளர்ந்த எண்ணிறந்த இலக்கிய வகைகளே எனலாம். இவ்வாறு புத்திலக்கிய வகைகள் மிகப் பலவாகத் தோன்றியமைக்குக் காரணம் தமிழ்ப் புலவர்களின் புதுமையைப்

புதுக்கி உரைக்கும் வேட்கையும் புலமைச் செறிவும் எனலாம். பாடுபொருளால் பல்வேறு இலக்கிய வகைகள் தோன்றின. உலா, தூது, கலம்பகம், கோவை முதலானவை பாடுபொருளால் உருவான புத்திலக்கிய வகைகளுக்குச் சிறந்த சான்றுகள் ஆகும். அணி இலக்கண வளர்ச்சி பல்வேறு சித்திர கவிகளை உருவாக்கித் தந்தது. மடக்கு, அந்தாதி, ஏகபாதம், எழுகூற்றிருக்கை உள்ளிட்ட சித்திர கவிகள் முதலானவை அணி இலக்கணம் வழித் தோன்றி வளர்ந்த புதிய இலக்கிய வகைகளாகும். யாப்பிலக்கணமும் பல்வேறு புதிய இலக்கிய வகைகள் உருவாக அடித்தளமாக அமைந்தது. விருத்தம், ஒருபா ஒருபஃது, இருபா இருபஃது, இரட்டைமணிமாலை, மும்மணிமாலை, தாண்டகம், ஊர்வெண்பா முதலானவையெல்லாம் யாப்பிலக்கணம் வழித் தோன்றிய புத்திலக்கிய வடிவங்களாகும். இவ்வாறு தோன்றிய புத்திலக்கிய வகைகள் பல்வேறு காலங்களில் பல்வேறு புலவர்களால் தோற்றுவிக்கப்பட்டுப் பின்பு மரபு சார்ந்த இலக்கிய வடிவங்களாகச் சிறப்படைந்தன. எனவே இலக்கிய வகைகளின் உருவாக்கம் தோன்றிய காலத்தை வரையறை செய்ய இயலாது. ஆயினும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் எழுந்த பத்தி இயக்கம் பெரும்பான்மையான இலக்கிய வகைகளை உருவாக்கியது என்பது உண்மை. சிவனடியார்களும் மாலடியார்களும் ஆக்கித் தந்த புத்திலக்கிய வகைகளும் வடிவங்களும் ஏராளம். எனினும் மாலடியார்கள் படைத்தளித்த இலக்கிய வகைகளைக் காட்டிலும் சிவனடியார்கள் படைத்தளித்த இலக்கிய வகைகளே மிகுதியாக உள்ளன. காரைக்கால் அம்மையார் காலந்தொடங்கி வள்ளலாரின் காலம் வரை, பல்வேறு புத்திலக்கிய வகைகள் உருவாகி நிலை பெற்றுள்ளன. இத்தகு புத்திலக்கிய வகைகளை உருவாக்கிய அருளாளர்களுள் நாவுக்கரசரும் ஒருவர். இவர் படைத்தளித்த இலக்கிய வகைகள் குறித்து இனி நோக்குவோம்.

இலக்கிய வகைகள்

மருள் நீக்கியாராகிய திருநாவுக்கரசர் இறைவனின் மலரிணையடி களைப் பணிந்து மணக்க மணக்கப் பாடிய அருட்பாக்கள் மூன்று திருமுறை களாக வகுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்கள் அனைத்தும் 'பதிகம்' எனும் இலக்கிய வகைக்குள் அடங்கும். ஆயினும் பொதுப் பெயரான பதிகம் என்பதால் குறிக்கப் பெறுவனவாயினும் சில பதிகங்கள் சிறப்புப் பெயரேற்று அமைந்தும் உள்ளன. அவற்றுள் திரு அங்கமாலை, க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம் எனும் பெயரிய இவ்விரு பதிகங்களும் இவண் குறிப்பிட வேண்டுவன. இப்பதிகங்கள் முறையே அங்கமாலை, ஊர்வெண்பா எனும் இலக்கிய வகைகளின் மூல நூல்களாகத் திகழும் பெருமை உடையன. பொருட் சிறப்பில் தனி இலக்கிய வகைகளாகக் கொள்ளத் தக்க பல்வேறு பதிகங்கள் நாவுக்கரசரால் பாடப்பெற்றுள்ள போதிலும் இவ்விரு இலக்கிய வகைகளுக்குப் பாட்டியல் நூல்கள் பலவும் இலக்கணம் கண்டு உரைத்துள்ளன. ஆதலின் இவ்விரண்டு மட்டுமே இவண் குறிக்கப்

பெற்றுள்ளன என்க. பொருட் சிறப்பான் தனி இலக்கிய வகைகளாக அமைந்த மேற்சுட்டிய இரு இலக்கிய வகைகளைப் போன்றே யாப்பு விகற்பத்தாற் தனி இலக்கிய வகைகளாகத் தோற்றமளிக்கும் பதிகங்களும் நாவுக்கரசரால் பாடப்பெற்றுள்ளன. அவை திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்பனவாகும். இவற்றுள் திருத்தாண்டகம் எனும் யாப்பு விகற்பம் தனி இலக்கிய வகையாகப் பாட்டியல் நூல்களால் காட்டப்பட்டுள்ளன. அவ்வாறே விருத்தம் என்பதும் தனி இலக்கிய வகையாக அப்பாட்டியல் நூல்கள் பகர்கின்றன. எனின், அங்கமாலை, க்ஷேத்திரக்கோவை, விருத்தம், தாண்டகம் ஆகிய நான்கு புத்திலக்கிய வடிவங்களை அப்பரடிகள் படைத்தளித்துள்ளார் எனத் துணியலாம். அவற்றுள் அங்கமாலை, தாண்டகம் ஆகிய இவ்விரு இலக்கிய வகைகளுக்கான இலக்கணம் குறித்து நோக்குவோம்.

அங்கமாலை

பாட்டுடைத் தலைமக்களின் உடலங்கங்களைக் கேசாதிபாதமாகவோ பாதாதிகேசமாகவோ வர்ணித்துப்பாடும் பாடற் பொருண்மை உடையது அங்கமாலை எனும் இலக்கிய வகை எனப் பாட்டியல் நூல்கள் இலக்கணம் கூறுகின்றன. இவ்விலக்கிய வகையின் இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல் தவிர எஞ்சிய பாட்டியல் நூல்கள் அனைத்தும் விளக்கி உள்ளன.

> "நிறுத்த வெளிவிருத்த நீடுறுப்பில் வந்தால்
> குறித்தங்க மாலையாக் கொள்க (வெ.பா. : 51)

என வெண்பாப் பாட்டியலும்,

> "பாதாதி கேசம் கேசாதி பாதம்
> எண்ணான் குறுப்பும் ஏற்க வருணித்துக்
> கலிவெண் பாவால் கட்டுரை செய்வது
> அவ்வவ் பெயரின் அங்க வகையை
> விளம்பி யொழுங்கின் வெளிவிருத்தத்தால்
> வழுத்துவது அங்க மாலை யாமே". (பி.ம. : 13)

எனப் பிரபந்த மரபியலும்,

> "மிக்க உறுப்பவை வெண்பா விருத்தம்
> தொக்கவொடு முறையான் தொடர்வுறப்பாடுதல்
> அங்கமாலை யாம்எனப் பகர்வர்" (இ.வி. 835)

என இலக்கண விளக்கமும் அங்கமாலையின் இலக்கணத்தைப் பகரும். இப்பாட்டியல் நூல்கள் அனைத்தும் அங்கங்களை வர்ணித்துப் பாடுவது அங்கமாலை எனக் கூறிடினும் மூல இலக்கியமான திருநாவுக்கரசரின் திருஅங்கமாலை உடலுறுப்பின் எழிலை வண்ணித்து உரைக்காது

உடலுறுப்புகள் ஆற்ற வேண்டிய தொழிலை அறிவுறுத்தும் பாடல் களைக் கொண்டு அமைந்துள்ளது.

> ''தலையே நீவணங்காய் - தலை
> மாலை தலைக்கணிந்து
> தலையாலேபலி தேருந் தலைவனைத்
> தலையே நீவணங்காய்''. (திருவங்கமாலை - 1)

என்றும்,

> ''கண்காள் காண்மின்களோ - கடல்
> நஞ்சுண்ட கண்டன்றன்னை
> எண்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்
> கண்காள் காண்மின்களோ'' (திருவங்கமாலை - 2)

என்றும்,

> ''கால்க ளாற்பயனென் - கறைக்
> கண்டனுறை கோயில்
> கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக்
> கால்களாற் பயனென்'' (திருவங்கமாலை - 9)

என்றும் அமைந்துள்ள திருவங்கமாலையின் பாடல்கள் உடல் உறுப்புகள் ஆற்ற வேண்டிய தொழில்கள் இறைவனை வணங்குவதும், காண்பதும், அவன் புகழ் கேட்பதும், அவன் மணம் முகர்வதும், அவன் புகழைப் பேசுவதும், அவனையே நீக்கமற நினைப்பதும், அவனைத் தொழுவதும், அவனுறையும் கோயிலை வலம் வருவதும், ஆலயம் நாடிச் செல்வதும் ஆகியனவே என அறிவுறுத்தும் நிலையில் பாடப்பட்டுள்ளன. பதிகத்தின் ஒன்பது பாடல்கள் இவ்வாறு அமைந்துள்ள போதும் உடல் உறுப்பைக் கேசாதி பாதமாகக் காட்டும் அமைப்புக் காணப்படுகிறது. இப்பதிகத்தில் மீதம் உள்ள மூன்று பாடல்கள் உடல் உறுப்புகளைச் சுட்டாது பொது நிலையில் இறை வணக்கத்தை வலியுறுத்தும் பொருண்மையில் அமைந் துள்ளன. பாட்டியல் நூல்கள் திருநாவுக்கரசரின் திருவங்கமாலையை நோக்கியே அங்கமாலை எனும் இலக்கிய வகையின் இலக்கணத்தை வரையறை செய்தன எனலாம். என்றாலும் அப்பாட்டியல் நூல்கள் பாடற்பொருண்மையில் சற்றே மாற்றம் செய்து உடல் உறுப்புகளை வர்ணித்துக் கூறுவது அங்கமாலை என இலக்கணம் கண்டுள்ளன என்பதும் உணர வேண்டுவதாம். நாவுக்கரசர்க்குப் பின்னால் இவ்விலக்கிய வகையைப் பாடியவரோ பாடப்பெற்ற நூலோ இன்றுகாறும் கிட்டவில்லை. எனவே அங்கமாலை எனும் இலக்கிய வகையின் முதலும் முடிவுமாக நாவுக்கரசரின் திருவங்கமாலை எனும் பதிகமே விளங்குகிறது எனலாம்.

தாண்டகம்

செய்யுள் விகற்பத்தான் பெயரேற்கும் இலக்கிய வகைகளுள் ஒன்று தாண்டகம் ஆகும். இவ்விலக்கிய வகையின் இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல், முத்துவீரியம், பிரபந்ததீபிகை, பிரபந்ததீபம், தொன்னூல் விளக்கம் ஆகிய இவ்வைந்து பாட்டியல் நூல்களும் பகர்கின்றன. இப்பாட்டியலார் வழிநின்று தாண்டக இலக்கிய வகையின் இலக்கணத்தைக் காட்டுவாம்.

பன்னிருபாட்டியல்,

''மூவிரண் டேனும் இருநான் கேனும்
சீர்வகை நாட்டிச் செய்யுளின் ஆடவர்
கடவுளர்ப் புகழ்வன தாண்டகம் அவற்றுள்
அறுசீர் குறியது நெடியதெண் சீராம்'' (ப.பா. : 196)

எனத் தாண்டகத்தின் இலக்கணத்தை உரைக்கும். 'ஒவ்வொரு அடியின்காறும் அறுசீரோ எண்சீரோ வருமாறு நான்கடியான் இயற்றப்படும் தாண்டகம் எனும் செய்யுளில் மாந்தர்தம் புகழையோ இறைவனின் புகழையோ பாடுவது தாண்டகம் எனும் இலக்கிய வகையாம். அறுசீரான் அமையும் தாண்டகச் செய்யுளால் நூல் இயற்றப்படுமாயின் அது குறுந்தாண்டகம் எனப்படும். அவ்வாறே எண்சீரான் வருவது நெடுந்தாண்டகம் எனப்பெறும் என்பது மேற் காட்டிய பன்னிரு பாட்டியல் விதியின் பொருளாம். இனி வடமொழியின் இலக்கணம் தழுவி நம்மவர் தாண்டகம் எனும் செய்யுட்குக் கூறும் இலக்கணம் யாதென நோக்குவாம்.

''தாண்டகமாவது, இருபத்தேழு எழுத்து முதலாக உயர்ந்த எழுத்தடியினவாய் எழுத்தும் குரு லகுவும் ஒத்து வருவன அளவியற் தாண்டகம். எழுத்து ஒவ்வாதும் எழுத்தலகு ஒவ்வாதும் வருவன அளவழித் தாண்டகம்'' என்பார் யாப்பருங்கல விருத்தியுரையார். எனின், செய்யுளின் அடிதோறும் வரும் எழுத்துகள் இருபத்தேழாகவோ அதனினும் மிகுந்தோ வருவதாகப் பாடுவது தாண்டகம் என்பது புலனாம். எழுத்தினை எண்ணுங்கால் ஒற்றெழுத்தையும் குற்றுகரத்தையும் குற்றியலிகரத்தையும் விடுத்துப் பிறவற்றை எண்ண வேண்டுவது தமிழ் யாப்பு நெறி. வடநெறியோ ஒற்றினை மட்டுமே விடுத்து எழுத்தெண்ணுமாறு வருவதாம். அம்மொழியில் குறுகிய உகரமும் இகரமும் இன்மையான் தமிழ் நெறிபோல் குற்றுகரத்தையும் குற்றியலிகரத்தையும் குறித்திலர் என்க. எனவே வடமொழி இலக்கண நெறி தழுவி தமிழிலும் தாண்டகச் செய்யுளில் எழுத்தெண்ணுங்கால் ஒற்றை மட்டும் விடுத்து எழுத்தெண்ணப் படுவதும் உண்டென அறிக. அவ்வாறு எண்ணுங்கால் எழுத்தெண்ணிக்கை இருபத்தேழோ அதனினும் மிக்கோவரின் அது தாண்டகச் செய்யுள்

என்பதாம். மேலும் தாண்டகச் செய்யுளுள் இருவகைகள் உண்டு. அவை குறுந்தாண்டகம் நெடுந்தாண்டகம் என்று மேலே கண்டோம். அஃதாவது அறுசீர் பெற்று இருபத்தாறு எழுத்தினும் மிகுந்து வருவது குறுந்தாண்டகமாம். அவ்வாறே எண்சீர் பெற்று இருபத்தாறு எழுத்தினும் மிகுந்து வருவது நெடுந்தாண்டகமாம் என்க. இத்தகைய வகைப்பாடு தமிழ் யாப்பு நெறி பற்றியதாம். வடமொழியைத் தழுவி தாண்டகத்திற்கு இலக்கணம் கூறுவார் தாண்டகத்திற்கு உரியனவாக மேலும் இரண்டு வகைகளைச் சுட்டுவர். அவை அளவியற்றாண்டகம் மற்றும் அளவழித் தாண்டகம் என்பனவாம். குருவும் லகுவும் ஒத்து வருவது அளவியற் தாண்டகம். அவ்வாறு அவை ஒத்து வாராது வருவது அளவழித் தாண்டகமாம். குரு, லகு என்பன வடமொழி யாப்பிலக்கணத்தார் சுட்டும் எழுத்தலகாம். தமிழ் யாப்பிலக்கணத்தில் வரும் நேர், நிரை ஆகிய அசைகளைப் போன்றன. ஆனால் தமிழ் அசைகளுக்கும் வடமொழி குரு, லகுவிற்கும் வேறுபாடு உண்டு. குற்றெழுத்து மட்டும் லகு எனப்படும். குற்றெழுத்து ஒற்றெடுத்தும் நெட்டெழுத்து ஒற்றெடுத்தும் நெட்டெழுத்துத் தனித்தும் வரின் அவை குரு எனப்பெறும். கீழ்க்காணும் சான்றினைக் கொண்டு லகு, குரு என்பவற்றையும், தமிழ் மொழி வடமொழி ஆகிய வற்றின் எழுத்தலகு பற்றிய கோட்பாட்டையும் அறிந்து கொள்க.

தமிழ் நெறி

நேர்	நேர்	நேர்	நேர்	நேர்	நிரை	நிரை
எந்	தை	பா	தம்	சிந்	திநெஞ்	சமே

வடநெறி

குரு	குரு	குரு	குரு	குரு	லகு	குரு	லகு	குரு
எந்	தை	பா	தம்	சிந்	தி	நெஞ்	ச	மே

இவ்விலக்கண வரையறையோடு வரும் தாண்டகச் செய்யுளில் ஆடவரையோ கடவுளரையோ புகழ்வதாக வருவது தாண்டகம் எனும் இலக்கிய வகை என்று பன்னிரு பாட்டியல் விளக்கும். முத்துவீரியம், பிரபந்த தீபிகை, தொன்னூல் விளக்கம் (உரை), பிரபந்த தீபம் ஆகியன பன்னிரு பாட்டியல் கூறியவாறே தாண்டகத்திற்கான இலக்கணத்தை விளக்கும். அந்நான்கு பாட்டியல்களின் நூற்பாக்கள் பின்வருமாறு.

''இருபத் தேழுஎழுத் தாதியாக
உயர்ந்த எழுத்தடி யினவாய் எழுத்துங்
குருவும் லகுவும் ஒத்து வந்தன
அளவியற் றாண்டகம் எனவும் அக்கரம்
ஒவ்வாது எழுத்தலகு ஒவ்வாதும் வந்தன
அளவழித் தாண்டக மெனவும் பெயர்பெறும்'' (மு.வீ. : 1115)

"இருபதுட னேழெழுத் தாதியாய் மேலுறு
மெழுத்தடிய தாயெழுத்து
மிவல்குருவு மிலகுவு மொத்துவந் தனவள
வியற்றாண்ட கத்துறுப்பா
மெழுத்துமொவ் வாதெழுத் தலகொவா வந்தனவு
மிவையள வழித்தாண்டக
மிருவகைப் பட்டதோர் தாண்டக மெனப்புலவ
ரிசைபெற வுரைப்பதாகும்" (பி.தீபி. : 26)

"தாண்டகம் : இருபத்தேழெழுத்து முதலாக வுயர்ந்த
வெழுத்தடியினவா யெழுத்துங்
குருவு மிலகுவு மொத்து வந்தன
அளவியற் றாண்டக மெனவும்,
எழுத்தொவ்வாது மெழுத்தல
கொவ்வாதும் வந்தன
அளவழித் தாண்டக மெனவும் படும்"
(தொ.வி. : உரை: ப: 205)

"தாண்டகம் என்பது செய்யுள் ஓரடிக்கு
இருபத்தேழு எழுத்து இசைய இயம்புதல்
அதுவே அளவியல் தாண்டகம் அவற்றுள் ஓர்
அக்கரம் அஃகில் அளவழித் தாண்டகம்" (பி.தீ: 79)

ஆக அடிதோறும் இருபத்தேழு எழுத்தினுக்கு மிகுந்த எழுத்துகள் பெற்று வரும் தாண்டகச் செய்யுளால் பாடுவது தாண்டகம் எனும் இலக்கிய வகையாகும் என்பதும் அது எழுத்து, லகு, குரு ஆகியனவும் ஒத்து வரின் அளவியற் தாண்டகம் என்றும் ஒவ்வாதுவரின் அளவழித் தாண்டகம் என்றும் இரு வகையாக வரும் என்பதும் முத்து வீரியம், தொன்னூல் விளக்கம் (உரை) பிரபந்த தீபம் மற்றும் பிரபந்த தீபிகை ஆகிய இந்நான்கு பாட்டியல் நூல்களின் கருத்தென்பது தெளிவுறும். பன்னிரு பாட்டியல் சுட்டிய குறுந்தாண்டகம் நெடுந்தாண்டகம் எனும் வகைகளை இப்பாட்டியல்கள் சுட்டாமையும் பாட்டுடைத் தலைமக்களைப் பன்னிரு பாட்டியல் சுட்ட, இப்பாட்டியல்கள் அது குறித்து ஏதும் கூறாமையும், அளவியற்றாண்டகம், அளவழித் தாண்டகம் என்ற இரு வகைகளை இப்பாட்டியல்கள் முதன் முதலாகச் சுட்டுவதும் பன்னிரு பாட்டியலோடு இந்நான்கு பாட்டியல் நூல்களும் தாண்டகம் எனும் இலக்கிய வகையின் இலக்கணம் குறித்துக் கொண்டுள்ள முரண்களாம். எனினும் மேற்கூறியவாறு பன்னிரு பாட்டியல், தமிழ் யாப்பு நெறி நோக்கியும் முத்துவீரியம் உள்ளிட்ட மேற்காட்டிய நான்கு பாட்டியல் நூல்கள், வடிமொழி யாப்பு நெறி தழுவியும் தாண்டக இலக்கியத்திற்கு இலக்கணம் உரைத்துள்ளன எனக்

கோடல் வேண்டுவதாம். இனி, இந்தாண்டகச் செய்யுள் வடமொழி யிலிருந்து தமிழுக்குக் கொண்டு வந்தது என்பார் கூற்றை மறுத்து வித்துவான் க. வெள்ளைவாரணன் என்பார் கூறுவதை நோக்குக.

அவர், ''தாண்டகம் என்பது, தொல்காப்பியச் செய்யுளியலின்படி எண் சீரான் வந்த கொச்சக ஒருபோகு எனக் கூறப்படும். அடிதோறும் நான்காஞ் சீரும் எட்டாஞ் சீரும் தேமாவாக நிற்ப, மூன்றாஞ் சீரும் ஏழாஞ்சீரும் பெரும்பான்மை தேமாவாகவும் ஒரோவழிப் புளிமாவாகவும் அமைய, இவை ஒழிந்த ஒன்று, இரண்டு, ஐந்து, ஆறாஞ் சீர்கள் பெரும்பாலும் காய்ச்சீர்களாகவும் சிறுபான்மை மாச்சீர் விளச்சீர்களாகவும் வருதல் தாண்டகம் எனும் பாவின் இயல்பாம்...இவ் யாப்பு, ஆசிரியர் தொல்காப்பியனாரால் ஒற்றும் குற்றுகரமும் நீக்கி நாலெழுத்து முதல் இருபது எழுத்தீறாக வகுத்துரைக்கப்பட்ட பதினேழு நிலத்து ஐவகையடி களிலும் கழிநெடிலடிக்கு உரிய மேலெல்லையாகிய இருபது எழுத்தென்னும் வரையறையைத் தாண்டி இருபதின் மேற்பட்ட எழுத்தால் மிக்கு வருதலின் தாண்டகம் என்னும் பெயர்த்தாயிற்று...எனவே தமிழ்ச் செய்யுள் இலக்கணத்தை அடியொற்றி அமைந்த திருத்தாண்டகப் பாவும் வடமொழித் தாண்டக யாப்பினை அடியொற்றிப் புதியன புனைந்த யாப்பருங்கல விருத்தி உதாரணச் செய்யுட்களும் இலக்கண வகையால் தம்முள் வேறுபட்டன என உணர்தல் வேண்டும் என்று ஆதாரங்களைக் காட்டி இத்தாண்டகம் எனும் யாப்புத் தமிழிலக்கண வரையறைக்கு உட்பட்ட தமிழ்ச் செய்யுளே என நிறுவுவார்.

பன்னிரு திருமுறையின் ஆறாந் திருமுறையில் அமைந்துள்ள தொண்ணூற்றாறு பதிகங்களும் தாண்டகச் செய்யுளான் அமைந்தவை ஆகும். தாண்டகவேந்தர் எனப் புகழப்படும் திருநாவுக்கரசு நாயனார் பாடியுள்ள இப்பதிகங்களே தாண்டகம் எனும் இலக்கிய வகையினையும், யாப்பு வடிவத்தையும் பிற்கால இலக்கணிகள் சுட்ட ஏதுவாக அமைந்தன. நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் திருமங்கையாழ்வாரின் 'திருக்குறுந்தாண்டகம்' மற்று 'திருநெடுந்தாண்டகம்' எனும் இரு நூல்கள் அமைந்துள்ளன. குறுந்தாண்டகம் இருபது பாடல்களையும் நெடுந்தாண்டகம் முப்பது பாடல்களையும் பெற்றுள்ளன. இவைகளே அன்றி இவ்வகையில் எழுந்த பிற இலக்கியங்களை அறிதற்கில்லை.

திருநாவுக்கரசரின் பதிகங்கள் பல புத்திலக்கிய வகைகள் உருவாக முன்மாதிரியாகவும் அடித்தளமாகவும் அமைந்துள்ளன. திருவங்கமாலை, திருத்தாண்டகம் ஆகியன புதிய இலக்கிய வகைகளாகவே நாவுக்கரசரால் படைக்கப் பெற்றவை என்பது குறிப்பிட வேண்டுவதாம்.

25. உலகியற் குறிக்கோளும் அடையும் வழியும்

க. கதிரேசன், பூவாளூர்.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டு தமிழகத்தின் நற்காலம், பொற்காலம், தமிழ்நாட்டை இங்ஙனம் மாற்றிய பெருமைக்குரிய எழுஞாயிறு அப்பரடிகள். தமிழ்நாட்டுக்கு ஒவ்வாத சிறுதெய்வ வழிபாடு, உயிரை வளர்க்க உதவும் உடலை வெறுத்தல், வாழ்க்கைத் துணை நலமாய் விளங்கும் பெண்ணை வெறுத்தல், உயிர்க்கு உயிர்ப்பூட்டும் இசையை வெறுத்தல் முதலிய மருட்கருத்துகள் தமிழகத்தில் பரவியிருந்தன. இவற்றைத் தமது அருள் ஒளியால் அகற்றித் தமிழ்ப் பண்பாடு பேணிய திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் இருவரில் முன்னவர் நெடுங்காலம் வாழ்ந்து இவ்வகையில் நலம் சேர்த்த பெருமைக்குரியவர். ஆயினும் இருவர் நோக்கும் போக்கும் தமிழ்ப்பண்பாடு பேணுதலும், இறைவன் பொருள் சேர் புகழைத் தலங்கள் தோறும் பாடிப் பரப்புதலுமேயாம்.

இவ்விரு சமயக் குரவர்களின் குறிக்கோள்கள் அவரவர் வாழ்க்கையிலும் அவரவர் திருமுறைகளிலும் மணக்கின்றன. இறை நிழலடைந்து இன்புறுவதாயினும், உலகியல் வாழ்வில் குறிக்கோளை அடைந்து உவப்பதாயினும் இவ்விரு குறிக்கோள்களையும் அடையும் பொது நெறி ஒன்றே; மிக மிகச் சிறிதளவே இந்நெறியில் வேறுபாடுண்டு. இங்கு அப்பரடிகள் அருளிய திருமுறைகள் மூலம் உலகியற் குறிக்கோளை நாமடைந்து இன்புற அடிகள் தந்துள்ள நெறி பற்றிச் சில காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

1. குறிக்கோளுக்குரிய பருவம் எது?

கிழக்கெழுந்தோடிய ஞாயிறு மேற்கே விழக்கண்டும், குழக்கன்று மூத்து எருதாய்ச் சிலநாளில் விழக்கண்டும், மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர் தம் புகழ் நிறுவ, செய்குவம் கொல்லோ நல்வினை என்று ஐயங்கொள்ளார். நில்லாத உலகியல்பு கண்டு நிலையா வாழ்க்கை அல்லல் என்று அறத்துறந்து பொன்றாது நிற்கும் புகழ்வேட்டம் – விருப்பம் – உடைய ஒருவன் தன் குறிக்கோளை மனத்திற்பதித்துச் செயற்பட வேண்டிய பருவம் எது? அடிகள்,

"பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதை மார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்புவந்து
கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோள் இலாது கெட்டேன்"

(திருமுறை - 4. திருக்கொண்டீச்சரம் - 9)

என்று கூறுகிறார். குறிக்கோள் நெறிநின்ற அடிகள், அக்குறிக்கோளை மேற்கொள்ளத்தக்க பருவங்களைத் தம்மீது ஏற்றிக்கொண்டு நமக்கு அறிவுறுத்துகிறார். இளமைப்பருவமோ, கட்டிளங் காளைப் பருவமோ, மூத்து முதிர் பருவமோ இவற்றுள் எப்பருவமாயினும் குறிக்கோளுக்கு ஏற்ற பருவமே என்கிறார். எனவே கழிந்த நாளுக்காகக் கவலைப் படவேண்டா, எப்பருவத்திலும் நாம் குறிக்கோள் கொள்ளலாம் என்று கூறி ஆற்றுப்படுத்துகிறார்.

2. ஊசலாட்டமா?

வையத்து வாழ்வாங்கு வாழக்கொள்ள வேண்டிய குறிக்கோளைத் தேர்ந்தெடுத்த பிறகு அதில் ஊசலாட்டம் கூடாது, குறிக்கோளில் ஊசலாட்டம் கொள்பவர், கசடு ஈண்டு காட்சி நீங்கா நெஞ்சமுடையவர்; இவர்களிடம் அதில் துணிந்து செயற்படல் இருக்காது என்கிறான் மாமன்னன் கோப்பெருஞ்சோழன்.

> செய்குவம் கொல்லோ நல்வினை எனவே
> ஐயம் அறாஅர் கசடு ஈண்டு காட்சி
> நீங்கா நெஞ்சத்துத் துணிவு இல்லோரே (புறம். 214 : 1-3)

என்பது அவனது முடிந்த முடிபு.

இங்குக் 'கொல்' என்பது ஐயப்பொருளில் வந்தது. அறார் என்பதில் அளபெடை தந்து "அறாஅர்" என்று நீட்டி ஒலிக்கச் செய்வதன் மூலம், அக்குறிக்கோளை மேற்கொள்வோமா? வேண்டாமா? என்கிற ஐயம் - ஊசலாட்டம் - வாழ்நாள் முழுதும் தொடர்ந்து நீண்டுகொண்டே போவதைக் குறிக்கிறான். நீட்சி பெற்ற இவ்ஐயம் தீராமைக்குக் காரணம், அவர்களின் அறிவு - காட்சி - கசடு ஈண்டி நிற்பதே என்பதையும் சுட்டுகிறான். கசடு ஈண்டு காட்சியின் விளைவுக்குக் குறிக்கோளில் துணிவின்மை காரணம் என்று கூறுகிறான்.

இப்புறப் பாடலில் கூறப்பெறும் ஐயம் அறாஅத நிலையை அப்பரடிகள் ஊசலாடுதல் மூலம் விளக்கமுறச் சொல்கிறார்.

> உறுகயிறு ஊசல்போல ஒன்றுவிட்டு ஒன்றுபற்றி
> மறுகயிறு ஊசல்போல வந்துவந்து உலவுநெஞ்சம்
> பெறுகயிறு ஊசல்போலப் பிறைபுல்கு சடையாய் பாதத்து
> அறுகயிறு ஊசலானேன் அதிகைவீரட்ட னீரே.

(திருமுறை - 4, திருஅதிகை வீரட்டம் - 6)

ஊசல், ஒருநிலைப்படாது இங்கும் அங்குமாகத் தொடர்ந்து அலைந்து கொண்டே இருப்பது; இதனால் ஒருவகை இன்பமும் தருவது. தொடர்ந்து அலையும் இதன் இயல்பை "வந்து வந்து" என்பதாலும், ஒருநிலைப்படாது

அலைவதால் துன்பமே எனினும், அதுபற்றிக் கவலைப்படாது, நெஞ்சு இன்பமாக அதனை நினைப்பதை "உலவு" என்பதாலும் குறிக்கிறார். இங்கு ஊசற்கயிறு, நெஞ்சம்; ஊசலாடுவோன் மனிதன். அலையும் ஊசற்கயிறு அற்றால்தான் – மனம் ஒன்றில் – ஒரு குறிக்கோளில் பதிந்தால்தான், குறிக்கோளில் பதியாத பொய்மையால் அனுபவிக்கும் பொய்ம்மையான இன்பம் தீரும், உண்மை இன்பம் வாய்க்கும் என்கிறார் அடிகள். எனவே குறிக்கோளில் பதிவதால் நாமனுபவிக்கும் உண்மை இன்பமே இன்பம்; அதுவே நம் தேவை என்கிறார் அடிகள்.

3. உயரத்தூண்டு

அறுகயிறு ஊசல்போலக் குறிக்கோளில் பதிந்த நெஞ்சுக்கு, அக் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ளும் ஆற்றல் இன்றியமையாதது. ஆற்றலில்லான் குறிக்கோள் "கன்றும் உண்ணாது கலத்தினும் படாது நல்லான் தீம்பால் நிலத்துக்காங்கு" என்று குறுந்தொகை கூறுவதுபோல வீணாகும்.

ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள உளவியலார் கூறும் வழிஎன்ன? "உன்குறிக்கோளை மீண்டும் எண்ணி இன்புறு; அதனை அடைவதால் அடையும் இன்பத்தை எண்ணிப்பார்" என்பது. இங்ஙனம் எண்ணுவதால் அக்குறிக்கோளை நிறைவேற்றத்தக்க ஆற்றல் நம்மிடம் பெருகும். உளவியலாரின் இத்தகு வழியை அடிகள்,

திருவாய்மூர் விளக்கினைத்
தூண்டிக் கொள்வன்நான் என்றலும் தோன்றுமே.
(திருமுறை - 5, திருவாய்மூர் - 10:3,4)

என்று காட்டுகிறார்.

திருவாய்மூர் விளக்கு, இறைவனையும், நம் உலகியல் குறிக் கோளையும் குறிப்பது. அதனைத் தூண்டிக் கொள்ளுதல், அவன், அக்குறிக்கோளை அடைந்தே தீருவேன் என்கிற உறுதியை மேற்கொள்ளுதல், இங்ஙனம் தூண்டிக்கொள்ளும் நிலையில் திருவருள், குறிக்கோளை அடையும் ஆற்றல் நம்முள் தோன்றும் என்பது அடிகள் தரும் உளவியற் செய்தி. (இங்குமுன் என்பது ஏழாம் வேற்றுமை உருபாய் இடப்பொருள் குறிப்பது.)

4. ஒட்டிவாழ்தி

உயர் குறிக்கோள் கண்டு, ஆற்றலைப் பேணிப் பெற்றவர் செய்ய வேண்டுவதென்ன?

உயிரா வணம்இருந்து உற்றுநோக்கி
உள்ளக் கிழியின் உருஎழுதி

உயிரா வணம்செய்திட்டு உன்கைத் தந்தால்
உணரப் படுவாரோடு ஒட்டிவாழ்தி.

என்று ஆற்றுப்படுத்துகிறார் அடிகள்.

அடிகள் நோக்கம் இறையருளில் இரண்டறக் கலத்தல்; நம் நோக்கம் குறிக்கோளில் இரண்டறக் கலத்தல். தம் நோக்குடன் ஒட்டிவாழ்தல் அடிகட்டும், நம் நோக்குடன் ஒட்டிவாழ்தல் நமக்கும் உரியன. இதற்குச் செய்யவேண்டுவன எவை? இப்பகுதி அதனைக் கூறுகிறது.

உயிர்த்தல் = தொழிற்படல் உயிராவணம் இருத்தல் என்பது இறைநினைவில் தொழிற்படுதலன்றிப் பிறவாறு செயற்படாமை அடிகட்டும், குறிக்கோள் நினைவில் தொழிற்படுதலன்றிப் பிறவாறு செயற்படாமை நமக்கும் குறிப்பது. உற்றுநோக்கல் என்பது இறையருளையே கூர்ந்து நோக்குதல் அடிகட்கும், குறிக்கோள் நிறைவேறுதலையே கூர்ந்துநோக்குதல் நமக்கும் குறிப்பது. உள்ளக்கிழியின் உரு எழுதுதல் என்பது இறைவனைத் தம் உள்ளத் திரையில் எழுதுதல் அடிகட்கும், குறிக்கோளை நம் உள்ளத் திரையில் எழுதுதல் நமக்கும் குறிப்பது. உயிர் ஆவணம் செய்தல் என்பது இறைவனையடைதற்குரிய நிலையில் உயிரைப் பாதுகாப்பாக வைத்தலை அடிகட்டும், குறிக்கோளை அடைதற்குரிய நிலையில் நம் உள்ளத்தைப் பாதுகாப்பாக வைத்தலை நமக்கும் குறிப்பது, உன்கைத்தருதல் என்பது இறைவனிடம் திருவருளிடம் - தம்மை ஒப்படைத்தலை அடிகட்கும், குறிக்கோள் வழியில் நம்மை ஒப்படைத்தலை நமக்கும் குறிப்பது. உணரப்படுவாரோடு ஒட்டி வாழ்தி என்பது இங்ஙனம் நிற்பாருடன் இறையும், குறிக்கோளும் ஒட்டி வாழ்தலைக் குறிப்பது.

தொடக்கத்திலிருந்து இதுவரை கூறப்பெற்ற செய்திகள் குறிக்கோள் வழியில் நம்மை ஈடுபடுத்திக்கொள்ள உரியன.

5. கலங்காதே

குறிக்கோள் பற்றியும் அதனை அடையும் நெறி பற்றியும் தானறப் பெற்றவனுக்கு இயற்கை மாறுபாடுகள் காரணமாகவும், சூழ்ந்துளார் காரணமாகவும் இடையூறுகள் எழுவது இயல்பு. இவ்விடையூறுகளால் மனங்கலங்காது நிற்பவன்,

"மடுத்தவாய் எல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து" (திருக்குறள் - 624)

என்னும் பொய்யாமொழிக்கு இலக்கியமாவான். அடிகள் இதனை வழி மொழிந்து,

"மலையே வந்து வீழினும் மனிதர்காள்
நிலையினின்று கலங்கப் பெறுதிரேல்"

(திருமுறை-5, பொது. தனித்திருக்குறுந்தொகை - 5:1-2)

என்று ஊக்கமூட்டுகிறார்.

வீழினும் என்பதிலுள்ள உம்மை எதிர்மறை உம்மையாய் நின்று, அங்ஙனம் வீழாமை உணர்த்துகிறது. அதுமல்லை - அறிவற்றது, அஃறிணை; நீ மனிதன் - ஆறு அறிவுள்ளவன், உயர்திணை என்று எண்ணிப் பார்க்கத் தூண்டுகிறார். மனம்கொண்ட நிலையில் கலங்குவது, செயற்பாட்டில் கலக்கம் தந்து விரும்பிய வெற்றியைத் தராது ஆதலின் கலங்காதே என்று துணிவு ஊட்டுகிறார்; இடையூறுகளை உன்னால் வெல்ல முடியும் என்று ஊக்குவிக்கிறார்.

6. இழுதைநெஞ்சு

ஏர்த்தொழிலார் தம் நிலத்தை எவ்விடத்தும் ஆழ உழுவர்; உழுதசால் வழியே உழமாட்டார். உழுதல் ஏன்? களை மாய்த்தலும், மண்ணைப் புரட்டிக்கொடுத்து வளப்படுத்துதலும், தீங்கு செய்யும் புழுக்களையும் முட்டைகளையும் மாய்க்கவும் எண்ணும் அவர்கள் உழுதசால் வழி உழமாட்டார்கள்; கொழுபடாத இடமெல்லாம் கண்டுகண்டு உழுவார்கள். அதுபோல நாம் நம் குறிக்கோளையடைய நம் சிந்தனைப் போக்கினைப் பல்வேறு கோணங்களிலும் - எல்லாவகைகளிலும் - அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். இதனால் தெளிவு கிடைப்பதுடன் செயற்பாட்டுத் திறமும் தரமுடன் அமையும். இங்ஙனமன்றித் தன் சிந்தனையை உழுத சால் வழியே உழுபவன் - செலுத்துகிறவன் நெஞ்சு, இழுதைநெஞ்சு என்று கூறுகிறார் அடிகள்.

உழுதசால் வழியே உழுவான் பொருட்டு
இழுதை நெஞ்சம் என்படு கின்றதே.

(திருமுறை, 4-பொது. தனித்திருக்குறுந்தொகை -9)

இழுதை என்பது அறிவின்மை, பேய், பொய் என்கிற பொருள்களைத் தரும் ஒரு சொல். உழும் எளிமை கருதி உழுதசால் வழியே உழுகின்றவன் நெஞ்சு அறியாமையுடைய நெஞ்சு.

இவன், மாற்றுவழிச் சிந்தனையின்றி ''முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா'' என்பதற்கேற்ப மூர்க்கனாய் உழுதசால் வழியே உழுவானாதலின் இவன் நெஞ்சு, பேய் நெஞ்சு.

இவன் உழவு பொய்யான உழவேயன்றி, மெய்யான உழவன்றாதலின் இவன் நெஞ்சு பொய் நெஞ்சு.

எனவே உழுதசால்வழி உழாது பலதரப்பட்ட மாற்றுச் சிந்தனைகள் மூலம் குறிக்கோளையடையும் நெறிகள் பற்றி எண்ணிப் பார்த்தல் வேண்டும் என்பது கருத்து.

தானும் விளைவு அறியாமல், பிறர் சொல்லியும் கேளாமல் உழுதசால்வழி உழுகிறவன் கதி என்ன?

"விளைவு அறியாமையாலே
வேதனைக் குழியில் ஆழ்ந்து
களைகணும் இல்லேன்"

(திருமுறை - 4, குறைந்ததிருநேரிசை-9,)

என்று தன்மேல் வைத்துக் கூறுகிறார் அடிகள்.

"வேதனைக் குழியில் வீழ்ந்து" என்னாது, "வேதனைக் குழியில் ஆழ்ந்து" என்று கூறுவது எண்ணத்தக்கது. வீழ்ந்தவன் ஒருவேளை கரையேற வாய்ப்புண்டு, ஆழ்ந்தவன் கரை ஏற வாய்ப்பில்லை என்பது குறித்தது.

ஆழ்ந்த காரணத்தால் களைகண் ஆவார் பற்றுக்கோடாவார் யாருமில்லை; களைகண்ணாய்வந்தார் உளர் எனினும் வீழ்ந்தவன் பற்றவாய்ப்பின்றி ஆழ்ந்தமையால் - புதைந்தமையால் பற்றுக்கோட்டால் பயனில்லையாதலின் 'களைகணும் இல்லேன்' என்கிறார். எனவே உழுதசால்வழி உழாது செல்லும் நெறிபற்றிப் புதிய சிந்தனை கொள்ளவேண்டும் என்பது கருத்து.

7. புறம்பேசாதே

வேதனைக் குழியில் ஆழ்ந்தவர் தமது ஆழ்வுக்குப் பிறரையே குறை கூறுவரன்றித் தன்குறை கூறார். உரிய பிறர் இல்லா இடத்தில் அவரைப் பற்றிக் குறைகூறல் புறம் கூறலாகும். புறம்பேசத் தொடங்குகின்றவன், அத்தொடக்க நிலையிலே அங்ஙனம் புறங் கூறுதலில் ஒருவகைச் சுவையுணர்வால் உந்தப்பெற்று அதனைத் தொடர்வான். உரியவர் இல்லா இடத்தே கூறுவதால் அதனைக் கேட்பவர்கள் அவன் கூறிய ஒன்றினை ஒன்பதாக்கிக் கூறும் வாய்ப்பும் பெறுவராதலின் அதனால் வரும் கொடுமைகள் பலப்பல. "கைகொடுத்தால் திமிறிவிடலாம், வாய் கொடுத்தால் திமிறல் அரிது" - என்பதால்

பேச்சொடு பேச்சுக் கெல்லாம்
பிறர்தமைப் புறமே பேசக்
கூச்சிலேன் ஆத லாலே
கொடுமைகள் விடுமாறு ஓரேன்

(திருமுறை-4, பொது. குறைந்த திருநேரிசை - 6)

புறம்பேசலில் கூச்சமில்லையேல் கொடுமைகளே வரும் என்பதால் புறம்பேசுவதால் வரும் பழி, கொடுமைகளைத் தடுத்துக் கொள்ளும் முயற்சியில் குறிக்கோள் முயற்சி நெகிழுமாதலின் புறம்பேசல் நம் நிலையைச் சிதைப்பதை அறியலாம்.

8. பொக்கம் பேசாதே

உரியவரில்லாதபோது அவர்பற்றிப் பிறரிடம் கூறல் புறம்பேசுதல். ஆனால் உரியவரிடத்தில் பொய்யாக, வஞ்சனையாகப் பேசுவது

பொக்கம். (பொக்கம் = பொய், வஞ்சனை) புறம்பேசுதல் போலவே பொக்கம் பேசுதலும் பேசுவார்க்கு அதில் சுவையுணர்வை உண்டாக்கிக் கெடுப்பது, அதனால் பொழுதுவறிதே கழிய, துன்பம் பல வந்து சேரும். ஆதலால்

> "பொக்கப் பேசிப் பொழுது கழியாதே
> துக்கம் தீர்வகை சொல்லுவன் கேண்மினோ"
> (திருமுறை-5. திருநல்லம். 2: 1-2)

என்று நம்மை வழிநடத்துகிறார் அடிகள்.

9. எய்தற்கு அரியது

இவ்வுலகில் எய்தற்கரியன - போனால் மீண்டும் வராதன - கிடைக்காதன எவை? அவைஇரண்டு. நன்று நம் உயிர்; மற்றொன்று அனைத்து உயிர்கட்கும் சமமாக வழங்கப்பெற்றுள்ள ஒருநாளுக்கு 24 மணி என்னும் காலம். உயிர் போனால் மீண்டுவராது என்பதறிந்த நாம், காலம்போனால் வராது என்பதை உணர்வதில்லையாதலின் காலத்தை மீண்டும் பெறுதற்குரிய பொன்னுடன் ஒப்புநோக்கிக் "காலம் பொன் போன்றது" என்று தவறாகக் கூறிவருகிறோம்.

காலத்துக்கு "எய்தற்கரியது" - கிடைத்தற்கரியது. போனால் மீண்டும் வராதது என்று பெயரிட்டவர் பொய்யாமொழியார் எய்தற்கரிய காலம் வாய்த்தபோது அந்நிலையே செய்தற்கு அரிய செய்துமுடி என்று அருளாணையிடுகிறார் அவர்.

காலத்தைப் பறிகொடுத்து நிற்பவர் மிகப்பலர். பொன்னை, பொருளை, செல்வத்தைப் பறிகொடுத்தால் துடிதுடித்துப் போகும் இவர்கள், காலம் களவாடப்படுவது குறித்துக் கருதுவதே இல்லை. ஏன்? இவர்களுக் குரிய காலம் இவர்களாலும், பிறராலும் பறிகொடுக்கப் பெற்றதை, இவர்கள் உணர்வதில்லை. எனவேதான் திருவள்ளுவர்,

> "நான்என ஒன்றுபோல் காட்டி"

என்கிறார்.

காலத்தைப் பறிகொடுத்தல் பிறவற்றைப் பறிகொடுப்பதிலும் கொடியது. ஆதலின் அடிகள்,

> "களவு படாததோர் காலம் காண்பான் கடைக்கணிக்கின்றேன்"
> (திருமுறை-4, திருவையாறு - 11.2.)

காலக்களவு நிகழ்ந்துவிடாதவாறு கூர்ந்து கவனித்துக் காலத்தைப் பேணிப் பயன்படுத்திக்கொள் என்பது அடிகள் கருத்து. காலத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் "கடைக் கணிக்கின்றேன்" என்கிறார். கடைக்கணித்தல்

என்பது கடைக்கண்ணால் நோக்கி இருத்தலைக் குறிப்பது. கடைக் கண்ணாவது கருணை காட்டுதல். உரிய காலத்தைக் கருணையுடன் நோக்கியிரு, பயன்படுத்திக்கொள் என்பது கருத்து. குறிக்கோளை நிறைவேற்றக் கருதியிருப்பவனுக்கு மிக மிக இன்றியமையாத செய்தி இது.

10. வெற்றிக்கு வழி

குறிக்கோள் வெற்றியே நமது இலக்கு. உரிய வழியில் செல்லும் நமக்கு ஐவர் துணையிருக்குமாறு அமைக்கப் பெற்றுள்ளனர். ஆனால் அவர்கள், நமக்கு அமைந்த நோக்கத்தை விட்டு விலகி நம்மைப் பாழ்குழியில் தள்ள முற்படுகின்றனர். அவர்கள் ஐம்புலன்களாவர். ஐம்பொறி வெற்றி ஓரளவு எளிதே . ஐம்புலன்களையும் உயர் குறிக்கோளுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ளுதல் அத்துணை எளிதன்று. அவற்றைக் காத்து நெறிப்படுத்த மனவலிமை இன்றியமையாதது.

''உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன்எனும் வைப்பிற்கோர் வித்து. (திருக்குறள் - 24)

என்பது உலகப் பொதுமறையின் வாய்மொழி.

நம் ஆணையை மீறுவதும், ஆசைகாட்டி மோசம் செய்வதுமே ஐம்புல யானைகளின் செயலாதலின் நம் மனவலிமையொடு அவற்றை வென்று தன்னடிப்படுத்தியவர் சூழலில் நாம் இருப்போமானால் அவற்றை வெல்லுதல் எளிது; நம்வழிச் செலுத்துதல் எளிது.

''வென்றிலேன் புலன்கள் ஐந்தும்
வென்றவர் வளாகம் தன்னுள்
சென்றிலேன் ஆத லாலே
செந்நெறி அதற்கும் சேயேன்''

(திருமுறை-4, குறைந்த திருநேரிசை-1:1)

என்பார் அடிகள்.

புலன்களை வென்றால் மட்டும் போதாதா? வென்றவர் வளாகந்தன்னுள் சென்று நிற்கவும் வேண்டுமா? என்கிற ஐயம் எழலாம். வென்றவர் - குறிக்கோளை அடைந்தவர் வளாகம் தன்னில் சென்று நிற்றல் - பழகுதல் நாம் இதுவரை பெற்ற நிலைகளைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ளவும், மேன்மேலும் உரிய நெறியில் நாம் செல்லவும், அவர்கள் நம்மை உந்திச் செலுத்தவுமாகும். வென்றவர் நிலை, வெல்ல இருக்கும் நம் நிலையினும் உயர்ந்ததாதலின் இது ''பெரியாரைத் துணைக்கோடல்'' ஆகும். அவர்கள் ''உற்றநோய் நீக்கி உறாமை முற்காப்பர்! அவர்களைத் ''தமரா ஒழுகுதல் வன்மையுள் எல்லாம்

கலை ஆதலின் நாம் கருதியது முடிக்க முன்னின்று பல்லாற்றானும்" உதவுவர்.

இத்தகையவரைச் சென்றடையாவிட்டால், நாம் நம் குறிக்கோளைச் சென்றடைய உதவும் செந்நெறிக்குச் சேயராக - அதில் விலகித் தொலைதூரம் சென்றுவிட்டவராக - ஆகிவிடுவோம். உலகியல் காரணமாக இவ்வாய்ப்பே எங்கும் என்றும் மிகுதியாதலின் வென்றவர் வளாகம் மிக இன்றியமையாதது; அதுவே வெற்றியில் நிறுத்துவது எனலாம்.

"குறிக்கோள் கொள்ளுதல் முதல் வென்றவர் வளாகம் தன்னில் செல்லுதல் ஈறாகக் கூறப்பெற்ற செய்திகள் அப்பரடிகள் நோக்கில் இறை நிழல் அடைவதற்குரியனவாயினும், உலகியலில் நாம் கொள்ளும் உயர் குறிக்கோளில் வெற்றி பெறவும் உதவும் உளவியற் செய்தி களாகும்". உயர் குறிக்கோளின் தன்மைகள் வேறுபடினும், அதனை அடைந்து வெற்றி பெற அமைந்த பொதுவான நெறிமுறைகள் இவை. பின்பற்றி வெற்றி பெறுவோம்.

26. நாவுக்கரசரில் சமூகவியல்

கஸ்தூரி நாகராசன், தஞ்சை.

சமூகம் என்பது திருமணம், குடும்பம், கல்வி, நிதி, அரசியல், மதம் ஆகிய நிறுவனங்கள் இணைந்ததே ஆகும். அறுவகை நிறுவனங் களும் ஒன்றுடன்ஒன்று தொடர்புடையன. நாவுக்கரசர் காலத்தில் எல்லா நிறுவனங்களும் மதம் என்ற ஒரு நிறுவனத்தின் கீழ் இயங்கின. அனைத்தும் சமயம் சார்ந்தவனாக இருந்தன. ஞானசம்பந்தர் காலத்தைச் சார்ந்த நாவுக்கரசர், மகேந்திரப்பல்லவன் ஆட்சியில் வாழ்ந்தவர். அவருடைய தேவாரப் பாடல்கள் அவர்தம் காலச்சமுதாயத்தை அறிய உதவுகின்றன.

அவர் காலத்தில் தமிழகத்தில் பக்தி இயக்கம் மேலோங்கி நின்றது. சமணர், பௌத்தர் ஆதிக்கம் சைவச்சான்றோர்களை விழித்தெழச் செய்தது. மதமாற்றம் அரசு அனுமதியுடன் நடந்தது. சமண முனிவர்கள் தமிழ்நாட்டை ஆண்ட மன்னர்களைச் சமணம் சாரச் செய்தனர். ஒவ்வொரு கால கட்டத்தில் ஒவ்வொரு மதம் தமிழனை மதம் மாற்றியபோது அவற்றிற்கு ஆட்சியாளர் ஆதரவு நல்கினர். இது வரலாற்று உண்மை. ஆனால், நாவுக்கரசர், ஞானசம்பந்தர் போன்றோர் சைவ சமயத்தைப் காப்பாற்ற பாடுப்பட்டதுபோன்று, விஜயநகரபேரரசு தோன்றி சைவம் வாழ வழி வகுத்தது. நாயக்கர்கள் வைணவத்தைப் போற்றினாலும் பிற மதம் இம்மண்ணில் தழைக்க ஆதரவு நல்கினர். இவர்கள் காலத்தில் சேது நாட்டை ஆண்ட சேதுபதிகள் பிற மதம் சேதுநாட்டில் ஆதிக்கம் செலுத்த விடாமல் செய்தனர். மதக்காழ்புணர்ச்சியின்மை என்னும் கவசத்தைத் தங்கள் சொந்த புகழுக்காக அணிந்துகொண்டவர்களையே அதிகமாகக் காணும் இந்தியத் திருநாட்டில் நாவுக்கரசர் மதம் மாறி பெற்ற துன்பத்தின் அடையாளமாகத் திருவாரூர் பதிக்கத்தில் பழமொழி வாயிலாகத் தம் உள்ளுணர்வைப் பேசுகிறார்.

திருஅதிகை வீரட்டானம் பதிகம் முழுவதும் சூலை நோயால் ஆட்கொண்டு வருந்திப் பாடிய பாடல்கள்

"கூற்றாயினவாறு விலக்ககலீர்.
கொடுமை பலசெய்தன நான் அறியேன்".

நெஞ்சம் உமக்கேயிடமாக வைத்தேன் நினையாதொரு போதும் இருந்தறியேன்.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்.

உயர்ந்தேன் மனை வாழ்க்கையும் ஒண்பொருளும் ஒருவர் தலைகாவலிலாமை யினால் என்றார்.

இப்பாடல்கள் சமணம் சார்ந்த திருநாவுக்கரசர் சூலைநோயால் பாதிக்கப்பட, அந்நோய் சமணர் மருந்துக்குக் கட்டுப்படாமல் சைவசமய திருநீற்றால் குணம் அடைந்தமை சிந்திக்கத்தக்கது. சமணர்கள் மருத்துவ முறையில் சிறந்து விளங்கினர். ஆனால், அவர்கள் மருந்தைவிடச் சைவசமயச் சின்னமான திருநீற்றிற்கு நோய் நீக்கும் சக்தி அதிகமுண்டு என்று தமக்கை திலகவதியார் வெளிக்காட்டினார் என்பது கருத்து. சமணர்கள், மருத்துவத்தைப் பொது மக்களையும், அரசு சார்ந்தவர் களையும் மதம் மாற்ற ஒரு கருவியாகப் பயன்படுத்தியமையால், அக்கருவியைப் பயன்படுத்தியே அவர்களை வீழ்த்த வேண்டிய இன்றியமையாமை அக்காலத்தில் இருந்தது.

மந்திரமாவது நீறு என்றனர். அதே போன்று, இறை மந்திரங்கள் சிறந்தவை என்று நிருபித்துக் காட்ட வேண்டிய ஒரு சூழலும் இருந்தது.

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

என்கிறார் திருநாவுக்கரசு.

அக்காலத்தில் மக்கள் கோவிலுக்குச் சென்று, இறைவனைப் போற்றிப் பாடக் கூடிய தமிழ் மந்திரங்கள் தேவைப்பட்டன. சங்க காலத்தில் இறை நம்பிக்கை இருந்தது. சமயப் போராட்டங்கள் இல்லை. சிலப்பதிகாரத் திலும் மணிமேகலையிலும் சமய ஏற்றத்தாழ்வு பேசப்பட்டன. கி.பி. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து 6-ஆம் நூற்றாண்டு வரை களப்பிரர் காலம் பிறமொழி, பிறசமயம் ஆதிக்கம். எனவே, நாவுக்கரசர் இறைவன் திருநாமங்களை மந்திரமாகப் பயன்படுத்த, மந்திரங்களை எழுதும் கடமையுடையவராக இருந்தார்.

"கற்றவர் களுண்ணுங் கனியே போற்றி, கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி! அல்லலறுத்தடியேனை ஆண்டாய் போற்றி" என்று போற்றிப் பாடல்கள் பல பாடியுள்ளார்.

இறைவனே வேதமாவான் என்றும் பாடியுள்ளார். நாவுக்கரசர் காலத்தில் நான்மறைகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

"ஊனமில் வேதமுடையானை"

"வேத நாவர்"

"நான் மறைகளாயினானே"

"நால்வேதம் ஆறங்கமானான் கண்டாய்"

"சந்தோக சாமம் ஓதும் வாயானை"

"மந்திரிப்பன் மனத்து ளானை.

"சாமவேதர்".

என்று முறையே திருக்கண்டியூர், திருச்சோற்றுத்துறை, திருமழபாடி திருவீழிமிழலை பதிகங்களில் வேதம் பற்றிப் பேசுகின்றார்.

"வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனவன் காண்"

என்று திருப்பராய்த்துறை பதிகத்திலும் வாடுகின்றார்.

வடமொழி மந்திரங்கள் இறைமந்திரங்களாகக் கோயில்களில் ஓதப்பட்டபோது நாவுக்கரசர் தமிழிசையினையும், தமிழ் மந்திரங்களையும் போற்றிக் கூறுகிறார்.

20-ஆம் நூற்றாண்டில் வடமொழிக்கும், இந்திக்கும் முதன்மை வழங்கியபோது திராவிட இயக்கம் தோன்றி தமிழ் வளர்க்க முயன்றன. புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் தோன்றி சாகும் போதும் தமிழ்ப் படித்துச் சாகவேண்டும், என் சாம்பலில் தமிழ் மணம் கமழ வேண்டும் என்று பாடினார். தமிழ் வளர்ச்சிக்கும் குரல் கொடுத்தார். தமிழிசை இயக்கம், தனித்தமிழ் இயக்கம் என்று தோன்றித் தமிழை வளர்த்தன. அதே போன்று நாவுக்கரசர் தம் காலத்தில் வாழ்ந்த தமிழ் மக்களிடம் இறைப்பாடல்களைத் தமிழில் இயற்றிப் புரட்சி செய்துள்ளார். தமிழ் மந்திரங்கள் அக்காலத்தில் தோன்றின.

இதே போன்று பூசை முறையில் ஆகம முறையே சிறந்தது என்ற கருத்து வலிமை பெற்றிருந்தபோது, "அன்பே சிவம்" என்று உள்ளத்தையே பெருங்கோவிலாக்கி வழிபட்ட அன்பு முறையினையும் சமுதாயத்தில் விளம்பரப்படுத்த வேண்டிய நிலை இருந்தது.

"மறை கலந்த மந்திரமும் நீரும் கொண்டு
வழிப்பட்டார் வானாளக் கொடுத்தியன்றே".

என்று திருமழபாடி பதிகத்தில் கூறிய நாவுக்கரசர்,

"கண்ணப்பரக் கருள்செய்த காளை கண்டாய்"

"கண்ணப்ப விண்ணப்புக் கொடுத்தான் கண்டாய்"

என்று பாடியுள்ளார். ஆகம முறையும், அன்பு முறையும் ஒன்றே. இரண்டும் இறைவனுக்கு உகந்தனவே. இதில் மேல், கீழ் என்ற பாகுபாடு கிடையாது என்று உணர்த்த வேண்டிய காலகட்டத்தில் வாழ்ந்துள்ளார்.

இறைவனை ஒரு சாதிக்குள் கட்டுப்படுத்தும் முறை என்றும் காணப்படுகிறது. நாவுக்கரசர் காலம் இதற்கு விதிவிலக்கு அன்று. சிவபெருமானை, "வேதியனை வேதத்தின் கீதம் பாடும் பண்ணவனைப் பண்ணில் வரு பயனா னானை" என்று திருச்சிராப்பள்ளி பதிகத்தில் பாடுகின்றார். சிவபெருமானை வேதியன் என்கிறார். வேதியன் என்பதற்கு வேதம் அறிந்தவன், அந்தணன் என்றே பொருள் கொள்ளப்படுகிறது.

நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் திருமறைக்காடு சென்று பல ஆண்டுகளாக மூடிக் கிடந்த கோயில் கதவினைத் திறக்கப் பாடினர்.

"கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே"

என்று அணிம்றைக் காடரை வேண்டினார். இறைவன் திருஅருளால் திருமறைக்காட்டுத் திருக்கோயில் திருக்கதவு திறந்தவுடன்,

"காண்டற்கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய்"

என்று மகிழ்ந்து பாடுகின்றார்.

திருநாவுக்கரசர் தேவாரப் பாடலைக் கேட்டு கதவு திறந்தது. திறந்த கதவை மீண்டும் ஞானசம்பந்தர் மூடப் பாடினார்.

திருமறைக்காட்டில் கோயில் திறக்கப்படாமல் மூடிக்கிடந்துள்ளது என்பது சமூகச் செய்தி. சில காரணங்களால் கோயில் மூடப்பட்டிருக்கலாம். ஆனால் நாவுக்கரசர் சமூகப் பிரச்சினையைச் சுட்டாது பக்தி நிலையில் ஆண்டவனைக் காண்பதையே கருத்தாகக் கொண்டிருக்கும் போது கதவு திறவாமை கண்டு வருந்துகின்றார். இந்த "மாக்கதவம் பிணி நீக்குமே" என்கின்றார். அடைந்த கதவு சமூகத்தில் ஒரு பிரச்சினையாக இருந்துள்ளது. எனவேதான், பிணி என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். ஒவ்வொரு திருத்தலங்களுக்கும் செல்லும்போது அங்கு காணப்படும் சமுதாயப் பிரச்சினைகளைத் தீர்த்து மக்களிடையே ஒருமைப்பாட்டினை ஏற்படுத்தவும் முயன்றுள்ளார்.

சோறுடைச் சோழ நாட்டில்தான் திருக்கோயில்கள் அதிகம். சோழநாட்டுக் கோயில்களே பெரும்பான்மையும் தேவாரப்பாடல் பெற்ற தலங்களாக உள்ளன. நாவுக்கரசர் பிறநாட்டிற்குச் சென்றிருந்தாலும் அவ்வாறு பாடிச் சென்ற காலத்தில் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டபோது இறைவனே பஞ்சம் நீக்க காசு கொடுத்த செய்தியும் இடம் பெற்றுள்ளது.

பக்தி என்பது மனதைச் சார்ந்தது என்றாலும் பிறருக்கு உதவும் தொண்டுதான் பக்தி. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு. மகேஸ்வர

பூசை அவசியமானது, உன்னதமானது. "நடமாடும் நம்பர்க்கொன்று ஈயின் அது படமாடும் பரமர்க்காகும்" என்பது திருமந்திரம். இக்கோட்பாட்டினைப் பக்தியில் பின்பற்றினால் வறுமை அகற்றப்படும். பக்தி என்பது மந்திரங் களைக் கூறி மனமுருகி வேண்டுவது மட்டுமன்று. இல்லை என்பார்க்கு இல்லை என்னாது வழங்கும் தொண்டுள்ளமே சிறந்த பக்தியாகும்.

திருக்கச்சி, நாவுக்கரசர் காலத்தில் கல்வியில் சிறந்த இடமாக இருந்துள்ளது.

"கல்வியைக் கரையிலாத காஞ்சிமா நகர்"

என்று திருக்கச்சி சிறப்பிக்கப்படுகிறது.

"கற்றிருந்த கலைஞான மானாய் நீயே!
கற்றவர்க்கோர் கற்பகமாய் நின்றாய் நீயே!"

என்று பாடும் நாவுக்கரசர் கல்வியை இறைவனோடு இணைத்துக் கண்டார்.

முருக வழிபாடு சங்க காலத்திலேயே இருந்தது. ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சியில் முருகவழிபாடு காணப்பட்டது. நாவுக்கரசர் தேவாரப் பாடல் முருகனைச் சிவனுடன் தொடர்புபடுத்திப் பாடுகின்றது.

"ஆறுமுகனே யானை முகற் கப்பன்" என்று திருநாரையூர் பதிகத் திலும் "குமரனும் விக்கின விநாயகன்னும்" என்றும் கூறியுள்ளார். சங்க காலத்தில் சமய ஆதிக்கம் இல்லை. முருகன் அகப்பாடல்களில் பேசப் பட்டார். தெருக்கள்தோறும் நடுகல் வழிபாடே மிகுந்திருந்தது. ஒரு வகையில் சங்க காலத்தில் காதற்கடவுளும், வீரக்கடவுளும் முக்கியத்துவம் பெற்றன. சில இடங்களில் சிவன் பெயர் சுட்டப்பட்டது. நீலமணிமிடற்று ஒருவன் போல மன்னுக பெரும" என்றார் ஔவையார். ஆனால் நாவுக்கரசர் தேவாரம் சிவனுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றது. அறுசமய வழிபாடு தோன்றியது. கபாலிகர் நடமாட்டம் தமிழகத்தில் இருந்துள்ளது. எனினும் சைவ சமயமே தலையாய சமயமாகப் போற்றப்பட்டது. இது சைவ வ்ளர்ச்சியின் போக்கினை வெளிப்படுத்துகின்றது.

திருநாவுக்கரசர் காலத்தில் சமயப் போராட்டம், மதமாற்றம், மேல், கீழ் என்ற வேறுபாடு, வடமொழி ஆதிக்கம், தமிழிசை, தமிழ்மந்திர அறிமுகம், ஆகம வழிபாடு, அன்புமுறை போன்றன இருந்தன.

சமூக அனைத்து நிறுவனங்களும் சமயத்திற்குட்பட்டதாக இருந்துள்ளன. கோயில்கள் ஆற்றோரங்களில் எழுப்பப்பட்டுள்ளன. கோயில்களின் தோற்றம் வளத்தின் அடிப்படையில் இருந்துள்ளது. நிலபிரபுத்துவம், ஆண்டான் அடிமை சமய வளர்ச்சிக்கும் காரணமாக இருந்துள்ளன. போராட்டம் (Conflict) மேல் கீழ் என்ற ஏணிமுறை (Stratification) திருநாவுக்கரசர் காலத்தில் பெரிதும் காணப்பட்டன.

27. சித்தாந்த நெறியும் - நாவுக்கரசரும்

வி. கிருஷ்ணமூர்த்தி, புதுக்கோட்டை

திருநாவுக்கரசர் தேவாரத்தில், சைவ சித்தாந்தம் சிறப்பாகப் பேசும், 'நால்வகை நெறிகள்' குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. அவை பற்றி ஒரு சிறிது ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

'நால்வகை நெறிகள்' – ஒரு விளக்கம்

''இறைவன் - வியாபகன். அவனைச் 'சிவன்' எனச் சைவ சித்தாந்தம் கூறும். இறைவனுக்கு எந்த உருவமும் இல்லாவிட்டாலும், ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டு 'அருவம், அருவுருவம், உருவம் ஆகிய மூன்று திருமேனிகளை எடுக்கின்றான். இம்மூன்று திருமேனிகளையும் கடந்த நிலை 'சொரூபம்' என்று கூறப்படும். உருவத் திருமேனி வழிபாட்டைச் சைவ சித்தாந்தம் மிகவும் வலியுறுத்துகின்றது. உருவத்தை உடலால் வணங்குவது 'சரியை'; பூப்போடுதல், வலம் வருதல் முதலியன சரியையின்பாற்பாடும். மந்திரங்களை ஓதுவது 'கிரியை'; மனத்தால் உருவத்தைத் தியானிப்பது. 'யோகம்', 'ஞானம்' இருவகைப்படும். ஒன்று அபரஞானம்; அது சித்தாந்த சாத்திரங்களை ஓதுவதன் வாயிலாக உண்டாகும். மற்றொரு வகை ஞானத்திற்குப் 'பரஞானம்' என்று பெயர். சரியை, கிரியை, யோகங்களைச் செய்து வந்தால், 'மலபரிபாகம், இருவினை யொப்பு, 'சத்திநிபாதம்' ஆகிய மூன்றும் உண்டாகும். நாம் பக்குவம் எய்தியதும், இறைவன் மானிடச் சட்டை போர்த்தியோ, சீவன்முத்தர் ஒருவரை அதிட்டித்தோ, குருநாதனாக வந்து ஞானத்தை வளர்ப்பான்!''

''பாசப்பற்று விடுதற்பொருட்டு, முதல்வனைப் பற்றும் முறையே 'கடவுள் வழிபாடு' எனப்படும். அது 'பொதுவும், சிறப்பும்' என இருவகைப்படும். வழிபாடு பின்பற்றல், இறைவன் திருக்குறிப்பின்வழி நின்று ஒழுகுதல், 'வழிபாடு' 'பிற்றைநிலை' என்பவை ஒருபொருட் சொற்கள். 'பொது வழிபாடு' என்பது இறைவனது அருளாணை ஆகிய அறத்தின்வழி நிற்றல். 'சிறப்பு வழிபாடா'வது முதல்வனது உண்மை யியல்பைத் தெளியக் கண்டு, அவனைச் சார்தலால், அவன்றன் அருட்குணங்கள் நம்மிடத்து மேம்பட்டு விளங்குமாறு ஒழுகும் ஒழுக்கம். இஃது அருள்நூல்களை ஓதி உணர்ந்து, அவற்றுள் கூறியபடி முதல்வனை வணங்குதல், வாழ்த்துதல், நினைதல், உள்நோக்கி உணர்தல் என்றும்

வடிவில் நிகழத்தக்கது.... இது, 'சரியை, கிரியை, யோகம், ஞானம்' என நான்கு வகையில் வைத்துணர்த்தப்படும்!''

இந்நால்வகை நெறிகளும், முத்தி அடைவதற்குத் தேவையான அடிப்படை ஒழுக்க முறைகள் எனலாம். மும்மலச் சார்பால், உயிர்கள், பல்வகைப் பிறப்புக்களை எய்தி, இன்ப துன்பங்களுக்கு உள்ளாகின்றன. இவற்றினின்றும் நீங்கி, இறைவனின் பேரருளை அடைய இந்நெறிகள் துணைபுரிகின்றன. 'சரியை' முதலிய மூன்றும், 'ஞானத்'தை அடைவிக்கும், முத்திப் பயனை எய்த இந்த 'ஞானமே' வாயிலாகும்!

''வாழ்க்கையில் ஒவ்வொரு படியையும் கடந்த பின்னரே மேல் நிலைக்குச் செல்ல முடியும்; அதுபோன்றே சமயத்துறையிலும் படிகள் உண்டு. ஊனில் அரும்பி, உணர்வு நிலையில் சாய்த்து, உயிரில் கலந்து நிற்கும் சமயமானது. படிப்படியாக அமைக்கப்பட்ட ஒன்று. 'சரியை, கிரியை, யோகம், ஞானம்' என்னும் நான்கும் சமயப் படிகளாகும்!''

''விரும்பும் சரியைமுதல்
மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல்
அன்றோ பராபரமே!''

என்று கூறுவதால் அறியலாம்.

'சரியை'

உயிர்கள், இறைவனை உணர்ந்து, அவனுக்குப் பணி செய்ய வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி நின்றால், அக்காலமே, அவ்வுயிர் கட்கு உய்வு உண்டாகும் காலம் எனலாம். அப்பணிகளால் 'இறைவனுக்கு நன்மை போலும்' என்று எண்ணிவிடலாகாது. அவன், உலகத் தலைவர்கள் போல் குறைபாடுடையனல்லன்; அவன், வரம்பில் இன்பம் உடையவன்; 'வேண்டுதல் வேண்டாமை இலான்'. ஆதலின், 'பணிகள்' என்பன, உயிர்கள் உய்தற்பொருட்டுச் செய்வனவாம் என உணர்தல் வேண்டும்.

''சரியை என்பது, சிவபெருமானது உருவத் திருமேனியை மட்டும் உணர்ந்து, அதனைப் புறத்தொழிலால் மட்டும் வழிபடுதல் ஆகும். திருக்கோயிலிற் சென்று புலர்வதன்முன் அலகிடுதல், மெழுக்கிடுதல், விளக்கேற்றுதல், மாலை கட்டிக் கொடுத்தல், தலையாரக் கும்பிட்டுக் கூத்தாடுதல், பாடுதல் முதலியன 'சரியை'யாகும். 'சத்திநிபாதம்' மிக மெல்ல நிகழ்வதாகிய 'மந்த தரம்' என்னும் நிலையில் நின்றோர், 'சரியைத்' தொண்டினை விரும்பிச் செய்வர்!''

இவை தவிர, நந்தவனம் அமைத்தல், சிவனடியார்களைக் கண்டால் அவர்களை வணங்கி, அவர்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்தல்' ஆகியனவும் 'சரியை'யில் அடங்கும் என்பர்.

"சரியா மார்க்கம், ஆணவத் தடிப்பைக் குறைக்கும்; இந்நிலையில் பெறும் வெற்றியானது, 'சாலோகத்'தை (கடவுளின் இருப்பிடத்தை) அளிக்கும். அதாவது பக்தன், இம்மார்க்கத்தின் மூலம் ஈசனுலகை அடைகிறான்!"

'சாலோகம்' ஆவது, இறையுலகு எய்தி, அங்கு யாண்டும் தடையின்றி இயங்கி, அங்குள்ள போகங்களை நுகர்ந்து வாழ்தல் ஆகும். இச்'சரியையாளர்'தம் நெறி, 'தொண்டு நெறி' அஃதாவது 'தாசமார்க்கம்' என்று சொல்லப்படும்.

இச்'சரியை' முதலான நெறிகளைக் கைக்கொள்ளுவதற்கும் சிவனருள் வேண்டும். ஆனால், உயிர்கள், ஆணவ மலத்தால் கட்டுண்டு, அறியாமை இருளில் மூழ்கி நிற்கும் நிலையில், 'சரியை' முதலானவற்றை எண்ணிப் பார்க்கவும் செய்யா!

திருநாவுக்கரசர் இத்தகைய அறியாமையில் தாம் இருந்ததாக முதல் திருப்பதிகத்திலேயே கூறுகின்றார்.

"முன்னம்அடி யேன்*அறி யாமையினால்*
முனிந்து என்னை நலிந்து முடக்கியிட....."

"என்போலிகள் உம்மைஇனித் தெளியார்!"

என்பன சான்றுகள். இறைவனின் அருள் இருந்தாலே இத்தகு நெறிகளை மேற்கொள்ள முடியும் என்பதை நாவரசர்,

"ஞானம் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானம் காட்டுவர் தம்மடைந் தார்க்கெலாம்"

எனும் பாடலால் சுட்டுவர். அப்பரடிகள், தம் நெஞ்சுக்குக் கூறுவார் போல் 'சரியைத் தொண்டு' பற்றிப் பாடும் ஓர் அரிய திருப்பாட்டு,

'நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே! நீ வா'

என்பதாம்.

நாவுக்கரசர், 'உழவாரப் பணி'யில் தலைநின்றவர் என்பது, அவரது வாழ்க்கை வரலாற்றில் சுட்டப்பட்டது. இறைவனுக்குத் தொண்டு செய்வதே தமது குறிக்கோள் என்கிறார்.

"தன்க டன்அடி யேனையும் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே!"

என்பது அவரது வாக்கு.

இவ்வாறே, இறைவன், மனிதர்கட்குத் 'தலை, கண்கள், செவிகள், மூக்கு, வாய்' முதலான உறுப்புக்களை வழங்கியதன் நோக்கமாகத், "தலையே நீ வணங்காய்!" என்னும் பதிகத்தை அருளிச் செய்தார் நாவரசர்.

இத்தகு 'சரியை' நெறியை முறையே செய்ய வல்லார்க்கு எம்பெருமான், கரும்பினிற் கட்டி போல் இனிமை தருவார் என்கின்றார் வாகீசர்.

நாவரசர், இறைவனைத் 'தோத்திரங்களா'ல் துதித்தல் வேண்டும் என்கின்றார்.

''.......தூநீ ராட்டித்
தோத்திரங்கள் பலசொல்லித் தூபம் காட்டி''

என்பது சான்று. (நாவரசர், 'சாத்திரம் என்ற சொல்லையும் எடுத்தாள்வது எண்ணத்தக்கது: 'தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே!' (6:778:2)

இவ்வாறு பல பாடல்களிலும் 'சரியை' நெறி குறித்துப் பாடுகின்றார். வாக்கின் மன்னவராம் நாவரசர்.

> ''சிவபெருமானின் அருவுருவத் திருமேனியாகிய இலிங்கமூர்த்தியை அணுகியிருந்து, அதன்கண் அப்பெருமானை 'மந்திரம், கிரியை, பாவனை' என்ற மூன்றினாலும் அகத்திலும் புறத்திலும் பலவகை உபசாரங்களையும் முறைப்படி செய்து வழிபடுதலே **'கிரியை'** என்பது. திருமுழுக்கு (அபிடேகம்), ஆடை, அணிகலன், சந்தனம், மலர் முதலியவற்றால் செய்யும் ஒப்பனை (அலங்காரம்), படையல் (நிவேதனம்), புகை, ஒளி (தூபம், தீபம்), குடை, கொடி, கண்ணாடி, கவரி முதலிய மங்கலப் பொருள்கள் இவற்றை ஏற்பித்து, வலம் செய்தல், அடி பணிதல், புகழ்ச்சி (தோத்திரம்) என்பவற்றைச் செய்து வேண்டி நிற்றல் என்னும் இவ்வகை அணுக்கத் தொண்டுகள், 'கிரியை'யுள் அடங்கும். 'சரியை' நிலையிலும் திருமுழுக்கு முதலிய வற்றைச் செய்யினும், அவை மேற்குறிப்பிட்ட 'மந்திரம்' மூன்றானும் அகத்தும் புறத்தும் நிகழாது, செயலளவில் புறத்துமட்டிலும் நிகழ்தலின் அவை 'கிரியை' எனப்படுதல் இல்லை!''

இது, வழிபாட்டில் நிகழும் செயல்களைப் பற்றியது; மேலும் அகத்தொடு புறமும் கலந்த பயிற்சியாகும். அஃதாவது, உடல் உறுப்புக் களாகிய கைகளைக் கொண்டு இயற்றப்படும் இவ்வழிபாட்டில் உள்ளமும் ஈடுபடுகின்றது.

> ''கிரியை என்பது 'உபாசனை' முதலாக வரும் காரியங்களின் தொகுப்பை உடையது. பக்தன், தன்னைப் பரமபதத் தந்தையின் **தொண்டுக்காகப்** பயபக்தியுடன் கட்டுப்பாடு, கடமையுணர்வுள்ள மகனாகக் கருதிப் பணிந்து ஒழுகுகிறான். ஆகவே அவன் தன் நேரம் முழுவதையும் இறைவனுக்குப் பணி செய்வதிலேயே கழிக்கிறான்''.

'சரியை'த் தொண்டு செய்துவரச் செய்துவர, அதன் பயனாய் 'ஆணவமலம்' பரிபாகமுறும்; அப்போது 'சத்திநிபாதம்' மந்தமாய்

நிகழும். அதன் பயனாய்க் 'கிரியை'த் தொண்டில் ஆர்வம் ஏற்படும். இவ்வகையில், 'கிரியை'க்கு முதற்படி 'சரியை' என்றும் கூறலாம்.

இக்'கிரியை'த் தொண்டினைச் 'சிவபூசை, சிவதன்மம்' என்றும் கூறுவர். 'ஞானம்' தோன்றுதற்கு இப்'பூசை' இன்றியமையாதது. இக்'கிரியை'யில் வழுவாது நிற்போர்க்குச் **'சாமீபம்'** கிட்டும். அஃதாவது மகன் போன்று இறைவனுக்கு அணுக்கராய் இருந்து இன்புறும் நிலையாம்.

'ஆதலின் இவர்தம் நெறி, 'மகன்மை நெறி' அஃதாவது 'சற்புத்திர மார்க்கம்' என்று இயம்பப்படும். அகந்தையையும் மமகாரத்தையும் தகர்த்தெறிய வல்லது இக்'கிரியை' நெறியேயாம்.

திருநாவுக்கரசர், இக்'கிரியை நெறி' பற்றியும் தம் பாடல்களில் ஆங்காங்கு எடுத்து மொழிகின்றார்.

''விரும்பு மதிக்கண்ணி யானை
மெல்லிய லாளொடும் பாடிப்
பெரும்புலர் காலை எழுந்து
பெறுமலர் கொய்யா வருவேன்!

''அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி''

''வாயினை வாழ்த்த வைத்தார்''

''.... சிவனுக்கு அன்பாய்ப்
பால்நல் தயிர்நெய்!யோடு
பலபல ஆட்டி!''

இனி, நாவரசர், 'மனம், வாக்கு, காயம்' இம்மூன்றினாலும் செய்யப் படும் வழிபாடு குறித்தும் கூறியுள்ளார்.

'வெண்மதி சூடி விளங்கநின் றானை'

''இத்திருப்பாட்டு, திரிகரணங்களால் ஈசனை ஏத்தி நிற்றலை உணர்த்திற்று. 'இலயத்தொடு பாடல் அறாத நல்லூர்' என்பது வாக்கினாலும்; 'கண்ணுளும் நெஞ்சத்து அகத்தும்' என்பது முறையே காயத்தாலும் மனத்தாலும் செய்யப்படும் வழிபாடு எனவும் காண்க!'' என்று கூறுவதனால் அறியலாம்.

இத்தகைய தொண்டினால் 'வல்வினை மாயும்' என்றும் அவரே கூறுகின்றார்.

''..... ஏகம்பம் மேவினார்க்கு
வருத்திநின்று அடிமை செய்வார்
வல்வினை மாயு மன்றே!''

என்பது அவரது திருவாக்கு!

'யோகம்'

'கிரியை'த் தொண்டினால், ஆணவமலம் மேலும் பரிபாகமுற்றுச் 'சத்திநிபாதம்' தீவிரமாய் நிகழும். அந்நிலையில் இறைவனது அருவத் திருமேனியை உணரும் பக்குவத்தைப் பெற்று, அகத்தொழிலால் மட்டும் வழிபடுதல் 'யோகம்' ஆகும். மனத்தை அடக்கி, அகத்தே நிறுத்தி, ஒளி வடிவினனாகிய இறைவனோடு ஒன்றாய்ச் சேர்தல் எனலாம்.

> ''ஐம்பொறிகளை ஒடுக்கி, உயிர்ப்பை நிலைநிறுத்தி, 'மூலாதாரம்' முதலான ஆறு ஆதாரங்களின் உள் வழிகளை அறிந்து, அவ்விடங்களில் பொருந்தித் தியானித்துச் சந்திர மண்டலத்திலுள்ள அமிர்தத்தை உடல் முழுதும் நிரப்பி, முழுச்சோதியை நினைந்திருந்து, வினைகள் கெடுதற்குரிய யோக நெறியைக் கடைப்பிடித்தவர் சிவனது உருவத்தை (சாரூபம்)ப் பெறுவர்!''

'யோகம்' என்பதற்குக் 'கூடுதல்' அல்லது 'ஒன்றுதல்' என்று பொருள். இஃது எட்டுக் கூறுகளாகப் பகுத்து உரைக்கப்படும். அவை: இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. இவற்றை 'அட்டாங்க யோகம்' என்பர். இவற்றுள் 'சமாதி' என்பது, தன்னை மறந்து இறைவனோடு ஒன்றி விடுதலாம். சிவபெருமானைத் தியானித்தலும் அவனிடத்து அழுந்துதலும் 'சிவயோகம்' எனப்படும்.

மேலே கூறிய மூவகை வழிபாடுகளும், 'இறப்பில் தவம்' என்றும்; இவற்றின் பயனாகக் கூறப்பட்ட 'சாலோகம்' முதலிய மூன்றும் 'பதமுத்திகள்' என்றும் சொல்லப்படும். 'பதமுத்திகள்', சரியை முதலியவற்றுக்கு இடையில் வரும் பயன்கள்; **ஞானமே** அவற்றின் முடிந்த உண்மைப் பயன்.

திருநாவுக்கரசர், இவ்'யோகத்'தைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

''கல்லினால் புரமூன்று எய்தக்
கடவுளைக் காத லாலே
எல்லியும் பகலும் *உள்ளே*
ஏகாந்த மாக ஏத்தும்
பல்லில்வெண் தலைகை யேந்திப்
பல்இலம் திரியும் செல்வர்
சொல்லுநன் பொருளும் ஆவார்
திருச்சோற்றுத் துறைய னாரே!''

இப்பாட்டில், 'உள்ளே ஏகாந்தமாக ஏத்தும்' என்பது 'யோகநிலை'யைக் குறிக்கும்.

''உயிரா வணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியி னுருவெழுதி

உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி!''

என்ற அப்பர் அருள்மொழியும் 'யோகநிலை' குறித்ததேயாம்.

சிவபெருமான், உமாதேவியை உடனாகக் கொண்டு, மன்னுயிர்க்குப் 'போகத்'தை யளிப்பதோடு, 'யோகநிலை' நிற்போர்க்கு, அவ்வாறாகிய பேற்றினையும் தருபவர். இவ்வாறு ஒருவரே, இருவகைச் சிறப்பும் நல்கும் அருளாளர் என்பதை நாவரசர்,

''குழுவினர் தொழுதெழும் அடியர் மேல்வினை
தழுவின கழுவுவர் பவள மேனியர்
மழுவினர் மான்மறிக் கையர், மங்கையைக்
கெழுவின யோகியர் கெடில வாணரே!''

என்னும் திருப்பாட்டால் குறிப்பிடுவர்.

இறைவன், 'யோகி'யாகவுமிருந்து உயிர்களுக்கு அருள்பவன். எனவே அவனே 'பரமயோகி'யாவான்.

'ஞானம்'

சிவபெருமானை நோக்கிச் செய்யும் 'சரியை, கிரியை, யோகம்' என்ற 'வழிபாடும் தொண்டும்', சைவத்தில் 'தவம்' என்று சொல்லப்படும். 'மந்ததரம், மந்தம், தீவிரம்' என்னும் 'சத்தி நிபாத' நிலைகளுக்கு ஏற்பச் சிவவழிபாடாகிய தவமும், 'சரியை, கிரியை, யோகம்' என மூன்றாய் நிகழும். இம்மூன்றையும், பயன் கருதாமல் சிவனிடம் கொண்ட பேரன்பின் காரணமாகச் செய்து வந்தால், இத்தவமுயற்சியால், 'இருவினையொப்பு' உண்டாகும்; அதனால், ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் நிலை உண்டாகும்; இதனால் 'வினை'யும் நீங்கும்; நீங்கவே, உயிரறிவு உள்ளவாறு விளங்கும். அந்நிலை, 'உயிரினது பக்குவம்' எனப்படும். இது, ஞானத்தை உணர்தற்கு ஏற்ற பருவம் ஆகும். ஆதலின், 'இருவினையொப்பு' வருங்காலமே, உயிருக்கு 'ஞானம்' வரும் காலம் ஆகும். அப்போது, முழுமுதற் பரம்பொருளே ஞானாசிரியராக எழுந்தருளிவந்து, அவ்உயிர்க்கு 'ஞானத்'தை அருளுவார். அவ்வாறு 'ஞானம்' விளங்கியபொழுது, அவ்வுயிரானது அசத்தை அசத்து என உணர்ந்து, அதனைக் கழித்துச் சத்தாகிய சிவத்தோடு கூடி இன்புறுதலாகிய 'முத்திநிலை' பெறும்.

'சரியை, கிரியை, யோகம்' எனும் மூன்று நெறிகளும், கடைசி நெறியான 'ஞானத்'திற்கான ஏற்பாடுகளாகும். 'ஞானநெறி'யைச் 'சன்மார்க்க நெறி' என்பர். இதன் பயன், 'சாயுச்சியம்' அடைதல், அதாவது 'தெய்வீகக் கட்டுப்பேறு'. எனவே, ஞானமே 'முத்தி'க்கு வழி!''

திருநாவுக்கரசர், இஞ்'ஞானநிலை' பற்றிப் பல்வேறு பாக்களிலும் குறிப்பிடுகின்றார். அவற்றுட் சில வருமாறு:

"நானஎனில் தானே என்னும்
ஞானத்தார் பத்தர் நெஞ்சுள்
தேனும்இன் னமுதும் ஆனார்
திருச்செம்பொன் பள்ளி யாரே!"

என்பவர், 'ஞானம் என்றால் என்ன?' என்பதற்கான ஒரு விளக்கமும் தருகின்றார்.

"விளக்கினார் பெற்ற இன்பம்
மெழுக்கினால் பதிற்றி யாகும்
துளக்கிநல் மலர்தொ டுத்தால்
தூயவிண் ணேற லாகும்!
விளக்கிட் டார்பேறு சொல்லின்
மெய்ந்நெறி *ஞான மாகும்!*
அளப்பில கீதம் சொன்னார்க்கு
அடிகள்தாம் அருளு மாறே"

எனச் 'சரியை, கிரியை' எனும் நெறிகளோடு 'ஞானநெறி'யினையும் சேர்த்துக் கூறுகின்றார்.

"....மெய்தரு ஞானத் *தீயால்*
கள்ளத்தைக் கழிய நின்றார்!"

"*ஞானத்தை விளக்கை* யேற்றி
நாடியுள் விரவ வல்லார்
ஊனத்தை ஒழிப்பர் போலும்
ஒற்றியூர் உடைய கோவே!"

என, ஞானத்தை 'நெருப்பாக'வும் 'விளக்கா'கவும் உருவகப் படுத்துவதனோடு, 'நாடியுள் விரவ வல்லார்' என 'யோகத்'தையும் குறிப்பிடுகின்றார் அப்பர் பெருமான்! 'ஊனத்தை ஒழிப்பர் போலும்' என்பதால், 'பிறவியைப் போக்கவல்லது இந்த ஞானமே' என்றும் பேசுகின்றார்.

"ஞானமே முத்திக்கு வழி; ஆதலின், நெஞ்சமே! இம்முத்தி நெறி அடைய எந்தத் தவமும் செய்யாதிருக்கிறாயே! அன்பால், அடியவர்க்கு ஏதும் அளித்திலையே! எனவே, திருச்சோற்றுத்துறை ஈசனுக்குப் பத்தியாய்ப் பணி செய்க!" என்கிறார் அப்பர்.

"முத்தி யாகஒரு தவம் செய்திலை!
அத்தி யால்அடி யார்க்குஒன்று அளித்திலை!
தொத்து நின்றலர் சோற்றுத் துறையர்க்கே
பத்தி யாய்ப்பணி செய்மட நெஞ்சமே!"

என்பது திருச்சோற்றுத்துறைப் பதிகப் பாட்டு!

சிவபெருமானின் 'திருவடித் தீக்கை'யால் திருநாவுக்கரசர் 'ஞானநிலை' பெற்றார் என்பது முன்பு கூறப்பட்டது. 'திருநல்லூர்த் திருப்பதிகப்' பாடல் ஒவ்வொன்றிலும், தன் தலைமேல் இறைவன் திருவடி சூட்டியதைக் குறிப்பிடுதல் காணலாம்.

"…..இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார்!"
"நன்னலத்த திருவடிஎன் தலைமேல் வைத்தார்!"
"நாடேறு திருவடிஎன் தலைமேல் வைத்தார்!"
"நல்லருளால் திருவடிஎன் தலைமேல் வைத்தார்!"
"நண்ணரிய திருவடிஎன் தலைமேல் வைத்தார்!"
"நற்றவர்சேர் திருவடிஎன் தலைமேல் வைத்தார்!"
"நாறுமலர்த் திருவடிஎன் தலைமேல் வைத்தார்!"
"நலங்கிளருந் திருவடிஎன் தலைமேல் வைத்தார்!"
"நன்றருளுந் திருவடிஎன் தலைமேல் வைத்தார்!"
"நாம்பரவும் திருவடிஎன் தலைமேல் வைத்தார்!"

என்று வருவன சான்றுகள்.

'சிவோகம்பாவனை'

'சிவோகம்பாவனை' என்பதற்கு, உயிரானது, தன்னைச் 'சிவமாகவே பாவித்தல்' என்று பொருள்.

"உயிருணர்வு, ஒரு பொருளைப் பற்றும்போது அப்பொருளுக்கு வேறாய் நில்லாது, அதனிடத்தில் அழுந்தி, அதன் தன்மையையே தன் தன்மையாகக் கொண்டு நிற்கும். இவ்வியல்பைச் 'சார்ந்ததன் வண்ணமாதல்', 'அது அதுவாதல்' என்றெல்லாம் குறிப்பிடுவர்…. உயிர், பாசப்பொருளோடு எவ்வாறு ஒற்றுமைப்பட்டு நிற்கிறதோ அவ்வாறே பதியாகிய சிவத்தோடும் கூடி ஒற்றுமைப்பட்டு நிற்றல் இயலும்…. சிவமும் உயிரும் பொருளால் இரண்டாயினும் இரண்டு என்னும் தன்மையின்றி ஒற்றுமைப்பட்டு நிற்பவை. 'சிவம்' வியாபகமாய் மேம்பட்டு நிற்க, உயிர் அதில் வியாப்பியமாய் அடங்கிப் பிரிப்பின்றி இயைந்து நிற்பது. இவ்வாறு இருவரும் பிரிந்து நில்லாது ஒற்றுமைப்பட்டு நிற்கின்ற நிலையை உயிர், இடைவிடாது உணர்ந்து, 'சிவன் நான்' எனப் பாவித்தல் வேண்டும். அவ்வாறு பன்னாள் பாவனையால் உணர்ந்து நிற்பின், பின்பு, உண்மையிலேயே சிவமாம் தன்மை உண்டாவதாகும். அப்பாவனையே சிவோகம்பாவனை' எனச் சிவாகமங்கள் கூறுகின்றன. சிவோகம் - சிவ+அகம் சிவன்நான் (ஆனேன்)!"

இச்'சிவோகம் பாவனை'யானது 'கருட தியானம்' போல்வது என்றும்; நஞ்சு நீங்குவதற்காகக் 'கருடபாவனை' செய்யப்பட்டு, அது நீங்கியதும் மாந்திரிகன் தனது நிலைக்கு மீள்வது போல, உயிரானது பாசத்தினின்று நீங்கச் 'சிவோகம்பாவனை' செய்து, பாசத்திலிருந்து விடுபட்டவுடன், களிம்பு நீங்கப்பெற்ற செம்பினைப் போல் ஆகிவிடும். எனவே, பாச நீக்கத்திற்கான பயிற்சியே 'சிவோகம்பாவனை' என்பர் வ.ஆ. தேவசேனாபதி.

உயிரானது இச்'சிவோகம்பாவனை'யில் உறைந்து நின்று பிற உணர்வுகள் தோன்றாதபடித் திருவருள் உணர்வு ஒன்றையே பற்றி நிற்குமானால் 'மலவாசனை' அடியோடு நீங்கும். எனவே 'சிவோகம் பாவனை'யாகிய தியானத்தில் பழகுவதே 'பசுத்தன்மை' நீங்குதற்கான வழியாகும்.

ஞானத்தில் ஞானமாகிய நிட்டையின் பயனாக அடையப்படும் 'பரமுத்தி' - அஃதாவது 'சாயுச்சம்' என்ற நிலையை இவ்வுலகில் இவ்உடம்போடு கூடியிருக்கும் நிலையில் பெற்றிருத்தலைத்தான் 'சீவன்முத்தி' என வழங்குவர். 'சிவோகம்பாவனை'யில் மூழ்கியிருத்தலே சீவன்முத்தி எனப்படும். இந்த நிலையை அடைந்தோர், எஞ்ஞான்றும் இறை நினைவிலேயே அழுந்தி, இறைவனோடு தொடர்புற்று நிற்பரேயன்றி, உலகத்தோடு தொடர்பு கொண்டிருத்தல் இல்லை. இந்நிலைக்கு 'நிட்டை நிலை' என்றும் பெயர். இந்த நிலையில் நிற்போர் 'ஞாயிறு எங்கு எழுந்தால் என்? மண் கம்பம் ஆகில் என்?' என்று கவலையேதுமின்றி இருப்பர். இவர்கள், எவர்க்கும் அஞ்ச மாட்டார்கள். கூற்றுவனுக்குங்கூட அஞ்ச மாட்டார்கள். இவர்கள் எந்நேரமும் இறைவனது திருவடி நிழலில் நிற்றலால், எஞ்ஞான்றும் இன்பமேயன்றித் துன்பம் இல்லை. மதுவுண்ட வண்டு, அம்மலரிலே மயங்கிக் கிடத்தல் போல், சிவானந்தமாகிய இன்பத்தில் மூழ்கியே நிற்பர். உடம்பு நீங்கியவுடன், பரமசிவனோடு இரண்டறக் கலத்தலாகிய சாயுச்ச பரமுத்தியைப் பெறுவர்.

திருநாவுக்கரசரது வாழ்வில் நிகழ்ந்த விந்தை நிகழ்ச்சிகள் பலவாகும். சமணர்களால் முதலில் நீற்றறையில் இடப்பட்டார் நாவரசர்; அப்போது அவர், 'சிவோகம்பாவனை'யில் அமர்ந்திருந்தார் ஆதலின், அந்தக் கொடுமையான நீற்றறை, எம்பெருமானின் திருவடி நீழலாகக் காட்சி யளித்தது.

'ஈசன் எந்தை இணையடி நீழலே'

என்பது அப்பர் அருள்மொழி.

இவ்வாறு, தமக்கு நஞ்சு கலந்த பாற்சோறு அளிக்கப்பட்ட போதும், யானையின் காலால் இடறச் செய்தபோதும், கல்லில் பூட்டிக் கடலில்

தள்ளியபோதும், 'சிவோகம்பாவனை'யில் மூழ்கியிருந்தமையாலே நாவரசருக்கு எவ்வித இடரும் இல்லாதொழிந்தது.

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்!"

என நாவரசர் பாடிய திருத்தாண்டகத்துக்கு உரை விளக்கம் கூறவந்த வை. இரத்தினசபாபதி,

> "பதிப்பொருள் ஒன்றே, அவனுக்கு அடிமைகளாய் அவனடியிற் சேரும் தகுதி பெற்ற உயிர்களே அனைத்தும் நடலைத் தன்மையில் நடத்தப்படுதற்குரிய அறியாமை வந்தமைந்ததேயாயினும், அவை பிணியன்று! அவைகளை எங்களுக்குள்ளடக்கி யாங்கள் பரம்பொருளுக் குள்ளடங்கியிருத்தலே இலக்கணம் எனக் கொள்ள வைத்தார்!"

என்பர்.

"அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை!"

என்று கூறும் நாவரசர்,

"வானம் துளங்கில்என் மண்கம்பம்
ஆகில்என்....................
ஊனம் ஒன்றில்லா ஒருவனுக்கு
ஆட்பட்ட உத்தமர்க்கே!"

என்று கூறுமளவுக்கு நாவரசர், 'சிவோகம்பாவனை'யில் மூழ்கியிருந்தார் எனலாம்!

திருவைந்தெழுத்து

சிவஞானபோதப் 'பாயிர'த்துள், 'பெரும் பெயர்' எனுந் தொடர் வந்துள்ளது. இதற்குச் சி. அருணை வடிவேலு முதலியார் கூறும் அரிய உரை விளக்கம் வருமாறு:

> "இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களில் ஒவ்வொன்றிலும் விரித்துச் சொல்லப்படும் கருத்தைச் சுருக்கமாகத் தொகுத்துக் கூறும் 'மகா வாக்கியம்' ஒவ்வொரு வேதத்திற்கும் உண்டு. அவ்வாறே சிவாகமங்களின் ஞானபாதக் கருத்தைத் தொகுத்துக் கூறும் மகாவாக்கியமும் உண்டு. எனினும் இங்குப் **'பெரும்பெயர்'** என்றது 'சிவமூலமந்திரம்' ஆகிய **'பஞ்சாக்கரம்'** அல்லது 'திருவைந்தெழுத்தை'யே என்பது யோகிகள் (சிவஞான முனிவர்) கருத்து!"

இதன்கண், 'திருவைந்தெழுத்'தின் சிறப்பு இயம்பப்பட்டுள்ளது தெளிவு.

வேப்பமரத்தில் வாழ்ந்து; கசப்பான காய், இலை முதலிய வற்றையே தின்று தின்று பழகிப் போன புழு, அருகில் இருந்த கரும்பின் மேல் தற்செயலாக விழுந்து, அக்கரும்பின் தீஞ்சுவையை இனிது நுகர்ந்தாலுங்கூட, முன்னைப் பழக்கம் காரணமாக அந்த வேப்பங் காயினையே மீண்டும் மீண்டும் விரும்பித் தின்னும். அதுபோல, அசத்தாய் உள்ள உலகப் பொருள்களை 'அசத்து' என்று கண்டு கழித்த உயிர்களுக்குப் 'பதிஞானம்' விளங்கி, அதனால் 'பதி' காட்சிப்பட்ட போதிலும், முன்னைப் பழக்க வாசனையால் 'அசத்து' என்று ஒதுக்கிய அவ்உலகப் பொருள் களின் மேல் விருப்பம் நிகழ்தலும் கூடும். எனவே அவ்வாறு நிகழாதிருக்க இறைவனின் 'திருவைந்தெழுத்'தை முறைப்படி ஓதவேண்டும்!

சிவமூலமந்திரம் - திருவைந்தெழுத்து. **'சிவாயநம'** - என்பது திருவைந்தெழுத்து. இதன்கண் ஐந்து எழுத்துக்கள் உள. ஒவ்வொன்றும் ஒவ்வோர் ஆழ்ந்த பொருளைத் தன்பால் கொண்டது. 'சி' - பேரின்பப் பொருளாகிய 'சிவத்'தைக் குறிக்கும்; 'வா' - சிவத்தின் ஞானமாகிய 'அருளை'க் குறிக்கும்; 'ய' - உயிரைக் குறிக்கும்; 'ந'- திரோதான சத்தியையும், அதன் வழிப்பட்டனவாகிய 'மாயை, கன்மம், மாயேயம்' முதலான வற்றையும் குறிக்கும். 'ம' - மூலமலமாகிய ஆணவத்தைக் குறிக்கும்.

இதற்கு மேலும் பல விளக்கங்களை அறிஞர்கள் கூறுவர்.

இனி, **'நமசிவாய'** என்னும் திருவைந்தெழுத்தும் உண்டு. இதற்குத் 'தூலபஞ்சாக்கரம்' என்று பெயர்; 'சிவாயநம' என்னும் திருவைந்தெழுத் திற்குச் 'சூக்கும பஞ்சாக்கரம்' என்று பெயர். 'நமசிவாய' மந்திரம் ஓதுபவர்க்கு உலகப்பயன் கிட்டும் என்றும்; 'சிவாயநம' மந்திரம் ஓதுபவர்க்குப் பிறவி நீக்கம் கிடைக்கும் என்றும் அறிஞர் கூறுவர்.

பதிஞானத்தைப் பெறுதற்கு முன்பு, அதனைப் பெறும் நிலை கைகூடுதற்பொருட்டும்; பதிஞானத்தைப் பெற்ற பின்னரும் 'மலவாசனை' தாக்காதிருத்தற் பொருட்டுமாக, இத்'திருவைந்தெழுத்தை' முறைப்படி ஓதுதல் வேண்டும்.

இத்தகைய மேலான மந்திரங் குறித்துத் தொல்காப்பியரே,

**''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும்
மறைமொழி தானே *மந்திரம்* என்ப''**

என்னும் நூற்பாவால் சுட்டுவரெனின், இதன் சிறப்பு ஒருவாறு தெரியவரும்.

திருநாவுக்கரசர், சைவ சமயத்திற்கு மீண்டும் திரும்பியபோது, சமணர்களால் இழைக்கப்பட்ட கொடுமைகளினின்றும், இறைவன் திருவருள் துணைகொண்டு, உய்வு பெற்றமைக்கு உறுதுணையாக இருந்ததே, 'நமச்சிவாய' எனும் திருவைந்தெழுத்தேயாகும்!

தம்மைக் கல்லில், இறுகப் பிணித்து, ஆழ்கடலில் அக்கொடியோர் தள்ளியபோதும், 'சிவோகம்பாவனை'யினால், திருவைந்தெழுத்து எனும் ஒப்பில்லா மந்திரத்தை ஓதியருளினார் நாவரசர்.

''கடலிற் பாய்ச்சினும் நற்றுணை யாவது நமச்சிவாயவே!''

இப்பதிகம் அனைத்திலுமே,

''நாவினுக்கு அருங்கலம் நமச்சி வாயவே''

''நண்ணிநின்று அறுப்பது நமச்சி வாயவே''

''நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே''

''நங்களுக்கு அருங்கலம் நமச்சி வாயவே''

''நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே''

''நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே''

''நல்லது விளக்கது நமச்சி வாயவே''

''நானெறி யாவது நமச்சி வாயவே''

''நமச்சி வாயப் பத்து,
ஏத்தவல் லார்தமக்கு இடுக்கண் இல்லையே!''

எனத் தமக்கு உற்ற துன்பம் குறித்தும், 'நமச்சிவாய' என்னும் நன்மந்திரத்தால் உய்ந்தமை குறித்தும் இனிதெடுத்து இயம்புகின்றார் நாவரசர்.

தமக்குப் பகைவர் அளித்த நஞ்சுணவும் பாற்சோறாக ஆகுமாறு மாற்றியருளிய கொடையாளன் - சிவபெருமான் என்று கூறவந்த அப்பர் பெருமான், ''அஞ்செழுத்தை மறவாமல் ஓதி உய்வு பெறுவீராக!'' என்று உலக மாக்கட்கு உணர்த்துகின்றார்:

''துஞ்சிருள் காலைமாலை தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத் தோதிநாளும் அரனடிக்கு அன்பதாகும்!''

என்பது அவர் பொன்னான திருவாக்கு!

''திருநீறு' அணியும்போது இத்திருவைந்தெழுத்தை ஓதி அணிக, அதனால் வினை அகலும்; பிறவி நோயும், எரியும் நெருப்பில் விறகினை இட்டது போல் அழிந்துபோம்'' என்கிறார் அப்பரடிகள்.

''மந்திர *நமச்சி வாய*
ஆகநீறு அணியப் பெற்றால்
வெந்தறும் வினையும் நோயும்
வெவ்வழல் விறகிட்டு அன்றே!''

என்னும் வாக்கை எண்ணிப் பார்த்தல் நலமாகும்.

"நமசிவாய' என்னும் திருமந்திரம், அரிய கருவூலம்; அது, பிற்காலத்தில் உறுதியாக உதவக் கூடியது; ஆதலின் அதனையே தியானித்தேன்; அதனால் அச்சம் தவிர்ந்தேன்" என்கின்றார் அருளாளர் அப்பர் பெருமான்!

"வைச்ச பொருள்நமக்கு ஆகும்என்று
எண்ணி *நமச்சிவாய*
அச்சம் ஒழிந்தேன்!"

இவ்வாறு கூறுபவர்,

"எழுத்து அஞ்சு என்நாவிற் கொண்டேன்!"

"பதத்தெழு மந்திரம் அஞ்செழுத்து ஓதி"

"நாமங்கள் ஓதி எழுத்தஞ்சும்"

"ஆதியர் நாமந்தான் ஆன அஞ்செழுத்து ஓத"

"திருநாமஞ் அஞ்சுஞ் சொல்லி"

"அஞ்செழுத்தும் வாய்நவில வல்லோர்க்கு"

என்று பல்வேறிடங்களிலும் இத்திருவைந்தெழுத்தை ஓதவேண்டும் என்கின்றார்.

துயிலினின்றும் நீங்கி விழித்தெழும்போதுகூட இத்திருமந்திரம் ஓதினாற் பயனுண்டு என்பார்.

"எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்று எழுவார்க்கு இருவிசும்பில் இருக்க லாமே!"

என்றும்; "உயிர் பிரிகின்ற காலத்துங்கூட, இறைவா! இம்மந்திரத்தை யான் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும்" என்ற பொருளில்,

"நாமம் பரவி நமச்சி வாய
என்னும் அஞ்செழுத்தும்
சாம்அன்று உரைக்கத் தருதிகண்
டாய், எங்கள் சங்கரனே!

என்றும், "சிவாகம நூல்களைப் பற்றி எதுவுமே தெரியாதவராயினும் இத்திருவைந்தெழுத்தை ஓதி உணர்ந்தாற் போதும்; இறைவன், அவர்களது உள்ளத்திலேயும் மகிழ்ந்து வீற்றிருந்து அருள்வன்" என்ற பொருளில்,

"ஏதும் ஒன்றும் அறிவிலர் ஆயினும்
ஓதி அஞ்செழுத்தும் உணர்வார்கட்குப்
பேதம் இன்றி அவரவர் உள்ளத்தே
மாதும் தாமும் மகிழ்வார்மாற் பேறரே!"

என்றும் கூறுகின்ற நாவுக்கரசர்,

"அஞ்செழுத்து ஓதினால்
பொருந்து நோய்பிணி போகத் துரப்பதோர்
மருந்தும் ஆகுவர் மன்னுமாற் பேறரே!"

என, உலகம் உய்யும்பொருட்டு, இம்மன்பதைக்கும் இம்மந்திரப் பெருமையை உணர்த்துகின்றார்.

இவ்வாறு இனிதாக எடுத்துச் சொல்லியும் கேட்காமல் வீணே காலங்கழிப்பவர் மீது கழிவிரக்கங் கொண்டு, "ஐயகோ! இவர்கள், பிறவி நோயால் பிணிக்கப்பட்டு, இறப்பதற்கும் மீண்டும் பிறப்பதற்குமே ஆளாகின்றார்களே!" என்று அருள் ததும்பப் பாடுகின்றார் அப்பர் பெருமான்:

"திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்.............
இறக்கின் றாரே!"

இவ்வாறு நூலின் பல்வேறிடங்களிலும் 'நமசிவாய' எனும் மந்திரத்தின் சிறப்புக்களை நாவாரப் பாடும் நாவரசர்,

"...... *சிவாயநம* வென்னும் சிந்தைச் சுருதிதனை!"

எனச் 'சிவாயநம' என்னும் திருவைந்தெழுத்தையும் சுட்டுகின்றார்.

இவ்இயலில் மேலே குறிக்கப்பட்ட 'சரியை' முதலான 'நால்வகை நெறிகள், சிவோகம்பாவனை, திருவைந்தெழுத்து' ஆகியன குறித்துச் சம்பந்தர் முதலான அருளாளர்கள் பலரும் பாடியுள்ளனர். அவற்றுள் ஒருசில மட்டும் இவண் தரப்படுகின்றன:

"காவினை இட்டும் குளம்பல தொட்டும்....
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும்!"

"புந்தியினால் மறைவழியே புற்பரப்பி
நெய்சமிதை கையிற் கொண்டு"

"ஐம்புலன்கள் செற்று.... தனித்திருந்து தவம்புரியும்"

"ஒண்சுடர் ஞான விளக்கினை ஏற்றி"

28. திருக்கோயில் வழிபாட்டில் நாவுக்கரசர்

ச. குருஞானாம்பிகா, இராசபாளையம்.

அறவாழ்வையும், சமயவாழ்வையும், தனிமனித வாழ்வையும், பொதுமக்கள் வாழ்வையும் அறத்தின் அடிப்படையில் நேர்ந்த முரண்பட்ட வாழ்வையும் நடுநின்று இணைக்கும் வாழ்வைப் பேரற வாழ்வாய் அமைத்துக் காட்டியவர் திருநாவுக்கரசுப் பெருமகனார். அப்பரடிகள் ஆரூர்ப்பெருமானிடம் தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் வேண்டும் எனக் கேட்டு, திருத்துருத்தியில் தம்மைத் தொண்டனேன் என்றே அழைத்துக் கொள்ளும் நிலையில் நின்று தம்முடைய இறுதிக்காலத்தில் திருப்புகலூரில் உழவாரப்பணி செய்யும் போது தம்மை இமையறவு படுத்து வந்த அரம்பையர் முதலாயினோரை நோக்கித் தம்முடைய நிலையைக் கூற முற்படும்போது ஆரூர் அனுபவத்தையே கூறி இறுதியில் பூம்புகலூர் இறைவனைப் புண்ணியன் என்றே நிறுத்தி அவன் திருவடியில் சென்று இணைந்தவர். ஆரூர் முதலாகப் புகலூர் இறுதியாக அமைந்த உயிரோட்டக் கருத்து புனிதப் பேறு என அப்பரடிகளால் கருதப் பெற்ற புண்ணியம் என்பது திருக்கோவில் வழிபாட்டோடு இணைந்த தொண்டாற்றும் பணியாகும். அன்பு ஆலிக்குமாறு கண்டின்புறல் என்ற முறையில் தம்மைத் தம் உயிரினுள் நின்ற அருளோடும், தம் உடம்பை, எண்ணின் அடிப்படையில் அமைந்த பரம்பொருளுடனும் முறையே அடிமையும் உடைமையும் ஆக்கி, நிறுத்திய வகையில் அமைந்த பயனாகத் திருக்கோயில் வழிப்பாட்டைப் புண்ணியக் கொள்கையாக ஏற்று ஆற்றிய பணி இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

நாவுக்கரசரால் அறியப்பெற்ற திருக்கோயில்கள்

பூங்கோயில்

திருவாரூர்த் தலத்து இறைவனுக்குரிய கோயிலின் பெயர் பூங்கோயில். திருமூலட்டானம் என்ற பெயரும் அக்கோயிலுக்குண்டு. இறைவன் பெயர் புற்றிடங்கொண்டான் மூலட்டானன் என்பன. அம்மையின் பெயர் அல்லியம் பூங்கோதை அம்மை.

தேவசபை

பூங்கோயிலில் உள்ள தேவசபையில் எழுந்தருளி இருப்பவர் தியாகேசர் இவர் சந்நிதியில் நந்திதேவர் நன்ற கோலத்தர், திருவாரூர்

உடையார், வீதிவிடங்க மாதேவர் எனவும் இவர் அழைக்கப்பெறுவார். அம்மையின் பெயர் திருக்காமக்கோட்டமுடைய நாச்சியார். பங்குனி உத்திர பெருவிழாவும் ஆதிரை விழாவும் இவருக்கு உரியவைகளே. மனுமுறை கண்ட சோழன் வீதிவிடங்கன் ஆகியவர்களை உள்ளிட்ட அருளிப்பாடு இவருக்குரியதே.

ஆரூர் அரநெறி

திருவாரூர்ப் பூங்கோயிலிலேயே இரண்டாம் திருச்சுற்றில் தென்கிழக்குத் திசையில் மேற்கு முகம் நோக்கிய கோயில். இறைவன் பெயர் அகிலேசர். உமையின் பெயர் அகிலேஸ்வரி. இக்கோயிலுக்கு அப்பரடிகள் பதிகங்கள் மட்டுமே இரண்டு உள்ளன. அரநெறி என்பதற்கு அரன்நெறி, சிவநெறி எனப் பொருள் கொண்டு, அரநெறி என்பது கோயிற் பெயரெனக் கொள்வர். அறநெறி என்பதே தவறுதலாக அரநெறி என அமைந்து விட்டதாகக் கொண்டு அறநெறி என்பதே அத்தலத்தின் அமைப்பு எனவும் கொள்வர்.

அரநெறியர் தீ நிறத்தார் என்பது அப்பரடிகள் அனுபவம். அரநெறி யீசனே அருள் மன்னர் என்றும் அவரது வலக்கரத்தமைந்த தீயானது நெருப்பை வீசுவதற்குப் பதிலாக அருட்கதிர் வழங்குவது என்றும் இவரே அம்ச மந்திரம் சொல்பவரும் அசபா நடனம் ஆடுபவரும் ஆகிய தியாகேசர் என்றும் கொள்வது அப்பரடிகளின் அனுபவ விளக்கம், நமிநந்தியடிகள் தண்ணீர் விளக்கு எரித்தது இங்கேதான் அசலேசம் என்ற பெயரும் இதற்குண்டு.

பரவையுண் மண்டளி

சுந்தரர் மனைவியாகிய பரவையார் தம்முடைய மாளிகையின் ஒரு பகுதியில் மண்ணாற் சிறுகோயில் கட்டி வழிபட்டார். அதுவே பரவையுண் மண்டளி எனப்பெற்றது. இது தற்போது தெற்குக் கோபுரத்துக்கு அண்மையில் உள்ளது. சுந்தரரின் பதிகம் கண்டு ஒருகாலத்தே வருணன் இந்நகர் மீது அனுப்பிய கடல் இவ்வூரை அழிக்க முற்படும்போது அதனை உண்மை பற்றி இப்பெயர் வந்தது என்று கூறுவதும் உண்டு.

இறைநிலையை அன்பெனக் கொள்ளுதல்

அம்மையப்பர், தாய்தந்தை எனக் காணப் பெற்ற ஒன்று ஆலிக்கும் அன்பைப் பெருக்குவது காரணமாக உயிரில் அருளை உண்டாக்கும். அப்போது இல்லறத்தாருக்கு அமைந்த அம்மையப்பர் எனவும் தாய் தந்தை எனவும் நின்ற நிலையைக் கடந்த ஒன்று தோன்றும். அதனையே அது எனக் காணும் நிலை உண்டாகும். அது என்பது முதலில் அம்மையப்பர் என இணைத்துக் கண்டு பின்னர் அலி எனவும் அமைக்கலாம் எனத் தோன்றும். அந்நிலையில் இல்லறத்தானாக நின்ற அவன் உயிரில் பெற்ற பொருளில் எல்லாப் பொருளும் வந்து அடங்குவதாகத் தோன்றும்.

இதனைத் திருநாவுக்கரசர் தில்லைக் காட்சியில் குறிப்பிட்டு நின்னில் அனைத்தும் இலயம் ஆவதாக ஓர் அனுபவம் அமையும் என்கிறார். அந்நிலையை அப்பரடிகள் விளக்கும் நிலை அற்புதமானது. ஆணும் பெண்ணும் அல்லா அலியும் இல்லை என்பதாக அமையும். இருப்பது எனத் தோன்றிய எல்லாம் இல்லை என்பதாகவும், எல்லையில் இருமையை இணைத்த ஒன்று எனத்தோற்றிய அனுபவம் பின்னர் இருவினையை மறுத்து, பின்னர் அந்த இணைப்பையும் மறுத்து உடன்பாடு எதிர்மறை என்ற இரண்டையும் தன்னுள்ளே மறைத்து மேல்நின்ற ஒருமையாய் அது எனப் பெறுவதாய் நிற்கும். இந்நிலையில் அவன் அவள் என நின்ற இருமைகளை இணைத்த அவர் என நின்றது ஒருவகை. அவை எல்லாம் தன்னுள் அடக்கிய அல்லாத திணையாக அது என நிற்றல் முன்னுள்ள அவர் என்ற நிலையையும் கடந்த நிலை அல்லாத திணை ஆண் என்பதை மறுத்து பெண் என்பதை மறுத்து மேல் நின்ற நிலை என்பதே அது என்பது, அனைத்தையும் மறுத்துக் கடந்த 'தூ' என்பதை அல்திணை என்பர் துற்றிக் கடந்த 'தூ' என்பதும் 'அது' என்பதும் ஒன்று.

இவ்அனுபவம் திருநாவுக்கரசருக்குத் தில்லையை அடுத்த திருக்கழிப்பாலையிலும், திருவொற்றியூரிலும் அமைந்தது.

''விண்ணானாய் விண்ணவர்கள் விரும்பிவந்து
வேதத்தாய் கீதத்தாய் விரவி, பொங்கும்
எண்ணானாய் எழுத்தானாய் கடலே வானாய்
இறையானாய் எம்மிறையே என்று நிற்கும்
கண்ணனாய் காரானாய் பாரும் ஆனாய்
கழிப்பாலை உள்நிறையும் கபாலப்பனார்''

என்ற தாண்டகத்தாலும்,

''மண்ணல்லை விண்ணல்லை வலய மல்லை
மலையல்லை கடலல்லை வாயு வல்லை
எண்ணல்லை எழுத்தல்லை எரியு மல்லை
இரவல்லை பகலல்லை யாவு மல்லை
பெண்ணல்லை ஆணல்லை பேடுமல்லை
பிறிதல்லை ஆனாயும் பெரியாய் நீயே
உள்நல்லை நல்லார்க்குத் தீயை அல்லை
உணர்வரிய ஒற்றியூர் உடைய கோவே''

என்ற தாண்டகத்தாலும் அமைத்துக் கொடுத்த அப்பர் வாக்குக்கள் மூலம் அறியலாம்.

உயிர் உடலும் - தெய்வ ஆலயமும்

தமிழகத்தில் கோயிலும் குடிகளும் ஒப்ப நின்ற நிலையின் அமைந் துள்ளன. கோயிலில் உள்ளவனும், அவ்வூரில் குடியுரிமை தழுவி நின்றவனும் ஒத்தநிலையினரே, தொண்டு செய்பவன், ஏற்பவன் என்ற தனிநிலை

வேறுபாடுகளைக் கடந்து தொண்டில் நின்றவர்க்ளே அதனைத் தெளிய உணர்த்தும் நின்றவர்களை அதன்னைத் தெளிய உணர்த்தும் சொல்லே மூலட்டானன் என்பது. மூலட்டானனின் ஏற்றமிகு செல்வத்தைக் குறிப்பது பூங்கோயில். ஆரூர் இறைவனை புற்றிடங் கொண்டவனாக மூலட்டானனாகப் பார்த்தல். பின்னர் ஒருவன் தம்மையும் அவ்வாறு காணலாம், ஐவாய் அரவு வாழ்புற்று எனத் தம் உடம்பை நினைத்து அந்நிலையில் புற்றிடங் கொண்டான் எனத் தம்மைக் கருதலாம். பின்னர் மூலாதாரம் எனப்பெறும் இடத்தில் தாம் வாழ்வதாக நினைத்தால் புற்றிடங்கொண்டான் என்பது மூலட்டானன் என மாறுவதாய் அமைக்கலாம். பின்னர் மூலட்டானனே பூங்கோயில் என விளக்கம் பெறுகிறது. அவ்வாறே உயிர் நின்ற இடம் முதலில் புலால் துருத்தியே. அதுவே புற்றிடம். பின்னர் மூலட்டானம் என்ற மாற்றம் பெற்றது. பிறகு புலால் துருத்தியே பூந்துருத்தியாகிறது. இத்தகைய மாற்றம் நிகழக் காரணம், அன்பே அருளாகப் பெருகின்ற நிலை அறிவின் பெருக்கோ, ஆற்றலின் விளைவோ அவைகளை இணைத்த ஒன்றோ அன்று.

ஆர்தலும் ஊர்தலும் இணைந்த ஆரூர்

பரம்பொருள் ஏனைய பொருட்களுடன் கலந்து நிற்கும் நிலைகள் இரண்டு. ஆர்தல், ஊர்தல், பற்றி அமர்தல், ஏற்றி ஊர்தல் இவையிரண்டும் இருவேறு நிலைகள் இருவேறு நிலைகளை இணைத்து அனுபவப் படுத்துவதே ஆரூர். இரு வேறுநிலைகளும் ஆரூர் விழாக்களில் அமைந்துள்ளன.

ஆர்தல் - அமைதல் பற்றப்பெறும் பொருட்களைத் தன்னுள் அடக்கிக் கடந்து நிற்றல். ஊர்தல் என்பது பொருளை ஏற்றி அப்பொருள் உயரும் நிலைகள் எல்லாவற்றிலும் ஏற்றி பின்னர் அப்பொருளைவிட உயர்ந்து நிற்கும் நிலையாகும்.

வாய்மூர்க் காட்சி

திருநாவுக்கரசர் ஆரூரிலிருந்து திருப்புகலூர் எய்துகின்றார். ஆரூரி லிருந்து மீண்ட திருஞானசம்பந்தருடன் அப்பரடிகளும் இணைந்து திருத்தல யாத்திரை மேற்கொள்ளுகிறார்கள். அப்பொழுது அமைந்தனவே வீழிமிழலைப் படிக்காசும், திருமறைக்காட்டுத் திருக்கதவம் திறத்தலுமாகும். நேர்நின்று வழிபடுவதற்குக் கதவு திறக்கவேண்டும். கண்ணினால் உமைக் கண்டு வணங்கக் கதவு திறக்க வேண்டும். இவை இரண்டிற்கும் அப்பால் கதவு திறக்க என்பதை மட்டுமே அமைத்துக் கூறுவது மேலே கூறப் பெற்ற மூன்றனுள், கதவு திறக்க வேண்டும் என்ற பொது அடிப்படையில் பாடிய பாடல்களே ஏழு உள்ளன. கண்ணினால்

உமைக்காணக் கதவு திறக்க வேண்டும் என்பதை 3 பாடல்களிலும் அடியவர்கள் வந்து வணங்குவதற்கு என ஒரு பாட்டிலும் அமைக்கின்றார்.

பழையாறையும் பைஞ்ஞீலியும்

திருப்பழையாறை வடதளி என்பது தலத்தின் பெயர். திருக்கோயில் விமானம் மட்டுமே காணப்பெற்றது. உள்ளே சிவலிங்க திருமேனியை மறைத்துவிட்டு, அதனைச் சமணத் தெய்வக்கோயில் என்றனர். இக்கோயிலினுள் சிவபெருமான் திருமேனியைக் காணாமல் போகேன் என்று அங்கேயே உண்ணா நோன்பு மேற்கொண்டார். இறைவன் சோழமன்னன் கனவில் தோன்றிச் செய்தியைக் கூற, அரசனும் சமணர் மறைத்திருந்த சிவலிங்கத்தை வெளிப்படுத்தினார். உண்ணா நோன்பு என அப்பரடிகள் கூறுகிறார். அந்தண்மை என்பது எங்கேனும் ஓர் உயிர் துன்புறுமேயானால், நம்உடல் உள்ளத்தில் திருவருளால் அசைவு உண்டாதல். ஒருவகைச் சோர்வு உண்டாகும். அப்பரடிகள் ஆனைக்கா முதலிய தலங்களை வணங்கித் திருப்பைஞ்ஞீலிக்கு அருகே செல்லும் போது அத்தகைய அசைவு உண்டாயிற்று. அப்போது இறைவன் வழியில் இறைவன் சோலை குளம் அமைத்துக் கொண்டு பொதிசோறுடன் அந்தணக் கோலத்துடன் இருந்தார்.

திருவருள் என எண்ணிய அப்பர் அவ்விடத்தே அந்தணரளித்த பொதி சோறு அருந்தி இளைப்பாறினார். பின்னர் அவரை நீர் யாவீர் என்று வினவ அந்தணரும் திருப்பைஞ்ஞீலி செல்வதாகக் கூற இருவரும் இணைந்து செல்ல, திருப்பைஞ்ஞீலியை அண்மியதும் அந்தணர் மறைந்தார்.

ஐயாற்றில் வெளிப்பட்ட அனுபவம்

திருநாவுக்கரசரின் தொண்டைநாட்டு யாத்திரை மெல்ல மெல்ல வளர்ந்து திருக்கயிலை யாத்திரையாக மலர்ந்து விடுகிறது. கல்லே புணையாகக் கடல்நீந்திய நாவரசர் ஆர்வமே கோயிலாக அருங்கடம் கடக்கிறார். நன்மையைப் பெருக வைப்பது அருள் நெறி தீமையைப் பெருமுயற்சி கொண்டு அழிப்பதைவிட நன்மையை இயல்பாக இடையறாது வளர்த்தால் அதன் வளர்ச்சியே தீமையை அழித்து விடும் என்பது ஒருவகை. சதுரப்பாட்டுக்கலை. அக்கலையின் வல்லவராகிறார் வித்தகரா கிறார் அப்பரடிகள்.

கயிலைக் காட்சிகாண வேண்டுமென்ற ஆர்வத்தில் அவரது கால்கள் தேய்ந்தன. ஊன்றி நடந்தமையால் கைகள் தேய்ந்தன. ஊர்ந்து சென்றமையால் மார்பு தேய்ந்தது. உருண்டு சென்றமையால் உடற்சதைகள் ஒட்டுமொத்தமாய்த் தேய்ந்தன. ஆர்வப் பெருக்கு உதிரப்பெருக்காய்த் தசையைத் தேய்த்தது. இறுதியில் உடல் செயலற்றுக் கிடந்தது. அப்போது அங்கே நீற்றுக் கோலத்துடன் பொய்கை ஒன்றை அமைத்துக்கொண்டு

அந்தணர் ஒருவர் நின்றார். செயலற்றுக் கிடக்கும் அப்பரடிகளிடம் நத்தம் போல் கேடும் உளதாகும் சாக்காடும் அமைத்து வரலாறு படைத்த வித்தகரிடம் இங்கு ஏன் வந்தீர் என்று கேட்க, 'அடிமை நான் என்னுடைய ஆண்டான் உமையுடன் திருக்கோயிலில் எழுந்தருளி யிருக்கும் கோலத்தைக் கண்ணாரக் கண்டு கும்பிட வேண்டும் என்ற ஆர்வத்தால் வந்தேன் என்றார். மானிட உடல் கொண்டு அங்கே போதல் இயலாது என்று அந்தணர் கூற, கயிலைக் கோலம் கண்டு வணங்கியல்லாது மாளும் உடல் கொண்டு மீளேன் என்றார் அப்பரடிகள்.

'ஓங்கும நாவினுக்கு அரசனே எழுந்திரு' என்ற ஒலி கேட்டது. வான் நிலவு மெய்மை மொழிகேட்ட அனுபவம் அப்பருக்கு முன்னும் உண்டு. இப்போது வந்த ஒலி வானின் ஒலியன்று. விண்ணில் மறைந்து நின்ற இறைவன் எழுப்பும் பேச்சொலி இது.

"அண்ணலே எனைஆண்டு கொண்டருளிய அமுதே
விண்ணிலே மறைந்து அருள்புரி வேதநாயகனே
கண்ணினால் திருக்கயிலையில் இருந்து நின்கோலம்
நண்ணிநான் தொழநயந்து அருள் புரிக"

என்பது சேக்கிழார் வாக்காக வெளிப்படும் அப்பரடிகள் வேண்டுகோள்.

பூந்துருத்தியும் புகலூரும்

திருக்கயிலைக் காட்சி அனுபவத்துக்குப் பின்னர் அப்பரடிகள் திருப்பூந்துருத்தியில் தங்கி இருக்கின்றனர். திருமறைக்காட்டில் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் விடுத்த ஆட்கள் வந்து ஞான சம்பந்தரை அழைத்தபோது, ஞான சம்பந்தர் அப்பரடிகளிடம் அச்செய்தியைச் சொல்ல அப்போது வாகீசர் 'பிள்ளாய்' என விளித்து, 'போகலாகாது' என்று தடை செய்ததாக வழக்கிலிருந்த செய்தியைச் சேக்கிழார் அமைத்துக் காட்டியுள்ளார்.

துருத்தி என்பது நெருப்பை விரிவுபடுத்தும் காற்றுப்பை. ஆற்றின் நடுவில் இருக்கும் திட்டும், துருத்தியே புலால் துருத்தியாக இருந்த உடம்பைப் பூந்துருத்தியாகத் தொண்டினால் மாற்றினார். இரண்டு பக்கமும் ஆறு செல்ல இடையில் இருக்கும் வெண்மணல் திட்டைப்போல உடலுக்கும் உயிருக்கும் இடையே பரம்பொருளை அமைத்துத் தொண்டு செய்தலால் அவர் திருப்பூந்துருத்தி என நின்றார்.

திருப்பூந்துருத்தியில் அப்பரடிகளின் திருப்பதிகங்கள் அம்மையப்பன் என்ற இருமையைக் கடந்த அண்ணல் என்னும் அற்புதத் திருவென நின்ற பாகத்திறைவனை நேரே எடுத்து விளக்கும் நிலையுடையனவாக உள்ளன. இருமை கடந்த ஒருவனை அப்பரடிகள் பொய்யிலி, புனிதன் என்ற சொற்களால் குறிப்பிட்டு அவன் சேவடிக்கீழ் நாம் இருப்பது என்றும் யாம் அடிப் போற்றுவது என அவனையே குறிப்பிட்டுக் காட்டுவாராயினர்.

29. நாவுக்கரசர் சுட்டும் புராணச் செய்திகள்

தே.ச. குருநாதன், சென்னை.

புராணச் சிறப்பு

திருமுறைகள் சிவபெருமானது முழுமுதற்றன்மையையும் அடியார் களுக்கு அவன் அவ்வப்பொழுது தோன்றி அருள் செய்த பேர் அருளையும் இனிது விளக்கி அவனிடத்தில் அன்புவிளையச் செய்வன. ஆகவே அவை தோத்திரங்களாய் அமைந்தனவாகும். சைவ சமயத்திற்குத் தோத்திரம் சாத்திரம் என்னும் இருவகை நூல்களும் இரண்டு கண்களாய் அமைந்துள்ளன தோத்திரங்கள் இறைவனிடத்தில் அன்பை விளைவிப்பன. சாத்திரங்கள் அவனைப் பற்றிய அறிவை உண்டாக்குவன. அறிவின் பயன் அன்பேயாகும். ஆகவே அன்பை விளைவிக்கும் தோத்திரங்கள் சாத்திரங்களினும் மேலானவையாய்த் திகழ்கின்றன.

தோத்திரம் என்பது புகழ்மாலை. இறைவனைப் பற்றிய புகழ் மாலைகள் தோத்திரங்களாகிய திருமுறைகள். ஏனையோரைப் புகழும் புகழ்ச்சிகளெல்லாம் முகமனுரையாகக் கூறுவன. சிறிது இருப்பதைப் பெரிதாகப் புனைந்துரைப்பன. இறைவன் புகழ் அவ்வாறின்றி உண்மையையே எடுத்துக் கூறுவதாகும். மற்றும் உள்ளதை முழுதும் கூறமுடியாதபடி அவனது புகழ் அளவிறந்துள்ளது அதனை எத்தகையோரும் ஒரு சிறிதே கூற முடியும். இறைவனது புகழின் தன்மையைப் "பொருள்சேர் புகழ்" என்று திருவள்ளுவர் குறித்தருளினார்.

பிறரைப் புகழ்வதால் உடல் நலத்துக்கு வேண்டியவைகளையே சிறிது பெற்றுச் சிலநாள் வாழ்தல் கூடும். இறைவனது பொருள் சேர் புகழைக் கூறுவதால் பிறவித்துன்பத்திற்குக் காரணமாகிய இருவினைகளும் நீங்கி உயிர் நலம் பெற்று அந்தமில் இன்பத்தில் நீடு வாழலாம்.

'இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு' (குறள் - 5)

என்பது திருவள்ளுவர் திருமொழி.

இறைவனது பெருமைகளில் அவன் அவ்வப்பொழுது ஆங்காங்கு வேண்டிய உருவத்தில் தோன்றி வேண்டுவார் வேண்டியவற்றை அருளிய அருள் நிகழ்ச்சிகள் தொன்று தொட்டு என்றும் நிகழ்ந்து வருவதால் அவ்வரலாறுகள் புராணம் எனப்படுகின்றன. ஆகையால் தோத்திரங்

களாகிய திருமுறைகளில் புராண வரலாறுகளே பெரும்பான்மையாகக் காணப்படுகின்றன.

புராணம் என்பது பழைய வரலாறு எனப் பொருள் தரும். ஆயினும் அது கடவுள் வரலாற்றையே குறிக்கும். வேதம் முதலிய கலைகளிலும் புராணங்கள் சிறப்புடையன என்பது ஆன்றோர் துணிபு. 'சிறப்புடைய புராணங்களே' என்றார் அருணந்தி சிவாசாரியார்.

வேதத்தின் நுண்ணிய பொருள்களே யாவரும் தெளிய உணருமாறு செய்வன புராணங்கள். அதனால் புராணத்தை நன்கு உணர்ந்தவர்களே வேதத்தின் பொருளையும் நன்கு உணர்தல் கூடும்.

மேற்குறித்த திருக்குறளினால் புராண வரலாறுகள் சிறப்புடையன என்பது திருவள்ளுவருக்கும் கருத்தாதல் விளங்கும். அவ்வகையில் திருநாவுக்கரசரது திருமுறைகளில், புராண வரலாறுகளும் பிறவும், விரிவாகவும் தெளிவாகவும் பல இடங்களில் அருளப்படுகின்றன. அத்தகைய இடங்கள் சிலவற்றை உணர்தல் பயன்தருவதொன்றாம் என்னும் கருத்தால் இவ்வரலாறுகள் கீழே தரப்படுகின்றன.

(திருமுறை - 6, ப. 134-6)

அருச்சுனற்குப் பாசுபதம் தந்தது!

பஞ்சபாண்டவர்களில் ஒருவன் அருச்சுனன். நாட்டையிழந்து வனவாசம் செய்யும் பொழுது 'பாசுபதாஸ்திரம்' பெறுவதற்காச் சிவனை நோக்கித் தவஞ்செய்தான் அருச்சுனன்.

அப்பொழுது துரியோதனனால் ஏவப்பட்ட மூகன் என்னும் அரக்கன், பன்றியுருக்கொண்டு அருச்சுனனைக் கொல்ல வந்தான். அருச்சுனன் அப்பன்றியைக் கொல்ல முயலுகையில் பெருமான் வேடருருக்கொண்டு வந்து எதிர்த்தார். அவரால் துன்புற்று வருந்திய அருச்சுனன், பெருமான் உண்மையுருக் காட்டக் கண்டு வணங்கி வரமும் பாசுபதாத்திரமும் வேண்டிப் பெற்றான். இந்நிகழ்ச்சியைச் சுவாமிகள், (திருமுறை - 6, ப. 136)

''வேடனாய் விசயன்தன் வியப்பைக் காண்பான்
வில்பிடித்துக் கொம்புடைய ஏனத்தின்பின்
கூடினார் உமையவளுங் கோலங் கொள்ளக்
கொலைப் பகழி உடன் கோத்து'' (6-83-5)

பாசூரிற் பொருந்திய பரஞ்சுடரைத் தமது திருவிளையாடலின் நிலையை உணர்ந்து வியக்கும் விசயனது மருட்கையைக் காணவேண்டி 'உமையவளும் வேட்டுவக் கோலம் கொள்ளத் தாமும் ஓர் வேடனாய் வில்லை ஏந்திக் கொலையிற் பழகிய பகழியையும் வில்லிற் கோத்துக் கொம்பினை யுடைய பன்றியைத் தொடர்ந்து சென்று கொடிய பூசலைச் செய்தவர் ஆகவும், காளி காணப் பெருங்கூத்தினை ஆடினர் ஆகவும் விளங்கினார். விசயன் வியப்பு - தமது திருவிளையாடலின் நிலையை உணர்ந்து வியக்கும்

வியப்பு; இதனைக் காணவிரும்பியது, அவனுக்கு (விசயனுக்கு) வரும் தீங்கினையறிந்து அவனைக் காக்க விரைந்த தமது முற்றறிவு பேரருளோடு பேராற்றலையும், அத்தீங்கினை யறியாத தனது சிற்றறிவோடு சிறிதாய ஆற்றலையும் அவன் உணர்ந்து, மேலும் மெய்யன்பு செய்து உய்தற் பொருட்டு, பன்றியின் கொடுமையை உணர்த்துவார் ''கொம்புடைய ஏனம்'' என்றருளினார். நிராயுதத்தது அன்று என்பது நயம். கோலம் வேட்டுவக்கோலமே. 'உமையும் வேட்டுவக் கோலங்கொண்டு உடன் சென்றாள்' என்பது வியாச பாரதத்தினுங் கூறப்பட்டது. இதனைத் தமிழில் வில்லிபுத்தூரார் தெரிவித்தது ஓர் நயம் மிக்க பாட்டு; அஃது,

'ஓரேனம் தனைத் தேட ஒளித்தருளும் இருபாகத் தொருவன் அந்தப் போர் ஏனந்தனைத்தேடிக் கணங்களுடன் புறப்பட்டான் புனங் களெல்லாம் சீர் ஏனல் விளைகிரிக்குத் தேவதை யாங்குழவியையும் செங்கை ஏந்திப் பார் எனை உலகனைத்தும் பணிவுடனே புகழ்ந்திடத் தன்பதி பின்வந்தாள்'' என்பது. வந்தவள் ''வரையரசன் திருமடந்தை'' என, அவள் வேட்டுவிச்சிக் கோலங்கொண்டமையையும் மற்று எண்ணிறந்த மாதர் அவளைச் சூழ்ந்து நின்றமையையும் அணிந்துரைக்கும் முன்னைப் பாட்டினுள் இனிது விளங்கக் கூறினார். அம்மையோடு எண்ணிறந்த பெண்டிரும் சென்றனர் என்பது வியாசபாரதத்துட் கூறப்படுவது. இவ்வாறு முதனூலை வழிநூல் இலக்கணம் பிழையாது மொழி பெயர்த்து அதர்ப்பட யாத்த செய்யுள்களில், நயம் கருதித் தொன்மை வரலாறு ஒன்றனை ஆண்டுத் தந்துரைப்பாராய், 'ஓர் ஏனைந்தனைத் தேட ஒளித்தருளும் இருபாதத்து ஒருவன்'' எனக் கூறிய அவ்வொன்றனையும் கேட்கப்பொறாத சிலர், மேற்காட்டிய செய்யுளையே தம்பதிப்பில் ம்றைத்துப் பதிப்பித்தனர்; முன்னைப் பெருநூல்களில் இவ்வாறு சிலவற்றை மறைத்தலும், புகுத்தலும், திரித்தலும் செய்தல் அவர்க்கு இயல்பு என்க (தி.மு. 6, ப. 1162 - 1163).

மேலும் (4-50-1) தேவாரத்தில், ''அருச்சுனற்கம்பும் வில்லும் துடியுடை வேடராகித் தூய மந்திரங்கள் சொல்லிக்கொடி நெடுந்தேர் கொடுத்தார்.'' பெருமான் துடி என்னும் பறையை ஒலிக்கும் வேடர் வடிவினராய் அருச்சுனனுக்கு பாசுபத அத்திர பிரயோகத்துக்குரிய தூயமந்திரங்களை உபதேசித்து அம்பும், வில்லும் கொடிகள் உயர்த்தப்படும் தேரும் வழங்கியுள்ளார். (திருமுறை - 4, ப. 775)

வெள்ளையானையும் சிலந்தியும் வழிபட்டது

சூரபன்மன் முதலான அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் போர் நிகழ்ந்தபோது தந்தங்கள் ஒடியப்பெற்ற வெள்ளையானை (ஐராவதம்) திருவெண்காட்டை அடைந்து சிவலிங்கம் தாபித்து வழிபட்டது. பெருமான் அருளால் தந்தங்கள் மீண்டும் வளர்ந்தன. இவ்வரலாற்றை நாயனார் ''வித்தகத்தால் வெள்ளானை விள்ளாஅன்பு விரவியவா கண்டதற்கு வீடு காட்டி'' (6-83-6) என்று குறிப்பிட்டுள்ளார். வெள்ளானை திறலும் வித்தகமும் உடையதாய்ச் செய்த அன்பானது, சிலந்தி செய்த வாய்நூற்

பந்தர் எச்சில் முதலிய இழிவுகளையுடையது எனக் கருதி அதனை அழித்தொழித்துத் தூயநீரினால் ஆட்டி வழிபட்டமை (தி.மு. 6. ப. 153) இந்த திருப்பாட்டிலேயே பரஞ்சுடரைப் பெற்ற ஞானத்தினால் உயர்சிலந்தி தன் வாயிலிருந்து வரும் நூலால் மக்களால் செய்யலாகாத பந்தலை இயற்றி அதனைச் சருகால் மூடிய திருத்தொண்டைச் சிந்தித்து செய்தமையால் மறுபிறவியில், கோச்செங்கண்சோழ அரசனாகி சிவபிரானுக்குப் பல இடங்களில் யானை புகாத மாடக்கோயில்களைக் கட்டியும் சிறந்த தொண்டு செய்தமையால் சிவகணங்களுள் புக்கு இன்புறுமாறு சேர்த்தருளினார். (திருமுறை - 6, ப. 1164).

முயலகனையடக்கியது, சலந்தரனை அழித்தது

தாருகவனத்து முனிவர்கள் சிவபெருமானைக் கொல்ல ஆபிசாதர யாகஞ்செய்ய அதில் எழுந்த பூதன் முயலகன். இவன் சிவபெருமானிடம் தன் உக்கிரமான வடிவுடன் வர, பெருமான் இவன் முதுகில் திருவடியூன்றி மிதித்து நடமாடி இடுப்பை யொடித்தான். ''அடங்காத முயலகனை அடிக்கீழ் கொண்டார்'' (6-96-3). ''தருக்கழிய முயலகன் மேல் தாள் வைத்தானைச் சலந்தரனைத் தடிந்தோனை'' (6-90-9). (திருமுறை - 6, ப. 151)

சலந்தரனை அழித்தது

தேவேந்திரன் இறுமாப்புடன் கயிலையை அடைந்தான். பெருமான் பூதவுருவில் அவன் எதிரில் தோன்றினான். இந்திரன் தனது வச்சிராயுதத்தைப் பூதத்தின் மீது எறிந்தான். பூதவுருக்கொண்ட பெருமான் தமது சீற்றத்தைக் காட்டி இந்திரன்வேண்டுகோட்படி, சினத்தைக் கடலில் விடுத்தார்.

அது குழந்தையுருவில் வளர்ந்தது. அக்குழந்தை ஜலத்தால் தாங்கப் பெற்றதால் சலந்தரன் எனப் பெயர் பெற்றது. சலந்தரன் பிரமனை வேண்டி வரம்பெற்றுத் தேவர்களைத் துன்புறுத்திப் பலரையும் வென்று கயிலைக்குப் போர்க்குச் சென்றனன். பெருமான் கிழவேதியராய்த் தோன்றி, 'எங்குச் செல்கின்றாய்' என வினவியறிந்து, பூமியில் வட்டமாகக் கோடு கிழித்து, இதைப் பெயர்த்து எடு என்று கூறினார். அவ்வாறே பெயர்த்து எடுத்துத் தலையில் வைத்தான். அதுவே சக்கரமாகி அவன் உடலைக் கிழித்து அழித்தது. இப்புராண வரலாற்றை ''நேமி வான்படையால் நீளுரவோன் ஆகங்கீண்டானை (6-54-1) என்று சுவாமிகள் குறித்துள்ளார். (தி.மு. 6, ப. 141-2)

சிவபெருமான் நஞ்சுண்டது

தேவர்களும் அசுரர்களும் ஒன்று சேர்ந்து போர் செய்கையில் இருவர் பக்கமும் எண்ணில்லாதவர் இறப்பது கண்டு போரினை விடுத்தனர். பின்னர் அளவற்றகாலம் உயிர் வாழக் கருதி நான்முகன், திருமால் இவர்களை வேண்டி, அமுதுண்ணத் திருப்பாற்கடலை, மந்தரமலையை மத்தாகவும், வாசுகியைக் கயிறாகவும் கொண்டு தேவர்களும் அசுரர்களும் கடைந்தனர்.

கடலைக் கலக்கக் கயிறாகப் பயன்பட்ட வாசுகி பொறுக்கலாற்றாது விடத்தைக் கக்கியது. அதற்கு அஞ்சிய திருமால் முதலிய தேவர்கள் கயிலையில் வீற்றிருந்தருளும் கண்ணுதற் பெருமானை வேண்ட, பெருமான் அணுக்கத் தொண்டராகிய சுந்தரன் மூலம் விடத்தைக் கொணர்ந்து அருந்தித் தேவர்களையும் உலகங்களையும் காத்தான். இதனைச் சுவாமிகள் 4-65-2; 5-53-6; 6-99-2; முதலிய இடங்களில் கூறியிருக்கிறார். (திருமுறை - 6, ப. 142-3)

சிவபெருமான் வீணை வாசித்தது

இறைவன் திருக்கயிலையில் வீற்றிருந்தருளிய பொழுது, தும்புரு, நாரதர், சுகர் முதலிய முனிவர்கள் இசையறிவையடையவும் சாம கீதத்தை வீணையில் இசைக்கவும் அருள்புரிய வேண்டுமென வேண்டினர். அவ்வாறே இசையை அருள்புரியும் பெருமான், நால்வகை இசைக் குற்றத்தையுண்டு பண்ணும் மரங்களை நீக்கி, நன் மரங்களால் செய்யப் பட்ட நால்வகை யாழ்களிலும் அவ்வவற்றுக்குரிய நரம்புகளைத் தொடுத்து எண்வகையான இசைகளைப் பாடவேண்டும் என்று திருவாய் மலர்ந்தருளினார். அதற்கடையாளமாகத் தாமே யாழ் ஏந்தி இசையெழுப்பி யருளினார். (தி.மு. 6, ப. 143) (4-112-7). ''பெருங்கடன் மூடிப் பிரளயங்கொண்டு''. பெரியகடல் இவ்வுலகை மூட ஊழிவெள்ளம் ஏற்படப் பிரமனுடைய சத்திய உலகத்தும் பெரிய கடல் நீர் பொங்கி அதனை மூழ்க்கப் பிரமனும் இறப்பான். அந்நிலையில் பிரமனுடைய இறந்த உடலையும், கரிய கடல்போன்ற நிறத்தினனாகிய திருமாலுடைய உடலையும் சுமந்து கொண்டு அவர்களுடைய தசை கழிந்த உடம்பின் எலும்புக் கூடுகளை அணிந்தவனாய், ஒடுங்கிய உலகம் மீளத் தோன்றும் முறைமையின் சங்கற்பம் செய்து கொண்டு இருந்து எம்பெருமான் சிறந்த வீணையை வாசித்துக் கொண்டிருப்பான்''. ''பண்ணோடு யாழ்வீணை பயின்றாய் போற்றி'' (தி.மு. 4, ப. 1355) (6-57-7) ''தங்கையில் வீணை வைத்தார்'' (4-33-6) ''ஏழுலகுமாய் நின்ற ஏகபாதர்...வீணை கேட்பார்'' (6-35-2). யாருக்கும் தீங்கு நேராத வகையில் ஏழுலகமாய் நின்ற ஒரே திருவடியை உடையவராய், ஊழி வெள்ளத்தின் ஒலி, உலகையெல்லாம் வெள்ளம் மூழ்குவித்து அவ்வுலகமெல்லாம் அழிந்த பின்னர் அடங்கியபோது, தாம் ஒடுங்காது வேதம் ஓதி வீணையை இசைத்து அவ்வொலியில் மகிழ்வர். ''ஏழுலகுமாய் நின்ற ஏகபாதர்'' என்றருளியது. மகேசுவர மூர்த்தங்கள் இருபத்தைந்தனுள் ஒன்று 'ஏகபாதர் என்ற மூர்த்தம்'. உலகமெலாம் ஒடுங்கிய பின்னர் ஒடுங்காது இன்புற்றிருப்பவர் இவர் ஒருவரே என்றபடி. எனவே மீள உலகம் தோன்றுங்கால் இவரிடத்திருந்தே தோன்றும் என்பதும், அதனால் உலகிற்கு முதல்வர் இவரே என்பதும் பெறப்பட்டது. இதனையே ''ஒடுங்கி மலத்துளதாம்; அந்தம் ஆதி என்மனார் புலவர் (சி.போ.சூ. 1) என்று மெய்கண்டார் வரையறையாக அருளினார். இத்திருப்பாடல் பெரும் பான்மையும் திருவடிப் பெருமையை அருளிச் செய்தவாறு (தி.மு.6, ப. 710)

30. சித்தாந்த நெறியும் நாவுக்கரசரும்

சோ. குருலட்சுமி, தூத்துக்குடி.

தமிழகத்தின் தலைசிறந்த ஞானத் தவமுனிவர் திருநாவுக்கரசர். அப்பெருமானின் வாழ்க்கை ஒரு பெரும் இலக்கியம். சித்தாந்த நெறி அதனின்று வடித்தெடுத்த சிறந்த இலக்கணம் எனலாம். அவருடைய வாழ்வும், வாய்மொழிகளும் சித்தாந்த நெறிப் பட்டவை. தமிழகத்துத் தத்துவ ஞானச் செந்நெறியினை உணர்த்துவன.

திருத்தொண்டின் நெறியை உலகிற்கு உணர்த்துவதும், புற இருளை நீக்கும் ஒளிக்கதிர் போல மாந்தர்களின் அக இருளை நீக்கும் சித்தாந்த நெறியை வளர்ப்பதுமே திருநாவுக்கரசரின் அவதார நோக்கமாகும்.

''திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர்''

என்று திருநாவுக்கரசர் வரலாற்றைச் சேக்கிழார் தொடங்குகிறார். மேன்மேலும் வளரும் இயல்பினதாகிய திருத்தொண்டின் நெறி வாழ்வதே அவருடைய திரு அவதாரத்தின் குறிக்கோளாகும். துறக்கம் முதலிய நிலையில்லாத பதங்கள் தந்து முடிந்து போகும் பதங்கள் போலன்றி, தம்மை மேற்கொண்டார்க்கு மேலும் மேலும் திருவருட்பேற்றினை மிகுவித்து வளர்வனவாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் தவநெறிகளையே அவர் மேற்கொண்டிருந்தார் என்பது பெறப்படும்.

சித்தாந்த நெறியில் கூறப்படும் சிவவேடத்தில் இலக்கணத்திற்குத் திருநாவுக்கரசரின் திருவுருவமே சிறந்த இலக்கியமாக விளங்குகிறது.

''தூய வெண்ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு றுபொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேய செவ் வாயுமுடையார் புகுந்தனர் வீதியுள்ளே''

என்றும்

''சிந்தை யிடையறா அன்புந் திருமேன் தன்னில் அசைவும்
கந்தை மிகையாம் கருத்துங் கையுழவாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற் பொலிதிரு நீறும்
அந்த மிலாத்திரு வேடத்தரசு மெதிர்வந் தணைய''

என்றும் சேக்கிழார் திருநாவுக்கரசரின் திருவுருவத்தை வர்ணிக்கிறார். இவரின் திருவுருவம் சிவவேடத்தின் இலக்கணம் உணர்த்த ஓர் இலக்கியமாய் விளங்குகின்றது. திருவேடத்தின் இயல்பினை விளக்க மாதவச் சிவஞான முனிவர் சேக்கிழார் திருநாவுக்கரசரை வர்ணிக்கும் முற்கூறிய இரு பாடல்களையே மேற்கோளாகக் காட்டுகிறார்.

திருநாவுக்கரசர் தலங்கள்தோறும் சென்று திருக்கோயில்களிலுள்ள இறைவனை வழிபட்டது. ''ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே'' என்ற சித்தாந்த நெறியை உணர்த்துகின்றது. திருநாவுக்கரசர் உழவாரப்படை கொண்டு திருக்கோயிலைத் திருஅலகிடும் பணி செய்தது, சீவன் முத்தர்கள் தாங்கள் அடைந்த அத்துவித நிலையிலிருந்து வழுவாதிருக்க. சிவன் திருக்கோயில்களில் சரியைப் பணிகள் செய்தது சிவனை நினைத்துத் தொழுதல் வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்தும். நீற்றறையின் வெப்பமானது இறைவனது திருவடி நிழல் போன்று திருநாவுக்கரசருக்குக் குளிர்ச்சியைத் தந்தது சீவன் முத்தர்கட்கு உலகியல் வாதனை இல்லை என்ற தத்துவத்தை உணர்த்தும்.

திருநாவுக்கரசர் தம் காலத்து வாழ்ந்த அடியார்களுடன் நட்புக் கொண்டிருந்தது. சீவன் முத்தர்கட்கும் அடியார் கூட்டுறவு தேவை என்ற சித்தாந்த நெறியினை வலியுறுத்துவதாக அமைகின்றது. திருநாவுக்கரசர் இறைவனிடம் திருவடி தீக்கைப் பெற்றது. உயிர்கள் பாசநீக்கம் பெற குருமூலம் தீக்கை பெறுதல் விளக்குகின்றது. திருநாவுக்கரசர் திருப்புகலூரில் உழவாரத் தொண்டு செய்யும்போது, பொன்னும், நவமணிகளும் காணக்கிடக்க அவற்றைப் பருக்கைக் கற்களாகக் கருதி உழவாரத்தில் ஏற்றித் தடாகத்தில் வீசினார்.

''ஓடுஞ் செம்பொன்னும் ஒக்கவே நோக்குவார்''

என்று சேக்கிழார் திருக்கூட்டச் சிறப்பில் கூறுவது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. சீவன் முத்தர்கள் 'இருவினையொப்பு' வாய்க்கப்பெற்றவர்கள் என்பதற்குத் திருநாவுக்கரசரின் வாழ்வு எடுத்துக்காட்டாய் அமைகிறது எனலாம்.

''மானுடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்து மாடும் அரன் பணிக்காக அன்றோ''

என்ற சித்தாந்த உண்மையை உணர்த்துவது திருஅங்கமாலைப் பதிகமாகும் (4 : 9).

''தயாமூல தன்ம வழி பெயனக்கு நல்கி
மனந் திருத்தும் மழபாடி வயிரத் தூணே'' (6 : 406)

என்று திருநாவுக்கரசர் கூறுகின்றார். உயிர்கள் அனைத்தும் அன்பும் அறமும் கொண்டு வாழ்ந்தால் உலகில் பொறாமை பூசலின்றி அமைதி யன்றோ நிலவும் உலகை உய்விக்கும் இவ்வுறுதிச் சொல்லை அருளிய திருநாவுக்கரசரை,

'சொல்லுக்குறுதி அப்பரெனச் சொல்'

என்று போற்றினர். (சைவத் திருமுறைகள் அனைத்திலும் அன்பும், அறமும் ஊடுருவிச் செல்லுமாயினும் இப்பண்புகள் செறிந்த மெய்ம்மையைத் தயாமூல தன்மம் என்னும் புதிய சொற்றொடரால் திருநாவுக்கரசர் குறிப்பிடுகின்றார்). உயிர்களின் சிறுமையையும் இறைவனின் முழுமுதல் தன்மையையும் உணர்ந்தவர்.

ஐந்தெழுத்தின் பெருமையையும், சிவத்தியானம் செய்து செஞ்சொல் மாலைகளால் ஏத்துவதே பாவநாசத்திற்குச் சிறந்த வழி எனச் சிவ வழிபாட்டின் சிறப்பையும் உணர்த்துவதே திருவுள்ளக் குறிப்பாகக் கொண்டு நமசிவாயத் திருப்பதிகத்திலும் பாவநாசத் திருப்பதிகத்திலும் மட்டும் பதிகப் பலன் கூறப்பட்டுள்ளது.

சைவ சித்தாந்தம் என்ற சொல் முதலில் திருமந்திரத்தில்தான் முன்னுரை காணப்படுகிறது. சைவம் என்பது, சிவ சம்பந்தம் உடையது. சிவனைப் பற்றிய நிலையையும், சைவ நூல்களையும் சிவனடி சேர்தற் குரிய நெறியையும் அச்சொல் குறிக்கும். சித்தாந்தம் என்பது சித்தம் அந்தம் என்ற இரு சொற்களால் ஆகி முடிவில் முடிவு என்ற பொருள் படும். கடவுள், உயிர், உலகம் மூன்றைப் பற்றியும் சமய தத்துவ அடிப்படையில் ஆராய்ந்து அவற்றின் முடிவைக் குறித்துக் கூறுவதாகும்.

சித்தாந்த நெறிகளிலும் அடிப்படை உண்மைப் பொருள்கள் மூன்று. அவை பதி, பசு, பாசம் என்பவை ஆகும்.

"பலகலை ஆகமவேதம் யாவையினுல் கருத்துப்
பதிபசுபா சந்தெரித்தல்"

என்று சிவப்பிரகாசத்தில் கூறப்படுகின்றது. இப்பொருட்களுள் இறைமைத் தன்மை பற்றி மேலான பொருளாகக் கருதப்படுவது பதியாகும். திருநாவுக்கரசர் பதி உண்மையைத் தம்முடைய அனுபவத்திலிருந்து எடுத்துரைக்கிறார்.

பதி - திருநாவுக்கரசர் குறிப்பிடுவன

"தேடிக் கண்டு கொண்டேன் - திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக்கண்டு கொண்டேன்" (4 : 93)

என்பது போன்று பல இடங்களில் பதி உண்மையைத் தம்முடைய அனுபவத்திலிருந்தே எடுத்துரைக்கின்றார்.

'உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே'

என்று திருநாவுக்கரசர் இறைவன் ஒருவன் என்பதை உணர்த்துகிறார்.

திருநாவுக்கரசர் வர்ணிக்கும் இறைவனின் உருவத் திருமேனிகள், சிவஞான சித்தியாரில் போக வடிவம், யோக வடிவம், வேகவடிவம் எனப் பாகுபடுத்திக் கூற அடிப்படையாய் அமைகின்றன. திருநாவுக்கரசரின் பாடல்கள் இறைவன் உயிர்களோடு ஒன்றாய், வேறாய், உடனாய் விளங்குதலை உணர்த்துகின்றன. இம்மூவகைத் தொடர்பு உயிர்கள் நிலைத்து நிற்க, அறிவைப் பெற இயக்க உதவுகிறது.

இறைவனை ஞானத்தால் உணரலாம். அருட் கண்ணால் காணலாம் என்று திருநாவுக்கரசர் கூறுவது, சித்தாந்த நெறியில் இறைவன் பதி ஞானத்தால் உணரப்படுவர் என்று கூறப்படுகின்றது.

''உயி ராவி'' (4 : 840)

என்று திருநாவுக்கரசர் உயிர் உண்மையை உணர்த்துகிறார்.

''கற்றைக் செஞ்சடை யானுளன் நாமுமுளோம்'' (5 : 899)

என்பதால் இறைவனைப் போன்றே உயிர்களும் அழியாத தன்மை யுடையன என்பதை உணர்த்துகிறார் எனலாம்.

சித்தாந்த நெறி பாசத்தை மூன்றாகக் குறிப்பிடுகின்றன. ஆணவம், கன்மம், மாயை என்பன திருநாவுக்கரசர் தேவாரத்திலும் மும்மலம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

''இழிப்பரிய பசுபாசப் பிறப்பை நீக்கும் என் துணையே''
(6 : 407)

என்ற திருநாவுக்கரசரின் பாடல் தொடரும் மும்மலங்களை உணர்த்துகின்றன.

அனைத்துயிர்களும் இன்பத்தை விரும்புவன. துன்பத்தை வெறுப்பன. உயிர்கள் துய்க்கும் இன்பம் இரண்டு வகைப்படும். 1. உலக இன்பம் 2. வீட்டின்பம். உலக இன்பத்தைப் போகம் என்றும், வீட்டின்பத்தை முக்தி என்றும் கூறுவர். உலக இன்பம் நிலையற்ற தன்மையுடையது. அதனைச் சிற்றின்பம் என்பர். வீட்டின்பமே நிலையான ஒன்றாகும். எனவே அதனைப் பேரின்பம் என்பர். இதனை அனுபவிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டே மானிட வாழ்வு அமைதல் வேண்டும். இக்குறிக்கோளை மனிதன் உணரவில்லை எனில் எடுத்த பிறப்பு பயனற்றதாகும். அதனால் திருநாவுக்கரசர்,

''குறிக்கோளி லாது கெட்டேன்''

என்கிறார். அக்குறிக்கோளை அடைய உயிர்கள் எடுத்துக் கொண்ட நெறியே சித்தாந்த நெறி.

''நன்னெறி நாலு''

''சிவலோக நெறி வகுத்துக் காட்டுவானை''

என்பன போன்ற தொடர்களைத் திருநாவுக்கரசர் குறிப்பிடுகிறார். இறைவனை அடைவதற்குரிய நெறிகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கினைச் சைவ சமய சாத்திர நெறிகள் கூறுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

"இறுமாந் திருப்பன் கொலோ?
ஈசன்பல் கணத்து எண்ணப்பட்டுச்
சிறுமான் ஏந்திதன்
சேவடிக் கீழ்ச் சென்றங்கு
இறுமாந் திருப்பன் கொலோ"

என்று திருநாவுக்கரசர் பெருமான் அருளிச் செய்தார். இத்திருமொழிகள், சிவஞானிகள் "இறுமாப்பு" அதாவது சிவனடியார் என்ற பெருமிதம் எய்தியிருப்பார்கள் என்று சிவஞான சித்தியார் சிறந்தெடுத்துக் கூறுதற்கு அடிப்படையாய் அமைந்தது என்பர்.

திருநாவுக்கரசர் திருநீறு, திருவைந்தெழுத்து, திருத்தொண்டு என்ற மூன்றையும் வாழ்வியல் குறிக்கோளாக நிறுத்தியவர். சிவஞானம் பெற்றவர் திருநாவுக்கரசர். சிவஞானம் என்பது பதி ஞானம். பதிஞானத் திற்குத்தான் பதிப்பொருள் இனிது விளங்கும். இந்த ஞானம் பசுஞானம், பாசஞானம் இரண்டிலும் வேறுபட்டது. உயர்ந்தது. பதிஞானத்தால் இறைவனை அறிதலையே சைவ சமய ஆச்சார்யர்கள் அருட்கண்ணால் காணுதல் என்று கூறுவர்.

திருநாவுக்கரசரின் பதிகங்களை, அருட் குருவின் உபதேச மொழி களாகக் கொள்வர் மெய்யடியார்கள். அவர்கள் சிவபெருமானின் திருவடி களைச் சென்னியில் சூடிப் பேரின்ப வாழ்வில் திளைத்து மகிழ்வர். துன்பத்திற்குக் காரணமான பிறவிச் சூழலில் புகார் என நம்பியாண்டார் நம்பி கூறுகின்றார். திருநாவுக்கரசர் தேவாரம் "தொல்லை இரும் பிறவிச் சூழத் தளையாகிய மூலமலத்தை (ஆணவத்தை) அழிக்கும் மாயேயமாகின்ற பித்தத்தைத் தணிக்கும். பிறவி நோய் தீர்க்கும் அல்லல் அறுத்து அனந்தமயமாக்கும்."

"உலையை ஏற்றித் தழலெரி மடுத்த நீரில் திளைத்து
நின்றாடுகின்ற ஆமைபோல் தெளிவிலாதேன்"

என்று திருநாவுக்கரசர் தன்னைப் பற்றிக் கூறுகின்ற மொழிகள் மனிதர் களின் நிலையைக் குறிப்பதாகும். இந்நிலை மாறி உயிர்கள் உய்தி பெற வழிகாட்டுகிறார். திருநாவுக்கரசரின் வாழ்வு சித்தாந்த நெறிகட்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்குகிறது. அத்துடன் இன்னும் பல சித்தாந்த கோட்பாடுகள் உருப்பெறுவதற்குத் திருநாவுக்கரசரின் வாழ்வு அடிப்படையாய் அமைகிறது எனலாம்.

31. நாவுக்கரசர் உணர்த்தும் அறம்

கி. கொளஞ்சி, சிதம்பரம்.

நாவுக்கரசர் அறநூல் வகுத்துக் கூறிய ஆன்றோர் அல்லர்; பத்திமைப் பாடல்களை அருளிச்சென்ற அருளாளர். எனவே அவரது நூற்பாடல் களில் நீதிநூல்களில் கூறப்பட்டுள்ள அறக்கருத்துக்களை எதிர்பார்க்க இயலாது.

'பத்திமை' என்ற தளத்தின் அடிப்படையில் சில வாழ்வியல் அறங்களை அவர் அருளியுள்ளார். அவ்வறங்கள் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

அறம் என்றால் என்ன?

அறம் என்பதற்குத் திட்டவட்டமான இலக்கணம் எதுவும் அறநூல் அறிஞர்கள் கூறவில்லை. அறநூலான திருக்குறளுக்கு உரை கண்ட பரிமேலழகர், "அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம்" என அறத்திற்கு இலக்கணம் கூறுவர். இது வடநூல் மரபைத் தழுவிய விதி ஆதலின் இதைத் தமிழுலகம் ஏற்பதில்லை.

"வள்ளுவர் செய் திருக்குறளை மருவறநன்கு உணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுஆதி ஒருகுலத்திற்கு ஒருநீதி"

என இதனைக் கடிந்துரைப்பர்.

எனவே, வள்ளுவர் கூறும் அறமே அறம் எனத் தமிழ்ச் சான்றோர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். திருவள்ளுவர் பலவகை நற்செயல் களையும் அறம் என்றே குறிப்பிடுகிறார். ஆயினும்,

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்"

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா வியன்ற தறம்"

என்பன போன்ற கருத்துக்கள் சிறப்பாகக் கருதத் தக்கவை.

அருள் நூல்களில் முதன் முதலில் அறம் உரைத்தவர் அப்பரடிகள். திருநாவுக்கரசர் செல்வச் செழிப்புமிக்க சைவ வேளாண்குடியில் பிறந்தார். இளமையில் சைவத் திருமுறைகளையும் சமய நூல்களையும் ஓதியுணர்ந்தார். இளமையும் யாக்கையும் நில்லா என்பதனை உணர்ந்து,

சமணம் போன்ற சமயங்களால் விரித்துரைக்கப்படும் நல்லறங்களை ஐயந்திரிபற ஓதியுணர்ந்தார். சிவன் எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி எம்மானாகிய சிவபெருமானுக்கு ஆட்பட்டு 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்ற கொள்கையை உடையவராய் நல்லறங்கள் பலவற்றை விருப்பமுடன் செய்தார்.

தவச் செல்வரான திருநாவுக்கரசர் பாடியுள்ள பதிகப் பாடல்களில் அறத்தின் ஆக்கமும், எல்லா அறங்களுக்கும் நிலைக்களனாக விளங்கும் இறைவனது திருவருட் பெருமையும், திருவருட் சார்பால் பெறத்தக்க நற்பயன்களும் தெளிவாக விளக்கப் பெற்றுள்ளன.

திருவருட் சார்பை உலக மக்கள் அனைவரும் நன்குணர்ந்து செம்மையான நெறியில் நின்று நல்வாழ்வு பெறுவதற்கான அறவுரைகளை வெளியிட்டருளியவர் அப்பரடிகளேயாவர்.

இக்காரணம் பற்றியே அவ்வருளாளரைச் சேக்கிழார் பெருமான், ''அறந்தரு நாவுக்கரசு'' என்று போற்றிப் புகழ்ந்துள்ளார்.

நல்லறங்கள் எல்லாவற்றிற்கும் பற்றுக்கோடாக அமைந்தது இறைவனது திருவருளே என்பது நாவுக்கரசர் துணிபு.

தம்மைச் சமண சமயத்தில் புகுத்தி, அறவுரைகள் பலவற்றையும் ஓதியுணரச் செய்து பின் சூலை நோயினைத் தந்து சமணச் சார்பினின்றும் மீட்பித்து அறங்களுக்கெல்லாம் அடிப்படையாக விளங்கும் திருவருளின் மாண்பினைப் புலப்படுத்திச் சைவ சமயத்தில் சேர்த்து உய்வித்தருளிய இறைவனது திருவருளை,

''ஓதுவித்தாய் முன்அறவுரை
காட்டி அமண ரோடே
காதுவித்தாய் கட்ட நோய்பிணி
தீர்த்தாய் கலந்தருளிப்
போதுவித்தாய் நின்பணி பிழைக்கில்
புளியம் வளாரால்
மோதுவிப்பாய் உகப்பாய்
முனிவாய் கச்சி ஏகம்பனே!''

என இவர் பாடுவதால் அறியலாம்.

ஈதல் அறம்

அறம் என்பது வறியார்க்கு ஒன்று ஈயும் ஈகையே என்பது அறநூலோர் கருத்து.

''ஈதல் அறம்; தீவினை விட்டு ஈட்டல் பொருள்''

என்பது ஔவை வாக்கு.

''வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை''

என்பர் வள்ளுவர். ஒருவன் தான்பெற்ற பொருளைச் சேர்த்து வைக்கு மிடம் எது என்றால் 'அற்றார் அழிபசி தீர்த்தலே ஆம்' என்று தெளிவுறுத்து கின்றது தமிழ்மறை. எனவே, அறங்கள் எல்லாவற்றினும் சிறந்தது எளியவர்க்கு ஈயப்படும் அறச்செயலே என்பது பெறப்படுகிறது.

இறைவன் செல்வர்களுக்குப் பெரும் செல்வத்தை அளித்திருப்பதற்குக் காரணம் அவர்கள் ஏழை எளியவர்களுக்கு அதைக் கொடுத்துதவ வேண்டும் என்பதற்காகத்தான் என்று கூறுகின்றார் நாவுக்கரசர். இதனை,

> ''அறவாழி அந்தணனாகிய இறைவன் உலகில் பிறரது வறுமைத் துயர்கண்டு பொறாது, தம்பாலுள்ள பொருள்களை இரப்போர்க்கு இல்லை என்னாது ஈந்துமகிழும் அருளுடைச் செல்வர்களுக்கென்றே 'சென்றடையாத திரு'வாகிய தன் திருவருட் செல்வத்தை உரிமை செய்து வைத்துள்ளான் என்றும், அப்பெருமானது திருக்குறிப்பை உணர்ந்து, தம்பாலுள்ள பொருள்களை இரவலர்க்கு ஈந்து மகிழும் ஈகைத் திறத்தினை மேற்கொள்ளாது தாமே உண்ணவேண்டு மென்றெண்ணிக் கரவினால் வைத்திழக்கும் வன்கண்ணராகிய உலோபிகட்கென்றே கொடிய துன்பங்களைத் தரும் நரகங்களை இறைவன் ஒதுக்கி வைத்துள்ளான் என்றும் அப்பரடிகள் உலக மக்கட்கு உணர்த்துகிறார்''

என்னும் திருமுறைச் செல்வர் வெள்ளைவாரணனாரது கூற்று நன்கு தெளிவுறுத்தும்.

இக்கருத்திற்கு ஆதாரமாக உள்ள அப்பரடிகளின் பாடல்,

''இரப்பவர்க்கு ஈயவைத்தார்;
    ஈபவர்க்கு அருளும் வைத்தார்;
கரப்பவர் தங்கட் கெல்லாம்
    கடுநர கங்கள் வைத்தார்''

என்பதாகும்.

நிலையாமை சுட்டிக் கூறிய அறம்

உடல் நிலையற்றது. நிலையற்ற உடல் நிலைத்திருக்கும் போதே ஆகிய பயனைக் கொள்க என ஆன்றோர் அறிவுறுத்தினர்.

''புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியே செய்க அறவினை - இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான் தன்கேள் அலறச்
சென்றான் எனப்படுத லான்''

என்பது நாலடியார் கூறும் அறவுரை.

உடல் இறக்கும் தறுவாயில் உன்னை நினைக்க் இயலாது. ஆதலால் நிலை இல்லாத உடல் நிலைத்திருக்கும் போதே உன்னைத் தொழுது வணங்கி உய்யும் உணர்வைத் தந்தருள்வாயாக என்று ஒற்றியூர் இறைவனை வேண்டுகிறார் அப்பர்.

இதனை,

"மனமெனும் தோணி பற்றி
மதிஎனும் கோலை ஊன்றிச்
சினமெனும் சரக்கை ஏற்றிச்
செறிகடல் ஓடும்போது
மதன்எனும் பாறை தாக்கி
மறியும்போது அறிய வொண்ணாது
உனைஉனும் உணர்வை நல்காய்
ஒற்றியூர் உடைய கோவே!"

என்னும் பாடல் எடுத்துரைக்கின்றது.

யாக்கை நிலையற்றது. இப்போதே அதனால் ஆன பயனைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதை,

"அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன்
அரங்கத்து அரவணைப் பள்ளியானே!"

(பெரிய திருமொழி. 4-10-1.)

என்னும் பெரியாழ்வார் பாடல் தெளிவுறுத்துவது இங்கு நினையத்தக்கது.

சமுதாய அறம்

சமுதாயத்தில் சாதிவேற்றுமை பாராட்டுவது தவறு என்பதை அருளாளர் பலரும் அறிவுறுத்தியுள்ளனர். சாதி வேற்றுமையைக் கடிந்துரைத்தவர்கள் தமிழ் நாட்டுச் சித்தர்கள்.

"சாதியாவது ஏதடா? சலம் திரண்ட நீரலோ?
பூத வாசல் ஒன்றலோ, பூதம் ஐந்தும் ஒன்றலோ?
காதில் வாளி காரைகம்பி பாடகம் பொன் ஒன்றலோ?
சாதிபேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையே?"

என்று பாடினார் சிவவாக்கியர்.

அவருக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் நாவுக்கரசர். அருளாளர் களில் முதன்முதலில் சாதி வேற்றுமை பாராட்டக் கூடாதென்று சமுதாய அறத்தைத் துணிந்து கூறியவர் நாவுக்கரசர். அங்கமெல்லாம் நொந்து அழுகும் தொழுநோயை உடையவராய் ஆஉரித்துத் தின்று உழலும் புலையர்களாயினும், கங்கையைச் சடையில் தரித்த சிவபெருமானைத்

தொழும் அடியவராயின் அவர்களை நான் கடவுள் எனக் கொண்டு வணங்குவேன் என்கிறார். இதனை,

"சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வான்ஆளத் தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்!
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்ல ராகில்;
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவு ளாரே"

என்ற அவர் பாடல் தெளிவுறுத்துகின்றது.

மனையறம்

சமுதாய வாழ்க்கையில் மனிதர்கள் பின்பற்றும் அறங்கள் இரண்டு. ஒன்று இல்லறம்; மற்றது துறவறம்.

துறவறத்தை நாவுக்கரசர் அத்துணைப் போற்றவில்லை. இல்லறத்தில் இருந்தே தூய்மையான உள்ளத்தோடு இறைவனை வழிபட்டு அவன் அருளைப் பெறலாம் என அறிவுறுத்துகிறார். இதுவே திருவள்ளுவர் கண்ட பண்டைத் தமிழ் அறநெறியாகும்.

"அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை"

என்ற அவர் வாக்கு இதனை வலியுறுத்தும்.

தாம் இல்லறத்தில் இருந்தே இறைவனை வழிபட்ட நிலையை,

"உயர்ந்தேன் மனைவாழ்க்கையும் ஒண்பொருளும்" (4-1-7)

எனவும்,

"வலித் தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்" (4-1-8)

எனவும் அவர் பாடுவதால் அறியலாம்.

மனை வாழ்க்கையில் இருந்தாலும் மகளிர் மையலில் அதிகமாக ஈடுபட்டு இறைவனை மறத்தல் கூடாது என்பதையும்,

"பஞ்சின் மெல்லடியினார்கள்
பாங்கராய் அவர்கள் நின்று
நெஞ்சில் நோய் பலவும் செய்து
நினையினும் நினைய வொட்டார்" (4-52-3)

என்னும் பாடலில் சுட்டுகின்றார். பொதுவாக நாவுக்கரசர் மற்றத் துறவிகளைப் போன்று பெண்களை இழித்துரைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

32. பல்லவ நாட்டில் நாவுக்கரசர்

மு. கோமதி, சென்னை.

வாகீசரின் வரலாறு யாது? பல்லவ நாட்டில் அவர் வாழ்ந்த காலம் யாது? திருநாவுக்கரசர் ஏன் சமண சமயம் சார்ந்தார்? சமண சமயத்திலிருந்து நாவுக்கரசர் சைவ சமயத்திற்கு மாறக் காரணம் என்ன? மதம் மாறியதால் மகேந்திரவர்மன் அவருக்கிழைத்த இன்னல்களும் அம்மையப்பர் அருளால் அவற்றை அவர் கடந்த விதமும் யாவை? அதன் பின் விளைவுகள் யாவை? என்பன போன்ற ஆய்வு வினாக்கட்கு விடை காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வாகீசரின் வரலாறு

வளமை பொருந்திய திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வாழ்ந்தவர் வேளாளர் குலத்துப் பெருமை மிக்க குறுக்கையர் குடியின் பெருந்தலைவர் புகழனார். அவருடைய இனிய இல்லத்தரசி மாதினியார். இம்மாதரசியின் மணி வயிற்றில் உதித்தவர்கள் திருமகளைப் போன்ற திலகவதியாரும், அவரது அருமைத் தம்பியார் "மருள்நீக்கியாரும்" ஆவர். இளம் குழவிப்பருவம் கடந்த மருள்நீக்கியார் செழுமையான கலைகள் யாவும் எளிதில் கற்று இளம்பிறைபோல் வளர்ந்தார். பன்னிரெண்டு வயதான திலகவதியாருக்கும் வீரத்தன்மை மிக்க படைத் தலைவர் கலிப்பகையாருக்கும் மணம் பேசி முடித்தனர். மணச் சடங்கை முடிப்பதற்கு முன்பே தீய அருநோயினால் பீடிக்கப்பட்டு புகழனார் விண்ணுலகு அடைந்தார். கற்புக்கரசி மாதினியாரும் கணவருடன் சென்றார். இந்நிலையில் கலிப்பகையாரும் போரில் உயிரைத் தந்து புகழ் பெற்றார். கற்பிற் சிறந்த திலகவதியாரும் உயிர் விடத் துணிந்தார் என்றாலும் தம்பி மருள்நீக்கியார் வாழ வேண்டும் என்பதற்காகவே உயிர் தாங்கினார். விதி வசத்தால் மருள்நீக்கியார் சமண சமயம் சார்ந்து "தருமசேனர்" எனப் பட்டம் பெற்றார். மதம் மாறிய தம்பிக்காகத் திருவதிகை வீரட்டானத்தில் திருவிளக்கேற்றி விரதம் இருந்தார் திலகவதியார். சிவபெருமான் திருநாவுக்கரசருக்குச் சூலைநோய் தந்து ஆட்கொண்டார். சைவ சமயத்திற்கு மாறி அப்பருக்குச் சமணரது தூண்டுதலால் பல்லவ மன்னன் பற்பல இன்னல்களை ஏற்படுத்த ஈசனருளால் அவற்றைக் கடந்து மன்னனையும் சைவ சமயத்திற்கு மாறச் செய்தார். ஆளுடையரசர் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என உழவாரப் படையுடன் திருக்கோயில்கள்

தோறும் சென்று உழவாரப் பணி செய்தும் எம்பெருமானைப் போற்றித் துதித்துத் திருப்பதிகங்கள் பாடியும் திருவையாற்றில் திருக்கயிலைக் காட்சி கண்டும், பல ஆண்டுகள் வாழ்ந்து தம் 81-ஆம் வயதில் இறையருளுடன் இரண்டறக் கலந்தார்.

நாவுக்கரசர் பல்லவ நாட்டில் இருந்த காலம்

திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் கி.பி. 7-ம் நூற்றாண்டில் திகழ்ந்தவர்கள். பல்லவ மரபிற் சிறந்த மன்னர்களில் முதலாவது நம் மனக் கண்ணில் தோன்றுபவன் முதலாம் மகேந்திரவர்மன். இவன் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரியணை ஏறினான். இவனது ஆட்சிக் காலம் கி.பி. 615-630 ஆகும். இவனது ஆட்சியின் முற்பகுதியில் சமணம் உயர்நிலை பெற்றுத் திகழ்ந்தது. பிற்பகுதியில் மகேந்திரவர்மன் சைவனாக மாறியமையால் சைவ சமயம் சிறப்புப் பெற்றது. மகேந்திரவர்மன் சமண சமயத்திலிருந்து பின்னர் சைவனாக மாறிய செய்தியினைப் பெரியபுராணத்தின் வாயிலாகவும், திருச்சிராப்பள்ளி மலைக்கோயில் கல்வெட்டிலிருந்தும் அறிகிறோம். அப்பர் சுவாமிகள் மகேந்திரவர்மன் காலத்தில் வாழ்ந்தவர். அம்மன்னன் சைவனாக மாறக் காரணமானவரும் அவரே. கி.பி. 620-ல் மகேந்திரவர்மன் சமணம் நீங்கிச் சைவனாகியிருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது.

நாவுக்கரசர் சமண சமயம் சாரக் காரணம்

மருள்நீக்கியார் தம் கல்வியின் பயனாக உலக நிலையாமையை நன்றாயுணர்ந்து பலவித அறங்களைச் செய்பவராய் ஈகைச் செயலில் ஒழுகி மாறாது நின்றார்; நில்லாத உலகத்தின் இயல்பைக் கண்டு "நிலையாத இந்த உலகத்தில் பயன் இல்லை. அதனால் அதில் நின்று நான் வாழ்வேன் அல்லேன்" என முற்றத் துறந்தும் சமயங்களின் நல்ல நெறியைத் தெரிந்து உணர்வதற்கு நம்பரான சிவபெருமான் அருள் செய்யாததால் கொல்லாமையை மேற்கொண்டு அதனுள் மறைந்து வாழும் சமண சமயத்தைச் சார்பவர் ஆகிப் பாடலிபுத்திரத்திலுள்ள சமண் பள்ளியைச் சென்றடைந்தார். வலிய சமணர்கள் அவரைச் சூழ்ந்து அவருக்கு "வீடுபேற்றை அடையும் நெறி இதுவேயாகும்" என வெளிப்பார்வையில் மெய்போலக் காட்டித் தம்முடன் அவர் கூட வரும் உணர்ச்சி உண்டாகத் தக்கதாகப் பல பகுதிகளையும் அவர்க்குப் புகட்டினார். மருள்நீக்கியாரும் அங்குச் சமண சமயத்தின் அரிய நூல்களையெல்லாம் பயின்று அந்நெறியின் அறிவிற் சிறந்தவராய் விளங்கினார். அதனால் பருத்த உடல் உடையவரான அந்தச் சமணர்கள் மருள்நீக்கியாரைச் சூழ்ந்து மகிழ்வாராகி அவருக்குத் தங்களின் மேம்பட்ட "தருமசேனர்" என்ற பெயரைத் தந்தனர். அந்தத் துறையில் மிக்குப் பெருகிய சிறப்பினால் அகன்ற உலகத்தில் சித்தநிலை அறியாத புத்தர்களையும் வாதில் ஆராய்ந்து

செலுத்திய உணர்வினால் வெற்றி கண்டு உலகத்தில் அறிவொளி மிக்க பெரியோராய்ச் சமண சமயத் தலைமையில் அவர் மேம்பட்டனர்.

நாவுக்கரசர் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறக் காரணம்

தம் தம்பியரான மருள்நீக்கியார் சைவம் விட்டுச் சமணம் சார்ந்ததையறிந்த திலகவதியார் சிந்தை நொந்து திருவதிகைப் பதியை யடைந்து அங்கு வீராட்டானேச்சுரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்குத் திருத்தொண்டு புரிந்து வருவாராயினர். அப்படிச் செய்து வருகையில் ஒரு நாள் தம்பியார் சமணராய்க் கிடப்பதை நினைந்து மிக வருந்தி என்னைத் தாங்கள் ஆண்டருள்வீராகில் எனக்கும் பின் தோன்றியவனைச் சேர்க்கின்ற தீவினையுடைய பரசமயமான படுகுழியினின்றும் எடுத்தருள வேண்டும் என்று வீரட்டானேச்சுரரைப் பன்முறையும் வேண்டினார். ஈசர் அவ்வம்மையார் கனவில் எழுந்தருளித் தருமசேனரைச் சூலை நோயால் வருத்தி ஆண்டருளுவதாக உணர்த்தினன். முற்பிறவியில் செய்த நல்ல தவத்தில் சிறிதளவு பிழை செய்த தொண்டரான மருள்நீக்கியாரைத் தடுப்பரியதொரு சூலை நோய் தொடர்ந்து முடுக்கியது. வடவைத் தீயும் கொடிய நஞ்சும் வயிரமும் என்ற இவை போன்ற கொடுமை செய்யும் மற்றவை எல்லாமும் ஒன்று கூடி வந்ததோ என்னுமாறு சூலைநோய் தருமசேனரின் குடலில் குடையவே அவர் துன்புற்று வருந்திச் சமணர் பாழியிலுள்ள ஓர் அறையில் விழுந்தார். மந்திரம் முதலான வித்தைகளாற் செய்த முயற்சியொன்றும் பயன்தராமையால் சமணர்கள் அவரைக் கைவிட்டு நீங்கினார்கள். தருமசேனரும் நஞ்சுடைய பாம்பின் விட வேகம் தலைக் கொண்டாற் போல் மயங்கிச் சோர்ந்தார். பின்பு அவர் தம் நிலையைத் தமக்கை திலகவதியாருக்கறிவித்து அழைத்து வரும்படிச் சமையற்காரனை அனுப்பினார். நன்மையறியாச் சமணர் வாழிடத்துத் தாம் வர முடியாதென்று அம்மையார் மறுத்துச் சொல்லி விட்டார். பின்பு தருமசேனர் கைதரும் ஆள் துணைக் கொண்டு இரவில் திருவதிகையை அடைந்து தமக்கையார் திருவடி பணிந்து தாம் உய்யுமாறு அருளிச் செய்யும்படி வேண்டினார். திலகவதியாரும் அடியடைந்தோர் பற்றறுப் பானாகிய பரமசிவனைப் பணிந்து அவன் பணி செய்தலே உய்யுநெறி'' என்று உபதேசித்தார்கள். அதை ஏற்றுக் கொண்டு வணங்கினார் தம்பியார். திலகவதியார் இறைவன் பேரருளை நினைந்து மருள்நீக்கியார் திருவீராட்டானத்துட் செல்ல வேண்டியிருப்பது கருதிச் சிவபெருமானின் திருநீற்றை ஐந்தெழுத்தோதிக் கொடுத்தார். ஆர்வத்தோடதை ஏற்று அணிந்து கொண்ட தம்பியார் தமக்கையாரைப் பின் தொடர்ந்து சென்று வீராட்டானேச்சுரரை வணங்கி நின்ற அளவில் அப்பெருமான் திருவருளால் தமிழ்மாலை சாத்தும் உணர்வு தோன்றியது. எனவே அவர் ''கூற்றாயினவாறு விலக்ககலீர்'' என்னும் திருப்பதிகத்தைப்

பாடிப் பரவசமானார். சூலைநோய் நீங்கியது. "செந்தமிழில் சொல் வளப்பம் மிக்க பதிகம் பாடியமையால் நாவுக்கரசு என்னும் நற்பெயர் ஏழு உலகங்களிலும் வழங்குவதாக" என்று ஓர் அசரீரி பிறந்தது. உடன் பிறந்தாரிருவரும் உற்ற மகிழ்ச்சிக்கு அளவில்லை. சிவபெருமானுக்கு மனம் வாக்குக் காயம் மூன்றாலும் தொண்டுபுரிய உறுதி பூண்ட திருநாவுக்கரசர் திருநீறும் உருத்திராக்கக் கண்டிகையும் ஆகிய சிவச் சின்னங்களைச் சிறக்க அணிந்து சிவன் சேவடி மறவாச் சிந்தையராய் உழவாரப் படையும் தாங்கி உலவுவாராயினர்.

மதம் மாறியதால் மகேந்திரவர்மன் இழைத்த இன்னல்களும் அவற்றைக் கடந்த விதமும்

திருநாவுக்கரசர் மதம் மாறியதை அறிந்த பாடலிபுத்திரத்துச் சமணர்கள் தம் சமயத்திற்குக் கேடு வந்ததென்று திகில் கொண்டு தம் அரசனாகிய மகேந்திர பல்லவனிடம் சென்று தருமசேனர் தம் தமக்கையார் நெறியையே அடைய விரும்பிச் சூலைநோய் வந்ததாகப் பொய்ச் சாக்குக் காட்டிச் சென்று சைவராகி நம் சமணத்தை நிந்திக்கின்றார். ஆதலால் அவரைத் துன்புறுத்த வேண்டும் என்றார்கள். அதற்கிணங்கிய மன்னனும் நாவுக்கரசரை அழைத்து வருமாறு அமைச்சர்கட்குக் கட்டளை இட்டான். அவர்களும் சேனைகளுடன் திருவதிகை சென்று அவரைக் கண்டு அரசாணையைத் தெரிவித்தார்கள். அது கேட்ட சுவாமிகள் "நாமார்க்கும் குடியல்லோம்" என்னும் திருத்தாண்டகத்தைப் பதிலாய் அளித்தார்கள். பின்பு மந்திரிகள் அவரை வருமாறு வணங்கிப் பெரிதும் வேண்டினர். இறைவன் திருவருளை நம்பித் திருநாவுக்கரசர் பாடலிபுத்திரத்து மகேந்திரன் சபையை அடைந்தார்.

நீற்றறையில் அடைத்தல்

சமண சமயத்தினைத் துறந்து மீண்டும் சைவ சமயம் புக்குச் சிறந்திருந்த திருநாவுக்கரசு சுவாமிகளைப் புன்மையறிவுடைய சமணர்கள் தூண்டுதலால் மகேந்திரவர்மன் சுண்ணாம்புக் காளவாயிலில் அடைத்துத் தாளிட்டுக் காப்புகள் அமைக்கச் செய்தான். திருநாவுக்கரசு சுவாமிகள் அந்நீற்றறை யினுள் அணைந்தபோது "அம்பலத்தாடியின் தாள் நீழலையே" அடைக்கல மாகப் புகுந்து "ஈண்டு வருந்துயருளவோ ஈசனடியார்க்கு" என்று துணிந்த மனதுடன் ஈசன் திருத்தாளினையே உற்று நோக்கித் தொழுதிருந்தார். நீற்றறையினுள் இருந்து "மாசில் வீணையும் மாலை மதியமும்" எனத் தொடங்கும் பதிகம் பாடியருளியதும் அவ்வெய்ய நீற்றறையும் இளவேனிற் பருவம் தென்றல் காற்று குளிர்ந்த நீர்த்தடாகம், வெண்ணிலவொளி யாழொலி ஆகியவற்றின் தன்மைகள் பொருந்தி ஐயனுடைய திருவடி நிழல் அருளாகிக் குளிர்ந்தது. நாவரசர் ஏழுநாள் கழிந்த பின்பும் எவ்வகையான ஊனமும் இல்லாதவராய் மகிழ்வுடன் வீற்றிருந்தார்.

கொடுவிடம் அமுதமானது

திருநாவுக்கரசர் நீற்றறையில் மகிழ்வுடன் இருந்ததைக் கண்ட நல்லுணர்வு இல்லாத அந்த அமணர்கள் இனி விடங்கொடுத்துக் கொல்லுதலே செய்யக்கடவது என்று கூற கொடிய சமணர்களின் சார்பினால் கெடுகின்ற பல்லவ மன்னனும் மிகுந்த மயக்கத்தினாலே ''விடத்தினை ஊட்டுங்கள்'' என்று கூற, சமணர்கள் திருநாவுக்கரசரை அத்தீய நஞ்சு கலந்த பாற்சோற்றினை உண்ணும்படிச் செய்தனர். எங்கள் நாதனாகிய சிவபெருமானின் அடியார்கட்குக் ''கொடிய விடமும் கூட அமுதமாகும்'' என்ற உறுதியுடையவராய் நாவுக்கரசர், அக்கொடிய சமணர் இட்ட பாற்சோற்றினையுண்டு, எக்குறைவுமின்றி இனிதிருந்தார். ஆளுடைய அரசு நஞ்சையுண்டும் துன்பம் இன்றியிருக்கக் கொடிய நஞ்சும் அமுதம் ஆயிற்றே! என்று சமணர் அச்சம் கொண்டவராகி இங்கு இவன் சாதல் இன்றி உயிர் பிழைத்திருப்பானேயானால் எமக்கெல்லாம் இறுதி நேர்ந்து விடும் எனத் துணிந்து பகைவர்களிடத்துச் செய்தொழிலை இங்கு செய்யும்படி மன்னனுக்கு கூறினர்.

ஏவி விட்ட மதயானை கொல்லாது தொழுதல்

சமணர்கள் மையலில் சிக்குண்ட பல்லவ மன்னன் திருநாவுக்கரசு சுவாமிகளை நீற்றறையிலிட்டும் நஞ்சூட்டியும் கொல்ல முயற்சிக்க இறைவன் திருவருளால் அவருக்கு எவ்விதத் துன்பமும் நேராதிருந்ததைக் கண்டு மீண்டும் சமணரது தூண்டுதலின் பேரில் உலகக் காவல் தொழிலை மேற்கொண்டும் புலைத் தொழில் செய்வோனான அந்த மன்னவன் சினம் மிக்க கொலை யானையை அவர் மீது விடுமாறு ஏவினான். மிகுந்த ஆரவாரத்துடன் தம்மை நெருங்கி மத யானை வந்தபோதும் வாகீசர் சிறிதும் அஞ்சாது பெருமானின் பொற்கழல்களையே தொழுதிருந்தார். அங்ஙனம் தொழுது விண்ணவர்தம் பெருமானை விடையுகந்தேறும் பிரானைச் ''சுண்ண வெண் சந்தனச் சாந்து'' எனத் தொடுத்த திருப்பதிகத்தை மகிழ்வுடனே பாடியருளினார். பாய்ந்து வந்த மத யானையும் நாவுக்கரசரை வலம் வந்து நிலத்தில் விழுந்து வணங்கி எழுந்து நின்றது.

கல்லே தெப்பமாக மிதத்தல்

மத யானையை ஏவி விடுத்தும் இறையருளால் பதிகம் பாடித் தப்பிய திருநாவுக்கரசு சுவாமிகளை இரவின் இருளைப் போன்ற சமணர்கள் ''கல்லுடன் சேர்த்துக் கயிற்றால் கட்டிக் கடலில் வீசி எறிதலே இனிமேல் செய்யத்தக்கது'' எனக் கூற மன்னனும் அவ்வாறே செய்ய ஆணையிட்டான். மன்னன் ஆணைப்படி அத்தொழில் செய்வோர் நாவுக்கரசரை ஒரு கல்லுடன் சேர்த்துக் கயிற்றால் கட்டி ஒரு படகில் ஏற்றிக் கொண்டு போய் மிகவும் ஒலிக்கின்ற கடலில் வீசி எறிந்தனர்.

கடலுள் வீழ்ந்த திருநாவுக்கரசரும் ''எத்தகைய நிலை வந்தாலும் நான் எந்தை பெருமானை வணங்குவேன்'' என்று திருவைந்தெழுத்தை எண்ணி "சொற்றுணை வேதியன்" எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடியருளினார். அவரைக் கட்டிய கயிறும் அற, அந்தக் கல்லே தெப்பமாக அதன் மீது மிதந்தருளினார். முன் செய்த தவத்தால் வருணனும் இவரைத் தன் முதுகிற் சுமந்து கொண்டு வந்து திருப்பாதிரிப்புலியூருக்கருகே கரையேற விட்டான். வாகீசரும் அடியார் புடைசூழத் திருக்கோயிலுக்கு எழுந்தருளி ''ஈன்றாளுமாயெனக் கெந்தையுமாயுடன்'' எனத் தொடங்கும் பதிகம் பாடி இறைவனை வணங்கினார்.

பின் விளைவுகள்

கொடிய சமணக் கீழானவர்கள் தூண்டுதலால் திருநாவுக்கரசருக்கு இன்னல்கள் விளைவித்த விசித்திர சித்தனான மகேந்திரவர்மன் விடையேறும் பெம்மானின். அருட்செயல்களை யறிந்து வியந்து சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறினான். அவ்வரசன் திருப்பாதிரிப் புலியூரில் இருந்த சமண ஆலயத்தை இடித்து அதிலிருந்து பெயர்த்து எடுக்கப்பட்ட கற்களைக் கொண்டு திருவதிகையில் ஒரு சிவன் கோவிலைக் கட்டி அதற்குக் ''குணபரஈச்சரம்'' என்ற பெயரிட்டு வழங்கினான். மேலும் வல்லம், தளவானூர், சீயமங்கலம், பல்லாவரம், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களில் சிவன் கோவிலையும், மகேந்திரவாடியில் பெருமாள் கோயிலையும் அமைத்துள்ளான். இதனால் குகைக் கோயில்கள் அமைக்கப்பட்டுக் கட்டடக் கலை வளர்ச்சியுற்றது. சைவ சமயம் தழைத்தோங்கியது. மகேந்திர பல்லவன் ஆட்சி புதுக்கோட்டை வரை பரவியிருந்த போதிலும் பல்லவப் பேரரசு முழுவதும் சைவ சமய மணம் பரவித் திகழ்ந்தது. திருநாவுக்கரசரும் திருத்தலங்கள்தோறும் சென்று திருப்பதிகங்கள் பாடியும் உழவாரப் பணி செய்தும் சைவத் தொண்டாற்றினார். ஈசனைப் போற்றித் துதித்துத் தம் 81-வது வயதில் சித்திரை மாதத்தில் சதய நட்சத்திரத்தில் திருப்புகலூரில் முக்தியடைந்தார்.

முதன் முதலில் பல அற்புதச் செயல்களைத் தம் கண் நிகழ்த்தி மகேந்திரவர்ம மன்னனைச் சைவனாக்கத் தம்மைப் பயன்படுத்திய சிவபெருமானது திருவருளை எண்ணி எண்ணி வியந்து 49,000 பதிகங்களைப் பாடியருளினார் திருநாவுக்கரசர். அவர் பெருமையை ''நமச்சிவாய'' என்ற மந்திரச் சொல்வழி எண்ணி மகிழ்வோமாக.

33. பதிகங்களின் வழி நாவுக்கரசர்

எஸ். கௌசல்யா, கும்பகோணம்.

"அலகில் கலைத்துறை தழைப்ப அருந்தவத் தோர்நெறிவாழ
உலகில் வரும் இருள் நீக்கி ஒளிவிளங்கு கதிர்போல்"
(தி. நா. பு. 1283)

மருள்நீக்கியார் தோன்றினார். ஞானத் தவமுனிவரான நாவரசரின் சிறப்புகளை எடுத்துக் கூறுவதற்கு ஒரு நாவுக்கும் உணராத யான் சொல்ல முயல்கிறேன் என்கிறார் சேக்கிழார். சொல்வதற்கரிய சிறப்புகளை உடையவர். தமது அனுபவத் துடிப்பினைப் பதிகங்களில் வெளிப்படுத்தியுள்ளார். தனி வாழ்க்கை நிகழ்வுகளும் எதிரொலிக்கின்றன. உலக மக்களுக்காக ஞான நிலையிலும் பாடியுள்ளார். திருநாவுக்கரசரின் பதிகங்களின் வழி யாம் உணர்ந்தவற்றை உணர்த்த முயல்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

முழுநேரத் தொண்டர்

சூலை நோய் வருத்தியபோது,

'அஃடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்' (4-1)

என்று வேண்டிக் கொள்கிறார். சொல்லியபடி செயலாற்றும் முழுநேர இறைத் தொண்டராகத் தம்மை ஈடுபடுத்திக் கொள்கிறார். திருநீற்றைத் தரித்துத் திருக்கோயில் முன்வந்த பொழுதே இறைவனின் திருவடிக்கு ஆட்பட்ட சிறப்பினை "ஏற்றாய் அடிக்கே" என்று வெளிப்படுத்து கின்றார். பின் நெஞ்சத்தை இறைவனுக்கே அளித்து விடுகின்றார். "நெஞ்சமே இடமாக" என்று சொல்லி, என் அச்சத்தை நீக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறார். இறைவன் தமக்கு அருள்புரிவார் என்ற நம்பிக்கையில் இறைவனுக்கே ஆட்படுகிறார். இதனை,

'துணிந்தே உமக்கு ஆட்செய்து வாழலுற்றால்' (4-2)

இங்ஙனம் இறைவனுக்கு ஆட்பட்டவர், நன்மை அடைந்த காலத்திலும், தீமை உற்ற காலத்திலும் இறைவனை மறப்பதில்லை என உறுதி பூண்கிறார்.

'நலம் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்'
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன். (4-5,6)

சிவபெருமானைத் தரிசிப்பதும், இறைவனுக்கு அடிமைபூண்டு தொண்டு செய்வதும் நாவரசரின் நோக்கமாகும்.

"........ஏகம்பன் தன்னைக்
கண்டு நான் அடிமை செய்வான்
கருதியே திரிகின்றேனே" (4-440)

என்று தம் நோக்கத்தை வெளிப்படுத்துகின்றார். தொண்டர்களைச் செந்நெறிக்கே ஏற்றும் தன்மையுடையவன் இறைவன். அதனால் நாவரசர் 'இறைத் தொண்டருக்கும் தொண்டர்' என்று தம்மைக் குறிப்பிடுகிறார் (4-976).

இறைவன் தம்மை நினைந்து ஆட்கொண்ட திறத்தினைப் போற்றி, இறைவனுக்கு என்ன கைம்மாறு செய்ய? என்று சிந்தித்து இறைத்தொண்டில் ஈடுபடுகிறார். இதனை,

"மனை துறந்து அல்லுணா வல்லமண்
குண்டர் மயக்க நீக்கி
எனை நினைந்து ஆட்கொண்டாய்க்கு
யான்செயும் இச்சைகளே என்இனி" (4-ம் திருமுறை - 998)

என்ற தொடர்களால் உணர முடிகின்றது.

இறைவனிடம் எல்லை இல்லதோர் அடிமை பூண்ட அன்பர் (5-ம் தி. 4)

"என்பெலாம் நெக்கு இராப் பகல் ஏத்தும்" (5-ம் திருமுறை - 64)

அன்பராகத் திகழ்கின்றார்.

இறைவனின் கடன் அடியவரைக் காத்தருளுதல், என் கடன் பணிசெய்து கிடப்பதே (5-192) என்ற குறிக்கோளுடன் உழவாரப் பணிபுரிகின்றமையை,

"நாயடியேன் செய் குற்றேவல்
குறையுண்டோ திருவாரூர் குடிகொண்டீரே" (5-259)

என்ற தொடர்களில் உணர்த்துகின்றார். அடியார்களையும்,

'பாடுமின் இரவோடு பகலுமே' (5-570)

என்று அறிவுறுத்துகின்றார்.

'தன்னை அடைந்தார் வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தம் கடன்'

என்று நயமாகக் கூறி இறைவனிடம் நயந்து வேண்டுகிறார்.

உயிர்க்கும் பொழுதெல்லாம் ஈசன் நினைவுடையர்

"ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெல்லாம்
நான் நிலாவி இருப்பவன் என் நாதனை" (5-5)

என்ற தொடரில் மூச்சுவிடும் நேரத்திலும் ஈசனை நினைத்து ஏற்றும் தன்மையை உணர்த்துகின்றார்.

"தும்மலோடு அருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாது"

என்கிறார் திருஞானசம்பந்தர்.

"இமைப்பொழுதும் என் நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க"

என வாழ்த்துகிறார் மணிவாசகர்.

"ஏத்தாது இருந்தறியேன் இமையோர் தனி நாயகனே!"

எனப் போற்றுகிறார் சுந்தரர்.

".......தில்லையம்பலக் கூத்தனை
எட்டனைப் பொழுதும் மறந்து உய்வனோ" (5-14)

என்பதில் நாவரசரின் பக்தித் திறத்தை உணர முடிகின்றது.

இறைவன் நாவரசரின் ஊனாகி, உயிராகி அதனுள் மேவுள் உணர்வாகிக் கலந்து மற்றும் பிறவாகிய யாவும் ஆகியவர் (6-621) மணிவாசகப் பெருமானும் இத்தன்மையை "ஊனாய் உயிராய் உணர்வாய் என்னுட்கலந்த தேனாய் அமுதமாய்...." எனப் பாடுகின்றார். இறைவனை உள்ளத்தில் பதித்துப் போற்றுவதால் உள்ளம் இனிமை பெறுகின்றது. நிறைகின்றது, கரும்பாக இனிக்கின்றது. அதனால் இறைவன் மீது 'ஊறிஊறி உருகும் உள்ளத்தை உடையவராகத்' (5-147) திகழ்கிறார்.

தேடிக் கண்டு கொண்ட அன்பர்

அழுது அடி அடைந்த அன்பர் மணிவாசகர். இறைவனைத் தேடிக் கண்டு கொண்ட அன்பர் நாவுக்கரசர். இதனை,

தேடிக் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக்கண்டு கொண்டேன் (4-9)

'தேடினேன் நாடிக் கண்டேன்' (4-728)

என்று தம் உள்ளத்தில் கோயில் கொண்டு உள்ளான் இறைவன் என்பதை உணர்ந்து உணர்த்துகின்றார். நாவரசர் உள்ளத்தில் ஒளியாக ஒளிர்கிறான் இறைவன்.

'உள்ளத்தில் ஒளியும் ஆகும்
ஒற்றியூர் உடைய கோவே' (4-444)

என்ற திருவாக்கால் உணரலாம்.

நாவுக்கரசர் நாதனின் இறை உருவைக் காண்பதுடன், இறைவனின் உணர்வையும் கண்டதாகக் கூறுகிறார்.

"மறையப் போர்த்த வடிவுங் கண்டேன்
உள்க மனம் வைத்த உணர்வுங்கண்டேன்"

அது மட்டுமல்ல

'பரிந்தார்க்கு அருளும் பரிசுங் கண்டேன்' (4-771)

என்கிறார். தலங்கள்தோறும் சென்று இறைவனைக் கண்டு உய்ந்ததாகப் பல பதிகங்களில் வெளிப்படுத்துகிறார்.

"காவலனைக் கஞ்ச னூராண்ட கோவைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டு உய்ந்தேன்" (4-887)

திருக்கைலாயக் காட்சியைத் திருவையாற்றில் கண்டு மகிழ்கிறார்.

இறைவன் திருவருள் வாய்க்க பெற்றவர்

இறைவனால் ஆட்கொளப்பட்ட நாவரசருக்கு இறைவனின் திருவருள் கிடைக்கின்றது. அதனைப் பல பதிகங்களில் வெளிப்படுத்துகின்றார். இறைவன் ஆட்கொண்ட திறத்தை,

'அடியேனை ஆட்கொண்ட அமலர் தாமே'

'வெந்துயரந் தீர்த் தென்னை ஆட்கொண்டாரே'

'இடருறு நோய்தீர்த்தென்னை ஆட்கொண்டாரே'

'சூலை தீர்த்தடியேனை ஆட்கொண்டாரே'

'சமண் தீர்த்தென்னை ஆட்கொண்டார் தாமே'

(6-947, 943, 948, 949)

இங்ஙனம் போற்றுகின்றார்.

திருநாவுக்கரசர் திருக்கயிலைக்குச் சென்று இறைவனைத் தரிசிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செல்கிறார். நெடுந்தூரப் பயணம் என்பதால் நடந்து செல்ல இயலாத நிலை ஏற்படுகிறது. நோக்கம் நிறைவேற, கைகளால் தாவியும், மார்பால் உந்தியும், பின்னர் புரண்டு புரண்டும் செல்கிறார்.

அந்நிலையில் மானசரோவர் என்னும் பொய்கையில் இறைவன் திருவருளால் மூழ்கித் திருவையாற்றுக் குளத்தில் எழுந்து கயிலைத் திருக்காட்சியைக் கண்டு மகிழ்கிறார். அந்த அற்புதத்தை,

"...... யாதும் சுவடுபடாமல்
ஐயாறு அடைகின்றபோது
காதல் மடப்பிடியோடும்
களிறு வருவன கண்டேன்

கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்'' (4-21)

என்று மலர்ந்தருள்கின்றார்.

இறைவனிடம் திருவடி தீக்கை பெற்றவர்

திருச்சக்திமுற்றத்தில் வீற்றிருக்கும் சிவக்கொழுந்தீசரை வழிபட்டுத் திருவடி தீக்கை புரியுமாறு

'பூவார் அடிச்சுவடு என்மேற் பொறித்துவை' (4-933)

என்று விண்ணப்பிக்க, இறைவன் திருநல்லூருக்கு வருமாறு திருவாய் மலர்ந்தருளினார். அதன்படி திருவருள் புரிகின்றார். அதனை,

'நனைந்தனைய திருவடியென் தலைமேல்
நல்லூர்எம் பெருமானார் வைத்தார் நல்லவாறே' (5-137)

என்ற தொடரால் வெளிப்படுத்துகின்றார்.

சூலம் இடபக்குறி பொறிக்கப் பெற்றவர்

நாவுக்கரசர் சூலம், இடபக் குறிகளைப் பொறிக்குமாறு இறைவனிடம்,

''பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு
விண்ணப்பம் போற்றி செய்யும்
என்னாவி காப்பதற்கு
இச்சையுண்டேல் இருங்கூற்றலை
மின்னாரு மூவிலைச் சூலம் என்மேற் பொறி......'' (4-1028)

என்றும்

''.........................
இடபம் பொறிந்து என்னையேன்று கொள்'' (4-1030)

என்று இங்ஙனம் விண்ணப்பம் செய்கிறார். விண்ணப்பத்தினை இறைவன் ஏற்று அருளிய திறத்தை, சேக்கிழார்,

''.......சிவபூத
மாடொருவர் அறியாமே வாகீசர் திருத்தோளில்
சேடுயர் மூவிலைச் சூலம் சினவிடை யினுடன் சார்த்த''
(திரு.நா.பு.152)

என்று குறிப்பிட்டுள்ளார்.

அற்புதங்களின் வெளிப்பாடு

திருநாவுக்கரசரின் பாடல்களுக்கு இசைந்து இறைவன் பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார். அவற்றை நாவரசர் தம் பதிகங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

திருமறைக்காட்டில் திருநாவுக்கரசர் திருப்பதிகம் (11 பாடல்கள்) பாடக் கதவு திறந்தது. திருஞானசம்பந்தர் முதல் திருப்பாட்டுப் பாடியவுடன் கதவு அடைத்தது. இறைவனுடைய திருவுள்ளக் குறிப்பை அறியாது அயர்ந்தனமே என்று வருந்திய நாவுக்கரசரிடம், திருவெண்ணீற்றுத் திருமேனியராகக் காட்சி நல்கித்,

"திருவாய்மூரில் இருப்போம் தொடர்ந்து வா"

என இறைவன் அருளிச் செய்யலானார். அதனைத் திருவாய்மூர்ப் பதிகத்தில், "அஞ்சேல் உன்னை அழைக்க வந்தேன்" என்றார் (5-501).

"எங்கே என்னை இருந்து இடம்தேடிக் கொண்டு
அங்கே வந்து அடையாளம் அருளினார்
தெங்கே தோன்றும் திருவாய் மூர்ச்செல்வனார்
அங்கே வாஎன்று போனார் அதுஎன் கொலே?"

இறைவனை நேரில் கண்டதையும், அவருடன் தொடர்ந்து ஓடி வந்ததையும் தம் பதிகத்தில் பதித்துள்ளார் (5-502).

'திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தார்உந் நின்றார்' (5-506)

என்ற பாடலில் திருமறைக்காட்டில் திருக்கதவம் திறந்த அற்புதம் வெளிப் படுகின்றது.

இறைவனின் திருவருளால் சுண்ணாம்பு நீற்றறையே, பொய்கையாக உணர்கிறார். கல்லும் தெப்பமாகிறது. இதனைப் பதிகங்களில் பொதுவாகக் கூறியுள்ளார்.

"கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே" (4-104)

சமணர்கள் செய்தார்கள் என்று சுட்டிக்காட்டவில்லை. ஆனால் சமணர் அளித்த நஞ்சு அமுதமான அற்புதத்தை,

"வஞ்சனையாற் சோறாக்கி வழக்கிலா அமணர்தந்த
நஞ்சமுது ஆக்குவித்தார் நனிபள்ளி அடிகளாரே" (4-683)

என்ற தொடர்களில் வெளிப்படுத்துகின்றார்.

இறைவன் சோலை அமைத்துப் பொதிசோறு அருளிய திறத்தையும், அரவு தீண்டிய பாலகனை உயிர்ப்பித்த திறத்தையும் பதிகங்களில் வெளிப் படுத்தியதாகத் தெரியவில்லை.

சமணர்களால் மறைக்கப்பட்ட கோயிலை அறிந்து, உண்ணா நோன்பிருந்து இறைவன் திருவருளால் வணங்குகிறார்.

தவற்றிற்கு வருந்துதல்

தமக்கையராகிய திலகவதியாரின் அருள் சொல்லை இகழ்ந்து வெளியே சென்ற பழைமை நிலையை உணர்ந்து,

"காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்"

நீரின் ஆழத்தில் சிக்கித் தடுமாறப் பின் மீண்டு எழும் வழித்துறை அறியாது தவிப்பது போன்று நைகின்றேன் என்கிறார் (4-5).

சமண சமயத்தில் சேர்ந்திருந்த தவற்றிற்கு மிகவும் வருந்துகிறார்.

'கையினால் தொழாது ஒழிந்து கனியிருக்க
காய்கவர்ந்த கள்வனேன்' (4-42)

எண்ணிலாச் சமணரோடே
இசைந்தனை ஏழை நெஞ்சே! (4-391)

என்று பல பதிகங்களில் வருத்தத்தை வெளிப்படுத்துகின்றார். (5-572, 5-29)

சிவபெருமான் இராவணனுக்கு அருள் புரிந்த திறத்தினை இறுதியில் எடுத்துரைப்பதற்குக் காரணம், இராவணனது தவற்றை இறைவன் பொறுத்தருளியது போல் தம் தவற்றையும் இறைவன் பொறுத்தருள வேண்டும் என்ற கருத்தில் எடுத்துரைக்கின்றார்.

துன்ப உணர்வின் வெளிப்பாடு

நாவுக்கரசர் இளமையிலேயே பெற்றோரை இழக்கிறார். தமக்கையாருக்கு மணம் பேசி வைத்திருந்த கலிப்பகையார் இறந்துவிடுகிறார். இத்துன்ப உணர்வினைத் தம் பதிகங்களில் வெளிப்படுத்துகிறார்.

"எம்மையாரிலை யானும் உளேனல்லேன்"

"என்னில் ஆருமு எனக்கினியா ரில்லை
என்னிலும் இனியான் ஒருவன் உளன்"

என்ற இப்பாடலில் தமக்கு யாரும் இல்லை என்ற வருத்தத்தை வெளிப் படுத்துகிறார். அதே நேரத்தில் இறைவன் தமது உயிர்ப்புச் சக்தியாய் இருந்து, புறத்திலும் இருந்து காப்பவன் என்ற நம்பிக்கையையும் இவரிடம் காண முடிகின்றது.

'உற்றார் ஆருளரோ-
ஒரு பற்றிலாமையும் கண்டு இரங்காய்
கச்சியே கம்பனே' (4-96)

'நின் பாதம் அல்லால்
மற்றொரு மாடுஇலேனே' (4-961)

என்னும் தொடர்கள் கழிவிரகத்தைக் காட்டுகின்றது.

இறைவனிடம் வேண்டும் விண்ணப்பங்கள்

இறைவனைத் தாம் மறந்தாலும் அதாவது, உணவு கொள்கின்ற போதும், பட்டினியாய்ப் பசித்துள்ள போதும், உடற்பிணியால் தளர்ச்சி யுற்ற போதும், உறக்கத்திலும், ஐம்புலன்களால் சார்ந்து என் நிலை மறந்து இருந்த போதும், இறைவன் மறக்காமல் அருள் புரிய வேண்டும் என்று வேண்டுகிறார் (4-928).

'கூற்றம் கண்டு உம்மை மறக்கினும்
என்னைக் குறிக் கொள்மினே' (4-929)

என்கிறார். உயிர்க்கும் பொழுதெல்லாம் ஈசன் நினைவுடையராக இருந்தாலும் அத்தனையும் மறந்து அவருக்கே பிச்சியானாலும், இறைவனை மறக்கும் தருணத்தைக் கூறும் பொழுது, யதார்த்தம் மிளிர்வதுடன், உலக மக்களுக்காக ஞான நிலையில் நின்று இறைவனை வேண்டுகிறார்.

நாவுக்கரசரின் வரலாற்றில் அவர் இல்லறத்தில் ஈடுபட்டதாகச் செய்தி இடம் பெறவில்லை. ஆனால் அவரது பதிகங்களில் பல பாடல்களில் மனை வாழ்க்கையில் மகிழ்ந்து, இறைவனை மறந்திருந்ததாகவும், ஐம்புலன்கள் தம்மை ஆட்டிப்படைப்பதாகவும் கூறி, அதிலிருந்து தம்மை விடுவிக்க வேண்டும் என வேண்டுவது, 'பொறியிலா அழுக்கை யோம்பிப் பொய்யினை மெய்யென்றெண்ணி நெறியலா, நெறியில் செல்லும்' உலக மக்களுக்காகவே (4-521) பாடுகின்றார். 'ஐவர் வந்து கலக்காமை காத்துக்கொள்வாய்' என வேண்டுகிறார்.

உணவு முதலானவற்றால் வளர்க்கப்படும் இவ்வுடம்பானது 96 தத்துவங்களால் மேவி விருத்தி செய்யப்படுகிறது. மேலும் ''தனக்குத் தேவையெனவும், தருக எனவும் கேட்டுக்கொண்டே இருக்கின்றது, வருத்தத்தையும் தருகின்றது'' (4-252) அதனால் நான் உய்யும் நெறி அறியாதவனானேன் (4-655) என்ற நாவரசர் உலக மக்களுக்காகவே இறைவனிடம் வேண்டுகிறார்.

இளமையிலேயே உற்றாரை இழந்தமையால் இவரது பாடல் களில் நிலையாமை உணர்வு வெளிப்படுகின்றது.

'மனைவிதாய் தந்தை மக்கள் மற்றுள சுற்றமென்னும்
வினையுளே விழுந்தழுந்தி வேதனைக்கு இடமாகாதே'
(4-688)

என்று மானிடர்க்கு அறிவுரை பகர்கின்றார். இறைவனின் திருவடிவத்தைக் (4-1039-1049) கேசாதி பாதமாகவும், பாதாதி கேசமாகவும் போற்றி, அவை அனைத்தும் தஞ்சமாவாழும் சரக்கறை தம் நெஞ்சம் என்று கூறி, தம் உள்ளம் இறைவனின் கருவூலப் பெட்டகமாக விளங்குவதை

உணர்த்துகின்றார். 'செல்வம் என்பது சிவனென்னும் ஓசையை செவியால் கேட்டு இன்புறுதல். நாம் சேர்த்து வைக்கும் பொருளும் நமச்சிவாய என்ற நாமம் என்று கருதுகிறார் (4-773). நாவுக்கரசர் தெளிவாக "அஞ்செழுத்து ஓதினால் வினையாகிய நோய் விலகிச் செல்லும்' (5-605) என்பதை உறுதியுடன் சொல்கிறார். பிறவியை வெறுத்தவர் இறை இன்பத்தில் திளைத்தபின், மனிதப் பிறவியை விரும்புவதுடன் 'வாய்த்தது நந்தமக்கு ஈது ஓர் பிறவி மதித்திடுமின்' என்றும் (784) குறிப்பிடுகிறார்.

1. இறைவனுக்கு ஆட்படுதல் 2. இறைவனுக்குத் தன் உள்ளத்தை அளித்தல் 3. நினைத்துக் கொண்டேயிருத்தல் 4. இறைவனின் திருவருள் திறத்தையும், தோற்றப் பொலிவையும் போற்றிப் பாடுதல் 5. மலர், தூபம் போன்ற பூசனைப் பொருள் கொண்டு முறைப்படி வழிபாடு நிகழ்த்துதல் 6. சிவபெருமானுக் குற்றேவல் செய்தல் 7. அதாவது மனத்தாலும் காயத்தாலும் பக்தி செலுத்துவதை இவரது பாடல்களில் வெளிப்படுத்துகின்றார்.

பல பாடல்களில் தம்மைத் தாமே தாழ்த்திக் கொள்கிறார். 'நாமார்க்கும் குடியல்லோம் என்ற பாடலில் பெருமித உணர்வு வெளிப் படுகின்றது. திருஞான சம்பந்தரை வணங்குவதில் இளையோரை மதிக்கும் பெற்றி விளங்குகிறது. சிவபெருமான் எழுந்தருளியுள்ள அனைத்துத் தலங்களுக்கும் சென்று தலப்பெருமைகளையும் இறைப்பெருமையையும் பாடிய வித்தகர் நாவுக்கரசர்.

34. நாவுக்கரசரின் சமூகத் தொண்டு

பெ. கௌரி, சென்னை.

உலக மக்கள் நல்லவண்ணம் மகிழ்வுடன் வாழ வேண்டும் என்பதற்காகப் படைக்கப்பட்டிருந்தாலும், தம் அறியாமையினாலும் கடவுளை மறந்து தன்னலப் பித்தரானதாலும் பல்வேறு இன்னல்களுக்கும் துன்பங்களுக்கும் ஆளாகித் தவிக்கின்றார்கள். இப்படிக் கடைத்தேற வழிதெரியாமல் தவிக்கின்ற மக்களைக் கடைத்தேற்ற வந்த பெரியோருள் அப்பரடிகள் என்று அழைக்கப் பெறும் திருநாவுக்கரசர் ஏழாம் நூற்றாண்டில் தலைசிறந்து விளங்கியவர். தமிழகப் பக்தி இலக்கிய வரலாற்றில் அப்பரடிகளுக்குத் தனியிடமுண்டு என்பதைச் சைவநெறியாளர்கள் அனைவரும் ஒப்புக் கொள்வர். தொண்டு செய்வதையே தம் வாழ்கையாகக் கொண்டு, **"தொண்டலால் துணையு மில்லை", "என் கடன் பணி செய்து கிடப்பதே"** என்று தன்னுடைய குறிக்கோளைத் தம் பாடல்களில் பலவிடங்களில் சுட்டிக் காட்டியவர்.

பெரியபுராணத்தில் இவரை அறிமுகம் செய்யும் பொழுது சேக்கிழார் பெருமான்,

> **"மார்பாரப் பொழி கண்ணீர் மழைவாரும் திருவடிவும்**
> **மதுரவாக்கில் சேர்வாகும் திருவாயில் தீந்தமிழின் மாலைகளும்"**
> **செம்பொற்றாளே சார்வான திருமனமும் உழவாரத் தனிப்படையும்**
> **தாமுமாகிப் பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்து**
> **ஏத்திப் பரவிச்செல்வார்** (பெரி. நாவு. 225)


என்று திருவாமூரில் பிறந்த மருள்நீக்கியாரின் மனம், வாக்கு, காயம், செயல் இவற்றின் தன்மைகளைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறார்.

தொண்டுக்கு இலக்கணமாக - உதாரணமாகக் காட்டும் வகையில் எளிய தோற்றத்தில் அரிய சாதனைகளைப் படைத்தவர். சமுதாயச் சீரமைப்புப் பணியில் அப்பரடிகள் மேம்பட்டு விளங்கினார் என்பதை **"இங்கர்சால், பிளேட்டோ, சாக்ரடீஸ் போன்றவர்களைவிட சமுதாயச் சீர்திருத்தத்திற்குத் தகுதியுடைய பெரியார் அப்பரடிகள் என்பது நமது ஆழ்ந்த நம்பிக்கை"**. (ப. 10, அப்பர் விருந்து) என்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் எடுத்துக்காட்டுகின்றார்.

இவ்வாறு தொண்டு செய்வதையே உயிர் மூச்சாகக் கொண்ட அப்பர் பெருமானின் தொண்டு நெறியினைப் பொது நிலையில் 1. வாய்த் தொண்டு 2. கைத்தொண்டு எனக் கொள்ளலாம்.

வாய்த்தொண்டு என்பது அவரது பாடல்களையே குறிக்கின்றது. அவரது பாடல்களின் வழி, பெறப்படும் அவரது உயரிய கருத்துக்களைச் சிறப்பு நிலையாகத் தமிழ்த் தொண்டு, சமயத் தொண்டு, கலைத் தொண்டு, சமூகத் தொண்டு என மேலும் பகுத்துக் கொள்ளலாம். கைத்தொண்டு என்பதில் அடியவர்களுக்கும், ஆண்டவன் திருக்கோயில் களுக்கும் தம் உடம்பால் செய்த தொண்டைக் கொள்ளலாம்.

இதனைப் பின்வரும் வரை - கோடு விளக்கம் தெளிவுபடுத்தும்.



என விரித்துணரலாம்.

தமிழ்த் தொண்டு

'முத்தமிழுக்கு மூவர்' என்று தேவார மூவருமே சிறப்பாகப் போற்றப்பட்டாலும் தமிழ்விடு தூது என்ற நூலில் தமிழை அழைத்துப் பாடுகையில் 'அப்பரடிகள் என்பர் தமிழே' என்று தமிழே அப்பரடிகள் என்று குறிப்பதாலும்.

சேக்கிழார் பெருமான் 'இன்தமிழ் ஈசர்' என்றும் 'திருவாயில் தீந்தமிழின் மாலைகளும்' என்றும் 'நாவலூரன் சொல் என்பது நாடிய இன்தமிழே' என்றும் பல இடங்களில் தமிழுக்குக் கதியானவர் என்பதை எடுத்து விளக்குவதாலும் தம்முடைய முதல் திருப்பதிகத்தில்,

> "சலம் பூவோடு தூபம் மறந்தறியேன்
> தமிழோடு இசை பாட மறந்தறியேன்"

என்று தமிழிசைத் தழைக்கச் செய்ததும் பன்னிரு திருமுறைகளில் ஆறாம் திருமுறையாக அமைந்திருக்கும் 99 பதிகங்களும் தாண்டகம் என்ற யாப்பு

முறையில் அமைந்து திருநாவுக்கரசரைத் "தாண்டக வேந்தர்" என்று சொல்லக் கூடிய வகையில் அவரின் மூல இலக்கியமாக அமைந்ததும் சிறப்பு. மேலும்,

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்"

என்பன போன்ற பாடல்களின் மூலம், தெரிந்த ஒன்றிலிருந்து தெரியாத ஒன்றை உணர்ந்து கொள்ளுதல் என்பதன் வழி, சிற்றின்பத்திலிருந்து பேரின்பத்திற்கு வழிகாட்டியாக, அகத்துறைப் பாடல்களின்வழி பக்தியைப் பரப்பியமையும் சிறந்த தமிழ்த் தொண்டாக அமைகின்றன.

சமயத் தொண்டு

புகழனார், மாதினியாருக்கு மருள்நீக்கியராகப் பிறந்து வளர்ந்தவர், தருமசேனராக சமணம் தழுவியதும் பின்னர் அதனை விட்டு நீங்கித் தமக்கை திலகவதியாரின் வேண்டுதலால் திருநாவுக்கரசர் என்று இறைவனே அழைக்கும் பேறு பெற்றதும் அறிந்ததே. சைவக் குலத்தில் பிறந்து சமணராகி மீண்டும் சைவத்திற்கு வந்து என்று இப்படி மதங்களுக் கிடையே தம்மை மாற்றிக் கொண்டது மெய்ம்மை தேரும் முயற்சியும், கொல்லாமையில் அவருக்கிருந்த பற்றுமே காரணங்கள் என்பார்கள். உண்மை உணர்ந்தபின் சமண, பௌத்த சமயங்களை எதிர்த்து வாதிட்டது சமய வெறியால் அன்றி மக்களுக்கு உண்மை உணர்த்தும் நோக்கிலேதான். சமயத்தின் வழி பக்தியைப் பரப்பியதோடு "கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி வீடும் வேண்டாத" வித்தகராகி சமயத்தின் வழி சமூகத்தையும் பார்த்தவர். ஒற்றுமையே பிரதானம் என்பதையும் வலியுறுத்தி,

"சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லாராகில்
அங்க மெல்லாம் குறைந்தழுகு தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே.

என்று எப்படிப்பட்டவராயினும் பக்தியில் சிறந்தவரென்றால் அவரோடு கூடி வாழ்தல் உயர்வு எனச் சமயத்தின் மூலம் பக்தியையும் ஒற்றுமையையும் வலியுறுத்துகின்றார்.

கலைத் தொண்டு

சேக்கிழார் நாவுக்கரசைப் பற்றி எடுத்துக் கூற வரும் பொழுது,

"அலகில் கலைத்துறை தழைப்ப
அருந்தவத்தோர் நெறிவாழ

உலகில் வரும் இருள்நீக்கி
ஒளிவிளங்கு கதிர்போல்'' (பெரி. 1288)

வந்தார் என்பதன் மூலம் பல்வேறு கலைகளையும் வளர்ப்பதற்கு வந்து தோன்றியவர் என்பது பெறப்படும் - இசையுடன் பாடுவதும், இசை கேட்டு மகிழ்வதும் பாவம் என்றிருந்த காலக் கட்டத்தில், ''இசையோடு தமிழ்ப் பாட மறந்தறியேன்'' என இசைத் தமிழை வளர்த்தவர். தாம் பாடிய நான்காம் திருமுறை முழுவதும் இசைப்பாடல்களாகவே அமைந்திருப்பதும் பண்முறைகளின் அடிப்படையில் இயற்றப்பட்ட திருப்பாட்டுகளாக அமைந்திருப்பதும், முத்தமிழில் ஒன்றான இசைத் தமிழுக்கு அவராற்றிய தொண்டைப் பறைச்சாற்றும்.

4-ஆம் திருமுறை	-	113	பதிகங்கள்	1069	பாட்டுகள்
5-ஆம் திருமுறை	-	100	பதிகங்கள்	1015	பாட்டுகள்
6-ஆம் திருமுறை	-	99	பதிகங்கள்	980	பாட்டுகள்
		312		3064	

எனத் தமிழ் இலக்கிய வரலாற்றுக்கு இவ்வளவு பாடல்களைப் படைத்ததும் அவரின் தனிக் கொடையாகும்.

சமூகத் தொண்டு

திருநாவுக்கரசரின் பாடல்களில் மிகுதியான சமூகச் சீரமைப்புக் கருத்துகள் காணப்படுகின்றன. அவை பல உட்தலைப்புகளின் கீழ் பின்வருமாறு எடுத்துக் காட்டப்படுகின்றன.

விடுதலை முழக்கம்

அப்பரடிகளின் சமூகக் கருத்துகளில் முதன்மையானது மனிதன், மனிதனாக வாழ வேண்டும். யாரும் யாருக்கும் எக்காரணத்தை முன்னிட்டும் அடிமையாக வாழக்கூடாது என்னும் விடுதலையுணர்வைத் தூண்டும் பாடல்களே. ஒருமுறை காஞ்சியை ஆண்ட பல்லவ மன்னன் திருநாவுக்கரசரை அழைத்து வருமாறு ஆணை பிறப்பித்த பொழுது, அவர் பாடிய

நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்....

என்ற பாடலே பாரதியார் போன்று பின்வந்தோருக்கு விடுதலைப் பாடல்கள் பாட வித்திட்டது. எனவே அப்பரடிகளின் வீரம் - விடுதலையுணர்வு சொல்லாமலே விளங்கும்.

பெண்மையைப் போற்றுதல் / பெண் விடுதலை

இறைவனையே மாதொரு பாகனாகக் கண்டு ''வளர்மதிக் **கண்ணியினானை**'' என்ற பாட்டில் ''**இளமணநாகு தழுவி யேறுவருவன** கண்டேன்'' என்றும் ''**மாதர்ப் பிறைக் கண்ணி யானை,** மலையாள்

மகளொடும் பாடி" என்றும் போற்றி வாழ்த்துவது போலவே குடும்பத்திலும் சம உரிமையுடன் போற்ற வேண்டுகின்றார். எனவேதான் இறைவனைத் தன் உறவாகக் காணும் பொழுதும் "அப்பனும் நீ அம்மையும் நீ என்றும் மாமனும் நீ, மாமியும் நீ" என்று பெண் உறவுகளுடனேயே சேர்த்துப் பாடுகின்றார்.

சாதிமத ஒழிப்பு

எல்லா உயிர்களுக்குள்ளும் உறைந்திருக்கும் "ஆன்மா" ஒன்றுதான். அதுவே "கடவுள்" என்று உணராத மதவாதிகளால் சாதிச் சண்டையும், சமயச் சண்டையும் இத்தனை நூற்றாண்டுகளுக்குப் பிறகும் கூட இருக்கின்றது என்றால் அப்பரடிகள் வாழ்ந்த ஏழாம் நூற்றாண்டில் அது எத்துணை தீவிரமாகத் தலைவிரித்தாடியிருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. இத்தகு சிறுமைகளைக் கண்டு எவ்வளவு கொதித்திருந்தால்,

"சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்"

என்று சாடியிருப்பார். சாடியதுடன் நிற்காமல் அதற்குத் தீர்வும் சொல்லும் வகையில்,

"அன்பலால் பொருளுமில்லை ஐயன் ஐயாறனார்க்கே"

என்று தியாக உள்ளமும், அன்பும் கொண்டு பிற உயிர்களையும் தம்முயிர் போல மதித்தால் பூசல்கள் மறையும் என்பர்.

மொழியொருமைப்பாடு

தம் காலத்தில் வழக்கிலிருந்த மொழிகளுக்குள்ளே வேற்றுமை இருக்கக்கூடாது என்று கருதியவர் அப்பர் பெருமான். எனவே அவர் தாய்மொழியுடன் பிற மொழி அறிவும் பெற்றிருத்தல் வேண்டும் என்பதை உணர்ந்திருந்ததனால்,

"வடமொழியும் தென்தமிழும்
மறைகள் நான்கும் ஆனவன்காண்",

என்று பாடியதுடன், "ஆரியன்", 'தமிழன்" என்றும் இறைவனைப் போற்றுகின்றார். எனவே இன, மொழி, மத வேறுபாடற்ற ஒருமைப் பாட்டை வேண்டினார் என்பது நன்கு தெளிவாகின்றது.

உயரிய தத்துவங்கள்

மக்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ "ஆசையை அறுமின்காள்" என்றும் "ஈதலைப் போற்றுங்கள்" என்றும் உயரிய "பக்தி நெறியில்" சென்று "அன்பால் ஒன்று படுங்கள்" என்றும் பக்தியால் இறைவனையே எல்லா உறவுமாகக் கொண்டாடுங்கள் என்றும் எடுத்துக்காட்டி வழிப்படுத்துகின்றார்.

ஈகையின் சிறப்பு

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

என்ற வள்ளுவரின் கருத்துக்கேற்ப இரப்பவர்களுக்குக் கொடுப்பதற்கே பொருளை வைத்தான். அப்படிக் கொடுத்தவர்கள் சொர்க்கத்தைப் பெறுவர் என்றும் கொடுக்காமல் மறைப்பவர்கள் கடுநரகம் புகுவார்கள் என்றும் எடுத்துக் காட்டுகின்றார். அப்பாடலானது,

இறப்பவர்க்கு ஈய வைத்தார் ஈபவர்க்கு அருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்"

என்கிறது. இதனால் இருப்பவன், இல்லாதவன் என்ற ஏற்றத்தாழ்வும் சமுதாயத்தில் மறையும் என்கிறார்.

ஆசையை அறுத்தல்

இப்பூமியில் கிடைக்கும் இன்பங்கள் பெரிதென நம்பிப் பேராசை கொண்டு அலையும் அறிவிலிகாள் இந்த உலக இன்பமானது எத்தகையது என்று கேட்டால் "உலைப்பானைக்குள் ஆமை அனுபவிக்கும் மகிழ்ச்சி" போன்றதுதான். எனவே இதற்காக ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு விழ வேண்டுமா? என்று கேட்பதுடன்,

"அரிச்சுற்ற வினையாலடர்ப் புண்டுரீர்
எரிச்சுற்றக் கிடந்தாரென் றயலவர்
சிரிச்சுற்றுப் பல பேசப்படாமுனம்
திருச்சிற்றம்பலஞ் சென்றடைந் துய்ம்மினே."

என்றும் விதியால் அலைக்கழிக்கப்பட்டுத் துன்பம் அனுபவிப்பதிலும் இறைவனையடைந்து உய்வு பெறுங்கள் என்கிறார். இதனால் பேராசையும் இறை மறுப்புமே சமூக இன்னல்களுக்குக் காரணம் என்பதையும் வலியுறுத்துகின்றார்.

உறவு நிலை

எல்லா உயிர்களில் இறைவன் இருக்கின்றான் என்பதை எடுத்து விளக்கும் அமைப்பிலே

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப்பாய் நீ

இப்பொன்நீ இம்மணி நீ இம்முத்து நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே''

என அனைத்துப் பொருள்களும் இறைவன் என உண்ணும் சோறும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் திருமால் எனக் கண்ட ஆழ்வார் போல எல்லா உறவுகளிலும் பொருளிலும் இறைவனை வைத்துப் போற்றுகின்றார். இதன் மூலம் எல்லாரும் சமம் என்ற நிலை எய்தும். இதனால் நமக்குள் போட்டி, பொறாமை, சண்டை, சச்சரவுகள் போன்ற வேறுபாடும் மறையும் என்ற சமூகச் சிந்தனையும் மலர்கின்றது.

பக்தி

சிவனைக் கண்டுணர்ந்து, சிவநெறியில் திளைத்த சிவபழம் என்று சொல்லக் கூடிய வகையில் எண்பத்தோராண்டுகள் துறவு வாழ்க்கையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அவரே பல இடங்களில் ''எங்ஙனம் உன்னை அறிவேன்'' என்றும் தேடியும் பதைபதைத்தும் பாடியிருக்கின்றார். அப்படிப்பட்ட அவர் புதிதாகப் பக்தி நெறிக்குத் தலைக்காட்டும் அன்பர்களுக்கு வழிகாட்டுவது போல எப்பொழுதும் அவனை நினைத்துக் கொண்டு இருப்பதே வழிபாடுகளில் எல்லாம் சிறந்தது என்னும் போக்கில் ''நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டான்'' என்பர். மேலும்,

உள்குவார் உள்ளத்தானை உணர்வெனும் பெருமையானை
உள்கினேன் நானுங்காண்பான் உருகினேன் ஊறிஊறி

என்று உள்ளம் உருகி நினைக்க வேண்டுவதுடன் உள்ளன்புடன் வழிபாடு செய்தலே வேண்டும். வெளி வேஷங்களால் எந்தப் பயனும் இல்லை என்னும் பொருள்படக் கூடிய வகையிலும்,

''கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடினாலும் அரனுக்கன் பில்லையேல்
ஓடு நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே''

என்றும் வலியுறுத்துகின்றார். இறைவன் எப்படிப்பட்டவன் என்று கேட்டால் ''விறகில் தீ போலவும்'', ''பாலில் படுநெய் போலவும்'' நமக்குள்ளேயே மறைந்திருக்கக் கூடியவன், அவனது பொற்பாதங்களோ

''மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே''

என மிகமிக இனிமை பயக்கக் கூடியது. அதுவும் கொடிய வெப்பமான நீற்றறையில் நிற்கும் பொழுதும் கூட அடியவர்களுக்கு மேலே சொன்ன பாடலைப் போல அருள் செய்யக் கூடியது அவனருள் என்கிறார்.

இனி, வாய்த்தொண்டின் வகைப்பாட்டினை விளக்கியது போலக் கைத்தொண்டின் சிறப்புகள் அடுத்து எடுத்துக் காட்டப்படுகின்றன.

அடியார் தொண்டு

"மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்பதையுணர்ந்தவர். இத்தொண்டானது "திருத்தொண்டு" என்று அறிந்தவர்களால் கொண்டாடப் ப்டுகின்றது. இதனை,

> "வழிபாட்டு நெறியின் வளர்ச்சியாகத் தொண்டு நெறி அமைந்தாற் போலத் தொண்டு நெறியில் பரம்பொருளுக்கு நேர்த் தொண்டு செய்தல் ஒருவகை. பரம்பொருளின் தொண்டர்களுக்குக் தொண்டராக அமைத்துக் கொள்ளல் திருத்தொண்டு நெறியாக அமைகிறது"

என்று வை. இரத்தினசபாபதி அவர்கள் (ப. 130, திருநாவுக்கரசர் ஓர் ஆய்வு) எடுத்துரைப்பதும் கொள்ளத்தக்கது.

"அடியார் அருளாள் அவனடி கூட வேண்டும்" என்ற திருமந்திரத்திற் கிணங்க (திரு. 2624) "தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம்" வேண்டும் என்று அடியார்களுக்குத் தொண்டு செய்வதையே பெரும் பேறாக விரும்பியும் பெறப்படுகின்றது. மேலும்,

> மெய்மையாம் உழவைச்செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
> பொய்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
> தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும் வேலிஇட்டுச்
> செம்மையுள் நிற்பராயின் சிவகதி விளையுமன்றே!

என இங்ஙனம் அடியார் தொண்டால் ஆண்டவனைக் கண்டு அக மகிழ்ந்ததுடன், "பிறவிப் பயனே" அதுவெனவும் உணர்ந்து உணர்த்துகின்றார்.

ஆண்டவன் திருக்கோயில் தொண்டு

தருமசேனரான, மருள்நீக்கியார் மீண்டும் சைவம் வந்து "கூற்றா யினவாறு விலக்ககலீர்" என்று பாடிய பாடலுக்குப் பிறகு இறைவனால்

"நாவுக்கரசு என்று உலகேழினும் நின்நாமம் நயப்புற மன்னுக"

என்று அருளப்பட்டது முதல் ஆங்காங்கே உள்ள சிவன் கோயில் களுக்கு நேரில் சென்று பதிகங்கள் பாடியதுடன் அப்படிச் சென்ற இடங்களில் உள்ளக் கோயில்களைப் பேணும் பொருட்டு உழவாரத் திருத்தொண்டும் புரிந்தார். தாம் புரிந்ததோடு மக்களும் அத்தொண்டு புரிய வேண்டும் என்ற வகையில்,

> நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
> நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்குப்

புலர்வதன் முன்அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்...

என்று தம் நெஞ்சுக்குரைப்பது போல் மக்களுக்கு எடுத்துக் கூறுகின்றார்.

உழவாரம் என்பதே தொண்டு என்ற பொருளில் வை. இரத்தினசபாபதி அவர்கள் தம்முடைய திருநாவுக்கரசர் ஓர் ஆய்வு என்ற நூலில்,

"ஆழ்ந்து செல்லும் அன்பு என்பதே உழவாரம். அன்பானது அருள் என வளர்ந்து அத்துடன் நின்ற நிலை ஒன்று மீண்டும் அன்பானது ஆர்வம் என, நாடாச் சிறப்பு எனப் பெறும் "நண்பு" என ஆழ்ந்து வளர்ந்து நின்றது என்பதை உணர்த்தவே "உழவாரம்" என்ற பெயர் அமைந்தது.

"தொண்டு" என்பதே தொண்மை நிலை ஒன்றே இரண்டாய் பின் மூன்றாய் நின்ற அன்பே, "தொண்டு" என்ற நிலையைத் தந்தது. உழவாரம் தொண்டுக்குரிய கருவி மட்டுமன்று தொண்டே உழவாரம்....

...."உழவாரமே ஆண்டானையும் அடிமையையும் இணைய நிறுத்தி பின்னர் அத்தகைய வேற்றுமைகளைக் களைய நிறுத்தி, நான் இட்டுக் கூறவும், இல்லேன் எனவும் அமைய நிறுத்திய தொண்டு எனப் பெறும் தொன்மை நிலை, ஒன்பது ஒத்த நிலை. அதுவே சாவா மூவாச் சிங்கம்"

என நின்றது. அதன் பொன்னடியைச் சார்ந்து புனிதன் என நின்றார் அப்பரடிகள்.

இவ்வாறு தொண்டின் அடையாளமான உழவாரப் படை கொண்டு பல கோயில்களில் திருப்பணி செய்யும் பொழுது "ஓடும் செம்பொன்னும் ஒக்கவே கண்டு" பற்றற்ற நிலையில் பரம்பொருளை நாடியவர் அப்பர் பெருமான்.

இங்ஙனம் எண்பத்தோராண்டுகள் வாழ்ந்த அப்பரடிகளின் வாழ்க்கை வரலாற்றை ஆராய்ந்து ஒரே வரியில் சொல்ல வேண்டுமானால் "தொண்டு நெறியிலிருந்து திருத்தொண்டுக்கு உயர்ந்தது" எனச் சொல்லலாம்.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே".

என்று மீண்டும் இறைவழிபாட்டிற்காகப் பிறவி வேண்டினாலும் எடுத்த இந்த மானிடப் பிறவியிலேயே மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து கடைத்தேற வழிகாட்டும் சமுதாயச் சீரமைப்புத் தொண்டராகத் திகழ்கிறார். மற்றவர்களும் அங்ஙனம் வாழ வழிகாட்டுகின்றார்.

35. திருநாவுக்கரசரின் சைவநெறி

வே. சசிகலா, மேலகரம்.

சைவநெறி தழைத்தோங்க அவதரித்தவர் திருநாவுக்கரசர். மணி என்றும், மாமறைக்காட்டு மருந்து என்றும், சிவன் திருப்பாதம் தம் சென்னி வைக்கப்பெற்றவர் என்றும், தென்கடலில் கல் மிதப்பத் தந்தவர் என்றும் பற்பல சிறப்புகளைப் பெற்றவர் திருநாவுக்கரசர். அவரது சைவநெறி தனிச்சிறப்பு வாய்ந்தது. திருநாவுக்கரசர், சைவநெறி இன்னதுதான் என்பதை விளக்கியவர் என்பது மட்டுமின்றி அந்த நன்னெறியைப் பின்பற்றி வாழ்ந்து காட்டியவரும் கூட. நாவரசரின் சைவ நெறியினை அவரது பாடல்கள் விரிவாக எடுத்துரைக்கின்றன. தெள்ளுதமிழில் பல்லோரும் உணரும் வண்ணம் திருநாவுக்கரசர் எல்லோரும் பேண வேண்டிய சிவ வழிபாட்டு நெறிகளை உரைத்துள்ளார். நாவுக்கரசர் வகுத்துள்ள சைவ நெறிகள் சீரிய தன்மையின, செறிவு பெற்றன, சாதாரணமானவர்களும் பின்பற்றத் தக்கன. மக்கட் சமுதாய மேம்பாட்டிற்காகவும், மனித மாண்பிற்காகவும் திருநாவுக்கரசர் வகுத்துள்ள சைவநெறிகளை இக்கட்டுரை எடுத்து விளக்குகிறது.

வழிபாட்டு முறைகள்

ஆன்றோர்கள் சிவவழிபாட்டு முறைகளை நான்காக வகை செய்துள்ளனர். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாம். இவற்றுள் சரியை என்பது சீலத்தையும், கிரியை என்பது நோன்பினையும், யோகம் என்பது செறிவினையும், ஞானம் என்பது அறிவினையும் குறிக்கும். சைவசமயக் குரவர்கள் என்று போற்றப்படும் நால்வரும் தங்கள் சிவநெறிகளில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கங்களை வலியுறுத்தியுள்ளனர். ஒவ்வொருவரும் நான்கு மார்க்கங் களைப் பற்றிப் பேசியிருந்தாலும் அவரவர்க்குச் சிறந்ததாகக் கருதப்படுகின்ற நெறிகள் உண்டு. திருஞானசம்பந்தர் சரியையினையும், திருநாவுக்கரசர் கிரியையினையும், சுந்தரர் யோக நெறியினையும், மாணிக்கவாசகர் ஞான வழியினையும் வலியுறுத்தியதாகக் கூறுவர்.

திருநாவுக்கரசரின் தேவாரப் பாடல்களில் நால்வகை நெறிகளைப் பற்றிய கருத்துக்களும் இடம் பெற்றுள்ளன. எனினும் 'கிரியை' என்னும் நெறியினை அவர் விதந்தோதிச் சென்றுள்ளது மட்டுமின்றித் தம் வாழ்விலும் கடைப்பிடித்துள்ளார். எனவே திருநாவுக்கரசரைப் பொறுத்த மட்டில் 'கிரியை' என்னும் வழிபாட்டு நெறியினை அவர் பெரிதும் வலியுறுத்தியுள்ளார் எனலாம்.

கிரியை

அன்பர்கள் தங்கள் செயல்களால், அதாவது கிரியைகளால் இறை வழிபாடு செய்வதே கிரியை என்னும் நெறியாகும். அடியவர்கள் தங்கள் செயல்களால் பக்தியினை வெளிப்படுத்துதல் கிரியை மார்க்க மாகும். திருமந்திரமும் இதனை,

''அன்புடனே நின்று அமுதமுமேற்றியே
பொன் செய்விளக்கும் புகை தீபந்திசைதொறுந்
துன்பமகற்றித் தொழுவோர் நினையுங்கால்
இன்ப முடனே வந்தெய்திடு முத்தியே''

என்றுரைக்கிறது. கோயிலுக்குச் செல்லுதல், பூசித்தல், வழிபடுதல், மலரிடுதல், திருநாமம் உரைத்தல் போன்ற பல வழிபாட்டு முறைகளை மேற்கொள்ளுதல் கிரியை முறையாகும். திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் இதை மிகத் தெளிவாக உணர்த்தியுள்ளார்.

''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே'' (அப். தே.)

என்ற பாடல் அதனை உணர்த்தி நிற்கிறது. வாழ்த்துவதற்கு வாயும், நினைப்பதற்கு நெஞ்சத்தையும், வணங்குவதற்குத் தலையையும் நமக்கு அளித்த இறைவனை மலர் தூவி வழிபடுதல் தேவை என்றுரைக்கும் இப்பாடல் கிரியை மார்க்கத்தை எடுத்துரைக்கிறது. திருநாவுக்கரசர் பாடல்கள் எடுத்துரைக்கும் கிரியை முறைகளை வழிபடுதல், பூசித்தல், நீறணிதல், ஐந்தெழுத்தோதுதல் என்ற வகைகளில் பிரித்துக் காணலாம்.

வழிபடுதல்

இறைவனை வழிபடுவதற்கு அடிப்படைத் தேவை உண்மையான அன்பே ஆகும். திருநாவுக்கரசரும் இதனை ''வஞ்சகமற்று அன்பு கூர்தல்'' என்று குறிப்பிடுகிறார். அதுமட்டுமன்றி அகங்குழைய ''முகமெலாம் கண்ணீர் மல்க'' தொழுது முன்பணிதல் வேண்டும் என்கிறார். இதனைச் சம்பந்தப் பெருமானும் ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குதல்'' என்று உரைத்திருக்கக் காணலாம். மாணிக்கவாசகரோ எனில் ''அழுதால் உன்னைப் பெறலாமே'' என்றார். அதனையே நாவரசரும்,

''நெக்குநெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன்'' (அப். தே.)

என்கிறார். ஆக உண்மையான அன்புடன் இறைவனைப் பணிதல் வேண்டும் என்பது கருத்து. அங்ஙனம் பணியும்போது இறைவனை வாழ்த்த வேண்டும். மாதொருபாகன், மதிசூடியவன், வானவர் தலைவன், துன்பம் தரும் பிறவி நோய் அறுப்பவன், சுடலையில் ஆடும் சோதி

என்றெல்லாம் இறைவனை ஏத்தி மெய்யன்புடன் வழிபடுதலே நாவரசர் உணர்த்தும் நெறியாகும்.

பூசித்தல்

இறைவனை நாளும் பூசித்து வணங்குதல் வேண்டும். பூசிக்கும் முன் பூசிப்போர் நீரில் மூழ்கித் தமதுடலைச் சுத்தம் செய்ய வேண்டும். பூசித்தல் முறையை விளக்கம் திருநாவுக்கரசர் பூவினால் பூசித்தலைப் பெரிதும் வற்புறுத்துகிறார்.

> "பூக்கையால் அட்டிப் போற்றி என்னாத இவ்
> வாக்கையாற் பயனென்" (அப். தே.)

என்பது அவர் கேள்வி. மலர் வழிபாட்டிலும் பன்மலர் தூவுதல் தேவை என்பது அவர் கருத்து. நறுமலர், கடிமலர், தூமலர், பன்மலர் எனத் தம் பதிகங்களில் பல இடங்களில் குறிப்பிடும் திருநாவுக்கரசர் நல்ல மலர் களைக் கை நிறைய எடுத்துத் தொழுது பூசித்தலை வலியுறுத்துகிறார். இதனை அவர் "நகமெலாந்தேயக் கையில் நாண்மலர் தொழுது தூவி" என்று பாடுகின்றார். மேலும் பூவிட்டுப் பூசிக்கும்போது இறைவனுக்கு நன்னீராட்டி, குங்குமக் குழம்பு சாத்தி அலங்கரித்தலும் வேண்டும் என்கிறார். அது மட்டுமின்றித் தூபம் தீபம் நல்ல நறுஞ்சாந்தம் கொண்டேத்த வேண்டும் என்றும் திருநாவுக்கரசர் குறிப்பிடுகிறார். ஆக இறைவனின் திருமேனிக்கு அழகூட்டித் தூபம், தீபம் ஏற்றி மலர் கொண்டு மெய்யன்புடன் உள்ளங் கசிந்து வழிபட வேண்டும் என்பதே திருநாவுக்கரசர் காட்டும் நெறியாகும்.

நீறணிதல்

சின்னங்களில் மிகவும் ஈடுபாடு கொண்டவர் திருநாவுக்கரசர். சமணர் குழுவிலே வாழ்ந்த தம்மைத் தம் அடையாளம் இட்டுச் சிவன் ஏற்க வேண்டும் என்று அவர் விரும்பி வேண்டினார். திருத்தூங்கானை மாடத்து இறைவன் அருளில் ஒருவரும் அறியாவண்ணம் ஒரு பூதம் வந்து, வாகீசப் பெருந்தகையின் திருத்தோளில் மூவகைச் சூலப் பொறியையும், விடைப் பொறியையும் இட்டது. அடையாளங்களைத் தம்மெய்யில் இட்டால் தான் வாழ்வேன் என்ற வைராக்கியம் கொண்ட நாவரசர் அவற்றைப் பெற்றவுடன் உய்ந்தேன் என்று அகமகிழ்ந்தார். எனவே சிவச் சின்னங்களைத் தரிப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டியவர் திருநாவுக்கரசர். திருநீறு என்பதும் ஒரு சிவச் சின்னம். அதை அணிவதைத் திருநாவுக்கரசர் வலியுறுத்துகிறார்.

> "கங்காளன் பூசுங் கவசத்திருநீற்றை
> மங்காமல் பூசி மகிழ் வீரேயாமாகில்
> தங்காவினைகளுஞ் சாருஞ் சிவகதி
> சிங்காரமான திருவடி சேர்வரே"

திருநீற்றின் மகிமையைத் திருஞானசம்பந்தரும், திருநீற்றுப் பதிகத்தில் புலப்படுத்துகிறார். அந்தச் சைவ மரபால் வந்த திருநாவுக்கரசரும் நீற்றினை

நிறையப் பூச வேண்டும் என்கிறார். விடிந்ததுமே வெண்ணீற்றை மெய்யிற் பூச வேண்டும் என்பது அவர் கருத்து. அவர்,

> ''திருவாய்ப் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
> தருவாய் சிவகதி'' (அப். தே.)

என்று பாடுகிறார். திருநீறணிந்து சிவனை வழிபடவேண்டும் என்பது நாவரசர் காட்டிய நெறியாகும்.

திருவைந்தெழுத்தோதுதல்

''நமசிவாய'' என்பது திருவைந்தெழுத்து ஆகும். உலகத்தில் அனைத்துமாய் இருப்பதுடன் அதில் ஊடுருவி இருந்து அதை ஆளும் இறைவனை வணங்குகிறேன் என்பதை இதன் பொருள். உயிருள்ள உடலுக்கு இருதயமே முக்கியமானது. மூளை இல்லாது போனாலும் வாழலாம். ஆனால் இருதயம் இயங்காவிட்டால் வாழ்வே இல்லை. எனவே உடல் வாழ்க்கையில் இருதயத்தை ஒத்தது, சமய வாழ்வில் திருவைந்தெழுத்து. திருவைந்தெழுத்தை இடையறாது உச்சரிப்பவர் சிவவடிவம் ஆகின்றனர். இறைவனைக் கூவி அழைக்கத் திருவைந்தெழுத்தே போதும். எல்லா மந்திரகட்கும் ஆதியாய், மூலமாய் உள்ள மந்திரம் திருவைந்தெழுத்து. ''ஆதிமந்திரம் அஞ்செழுத்து'' என்பது சேக்கிழார் வாக்கு. இந்த ஐந்தெழுத்தின் சிறப்பையும், அதனை ஓதுவதால் நேரும் பயனையும் நாவரசர் தெளிவாகப் புலப்படுத்துகிறார். ஐந்தெழுத்தை ஓதுவதற்குப் பெரிய ஞானம் தேவையில்லை. ஒன்றுமறியா வேடனே நாம செபத்தால் முனிவராகவில்லையா? உணர்ந்து சொன்னாலே போதும் என்கிறார் திருநாவுக்கரசர். ''ஐந்தெழுத்து தவப்பயன் தரும். உடற்பிணியை மாற்றும். உயிர் நோயாகிய பிறவியை அறுக்கும். நாவிற்கு அணிகலனாகும் ஐந்தெழுத்து அக இருள் நீக்கும். நல்லகத்தை உருவாக்கும்'' என்றெல்லாம் திருவைந்தெழுத்தின் சிறப்பை உணர்த்தும் நாவரசர் இதனை ஓதாதவர் பிறவாப்பயனை அறுக்கவே முடியாது என்கிறார். பாவமறுப்பது, நடுக்கம் கெடுப்பது, நலமிகக் கெடுப்பது, நன்னெறியாவது "நமசிவாய" எனும் மந்திரமே என்றுரைக்கும் திருநாவுக்கரசர்,

> ''கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
> நற்றுணையாவது நமச்சிவாயவே'' (அப். தே.)

என்று உறுதிபடக் கூறுகிறார். ஐந்தெழுத்தின் மகிமையைத் தனிப் பதிகமாகவே திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் பாடியுள்ளனர் என்பது கருதத்தக்கது.

1. திருநாவுக்கரசர் சைவநெறியினை நிலை நாட்டி வளர்த்தவர்.
2. திருநாவுக்கரசர் நான்கு மார்க்கங்களுள் கிரியைக்கு முக்கியத்துவம் தருகிறார்.
3. வழிபடுதல், பூசித்தல், நீறணிதல், திருவைந்தெழுத்தோதுதல் ஆகிய வற்றைக் கிரியை முறைகளாக வகுத்துள்ளார்.

36. சித்தாந்த நெறியும் நாவுக்கரசரும்

சு. சண்முகசுந்தரம், மதுரை.

"கூற்றாயினவாறு விலக்ககலீர் கொடுமை பலசெய்தன நானறியேன்
ஏற்றாடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கிமுடக்கிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில வீராட்டானத் துறை
அம்மானே'' (திருவதிகை - 1)

தருமசேனர் திருவதிகை வீரட்டானமடைந்து ஆண்டுள்ள திருக்கோயிலைத் தொழுது இறைவனை இறைஞ்சத் தமிழ் மாலை யினைச் சார்த்தும் உணர்வு பெற்றார். அவ்வுணர்வு சூலைநோயைப் போக்குமளவில் மட்டும் அமையாது உலகரைப் பற்றியுள்ள பிணி மாயையினை அறுத்திடும் பொருட்டுக் ''கூற்றாயினவாறு விலக்ககலீர்'' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினார் என்பர் சேக்கிழார்.

பிணியாவது இறைவன் அருளாகித் திரோதான உருவத்தில் நின்றதனை அருட்சத்தியாக மாற்றல். மாயையாவது முன்னர் இருளாய் நின்றதனை ஒளியாக மாற்றுதல். இவ்விரண்டையும் செய்தற் பொருட்டே ''தோதில் திருப்பதிகம்'' நாவுக்கரசர் பாடினார். ''தோதில்'' என்றதனால் பாசநீக்கமும் திரு என்றதனால் சிவப்பேறும் குறிக்கப்பெற்றன. எனவே இப்பதிகம் திருவைத்தரும் பதிகமாகும். அப்பரை அடைந்த சூலைநோய் ஆண்டவன் அவருக்குக் கொடுத்த தண்டனையே எனினும் அந்நோய் அவர்க்கு நன்மையே விளைத்தது.

ஆன்மாக்களை அருளால் ஆட்கொள்ளவே இதுபோன்ற துயரங் களை இறைவன் அருள்வான். நாவுக்கரசர்க்கு இறையருளால் சூலைநோய் ஏற்பட்டது எனலாம். இதனை ''மறக்கருணை'' என்பர்.

''நீக்கிரங்கள் தானும் நேசத்தால் ஈசன் செய்வது
அக்கிரமத்தால் குற்றமடித்து ஈர்ந்து அச்சம் பண்ணி
இக்கிரமத்தினாலே ஈண்டு அறமியற்றி டென்பன்
எக்கிரமத்தினாலும் இறைசெயல் அருளேயாகும்''

(சித்தியார் - 105)

''தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தஞ்சொல் ஆற்றின்
வந்திடாவிடன் உறுக்கி வளாரினால் அடித்துத் தீய

பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடின் அருளேயாகும்
இந்தநீர் முறைமை யன்றோ ஈசனார் முனிவும் என்றும்"

என்பர் சித்தியாசிரியர். நினைந்துருகும் அடியாரை நையவைத்து ஆட்கொள்வது அவன் தன் செயலாகும் என்பதை அப்பரடிகளே கூறியுள்ளார்.

சிவமயம் - அப்பர்

"மாதர்பிறைக் கன்னியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந்து ஏத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்
யாதும் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதல் மடப்படி யோடும் களிறு வருவன கண்டேன்".

"கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்
கோழி பெடையொடு வருவன கண்டேன்
குயில் பெடையொடு வருவன கண்டேன்" (பதிக எண் - 3)

என்பர். திருநாவுக்கரசர் திருவையாற்றில் எல்லாப் பொருள்களையும் சிவமயமாகவே கண்டார். இதனைச் சிவஞானசித்தியார்,

"சீவன் முத்தர்கள் சிவமே கண்டார்
பரஞா னத்தால் பரத்தைத் தரிசித்தோர்
பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்"

எனும் ஆணெலாம் சிவவடிவம், பெண்ணெலாம் சக்தி வடிவம் எனக் காணப் பழகுக என்பது சைவ சமயக் கோட்பாடு.

நன்னெறி - அப்பர்

"முன்னெறி யாகிய முதல்வன் முக்கணன்
நன்னெறி யேசரன் ஆதல் திண்ணமே
அந்நெறியே சென்றங்கடைந்தவர்க் கெலாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே" (பொது. பா. 9)

இத்திருப்பாடலில் முன்னெறி என்றது சைவ சித்தாந்த மார்க்கத்தை யாகும். சுந்தரமூர்த்திச் சுவாமிகள் "முன்னெறி அடியவர்களை செந்நெறி" என்றருள்வர். இப்பாடலில் "முதல்வன்" என்றது சைவ சித்தாந்த செந்நெறியில் ஒழுகியடைதற்குரிய சிவபரம்பொருளேயாகும். முக்கணன் என்பது அச்சிவபரம்பொருளது சகலத் திருமேனியைக் குறிக்கும். மூன்று கண்களாவன: சூரியன், சந்திரன், அக்னி என்பன. சத்து, சித்து, ஆனந்தம் என்பனவும் கொள்ளலாம்.

"முக்கணன்றன் நெறியே சரண் ஆதல் திண்ணமே" என்றது. புத்தன் முதலாய புல்லறிவின் பச்சமயப் படுகுழியில் வீழாது சைவ சித்தாந்தச் செந்நெறியடைந்து உறுதியாக நின்று உய்ய வேண்டும் என்று உபதேசித்த

தாகும். "அந்நெறியே என்ற முன்னெறியைச் சுட்டும்". அதில் உள்ள ஏகாரம் பிறிதினியையும் நீக்கியது. திண்ணமே என்றது ஐயத் தீர்த்து உறுதிக்கோடலை வற்புறுத்தும். அந்நெறியே சென்று என்றது. வேற்றுநெறியில் செல்லல் ஆகாது என்று தடுத்தப்படியாகும். பரசமய நீராகானம் செய்தல், தன் சமய ஸ்தாபனத்தின் பொருட்டாகும்.

இதனைத் தாயுமானவர்,

"சைவ சமயமே சமயம் சமயர்த்தப்பழம் பொருளைக்
கைவந் திடவே மண்ணுள் வெளிகாட்டு மிக்கருத்தை விட்டுப்
பொய்வந் துழலும் சமய நெறிபுகுத வேண்டா முத்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே"

என்றருளியுள்ளார்.

திருத்தாண்டகத்தில் காணப்பெறும் பதி இயல்பு

"உணருரு அசத்தெனின் உணரா தின்மையன் இருதிறன் அல்லது சிவதத்தாமென இரண்டு வகையின் இசைக்குமன் உலகே" என்பது மெய்கண்டதேவர் திருவாக்கு. முதல் நூற்பாவில் "உண்டு" என்று கூறப்பெற்ற பதிக்குரிய இலக்கணத்தை ஆறாம் நூற்பாவில் மெய்கண்ட தேவர் தெளிவுறுத்துவார். பதிப்பொருள் சத்தாகவும் சித்தாகவும் இருக்கும். சிறப்பு இயல்பினை இந்நூற்பா இனிது விளக்கும். இதன் கருத்து இறைவன் பாசஞானம் பசுஞானங்களால் அறியப்படாதவன் பதிஞானம் ஒன்றினாலேயே அறியப்பெறுபவன் என்பதாகும்.

இறைவனுக்குக் கூறும் சிறப்பியல்பு குணங்கள் ஓரெட்டு. இதனைத் திருவள்ளுவரும் "எண்குணத்தான்" என்ற தொடரால் இறைவனைக் குறிப்பிடுவார். அவ்வெட்டானை தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கையுணர்வு, முற்றுணர்வு, இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள், முடிவிலாற்றல், வரம்பில் இன்பம் என்பன. சத்து, சித்து, ஆனந்தம் என்ற இம்மூன்றனுள் எண்வகைக் குணங்களை அடக்கலாம். ஆனந்தம் சத்துப்பொருட்கே உரியது. எக்காலத்தும் ஒரே தன்மையாய் இருக்கும். சத்துக்கே தன்வயமாம் தன்மையும் கைகூடும். "தன்வயத்தனாதல்" சத்தில் அடங்கும். தூய உடம்பு சித்தெனப்பெறும். எஞ்சியுள்ள ஆறு குணங்களும் இச்சித்தின் வகைகளாகும். இறைவனின் பொது இயல்பு, ஒன்றாய், வேறாய், உடனாய் இருத்தல் சிறப்பியல்பு. சித்தாய் நிற்றல் இவ்விருவகை இயல்புகளையும் அப்பரடிகளின் இத்திருத்தாண்டகத்தில் காணலாம்.

"அரியாளை.....பிறவா நாளே" என்னும் பெரிய திருத்தாண்டகம். இத்திருத்தாண்டகத்தின் முதற்பாடலடியில் வரும் "அறியாளை" என்பதால்

இறைவன் பாட ஞான பசுஞானங்களால் அறியவியலாதவன் என்பது புலனாகும். புறப்பொருளை அறியும் கருவி அறிவினாலும் தன்மையறியும் உயிரறிவினாலும் அறிவியலாதவன் இறைவன் என்பது ''அறியான்'' என்பதன் பொருளாகும்.

இறைநிலை - அப்பர்

> ''எல்லா வுலகமும் ஆனாய் நீயே
> ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே''

என்பர் அப்பர். அனைத்து உலகத்தையும் இறைவன் தானே நிமித்த காரணனாவிருந்து மாயையிலிருந்து படைத்து அருள்பாலிப்பன். எனவே, மாயை முதற்காரணமாகும். இதனைச் சித்தாந்தசிரியர்,

> ''உலகினை யறிந்து நின்றது அரனுரு என்ப தோரார்''

உலகமாய் நின்றதோரார் தேவரின் ஒருவன் என்பர். அவன் உருவினையும் ஓரார் என விளக்கியுள்ளார் அப்பர். மேலும்,

> ''பல்லூரயிரராய் எப்பார் தோறும் நின்றாய் போற்றி''

என்பர். இத்தொடர் சைவ சித்தாந்தம் கூறும். பசு உண்மையைக் குறிக்கும் உயிர்கள் பல என்பது.

> ''உரை சேரும் எண்பத்துநான்கு நூறாயிரமாம் யோனிபேதம்''

என்று ஞானசம்பந்தர் கூறுமாற்றானும் அறியலாம். எனவே ஆன்மா ஒன்றே என்பர் கொன்மவாதர். இக்கூற்று பிழைபாடு உடையது என்பர்.

ஒன்றி நிற்றல் - அப்பர்

> ''ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லைக்
> கன்றிய காலனைக் காலாற் கடிந்தாய் அடியவர்க்கு
> சென்று தொழுமின்கள் தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
> என்று வந்தாய் என்னும் எம்பெருமான் தன்திருக்குறிப்பே''

ஒன்றி நிற்றலாவது இரண்டு பொருள் கலப்பினால் ஒன்றாய் நிற்றல். இறைவன் அனைத்து உயிர்களிடத்தும் கலப்பினால் அவ்வுயிர்களே யாகித் தான் வேறு காணப்படாது நிற்பன். சூரியனது ஒளி திங்களோடு உடனாய் நின்று அதனை விளக்கும். அப்பொழுது தான் வேறு காணப் படாது அத்திங்களாய் நிற்கும். அவ்வாறே இறைவனும் தம்மொடு ஒன்றி நிற்றலை மெய்யுணர்வுடையார் தம் அறிவில் காண்பர். திங்கள் தனக்கென ஒளி இல்லாதது. ஆயினும் சூரிய ஒளியுடன் கூடிநின்று ஒளியுடையதாகி விளங்கும். அதுபோல ஆன்மாக்களும் தனக்கென அறிவில்லாதன. ஆயினும் இறைவல். அருளொடு உடனாய் நின்று அறிவுடையனவாக விளங்கும். திங்களில் காணப்பெறும் ஒளி

உண்மையில் நோக்குவார்க்குச் சூரியவொளி என்பது தெளியப்படும். அதுபோல உயிர்களிடத்து விளங்கும் அறிவும் உண்மையில் நோக்குவார்க்கு இறைவன் அருளே என்பது தெளிவாகும்.

அங்ஙனம் கண்டு மெய்யுணர்வுடையேன் தம்மை வேறாகக் காண்டற்குத் தமக்கென ஓர் அறிவு இல்லாமையால் தம்மை வேறு காணாது இறையருளில் அடங்கி நின்று அவ்விறைவனேயாய்க் கண்டு நிற்பர். இங்ஙனம் தன்னைப் புகலாக அடைந்த அம்மெய் உணர்வு உடையோரை இறைவனும் தன் அருள் வியாபகத்தில் அடக்க செய்து தானேயாய் காணப்பட்டு நிற்பர்.

இங்ஙனம் நிற்கும் ஞானத்தையே இறைவனோடு ஒன்றி நிற்கும் ஞானமென்பர். இந்த ஞானத்தால் இதுகாறும் உயிரைப் பற்றி நிற்கும் யான் எனது என்னும் செருக்கும் அறும். செறுக்கு அறும் வரையில் இறைவன் தான் வேறு காணப்படாது உயிரில் கலந்து நிற்பன. செறுக்கு அற்ற காலத்து உயிர் வேறு காணப்படாதபடி தன் அருள் வியாபகத்தில் உயிரை அடக்கி நிற்கச்செய்து முழுவதும் தானேயாய் இறைவன் விளங்கி நிற்பன். இங்ஙனம் ஒன்றி நிற்கும் ஞானமுடையார் செறுக்கு அறவே நீக்கப்பெற்றுப் பேரின்பம் நுகர்தற்கு உரியவர் ஆவர்.

இதனுள் ஒன்றியிருந்து நினைமின்கள் என்பது இறைவனோடு ஒன்றி நிற்கும் ஞானத்தை யுணர்த்தும் ''ஊனமில்லை'' என்பது ''யான்'' ''எனது'' என்ற செருக்கு அறுதலை உணர்த்தும். ஒன்றி நிற்கும் ஞானத்தை ஏகனாய் நிற்கும் ஞானம் என்றும் கூறுவர். ''ஏகனாகி இறைபணி நிற்க'' என்பர் மெய்கண்டார்.

இவ்வாறு நாவுக்கரசரின் சித்தாந்த நெறியில் எண்ணில் அடங்காதவை பலப்பல.

37. நாவுக்கரசரும் பழையாறையும்

கா. சத்தியபாமா, தஞ்சை.

தெய்வமணம் கமழும் தென்னகத்தில் சைவ வழிபாட்டு முறைகளுள் புறநிலை வழிபாடு, அனைத்து மக்களாலும் எளிதில் அறிந்துகொள்ளும் இறைநெறி என்பதைச் சமயப் பெரியோர்கள் உணர்ந்திருந்தனர். ஆதலின், பல்வேறு தலங்களுக்கும் சென்று அங்கு எழுந்தருளியுள்ள இறைவனை வழிபாடு செய்து தீர்த்தங்களில் நீராடி, இறைவனின் திருவருள் பெற்று என்றும் நிலைத்து நிற்கும் புகழுடலைப் பெற்று விளங்கினர். அத்தகைய பெரியாருள் தலையாயவரான திருநாவுக்கரசு பெருமான், தலப்பயணம் மேற்கொண்டபோது திருப்பழையாறை வடதளியில் அமைந்துள்ள மாடக்கோயிலில் எழுந்தருளியுள்ள தர்மபுரீஸ்வரரைக் கண்டு தொழுதார். பின்னாளில் மீண்டும் அக்கோயிலைக் காணநேர்ந்தபோது அது அமண் பள்ளியாக இருக்கக்கண்டார். அதன் பொருட்டு அகிம்சை நெறியைக் கைக்கொண்டு, உண்ணா நோன்பை மேற்கொண்டு, மீண்டும் சைவக் கோயிலாக மாற்றமடையச் செய்தார். அந்நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

பழையாறை

> **''சீரில் நீடிய செம்பியர் பொன்னிநன் னாட்டுக்**
> **காரின் மேவிய களிஅளி மலர்ப்பொழில் சூழ்ந்து**
> **தேரின் மேவிய செழுமணி வீதிகள் சிறந்து**
> **பாடில் நீடிய பெருமைசேர் பதிபழை யாறை''**

(அமர்நீதி நாயனார் புராணம் - 1)

என்பது பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடும் கவிவலவராம் தெய்வ சேக்கிழார் பெருமான் திருவாக்கு. இப்பெருமைமிக்க பழையாறை கும்பகோணம் - ஆவூர் பாதையில் முழையூருக்கு அருகில் அமைந்துள்ளது. பட்டீச்சரத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூருக்குத் தெற்கில் முடிகொண்டான் ஆறும் வடக்கில் திருமலைராயன் ஆறும் பாய்கின்றன. முடிகொண்டான் ஆறு முற்காலத்தில் பழையாறு எனப்பட்டதால் அதன் கரையில் இருந்த ஊர் பழையாறை என்றழைக்கப் பட்டது. இப்பழையாறை நகரம், பழையாறை மேற்றளி, கீழ்த்தளி, வடதளி, தென்தளி என்ற நான்கு பிரிவுகளாக அமைந்துள்ளது. முடிகொண்டான்

ஆற்றுக்கு வடகரையில் இருந்த ஊர் பழையாறை வடதளி என்றழைக்கப் பட்டது.

இப்பழையாறையானது இச்சிற்றூரையும் இதனைச் சூழ்ந்துள்ள முழையூர் பட்டீச்சரம், திருச்சத்திமுற்றம், சோழன்மாளிகை, அரிச்சந்திரபுரம், ஆரியப்படையூர், பம்பைப் படையூர், புதுப்படையூர், மணப்படையூர், கோனப்பெருமாள் கோயில், திருமேற்றளி, நந்திபுர விண்ணகரம் ஆகிய ஊர்களையும் தன்னகத்தே கொண்டு ஐந்து மைல் நீளமும் இரண்டு மைல் அகலமும் உடைய பெரிய நகரமாக இருந்தது. ஒருகாலத்தில் சோழர்களின் தலைநகரமாகவும் இது விளங்கியது. திருமேற்றளி, வடதளி, தென்தளி இவை பழையாறையில் உள்ள சிவன் கோயில் களாகும். மூவர் முதலிகளால் வணங்கப்பட்ட தலம் என்ற பெருமைக்குரியது.

தமிழகத்தின் பல தலங்களிலும் எழுந்தருளியுள்ள இறைவனை வணங்க எண்ணம் கொண்ட சம்பந்தர், பல தலங்களுக்கும் தம் தந்தையாருடன் சென்ற காலத்து, "விண்பொருநீள் மதிளாறை மேற்றளி" என்று சேக்கிழார் குறிப்பிடும் பழையாறை மேற்றளியில், செந்தீ வண்ணரான சிவபெருமானின் திருவடிகளை அன்புடன் வழங்கிய நிகழ்ச்சியை,

"திருவாறை மேற்றளியில் திகழ்ந்திருந்த செந்தீயின்
உருவாளன் அடிவணங்கி......" (பெ.பு. 2288)

என்று திருஞான சம்பந்தர் புராணத்தில் சேக்கிழார் பெருமான் எடுத்தோதுகிறார். மேற்றளியில் இறைவனை வணங்கியப் பின்,

"செப்பருஞ்சீர்த் திருவாறை வடதளியில் சென்றிறைஞ்சி
ஒப்பரிய தமிழ்பாடி ...." (பெ.பு. 2297)

மகிழ்கின்றார் சம்பந்தர்.

சுந்தரர் தம் தலப்பயணத்தின் பொழுது பழையாறை வந்து,

"செம்பொன் மேருச் சிலைவளைத்த சிவனார் ஆறை மேற்றளியில்
நம்பர் பாதம் பணிந்திறைஞ்சி..... ...." (பெ.பு. 3248)

இறைவனின் அருளை வேண்டுகின்றார். அத்தலத்தில் எழுந்தருளியுள்ள பெருமானிடத்தில் அன்பு மிக்கவராகித் திருப்புறம்பயத் தலத்தில் தங்கிய காலத்து, "அங்க மோதியோர் ஆறை மேற்றளி" எனத் தொடங்கும் தேவாரப் பதிகத்தைப் பாடினார். இச்செய்திகளை ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம் எடுத்துரைக்கிறது.

நாவுக்கரசர் இத்தலத்திற்கு மூன்று முறை வந்து இறைவனை வழிபட்ட செய்தியைத் திருநாவுக்கரசர் புராணம் எடுத்துரைக்கும். இறைவி அளித்த ஞானப்பாலையுண்ட திருஞான சம்பந்தரைப் பற்றிக்

கேள்வியுற்று, அவரை நேரில் கண்டு மகிழ்ந்து, திரும்பும் வழியில் முதல் முறையாகப் பழையாறையைக் காணுகின்றார்.

"செறிவிரைநன் மலர்ச்சோலை பழையா றெய்தி"

(பெ.பு. 1457)

என்று சேக்கிழார் இதனைக் குறிப்பர். அதன்பின்பு அப்பூதி அடிகள் இல்லத்தில் தங்கி அவருடைய பாலகனை உயிர்ப்பித்த அற்புதத்தை நிகழ்த்தியபின், மீண்டும் தலப்பயணத்தை மேற்கொள்கிறார். அப்பொழுது இரண்டாவது முறையாகப் பழையாறை வந்து பல கோயில்களையும் கண்டு தொழுதார். "பழையாறை பல்லூர்வெண் தலைக்கரத்தார் பயிலு மிடம் பல பணிந்து சொல்லூர்வண் தமிழ்ப்பாடி" (பெ.பு. 1480) மகிழ்ந்தார். திருநாவுக்கரசர் பழையாறையின் கோயில்கள் பலவற்றையும் வணங்கி இருந்தலால் வடதளி கோயிலையும் வணங்கி இருப்பது புலனாகும்.

இவ்வாறு இருமுறை பழையாறை வடதளியில் இறைவனைத் தொழுது மகிழ்ந்த திருநாவுக்கரசர், மூன்றாவது முறையாகத் திருப்பழையாறை வடதளி கோயிலில் எழுந்தருளிய சிவபெருமானைக் காண விரும்பி கோயில் விமானத்தைக் கைகூப்பித் தொழுதபொழுது, சமணர்கள் தங்களுடைய பள்ளியாக மாற்றிவிட்டனர் என்பதை அங்குள்ளோர் எடுத்துக் கூற, மனம் புழுங்கி வருந்தினார். திருநாவுக்கரசர் புராணத்தில்,

"செய்ய சடையார் பழையாறை எய்த அதனிற் செல்பொழுதில்
மையல் அமணர் மறைத்தவட தளியின் மன்னுஞ் சிவனாரைக்
கைகள் கூப்பித் தொழுதருளக் கண்ட வாற்றால் அமணர்கள்தம்
பொய்கொள் விமானம் எனக்கேட்டுப் பொறாத உள்ளம்
மிகப்புழுங்கி" (பெ.பு. 1559)

என்று சேக்கிழார் இதனைக் காட்டுவார்.

திருநாவுக்கரசர் வாழ்ந்த கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழகத்தில் களப்பிரர் ஆட்சியால் சமண, பௌத்த சமயங்கள் செல்வாக்குப் பெற்றுச் சைவ சமயம் தன்நிலையில் தாழ்ந்திருந்தது. தமிழகத்தில் ஆட்சிப்பொறுப்பில் வீற்றிருந்த மன்னர் பலரும் சமண, பௌத்த சமயங்களைத் தழுவினர். மன்னர் எவ்வழி மக்கள் அவ்வழி என்பதற்கிணங்க, பலரும் சமண சமயத்தைச் சார்ந்தனர். அவ்வழியில் சமண சமயத்தில் இடறிவிழுந்து சைவத்திற்கு மீண்டவர் திருநாவுக்கரசர். சைவ சமயத்திற்குத் திரும்பி யமைக்காகக் கொடிய சமணர்கள் பல்லவன மன்னன் மகேந்திர வர்மனைத் தூண்டிவிட்டு, நீற்றறையில் இட்ட பொழுதும், நஞ்சூட்டிய பொழுதும், யானையின் காலில் இடறச் செய்ய முயன்ற பொழுதும், கருங்கல்லில் கட்டிக் கடலில் விட்ட பொழுதும் ஊறு எதுவுமின்றி, உயிரோடு மீண்டவர். சமணர்கள் செய்வித்த கொடிய செயல்களை

யெல்லாம் அமைதியாகப் பொறுத்துக் கொண்ட அகிம்சாவாதி, ஆகையால் சமணர்களால் பள்ளியாக மாற்றப்பட்ட சைவத் திருக்கோயிலான திருப்பழையாறை வடதளிக் கோயிலை மீட்க அகிம்சை நெறியை மேற்கொள்ள எண்ணம் கொண்டார்.

திருநாவுக்கரசரின் உண்ணாநோன்பு

சமணர் பள்ளியாக மாற்றப்பட்ட திருப்பழையாறை வடதளிக் கோயிலின் உண்மை நிலையை உலகுக்குப் புலப்படுத்தி, சிவபெருமானது வண்ணம் கண்டு வணங்கியல்லாமல், அவ்விடத்தை விட்டு நீங்கிச் செல்லுவதில்லை என்று உறுதிபூண்டார். ஒரு காரியத்தை முடிக்க முற்பட்டவர்கள் உண்ணாநோன்பு இருக்கும் வழக்கம் பண்டைநாள் முதல் பழந்தமிழரிடையே இருந்த வழக்காதலின் திருக்கோயிலின் முன்னே,

"வண்ணங் கண்டு நானும்மை வணங்கி யன்றிப் போகேனென்
றென்ன முடிக்கும் வாகீசர் இருந்தா ரமுது செய்யாதே"

(பெ.பு. 1561)

உண்ணா நோன்பை மேற்கொண்டார்.

"தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையருள்
நிலையி னான்மறைத் தான்மறைக் கொண்ணுமே
அலையி னார்பொழி லாறை வடதளி,
நிலையி னானடி யேநினைத் துய்ம்மினே"

(திருப்பழையாறை வடதளி திருக்குறுந்தொகை, பா. 1)

என்று தலைமயிரையெல்லாம் பறித்து, கையிலேந்தி உண்ணுகின்ற கூட்டத்தாராகிய சமணர்கள் மறைத்தாலும் வடதளியில் எழுந்தருளி யிருக்கக்கூடிய சிவபெருமானின் ஆற்றலை மறைக்க இயலுமோ என்று வியந்து, சமணர்களின் பள்ளியாக அமைந்திருப்பதன் காரணமாக உள்ளே செல்ல விரும்பாலும் சிவபெருமானின் கோயிலாதலின் உள்ளே புகுந்து தொழாமல் அவ்விடத்தைவிட்டு அகல விரும்பாமலும் கோயிலின் அருகிலேயே உண்ணா நோன்பை மேற்கொண்டு இருந்தார். சிவபெருமானின் திருவடிகளில் சிந்தையை இருத்தி, சமணர்கள் வஞ்சனையால் மறைத்த செயலை ஒழித்து, சைவத்திறம் ஓங்க, சமணர்களின் திறத்தினை அழிக்க வேண்டுமென வேண்டி நின்றார். சமணர்கள் வஞ்சித்துச் சிவன் கோயிலை மறைக்காமல் இருந்திருப்பின் நாயனார்க்கு அவர்களைப் பற்றிய எண்ணம் தோன்றியிராது.

சிவபெருமான் அரசனின் கனவில் தோன்றுதல்

திருநாவுக்கரசர் உண்ணாநோன்பு நோற்று வருந்தி இருப்பது கண்டு, கருணை நோக்குடையவராக,

"அறிவில் அமணர் நமைமறைப்ப இருந்தோம் என்றங் கடையாளக்
குறிகள் அறியச் செய்தருளி நம்மை அரசு கும்பிடுவான்
நெறியில் அமணர் தமையழித்து நீக்கிப் போக்கென் றருள்புரியச்
செறிவில் அறிவுற் றெழுந்தவனுஞ் செங்கை தலைமேல்
குவித்திறைஞ்சி" (பெ.பு. பா. 1562)

என அரசனின் கனவில் இறைவன் தோன்றி, அறிவற்ற சமணர்கள் கோயிலை மறைத்ததன் காரணமாகத் தாம் அதனுள் இருந்ததாகக் கூறி, அடையாளக் குறிகளைக் காட்டி, நாவுக்கரசர் வணங்குவதற்காகத் தீய நெறியுடைய சமணர்களை அழித்து அங்கிருந்து அகலச் செய்யுமாறு அருள் செய்தார்.

பெரியபுராணத்தில் இம்மன்னன் யாரென்று சுட்டப்படவில்லை என்றாலும், பாண்டிமாதேவியின் தந்தை மணிமுடிச்சோழன் என்று அறிஞர்கள் கருதுவர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் பழையாறை சோழர்களின் தலைநகரமாக விளங்கியது. மணிமுடிச் சோழனின் மகள் மங்கையர்க்கரசியார். இவர் ஞானசம்பந்தப் பெருமானை மதுரைக்கு வரவழைத்துச் சமணரை வென்று சைவம் வளர்த்த பாண்டிமாதேவி யாவார். இதனைத் திருஞானசம்பந்தரின் திருஆலவாய்ப் பதிகத்தின்,

"மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைகைம்பட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவ"

எனும் தேவாரப் பாடலாலும்

"மண்ணெல்லாம் திகழ மன்னாய் மன்னும்
மணிமுடிச் சோழர்தன் மகளாம்
பண்ணினேர் மொழியார் பாண்டிமா தேவி
பாங்கினாற் பணிசெய்து பரவ"

எனும் தேவாரப் பாடலாலும் உணர முடிகிறது.

மங்கையர்க்கரசியின் தந்தையாகிய மணிமுடிச் சோழன் பழையாறையைத் தலைநகராகக் கொண்டவன். இவனே பழையாறை வடதளியில் திருநாவுக்கரசர் பொருட்டுச் சிவலிங்கத்தை வெளிப் படுத்தியவான இருக்க வேண்டும் என்பார் கல்வெட்டாராய்ச்சி அறிஞர் திரு.கே.எம். வேங்கடராமையா அவர்கள்.

அரசனின் கனவும் சமணர்கள் அழிவும்

களப்பிரர் காலத்தில் தமிழகத்தில் வாழ்ந்த சைவ சமயத்தாரும் சமண சமயத்தாரும் ஒருவரை ஒருவர் பழிப்பதும் கடுமையாகத் தாக்கிக்

கொள்வதும் தொடர் நிகழ்ச்சியாக விளங்கியது. சமயப்பூசல்களால் ஒரு சமயம் தன் செல்வாக்கை இழந்து, மற்றொரு சமயம் ஓங்கும்பொழுது, தன் சமயத்தை வளர்க்கவும், பரப்பவும் நிலைநிறுத்தவும் பல முயற்சி களை மேற்கொள்ளும்பொழுது உயிர் அழிவு என்பது தவிர்க்க இயலாதாக விடுகிறது. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் இது உச்சக்கட்ட நிலையை அடைந் திருந்தது. திருஞான சம்பந்தரின் வரலாறும் அப்பர் பெருமானின் வரலாறும் இதற்குத் தக்க சான்றுகள் பகர்கின்றன.

இறைவன் தன் கனவில் உணர்த்தியதை அரசன் தானே பரிசோதித்தும் சமணர்களை நேரில் விசாரித்தும் உண்மையை உணர்ந்து அந்த ஆயிரம் பேரையும் அழித்தான். மூக்கின்வழி முரலுதல் போல ஓதத்தக்க மெல்லெழுத்துக்கள் மிகுந்துள்ள மந்திரங்களை ஓதி, மூன்று நீர்க்குண்டிகைகளைத் தூக்கித் திரியும் சமணர்கள் வடதளியில் அடியோடு அழிந்துபட்ட செய்தியை,

''மூக்கி னான்முரன் றோதியக் குண்டிகை
தூக்கி னார்குலத் தூரறுத்தே''

(திருப்பழையாறை வடதளி திருக்குறுந்தொகை - 2)

என்று திருப்பழையாறை வடதளி திருக்குறுந்தொகைப் பதிகத்தில் கூறுவார் நாவுக்கரசர். மேலும்,

''நீதி யைக்கெட நின்றம ணேயுணுஞ்
சாதி யைக்கெடு மாசெய்த சங்கரன்''

(திருப்பழையாறை வடதளி திருக்குறுந்தொகை - 6)

என்று சிவபெருமானின் ஆற்றலைக் கூறி, சமணர்களின் அழிவைக் கூறுவார்.

சமணகுருமார் ஆயிரம் பேராகக் கூடுவது வழக்கம். ஆகவே திருப்பழையாறை வடதளி சமண்பள்ளியில் இருந்த ஆயிரம் சமண குருமார்களை அரசன் அழித்தான். இதனை, **''ஆயி ரஞ்சம ணும்மழி வாக்கினான்''** (திருப்ப்ழையாறை வடதளி திருக்குறுந்தொகை - 9) என்ற அப்பர் பெருமானின் வாக்கு புலப்படுத்தும்.

பின்னாளில் தோன்றிய, 'சிவாலய மான்மியக் கோவை' நாவுக்கரசின் வேண்டுகோளுக்காக மீண்டும் திருப்பழையாறை வடதளியில் கோயில் கொண்ட இறைவனைப் போற்றும் வண்ணம்,

''நேர்மன மில்லா வமணர்க லொளிக்க
நேயவா கீசர்க்கா மீட்டும்
சேர்பழை யாறை வடதளி அமருஞ்
செல்வமே கருணை வாருதியே''

என்று எடுத்துரைக்கின்றது.

நாவுக்கரசர் வாழ்க்கையில் நடந்த இந்நிகழ்ச்சியால் சமண சமயத்தைச் சார்ந்தவர்கள் சைவ சமயத்திற்குக் கேடிழைத்து நசுக்க முற்பட்ட பொழுது, அதனைக் காக்கும் முயற்சியில் சமணர்களுக்கு அழிவு நிகழ்ந்துள்ளமையை உணரமுடிகிறது. இந்தச் செய்தியை அப்பர் பெருமானின் திருப்பழையாறை வடதளி திருக்குறுந்தொகைப் பாடல்களை அகச்சான்று களாகக் கொண்டும் பெரிய புராணத்தில் அமைந்துள்ள திருநாவுக்கரசர் புராணத்தைப் புறச்சான்றாகக் கொண்டும் அறிந்து கொள்ள முடிகிறது. அகிம்சை வழியில் வெற்றி காண முடியும் என்பதற்குச் சான்று பகர் வதாகத் திருநாவுக்கரசர் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சி அமைந்துள்ளது என்பது புலனாகிறது.

சமணர்களால் மறைக்கப்பட்டு, திருநாவுக்கரசரால் வெளிப்படுத்தப்பட்ட திருப்பழையாறை வடதளி மாடக்கோயில் இன்று சரியாகப் பேணப்படாத காரணத்தால் பொலிவிழந்து தன் சிறப்பை இழந்துள்ளது என்பது வருந்துதற்குரியது.

38. நாவுக்கரசர் வாழ்வும் வாக்கும்

சா. சத்தியபாமா, ஈரோடு.

இனிமையான இசையைக் கேட்பவரும், மலரின் மணத்தை நுகர்பவரும், அழகான காட்சியைக் காண்பவரும் அதனைப் பிறருக்கும் உணர்த்தித் தாமும் இன்புறுகின்றனர். அதுவே, எழுதப்பட்ட இலக்கிய மாயின் அந்த இன்பத்தின் அளவு அதிகரிக்கும். அவ்வாறு அமைந்த பக்தி இலக்கியங்களான திருமுறைகளுள் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகள் பாடியவர் அப்பர். அவர் சமயக்குரவர் நால்வருள் முதன்மையானவர்.

உலகில் இதுகாறும் தோன்றியுள்ள அருளாளர்களின் வரிசையில் முதல்வரிசையில் இடம்பெறத்தக்க மாட்சியுடையவர் நாவுக்கரசர். இவர்தம் வாழ்வை மெய்ப்பொருள் நாட்டம் கொண்டு அதைத் தேடிக் கண்டடையும் முயற்சியிலேயே கழித்தவர். தாம் தேடிக்கண்ட மெய்ப் பொருளை அனைவருக்கும் பயன்படும் வண்ணம் பாடியவர். ஆன்ம ஈடேற்றம் விரும்பும் மக்களுக்கு இவர் வாழ்வு ஒரு கலங்கரை விளக்கம்.

பிறப்பும் வளர்ப்பும்!

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூர் என்னும் ஊரில் புகழனார்க்கும், மாதினியார்க்கும் திலகவதியாரை அடுத்துப் பிறந்தவர் மருள்நீக்கியார். இதனைச் சேக்கிழார் பெருமான்,

> 'திலகவதியார் பிறந்து சிலமுறையாண் டகன்றதன்பின்
> அலகில்கலைத் துறைதழைப்ப அருந்தவத்தோர் நெறிவாழ
> உலகில்வரும் இருள்நீக்கி ஒளிவிளங்கு கதிர்போல்பின்
> மலருமருள் நீக்கியார் வந்தவதாரம் செய்தார்'

எனச் சிறப்பிப்பார்.

பின்னர், போரினால் திலகவதியாரை மணம்புரியப் பேசியிருந்த கலிப்பகையாரும், நோயினால் புகழனார் தம்பதியினரும் இறந்துபடு கின்றனர். அவர்களுடனேயே தாமும் உயிர் துறப்பதாகத் திலகவதியார் கூற அப்பர் மனம் பொறாதவராய் தமக்கு யார் துணை? என்று புலம்பத் திலகவதியார் மனம் மாறுபடுகிறது. இது இறைவனின் கருணைத்திறமே என்று மருள்நீக்கியார்,

'எம்மை யாரிலை யானும் உளேனலேன்
எம்மை யாரும் இதுசெய்ய வல்லரே
அம்மை யாரெனக் கென்றென் றரட்டினேற்
கம்மையாரைத் தந்தார் ஆரூர் ஐயரே'

எனப் பாடிப் பரவுகின்றார்.

சமணம் புகுதல்

மருள்நீக்கியார் வாழ்ந்த காலத்தில் சமணர் பலர் தம் சமயம் பரப்பும் நோக்கில் தமிழகம் வருகின்றனர். அவர்தம் கொள்கைகளால் ஈர்க்கப்படுகின்றார் மருள்நீக்கியார். பல உரைகள் கூறி அவரைத் தம் சமயத்தில் ஈடுபடுத்த சமணர் முயல்கின்றனர். மருள்நீக்கியாரும் சமணம் சார்ந்து, தம் பெயரைத் தருமசேனர் என்று மாற்றிக் கொள்கின்றார். இதனால், திலகவதியார் மனம்வருந்தி, இறைவனிடம் முறையிடுகிறார்.

தடுத்தாட் கொள்ளல்

திலகவதியாரின் வேண்டுகோளை ஏற்ற இறைவன் அவர் கனவில் சூலை நோய் தந்து ஆட்கொள்வதாகக் கூறி மறைகின்றார். இதனால் சூலைநோய் பற்றிய தருமசேனருக்குச் சமணர் செய்த மருத்துவங்கள் பயன்தரவில்லை. அந்நிலையில் தருமசேனர் தம் தமக்கையாரை எண்ணி, அவரைச் சென்றடைகின்றார். தமக்கையாரின் எண்ணப்படி, தருமசேனர் இறைவனிடம் தமது முதல் வாக்கினால்,

"கூற்றாயினவாறு விலக்ககலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரொடு துடக்கி முடிக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறையம்மானே"

என்று முறையிட சூலைநோய் நீங்கி, நாவுக்கரசர் என்ற பெயரும் பெறுகிறார். இதனால் வீரட்டானத்துறைப் பெருமான்மீது அவருக்கு அன்பு மிகுதியாகிறது. 'இவ்வளவு காலமாக உன்னை மறந்திருந்த எனக்கு இப்பேரருள் சாத்தியம்தானா?' என வியக்கிறார்.

சமணர் சூழ்ச்சி

சமண சமயத் தொடர்பினின்றும் நீங்கிச் சிவனருளில் திளைத்து நிற்கும் நாவுக்கரசரைப் பொறாத சமணர்கள் பல்லவ வேந்தனிடம் தண்டிக்க முறையிடுகின்றனர். அரசனும் நாவுக்கரசரை அழைத்து வரப் பணிக்கின்றான். தம்மை அழைத்துச் செல்ல வந்தவரிடம் நாவுக்கரசர்,

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவே மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை...."

என்கிறார்.

அதுகேட்டு வந்தவர்கள் தங்களுடன் வந்து தங்களை அரச தண்டனையிலிருந்து காக்குமாறு வேண்ட, 'ஈண்டு வரும் வினை களுக்கு எம்பிரான் உளன்' என்று செல்கிறார். அரசன் நாவுக்கரசரை நீற்றறையிலிடப் பணிக்க,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்று பாடுகின்றார்.

நீற்றறை தண்ணென்று இருந்த திறத்தைச் சேக்கிழார்,

'வெய்ய நீற்றறையதுதான் வீங்கிள வேனிற் பருவம்
தைவருதன் தென்றல்அணை தண்கழுநீர்த் தடம்போன்று
மெய்யொளி வெண்ணில வலர்ந்து முரன்றயாழ் ஒலியினதாய்
ஐயர் திருவடி நீழல் அருளாகிக் குளிர்ந்ததே'

என்று நயம்படக் காட்டுவார்.

பின்னர் நஞ்சு கலந்த பாலடிசிலை அமுது செய்விக்க, 'நாதன் அடியார்க்கு நஞ்சும் அமுதாம்' என்று இனிதே இருக்கின்றார். மன்னன் பட்டத்து யானையைக் கட்டவிழ்த்துவிடப் பணிக்கின்றான். அதுகண்ட அப்பர் 'சுண்ண வெண் சந்தனச் சாந்து' எனத் தொடங்கும் பாடலைப் பாடுகிறார். அதுகேட்ட களிறு அன்புருவாகிய அப்பரை வலஞ்செய்து வணங்கிச் செல்கிறது.

பின்பு மன்னன் அப்பரைக் கல்லொடு சேர்த்துக் கயிற்றினால் பிணித்துக் கடலில் தள்ளுக என்கின்றான். அப்பர் இறைவனை நினைத்து,

'சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே'

என்று பாடுகிறார். ஐந்தெழுத்து மந்திரம் ஓத, கல் கடலில் மிதக்கிறது. இதனை,

"இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ மாக்கள் ஏறிட
அருளுமெய் அஞ்செழுத்தரசை இக்கடல்
ஒருகல்மேல் ஏற்றிடல் உரைக்க வேண்டுமோ?"

என்று நெஞ்சுருகுகிறார் சேக்கிழார்.

தெப்பமாய் மிதந்த கல்லோடு கடலூரில் இறங்கி, திருப்பாதிரிப் புலியூர்த் திருக்கோயிலில் வணங்குகிறார்.

ஞானசம்பந்தருடன் தோழமை

சோழநாட்டில் வழிபாட்டை முடித்த நாவுக்கரசர் சம்பந்தர் பற்றிக் கேள்வியுற்று அவரைச் சீகாழிப்பதியில் சந்திக்கிறார். இருவரும் அளவளாவி மகிழ்கின்றனர். பின்பு சம்பந்தரிடமிருந்து விடைபெற்று சோழநாட்டுத் தலங்களை வழிபட்டுத் திங்களூரில் அப்பூதியடிகளைச் சந்திக்கிறார்.

அப்பூதியடிகளுடன் தோழமை

திங்களூரில் அப்பூதியடிகளும், அப்பரும் சந்தித்து, பெருமகிழ்ச்சியுறு கின்றனர். இதனைச் சேக்கிழார்,

"அரசறிய உரைசெய்த அப்பூதி அடிகள்தாம்
கரகமல மிசைகுவியக் கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி உடம்பெலாம் உரோமபுளகம் பொழியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தம் சரணகமலம் பூண்டார்"

என்று காட்டுவார்.

பின்னர் அப்பூதியாரின் மைந்தனுக்கு விடம் தீர்த்து, ஆசி நல்கி மூன்றாம் சுற்றாகச் சோழநாட்டுத் தலங்களை வழிபடுகிறார்.

கயிலைப் பயணம்

கயிலைக் கோலம் காண விரும்பிய அப்பர் தம் வடதிசைப் பயணத்தினைத் தொடங்குகிறார். காடு, நாடு, ஆறு, மலை அனைத்தையும் கடந்து வாரணாசி விசுவநாதரை வழிபட்டதன்பின் தன்னுடன் வந்த அடியவர்களை அங்கேயே தங்கும்படி பணித்துவிட்டுத் தாம் மட்டும் புறப்படுகிறார்.

நடந்து, நடந்து கால் தேய்கிறது. இருந்தும் பொன்னார் மேனியனை மறக்கவில்லை. கைகளால் தாவித்தாவி ஊர்கின்றார். கைதேய, மார்பினால் உந்திச் செல்கிறார். சிவன் சேவடி நினைந்த நெஞ்சிற்கு எதுவும் புலப்பட வில்லை. கயிலைநாதன் முனிவர் வடிவில் அப்பரிடம், "நீர் எங்கு செல்கிறீர்?" என வினவ, அப்பரும் கயிலைநாதனைக் காணச் செல்வதாகக்

கூறுகிறார். முனிவர், ''என்ன காரியமிது? அங்கம் கரைய வந்ததும் அறியாமைதானா?'' என்கிறார். அப்பர், ''என்னையாளும் ஈசனின் கயிலைக் காட்சி காணாது ஈண்டே மரித்தாலும் கவலை கொள்ளேன்'' என்கிறார்.

காட்சி தரல்

அப்பரின் மனஉறுதி கண்ட கயிலைநாதன் அவரை, "இப்பொய்கையில் மூழ்கி எம் கயிலைத் திருக்கோலத்தைத் திருவையாறில் கண்டின்புறுக" என்கிறார். அப்பரும், திருவையாற்றிலுள்ள ஒரு தடாகத்தில் கரையேறியதைச் சேக்கிழார்,

''...
போத மாதவர் பனிமலர்ப் பொய்கையில் மூழ்கி
மாதொரு பாகனார் மகிழும் ஐயாற்றிலோர் வாவி
மீது தோன்றி வந்து....''

என்பார். இறைவனின் திருமேனிக் கோலம்கண்ட அப்பர்.

''மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர் தொழும் தேவே போற்றி
....''

என்று பாடுகிறார்.

ஒவ்வொரு பாடலும் ''கயிலை மலையானே போற்றி போற்றி'' என்று முடிகிறது. கயிலை நாதன் அருளால் தாம் கண்ட கயிலைக் காட்சியை உலக மக்கள் உணர்ந்து மகிழும் விதமாக,

''மாதர் பிறைக் கண்ணியானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர் சுமந்தேத்திப்
புகுவார் அவர்பின் புகுவேன்
....................................''

எனப் பாடுகிறார்.

இறைவன் திருவடிப்பேறு

புகலூர் வந்த அப்பர் இறைவனை வணங்கி உழவாரப் பணி செய்து,

''செய்யர் வெண்ணூலர் கருமான் மறிதுள்ளும்
கையர் கனைகழல் கட்டிய காலினர்
மெய்யர் மெய்ந்நின்றவர்க்கு அல்லாதவர்க்கென்றும்
பொய்யர் புகலூர்ப் புரிசடையாரே''

என்று பாடி மகிழ்கிறார்.

உழவாரப் பணி புரியுங்கால் உழவாரம் நுழையும் இடமெலாம் பொன்னும் மணியும் வரச்செய்கிறான் இறைவன். 'ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும்' சிந்தையரான அப்பர் அதனைக் கற்களாக எண்ணி உழவாரத்தால் ஏந்தி வாவியில் வீசுகின்றார். பின்னர் அப்பரை நாடி வந்த மகளிர்களிடத்து, "நான் திருவாரூர்ப் பூங்கோயிலமர்ந்த பெருமானுக்கு ஆளாயுள்ளேன். நீவிர் என்னைத் துன்புறுத்தாதீர்" என்கிறார்.

"புண்ணியத்தின் உருவாக விளங்கும் எம்பெருமானே! உன்னுடைய திருவடிக்கே எளியேனும் வருகின்றேன்" என நெஞ்சம் கசிந்துருகி,

"எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
.."

என்று பாடுகிறார்.

இவ்வாறு பாடி செந்தமிழ்த் தாண்டக மாலையால் போற்றிய நிலையில் புகலூர்ப்பதியில் இறைவன் அருளொளியில் இரண்டறக் கலக்கின்றார். அந்தத் திருநாள் சித்திரை சதயத் திருநாளென்பார் சேக்கிழார்.

நாவுக்கரசர் வாழ்வு நலவாழ்வு, அற்புதத் திருவாழ்வு, திருநின்ற செம்மை ஒளிவிடும் வாழ்வு. வாகீசப் பெருமான் வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப் பெற்றார். அவர்வழி கயிலை நாதனை வணங்கி அவன் திருவடிப்பேறு பெற்று உய்வோமாக!

39. அப்பரின் சிவநெறிக் கொள்கை

இரா. சந்திரசேகரன், திருச்செங்கோடு.

உலகச் சமயங்களில் பழமையானதும் எல்லாச் சமயங்களுக்கும் தாய் சமயமாகவும் இருந்து பிற சமயங்களை அரவணைத்துச் செல்லும் உயர்ந்த சமயமாக இந்துசமயம் விளங்கி வருகிறது. இந்து சமயம் தத்துவ ஆன்மீகக் கோட்பாடுகளை ஆராய்ந்து மனித உள்ளத்தில் எழும் ஐயங்களைத் தெளிவுப்படுத்தி, நம்பிக்கை மட்டுந்தான் வாழ்வின் அடிப்படை என்பதை நீக்கி அறிவு வழியைக் காட்டி கட்டுப்பாடு என்ற ஒன்றுக்கு உட்படாத உரிமையோடு செயல்படுகின்ற வாழ்வை அமைத்துத் தருகிறது. இத்தகைய இந்து சமயத்தில், சைவமும், வைணவமும் இருகண் களாகக் கருதப்பட்டன.

சைவம் சிவபெருமானின் முழுமுதற் கடவுள் தன்மையையும், அடியார்களின் பக்தி நெறியினையும் புலப்படுத்துவதாகும். அடியார்கள் பக்திச்சுவை, சொட்டப் பாடிய பாமாலைகள் திருமுறைகளாயின.

திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்டு அடியார்கள் பாடிய பாசுரங்கள் நாலாயிரத் திவ்விய பிரபந்தம் என்றழைக்கப்படுகிறது. இறைவனின் அவதாரப் பெருமைகளைப் பாடி பெருமை சேர்த்துள்ளனர். இவ்விரு சமயங்களும் தமிழகத்தில் தோன்றி நாடெங்கும் பரவியது.

தமிழ்மக்கள் சமய வாழ்வில் புதியதொரு கோட்பாட்டைக் கண்டனர். மக்கள் தங்கள் கலைகளையும் செல்வங்களையும் சமயப்பணிக்கே உரிமையாக்கினர். சமயத்தில் இலக்கியத்தைப் புகுத்தி பக்தி இயக்கமாகத் தோற்றுவித்தனர். இதனால் தமிழ் பக்தியின் மொழி என்றாயிற்று.

சைவ சமயக் கொள்கை

பரம்பொருள் என்று சொல்லப்படும் பதி அல்லது இறைவன் ஆன்மாக்களாகிய பசுக்களை அல்லது உயிரைப் பாசம் என்ற தளை யிலிருந்து நீக்கி வீடுபேறடையச் செய்வான் என்பதே சைவ சமயக் கொள்கையாகும்.

இத்தகைய சைவ சமயத்தில் சமயக் குரவர் எனப் போற்றப்பெறும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சிவநெறி வளர்த்தவர்களாவர். இந்நால்வருள் காலமுறைப்படி

முதலானவரும் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளின் ஆசிரியருமான அப்பர் பெருமானின் சிவநெறிக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் சிவனைக் கண்ட செயலையும் சைவ உலகுக்கு வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டமைகிறது இக்கட்டுரை.

அப்பரடிகள்

''அப்பர்'' என்று அழைக்கப்படுபவர் திருநாவுக்கரசு சுவாமிகள், இவரை அப்பர் என்று அழைத்தவர் திருஞான சம்பந்தப் பெருமான் ஆவர். இவர் சைவ சமயத்திலிருந்து சமண சமயம் சென்று மீண்டும் சைவ சமயத்திற்கே வந்து சேர்ந்தார். அப்பர் வாழ்வு உடல் உழைப்பின் பெருமையை உணர்த்துவதாக அமைகிறது. நாவினால் பாடினாலும், மனத்தால் நினைத்தாலும் போதாது. மெய்யினால் பணிசெய்தால்தான் இறைவனை அடைய முடியும் என்ற உண்மையை உணர்த்துகிறது. ''அப்பர்'' சுவாமிகள் சைவ சமயத்திற்கும் இலக்கியத்திற்கும் செய்த பணி அளவிடற்கரியதாகும். இவருடைய திருமுறைகள் அக்காலச் சமய, சமூக நிலைகளை அறியப் பெருந்துணையாக நிற்கின்றன. இவர் சைவ உலகிற்கு உணர்த்தியது அன்பு நெறியே. சமண பௌத்த சமயத்தை புறந்தள்ளி விட்டுச் சைவ சமயத்தை மக்கள் மனதில் இடம் பெறச் செய்தது இவருடைய முக்கிய பணியாகும். இந்து சமயம் செழித்து வளரவும் காரணமாக இருந்தார்.

சிவநெறிக் கொள்கை

சைவ சமய இலக்கியங்கள் இந்துக்களுக்கோ, இந்தியாவிற்கோ மட்டும் சொந்தம் என எண்ண முடியாமல் உலகமே இவற்றைப் போற்றுவதன் மூலமும், அமைதி வாழ்க்கைக்கான சிவநெறியை வழங்குவதன் மூலமும் இந்தியப் பண்பாட்டிற்குச் சைவ இலக்கியங்களும் அடியார்களும் செய்த அளப்பறிய பணியைக் கொண்டு அறியலாம்.

நாவுக்கரசரின் திருமுறைகளில் காணப்படும் இல்லறம், துறவறம், கடவுள் கோட்பாடு, மனிதாபிமான உணர்வு, சகிப்புத்தன்மை, உயர்ந்த ஆன்மீகக் கோட்பாடு போன்றவை இந்தியப் பண்பாட்டைச் சிறப்படையச் செய்கிறது.

சிவவழிபாட்டின் பயன்கள்

சைவ சமயமானது ஆன்மீகத்துறையில் கடைநிலையில் இருப்பவனும் கடைத்தேற்றம் பெறுவதற்கு எளிய வழிமுறைகளைக் கூறி ஒவ்வொரு மனிதனின் எதிர்காலத்திற்கும் ஒளியைத் தந்து கொண்டிருக்கிற இணை யற்ற சமயமாகும். இத்தகைய சமயத்தின் முழுமுதற் கடவுளான சிவனை வழிபடுபவர்கள் பல பயன்களை அடைவார்கள் என்கிறார் நாவுக்கரசர். அவை 1. துன்பத்தினின்று நீங்கி இன்பம் அடைதல், 2. வினையினின்று

விடுபடுதல், 3. பிறவி, பசி, பிணி, மூப்பு, சாக்காடு இவற்றினின்று நீங்குதல் என்பனவாம்.

அப்பரின் சிவக் கோட்பாடுகள்

சைவ சமயக் கோட்பாடுகள் எல்லாமே உயர்ந்த தத்துவ அடிப்படையில் விளக்கப்பட்டவை என்பதோடல்லாமல் பக்குவப்படாத ஆன்மாக்கள் வீடுபேறடையும் வழிபாட்டு முறைகளை உருவம் மற்றும் ஆலய வழிபாட்டையும் கூறுகிறது. சைவ சமயக் கோட்பாடுகளாக நாவுக்கரசரின் கூற்றிலிருந்து மேற்கண்ட கருத்துக்கள் எங்ஙனம் ஒத்திசைவு கொண்டுள்ளன என்பதைக் காணலாம்.

1. சிவன் பிறப்பில்லாதவன்
2. செத்துப்பிறப்பவர் உயிர்களேயன்றிக் கடவுள் அல்லர்
3. மக்களுயிர் புழுவாய் பிறக்கும் சாத்தியமும், சிலந்தி மன்னராய் பிறக்கும் சாத்தியமும் உண்டு.
4. உயிர்கள் இறைவன் ஆட்டுவிக்க ஆடும் பொம்மைகள்
5. அவனருளை கண்ணாகப் பாவித்தால்தான் உயிர்கள் அவனைக் காணும் பாக்கியம் கிட்டும்.
6. சிவனை வழிபடும் உயிர்கள் சிவகதி அடைகின்றன.

அப்பரின் சிவக்காட்சி

நாவுக்கரசர் சிவபெருமானைப் பல நிலைகளில் காணும் பேறு பெற்றார். சிவனைக் காண்பதென்பது எவர்க்கும் எளிதில் அமைவதன்று. நாவுக்கரசர் அம்மையப்பராகிய சிவனைக் கண்டது ஓர் அருமைவாய்ந்த செயலாகும். அப்பர் பெருமான் சிவன் அருட்சோதி வடிவினன் என்றும், ஆனால் அச்சோதியை யாரும் காணமுடியாது என்றும், பல பாடல் களில் பாடுகிறார்.

> ''ஒருத்தரால் அறியவொண்ணாத் திருவுரு உடைய சோதி''
>
> ''இருநிலனும் விசும்பும் விண்ணும் ஏழுலகும் கடந்து
> அண்டத்து அப்பால் நின்ற பேரொளியை''
>
> ''அண்டம் ஆரிருளூடு கடந்து உம்பர்
> உண்டுபோலும் ஓர் ஒண்சுடர் அச்சுடர்
> கண்டு இங்கு ஆரறிவார்''.

இதன் மூலம் சிவபெருமான் எவராலும் அறியமுடியாத அண்டத்துக்கு அப்பால் நின்ற பேரொளியாய் விளங்குகின்றான்.

எவராலும் காணவியலாத சிவனை எவ்வாறு காண்பது? இதற்கு விடையாக நாவுக்கரசர் கூறுகிறார் அவனைக் காணாதவாறு நம் அறிவை மறைக்கும் அறியாமையாகிய இருளை நீக்கி, சிந்தை தெளியக் காணுமாறு அருளுரைக்கின்றார்.

**''இருளாய் உள்ளத்தின் இருளை நீக்கி
இடர்பாவம் கெடுத்து ஏழையேனை உய்யத்
தெருளாத சிந்தனைத் தெருட்டித்தன்னின்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை''**

சிந்தனைக் கண் சிவனைக் கண்டபோது அவன், அவரது உள்ளத் தாமரையில் தோன்றியதை ''காயம் தன்னுள் புண்டரீகத்திருந்த வள்ளல்'' என்று குறிக்கின்றார். உள்ளக் கமலத்தில் தோன்றக் கண்டபோது அவர் தெளிந்த சிந்தையுடன் சிவத்தைப் பார்க்கிறார்.

அப்பர் பெருமான் தாம் கனவு கண்டதில் சிவனின் அருட்காட்சி பெறுகிறார். கனவில் சிவனைக் கண்டதால் அவன் அவர் நெஞ்சில் நின்று எக்காலும் நீங்காதவனானதை உரைக்கும் நாவுக்கரசர் கனவில் எழுந்தருளிய அப்பெருமானுடைய தோற்றம், அவரை வருத்திய நோய்களின் கொடுமையெல்லாம் ஒழித்து விட்டதால்.

**''ஒற்றியூர் மேய ஒளிவண்ணனார்
கண்டேன் நான் கனவகத்தில்
கண்டேற்கு என்றன்
கடும்பிணியும் கடுந்தொழிலும்
கைவிட்டவே''**

என்று மிக்க களிப்புடன் கூறுகின்றார்.

இவ்வாறு சிவபெருமானைச் சிந்தையிலும் கனவிலும் கண்டு தெளிவும் இன்பமும் கொண்ட அப்பரடிகள், அவன் ஆங்காங்கே கோயில் கொண்டிருப்பது கொண்டு அவ்வூர்கட்குச் சென்று சிவனைத் தம் கண்களாரக் கண்டு பெற்ற மகிழ்ச்சியை விரிவாகப் பெருகிய தாண்டகங்களில் பாடிக் காட்டுகின்றார். திருக்கழுக்குன்றம், திருநாரையூர், திருப்பாசூர், திருவாய்மூர், திருப்பூந்துருத்தி, கஞ்சனூர் முதலிய ஊர்களில் பாடியுள்ள தாண்டகங்கள் சிறந்த சான்று பகர்கின்றன.

உண்ணாநோன்பிருந்து உடலை வருத்தியும், காடு மலைகளுக்குச் சென்று கடுந்தவம் புரிந்தும் தீர்த்தங்களை நாடிச்சென்று ஆடித்திளைத்தும், குன்றுபோல் குவித்துள்ள அறநூல்கள் பலவற்றைப் பயில்வதாலும் இறைவனின் காட்சியைக் காணமுடியாது. இறைவனிடத்து மாறாத அன்பு

கொண்டு எப்பொழுதும் அவன் திருவடிகளைச் சிந்தித்துத் தொழுதல் ஒன்றுதான் இறைவனின் திருக்காட்சியைக் காண வழியாகும் என்கிறார் நாவுக்கரசர்.

1. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய அப்பரடிகள் மனித இன ஒருமைப்பாட்டிற்குப் பாடினார். மனித இனத்தின் உயர்வுக்குப் பணிபுரிந்தார்.
2. திருநாவுக்கரசரின் சிவநெறிக் கொள்கை தனிமனித மேம்பாட்டையும் பண்பாட்டுச் சிறப்பையும் எடுத்துரைக்கிறது.
3. பிறவிப் பயனை அடைய சிவ வழிபாடே சிறந்தது என்பதை அப்பர் பாடல்கள் அழகாக வலியுறுத்துகின்றன.
4. அப்பரின் சிவநெறிக் கோட்பாடுகள் மற்ற சைவப் பெரியார்களின் நிலையிலிருந்து வேறுபட்டு உயர்ந்த தத்துவக் கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.
5. சிவனைக் காணும் வழியினை அவரது பாடல்கள் அழகாக எடுத்துரைக்கின்றன.

40. நாவுக்கரசரின் பதிக அமைப்புகள்

சி. சற்குணவள்ளி, கருமாத்தம்பட்டி.

நாட்டில் செல்வாக்குப் பெற்றிருந்த சமண பௌத்த சமயங்களை எதிர்த்துக் கலைநயத்துடன் கூடிய பக்திப் பாக்கள் தோன்றின. நாயன்மார்களும் ஆழ்வார்களும் இசையோடு பாக்களைப் பாடிக் கோயில்தோறும் சென்று வழிபட்டனர். பாடல்நெறி என்னும் பதிக வழியே அவர்கள் மேற்கொண்ட நெறியாகும். பதிகப்பாடல் வழியாக இறைவனைப் போற்றலாயினர். சம்பந்தரைப் பாராட்ட வந்த நம்பியாண்டார் நம்பி ஞானசம்பந்தர் திருப்பதிகம் வாயிலாக உலகினர்க்கு அறிவுறுத்திய சமய நெறியினைப் ''பதிகப் பெருவழி''யெனச் சிறப்பித்துப் போற்றியுள்ளார்.

பதிகம் – பெயர் வழக்கு

பதிகம் என்னும் அமைப்பு முறையானது பதிற்றுப்பத்தில்தான் முதற்கண் காணப்படுகிறது. ஒவ்வொரு பத்துப் பாடல்களுக்கும் பின்னர் தொகுப்புப் பின்னுரையாக இப்பதிகம் அமைந்துள்ளது. பத்துப் பாக்களின் தொகுதியைக் குறிப்பாகப் பொருள் கொள்ளும் வகையில் இப்பதிகம் அமையவில்லை. ஒவ்வொரு பத்தின் பாட்டுடைத் தலைவன் இன்ன வேந்தன் என்பதும் அவன் ஆற்றிய அருஞ்செயல்கள் இன்னவை என்பதும் கூறப்பட்டுள்ளன. இப்பதிகத்தின் முற்பகுதி செய்யுளில் அமைந்துள்ளது, பிற்பகுதி உரைநடையில் அமைந்துள்ளது.

பதிற்றுப்பத்தின் பதிகங்கள் பதிற்றுப்பத்தைத் தொகுத்த புலவரால் பாடல் பெற்றிருத்தல் வேண்டும் எனவும், தொகுத்தவரின் பெயரும் காலமும் அறிதற்கு இயலவில்லை எனவும் இப்பதிக அமைப்பைப் பின்பற்றியே சோழ மன்னர்கள் தங்களை கல்வெட்டுக்களில் மெய்க் கீர்த்தியைச் சேர்த்தனர் எனவும் சதாசிவப் பண்டாரத்தார் கூறுவர்.

பின்னர் கி.பி. நான்காம் நூற்றாண்டின் இறுதி அல்லது ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த காரைக்காலம்மையார் ''திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள்'' என்ற பெயரில் இரு பதிகங் களைப் பாடியுள்ளார். இவற்றுள் திருக்கடைக்காப்புச் செய்யுளையும் சேர்த்துப் பதினொரு பாடல்கள் அமைந்துள்ளன. திருக்கடைக்காப்புச் செய்யுளை நீக்கிவிட்டால், எஞ்சியுள்ள பத்துப் பாடல்களே இங்குப் ''பதிகம்'' என்ற இலக்கிய வகையாகக் குறிக்கப்படுகின்றன. எனவே

பத்துப் பாக்களால் அமைந்தவற்றைப் ''பதிகம்'' எனக் கூறும் வழக்கு, காரைக்காலம்மையார் காலம் முதலாகத் தமிழில் நிலை பெற்றிருத்தல் வேண்டும் எனக் கருத முடிகிறது.

''பதிகம்'' என்பது பாயிரத்தினைக் குறிக்கும் பல பெயர்களில் ஒன்று என்பார் நன்னூலார்.

''பதிகக் கிளவி பல்வகைப் பொருளைத் தொகுதியாகச் சொல்லுதல் தானே'' என்பார் சிவஞான முனிவர்.

''பதிகம்'' என்னும் இலக்கிய வகையின் இலக்கணத்தைப் பன்னிரு பாட்டியல், முத்துவீரியம், பிரபந்ததீபிகை, சுவாமிநாதம் ஆகியன கூறுகின்றன. இவற்றுள் பன்னிரு பாட்டியல், ''ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், நான்கடி முதல் எட்டடிகாறும் வரும் வெண்பா ஆகியவற்றால் இது வரும் என யாப்பையும், பத்தாகவும் இருபதாகவும் வரும்'' என எண்ணிக்கையையும் கூறுகின்றது. பதிக இலக்கியத்திற்குப் பொருள் வரையறையில்லை.

''ஆசிரியத் துறை அதனது விருத்தம்
கலியின் விருத்தம் அற்றின் நான்கடி
எட்டின் காறும் உயர்ந்த வெண்பா
மிசைவைத்து ஈரைந்து நாலைந்த என்னப்
பாட்டுவரத் தொடுப்பது பதிகமாகும்''

என்று பன்னிரு பாட்டியல் கூறும்.

''கோதிலோர் பொருளைக் குறித்து ஐயிரண்டு
பாவெடுத் துரைப்பது பதிகமாகும்''

என்று முத்துவீரியம் கூறுகின்றது.

பக்தி இலக்கியப் பதிக அமைப்பு

நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலத்தில் ''பதிகம்'' என்பது இறைவனைப் போற்றிப் பாடிய பத்துப்பாக்களின் தொகுதியாக வழங்கியது. ''ஆரிய வேதங்களிலே சாகை என்னும் பிரிவுகள் அநேகமாக உள, ஆரிய வேதத்தின் பிரிவுகட்கு எங்கனஞ் சாகை என்னும் பெயர் வழங்கலாயிற்றோ அதுபோலத் தமிழ் வேதத்தின் பிரிவுகட்குத் திருப்பதிகம் என்னும் இப்பெயர் வழங்கலாயிற்று'' என்பார் சாமிநாத பண்டிதர்.

இனிப் ''பாயிரம் நாந்தி பதிக மென்ப'' என்னும் விதிப்படி, திருஞானசம்பந்தரும் நம்பியாரூரரும் இறுதியில் நாந்தி (திருக்கடைக் காப்பு) கூறலாகிய பாயிரம் உரைத்தலால் பதிகம் எனப் பெயர் பெற்றதாகக் கருதுவாரும் உளர்.

''சைவ ஆசிரியர்கள் நால்வரும் திருப்பதிகள்தோறும் சென்று பாடியருளினர் என்று நூல்கள் உரைத்தலின், அத்தல எல்லை சமீபித்த

இடத்தும், தலமடைந்துழியும் தூலஇலிங்கமாகிய கோபுரம் தரிசனமாய விடத்தும், திருவீதிக்கணும் பரமனை நோக்கிப் பாடல் பெற்றனவாகலின் அவை வழிச் செல்வோர் பாசுரங்கள் என்னும் பொருட்டாகவும் முடிதல் காண்க. அங்ஙனம் வழிச் செல்வோற்குப் பதிகன் என்னும் பெயருண்மையும், ஆரிய வேதத்து ஆரணீயகம் என்னும் பகுதிகள் ஆரண்ய சம்பந்த முள்ளனவென்று காட்டுப்பாட்டுக்களென அருத்தம் பண்ணலுண்மையும் கண்டு கொள்க'' என்பார் சாமிநாத பண்டிதர். இவ்வாறு அவர் கொள்வது வடமொழி மரபு பற்றியதாகும். தமிழ் மரபுக்கு ஏற்றதன்று.

முதலாம் இராசஇராசசோழன், ''தஞ்சைப் பெருவுடையார் கோயிலில், தேவாரத்தைப் பண்ணோடு பாடுதற்காக 48 பிடாரர்களையும் (இக்காலத்து ஓதுவார்கள்) அவர்கட்குக் கொட்டி மத்தளம் வாசிப்பதற்காக இரண்டு பேரையும் அமர்த்தி அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நாளும் முக்குறுணி நெல் கொடுக்கவும், இன்னின்னார்க்குப் பிறகு இன்னின்னவர் இப்பணி செய்திடல் வேண்டுமென்றும் ஏற்பாடு செய்ததைத் தஞ்சைக் கோயிலில் உள்ள ''திருப்பதியம் விண்ணப்பக் கல்வெட்டு'' விளக்கமாகக் கூறுகிறது. இவன் கால முதற்கொண்டுதான், சிவன் கோயில்களில் வழிவழியாகத் தேவாரம் பாடும் வழக்கம் வந்திருக்க வேண்டும்.

''ஞானசம்பந்தன் பாமருபாடல்
பத்தும் வல்லார்மேற் பழிபோமே''

''திருவிரா மேச்சுரத்தை உரைகள்பத் தாலுரைப்பா
ருள்குவா ரன்பினாலே''

''தூய தமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர்''

என்று பக்திப் பனுவல்களில் கூறப்படுகின்றன.

''மாணிக்கவாசகர் பிடித்த பத்து, பிராத்தனைப் பத்து, அச்சோப் பத்துப் போல்வன. ஐங்குறுநூற்றுத் தெய்யோப் பத்து, கிள்ளைப்பத்துப் போலப் பெயரிடப்பட்டுள்ளன. ''ஒருபா ஒருபஃது'' என்பதும் பதிகத்தின் பிறிதொரு வளர்ச்சியாகக் கருதப்படும். ''இருபா இருபஃது'' என்பது அதன் இரட்டித்த வடிவமாகும். இணைமணிமாலை, இரட்டை மணிமாலை, மும்மணி மாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை போல்வனவெல்லாம் பத்துக்களைப் பா வேறுபாட்டுடன் இரட்டிப்பதால் உருவான வகைகளே யாகும்'' என்று தமிழண்ணல் கூறுவது இவண் நினைவு கூர்தல் பொருந்தும்.

பாசுரம், பதிகம் என்பன ஒருபொருட் சொற்கள் என்று சிலர் கொள்வர். ஆயின் பாசுரம் என்பது செய்யுட்கும், பதிகம் என்பது அச்செய்யுள் பத்துக்கொண்ட ஓர் தொகுதிக்கும் பெயராதல் வேண்டும்.

''நல்லவர்கள் சேர்புகலி ஞானசம்பந்த னல்ல
வெல்லார்களும் பரவு சேனை யேத்துப் பாடல்
பல்லார்களும் மதிக்கப் பாசுரஞ் சொன்னபத்தும்''

என்று திருஞானசம்பந்தர் கூறுவதனால் இதனை அறியலாம்.

இப்''பதிகம்'' என்பதே பின்னர்ச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுப் பல பதிக இலக்கியங்கள் தோன்றுவதற்கு வித்திட்டது எனலாம்.

மூன்றாம் குலோத்துங்கன் காலத்துக்கு முன்னர் மூவர் பாடிய தேவாரப் பாக்களைத் ''திருப்பதிகம்'' என்ற சொல்லாற் குறிப்பிட்டனர்.

திருமுறைப் பகுப்பு முறை

கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய ''திருமுறை கண்ட புராணம்'' எனும் நூலில் திருமுறைகள் கண்டு தொகுக்கப் பெற்ற செய்தியை விளக்கமாகக் காண முடிகிறது.

திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையாருக்கு வழிபாடு செய்யும் ஆதிசைவக் குடும்பத்தைச் சார்ந்தவர் நம்பியாண்டார் நம்பியாவார். தில்லையில் செல்லரித்துக் கிடந்த தேவார ஏடுகளைத் தொகுத்து வரையறை செய்தவர் இவரே. திருமுறை கண்ட சோழனின் வேண்டுகோட்கு இசைந்தே இவ்வாறு செய்தார்.

பொதுவாக, திருமுறைகளை வகுத்தவர் நம்பியாண்டார் நம்பி என்று கூறுவர். ஆயின் அவர் திருமுறைகளை வகுக்கும் பொழுது மூவர் திருப்பதிகங்களையும் முன்போலவே ஏழு திருமுறைகளாக வகுத்தார் என்று திருமுறை கண்ட புராணம் கூறுகின்றது. எனவே மூவர் அருளிய தேவாரமானது நம்பியின் காலத்துக்கு முன்பே ஏழு பகுதிகளாக வகுக்கப் பட்டிருந்தது என்பது நன்கு பெறப்படும்.

அதன் பின்னர் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், திருக்கோவையார் இரண்டும் எட்டாம் திருமுறையாகவும், திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதின்மர் பாடிய திருவிசைப்பா அவற்றையடுத்து ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் அருளிய திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும், பன்னிருவர் அருளிய நாற்பது பிரபந்தங்களும் பதினொராந் திருமுறையாகவும் நம்பியாண்டார் நம்பியே தொகுத்துதவினர் என்றும் திருமுறை கண்ட புராணம் கூறுகின்றது.

பெரியபுராணம் இயற்றப்பட்ட பின்னர் அது பன்னிரண்டாம் திருமுறையாக வைக்கப்பட்டது.

திருநாவுக்கரசர் தேவாரம்

திருநாவுக்கரசர் தேவாரம் நான்கு, ஐந்து, ஆறு என்று மூன்று திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. சம்பந்தர், சுந்தரர் அருளிய தேவாரத்தில் காணப்பெறாத இயற்றமிழ்ச் செய்யுள் இனங்களான திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் ஆகியன

மிகவும் சிறப்பாக அமைந்துள்ளன. அவர் பாக்களில் கட்டளை அமைத்துப் பண் வகுக்கப்பட்டுள்ள இசைப்பதிகங்கள் நான்காம் திருமுறையிலும், திருக்குறுந்தொகைப் பதிகங்கள் ஐந்தாம் திருமுறையிலும், திருத்தாண்டகங்கள் ஆறாம் திருமுறையிலுமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. ஐந்து, ஆறாம் திருமுறைப் பதிகங்கட்கும் பண் வகுக்கப்படவில்லையாயினும் அவ்விரு திருமுறைகளும் தனித்தனி ஒரு கட்டளை பெற்றிருப்பதாகக் கூறப்படுவதனால் அவற்றையும் இயற்றமிழ் யாப்பிலமைந்த இசைப்பனுவல்களாகவே கொள்ளல் வேண்டும்.

நான்காம் திருமுறையில் 113 பதிகங்களும் 1069 பாக்களும், ஐந்தாம் திருமுறையில் 100 பதிகங்களும் 1015 பாக்களும், ஆறாம் திருமுறையில் 99 பதிகங்களும் 980 பாக்களும் உள்ளன. ஆக 312 பதிகங்களும் 3064 பாக்களும் அடங்கியது இப்போது கிடைக்கும் திருநாவுக்கரசர் தேவாரம்.

தேவாரமானது தலங்கள்தோறும் சென்று பாடப்பெற்ற பதிகங்களாகும். அதனால் அத்தலப் பெயர்களே பதிகத்தின் தலைப்புக்களாக அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலிலும் அந்தந்தத் தலத்தின் பெயர் இடம் பெறும். நான்கு அடிகளாக அமைந்த இப்பாக்களில் ஏதாவதொரு அடியில் தலப்பெயர் இடம் பெற்றிருக்கும்.

சில பதிகங்களின் சிறப்புக்கருதி அப்பதிகம் அமைந்த தலப்பெயருடன் சிறப்புப் பெயர் ஒன்றும் அப்பதிகத்திற்கு இட்டு வழங்கியதையும் காணமுடிகிறது. இந்நிலை ஆறாம் திருமுறையிலேயே அதிகம் இடம் பெற்றுள்ளது.

வ.எ	பதிக எண்.	பதிகப் பெயர்	சிறப்புப் பெயர்
1.	4,5	திருவாரூர்	பழமொழிப் பதிகம்
2.	4,21	திருவாரூர்	திருவாதிரைப் பதிகம்
3.	4,24	திருவதிகை வீரட்டானம்	கொப்பளித்த திருநேரிசை
4.	6	கோயில்	பெரிய திருத்தாண்டகம்
5.	6,2	கோயில்	புக்க திருத்தாண்டகம்
6.	6,3	திருவதிகை வீரட்டானம்	ஏழைத் திருத்தாண்டகம்
7.	6,4	திருவதிகை வீரட்டானம்	அடையாளத் திருத்தாண்டகம்
8.	6,5	திருவதிகை வீரட்டானம்	போற்றித் திருத்தாண்டகம்
9.	6,6	திருவதிகை வீரட்டானம்	திருவடித் திருத்தாண்டகம்

10.	6,8	திருவதிகை வீரட்டானம்	காப்புத் திருத்தாண்டகம்
11.	6,82	திருவாரூர்	போற்றித் திருத்தாண்டகம்
12.	6,55	திருக்கயிலாயம்	போற்றித் திருத்தாண்டகம்
13.	6,56	திருக்கயிலாயம்	போற்றித் திருத்தாண்டகம்
14.	6,57	திருக்கயிலாயம்	போற்றித் திருத்தாண்டகம்

அப்பர் தேவார அமைப்பு

அப்பர் தேவாரத் திருமுறைகள் மூன்றாக வகுக்கப் பெற்றுள்ளன. பாடப்பெற்ற தலம் எதுவெனத் தெரியாமல் இருக்கும் பதிகங்கள் பொதுப் பதிகமென்றும், தனிப்பதிகமென்றும் வழங்கப் பெற்றுள்ளன.

பதிகங்களின் அமைப்பு முறையைப் பின்வருமாறு பிரிக்கலாம்.

1. மூன்று திருமுறைகளிலும் காணப்படும் பொதுவான செய்திகள்
2. நான்காம் திருமுறை (பொதுப் பதிகங்கள் நீங்கலாக)
3. ஐந்தாம் திருமுறை (பொதுப் பதிகங்கள் நீங்கலாக)
4. ஆறாம் திருமுறை (பொதுப் பதிகங்கள் நீங்கலாக)
5. பொதுப் பதிகங்கள்

1. நான்காம் திருமுறையில் 17 பதிகங்கள்
1. பண்ணமைந்த பதிகங்கள், 2. திருநேரிசைப் பதிகங்கள்
3. திருவிருத்தப் பதிகங்கள்
2. ஐந்தாம் திருமுறையில் 12 பதிகங்கள்
3. ஆறாம் திருமுறையில் 8 பதிகங்கள்

பொருளமைப்பால் பெயர் பெற்ற பதிகங்கள்

1. திருவங்கமாலை, 2. தசபுராணம், 3. குறைந்த திருநேரிசை, 4. காலபாசத் திருக்குறுந்தொகை, 5. ஆதிபுராணத் திருக்குறுந்தொகை, 6. இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை, 7. பாவநாசத் திருக்குறுந்தொகை, 8. மறுமாற்றத் திருத்தாண்டகம், 9. அடைவுத் திருத்தாண்டகம், 10. திருவினாத் திருத்தாண்டகம்.

பாடல்தோறும் பயின்ற சொற்பொருளமைப்பால் பெயர் பெற்ற பதிகங்கள்

5 பதிகங்கள் இப்பிரிவினுள் அடங்கும். "நினைந்த நெஞ்சம் அழகிதா நினைந்த வாறே" என்றும், "திருவடி நிழற்கீழது என்றன் ஆருயிரே" என்றும்,

''சரக்கறையோ என் தனி நெஞ்சமே'' என்றும், ''எம்மை யாளும் பசுபதியே'' என்றும், ''நின்ற வாறே'' என்றும் இப்பதிகங்களில் ஆளப்பட்டுள்ளன.

முதற்குறிப்பால் பெயர் பெற்ற பதிகம்

''சிவனெனு மோசை'' எனத் தொடங்கும் பதிகமே இவ்வகையிலடங்கும். இப்பதிகம் ''பியந்தைக் காந்தாரம்'' எனும் பண்ணிலமைந்துள்ளது.

ஈற்றுத்தொடரால் பெயர் பெற்ற பதிகம்

''பாவநாசப் பதிக''மே இவ்வகையிலடங்கும். இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலினும் பல தலங்கள் சொல்லப்பட்டுள்ளன. ''பற்றற்றார்சேர் பழம்பதி'' எனத் தொடங்கும் இப்பதிகம்.

பொருட்டொகையால் பெயர் பெற்ற பதிகங்கள்

நான்கு பதிகங்கள் இப்பிரிவிலடங்கும்.

1. மனத்தொகைத் திருக்குறுந்தொகை
2. சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை
3. உள்ளத் திருக்குறுந்தொகை
4. சேத்திரக் கோவைத் திருத்தாண்டகம்

பொதுவகையால் பெயர் பெற்ற பதிகங்கள்

தனிப் பதிகங்கள் என்று அழைக்கப் பெறுகின்ற 10 பதிகங்களும், பலவகை என்ற பெயரில் அழைக்கப்பெற்ற பதிகம் ஒன்றும் இப்பிரிவிலடங்கும். யாதொரு தலத்தொடும் படாது தனித்து நிற்கும் பதிகங்களே ''தனிப்பதிகங்க''ளாகும்.

திருநேரிசையில் மூன்று பதிகங்களும், திருவிருத்தத்தில் இரண்டு பதிகங்களும், குறுந்தொகையில் மூன்று பதிகங்களும், தாண்டகத்தில் இரண்டு பதிகங்களும் ''தனிப்பதிகங்கள்'' என்றழைக்கப்படுகின்றன.

1. பதிகம் என்பது இறைவன்மீது பக்தி அடிப்படையில் பாடப்பட்டிருந்தல் வேண்டும். பாடல் எண்ணிக்கைக்கு அளவில்லை. பதிகப் பலன் கூறும் பாடல் இருக்கவேண்டுமென்ற விதி தேவையில்லை. இப்பதிகம் என்பதே பக்தி இலக்கியங்களுக்கு உரியதாகப் பிற்காலத்தில் வழங்கப்பட்டன.
2. தலத்தின் பெயர்களே பதிகத்தின் பெயர்களாக அமைந்துள்ளன.
3. பொதுப் பதிகங்கள் அப்பர் தேவாரத்திலேயே அதிகமாகக் காணப் படுகின்றன.
4. சில பதிகங்களின் சிறப்புக் கருதி அத்தலப்பெயருடன் வேறு சில தலைப்புக்களும் அப்பதிகங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

41. நாவுக்கரசர் எனும் ஒரு நற்பெயர்

ச. சாம்பசிவனார், மதுரை.

தேவாரம் என்னும் தீந்தமிழ்ப் பதிகம் பாடிய மூவரில், நாவுக்கரசரும் ஒருவர். அவர்தம் திருப்பெயரின் சிறப்புக் குறித்து ஒரு சிறிது ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

மூவருள் 'நாவுக்கரசர்'

சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்னும் இம்மூன்று அருளாளர்களும் இத்தமிழகத்தில் தோன்றியிராவிட்டால், 'திருநீறுதான் எங்கே? சைவந்தான் எங்கே?' என்ற நிலைதான் இருந்திருக்கும். எம்பெருமான் திருவருளால் இவர்கள் அவதரித்துப் பண்டைத் தமிழ்ச் சைவத்தையும் திருநீற்றின் ஒளியையும் உலகறியச் செய்தனர். இம்மூவரில், நாவுக்கரசரின் வாழ்வு சிறிது வேறுபட்டது.

சம்பந்தர், இறுதியின்போது சோதியிற் கலந்தவர்; சுந்தரர், திருக்கயிலை சென்றவர்; நாவரசரோ, பிற மானிடரைப் போலவே, இறையடி எய்தியவர். ''புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன், பூம்புகலூர் மேவிய புண்ணியனே'' என்று முன்னதாகவே அறிந்து இறைவன் திருவடியில் இரண்டறக் கலந்தவர்.

சமணர்களால் அளப்பரிய இன்னல்களுக்கு ஆளாகியவர். **நான்குமுறை உயிர்த்தெழுந்த அருளாளர்;** ஏனைய இருவரைவிட நெடிது வாழ்ந்தவர்; அஃதாவது எண்பத்தொரு வயதுவரை இருந்தவர். திருமணம் ஆகாத முற்றத் துறந்த முனிபுங்கவர்; தாம் வாழ்ந்த காலத்திலேயே 'அப்பூதி அடிகள்' என்ற சிவனடியாருக்கு மானசீகக் குருவாக இருந்தவர்.

'நாவுக்கரசர்' என்னும் நற்பெயர்

நாவுக்கரசருக்குப் பெற்றோர் இட்ட பெயர் 'மருள்நீக்கியார்'; சமண சமயம் சார்ந்தபோது அவர்கள் அளித்த பெயர் 'தருமசேனர்'; திருஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்து கூறிய பெயர் 'அப்பர்'. இவை எல்லாவற்றுக்கும் மேலாகச் சிவபெருமானே சிந்தை மகிழ்ந்து அளித்த அரிய பெயர்தான் 'நாவுக்கரசர்'!

திலகவதியாரின் வேண்டுதலுக்கு இணங்க, இறைவன், மருள்நீக்கியாருக்குச் 'சூலை' நோய் கொடுத்தான்; வேறுவழியின்றி அவர், தமக்கையாரை நாடிவந்தார். அப்போது 'திருவாளன் திருநீறு திலகவதியார் அளித்தார்'; பெருவாழ்வு வந்தது என்று எண்ணிய மருள்நீக்கியார், தம்பிரான் திருவருளால் உரைத் தமிழ் மாலைகள் சாத்தும் உணர்வு பெற்றார். அதுகாலை, 'கூற்றாயினவாறு' எனும் திருப்பதிகம் பாடினார். அங்கங்கள் அடங்க, உரோமமெலாம் அடையப் புளகங்கண் முகிழ்த்தலரப், பொங்கும் புனல் கண்கள் பொழிந்திழியப், புவிமீது விழுந்து புரண்டு அயர்ந்தார். அப்போது வீரட்டம் அமர்ந்த பிரான், கருணைகூர்ந்து,

> ''பாவுற்றலர் செந்தமிழின் சொல்வளப் *பதிகத் தொடை*
> *பாடிய பான்மையினால்*
> *நாவுக்கரசு* என்று உலகேழினும் நின்நன் நாமம் நயப்புற மன்னுக!''
>
> (பெ.பு.திருநா. புரா. 74)

என்று திருவாய் மலர்ந்தார். அன்று முதலே அவருக்கு 'நாவுக்கரசர்' எனும் நற்பெயர் துலங்குவதாயிற்று.

இறைவனே, 'நாவுக்கரசர்' எனும் பெயர் சூட்டிய சிறப்பு, ஏனைய இருவர்க்கும் கிடைக்காத பேறு எனலாம்!

'தாண்டக வேந்தர்'

சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவருமே 'தேவாரம்' எனும் திவ்வியப் பதிகங்கள் பாடிய சிறப்பினரே. ஆனால் நாவுக்கரசர், 'திருத்தாண்டகம்' பாடிய பெருமையினர். இறைவன் 'நாவுக்கரசர்' எனும் பெயர் சூட்டியதற்கு என்ன காரணம்? 'செந்தமிழின் சொல்வளப் பதிகத் தொடை பாடியதே'யாம்.

'தாண்டகம்' என்பது பாவினங்களில் வைத்து எண்ணத்தக்கது. அடி 1-க்கு 26 எழுத்துக்களின் மிக்கு வர, 4 அடியில் பாடப்பெறுவது திருநாவுக்கரசர் ஒருவரே, இத்தகைய பாவினால் இறைவனைப் பாடினார். இதுகுறித்து வை. இரத்தினசபாபதி கூறுவது இவண் எண்ணத்தக்கது.

> ''இறைவன் உயிர்களுக்காக இரக்கம் கொண்டு, இவ்வுலகில் எழுந்தருளிச் செய்யும் அருள் விளக்கங்களாகிய மெய்ம்மை அமைந்த புகழையே பாடுவதனால், இது *'திருத்தாண்டகம்'* என அடைமொழி ஏற்றது. செஞ்ஞாயிறு என்றாற்போல இனம் சுட்டாது பண்பு ஒன்றையே சுட்டும் அடைமொழியே 'திரு'!''
>
> (நால்வர் நான்மணிமாலை உரை, ப. 70)

நாவுக்கரசர் பாடிய தேவாரம், சைவத் திருமுறைகளில் 4; 5; 6 ஆகும். இவற்றுள் 6-ஆவது திருமுறையைக் 'தாண்டகத் திருமுறை' என்றும் கூறுவர்.

> "இறைவனது திருவடியைச் சிறப்பித்து இவர் (நாவுக்கரசர்) பாடியதுபோல, இவருக்கு முன்னும் பின்னும் தோன்றி நிலவிய சான்றோருள் எவரும் பாடியதே இலர்; கட்டளையுடைய பாட்டுக்களான திருவிருத்தமும் திருத்தாண்டகமும் இவர்க்கென்றே அமைந்த இனிய பாவினங்களாக உள்ளன. திருவிருத்தத்தினும் *திருத்தாண்டகம்* அரிய கட்டளை (அதாவது எழுத்தெண்ணிப் பாடுவது) அமைந்தது. ஆயினும் இவர், இத்திருத்தாண்டகங்களை மிக்க எளியவாகப் பாடியிருப்பது இவரது திருப்பெயருக்குப் பொருத்தமாக இலங்குகிறது. திருமுறை கண்ட காலத்து இருந்த சான்றோர், இத்திருத்தாண்டகங்களையெல்லாம் ஒருசேரத் தொகுத்து, ஒரு திருமுறையாக வகுத்திருப்பது ஒன்றே, திருத்தாண்டக மாண்பை வற்புறுத்துவதாகும்"
>
> (சைவ இலக்கிய வரலாறு, ப. 141)

என்று ஔவை சு. துரைசாமிப்பிள்ளை கூறுவதுகொண்டு, நாவுக்கரசருக்குத் **'தாண்டக வேந்தர்'** எனும் பெயர் எத்துணைப் பொருத்தம் என்பதை அறியலாம். அன்றியும் சைவத் திருக்கோயில்களில், திருத்தாண்டகத்தை ஓதுவதற்கென்றே நிவந்தமும் விட்டுள்ளனர் என்றும் அறிய முடிகின்றது. கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த 3-ஆம் குலோத்துங்க சோழனது 29-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று, திருக்குறுக்கையில் உள்ள திருக்கோயிலில், நாவுக்கரசரது திருத்தாண்டகத்தை முறையாக ஓதுவதற்கு நிவந்தம்விட்ட செய்தியைக் கூறுகின்றது. (சைவ இலக்கிய வரலாறு, ப. 141).

'நாவுக்கரசர்' – ஒரு மந்திரச்சொல்

'நாவுக்கரசு' என்பது பெயர் மட்டுமன்று; மந்திரமுமாகும். எவ்வாறு, 'நமசிவய' என்பது எம்பெருமானுக்குப் பெயராகவும், முத்தியை நல்கும் மந்திரமாகவும் உள்ளதோ அதுபோன்றே நாவரசு என்பதும்!

'நாவரசு' என்பது இறைவன் திருவாயிலிருந்து வெளிப்போந்த மந்திரச்சொல் ஆதலின், அப்பூதி அடிகள், அதனையே சொல்லியும் எழுதியுமே சிவப்பேறு பெற்றார். அப்பூதி அடிகள், தவம் செய்தாரிலர்; நெருப்பின் நடுவில் நின்று உடம்பை வாட்டினாரல்லர்; தண்ணீரையே உணவாகக் கொண்டு மற்றைப் பொருளை வெறுத்து விரதம் மேற்கொண்டாரிலர்; ஐம்புல இன்பங்களைத் துய்த்துக்கொண்டேயிருந்தும் 'திருநாவுக்கரசு' என்ற சொல்லை மட்டும் எழுதியும் சொல்லியுமே

முத்திநிலை எய்தினார். இதனைச் சிவப்பிரகாச சுவாமிகள், தம் 'நால்வர் நான்மணிமாலை'யில் மிக அருமையாகச் சித்திரிக்கின்றார்.

"உற்றான்அலன்; தவம்தீயில்நின் றான்அலன்; ஊன்புனலா
அற்றான்அலன்; நுகர்வும்*திரு நாவுக்கரசு* எனும்ஓர்
சொல்தான் எழுதியும் கூறியுமே என்றும் துன்பில்பதம்
பெற்றான் ஒருநம்பி அப்பூதி என்னும் பெருந்தகையே" (38)

அன்றியும், சிவப்பிரகாச சுவாமிகள், "நாவுக்கரசர் பாடிய தேவாரம், முத்தியை அடைவதற்குரிய வாயில்" என்றும் போற்றுகின்றார்:

"வீட்டிற்கு வாயில்எனும் *தொடை* சாத்து சொல் வேந்த" (2)

என்பது அவர் வாக்கு. இறைவன் திருவாயிலிருந்து வெளிப்போந்ததாகத் தெய்வச் சேக்கிழார், 'பதிகத் தொடை பாடிய பான்மையினால்' என்றார்; அதே தொடரைச் சிவப்பிரகாசர் எடுத்து ஆள்வது எண்ணத்தக்கது.

நாவன்மையால் நாவுக்கரசர்

பதிகத்தொடை பாடிய பான்மையினால் - வேறெவரும் பாடாத 'திருத்தாண்டகத்'தைப் பாடிய பான்மையினால் 'நாவுக்கரசர்' எனும் பெயர் கொண்டார் என்பது ஒருபுறமிருக்க, நாவன்மையுடையவராதலினாலும் நாவுக்கரசர் ஆனார் எனலும் பொருந்தும். அதற்குச் சில சான்றுகள்.

நாவுக்கரசர், சமணம் நீங்கிச் சைவம் சார்ந்தமையால் அழுக்காறு கொண்ட அமணர்கள் சொல்லொணாத் துயரம் விளைவித்தனர். முதற்கண் நாவரசரை அழைத்துவர ஆட்களை அனுப்பினான் பல்லவ வேந்தன். அழைத்தவனோ, மாமன்னன்; காஞ்சியிலே கொடிகட்டி ஆண்ட மகேந்திரவர்ம பல்லவன். அரசனின் ஆணையாயிற்றே என்று கருதி, அழைத்ததும் ஓடவில்லை நாவரசர்; 'எமக்காக ஆட்சியேயன்றி ஆட்சிக்காக நாம் அல்லோம்' என்று துணிந்த நெஞ்சினராய்,

"நாம்யார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்;
நரகத்தில் இடர்ப்படோம்; நடலைஇல்லோம்" (6:98)

என இறுமாந்து உரைத்தார்.

அரசனுக்குரிய இயல்புகளைக் கூறவந்த திருவள்ளுவர்,

"*அஞ்சாமை* ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு" (குறள் - 382)

என்பார். இந்நான்கினும் '**அஞ்சாமை**' முதற்கண் உள்ளது சிந்தித்தற்குரியது. வேந்தனுக்கு உரிய இவ்அஞ்சாமைப்பண்பு, நாவுக்கரசர்பால் இருந்தது; இஃது இவர்க்கு எங்ஙனம் வந்தது? எம்பெருமான் திருவருளால் வந்தது! நாவுக்கு அரசரும், அரசர்தாமே? சொல் வேந்தர் ஆயிற்றே;

தாண்டக வேந்தர் அல்லவா? எனவே அஞ்சாமை இருந்ததில் வியப்பில்லை. அன்றியும் 'நடலை இல்லோம்' என்ற கூற்றிலும் நயம் உண்டு.

> " 'நடலை' என்பது நல்ல பொருள் பொதிந்த சொல். நான், தெருவிலே சுற்றித்திரிகிற நடைப்பிணம் அல்ல; சீனப்பொம்மை அல்ல; ஆண்மை செறிந்த ஒரு மனிதன் என்ற கருத்திலேதான் நடலை இல்லோம் என்றார்" (அப்பர் விருந்து, ப. 14, 15)

என்று நயம்காண்பார் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

சிவப்பிரகாச சுவாமிகள், 'சொல் வேந்த' (2) என்று நால்வர் நான்மணிமாலையில் கூறியதற்கு விளக்கம் கூறவந்த வை. இரத்தினசபாபதி,

> " 'வேந்து' என்றார் வீரம் கருதி. 'நாம் யார்க்கும் குடியல்லோம்' என்று பல்லவ மன்னனையே மதியாது பேசிய பேச்சு, வீரத்தோடன்றி, அவன் தானே வேந்தன் என மெய்ப்பிக்க வேண்டி இவருக்கு இழைத்த இன்னல்களையெல்லாம் வென்று, செயலாலும் வீரத்தை நிலைநாட்டினார்; ஆதலின் 'வேந்து' என்று திருநாவுக்கரசரைக் குறிப்பிட்டார்" (ப. 72, 73)

என்பார். இவ்வாறன்றித் தாண்டகத்தால் வேந்து ஆனார் என்பதும் பொருத்தமே. "மாணிக்கவாசகருக்குப் பின் கோவை பாடினார் பலர்; தாண்டகம் பாடினார் யார்?" என்று, தாண்டகவேந்தரின் சிறப்பை மொழிவார் இரத்தினசபாபதி.

அன்றியும் அமணர்கள், வயக்களிற்றினை எதிரேவிட்டுக் கொல்லத் துணிந்தபோதும், நாவுக்கரசர், **"அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை"** (4:2) என்று பேராண்மையுடன் மொழிந்த அஞ்சா நெஞ்சினர்!

வள்ளுவர், "நாநலம் என்னும் நலனுடைமை" (குறள் - 641) என்பார். இத்தகு நாவன்மை, நாவுக்கரசர்பால் இயல்பாகவே அமைந்திருந்தது.

திருப்புகலியில், சம்பந்தர் - நாவுக்கரசர் சந்திப்பு நிகழ்கின்றது. நாவுக்கரசர், பழுதில் பெருங்காதலுடன் சம்பந்தரின் அடிபணியப், பணிந்தவர் தம் கரங்கள்பற்றி, எழுதரிய மலர்க்கையால் எடுத்திறைஞ்சி, அழுதழைத்துக் கொண்ட சம்பந்தர், 'அப்பரே' என்றார்; நாவுக்கரசரோ **'அடியேன்'** என்றார். திருப்பூந்துருத்திக்குச் சம்பந்தர் வருகை தந்தபோது, சம்பந்தரின் மணிமுத்தின் சிவிகையைத் தாங்கிவந்தார் திருநாவுக்கரசர். உண்மையறியாத சம்பந்தர், 'எங்குற்றார் அப்பர்?' என வினவ, நாவுக்கரசரோ,

> "உம்*அடியேன்* உம்அடிகள் தாங்கிவரும்
> பெருவாழ்வு வந்தெய்தப் பெற்றுஇங்குற்றேன்"
> (திருநா. புரா. 396)

என்றார் எனின், நாவுக்கரசரின் நாவன்மையை ஒருவாறு அறிதல் கூடும்.

கோப்பெருஞ்சோழனைக் காணாமலேயே அவன்பால் நட்புக் கொண்டிருந்தார் பாண்டியநாட்டுப் புலவரான பிசிராந்தையார். இது, சங்ககாலச் செய்தி. கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாவுக்கரசரை நேரில் காணாமலேயே அவர்பால் அன்பும் மரியாதையும் கொண்டிருந்தார் என்பதைவிட அளவற்ற பக்தி கொண்டிருந்தார் ஒருவர். அவர்தாம் அப்பூதி அடிகள்! சாதி வேறுபாடு இருந்த காலத்தில் வாழ்ந்தவர்கள் சம்பந்தர் முதலானோர். ஆயினும் சைவம் அவர்களையெல்லாம் ஒன்று சேர்த்தது. 'அந்தணரின் மேம்பட்டவர்' அப்பூதி அடிகள். நாவுக்கரசரோ வேளாண் குலத்தினர். இருப்பினும், நாவுக்கரசரின் அருஞ்செயல்களையும், அவருக்கு இறைவன் காட்டிய பேரருட் திறத்தினையும் செவிவழியாகக் கேள்விப்பட்ட அப்பூதி அடிகள், நாவுக்கரசர்பால் அளவற்ற பக்தி கொண்டிருந்தார். திங்களூரில் பெருஞ் செல்வராக வாழ்ந்தவர்; தம் மனையில் உள்ள அளவைகள், நிறைகோல், மக்கள், பசுக்கள், மேதிகள் மற்றும் உளவெல்லாம் நாவுக்கரசரின் திருப்பெயரையே கூறுவாரெனின், இவர்தம் பக்தியை என்னென்று ஏத்துவது? திங்களூருக்கு எழுந்தருளிய நாவுக்கரசர், தம் பெயரையே எங்கும் கண்டு அதிசயித்தார்! அப்பூதியடிகளின் இல்லம் வந்த நாவுக்கரசர், அவர்பால்,

"ஆறணியும் சடைமுடியார் அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெருந் தண்ணீர்ப்பந் தரில்நும்பேர் எழுதாதே
வேறொருபேர் முன்னெழுத வேண்டிய காரணம் என்கொல்?"

(அப்பூதி. புரா. 12)

என்று வினவினார்! பொதுவாக அறச்செயல்கள் செய்வோர், தம் பெயராலேயோ அன்றித் தம் முன்னோர் பெயராலேயோ செய்வதுதான் உலக வழக்கு! ஆனால் அப்பூதியடிகளோ, அவ்வாறு செய்யாமல் நாவுக்கரசர்தம் திருப்பெயரைச் சூட்டியிருந்தார். இதனால்தான், நாவுக்கரசர், அவரை நோக்கி, 'நும்பெயர் எழுதாதே' என்றார். அவ்வாறு வினவியவர், 'நும்பெயர் எழுதாதே நாவுக்கரசர் பெயரை எழுதக் காரணம் என்ன?" என்று கேட்டிருந்தால் அப்பூதியடிகளுக்குச் சினம் தோன்றியிராது. ஆனால் நாவுக்கரசர், தம்பெயரைக் கூற விரும்பாமல், 'வேறொரு பேர்' என்றார்; அவ்வளவே! வந்தவர் நாவுக்கரசர் என்று அறியாத அப்பூதியடிகளோ, 'நாவுக்கரசர் என்னும் அருமைத் திருப்பெயர் நும் வாயில் வாராதோ? வேறொருபேர்' என்றதன் காரணம் என்னையென எண்ணி, மிக்கசினம் கொண்டு,

"எங்குறைவீர்? நீர்தாம் யார் இயம்பும்" (அப்பூதி. புரா. 15)

என்று அதட்டிக்கேட்டார். என்செய்வார் நாவுக்கரசர். உண்மை கூறித் தானே ஆகவேண்டும்!

"பிற துறையினின்று ஏற
அருளுபெருஞ் சூலையினால் ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும் உணர்வில்லாத *சிறுமையேன் யான்*" (அப்பூதி. 16)

என்று மொழிந்தார். சம்பந்தர் கேட்டபோது '*அடியேன்*' என்ற நாவுக்கரசர், இங்கு 'சிறுமையேன்' என்றார். இவ்விரு இடங்களிலும் நாவுக்கரசரின் நாவன்மை தெற்றெனப் புலனாதல் தெளிவு.

சேக்கிழார் திருவாக்கு

நாவுக்கரசரைப் பற்றிப் பேசுமிடங்களிலெல்லாம் சேக்கிழார் பெரும்பாலும் அவர் அருளிய திருத்தாண்டகத்தைச் சுட்டிச் செல்வதைக் காணலாம். சில சான்றுகள்:

"*திருத்தாண்டகச்* செந்தமிழ் சாற்றி வாழ்ந்தார்"
(திருநா.புரா. 14)

"பண்தோய்ந்த *சொல்திருத்தாண்டகம்* பாடிப் பரவுவார்"
(மேலது, 336)

"ஒருவாத *பெருந்திருத்தாண்டகம்* முதலாம் ஓங்குதமிழ்ப்
பெருவாய்மைத் தொடைமாலை பலபாடி" (மேலது, 342)

"பல்வகைத் தாண்டகத்தோடும் பரவும்தனித் தாண்டகமும்
அல்லல் அறுப்பவர் தானத்தடைவுதிருத் தாண்டகமும்....ஏத்தி
இருந்தார்" (மேலது, 390)

"நின்ற *திருத் தாண்டகமும்* நீடு*திருத் தாண்டகமும்*
மன்றுறைவார் வாழ்பதிகள் வழுத்துதிருத் தாண்டகமும்..."
(மேலது, 414)

இவையெல்லாம் தவிர நாவுக்கரசர், இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து இறைவனின் திருவடிப்பேறு எய்தும் நிலையில் பாடியதும் திருத்தாண்டகமே என்பது இவண் குறிக்கத்தகும். இதனைச் சேக்கிழார்,

"மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
'புண்ணியாஉன் னடிக்கே போதுகின்றேன்' எனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டரசு அமர்ந்திருந்தார்"
(மேலது, 427)

என்பார்!

'நாவுக்கரசர்' எனும் ஒரு நற்பெயர் குறித்து இன்னும் ஆராய இடனுண்டு. ஈண்டுச் சிலவே சுட்டப்பட்டன. நாவுக்கரசர் எனும் அரிய மந்திரத்தை நாளும் ஓதுவோம்; நற்கதி பெறுவோம்!

42. நாவுக்கரசரும் அவர்தம் தொண்டும்

ச. சாரதா, சென்னை.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்பதற்கேற்ப உலகில் பல தொண்டுகள் இருந்தாலும் ஆண்டவன் தொண்டே ஆன்மாவை உய்வித்து உயர்விக்கும் என்பதில் எத்துணையும் ஐயமில்லை. அத்தகைய தொண்டில் தலைசிறந்தவராகத் திகழ்ந்தவர் திருநாவுக்கரசர். அவர்தம் தொண்டு பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். அத்துடனல்லாது அத்தொண்டின் உயர்வையும் அதனால் அவரடைந்த சிறப்பையும் தற்காலத்தில் அத்தொண்டின் நிலையையும் மையமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

தொண்டு என்பதன் பொருள் என்ன?

பெரியபுராணத்தை இயற்றிய சேக்கிழார் பெருமான் தொண்டர்களின் பெருமையை அழகுபடக் கூறியமையால் **தொண்டர்சீர் பரவுவார்** என்னும் பெயரைப் பெற்றார் எனின் தொண்டின் பொருளைக் கூறவும் வேண்டுமோ? இத்தகையத் தொண்டினை மனம் மொழி மெய்களால் செய்வதே சிறப்பு எனலாம். **தொண்டருக்கும் தொண்டனாயின் தலைவனாகலாம்** என்பதும் நாமறிந்த ஒன்று.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று கூறுகிறார் திருமூலர். இறைவன் உறைகின்ற கோவிலுக்கு ஆற்றும் தொண்டைக் காட்டிலும் மக்களுக்கு ஆற்றும் தொண்டே இறைவனுக்கு உகந்தது என்ற கருத்து இருந்தாலும், **அவனருளால் அவன் தாள் பணிந்து** என்பதற்கேற்ப இறைத்தொண்டு புரிந்தார் திருநாவுக்கரசர்.

தொண்டு செய்யும் முறை யாது?

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாயெல்லாம் செயல்

என்பது போல் நம்மால் இயன்ற வகையில் இயன்ற இடமெல்லாம் தக்க உதவிகளைச் செய்வதே அறம் என்று குறள் கூறுகிறது. அந்த வகையில் நோக்குழி திருநாவுக்கரசர் எல்லா வகையிலும் தம் திருத்தொண்டினை ஆற்றியுள்ளார் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

உள்ளத் தொண்டு

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி
எம்மனத்தே மறவாதிருக்க வேண்டும்.

என்ற வரிகள் அவர்தம் உள்ளத் தொண்டினை விளக்கா நிற்கும்.

நமச்சிவாய என்ற நாமம் என் சிந்தை விட்டகலாதிருக்க வேண்டும் என்ற சொற்கள் அவர்தம் சைவப் பற்றைப் பறைசாற்றும் வகையில் அமைந்துள்ளமை போற்றுதலுக்குரியது. எந்தச் செயலையும் உடல் உள்ளம் ஒத்துழைப்பின்றி ஆற்றுதல் இயலாது. எச்செயலைச் செய்தாலும் இறையருள் வேண்டுமாதலின் நாமம் அகலாதிருக்க வேண்டுகிறார். நாளும் தமிழ்ப் பணி செய்யும் ஆர்வ மிகுதியால் தமிழ் பரப்பும் பிள்ளையார் போல் தமிழ் மொழிப் பாடல்களைப் பாடி மகிழ்ந்தார். மனக்கோயில் கொண்ட பூசல்நாயனார் போல் இறைவனுக்கு தம் உள்ளத்தில் பாமாலை பாடி ம்கிழ்ந்தார்.

இறைவனின் வடிவழகைக் காண மனிதப் பிறவி வேண்டும் என்பதைக் குனித்த புருவமும் என்ற பாடல் வழி விளக்கும் திறன் இவர்தம் மொழித் தொண்டை விளக்கா நிற்கும்.

உழவாரப் பணி

உழவாரப் பணி என்பது தூய்மையைக் குறிக்கும் தன்மையது. உழவு ஆரப் பணி என்று கொண்டால் பயிர் விளைய நன்கு களை எடுப்பது போல், தேவையில்லாப் பொருள்களை நீக்கி இடத்தைத் தூய்மை செய்தல் எனலாம். புறந்தூய்மை நீரான் அமையும் அகம் தூய்மை வாய்மையால் காணப்படும் என்பது போல் உள்ளத்தே எழும் தீய நினைவுகளையும் நீக்க வேண்டும்.

ஈண்டு துப்புரவுப் பணியாளர்களின் பணி நாட்டிற்கு மிகவும் அவசியமான ஒன்று. அதுபோல் ஆலயப் பணியும் போற்றுதலுக்குரியது. அத்தகைய ஆலயப் பணியை நாவுக்கரசர் செய்த விதம் பற்றி அவர்தம் தொண்டு வழி காண்போம்.

வாகீசர் மெய்யுற்றத் திருப்பணி செய்பவராய்
விரவும் சிவசின்னம் விளங்கிடவே
எய்துற்ற தியானமறா உணர்வும்
ஈறின்றி எழும் திருவாசகமும்
கையில் திகழும் உழவாரமுடன்
கைக் கொண்டு கலந்து கசிந்தனரே.

என்று சேக்கிழார் பெருமான் கூறுகிறார்.

இந்த உழவாரப் பணி என்பது இறைவன் உறைகின்ற கோயில் தோறும் சென்று அக்கோயிலைப் பெருக்கித் தூய்மை செய்து, வண்ணக் கோலமிட்டு, இறைவனை நீராட்டத் தேவையான நன்னீர்க் கொணர்ந்து, அவனாடைகளைத் தூய்மை செய்து, அவனை அழகுபடுத்த மலர் கொணர்ந்து, அவனுக்குத் திருவமுது தயாரித்து, அவன் உண்ணத் தான் மகிழ்ந்து இருத்தல் என்றால் அது ஒரு தாய் தன் பிள்ளைக்குச் செய்கின்ற நற்பணியாகும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. சிவகாமியாண்டர் சிவனுக்கு மாலை சூட்டி மகிழ்ந்தமை அறியலாம்.

தொண்டின் பெருமை

நாவுக்கரசரின் இப்பணியின் பெருமையைக் கூற **ஆயிரம் நாவுடைய ஆதிசேடனாலும்** இயலாது எனின் ஏழை என்னால் என்ன சொல்ல இயலும்.

நெஞ்சும் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாது ஒருபோதும் இருந்தறியேன்
சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
உன்நாமம் என்நாவில் மறந்தறியேன்

என்ற அவர்தம் பாடல் வரிகள் அவர் தம் இறைத் தொண்டினை விளக்கா நிற்கும்.

காவளர்த்தும் குளம்தொட்டும் அரச
தருமத்தின் ஈகைவினைத் துறைநின்று

என்று அவர்தம் **குலத் தொண்டின்** பெருமை கூறப்படுகிறது.

கைத் திருத்தொண்டு செய்யும் காதலில் பணிந்திட

என்ற வரிகள் அவர்தம் இடையறா உழைப்பைப் புலப்படுத்தி நிற்கிறது.

சொற்றுணை வேதியன் என்னும் பாடலில்

நல்ல தமிழ் மாலை நமச்சிவாயவே

என்பதன் வழி அவர்தம் மொழித் தொண்டும் இறைத் தொண்டும் புதைந்து கிடக்கின்றன. மெய்ப் பெருந் **தொண்டனார்** தோன்றினார் என்ற வரிகளில் தொண்டனார் என்பது நாவுக்கரசரையேக் குறிக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

சொல்நாமத் தமிழ் புனைந்து கொண்டு என்ற வரிகள் அவர்தம் மொழித் தொண்டின் சிறப்பைப் புலப்படுத்தி நிற்கும். பல்வேறு ஆலய வழிபாடுகளில் எல்லாம் வெறும் வழிபாடு மட்டுமல்லாது, மொழித் தொண்டு மட்டுமல்லாது உடலாலும் உழவாரப் பணிபுரிந்து தொண்டின்

தொண்டராகத் திகழ்ந்தார் எனின் அவர்தம் பெருமை ஏற்றுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியதாகும்.

> பூவலயத்தார் பரவ பலநாள் இருந்து
> பரிவுறும் கைத் திருத்தொண்டு புரிவாராயினார்

என்பதில் திருத்தொண்டு கைத்திருத்தொண்டு என வந்துள்ளமை காண்க. இதனால் பெறப்படுவது யாதெனில் கைத்தொண்டு என்பது உழவாரப் பணியைக் குறிக்கும் என்பது போதரும்.

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு என்பதற்கேற்ப அவர் தம் உடல், பொருள் ஆவி அனைத்தையும் இறைவனுக்கே அளித்தார் என்பதைக் காண்போம்.

தொண்டுளமே துணை

ஆலய முழுவதும் தொண்டாற்றி வருகின்ற நேரத்தில் பொன்னும், மணியும், இரத்தினமும் இறைந்து கிடந்தாலும் அதனையும் குப்பை யெனக் கருதிப் பணிபுரிந்தார் என்பதைச் சேக்கிழார் தம் பெரிய புராணத்தில் சுட்டிச் செல்கிறார்.

> நான்மறை நூல் பொருளில் நமிநந்தி அடிகள்
> திருத்தொண்டின் நன்மையைப்
> பான்மை நிலையால் அவரைப்
> பரமர் திருவைந்தெழுத்தைப் பற்றி

என்ற வரிகள் அவர் தம் தொண்டின் பெருமையைப் பறைசாற்றி நிற்கின்றன. அதுமட்டுமா? கால்நடையாக நடந்து கைலாயம் காணச் சென்ற அன்னார், தம் கால்கள் தேய்ந்த பின் கைகளால் செல்ல, அதுவும் தேய்ந்தபின் இறைவன் இவர்தம் தொண்டின் பெருமையை உணர்ந்து, மீண்டும் உலகில் அவர் வாழ்வான் வேண்டி, அவருக்குக் கைலாயக் காட்சியை ஐயாற்றில் காட்டி அருள் புரிந்த பான்மையை எண்ணிப் பார்க்கும்போது அன்னாரின் தொண்டாற்றலை அளவிடற்கரியதாகும்.

இத்தொண்டின் இன்றைய நிலை

ஆனால் இன்று இத்தொண்டு மிகவும் அல்பமான தொண்டாகக் கருதப்படுவது வேதனைக்குரியது. ஆலயப் பணி அரும் பணி என்ற நிலை மாறி ஆலயந்தோறும் குப்பைகளைப் போடும் வழக்கமும் ஆலயத்தில் விற்கப்படும் பொருள்களைத் தின்றுவிட்டு வேண்டாத பொருள்களை அவ்விடத்திலேயே போடுதல் என்பது தூய்மைக்கு அடையாளமாகாது. ஆலய நிர்வாகமும் தன் பணியைச் செவ்வனே செய்தாலும் பொது மக்களின் ஒத்துழைப்பும் தேவை.

இதுகாறும் திருநாவுக்கரசரின் தொண்டின் சிறப்புப் பற்றிக் கண்டோம். இதன் வாயிலாக நாம் பெறப்படும் கருத்து யாது என்றால் சாதி மத இன வேறுபாடின்றித் தொண்டுளம் கொண்டவர் என்பதும் தெரியலாகும் அப்பூதி அடிகளாரின் இல்லத்தில் அவர் உணவு அருந்தியமை, அவர் தம் மகனாரைப் பிழைக்கச் செய்தமை மற்றும் வேதாரண்யம் கோயில் திறக்கச் செய்தமை போன்ற பல்வேறு தொண்டுகளைச் சுட்டிச் செல்லலாம்.

திருவீழிமிழலையில் இவர் கைத்தொண்டு செய்து வந்தமையால் வாசியில்லாக் காசினைப் பெற்று வறுமை நீக்க, பிள்ளையாருடன் தொண்டாற்றினார் என்பதும் புராணம் காட்டும் செய்தியாகும். எனவே நாவுக்கரசப் பெருமான் தம் உடலால் உள்ளத்தால் உணர்வால் மொழியால் எனப் பல்வகையிலும் தொண்டு புரிந்தார் என்பதும் போதரும். உலகுய்ய உழவாரப் பணி புரிந்துய்ந்தார். அன்னாரின் அடியொற்றி வாழ்வோமாக.

43. நாவுக்கரசர் ஊட்டும் நம்பிக்கை

இரா. சாரதாம்பாள், ஈரோடு.

வாழ்வில் வெற்றி பெறும் மாந்தர் மூவகையினர். முயற்சியின்றித் தானாக வெற்றிக்கனி கிட்டி மகிழ்பவர் ஒருவகையினர். சிறு முயற்சி யாலேயே வெற்றி மாலை சூடி மகிழ்பவர் மற்றொரு வகையினர். விடாமுயற்சியும் சலியாத உழைப்பும் கொண்டு வெற்றி பெறப் பாடுபடுபவர் மூன்றாவது வகையினர். அப்பர் பெருமான் மூன்றாம் வகையைச் சேர்ந்தவர். சமயக்குரவர் நால்வருள் திருநாவுக்கரசர் தளராத மனமுயற்சியும் சலிக்காத உடலுழைப்பும் மேற்கொண்டே இறுதி இலக்கான மெய்மையை பிரும்மத்தை - பரம்பொருளை - சாயுஜ்ய நிலையை அடைந்தார் என்பதற்கு அவருடைய வரலாறும் பதிகங்களும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

மெய்மை உணரும் பாதையில் சுலபமான வெற்றிக்கு உதவும் அடிப்படை அம்சங்கள் மூன்று என்பது ஆத்மார்த்த அன்பர்களின் கருத்து. தன்னம்பிக்கை, நம்பிக்கை, மன உறுதிப்பாடு என்பது பக்திக்கு மட்டும் அன்று. ஆத்ம முன்னேற்றத்திற்குப் பின்பற்றப்படும் அனைத்துப் பிரிவுகளுக்கும் இவையே அடிப்படை ஆதாரங்கள்.

சாதகனுக்குத் தன்மீது நம்பிக்கை வேண்டும். தான் பற்ற இருக்கும் ஒன்றின் மீதும் நம்பிக்கை வேண்டும். இந்த இரண்டிற்கும் பாலமாகத் திகழ்வது திடமான மன உறுதி. ஒரு மனோரீதியான முக்கோணக் கொள்கை என்று இதனைக் கருதலாம். ஒருவனுக்குத் திடமான மன உறுதி ஏற்படுகிற பொழுதுதான் ஆன்மாவை அடையாளம் கண்டறியும் எண்ணம் அவனுள் விழிப்படைகிறது.

நாவுக்கரசர் வாழ்வில் நடந்த சில நிகழ்ச்சிகள் அவருள் ஆன்ம விழிப்பை ஏற்படுத்தியதோடன்றி மாறாத நம்பிக்கை மற்றும் மனோதிடத் திற்கு வழிவகுத்தன. சைவக் குடும்பத்தில் பிறந்த மருள்நீக்கியார் தாய் தந்தையர் மறைவிற்குப்பின் மிகத் தீவிரமான தேடுதலைத் தொடங்கி, பல சமயக் கருத்துக்களைக் கற்றறிந்தார். தேடிக் கொண்டிருந்த, நிலையாமை சித்தத்தில் குடிகொண்டிருந்த கால கட்டத்தில் சமண சமயம் அவரை இழுத்துக்கொண்டது.

நம்பர் அருளின்மையால் சமண் சமயம் புகுந்தார். தமக்கையார் திலகவதியார் இவரைக் குறித்து இறைவனிடம் வேண்டி முறையிட்டதால்

சூலைநோய் ஆட்கொண்டது. முற்பிறப்பில் வாகீச முனியாயிருந்த காலத்தில், இறைவனின் மனக்குறிப்பு அறியாது பிழை செய்த காரணத்தால், இப்பிறப்பில் சிவனை மறத்தல் என்ற தேக்க நிலை ஏற்பட்டது என்பது சான்றோர் கருத்து. இந்நிகழ்ச்சிகளால் சில சூட்சுமங்கள் உலகிற்கு உணர்த்தப் படுகின்றன. நாவுக்கரசரின் நம்பிக்கை வலுப்படுதல், சைவ சமய உயர்ச்சி உலகிற்கு உணர்த்தப்படுதல் போன்ற சூட்சுமங்கள் புரிபடுகின்றன.

சுந்தரர், ஞானசம்பந்தர், மாணிக்கவாசகர் ஆகிய மூவரும் எந்த ஒன்றை ஆரம்பத்தில் பற்றி நின்றார்களோ ஆற்றொழுக்குப்போல் அந்தப் பாதையில் சென்று இலக்கை அடைந்தனர். நாவுக்கரசருடையதோ ஒரு காட்டாற்று வெள்ளம் எப்படித் திசை மாறுமோ அதுபோல் மாற்றங் களுக்கிடையே சிக்கித் தவித்த பின்பே இலக்கை அடைந்த ஒன்று.

சமணத்தில் இருந்து சைவம் தழுவிக் 'கூற்றாயினவாறு விலக்ககலீர்' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார். சூலைநோய் அகன்று 'நாவுக்கரசு' என்ற நாமமும் பெற்றார். 'தீவினையேன் அடையும் திருவோ?' என்ற வியப்புடன் அவர் சித்தத்தில் ஒன்றில் நிலைபெற்றுவிட்ட நம்பிக்கையும் மிக்கெழுந்தது. ஒரு பாதையில் இருந்து மற்றொரு பாதைக்குச் சென்றபின் மீண்டும் அதே பாதையில் மனதைத் திருப்பித் திடப்படுத்தல் என்பது சாதாரண நிலையில் உள்ளோருக்கு எளிதன்று. இறையருளும் குருவருளும் இணைந்து செயலாற்றினாலே இம்மாயம் நிகழும். நாவுக்கரசருக்குச் சிவனே குருவாயமைந்து வியத்தகு மாற்றங்களை நிகழ்த்தினான்.

அழியக் கூடியதையும் அழிவற்றதையும் இணைக்கும் ஜீவனுள்ள ஒரு பிணைப்பே பற்றுறுதி (Faith). இந்தப் பிணைப்பு சில சமயங்களில் குறையும், மிகும், மீண்டும் தோன்றும். உண்மையான பற்றுறுதி என்பது ஆத்ம சமர்ப்பணம் என்ற தன்மையை அடையும் பொழுதே பரம்பொருளோடு இணையும் நிலை உருவாகிறது.

நாவுக்கரசரின் வாழ்வில் இந்தப் பற்றுறுதி சமணத்திலிருந்து மீண்டதும் ஏற்பட்டுவிடவில்லை. படிப்படியாகவே நிகழ்ந்தது. நம்பிக்கையும் மன உறுதியும் ஏற்பட்ட பின்பே இனி எனக்குக் கவலை இல்லை என்ற அச்சமற்ற மனநிலையை அவர் பெற முடிந்தது. இதையே பாரதியும் நெருங்கின பொருள் கைப்பட மனதில் உறுதிவேண்டும் என்கிறார்.

சந்தித்த சோதனைகள்

சமணர்கள் பல்லவ மன்னனிடம் நீற்றறையில் இடுமாறும், நஞ்சுடிசிலை ஊட்டுமாறும், வேழத்தை இடறுமாறும், கல்லோடு கடலிலிடுமாறும் கூறுகின்றனர். இத்தனை சோதனைகளையும் திருவைந்தெழுத்தின் உதவியால் கடக்கிறார் அவர்.

தன்னம்பிக்கையும் மன உறுதியும்

சமணர்களின் சூழ்ச்சிகளை இறைவன் அருளோடு மட்டுமின்றித் தம் தன்னம்பிக்கையாலும், மன உறுதியாலுமே கடக்கின்றார் அப்பர். அவர் தளரா மன உறுதியோடு இருந்ததினாலேயே நீற்றறையில்,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்று பாட முடிகிறது.

பிறவா யாக்கைப் பெரியோனின் பேரருள் பெற்றுத் தமரானதால், அச்சமில்லாப் பெருவாழ்வு பெற்று, தன்னம்பிக்கையோடு,

'......................................
உடையார் ஒருவர் தமர் நாம்,
அஞ்சுவது யாதொன்று மில்லை
அஞ்ச வருவது மிலை'

என்று நெஞ்சுருகுகிறார்.

திருவைந்தெழுத்தின் மீது நம்பிக்கை

சிவபெருமானின் திருவுருவத்தின்மீது மட்டுமல்லாது ஐந்தெழுத்து மந்திரத்தின்மீதும் பெருநம்பிக்கை கொண்டவர் அப்பர் பெருமான். அதனாலேயே கல்லைக் கட்டிக் கடலில் பாய்ச்சிய காலத்தும் நம்பிக்கையோடு,

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே"

என்று பாடிக் கரையேற முடிகிறது.

ஆனாலும் மனதில் உள்ள சலனம் முழுதும் நீங்கியது தல யாத்திரையின் போதே என்பது மறுக்க முடியாத உண்மை. சமண சமயம் சென்று மீண்டு சைவம் வந்தோமே என்ற குறுகுறுப்பு ஏற்படுகிறது. திருப்பெண்ணாகடத்தில் உள்ள இறைவனைத் துதித்துச் சூலத்தையும் விடையையும் தோளில் பொறிக்குமாறு வேண்ட இறைவனும் அவ்வண்ணமே அருளினான். சமண சமயத்தில் இருந்ததால் ஏற்பட்ட புன்மை நீங்கியதாக மகிழ்ந்தார். இதன் பிறகும் அவருக்கு மனநிறைவு உண்டாகவில்லை.

திருவடிப்பேறு

காலன் என் உயிரைப் பறிக்கும் முன் உன் திருவடி தீட்சை வேண்டும் என்று சத்திமுற்றத்தில் எழுந்தருளியுள்ள ஈசனிடம் வேண்ட,

கருணை வள்ளலாகிய இறைவன் திருநல்லூரில் அவர் தலைமீது திருவடி வைத்துத் தீட்சை அருளினார்.

> **"நனைந்தனைய திருவடி என்தலைமேல் வைத்தார்**
> **நல்லூர் எம்பெருமானார் நல்லவாறே"**

என்று பாடிப் பரவுகின்றார். திருநெய்த்தானத்தில் இறைவனைப் பாடிய பாடலில் இந்தப் பெருமித உணர்ச்சி வெளிப்பட்டது.

மனநிறைவு

திருவடிப்பேறு அடைந்தபின் 'காலனை உதைத்த திருவடி துணை இருப்பதால் இனி எனக்கு அச்சம் இல்லை' என்றும் 'திருவடிகள் இரண்டையும் வைத்தான் இறைவன்' என்றும் தான் பெற்ற பெரும்பேற்றை விளக்குகிறார்.

இதனை,

> **"காலனை வீழச்செற்ற கழலடி இரண்டும் வந்தென்**
> **மேலவாய் இருக்கப்பெற்றேன் மேதகத் தோன்றுகின்ற**
> **கோல நெய்த்தானம் என்றும் குளிர் பொழிற் கோயில்மேய**
> **நீலம் வைத்தனைய கண்ட நினைக்குமா நினைக்கின்றேனே"**

என்ற பாடல்வழி அறியலாம்.

மனத்தெளிவு

திருவடிப்பேறு பெற்றபின்பே அப்பர் மனம் தெளிவு பெற்றது. இதுநாள்வரை அலைகளடிக்கின்ற குளம் போல தெளிவின்றி இருந்த மனம் இப்பொழுது அலைகள் அடங்கிய குளம்போல் அமைதியுடன் திகழ்கிறது. இதனால் இறைவனின் திருவுருவம் அவர் சிந்தையில் தெளிவாகவும் நீக்க மறவும் நிறைந்திருக்கிறது.

நம்பிக்கைத் திறம்

உண்மையான நம்பிக்கையே ஆத்ம சமர்ப்பணம். அது உன்னத மானதும் அஞ்சா நெஞ்சத்தை அருளக் கூடியதுமாம். இதுவே ஒரு சாதகனை இறுதி வெற்றிக்கு இட்டுச் செல்லும் தன்மைத்து திருநாவுக்கரசர் மன உறுதியுடன் கூடிய தன்னம்பிக்கை நிலையில் இருந்து தான் பற்ற நினைத்ததைப் பற்றினார், பற்றி உய்ந்தார். பற்றிய ஒன்றின் பேரருளாகிய நம்பிக்கையைப் பெற்றார். மனச்சலனம் நீங்கிற்று. அச்சம் அகன்றது. தானும் அதுவும் வேறன்று என்ற நிலை உருவாகியது.

சாமான்யர்களுக்குக் குருமூலம் சித்திக்கும் இப்பேறு வாகீசருக்குச் சிவனே குருவாகிய வழி கிட்டிற்று. இதுவே அப்பர் பெருமானின் வாழ்வும் வரலாறும் நமக்கு ஊட்டும் நம்பிக்கைத் தத்துவம்.

44. நாவுக்கரசர் தரும் இலக்கிய இன்பம்

கு. சாரதாம்பாள், கோவை.

இலக்கியம் என்பது ஒரு நாட்டின் காலக் கண்ணாடி. இலக்கியத்தின் வாயிலாக நம் நாட்டு மக்களின் வாழ்க்கை முறையினை உணர முடியும். கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தோன்றிய நாவரசர் மக்களை நன்னெறிப் படுத்துவதை நோக்கமாகக் கொண்டே தேவாரத் திருப்பதிகத்தை அருளினார். அவர் இயற்றிய தேவாரத் திருப்பதிகங்களில் இலக்கியப் பண்புகள் பற்றியும், கற்பனை அணிநலன்கள் பற்றியும் சுவைகள் எவ்வாறு அமையப் பெற்றன என்பது பற்றியும், இலக்கிய நயங்கள், யாப்பு போன்றவற்றை இவ்வியலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

திருநாவுக்கரசரின் கற்பனைத் திறன்

கற்பனையே கவிதை வெளியீட்டிற்கு அடித்தளம். கவிஞர்கள் கற்பனைக் காட்சியையே கவிதைக் காட்சியாக வெளிப்படுத்துகின்றனர். கற்பனை கலவாத கவிதையே இருக்க இயலாது.

> "உள்ளத்தைக் கவர்ந்து உணர்ச்சியூட்டக் கூடிய
> உருவங்களைப் படைக்குந்திறன் கற்பனை"

என்று கற்பனைக்கு விளக்கம் தருகிறார் ரிச்சட்ஸ்.

நாவரசரின் கற்பனைக் காட்சிகள் திருஞான சம்பந்தருடையதைப் போன்று இயற்கை வழிபட்ட காட்சிகளாக அல்லாமல் கடவுள் தொடர்புடையவையாகவே அமைந்துள்ளன. சிவபிரான் திருமுடியிற் பாம்பும், பிறையும் உள்ளன. கரத்தில் நகுகின்ற வெண்டலை உள்ளது. அம்மையொரு பாகத்தில் உள்ளாள். பாம்பைக் கண்டு அஞ்சுகின்றாளாம். அம்மை மயிலோ என்று அம்மையைக் கண்டு அரவம் அஞ்சுகின்றதாம். பிறையோ அழகிய நெற்றியைக் கண்டு தனக்கு இல்லையே இத்துணை அழகு என்று ஏங்குகின்றதாம். கபாலம் இதனைக் கண்டு நகுகின்றதாம். அச்சம், ஐயம், ஏக்கம், நகைப்பு ஆகிய உணர்வுகளைப் பின்னலாக்கி இவ்வாறு கற்பனை செய்கின்றார் அடிகளார்.

> "கிடந்த பாம் பருகு கண் டரிவை பேதுறக்
> கிடந்த பாம் பவளையோர் மயிலென ஐயுறக்
> கிடந்த நீர்ச் சடைமிசைப் பிறையும் ஏங்கவே
> கிடந்த தான் நகுதலைக் கெடில வாணரே".

என்ற பாடல் பல்வேறு உணர்வினைத் தெள்ளென புலப்படுத்துவதை அறிய முடிகிறது. உலகெலாம் படைத்தளிக்கும் அன்னை ஒரு சிறு அரவத்திற்கு அஞ்சுவாள் என்பது நம் அறிவுக் கண்ணிற்குப் பொருந்தாத காட்சிதான் ஆனால் உணர்வினால் உணரும்போது நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

இயற்கைப் புனைவுகள்

நாவரசரின் பாடல்களில் இயற்கைப் புனைவு மிகக் குறைவு. புனையும் கற்பனையே மிகுதி. இல்லது புனைதல் இங்குச் சிறிதும் இல்லை.

அரிசில், காவிரி, கெடிலம் முதலிய ஆறுகளைப் பற்றிய குறிப்புக்கள் பாடல்களில் இடம் பெறும்போது புனைந்துரைத்தும், சிறப்பித்தும் பாடவில்லை. இயற்கைக் காட்சிகளைத் தம் பாடல்களில் பெரிதும் சேர்க்க அடிகளார் விரும்பவில்லையோ என எண்ணத் தோன்றுகிறது.

''செங்கயல் சேல்கள் தவளை
பறைகொட்ட பாசிலை நீர்ப்படுகள்
அங்காற் குவளை மேல் ஆவி
உயிர்ப்ப அருகுலவும்
செங்காற் குருகிவை சேரும் கெடிலக் கரைத்தே''

என்ற பாடல் இயற்கை அழகினை விவரிப்பதைக் காட்டுகின்றன.

இலக்கிய அணிகள்

இலக்கிய அணிகளின் தொன்மையானது உவமையே. தொல்காப்பியர் உவமையணியைச் சிறப்பித்துக் கூறியுள்ளார். சங்க இலக்கியம் இதனையே பெரும்பான்மையாக எடுத்துக் காட்டுகிறது. பக்தி இலக்கியங்களான தேவாரத்திலும் பெரும்பான்மையாக உவமையணியே கையாளப்பட்டுள்ளது. ஏனைய அணிகள் சிறுபான்மை இடங்களிலே இடம் பெறுகின்றன.

உவமையணி

உவமை என்பது பொருளைத் தக்க ஒப்புமை கொண்டு விளங்கு வதாகும். அதாவது ஒரு பொருள் மற்றொரு பொருளோடு குணத்தாலோ, தொழிலாலோ, பயனாலோ ஒத்திருப்பதாக வருணிப்பது உவமையணி யாகும்.

நாவரசரின் உவமைகளும் இத்திறத்திலேயே திகழ்ந்திடக் காணலாம்.

''பஞ்சடுத்த மெல் விரலாள்''

''ஊழித்தீயன்ன ஒளி''

''மொய்பவளக் கொடியனைய சடை'

''கட்டித்தேன் கலந்தன்னகெடில்''

"கெண்டை போல் நயனத்திமவான் மகள்"

இவ்வாறு உவமைகள் சுருக்கமும் தெளிவும் இனிது விளக்கும் ஏற்றம் உடையனவாகவும் விளங்குகின்றன.

உவமைத் தொகை

உவமையைப் பலகாலம் பயன்படுத்திய பின்னரே உவமைத் தொகை தோன்றியிருக்க வேண்டும். போல புரைய முதலிய உவம உருபுகள் வெளிப்படையாக காணப்பட்ட பொழுது உவமை விரி என்றும் இவை தொக்கு வரும்பொழுது உவமைத் தொகை என்று சொல்லும் நிலை எழுந்தது.

கயிற்றிற் கட்டப்பட்ட ஊசலைத் தம் நிலைமைக்கு உவமைக் கின்றார். நெஞ்சு ஒன்றுவிட்டு ஒன்றைப் பற்றும் இயல்புடையது. பற்றியதை விட்டு நீங்கிச் சென்று பற்றுதலும் பற்றியதை விட்டு நீங்கலும் நெஞ்சின் இயல்புகள் தன்னிடத்தை விட்டுப் பிறிதொன்றைச் சென்று பற்றுவது உறுகயிறூசல்.

"உறுகயிறூ சல்போல வொன்று விட்டொன்று பற்றி
மறுகயிறூ சல்போல வந்துவந் திலவு நெஞ்சும்
பெறுகயிறூ சல்போலப் பிறைபுல்கு கடையாப்பாதத்
தறுகயிறூ லசானே ணதிகை வீரட்டனீரே"

என்று நெஞ்சின் இயல்பினை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

பழமொழி

ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழியை வைத்து அதனோடு ஒரு கதையையோ, வரலாற்று நிகழ்ச்சியையோ சுட்டி அறத்தை வற்புறுத்தும் இந்நூல் நீதி நூல்களுள் சிறப்புடைய ஒன்றாகும்.

சைவ சமயம் விட்டு சமண சமயம் சார்ந்தமைக்காக பல பழமொழிகளையே உவமையாக்கியுள்ளார்.

"கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ
மயிலாலும் ஆரூரைக் கையினால் தொழா
தொழிந்து கனியிருப்பக் காய் கவர்ந்த கள்வனே"

"முன்பிருக்கும் விதியின்றி
முயல் விட்டு காக்கைப் பின் போனவாறே"

"பண்டெலாமறியாதே
பனிநீராள் பாவை செயப் பாவித்தேனே"

"கறுத்தானைக் கருதாதே
கரும்பிருக்க இரும்பு கடித்து எய்த்தவாறே"

இப்பதிகத்துள் வரும் பழமொழிகள் மிகவும் கருத்தாழம் உடையனவாக விளங்குகின்றன.

எள்ளல் உவமை

எள்ளல் என்பது தான் பிறரை எள்ளி நகுதலும் பிறரால் எள்ளப் பட்டவுடன் தான் நகுதலும் என்ற இரண்டு வகையால் எள்ளலைப் பாகுபாடு செய்து மெய்ப்பாட்டியலில் பேராசிரியர் விளக்குகிறார்.

கிணற்றில் வாழும் ஓர் ஆமை, கடலில் வாழும் ஆமை ஒன்றைக் கண்டு இக்கிணற்றின் அளவை விடப் பெரியதோ உன் கடல் என்று கேட்பது போல் ஞானத்தால் தொகுவார்க்கன்றிப் பாவகாரிகளாக உள்ளவர்க்குப் பார்த்தற்கரியவன் சிவபிரான் என்று பாடும் பாட்டு எள்ளல் உவமைக்கு எடுத்துக்காட்டாக உள்ளது.

> **''கடலாமை குரைகடல் ஆமையைக்**
> **கடலோ டொக்குமோ கடல் என்றல்போல்**
> **பாவகாரிகள் பார்ப்பரி தென்பரால்**
> **தேவதேவன் சிவன் பெருந்த தன்மையே''**

என்ற பாடல் மூலம் நாவரசர் விளக்குகிறார்.

உருவக அணி

ஒத்த பொருளோடு ஒத்த பொருளை உவமைப்படுத்தி ஒப்புமை காட்டும் பொழுது பொருளை நீக்கிவிட்டு உவமையையே பொருளாக்கி விடுவது உருவகம்.

பல்லவ மன்னர் நாவரசரை நீற்றறையில் இடும்பொழுது இறைவனை நினைந்து அவர் பாடிய பாடல் உருவக அணியாக அமைந்துள்ளது.

> **''மாசில் வீணையும் மாலை மதியமும்**
> **வீசுதென்றலும் வீங்கிளவேனிலும்**
> **மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே**
> **ஈசன் எந்தன் இணையடி நீழலே''**

என்ற பாடல் இறைவனின் திருவடியை இடைவிடாது நினைந்துப் பாடும்போது எத்தகைய துன்பங்களும் அவர்களை அணுகாது என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

நகை

உள்ளத்துள் தோன்றிய ஒருவகை இன்ப உணர்வினை அது தோன்றும் புலன்வழி வெளிப்படுத்துவது நகையாகும். இதை நகைச்சுவை என்பர்.

முக்கண்ணாகிய சிவபிரான் செம்பாதியை உமையம்மைக்கு கொடுத்து விட்டமையால் ஒன்றரைக் கண்ணன் ஆயினான் என்று பாடும்போது நகைச்சுவை தோன்றுகிறது.

"இன்றரைக் கண்ணுடை யாரெங்கும்
மில்லையிமய மென்றும்
குன்றரைக் கண்ணன் குலம்
பாவைக்குக் கூறிட்ட நாள்
அன்றரைக் கண்ணுங் கொடுத்துமை
யாளையும் பாகம் வைத்த
ஒன்றரைக் கண்ணன் கண்டீரொற்றி
யூருரை யுத்தமனோ"

என்று நகைப்புத் தோன்றப் பாடுகின்றார்.

அழுகை

நகைக்கு எதிரான மெய்ப்பாடு அழுகை இதனை அவலம் எனவும் கூறுவர்.

தொடக்கப் பதிகமே சூலைநோயால் அழுது புலம்பும் நிறம் உடையது.

"கூற்றா யினவாறு விலக்ககலீர்
....
....
....
வீரட்டானத் துறையம் மானே"

அப்பரடிகள் திருவுருவைச் சேக்கிழார் படம் பிடிப்பது போன்று காட்டும் பாடல்களில் கண்ணீர் வாரத்திகழும் வண்ணத்தையே விளக்கியுள்ளார்.

பெருமிதம்

"எல்லாரொடும் ஒப்பநில்லாது பேரெல்லையாக
நிற்றல் பெருமிதம் எனப்படும்"

பெருமிதம் என்ற வீரச்சுவை ததும்பும் பாடல்கள் மூவர் திருப்பதிகங் களிலும் காணப்படுகின்றன. அப்பரடிகளின் பதிகங்களில் அழுகை பெருமிதம் என்ற இரண்டு உணர்வுகளே மிகுந்து காணப்படுகின்றன.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணி யறிவோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை"

பல்லவ மன்னன் நாவரசரை அழைத்து வரும்படி கூறியதைக் கேட்டவுடன் இறைவனின் திருவடிகளை இடைவிடாது நினைக்கின்ற வர்கள் உலகில் மனிதனாய் பிறந்த எவருக்கும் அஞ்ச வேண்டியதில்லை என்று மேலே கூறியுள்ளப் பாடலின் மூலம் விளக்குகின்றார்.

"மண்பாதலம் புக்கு மால்கடல் மூடி வற்றேழுலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே"

"வானம் துளங்கிலென் மண் கம்பமாகில் என்"

"தப்பிவானம் தரணி தம்பிக்கிலென்
அப்பனார் உளர் அஞ்சுவ தென்னுக்கே"

என்ற பாடல் வரிகள் இறைவன் தன்னுட் இருக்கும்போது எத்தகைய துன்பமும் ஏற்படாது என்பதைப் பெருமிதத்துடன் பாடுவதை உணர முடிகிறது.

வெகுளி

நெஞ்சம் கடுத்ததை முகத்தில் காண்கின்றோம். அதுவே வெகுளி யாகும். வெகுளியைத் திருவள்ளுவர் "சேர்ந்தாரைக் கொல்லி என்றே அழைத்தார்", "கருப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள் என்றால் தொல்காப்பியார்" இத்தகைய வெகுளிச் சுவையினை நாவரசர் தமது பாடல் களில் ஆங்காங்கே சுட்டிக் காட்டுகிறார். "கடையரைக் கடித்தார்கள்" என்று சமணர்களைக் கூறுகின்றார். "வண்மூடர் சமண் நீசர் சமண பிரட்டர். நீசர்கள் பாவகாரிகள் - மொட்டர் மொண்ணர்" முதலிய சொற்களாலும், தொடர் களாலும் சுட்டும் குறிப்புகள் வெகுளி உணர்வில் தோன்றியவை எனலாம்.

இலக்கிய நயங்கள்

ஆழ்ந்து கற்க, கூர்ந்து நோக்க புதுப்புதுப் பொருளை நல்கிப் புதிது தோன்றும் இன்பத்தைத்தான் இலக்கிய இன்பம் என்பர். இதைத் திருவள்ளுவர்,

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தோறும்
பண்புடை யாளர் தொடர்"

என்கிறார். பண்புடையார் தொடர்புக்கு நல்ல நூல் நயத்தை உவமை யாகக் காட்டியுள்ளார்.

சொல்லாட்சித் திறன்

ஓர் இலக்கியத்தை அளவிடும் இன்றியமையாத கருவியாக இருப்பது அதன் சொல்லாட்சி.

அப்பரின் பாடல்களில் இடம் பெறும் அகம்படி, அரட்டு, அருக்கம், அல்லகண்டம், ஆமனம், இடைக்கலம், இரண்டாட்டம் இறுவாய், எழுவாய், என்னன், ஏமாப்பு, ஏழி காறை, குமண்டை, கொண்டி, கொய், கொன்னை, சங்காத்தி, சூட்சியம் தங்கள் வட்டனை, மோழைமை, வேளி முதலியவை அடிக்கடி இடம் பெறும் சொற்களாலும், அடிகளார் பயன்படுத்திய சொற்களில் பெரும்பாலானவை தேர்ந்த தமிழ்ச் சொற்களே வட சொல்லாட்சி மிகக் குறைவு. வடசொல்லாக்க விதிகளைப் பின்பற்ற தொல்காப்பிய நெறியில் தமிழ்ப்படுத்தியே ஆளுகின்றார் மொழித் தூய்மையினை அவரது பாடல்களில் காண முடிகிறது.

சொற்றொடர் அமைப்பு

சிறந்த சொற்றொடர்களைத் தேர்ந்தெடுத்து தக்க இடத்தில் அமைத்து அவற்றுள் ஆழ்ந்த பொருளையும் அமைத்துள்ளார் நாவரசர். இதனால் இறைவனாலே "வாகீசர்" என்று அழைக்கப்பட்டார். அப்பரடிகள் சமண சமயத்தில் சேர்ந்து வீணே காலம் கழித்தபோது தன்னை ஆட்சி கொண்டு உய்வித்த சிவபெருமானது பெருங்கருணைத் திறத்தினை உணர்த்தும் முறையில் அவருடைய சொற்றொடர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

"ஈன்றாளுமாயெனக் கெந்தையுமாயுடன் தோன்றினராய் என்றும்

"தேனினைப் பாலினைத் திங்களை ஞாயிற்றை"

இறைவனை தொழாதரை நாவரசர்

"கையினாற் றொழாதொழிந்து"

என்னும் அமைந்த சொற்றொடர்கள் எழுத்துச் செறிவும் எளிமையும் பெற்று விளங்குவதைக் காணலாம்.

பொருட்சுவை

இறைவனை முன்னிலைப்படுத்திப் பாடும் பாடலில் பொருட்சுவை மிகுந்து காணப்படுகின்றன. இறைவன் எவ்விடங்களிலும் நிறைந்துள்ளான் என்பதை,

"விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்கும்"

என்ற பாடல்கள் கருத்துச் செறிவு மிக்கத்தாயும் படித்தவுடன் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளதை உணர முடிகிறது. மேலும் இறைவன் எல்லாப் பொருளிடத்தும் நீக்கமற நிறைந்துள்ளான் என்ற உயர்த் தத்துவத்தையும் இப்பாடல்கள் புலப்படுத்துவதைக் காணலாம்.

அடிகளாரின் யாப்பு

நாவுக்கரசரின் யாப்பு வகையைச் சேக்கிழாரின் பாடல் ஒன்று சுட்டிக் காட்டுகிறது. அது பின்வருமாறு

விளங்கு பொருந்தி மூன்றில் திருப்பணி செய்தே
உளங்கொள் திருவிருத்தங்கள் ஓங்கு திருக்குறுந்தொகைகள்
....
வளங்கொள் திருப்பதியதனில் பல்நாள்கள் வைகிறார்".

திருநேரிசை நேரிசைக் கொல்லி எனவும் திருவிருத்தம் விருத்தக் கொல்லி எனவும் கொல்லிப் பண்ணில் அடங்கப்பெறும்.

திருக்குறுந்தொகை

"காடு கொண்டரங் காக்கங்குல் வாய்க்கணம்
பாட மா நடமாடும் பரமனார்
வாட மானிறங் கொள்வர் மணங்கமழ்
மாட மாமதின் சூழ்வள்ளியூரரே"

நாற்சீர் நாலடியாய் அடிதோறும் தேமா, புளிமா என்பவற்றுள் ஒன்று முதற்சீராகவும் கருவிளம் கூவிளம் என்பவற்றுள் ஒன்று நான்காம் சீராகவும் இடையிருசீர்கள் பெரும்பாலும் விளச்சீர்களாவும், சிறுபான்மை மாச்சீர்களாகவும் அமையும். இவ்வகை அமைப்பு சிலப்பதிகார வேட்டுவ வரியில் காணப்படுகின்றன. ஆதலால் இளங்கோவடிகள் காலத்திலேயே யாப்பு வளர்ச்சி பெற்றுள்ளது என்று சிங்காரவேலன் கூறுகின்றார்.

திருத்தாண்டகம்

தாண்டகம் என்ற புதிய செய்யுள் வகையைக் கண்டறிந்தவர் நாவரசர். ஆதலால் "தாண்டக சதுரர்" எனவும் "தாண்டகவேந்தர்" எனவும் போற்றப்பட்டார். இப்பாவகை கடவுளையோ அன்றி மனிதரையோ பாடுபொருளாகப் புகழ்ந்து பாடுபனவாகும். இவ்யாப்பு வகை தொல்காப்பியர் கருத்தின்படி எண்சீரான் வந்த கொச்சக ஒருபோகு ஆகும். ஆறாம் சீர் பெரும்பாலும் காய்ச்சீராகவும் சிறுபான்மை விளச்சீர்களாகவும் வரும். நான்காம் சீரும் எட்டாம் சீரும் தேமாவாக நிற்கும் - மூன்றாம் - ஏழாம் சீர்கள் பெரும்பாலும் தேமாவாகவும் சிறுபான்மை புளிமாவாகவும் இருக்கும்.

அடிகளாரது "தாண்டகம்" என்ற வடிவச் செய்யுள் தமிழ் யாப்பே என்பதை முதற்கண் குறிப்பிட்டாக வேண்டும். இருபத்தேழெழுத்து முதலாக உயர்ந்த எழுந்தடியினவாய் - வருவனவாக அமைந்துள்ளன. ஒற்றும் குற்றியலுகரமும் நீக்கி எழுத்தெண்ணி வகுக்கப்பட்ட ஐவகை அடிகளுடைய கழிநெடிலடிக்கும், மேலெல்லையாகிய இருபத்தேழெழுத்தென்னும் அளவினைக் கடந்து இருப்பதே எழுத்திற்கு உட்பட்டு வருவதாகும்.

"தூண்டு சுடரனைய சோதிகண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரதமெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையு மணாளன் றானே"

என்ற அவருடைய தாண்டகப் பாடல்களில் மூலம் விளக்குகிறார்.

45. நாவுக்கரசரில் விலங்கினங்கள்

சிசிலியா பாண்டியன், தஞ்சை.

பன்னிரெண்டு திருமுறையுள் 4,5,6 திருமுறைகள் திருநாவுக்கரசர் திருமொழி. அவர்தம் 4-ம் திருமுறையில் விவரிக்கப்பட்டு உள்ள விலங்கினங்களைப் பற்றிக் காண்போம். விலங்கினங்கள் இரண்டு வகைப்படும், முதுகெலும்பற்றவை, முதுகெலும்புள்ளவை ஆகும். 4-ஆம் திருமுறையில் 1069 பாடல்கள் உள்ளன.

முதுகெலும்பற்ற விலங்குகள்

1. புழு

"புழுப்பெய்த பண்டிதன்னைப் புறமொரு தோலால் மூடி"
(ப.எண். 498)

உடலானது புழுக்கள் உள்ள வயிற்றைக் கொண்டது என்றும், "பொக்கமாய் நின்ற பொல்லாபுழுமிடை" (653) பொய்யான பொல்லாத புழுப் பொதிந்த புன்புலால் நாற்றத்தை உடைய உடல் என்றும், "புழுக்கள் பொதிந்த துளைகள் உடைய உடல்", புழுக்களால் துளைகள் உடையது உடல். அதனால் நாற்றம் இருக்கிறது என்று விவரித்துள்ளார். "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி" (920) என்ற பாடலடியில் புழுவாய் யான் பிறந்தாலும், என் மனத்தே உன்னடி வழுவாதிருக்க வரம் வேண்டும் என்கிறார்.

2. பவளம்

பவளம் கடலில் காணப்படும் உயிரினுடைய சட்டகம். இது பல நிறமுடையது. ஆனால் சாதாரணமாகக் காணப்படுவது சிவப்புநிறம். பொதுவாகப் பவளத்தை அணிகலனாகவும் பயன்படுத்துகிறார்கள். "பவளச் செவ்வாய் வண்ணத்தானும்"(32), "பாரோத மேனிப் பவள மவனிறம் யென்கின் றோற்" (59), "என் பிறை செம்பவள எரி போல் மேனி பிரான்" (83), "செம்பவளத் திருவுருவர்" (125) என்று சிவபெருமானின் சிவந்த மேனியையும், வாயின் நிறத்தையும் பவளத்திற்கு ஒப்பிட்டு வர்ணிக்கிறார். திருநாவுக்கரசரின் பாடல்கள் பல பவளத்தைப் பற்றிப் பறை சாற்றுகின்றன.

3. நண்டு

''அளைப் பிரிந்த வலவன் போய்ப்புகு தந்த காலமுங்'' (206)

சேற்றில் உள்ள நண்டு வளையில் (அளை) ஆண் நண்டும் (அலவன்) பெண் நண்டும் (பெடை) புகுந்தன என்கிறார்.

4. சிலந்தி

''சிலந்தியு மானைக்கா வீற்றிரு நிழற் பந்தர் செய்து'' (479), ''நலந்திதிகழ் வாயின் நூலாற் சருகிலை பந்தர் செய்த சிலந்தியை'' (607), ''சிலந்தி தன்னை முடியுடைமன்னனாக்கித் தரணிதா னாள வைத்தார் சாய்க்காடு மேவினாரே'' (631), ''சிலந்தியை யரைசனாக்கிச்'' (680). ஈசனுக்கு மரத்தின் கீழ் நிழல் இல்லை என்று சிலந்தி தன் வாயின் நூலினால் பந்தல் செய்து, பின் சிலந்தி யானையினால் அழிக்கப்பட்ட தினால், மறுபிறவியில் கோச்செங்கட்சோழ மன்னரும், பின் நாயனாரு மாகியது. இதில் சிலந்தியான இழிந்த சிற்றுயிரும் பேரறிவுடைய மக்கள் செய்யுஞ் சிவ புண்ணியத்தை மேற்கொண்ட அரசனான உயர்வைக் குறித்து விவரிக்கிறார்.

5. வண்டு

சோலைகளைப் பற்றி விளக்கும்போது, வண்டுகளைப் பற்றி பலப்பாடல்களில் பாடியுள்ளார்.

''வண்டுலவு கொன்றை வளர்புன்'' (53) மரத்தில் உள்ள போது கொன்றையில் வண்டு மொய்க்கும் என்கிறார். ''குளிர் பொறி வண்டு பாடு குழா லொழுத்தி'' (75) வண்டு போன்று பாடுபவன என்கிறார். ''பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான் (114) வண்டுகள் பாடும் பழனத்தான் என்று பாடியுள்ளார்.

''ஏறி வண்டோடு தும்புயஞ் சிற கூன்றவிண்ட மலரிதழ்வழி
தேறல் பாயத் தொழுருந் திருவாரூரம் மானே'' (202)

வண்டும், தும்பியும் ஏறி சிறகுகளை ஊன்றதால் மலர்ந்த பூக்களின் இதழ்வழியாக வழியும் தேன் பாய்ந்து ஒழுகுகின்ற திருவாரூர் என்கிறார்.

''வண்டு பண் பாடுங் சோலை மல்கு சிற்றம்பலத்தே'' (233)

வண்டுகள் பாடும் சோலை உள்ள சிற்றம்பலம். ''வண்டுண்டு பாடுங் கொன்றை அறையுங் கொம்பளித்த சென்னி'' (242), கொன்றையின் தேனை உண்டு வண்டு பாடும் ஒலியைத் தோற்றும் இடமாகிய சென்னி என்று கூறுகிறார்.

"வண்டு பண்பாடுஞ் கொன்றை" (245), "வண்டனை கொன்றையும் வன்னியு மத்தமும் வாளரவும் கொண்டனை'' (813) வண்டுகள்

சேரும் கொன்றை மலர் மாலையும், வன்னியிலையும், மத்தமும், கொடும் பாம்பும் கூடிய, திருமுடியுடையான் என்கிறார்.

"தும்பி பம்பும் மட்டார் குழலி மலைமகள் பூசை மகிழ்ந்தருளும்" (939)

வண்டும் நெருங்கும் தேன் பொருந்திய மலர் அணிந்த உமையம்மாள் என்கிறார்.

சோலைகளில் அநேக உயிரிகள் காணப்பட்டாலும், வண்டுகளுக்கு மட்டும் நாவுக்கரசர் அதிக முக்கியத்துவம் அளிப்பது வியப்புக்குரியது. வண்டுகள் இன்னிசை எழுப்புவதையும், மலர்களில் மகரந்தத்தை நாடுவதையும், தேனைத் திரட்டுவதையும் இனிமையாக விளக்கியுள்ளார்.

6. சங்கு

"சங்கணி குழையும் வைத்தார்" (379)

சங்கை அறுத்துச் செய்த அழகிய காதணியும் (குழை) வைத்தவர்.

முதுகெலும்புள்ள விலங்குகள்

முதுகெலும்பற்ற உயிரிகளைப் பாடியவர், முதுகெலும்புள்ளவற்றைப் பற்றியும் பாடல்கள் பல இசைத்துள்ளார் நாவுக்கரசர்.

மீனினங்கள்

1. மீன்கள்

"தூமன் சுறவத் துதைத்த கொடியடைக் காமன்" (16) வலிமை யுடைய சுறாமீன் கொடியுடையன் என்று அழகாக விவரித்துள்ளார். **"சேவினே ரனைய கண்ணார் நிறம் விட்டு"** (312) சேல்மீன் நிகர் ஒத்த கண்ணின் நிறம் என்று தம் பாடலில் கூறியுள்ளார். **"சேய்வராலுகளுஞ் செம்மைத் திருச் சோற்றுத் துறையனாரே"** (404) வயல்களில் துள்ளும் வரால் மீன்கொண்ட நிலவளம் உடைய ஊர் என்கிறார். **"மடுக்களில் வாளைபாய வண்டின மிரிந்த பொய்கை"** (529) வாளை மீன்கள் மடுகளில் பாய்ந்ததினால், அங்குள்ள வண்டுகள் அஞ்சு ஓடின என்று மிகவும் அனுபவித்து பாடியுள்ளார். **"செங்கயல் சேல்கள் பாய்ந்து தேன் பழமினிய நாடி"** (534) வயல்களில் குதித்துக் காணப்படும் சேல் மீன் என்று வயல்களின் செழிப்பைக் கூறுகிறார்.

ஊர்வனங்கள்

2. முதலை

ஒரு முழ முள்ள குட்ட மொன்பது துளையுடையதாய்
அரைமுழ மதனகல மதனில் வாழ் முதலையைந்து" (435)

குளத்தில் வாழும் முதலை ஐந்து என்று கூறுகிறார்.

3. ஆமை

"பூண்டதோர் கேழுலெயிலும் பொன்றிகழாமை புரள" (12)

பன்றியின் பல், பொன் போன்ற ஆமை கொண்ட கொடி என்று வர்ணிக்கிறார்.

4. பாம்பு

பாம்பைப் பற்றிச் சிவபெருமானின் தோற்றத்தில் அநேக இடங்களில் குறிப்பிட்டாலும் சில குறிப்புகள் மட்டும் இங்குக் காட்டப்பட்டுள்ளது.

"ஆடல் புரிந்த நிலையில் அரையில் அசைந்த அரவம்" (18)

திருக்கூத்தாடிய நிலையில் இடையில் அசைந்த பாம்பு என்கிறார்.

"ஆகம் பத்தரவணையா யைறைதற் கரியானைப்,
பாகம் பெண்ணன்பாக மாய் நின்ற பசுபதியே" (70)

பாம்பின் உடல் மேல் துயில் புரிபவன் திருமால் என்கிறார்.

"எரியர வார மார்ப ரிமையாருமல்ல" (73) நச்சுபாம்பினை மாலையாக அணைந்த மார்பினை உடையவன். "புள்ளுயர்த்தான் மணிநாகம் பள்ளியான், பாம்பின்மேல் துயிலும் திருமால்" (122) மாணிக்கத்தையுடைய பாம்பின் மேல் துயிலும் திருமால் என்கிறார்.

"நாகவளையினர், நாகவுடையிடையர்" (159) நாக கங்கணம், நாக கச்சும் அணிந்திருப்பவர் என்கிறார். "கங்கையைச் சடையுளைவைத்தார் கதிர் பொறி யரவும் வைத்தார்" (374) சடையினுள் கங்கையும், பாம்பும் வைத்தவர்.

"யர வையுஞ் சடையுள் வைத்து, மந்திரமானார்" (324)

பாம்பையும் சடையுள் வைத்த மந்திரராவர். "படமுடை யரவி னோடு பனிமதி யதனை ஆடிக் கடமுடையுரிவை முடிக்கண்டவ ரஞ்சவம்மா" (44) பாம்பும், திங்களும் சூடி, யானை தோல் போர்த்து கண்டவர் அஞ்ச நடுங்க வைப்பவர். "நாகத்தை நங்கையஞ்ச நங்கையை மஞ்ஞையென்று" (509), நாகத்தை பார்த்து நங்கையானவள் அஞ்ச, அந்த நங்கை, மயில் (மஞ்ஞை) போன்ற உமையம்மாள் என்கிறார்.

பறவையினங்கள்

பல விதமான பறவைகளைப் பற்றியும் அவருடைய பாடல்களில் பாடியுள்ளார்.

5. சேவல்

"கோழி பெடை யோடுங் கூடிக் குளிர்ந்து
வருவன கண்டேன்" (22)

சேவல் கோழி கூடி வருவதைக் கண்டனர் என்றார். திருமாலும் நாச்சியாரும் ஆடிக் கொண்டிருக்கும் நிலையைக் குறிக்கிறார்.

6. கிளி

"தேனாக்குங் கிளி மழலை யுண்டுகேள் வன் செம்பவளமே
தானோக்கு திருமேனி" (63)

என்று உமையம்மையோடு கிளியை ஒப்பிடுகிறார்.

7. குயில்

"சொன்மலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண் மிழற்றும் பழனத்தான்" (114)

சொல்லியதை வரிசை தவறாது கூறும் குயிலைத் தூது விடுவது பற்றி விளக்குகிறார்.

8. காக்கை

"மோத்தையைக் கண்ட காக்கைப்போல" (732)

பிணங்களை மொய்த்தது காக்கை, வினைகளை மொய்த்தது உயிரே என்கிறார்.

9. கொக்கு

"காண்டகு புள்ளின் சிறகுங் கலந்த" (12)

'கொக்கின் இறகு கலந்த' என்று சிவபெருமானின் சடையை கூறுகிறார்.

"கொக்கிறகின் நூவல் கொடியெடுத்த கோலத்தோடுசடைக்கணிந்த வம்மானை நான் கண்ட தாரூரே" (188) கொக்கு இறகுகளுடன், ஒட்டின் பாசி மணிகள் (அக்கு) அணிந்த அம்மானை கண்டேன் என்றார். "கொக்கிறகு கவர்ந்த கொன்றை, ஏடமர் சடையர் போலும் இன்னம்பர் ஈசரே" (704) கொக்கின் இறகு, அலர்ந்த கொன்றை இதழ் பொருந்திய சடையையுடையவர் ஈசனார் என்கிறார்.

10. நாரை

"பொங்கோத மால் கடலிற் புறம் போ யிரை தேடும், செங்கால் வெண்மட நாராய் செயற் படுதறியேனான்" (119) பொங்கி ஒலியுடன் வரும் கடலில் இரைதேடும் சிவந்த நிறமுடைய கால் கொண்ட வெண்மை நிற நாராய் என்கிறார். மிக அழகாக நாரையின் கால் சிவப்பாகவும் உடல் வெண்மையாகவும் இருப்பதை அனுபவித்து ஒப்பிட்டுக் கூறுகிறார்.

"துணையார முயங்கிப் போய்த் துறைசேரும் மடநாராய், பணையார வாரத்தான் பாட்டோவாய் பழனத்தான்" (120) துணைப் பறவையை உளம் நிறைவுறக் கூடிச் சென்று துறையை அடையும் இளநாரையே, பெரிய ஆரவாரத்தோடும் பாட்டு ஒவாமல் இசைக்கும் திருப்பழனத்திறைவன் என்கிறார்.

11. ஆந்தை

''பாடும் பறண்டையும், ஆந்தையும் ஆர்ப்பப்'' (891)

பாடும் பறண்டையும், ஆந்தையும் சுடுகாட்டில் ஆடிய திருவடிகள் பற்றிக் கூறுகிறார்கள்.

12. மயில்

''பேடை மயிலாடுங் கூடிப் பிணைந்து வருவன கண்டேன்'' (25)

ஆண் மயிலுடன் கூடி இணைந்து வருவதைக் கண்டேன் என்கிறார்.

''மணிகிளர் மஞ்சையால் மழையோடு சோலை மலையான்'' (77)

நீலநிறம் கொண்ட மயில் தோகையை அகல விரிந்து ஆட மேகத்தோடு மழைவரும் சோலையுடைய மலை (இமய) என்கிறார்.

''கிடந்த பாம் பருககண்டரிவைபேதுறக்
கிடந்த பாம் பவளையோர் மயிலென் றையுறக்'' (101)

சிவபிரான் திருமேனியில் பாதிகொண்டுள்ள உமையம்மையார், அத்திருமேனியிற் கிடந்த பாம்பைத் தன் அருகே கண்டு பயந்தார். தலைமேற் கிடந்த பாம்பு அம்மையாரை ஓர் மயில் என்று கருதி ஐயுற்றது.

பாலூட்டியினங்கள்

13. முயல்

''முன்பிருக்கும் விதியன்றி முயல் விட்டுக் காக்கைப் பின்
போன வாறே''

முயலுக்கு பின்போவது எளிது, ஆனால் காக்கையின் பின்போவது, பறத்தல் ஆகியவை இயல்பில்லாத உயிர்க்கு அரிது.

முயல் : சைவ சமயத்துக்கு உவமை

காக்கை : சமண சமயத்துக்கொப்பு என்றார்.

14. நரி

''நரிவரால் கவ்வச் சென்று நற்றசை யிழந்த'' (273)

நரி தன் கையில் இருந்த நல்ல தசையை இழந்தது போல் என்றும்.

15. குரங்கு

''கருங்கலை பெடையோ டாடிக் கலந்து வருவன கண்டேன்'' (28)

ஆண் கருகுரங்கு பெடையோடு கலந்து வருவதைக் கண்டேன் என்கிறார்.

''வழிந்திழி மதுகர மிகற்ற மந்திகள்'' (100)

பெண் குரங்குகள் வழிந்திருக்கும் தேனைப் பருகுகிறது என்கிறார்.

16. யானை

சிவபெருமான் யானையின் தோலை உரித்துப் போர்த்தியவன் என்பதை நாவுக்கரசர் தம்முடைய பாடலில் பல விதமாக விவரித்துள்ளார்.

''போர்த்தாயங்கோ ரானையின் ஈருரி தோல்'' (10) துன்பம் விளைப்பதில் ஒப்பில்லாத ஈர்மை பொருந்திய யானையின் உரித்த தோல் போர்த்திய சிவபெருமான் என்றும், ''காதல் மடப்பிடி யோடுங் களிறு வருவனகண்டேன்'' (21) இளம் பெண் யானையுடன் (சக்தி) ஆண்யானை (சிவன்)யும் இணைந்து வரும் காட்சியில் சிவபெருமான் திருவடிகளைப் பார்த்தேன், ''அடுத்தானை யுரித்தானை'' தக்க யாகத்தில் தன்னை அடுத்த யானையை உரித்துப் போர்த்த தோலாடையனை, ''காருரி போர்த்த வீசர்'' (360) கரிய யானைத் தோல் போர்த்திய ஈசன் என்றும், ''அத்தியி னுரியை போர்த்தார்அதிகைவீ ரட்டனாரே'' (253) ஆணவத்தை போக்கிய யானையின் தோல் போர்த்தினவர், ''மழகளி யானையின்றேன் மலைமகள்'' (497) மலைமகள் அஞ்சி வெருவ இளமதயானைத் தோல் போர்த்தின அழகனே என்றும், ''மதயானை யுரி போர்த்துப்'' மதம் பொருந்திய யானையின் தோலை உரித்தவன் என்றும், ''பற்றியோரானை யுரித்த பிரான்'' (907) யானையை பிடித்து அதன் தோல் உரித்து போர்த்தி அழிவின்றி நின்ற கடவுள் என்றும், ''போர்ப்பனை யானை யுரித்த பிரான்'' (908) போரில் உள்ள யானையின் தோலை உரித்தவன் என்று சிவபெருமானுடைய பெருமையையும், வலிமையைப் பற்றியும் மிக அழகாகப் பாடி உள்ளார்.

17. மான்

''மடமான் மறிபொற் கலையு மழுப்பாம் பொருகையில் வீணை''
(14)

''மங்கையைப் பாகம் வைத்தார் மான் மறி மழுவும் வைத்தார்''
(374)

சிறிய மான் கையில் கொண்டு இருக்கிற இறைவன்.

18. புலி

''கொல் புலி தோலார்'' (539)

''பாய்புலித் தோலார்'' (544)

என்று புலியின் தன்மையான கொல்லும், பாயும் என்று அழகாக உவமை யாகக் கூறிப் புலித்தோல் போர்த்திய சிவபெருமான் என்கிறார்.

19. குதிரை

"ஒங்கொலி மாப் பூண்ட தோர் ஆழித்தேர்" (193)

உயரிய குதிரைகள் உடைய ஆரூர் தேர் என்கிறார்.

"நரியை குதிரையை செய் வானும் நரகரைத் தேவு செய் வானும்" (33)

நரியைக் குதிரையாக்கியது போல, தத்தம் வினைக்குத் தக்கதாக தலையாய தேவராயும், கடையராய நரகராயும் மானிடர் பிறப்பார் என்கிறார்.

20. எருது

"ஏற்றாய் அடிக்கே"

"அண்ணல் அரன் முரண் ஏறும் அகலம்"

எருதை வாகனமாக உடையவர்.

21. பசு

"இளமன நாகு தழுவி ஏறு வருவன கண்டேன்"

இளமையான பசுவைத் தழுவி எருது வருவதை காணும் காட்சியில் சிவபெருமானின் திருவடிகள் கண்டேன் என்கிறார்.

22. பன்றி

"பன்றி யெய்த காலனைக்"

அர்ச்சுனனது தவத்தைக் கலைக்க வந்த பன்றியை வென்ற வேடன் சிவபெருமான் என்கிறார்.

"கேழல தாகிக் கிளறிய கேசவன் காண்பதரிதாய்"

ஆகிய திருமால் பன்றி உருவமுடையதும் அசுரனைக் கொன்றவனும் காண்பரிது என்கிறார்.

"கீண்டுங் கிளரித்தும் பொற் கேழல் முன்றேடின" (971)

கிழித்தும், நிலத்தை கிளரும், கிண்டும் தன்மையுள்ள பன்றியின் உருகொண்ட அழகிய திருமால் என்றார்.

திருநாவுக்கரசர் எழுதிய நாலாம் திருமுறையில் உள்ள 1069 பாடல்களில் முதுகெலும்பற்ற விலங்குகள் 6-ம், முதுகெலும்புள்ள விலங்கினங்கள் 22-ம் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன. விலங்குகள் பலவிதம் அதை மிக நுண்ணியமாக அனுபவித்து, அழகாக தமது பாடல்களில் உமையாளையும், சோலைகளையும், நிலத்தன்மையையும், சிவபெருமான், திருமாலின் பெருமைகளை விலங்கினத்தை வைத்து விவரித்துள்ளார். இதிலிருந்து இவரின் உயிரியல் ஞானமும், விலங்குகளின் தன்மை, பண்பு, குணாதிசயங்களை அறிந்து மிக அழகாக, தமது அனுபவத்தை இனிய வண்டமிழ்ப் பாடலாக வரைந்தார்.

46. இறையடியார்

ச. சிவகாமி, சென்னை.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிழ்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே (82:4)*

இறையனுபூதியில் திளைத்து இறைவனைப் பாடுவதையே பணியாகக் கொண்ட பேரருளாளர்கள் தம் பக்திப் பனுவல்களில் தம் இறையனுபவம் மற்றும் இறையடியவரின் இயல்புகள் குறித்துப் பாடுதல் இயல்பு. இறைவனிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டு, உடல், பொருள், ஆவி என முழுமையாகத் தம்மை அவனிடம் ஒப்படைத்து வாழும் பக்தர்கள் இறையடியார் எனப்படுகின்றனர். இத்தகைய சிறப்புடை இறையடியார் புகழ் பாடுவதையே முதல் நோக்காகக் கொண்டு பெரியபுராணம், திருவாதவூரர் புராணம், சேக்கிழார் பிள்ளைத்தமிழ் போன்ற இலக்கியங்கள் எழுந்துள்ளமையும் அறியத்தக்கது.

இறைத் தொண்டைப் பிறவி நோக்கமாக, பயனாகக் கருதும் இறையடியாரை ஒரே பாடலில் அறிமுகப்படுத்தும் திருநாவுக்கரசரின் திறம் வியக்கத்தக்கது.

நாமார்க்கும் குடிஅல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாமார்க்கும் குடி அல்லாத் தன்மையான
சங்கரன் நற்சங்க வெண்குழை ஓர் காதில்
கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச் சேவடி இணையே குறுகினோமே (312:1)

என்று தம்மை உட்படுத்திய நிலையில் இறையடியாரின் இயல்பாக, இலக்கணமாக அப்பர் கூறியிருப்பது இக்கட்டுரையில் விரித்துரைக்கப்

* திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தேவாரப் பதிகங்கள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1974.

படுகிறது. அவரின் அடியவர் பற்றிய இவ்விளக்கம் எல்லாச் சமயத்தவருக்கும் பொருந்தி நிற்றல் சுட்டற்பாலது.

நாமார்க்கும் குடி அல்லோம்

எண்ணம், சொல், செயல்களால் இறையோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும் இறையடியார் தாயின் கருப்பையில் உயிர்த்துக் கொண்டிருக்கும் குழந்தைக்கு ஒப்பாவர். அக்கருக் குழந்தைக்கு எது தேவையோ அது தானாகவே தாயிடமிருந்து கிடைக்கிறது. அதைச் சுற்றிய முழுமையான பாதுகாப்பு வளையமாகத் தாயின் கருப்பை அமைவது போன்று இறைவன் அவன் அடியார்க்கு அமைகிறான். 'வேண்டத் தக்கது அறிவோய் நீ, வேண்ட முழுதும் தருவோய் நீ' என்று இதனையே மணிவாசகரும் உணர்த்துகிறார் (திருவாசகம் - 501).

இவ்வுலக உயிர் வாழ்க்கைக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருப்பதற்கு இடம், பகைகளிடமிருந்து பாதுகாப்பு என்பன இன்றியமை யாதன ஆகின்றன. பசிக்கு விருந்தாகவும் நோய்க்கு மருந்தாகவும் அமையும் இறைவன், தன்னை ஏற்றுக்கொள்ளும் அடியவர்க்கு அனைத்துமாய் நிற்பதை நாவுக்கரசர்,

அப்பன் நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்துநீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே (309:1)

எனும் பாடலில் வெளிப்படுத்துகிறார். அடியார்க்கு எல்லாமாக இறைவன் அமைவதால் அவனே அவர்களை ஆட்டுவிக்கும் தலைவனாகிறான். தன்னுடைய உரிமைகள் என எதுவுமில்லாத பணியாளாக, அடிமையாக இறைவனுக்கு ஆட்பட்ட பின் பிறிதொருவரின் தலையீடு பொருந்தாதா கின்றது. இவ்வுலகத் தலைவர்களுக்கெல்லாம் தலைவனாக விளங்குபவனின் நேரடிக் கண்காணிப்பில், அரவணைப்பில் இன்புற்றிருக்கும் பொழுது, கீழ் உள்ள தலைவர்களுக்கு, அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதல் தேவை யில்லை. தனக்கு வேண்டியதைத் தருபவரே தலைவர்; தான் யாருக்கு அடிபணிய விரும்புகின்றானோ அவரே தலைவர்; அவர் தவிர பிறரைத் தலைவராக மனமோ, உயிரோ ஏற்றுக்கொள்ளாது; எனவே இறையடியவர்க்கு இறைவன் மட்டுமே தலைவனாக, பிறர் பொருட்டாவதில்லை. 'உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்' என்று வாழும் இவ்வடியார் 'எங்கு

எழில் (தோன்றின்) என்ஞாயிறு' என்ற உன்னதமான உயரிய மனநிலை யினராவர் என மணிவாசகரும் (திரு. 173) வலியுறுத்தக் காணலாம். தனக்கெனத் தனித்த விருப்போ வெறுப்போ அற்ற நிலையில் பிறருடைய கருணையும் தேவையற்றதாகிறது; எனவே யாருக்கும் கட்டுப்படும் அடிமைநிலையும் இல்லையென்றாகிறது. 'ஊனேறு செல்வத்து உடற்பிறவி யான் வேண்டேன் ஆனேறு ஏழ் வென்றான் அடிமைத் திறம் அல்லால்' எனும் பெருமாள் திருமொழியும் (4:1) இங்கு இணைத்து நோக்கத் தக்கது. தாயின் அணைப்பில், தந்தையின் போற்றுதலில் ஆழ்ந்து இன்புற்றிருக்கும் குழந்தை யாருக்கும் எதற்கும் அஞ்சுவதில்லை. அதன் மனநிலையே இறையடியவர் நிலையுமாம். ஆகவே 'நாமார்க்கும் குடி அல்லோம்' என்பது மிக்க பொருள் பொதிந்ததாகிறது.

நமனை அஞ்சோம்

இவ்வுலகில் பெரும்பான்மையோரை அச்சுறுத்துவது இறப்பு ஆகும். இறையடியாரின் உள்ளம் இறைவனுடன் கலந்து இன்புறும் பிறவாப் பேரின்ப நிலையையே வேண்டி நிற்பதால் மரணபயம் அவர்களுக்குச் சிறிதும் இல்லை. மாறாக அருணகிரியார் போன்று,

தண்டாயுதமும் திரிசூலமும் விழத் தாக்கி உன்னைத்
திண்டாட வெட்டி விழவிடுவேன் செந்தில் வேலனுக்குத்
தொண்டாகிய என் அவிரோத ஞானச் சுடர் வடிவாள்
கண்டாயடா அந்தகா வந்துபார் சற்று என் கைக்கு எட்டவே
(கந்தரலங்காரம் - 25)

என, உயிரைக் கவர வரும் எமனை எதிர்கொள்ளும் துணிவு உடையோராக அமைகின்றனர். ஆலாலம் உண்டவன் அடி சரண் என்ற மார்க்கண்டன் தனது ஆவி கவரப் போய் அவன் பட்ட பாட்டினை நினைவூட்டிய பாரதியாரும் 'காலா! உனை நான் சிறு புல் என மதிக்கின்றேன்; என்றன் காலருகே வாடா! சற்றே உன்னை மிதிக்கிறேன்' (காலனுக்கு உரைத்தல்) என அவனை அச்சுறுத்தக் காணலாம். இவ்வுலக வாழ்க்கையென்பது மாயைகள் நிறைந்தது, நிலையாமை கொண்டது என்பதனை நன்கு உணர்ந்தவர் இறையடியார். அவர்களுக்குத் தேவை

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே (204:1)

என்பார் நாவுக்கரசர். எனவே 'யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கு என் கடவேன்' (திருவாசகம் - 16) என்பதே அடியார் இயல்பாகும் என 'நமனை அஞ்சோம்' என்பதில் சுட்டுகிறார்.

நரகத்தில் இடர்ப்படோம்

'காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைத்த பையடா' என உணர்ந்த அடியவர்க்கு ஓடும் செம்பொன்னும் ஒன்றே. இவர்க்குத்தான் என்ற ஆணவமோ, செருக்கோ, தனக்கு எனும் தன்னலமோ, புகழ் வேட்கையோ, பதவி மோகமோ இல்லையாதலின் உலகப்பற்று நீங்கினராக வாழ்கின்றனர். மாணிக்கவாசகர் கூறுவது போல,

உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்
குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா உன் குரைகழற்கே
கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே (556)

என்றே இறைவனை இறைஞ்சி நிற்கும் பண்பினர். இவ்வாறு எதுவும் தேவையற்ற பண்பினரான இவர் எக்குற்றமும் புரிதற்கு இடனில்லை. நரகம் என்பது சிறைச்சாலை போன்று பிழை செய்தோர் அதற்குரிய தண்டனையை அனுபவிக்கும் இடம் என்பது வழக்கு. தம்மைக் கொன்றவனைக் கூட 'தத்தா நமர்' என மன்னிக்கும் பேரியல்பினரான மெய்ப்பொருள் நாயனார்; தம்மிடம் உள்ளவற்றையும் கூட இறையன்பினருக்கு அளித்து இன்புறும் இளையான்குடி மாறநாயனார், அமர்நீதி நாயனார் போன்ற வாழ்வினராதலின் நரகத்தில் துன்புறும் அவலநிலை இறை யடியார்க்கு இல்லை.

மற்றும் 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடும்' வள்ளலாராகவும்,

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பு எனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறை எனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவு எனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பர் ஆகில் சிவகதி விளையுமன்றே (77:2)

என்று அப்பர் போன்று பிறரை நல்வழி நடத்துபவராகவும் அமைவர். எனவே இத்தகையோர் நரகத்தில் இடர்ப்படும் சூழலுக்கே வாய்ப்பில்லை என்பது தெளிவாகும்.

மற்றும் 'பாவநாசா உன் பாதமே அல்லால் பற்று நான் மற்றிலேன்'' (திருவாசகம்-456) என்பதால் இறையடியாராகுமுன் அவர் செய்த பாவங்களை இறைவன் தன் கருணையால் நீக்கிவிடுவதால் சிந்தைத் துயராகவே அடியார் பெருமையுறுகின்றனர். 'வினையேன் இழைத்த பெரும்பிழைகள் பொறுத்தாட் கொண்ட மெய்த்தேவே' எனச் சிதம்பர சுவாமிகளும் (திருப்போரூர்ச் சந்நிதி முறை), 'கூறுமடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே' (திருப்புகழ்) என அருணகிரியாரும் மொழிவன

இதனை வலியுறுத்துவனவாகும். இறைவனிடம் அடைக்கலம் புகுந்தபின் ஒருவர் புரிந்த நல்வினை, தீவினைப் பயன்கள் சூரியன் முன் பனி போல் மறைந்து ஒழிவதை இவை உணர்த்துகின்றன. ஆகவே 'கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்' ஆகிய அடியவர்க்கு 'நரகத்தில் இடர்ப்படோம்' என்ற துணிவு பிறக்கிறது.

நடலை இல்லோம்

நடலை என்ற சொல்லுக்கு வஞ்சனை, பொய்ம்மை, பாசாங்கு, துன்பம், அசைவு எனும் பொருள்களைச் சென்னைப் பல்கலைக்கழக தமிழ் லெக்சிகன் தருகிறது. அடியவரின் பண்பு நலன்களைப் பட்டியலிடும் பான்மையில் நாவுக்கரசர் 'நடலை இல்லோம்' என்ற தொடரைப் பயன் கொண்டுள்ளார் எனலாம். உள்ளும் புறமும் வேறு வேறாகக் கள்ளம் குடி கொண்ட வஞ்சனையற்ற நேர்மையாளர்; பொய்ம்மை அறியாத உண்மையாளர்; அறிந்ததை அறியார் போன்றும் அறியாததை அறிந்தார் போன்றும் நடிக்கும் திறனற்ற தூய்மையாளர்; துன்பம் உணராது இன்பத்தில் திளைக்கும் மகிழ்ச்சியாளர்; கொண்ட கொள்கையில் தளர்ச்சியோ, ஐயமோ கொள்ளாத உறுதியாளர் என இத்தொடர் இறையடியாரை அறிமுகப்படுத்துகிறது.

சிறுத்தொண்ட நாயனார், அப்பூதி அடிகள், கண்ணப்பர் என அடியார் வரலாறுகள் இவற்றை நன்கு உணர்த்தக் காணலாம். இங்கு அடியார் பண்பில், கொண்ட கொள்கையில் உறுதியுடன் நிற்றல் என்பது தனித்துச் சிறப்பிக்கப்பட வேண்டியதொன்றாகும். மன உறுதியுடன் வாழ்வியல் கொள்கையாக ஒன்றை மேற்கொண்டு அதனைச் செயற் படுத்தி வருகையில் அதற்குப் பல இடையூறுகள் தோன்றுதல் இயல்பு. அவற்றை அடியார்கள், தம் பற்றினை அளவிட இறைவன் மேற்கொள்ளும் சோதனைகளாக ஏற்றுக்கொண்டு இறுதிவரை அதனை நிறைவேற்றுவதில் விடாப்பிடியாக முயற்சிப்பர். கலியநாயனார், இயற்பகையார், அமர்நீதி நாயனார் எனப் பலர் வாழ்க்கைச் செய்திகள் இதனை நமக்குணர்த்தக் காணலாம்.

> வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
> மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
> மீளாத் துயர் தரினும் வித்துவக் கோட்டம்மா
> ஆளாவுனது அருளே பார்ப்பன் அடியனே (5:1)

எனும் பெருமாள் திருமொழியும் இங்கு நோக்கற்பாலது. எதனையும் இயல்பாக அதன் போக்கில் ஏற்றுக் கொண்டு மனவுறுதியுடன் நிலைத்து நிற்பதற்கு மாணிக்கவாசகர் புலப்படுத்தும் உண்மையும் உணர்த்தத்தக்கது.

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் எனை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்குண்டோ எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே (500)

எனும் அப்பாடற் பொருள் அடியவர் மனதில் கல்மேல் எழுத்தாய்ச் செதுக்கப்பட்டுள்ளது அறிதற்பாலதாம். எனவே நேர்மையாளர், உண்மையாளர், தூய்மையாளர், மகிழ்ச்சியாளர் என்பனவற்றுடன் 'மன உறுதியில் மிக்கார்' என்பதனை நாவுக்கரசர் அடியவர் இலக்கணத்தில் முதன்மைப்படுத்துகிறார்; நடலை இல்லோம் என்பதன் சிறப்பும் இதுவே எனவும் எண்ணலாம். கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே (11:1) என அவர் வாழ்ந்து காட்டியதும் இணைத்து நோக்கற்பாலது.

ஏமாப்போம்

இறுமாப்பு எனும் பெருமித உணர்வுடையவர் அடியவர் என்பது இங்குக் குறிக்கப்படுகிறது. இவர்தம் எண்ணச் சிறையுள் எப்பொழுதும் அடைபட்டுக் கிடப்பவன் இறைவன்; பெறற்கரும் பெருஞ் செல்வமாம் இறைவனே/இறையருளே இவர் வசப்பட்ட பின் வேறு தேவையில்லை; எத்துயரும் இடையூறும் அணுகா வண்ணம் எப்பொழுதும் உடன் துணையாக அவன் இருக்கிறான்;

எனவே யாதொரு குறையுமில்லை; இறையருளாம் இன்பக்கடலே அடியவரின் இருப்பிடம் ஆகிறது. இவற்றால் குழந்தை மனம் கொண்ட இறையடியார் தம் மனநிறைவையும், அமைதியையும் பெருமித உணர்வால் பறைசாற்றுகின்றனர். இதனை மாணிக்க மொழியாரின் திருவாசகப் பாடல்கள் பலவாறாக வெளிப்படுத்துகின்றன. அவற்றுள் மணிமுடியாகத் திகழும்,

தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றது ஒன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந் துறை உறை சிவனே
எந்தையே ஈசா உடல் இடம் கொண்டாய்
யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே (395)

எனும் பாடல் உணர்ந்து மகிழத்தக்கது. ஏயர்கோன் கலிக்காம நாயனார், இறைவனை ஏவல் கொண்ட சுந்தரர் மீது பகை கொண்டமைக்கு

இவ்வுணர்வே அடிப்படை போலும். 'திங்கள் மதிக் கண்ணியானைத் தேமொழியாளொடும் பாடி எங்கு அருள் நல்கும் கொல் எந்தை எனக்கு இனி என்னா வருவேன்; அங்கு இள மங்கையர் ஆடும் ஐயாறு அடைகின்றபோது பைங்கிளி பேடையோடு ஆடிப் பறந்து வருவன கண்டேன்; கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்' (3:10) என்று இறும்பூது கொள்ளும் நாவுக்கரசர் தாம் பெற்ற இன்பத்தை இவ்வையகமும் பெற வழிகாட்டியுள்ளார்.

> விறகில் தீயினன் பாலிற் படுநெய் போல்
> மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
> உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால்
> முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே (204:10)

என்பது அவர் உணர்த்தும் அருள்நெறி. விறகில் நெருப்பாகவும், பாலில் நெய்யாகவும் மறைந்திருக்கும் அருட்பெருஞ் சோதியாவான் இறைவன். அவனை ஒருவர் தம் அன்பாகிய உறவால், அடைக்கல உணர்வுடன் ஞானமாகிய கயிற்றால் தம் நெஞ்சு கடைய அமுதம் போன்று வெளிப்படக் கண்டு இன்புறலாம் என இதில் அறிவுறுத்தி யுள்ளார். இறையடியார் நெஞ்சில் நிறைந்திருக்கும் பேரின்பம், அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்சவருவதும் இல்லை என்ற மனநிறைவு இவற்றின் வெளிப்பாடாக 'ஏமாப்போம்' சுட்டப்பட்டுள்ளதாகக் கருதலாம்.

பிணியறியோம்

உடற்பிணி, உளப்பிணி, பிறவிப்பிணி எனும் இம்மூன்றும் மானிடரைத் தொடர்ந்து அல்லற்படுத்துவன ஆகும். உடற்பிணியைப் பொருட்படுத்தாத உளப்பிணிக்கு வாய்ப்பற்ற அடியவர் வேண்டுதல் ஒன்றே ஒன்றுதான். அது, 'மாண்டு பிறவாமல் உன்தன் பதப்பூ பெருந்தேன் இறைவா எனக்கு அருள் நீ இன்று' (சிதம்பர சுவாமிகள், திருப்போரூர்ச் சந்நிதிமுறை); 'உன்னை நினைந்து உன் நிறைவின் உள்ளே உலாவும் என்னை அன்னை வயிற்று இன்னம் அடைக்காதே பராபரமே' (தாயுமானவர், பராபர: 62) என்பது தான். 'பொய் கெட்டு மெய் ஆனார் மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே!....அல்லற் பிறவி அறுப்பானே!' என்று அடியார் (சிவபுராணம்-87-91) தம் பிறவிப் பிணி தீர்ந்து பிறவாப் பேரின்ப நிலையடைவதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவராதலால் நாவுக்கரசர், தாம் பெறவிருக்கும் பெருஞ்சிறப்பை, பேரின்ப நிலையை,

> இறுமாந்து இருப்பன் கொலோ - ஈசன்
> பல்கணத்து எண்ணப் பட்டுச்
> சிறுமான் ஏந்திதன் சேவடிக் கீழ் சென்று (அங்கு)
> இறுமாந்து இருப்பன் கொலோ (9:11)

என்றும் பாடியிருக்கக் காணலாம். எனவே தாம் கொண்ட உறுதியில் மீண்டும் மீண்டும் பிறத்தலாகிய 'பிணியறியோம்' என மொழிந்துள்ளார்.

பணிவோம் அல்லோம்

ஐம்புலன்களையும் வென்று இவ்வுலக இன்பம் எதிலும் பற்றற்று, இன்பத்தையும் துன்பத்தையும் சம நிலையில் நோக்கும் பேரறிவாளராம் இறையடியார், சொல்லில் அடங்காச் சுகக் கடலில் ஆழ்ந்து கிடப்பவராவர். 'ஊடுவது உன்னோடு உவப்பதும் உன்னை' என்று (திருவாசகம் - 450) வாழ்பவராவர். 'நான் நான் எனக்குளறும் நாட்டத்தால் என்னை விட்டுப் போனாலும் உன்னைவிட்டுப் போகேன் பராபரமே' (பராபரக். 256) என்ற உறுதிப்பாடுடைய இவர்களை இவ்வுலக மாயைகள் எதனாலும் மயக்க இயலாது; ''கம்ப மதயானைக் கழுத்தகத்தின் மேலிருந்து இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்'' (பெருமாள் திருமொழி - 4:5) என்பதில் மிகத் தெளிவான மனநிலை பெற்றவராதலின் எதற்காகவும் பிற மானிடரை நாடவோ, அவர் வழி நடக்கவோ, அவர் ஆணையை ஏற்கவோ இவர்கள் இசைவதில்லை. எதுவும் தேவையின்மை, எதற்கும் யாருக்கும் எப்பொழுதும் அஞ்சாமை என்பனவற்றால் பிறரிடத்துப் பணிந்து நிற்றல் இவர்பால் இல்லையாகிறது.

> தந்தையாய்த் தாயும் ஆகித் தரணியாய்த் தரணியுள்ளார்க்கு
> எந்தையும் என்ன நின்ற ஏழுலகுடனும் ஆகி
> எந்தை எம்பிரானே என்றென்று உள்குவார் உள்ளத்து என்றும்
> சிந்தையும் சிவமும் ஆவார் திருப்பயற்று ஊரனாரே (32:8)

என வாழும் அடியவர்க்கு அரசனும் ஆண்டியும் ஒன்றுதான். எனவே நெஞ்சில் நிறைந்திருக்கும் ஈசனைத் தவிர பிறரைப் பணிவதில்லை.

இன்பமே எந்நாளும் துன்பமில்லை

கேட்டது கிடைத்ததும், எண்ணியது நிறைவேறியதும் மனமகிழ்ச்சியில் தம்மை மறப்பது மானிடர் பொது இயல்பு. 'நந்தம் பணி செய்திருக்கும் நும்மடியோம் இம்மைக்கு இன்பம் பெற்றோம்' (திருமங்கை, பெரிய திருமொழி - 4:9:1) என இறுமாந்திருக்கும் அடியார்கள், 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா' (பாரதி) எனப் போற்றி மகிழ் கின்றனர். 'நாளென் செயும் வினைதான் என் செயும் எனை நாடிவந்த கோள் என் செயும் கொடும் கூற்று என் செயும்' (கந்தரலங்காரம் - 38) என்ற உணர்வுடன் வானம் வசப்பட்ட தன்மையராய் எக்கவலையு மின்றிப் பாடும் வானம்பாடிகளாகின்றனர். 'ஊனத்தை நீக்கி உலகறிய என்னை ஆட்கொண்டவன் தேனொத்து எனக்கு இனியான் தில்லைச் சிற்றம்பலவன் எங்கோன்' என்ற பெருமிதம் அற்புதமான அமுத தாரைகளாய் எற்புத் துளை தொறும் ஏற காண்பனவும், கேட்பனவும்

அவனேயாகி எல்லாம் இன்பம் இன்பம் என இன்ப ஊற்று பெருக்கெடுக்கிறது. உண்ணுஞ்சோறும் பருகுநீரும் தின்னும் வெற்றிலையும் எல்லாம் எம்பெருமான் என்று என்றே கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுக்க நிற்கும் இவ்விறையடியார்க்கு 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை' என்பது பேருண்மை.

ஆதி பரம்பொருளாய், தேவாதி தேவனாய், நல் சங்கால் ஆகிய வெண்மையான குழையை ஓர் காதில் அணிந்தவனாய் விளங்கும் சிவனின் திருவடிகளைப் பற்றிக்கொண்டு, 'நின்தாள் சரணம்; அம்பவள ஐயாறர்க்கு ஆளாய் நான் உய்ந்தேனே; இறைவனே உன்னை யல்லால் யாதும்நான் நினைவிலேனே' எனும் சிவனருட் செல்வர்களை, சிவனடியாரை முன்வைத்துத் திருநாவுக்கரசர் இப்பாடலைப் பாடியுள்ளார்.

எனினும் சிவனடியார்க்கு அவர்தரும் பொது இலக்கணமான, 1. இறைவனை மட்டுமே தம் தலைவனாகக் கொள்வர்; 2. அதனால் இறப்புக்கும் அஞ்சுவதில்லை, 3. பிறவாப் பேரின்ப நிலை எதிர்கொள இருப்பதால் நரகத்துன்பம் இல்லை; 4. கொண்ட கோட்பாட்டில் சற்றும் குறைவுபடாத அசையாத நம்பிக்கையாம் மனவுறுதி உடையவர்; 5. இறைவனைத் தம் உறவாகக் கொண்டதால் பெருமிதம் பெற்றவர்; 6. உடற்பிணி, உளப்பிணி, பிறவிப் பிணி என மூன்றும் ஒழித்தவர், 7. தமக்கென எத்தேவையும் இல்லையாதலால் எவரிடத்தும் அடிபணியாதவர்; 8. நெஞ்சத்துள் எந்நேரமும் இறைவன் குடிகொண்டிருப்பதால் இவர்க்கு எந்நாளும் இன்பமே அல்லால் துன்பமில்லை என்பன எச்சமயத்தடியாருக்கும் பொருந்துவதாகும்.

கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அவர் ஜனங்களும் அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம் (சங். 100:3); நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன் (சங். 23:4); மரணமே உன் கூர் எங்கே, பாதாளமே உன் ஜெயம் எங்கே; கர்த்தாவே பொய் உதடுகளுக்கும் கபட நாவுக்கும் என் ஆத்மாவைத் தப்பிவியும் (சங். 120:2); உம்மைத் தேடுகிற அனைவரும் உமக்குள் மகிழ்ந்து சந்தோஷப்படுவார்களாக (சங்.; 40:16) அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து உன் நோய்களையெல்லாம் குணமாக்கி உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு (சங். 103. 3,4); அப்படியே மனுஷ குமாரனும் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் (மாற்கு. 10:45); உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் (யோ. 16.20); துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் ஆறுதல் அடைவார்கள் (மத். 5.4); கர்த்தரே மகாதேவனும்

எல்லா தேவர்களுக்கும் மகாராஜனுமாயிருக்கிறார் (சங். 95:3); நானும் எம் வீட்டாருமோ என்றால் கர்த்தரையே சேவிப்போம் (யோசுவா. 24:15) எனும் விவிலிய மொழிகள் (நன்றி: முனைவர் அன்னிதாமசு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்) முன்கூற்றை மெய்ப்பிக்கக் காணலாம்.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே

47. நாவுக்கரசர் காட்டும் சிவ வடிவங்கள்

சிவபிரகாஷ் சுவாமிகள், புதுவை.

பண்டைய நமது தமிழ் மக்கள் சிவபெருமானின் பல்வேறு வகையான வடிவங்களைப் பற்றிய செய்திகளை அறிந்திருந்தார்கள். அவற்றுள் வாக்கின் மன்னவனார் பல வடிவங்களைக் கூறுகின்றார். அவற்றுள் சில சிவ வடிவங்களைச் சுருக்கம் கருதி இக்கட்டுரை எடுத்துக் காட்ட முற்படுகிறது.

சங்க இலக்கிய நூல்களும், காஞ்சிப்புராணம், பெரியபுராணம் முதலிய தமிழ்ப் புராணங்களும் வேதம், ஆகமம், சம்ஹிதை, சிவமகா புராணம் முதலிய வடமொழி நூல்களும் சிவனது வடிவங்களைப் பலவாறாக விரித்துச் சுட்டியுள்ளன. எனினும் நாவரசரின் தேவாரத்தில் சுட்டப்பட்ட சில வடிவங்களை ஈண்டு நோக்குவது பொருத்தமானது.

நடராசர்

முதலில் சுட்டத்தகுந்த வடிவம் ஆடல்வல்லான் திருவுருவமாகும். மகேசுவர மூர்த்தங்கள் இருபத்தைந்துள் ஏழாவதாக வைத்து எண்ணப் படுவது இவ்வடிவம். இவ்வடிவம் திருவைந்தெழுத்தின் வடிவம் என்று சாத்திர நூலான உண்மை விளக்கம் குறிப்பிடுகிறது.

"அம்பலவரின் திருவடி நகரம், வயிறு மகரம், தோள் சிகரம்,
முகம் வகரம் திருமுடி யகரம்" (உண்மை விளக்கம் - 33)

என்றும்,

துடி (உடுக்கை) கரம் சிகரம், வீசிய கரம் வகரம், அபயகரம் யகரம், அக்கினிகரம் நகரம் திருவடிக்கீழுயுள்ள முயலகன் மகரம் ஓங்காரமே திருவாசி, இதனுள் உள்ள சுடர்களே 51 எழுத்துக்களாகும்.
(உண்மை விளக்கம் - 34, 35)

என்றும் உண்மை விளக்கம் நடராசர் வடிவத்தைத் தெளிவாகச் சுட்டி யுள்ளது. இத்திருக்கூத்து பஞ்சாக்கர நடனம் எனவும் பஞ்ச கிருத்திய நடனம் எனவும் இன்பக்கூத்து (ஆனந்த தாண்டவம்) எனவும் கூறப்படுகிறது.

இப்பெருமானை, திருநாவுக்கரையர் தமது தேவாரத்தில் இரண்டு திருநேரிசைப் பதிகங்களாலும் இரண்டு திருவிருத்தப் பதிகங்களாலும்

பெரிய மற்றும் புக்க திருத்தாண்டகம் எனும் திருத்தாண்டகங்களாலும் போற்றியுள்ளார். இவரது 80-வது பதிகமாகிய கோவில் திருவிருத்தம் தனிச்சிறப்புடையது. நடராசரின் கேசாதிபாத வருணனையாக தான் 'கண்ட கண்கொண்டு காண்பதென்னே' எனத் திருகூத்தப் பெருமானின் திருக்காட்சியை அப்பரடிகள் அனுபவித்து மகிழ்ந்து கூறுகிறார்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனி(த்)தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

(திருவிருத்தம் - 81.4)

இப்பாடல் வாயிலாகக் கூத்தப் பெருமானின் வடிவ நிலையை காட்டுகின்றார்.

சிவலிங்க மூர்த்தி! லிங்கோற்பவர்!

சிவபெருமானின் வடிவங்களில் இதுவும் ஒன்றாகும். அரியும் அயனும் அடி முடி தேடமுடியாது தீப்பிழம்பாக பெருமான் எழுந்தருளிய நிலையே லிங்கோத்பவ மூர்த்தியாகும். நம் அப்பர் பெருமான் இலிங்க புராணத் திருக்குறுந்தொகையில்,

செங்கணானும் பிரமனும் தம்முளே
எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலார்
இங்கு உற்றேன் என்று இலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே (பாடல் எண் - 11)

என்று இவ்வடிவத்தைச் சுட்டியுள்ளார்.

இடபாரூடர் : விடை ஊர்திப்பெருமான்

பலகாலும் தவம் இருந்து நந்தி எம்பெருமான் சிவனின் வாகன மாகும் தன்மையைப் பெற்றார். அவரை வாகனமாகக் கொண்ட கோலமே இடபாரூடர் வடிவாகும்.

"விடையும் விடைப் பெரும்பாகா" (திருநேரிசை - 111-1)

"உமையோடு பெற்றம் ஏறு உகந்து ஏறும்
பெருமையோன்" (திருக்குறுந்தொகை - 137-5)

"இடபம் ஏறியும் இப்பலி ஏற்பவர்"
(சித்தத் தொகைத் திருக்குறுந்தொகை 210-19)

"மட்டுவார் குழலாலொடு மால் விடை
இட்டமாவு கந்தேறும் இறைவனார்"
(திருக்குறுந்தொகை - 198-1)

என வருவனவற்றால் விடை உகந்த வடிவம் நமக்கு எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

ஆலமர்ச்செல்வர் : தட்சணாமூர்த்தி

ஞானமே வடிவாக கல் ஆலமரத்தின் கீழ் அமர்ந்து வல்லார்கள் (சனகாதி முனிவர்கள்) நால்வருக்கு மௌனத்தின் மூலம் மறைகளுக்கு அப்பாற்பட்டவராக புராணமாகவும், எல்லாமுமாக இருந்ததனை இருந்த படியே இருந்து காட்டும் பெருமானின் வடிவை நம் அப்பர் பெருமான்,

"ஆலத்தார் நீழலில் லறம் நால்வர்க்குக்
கோலத் தாலுரை செய்தவன்" (திருக்குறுந்தொகை - 172-2)

"கல்லாலின் நீழலில் கலந்து தோன்றும்
கவின் மறையோர் நால்வர்க்கு நெறிகள் அன்று
சொல் ஆகச் சொல்லியவா தோன்றும் தோன்றும்.."
(திருத்தாண்டகம் - 231-3)

கூறக் காண்கின்றோம்.

மாதோர் பாகர் : அர்த்தநாரீசுவரர்

சத்துச்சித்தாய், குணியும் குணமுமாய்ப் பிரமம் பொருள் (சிவபரம் பொருள்) நின்ற நிலையை விளக்குவதே அர்த்தநாரீசுவர வடிவம்.

"சிவமும் சக்தியும் இயைந்துள்ளதே பரமாத்மா என நிச்சயிக்கப் படுகிறது" என்று சிவமகாபுராணத்துக் கைலாத சங்கிதை கூறும்.

இக்கூற்றினை,

"நீல மேனி வாலிழை பாகத்து ஒருவன்" (ஐங்குறுநூறு)

எனவரும் சங்க இலக்கியத் தொடர் காட்டும்.

உண்மைதனையுட் கொண்டே நாவரசப் பெருமான் தமது தேவாரப் பாக்களில் சிவபெருமானை மங்கை பங்கனாகவும் (அர்த்தநாரீசுவரன்) உமைமணவாளனாகவும் பலவிடங்களில் கூறியுள்ளார். அவற்றுள்,

"புதுவிரி பொன்செய் ஓலை ஒருகாது
ஓர்காது சுரிகங்கம் நின்று புரள
விரிவிதி வேதகீதம் ஒரு பாடும்
ஓத ஒருபாடும் மெல்ல நகுமால்
மதுவிரி கொன்றை துன்று சடை பாகம்
மாதர் குழல் பாகம் ஆகவருவர்
இது இவர்வன்ன வண்ணம்; இவள் வண்ண வண்ணம்
எழில் வண்ண வண்ணன் இயல்பே" (பொது. 8-10)

இத்திருப்பாட்டில் சிவபெருமானது ஒருடம்பில் ஆண்-பெண் என்ற இருபாலின் அழகும் ஒருசேர அமைந்திருக்கின்ற தன்மை கூறப்பட்டது. இதன் கருத்துப் பொன்னோலை ஒரு காதிலும், சங்கக் குழை ஒரு காதிலும் புரளும். வேதகீதம் ஒரு பாகம் பாடும். அதை மற்றொரு பாகம் கேட்டுப் புன்சிரிப்புச் செய்யும். ஒரு பாகத்தின் குழல் இந்த ஓர் உரு ஈரெழிலாக இறைவர் வருவர் என்பதாம்.

இத்திருப்பாட்டினை ஒக்கவே மாணிக்கவாசகர்,

"தோலும் துகிலும், குழையும் சுருள்தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும், தொக்க வளையு முடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய்க் கோத்தும்பீ"

என்று தம் திருவாசகத்தில் அருளியுள்ளதும் சிந்தித்து மகிழத்தக்கதாகும்.

"யாதொரு தெய்வம் கண்டீர் அத்தெய்வம் ஆகி ஆங்கே
மாது ஒரு பாகனார் தாம் வருவர்..."

(சிவஞான சித்தி, ப. 115)

என சாத்திர நூலிலும் இவ்வடிவம் சுட்டப் பெறுதல் அனைவரும் அறிந்த ஒன்றே ஆகும்.

கால பைரவர்

மலரவனும், மாலவனும் தான்தானே
உலகத்துக்கு முதல்வனென மயங்கிப் போர் செய்த
காலத்தில் நான் முகன் தலையைக் காலபைரவர் வடிவிலே...

இவ்வடிவத்தைத் திருநாவுக்கரசர்,

"தாமரையோன் சிரமரிந்து கையில் கொண்டார்"

(திருநேரிசை - 71-2)

"கொழுமல நோன் றன்சிரத்தைக் கையி லேந்தி"

(திருத்தாண்டகம் - 260-6)

"கமலத் தோன்தன் சிரம் தாங்கும் கையானை"

(திருத்தாண்டகம் - 282-6)

என மொழிந்துள்ளார்.

இவ்வாறு கூறும் பெருமானார் காலபைரவர் உருவத்தினைச் சுட்ட வீரச்செயல்களில் ஆனையை உரித்துப் போர்த்திய காலச்செய்தி வடிவ மாகவும் சித்திரித்துள்ளார்.

"விரித்த பல்கதிர் கொள்சூலம் வெடிபடுதமருகம்கை
தரித்தது ஓர் கோலகால பயிரவன் ஆகி, வேழம்
உரித்து உமை அஞ்சக் கண்டு ஒண்திரு மணிவாய்
விள்ளச் சிரித்து அருள் செய்தார் - சேறைச் செந்நெறிச்
செல்வனாரே" (திருநேரிசை - 73-6)

சிவபெருமானது வடிவம் 25 மகேச்சுவரமூர்த்தங்களாகக் கூறப்பட்டுள்ளது. திருநாவுக்கரசரும் பல வடிவங்களைக் கூறியுள்ளபோதிலும் விரிவு அஞ்சி நடராசர், லிங்கோற்பவர், இடபாரூடர், தட்சணாமூர்த்தி, அர்த்தநாரீசுவரர், கால பைரவர் முதலிய திருவடிவங்களே ஈண்டு அப்பர் வாக்கின் வழி எடுத்து மொழியப்பட்டது.

இவ்வடிவங்களே மக்கள் பலரும் அறிந்த வடிவங்கள்; அன்றாட வழிபாட்டிற்குரியவை; நாவுக்கரசர் மட்டுமல்லாது பிற திருமுறை அருளாளர்களும் அடிக்கடி சுட்டுபவை என்பதால் பிற சிவ வடிவங்கள் ஈண்டு விளக்கப் பெறவில்லை.

இதில் சங்க இலக்கியம், சைவ சித்தாந்த நூல், திருவாசகம் சைவ மகாபுராணம் முதலான நூல்களும் இவ்வடிவங்களைக் குறிப்பிடுவதால் இவை மக்களுக்கு நன்கு அறிமுகமானவை என்பது போதரும்.

48. நாவுக்கரசரின் தொண்டு நெறி

த. செல்லம்மாள், தஞ்சை.

மறந்தும் அரன் திருவடிகள் நினைய மாட்டா
மதியிலியேன் வாழ்வெல்லாம் வாளா மண்மேல்

என்று பாடிய திருநாவுக்கரசர் (எறும்பியூர்ப் பதிகம்) தொண்டு நெறியில் சிறந்தவர்.

தொண்டர்க்குத் தேவையான பண்புகள்

தொண்டுக்குத் தாய்மைப் பண்பும், அன்பும் அவசியம். தாய்மைப் பண்பினைத் திருநாவுக்கரசர் வாழ்க்கையில் காணலாம். திருஞானசம்பந்தரை மதுரைக்கு அழைத்துவர பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியார் முயன்றபோது திருநாவுக்கரசர் மதுரைக்குச் செல்லுதல் சரியல்ல என்று தடுக்கின்றார்.

அந்த அமண் கையர் வஞ்சனைக்கோர் அவதியில்லை
உரை செய்வது உண்டு உறுகோள் தானும் தீய

என்கிறார். திருப்பூந்துருத்தியில் மதுரையிலிருந்து திரும்பிய திருஞான சம்பந்தரைத் தாமே முன்சென்று காண்பதும் அவரது அன்பின் வெளிப்பாடு தான். தாய்மை அன்பு, இறை உணர்வு உள்ளவர்களுக்கு எப்போதும் உரிய பண்பாகும். 'அஞ்சுவது யாதொன்றுமில்லை' என்று பாடிய திருநாவுக்கரசரே தாயன்பு காரணமாக ஞானசம்பந்தரைக் காக்க முயல்கின்றார். எல்லா உயிர்களிடத்திலும் இறைவனையே காணும் பண்பின் காரணமாகத் திருநாவுக்கரசரிடம் இறைவனுக்குரிய தாய்மை உணர்வு தலை தூக்குகிறது.

அஞ்சாமைப் பண்பு

பல்லவ மன்னனால் துன்புறுத்தப்பட்டபோதும் 'நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்' என எதிர்த்து நின்றவர் திருநாவுக்கரசர். சமுதாயத்தில் யார் குற்றம் செய்யினும் நாட்டில் மன்னனே ஆயினும் அதனை எதிர்த்துத் துணிவுடன் போராடுபவர் மிகச்சிலரே. சமயக்காழ்ப்பு நிறைந்தும் சமயப் பொதுமை வளரவிடாத சூழ்நிலையும் நிலவிய காலத்தில் சமணத்தை விட்டு அகன்ற காரணத்தால் மன்னனால் தண்டிக்கப்பட்ட நிலையிலும் தம் வழியில் தனியே நின்றார். சைவத்தின் பெருமையை நிலை நாட்டினார்.

தாம் அறிந்த ஒன்றை அறவழியில் நின்று வன்முறையைப் பின்பற்றாது பிறர்க்கு உணர்த்துவதும் அறநெறிவழித் தொண்டாகும்.

துன்பமின்றித் துயரின்றி என்றும் நீர்
இன்பம் வேண்டி இராப்பகல் ஏத்துமின்
எம்பொன் ஈசன் இறைவன் என்று உள்குவார்க்கு
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே

பிறிதின் நோயைத் தன்நோய்போல போற்றுதல்

தனக்குத் தொடர்பில்லாரிடத்தும் அன்பினை காட்டுவதே தொண்டு நெறி. 'எல்லா உயிரும் இன்புற்றிருப்பது' என்று ஆன்றோர் கருதியதும் இதனைத்தான்.

பிறர்க்கு அறவழி காட்டும் தொண்டு

நடையை மெய்யென்று நாத்திகம் பேசாதே
படைகள் போல் வரும் பஞ்சமாபூதங்கள்
தடையொன்று இன்றியே தன் அடைந்தார்க்கு எலாம்
அடைய நின்றிடும் ஆனைக்கா அண்ணலே .

இறைவனைச் சரண் அடைந்தார்க்கு வினைகளில் தொல்லை இல்லை என்று சரணாகதித் தத்துவத்தை அறிவுறுத்துகிறார்.

நாவால் நன்று நறுமலர்ச் சேவடி
ஓவாது ஏத்தி உளத்து அடைத்தார் வினை
காவாய் என்று தன்னைத் தொழுவார்க்கு எலாம்
ஆவா என்றிடும் ஆனைக்கா அண்ணலே

இறைவனைப் பாடியும், நெஞ்சு உருகி நினைத்தும் பரவினால் இறையருள் பெறலாம் என்பதை திருநாவுக்கரசர் உணர்த்துகின்றார்.

நெஞ்சில் வஞ்சனை இன்மையும் இன்சொல் கூறலும் பணிவும் தொண்டர்க்குரிய பண்புகளாம்.

வஞ்சனையின்றி வணங்குமின் வைகலும்
வெஞ்சொல் இன்றி விலகுமின் விடற
நைஞ்சு நைஞ்சு நின்று உள்கு வார்க்கு
அஞ்சல் என்றிடும் ஆனைக்கா அண்ணலே

பசிப்பிணி தீர்க்கும் பணி

நாவுக்கரசர் இறைவனைப் பாடியதோடு அல்லாமல் மக்கள் பசித் துயர் துடைத்த தொண்டையும் அவரது வரலாறு மூலம் அறிகிறோம்.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று பேசப்படுவது போல திருவீழிமிழலையில் பஞ்சம் ஏற்பட்டபோது திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் அப்பதிக்கு வந்தனர். அவர்கள் இறைவனிடம் முறையிட, இருவருக்கும் சிவனருளால் பொற்காசுகள் திருப்பணிக்காக வழங்கப்பட்டார்.

"உலகியல்பு நிகழ்ச்சியால் அணைந்த தீய
உறுபசி நோய் உமையடையாது எனினும் உம்பால்
நிலவு சிவநெறி சேர்ந்தோர் தம்மை வாட்டம்
நீக்குதற்கு நித்தம் ஓரோர் காசு
நீடும் இலகு மணி பீடத்துக் குணக்கும் மேற்கும்
யாம் அளித்தோம் உமக்கு"

என்று சிவன் திருவாய் மலர்ந்து அருளி காசும் இருவருக்கும் அளிக்கின்றார். திருஞானசம்பந்தர் மடத்தில் உணவிடுதல் தொண்டு தாமதமாகவும் திருநாவுக்கரசருக்கு அளிக்கப்பட்ட காசு 'வாசி இல்லாக்காசு' ஆதலால் அவரது மடத்தில் விரைவாக உணவிடும் பணி நடைபெறுவதைக் கண்ணுற்ற ஞானசம்பந்தர் முதலில் வியந்து பின் தெளிவாகக் காரணம் அறிகிறார். திருநாவுக்கரசரின் தொண்டால் பெறும் காசு ஆதலால் அது வாசி இல்லாக் காசாகச் சிறப்புப் பெறுவதை உணர்கிறார்.

தன்னை அறிந்தார்க்கு மட்டுமே, தொண்டு செய்யும் திறம் அமையும் இறைவனிடம் தன் பக்தித் திறம் போதுமான அளவு இல்லை என்று குறைபட்டுப் பாடுகின்றார், திருநாவுக்கரசர்.

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி
எத்தினால் பத்தி செய்கேன் என்னை நீ இகழவேண்டா
முத்தனே முதல்வா தில்லையம்பலத்தாடுகின்ற
அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே

என்றும்,

ஊனத்தை நீக்கி உலகறிய என்னை
ஆட்கொண்டாய்

எனவும் நன்றி உணர்ச்சியுடன் பாடுகின்றார்.

திங்களூரில் வாழ்ந்த அப்பூதி அடிகள் திருநாவுக்கரசரின் பெருமையைச் 'செவி வழியாகக் கேட்டு'. தம்மை முழுவதுமாக திருநாவுக்கரசரிடம் ஒப்படைத்துக் கொண்டார். தம் மகனுக்கும் அவரது பெயரிட்டும், திருநாவுக்கரசர் பெயரால் தண்ணீர்பந்தல் அமைத்தும் அறச்செயல் செய்து வந்தார். திருநாவுக்கரசர் நேரில் வந்தபோது இன்னார் என அறியாமல்,

நன்றருளிச் செய்நீவீர் நாணில் அமண்பாதகருடன்
ஒன்றிய மன்னவன் சூழ்ச்சி திருத்தொண்டின் உறைப்பாலே
வென்றவர் தம் திருப்பெயரோ வேறொருபேர்?

என்று வெகுண்டு கேட்கிறார். திருநாவுக்கரசர் கேட்ட வினா இதுதான். அப்பூதி அடிகளின் பெயரை எழுதாமல் தண்ணீர்பந்தலுக்கு வேறொரு பெயரை எழுதியது ஏன்? என்பதுதான். அப்பூதியின் பெருமையை அறிந்த திருநாவுக்கரசர் தம் பெருமையைக் கருதாது சிலகாலம் சமண சமயத்தில் ஈடுபட்டதை, ஒருமுறை வாழ்வில் செய்த தவறை ஒப்புக்

கொள்கிறார். 'தெருள் உணர்வில்லாத சிறுமையேன் யான்' என்ற சொற்களில் வெளிப்படுத்துகிறார்.

'பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தம்மை வியந்து'

என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றார்.

மனம் ஒன்றி அன்பினால் செய்யும் திறம்

அன்பில்லாமல் செய்யப்படும் கிரியை பயனற்றவை என்று நாவுக்கரசர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

பொக்கம் மிக்கவர் பூவும் நீருங்கண்டு
நக்கு நிற்பர் அவர் தமை நாணியே

வேதம் ஓதிலென்? வேள்விகள் செய்கிலென்
ஓதி அங்கம் ஓர் ஆறும் உணரில் என்?

உள்ளன்புதான் அவசியம் என்று உணர்த்துகிறார்.

'நான்' என்ற அகந்தை இல்லாத கண்ணப்பரின் அன்பு பலராலும் போற்றப்படுகிறது. பயன் கருதாத அன்பு தொண்டர்களுக்கு மிகவும் அவசியம்.

கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டாத வீரத்திற்கு உரிய அன்பே சிறப்பானது

உழவாரத் தொண்டு

திருநாவுக்கரசர் ஆலயங்களுக்கு வரும் வழியில் உள்ள புதரை நீக்கி மக்கள் இறைவனை வணங்கிச் செல்ல வழிவகுத்தார். சமுதாயப் பணியாக இவரது வாழ்வு அமைந்தது. மென்முறைத்தொண்டு செய்தவர் என இவரைக் குறிப்பிடலாம்.

தொண்டு, மனம், மொழி, மெய் என்பனவற்றால் செய்யப்பெறும் தொண்டுக்கு முழுத்தோற்றம்; வடிவு காணவேண்டும் என்றால் திருநாவுக்கரசர் தான் நினைவுக்கு முதலில் வருகிறார்.

சிந்தை இடையறாத அன்பும் திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாம் கருத்தும், கை உழவாரப்படையும்
வந்திழி கண்ணீர்மழையும், வடிவிற் பொலிதிருநீறும்
அந்தமிலா திருவேடத்து அரசும் எதிர் வந்தணைய

எனச் சேக்கிழார் சொல்லோவியம் இதற்குச் சான்று.

தொண்டு நெறியே சைவ நெறி. விருப்பு வெறுப்பற்ற நிலையில், அமைதியான முறையில் உழவாரத் தொண்டுடன், குறிக்கோள் அமைந்த புரட்சியும் செய்து வாழ்ந்தவர் திருநாவுக்கரசர். அமைதியாக இவர்கள் வாழ்ந்த தொண்டு நெறி சார்ந்த வாழ்க்கையே பிறரையும் இவர்களைப் போல வாழத் தூண்டியது எனலாம்.

49. நாவுக்கரசரில் நால்வகை நெறிகள்

வெ. செல்வசுப்பிரமணியன், கோவை.

'நால்வகை நெறிகள்' - ஒரு விளக்கம்

இறைவன் - வியாபகன் அவனைச் 'சிவன்' எனச் சைவ சித்தாந்தம் கூறும்..... இறைவனுக்கு எந்த உருவமும் இல்லாவிட்டாலும், ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டு 'அருவம், அருவுருவம், உருவம்' ஆகிய மூன்று திருமேனிகளை எடுக்கின்றான். இம்மூன்று திருமேனிகளையும் கடந்த நிலை 'சொரூபம்' என்று கூறப்படும். உருவத் திருமேனி வழிபாட்டைச் சைவசித்தாந்தம் மிகவும் வலியுறுத்து கின்றது. உருவத்தை உடலால் வணங்குவது 'சரியை', பூப்போடுதல், வலம் வருதல் முதலியன சரியையின் பாற்படும். மந்திரங்களை ஓதுவது 'கிரியை', மனத்தால் உருவத்தைத் தியானிப்பது 'யோகம்', 'ஞானம்' என இருவகைப்படும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என நால்வகை நெறிகளும் முக்தி அடைவதற்குத் தேவையான அடிப்படை ஒழுக்க முறைகள் எனலாம். மும்மலச் சார்பால், உயிர்கள் பல்வகைப் பிறப்புக்களை எய்தி இன்ப துன்பங்களுக்கு உள்ளாகின்றன. இவற்றினின்றும் நீங்கி, இறைவனின் பேரருளை அடைய இந்நெறிகள் துணைபுரிகின்றன.

சரியை

உயிர்கள், இறைவனை உணர்ந்து, அவனுக்குப் பணிசெய்ய வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி நின்றால், அக்காலமே, அவ்வுயிர்கட்கு உய்வு உண்டாகும் காலம் எனலாம். அப்பணிகளால் 'இறைவனுக்கு நன்மைபோலும்' என்று எண்ணிவிடலாகாது. அவன், வரம்பில் இன்பம் உடையவன்; வேண்டுதல், வேண்டாமை இலான் ஆதலின், 'பணிகள்' என்பன உயிர்கள் உய்தற்பொருட்டுச் செய்வனவாம் என உணர்தல் வேண்டும். இப்பணிகளின் தொடக்கம், 'சரியை' எனலாம். சரியை குறித்து ஆ. ஆனந்தராசன் பின்வருமாறு விளக்குகிறார். ''சரியை என்பது சிவபெருமானது உருவத் திருமேனியை மட்டும் உணர்ந்து, அதனைப் புறத்தொழிலால் மட்டும் வழிபடுதல் ஆகும். திருக்கோயில் சென்று புலர்வதன் முன் அலகிடுதல், மெழுக்கிடுதல், விளக்கேற்றுதல், மாலை கட்டிக் கொடுத்தல், தலையாரக் கும்பிட்டுக் கூத்தாடுதல்,

பாடுதல் முதலியன 'சரியை'யாகும். 'சக்தி நிபாதம்' மிக மெல்ல நிகழ்வதாகிய 'மந்த தரம்' என்னும் நிலையில் நின்றோர் 'சரியைத்' தொண்டினை விரும்பிச் செய்வர்.

இவை தவிர, 'நந்தவனம் அமைத்தல், சிவனடியார்களைக் கண்டால் அவர்களை வணங்கி, அவர்களுக்குச் செய்ய வேண்டிய பணிகளைச் செய்தல்' ஆகியனவும் 'சரியை'யில் அடங்கும் என்பர். சரியா மார்க்கம் ஆணவத் தடிப்பைக் குறைக்கும்; இந்நிலையில் பெறும் வெற்றியானது 'சாலோகத்'தை (கடவுளின் இருப்பிடத்தை) அளிக்கும். அதாவது பக்தன், இம்மார்க்கத்தின் மூலம் ஈசனுலகை அடைகிறான் என்பர் ர. ராமானுஜாசாரி.

'சாலோகம்' ஆவது, இறையுலகு எய்தி, அங்கு யாண்டும் தடையின்றி இயங்கி, அங்குள்ள போகங்களை நுகர்ந்து வாழ்தல் ஆகும். இச்'சரியையாளர்' தம் நெறி, 'தொண்டு நெறி' அஃதாவது 'தாசமார்க்கம்' என்று சொல்லப்படும். இச்'சரியை' முதலான நெறிகளைக் கைக் கொள்ளுவதற்கும் சிவனருள் வேண்டும். ஆனால், உயிர்கள் ஆணவ மலத்தால் கட்டுண்டு, அறியாமை இருளில் மூழ்கி நிற்கும் நிலையில், 'சரியை' முதலானவற்றை எண்ணிப் பார்க்கவும் செய்யா! இறைவனின் அருள் இருந்தாலே இத்தகு நெறிகளை மேற்கொள்ள முடியும் என்பதை நாவரசர்,

"ஞானம் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானம் காட்டுவர் தம்மடைந் தார்க்கெலாம்"

(திருநாவுக்கரசர் தேவாரம், 5:26:3, ப. 163)

எனும் பாடலால் சுட்டுவர். அப்பர் அடிகள், தம் நெஞ்சுக்குக் கூறுவார் போல் 'சரியைத் தொண்டு' பற்றிப் பாடும் ஓர் அரிய திருப்பாட்டைக் காண்போம்.

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே! நீ வா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேந்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அனல்புனல்சேர் செஞ்சடைஎம் ஆதி யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே"

(திருநாவுக்கரசர் தேவாரம், 6:31:3, ப. 229)

நாவுக்கரசர், 'உழவாரப்பணி'யில் தலை சிறந்தவர் என்பது, அவரது வாழ்க்கை வரலாற்றில் சுட்டப்பட்டது. இறைவனுக்குத் தொண்டு செய்வதே தமது குறிக்கோள் என்கிறார்.

இவ்வாறே, இறைவன், மனிதர்கட்குத் 'தலை' கண்கள், செவிகள், மூக்கு, வாய் முதலான உறுப்புகளை வழங்கியதன் நோக்கமாகத் "தலையே நீ வணங்காய்!" என்னும் பதிகத்தை அருளிச் செய்தார் நாவரசர். இத்தகு 'சரியை' நெறியை முறையே செய்ய வல்லார்க்கு எம்பெருமான், கரும்பினிற் கட்டி போல் இனிமை தருவார் என்கிறார் வாகீசர்.

"பெரும்புலர் காலை மூழ்கிப்
பித்தர்க்குப் பத்தர் ஆகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங்கு
ஆர்வத்தை உள்ளே வைத்து
விரும்பிநல் விளக்குத் தூபம்
விதியினால் இடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார்
கடவூர்வீ ரட்ட னாரே!"

(திருநாவுக்கரசர் தேவாரம், 4:31:4, ப. 245)

என்ற பாடலில் காட்டுவார்.

மலர்களைச் சிவன் திருவடியில் வைத்து வணங்குங்கால், 'இறைவா! எனது வாதை தீர்க்க!' என்று வேண்டினால் உய்வு கிட்டும் என்கிறார் நாவரசர்.

"போது தாதொடு கொண்டு புனைந்துடன்
தாழ வீழ்சடைச் சங்கரன் பாதத்துள்
'வாதை' தீர்க்க என்று ஏத்திப் பராய்த்துறைச்
சோதி யானைத் தொழுது எழுந்து உய்ம்மினே"

(திருநாவுக்கரசர் தேவாரம், 5:30:5, ப. 187)

நாவுக்கரசர் இறைவனைத் தோத்திரங்களால் துதித்தல் வேண்டும் என்கிறார்.

"....தூ நீ ராட்டித்
தோத்திரங்கள் பல சொல்லித் தூபம் காட்டி"

(திருநாவுக்கரசர் தேவாரம், 6:35:8, ப. 262)

என்ற பாடலில் காட்டுவார்.

எனவே இச்சரியைத் தொண்டு செய்வதைத் திருநாவுக்கரசர் பல பதிகங்களில் குறிப்பிடுகின்றார். இச்சரியைத் தொண்டு செய்வதால் ஆணவ மலம் அகன்று பக்தன் ஈசனுலகை அடைவான் என்ற தத்துவம் புலனாகின்றது.

'கிரியை'

'கிரியை' என்பதற்கு ந. சுப்புரெட்டியார் தரும் விளக்கம்

"சிவபெருமானின் அறிவுருவத் திருமேனியாகிய இலிங்க மூர்த்தத்தை அணுகியிருந்து, அதன்கண் அப்பெருமானை, மந்திரம், கிரியை,

பாவனை என்ற மூன்றினாலும் அகத்திலும், புறத்திலும் பலவகை உபசாரங்களையும் முறைப்படி செய்து வழிபடுதலே 'கிரியை' என்பது. திருமுழுக்கு (அபிடேகம்) ஆடை, அணிகலன், சந்தனம், மலர் முதலிய வற்றால் செய்யும் ஒப்பனை (அலங்காரம்), படையல் (நிவேதனம்) புகை, ஒளி (தூபம், தீபம்) குடை, கொடி, கண்ணாடி, கவரி முதலிய மங்கலப் பொருள்கள் இவற்றை ஏற்பித்து, வலம் செய்தல், அடிபணிதல், புகழ்ச்சி (தோத்திரம்) என்பவற்றைச் செய்து வேண்டி நிற்றல் என்னும் இவ்வகைத் தொண்டுகள் 'கிரியை'யுள் அடங்கும். 'சரியை' நிலை யிலும், திருமுழுக்கு முதலியவற்றைச் செய்யினும், அவை மேற்குறிப்பிட்ட 'மந்திரம்' மூன்றானும் அகத்தும், புறத்தும் நிகழாது, செயலளவில் புறத்துமட்டிலும் நிகழ்தலின் அவை 'கிரியை' எனப்படுதல் இல்லை.

இது, வழிபாட்டில் நிகழும் செயல்களைப் பற்றியது. மேலும் அகத்தொடு புறமும் கலந்த பயிற்சியாகும். அஃதாவது, உடல் உறுப்பு களாகிய கைகளைக் கொண்டு இயற்றப்படும் இவ்வழிபாட்டில் உள்ளமும் ஈடுபடுகின்றது.

'கிரியை' என்பது 'உபாசனை' முதலாக வரும் காரியங்களின் தொகுப்பை உடையது. பக்தன், தன்னைப் பரமபதத் தந்தையின் தொண்டுக்காகப் பயபக்தியுடன் கட்டுப்பாடு, கடமையுணர்வுள்ள மகனாகக் கருதிப் பணிந்து ஒழுகுகிறான். ஆகவே அவன் தன் நேரம் முழுவதையும் இறைவனுக்குப் பணி செய்வதிலேயே கழிக்கிறான் என்கிறார் ர. ராமாநுஜாசாரி.

சரியைத் தொண்டு செய்து வரச் செய்து வர அதன் பயனாய் ஆணவமலம், பரிபாகமுறும். அப்போது சக்தி நிபாதம், மந்தமாய் நிகழும். அதன் பயனாய்க் கிரியைத் தொண்டில் ஆர்வம் ஏற்படும். இவ்வகையில், கிரியைக்கு முதற்படி சரியை என்றும் கூறலாம். இக்கிரியைத் தொண்டினைச் சிவபூசை, சிவகன்மம் என்றும் கூறுவர். ஞானம் தோன்று வதற்கு இப்பூசை இன்றியமையாதது. இக்'கிரியை'யில் வழுவாது நிற்போர்க்குச் 'சாமீபம்' கிட்டும். அஃதாவது மகன் போன்று, இறைவனுக்கு அணுக்கராய் இருந்து இன்புறும் நிலையாம்.

ஆதலின் இவர் தம் நெறி 'மகன்மைநெறி' அஃதாவது 'சற்புத்திர மார்க்கம்' என்று இயம்பப்படும். அகந்தையையும், மமகாரத்தையும் தகர்த்தெறியச் செய்வது இக்'கிரியை' நெறியேயாம். திருநாவுக்கரசர் இக்'கிரியை நெறி' பற்றியும் தம் பாடல்களில் ஆங்காங்கு எடுத்து மொழிகின்றார்.

"அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி"

(திருநாவுக்கரசர் தேவாரம், 4:7:3, ப. 62)

''நகமெலாம் தேயக்கையால் நாண்மலர் தொழுது தூவி
முகமெலாம் கண்ணீர்மல்க முன்பணிந்து ஏத்தும் தொண்டர்
அகமலால் கோயில் இல்லை ஐயன்ஐ யாறனார்க்கே''

(திருநாவுக்கரசர் தேவாரம், 4:40:8. ப. 300)

என்ற பாடல்களில் விளக்குவார். இனி நாவரசர், 'மனம், வாக்கு, காயம்' இம்மூன்றினாலும் செய்யப்படும் வழிபாடு குறித்தும் கூறியுள்ளார்.

''வெண்மதி சூடி விளங்கநின்
றானைவிண் ணோர்கள்தொழ
நண்ணில யத்தொடு பாடல்அ
றாதநல் லூரகத்தே
திண்ணில யம்கொண்டு நின்றான்
திரிபுர மூன்றெரித்தான்
கண்ணுளும் நெஞ்சத்து அகத்தும்
உளகழற் சேவடியே''

(திருநாவுக்கரசர் தேவாரம், 4:97:5, ப. 680)

இதற்கு உரைகூற வந்த வ.த. இராமசுப்பிரமணியம் ''இத்திருப்பாட்டு, திரிகரணங்களால் ஈசனை ஏத்தி நிற்றலை உணர்த்திற்று. இலயத்தொடு பாடல் அறாத நல்லூர் என்பது வாக்கினாலும், கண்ணுளும் நெஞ்சத்து அகத்தும் என்பது முறையே காயத்தாலும், மனத்தாலும் செய்யப்படும் வழிபாடாகும். இத்தகைய தொண்டினால், வல்வினை மாயும்'' என்று கூறுகின்றார்.

எனவே நாவுக்கரசர் கூறும் கிரியை நெறியை மனிதன் மேற்கொண்டால் அகந்தையும், மமகாரமும் அழிந்துவிடும். மகன் போன்று இறைவனுக்கு அணுக்கராய் இருந்து இன்புறும் நிலை ஏற்படும் என்பதை உணர முடிகின்றது.

யோகம்

'கிரியை'த் தொண்டினால், ஆணவ மலம் மேலும் பரிபாகமுற்றுச் 'சத்தி நிபாதம்' தீவிரமாய் நிகழும். அந்நிலையில் இறைவனது அருவத் திருமேனியை உணரும் பக்குவத்தைப் பெற்று, வழிபடுதல் 'யோகம்' ஆகும். மனத்தை அடக்கி, அகத்தே நிறுத்தி, ஒளி வடிவினனாகிய இறைவனோடு ஒன்றாய்ச் செய்தல் எனலாம்.

இதனை வ.ஆ. தேவசேனாபதி, ''ஐம்பொறிகளை ஒடுக்கி, உயிர்ப்பை நிலைநிறுத்தி, 'மூலாதாரம்' முதலான ஆதாரங்களின் உள்வழிகளை அறிந்து அவ்விடங்களில் பொருந்தித் தியானித்துச் சந்திர மண்டலத் திலுள்ள அமிர்தத்தை உடல் முழுவதும் நிரப்பி, முழுச்சோதியை நினைத்திருந்து, வினைகள் கெடுப்பது' என்று விளக்குவர்.

'யோகம்' என்பதற்குக் 'கூடுதல்' அல்லது ஒன்றுதல் என்று பொருள். இஃது எட்டுக் கூறுகளாகப் பகுத்து உரைக்கப்படும். அவை; இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. இவற்றை 'அட்டாங்க யோகம்' என்பர். இவற்றுள் 'சமாதி' என்பது தன்னை மறந்து இறைவனோடு ஒன்றி விடுதலாம். சிவபெருமானைத் தியானித்தலும் அவனிடத்து அழுந்துதலும், 'சிவயோகம்' எனப்படும்.

திருநாவுக்கரசர், இவ்யோகத்தைப் பின்வரும் தேவாரப் பாடலில் விளக்குகின்றார்.

"கல்லினால் புரமூன்று எய்தக்
கடவுளைக் காத லாலே
எல்லியும் பகலும் உள்ளே
ஏகாந்த மாக ஏத்தும்
பல்லில் வெண் தலைகை யேந்திப்
பல்இலம் திரியும் செல்வர்
சொல்லுநன் பொருளும் ஆவார்
திருச்சோற்றுத் துறைய னாரே!"

(திருநாவுக்கரசர் தேவாரம், 4:41:3, ப. 303)

இப்பாட்டில் 'உள்ளே ஏகாந்தமாக ஏந்தும்' என்பது, 'யோகநிலை'யைக் குறிக்கும்.

"உயிரா வணமிருந் துற்று நோக்கி
யுள்ளக் கிழியி னுருவெழுதி
உயிரா வணஞ்செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி!"

(திருநாவுக்கரசர் தேவாரம், 6:25:1, ப. 186)

என்று அப்பர் அருள்மொழியும் 'யோகநலை' குறித்ததேயாம்.

ஞானம்

சிவபெருமானை நோக்கிச் செய்யும் 'சரியை, கிரியை, யோகம்' என்ற 'வழிபாடும் தொண்டும்', சைவத்தில் 'தவம்' என்று சொல்லப்படும். 'மந்ததரம், மந்தம், தீவிரம்' என்னும் சத்தி நிபாத நிலைகளுக்கு ஏற்பச் சிவவழிபாடாகிய தவமும், 'சரியை, கிரியை, யோகம்' என மூன்றாய் நிகழும். இம்மூன்றையும், பயன் கருதாமல் சிவனிடம் கொண்ட பேரன்பின் காரணமாகச் செய்து வந்தால், இத்தவ முயற்சியால், 'இருவினையொப்பு' உண்டாகும். அதனால், ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும் நிலை உண்டாகும். இதனால் வினையும் நீங்கும்; நீங்கவே உயிரறிவு உள்ளவாறு விளங்கும். அந்நிலை, 'உயிரினது பக்குவம்' எனப்படும். இது, ஞானத்தை உணர்தற்கு ஏற்ற பருவம் ஆகும். ஆதலின், 'இருவினையொப்பு'

வருங்காலமே, உயிருக்கு 'ஞானம்' வரும் காலம் ஆகும். அப்போது முழுமுதற் பரம்பொருளே ஞானாசிரியராக எழுந்தருளி வந்து, அவ்உயிர்க்கு 'ஞானத்'தை அருளுவார். அவ்வாறு 'ஞானம்' விளங்கிய பொழுது, அவ்வுயிரானது அசத்தை அசத்து என உணர்ந்து அதனைக் கழித்துச் சத்தாகிய சிவத்தோடு கூடி இன்புறுதலாகிய 'முத்தி நிலை' பெறும்.

'சரியை, கிரியை, யோகம்' எனும் மூன்று நெறிகளும் கடைசி நெறியான 'ஞானத்திற்கான ஏற்பாடுகளாகும்'. 'ஞானநெறி'யைச் 'சன்மார்க்க நெறி' என்பர். இதன் பயன், 'சாயுச்சியம்' அடைதல். அதாவது 'தெய்வீகக் கட்டுப்பேறு' எனவே, ஞானமே 'முக்தி'க்கு வழி.

திருநாவுக்கரசர், இஞ்'ஞானநிலை' பற்றிப் பல்வேறு பாக்களிலும் குறிப்பிடுகின்றார்.

"நான் எனில் தானே என்னும்
ஞானத்தார் பத்தர் நெஞ்சுள்
தேனும்இன் னமுதும் ஆனார்
திருச்செம்பொன் பள்ளியாரே"

(திருநாவுக்கரசர் தேவாரம், 4:29:1, ப. 231)

என்பர். ஞானம் என்றால் என்ன? என்பதற்கான ஒரு விளக்கமும் தருகின்றார்.

"விளக்கினார் பெற்ற இன்பம்
மெழுக்கினால் பதிற்றியாகும்
துளக்கிநல் மலர்தொ டுத்தால்
தூயவிண் ணேற லாகும்!
விளக்கிட் டார்பேறு சொல்லின்
மெய்ந்நெறி ஞான மாகும்!
அளப்பில கீதம் சொன்னார்க்கு
அடிகள்தாம் அருளு மாறே"

(திருநாவுக்கரசர் தேவாரம், 4:77:3, ப. 523)

எனச் 'சரியை, கிரியை' எனும் நெறிகளோடு 'ஞானநெறி'யினையும் சேர்த்துக் கூறுகின்றார்.

"....மெய்தரு ஞானத் தீயால்
கள்ளத்தைக் கழிய நின்றார்"

(திருநாவுக்கரசர் தேவாரம், 4:45:1, ப. 325)

"ஞானத்தை விளக்கை யேற்றி
நாடியுள் விரவ வல்லார்
ஊனத்தை ஒழிப்பர் போலும்
ஒற்றியூர் உடைய கோவே!"

(திருநாவுக்கரசர் தேவாரம், 4:45:3, ப. 326)

என ஞானத்தை 'நெருப்பாகவும், விளக்கா'கவும் உருவகப்படுத்துவதனோடு, 'நாடியுள் விரவ வல்லார்' என 'யோகத்'தையும் குறிப்பிடுகின்றார் அப்பர் பெருமான்.

ஊனத்தை ஒழிப்பர் போலும் என்பதால்,

"பிறவியைப் போக்க வல்லது இந்த ஞானமே"

என்றும் பேசுகின்றார்.

"ஞானமே முத்திக்கு வழி; ஆதலின் நெஞ்சமே! இம்முத்தி நெறி அடைய எந்தத் தவமும் செய்யாதிருக்கிறாயே! அன்பால், அடியவர்க்கு ஏதும் அளித்திலையே! எனவே, திருச்சோற்றுத்துறை ஈசனுக்குப் பக்தியாய்ப் பணி செய்க!" என்கிறார் அப்பர். இது திருச்சோற்றுத்துறைப் பதிகப்பாட்டு. சிவபெருமானின் 'திருவடித் தீக்கை'யால் நாவுக்கரசர் 'ஞானநிலை' பெற்றார். 'திருநல்லூர்த் திருப்பதிக'ப் பாடல் ஒவ்வொன்றிலும், தம் தலைமேல் இறைவன் திருவடி சூட்டியதைக் குறிப்பிடுதல் காணலாம்.

"....இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடிஎன் தலைமேல் வைத்தார்!"

(திருநாவுக்கரசர் தேவாரம் - 6:14:1, ப. 105)

இவ்வாறு நாவுக்கரசருக்குச் சிவபெருமான் ஞானநெறி காட்ட ஞானாசிரியனாக வந்தான்.

அந்த இன்பத்தைப் பாடல்கள்தோறும் போற்றுகின்றார் நாவுக்கரசர். இவற்றிலிருந்து சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை நெறிகளைப் பின்பற்றி இறைவழிபாடு நடத்தினால் சன்மார்க்கர்களாகத் திகழலாம் என்ற தத்துவம் புலனாகின்றது.

50. நாவுக்கரசரின் பக்தி நெறி

இர. செல்வராசு, சென்னை.

''சிந்தை இடையறா அன்பும் திருமேனி தன்னில் அசைவும்,
கந்தை மிகையாம் கருத்தும் கைஉழ வாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவில் பொலிதிரு நீறும்
அந்தமி லாத்திரு வேடத்தரசும் எதிர்வந் தணைய''

(சேக்கிழார்)

நாவினுக்கு அரசின் திருஉரு

உயிர் இறைவனை அடைதற்கு உரிய நெறியாம் பக்தி நெறியினை, சீல நிறை சைவநெறி நிழல் பரப்ப வந்த, திருவாமூர் மண்ணின் மைந்தர், தவசீலர், தாண்டக வேந்தர், திரு உருவின் பொலிவைத் தெய்வப் புலவர் சேக்கிழார் பெருமான் மேற்குறித்த பாடலில் நிழலோவியமாகத் தீட்டியுள்ளதை உற்று நோக்குவோம்.

ஆண்டான் அடிமை என்னும் தாசமார்க்கத்தில் நின்று ஒழுகி இறைவன் மீது இடையறா பக்தி பூண்டு, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க, பக்தி நயம் சொட்டச் சொட்ட திருமுறைப் பாடல்களைப் பாடி அருளியுள்ள நமது அப்பரடிகளின் திரு உருவத்தினை, சிவஞான முனிவர், தமது காஞ்சிப் புராணத்தில் மேலும் மெருகேற்றிப் புனைந்த வண்ண ஓவியம் இதோ:

''இடையறாப் பேரன்பும் மழைவாரும்
இணைவிழியும், உழவாரத்திண்
படையறாத் திருக்கரமும், சிவபெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும், வாகீசப்
பெருந்தகை தன் ஞானப்பாடற்
தொடையறாச் செவ்வாயும், சிவவேடப்
பொலிவழகுந் துதித்து வாழ்வாம்''

சமயக் குரவர்கள் நால்வரும் இறைவன் மீதும், மக்கள் மீதும், நாட்டின் மீதும் இடையறா பக்தி பூண்டவர்கள். அவர்தம் பக்தியின் பெருக்கத்தாலும் முன்செய் நல்வினைப் பயனாலும், அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு காலகட்டங்களில் பரம்பொருளால் ஆட்கொள்ளப்படும்

அருளைப் பெற்றிருந்தனர். இதில் ஏனைய மூவரும் ஒருபால் இருக்க, சூலை கொடுத்து ஆட்கொள்ளப்பட்ட அப்பரடிகளின் பக்தி ஒரு தனிச்சிறப்பு வாய்ந்தது. அவர்தம் பக்தியின் பெருக்கத்தை, பக்தியின் முதிர்வை இங்கே சற்றே சிந்திப்போம், நாம் தெளிவு பெற.

பக்தியின் திருஉரு

நாவுக்கரசர் தொண்டின் திருஉரு என்பதனைவிட, பக்தியின் திருஉரு என்பதே சாலப் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. ஓர் ஒளி மற்றோர் ஒளியை ஒளிரச் செய்வதுபோல, இவரது ஆழ்ந்த இறைபக்தி, இறைவனையும் இவர் மீது பக்தி கொள்ளுமாறு செய்துள்ளது. இதற்கான விளக்கங்களை சற்றே ஆராய்வோம்.

பக்திமானாகிய அப்பரடிகளின் பார்வையெல்லாம் பரம்பொருள் பார்வையே. இவர்தம் எண்ணமெல்லாம் எம்பெருமான் எண்ணமே. இவரது சிந்தை முழுவதிலும் மக்களுக்குத் தொண்டு செய்து கிடக்கும் எண்ணமே மேலோங்கி நின்றது. இவர் தமது சிந்தை கரைந்துருக, உலகோர் உள்ளமும் உருக, ஒப்புயர்வற்ற தாண்டகப் பாக்களை இறையருளால் யாத்தருள, இவர் இறைவன்பால் வைத்த பக்தியின் பெருக்கமே துணைபுரிந்துள்ளது எனலாம். அப்பாக்கள் இவருக்கு பரம்பொருளின் மீதிருந்த பக்தியின் உயர்வை, தனிப்பெரும் சிறப்பை உலகம் உள்ளளவும் பறைசாற்றி நிற்கும்.

இவரது பக்தியின் மீது வைத்த அளப்பரிய ஆர்வத்தால், இறைவனும், தமது அடியவரான அப்பரடிகள் துன்பத்தில் துன்புறா வண்ணம் இவருக்கு தோன்றாத் துணையாக இருந்து அருள் பாலிக்கின்றான். இவர்தம் துயர்துடைக்க உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்காங்கே ஓடோடி வருகின்றான். தம் மெய்யடியார் துன்புறாவண்ணம் கண்ணினைக் காக்கின்ற இமைபோல காத்தருளுகிறார். தீயவை தீய பயக்கும் என்பதனை அறியா சிறு மதியினர் நமது அப்பரடிகளின் பெருமை அறியாது, அவர் மீது ஏவிவிட்ட வெந்துயர்கள் இவரது வாயிற்கதவைத் தட்ட, அத்துயர்கள் யாவும், இறைவனது கருணையினால், தழலிடைப்பட்ட மெழுகினைப் போல் உருகி உருகி உருக்குலைந்து போனது நாம் அறிந்த ஒன்றுதானே.

பக்திக்கடல்

அடிகளுக்கு இறைவன் மீதூர்ந்த பக்தி, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வளர்ந்து, வற்றாத ஜீவ நதி போன்று, அவர்தம் வாழ்நாள் முழுவதும் பெருகிப் பெருகி பெருக்கெடுத்து ஓடிக்கொண்டேயிருந்தது. உலகம் உய்ய, உலக மக்கள் உய்திபெற, கரைபுரண்டோடிப் பயன் தந்தருளிய அவர்தம் பக்திப் பெருக்கப்

பிரவாகத்தின் ஒருசிறு துளியையாவது நாம் பருகிப் பயனடைய, அவரது பக்திக் கடலில் மூழ்கி முத்தெடுக்க முயற்சிப்போம்.

சமண சமயப் பிரவேசமும், இறைவனது திருவிளையாடலும்

அப்பரடிகளது வாழ்க்கையின் முற்பகுதி சமண சமயத் தாக்கம். இவர் ஏன் சமணம் புகுந்தார்?

"காத்தாள் பவர்காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொ ளென்று சொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக் கொள்ளும் வழித்துறை ஒன்றறியேன்"

என்று அலமந்து தனது ஆற்றாமையை இவர் வெளிப்படுத்தியிருத் தலையும் நம்மால் எண்ணாமல் இருக்க முடியுமோ? பின்னர் அச்சமண சமயத்தைவிட்டு நம் அப்பரடிகள் விலகியபோது மயக்குற்ற சமணர்கள், பக்திக்கு அடியவரான, தொண்டிற்கு மறுபெயரான அப்பரடிகளை அழிக்க அடாதன பலவும் செய்கின்றனர். பாதகம் பல புரிகின்றனர். மேலும் அவர்கள் செய்த தந்திரங்கள், சூழ்ச்சிகள் ஒன்றா, இரண்டா? முற்பகலில் தாம் அப்பரடிகளுக்குச் செய்யும் தீவினைகள் பிற்பகலில் தம்மை வந்து தாக்கும் என்ற உண்மைநிலை உணரா மதியிலிகளான சமணர்கள், முன்நாளில் தாம் செய்த தீவினைப் பயன்களினால் உந்தப்பெற்று, நம் அடியவருக்கு இடர்கள் பல விளைவிக்கின்றனர். மேலும் அவர்கள் பின் நாளில் அருள் ஞானக்குழந்தை ஞானசம்பந்தரிடம் அனல்வாதம் புனல் வாதத்தில் தோற்று, தாமே கழுவேற இருக்கும் விதியின் பயனை உணரா அறிவிலிகளாக நடமாடுகின்றனர். தனது தலையாய பக்தனும், தந்தைக்கு நிகர் ஆனவருமான அப்பரடிகளுக்கு, சமணர்கள் தீமை செய்ய, தீங்கு விளைவிக்க பொறுப்பனோ இறைவன்? தம்மால் "அப்பர்" என அன்புடன், பய பக்தியுடன் அழைக்கப்பட்ட அடியவருக்கு, தொண்டுப் பழத்திற்கு, பக்தியின் திருஉருவிற்குத் தீங்கு விளைவித்த சமணர்கள், தாம் செய்த தீவினைப் பயன்களை அனுபவித்ததை உலகிற்கு உணர்த்துகிறார். இதுவும் பக்திக்காக இறைவன் நடத்திய திருவிளையாடலோ என்று எண்ணத் தோன்றுகிறது. அப்படியும் இருக்கலாம்.

அருளரசின் பக்தி வெளிப்பாடு

தீயவர் கூட்டத்தில் சிலகாலம் தங்கியிருந்த அப்பரடிகள் பெற்ற பரிசு சூலைநோய், இக்கொடிய நோயினின்றும் அவரைக் காப்பாற்றி கடைத்தேற்றியது. அவர்தம் தமக்கையின் இறைபக்தி, தம்பியர்மாட்டு வைத்த பற்று மன்றோ? இந்நிகழ்வும், இவ்விருவர் மீதும், அவர்தம் பலன் கருதா தொண்டின் காரணமாக இறைவன் கொண்ட பக்தியின் வெளிப்பாடோ என்று எண்ணத் தோன்றுகிறது.

பொது நீக்கித்தனை நினையும் தம் பக்தன் மீது இறைவனும் பக்தி செலுத்துகிறான். இதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு: இறைவன் மீது கண்ணப்பர் காட்டிய பக்தியின் வளப்பம், இறைவனே கண்ணப்பர் மீது அன்பு கொள்ள, பக்தி கொள்ளச் செய்தது. இதனை உலகோருக்கு உணர்த்த இறைவன் நடத்திய ஒரு திருவிளையாடலை நாம் பலமுறை சிந்தித்த அனுபவத்தில் திளைத்து இன்புற்று இருக்கிறோமே!

நாவுக்கரசரின் பக்திநெறி

கருவிலேயே திருவின் மீது தாம் உற்ற பற்றினை, பக்தியை அகச்சான்றாக எடுத்தியம்பியுள்ள திருநாவுக்கரசு நாயனாரின் பக்தி நெறியை ஒரு சிறிதே எண்ணுவோம் நாம். அவ்வண்ணம் எண்ணி, பக்திப் பரவசத்தில் நாமும் மூழ்கித் திளைப்போம்.

தனக்கென ஒரு பற்றிலாமையை எடுத்தியம்பிய அப்பரடிகள், தமக்கென ஒரு தனிப்பற்று உள்ளதை, அவர்தம் உள்ளத்தின் உள்ளே ஊறிக்கொண்டிருக்கும் பற்றினை நம்மை ஊகிக்கச் செய்துவிட்டார். அதுவே, பற்றற்றான் மீது அவர் பற்றிய பற்றாகும். அதுவே அவரது பக்தி நெறியாகும். இப்படி அவர்தம் உள்ளத்தின் உள்ளே ஊறிக் கொண்டிருக்கும் பக்தியின் ஆழத்தை, அகலத்தை வெளிப்படுத்த,

> "உன்னை நினையாது ஒருபோதும் இருந்தறியேன்", என்பதனால், இவர் ஒருபோதும் திருவடி நினைப்பு அற இருந்ததில்லை என்பதனைச் சுட்டிச் செல்கிறார்"

நாவுக்கரசரின் ஒன்றிய சிந்தனையும் பக்தியின் மாண்பும்

கருவுற்ற நாள் முதலா அவனது பாதமே காண்பதற்கு, (தி.4, ப.99, பா.6) உருகிய அவரது உள்ளமும், அதன் உள்ளூறிய பக்தியும், இவர் சமண சமயத்தைச் சார்ந்திருந்தபொழுது என்னவாயிற்று? அப்போது அப்பக்தியின் நிலை என்ன? பக்தி எவ்வாறு மறைந்திருந்து வெளிப் பட்டது? என ஐயப்படுவோரும் உளர்.

> "உன்னை நினையாது ஒருபோதும் இருந்தறியேன்"

என்றதெல்லாம் எந்த அளவிற்குப் பொருத்தம் உடையது? இடையில் தொய்வுற்றதா? அல்லது அப்பரடிகள் இரட்டை வேடம் போட்டுள்ளாரா என்ற ஐயத்திற்கு ஒரு தெளிவினை இங்கு காண்போம்.

இவர் அருளிய தமது முதல் பாடலில், தமது கடந்தகால, நிகழ்கால, எதிர்கால விளைவுகளை எல்லாம் இணைத்துக் கூறிச்செல்கிறார். இவரது பக்தி மீது ஐயப்படுவோர், இவர் யாத்தருளியுள்ள பக்திப் பனுவல்களை சற்றே பொறுமையுடன் சிந்திக்க, தெளிவு தாமே வந்து முந்துறும்.

அடிகளது அப்பழுக்கில்லாத உண்மைப் பக்தியின் ஆழத்தைத் தெள்ளத் தெளிய உணர, அனுபவிக்க இயலும்.

நமது அடிகள் அவனருளாலே அவன்தாள் வணங்க, முதலில் இவரது புறச் சமயம் சார்ந்த பிழையை இறைவன் நீக்குகிறான் என்பதை,

"ஏற்றாய் அடிக்கே..."

எனக் கூறும் இவரது வாக்கு, இவரை இறைவன் ஆட்கொண்டு அருளியதைக் குறிக்கும். இது இதுவரை நடந்தது. இனி,

"இரவும் பகலும் பிரியாது வணங்குவன்.."

என்பனவெல்லாம் இனி நடக்க இருப்பது. எனவே இவரை, இறைவன் இவரது பிழை நீக்கி, ஏற்ற பிறகே, எம்பெருமானை இமைப்பொழுதும் நீங்காமல் வணங்குவதாக ஐயம் திரிபறக் கூறியுள்ளதால், அப்பரடிகளிடம் இரட்டைவேடம் என்ற பேச்சுக்கே இடமில்லை, ஆதாரமும் இம்மியளவும் இல்லை என்பதனை தெள்ளத் தெளிய உணரலாம்.

பக்தியில் தாண்டக வேந்தர்

தாண்டக வேந்தர் தமக்கென அமைத்துக் கொண்ட தனிப்பெரும் பக்திப் பரவசத்தில், தனித் தாண்டவமாடுகிறார். தில்லைக் கூத்தனே போன்று, தாண்டகப் பாக்களில் தனி ஆவர்த்தனம் செய்கிறார். தாண்டக சதுரர் தாண்டகவேந்தர் எனப் போற்றப்படுகிறார். தமது தாண்டகப் பாக்களில் பக்தியை நனி சொட்டச்சொட்டக் குழைத்துக் குழைத்து யாத்திருக்கிறார். இவரது பக்திப் பனுவல்களை நாம் அள்ளி அள்ளிப் பருக, சுவைக்க அனுபவிக்கத் தந்திருக்கிறார். திருமுறைகளை நாம் உணர்ந்து ஓத, பக்திப் பரவசத்தில் திளைக்க நம்மையும் உடன் அழைத்துச் செல்கிறார் தாண்டக வேந்தர். இவையனைத்தும் இவர் நம்மீதும் இறைவன் மீதும் கொண்ட பக்திப் பெருக்கத்தின் விளைவே எனலாம்.

அடியவர் மீதூறிய பக்தி

இவர்தம் ஒப்புயர்வற்ற, தூய்மையான பக்தியின் சிறப்பை எடுத்து இயம்பவும் வல்லோமா நாம்? அடியவர்கள் மீது இவர் பூண்ட பக்தியின் காரணமாக அவர்களுக்கும் அருள்பாலிக்க இறைஞ்சு கிறார். மேநாள் வாகீச முனிவரான இந்நாள் அப்பரடிகள்,

"பாம்பரைச் சேர்த்திப் படருஞ் சடைமுடிப் பால்வண்ணனே
கூம்பலைச் செய்த கரதலத் தன்பர்கள் கூடிப்பன்னாள்
சாம்பரைப் பூசித் தரையில் புரண்டுநின் றாள்சரணென்
றேம்பலிப் பார்கட் கிரங்குகண் டாய்கச்சி யேகம்பனே"

மேலும் இவர்,

"இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுமோ மல்லோம்"

என்பதிலிருந்து திருவைந்தெழுத்தை உருவாகக் கொண்ட இறைவன் மீது இவருக்கிருந்த அளப்பரிய, அசைக்க முடியாத, அப்பழுக்கற்ற ஆழ்ந்தகன்ற பக்தி வெளிப்படுவது வெள்ளிடை மலையன்றோ!

பக்தியில் இறைவனைக் காணுதல்

இவருக்கு இறைவன் மீது ஏற்பட்ட பக்தியினால், அதன் பரவசத்தால் உந்தப்பெற்று, இறைவனது திருஉருவைக் காண விழுமிய தொண்டருடன் இவரும் ஓடிச்செல்கிறார். சென்று, தமது அகக்கண்ணால் இறைவனது திருவுருவைக் கண்ணாரக் கண்டு, அகமிக மகிழ்ந்து நெகிழ்வுறுகிறார். திருவைந்தெழுத்தே உருவமாகி நின்ற பரம்பொருளும், இவர் மீதூர்ந்த பக்தியின் செறிவால், இவரை நாடியது என்று அகச் சான்றாக உருகிப் பாடல்களை யாத்துள்ளார்.

"வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினா ரந்நெறி கூடச் சென்றலும்
ஓடினே னோடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினே னாடிற்று நமச்சி வாயவே"

அடியவர்களுக்கு அருள் பாலித்தல்

பாலைக் கொடுத்து ஆட்கொண்ட பாலகனுக்கு இறைவன் காட்சி கொடுத்தது ஒரு நிலை. சூலை கொடுத்து ஆட்கொள்ளப்பட்ட அப்பரடி களுக்கோ, பக்தியின் மேலீட்டால்,

"என்று வந்தாய்?"

என இறைவனே தமது திருவாய் மலர்ந்தருளி, உரையாடி அளவளாவி மகிழ்ந்து காட்சி கொடுத்தருளினார் என்று நமதடிகள், இறைவனது கருணையை, தயவை உணர்ந்து பாடுவார். மேலும்,

"எதற்கு வந்தாய்?"

என இறைவன் பக்திப் பரவசத்துடன் தொடுக்கும் வினாக்களுக்கு, ஏன் இங்கு வருகிறாய்? நீ இருக்கும் இடத்திலேயே உனக்கு வேண்டியதைக் கேட்டுப் பெறலாமே? உனக்கு அருள்நலம் புரிய காத்துக்கிடக் கிறேனே என இறைவனே கூறும் விதமாக பொருள் பொதிந்துள்ளது என்று கொண்டாலும் கொள்ளலாம்.

கருணையும் பக்தியும்

"பக்தியால் யான் உனைப் பலகாலும் பற்றியே
மாதிருப் புகழ்பாடி"

என அருளுவார் அருணகிரியார்.

நமது அப்பரடிகளோ பக்தியால் இறைவனைப் பற்றியே பலகாலும் நினைந்து நினைந்து, உருகி, உருகி திருமுறைகளைப் பாடி அருளுகிறார். மேம்பட்டு மிளிரும் இவர் தம் பக்தியின் சிறப்பை பல இடங்களில் பலவிதமாக உலகோருக்கு உணர்த்த, இறைவன் அப்பரடிகளின் வாழ்வில் பல திருவிளையாடல்களைப் புரிந்துள்ளான் என்றும் கொள்ளலாம்.

பக்தியின் திறம்

திருவருளைத் துணையாகப் பெற்றதினால் அன்றோ, அத்திருவருளிடம் இடையறா பக்தி பூண்டமையாலன்றோ, இவர்,

> **"யாமார்க்கும் குடியல்லோம்.......**
> **....... சங்கரன் நற்சங்க வெண்குழையோர் காதில்**
> **கோமாற்கே நாம் மீளா ஆள்"**

எனக் கூறும் திறம் பெற்றார். இதுவும் இவர்தம் உள்நிறைந்த இடையறா இறை பக்தியின் வெளிப்பாடே ஆகும் என்பதில் ஐயமுண்டோ?

அன்பே சிவமாவதை உணர்ந்த அப்பரடிகள் அன்பே உருவான அன்பராய் பவனி வருகிறார். அப்பரடிகளோ, தாம் பிறந்ததினால் ஆய பலன் என்கொல்? வாலறிவன் நற்றாள்களுக்கு பக்தி செலுத்தாவிடின் என்ற எண்ணத்தில் ஊறித் திளைத்து வாழ்ந்து காட்டிய பெருமகனார். நிறைமொழி மாந்தராகிய அப்பரடிகளது பெருமையினை அவர் யாத்தருளிய மறைமொழி காட்டி நிற்கும். இவர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகிய செம்மல் உள்ளத்தால் பொய்யாது ஒழுகிய தவசீலர். தோன்றில் புகழொடு தோன்றிய செம்மல். பக்தி உடையார் முக்தி அடைவார் என்பதனை உலகோருக்கு உணர்த்திய உத்தமர். நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் பெற்றவர். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க பக்தியில் திளைத்தவர். **"சொற்குறுதி அப்பர் எனச் சொல்"** என்று முதியோரால் பாராட்டப்பட்ட தாண்டக வேந்தர். இவர் தம் பக்தியின் மகிமை, தொண்டின் சிறப்பு இந்த உலகம் உள்ளளவும், அதில் உள்ள உயிரினங்கள் அனைத்திற்கும் இடையறாது கிடைத்துக் கொண்டே இருக்கும் என்பது உறுதி, உறுதி. இந்நினைவு அகற்றாமல் நாமும் அவரது தொண்டின் சிறப்பை, பக்தியின் மாண்பை நினைவு கூர்ந்து ஒழுகி உய்தி பெறுவோம்.

51. நாவுக்கரசரும் அடியார்களும்

மு. செல்வராசு, தூத்துக்குடி.

திருநாவுக்கரசர் சிவபெருமானின் திருவடிகளிலே பதித்த நெஞ்சமுடையவர். இவருடைய அருள் பழுத்த திருக்கோலத்தைச் சேக்கிழார்,

"தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்புநீர் பொழிகண்ணும் பதிகச் செஞ்சொல்
மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே" (1410)

என்று திருத்தொண்டர் புராணத்தில் கூறியுள்ளார். திருநாவுக்கரசர் அருள் நிறைந்த சிந்தையுடன் பாடிய பாடல்கள் நான்கு ஐந்து ஆறு சைவத் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

திருநாவுக்கரசர் இறைவனின் அருள்திறத்தைப் பாடியதோடு அடியார்களின் சிறப்பினையும் பாடியுள்ளார். சிவனடியார்களின் சிறப்பைத் திருநாவுக்கரசர் எவ்வாறு குறித்துள்ளார் என்பதை இக்கட்டுரை ஆராய்கின்றது.

அடியார்கள்

அடியார்கள் சிவனுக்கு ஆளாகி அருட்தொண்டு செய்து சிவனடிப்பேறு பெற்றவர்கள். இவர்கள் இறைவனின் திருவருளைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டவர்கள். இவர்கள் நாள்தோறும் தம்முடைய அழகிய திருக்கைகளில் மலர்களை ஏந்தி இனிய தமிழ் கீதம் பாடி இறைவனை வழிபட்டார்கள். இதை,

"அருளுறும் அடியரெல்லாம் அங்கையின் மலர்கள் ஏந்த
மருளுறு கீதம் கேட்டார் வலம்புரத் தடிக ளாரே"

என வரும் திருநாவுக்கரசர் பதிகத்தால் அறியலாம்.

திருநாவுக்கரசர் தேவாரத்தில் ஒன்பது சிவனடியார்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

1. அமர்நீதிநாயனார், 2. கண்ணப்பநாயனார், 3. சண்டேசநாயனார், 4. அப்பூதியடிகள், 5. நமிநந்தியடிகள், 6. திருஞானசம்பந்தர், 7. சாக்கியநாயனார், 8. கணம்புல்லநாயனார், 9. கோச்செங்கட்சோழர்

1. அமர்நீதி நாயனார்

அமர்நீதி நாயனார் சோழநாட்டில் திருப்பழையாறை நகரில் தோன்றியவர். இவர் சிவனடியார்களுக்கு கந்தை, கீள்உடை, கோவணம் முதலியன கொடுத்து வழிபடும் இயல்பு உடையவர். இவர் திருநல்லூரில் திருமடம் அமைத்துத் திருவிழா நாள் முழுவதும் மகேசுவர பூசை நடத்தியவர். சிவபெருமான் அடியவர் திருக்கோலம் கொண்டு அங்கு வந்தார். அவரை அமர்நீதியார் வரவேற்று வணங்கினார். அவரிடம் அமுது செய்தருள வேண்டும் என்று வேண்டினார். அடியாரும் அதை ஏற்றுக்கொண்டு நீராடிவிட்டு வருவதாகவும் அதுவரை, தமது கோவணத்தைப் பத்திரமாக வைத்திருக்கும்படி அமர்நீதியாரிடம் கொடுத்து விட்டுச் சென்றார்.

நீராடிவிட்டுத் திரும்ப வந்த அடியார், அமர்நீதியாரிடம், தமது கோவணத்தைத் திரும்பத் தருமாறு கேட்டார். அதைத் தேடிப் பார்த்த அமர்நீதியார் காணவில்லை என்றார். அதைக் கேட்ட அடியவர் முதலில் சினந்தார். பின்பு சினம் தணிந்து கோவண எடைக்கு ஏற்பப் பொருள் தந்து விடுவதாக அமர்நீதியார் கூறியதை ஏற்றார். தம்மிடம் உள்ள பொருள் முழுவதையும் கோவணத்திற்கு ஈடாக அமர்நீதியார் வைத்தார். தராசு நேர் நிற்கவில்லை. பின்னர் தாமும் தம் குடும்பத்தாரும் தராசில் ஏறி நின்றனர். அதன் பின்னர் இறையருளால் தராசு நேர் நின்றது. இறைவன் அமர்நீதியார்க்கு அருள் புரிந்தார். இவ்வரலாற்றைத் திருநாவுக்கரசர் திருநல்லூர்த் திருப்பதிகத்தில்,

> **"நாட்கொண்ட தாமரைப் பூந்தடஞ் சூழ்ந்தநல் லூரகத்தே**
> **கீட்கொண்ட கோவணங் காவென்று சொல்லிக் கிறிபடத்தான்**
> **வாட்கொண்ட நோக்கி மனைவியொடும் அங்கொர் வாணிகனை**
> **ஆட்கொண்ட வார்த்தை உரைக்குமன் றோஇவ் வகலிடமே"**

என்று பாடியுள்ளார். நாவுக்கரசர் திருநல்லூரில் நடந்த நிகழ்ச்சியை அவ்வூர்ப் பதிகத்தில் குறித்திருப்பது அடியவரின் சிறப்பை மேலும் உயர்த்துகின்றது. நல்லூர் அமர்நீதியாரின் புகழை உரைத்துக் கொண்டே யிருக்கும் என்பதும் இதனால் அறியலாம். அடியவராக வந்த இறைவனிடம் பலபடப் பேசி இறையருள் பெற்றவர் அமர்நீதியார் என்ற செய்தியையும் இங்கு அறிய முடிகிறது.

2. கண்ணப்ப நாயனார்

கண்ணப்பர் பொத்தப்பி நாட்டில் உள்ள உடுப்பூரில் வேடுவர் குலத்தில் உதித்தவர். கன்னி வேட்டைக்குச் சென்றபோது திருக்காளத்தியப்பரைக் காணும் பேறு இவருக்குக் கிட்டியது. அன்று முதல் இறைவனிடம் ஒன்றினார் தம் நிலை மறந்தார். அங்கேயே தங்கிவிட்டார். இவரின் பூசை முறை சிவகோசரியாரின் பூசைக்கு மாறுபட்டது. இறைவன்

இவரது அன்பை வெளிக்காட்ட தம் கண்ணிலிருந்து குருதி கொட்டச் செய்தார். இதைக் கண்ட கண்ணப்பர் மனம் பதறினார். தம் கண்ணை எடுத்து இறைவன் திருக்கண்ணில் அப்பினார். இறையருள் பெற்றார்.

திருநாவுக்கரசர் கண்ணப்பரின் பூசை முறையை,

''குவப்பெருந் தடக்கை வேடன் கொடுஞ்சிலை இறைச்சிப் பாரம்
துவர்ப்பெருஞ் செருப்பால் நீக்கித் தூயவாய்க் கலசம்ஆட்ட
உவப்பெருங் குருதி சோர ஒருகணை யிடந்தங் கப்பத்
தவப்பெருந் தேவு செய்தார் சாய்க்காடு மேவி னாரே''

என வரும் பாடலில் குறித்துள்ளார். கண்ணப்பர் இறைவனுக்குக் கண்ணிடந்தப்பிய செயலை இறைவன் மகிழ்ந்தார் என்பதை நாவுக்கரசர்,

''கண்ணப்பன் கண்ணப்பப் கண்டுகந்தார்''

என வரும் பாடலில் குறித்துள்ளார்.

கண்ணப்பன் செயலை மகிழ்ந்த இறைவன் அவருக்குச் சிவத்தன்மை கொடுத்தருளினார். இதை நாவுக்கரசர்,

''கண்ணப்ப விண்ணப்புக் கொடுத்தான் கண்டாய்''

என வரும் பாடலில் குறித்துள்ளார். திருமழபாடித் திருப்பதிகத்திலும் நாவுக்கரசர் கண்ணப்பர்க்கு இறைவன் அருள்செய்ததைக் ''கண்ணப்பர்க்கருள் செய்த காளை கண்டாய்'' என்று போற்றியுள்ளார்.

கண்ணப்பரின் பூசைமுறை, கண்ணிடந்து அப்பிய செயல், அதனால் இறைவன் மகிழ்ந்த செயல், இறைவன் கண்ணப்பருக்கு அருள்கொடுத்த செயல் ஆகியன நாவுக்கரசர் பதிகத்தில் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

3. சண்டேச நாயனார்

சண்டேச நாயனார் திருச்சேய்ஞ்ஞலூரிலே தோன்றியவர், சகல சாத்திரங்களிலும் சிவாகமங்களிலும் வல்லவர். திருவாத்தி நிழலில் மணலினால் சிவலிங்கம் உருவாக்கி அபிசேகம் செய்து வழிபட்டு வந்தார். இவரது பூசை முறையைத் திருநாவுக்கரசர்,

''ஆமலி பாலும் நெய்யும் ஆட்டி அர்ச்சனைகள் செய்து
பூமலி கொன்றை''

சூடி வணங்கினார் எனப் பதிகத்தில் தெரிவித்துள்ளார்.

சண்டீசர் ஆமலி பாலும் நெய்யும் ஆட்டி அர்ச்சனைகள் செய்தவர் கொன்றை மாலை இறைவனுக்குச் சூட்டி மகிழ்ந்தவர். இதை அப்பர் உயர்வாகக் கூறியுள்ளார். இதற்காகச் சண்டீசர்க்கு நல்ல சண்டீசப் பதம் நல்கியருளினார் இறைவன் என்பதை அறியலாம்.

4. அப்பூதியடிகள்

சோழநாட்டில் திங்களூரில் தோன்றியவர். திருநாவுக்கரசர்பால் மிகுந்த அன்புடையவர். திருநாவுக்கரசு என்ற திருமந்திரப் பெயரைத் தமது மக்களுக்கும், ஏனைய பொருள்களுக்கும், தாம் செய்யும் அறச் செயல்களுக்கும் இட்டு வழங்கியவர். திருநாவுக்கரசர் இவரது அறச்செயலைக் கண்டு வியப்புற்றார். திருநாவுக்கரசர் திங்களூர் வந்தபோது அப்பூதியடிகள் அவரைக் கண்டு மகிழ்ந்து வணங்கினார். அவரைத் தம் இல்லில் அமுது செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அவரும் அதை ஏற்றுக்கொண்டு இறைவனை வழிபட்டு வரச் சென்றார்.

இல்லில் அமுது தயாரிக்கும் வேளையில் அப்பூதியாரின் மூத்த மகன் வாழையிலை பறிக்கத் தோட்டத்திற்குச் சென்றான். அப்போது அரவம் அவனைத் தீண்ட வாழையிலையுடன் வீட்டில் வந்து தாயிடம் கொடுத்து உயிர் நீங்கினான். அப்பூதியாரும் அவர்தம் மனைவியாரும் அவ்வுடலை மறைத்து வைத்துவிட்டு அமுது செய்யும் பணியை முடித்தனர்.

திருநாவுக்கரசர் அப்பூதியாரின் இல்லத்திற்கு வந்தவுடன் அனைவருக்கும் திருநீறு நல்கினார். மூத்த மகனை அழைக்குமாறு கூறினார். அவன் இப்போது உதவான் என்றனர் அப்பூதியாரும் அவர்தம் மனைவியாரும். இது கேட்ட திருநாவுக்கரசர் நடந்ததைக் கூறுமாறு கேட்டார். அதன்பின் மகனை அரவம் தீண்டிவிட்டது என இருவரும் கூறினர். அதைக் கேட்டு அவ்வுடலைச் சிவாலயத்தின் முன்னர் வைத்து திருநாவுக்கரசர் திருப்பதிகம் பாடினார். அவனும் உயிர் பெற்று எழுந்தான்.

திருநாவுக்கரசர் அப்பூதியடிகளை, ''அஞ்சிப் போய்க் கலி மெலிய அழலோம்பும் அப்பூதி குஞ்சிப் பூவாய் நின்ற சேவடியாய்'' எனத் திருப்பழனத் திருப்பதிகத்தில் குறித்துள்ளார். அடியாரின் திருப்புதல்வன் உயிர் பெறுவதற்காக ''ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை'' என்ற திருப்பதிகம் இறைவன் மேல் பாடினார். இது அப்பூதியடிகளின் தொண்டின் சிறப்பை உணர்த்துகின்றது.

5. நமிநந்தியடிகள்

சோழ நாட்டில் திருஏமப்பேரூரில் நமிநந்தியடிகள் அவதரித்தார். பலநாளும் திருவாரூருக்கு வந்து இறைவனை வணங்கி வந்தார். அங்குள்ள அரநெறி என்னும் கோயிலில் திருவிளக்கிட எண்ணி ஒரு வீட்டில் நெய் கேட்டார். அவர்கள் நெய் தர மறுத்தனர். நீரால் விளக்கிடும் என்றனர். இதைக் கேட்ட அடிகள் மிகவும் வருந்தினார். திருக்கோவிலுக்குச் சென்று இறைவனை வணங்கும்போது திருக்குளத்து நீரால் விளக்கேற்று என்ற வாக்கு கேட்டது. உடனே அருகிலிருந்த குளத்து நீரை எடுத்து

வந்து இறைவனை வழிபட்டு விளக்கு ஏற்றினார். தீபங்கள் ஒளிவிட்டு எரிந்தன. இந்நிகழ்ச்சியைக் கண்டு அனைவரும் வியந்தனர். திருநாவுக்கரசர்,

"ஆரூர் நறுமலர் நாதன் அடித்தொண்டன் நம்பிநந்தி நீரால்
திருவிளக் கிட்டமை நீணா டறியுமன்றே"

என்று வியந்து போற்றியுள்ளார்.

நமிநந்தியடிகள் ஆரூர் நாதனுக்கு அடித்தொண்டராக விளங்கியவர். இறையருளால் நீரால் விளக்கு ஏற்றியவர் என்றும் அப்பர் குறித்துள்ளார்.

6. திருஞானசம்பந்தர்

இளம் வயதில் இறையருள் பெற்று எண்ணற்ற இறையருள் பாக்களைப் பாடியவர் திருஞானசம்பந்தர். திருநாவுக்கரசரும் சம்பந்தரும் இணைந்து சைவத்தொண்டு புரிந்தவர்கள். ஒருமுறை திருவீழிமிழலையில் பஞ்சம் ஏற்பட்டுவிட அப்பரும் சம்பந்தரும் இறைவனிடம் படிக்காசு பெற்று அடியவர்களுக்கு உணவிட்டனர். இதனைத் திருநாவுக்கரசர்,

"பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு
வாடி வாட்டந் தவிர்ப்பார் அவரைப் போல்"

என வரும் திருவாய்மூர்த் திருப்பதிகத்தில் குறித்துள்ளார். இறைவன் திருஞானசம்பந்தர்க்குத் திருவீழிமிழலையில் காசு வழங்கிய நிகழ்ச்சியைப் இப்பாடல் குறிக்கின்றது.

திருமறைக்காட்டில் அப்பர் "பண்ணின் நேர் மொழியாள் உமையொரு பங்கரோ" எனப் பாடி மூடியிருந்த திருக்கோவில் கதவைத் திறக்கச் செய்தார். திருஞானசம்பந்தர் "சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்" எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடித் திருக்கோவில் கதவு திருக்காப்புச் செய்யப் பாடினார். திருநாவுக்கரசர் இதை,

"திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தார் உந்நின்றார்"

என வரும் திருவாய்மூர்த் திருப்பதிகத்தில் குறித்துள்ளார். நாவுக்கரசர் தம் பாடலினும் சம்பந்தர் பாடல் செந்தமிழ் வளம் மிக்கது என்று குறித்துள்ளார். அவர் பாடலை இறைவன் மதித்துப் போற்றியதை அப்பரும் போற்றியுள்ளார்.

7. சாக்கிய நயனார்

திருச்சாத்தமங்கை என்னும் ஊரில் தோன்றியவர். இவர் எந்நிலையில் நின்றாலும் சிவனை மறவாமையே பொருள் என்று துணிந்து நின்றார். சிவலிங்க மூர்த்தி வழிபாடே சிறந்தது என்று எண்ணி நாள்தோறும் உண்ணப் போகும் முன்னர் ஒரு கல்லை எடுத்து இலிங்கத்தின் மேல் எறிந்தார். இறைவன் இதனை ஏற்று மகிழ்ந்தார். திருநாவுக்கரசர் இவரைப்

"புத்தன் மறவா தோடி எறிகல்லைப்
புதுமலர்க ளாக்கி னான்காண்"

என்று குறித்துள்ளார்.

புத்தமதக் கோலம் கொண்ட சாக்கிய நாயனார் கொண்ட எண்ணத்தால் சல்லி புது மலர்களாகியது. இறைவனும் மகிழ்ந்து அதை ஏற்று அவர்க்கு அருள் புரிந்தான் என்ற செய்தி நாவுக்கரசர் பாடலால் அறிய முடிகின்றது.

8. கணம்புல்ல நாயனார்

இவர் இருக்குவேளூரில் அவதரித்தவர். சிவாலயத்தில் விளக்கெரிக்கும் பணியைச் செய்து வந்தார். கணம்புல்லை அரிந்து விற்று அதனால் கிடைக்கும் வருவாயைக் கொண்டு விளக்கெரித்தார். அதுவும் ஒருநாள் விலை போகாதால் அப்புல்லையே விளக்காக எரித்தார். அதுவும் போதாமையால் தமது சிகையை எரித்துப் பெருமான் அருளால் சிவனடிப்பேறு பெற்றார். திருநாவுக்கரசர் இவரின் செயலை,

"எண்ணிறைந்த குணத்தினாலே கணம்புல்லன் கருத்துகந்தார்"

என்று குறித்துள்ளார். இறைவனுக்கு திருமுடியால் விளக்கெரிப்பது சிறந்தது ஆகாது என்றாலும் இறைவன் கணம்புல்லரின் கொண்டிருந்த விளக்கெரித்தல் என்ற அருங்குணத்தை ஏற்றார். இந்த அருங்குணத்தை இறைவன் உகந்தார் எனத் திருநாவுக்கரசர் குறிக்கின்றார்.

9. கோச்செங்கட்சோழர்

கோச்செங்கட்சோழர் முற்பிறப்பில் சிலந்தியாய்ப் பிறந்தவர். திருவானைக்காவில் வெண்ணாவல் மரத்து நிழலில் உள்ள சிவலிங்கத்தின் மீது சருகுகள் விழாமல் சிலந்தி தனது வாய்நூலால் பந்தர் அமைத்து வழிபட்டது. இச்செய்தியைத் திருநாவுக்கரசர்,

"சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற் பந்தர்செய்து
உலந்தவன் இறந்த போதே கோச்செங்க ணானுமாகக்
கலந்தநீர்க் காவி ரிசூழ்ச் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனில் பிறப்பதித் திட்டார் குறுக்கைவீ ரட்டனாரே"

என வரும் பாடலில் குறித்துள்ளார்.

சிலந்தியின் வழிபாடு மிக உயர்ந்தது. எனவே இறைவன் சிலந்தியை அரசனாக மாற அருள்புரிந்தார் என்ற செய்தி குறிக்கப்பட்டுள்ளது. இதைத் திருநனிபள்ளி திருப்பதிகத்திலும் திருநாவுக்கரசர் குறித்துள்ளார். "சிலந்தியை அரையனாக்கிச் சீர்மைகள் அருள வல்லார்" என்பதால் இதை அறியலாம். திருமறைக்காட்டில் திருக்கோவிலில் மங்கிய நிலையிருந்த ஒளி விளக்கில்

உள்ள நெய்யை உண்ண வந்த எலி அதன் திரியைத் தள்ள விளக்கு சுடர்விட்டு எரிந்தது. இச்செயலால் எலி மறுபிறவியில் மாவலிச் சக்கரவர்த்தி ஆனது. இது இறையருளால் நடைபெற்றது. இதைக் கோச்செங்கட் சோழர் வரலாற்றோடு ஒப்பிடலாம்.

திருநாவுக்கரசர் சிவனடியார்களின் வரலாற்றைக் குறிப்பதில் தனியிடம் பெறுகின்றார். அமர்நீதியார் அருள்பெற்ற திருநல்லூர் பற்றி அவ்வூர்த் திருப்பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். அமர்நீதியார் இறைவனிடம் பலபடப் பேசிய இறைய்னுபவம் மிக்கவர். கண்ணப்பர் கண்ணப்பிய செயலை இறைவன் மிக மகிழ்ந்து ஏற்றான் என அடியவரின் அன்பை மிக உயர்வாகத் திருநாவுக்கரசர் பாராட்டியுள்ளார்.

சண்டேச நாயனாரின் வழிபாடு உயர்ந்தது. எனவே சண்டேசப் பதம் இறைவனால் வழங்கப்பட்டது. அடியவர்களின் செயல் உயர்ந்தது. எனவே அப்பூதியாரின் மகன் அரவத்தால் மாண்டுவிட அவ்விடத்தை நீக்கத் திருநாவுக்கரசர் பதிகம் பாடி விடம் போக்கினார். அவனும் உயிர் பெற்றான்.

திருஞானசம்பந்தர் படிக்காசு பெற்றுத் தொண்டு செய்த நிகழ்ச்சியையும் அவரின் உயர்ந்த செந்தமிழ் உறைப்பையும் நாவுக்கரசர் பாராட்டுகின்றார்.

கணம்புல்லர் செயலைக் கருதாது அவரின் உண்மை நோக்கத்தை இறைவன் உகந்தான். அவர்க்கு அருளினான் எனத் திருநாவுக்கரசர் குறிக்கின்றார்.

சிலந்தியாய் இருந்தாலும் உயர்செயலால் இறையருள் பெற்று மறுபிறவியில் அரசனாக முடியும் என்பதை கோச்செங்கட் வரலாறு கொண்டு நாவுக்கரசர் விளக்குகின்றார்.

சிவனடியாரின் செயல்கள் நாவுக்கரசர் பாடலில் முதன்மையிடம் பெறுகின்றன. இறைவன் அவர்களுக்கு அருள் வழங்கிய செயல்கள் உயர்வாகக் கூறப்பட்டுள்ளன.

52. நாவுக்கரசர் சுட்டும் புராணங்கள்

சுடலி தியாகராசன், சென்னை.

புராணங்கள் இலக்கிய விளக்க உத்தியாகப் பயன்படும் நிலை; திருநாவுக்கரசர் தம் பதிகங்களில் புராணங்களைக் கையாளும் தன்மை; அவற்றால் பெறப்படும் செய்திகள் ஆகியவற்றை அறியும் நிலையில் இக்கட்டுரை அமைகிறது.

இறையாற்றலையும், அறிவுக் கெட்டாத நுட்பங்களையும், அறக் கருத்துக்களையும் விளக்க, சமுதாயத்தினருக்கு ஏற்ற வகையில் குறியீடு களைக் கொண்டு விளக்கும் கதைகளாகப் புராணங்களைத் தோற்றுவித்தனர்.

இலக்கிய விளக்க உத்தியாக, புராணங்களைக் கையாண்டு, கருத்தை விளக்கும் முறை, சங்க காலமுதல் இன்றுவரை உள்ளது. ஆனால், சமயச் சான்றோர்கள் தங்கள் உள்ளத்தில் பொங்கி எழும் 'அளவிலா இறை ஈடுபாட்டால், இறைவனின் அருள்திறத்தை வியந்து வியந்து, உருகி உருகிப் பாடும் பாடல்களில், இயல்பாகவே உள்ளத்திலிருந்து சூழ்நிலைக்கு ஏற்றவகையில் புராணங்கள் பொங்கி எழுந்துவந்து அணி சேர்க்கின்றன.

இப்புராணங்களில், பெரும்பாலும் தெய்வத்தின் அருட்செயல்கள் கூறப்பட்டாலும், அவற்றின் அடிப்படையில் நீதிக் கருத்துக்களும், தனிமனிதப் பண்புகளும் அறிவுறுத்தப் படுகின்றன. மனிதன், இறைநிலைக்கு உயர வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. மனிதப் பிறவி எடுத்ததன் பயனைப் பெறுவதற்குரிய பல படிநிலைகளில் இறையனுபவம் பெற்று வாழும் பக்தி நெறியைப் பரப்புவதாக இப்புராணங்கள் உள.

இப்புராணங்கள், உள்ளத்தைப் பண்படுத்துவதற்கும், உயிர்கள் உறுதி அடைவதற்கும் துணை செய்கின்றன. இறைவன், உயிர்களின் மேல் வைத்துள்ள கருணைத் திறத்தைக் கூறுவதன் மூலம், படிப்பவர்களுக்கு, இறைவனின் அருள்பெறும் வேட்கையைத் தூண்டுகின்றன.

நாவுக்கரசர் தேவாரத்தில், தசபுராணம், இலிங்க புராணத் திருக்குறுந்தொகை, ஆதிபுராணத் திருக்குறுந்தொகை போன்ற பதிகங்கள், புராணம் என்ற பெயரிலேயே உள.

மேலும், அந்தகனை அழித்தது (287-8; 309-5; 176-9; 16-5; 296-9) காமனை எரித்தது (53-7; 18-5; 98-7) காலனை உதைத்தது, காய்ந்தது, உயிரை வெளவியது, காலன்பட்ட பாடுகள், சலந்தரனைத் தடிந்தது, (299-6; 289-10; 282-5; 265-7; 309-4; 266-2; 303-9; 286-5; 267-1; 284-1; 247-7; 304-2) தக்கன் வேள்வியைத் தகர்த்தது, தக்கன் வேள்வியில் தண்டனை அடைந்த அக்கினியின் நிலை (4 பாடல்கள்) இந்திரன் நிலை (6 பாடல்கள்) எச்சனின் நிலை (9 இடங்கள்) கருடன் நிலை (2 இடங்கள்) சந்திரன் நிலை (10 இடங்கள்) கண் இழந்த சூரியனின் நிலை (5 இடங்கள்) பல் இழந்த சூரியனின் நிலை (13 இடங்கள்) திருமாலின் நிலை (3 இடங்கள்) பிரம்மனின் நிலை (5 இடங்கள்) வியாத்திரனாரின் நிலை (2 இடங்கள்) தக்கன் செய்த தவறுகள் (11 இடங்கள்) வேள்வியைச் சிதைத்தபின் அருள்பாலித்தது (7 இடங்கள்) திரிபுரத்தை எரித்தது (7 முழுப்பாடல்கள்) விடை மேல் இருந்து திரிபுரத்தை எரித்தது, விண்ணில் எரித்தது, எரித்த வேகம், தீயின்தன்மை எரித்தபின் நடம் ஆடியது, பிரமன் சிரத்தை அறுத்தது, யானையைச் சீரி உரித்தது, தேவிபாகமாக யானையை உரித்தது (121-7) உமையஞ்ச யானையை உரித்து உரியைப் போர்த்தியது (256-7); 32-1; 73-6) போன்ற அட்ட வீரச்செயல்களை விளக்கும் புராணங்களைத் தம் பதிகங்களில் சுட்டுகிறார் திருநாவுக்கரசர்.

மேலும், சிவன் அணிவன, சூடுவன பற்றி ஆங்காங்கே சுட்டும் நாவுக்கரசர், ஆமை ஓடு, எலும்புமாலை, தலைமாலை, வெண்டலை, கங்கணம், ஓடு, கொக்கிறகு, கங்கை, திங்கள், பன்றியின் கொம்பு, பாம்பு, பிரமனின் அங்கம் போன்ற புராணங்களோடு தொடர்புடையவைகளையும் குறிப்பிடுகிறார்.

மேலும், புலித்தோலாடை அணிந்து தேவியை நடுங்க வைத்தது (84-9) இருவர்க்கரியராய் அழலுருவாய் நீண்டது (206 இடங்கள்) இருவரால் ஏன் காண முடியவில்லை என்பது (19 இடங்கள் - 208 ஆவது பதிகம்) அமுதம் பெறக் கடைந்த விதம், நஞ்சு பிறந்த விதம், தேவர்கள் அஞ்சியது, நஞ்சுண்டது, கண்டங்கருத்தது, நஞ்சுண்ட வேளை (29-9; 14-1) நஞ்சுண்ட வேகம் (296-8) கருடனை அட்டது, சிலந்திக் கருளியது, தாருகனை அட்டது, தாருகாவனத்து இருடிகளை வழிப்படுத்தியது, பாலகனார்க்குப் பாற்கடல் ஈந்தது, மச்சாவதாரத்தில் மீனை அட்டது, முயலகனை அடக்கியது, பிரமன் தலையில் பலி பெற்றது, இராவணனின் வலி அடக்கி அருள்செய்தது, மார்க்கண்டேயருக்கு அருள்புரிந்தது, தழுவக் குழைந்தது, மால் பூசித்துச் சக்கரம் பெற்றது ஆகியவற்றையும் குறிப்பிடுகிறார் திருநாவுக்கரசர்.

இப்புராணங்கள், இறைவனின் தாய்மைப் பண்போடு கூடிய அருளுந்தன்மையை வெளிப்படுத்துவனவாகவே உள்ளன. ஆன்மாக்களை

ஆனந்தக் கடலில் திளைக்கச் செய்வதன் அடையாளமாகக் கங்கையை அணிந்தும், தருமத்தின் வடிவாகிய காளை மீது வந்து அடியவர்களுக்கு அருள்புரிந்தும், வினைகெடுத்து உயர்வு அளிக்கும் குறிப்புடன் நிலவினை அணிந்தும், உலகைக் காக்க, அருளல் என்னும் கருணையில் நஞ்சுண்டும், இறக்காத நித்தியத்துவம் பெற்றும், ஆன்மாக்களின் அழுக்கைப் போக்கித் தூய்மைப் படுத்தி வீடுபேறடையச் செய்யும் வகையில் ஐந்தொழிலைக் குறிக்கும் எழுவகைத் தாண்டவங்களை ஆடியும், சிவமும் சக்தியும் ஒன்று என்பதைக் காட்ட உமையொரு பாகனாக இருந்தும், உலகிற்குக் காரணர் என்பதைக் காட்டப் பாம்பை அணிந்தும், ஓங்கார வடிவினன் என்பதைக் காட்டக் கொன்றை அணிந்தும், யானையைப் போன்ற பலமான மனிதனின் உட்பகையைச் சிவனடியார் ஆழ்ந்த பக்தி ஒழுக்கத்தால் போக்கலாம் என்பதைக் காட்டக் கரியுரிபோர்த்தும், வேதத்தின் உட்பொருள் என்பதைக் காட்ட மான்மறி ஏந்தியும், அடியவர்க்கு வேண்டியவாறு அருளும் தன்மையை விளக்க குழை அணிந்தும், பாசங்களை நீக்கும் வகையில் அனல் தாங்கியும், ஆன்மாக்களின் பழவினைகளையும், பிறவித் துன்பங்களையும் அழித்து வீடுபேறு அழிப்பவர் என்பதை உணர்த்தும் வகையில் சிலம்பும் வீரக்கழலும் அணிந்தும், கருணை, எளிமையைக் காட்ட எலும்பை அணிந்தும், செருக்குற்ற ஆன்மாக்களால் ஊனக்கண்ணால் காண அரியவன் என்பதைக் காட்ட பிரம்மனுக்கும் மாலுக்கும் காட்சிக்கு அரியவனாக இருந்தும், தானே தலைவன் என்ற செருக்குடையவரைப் பல்பிறவிக்கேற்ற பாசத்தில் அழுத்துவதைக் குறிக்கத் தக்க வேள்வியை அழித்து அருள் செய்தும், பல எளிவந்த செயல்களைச் செய்தவன் சிவன் என்ற புராணக் கதைகளால், சிவன், உயிர்களுக்குத் தாயாகக் கருணை காட்டுபவன் என்பதை உணர முடிகின்றது.

நுண்பொருளைப் பருப்பொருள் வடிவில் விளக்குதல், கடினமான கருத்துக்களைக் கதைகளாகக் கூறுதல், வாழ்க்கைத் தத்துவங்களை எளிய முறையில் விளக்கல் போன்ற பணிகளைச் செய்யும் புராணங்களைத் திருநாவுக்கரசர் தம் பதிகங்களில் விரிவாகவும், குறிப்பாகவும் அதிக இடங்களில் சுட்டிச் செல்கின்றார்.

சீவன் முத்தி நிலையை அடைந்த நிலையில் நாவுக்கரசர், பலமுறை காட்சியும், அருளும் பெற்றாலும் உடனே முத்தி கிட்டாமல், நிலவுலகில் இருந்து பல ஆன்மாக்களுக்குப் பக்குவம் ஏற்படுமாறு குருவாக இருந்து அருளியதோடு, அறம் பெருகத் தொண்டு செய்யவேண்டும் என்பதையும் புராணக் குறியீடுகளின் வழி உய்த்துணர வைக்கின்றார்.

செயலுக்கும், சூழலுக்கும், உணர்வுக்கும் ஏற்ற புராணங்களைத் தம்பதிகங்களில் இயல்பாகவே உணர்ந்து அமைத்துப் பாடி, ஆன்மாக்களைப் பிறவியின் பயனை அடைய வழிப்படுத்துகின்றார் திருநாவுக்கரசர்.

53. நாவுக்கரசர் தரும் சிவ வடிவங்கள்

பா. சுந்தர், திருச்சி.

சிவபரம்பொருளின் தத்துவங் கடந்த நிலை, உண்மை இயல்பு என்றும் தத்துவங்கட்குட்பட்ட நிலை பொது இயல்பு என்றும் சைவ சித்தாந்தம் கூறுகின்றது. சிவனின் 'அருவநிலை' உண்மையியல்பின்பாற் பட்டது; அருவுருவம், உருவம் ஆகிய நிலைகள் பொது இயல்பின்பாற்பட்டன.

திருநாவுக்கரசர் இறைவனின் இவ்விரு நிலைகள் குறித்தும் பாடியுள்ளார். ''மைப்படிந்த கண்ணாளும் தானும்'' எனத் தொடங்கும் திருவினாத் திருத்தாண்டகப் பாடல் சிவத்தின் உண்மையியல்பைச் சுட்டக் காணலாம்; மேலும் தனித்திருக்குறுந்தொகைப் பாடலடிகளால்,

''குறிக ளும்அடை யாளமும் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்''

என இறைவனின் பொது இயல்பைச் சுட்டுகின்றார். இத்தொடரின்கண் “குறிகள்” என்னும் சொல்லால் இறைவனின் திருவுருவங்களைக் குறித்துள்ளார். இவ்வாறு திருநாவுக்கரசரால் திருமுறைக்கண் குறிக்கப்பெற்றுள்ள இறை வடிவங்களுள் சிலவற்றைச் சுருங்கிய அளவில் சுட்டிச் செல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. ஆடல்வல்லான்

சதாசிவ வடிவத்தின் ஈசானத் திருமுகத்தின்கண் தோன்றியதே ஆடல்வல்லான் மூர்த்தம் ஆகும். இவ்வடிவம் நாவுக்கரசரின் உள்ளம் கவர்ந்த ஒன்றாகும். தில்லையில் ஆனந்த நடனம் இயற்றும் ஐயனை அப்பர் எட்டுப் பதிகங்களால் பாடியுள்ளார். 'என்று வந்தாய்' எனத் தம்மை வினவுமுகத்தான் பெருமானின் திருக்கூத்து அமைந்துள்ளதாகப் பாடியுள்ளார். ''பாளை உடைக் கமுகு'' எனத் தொடங்கும் தில்லைப் பதிகத்தில் ஆடல்வல்லானின் ஆடலை முதற்பாடலில் பாடியுள்ளார். தொடர்ந்து தூக்கிய திருவடி தொடங்கி, திருமுகம் வரைப் பாடியுள்ளார். பதிகத்தின் இறுதியில் ஊன்றிய திருவடியைப் பாடும் திறம் போற்றி வணங்கத் தக்கதாகும். “இத்திருப்பதிகத்தின்கண் முதல் திருப்பாட்டுச் சிவபெருமானின் இருக்கையாகவும் ஏனைய ஒன்பது திருப்பாட்டுகளும் அவன்றன் திருவுறுப்புக் காட்சியாகவும் அமைத்துள்ளார்'' என ப. இராமநாதப்

பிள்ளை இப்பதிகத்தின் சிறப்பை விளக்கியுள்ளார். "குனித்த புருவமும்" எனத் தொடங்கும் பாடலை நடராசப் பெருமானின் தியான சுலோக மாகத் திருநாவுக்கரசர் அமைத்துள்ளார்.

2. சோமாஸ்கந்தர்

திருமாலுக்கு மகப்பேறு அருளுதற் பொருட்டுப் பெருமான், இடது பாகம் உமையவள் இடையில் கந்தன் ஆகிய மூவருமாக ஒரே ஆசனத்தின்கண் வெளிப்பட்ட சச்சிதானந்த மூர்த்தமே சோமாஸ்கந்த மூர்த்தமாகும். இத்திருமேனியைத் திருமால் தம்மார்பில் தாங்கி யோக நித்திரை செய்துள்ளார். இம்மூர்த்தி திருவாரூரில் எழுந்தருளியுள்ளார். அப்பர், இத்திருவடிவம் குறித்துப்

"பையஞ் சுடர்விடு நாகப் பள்ளிகொள்வான் உள்ளத்தானும்...."

எனப் பாடியுள்ளார். இதுவும் சதாசிவ வடிவத்தின் உச்சித் திருமுகத்தில் தோன்றியது ஆகும்.

3. விடையேறிய செல்வர்

அறக்கடவுளே சிவனை விடையாகத் தாங்கி நிற்கின்றது என்பது சைவ மரபு. திரிபுரம் எரிக்க முற்பட்ட காலத்துத் தேரின் அச்சு முறியவே திருமால் இடபமாக மாறிப் பெருமானைத் தாங்கினார். திருநாவுக்கரசர் பெருமாட்டியோடு சிவன் காளையை வாகனமாகக் கொண்டுள்ளமையைப் பலவிடங்களில் குறித்துள்ளார்.

"மட்டு வார்குழ லாளோடு மால்விடை
இட்ட மாஉகந் தேறும் இறைவனார்...."

என்பது அப்பரின் திருச்சிராப்பள்ளி திருமுறை ஆகும்.

4. பிறைசூடிய பெருமான்

தக்கனது சாபத்திற்கு ஆளான சந்திரனுக்கு அருளும் பொருட்டுச் சிவன் கொண்ட வடிவம் சந்திரனைத் தம் தலையில் சூடி மீண்டும் வளரும்படி செய்த மூர்த்தம் திருநாவுக்கரசர், திருப்புறம்பியம் திருத்தாண்டகத்துள் ஒரு பாடலில் இவ்வடிவச் சிறப்பைக் குறித்துள்ளார். அது வருமாறு..

**"திரையேறு சென்னிமேல் திங்கள் தன்னைத்
திசை விளங்க வைத்துகந்த செந்தீ வண்ணர்...."**

5. பிச்சைத் தேவர்

சிவன், கன்மப் பிரமவாதிகளான தாருகாவனத்து முனிவர்களின் செருக்கை அடக்கும் வகையில் கொண்ட வடிவம் 'பிச்சைத் தேவர்' மூர்த்தமாகும். அப்பர் இம்மூர்த்தத்தில் பெரிதும் ஈடுபட்டிருந்தார். தமது

தேவாரத்தில் அகப்பாடல்களில் இவ்வடிவம் பாட்டுடைத் தலைவனாக அவரால் பாடப்பட்டுள்ளது.

"இறைவனுடைய பல்வேறு வடிவங்களில் இப்பிச்சாடன வடிவம் ஒன்றே காதல் கொள்வதற்கு உகந்ததாக இருக்கிறது. அதனாலேயே நாவரசர் தம் அகப்பாடல்களுக்கு இவ்வடிவத்தை எடுத்துள்ளார் என்று அறிய முடிகின்றது" என டாக்டர் ம.சா. அறிவுடைய நம்பி அப்பர், இவ்வடிவத்தைப் பயன்படுத்திக் கொண்டதற்கு விளக்கம் தந்துள்ளார்.

6. தட்சிணாமூர்த்தி

சனகாதி முனிவர்களுக்கு உண்மைப்பொருளை உபதேசித்தற்குப் பெருமான் கல்லால மரத்தின் கீழ் தாங்கிய ஆசிரியத் திருக்கோலமே தட்சிணாமூர்த்தம் ஆகும். இவ்வடிவத்தையும் தமது பாடல்களில் ஆங்காங்கு அப்பர் பாடியுள்ளார். சான்றாகத் திருவீழிமிழலைத் தாண்டகப் பாடலடி தரப்பட்டுள்ளது.

"அன்றாலின் கீழிருந்த்ங்கு அறம் சொன்னானை...."

7. நீலகண்டர்

அமரர்பொருட்டு ஐயன் ஆலம் உண்ட வடிவம் விஷாபகரணர் என்னும் வடிவம் ஆகும். அப்பர் சுவாமிகள் இது குறித்தும் பலவிடங்களில் பாடியுள்ளார். "நஞ்சணி கண்டனே" என்றும், "கண்டம் கறுத்தானே" என்றும் இவ்வடிவம் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் "....சிவலோகனார், உண்டார் நஞ்சு உலகுக்கு ஓர் உறுதி வேண்டி" என்றும் பாடியுள்ளார்.

8. வேட்டுருப் பரமர்

பாண்டவருள் ஒருவனாகிய அருச்சுனனுக்குப் பாசுபத அத்திரம் அருளும் பொருட்டுச் சிவன் தாங்கிய வேட்டுருவம் கிராதமூர்த்தியாகும். மகாபாரதத்துள் விரிவாகக் கூறப்பட்டுள்ள இவ்வடிவையும் நாவரசர் குறித்துள்ளார்.

"பார்த்தனுக்கு அன்று நல்கிப் பாசுபதத்தை ஈந்தாய்...."

என்பது திருவண்ணாமலைத் திருநேரிசைப் பாடலடியாகும்.

9. கங்காளர்

மாவலிபால் மூன்றடி மண் பெற்ற பின்னர் குறளனாகிய மால் திரிவிக்கிரமனாகி அவனைப் பாதாளத்து அழுத்தினார். இத்திரிவிக்கிரமனின் செருக்கு அடக்குதற்குப் பெருமான் கொண்ட வடிவம் "கங்காளர்" மூர்த்தமாகும். அப்பர், இம்மூர்த்தம் பற்றி "கங்காளம் தோள்மேற் கொண்டார்...." எனவும் பாடியுள்ளார்.

10. சக்கரம் அருளியவர்

திருமால் ஆயிரம் தாமரை மலர்களால் பெருமானை அருச்சிக்க முற்பட்டார். குறைந்த ஒரு மலருக்கு ஈடாகத் தமது கண்மலரைக் கொண்டு அருச்சித்தார். இதனால் மகிழ்ந்த சிவன் திருமாலுக்குச் சக்கரப்படையை அருளினார். இம்மூர்த்தம் ''சக்கரதானர்'' என்னும் வடிவமாகும். அப்பர் திருக்குறுக்கை வீரட்டப்பதியில், ''ஏறுடன் ஏழடர்த்தான்....'' எனத் தொடங்கும் பதிகத்துள் இது குறித்துப் பாடியுள்ளார்.

11. ஒற்றைக்கால் பரமர்

சிவபரம்பொருள் மகாசங்கார காலத்துப் பிரமனையும் திருமாலையும் தம்முள் அடக்கிய நிலையில ஒற்றைக்காலில் நிற்பர். இது 'ஏக பாதர்' வடிவம் ஆகும். நாவுக்கரசர் திருவெண்காட்டுத் திருத்தாண்டகத்துள் "பாதம் தணிப்பார்மேல்" எனத் தொடங்கும் பாடலின்கண் இவ்வடிவைப் பாடியுள்ளார்.

12. இலிங்கோத்பவர் வடிவம்

இது, நான்முகன், திருமால் இருவரது அகந்தையைப் போக்குதற்கு அவ்விருவரும் திருமுடியும் திருவடியும் காணாமுடியாதவாறு இலிங்கத் திருமேனிக்கண் தோன்றிய வடிவம் ஆகும். அப்பர், இலிங்கபுராணக் குறுந்தொகையின் இறுதிப் பாடலில் சிவபெருமான் தாமாகவே அருளினால் இங்குற்றேன் என்று இலிங்கத்தின்கண் தோன்றியமையை அருமையாகப் பாடியுள்ளார்.

மேலும் பெருமான் பிரமன், மால் காணாவாறு அனற்பிழம்பாய்த் தோன்றிய வடிவத்தை ''அயனவனும் மாலவனும் அறியாவண்ணம் ஆரழலாய் நீண்டுகந்த அண்ணல்'' எனக் குறித்துள்ளார். இது சோதிலிங்க வடிவம் எனப் போற்றப்படுகின்றது.

13. மாதொரு பாகர்

இது படைப்பின் தத்துவத்தை உலகிற்கு உணர்த்திய மூர்த்தமாகும். பெருமான் தமது உடலின்கண் இடப்பாகத்தில் தேவியோடு ஓர் உருவில் காட்சி தரும் வடிவம் ஆகும். இது பிருங்கி முனிவர் பொருட்டுப் பிராட்டியின் வேண்டுகோளுக்கு இணங்க, சிவபெருமான் தாங்கிய வடிவம் எனச் சிவபராக்கிரமம் கூறுகின்றது. அப்பர் இத்திருவடிவத்தை ''நேர்பட நின்று அறை கூவும் பதிகம்'' எனச் சேக்கிழாரால் புகழப்பட்ட, ''சிவன் எனும் ஓசை அல்லது...'' எனத் தொடங்கும் பதிகத்தின் இறுதிப் பாடலில் அழகுறப் பாடியுள்ளார்.

14. கங்காதரர்

இறைவன் தமது திருமுடிக்கண் கங்கையைத் தரித்தவடிவம் கங்காதரர் என அழைக்கப்படுகின்றது. அப்பர் சுவாமிகள் இத்திருவடிவத்தையும்

பலவிடங்களில் பாடியுள்ளார். "பகீரதற்கா வானோர் வேண்டப் பரந்திழியும் புனல் கங்கை பனிபோலகச் செறித்தானை" எனக் குறித்துள்ளமையே சான்றாகும்.

15. வேள்வி நாயகர்

பெருமான், சிவவேள்வி செய்யுமிடத்து அவ்வேள்வியின் பயனை நல்கும் வேள்வி நாயகனாகவும் விளங்குகின்றமையை அப்பர் பல பதிகங்களில் குறித்துள்ளார். திருவீழிமிழலைத் திருப்பதிகத்தின் ஏழாவது பாடலடிகள் பின்வருமாறு.

"...அந்தியோடு உதயம் அந்தணாளர் ஆன்நெய்யால் வேட்கும்
வெந்தழல் உருவர் வீழிமிழலையுள் விகிர்தனாரே"

திருமாலின் செருக்கை அடக்கிய வடிவங்கள்

திருமால் மீன், ஆமை, பன்றி ஆகிய அவதாரங்கள் எடுத்து அமரர்கள் துயரைப் போக்கினார். பின் தாமே அவ்வடிவங்களில் இருந்தவாறே செருக்குற்றுத் திரிந்தார். சிவபரம்பொருள் அவ்வதாரங்களின் ஆணவத்தை அடக்கினார். அதற்கு அடையாளமாக அவ்வடிவங்களின் உறுப்புக்களைத் தம்மீது அணிந்துகொண்டார். சிவபரத்துவத்தை நிலைநாட்டும் இச்செயல் களைத் திருநாவுக்கரசர் பலவாறு குறித்துள்ளார்.

"சேலொடு செருச்செய்த் நெய்த்தானத் தானை" என மச்ச சங்காரத்தைப் போற்றியுள்ளார். கூர்மசங்காரம் செய்து அதன் ஓட்டை அணிந்துள்ளமையை "ஆமை பூண்ட அழகனார்" என்றும் பன்றியின் கொம்பணிந்த நிகழ்வை, "ஏனத்தின் கூர்எயிறு பூண்டார் போலும்" எனவும் பாடியுள்ளார்.

அட்டவீரட்ட வடிவங்கள்

சிவபரம்பொருள் மறக்கருணை புரிதற்பொருட்டு எட்டு வடிவங் களைத் தாங்கியுள்ளார். இவை அட்டவீரட்ட மூர்த்தங்கள் என வழங்கப் படுகின்றன. இம்மூர்த்தங்களையும் அப்பர் பாடியுள்ளார்.

பிரமன் சிரம் கொய்தவர்

அகந்தை கொண்டு ஐந்து முகங்களோடு திரிந்த பிரமனைத் தண்டித்தற்காக அவனது ஒரு தலையைக் கொய்ய பரமேசுவரன் எடுத்தது "வீரபத்திரர்" வடிவம் ஆகும். இது குறித்து "அங்கமலத்து அயன் சிரங்கள் ஐந்தில் ஒன்றை அறுத்தவன் காண்...." எனப் பாடப்பட்டுள்ளது. தக்கன் வேள்வியைச் சிதைக்கு முகத்தான் வீரபத்திரர் வேடம் எடுத்ததாகவும் கூறுவர். அப்பர் தக்கன் வேள்வி அழிவைப் பாடியுள்ளதும் இங்கு கருதத்தக்கது.

அந்தகாசுரனை அடக்கியவர்

அந்தகன் என்னும் அசுரனை அழித்தற்காகப் பெருமான் எடுத்த வடிவம். ''அந்தகனை அயிற் சூலத்து அழுத்திக் கொண்டார்'' என்பது நாவரசர் பாடலடி ஆகும்.

திரிபுரம் எரித்தவர்

இது பரமன், கமலாட்சன் முதலிய முப்புராதிகளை எரித்ததற்காக எடுத்த வடிவம் "திரிபுரம் செற்று ஒருமூவர்க்கு அருள் செய்தானை" என்று பாடப்பட்டதோடு பலவிடங்களில் இவ்வடிவம் அப்பரால் குறிக்கப்பட்டுள்ளது.

தக்கன் யாகம் அழித்தவர்

தக்கன் வேள்வியை அழித்தற்கு சிவன், மேற்கொண்ட வீரச் செயலையும் நாவுக்கரசர் குறித்துள்ளார்.

யானையை உரித்தவர்

சிவன் தாருகாவனத்து முனிவர்கள் தம்மீது ஏவிய யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டார். அப்பர், "விரித்த பல்கதிர்கொள் சூலம்'' எனத் தொடங்கும் பாடலில் பயிரவவேடம் தாங்கி இச்செயல் நிகழ்த்தப்பட்டதாகப் பாடியுள்ளார்.

சலந்தரனை அழித்தவர்

சலந்தரன் எனும் அவுணனைக் கொல்லும் பொருட்டுப் பெருமான் தாங்கிய வடிவம். இச்செயலை "சமரமிகு சலந்தரன்போர் வேண்டினானைச் சக்கரத்தாற் பிளந்த சதுரர் போலும்'' என நாவரசர் பாடியுள்ளார்.

காமனை எரித்தவர்

இது மன்மதனை நெற்றிக் கண்ணால் எரித்த வடிவம். ''கழைபடுகாடு'' எனத் தொடங்கும் பாடலில் இவ்வீரச்செயலை அப்பர் குறித்துள்ளார்.

காலனை உதைத்தவர்

மார்க்கண்டேயரைக் காக்குமுகத்தான் காலனை உதைத்த வீரச் செயலைத் திருநாவுக்கரசர் பலபடக் குறித்துள்ளார். சிவனடியார்பால் செல்லாதீர் என்று எமன் தூதுவருக்கு ஆணையிடும் வகையில் அப்பர் காலபாசத் திருக்குறுந்தொகையை அருளியுள்ளதும் இங்கு ஒப்பு நோக்கற்குரியது.

அப்பர் பெருமான் ஆடல் வல்லான் தொடங்கி வேள்வி நாயகர் ஈறாகப் பதினைந்து இறை வடிவங்களைச் சுட்டியுள்ளார். இவற்றுள் தட்சிணாமூர்த்தி வடிவம் யோக மூர்த்தமாகும். ஏனைய பதினான்கும் போக மூர்த்தமாகும். திருமாலின் அகந்தை அடக்கவும் வீரச்செயல் எட்டு புரிதற்கும் எடுத்த வடிவங்கள் கோப வடிவமாகவும் அமைகின்றன.

54. நாயகி நாவுக்கரசர்

ச.வே. சுப்பிரமணியன், தமிழூர்.

அன்பின் முதிர்ச்சி காதல். காதல் என்ற சொல்லுக்கு இன்று பொருள் மிகவும் தாழ்ந்துவிட்டது. சங்க காலத்தில் காதலைச் சிறந்த நட்பாகக் கருதினர். நிலத்தினும் பெரிதாக வானிலும் உயர்ந்ததாக நீரிலும் ஆழமானதாக நாடனொடு நட்பு என்று பேசுவாள் குறுந்தொகைத் தலைவி. உண்மையான நட்புத்தான் காதல்.

சில ஆண்டுகளுக்கு முன்பில் சென்னையில் மணமான ஒரு இளைஞன் காலமாகிவிட்டான். அவனுக்கு மனைவியும் ஒரு குழந்தையும் உண்டு. அவனுடைய தந்தை முதியவர் அவன் இறந்த உடலை வீட்டிற்குக் கொணர்ந்தவுடன் அவ்வுடலைப் பார்த்த தந்தையின் உயிர் போய் விட்டது. இதுதான் உண்மையான அன்பு. மனைவியும் பார்த்தாள் அவள் உயிர் போகவில்லை. அதற்குக் காரணம் அவள் கணவரிடம் செலுத்திய அன்பை விட, குழந்தையிடம் செலுத்தும் அன்பு மிகுதியாக இருக்கலாம். உலகில் கணவன் இறந்ததைக் கேட்டு உயிர் நீத்த மனைவியர் சிலர் உண்டு. அது மிக அருமை.

உலகிலேயே மிகுதியான அன்பு செலுத்துகின்ற நிலை உடையவர்கள் மனைவியும் கணவனும்தான் அல்லது காதலனும் காதலியும் என்று சொல்லலாம். ஆனால் ஆணைக் காட்டிலும் பெண் மிகுந்த அன்புடைய வளாக இருப்பாள். அன்புக்காகக் காதலி துடிப்பாள். காதலன் 75 விழுக்காடு அன்பு செலுத்தினால் காதலி 105 விழுக்காடு அன்பு செலுத்துவாள். காதலன் காதலியர் அன்பில் மிகுதியான அன்பு செலுத்துகின்றவர்கள் காதலியர்தாம்.

தத்துவ அடிப்படையில் உலக உயிர்கள் அனைத்திற்கும் தலைவன் அல்லது நாயகன் இறைவன்தான். உலக உயிர்கள் அனைத்தும் நாயகியராக ஒரு நாயகனாகிய தலைவனுக்கு அமைகின்றன. பக்தி இலக்கியத்தில் நாயகன் நாயகி பாவம் மிகுதியாகக் காணப்பெறும். தன்னைத் தலைவி யாகவும், இறைவனைத் தலைவனாகவும் கருதிப் பாடுகின்ற முறை தேவாரப் பாடல்களில் மிகுதியாக உண்டு.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மூவர் பாடல்களிலும் தம்மை நாயகியாகவும், இறைவனை நாயகனாகவும், எண்ணிப் பாடிய

பாடல்கள் உள்ளன. பக்தி நிலையில் பெண்மை உள்ளம் இவர்களுக்கு மிகுதியாக அமைகிறது. அதற்கு அடிப்படைக் காரணம் நாயகனோடு இணைய வேண்டும் என்ற தீராத ஆசைதான். தங்கள் உயிர் இறைவனோடு கலந்துவிடவேண்டும் என்று நினைக்கின்றனர். இது கற்பனை நாயகியின் நிலைதான். ஆனால் இறைவனை எண்ணிக் காதல் கொள்கின்ற நிலையில் அவர்களுடைய உள்ளத்துடிப்பை நாம் உணர முடிகிறது.

ஒருவன் பெரியவன் என்பதைச் சிறந்தவன் என்பதை அவன் பெயர்வழி அறிகிறோம் அது பொதுநிலை. கர்ணன், குமணன், பாரி போன்ற வள்ளல்கள் உடலால் எவ்வாறு இருந்தார்கள் என்று நமக்குத் தெரியாது. ஆனால் அப்பெயரைக் கேட்டவுடன் அவர்கள் வள்ளல் தன்மை நமக்குத் தெரிகிறது. தொல்காப்பியர், திருவள்ளுவர், இளங்கோவடிகள், கம்பர் போன்றோரை நாம் அறியமாட்டோம். ஆனால் அவர்கள் பெயரைக் கேட்டவுடன் அவர்கள் செய்த தமிழ்த் தொண்டினை உணர முடிகிறது. பின்பு கற்பனையாக அவர்களுடைய வடிவத்தை அவர்கள் வண்ணத்தை நாம் எழுதிக் கொள்கிறோம், படமாக்கிக் கொள்கிறோம். அது உண்மை இல்லை என்பதையும் நாம் உணர்வோம். அதுபோன்றுதான் இறைவனுடைய நாமம் ஆயிரக்கணக்கில் உண்டு. இறைவன் ஒருவன்தான் அந்த இறைவனுடைய பெயரைக் கேட்டவுடன் தலைவனின் பெயரைக் கேட்ட தலைவிக்கு எந்த உற்சாகம் ஏற்படுமோ? அதுபோன்ற உற்சாகம் நாவுக்கரசருக்கு ஏற்படுகிறது. பின்பு அத்தலைவன் எவ்வாறு அழகாக இருப்பான் என்று எண்ணிப் பார்க்கிறார் நாவுக்கரசர். அதுவும் அவர் கற்பனைதான். அவன் எந்த ஊரில் இருக்கிறான். இறைவன் இடம் இல்லை. தூணிலும் உளன், துரும்பிலும் உளன். அணுவைச் சதகூறிட்ட கோணிலும் உளன் என்றெல்லாம் பாடுவான் கம்பன். நாவுக்கரசர் கண்ட தலைவன் திருவாரூரில் இருப்பதாக அவர் நினைக்கிறார். அவனைக் காணவேண்டும், அவனோடு பேசவேண்டும், அவனோடு இணையவேண்டும், என்று அவருடைய உள்ளம் துடிக்கின்றது. அதனால் திருவாரூருக்குச் செல்கிறார். அவரால் மனக்கண்ணில் திருவாரூர் நாயகனைப் பார்க்க முடிகின்றது. அதற்குப் பிறகு அவர் தன் உணர்வு அற்றவர் ஆகிறார். அவன் மேல் பைத்தியம் ஆகிறார். நாவுக்கரசரின் கற்பனை நாயகி அவளைப் பெற்ற தாயையும் தந்தையையும் விட்டு நீங்குகிறாள். எவ்வாறாயினும் தலைவனை அடையவேண்டும். காதலனைக் கைப் பிடிக்கவேண்டும் என்ற உணர்வு மட்டுமே அவளிடம் உள்ளது. சமுதாயத்தில் சில சட்டத்திட்டங்கள் கட்டுக்கோப்புக்கள் உள்ளன. அவற்றை எல்லாம் அந்தக் கற்பனை நாயகி மறந்துவிடுகிறாள். அந்த உணர்வே அவளுக்கில்லை. மிகுதியான அன்பு இருக்கும்போது

தன்னை மறக்கின்ற நிலை ஏற்படும். சிலருக்கு தமிழே! நாயகனாக தலைவனாக இறைவனாக! எல்லாமாக அமைவது உண்டு. தமிழே! எல்லாம் என்ற உணர்வும் ஏற்படுவது உண்டு. ஒரு மொழிக்கே! இந்த நிலை ஏற்படுமானால் இறைவனுக்கு எந்த நிலை ஏற்படும் என்பதையும் நாம் கற்பனை செய்துப் பார்க்கலாம்.

காதலில் தன்னை மறக்கும்போது உலகத்தையே மறந்துவிடுகிறாள். அவளுடைய நோக்கம் முழுவதும் தலைவனை அடைவதுதான். இதனை சரணாகதித் தத்துவம் என்றும் கூறுவர். தன்னை முழுநிலையில் இறைவனிடம் ஒப்படைத்து விடுவது.

யான்எனது என்னும்செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும். (குறள். - 346)

நான் என்ற உணர்வு இருப்பதை ஆணவம் என்று கூறுவர். நான் என்ற உணர்வு அழிந்துவிட்டால் ஆணவம் அழிந்துவிட்டதாகப் பொருள். ஆணவம் அழிந்தால்தான் இறைவனோடு இணையமுடியும். நான் என்பது பெயரோடு கலந்த ஒன்றாக அமைகிறது. பெயரே அழிந்துவிடவேண்டும். அப்போது நான் அழிந்துவிடும். அதனை நாமம் கெட்டாள் என்று சொல்லுவார் நாவுக்கரசர்.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

அன்பு என்பது முழுநிலை பெறும்போது அம்மா அப்பா, சட்ட திட்டங்கள் சமுதாய அமைப்புக்கள் அனைத்தையும் மறக்கவேண்டிய நிலை ஏற்படுகின்றது. தன்னை இழக்கும்போது இறைவனை அடைய முடிகிறது. நாமம் கெடுதல் என்பது நான் என்ற அகந்தை ஆணவம் அழிதல் என்பதை குறிக்கிறது. கற்பனையில் தம்மைப் பெண்ணாகப் பார்க்கும்போது நாவுக்கரசர் எவ்வாறு இறைவனோடு இணையவேண்டும் என்று துடிக்கிறார் என்பதை இப்பாடல் நமக்குத் தெளிவாக உணர்த்துகிறது.

55. நாவுக்கரசர் வாழ்வும் வாக்கும்

கோ. சுப்பிரமணியனார், திருவையாறு.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய சிவபரம் பொருளும் செந்தமிழும் ஒன்றே. வேறு வேறல்ல. சிவத்திற்குரிய ஆக்கல், அளித்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய ஐம்பெரும் தொழில்களைத் தமிழும் ஆற்றி - தமிழக மக்களின் உள்ளங்களில் இனிதே குடியமர்ந்து அவர்களுக்கு வாழ்வளித்து வருகின்றன. இதனைச் சைவமும் - தமிழும் பேணிக் காக்கத் தோன்றிய அருளாளப் பெருமக்கள் வழிக் காணலாம். அவர்களுள் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய சைவ சமய ஆசாரியப் பெருமக்களில் பெரியவராகிய "திருநாவுக்கரசர்" வழிக் காண்போம்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பட்ட (கி.பி. 600-660) காலம் சமணமும் - பௌத்தமும் வளர்ந்தோங்கியிருந்த காலம். அதனால் சைவத்திற்கும் சமணத்திற்கும் தம்தம் சமயமே உயரியது என்ற போராட்டம் நிகழ்ந்த காலம். உண்மைச் சமயம் எதுவென அறியா நிலையில் மயக்கமுற்றிருந்த காலை - மக்களது மயக்கத்தைத் தெளிவடையச் செய்ய, திருவருள் "மருணீக்கியார்" எனும் தெய்வ மகவைத் தமிழகத் திற்குத் தந்தது.

மக்கள் மனத்தே மண்டிக்கிடந்த அறியாமை மயக்கத்தை நீக்க வந்த மகவு, தாமே புறச்சமய மயக்கில் மயங்கிக் கிடந்ததை மாற்றச் சிவபரம் பொருளே - அதற்குத் "திருநாவுக்கரசு" எனும் திருப்பெயர் சூட்டி, தலயாத்திரை, உழவாரப்பணி, திருப்பதிகம் பாடுதல் வழி அவரது வாழ்வியலை வழி நடத்திச் சென்றது. திருத்தலங்கள்தோறும் அவர் பாடிய தெய்வத்தமிழ் வாக்கால் பல அற்புதச் செயல்கள் நிகழ்ந்தன. மக்கள் மனத்தில் ஒரு தெளிவு ஏற்பட்டு - சைவ சமயமே உயரியது என்ற எண்ணம் வேரூன்றி வலுப்பெற்ற அருமைப்பாட்டினை உணர்த்துவதே இக்கட்டுரையின் உயர் நோக்கமாகும்.

திருஅவதாரம்

அன்றைய திருமுனைப்பாடி நாட்டிலே, இன்றைய தென்னார்க்காடு மாவட்டத்தே திருவாமூரில் வேளாண் மரபின் குறுக்கையர் குடியில் புகழனார்க்கும் - மாதினியார்க்கும் இரு குழந்தைகள் பிறந்தார்கள். முதலில் பெண் மகவு - திலகவதியார், அடுத்து அவர் தம்பி மருணீக்கியார்.

திலகவதியார்க்கு அகவை 12; இவரைக் கலிப்பகையார்க்கு மணம் பேசி நிச்சயித்தனர். ஆயின் விதி விளையாடியது. கலிப்பகையார் போர்நிமித்தம் வடபுலம் சென்றார். போரில் பொன்னுடல் நீத்துப் புகழுடல் எய்தினார். புகழனார் நோயுடன் போராடினார், உயிர் துறந்தார். கற்பரசி மாதினியாரும் உடன் இறந்தார். பெற்றோரை இழந்த மக்களைச் சுற்றத்தார் தேற்றினர்.

தமக்கையும் தம்பியும்

கலிப்பகையார் வீரசுவர்க்கம் புக்க செய்தியறிந்து திலகவதியார் திடுக்கிட்டார். பெற்றோர் அவருக்களித்த வாக்கினால் அவரது மனைவி யாயினேன்; யானும் அவரோடு போவேன் என்ற பொழுது தம்பி மருணீக்கியார் கால் பிடித்துக் கதறினார். மனமிரங்கிய தமக்கையார் தம்பிக்காக உயிர்விடாது இருந்தார்.

தம்பியார் மருணீக்கியாரோ உலக நிலையாமை கண்டு, சிவபெருமான் அருளாமையால் சமண் சார்ந்தார். பாடலிபுத்திரம் (திருப்பாதிரிப்புலியூர்) சமண் பள்ளியில் சேர்ந்து பல்கலை பயின்று பௌத்தர்களை வென்று "தருமசேனர்" ஆனார்.

மனமாற்றமே மதமாற்றம்

தம்பியார் உளராக வேண்டும் என நினைத்த தம் தமக்கையாரை விட்டகன்றார். திலகவதியார் திருவதிகை வந்து திருமடம் கண்டு சிவப்பணிகள் பல செய்து நாளும் பெருமானிடம் தம்பி நிலை கூறி வருந்துவார். பெருமானும் ஏற்று அவரைத் தடுத்தாள அவருக்குச் சூலை நோய் கொடுத்தார். அமண் சமணரால் முடியாது போகவே தாளாது தம் அக்கையாரிடம் வந்து சேர்ந்தார். அவரும் ஏற்று திருவாளன் திருநீறு அணிவித்து அதிகை வீரட்டேசரை வழிபட அழைத்து வந்தார். சூலை அகன்றது. திருவருளால் தமிழ்ப்பாடல் சாத்தும் உணர்வு பெற்றார். எடுத்த எடுப்பிலேயே,

"கூற்றாயினவாறு விலக்ககலீர், கொடுமைபல
செய்தன யானறியேன்; ஏற்றாயடிக்கே இரவும்
பகலும் பிரியாது வணங்குவன் எப்போதும்...."

என்று தம் துயரைத் தம் நிலையைக் கூறி வருந்தி இனிமேல் என்றும் தங்களைப் பிரியாது வணங்குவேன் என உறுதிமொழியளித்துப் பாடுகின்றார். இதுகேட்ட பரமன் உளமிரங்கி - மகிழ்ந்து "நாவுக்கரசு" - அருமைத் திருப்பெயரைப் பரிசாக அசரீரியில் வழங்கினார். பெருமானருளால் சூலை நோய் தவிர்ந்து திருநீறும் கண்டிகையும் பூண்டிருந்தார். இக்கோலங்கண்ட அமணர் தாங்கொணாப் பொறாமை கொண்டு

மன்னனிடம் முறையிட மன்னரது ஆட்கள் வந்து அழைத்தனர். பெருமானின் பெருந்துணை இருக்க இவர் ஏன் - யாருக்கு அஞ்ச வேண்டும்?

அமணர் அளித்த தொல்லைகள் அகன்ற அதிசயம்

''நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்....
கோமார்க்கே நாமென்று மீளா ஆளாய்க்
கொய்மலர் சேவடி யிணையே குறுகினோமே''

எனும் அருமைப் பதிகம் பாடி அஞ்சா நெஞ்சராயமர்ந்திருந்தார். தன்னை அலட்சியம் செய்த நாவரசை மன்னன் பல்வேறு தொல்லைகட்காட் படுத்தினான். திருவருள் துணையால் பாதுகாக்கப் பெற்றார்.

முதலில் சுண்ணாம்புக் காளவாயிலடைக்க,

''மாசில் வீணையும் - மாலை மதியமும்'' - பாடியும்

இரண்டாவதாக நஞ்சு கலந்த பாலைக் கொடுக்க

''துஞ்சிருள் காலை மாலை'' - பாடியும்

மூன்றாவதாக மதயானையை விட்டு இடரச்செய்ய

''சுண்ணவெண் சந்தனச் சாந்து''

பாடியும் பாதுகாக்கப் பெற்றார்.

நான்காவதாக கருங்கல்லுடன் கட்டி கடலில் இட

''சொற்றுணை வேதியன் சோதிவானவன்.....
நற்றுணை யாவது நமச்சிவாயவே''

எனப் பாட கருங்கல் தெப்பமாக மிதந்து கரையேறிய குப்பம் வந்தணைந்தது. நாவரசர் நன்றியுணர்வுடன் திருப்பாதிரிப்புலியூர் வந்து பெருமானை,

''ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
...தோன்றாத் துணையா யிருந்தனன் தன்னடி யோங்களுக்கே''

பாடித் துதித்தார். உடன் திருவதிகைப் பெருமானை வணங்கச் சென்றார். திருவதிகை மக்கள் வரவேற்று மகிழ்ந்தனர்.

திருநாவுக்கரசரின் திருக்கோலம்

''தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்துருகி
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே''.

இதே கருத்தை அடியொற்றி சிவஞான முனிவர்தம் காஞ்சிபுராணத்தே,

"இடையறாப் பேரன்பும் மழைவாரும்
இணைவிழியும் உழவாரத்திண்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப்
பெருந் தகைதன் ஞானப்பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப்
பொலிவழகும் துதித்து வாழ்வாம்".

என திருநாவுக்கரசரின் வடிவழகை நம் மனக்கண்ணில் கண்டு மகிழும் வகையில் நிலைநிறுத்திக் காட்டும் அழகே அழகு. திருவதிகை மக்கள் மகிழ்வுடன் வரவேற்றனர்.

தலயாத்திரை

அடுத்து, திருவதிகையினின்றும் பெண்ணாகடம் - தூங்கானை மாடக்கோயில் வந்து பெருமானிடம் - பரசமயத்தே பல்காலும் தங்கி யிருந்த உடலைத் தூய்மை செய்வான் வேண்டி விண்ணப்பிக்கின்றார்;

"பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றி செயும்
என்னாவி காப்பதற்கு இச்சையுண்டேல் இருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலம் என்மேற் பொறி மேவு கொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை மாடச்சுடர்க் கொழுந்தே"

எனப் பாடியவுடன் அன்றிரவு சிவபூதம் ஒன்று வந்து எவரும் அறியா வண்ணம் தோளில் சூல முத்திரையும், இடபமுத்திரையு மிட்டகன்றது. உய்வு பெற்றேன் என உளமகிழ்ந்தார். பின் தில்லை வந்தார்.

"ஒன்றி யிருந்து நினைமின்கள் உந்தமக் கூனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடியவர்க்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்
என்று வந்தாய்எனும் எம்பெருமான்றன் திருக்குறிப்பே"

தில்லை ஆனந்தக் கூத்தன் திருநடனக் குறிப்புத் தம்மை வரவேற்பதாகவே மகிழ்ந்து பாடினார்.

சிதம்பரத்திலிருந்த பொழுது, சீர்காழியில் ஞானசம்பந்தக் குழந்தை பிறந்த அற்புதச்செய்தி கேட்டு மகிழ்ந்து காழிப்பதி செல்கிறார். இருவரும் சந்திக்கின்றனர் - வணங்கினர் - ஞானக் குழந்தையும் மகிழ்ந்து தம் தந்தையார் போன்றுள்ளதனால் "அப்பரே வருக!" என அழைத்தது. தெய்வக் குழந்தை வாக்கன்றோ? அதனால்தான் "அப்பர்" எனும் அமுதத் திருப்பெயர் இன்றளவும் அனைவராலும் போற்றி அழைக்கப்படுகிறது.

பின் அப்பர் பெருமான், கருப்பரியலூர், திருப்புன்கூர், நீடூர் - எனப் பல தலங்கள் வழிபட்டு - **திருச்சத்திமுற்றம்** வருகிறார். அங்கு பெருமானிடம்

கூற்றுவன் வருமுன், தங்கள் திருவடி மலரை அடியேன் சென்னிமிசை வைத்துத் திருவடித் தீட்சை தர வேண்டுகிறார். பெருமானும் நயந்து "நல்லூருக்கு வா" என நவில்கிறார். பெருமான் திருவாக்கை சிரமேற் கொண்டு திருநல்லூருக்கு வருகிறார் - பெருமானும் இவர் கருத்தறிந்து முடித்து வைக்கிறார்.

"நினைந்துருகும் அடியாரை நையவைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்....
நனைந்தனைய *திருவடியென் தலைமேல் வைத்தார்*
நல்லூரெம் பெருமானார் நல்லவாறே".

என அருமையாகத் திருத்தாண்டகம் பாடி மகிழ்கிறார்.

திருநல்லூரினின்றும் திருப்பழனம் - திங்களூர் வருகிறார். அங்கு அப்பூதியடிகள் அமைத்திருந்த "**திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல்**" கண்டு வியந்து அடியாரில்லம் செல்கிறார். அருமை அன்பை உணர்கிறார். அப்பூதியார் அருமந்தப் பிள்ளை மூத்த திருநாவுக்கரசினை அரவம் தீண்ட "**ஒன்றுகொலாம்**" பதிகம் பாடி உயிர்ப்பிக்கின்றார். இவ்வற்புதம் கண்டு உலகே வியந்தது. திருப்பழனம் திருப்பதிகம் "**சொன்மாலை**"யில் அப்பூதியைச் சிறப்பித்து அகத்துறையில் பாடிய சிறப்பு உயர்வுடைத்து.

அடுத்துத் திருவாரூர் வந்து "**கற்றவர்களுண்ணும் கனியே போற்றி**" - 108 அருச்சனைக் குகந்த பதிகம் பாடியருளினார். திருவாரூர்ப் பெம்மான் கோயில் கொண்ட பழமையை, "**ஆடுவான்புகுதற்கு முன்னோ - பின்னோ**" எனப் பாடுவார் - 30 பதிகங்கள் ஆரூரில். "**முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்**" - அகத்துறை சார்ந்த அருமைப்பதிகம்.

திருப்புகலூர், திருக்கடவூர், திருவீழிமிழலை வருகிறார். அங்கு கொடிய பஞ்சம் படிக்காசு பெற்று பஞ்சம் தவிர்க்கிறார். திருமறைக்காடு வந்து மறைக்கதவம் திறக்கிறார். பழையாறை வடதளி வந்து அமணரால் அடைபட்டிருந்த கோயிலை உண்ணாவிரதமிருந்து மீட்கிறார். அடுத்து ஆனைக்கா அண்ணலாரை வழிபட்டு திருப்பைஞ்ஞீலி வரும் வழியில் நண்பகல் பொழுது - இறைவனே அந்தணர் வடிவில் வந்து கட்டமுது தருகிறார். இவ்வற்புதம் யாருக்குக் கிடைக்கும்.

திருக்கயிலாய யாத்திரை!

அதற்பின் பல தலங்கள் வழிபட்டு திருக்காளத்தி வந்து,

"மனத்தகத்தான் தலைமேலான்...*கயிலாயத் துச்சியுள்ளான்*
காளத்தியான் என் கண்ணுளானே".

எனப் பாடும்பொழுது கயிலாய நினைவு வருகிறது. இதுவரை வந்த யாவரும் காளத்தியே கயிலாயமாகக் கருதி வணங்கி மீள்வது வழக்கம்.

இவர் மட்டும் இதுவரை வந்த யாம் ஏன் கயிலை செல்லக்கூடாது என மனத்திலோர் எழுச்சி - உள்ளத்தே ஓர் உணர்ச்சி உந்த.

வேதனையும் சோதனையும்

கயிலாயம் காணும் ஆவலே காதலாகி - வடக்கு நோக்கி நடந்தார். இரவு பகலாக காடுமலை கடந்து ஊண், உறக்கமின்றி நடந்தார் - நடந்தார் - நடந்து கொண்டேயிருந்தார் - கால் தேய்ந்து, கை தேய்ந்து, மார்பு தேய்ந்து, தவழ்ந்திடவும் முடியாமல் உருண்டு சென்றார். செயலிழந்து கிடந்தார் - தமிழாளியார்.

"மெய்ப்புறத்தில் உறுப்பழிந்தபின் மெல்ல உந்து முயற்சியும்
தப்புறச் செயலின்றி அந்நெறி தங்கினார் தமிழாளியார்".

என்பார் சேக்கிழார் பெருமான். இந்நிலையில் இறைவன் முனிவர் உருவில் தோன்றி,

"மானுடந் தியல்பினர் நீர், அமரரும் அணுகுதற்கரிய
கயிலையை நீர் காண்பரிது மீள்வதே உம்கடன்"

என்றார். அது கேட்டு,

"ஆளும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லால்
மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்"

என மறுத்தார் நாவரசர். இது உரிமை மறுப்பு. முனிவராக வந்த ப்ரமன் இவரது உள்ள உறைப்பின் உறுதி கண்டு, மகிழ்ந்து அருள்புரிய நாவரசரின் உடல் ஒளியுடலாக - பிரணவ தேகமாக மாறியது.

வேதனைக்குக் கிடைத்த பரிசு

கால் தேய்ந்து, கை தேய்ந்து செயலற்றுக் கிடந்தவர் எழுந்து தன் உடலைப் பார்க்கிறார். ஆ...ஆ.. பெருமானே! என்னே நின் கருணை, இழந்த உறுப்புகளைப் பெற்றுவிட்டேன் - பெருமானே!

"அண்ணலே! எனைஆண்டு கொண்டருளிய அமுதே!
விண்ணிலே மறைந்தருள்புரி வேத நாயகனே!
கண்ணினால் திருக்கயிலையில் இருந்த நின்கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள்புரி"

எனப் பணிந்தார். அதுகேட்டு மனமிரங்கிய பெருமான் வானொலியாக எழுபெருந் திருவாக்கினால்,

"இப்பொய்கை மூழ்கி நம்மைக் கயிலையில் இருந்த - அம்முறைமை
பழுதில் சீர் திருவையாற்றிற் காண்"

எனப் பணித்தார்.

முனிவராக இறைவன் கொணர்ந்த அத்தடம்தான் இன்றைய கயிலைமால்வரை பக்கமுள்ள மானசரோவர் - ஏரி. 1300 ஆண்டு கட்கு முன் நாவுக்கரசுப் பெருமானுக்காகவே ஐயன் கொணர்ந்த தெய்வத் தடம் பொய்கை அதுவல்ல - என யாராலும் சொல்ல முடியாது. சேக்கிழார் பெருமானின் அகச்சான்று சொல்கிற அமுதவாக்கு இதோ!

''நன்னெடும் புனல் தடமும் ஒன்றுடன் கொடு வந்தார்''

இது பொய்யா?

கயிலைக் காட்சி

''வேற்றாகி விண்ணாகி''

கயிலாயப் பதிகம் பாடிக்கொண்டே - அப்பொய்கையில் மூழ்கிய திருநாவுக்கரசர் - ஐயாற்றுப் பொய்கையில் அடுத்த கணமே வந்து நிற்கின்றார். ஒளியுடம்பினராகி விட்ட காரணத்தினால் - பிரணவ தேகியாகி - மின்னல் கீற்றுப் பாய்வது போல - யாதும் சுவடுபடாமல் கால் மண்ணிலே தோயாமலே ஐயாற்றுக் குளத்தில் வந்து தோன்றினார். கண்களில் - கயிலாயம் காட்சி தருகிறது. மேலும்,

''வெள்ளி வேற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவள வெற்பென இடப்பாகம்
கொள்ளு மாமலை யாளுடன் கூட வீற்றிருந்த
வள்ளலாரை முன்கண்டனர் வாக்கின் மன்னவனார்''

''தூய தொண்டருந் தொழுதெதிர் நிற்க அக்கோலம்
சேய தாக்கினான் திருவையாறு அமர்ந்தமை திகழ''

ஐயாற்றுத் தென்கயிலாயம்

சேக்கிழார் பெருமானின் தேனமுத வாக்கு, இன்றும் இவ்வரிய காட்சியை ஆடி அமாவாசை தோறும் ஐயாற்றில் கண்ணுறலாம். வாருங்கள். அப்பர் பெருமான் கண்ணிற்பட்ட உயிர்கள் யாவும் சிவசக்தியாகவே காட்சி தந்தன. இதுவரை யாரும் கண்டறியாத திருவடிக் காட்சியை,

''கண்டேன் அவர்திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்''

என இன்ப ஊற்றாகப் பாடுகிறார்.

அப்பர் பெருமான் அதற்குப்பின் ஐயாற்றின் அருகில் உள்ள பல தலங்களையும் பணிந்து, திருப்பூந்துருத்தியில் ஞாயிறும் திங்களும் தோயும் திருமடம் ஒன்று கண்டு பலகாலம் தங்கியிருந்தார். இங்குதான் **''தலையே நீ வணங்காய்''** - என்ற அங்கமாலைப் பதிகம் பிறந்தது. பாண்டி சென்று சமணரை வென்றுவந்த ஞானசம்பந்தரும், அப்பரும் **''சம்பந்தர் மேடு''** - எனும் இடத்தில் சந்தித்த காட்சி அருமையுடைத்து.

முக்திப்பேறு

அதன்பின் நாவரசர் தனியே பாண்டி நாடு சென்று திருப்பத்தூர், மதுரை, திருப்பூவணம், திருஇராமேச்சுரம், திருநெல்வேலி போன்ற தலங்கள் வழிபட்டுச் சோணாட்டில் திருப்புகலூர் மேவிய புண்ணியனைக் காண வந்தார். இவரது பற்றற்ற தன்மையைப் பல்காலும் அறிந்த பரமன் ஒரு சித்திரைச் சதய நன்னாளிற் தம் திருவடி அணையக் கருதுவார். இவரும்,

"எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ...
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர்
மேவிய புண்ணியனே"

"*சாவாமூவாச் சிங்கமே*
உன்னடிக்கே போதுகின்றேன் / பூம்புகலூர் மேவிய புண்ணியனே"

வாழ்வும் வாக்கும்

திருநாவுக்கரசரின் வாழ்வியலால் நாம் பெறும் படிப்பினைகள் ஏராளம். தம் நெஞ்சுக்கு நீதியாக அவர்,

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்கு
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச் சங்கரா
சயபோற்றி போற்றியென்றும்
அலைபுனல் சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே"

என அறிவுறுத்துவார். யாவரும் வாழ்வில் கடைபிடித்தற்கெளியதே.

"இரப்பவர்க்கு ஈயவைத்தார் ஈபவர்க்கு அருளும் வைத்தார்
கரப்பவர் தங்கட்கு எல்லாம் கடுநரகங்கள் வைத்தார்
ஐயன் ஐயாறனாரே!"

"தொழுது தூமலர் தூவித் துதித்துநின்
றழுது காமுற் றரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதும் கீழ்க்கணக் கின்னம்பர் ஈசனே".

போன்ற தொடர்களை நெஞ்சில் இருத்திச் செயல்படுவது சிவனடியார்கள் கடமையாகும்.

56. நாவுக்கரசரும் சம்பந்தரும்

பி. சுப்பையா, நெல்லை.

பண்டைக்காலத்தில் தமிழகத்தில் வழக்கிலிருந்த சைவசமயம் பற்றிய விவரங்களை அறிந்துகொள்ள வரலாறு, கல்வெட்டு, புதைபொருள் சான்றுகள் மிகவும் குறைவாக உள்ளதால் சங்க இலக்கியத்திலிருந்தும் காப்பிய இலக்கியத்திலிருந்துமே பண்டைத் தமிழ்ச் சைவத்தைப் பற்றி நாம் அறிய வேண்டியுள்ளது. சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் சமயச் சார்பற்றிருப்பதனால் அவற்றிலிருந்து அக்காலத்தில் நிலவிய சமயத்தின் தன்மையைத் திருப்திகரமாக அறிவதற்கு நம்மால் இயலவில்லை. ஆனால் இவ்விலக்கியங்களில் சமயத் தொடர்பான செய்திகளே இல்லை எனக் கூறமுடியாது. இவ்விலக்கியங்கள் தரும் சமயச் செய்திகள் நமக்குப் போதுமானவையாக இல்லை என்பதுதான் குறை. இக்கட்டுரை கிடைக்கின்ற சான்றுகளைக் கொண்டு அப்பர் ஞானசம்பந்தர் வரலாறுகளைக் காண முற்படுகிறது.

இருவர் பாடல்கள்

திருஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் ஒரு லட்சத்து அறுபதினாயிரம் எனக் கூறப்படுகிறது. ஆனால் தற்போது கிடைக்கும் பாடல்கள் 4168. திருநாவுக்கரசரும் பல ஆயிரம் பாடல்கள் பாடினார். கிடைத்தவை 3066 பாடல்கள் ஆகும். அப்பர் பல திருத்தலங்களுக்குச் சென்று பாடினார். அதில் 8 இடங்களை மையமாகக் கொண்டார். ஞானசம்பந்தர் பல இடங்களைத் தரிசித்தார், அதில் 11-ஐ மையமாக ஏற்படுத்திக் கொண்டார்.

வாழ்க்கைக் குறிப்புகள்

ஞானசம்பந்தரைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளைச் சம்பந்தரின் தேவாரத்திலும் நம்பியாண்டார் நம்பியின் நூல்களிலும், ஒட்டக்கூத்தனின் தக்கயாகப்பரணியிலும் காணலாம். மிக விரிவாகப் பெரியபுராணம் எடுத்துரைக்கிறது.

திருநாவுக்கரசர் என்ற வாகீசரின் வாழ்க்கைக் குறிப்புகளை அப்பரின் தேவாரத்திலும், நம்பியாண்டார் நம்பியின் நூல்களாகிய திருவந்தாதி, திருஏகாதச மாலையிலும் காணலாம். விளக்கமாகப் பெரியபுராணம் உணர்த்துகிறது.

இருவர் அற்புதங்கள்

முதல் அற்புதம் - சம்பந்தருக்கு பிரம்மோபதேசம் செய்யப் பண்டிதர்கள் முயன்றபோது சம்பந்தர் தமக்குப் பரம்பொருளைப் பற்றி பூரண அறிவு இருக்கிறது என்பதை அவர்களுக்கு உணர்த்திப் பரம்பொருளைப் பற்றி அவர்களுக்கே போதிக்க ஆரம்பித்தார். இரண்டாம் அற்புதம் திருப்பாச்சிலாசிரமத்தில் நடந்தது. ஒரு பெண் யாரும் குணப்படுத்த முடியாத நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். இவர் பதிகம் பாடி நோய் தீர்த்தார். இவர் எழுதிய பாடல் உள்ள ஓலை நெருப்பில் எரியாததைக் கண்டு மதுரை மன்னன் சைவனானான்.

அப்பரைச் சமணர்கள் சுளையில் இட்டனர். விடமிட்டனர். யானையால் இடறப்பட செய்தனர். கடலில் எறியச் செய்தனர். ஆனால் அப்பர் இவற்றினின்று அற்புதத்தால் மீண்டார். காவிரிக்கரையில் பஞ்சம் வந்தபோது இறைவன் தன் அன்பை வெளிக்காட்டினார். திருவாய்மூரில் கடவுளின் அற்புதத் தோற்றங்கள் அப்பருக்குக் கிட்டின. திருப்பைஞ்ஞீலியில் அப்பர் பசியாலும், தாகத்தாலும் தவித்தபோது இறைவன் அவருக்குப் பொதிசோறு கொண்டு வந்து அருளினார். அப்பர் கைலாயம் தரிசிக்கப் போனபோது வழியில் இறைவன் தோன்றி அவரை அங்கு ஒரு குளத்தில் மூழ்கித் திருவையாற்றில் குளத்திலிருந்து எழுப்பித் தன் நடனத் தோற்றத்தை காணச் செய்தார். அப்பர் தாமாக நிறைய அற்புதங்கள் செய்ததாகத் தெரியவில்லை. அப்பூதியின் மகனைப் பாம்புக்கடியிலிருந்து பதிகம்பாடி எழுப்பியது அப்பர் செய்த அற்புதங்களில் குறிப்பிடத்தக்கது.

பாடுபொருளின் இடமும் பெயரும்

திருஞானசம்பந்தர், தாம் பாடும் திருப்பதிகங்களில் வணங்கப்படும் தலத்து இறைவயின் திருப்பெயரை ஏத்திப்போற்றுகின்றார். திருவீழிமிழலை - 'மைம்மரு பூங்குழல்' என்ற பதிகத்தில்'' வாள்நுதல் மான்விழி மங்கை (1 : 34 : 1) என்கிறார்.

இதே தொடர் 4-ஆவது பாடலிலும் 'நல்நுதல் மான்விழிமங்கை' என்று காணப்படுகின்றது.

'அழகுமுலையம்மை' என்றும் காணப்படுகின்றது.

திருஆவூர்ப் பசுபதீச்சரம்	- 'பங்கயமங்கை (1 : 76 : 4)
திருவண்ணாமலை	- 'உண்ணாமுலை உமையாள்' (1 : 97 : 1)
திருவிடைமருதூர்	- 'வாடாமுலை மங்கை' (1 : 32 : 1)
திருவாழ்கொளிபுத்தூர்	- ''வண்டுஅமர் பூங்குழல் மங்கை'' (1 : 435 : 10)
திருவதிகை வீரட்டானம்	- 'கரும்பின் மொழியாள்' (1 : 494 : 2)
திருஆலவாய்	- 'அங்கையற்கண்ணி' என்கிறார்.

திருநாவுக்கரசு நாயனார் சத்தியை மாமலையாள் (73 : 3) வெற்பரையன் பாவை (178 : 2) அம்மை (183 : 1) பெரியபெருமாட்டி (187 : 1) குன்றமகள் (193 : 1) பொருப்பரையன் மடப்பாவை (30 : 4) செங்கனகக் குன்றவில்லி (252 : 2) மலையாள் (271 : 2) தையல் (317 : 3) மலைவல்லி (322 : 3) மலைமகள் (364 : 1) பொன்மலைக்கொடி (374 : 1) மலையான்மகள் (384 : 1) என்கிறார். திருஞானசம்பந்தனார் பெருமலை பயந்தகொடி (42 : 1) மங்கை (53 : 1) தேவி (59 : 2) பொன்மலைவல்லி (64 : 3) அருமறையால் (65 : 4) மலைக்கொடி (66 : 3) பாவை (74 : 2) உமை (88 : 3) ஏழிசை (2 : 4) மொழியான் (91 : 41) உமையாள் (92 : 4) பைங்கொடியாள் (98 : 4) புன்னியந்தாயார் (100 : 31) தாயார் (109 : 1) நாரி (115 : 3) அம்பிகை (117 : 1) தையலாள் (129 : 4) இமயமாமலைக்கொடி (150 : 1) பொற்குன்ற மங்கை (154 : 2) பொன்மாமலை வல்லி (180 : 1) முற்றும் ஆனவள் (222 : 3) வாரணாங்கு முலை உமையாள் (258 : 3) பந்தனை மெல்விரலாள் (268 : 1) இமவான் மடந்தை (288 : 2) பூங்குழலாள் (287 : 3) மருவாருங்குழல் (390 : 3) திருமலையாள் (391 : 1) செம்பொன்மலையாள் (398 : 3) போகமார்த்த பூண்முலையாள் (456 : 4) கோமளக்கொம்பு (464 : 1) கொம்மை முலையினள் (557 : 2) பெருமாட்டி (559 : 1) பண்ணமருமொழியுமையாள் (562 : 3) வேயுறுதோளி (616 : 4) தெய்வமலைமகள் (851 : 4) அங்கையற்கண்ணி (861 : 1) துடியிடையாள் (875 : 1) பெருமாட்டி (880 : 3) வனமுலையாள் (955 : 2) இன்னும் பல பெயர்களில் பெரியபுராணத்தில் கூறுகின்றார்.

சமூக மாற்றம்

ஞானசம்பந்தர் பிராமண குடும்பத்தில் பிறந்தவராக இருந்தாலும் தீண்டாமையை ஒழிக்கப் பாடுபட்டார். நமக்கு வழிகாட்டியாக வாழ்ந்தும் காட்டினார். தம்முடைய பாடல்களுக்கு யாழ் இசைப்பதற்காகத் தீண்டத் தகாத குடும்பத்தைச் சார்ந்த திருநீலகண்டர் என்பவரைத் தம்முடன் பல திருத்தலங்களுக்கு அழைத்துச் சென்றார். சைவரும், பௌத்தரும் துறவறத்தையே பெருமையாகப் பேசி இல்லறத்தைப் பழித்து வந்த காலத்தில் திருஞானசம்பந்தர் பெண்களுக்கு நேர்ந்த தாழ்வைப் போக்குவதிலும் போலித்துறவை வெறுத்துப் பழிப்பதிலும் ஆர்வம் காட்டினார். பிராமணர்களின் தெருக்களுக்கும் வீடுகளுக்கும் தீண்டத்தகாதவரை அழைத்துச் சென்றார்.

திருநாவுக்கரசர் வாழ்ந்த காலத்தில் திங்களூர் என்ற ஊரில் அப்பூதி என்னும் பிராமணர் திருநாவுக்கரசு என்னும் பெயரை மந்திரம்போல் போற்றி அவரையே வழிபட்டு வந்தார். தம் அறச்சாலைக்கு அதே பெயர் இட்டார். தம் மக்களுக்கும் அப்பெயரே இட்டு வழங்கினார். திருநாவுக்கரசர்

வேளாளர் ஆயினும் சாதி உயர்வும், தாழ்வும் பற்றிய எண்ணத்திற்கு இடந்தராமல் இருந்தார். அப்பூதி அவரைத் தெய்வமாகப் போற்றி வழிபட்டார். சைவம் வேண்டத்தகாத பல மரபுகளை ஏற்றுக்கொண்ட காலம் அது. புலால் உணவைப் படைப்பதும், மனிதபலி இடுவதும், சைவமரபில்தான் வெகுவாகப் பின்பற்றப்பட்டன. பாசுபதர்கள், காபாலிகர்கள், காளாமுகர்கள், மகாவிருதர்கள், பைரவர்கள் போன்ற பயங்கரமான சைவவாதிகளையும் எதிர்த்துச் சமூகப் புரட்சியினை ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் செய்தனர்.

காலம்

நாவுக்கரசர், ஞானசம்பந்தர் இருவருமே ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்தவர்கள். நாவுக்கரசர் முதலாம் மகேந்திர பல்லவனை மதம் மாற்றிய செய்தி திருச்சி கல்வெட்டில் உள்ளது. அந்த மகேந்திரமல்லன் காலம் ஏழாம் நூற்றாண்டு ஆகும். மேலும் ஞானசம்பந்தரை எதிர்கொண்டு போற்றியவர் சிறுத்தொண்டர். இந்த சிறுத்தொண்டர் வாதாபிப் போரில் இரண்டாம் புலிக்கேசியைத் தோற்கடித்தார். இரண்டாம் புலிகேசியின் காலம் ஏழாம் நூற்றாண்டு ஆகும்.

புதிய யாப்பு

திருஞான சம்பந்தர் புதிய யாப்பு முறையில் பல பாடல்களைப் பாடியுள்ளார். அவை தமிழிற்கு மூல இலக்கியங்களாக, முதல் இலக்கியங் களாகத் தமிழ் இலக்கிய வழிகாட்டிகளாக அமைந்துள்ளன. மறைக்கவி, சித்திரகவி என அவை சொல்லப்பெறும். மொழிமாற்று, மாலைமாற்று, சக்கரமாற்று, மடக்கு, இயமகம், திருஎழுகூற்று இருக்கை என்பன அவற்றுள் சில. வேதங்கள் ஒருவராலும் செய்யப்படாதவை. இறைவனால் அருளிச் செய்யப்பெற்றவை. இவை எழுதாக் கிளவியாய் ஆசிரியர், மாணவர், பரம்பரையில் செவிவாயிலாகக் கேட்டுணர்ந்து ஓதப் பெற்றுவரும் இயல்புடையன. எனவேதான் 'கேள்வி' எனவும், 'சுருதி' எனவும் வழங்கப் பெற்றன.

வடமொழி வடிவில் வழங்கும் நால் வேதங்களும், எழுத்துருவில் வரையப்பெறாது வழிமுறை, வழிமுறையாக ஓதப்பெற்று வருவதால் இவ்வேதப் பொருள் சில குடும்பத்தார்களேயன்றி மக்கள் அனைவரும் கற்றுணர்தல் இயலாதது. எனவே தமிழில் எழுதும் மறைமொழி களாகத் திருப்பதிகங்களைச் செய்தருளினார். "மறை வளரும் தமிழ் மாலை", "மறையிலங்கு தமிழ்" என்பன அவரது திருவாக்குகள். "வண்டமிழால் எழுதுமுறை மொழிந்த பிரான்" எனச் சேக்கிழார் அடிகள் அவரைப் போற்றுவார். அதேப் போல நாவுக்கரசரும், தமிழ் மாலைகளாகிய திருப்பதிகங்களைப் பாடியதால் 'நாவுக்கரசு' என

'உலகேழினும் நிலை பெற்று வழங்குக' என இறைவன் அருள்வாக்கு யாவரும் கேட்க ஒலித்தது. 'தமிழை பக்தியின் மொழி எனப் பின்னர் டாக்டர் தனிநாயக அடிகள் கூற இவ்விருவரின் தமிழ்த்தொண்டு, அடித்தளமாக அமைந்தது என்றால் அது மிகையல்ல. மேலும் ஞானசம்பந்தர் தம்மைத் தாமே தமிழோடு இணைத்து அறிமுகப் படுத்திக் கொள்கிறார்.

சிவமாம் செம்பொருளை வழிபடும் சைவசமய மரபு மிகவும் பழமையானது. தோற்றம் கூற முடியாத அளவு மற்றச் சமயங்களை விட மிகப் பழமையானது. தமிழகத்தில் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு மேல் ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை வடநாட்டில் இருந்து இங்கு வந்து பரவிய புத்தம், சமணம் முதலிய சமயங்களாலும், களப்பிரர் ஆட்சியாலும், தமிழ்மொழி, நாகரீகம், பண்பாடு, கலை, மெய்ந்நெறி பேரிடர் எய்தின. இந்நிலையில் தமிழ் மக்களது சமய வாழ்வு, சமுதாய வாழ்வு இலக்கியம் என்பவற்றில் பெரியதொரு சீர்திருத்தத்தையும், விழிப்பையும், மறுமலர்ச்சியையும், உண்டுபண்ணிய பெருமக்களே; திருநாவுக்கரசர் மற்றும் திருஞானசம்பந்தர் நிலையை உணர்ந்து இன்றும் சைவர்கள் போற்றுகின்றனர். நாமும் போற்றுவோம்.

57. நாவுக்கரசரின் அனுபவங்கள்

வ. சுமதி, மதுரை.

"மனமெனுந் தோணி பற்றி மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை ஏற்றிச் செறிகட லோடும் போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தறிய வொண்ணா
துனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூ ருடைய கோவே"

என்ற பாடலில் நாவுக்கரசர் ஒற்றியூரில் எழுந்தருளியிருக்கும் புற்றிடங் கொண்டாரிடம் வேண்டுவது என்ன? மனமெனும் தோணியை, மதியெனும் கோலால் செலுத்திக் கொண்டு பிறவியெனும் கடலை நான் கடக்க முற்படும்போது ஐம்புல உணர்வுகள் - நுகர்வுகள் - ஆசைகள் எனும் பாறையால் தாக்குண்டு அழியும் தருவாயில் உன்னருளைப் பெறுதலரிது. அதனால் இறைவனே இப்பொழுதே உன்னை வழிபடும் சிந்தனையை எனக்கு அருள்வாயாக என உருகிக் கேட்கின்றார். நாவுக்கரசர் வேண்டுகோளினை ஏற்று இறைவனும் ஆட்கொண்ட திறத்தை இவண் காண்போம்.

வாழ்க்கை என்றால் என்னவென்று இறைவனிடம் கண்ணதாசன் கேட்கின்றார். அதற்கு இறைவன், அனுபவம் தான் வாழ்க்கை என்கிறார். அனுபவமே வாழ்க்கை என்றால் இறைவா! நீ ஏன் என்று கேட்கிறார். "அனுபவமே நான் தான்" என்கிறார் இறைவன். வாழ்க்கையில் ஏற்படும் அனுபவம் வாயிலாக இறைவனைக் காணலாம் என்று தத்துவத்தை இதன் மூலம் பெறுகின்றோம். திருநாவுக்கரசர் தம் இளமையை, மெய்ப்பொருள் நாட்டங் கொண்டு அதனைத் தேடி கண்டடையும் முயற்சியிலும், முதுமையைத் தாம் தேடிக் கண்டு கொண்ட 'மெய்ப்பொருள் அனுபவ இன்பத்தினை மக்களுக்கு எடுத்துக் கூறி அவர்களை நெறிப்படுத்தும் முயற்சியிலும் கழித்த பெருந்துறவி ஆவார். அவ்வாறு உலகுக்கு வழிகாட்டியாக விளங்கும் திருநாவுக்கரசரின் அனுபவங்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நாவுக்கரசர் பெற்ற அருள் அனுபவங்கள்

அனுபவம் என்பதற்கு "நுகர்ச்சி, அழுந்தியறிவது" என்று பொருள் தருகிறது கழகத் தமிழ்க் கையகராதி. நாவுக்கரசர் இளமைப் பருவத் திலேயே தந்தையை இழக்கின்றார். பின் தாயை இழக்கின்றார்.

தமக்கையாருக்கு மணம் பேசி வைத்திருந்த கலிப்பகையாரையும் இழக்கின்றார். தமக்கையாரும் இறக்கத் துணியும்போது, 'என்னைப் பேணி வளர்க்கும் அன்னையார் வேறு யாருளர்?' என்று அழுது அரற்றுகின்றார். அப்பொழுது தமக்கையார் 'தம்பியர் உளராக வேண்டும்' என்றுயிர் வாழத் துணிகின்றார். 'அம்மையாரைத் தந்தார் ஆரூர் ஐயரே' என்று மகிழ்கின்றார் நாவுக்கரசர். திலகவதியார் அனைத்துயிரையும் வாழ்விக்கும் அருளையே அணிகலனாகப் பூண்டவர். சிவனடியார்களை இரண்டாகப் பகுக்கிறார் வை. இரத்தினசபாபதி. 'சிவனே நேர் நின்று ஆட்கொள்ளப் பெற்ற திருவினர் ஒருவகை. சிவனடியார்களாக நின்று ஆட்கொள்ளப் பெற்ற திருவினர் இன்னொருவகை'. சிவன் நேர் நின்று ஆட்கொண்டதால் திருஞானசம்பந்தர் சிவநலம் துய்த்தவராகிறார். சம்பந்தரால் ஆட்கொள்ளப்பட்டதால் நின்றசீர் நெடுமாறன் சைவநலம் துய்த்தவனாகிறான். அதுபோலவே சிவநலம் துய்த்த திலகவதியாரால் ஆட்கொள்ளப்பட்ட நாவுக்கரசர் சைவ நலம் துய்த்தவராகிறாரென்ற கருத்தைப் பெறுகின்றோம்.

தமக்கையாரால் சைவ நலம் பெற்ற நாவுக்கரசர், அக்காலத்தில் தமிழ் நாடெங்கும் பரவியிருந்த சமணசமயக் கொள்கையால் ஈர்க்கப் படுகின்றார். எல்லாச் சமயங்களிலும் சிறப்புடைய மெய்ச்சமயம் இதுவெனத் தெரிந்துணரும் ஆர்வம் இவரிடம் தலைதூக்கி நிற்கின்றது. சிவபெருமான் திருவருளும் இவருக்குக் கிடைக்கப்பெறவில்லை. எனவே சமண சமயத்தைத் தழுவி அச்சமயத்தின் அரிய பல நூல்களையெல்லாம் கற்று வித்தகராகின்றார். இவரது திறமையைக் கண்ட சமண முனிவர்கள் இவருக்குத் "தருமசேனர்" என்ற சிறப்புப் பெயரிட்டுப் பாராட்டிப் போற்றுகின்றனர். தம்பியர் "உளராக" வேண்டுமென்ற பேரருளால் இல்லத்தின் கண் இருந்து, மருள்நீக்கியாரை அன்புடன் போற்றி வளர்த்த தமக்கையார், தம்பி சமண சமயத்தைச் சார்ந்தனர் என்பதைக் கேள்வி யுறுகின்றார். தம்பியைச் சமண சமயப் படுகுழியினின்றும் எடுத்தாண்டு உய்விக்க வேண்டுமென்று திருவதிகைப் பெருமானை இறைஞ்சுகின்றார். திருவதிகைப் பெருமானும் 'நீ உன் மனக்கவலையைத் தவிர்ப்பாயாக. நின தம்பி முன்னமே முனியாகி எம்மையடையத் தவம் முயன்றான். அன்னவனுக்கு இனிச் சூலை நோயைத் தந்து ஆட்கொள்வோம்' என்று அருள் செய்தார்.

அவ்வண்ணமே தருமசேனர் வயிற்றில் சூலைநோய் வந்துப் பற்றுகின்றது. இறைவன் அருளால் தருமசேனரைப் பற்றிய சூலைநோய் வடவைப் பெருந்தீயும், ஆலகாலவிடமும், வச்சிரப்படையும், கொடுமை விளைவிப்பன பிறவும் ஒன்றாகத் திரண்டு வருத்துதல் போல குடரைக் குடைந்து வருத்துகின்றது. சமண சமயத்தில் தாம் கற்ற மந்திரங்களை

யெல்லாம் கையாண்டுப் பார்க்கின்றார். அது தணியவில்லை. சமணர்களும் 'இது நம்மாற் போக்கற்கரிய நோயாகும்' எனக் கைவிட்டனர். அந்நிலையில் நாவுக்கரசர், 'நமது குலம் செய்த நற்றவத்தின் பயன் அனையீர்' என்று திலகவதியாரின் திருவடிகளைச் சரணடைகிறார். தமக்கையாரும் தம்பியாரை நோக்கி, 'உறுதிப் பொருள் கொண்ட தெய்வக் கொள்கை யற்ற புறச்சமயப் படுகுழியில் வீழ்ந்து துயருழந்தீர் இப்பொழுது எழுந்தீர்' என்று கூறி இறைவன் கழலடிகளுக்குப் பணிந்துப் பணி செய்யப் பணிக்கிறார். பின் திருவாளன் திருநீறைத் திலகவதியார் அளிக்க, நாவுக்கரசர் பெருவாழ்வு வந்தது எனப் பணிந்து ஏற்றுப் பூசிக் கொள்கிறார். அவரது அகத்திருள் நீங்குகிறது. தமக்கையாருடன் திருக்கோயிலை வலம் வந்து திருமுன் வீழ்ந்து பணியும்போது தமிழாற் பாமாலை சாத்த வேண்டும் என்ற உணர்வு எழக் 'கூற்றாயினவாறு விலக்ககலீர்' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடுகின்றார். நிலைபெற்ற பெருவாழ்வைத் தரும் இப்பதிகத்தைப் பாடிய பொழுது அவர் தம் வயிற்றில் புகுந்து வருத்திய சூலைநோய் விரைவில் நீங்கிவிடுகின்றது. சூலைநோய் தம்மைவிட்டு நீங்கியது என்பதைத் திருநாவுக்கரசர்,

> ''சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்
> சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்
> ஒன்றினாற் சூலையுடையோ மல்லோ மன்றே
> உறுபிணியார் செறுவொழிந்திட்டோடிப் போனார்''

என்று மறுமாற்றத் தாண்டகத்தில் தான் குறிப்பிடுகின்றார்.

சூலைநோய் தந்து ஆட்கொள்ளுதல் என்பது சிவன் மேற்கொள்ளும் செயலாக இரண்டிடங்களில் காணப்பெறுகின்றது. மருள்நீக்கியாருக்குத் தந்தது போலவே கலிக்காமருக்கும் கொடிய வயிற்றுவலியைத் தருகின்றார் இறைவன். திருநாவலூராரிடம் கொண்ட கருத்து வேறுபாடு காரணமாகக் கலிக்காமருக்குக் கொடிய சூலைநோய் கொடுக்கப்பெறுகின்றது. கருத்து வேறுபாடு நீக்கப்பெறுவதற்குரிய ஒருவகைத் துணைக்கருவியாகச் சூலைநோய் பயன்படுகிறது. இச்சூலைநோய் ஊழ்வினை காரணமாக வருதலில்லை என்பது புலனாகிறது.

பொய்மைமிக்க புறச்சமயப் படுகுழியில் வீழ்ந்து எழுமாறு இதுவென உணராது மயங்கி அவமே செய்து கிடக்கும் எளியேன் மாமலையாள் மணவாளன் திருவடிகளை அடைந்து உய்யும் வண்ணம் இத்தகைய நல்வாழ்வைத் தந்த சூலைநோய்க்குச் செய்யத்தக்க கைம்மாறு யாதுள்ளது என்று தம்மை நல்வழிப்படுத்துவதற்குக் காரணமாயமைந்த சூலை நோய்க்கு நன்றி தெரிவித்து இறைவனைத் தொழுகின்றார். இந்நிலையில் 'செந்தமிழ்ப்பதிகம்' பாடிய பான்மையினால் நின் பெயர் ''நாவுக்கரசு என உலகேழினும் நிலைபெற்று வழங்குவதாகுக'' என்ற

இறைவனின் திருவருள் வாக்கு யாவரும் கேட்கும் வண்ணம் வானின்கண் எழுகின்றது. திலகவதியாரால் சைவநலம் பெற்றும், இறைவனால் திருநாவுக்கரசர் என்ற நாமம் சிறப்புற மன்னும் பேறு பெற்ற திருநாவுக்கரசர் தமக்கையார் நெறிப்படுத்தியவாறே திருத்தொண்டு செய்தலைக் குறிக்கோளாகக் கொண்டு உயிரறத்தை அருளறமாக அமைத்துத் தொண்டாற்ற முற்படுகிறார். திருநாவுக்கரசர் சிவநெறியைக் கடைபிடித்து வாழ்ந்து வருவதைப் பாடலிபுரத்திலுள்ள சமணர்கள் கேள்வியுற்று மனம் பொறாத நிலையினை அடைகின்றனர். சூலைநோயை நம்மால் போக்க முடியாமையால் தருமசேனர் மீண்டும் சிவநெறியைத் தழுவினார் என்ற செய்தியைத் தம் வேந்தர் அறிவானாயின் நம்மை வெகுண்டு, தானும் சைவனாகி விடுவான். இனி இதற்கு யாது செய்வது என்று ஆராய் கின்றனர். இவ்வாறு சூழ்ந்து முடிவெடுத்த சமயத் துறவிகள் பல்லவனிடம் சென்று எமக்குத் தலைவராக இருந்த தருமசேனர், நோய் வந்ததாக நடித்து, அது தீர்க்கப்பெற்றது என்ற பொய்யைக் காரணமாக்கிச் சமண சமயத்தி லிருந்து சைவம் சென்றார் என முறையிட்டனர். சமணர்களின் சொற் கேட்ட பல்லவன் ஏவலர்களை அனுப்பித் திருநாவுக்கரசரை அழைத்து வருமாறு பணிக்கின்றான். மன்னன் வரப்பணித்தான் என்ற செய்தியைக் கேட்டவுடன் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற மறுமாற்றத் திருத்தாண்டகத்தைப் பாடுகின்றார். மன்னன் ஆணைக்கு மறுமாற்றமாகப் பாடியதால் இது மறுமாற்றத் திருத்தாண்டகமாகும். இது இரண்டாம் பதிகமாகும். ஆனால் தாண்டக யாப்பில் அமைந்த பதிகங்களுள் இது முதல் பதிகமென்கிறார் வை. இரத்தினசபாபதி. 'கூற்றாயினவாறு' எனத் தொடங்கும் கொல்லிப் பண்ணால் அமையப்பெற்ற பதிகமே திருநாவுக்கரசரால் பாடப்பெற்ற முதல் பதிகமாகும். சமண சமயத் தொடர்பினின்றும் நீங்கிச் சிவனருளில் திளைத்து நிற்கும் நாவுக்கரசர் உலகியல் தொடர்பினை அறவே மறந்த நிலையில் அமைச்சர்களை நோக்கி,

'உம்மோடு மற்றும் உளராய் நின்ற
பண்புடையான் பணிகேட்டுப் பணியோம் அல்லோம்
பாசமற வீசும் படியோ நாமே'

என்று அஞ்சாது உரைக்கின்றார். பின் அரசத்தண்டத்திலிருந்து அவர்களை உய்வு பெறச் செய்யும் பொருட்டு 'ஈண்டு வரும் வினைகளுக்கு என்பிரான் உளன்' என்று உடன் செல்கின்றார். சமணர்களின் பரிந்துரையின்படி மன்னன் நாவுக்கரசரை ஏழு நாட்கள் நீற்றறையிலிடுகிறான்.

வெம்மையுடைய நீற்றறையானது தண்மையுடைய பொய்கையாக இருந்தது. சுண்ணாம்பு எரியும்போது எழும் ஒலியும் ஒளியும் முறையே மாசில் வீணையும் மாலை மதியமும் தரும் ஒலியையும் ஒளியையும் போல இருந்தன. துய்க்கும் நிலையில் நம்மால் பெரிதும் வரவேற்கப்

படுவனவாகிய தென்றலும் இளவேனிலும் போல இருந்தது. பொய்கையில் வண்டுபாடும் நிலை அமைந்து இனிமை உறுத்துதல் போல நீற்றறையிலும் இன்னொலி அனுபவம் இருந்தது என்கிறார் வை. இரத்தினசபாபதி. நீற்றறை சுடாதது கண்டு பின் நஞ்சு கலந்த பாலடிசிலைக் கொடுக்கின்றனர். நாதன் அடியார்க்கு நஞ்சும் அமுதாமென்று கூறிப் பாலடிசிலை உண்டு யாதொரு தீங்குமின்றி இனிதே இருக்கின்றார். திருநாவுக்கரசருக்கு நஞ்சும் ஊறு செய்யாமை கண்டு பட்டத்து யானைக்கு வெறியூட்டி, அதனை ஏவி விடுகின்றனர்.

'உடையார் ஒருவர்தமர் நாம்
அஞ்சுவதி யாதொன்று மில்லை
அஞ்சவருவதும் இல்லை'

என்று பாடுகின்றார். யானையும் அவரைப் பணிந்து அவ்விடத்தை விட்டு அகன்று போகின்றது. இங்ஙனம் சமணர்களால் ஏவப்பட்டுத் தம்மைக் கொல்ல வந்த மதக்களிறு இறைவனருளால் தம்மைக் கொல்லாது மீண்ட அற்புதத்தைப் பின்னொரு காலத்து நினைந்து பார்க்கின்றார். மக்களனைவரும் இறைவன் திருவருளைத் துணையென நம்பி எத்தகைய இடையூறுகள் நேரிடினும் மனங்கலங்காது அச்சமின்றி வாழ்தல் வேண்டும் என்று உலக மக்களுக்கு அறிவுறுத்துவாராய்,

'மலையே வந்து வீழினும் மனிதர்காள்!
நிலையில் நின்று கலங்கப் பெறுதிரேல்
தலைவ னாகிய ஈசன் தமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றிடு கிற்குமே'

என்ற பாடலில் தம் அனுபவத்தைப் பாடுகின்றார். பின் கல்லோடு சேர்த்து கயிற்றினால் பிணித்துக் கடலில் தள்ளுகின்றனர்.

'கற்றுணைப் பூட்டியோர்
கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது
நமச்சி வாயவே'

என்று தொடங்கும் நமச்சிவாயப் பதிகத்தைப் பாடுகின்றார். நல்வினை தீவினைகளாகிய இருவகைக் கயிற்றினால் மும்மலமாகிய கற்களுடன் பிணிப்புண்டு பிறவிப் பெருங்கடலில் வீழ்ந்து கரை காணாது வருந்தும் அறிவிலா மாக்களை அத்துன்பக் கடலினின்றும் எடுத்து இறைவன் திருவடிகளாகிய இன்பக் கரையில் சேர்க்க வல்லது திருவைந்தெழுத்து என்று ஐந்தெழுத்துப் பெருமையினைப் பலவாறு பாடுகின்றார். கடல் தெய்வமாகிய வருணன், அலைகளாகின்ற கைகளால் கல்லே சிவிகையாக நாவுக்கரசரைத் தாங்கிக் கொண்டு திருப்பாதிரிப்புலியூரின் அருகே கொண்டு வந்து சேர்க்கின்றான்.

ஐந்தெழுத்தோதிக் கரையேறிய பகுதி 'கரையேறவிட்ட குப்பம்' என வழங்கப்படுகின்றது. சித்திரை அனுட நாளன்று கரையேறவிட்ட குப்பத்தில் கரையேறவிட்ட விழா நடைபெறுகிறது என்கிறார் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார். "நீற்றறை நாள் ஏழினையும் பிறப்பு வகை ஏழென்னும் குறிப்பு எனலாம். நீற்றறையினின்றும் தீங்கின்றி வெளிவருதல் சுட்ட பொன் மாசகன்று தூய்மையாதல் போன்று அடியார் திருமேனி இருள்முனைப்பாலாம் மாசகன்று அருள்முனைப்பாலாம் தூய பொன் போலாதல். இது சுடர்விடும் பொன்னாலாகி அருளொளி பரப்புவதாகும். இது மாயைத் தூய்மை. நஞ்சு நீக்கம் இருவினை நீங்கி இறை பணியாதல். இருவினை என்பது செய்வன அனைத்தும் அவனருளால் செய்யும் அருட்பணி. மதவேழம் வணங்கல் இருண்மலவாற்றலடக்கம். கல்லே மிதப்பாகக் கடல் கடந்து கரையேறுதல் பிறவிப்பெருங்கடல் நீந்துதலெனலாம்" என்கிறார் ப. இராமநாதன். அனுபவத்தால் தம் வாழ்வில் உணர்ந்த உலகியல் வெம்மையாலும், ஞானத்தால் உணர்ந்த திருவடி நீழல் தண்மையாலும் உள்ளத்தில் ஏற்படுத்திய போராட்டத்தின் விளைவாலுமே உலகியல் வெம்மையிலிருந்து விடுபடத் துடிக்கின்றார். அவ்வாறு விடுபடத் துடிக்கின்ற துடிப்பே இவர் பாட்டின் உயிர்நாடியாக அமைகிறது என்பதை, நாவுக்கரசரது இளமைப்பருவ அனுபவங்கள் வாயிலாகக் கண்டோம்.

நாவுக்கரசரின் பெற்ற இறை அனுபவங்கள்

இறையனுபவம் என்பது இறைவனை அடைந்த பின்னர் பெறுவதன்று. அவனை அடைவதற்கு மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலும் அடியவர்கள் அளவில் தெய்வ அனுபவமே ஆகும். நீற்றறையில் ஏழு நாட்களிருந்தபோது, நாவுக்கரசர் அவன் தாள் வணங்கி அவனருளைப் பெறுகின்றார். 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற பாடலில் "நாமார்க்கும் குடியல்லோம்" என்பதால் தன்வயத்தனாகிறார். "நமனை அஞ்சோம்" என்பதால் தூய உடம்பினனாகிறார். "நரகத்தில் இடர்ப்படோம்" என்பதால் இயல்பாகவே பாசங்களின் நீங்குதலும், "ஏமாப்போம்" என்பதால் பொருளுடைமையும், "பிணி அறியோம்" என்பதால் முற்றுமுணர்தலும், "பணிவோம் அல்லோம்" என்பதால் முடிவிலாற்றலுடைமையும், "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என்பதால் வரம்பிலின்பமுடைமையையும் பெறுகின்றார். இவை இறைவனுக்குரிய எண் குணங்கள். இக்குணங்கள் சிவபெருமானின் திருவடிகளை அடைந்ததால் இவை தமக்கு உண்டாயின என்று அப்பர் கூறுகிறார். இறைத் தன்மையடைய இறையனுபவம் பெற வேண்டும். அவ்விறையனுபவம் பலவகைப்படும். அவையாவன:

- இறைவனின் திருநாமங்களைச் சொல்லி அனுபவித்தல்
- திருக்கல்யாண குணங்களைச் சொல்லி அனுபவித்தல்

- வடிவழகைச் சொல்லி அனுபவித்தல்
- அவனெழுந்தருளிய திவ்விய தேசங்களின் வளங்களைச் சொல்லி அனுபவித்தல்
- அங்கே அபிமானமுள்ள ஸ்ரீ வைஷ்ணர்களின் பெருமையைப் பேசி அனுபவித்தல்

போன்றவையாகும். நாவுக்கரசரும் இவ்வகையான அனுபவங்களைப் பெறுவதற்காக அவன் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களுக்குச் சென்றதோடு மட்டுமல்லாது திருத்தொண்டும் புரிந்து வருகின்றார். அவ்வாறு அவர் சென்றபோது அவர் பெற்ற இறையனுபவங்களைத் தம் பாடலில் வெளிப்படுத்துகிறார்.

திருநல்லூரில் எழுந்தருளியுள்ள இறைவன் தமக்குத் திருவடி தீட்சை அருளிய அற்புதத்தை,

'நல்லருளால் திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூர்எம் பெருமானார் நல்லவாறே'

என்று பாடுகின்றார். திருச்சிவபுரத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் நாமம் சிவன் என்றும், அவனது வடிவழகு கெடில வீரட்டத்தில் உள்ள மூர்த்த வடிவமே என்பதையும்,

'கையவன் காண் கையில்மழு ஏந்தி னான்காண்
காமரங்கம் பொடிவிழித்த கண்ணி னான்காண்
செய்யவன்காண் செய்யவனை மாலுக் கீந்த
சிவனவன் காண் சிவபுரத்தெஞ் செல்வன் தானே'

என்று தான் கண்ட காட்சியைப் பிறரும் காணுமாறு காட்டுகின்றார்.

தாண்டகப் பதிகத்தில் வலிவலத்து ஈசனின் கல்யாண குணங்களைப் பாடி,

'வலிவலத் தான்காண் அவனென் மனத்துளானே'

என்று இறைவன் தன் மனத்தில் ஒன்றி இருக்கும் அத்வைத நிலையைக் காட்டுகின்றார்.

திருப்பயற்றூர் தலத்திலுள்ள ஈசன் அடியவர்களுக்குத் தந்தையாய் தாயாய் இருப்பதோடு மட்டுமல்லாது,

'சிந்தையும் சிவமும் ஆவார்'

என்று முத்தி அருள்வதாக கூறிப் படிப்பவர்களுக்குப் பக்தியுணர்வை ஊட்டுகின்றார். செங்காட்டங்குடியில் குடிகொண்டிருக்கும் இறைவன் அடியவர்களுக்கு ஆரமுதாக, தேனாக இனிப்பதாகக் கூறுகிறார். திருமுறைக்காடெனும் திருப்பதிக்கு வருகை புரிந்த அப்பரும்,

காழிப்பிள்ளையும் திருக்கதவுகள் அடைந்திருப்பதைக் கண்டு பதிகம் பாடி மீண்டும் திறக்கவும், அடைக்கவும் செய்கின்றார். பின் அங்குள்ள மடத்தில் அடியார்களுடன் வந்து அமர்கின்றனர். அப்பொழுது நாவுக்கரசர், தாம் அரிதில் திறக்கப் பாடிய தன்மையையும், காழிப் பிள்ளையார் விரைவில் அடைக்கப் பாடிய எளிமையையும் நினைத்து, இறைவனது திருக்குறிப்பினை யான் உணராது அயர்த்தமையே எனக் கவலை யுற்றவராய் துயில் கொள்கின்றார். அப்பொழுது அவர் கனவில் அம்மையப்பர், பொன்மேனியில் வெண்ணீறு பூசிய சைவ வேடத்தினராய்த் தோன்றி அன்பனே வாய்மூரில் இருப்போம் எம்மைத் தொடர்ந்து வருக என்று கூறி முன்னே செல்லுகின்றார்.

''எங்கே என்னை இருந்திடந் தேடிக் கொண்
டங்கே வந்தடை யாளம் அருளினார்
தெங்கே தோன்றும் திருவாய்மூர்ச் செல்வனார்
அங்கே வாவென்று போனார் தென்கொலோ''

என்று பாடிக்கொண்டு ஈது எம்பிரான் அருளாகில் யானும் ஏகுவேன் எனவெழுந்து செல்லத் தொடங்குகிறார். இறைவன் அணிமையில் காட்சித் தருவது போலத் திருக்கோயிலை எதிரே காட்டி மறைந்து விடுகிறான்.

''கழியக் கண்டிலேன் கண்ணெதிரே கண்டேன்''

என்று இறைக்காட்சிக் கிடைக்காதது கண்டு புலம்புகிறார்.

ஆனால் திருக்கழுக்குன்றத்திலுள்ள இறைவனோ தனக்கு காட்சி யளித்ததைக் கண்ணாரக் கண்டதாக,

'கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் தானே'

என்று பாடிக் கழிக்கின்றார்.

கயிலைக் காட்சி காண விரும்பிய திருநாவுக்கரசர் காளத்திப் பெருமானை வழிபட்டுப் பின் வடதிசை நோக்கிப் பயணத்தை மேற்கொள்கின்றார். திருப்பருப்பதம், கோகரணம், காசி போன்ற திருத்தலங் களில் மன்னிய பெருமானை வழிபட்டுக் கொண்டு கயிலையை நோக்கிச் செல்கின்றார். தேவர்களும் தனியே வருதற்கு அஞ்சும்படியான பாலை நிலத்தில் நடந்து செல்கிறார். அப்பர் பெருமான், தசையொழியக் கால் தேய இரவு பகலெல்லாம் நடக்கின்றார். கால்கள் தேய்ந்தாலும் கயிலைப் பெருமானைக் காண வேண்டும் என்னும் பேரார்வத்தால் தனது இரண்டு கைகளையும் ஆதரவாகக் கொண்டு ஊர்கிறார். பின் மார்பினால் நகர்ந்து செல்கிறார். மார்புத் தசைகளும், விலா எலும்புகளும் கெட்டு விடுகின்றன. அடியவர்களின் ஆசையை நிறைவேற்றுவதற்குத் தயங்காத

கயிலைநாதன், நாவேந்தர் செல்லும் வழியில் ஒரு தடாகத்தை உண்டாக்கி முனிவர் வடிவத்துடன் அங்கு நிற்கின்றார். அங்கு வந்த நாவுக்கரசரைப் பார்த்து 'நீர் எங்குச் செல்கின்றீர்' என்று கேட்டு அவர் ஆசையை அறிந்து கொண்டு, அங்கு செல்வது அரிது என்கிறார். ''மாளும் இவ்வுடல் இன்றே பிரிந்தாலும் கவலை கொள்ளேன்'' என்ற நாவுக்கரசர் உறுதி கண்டு விண்ணிலே மறைகின்றார். 'ஓங்கு நாவுக்கரசனே எழுந்திரு' என்று அழைத்து, அழிந்த உடலுறுப்புகளைத் திரும்பப் பெறச் செய்கின்றார். நாவுக்கரசரின் வேண்டுகோளுக்கிணங்கி ''நீ இந்தப் பொய்கையில் மூழ்கி நாம் கயிலையில் இருக்கின்ற திருக்கோலத்தைக் கண்டு மகிழ்வாயாக'' என அருளுகின்றார். தவமுனிவராய் வந்த கயிலைநாதன், பணித்த வண்ணம் அவர் காட்டிய பொய்கையில் மூழ்கியமையால் காற்சுவடு பட நடக்காமல் தாம் திருவையாறு அடைந்தமையும், அங்கு வாழும் எல்லா உயிர்களும் சக்தியும் சிவமுமாக விளங்கிய தெய்வக் காட்சியை, அற்புதக் காட்சியை,

'மாதர்பிறைக் கண்ணி யானை
　　மலையாள் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
　　புகுவா ரவர்பின்பு புகுவேன்
யாதும் சுவடு படாமல்
　　ஐயா றடைகின்ற போது
காதல் மடப்பிடி யோடும்
　　களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதம்
　　கண்டறி யாதன கண்டேன்'

என்கிறார். மேலும் பசுபதி, பால்நீற்றாய், ஐயாறனே என்று பலவாறு கதறி அரற்றி உள்ளம் உருகி நைந்து பாடுகின்றார். புகலூர்ப் பெருமானை வணங்கி உழவாரத் தொண்டு செய்து, நெறியிலா நெறியில் சென்று வாணாட்களைக் கழித்ததை எண்ணி வருந்துகின்றார். நாவுக்கரசர் புகலூர் மேவிய புண்ணியனை ''எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேன் புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்'' என்று நெஞ்சம் கசிந்துருகி, சிவானந்த வடிவேயாகி இறைவனது திருவடிக் கீழ் இருந்து இன்புறுகிறார்.

இறைவன் தன் அடியார்களை உலக மாயையெனும் சுழலில் சிக்க வைத்துப் பின், மெய்ப்பொருளினை உணரச் செய்து ஆட்கொள்ளும் தன்மையுடையவன் என்பதையும், திருநாவுக்கரசரின் வாழ்க்கை மூலம் கண்டோம்.

58. நாவுக்கரசர் உணர்த்தும் அறம்

கோ. சுரேஷ்சுப்பிரமணியன், புதுக்கோட்டை.

நாம் வசிக்கும் வீடு இருள் படர்ந்து கிடப்பதைக் கண்டவுடனே, நாம் அதனுள் விளக்கினை ஏற்றி ஒளிரச் செய்கின்றோம். அதுபோலவே, நம்முள் இருக்கும் இருளை நீக்கிடவே, அவதரித்தவர், மருள்நீக்கியார்.

மருள் - மருட்சி - அறியாமை

மருள்நீக்கியார் - அறியாமை(யை) நீங்கியவர், நீக்குபவர். அவர் உலகுக்கு உணர்த்தும் அறம், யாதெனச் சற்றே சிந்திப்போமாக.

சிந்தனையும், செயலும்

சிந்தனைகளே செயல்களாக உருவெடுக்கின்றன. நம் செயல்களுக் கெல்லாம் மூலமாக இருப்பது சிந்தனையேயாகும். சிந்தனை இன்றிச் செயல் இல்லை.

மனிதனை மாசுபடுத்துவது புறப்பொருள் அல்ல, அவன் இதயத்தில் எழும் இழுக்கான எண்ணங்கள் தாம்.

ஆம், தீய செயல்களுக்கெல்லாம் ஆதாரமாக உள்ளவை தீய எண்ணங்கள் தான். சிந்தனையில் தீமை இல்லையெனில் செயலிலும் இருப்பதில்லை. சிந்தனை தூய்மையாக இருந்தால் செயல்களும் தூய்மையாகி விடுகின்றன.

ஞானிகள் குலுங்கக் குலுங்கச் சிரிப்பதில்லை. புன்முறுவலாகவே அவர்கள் சிரிப்பு இருக்கும். ஆயினும் நம் நாவுக்கரசர்,

"விலாவிறச் சிரித்திட்டேனே!"

என்று கூறுகின்றார்.

அதுமட்டுமல்ல

"வெள்கினேன் வெள்கி நானும்
விலாவிறச் சிரித்திட்டேனே!"

என்கிறார்.

ஏன்? இப்படி அவர் சிரித்தார்?

"நான் கள்ளத்தனமாக மனத்திலே எத்தனையோ தீய எண்ணங்களை மறைத்து வைத்துக்கொண்டு காலத்தைப் போக்கினேன். சிறிது மனம் தெளிந்தது. இறைமையைத் தேடினேன். என்ன அதிசயம்! அது என் உள்ளத்திலேயே இருக்கிறது! நான் உள்ளத்தில் எண்ணியவற்றை யெல்லாம் இறைமை அறிந்து கொண்டு இருக்கிறது. என் எண்ணங்கள் எவருக்கும் தெரியாது என்று நினைத்துக் கொண்டிருந்த எனக்கு இறைமை இவ்வாறு உள்ளத்திலேயே இருந்து கொண்டு நான் உள்ளியதை எல்லாம் அறிந்து கொள்ளுகிறது என்பது தெரிந்ததும் எனக்கு வெட்கம் தாங்க முடியவில்லை. இதனால்தான் நான் விலாப்புறங்கள் வலிக்கும் அளவுக்கு விழுந்து விழுந்து சிரிக்கிறேன்!" என்கிறார்.

"கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க் காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியே னாகிநின்று தேடினேன் நாடிக் கண்டேன்
உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந்து அறிதிஎன்று
வெள்கினேன் வெள்கிநானும் விலாவிறச் சிரித்திட்டேனே!"

(நாவுக்கரசர் - பொது)

நாவுக்கரசர், தம்முடைய அறியாமையைக் கண்டு கோபப்பட வில்லை. சிரிக்கின்றார்! தமது அறியாமை சாதாரணமாக இருந்தால் அவருக்குக் கோபம் வந்திருக்கும். அது அளவு கடந்த அறியாமையாக இருப்பதால் கோபம் சிரிப்பாக மாறிவிடுகிறது.

"நம் இதயத்து எண்ணங்கள் வெளியே தெரிவதில்லை. எவரும் அவற்றை அறியமாட்டார்கள். நாம் எத்தகைய தீய எண்ணங்களுக்கும் இதயத்தில் இடம் கொடுக்கலாம்" என்று நாம் கருதுகிறோம். இதன் விளைவாக எண்ணற்ற தீயெண்ணங்கள் நம் இதயத்திலே எழுந்து நிலைபெறுகின்றன. எவரும் அறியமாட்டார்கள் என்ற உறுதியால் தீய எண்ணங்களை நாம் வளர்த்துக்கொண்டே போகிறோம்.

ஆனால், உண்மை நிலை என்ன?

எல்லாமாகி எங்கும் நிறைந்துள்ள இறைமை நம் இதயத்திலும் உள்ளது. நம் இதயத்தில் இருந்துகொண்டு நம் எண்ணங்கள் அனைத்தையும் அது அறிகின்றது. இந்த உண்மையினை உணராமல்தான் நாம் கள்ளத் தனமான எண்ணங்களை நம் உள்ளத்தில் உரம் பெறச் செய்கிறோம்.

இது எவ்வளவு மடமையான செயல்! இந்த மடமையைக் கண்டுதான் நாவுக்கரசர் நகைக்கின்றார்! வெட்கி, விலாப்புறங்கள் வலியெடுக்கச் சிரிக்கின்றார்.

தீய எண்ணங்கள் ஏதுமின்றி மக்களை இருக்கச் செய்வது எவ்வாறு?

குற்றங்கள் மக்கள் செய்தால் அரசாங்கம் அவர்களைத் தண்டிக்கிறது. சட்டமும், காவல் துறையும் இதற்குத் துணை செய்கின்றன. ஆனால், தீச்செயலுக்கு மூலமாகத் தீய எண்ணங்கள் அல்லவா இருக்கின்றன? மக்கள் மனத்திலே தீய எண்ணங்கள் எழாது இருந்தால் தானே தீய செயல்கள் நிகழாது இருக்க முடியும்? அத்தீய எண்ணங்களைத் தடுப்பது எப்படி?

உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்கள் காட்டும் கருவி இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. மனதிலே எழும் மாசுபடிந்த எண்ணங்கள் வெளியே தெரிவதில்லை. எனவே, அவற்றைத் தடுக்கும் சக்தி சட்டத்திற்கும் இல்லை, காவல் துறைக்கும் இல்லை.

மக்கள் ஒருவருக்கொருவர் தீங்கு செய்யாது, இசைந்து இன்பமாக வாழ வேண்டும் என்ற நோக்கத்துடன் இயங்கும் அரசாங்கத்தால், தீங்கான செயல்களுக்கு மூலமான தீயசிந்தனைகளைத் தடுக்க முடிவதில்லை!

மனத்தின் மாசினை அகற்றுவது இறையுணர்வுதான். இதனை அறுதியிட்டுக் கூறுகின்றார் திருநாவுக்கரசர்.

"..
தனத்தினைத் தவிர்ந்துநின்று தம்மடி பரவுவார்க்கு
மனத்தினுள் மாசுதீர்பார் மாமறைக் காடனாரே."

(தேவாரம் - திருமறைக்காடு)

நம் வாழ்வில் பலரைப் பார்க்கிறோம். பக்தர்களாகத் தெரிகின்றார்கள். ஈசன் பெயரை உச்சரித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் செய்யும் வழிபாடும், வந்தனையும் நமக்கு வியப்பூட்டுகின்றன. ஆனால், அவர்கள் பிறர்க்குக் கேடு செய்வதற்கு தயங்குவதில்லை. வஞ்சித்து மற்றவர்களைக் கெடுப்பதில் வல்லமையுடையவர்களாக இருக்கின்றனர். இது எப்படி என்று ஐயப்பாடு நமக்கு எழுகின்றது.

உண்மையில் அவர்கள் இறைமையில் ஈடுபடவில்லை. அவர்கள் இதயத்திலே இறையுணர்வு சிறிதும் இல்லை என்பதே இதற்கு விடையாகும்.

வஞ்சனை நிறைந்த உள்ளத்துடன் ஐந்தெழுத்தைக் கூறிக்கொண்டே இருந்தாலும் அவர்கள் இதயத்தில் இறைமை விளங்குவதில்லை என்கிறார் நாவுக்கரசர்.

"..........வஞ்சனையால் அஞ்செழுத்தும்
வழுத்துவார்க்குச் சேயானை." (தேவாரம் - திருவீழிமிழலை)

உள்ளத்திலே கள்ள எண்ணங்கள் இல்லாமல் இருந்தால் தான், மனத்திலே மாசுபடிந்த சிந்தனைகள் இல்லாது இருந்தால் தான், நம் இதயம் தூய்மையாக இருந்தது என்று கூற முடியும். தூய்மையான

உள்ளத்தில்தான் இறைமை விளங்குகிறது. கள்ள நெஞ்சமும் வஞ்சகக் கருத்தும் இல்லாமல் ஒன்றி நினைப்பவர் உள்ளத்தில் தான் இறைமை உள்ளது.

அறம்

மனத்திலே மாசு இல்லாவிட்டால் பொய் ஏது?

புரட்டு ஏது? கள்ளம் ஏது, களவு ஏது?

வஞ்சனையும், வன்கண்மையும் ஏது?

பொய்யும் புரட்டும், சூதும் வாதும் தானே மக்களின் இன்ப வாழ்விற்கு இடையூறுகளாக உள்ளன. இவைகள் இல்லை என்னில் மக்களின் இன்ப வாழ்விற்கு இடையூறு இல்லை.

எனவே மனதில் மாசு இல்லாமல் இருப்பதுதான் "அறம்" என்கிறார் திருவள்ளுவர்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீல பிற." (குறள் - 34)

இத்தகைய அறத்தால் விளைவது என்ன? - மக்களின் இன்ப வாழ்வு. தீச்செயல்கள் இல்லையெனில் மக்களது இன்பம் நிலைக்கிறது. இதனையும் திருவள்ளுவர் தெளிவாகக் கூறுகின்றார்.

"அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல" (குறள் - 39)

இவ்வாறு, அறம் - மக்களுக்கு இன்ப வாழ்வினை கொடுப்பது என்பது தெளிவுறும். அறம் என்பது மனத்திலே மாசின்றி இருத்தல் என்பதும்.

ஆம்! மனத்திலே மாசின்றி இருப்பதற்கு உறுதுணையாக இருப்பது இறையுணர்வு.

"மனத்தினுள் மாசு தீர்ப்பார் மாமறைக்காடனாரே"

(தேவாரம் - திருமறைக்காடு)

என்று அறம் உணர்த்துகின்றார் அப்பரடிகள்.

இது மட்டுமா! நாம் ஒவ்வொருவருமே நம் கடமைகளைச் செய்கையில் அவற்றால் விளையும் பயன் எதுவாயினும் பற்று வைத்தல் ஆகாது என்கின்றனர் ஞானிகள்.

"செய்தலுன் கடனே - அறம்
செய்தலுன் கடனே - அதில்
எய்துறும் விளைவினில் எண்ணம் வைக்காதே"

(பாரதியார் - ஆரியதரிசனம்)

என்பதே அறநூல்கள் அறிவுறுத்தும் சீரிய நெறியாகும்.

மெய்யுணர்வு பெற்ற ஞானிகள் துறவறம் என்பது என்ன என்று போதித்துள்ளனர்.

உண்மைத் துறவு என்பது உற்ற கடமைகளைத் துறப்பதன்று, அவற்றால் உறும் பயனைத் துறப்பதுதான்.

"தன்னை மறப்பது, தன்னலம் துறப்பது, பற்றுதல் இன்றிப் பணி யினைத் தொடர்வது இதுவே ஞானம்".

"பற்றற்ற கருமம், தந்நலம் துறப்பது, பற்றுதல் இன்றிப் பணி யினைத் தொடர்வது இதுவே ஞானம்!"

விளையும் பயனில் வைக்கும் பற்றுத்தானே கருமத்தை செய்யத் தூண்டுகிறது. பிறகு எப்படிப் பற்றுதல் இன்றிக் கருமத்தைச் செய்வது? இதற்குப் பதில் தருகிறார் நாவுக்கரசர்,

"ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே,
அடக்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே"

(தேவாரம் - பொது)

ஆம்! ஆட்டுவது இறைமை, ஆடுவது நாம்.

சமுதாயக் குற்றங்கள் மனத்தின்கண் எழாமல் சமுதாயம் நல்லிணக்கம் பெற்று உய்ய வேண்டும். சாதி, குலம், பிறப்பு ஆகிய பிறவினைகளைத் தூண்டும் சமுதாயக் குற்றங்களை களைந்திடவும் அரசாங்கமும், ஆட்சி பொறுப்பில் இருப்பவர்களும் சட்டங்கள் இயற்றியும் அவற்றை அமல்படுத்துவதாக கூறியும் அவர்களே அக்குற்றங்களுக்கு உறுதுணையாக இருக்கின்றனர்.

இதனைக் களைந்திடவும் தேவை நல்லறம், அதனைத் தருவதும், இறைமையே என்கிறார் திருநாவுக்கரசர்.

"பசுவை உரித்துத் தின்று திரியும் புலையராயினும் இறைவனுக்கு அன்பரானால் அவரை நான் வணங்கும் கடவுளாக மதிக்கிறேன்" என்கிறார்.

உறுதியான இறையுணர்வு உள்ளத்திலே பதிந்து விட்டால் அகத்திலே அருளுணர்வு ஆறாகப் பெருகிவிடும். வேற்றுமைகள் மறைந்து ஒற்றுமை ஓங்கும்.

"அருள் நெறியே அறநெறி அதுவே இறைநெறி"

என்ற உண்மையே நாவுக்கரசர் உணர்த்தும் அறம்.

59. நாவுக்கரசரின் வீரமும் தொண்டும்

இராம. சௌந்திரவல்லி, மேலகரம்.

பக்தி உலகில் பேரியக்கத்தை உருவாக்கி, அகமும் புறமும் தூய சைவராய் விளங்கி, சமயக்குரவர் நால்வரில் ஒருவராய், தம் நா நலத்தாலும் பெருகிவழியும் பக்தி உணர்வாலும் இம்மண்ணுலகில் நீங்காப் புகழ் பெற்றவர் திருநாவுக்கரசு சுவாமிகள். இறைவனிடத்தே பக்தி செய்வது தாம் உய்தியடைதற்கு மட்டுமே என்றில்லாமல், உலகத்து உயிர்கள் அனைத்தின் நற்கதிக்காகவும் தேவாரப் பாசுரங்களைப் பாடித் தந்து, தலந்தோறும் யாத்திரை செய்து பக்தியை இயக்கமாக்கி வளர்த்த பெரியார். இவரைச் சமயவாதி என்ற அளவில் சுருக்கிவிடாமல், மிகச்சிறந்த சைவ சமய வீரர் எனவும், சமூகத் நலத் தொண்டர் எனவும் போற்றுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

சங்க காலம் வீரயுகக் காலம் எனப்படுகிறது. காரணம், அன்றையப் புறவாழ்வு என்பது போர்க்களம் கண்டு வெற்றி தோல்விகளைத் தழுவி, விழுப்புண் பெற்று வீரசுவர்க்கம் அடைதலே எனக் கருதியமையே. ஆனால் ஒருவன் போர் செய்தால் மட்டுமே வீரன் என்பது எனப்படுவான் என்று கொள்ள வேண்டாம். அன்பின் மகத்துவத்தைப் போதித்த மாமனிதனை இம்மண் மகாவீரர் எனப் போற்றியது என்று அறிகிறோம். புறத்தே செய்யும் போர் மட்டுமல்லாது, அகத்தே செய்யும் போரில் வெற்றி பெறுபவரும் வீரர் என்றே அழைக்கப்பட்டனர்.

"புலனடக்கம் பெற்ற தொண்டர்களை வீரர் என்று கவிஞர் பாராட்டுகிறார். இவ்வாறு தன்னைத்தான் ஒருவன் வெற்றி கொள்வது தான் வீரம் என்பது அவரது முடிவு. வேறு எத்தகைய தவம், செபம், பூசை முதலியன செய்யாவிடினும் இந்திரியங்களை வென்று, யான் எனது எனும் பகையை ஒழித்தவர்களே தொண்டுள்ளம் படைத்தவர்களாக ஆக முடியும். இந்த வளர்ச்சியை ஒருவர் பெறுகின்ற நிலை வரும்பொழுது அவருக்குப் பகை, நட்பு, வேண்டியவர், வேண்டாதவர் என யாரும் இருக்க முடியாது. யார் தீங்கு செய்தாலும் அதை ஏற்றுக்கொண்டு அனுபவிப்பதுடன் அத்தீங்கை இழைத்தவர்களிடங் கூடக் காழ்ப்புணர்ச்சி இல்லாமல் இருப்பர். மன்னிக்கும் இயல்பைவிட இதுபலபடி மேம்பட்ட தாகும். மன்னிக்கும் பொழுது மன்னிக்கப்படுபவர் தாழ்ந்தவராயும் மன்னிப்பவர் உயர்ந்தவராகவும் ஆகிவிடுகின்றனர். இந்த வேறுபாட்டுக்கும்

இடம் தராத நிலைதான் கீதை கூறும் சமதிருஷ்டி நிலைமை. பெரிய புராணத்தில் வரும் தொண்டர்கள் இந்த நிலையை அடைந்தவர்களே யாவர்'' (பெரியபுராணம் ஓர் ஆய்வு, ப. 425) மேற்கூறிய கருத்து திரு அ.ச.ஞா. அவர்கள் வீரம் என்பதற்கும் தொண்டர் என்பதற்கும் தருகின்ற விளக்கமாகும்.

தனக்கென ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டு அதில் எந்நிலையிலும் பிறழாமல் நிற்றலே ஆன்மவீரம். அதனால் தமக்கு ஏற்படும் இழப்புக்களையும், துன்பங்களையும் பொருட்படுத்தாத திட்பமும், அதன் காரணிகளாக இருப்பவர்கள்பால் கோபப்படாத மனநலமும் பெற்றிருப்பவர்களே ஆன்மவீரர்கள். சைவ சமய நெறி சார்ந்த அப்பர் சுவாமிகள் இத்தகு பெருவீரராகவே காட்சி தருகிறார்.

பெயக்கண்டும் நஞ்சுண்டமைவது பெருவீரமாகும். சமண சமயத்தினின்று புறத்தே வெளிவந்து, மீண்டும் சைவராகிய திருநாவுக்கரசர் தான் கொண்ட கொள்கையில் நடுக்கமின்றி இருந்தார். ஆனால் அக்காலத்து, மன்னரிடத்தே செல்வாக்குப் பெற்ற சமண சமயத்தவர் சும்மாயிருக்கவில்லை.

நாவரசரை நீற்றறையில் இட்டபோது, அவ்விடம் தனக்கு மாசில் வீணையும், மாலை மதியமும், வீசுதென்றலும், வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போல விளங்குவதாகக் கூறி இறுதியில் இதுவே இறைவனின் இணையடி நிழல் எனப் பாடுவார் என்றால், அவர்தம் உள்ளத்தில் எந்தக் காழ்ப்புணர்வும் இன்மையை அறிகிறோம். கல் மிதப்பில் இட்டபோதும், களிற்றின் காலில் இடறச் செய்தபோதும் நமச்சிவாய மந்திரத்தின் பெருமையால் உய்ந்தார். மன்னனே அழைத்து வரச் சொன்னபோது,

''நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை''

(மறுமாற்றுத் திருத்தாண்டகம் - 1)

என்று பேசுவார் என்றால் அவர் உள்ளத்து உறுதியை அறியலாம். குடியாட்சிக் காலத்திலேயே, அரசின் கட்டளைக்கு அஞ்சிக்கிடக்கும் மக்கள் வாழ்கின்ற இந்த நாட்டில்தான், முடியாட்சிக் காலத்திலும் மன்னன் கட்டளையை மறுத்து 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று கூறும் பக்தி உறைப்பு நாவரசரிடம் நிரம்பிக் கிடந்தது. சிலநாள், பல்பிணி, சிற்றறிவு கொண்டு வாழும் மானிடர்க்கு அஞ்சி வாழும் வாழ்வு வாழ்வல்ல; 'இனி அஞ்சுவதும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை; இறைநாமத்தை இடையறாது ஓதி உணர்தலே தனக்கு இன்பவாழ்வைத் தரும்' என்னும் மனத் தெளிவை இவ்வீர உணர்வே இவர்க்குத் தந்தது எனலாம். அதனால்தான் திருத்தொண்டர் கூட்டத்துச் சிறப்பினைப் பேச வந்த சேக்கிழார்,

"ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ?"

என்று கூறி வியக்கின்றார்.

மானிடர்தம் கட்டுப்பாடுகளுக்கு அஞ்சாது, சமய வாழ்வில் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் வாழ்ந்த அப்பர் சுவாமிகள், இறையருள் பெற்று உய்தியடைதல் என்ற தன்னல வேண்டுதலோடு நின்று விடவில்லை. ஆன்மீகம் என்பது சமுதாயத் தொண்டாக மலர்கின்ற பொழுதுதான், நிலைத்த தன்மை பெறுகிறது. மக்களின் துயர் துடைக்கும் உணர்வே சமயவாதிகளின் தலையாய கடனாதல் வேண்டும். பொதுமக்களிடம் வராத சமயம் தானும் தளர்ந்து, மக்களிடத்துச் செல்வாக்கும் இழந்து விடும். சமுதாயத்திற்குத் தொண்டு செய்யும் உயர்ந்தவர்களைப் பேசுவதால் தான் பெரியபுராணம் திருத்தொண்டர் புராணம் எனப்பட்டது. சமுதாயத் தொண்டு என்பது நாவரசருக்கு இளமையிலேயே உருவான ஓர் உணர்வு எனலாம். தான் சமணத்திற்கு வருவதற்கு முன்பே, உலக நிலையாமையை உணர்ந்து, நிலைத்த அறங்கள் செய்யும் எண்ணம் கொண்டு விளங்கினார். இதனை,

"...
தேசநெறி நிலையாமை கண்டறங்கள் செய்வாராய்க்
காசினிமேல் புகழ்விளங்க நிதியளித்துக் கருணையினால்
ஆசில்அறச் சாலைகளும் தண்ணீர்ப் பந்தரும் அமைப்பார்"
(திருநாவுக்கரசர் புராணம் - 35)

எனச் சேக்கிழார் பேசுகிறார். உணவு கொடுக்கும் அறச் சாலைகளும், தண்ணீர்ப் பந்தலும் அமைத்து, வருந்தி வந்தவர்களுக்கு நிதியளித்து வந்தார். அவை மட்டுமன்றி சோலைகள் அமைத்தும், குளம் தொட்டும் சமூகப்பணி செய்தார். சமணம் புகுந்து, சூலை நோய் உற்று, மீண்டும் சைவரான பொழுது தமக்கையார் திலகவதியார் இட்ட கட்டளையும், "பற்றறுப்பார் தமைப்பணிந்து பணி செய்வீர்" (தி.புராணம்-65) என்பதே யாகும். ஆகவே தான் நாவரசர் இடல்பூக்கத்தாலும், தனக்கு சிவதீட்சை யளித்த தமக்கையார் கட்டளையாலும் சமூகத் தொண்டு செய்வதையே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டார். தன் உள்ளக் கிடக்கையை,

"நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன்னடி யேனயுந் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே" (திருக்கடம்பூர் - 9)

என்ற தேவாரத்தில் வாக்குறுதியாகத் தெரிவிக்கிறார்.

அடியார்க்குச் செய்யும் தொண்டு மகேசுவர பூஜை எனப்படும். இறையடியார்களாகிய பொதுமக்களையே திருமூலர் 'நடமாடும் கோயில் நம்பர்' எனக் குறிப்பிடுவார். இறைவனுக்குச் செய்யும் தொண்டினும்,

மக்கள் தொண்டு மேலானதாகக் கருதப்பட்டது. இவ்வடியார்களையே இறைவனாகக் காணும் மனவலிமை பெற்றவர் நாவரசர்,

"அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"

(தனித்திருத்தான்டகம்)

சாதி, இனம் முதலிய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு, எத்தகு இழிநிலை உடையரானும் இறையடியார் என்றால் அவர்களை இறைவனாகவே காணும் மனப்பக்குவம் பெற்றவர்.

திருவீழிமிழலை என்னும் பதியில் வற்கடம் புகுந்தபோது, அத்தலத்திற்குச் சென்ற சுவாமிகள், நிலைமை கண்டு வருந்தினார். அம்மக்கள் படும் துயர் அவர் மனத்தை வாட்டியது. தலயாத்திரை சென்றவர் பேசாமல் திரும்பியிருக்கலாம். ஆனால் அடியார்கள் படும் துயர் துடைக்காது அவ்விடம்விட்டு அவர் அகலவில்லை. இறையருளால் பொற்காசுகள் பெற்று, திருமடம் அமைத்து உணவிட்டார். அவர் காலத்தவரான திருஞானசம்பந்தரும் இப்பணி செய்தார் என்ற வரலாற்று உண்மைகள், இவர்கள் தம் சமூக உணர்வை உணர்த்துவன.

திருக்கோயில் பணியும் சமூகப்பணியே. ஏனெனில் அக்காலத்தில் கோயில்களே சமுதாயக் கூடங்களாக விளங்கின. திருக்கோயில்களே போர்க்காலத்தில் மக்களுக்குப் புகலிடங்களாயின; பஞ்சகாலத்தில் உணவிட்டன; விழாக்காலத்துக் களங்கள் ஆகின; மன்னர்களுக்கும் மக்களுக்கும் இருந்த நெருங்கிய தொடர்பினை இக்கோயில்களே வலுப்படுத்தின. ஆகவே அக்கால மக்கள் வாழ்வில் திருக்கோயில்கள் பேரிடம் பெற்றன. சமணர்களின் செயலால் பழையாறை வடதளி என்ற திருக்கோயில் மண்ணால் மூடப்பெற்றது. இத்திருக்கோயில் சென்ற நாவரசர் இம்மண்ணுக்குள் இருந்த பெருமானைக் காணாது இங்கிருந்து செல்லேன் என்று சபதம் கூறி உண்ணா நோன்பிருந்தார். இதனை,

"வண்ணங்கண்டு நான் உம்மை
வணங்கி அன்றிப் போகேன் என்று
எண்ணம் முடிக்கும் வாகீசர்
இருந்தார் அமுது செய்யாதே" (தி.புராணம்-296)

என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார். பிறகு இறையருளால் மன்னன் வந்து, அம்மண்ணினை அகற்றப் பணித்தான். பின்னர் இறைவனை தரிசனம் செய்த நாவரசர் "தலையெலாம் பறிக்குஞ் சமண் கையர்" எனத் தொடங்கும் பதிகம் பாடி வழிபட்டார். இவண், தான் நினைத்த தொண்டினை நிறைவேற்றுவதற்காக உண்ணா நோன்பிருந்த உரத்தைக் காண்கிறோம்.

"உலகத்தின் முதல் சத்தியாக்கிரகி வாகீசர்" என்று வியந்து பேசுகிறார் அ.ச.ஞா. (பெரியபுராணம் - ஓர் ஆய்வு, ப.325)

திருமறைக்காடு எனப்படும் வேதாரண்யத்திலும் வாகீசர் ஆற்றிய தொண்டு நினைத்தற்குரியது. இத்திருக் கோயிலில் வேதங்கள் பூசித்துச் சென்ற பின்னர் மூடப்பட்ட கதவு திறக்கப்படாமலேயே, பின்கதவு வழியாக பக்தர்கள் வந்து சென்றனர். திருஞானசம்பந்தப் பிள்ளையார் நேர்முக வாயில் வழியாகச் சென்று வணங்க விரும்பினார். எனவே உடன் வந்த அப்பர் சுவாமிகளைத் திறக்கப் பாடுங்கள் என வேண்டினார். அப்பொழுது,

"பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணினார் வலஞ்செய்ம் மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினோ" (5-ம் திருமுறை)

என்று வாகீசர் பாடவே பதிகம் நிறைவு பெறும் பொழுது திருமறைக்காட்டுக் கோயில் கதவு திறந்து கொண்டது. இவ்வாறு பக்தர்கள் நலன் கருதி, கோயில் தொண்டுகள் ஆற்றியமை நோக்கற்குரியது.

அடியாரின் பசித்துன்பம் துடைத்தமைபோல, அவர்கள் தம் வாழ்வில் சிக்கல்கள் ஏற்பட்டபோதும், அத்துன்பங்களைத் துடைத்தார். திருநாவுக்கரசரையே உயர்ந்த தலைவராகக் கருதும் அப்பூதியடிகளின் இல்லத்திற்கு உணவுண்ணச் சென்றபோது, விடம் தீண்டி இறந்துபோன அவர்தம் மைந்தனை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டி விடம் நீக்குப் பதிகம் பாடினார் எனப் பார்க்கிறோம்.

தன்வாழ்வின் இறுதிவரை, தன் தமக்கையார் கூறிய வண்ணம் தொண்டு செய்து வாழ்ந்த வாகீசர், திருக்கோயில்களையும், இறையடியார் வழங்கும் இடங்களையும் தூய்மைப்படுத்தும் உழவாரப் பணியை உயர்ந்த பணியாகக் கருதிச் செய்தார். செம்பொன்னும் நவமணியும் குப்பைகளோடு சேர்த்துத் தன் உழவாரப் படையினால் ஒதுக்கி எறிந்தார் என இவரது பற்றற்ற உள்ளத்தைப் பேசுகிறது பெரியபுராணம் (471).

இவ்வாறு தன்னைத் துன்புறுத்தியவரை வெறுக்காது, தனக்கு ஏற்படுத்தப்பட்ட இன்னல்களை இன்முகத்துடன் தாங்கிக் கொண்டமை யாலும், எதிர்ச் செயல்களில் ஈடுபடாமையாலும், ஆதிக்க சக்திகளுக்கு அடிபணியாமையாலும் வாகீசப் பெருமானை ஆன்ம வீரர் என அழைப்பது பொருந்தும்.

என் கடன் பணிசெய்து கிடப்பதே என்று கூறிய தன் கூற்றினை மெய்ப்பிக்கும் வண்ணம் அடியார்கள் துன்பத்தை நீக்குதல், உணவிடுதல், உற்ற இடத்து உதவுதல், திருக்கோயில் பணிகளைச் சமூக நலச் சிந்தனையோடு செய்தல் எனத் தன் வாழ்வினைத் தொண்டுக்காகவே அர்ப்பணித்த தொண்டர் எனவும் இவரைப் போற்றலாம்.

60. நமச்சிவாய மந்திரம்

ப. ஞானம், அண்ணாமலைநகர்.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் முதலில் சமண சமயத்தைப் பின்பற்றி வாழ்ந்தவர். தொன்றுதொட்டு வந்த சைவ மரபில் தோன்றியவராயினும் அக்காலச் சூழலால் சமணத்தின் பாற் ஈர்க்கப்பட்டார். தமக்கையர் திலகவதியாரின் அறிவுரையாலும் இறைவனின் அருள் உள்ளத்தாலும் தம் தவறுகளை உணர்ந்து சைவரானார். சமணத்திலிருந்து சைவம் மாறியதால் பல்லவ மன்னன் வெகுண்டு திருநாவுக்கரசரை நீற்றறையில் அடைத்தான். யானையால் இடரச் செய்தான். அடிகளாரை இத்துன்பங்கள் ஏதும் துன்புறுத்தவில்லை. மாறாக இப்பெருமகனார் சைவத்தின் மீது கொண்ட பற்றினை உலகம் அறிந்தது. பல்லவ மன்னன், இறுதியாக நாவுக்கரசரை கல்லில் கட்டிக் கடலில் போடச் சொன்னபோது கல் மிதந்தது. "நமச்சிவாய மந்திரத்தை" நாவரசர் உச்சரித்தபோது இந்த அற்புதம் நிகழ்ந்தது. நமச்சிவாய மந்திர வடிவாகவே இறைவன் இருக்கிறான் என்பதை அடிகளார் உணர்த்தினார். திருவைந்தெழுத்தாம் "நமச்சிவாய" மந்திரம் ஓதிக் கல்லையே தெப்ப மாக்கிக் கரையேறினார். இறைவனின் திருவடியைச் சிந்தை செய்வார்க்குக் கொதிக்கும் நீற்றறையும், கொடிய நஞ்சும், கடும்பகையும் கெடுதலைச் செய்யாது என்பதை உலகிற்கு உணர்த்தியவர் திருநாவுக்கரசர்.

இவ்வருட்செல்வர் அருளிய தேவாரத் திருமுறைகள் பரம்பொருளான இறைவனின் கருணை உள்ளத்தை உணர்த்தும் பெற்றியுடையனவாகத் திகழ்கின்றன. உழவாரப் படை கொண்டு தலந்தோறும் சென்று திருக்கோயிலைச் சுத்தம் செய்து வழிபடும் சரியை நெறியில் நின்றவர் திருநாவுக்கரசர். சேக்கிழார் பெருமான் இத்திருத்தொண்டரை அறிமுகப் படுத்தும்போது,

"திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர்"

என அறிமுகப்படுத்தும் பான்மை உள்ளம் கொள்ளத்தக்கது. நாவுக்கரசரின் வாழ்க்கையில் அவருக்குத் துன்பம் ஏற்பட்டபோதெல்லாம் "நமசிவாய மந்திரமே" பற்றுக்கோடாக விளங்கியமையை அவரது வரலாறு உணர்த்து கிறது. சைவ சமயத்தவர்களுக்குத் துணையாக விளங்கும் நமசிவாய மந்திரப் பெருமைகளை இக்கட்டுரை ஆராய்கின்றது.

"அரசு" - போற்றிய அஞ்செழுத்து

திருநாவுக்கரசர் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறியபோது கடுங்கோபம் கொண்ட பல்லவ மன்னன் நீற்றறையிலிட்டும், நஞ்சூட்டியும், யானையால் இடறச் செய்தும் துன்பம் செய்தான். அப்போதெல்லாம் நாவரசர் சிவபெருமானின் பொன் போன்ற திருவடிகளையே தெளிந்த எண்ணத்துடன் நினைத்திருந்தபடியால் துன்பம் நீங்கினார். இறுதியில்,

"ஆங்கது கேட்ட அரசன் அவ்வினை மாக்களை நோக்கித்
தீங்கு புரிந்தவன் தன்னைச் சேமம் உறக்கொடு போகிப்
பாங்கொரு கல்லில் அணைத்துப் பாசம் பிணித்தோர் படகில்
வீங்கொலி வேலையில் ஏற்றி வீழ்த்துமின் என்று விடுத்தான்"
(பாடல் - 1388)

என்று பாடுகின்றார் சேக்கிழார். மன்னன் கூறியபடியே காவலர்களும் கருத்தை முடித்தனர். நாவரசரும்,

"எப்பரி சாயினும் ஆக ஏத்துவன் எந்தையை என்று
செப்பிய வண்டமிழ் தன்னால் சிவன் அஞ்செழுத்தும் துதிப்பார்"
(பாடல் - 1390)

என்பதால் சிவபெருமானின் ஐந்தெழுத்தைத் துதிப்பவராய் "சொற்றுணை வேதியன்" எனத் தொடங்கும் நமச்சிவாயப் பதிகத்தைப் பாடினார். துன்பகாலத்தில் உடனிருந்து காக்கும் திருவைந்தெழுத்தை அன்புடன் விடாது பற்றிக்கொண்ட உணர்ச்சியில் இத்திருப்பதிகத்தைப் பாடினார் திருநாவுக்கரசர்.

"வாழ்த்துதற்கரிய அஞ்செழுத்தையும் அரசு போற்றிடக்
கருநெடுங் கடலினுட் கல் மிதந்ததே" (1392)

என்று பெரிய புராணம் இம்மந்திரப் பெருமைகளை உணர்த்தும்.

"நல்வினை தீவினைகளாகிய இருவகைக் கயிறுகளாலும் மும்மலக் கல்லுடன் சேர்த்துக் கட்டப்பெற்றுப் பிறவிக்கடலிலே வீழும் மக்களைக் கரையேற்றும் அஞ்செழுத்து நம் "அரசை" இந்தக் கருங்கடலிருந்து ஒரு கல்லின் கட்டிலிருந்து நீங்குதலைச் சொல்ல வேண்டுமோ? இவ்வாறு சோர்வை நீக்கிக் காக்கும் அஞ்செழுத்தின் துணையினாலே கடலிற் கல்லாகிய சிவிகையின் மேற்செல்லும் அடியாரை வருணன் தன் திரைக் கரங்களாலே தாங்க, முன்ன என்ன தவம் புரிந்தனனோ?" என்று பாடுகின்றார் சேக்கிழார் (பாடல் - 1394).

சிவனுக்கு வணக்கம்

"சிவனுக்கு வணக்கம்" என்னும் பொருளைத் தரும் 'நமச்சிவாய' என்னும் தொடர் நிறைமொழி மாந்தர்களாகிய சைவ சமயக் குரவர்களால்

மந்திர மொழியாயிற்று. திருஞானசம்பந்தர் தம் தேவாரப் பதிகங்கள் பலவற்றிலும் 'ஆன சொல்மாலை ஓதும் அடியார்கள் வானில் அரசாள்வார் ஆணை நமதே' என்று கூறுவது வெறும் மொழியல்ல. பொருள் பொதிந்த மறை மொழிகளாகும் என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

"துஞ்சிருள் காலைமாலை தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத்து ஓதிநாளும் அரனடிக்கு அன்பதாகும்
வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமுது ஆக்குவித்தார் நனிபள்ளி அடிகளாரே"
(திருமுறை - 4-70-5)

"கல்லினோடு எனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்க என் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக்குடி அரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேன் அன்றே"
(திருமுறை - 5-72-7)

என்று நாவுக்கரசர் பாடுவதும் எண்ணத் தக்கதாகும்.

சிவலிங்க உருவிலே விளங்கும் இறைவனை 'நமசிவாய' எனும் ஐந்தெழுத்தாகிய ஒலி வடிவிலும் வழிபடுதல் சைவர்களின் உயிர் மூச்சு.

"சிவன் அருள் ஆவி திரோதமலம் ஐந்தும்
அவன் எழுத்தஞ்சின் அடைவாம் - இவனின்று
நம்முதலா வோதி நடாது நாடுமருள்
சிம்முதலா வோதுநீ சென்று" (உண்மை விளக்கம் - 4)

என்ற சித்தாந்தப் பாடலும் இறைவன் கூத்து இயற்றும்போது இந்த ஐந்து எழுத்துக்களும் சிவனின் உறுப்புகளிலே நின்று ஒலி செய்தலைக் கூறுகிறது. சிவன் அருள், ஆவி, திரோதம், மலம் முதலிய முறையே "சிவயநம" என்னும் ஐந்தெழுத்துக்களையும் குறிப்பதாகத் திருமூலரும் குறிப்பிடுவார். இத்திருவைந்தெழுத்தினை குருவின் மூலமாகவே உபதேசம் பெறுதல் வேண்டும் என்பது நியதி. வடமொழியிலும் இதனை "பஞ்சாட்சரமந்திரம்" என்பர். இது தூல பஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம் அதி சூக்கும பஞ்சாட்சரம் என்றும் கூறப்படும். இறைவனை வணங்கும் போது மனதை ஒருமுகப்படுத்த சிவயநம என்னும் திருவைந்தெழுத்து சிறந்த மந்திரமாக விளங்குகிறது.

"சிவயநம" என்று இடைவிடாமல் சிந்தித்திருப்பவர்களுக்கு அபாயம் ஒருநாளும் இல்லை என்பது முன்னோர் வாக்கு.

நமச்சிவாயத் திருப்பதிகம்

திருநாவுக்கரசர் சிவநெறி சேர்ந்த செய்தி சமணர்களுக்கு எட்டியது. தம் சமயத்தை நிலைநிறுத்த வந்த தருமசேனர் ''சைவம் சார்ந்து ஒருவராலும் நீக்கமுடியாத சூலைநோய் நீங்கப்பெற்றார் என்பதை உலகம் அறிந்தால் தங்கள் சமணம் அழியுமே என்றஞ்சி மன்னனுக்கு இச்செய்தியை மறைத்து மொழிந்தனர்''.

தருமசேனர் தம் தமக்கையார் மேற்கொண்டிருக்கும் சமயத்தைச் சாரவிரும்பி சூலை நோய் வந்ததாகப் பொய் கூறிச் சைவராய் நம் மதத்தையும் கடவுளரையும் இழித்துரைக்கின்றார் என்று விளம்ப மன்னனும் மதிமயங்கி வெகுண்டு தண்டனை வழங்க அடிகளும் ''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'' என்று சூளுரைத்து அஞ்சா நெஞ்சத்துடன் சிவனடி போற்றி நின்றார். இதன் விளைவாக நீற்றறை குளிர்ந்தது; நஞ்சும் அமுதமாயிற்று; மதயானை பணிந்தது; நாவரசரைக் கல்லொடு கட்டிக் கடலில் தள்ளியபோது உண்மைத் தொண்டின் உருவமான நாவுக்கரசர் ''எந்தைபிரானையே ஏத்தி இறைஞ்சுவன்'' என்று கூறிச் 'சொற்றுணை வேதியன்' என்று தொடங்கித் (திருமுறை - 4; பதிகம் - 11) திருவைந்தெழுத்தின் பெருமைகளை உலகிற்கு வழங்கினார்.

வேதமான வாசகத்திற்கு நிகரான வாக்கியப் பொருளாக உள்ளவனாய்ப் பரஞ்சோதியாகிய எம்பெருமானுடைய இணையான சேவடிகளை உள்ளம் பொருந்தக் கை தொழுதலால் கல்லைத் துணை யாகச் சேர்த்து அதனோடு இணைத்துக் கடலில் தள்ளிவிட்டாலும் எம்பெருமானுடைய திருவைந்தெழுத்தே நமக்குப் பெரிய துணையாகும் என்று பாடுவார்.

''நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே'' (பாடல் - 2)

''பண்ணியவுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின்றறுப்பது நமச்சிவாயவே'' (பாடல் - 3)

''நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே'' (பாடல் - 4)

''மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சிவாயப்பத்
தேத்தவல் லார்தமக் கிடுக்க ணில்லையே'' (பாடல் - 10)

போன்ற பாடல்களால் இறைவன் திருவடிகளிலே உள்ளம் பொருந்தித் திருவைந்தெழுத்து மந்திரத்தை ஓதி வழிபட்டால் அடியவர்களுக்கு எத்தகைய துயரங்களும் ஏற்படாது என்றும் கவசமாக இம்மந்திர மொழி நம்மைக்காக்கும் என்னும் உறுதி கூறுகிறார் நாவுக்கரசர்.

"படைக்கலமாகவுன் னாமத் தெழுத்தஞ்சென்
நாவிற் கொண்டேன்
இடைக்கல மல்லே னெழுபிறப் பும்முனக்
காட்செய்கின்றேன்
துடைக்கினும் போகேன்றொழுது வணங்கித்
தூநீறணிந்துன்
அடைக்கலங் கண்டா யணிதில்லைச் சிற்றம்
பலத்தரனே"

என்று தில்லை இறைவனைக் குறித்துப் பாடும்போது படைக்கலமாக அஞ்செழுத்து மந்திரத்தை நாவிற்கொண்டதாகப் பாடும் கருத்து உள்ளம் கொள்ளத்தக்கதாகும்.

சமய அருளாளர்களும் திருவைந்தெழுத்தும்

திருஞான சம்பந்தர் அருளிய தேவாரத் திருமுறைகளில், திருமுறை-3, பதிகம் - 22, பதிகம் - 49 ஆகியவை திருவைந்தெழுத்தின் சிறப்பினை விரிவாகப் பேசுகின்றன. நமசிவாய என்று ஓதக் கூற்றுவன் தூதரும் அஞ்சுவர் என்று பாடுவார் ஞானசம்பந்தர்.

"கொல்லந மன்றமர் கொண்டு போமிடத்
தல்லல்கெ டுப்பன அஞ்செழுத்துமே"

என்பது பஞ்சாகரத் திருப்பதிகமாகும். இராவணனும் அவன் மனைவி மண்டோதரியும் பாடிப் பயன் பெற்று இறையருள் பெற்றமையும் திருவைந்தெழுத்தேயாகும். கைலாயத்தைத் தூக்கிக் கலக்கமுற்றபோது அக்கலக்கம் நீங்கி இராவணனைக் காத்ததும் நமசிவாய மந்திரமே யாகும் போன்ற கருத்துக்கள் உள்ளம் கொள்ளத் தக்கதாகும்.

சுந்தரர் தேவாரத்தில் திருமுறை - 7, பதிகம் - 48 பகுதியில் நமச்சிவாய மந்திரத்தின் சிறப்பினைக் காணமுடிகிறது. திருவாசகம் முதற் பாடலில் மாணிக்கவாசகர் "நமசிவாய வாழ்க" என்றே ஆரம்பித்துள்ளமை கருதத்தக்கது. மற்றும் திருவிசைப்பா திருமந்திரம் போன்ற பாடல்களில் எல்லாம் நமச்சிவாய மந்திரமில்லாமல் ஏதுமில்லை என்று கூறுமள விற்குச் சிவன் நாமம் உச்சரிக்கப்பட்டுள்ளது.

"அஞ்செழுத்துமே அம்மையப்பர் தமைக் காட்டும்"

என்று திருவுந்தியாரும் கூறும் கருத்தும் எண்ணத்தக்கது. சேக்கிழார் பெருமானும் பெரிய புராணத்தில் நாயன்மார்களின் வரலாற்றைக் கூறுமிடங்களில் எல்லாம் திருவைந்தெழுத்தின் பெருமைகளையே கூறுவார். பன்னிரு திருமுறைகளும் பதினான்கு சாத்திரங்களும் திருவைந்தெழுத்தின் விளக்கமாகவே அமைந்துள்ளன.

இம்மந்திரத்தை விதிப்படி ஓதவேண்டும். அவ்வாறு ஓதினால் தொன்று தொட்டு நன்மை வாட்டி நிற்கும் பழவினைகளும் போகும் என்பது உறுதி. சைவர்களுக்கு உறுதிப்பொருளாக விளங்குபவை திருநீறும், உத்திராக்கமும், நமச்சிவாய மந்திரமுமேயாகும். விரல் விட்டு எண்ணியும் மலரிட்டு வணங்கியும் உருத்திராக்கம் கொண்டு கணித்தும் சுவாச ஓட்டத்தோடு கூட்டியும் இம்மந்திரத்தை செபிப்பது வழக்கம். திருவைந் தெழுத்தை ஐங்கோண, அறுகோண, எண்கோண சக்கரங்களில் அமைத்து வழிபடும் மரபு உள்ளது. அதிகாலையில் எழுந்தவுடனும் உறக்கம் கொள்ளும் முன்னரும் நாள்தோறும் வேளைக்கு ஒரு நாழிகைக்குக் குறையாமல் இம்மந்திரத்தை உச்சரிப்பது மரபு. திருக்கோயிலை வலம் வரும்போதும் சிறப்பு வழிபாடு நாட்களிலும் இடைவிடாமல் இம்மந்திரத்தை உச்சரிப்பது சைவப் பெருமக்களின் வழக்கமாக உள்ளமை காணலாம்.

61. திருமுதுகுன்றமும் நாவுக்கரசரும்

சு. தங்கதுரை, விருத்தாசலம்.

தாண்டக வேந்தர், தாண்டகச் சதுரர் எனப் போற்றப்படும் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய மூன்று திருமுறைகளில் ஆறாவது திருமுறையில் 99 திருப்பதிகங்கள் உள்ளன. அவை தாண்டகம் என்ற பிரிவைச் சார்ந்தன. தாண்டகம் என்பது ஒரு வகைப் பாடல். அஃது இருபத்தாறு எழுத்தின் மிக்க எழுத்தான் அடி கொண்டு வரும் பாடல் என்பர்.

பன்னிரு திருமுறைகளில் தாண்டகம் என்ற யாப்பு வகையில் திருப்பாடல்களை அருளியவர் திருநாவுக்கரசரே ஆவார். ஆறாம் திருமுறையில் 15 வகையான தாண்டகப் பெயர்கள் உள்ளன. அவற்றுள் திருத்தாண்டகம் எனப் போற்றப்படும் அருள்மிகு பழமலைநாதரைப் போற்றும் பதிகம் 68-ஆவது பதிகமாகும். விருத்தாசலத்தின் பழமையான பெயரான திருமுதுகுன்றம் என்ற தலைப்பிலே இப்பதிகம் அமைந்துள்ளது. இப்பதிகத்தில் காணப்படும் செய்திகளை வகை தொகை செய்து ஆய்வு நோக்கில் வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருநாவுக்கரசரின் யாத்திரையும் திருமுதுகுன்றமும்

திருநாவுக்கரசர் சிவபெருமான் வீற்றிருந்தருளும் பல பதிகளுக்குச் சென்று பாடிப் பணிந்து திருத்தொண்டு புரிய விரும்பினார். திருவதிகைக்கு அருகிலுள்ள திருவெண்ணெய்நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவிலூர் முதலிய பதிகளை வணங்கித் தமிழ்ப் பதிகங்கள் பாடித் திருப்பெண்ணாகடத்தை அடைந்தார். அங்கு எழுந்தருளியிருக்கும் திருத்தூங்காளை மாடத்து ஈஸ்வரனைப் பணிந்து நோக்கி, ''சமண சமயத்தில் இருந்த இவ்வுடம்புடனே இனி உயிர்வாழ நான் விரும்பவில்லை. இவ்வுடலைத் தரித்து வாழ உமது சூலக் குறியையும் இடபக் குறியையும் இட்டருள வேண்டும்'' என்று விண்ணப்பித்தார். எவரும் அறியாதபடி, சிவபெருமான் திருவருளால் ஒரு சிவபூதம் வந்து, திருநாவுக்கரசரின் திருத்தோள்களில் சூலக்குறியையும், இடபக் குறியையும் பொறித்தது. நாவுக்கரசர் அதனைக்கண்டு மகிழ்ந்து இருந்தார். இதனைச் சேக்கிழார்,

''நீடுத்திருத் தூங்கானை மாடத்து நிலவுகின்ற
ஆடகமேருச் சிலையான் அருளாலோர் சிவபூதம்

மாடொருவர் அறியாமே வாகீசர் திருத்தோளில்
சேடுயர் மூவிலைச் சூலம் சின விடையினுடன் சாத்த

ஆங்கவர் தந்திருத்தோளில் ஆர்ந்த திரு இலச்சினையைத்
தாங்கண்டு மனங்களித்துத் தம் பெருமான் அருள்நினைந்து
தூங்கருவி கண் பொழியத் தொழுது விழுந்தார்வத்தால்
ஓங்கிய சிந்தையால் 'உய்ந்தொழிந்தேன்' என எழுந்தார்''

(திருநாவுக்கரசு சுவாமிகள் - 152, 153)

என்று பாடுவார்.

பின்பு அங்குப் பல நாள் தங்கிப் பாமாலை பாடி, உழவாரப்பணி செய்து, திருவரத்துறை சென்று திருமுதுகுன்றம் அடைந்தார்.

திருமுதுகுன்றம்

நடுநாட்டுத் திருத்தலங்கள் 22-இல் ஒன்பதாவது இடத்தில் வைத்துப் போற்றப்படுவது திருமுதுகுன்றம். அருளாளர்கள் திருமுதுகுன்றம் என்ற பெயரில் பாடல்கள் பாடியுள்ளனர்.

சமயக்குரவர்கள் நால்வரும் வழிபட்ட தலம். மூவர் பாடிய பாடல்கள் கிடைத்துள்ளன. ஞானசம்பந்தர் பாடிய 7 பதிகங்களும் நாவுக்கரசர் பாடிய ஒரு பதிகமும் சுந்தரர் பாடிய 3 பதிகங்களும் கிடைத்துள்ளன. சுந்தரர் 12 ஆயிரம் பொன்பெற்றத் தலம் இது.

நாவுக்கரசர் திருவாய் மலர்ந்தருளிய இந்தப் பதிகத்தில் சொல்நயம், பொருள் நயம், தலத்தின் சிறப்புகள், சைவ சித்தாந்தக் கருத்துகள் நிறைந்திருப்பதைக் காண முடிகிறது. நாவுக்கு அரசர் என்பதற்கு இந்த ஒரு பதிகமே சிறந்த எடுத்துக்காட்டு எனலாம்.

அருள்மிகு பழமலைநாதர் முழுமுதல் கடவுள்

அருள்மிகு பழமலைநாதர் மும்மூர்த்திகளாய், பஞ்ச பூதங்களாய், மேலுலகுக்கும் அப்பாலும் இப்பாலும் எங்கும் நிறைந்த முழு முதல்வனாய் இருக்கிறார் என்பதைக் கீழ்வரும் பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது.

''தாமரையான் நான்முகனும் தானேயாகி
மிக்கதொரு தீ வளி நீர் ஆகாசமாய்
மேல் உலகுக்கு அப்பாலாய இப்பாலான'' (5.1; 2)

இதிலிருந்து திருமாலும் நான்முகனும் சிவனே என்னும் சைவ சித்தாந்தக் கருத்துப்படி, சிவனை அநுட்டித்து நிற்கின்றனர் என்பதும் வெளிப்படை.

முழு முதல் பொருளுக்கு வடிவம் கிடையாது. அவன் சோதி வடிவினன். எங்கும் நிறைந்திருப்பவன். பிறப்பு இறப்பு அற்றவன். எந்த உடலையும் பற்றாதவன். பிறந்தவர்கள் இறப்பது உறுதி. பிறக்காதவனே இறக்காதவன். எல்லா உயிர்களிலும் கலந்திருக்கும் அவனே முழுமுதல் கடவுள் என்பர். இக்கருத்தை,

"துறவாதே யாக்கை துறந்தான் தன்னைச்
சோதி முழுமுதலாய் நின்றான் தன்னைப்
பிறவாதே எவ்வுயிர்க்கும் தானே யாகி" (8. 1, 2)

என்று விளக்கியுள்ளார்.

இக்கருத்தை மேலும் வலியுறுத்தும் முறையில்,

"முழுமுதலாய் மூவலகமும் முடிவு ஒன்று இல்லாக் கற்றூணைப்"

போன்றவன் என்கிறார் (9.2, 3). அதாவது மேல், கீழ், நடு என்ற மூன்று உலகங்களிலும் நிறைந்து அப்பாலும் கடந்த நிலைக்கும் முடிவு என்பது இல்லாத முழு முதலோன். அகிலம் முழுவதையும் தாங்கும் கல்தூணைப் போன்றவன் பழமலைநாதன் எனக் குறிப்பிடுகின்றனர். அது மட்டுமல்ல, எல்லாத் திசைகளிலும் உள்ள மக்களின் அறுவகை சமயங்களுக்கும் ஒரே தலைவனாக இருப்பவன் பழமலைநாதனே (5.2) என வலியுறுத்துகிறார் நாவுக்கரசர்.

புராணம் = பழமை. புராணன் என்பதற்கு காலவரையறைக் கூற முடியாதவன் என்று கூறுவர். அதுபோலவே நாவுக்கரசப் பெருமான் அருள்மிகு பழமலைநாதரைப் புராணன் (6.1) என்று கூறுகிறார். முதுகுன்றீஸ்வரர் ஆகிய இப்பெருமான் உலகம் தோன்றுவதற்கு முன்னால் மலையாக எழுந்தருளியிருந்தாராம். அதனால் தான் அவரை பழமலைநாதர் என்பர். இத்தலம் பழமையானது என்பதற்கு இங்குக் காணப்படும் சுண்ணாம்புக் கல் பாறைகள் பதிமூன்றரை கோடி ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்று நிலவியல் அறிவியல் அறிஞர்களின் கண்டுபிடிப்பு கூறுகிறது.

எத்திசையிலும் நிறைந்திருப்பவன் பழமலைநாதர். இதற்குச் சான்றாக, திருமுதுகுன்றத்தை மையமாக வைத்து நான்கு திசைகளிலும் அருள்மிகு பழமலைநாதருக்குத் திருக்கோயில்கள் அமைந்துள்ளன. இந்தச் சிறப்பு வேறு எந்தத் திருத்தலத்திற்கும் கிடையாது.

கிழக்குத் திசையில் முதனை (முதல்நெய்) என்ற தலத்தில் கச்சிராய மன்னருடைய காலத்தில் கட்டப்பட்ட முதுகுன்றீஸ்வரர் திருக்கோயில் உள்ளது. மேற்குத் திசையில் பெரம்பலூர் மாவட்டத்தில் வெங்கனூரில் இலிங்க ரெட்டியாரும் அவரது திருக்குமரன் அண்ணாமலை ரெட்டியாரும் சேர்ந்து கட்டிய திருக்கோயில் பழமலைநாதர் திருக்கோயிலாகும். வடக்கே

ஞானக்கூத்தருக்கு காட்சி கொடுத்த சிவன்பாக்கத்தில் (சேப்பாக்கம்) பழமலைநாதர் திருக்கோயில் உள்ளது. தெற்கே ஜெயங்கொண்ட சோழபுரத்தில் அருள்மிகு கழுமலைநாதர் திருக்கோயிலின் வளாகத்தில் அருள்மிகு பழமலைநாதர் திருக்கோயில் உள்ளது. இச்செய்தி, நாவுக்கரசர் குறிப்பிடும், ''எத்திசையும் வானவர் தொழ நின்றானை'' (3.1) என்ற தொடருக்குப் பொருத்தமாகவே உள்ளது எனலாம்.

ஒளியும் இருளும் அவனே என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு நில உலகு, விண் உலகு, பாதாள உலகு இவற்றிற்கு ஒளியை வழங்குவான் என்றும் ஞான ஒளியையும் உடையவன் என்கிறார். இதனை,

''பார் ஒளியை விண் ஒளியைப் பாதாளத்தானை'' (2.2)

என்ற தொடரால் அறிய முடிகிறது.

ஞானசம்பந்தப் பெருமான், திருமுதுகுன்றப் பதிகத்தில் சைவசித்தாந்த முப்பொருள் உண்மையை,

''விளையாத தேவர் பரிசில்வரு பசுபாச வேதனை ஒண்
தளையான தவிரவ் வருள் தலைவன்'' (1.12.3.1, 2)

என்று குறிப்பிட்டிருப்பது போல நாவுக்கரசப் பெருமானும் சைவசித்தாந்த முப்பொருள் உண்மையை,

''ஊன் கருவின் உள் நின்ற சோதியானை உத்தமனை'' (4.1)

என்று குறிப்பிட்டுள்ளார்.

ஊன் = உயிர் குடியிருக்கும் உடம்பு.

கரு = உடம்பில் குடியிருக்கும் உயிர்.

சோதி = அவ்வுயிரில் ஒளியாய் உள்ள இறைவன்.

ஊன் என்பது பாசத்தையும், கரு என்பது உயிர் (பசு)களையும், சோதியினை என்பது கடவுளையும் (பதி) குறித்துள்ளன.

அவரவருடைய தீவினைப் பயனால்தான் பிறப்பெடுக்கின்றோம் என்பது சைவ சித்தாந்தம். இப்பதிகத்தின் எல்லாப் பாடல்களிலும் இச்செய்தி வலியுறுத்தப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. இச்செய்தி மட்டும் அன்றித் தாம் அருள்மிகு பழமலைநாதரை அறியாமல் இருந்தது ''தீவினை'' என்கிறார். இதை எல்லாப் பாடல்களின் இறுதியிலும்,

''.........திருமுதுகுன்று உடையான் தன்னை
தீவினையேன் அறியாதே திகைத்தவாறே''

என வலியுறுத்து முகமாகத் தெளிவுபடுத்தியுள்ளார்.

பண்பு நலன்கள்

1. கண்ணின் கருமணியைப் போன்று முக்கியமானவன் (1.1)
2. குருவாக வருபவன் (1.1)
3. அடியார் வினைகளைப் போக்குபவன் (2.3)
4. புலன்கள் ஐந்தையும் வென்றவன் (7.2)
5. பிறப்பு எடுக்காதவன் (8.2)
6. துறவு என்பதை மேற்கொள்ளாது தான் எப்போதுமே உடலைப் பற்றாது நிற்பவன் (8.1)
7. எங்கும் நிறைந்திருப்பவன். நிகரில்லாதவன் (5.2)
8. புனிதன் (6.1)

இவ்வாறு சைவ சித்தாந்தம் கூறும் எண்குணம் போன்ற எல்லாப் பண்புகளையும் நாவுக்கரசர் இப்பதிகத்தில் விளக்கியுள்ளார்.

சிவபெருமான் அபிடேகப் பிரியன் என்பர். இதனை நாவுக்கரசர் பஞ்ச கவ்விய நீராட்டில் விருப்பமுடையன் (1.3) என்கிறார்.

புராணக் குறிப்புகள்

அருளாளர்கள் தத்தம் பாடல்களில் சிவபெருமானின் பெருமையைப் பாடும்போது அவரது அற்புதச் செயல்களை வெளிப்படுத்தியுள்ளதைக் காணமுடிகிறது. அவற்றைப் புராணச் செய்தி என்பர். அவரது திருவிளையாடல்கள் இந்தப் பதிகத்திலும் நிறைந்திருப்பதைக் காணமுடிகிறது.

காட்டில் வேடனாய் திரிந்து அருச்சுனன் பொருட்டுக் காண்டீபம் என்ற வில்லினை ஏந்தினான் (4.2); முப்புரம் எரித்தான் (6.1, 7.2, 9.3); தக்கனது பெருவேள்வியைத் தகர்த்தான் (5.1); தாருகாவனத்து முனிவர் களின் செருக்கை அடக்குவதற்குப் பிச்சாண்டிக் கோலம் எடுத்தவன் (6.3); பிரமன் செருக்கை அடக்கத் தலை எடுத்தான், அந்த புலால் நாறும் மண்டை ஓட்டைக் கையில் கொண்டு இவ்வுலகம் முழுவதும் அலைந்தான் (9.1); முனிவர்கள் அனுப்பிய யானையின் தோலை உரித்து போர்த்திக் கொண்டான் (7.1); மார்க்கண்டேயனுக்காகக் காலனையும் குரை கழலால் உதைத்தவன் (7.2); இராவணன் ஆணவத்தால் கைலாய மலையை எடுக்க, அவனது இருபது வலிய தோள்களும் நெரியும்படி, தன் கால் விரலால் ஊன்றி, அவனைத் தவற்றை உணரச் செய்து, சாமகானம் பாட வைத்து மகிழ்ந்தவன் (9.2); அர்த்தநாரீஸ்வரராக வடிவம் எடுத்தவன் (8.2). இவ்வாறு பல புராணச் செய்திகள் உள்ளன.

திருத்தலக்குறிப்பு

இத்திருத்தலத்தின் பெருமையைக் கூறுகின்ற போதும் பழமலைநாதர் பெருமையைக் கூறும்போதும் திருவெண்காடு (6.2), காளத்தி (9.3),

திருப்பூந்துருத்தி (10.2) ஆகிய ஊர்களில் அவர் செய்த அற்புதங்களைச் சுட்டிச் சென்றுள்ளார்.

வருணனை

நாவுக்கரசர் பழமலைநாதரின் பெருமையைக் கூறிச் சிறப்பித்தது போல அவரது அங்கங்களையும், அவரது தோற்றத்தையும் வருணித் திருப்பதையும் காண முடிகிறது.

பொன்னின் குன்று ஒப்பானவன் (1.1), கோள் அரவம் ஆட்டுவான், புலியின் தோலை உடுத்தவன் (1.2, 7.1), கோவணம் அணிந்தவன் (1.2), ஒளி பொருந்திய கறுப்புநிற கழுத்துடையவன் (4.2), மண்டை ஓடு வைத்திருப்பவன், கட்டங்கம் (மழுவாயுதம்) கையுடையவன் (2.1), பிறைமதி சூடியவன் (2.2, 9.2, 10.3), உமையம்மையை உடலில் பாதியாகக் கொண்டவன் (2.3, 10.3), முத்து, மணி, மாணிக்கம், முளைத்து எழுந்த செம்பவளக் கொத்து என்பன போலக் கண்ணுக்கு இனியவன் (3.3), எலும்புகளை, முத்துக்களை மாலையாக அணிந்தவன் (5.3), பொன்னால் படைத்தது போன்ற மேனி உடையவன், காலில் கழல் ஓசையும், கைகளில் கங்கணங்களின் ஓசையும் மேன்மேலும் எழுந்து ஒலிக்கும் வண்ணம் உடையவன் (6. 1, 3). இவை போன்ற பல குறிப்புகள் உள்ளன.

அடியார்க்கு அருள்பவன்

அருள்மிகு பழமலைநாதரை முழுமையாக நம்பி வாழ்பவர்களுக்கு எல்லாவித நன்மைகளையும் கொடுப்பார் என்பதையும் அப்பர் பெருமான் சுட்டிக் காட்டியுள்ளார்.

பழமலைநாதர் அடியார்க்கு எளியவன். இதனை,

"கருதுவார்க்கு ஆற்ற எளியவன்" (1.1)

என தன்னை உருகி தியானிப்பவர்களுக்கு ஆற்றல் கொடுப்பான் என்கிறார். தன்னை அடைந்தவர்களுக்கு அமுதம் போல்வான் (1.3), தன்னை விரும்பும் அடியவர்களுக்கு அவர்கள் விரும்பும் சமயத்துக்குத் தலைவன் (5.3), புகழ்பாடியும், விரும்பும் வண்ணம் விதவிதமாக ஆடியும் வணங்கும் அடியாரின் வினைகள் அனைத்தையும் ஓட்டிக் காக்கும் மருந்துபோல்பவன், அவர்கள் பிறவி நோயையும் தீர்ப்பவன் (7.3). தனது பெரும் திறத்தை என்றும் மறக்காது எண்ணித் துதிக்கின்ற அடியவர்கள் மனத்துள்ளே எப்போதும் நீங்காது இருப்பவன் (8.3) எனக் கூறுகிறார்.

நாவுக்கரசுக்கு கிடைத்த பேறு

சிவபெருமானை வழிபட்டதால் அப்பர் பெருமான் பெற்ற பேறுகள் கணக்கிலடங்காதவை. அதில் இரண்டை இத்திருப்பதிகத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.

1. தன்னைப் பாடல் பாடச் செய்வித்தவன்.

"பத்தனாய்ப் பணிந்தடியேன் தன்னைப் பல்நாள்
பாமாலை பாடப் பயில் வித்தானை" (3.2)

2. தனக்குத் திருவடி தீட்சை செய்தவன்.

"தான் தெரிந்து அங்கு அடியேனை ஆளாக்கிக் கொண்டு
தன்னுடைய திருவடி என் தலைமேல் வைத்த
தீங் கரும்பை" (4.3.4)

திருநாவுக்கரசர், நாவுக்கு அரசர் என்ற தொடர் இந்த ஒரு பதிகத்திலே காண முடிகிறது. அவரது சொல் நயம், பொருள் நயம் வெளிப்பட்டிருப்பதைக் காண முடிகிறது.

சைவ சித்தாந்தக் கருத்துகளைத் தமது பாடல்களில் வெளிப்படுத்தி யிருப்பதை அறிய முடிகிறது.

சிவனை வருணிப்பதில் அவருக்கு நிகர் அவரே. எல்லாப் பதிகங் களில் காணப்படுவது போன்று வருணனைகளும், புராணச் செய்தி களும் நிறைந்துள்ளன.

அவரை முழுமையாக நம்பினவர்களுக்கு வாழ்க்கைக்குத் தேவையான எல்லாவற்றையும் அருளுவான் திருவடி தீட்சையையும், பாடல்பாட அருளையும் திருவடிப் பேற்றையும் கிடைக்குமாறு செய்வான் என்பது தெளிவு.

62. அப்பரடிகளும் அமிழ்தத் தமிழும்

கதிர். தமிழ்வாணன், குடந்தை.

சமண் சமையம் சார்ந்த பல்லவர்கள் வடமொழியை ஆட்சி மொழியாகக் கொண்டு அரசோச்சிய காலத்தில் செந்தமிழ் நாட்டின் சிவனியச் சமையம் சீரழிந்து - இருள் சூழ்ந்திருந்தது. அவ்விருளாகிய மருளை நீக்கி - அருளை வழங்கிச் செந்தமிழும் - சிவனியமும் செழித்தோங்கச் செய்யத் தோன்றிய இப்பெருந்தகைக்கு "மருள்நீக்கியார்" - என்னும் பெயர் சாலவும் பொருந்தும்.

இவ்வுண்மையைச் சிவாநந்த மாலை என்னும் செந்தமிழ்நூல்,

"சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும்எம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே? மாமறைநூல் தான்எங்கே?
எந்தைபிரான் ஐந்தெழுத் தெங்கே?"

என வினவுவதால் நன்கறியலாம்.

இப்பெருமகனார்க்கு வாகீசர், தருமசேனர், ஆளுடையரசு, நாவரசு, நாவுக்கரசு, நாவுக்கரசர், நாவரசர், நாவரையர், சொற்கோ, தாண்டகச் சதுரர், தாண்டக வேந்தர் போன்ற பெரும்பெயர்கள் - பெறும் பெயர் களாக அமைந்தன. இத்தனைக்கும் - முத்தாய்ப்பாக, "அப்பர்" என்னும் பெயரும் - ஒப்பிலாப் பெயராக, ஆளுடைப்பிள்ளையால் அருளப்பெற்றது. அடிகளின் திருவுருவம் - அருளுருவமேயாகும் என்பதை,

"தூயவெண் ணீறு துதைந்த மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வதுபோ லன்புநீர் பொழிகண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே"

எனத் தெய்வச் சேக்கிழார் வாயிலாகத் தெற்றென அறிகிறோம்.

அமிழ்தத் தமிழ்

அமிழ்து + அம் = அமிழ்தம்; அமிழ்து→அமுது→அமுதம் என மருவியது. அமிழ்து + அமிழ்து + அமிழ்து என்பது அமிழ் தமிழ் எனப் புணர்ந்து, தமிழ் தமிழ் என வரும் என்பார் பாவேந்தர். மேலும்,

"தமிழுக்கும் அமிழ்தென்று பேர் - அந்தத்
தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்குநேர்"

எனவும் விளக்குவார்.

அமிழ்தத்தைச் 'சாவா மருந்து' - எனக் கூறுவது மரபு. அமிழ்தொத்த அருந்தமிழைத், துறைபோகக் கற்றறிந்து தொண்டு செய்பவர்கள் எந்நாளும் நிலைத்து நிற்பர் என்பது புலனாகின்றது. இதனை,

"தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை"

என்பார் பாட்டுக்குயில் பாவேந்தர்.

உலகிற் பிறந்த மாந்தர் ஒவ்வொருவரும் **மொழி - இனம் - நாடு - சமயம்** ஆகிய நால்வகைப் பற்றினை இன்றியமையாது பெற்றவரா யிருத்தல் வேண்டும். இப்பற்றினை அற்றவர், வெறும் சோற்றுப்பற்று மட்டுமே உடையவராகக் கருதப்படுவர். இவ்வுண்மையைத் தேசிய விடுதலைப் பெரும் பாவலர் - பாரதியாரின் வழிநின்று பார்த்தால்,

1. வாழிய செந்தமிழ்! - மொழிப்பற்றையும்,
2. வாழ்கநற் - றமிழர்! - இனப்பற்றையும்,
3. வாழிய பாரத மணித்திருநாடு! - நாட்டுப்பற்றையும்,
4. பாரினில் எவர்க்கும் இனி அடிமைசெய் யோம் - பரி
   பூரணனுக் கேயடிமை செய்து வாழ்வோம்.

என்னும் பாடல் வரிகளால் தெளிவாகின்றன.

இவற்றுள், ஒருவர்க்கொருவர் எவ்வாற்றானும் வேற்றுமை பாராது, அவரவர்க்குரிய மொழி, இன, நாட்டு, சமைய நெறிகளைப் பின்பற்று வாராயின், பகைமையற்றச் சமன்மையுடன் ஒருமைப்பாட்டுணர்வு தானே வளரும். இதனை,

"ஒன்றி யிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை"

என்னும் அப்பர் அடிகளின் அருள்நெறிச் சிந்தனையால் உணரலாம்.

அப்பரடிகள் போற்றிய அமிழ்தத் தமிழ்மொழி

தென்மொழியாகிய தமிழ் - தமிழர்கட்கும், சமற்கிருதமாகிய வடமொழி - ஆரியர்கட்கும் உரியது என்பதை வாகீசப் பெருந்தகை வகைப்படுத்திக் காட்டுகிறார்.

"பந்தணவு மெல்விரலாள் பாகன் தன்னைப்
பாடலோ டாடல் பயின்றான் தன்னைக்
கொந்தணவு நறுங் கொன்றை மாலை யானைக்
கோலமா நீல மிடற்றான் தன்னைச்

செந்தமிழோ டாரியனைச் சீரியானைத்
திருமார்பிற் புரிவெண்ணூல் திகழப் பூண்ட
அந்தணனை ஆவடுதண் துறையுள்மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந் தேனே.''

எனவும்,

''மூலநோய் தீர்க்கும் முதல்வன் கண்டாய்
முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்
ஆலின்கீழ் நால்வர்க் கறத்தான் கண்டாய்
ஆதியு மந்தமு மானான் கண்டாய்
பால விருத்தனு மானான் கண்டாய்
பவளத் தடவரையே போல்வான் கண்டாய்
மாலைசேர் கொன்றை மலிந்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே.''

எனவும்,

''வானவன்காண் வானவர்க்கு மேலா னான்காண்
வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண் ஆனைந்தும் ஆடி னான்காண்
ஐயன்காண் கையிலனல் ஏந்தி யாடும்
கானவன்காண் கானவனுக் கருள்செய் தான்காண்
கருதுவார் இதயத்துக் கமலத் தூறும்
தேனவன்காண் சென்றடையாச் செல்வன் றான்காண்
சிவனவன்காண் சிவபுரத்தெஞ் செல்வன் தானே''

எனவும்,

''ஆரி யந்தமி ழோடிசை யானவன்
கூரி யகுணத் தார்குறி நின்றவன்
காரி கையுடை யான்கடம் பந்துறைச்
சீரி யல்பத்தர் சென்றடை மின்களே''

எனவும், அமிழ்தத் தமிழின் மாட்டு அடிகள் கொண்ட அளப்பரிய அன்னைத் தமிழ் அன்பை அடுக்கடுக்காக வெளிப்படுத்துகின்றார்.

அப்பரடிகள் போற்றிய அமிழ்தத் தமிழினம்

தமிழ் - என்னும் மொழிப்பற்றோடு, தமிழன் என்னும் இனப்பற்றையும் தாண்டக வேந்தரிடம் காண முடிகின்றது. இதோ....

''மூரி முழங்கொலிநீ ரானான் கண்டாய்
முழுத்தழல்போல் மேனி முதல்வன் கண்டாய்

ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்
இன்னடியார்க் கின்பம் விளைப்பான் கண்டாய்
ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணா மலையுறையெம் அண்ணல் கண்டாய்
வாரி மதகளிறே போல்வான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே.''

என்ற பாடலின் மூலம் தம் எழிலார்ந்த இனமானச் சிந்தனையை இயம்புகின்றார்.

இருபதாம் நூற்றாண்டில் நம்மிடையே எழுந்துள்ள தமிழ் - தமிழன் என்னும் எழுச்சிக்கு, ஏழாம் நூற்றாண்டிலேயே, அஃதாவது, 1300 ஆண்டுகட்கு முன்பே வித்திட்டு வரலாறு படைத்தவர் ஒப்பிலாமணியாம் அப்பரடிகள் என்பது நம் சிந்தனைக்குரிய செய்தியாகும்.

அப்பரடிகள் ஒருவரே தமிழினத் தலைவர் என்பதையும், தமிழ் மொழித் தலைவர் என்பதையும் தெய்வச் சேக்கிழார் திறம்படக் கூறுகின்றார்.

திருவாய்மூரில் கூடிய ஆளுடைபிள்ளையும் - ஆளுடையரசும் சேர்ந்து, அங்கு கோவில் கொண்டு எழுந்தருளியுள்ளச் செந்தமிழ்ச் சிவனைப் போற்றிப் பதிகம் பாடி, மாமறைக்காடு சேர்ந்த காட்சியைக் கூறுமிடத்து,

''சண்பைநா டுடைய பிள்ளை தமிழ்மொழித் தலைவ ரோடு
மண்பயில் சீர்த்திச் செல்வ மாமறைக் காட்டு வைகிக்
கண்பயில் நெற்றி யார்தங் கழலிணை பணிந்து போற்றிப்
பண்பயில் பதிகம் பாடிப் பரவிஅங் கிருந்தார் அன்றே.''

என்னும் பாடலால் இவ்வுண்மையை நம்மால் உணர முடிகின்றது. மேலும்,

திங்களூரில் அப்பூதியடிகளின் இல்லத்தில் அப்பரடிகள் அமுது செய்தருளியமையைக் கூறுமிடத்து,

''மைந்தரும் மறையோர் தாமும் மருங்கிருந் தமுது செய்யச்.
சிந்தைமிக் கில்ல மாதர் திருவமு தெடுத்து நல்கக்
கொந்தவிழ் கொன்றை வேணிக் கூத்தனார் அடியா ரோடும்
அந்தமி ழாளி யார்அங் கமுதுசெய் தருளி னாரே.''

எனச் சேக்கிழார் கூறுவதால், அப்பரடிகளுடைய அந்தண் தமிழின் ஆளுமையை அறிய முடிகிறது.

செழுந்தமிழ்நாடு

தேசிய விடுதலைக்குப் பின், இந்தியா மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட போது, சென்னை மாநிலம் என இயங்கிய தமிழகத்திற்குப்

பேரறிஞர் அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின், "தமிழ்நாடு" எனப் பெயர் சூட்டிப் பெருமைப்படுத்தினார். ஆனால், கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலேயே சேக்கிழாரடிகள் தமிழ்நாடு என்னும் சொல்லாட்சியைக் காட்டுகின்றார்.

சமண் சமையம் சார்ந்திருந்த பாண்டிய மன்னனையும், அவ்வழிப் பட்ட மக்களையும் சிவநெறியிற் சேர்க்கும் பொருட்டு அப்பரிடம் ஆணை பெற்று, மறைக்காட்டினின்று - மதுரைக்கு ஆளுடைபிள்ளை வந்தடைந்த செய்தியைச் சேக்கிழார் கூறுமிடத்து,

"போமா துணிந்து நீர்அங்குப் போகப் போதா அவ்வமணர்
தீமா யையினை யானேபோய்ச் சிதைத்து வருகின் றேன்என்ன
ஆமா றெல்லாம் உரைத்தவரை மறுக்க மாட்டா தரசிருப்பத்
தாமா தரவால் தமிழ்நாட்டில் போனார் ஞானத் தலைவனார்."

என்கின்றார். மேலும், ஆளுடைபிள்ளையின் அருட்டுணையால், அருந்தமிழ்ச் சமையமாம் - சிவனியும் மீட்ட, மங்கையர்க்கரசியாரின் மாக்கதையில்,

"மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கைமானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள்பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நா டுற்றஇடர் நீக்கித் தங்கள்
பொங்கொளிவெண் டிருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல்எம்மால் போற்ற லாமே."

என்றவிடத்தும், தமிழ்நாடு என்ற பெயரையே நிலைப்படுத்துகின்றார்.

செந்தமிழ்ச் சமையம்

மொழி - இனம் - நாடு என்னும் இம்மூன்றையும் அடுத்துச் சமையம் பற்றிச் சிந்தித்தால், அங்கேயும் சேக்கிழாரின் செழுந்தமிழ் வழக்குத் துணை செய்கின்றது. தோணிபுரத் தோன்றல் - தோன்றிய வரலாற்றைக் கூறவந்த சேக்கிழார்,

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவார்"

என்புழித் தமிழர்களின் சிவனியச் செந்தமிழ்ச் சமைய நெறியையும், வேதத்தை அடிப்படையாகக் கொண்ட ஆரியர்களின் வைதீகச் சமைய நெறியையும் வேறுபடுத்தித் தெளிவாக்குகிறார்.

தமிழர் மானம்

மேலும், தமிழர்களின் தகுதிமிக்கத் தனித்தன்மை வாய்ந்த - தன்மான உணர்வையும் சேக்கிழார் எடுத்துக்காட்டத் தவறவில்லை. தமிழர்களின் தனிப்பெருங் கடவுளாகிய சிவபெருமான் பிறப்பும் இறப்பும் இல்லாதவன்; அதனால், தந்தையும் தாயும் இல்லாதவன்; தோற்றமும் மறைவும் அற்றவன்; முதலும் முடிவும் அற்ற முழுமுதற் கடவுளும் அவனேயாவான். செத்துப்பிறக்கும் தெய்வ நிலையிலாத் தீந்தமிழ்க் கடவுளாகிய - தாயில்லா தன்மையினனாகிய சிவன், புனிதவதியார் என்னும் காரைக்கால் அம்மையாரைத் தாயாக உவந்தேற்று, ''அம்மா'' என விளித்தழைக்கின்றார்.

அம்மையின் வரலாற்றை அருள வந்த அருண்மொழியார்,

''மானமிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில்
ஊனமில்சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி ஓங்குபதி
கூனல்வளை திரைசுமந்து கொண்டேறி மண்டுகழிக்
கானல்மிசை உலவுவளம் பெருகுதிருக் காரைக்கால்.''

எனத் தொடங்குகின்றார். தமிழர்களுக்கே உரிய மானமிகு என்னும் சிறப்பு அடைமொழியை, வரலாற்றுத் தொடக்கத்தின் - தொடக்கமாக இயம்புகின்றார்.

தமிழர்களின் வாழ்வியல் வரலாற்றுப் பெட்டகமாகிய திருக்குறளில், தாம் வரைந்த 133 அதிகாரங்களுள், மானம் என்ற ஓர் அதிகாரத்தையே அமைத்துக் காட்டுகின்றார் திருவள்ளுவர்.

ஓரினத்தின் மான உணர்ச்சியே, அவ்வினத்தின் குடிமைப் பண்பைக் காட்டி உயர்த்தும். அவ்வுணர்ச்சியினாலேயே அவ்வினம், பெருமை பெற முடியும் என்னும் குமுக இயல்பை உணர்த்தும் வகையிலேயே, குடிமை - பெருமை என்னும் அதிகாரங்களை மானம் என்னும் அதிகாரத் திற்கு முன்னும் பின்னுமாக அமைத்துள்ளார்.

''தன் நிலையில் தாழாமையும், தாழ்வு வந்துழி உயிர் வாழாமையும்'' - என்பதையே, மானம் என்னும் சொல்லுக்கு இலக்காகக் கண்டனர்; இலக்கணமாகக் கொண்டனர் - நந்தமிழ்ச் சான்றோர்.

சேரமான் கணைக்கால் இரும்பொறை தண்ணீர் அருந்த மறுத்து உயிர்துறந்த வரலாறு, வடக்கிருந்து உயிர்துறந்த கோப்பெருஞ்சோழன் வரலாறு. சிலம்புக்காக உயிர்நீத்த பாண்டியன் நெடுஞ்செழியன் வரலாறுகள் தமிழரின் தன்மான வரலாறுகளை உணர்த்துவனவாம்.

இவ்வரலாறுகளை மருங்கு வைத்து ஒருங்கு நோக்கின், தமிழர்களின் மானமிகு - தன்மானப் பகுத்தறிவுப் பண்பாட்டைப் பரக்கக் காணலாம். இவையனைத்தையும் உள்ளடக்கி,

"நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்"

என அப்பரடிகள் 1300 ஆண்டுகட்கு முன்பே அருளினார்.

செந்தமிழின் சொல்வளம் பெருக்கிப் பதிகத்தொடை பாடிய பான்மையினால், "அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்லுமாறு" சமையம் சார்ந்து அருஞ்செயல் பல ஆற்றிய பாவரசர் ஆகிய நாவரசர்,

"சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமுங் குலமுங் கொண்டென் செய்வீர்?"

எனக் குமுறி எழுந்து, குயக்கொண்டானைப் போன்ற குமுகாயக் கேடர்களைச் சாடுகின்ற, ஏழாம் நூற்றாண்டின் சமையப் புரட்சி போக்காளர். 'குறிக்கோளிலாது கெட்டேன்' என அறிவித்த வாழ்வியல் நோக்காளர், 'ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கிய' நெறியாளர்; 'என்கடன் பணிசெய்து கிடப்பதே என்னும் கடமை உணர்வாளர்; உழவாரத் திருப்படை கொண்டு இறைபணி ஆற்றிய திருத்தொண்டர்; 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' எனப் புரட்சி முழக்கமிட்டப் பொதுமை நோக்குடைய அஞ்சா நெஞ்சர்; பழையாறை வடதளியில் இறைவனைக் கண்டு வணங்க இயலாமல் தடை ஏற்பட்ட போது, இறைவனைக் காணாமல் இவ்விடத்தை விட்டகலேன் எனச் சூளுரைத்து, உண்ணாநோன்பை மேற்கொண்டு, அறப்போராட்டத்தை நிகழ்த்திய முதல் அருளாளர்; பூவும் புனலும் கொண்டு, இடைத்தரகர் இன்றி, இறைவனை நாமே வழிபடலாம் என்பதைப் 'போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர் பின் புகுவேன்' - எனக்கூறி தமிழ் வழிபாட்டிற்கு வழிகாட்டிய பேரருளாளர்; 'புகுவார் அவர்பின் புகுவேன்' எனக் கூறியமையால் ஆண்டவனை வழிபடச் செல்லும் அடியார்கள் வரிசையாகச் சென்று வழிபட வேண்டும் என்னும் பண்பாட்டு ஒழுங்கைக் குறிப்பால் உணர்த்திய முறையாளர்.

இங்ஙனம், அப்பரடிகள் எடுத்துக்காட்டிய அமிழ்தத் தமிழ் நெறிகளைப் பரக்கக் காணலாம்; காண்பதோடன்றி, கற்க - கசடறக் கற்க - அதற்குத்தக நிற்க என்னும் திருவள்ளுவரின் கூற்றுக்கு இணங்க நாமும், நாடும் நலம்பெற அச்செந்நெறியில் நாளும் நிலைத்து நின்றொழுகிப் பெறற்கரிய பேற்றினைப் பெற்றுய்வோமாக.

"மணியினை மாமறைக் காட்டு மருந்தினை வண்மொழியால்
திணியன நீள்கத வந்திறப் பித்தன தெண்கடலிற்
பிணியன கல்மிதப் பித்தன சைவப் பெருநெறிக்கே
அணியன *நாவுக் கரையர்*பி ரான்தான் *அருந்தமிழே*."

63. அந்தமிழாளியார்

ப. தாமரைக்கண்ணன், சென்னை.

உலகின் தோற்றம் பற்றிய வரலாறு தனி ஆய்வாக நாளும் நிகழ்த்தப்பெற்று வருகிறது. நாகரிகம், பண்பாடு ஆகியவற்றின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்தும் பெருவாரியாகப் பேசப்பெறுகிறது. உலகின் பல்வேறு இடங்களில் - பல்வேறு காலகட்டங்களில் பலப்பல மொழிகள் பேசும் மக்களிடையே பண்பாடு வளர்ந்து வரும் சூழலில் தமிழ் மொழிக்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் தனித்ததொரு இடமுண்டு. உலக மொழிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறப்புற்று விளங்குவன. தமிழ்மொழி பக்தி மொழி என வழங்கப்பெறும் வகையில் விளங்கு வதாகும். அதற்குரிய சூழலும் தமிழகத்தில் தொன்றுதொட்டு நிலவி வருவதும் அத்தகு நிலைக்குக் காரணமாகும். பல்வேறு மதத்தவர் தத்தம் மதத்தோடு மொழியையும் கொண்டு தொடர்ந்து தமிழகத்தை ஆண்டு வந்துள்ளனர். ஆயின் அவை எல்லாவற்றையும் கடந்து, தமிழ்மொழி எம்மதத்தாரும் ஏற்றுப்போற்றும் எண்ணற்ற பக்தி இலக்கியங்களை அளித்துவந்துள்ளமை கண்கூடு.

பாலி பிராகிருத மொழிகளைக் கொண்ட சமண பௌத்த சமயங்கள் தமிழகத்தில் ஒரு காலத்தில் பெரும் செல்வாக்கைப் பெற்றிருந்தன. உருது, அரபு, பாரசீக மொழிகளைக் கொண்ட இசுலாமிய சமயமும், கிரேக்க இலத்தீன் ஆங்கில முதலிய ஐரோப்பிய மொழிகளைக் கொண்ட கிறித்தவ சமயமும் தமிழகத்தில் கால்கொண்டு கோலோச்சியுள்ளன. எனினும் தமிழ்மொழி அவற்றால் அடித்துச் செல்லப்பெறாமல் எதிரேறித் தனக்குரிய இடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது என்பதை நாம் ஆழ்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும். இவை தமிழுக்குள்ள ஆற்றலையே உணர்த்துவனவாக உள்ளன.

சமணரும் பௌத்தரும் வைதிகரும் பாலி பிராகிருத சமற்கிருத மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப், பூசனைகளை அவ்வம் மொழிகளில் தமிழகத்தில் நிகழ்த்தியபோது, மனம் பொறாத வீறு கொண்ட தமிழர் கூட்டம், 'நாளும் இன்னிசையால் தமிழ்பாடியும்', 'அர்ச்சனைத் தமிழ்ப் பாட்டே ஆகும்' என்று அறுதியிட்டு உறுதியாக அறைந்தும் தமிழ் மொழியைப் 'பத்திமொழி'யாக்கிப் 'பக்திச்சுவை

நனிசொட்டச் சொட்டப் பாடிப்' பன்னிரு திருமுறைகளையும் பரந்த இவ்வுலகிற்குப் பறைசாற்றினர். இதனால், தமிழும் சமயமும் இரண்டறக் கலந்து வளர்ந்துள்ளமையை வரலாறு உணர்த்தும்.

அப்பர் தேவாரம்

பன்னிரு திருமுறைகளுள் முதல் ஏழு திருமுறைகள் 'மூவர் பாடிய தேவாரம்' எனப் பெறும் பக்தி இலக்கியங்கள். 'மூவர் பாடிய' என்ற அடைமொழி இருந்தபோதும் தேவாரம் என்றாலே அது திருநாவுக்கரசர் என்னும் அப்பர் பாடிய பாடல் தொகுப்பினையே குறிப்பதாகும். திருஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் திருக்கடைக்காப்பு என்றும் - சுந்தரர் பாடிய பாடல்கள் 'திருப்பாட்டு' என்றும் வழங்கப் பெறுதல் மரபாகும். இதில் ஒரு குறிப்பு உள்ளது. அப்பர் வாக்குக்குள்ள ஏற்றத்தை அது உணர்த்துவதாக உள்ளது.

பெயரிலே தனித்தமிழ்

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு. (குறள் - 352)

என்று திருவள்ளுவர் மெய்யுணர்தல் தலைப்பில் மொழிந்துள்ளார். பிற சமய இருளிலும் பிறமொழி இருளிலும் மூழ்கிக்கிடந்த தமிழகத்தில், தம் தமிழால் - தொண்டால் ஒளியேற்றியவர் மருள்நீக்கியார் என்னும் இயற்பெயர் கொண்ட அப்பர். சூலை நோயால் தடுத்தாட் கொள்ளப் பெற்று முதலில் 'கூற்றாயினவாறு' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடியபோது இறைவனே 'திருநாவுக்கரசர்' என்றழைத்ததாக மரபு கூறும். 'அப்பர்' என்ற அன்புப் பெயர் திருஞானசம்பந்தரால் வழங்கப்பெற்றது என்பது வரலாறு. இவையாவும் தனித்தமிழ்ப் பெயர்களாகும்.

அந்தமிழாளியார்

அருண்மொழித் தேவராம் சேக்கிழார் தம் திருவாக்கால், திருநாவுக்கரசரை அப்பூதியடிகள் நாயனார் புராணத்தில் 'அந்தமிழாளியார்' என்னும் அரியதோர் சிறப்புப் பெயரால் அழைக்கிறார்.

"அந்தமி ழாளி யாரங் கமுதுசெய் தருளி னாரே".

(அப்பூதியடிகள் நாயனார் புராணம் - 41)

என்பது பாடல்வரி. அப்பூதியடிகள் நாயனார் மகனைப் பாம்பின் நஞ்சிலிருந்து காப்பாற்றிய பின்பு, அப்பூதியடிகளோடும் அவர்தம் அருமை மக்களோடும் அப்பரடிகள் அமுது செய்தருளினார். காப்பாற்றிய விதம் 'ஒன்றுகொலாம்' எனத் தொடங்கும் 'பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்றுவித்தார்' என்பதாகும்.

"தமிழ் ஆளியார் - திருநாவுக்கரசர்; ஆளி - சிங்கம்; அது ஏனைய வற்றுக்கரசராயிருக்கும் தன்மையும், பெருந்தன்மையும் குறித்தது. தமிழின் சிறப்பே அருள் வெளிப்பாட்டுக்குக் கருவியானமை குறிப்பு. தமிழை ஆள்பவர் என்றாலுமாம்". என்னும் சிவக்கவிமணி திரு. சி.கே. சுப்பிரமணியனார் அவர்களின் உரைவிளக்கம் (1964, ப. 996) ஆழ்ந்து சிந்திக்கற்பாலதாகும்.

அப்பூதியடிகள் நாயனாரின் மகனை, அரனருளால் - அருந்தமிழால் பாடிப் பெற்றார் என்ற சிறப்பால் அவர்க்குப் பட்டமளிப்பது போன்று சேக்கிழார் அந்தமிழாளியார் என்று வழங்கினாரோ என எண்ணத் தோன்றுகிறது.

பாலை நெய்தல் பாடியதும் *பாம்பொழியப் பாடியதும்*
காலனையன் றேவிக் கராங் கொண்ட - பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
கரணம்போ லல்லாமை காண்.

என்று திருக்களிற்றுப்படியார் 'பாம்பொழியப் பாடிய' திறத்தைப் பகரும்.

அப்பர்தம் அருந்தமிழால் விளைந்த நன்மைகளை - அதியற்புத நிகழ்வுகளுள் சிலவற்றைப் பட்டியலிட்டுக் கூறும் பாடல் ஒன்று வருமாறு:

"தலைகொள் நஞ்(சு) அமு தாக விளையுமே;
தழல்கொள் வீடுத டாகம தாகுமே;
கொலைசெய் யானை குனிந்து பணியுமே;
கோள ராவின் கொடுவிடந் தீருமே;
கலைகொள் வேத வனப்பதி தன்னுளே
கதவு தானுங் கடுகத்தி றக்குமே;
அலைகொள் வாரியிற் கல்லுமி தக்குமே
அப்பர் செப்பும் அருந்தமிழ்ப் பாடலே".

மேற்கண்ட பாடலில் அப்பரின் வரலாற்று நிகழ்வுகளில் அருந்தமிழாற்றல் எவ்வெவ்வாறு வெளிப்பட்டு விளங்கிற்று என்பதை ஒருவாறு உணரலாம்.

அப்பரின் தமிழ்த்தோற்றம்

திருத்தொண்டர் புராணத்திலே திருநாவுக்கரசரின் தோற்றப் பொலிவினைத் தேற்றமாய் உரைக்கும் பாட்டினுள்ளும் 'செந்தமிழ்ச் சொல்மேய வாயினை' நம் மனக்கண்முன் கொணர்வார் சேக்கிழார். அப்பாடல்:

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்

பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொல்
மேயசெவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

(பெரியபுராணம் - திருநாவுக்கரசு நாயனார் புராணம்)

அப்பர் கண்ட தமிழ் இறைவன்

"ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே..."

என்று திருவையாற்றுத் திருத்தாண்டகத்திலும்,

"...எண்ணாகி எழுத்தாகி இயல்புமாகி..."

என்று திருப்பாசூர்த் திருத்தாண்டகத்திலும் பாடியுள்ள அப்பர், அவை யாவும் தமிழ் ஓசை, தமிழ் ஒலி, தமிழ் எண், தமிழ் எழுத்துதாம் என்று நாம் துணிவதற்கு யாதொரு தடையும் இல்லாவகையில் தம்முடைய வாழ்வில் சிவபெருமானின் கருணையை உணர்ந்து முதன் முதலில் பாடிய பதிகத்திலேயே,

"சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்;
தமிழோ டிசைபா டல்மறந் தறியேன்"

என்று கட்டியங்கூறிவிடுகிறார்.

தாண்டகம் என்னும் பாவடிவினைத் தமிழுக்களித்து, அதில் தாண்டக வேந்தராயும் கோலோச்சியுவர் அப்பர் பெருமான். அவர் பாடிய முந்நூற்றுப் பன்னிரு பதிகங்களும் முத்தமிழுக்கும் முக்கண் பரமற்கும் முழுமையான தொண்டு செய்யவல்லன என்பதனைப் பயில்வார் யாவரும் உணர்வர்.

என்கடன் பணிசெய்து கிடப்பதே

என்று தன்னிலை விளக்கம் தந்தும்

நாமார்க்கும் குடியல்லோம்; நமனை யஞ்சோம்

என்று முழங்கியும் பலருக்கு வழிகாட்டியும் 'தொண்டு செய்து பழுத்த பழமாக' விளங்கிய திருநாவுக்கரசரை 'அந்தமிழாளியார்' என்று சேக்கிழார் உணர்ந்து உலகுக்கு உணர்த்தியுள்ளார் எனின் மிகையன்று அன்றோ?

64. நாவுக்கரசர் வாழ்வும் வாக்கும்

ஜா. திரிபுரசூடாமணி, சென்னை.

காலப்பழமையும் சாலப்பெருமையும் கொண்ட சைவ சமயத்தின் தூண்களுள் ஒருவராகக் கருதப்படுபவர் நாவுக்கரசர். அவர்தம் வாழ்வாலும், வாக்காலும் உணர்த்திய இறைமை சார்ந்த அறநெறிக் கொள்கைகள் இங்குச் சுட்டப்படுகின்றன.

நாவுக்கரசர் வாழ்வும் வாக்கும் மன்பதையில் வாழும் மக்களுக்கு பல்வேறு தெளிவுகளையும், அறங்களையும் உணர்த்துகிறது. அவரது வாழ்வால், அகிம்சை, அஞ்சாமை, எல்லார்க்கும் நன்றாம் பணிதல் போன்றவற்றை உணரமுடிகிறது. நாவுக்கரசர் வாக்கால், இறைவனின் கருணை, இறை உறை கோயில், பிழைபொறுக்கும் பேராளன், இறை உரு, இறையருள் பெறும் வழி, அவனின்றி ஓர் அணுவும் அசையாது, மனிதரில் தலையான மனிதர் ஆகியவற்றை உணரலாம்.

அகிம்சை

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற உணர்வோடு பணி புரியும்போது அதற்கு இடையூறு ஏற்பட்டால், எவ்வுயிர்க்கும் தீங்கு நேராது, அகிம்சை என்னும் அறநெறி நின்று போராட வேண்டுமென்பதை அப்பரடிகளின் வாழ்வு நமக்கு உணர்த்துகிறது.

அப்பரடிகள், பழையாறை சென்று இறைவனை வழிபட நினைக்கின்றார். அங்கே வடதளி என்ற சிவாலயம் மறைக்கப்பட்டுச் சமண் பள்ளியாகக் காட்சி அளிக்கிறது. உடனே அப்பர் அடியார்கள் புடைசூழ வடதளி வாயிலில்,

'வண்ணம் கண்டு நானும்மை வணங்கியன்றிப் போகேன்'

என்று உள்ள உறுதியோடு உண்ணாவிரதம் மேற்கொண்டு அமருகிறார். இறைவன் அருள், அசரீரியாக மன்னனிடம் வெளிப்படுகிறது. மன்னன் விரைந்து சென்று சமண் பள்ளியை அகற்றி, உள்ளே மறைந்து கிடந்த வடதளிச் சிவாலயத்தை வழிபாட்டுக்கு உரியதாக்குகிறான்.

இவ்வாறு உரிமை பெறக் கத்தியின்றி இரத்தமின்றி அகிம்சை நெறியே அறநெறி என அப்பரடிகள் தம் வாழ்வின் மூலம் உணர்த்துகின்றார்.

இருபதாம் நூற்றாண்டில் காந்தியடிகள் மேற்கொண்ட அகிம்சை நெறி ஏழாம் நூற்றாண்டிலேயே தமிழ்நாட்டில் ஒரு சமயச் சான்றோரால் அறிமுகப் படுத்தப்பட்டவொன்று என்பது நமக்கு பெருமையளிக்கிறது.

அஞ்சாமை

மன்னன் நடுவுநிலைமை தவறிவிட்ட நேரத்தில், அவனுக்கு மக்கள் மீது அதிகாரம் செலுத்தும் உரிமை இல்லை. சிறுபான்மையினரின் (வழிபாட்டு) உரிமை பாதிக்கப்படும்போது சிறுபான்மையினரை பாதுகாக்க வேண்டிய அரசே அதை நசுக்கும் போது அஞ்சா நெஞ்சினராக எதிர்த்து முதலில் குரல் கொடுத்தவர் அப்பர்.

இவர் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறிய போது, பல்லவ மன்னன் சினம் கொண்டு, அவர் மதம் மாறியதற்காக அவரைத் தண்டிக்க அழைத்து வருமாறு கட்டளையிடுகிறான். திருவதிகை வந்தடைந்த அரசச் சுற்றத்தார் அப்பரடிகளை நோக்கி,

'இன்று நுமை அரசன் அழைத்தது,
எமை விடுத்தான் போதும்'

எனக் கூறுகின்றனர். அப்பரோ,

'நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்'

என்ற திருத்தாண்டகத்தால், மன்னன் கட்டளைக்கு அடிபணிய மறுக்கின்றார். சமயவாதிகள் கோழைகள் அல்லர், தவறு இழைக்கப்பட்டால் அரசனையும் எதிர்க்கும் ஆற்றல் அவர்களுக்கு உண்டு. அதற்குப் பரிசாக மரணம் ஏற்பட்டாலும் அதனை ஏற்கத் தயங்கார். அரசன் வெறும் ஆட்சித் தலைவனே, மக்கள் ஒருபோதும் மன்னனுக்கு அடிமைகள் அல்லர், இறைவனுக்கு மட்டுமே அடிமையானவர்கள் என்பதை அப்பர் வலியுறுத்துகிறார்.

இவ்விடத்தில்,

'பூமியில் எவர்க்கும் இனி அடிமைசெய்யோம்
பரிபூரணனுக்கே அடிமைசெய்து வாழ்வோம்'

என்று பாரதியார் கூறியிருப்பது நினைக்கத்தக்கது.

எல்லார்க்கும் நன்றாம் பணிதல்

திருப்பூந்துருத்தியில் வாழ்ந்திருந்த அப்பரடிகளைக் காணவந்த திருஞானசம்பந்தர், ஊர் எல்லையில் எங்குற்றார் 'அப்பர்' என வினவு கின்றார். தம்மை நாடிவந்த திருஞானசம்பந்தர் பல்லக்கை, அவர் அறியாமலே தோளிலே தாங்கி வரும் அப்பரடிகள் கீழிருந்து,

'உம் அடியேன் உம் அடிகள் தாங்கிவரும் பெருவாழ்வு வந்தெய்தப்
பெற்று இங்குற்றேன்.'

எனப் புகல்கின்றார். அப்பர் வாழ்வில் நடந்த இந்நிகழ்வால், நிலை உயரும் போது பணிவு வேண்டும் என்பதை உணர முடிகிறதல்லவா?

வாக்கால் நாவுக்கரசர் மக்களுக்கு உணர்த்துவன

நல்லறங்கள் எல்லாவற்றுக்கும் பற்றுக்கோடாக அமைவது இறைவனது திருவருளே என்பதை உணர்ந்த நாவுக்கரசர், தம்மைச் சமண சமயத்திற் புகுத்தி அறவுரைகள் பலவற்றையும் ஓதியுணரச் செய்து, பின் சூலை நோயைத் தந்து சமணத்தினின்று மீட்டு, அறங்களுக்கெல்லாம் அடிப்படையாய் விளங்கும் திருவருளின் திறத்தினைப் புலப்படுத்திச் சிவநெறியிற் சேர்த்து உய்வித்தருளிய இறைவனது திருவருட் சிறப்பை,

'ஓதுவித்தாய் முன் அறவுரை காட்டி அமணரொட
காதுவித்தாய் கட்ட நோய் பிணிதீர்த்தாய் கலந்தருளிப்
போதுவித்தாய் நின்பணிபிழைக்கிற் புளியம் வளாரால்
மோதுவிப்பாய் உகப்பாய் முனிவாய் கச்சியேகம்பனே'
(4 - 99 - 1)

என்று சுட்டுகின்றார்.

மக்கள் தமது அறியாமையால் தவறு செய்தாலும் பின்னர் தம்முடைய குற்றம் உணர்ந்து அருளாளனாகிய இறைவனிடத்து முறையிட்டால், அம்மையப்பனாகிய இறைவன் அன்னோர் அறியாமையால் செய்த குற்றங்களைப் பொறுத்தருள்வான் என்ற பேருண்மையை அப்பர் தமது வாக்கில் சிறப்பாக உணர்த்துகிறார்.

இறைவனின் கருணை

கடவுளை அழைத்தால் வந்து அருள் வழங்கும் கருணை வள்ளல் என்பார் அப்பர். ஆத்மா அல்லது உயிர் தூய அன்போடு வழிபாடு செய்தால் பரம்பொருள் தம் கருணைக்கரத்தை நீட்டக் காத்திருக்கின்றது என்ற இக்கொள்கை உலகச் சமயங்கள் பலவற்றிலும் ஒப்புக்கொள்ளப் பட்ட ஒன்றே. 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்று விவிலியமும் இதனை விளக்குகிறது. இறைவனின் அருள் பெற வேண்டுமானால் பல நாட்கள் அவனைக் கூவி அழைத்துக் கொண்டே இருக்கவேண்டும். அவ்வாறு பல நாட்கள் அழைத்தால் இவன் நம்மை அழைத்தலை விட மாட்டான் என்று கருதி ஒருநாள் வந்து திருக்காட்சி வழங்கியே தீர்வான் என்பதை,

'பன்னாள் அழைத்தால், இவன் என்னைப் பன்னாள்
அழைப்பு ஒழியான்என்று எதிர்ப்படுமே' (4-112-9)

என்ற அப்பர் வாக்கால் அறியலாம்.

இறைஉறை கோயில்

உள்ளம் உருகி வழிபாடு அடியவது சிந்தையே இறைவன் உறையும் திருக்கோயில் என்பதை நாவுக்கரசர்.

'நினைப்பர் மனம் கோயிலாக கொண்டவன்' (6 - 8 -5)

என்ற வாக்கால் சுட்டுகிறார். இவ்விடத்தில்,

'அன்பெனும் குடில்புகும் அரசே'

என்ற வள்ளலார் வாக்கு நினைக்கத்தக்கது.

பிழைபொறுக்கும் பேராளன்

எல்லாம் வல்ல இறைவன் தொண்டர்கள் பிழைகளையெல்லாம் பொறுத்தருள்கிறார் என்கிறார் நாவுக்கரசர். இதற்குத்தம் வாழ்வையே எடுத்துக்காட்டுகிறார் தாம் செய்த பிழை, சமயம் மாறி நின்ற நிலை, பரம் பொருளால் மன்னிக்கப்பட்டமை இவற்றை எண்ணும் போதெல்லாம் அவர் உள்ளம் உருகுகின்றது.

இதனை,

'நாயேன் பிழைத்தனைகள் அத்தனையும்
பொறுத்தா யன்றே' (6 - 95 - 8)

என்கிறார். 'பாவமன்னிப்பு' என்று கிறிஸ்துவ சமயம் கூறும் கோட்பாடும் இதுவேயாகும்.

இறை உரு

இறைவனை இன்ன வடிவில்தான் தொழ வேண்டும் என்ற நியதி இல்லை எந்த வடிவில் வேண்டுமானாலும் வழிபாடு செய்யலாம். ஆனால் அந்த வழிபாடு மனம் ஒன்றிய நிலையில் இருக்க வேண்டும் ஒன்றியிருந்து எல்லியும் பகலும் உள்ளே ஏகாந்தமாக வழிபடல் வேணடும். அப்போது எண்ணுகின்ற வடிவத்திலேயே விரைந்து வந்து வேண்டியதை வேண்டியவாறே அருளுவான் இறைவன். இதனை,

'ஆவரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்' (6 - 18 - 11)

என்ற அப்பர் வாக்கு உணர்த்துகிறது.

இறையருள் பெறும் வழி

இறைவன் திருவருளைப் பெறுவதற்குரிய வழி யாது? என்ற கேள்விக்கு அப்பர் தரும் விளக்கம் நம்மைச் சிந்திக்க வைக்கிறது. ஈசனார்க்குப் பூசனை புரிந்து அவனருளைப் பெறக் கற்கோயில் நாடி அலையாதீர்கள். உங்கள் உடம்பையே ஆலயமாக்கிக் கொள்ளுங்கள்,

வழிபாடு நிகழ்த்தும் பக்தன் உங்கள் மனம் தான் நீராட வேண்டுமா? நதிகளை நோக்கி ஓட வேண்டாம், வாய்மை என்ற நீரிலே மூழ்கி எழுங்கள், உங்கள் அகமனத்துள்ளுறையும் ஆன்மாவைச் சிவலிங்கத் திருமேனி ஆக்கிக் கொள்ளுங்கள். அபிடேக ஆராதனைக்கு வெளியில் வேறு எதனையும் தேடி ஓட வேண்டாம். நேயம் எனப்படும் அன்பினையே நெய்யாகவும், பாலாகவும், தூய நீராகவும் கொண்டு பொருந்த அபிடேகம் செய்யுங்கள் இந்த அகப்பூசைக்கு ஈடான பூசனை உலகில் வேறு இல்லை என்கிறார், வாகீசர்.

'காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே' (4 - 76 - 4)

வாய்மையும் அன்பும் வளர்ந்து ஓங்கும் போது, இறைவன் நம் உள்ளத்திலேயே வெளிப்பட்டு அருள்புரிவான் என்கிறார் அப்பர்.

அவனின்றி ஓர் அணுவும் அசையாது

இறைவன் உயிர்களுக்கு உயிராக நின்று இயக்குவதால் அனைத்தும் இயங்குகின்றன. அவன் இயக்காவிட்டால் ஒன்றும் இயங்காது அவன் காட்டாவிட்டால் ஒன்றும் காண முடியாது என்பதை,

'ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரோ
அடக்குவித்தால் ஆர் ஒருவர் அடங்காதாரே
ஓட்டுவித்தால் ஆர் ஒருவர் ஓடாதாரே
உருகுவித்தால் ஆர் ஒருவர் உருகாதாரே
பாட்டுவித்தால் ஆர் ஒருவர் பாடாதாரே
பணிவித்தால் ஆர் ஒருவர் பாடாதாரே
காட்டுவித்தால் ஆர் ஒருவர் காணாதாரே
காண்பார் ஆர் கண்ணுதலாய்க் காட்டாக்காலே'
(6 - 95 - 3)

என்ற பாடலில் நாவுக்கரசர் உணர்த்துகின்றார்.

இக்கருத்தை அடியொற்றியே, திருஞானசம்பந்தர்,

"கூட்டுவதும் கூட்டிப் பிரிப்பதும் ஒன்றொன்றை
ஆட்டுவதும் ஆட்டி அடக்குவதும் - காட்டுவதும்
காட்டி மறைப்பதுவும் கண்ணுதலான் முன்மைத்த
ஏட்டின் படியென்றிரு." (சிவபோகசாரம், பா.எ. 103)

என்று கூறுவது இவ்விடத்தில் கருதத்தக்கது.

மனிதரில் தலையான மனிதர்

மனிதரில் தலையான மனிதராக வாழவேண்டும் என்ற உறுதி ஒவ்வொருவருக்கும் வேண்டும். 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்பார் வள்ளுவர். கல்வி கற்பதுடன் இறைவனைக் கனிந்து போற்றுவோரே மனிதரில் தலையானவர் என்று உரைக்கிறார்.

நாவுக்கரசர் இதனை,

'கனிமனத் தொடு கண்களும் நீர்மல்கிப்
புனிதனைப் பூவனூ ரனைப் போற்றுவார்
மனிதரில் தலையான மனிதரே' (5-65 - 6)

என்ற அப்பர் வாக்கிலிருந்து அறிய முடிகிறது.

நாவுக்கரசரது வாழ்வும் வாக்கும் மக்கள் இனத்தையெல்லாம் ஈடேற்ற வல்லது. அவரது வாழ்வு முழுமையும், அவர் அருளிய ஒவ்வொரு வாக்கும் மக்களுக்கு பயனுள்ள வகையில் அமைந்துள்ளது.

65. அப்பரும் அகப்பொருள் மரபும்

செ. திருஞானசம்பந்தம், அச்சன்புதூர்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சைவத் திருமுறைகள் சிறந்த இடம் பெற்றுள்ளன. அவற்றுள் தேவாரத் திருமுறைகள் முன்னெழுந்தன. அவற்றுள்ளும் திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்கள் முதன் முதல் எழுந்தன. இவர் பாடிய பதிகங்கள் 312, மொத்தப் பாக்கள் 3,066 ஆகும். இவை நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகளாக வகுக்கப் பெற்றுள்ளன. இம்மூன்று திருமுறைகள் முறையே திருநேரிசை, திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்று வழங்கப்பெறுகின்றன. திருநாவுக்கரசர் பாடியுள்ள பதிகங்களில், அனுபவத்தால் தாம் வாழ்வில் உணர்ந்த உலகியல் வெம்மையும், ஞானத்தால் உணர்ந்த திருவடி நிழல் தண்மையும், உள்ளத்தில் ஏற்படுத்திய போராட்டத்தின் விளைவாக உலகியல் வெம்மையிலிருந்து விடுபடத் துடிக்கும் துடிப்பும் உயிர்நாடியாக அமைகின்றன. மேலும் திருப்பாடல்கள் தத்துவப்பொருளை இனிதாய செஞ்சொற்களால் விளங்கும் நயஞ்சிறந்தன. கற்பாரது உள்ளத்தை உருக்குவதில் ஒப்பற்ற தன்மை வாய்ந்தனவாய்த் திகழ்கின்றன. இத்தகைய நாவுக்கரசர் தேவாரத்தில் அகப்பொருள் மரபுகளை எடுத்துரைப்பதே கட்டுரையின் நோக்கமாகும்.

அகத்துறைப் பதிகங்களின் சிறப்பு

சங்க இலக்கியப் பாடல்களுக்கு 'அகப்பொருள்' பாடுபொருளாக அமைந்துள்ளது. அத்தகைய அகப்பாடல்கள் மானிடக்காதலைச் சிறப்பாக எடுத்துரைக்கின்றன. பக்தி இலக்கியத்தில் அருளாளர்கள் அருளிய பாக்களில் 'அகப்பொருள்', இறைவனை அடையத்துடிக்கும் ஆன்மாவானது, தன்னைப் பெண்ணாகவும், இறைவனைத் தலைவனாகவும் அன்பு செலுத்தும் காதலாக மலர்ந்துள்ளது. இத்தகைய இறைப்பாசுரங்களை ரா.பி. சேதுப்பிள்ளை,

> "கடவுள் காதலை பாடியருளிய ஆழ்வார், நாயன்மார்கள் மக்கட் காதலுக்கென வகுத்த அகத்திணையுலகச் சுவடுகளைப் பின்பற்றிய தாலன்றோ - தெய்வ அன்பு அக இலக்கியத்தடத்துப் பாய்ந்த தாலன்றோ - தமிழகத்தின் இறைப்பாசுரங்கள் புதுமையும் தனிமையும் பெற்ற ஓர் இலக்கிய உலகமாக விளங்குகின்றன".

என்கிறார்.

அப்பர் தேவாரத்தில் 11 பதிகங்கள் முழுவதும் அகத்துறை இயம்புவன. இவை தவிர ஏனைய திருப்பதிகங்களில் "38 பாடல்கள்" அகப்பொருள் மரபுகளைத் தன்னகத்தே கொண்ட தனிப்பாடல்களாக இலங்குகின்றன. நாவுக்கரசரின் அகப்பாடல்கள் அனைத்தும் தலைவி-தோழி-செவிலி ஆகிய மூவர் கூற்றுக்களிலேயே அடங்கி உள்ளன. தலைவி கூற்றுப் பாடல்களில் வாகீசர், தம்மை நாயகியாகவும், பரம்பொருளை நாயகனாகவும், தோழி கூற்றுப்பாடல்களில் தம்மைத் தோழியாகவும் தம் பக்தியைத் தலைவியாகவும், செவிலி கூற்றுப் பாடல்களில் நம்மைச் செவிலி யாகவும், தம் பக்தியைத் தலைவியாகவும் கொண்டு அமைத்துள்ளார். இவற்றுள் தலைவி கூற்றிலும், செவிலி கூற்றிலும் அதிகமாகப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அப்பர் தேவாரத்தில் காணப்படும் அகப் பாடல்களுக்கு இறைவன் பிச்சாடனக் கோலத்தில் எழுந்தருளி வந்த செயலே மூலமாக அமைந்துள்ளது.

தலைவி கனவுக் கூற்று

அப்பர் தேவாரத்தில் தலைவி கூற்றாக 90 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இப்பாடல்களில் தலைவி, தலைவன் உள்ளம் கவர்ந்த செய்தியை உரைப்பதாக,

"நெடுந்தெருவே வந்தெனது நெஞ்சம் கொண்டார்"

என்று திருநாவுக்கரசர் அகச்சுவை ததும்பப் பாடியுள்ளார்.

'திருநல்லூர்' எனும் திருவிருத்தத் திருப்பதிகத்தில் உள்ள பதினொன்று பாடல்கள் தலைவியின் கனவு நிகழ்ச்சியை எடுத்தியம்புகின்றன. இப்பதிகம் தவிர பிற பதிகங்களிலுள்ள சில பாடல்களிலும் தலைவியின் கனவு நிகழ்ச்சிகள் இடம்பெற்றுள்ளன.

"நிலைப்பாடே நான்கண்ட தேடீ கேளாய்
நெருநலைநற் பகலில்லோர் அடிகள் வந்து
கலைப்பாகும் கண்மலரும் கலக்க நோக்கிக்
கலந்து பலியிடுவேன் எங்கும் காணேன்
சலப்பாடே இனிஒருநாள் காண்பே னாகில்
தன்னாகத் தென்னாகம் ஒடுங்கும் வண்ணம்
முலைப்பாடே படத்தழுவிப் போகலொட்டேன்
ஒற்றியூர் உறைந்திங்கே திரிவானையே"

எனும் பாடலில் தலைவியின் கனவு நிகழ்ச்சிகள் அப்பரால் கூறப் பெற்றுள்ளன.

குறிப்பு உணர்த்தல்

தலைவன் தலைவி சந்திக்கும்போது நடக்கும் குறும்புகளை நாவுக்கரசர்,

"நண்ணிட்டு வந்து மனைபுகுந் தாரும்நல் லூரகத்தே
பண்ணிட்ட பாடலராடல ராய்ப்பற்றி நோக்கிநின்று
கண்ணிட்டுப் போயிற்றுக் காரணமுண்டு கறைக்கண்டரே"

என்று இயம்புகின்றார். ஈண்டு 'கண்ணிட்டுப் போயிற்று' என்னும் பாடல்வரி கண்ணால் சாடை காட்டும் குறிப்பினை உணர்த்துகின்றது. இக்கருத்து,

"நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டியுரைக்கும் குறிப்புரை யாகும்"

எனும் தொல்காப்பியரின் அகக் கோட்பாட்டிற்கு இலக்கியச் சான்றாக அமைகின்றது.

கூடலிழைத்தல்

தலைவன் வருகையை அறிதற்குப் பிரிந்திருக்கும் தலைவி கூடல் இழைத்தல் பழந்தமிழ்மரபு. நாயன்மார்களும், ஆண்டாளும் கூடலிழைத்தல் பற்றிப் பாடியுள்ளனர். கூடலிழைத்தலைப் பற்றி நாச்சியார் திருமொழி உரைப்பகுதியில்,

"கூடலாவது வட்டமாகக் கோட்டைக்கீறி அதுக்குள்ளே சுழி சுழியாகச் சுற்றும் சுழித்து, இவ்விரண்டு சுழியாகக் கூட்டினால் இரட்டைப் பட்டால் கூடுகை. ஒற்றைப் பட்டால் கூடாமை என்று சந்தேகம்' என்று பெரிய வாச்சான் பிள்ளை கூறுவார்.

திருஞானசம்பந்தர், சுந்தரர் திருப்பாடல்களில் கூடல் இழைத்தல் பற்றிய செய்திகள் இடம்பெறவில்லை. அப்பரடிகள் வாக்கில் மட்டும் தலைவி கூடல் இழைக்கின்றாள். திருமருகல் பதிகத்தில், 'தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவி கண்கள் நீரைச் சொரிகின்றன. மருகலில் உள்ள என் தலைவன் என்னைத் தேடி வருவானேயானால் நீ கூடுவாயாக' என்று கூறிக் கூடலிழைத்து வருந்துகின்றாள். இக்கருத்தைப் பின்வரும் பாடலில் நாவுக்கரசர்,

"நீடுநெஞ்சுள் நினைந்துகண் ணீர்மல்கும்
ஓடு மாலினோ டொண்கொடி மாதராள்
மாடநீள் மருகற் பெருமான் வரில்
கூடு நீயென்று கூடலிழைக்குமே"

என்று குறிப்பிடுகின்றார். மேலும் கோழப்பம் பதிகத்தில்,

"பாடலாக்கிடும் பண்ணொடு பெண்ணிவள்
கூடலாக்கிடும் குன்றின் மணற்கொடு
கோடல் பூத்தலர் கோழம்பத் துள்மகிழ்ந்து
ஆடுங் கூத்தனுக் கன்புபட் டாளன்றே"

எனும் பாடலில் கோழப்பத்துக் கூத்தனுக்கு தலைவி அன்றே அன்புபட்டாள். அவ்வன்பானது பாடல், கூடல் ஆகியவற்றைத் தலைவிக்கு விளைவிக்கின்றது என்று அப்பர் தலைவி கூடலிழைக்கும் செயலை எடுத்துரைக்கின்றார்.

அறத்தொடு நிற்றல்

நாவுக்கரசர் திருப்பாடல்களில் அறத்தொடு நிற்கும் பகுதிகள் மலிந்து காணப்படுகின்றன.

"எளியல் ஏத்தல் வேட்கை உரைத்தல்
கூறுதல் உசாதல் ஏதீடு தலைப்பாகு
உண்மை செப்பும் கிளவியொடு தொகைஇ
அவ்வெழு வகைய என்மனார் புலவர்"

எனும் நூற்பாவிற்கு எடுத்துக்காட்டாக,

"விண்டார் மும்மதி லெய்தவன் வீரட்டம்
கண்டா லல்லதென் கண்துயில் கொள்ளுமே"

எனும் அப்பர் வாக்கு அமைகின்றது. இப்பாடல் வரிகளில் தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றலை அறிய முடிகின்றது. மேலும் செவிலித் தாய் அறத்தொடு நிற்கும் பாடல்களும் இடம் பெற்றுள்ளன. இத்தகைய பாடல்களில் ஐந்திணை ஒழுக்கம் பற்றிய செய்திகள் விரவிக்கிடக்கின்றன.

தூது இலக்கியம்

அகப்பொருள் இலக்கிய வடிவங்களில் தூது இலக்கியமும் ஒன்றாகும். தலைவன் தலைவியருள் விரக தாபத்தால் துன்புறும் ஒருவர் மற்றொருவருக்குத் தம் வருத்தத்தைத் தெரிவிக்குமாறு தூது அனுப்புதல் தூது இலக்கியமாகும்.

சங்க நூல்களில் நற்றிணை, ஐங்குறுநூறு, அகநானூறு என்பவற்றில் அஃறிணைப் பொருள்களைத் தூது அனுப்பியதாக அமைந்த பாடல்கள் பல உள்ளன. அஃறிணைப் பொருள்களிடத்தில் தலைவியுரைக்கும் அக்கூற்றினைக் 'காமமிக்க கழிபடர்கிளவி' என இலக்கணத்தார் கூறுவர். அப்பரின் தூதுரை மொழிகளில் உயர்திணைப் பொருளும், அஃறிணைப் பொருளும் இடம்பெற்றுத் தூது இலக்கிய மரபு பின்பற்றப் படுவதைக் காணமுடிகின்றது. அப்பர் தேவாரத்தில் திருப்பழனத் (4:12) திருப்பதிகம் முழுவதிலும், திருப்புறப்பயம் என்னும் திருத்தாண்டகப் பதிகத்தில் பத்துப்பாடல்களிலும், திருமருகல் பதிகத்தில் (5:88:4) ஒரு பாடலிலும், தூது பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. மேலும் அப்பர் திருவாக்கில்,

"சொல்மாலை பயில்கின்ற குயிலினங்கள் சொல்லீரே
பொன்மாலை மார்பன்என் புதுநலம் உண்டிகழ்வானோ"

என்றும்,

"நினைக்கின்ற நினைப்பெல்லாம் உரையாயே நிகழ்வண்டே"

என்றும் பாடல்கள் மலர்ந்துள்ளன. இப்பாடல்கள் குயில், வண்டு ஆகியவற்றைத் தூதுவிடும் பழந்தமிழ் மரபுகளை நினைவூட்டுவனவாய் அமைந்துள்ளன.

உலா

பாட்டுக்குரிய தலைவன் வீதியில் உலா வருகையில், ஏழு பருவ மகளிரும் அவனைக் கண்டு காமுற்றதாக சிறப்பித்துப் பாடுதலின் இஃது இப்பெயர் பெற்றது. உலா இலக்கியங்களுள் தலைவனுடைய தசாங்கத்தை விரித்துரைப்பது மரபு என்று பிரபந்தத் திரட்டும், சிற்றில் இழைத்தல், பாவையாடல், கழங்காடல், அம்மானை, ஊசல், யாழ்மீட்டல், புனலாடல், பொழிலாடல் முதலிய மகளிர் விளையாடல்கள் உலாவில் இடம்பெறவேண்டுமென்று பன்னிருபாட்டியலும் கூறுகின்றன. இதற்கு முன்னர்த் தோன்றிய தொல்காப்பியத்தில்,

"ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப"

என்னும் நூற்பா உலா நூல் தோற்றத்துக்கு வித்திட்டது என்பர். அப்பர் தேவாரத்தில் உலா பற்றிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஐந்தாம் திருமுறை திருமயிலாடுதுறை திருப்பதிகத்தில் உள்ள,

"சித்தந் தேறுஞ் செறிவளை சிக்கெனும்
பச்சை தீரும்மென் பைங்கொடி பால்மதி
வைத்த மாமயி லாடு துறையரன்
கொத்தினிற் பொலி கொன்றை கொடுக்கிலே"

எனும் பாடலில், என் மகளுக்குத் தலைவன் அணிந்திருக்கும் கொன்றை மாலையைத் தருவானேயானால் என் மகள் மனம் தெளிவாள். அவள் கையில் அணிந்திருக்கும் வளையல்கள் கழலாது. செறிந்து பொருந்தும். பசலை நிறமும் நீங்கிப் பழைய நிறத்தினையும் பெறுவாள் என்று செவிலி கூற்றாக நாவுக்கரசர் தம் கருத்தைக் கூறியுள்ளார். இப்பாடலில் தலைவன் அணிந்திருக்கும் கொன்றை மாலையைத் தலைவி விரும்பு கிறாள். உலா இலக்கியத்தின் இக்கூறு. பின் எழுந்த உலா இலக்கியங் களுக்கு மூலமாக அமைந்திருக்க வேண்டுமெனக் கருதத் தோன்றுகிறது. இதுபோன்று ஆறாம் திருமுறையில் திருவலம்புரத் திருப்பதிகத்திலுள்ள பத்துப் பாடல்களும், பெருமான் வீதி உலா வந்தபோது, அவரைக் கண்டு காதல் கொண்ட பெண் ஒருத்தியின் கூற்றுகளாக அமைந்துள்ளன.

கைக்கிளை

சங்க இலக்கியப் பாக்களில் தலைவன் தலைவி இருவரிடையே நிகழும் ஒருதலைக் காமமாகிய கைக்கிளையும், பொருந்தாக் காமமாகிய

பெருந்திணையும் காணமுடிகின்றது. தொல்காப்பியர் கைக்கிளைக்குப் புறனான பாடாண் திணையில்,

> "காமப்பகுதி கடவுளும் வரையார்
> ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்"

எனும் நூற்பாவில், கடவுளிடத்து மானிடப் பெண்டிர் நயக்கும் நிலை கூறப்பட்டுள்ளது. இம்மரபே பக்தி அகப்பாடல்களுக்கு அடிப்படையாக அமைகின்றது.

அப்பரடிகள் திருவாரூர்த் திருத்தாண்டகத்தில் ஏழாவது பாடலில், தலைவனைக் காதலித்துத் தன் வயமிழந்த தலைவியின் காதல் உணர்வை எடுத்தியம்புகின்றார். ஈண்டு காதல் வளர்ச்சி தோற்றம் முதல் முடிவுவரை படம்பிடித்துக் காட்டப்படுகின்றது. பின்வரும் அப்பாடல் நாவுக்கரசரின் அகத்துறைப் பாடல்களில் முடிமணியாகவும் திகழ்கின்றது.

> "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
> மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
> பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
> பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
> அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
> அகன்றாள் அகலிடைத்தார் ஆசாரத்தைத்
> தன்னை மறந்தாள் தன்னாமம் கெட்டாள்
> தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே."

எனும் திருப்பாடல் தலைவியின் தன்மையைத் தோழி விளங்கக் கூறுவதாக அமைந்துள்ளது. இப்பாடலில் அமைந்துள்ள அகப்பொருள் மரபை, சொ. சிங்காரவேலன்,

"தலைவனுடைய பெரும் புகழ்கேட்டுத் தலைவி மகிழும் நிலையில் நிகழும் மெய்ப்பாட்டை 'உறுபெயர் கேட்டல்' என்பர் தொல்காப்பியர். இவ்அகத்துறைப் பாடலில் இம்மெய்ப்பாட்டை அமைத்து அடிகள் அருளியுள்ளார்" என்று குறிப்பிடுகின்றார். மேலும் இப்பாடல் நகைச்சுவைக்கும், தத்துவத்திற்கும் சான்றாக அமைகின்றது. இவ்வாறு அகப்பொருள் இலக்கிய மரபுகள் அப்பரின் பதிகங்களில் ஊடாடிக் கிடக்கின்றன.

பெருந்திணை

நாவுக்கரசர் அருளிய திருவாமாத்தூர் பதிகம் முழுமையும் பெருந்திணை இன்பமாக அமைந்துள்ளது. இப்பதிகத்தில் தலைவி பிச்சை ஏற்று வந்த ஆமாத்தூர் இறைவனைக் கண்டாள். அவ்விறைவன் பார்வையால் அவனுக்கு உரியவளானாள். பின்னர் தலைவி அறியாது

இறைவன் மறைந்து போனான். இதனால் தலைவி இறைவன் தன்னை வரையாது நீங்குவதால் பலரிடம் முறையிட்டு அவனைக் கூட்டுவிக்குமாறு வேண்டுகிறாள். இவ்வாறு தலைவி தன் அழகைப் பறித்துக்கொண்ட தலைவனை எண்ணி அழுது புலம்புவதை அப்பரடிகள்,

"வண்ணங்கள் தாம்பாடி வந்துநின்று
வலிசெய்து வளைகவர்ந்தார் வகையால் நம்மைக்
கண்ணம்பால் நின்றெய்து கலைப்பேசிக்
கடியதோர் விடையேறிக் காபாலியார்
சுண்ணங்கள் தாங்கொண்டு துதையப் பூசித்
தோலுடுத்து நூல்பூண்டு தோன்றத் தோன்ற
அண்ணலார் போகின்றார் வந்து காணீர்
அழகியரே ஆமாத்தூர் ஐய னாரே"

என்று பாடியுள்ளார். இத்திருப்பதிகத்தில் தொல்காப்பியர் குறிப்பிடும் 'தேறுதலொழிந்த காமத்து மிகுதிறம்'' எனும் அகத்துறை இலக்கணம் அமைந்திருப்பது நோக்கத்தக்கது.

திருநாவுக்கரசர் திருப்பாடல்கள் பக்தி உருக்கம் உடையன. பணிவும் குழைவும் மிக்கன. அன்பொடு புணர்ந்த அகப்பொருள் மரபை விளக்குவன. காதல் உணர்வின் மூலம் பக்தி உணர்வை ஊட்டுவன. உயிருக்கு உறுதி பயக்கும் உண்மைகளை அறுதியிட்டு உரைப்பன. சிவபரம்பொருளையே கூடி இன்புறச் செய்வன. இத்தகு சிறப்புமிக்க நாவுக்கரசரின் திருமுறைகளை நாடோறும் ஓதி உய்வோமாக!

66. நாவரசரின் புதுமைகள்

ச. திருநாவுக்கரசு, முசிறி.

பழைமைத் தோற்றம்

திருநாவுக்கரசரின் தோற்றத்தை, தூய வெண்ணீறு அணியப் பெற்ற பொன்மேனியும், உருத்திராக்க வடங்கள் அணிந்த கோலமும், நாயகன் சேவடி தைவரும் சிந்தையும், நைந்து உருகிப் பாய்வதுபோல் அன்புநீர் பொழியும் கண்களும், பதிகச் செஞ்சொல் பொருந்திய செவ்வாயினையும் உடையவராகத் தெய்வச் சேக்கிழார் நமக்குக் காட்டுகிறார். திருவாமூரில் அவரது கோலத்தை,

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந் திருவடியும் மதுரவாக்கிற்
சேர்வாருந் திருவாயிற் றீந்தமிழின் மாலைகளுஞ்,
செம்பொற்றாளே
சார்வான திருமனமு முழவாரத் தனிப்படையுந், தாமுமாகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்துப் பணிந்தேத்திப் பரவிச் செல்வார்.

என்று பெரியபுராணம் காட்டுகிறது. இக்கோலத்தில் மிகப் பழைய காலத்தின் பழைமை நமக்குத் தெரிகிறது. ஆனால் அவரது சிந்தனையைப் பார்த்தால் புத்தம் புதிய புதுமையையும் இன்னும் பின்னால் வரப்போகிற புதுமையையும் அவர் ஏற்றுக்கொண்டிருக்கிற தன்மையை நம்மால் அறிய முடிகிறது. பழைமைக்கும் புதுமைக்கும் இணைப்பை ஏற்படுத்தி மக்களை நல்ல வழியில் அழைத்துச் செல்ல அவர் ஓர் இயக்கத்தையே நடத்தியதை நம்மால் உணரமுடிகிறது. 'பாலனாய்க் கழிந்த நாளும் கோதைமார்தம் மேலனாய்க் கழிந்த நாளும் மூப்பு வந்து கோலனாய்க் கழிந்த நாளும் குறிக்கோளிலாது கெட்டேன்' என்று பாடிய நமது சுவாமிகள், 'என்கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற குறிக்கோளுடன் வாழ்ந்ததை அவர் வரலாறு காட்டுகிறது.

சாதியைச் சாடுவதில் புதுமை

''மனிதர்காள்! இங்கே வம்மொன்று சொல்கிறேன்'', ''வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்'' என்றெல்லாம் அழைத்துச் சொல்லத் தொடங்குகிறார். சிலர் எழுந்து செல்லத் தொடங்கினரோ என்னவோ, ''இருந்து சொல்லுவன் கேண்மின்கள் ஏழைகாள்!'' எனக் கூறுவதிலிருந்து தமிழ் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர் களைத் திருத்த முயன்ற உறுதிப்பாடு தெரிகிறது.

தமிழ் மறையாம் திருமந்திரம் அருளிச் செய்த திருமூலர், 'ஒன்றே குலமும்; ஒருவனே தேவனும்' என்று பாடுவார். இருப்பினும் தமிழ் நெறிக்கு ஒவ்வாத சாதி வேற்றுமைகள் எப்படியோ தமிழ்நாட்டில் நிலை பெற்றுவிட்டன. சாதி வேற்றுமைகளைப் பொய் புனைந்து கட்டிய புரைதீராச் சாத்திரங்களைக் காட்டி நிலைநிறுத்த முயல்பவர்களைச் 'சழக்கர்கள்' என்று சாடுகிறார். சழக்கர்கள் என்றால் முறைகேடர்கள் என்று பொருள்.

"சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்தி ரமுங்குல முங்கொண் டென்செய்வீர்
பாத்தி ரஞ்சிவ மென்று பணிதிரேல்
மாத்தி ரைக்குள் அருளு மாற்பேறரே"

என்று அவர் சினந்து கூறுவதைக் காணலாம். தமது நெஞ்சை நோக்கி குலம், சுற்றம் முதலான பந்த பாசங்களை விடுக; சிவபெருமானைப் பற்றி நின்று நேசமாக விளங்குக எனக் கூறுகிறார்.

'நேச மாகி நினைமட நெஞ்சமே
நாச மாய குலநலஞ் சுற்றங்கள்
பாச மற்றுப் பராபர ஆனந்த
ஆசை யுற்றிடும் ஆனைக்கா அண்ணலே'

என்பது அவரின் திருவாக்கு. இங்கு நெஞ்சிடமாக் கூறுகிறார்? இல்லை யில்லை. தமிழ் மக்களாகிய நம்மிடமல்லவா கூறுகிறார்.

அப்பரடிகள் மக்களை இரு பிரிவுகளாகக் கருதுகிறார். மாதேவனை மதிக்காதவர்கள் ஒரு பிரிவினர். அவர்கள் செல்வம் எவ்வளவு கொடுத் தாலும் அவர்கள் மதிக்கப்படுபவர்கள் அல்லர். சிவபெருமானின் அன்பர்கள் மற்றொரு பிரிவினர். இவர்கள் தொழுநோயுடையவராகவும், புலையராகவும் இருப்பினும் அவர்களே தம்மால் வணங்கத்தக்க கடவுளர்கள் எனப் பறைசாற்றுகிறார்.

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
　　தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
　　மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராய்
　　ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
　　அவர் கண்டீர் நாம்வணங்குங் கடவுளரே.

என்பது நம் ஆளுடைய அரசுகளின் வாக்கு.

வழிபாட்டில் புதுமை

அப்பரடிகள் காலத்தில் அர்ச்சகர் துணையின்றி அடியவர்கள் நேரே சென்று இறைவன் திருமேனியைத் தொட்டு வழிபடுகின்ற வழக்கம் இருந்துள்ளது என்பதை அவரது பாடல்கள் நமக்கு நன்கு உணர்த்துகின்றன. "போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்", "பன்மலர் தூவித் தோளைக் குளிரத் தொழுவேன்", "இச்சையால் மலர்கள் தூவி யிரவொடு பகலுந் தம்மை, நச்சுவார்க்கினியர் போலும் நாகவீச்சரவ னாரே", "என்போ லிகள்பறித்திட்ட இலையு முகையு மெல்லாம், அம்போ தெனக்கொள்ளு மையனை யாற னடித்தலமே" என்பன அவரது அருளிச் செயல்கள். இறைவனை வழிபடுகின்ற முறையை தமது நெஞ்சை நோக்கிக் கூறுவார் போல நமக்குச் சொல்லி வழிகாட்டுகிறார்.

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும்
ஆரூரா என்றென்றே யலரா நில்லே"

என்பது அவர் காட்டும் வழிபாட்டு முறை.

சிறு தெய்வ வழிபாடு கூடாது என்பது திருநாவுக்கரசு சுவாமிகளின் அழுத்தமான எண்ணம். சிறுதெய்வங்களைச் செத்துத் செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் என்கின்றார். அவற்றைச் சென்று சேராமல், சிவபெருமான் திருவடியே சேரவேண்டும் என்பதை,

"சென்றுநாம் சிறுதெய்வஞ் சேர்வோ மல்லோஞ்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்"

என அருளிச் செய்திருப்பதைக் காணலாம். எல்லாத் தேவர்களுக்கும் தேவதேவனாக இருப்பவன் சிவபெருமானே என்பதை,

'யாதோர் தேவரெனப்படு வார்க்கெலாம்
மாதே வன்னல்லால் தேவர்மற் றில்லையே'

என நமக்கு விளக்குவதை அறியலாம்.

தமிழிசையில் புதுமை

தமிழுக்கும் இசைக்கும் அப்பரடிகள் செய்த தொண்டு அளப்பரிது. அவரே, 'சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை பாடல்

மறந்தறியேன்' எனப் பாடியருளியிருக்கிறார். இறைவனே தன்னைத் தமிழ் மாலை பாடச் செய்ததாக, "பணிகொண் டாங்கே பன்னியநூல் தமிழ்மாலை பாடுவித்தென் சிந்தைமயக் கறுத்ததிரு அருளி னானை" எனப் பாடி மகிழ்கிறார். அப்பரடிகள் திருக்குறுந்தொகை, திருநேரிசை, திருவிருத்தம், திருத்தாண்டகம் முதலாகிய புதிய வகைப் பாடல்களைப் பாடித் தமிழுக்குப் புதுமை சேர்த்துள்ளார். அவருடைய திருத்தாண்டகம் அவருக்கு முன்னும் பின்னும் தமிழிசைப் பாடல்களில் இடம்பெற வில்லை என்பது குறிப்பிடத் தகுந்தது. ஆழ்வாரின் திருநெடுந்தாண்டகம், திருக்குறுந்தாண்டகம் என்பவை அப்பரடிகளை அடியொற்றி வந்தவையே. நான்காம் திருமுறையில் முதல் இருபத்தியொரு பதிகங்கள் தாளத்தொடு பாடப்படும் இசைப்பாடல்கள். அடுத்த ஐம்பத்தெட்டு பதிகங்கள் திருநேரிசை என்ற பெயரிலுள்ள விருத்தப்பாக்கள். அதற்கடுத்த முப்பத்துநான்கு பதிகங்கள் திருவிருத்தம் என்ற பெயரிலுள்ள விருத்தப் பாக்கள். ஐந்தாம் திருமுறை திருக்குறுந்தொகை எனப் பெயரிய கலி விருத்தப்பாக்கள். ஆறாந்திருமுறை எண்சீர் நாலடி கொண்ட பாடல்களும், அறுசீர் நாலடி கொண்ட பாடல்களுமாம். தமிழில் முதன்முதலாக விருத்தப் பாக்களைப் புகுத்திய பெருமை காரைக்காலம்மையாரையே சாரும் என்றாலும் மிக அதிக அளவில் புகுத்திய பெருமை நாவுக்கரசரையே சாரும் எனலாம். நாவுக்கரசரால் தோற்றுவிக்கப்பட்ட இசைப்பாடல்கள் திருஞானசம்பந்தரால் பலப்பல வடிவங்களைப் பெறலாயிற்று என்பதை யறியமுடிகிறது. தமிழின் மேலும் தமிழிசையின் மேலும் அளவற்ற காதல் கொண்டிருந்தாலும் பிறமொழிகளின் மேல் வெறுப்பில்லாதவர். "ஆரி யந்தமி ழோடிசையானவன்", "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்', 'வடமொழியுந் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனவன்காண்" என்பன அடிகளாரின் அருளிச் செயல்கள்.

மந்திர ஆற்றல்

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த, மறைமொழி தானே மந்திரம் என்ப" என்பது தொல்காப்பியம், "நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து, மறைமொழி காட்டி விடும்" என்பார் திருவள்ளுவர். திருநாவுக்கரசு சுவாமிகளின் செந்தமிழ்ப் பாடல்கள் மந்திர ஆற்றல் பெற்றவை. ஏழு நாட்கள் நீற்றறையினுள்ளே இருந்து ஒரு தீங்கும் நேராது வெளியே வந்தார். நஞ்சு கலந்த பாற்சோறு அவருக்கு அமுதமாயிற்று. யானை இடற வந்தபோது அவரை வணங்கிச் சென்றது. கல்லிற்பூட்டிக் கடலில் விட்டபொழுது பதிகம் பாடிக் கல்லைத் தெப்பமாக மாற்றிக் கரைசேர்ந்தார். அப்பூதியடிகளாரின் திருமகனை நாகம் தீண்டி, நஞ்சு தலைக்கேறி மயங்கி வீழ்ந்தபோது, 'ஒன்று கொலாம்' எனத் தொடங்கும் பதிகம் பாடி பிள்ளையை எழுப்பினார். இவையெல்லாம் அவர் பாடல்களின்

மந்திர ஆற்றலால் நிகழ்ந்தவை என்பதை அறியலாம். 'நாவுக்கரசு' என்ற பெயரே ஒற்றெழுத்துகளை நீக்கிப் பார்க்கும்பொழுது ஐந்தெழுத்து (பஞ்சாக்கரம்) மந்திரமாக அமைவதைக் காணலாம். இம்மந்திரத்தின் மூலமாகவே அழலோம்பும் அப்பூதியடிகளார் என்றும் துன்பமேயில்லாத ஒப்பில்லா பதத்தைப் பெற்றார் என்பதைத் துறைமங்கலம் சிவப்பிரகாசர்,

'உற்றா னலன்றவந் தீயினின் றானல னூண்புனலா
வற்றா னலனுகர் வுந்திரு நாவுக் கரசெனுமோர்
சொற்றா னெழுதியுங் கூறியு மேயென்றுந் துன்பில்பதம்
பெற்றா னொருநம்பி யப்பூதி யென்னும் பெருந்தகையே'

எனப் பாடிப் பரவி மகிழ்கிறார்.

முதல் உண்ணா நோன்பாளர்

பொது நன்மைக்காக உண்ணா நோன்பு மேற்கொண்டு போராடி வெற்றி பெறுபவர்க்கெல்லாம் முன்னோடி திருநாவுக்கரசு சுவாமிகள்தான். பழையாறை வடதளியில் திருக்கோயிலை மறைத்துச் சமணர்கள் பாழியமைத்தனர். இதனைக் கேள்விப்பட்டு மிகவும் வருந்தினார் நமது அடிகள். அங்கு இறைவரது வண்ணங்கண்டு கும்பிட்டாலன்றி மேற்செல்வதில்லை எனத் துணிந்தார். 'அமணர்திறம் அழித்த உம்மைக் காணக்காட்டும்' என்று இறைவர் பாதம் நினைந்து கொண்டு அப்பரடிகளார் உண்ணாநோன்பு மேற்கொண்டார். இதனைத் தெய்வச் சேக்கிழார்,

"வண்ணங் கண்டு நானும்மை வணங்கியன்றிப் போகேனென்
றெண்ண முடிக்கும் வாகீச ரிருந்தா ரமுது செய்யாதே".

எனப் பாடுகிறார். இறுதியில் வெற்றி பெற்று சிவபெருமானிடம் சென்று வழிபட்டு, 'அமணர் மறைத்தாலும் மறைக்க வொண்ணுமோ' என்று பதிகம் பாடி இறைஞ்சினார்.

அஞ்சாமையிலும் புதுமை

ஒப்பற்றவராகிய சிவபெருமானின் தமராகிய காரணத்தினால் அஞ்சாமல் செம்மாந்து வாழ்ந்த பெரியார் திருநாவுக்கரசர். "உடையார் ஒருவர் தமர்நாம், அஞ்சுவதி யாதொன்றுமில்லை அஞ்ச வருவதுமில்லை" என்பது அவர் திருவாக்கு. தமது நெஞ்சை விளித்துப் பல இடங்களில் அஞ்சவேண்டாம் என அறிவுறுத்துகிறார்.

"மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசைகெட் டிருசுடர் வீழினு மஞ்சல் நெஞ்சே"

"வானந் துளக்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளக்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்

மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண்டு
ஊனமொன்றில்லா வொருவனுக் காட்பட்ட முத்தமர்க்கே"

என்பன நாவுக்கரசரின் அஞ்சாமையை முழங்கும் சில பாடல்கள். மக்களின் உரிமையை முடக்கி அடிமை கொண்ட முடியரசை, உலக மக்கள் அஞ்சியடங்கி தலைமேற்கொண்டு பாராட்டிக் கொண்டிருந்த பொழுது அப்பரடிகள்,

நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.

என்று முழங்கி முடியாட்சிக்கு எதிராக வீரக்குரல் கொடுத்தார். "அரசனது ஆணை தெய்வத்தின் ஆணை" என்ற கொள்கை நிலவிய உலகில் அப்பரடிகள், அரசின் ஆணையைத் துச்சமெனத் தூர எறிந்தார். ஆள்கிறவன் - ஆளப்படுபவன் என்ற வேற்றுமையைக் களைய முதன்முதலில் வித்திட்ட பெருமை அப்பரடிகளையே சாரும்.

தொண்டிலும் புதுமை

திருவீழிமிழலையில் கடும்பஞ்சம் நிலவியது. திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் அங்குச் சென்றனர். மக்கள்படுந் துயரம் கண்டு வருந்தினர். இருவரும் இறைவனிடம் வேண்டி படிக்காசு பெற்று, 'அடியார்கள் வந்து இருபொழுதும் உண்ணுக' என்று பறைசாற்றுவித்துத் தங்கள் தங்கள் மடங்களில் அடியார்கள் எல்லாருக்கும் சோறிட்டுக் காத்தனர். திருஞானசம்பந்தர் வாசியுடன் காசு பெற்றார். கைத்தொண்டாகும் அடிமைச் சிறப்பினால் திருநாவுக்கரசர் வாசியில்லா காசு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இளமையில் அடிகளார் அறச்சாலைகள் அமைத்தும், தண்ணீர்ப்பந்தர் வைத்தும், சோலைகள் வளர்த்தும், குளங்கள் எடுத்தும், நாவலர்கட்கு உதவியும் தொண்டு செய்தமையைப் அவரது வரலாறு உணர்த்துகிறது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கக் கையில் உழவாரப்படை கொண்டு கோயில்களின் உள்ளும் புறமும், கோயில்களுக்குச் செல்லும் வீதிகள் ஆகியவற்றைத் தூய்மை செய்தமையைக் காணலாம்.

மனித குலத்தின் நல்வாழ்வுக்கெதிராக நிற்பவை பகை, வளம், வறுமை என்ற ஏற்றத்தாழ்வுகள். சமநிலைச் சமுதாயத்தில்தான் அன்புதழீஇய உறவு வளரமுடியும்; இன்ப வாழ்வு காண இயலும். அப்பரடிகள் வளம் - வறுமை என்ற ஏற்றத்தாழ்வை ஈதல் என்ற பேரறத்தின் மூலம் போக்கிச்

சமநிலைச் சமுதாயம் காணத் துடித்தார். பொருளே, இல்லாதவர்களுக்கு வழங்கத்தான் கொடுக்கப்பட்டுள்ளது. இறைவன் திருவருள், தேவைப் படுபவர்களுக்குக் கொடுப்பவர்களுக்குத்தான் உண்டு. வழங்கி வாழ வைத்துத் தாமும் வாழாத கொடியவர்களுக்கு நரகம்தான் கிடைக்கும். இந்தக் கொள்கையைத்தான் 'தர்மகர்த்தா கொள்கை' என்கின்றனர். அண்ணல் காந்தியடிகளின் கொள்கை தர்மகர்த்தாக் கொள்கையே யாகும். இந்தக் கொள்கையை அப்பரடிகள்,

> **இரப்பவர்க் கீயவைத்தார் ஈபவர்க் கருளும் வைத்தார்**
> **கரப்பவர் தங்கட் கெல்லாம் கடுநர கங்கள் வைத்தார்**
> **பரப்புநீர்க் கங்கை தன்னைப் படர்சடைப் பாகம் வைத்தார்**
> **அரக்கனுக் கருளும் வைத்தார் ஐயன்ஐ யாறனாரே.**

என அன்றே பாடியருளியுள்ளார். எல்லோரும் வாழவேண்டும், இன்பமாக வாழவேண்டும், பொருளுடைமை பிறருக்குத் தந்து உதவி வாழ்வதற்கே என்ற உயர்ந்த தர்மகர்த்தாக் கொள்கைக்கு வித்தூன்றிய பெருமை நம் அப்பரடிகளையே சாரும்.

இயற்கையைப் போற்றுவதிலும் புதுமை

பல்லவ மன்னன் ஆணையால் திருநாவுக்கரசர் நீற்றறையினுள் வைக்கப்படுகிறார். ஆண்ட அரசுகள் சிவபெருமானின் திருவடியின் நிழலையே தமது தலைமேற்கொண்ட, "ஈசனடியார்க்கு ஈண்டு வரும் துன்பங்களும் உளவாகுமோ?" என்று முதல்வனையே தொழுதிருந்தார். நீற்றறை அவருக்கு ஐயர் திருவடி நீழலருளாகிக் குளிர்ந்ததைக் கூறுபவர்,

> **மாசில் வீணையும் மாலை மதியமும்**
> **வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
> **மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
> **ஈச னெந்தை யிணையடி நீழலே.**

எனப் பாடியருளியதைக் காண்க. இயற்கையில் இன்பந்தரும் பொருள் களையெல்லாம் அடுக்கிக் கூறியுள்ள அழகையும் புதுமையையும் காணலாம். சிவகதி விளைவை உழவுத் தொழிலோடு இயைத்து உருவகமாக,

> **மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்**
> **பொய்மையாங் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்**
> **தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச்**
> **செம்மையுள் நிற்ப ராகிற் சிவகதி விளையு மன்றே.**

எனப் பாடும் அழகைக் காண்க. உழவுத் தொழிலை ஒரு தேர்ந்த உழவனைப் போலக் காட்டிச் சிவகதி பெற நமக்குக் காட்டும் வழி புதுமையானதன்றோ?

வரலாற்றுப் பதிவுகளில் புதுமை

குறிப்பிடத்தக்க வரலாற்றுப் பதிவுகளைத் தமது பதிகங்களில் நாவரசர் செய்திருப்பது புதுமையாக இருக்கிறது. அடைவுத் திருத்தாண்டகத்தில் அப்பரடிகள் ஏழுவிதமான கோயிற் பெயர்களைப் பதிவு செய்கின்றார்.

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
 பெருங்கோயி லெழுபதினோ டெட்டும் மற்றுங்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
 கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
 இளங்கோயில் மணிக்கோயில் ஆலக் கோயில்
திருக்கோயில் சிவனுறையுங் கோயில் சூழ்ந்து
 தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள் தீரு மன்றே.

என்ற பாடலில் (1) பெருங்கோயில் என்ற பெயர்பெற்ற எழுபத்தெட்டுக் கோயில்கள் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். இவையல்லாமல் (2) கரக்கோயில், (3) ஞாழற் கோயில், (4) கொகுடிக்கோயில், (5) இளங்கோயில், (6)மணிக்கோயில், (7) ஆலக்கோயில் என்ற பெயர்கள் கோயில்கள் அமைந்த வகையினையொட்டி வந்த பெயர்களாக இருக்கலாம். குடமுழக்கு நடைபெற வேண்டிய காலத்தில் கருவறையிலுள்ள தெய்வப் படிமங்களை வேறிடத்து நிறுவி வழிபடுதல் இன்றும் வழக்கில் உண்டு. இதனைப் 'பாலாலயம்' என்ற வடமொழிப் பெயரால் வழங்கு கின்றனர். இந்த வடமொழிப் பெயர் திருநாவுக்கரசர் கூறிய 'இளங்கோயில்' என்ற தமிழ்ச் சொல்லின் மொழி பெயர்ப்பாக இருக்கலாம் என அறியும்போது வியப்பாக இருக்கிறது.

தமிழகத்தில் விநாயகர் வழிபாடு எப்போது தோன்றிற்று என்னும் ஆய்வு இன்றும் நடைபெற்று வருகிறது. சிறுத்தொண்டர் எனப்பெறும் பரஞ்சோதியார் வாதாபிப் போரில் வெற்றிபெற்று அங்கிருந்து விநாயகரைக் கொண்டு வந்தார் என்ற கருத்தே இதுவரை பெரும்பாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு எதிராக நாவுக்கரசர் பெருமான் தமது பல பாடல்களில் விநாயகர் வழிபாட்டை, "முருகவேட்குத், தந்தைகாண் தண்கடமா முகத்தி னார்க்குத் தாதைகாண்" என்றும், "அறுமுகனோ டானைமுகற் கப்பன் தன்னை என்றும், "குமரனும் விக்கின விநாயகன்னும்" என்றும், "மெல்லியலும் விநாயகனும் தோன்றக் கண்டேன்" என்றும் பதிவு செய்திருப்பது வியப்பாக இருக்கிறது.

ஆதிசங்கரர்தான் அறுவகைச் சமயத்தை நிறுவினார் என்றும், அவரை "ஷண்மத ஸ்தாபனாச்சார்ய" என்று கூறுவதும் வழக்கில் உள்ளது. ஆனால் ஆதிசங்கரருக்கு முற்பட்ட நமது அப்பரடிகள் அறுவகை

அகச்சமயங்களைப் பற்றிச் சொல்வது வியப்பாகவிருக்கிறது. "தொண்டர்க் கங்கங்கே அறுசமய மாகி நின்ற, திக்கினையென் திருமுதுகுன் றுடையான் தன்னைத் தீவினையேன் அறியாதே திகைத்த வாறே" என்று அறுசமயங்கள் பற்றிய செய்தியைப் பதிவு செய்வதோடு அறுசமயத்தோரும் வெவ்வேறு பெயர்களில் வழிபடும் இறைவன் ஒருவனே எனக் கருதினார் என்பதையும் அறிய முடிகிறது.

தமிழ்ச் சங்கம் பற்றிய செய்திகள் இன்றும் ஆய்வுக்குரியவனவாக உள்ளன. மூன்று சங்கங்கள் இருந்தன; இல்லை ஒரேயொரு சங்கம் மட்டும் இருந்தது; இல்லை இல்லை சங்கம் என்ற ஒன்று இருந்ததே இல்லை எனப் பலவாறு ஆய்வாளர்கள் வாதிடுகின்றனர். ஆனால் சங்கம் இருந்ததற்குச் சான்றாக ஆய்வாளர்கள்,

"நன்பாட்டுப் புலவனாய்ச் சங்க மேறி நற்கனகக் கிழிதருமிக் கருளினோன் காண்" என்ற திருநாவுக்கரசரின் திருப்புத்தூர்த் திருத்தாண்டக வரியைத்தான் எடுத்துக் காட்டுகிறார்கள். தமது வாழ்க்கை வரலாறு பற்றிய பல செய்திகளை அகச்சான்றுகளாகத் தமது பதிகங்களில் பதிவு செய்துள்ளமையைப் பரக்கக் காணலாம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் முன்னைப் பழைமைக்கும் பழைமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்குபவர். அவர் செய்த புதுமைகளை விரிப்பிற் பெருகும், சுருக்கில் எஞ்சும். அவர் வழியைப் போற்றிப் பின்பற்ற வேண்டியது தமிழ் மக்களின், குறிப்பாக சிவனிய (சைவ)ப் பெருமக்களின் கடமையாகும்.

67. திருநாவுக்கரசர் வரலாறு

ஜெ. தீபா, கோவை.

சங்ககாலத்தில் மக்கள் அந்தந்த நிலங்களுக்கு ஏற்ற தெய்வத்தை வணங்கி மகிழ்ந்து இன்புற்று வாழ்ந்தனர். சங்கமருவிய காலத்தில் புறச்சமயங்களால் மக்கள் அல்லல்பட்டு அவதிக்கு உள்ளானர். இதனைக் களைய விடிவெள்ளிகளாக, சமயக் குரவர்கள் தோன்றிப் பாடுபட்டனர். அவர்களுள் ஞானசம்பந்தரால் அப்பர் என்று அழைக்கப்பட்டவர் திருநாவுக்கரசர். அவருடைய வரலாற்றை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

பெயர்கள்

திருநாவுக்கரசர், திருநாவுக்கரையன், திருநாவுக்கரசு தேவர், திருநாவுக்கரசு நாயனார், திருநாவுடைய பிள்ளையார் என்ற பெயர்கள் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன.

மருள்நீக்கியார் திருஅவதாரம்

திரு என்ற செம்மையிலும் செம்மையாகக் கொண்ட நாயனார் திருநாவுக்கரசர், இப்பூவுலகில் அவதரிக்க "தேடாத பெருவளத்திற் சிறந்த திருமுனைப்பாடி" நாடாகும். தொன்மையினால் பெறப்படும் நன்மைகளும், ஒழுக்கங்களும் சிறந்த குடிகள் நிறைந்தும் காணப்படுகின்றது அத்திருநாடு. "அறந்தரு நாவுக்கரசும் ஆலால சுந்தரரும்" பிறந்தருள உளது அப்புண்ணிய நாடு.

அந்நாட்டில் உள்ள பதிகளில் ஒன்று "தெய்வ நெறிச் சிவம் பெருக்கும் திருஆம் ஊர் ஆகிய 'திருவாமூர்: இத்தகைய திருவாமூரில் மேன்மை பொருந்திய வேளாண் குலத்தில் குறுக்கையர் குடியில் "திக்கு நிலவும் பெருமை" திகழ விளங்கியவர் புகழனார். திருமகள் போல் உள்ள மனைக் கிழத்தியார் மாதினியார் ஆவார். இத்தம்பதியருக்குத் திலகவதியார் என்ற அம்மையார் பிறந்தார்; சில ஆண்டுகள் கழித்து மருள் நீக்கியார் அவதாரம் எடுத்தார்.

மருள்நீக்கியார், "புலன் கொளுவ மனம் முகிழ்த்த சுருள் நீக்கி மலர்விக்கும் கலை பயிலத் தொடங்கினார்". தம் தந்தையார் மகிழ்ச்சி பெற மேலும் புகழ் சிறக்க நாள்தோறும் கலையில் வளர்ச்சி பெற்றார்.

அமண் சமயங் குறுகுதல்

திலகவதி அம்மையாருக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்ட பின்பு பெற்றோர் மறைந்தனர். பின்பு, திலகவதியாருக்கு நிச்சயிக்கப்பட்ட கலிப்பகையாரும் வேந்தனுக்காகப் போரில் உயிர் நீத்தார். திலகவதியார் உயிர் துறக்க முற்படுகையில், மருள்நீக்கியார் தமக்கையின் காலில் விழுந்து, ''என்னை விட்டுச் செல்லாதே'', நீயும் சென்றால் நான் அநாதையாகி விடுவேன் என்று கூறினார். தம்பியின் மேல் உள்ள பாசத்தினால் உயிர் நீக்கும் எண்ணத்தைக் கைவிட்டார்.

''நில்லாத உலகியல்பு கண்ட பின்னரும் யாம் இந்நிலை இல்லாத வாழ்வில் அலைவேம் அல்லேம்'' என்று அறவே துறந்தார். நிலைத்த வாழ்வைத் தேடினார். பல சமயங்களை ஆராய்ந்து நல்ல சமயம் எது உணர்தற்கு நம்பர் அருளாமையினால் கொல்லாமை எனும் போர்வையில் மறைந்து உறையும் அமண் சமயங் குறுகுவரானார். பாடலிபுத்திரம் என்னும் பதிக்குச் சென்று அமண் பள்ளி அருகே ''அணைய, அமணர்கள் அவர் அருகே வந்து ''வீடு அறியும் நெறி இதுவே'' என்று உண்மை போல் பொய் சொல்லித் தம்முடன் வருமாறு அழைத்துச் சென்றனர்.

பெயர் மாற்றம் பெறல்

சமண சமயத்தில் புகுந்த பின் மருள்நீக்கியார் அச்சமயத்தில் சிறந்த புலமை பெற்றவரானார். அவருக்குத் தருமசேனர் என்ற பட்டம் வ்ழங்கப்பட்டது.

தம்பிரானைத் திலகவதியார் வேண்டல்

நாள்தோறும் திருத்தொண்டு செய்து வரும் திலகவதியார் தம் தம்பியை எண்ணி மிகுந்த கவலையுற்றார். தூண்டு தவவிளக்கு அனையார் ஆகிய திலகவதியார் திருவீரட்டானம் சிவபெருமானை வணங்கி, ''நீர் என்னை ஆண்டு அருளும் கருணையுடையீர் எனில், என் பின் வந்தவனை, பரசமயக் குழியினின்றும் எடுத்தாள வேண்டும்'' எனப் பலமுறையும் விண்ணப்பம் செய்தார். கனவினில் சிவன் தோன்றி, ''உன்னுடைய மனக்கவலை ஒழி நீ'' உன்னுடன் பிறக்கும் முன்னே முனியாகி எனை அடையும்படி தவம் முயன்றவன். அவனுக்குச் சூலை நோய் தந்து ஆள்வோம்'' என்று அருளிச் செய்தார்.

சூலை நோய் தந்து ஆட்கொள்ளல்

சிவனைச் சிறிதளவு மறந்த தொண்டர் ஆகையால் தருமசேனரை ஆள விரும்பிச் சூலை நோயை அருள அது கடுங்கனல் போல அவர் வயிற்றில் புகுந்தது.

"வடவனலும் வச்சிரமும் பிறவுமாம் கொடியன" எல்லாம் ஒன்றாயின என்றவாறு சுடரின் உள்ளே புகுந்து குடையவே, பெரும் துன்பமுற்று நடுங்கிப் பாழியறையில் விழுந்தார். சமணர்கள் தங்களுக்குத் தெரிந்த விச்சை தடுத்தும் அடங்காமல், விஷம் தலைக்கு ஏறியவர் போல் மயங்கி விழுந்தார். "இது நம்மாற் போக்கரிதாம்" என்று கைவிட்டனர். தருமசேனர் மதி மயங்கினார்.

சைவ வாழ்வு பெற்றுத் திருநாவுக்கரசர் பெயர் பெறல்

திருப்பள்ளி எழுச்சி வேளையில் திருநீறு அணியப் பெற்ற மருள் நீக்கியாரது மனத்தின் இருளும் புறத்தின் இருளும் நீங்கிற்று. தானும் தமக்கையாரும் இருவரும் திருக்கோயிலினுள் சென்றனர். திருக்கோயிலினை வலம் வந்து வணங்கித் தரையின் மீது விழுந்து வணங்கித் தம்பிரான் திருவருளினால் தமிழ் மாலைகள் சாத்தும் உணர்வு பெற்றமையால், நீறணிந்த மேனியராய், நிறையன்புறு சிந்தையராய், மாற்றார் புரம் எரித்த வேதியரைக் "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்று தொடங்கும் திருப்பதிகத்தை இறைவன் முன் நின்று பாடினார். அக்கணமே சூலை நோய் ஒழிந்தது. இறைவனின் கருணைக் கடலில் மூழ்கினார்.

இவ்வாழ்வு பெறத்தந்த சூலை நோய்க்கு என்ன கைம்மாறு செய்வேன் என்று சொல்லி வேண்டினார். திருவீரட்டானத்து இறைவன் அருளால், "பாவுற்றலர் செந்தமிழ் இன்சொல் வளப்பதிகத் தொடை பாடிய பான்மையினால் 'நாவுக்கரசு' என்று உலகம் ஏழினும் உன் நாமம் நயப்புற நண்ணுக" என்று, அனைவரும் வியப்புற வானில் ஒரு வாக்கு எழுந்தது. இவ்வாறு திருநாவுக்கரசு என்ற பெயர் பெற்றார்.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்"

திருநாவுக்கரசரின் தமக்கை சைவ சமயத்தில் இருப்பதால் தருமசேனர் பொய்யாகச் சூலைநோய் வந்தது என்றும், நம் சமயமான சமண சமயத்தில் தீரவில்லை என்றும் நடித்துள்ளார், நம் சமயத்தை அழித்தார் என்று பல்லவ மன்னனிடம் அச்சமயத்தார் முறையிட்டனர். இதனைக் கேட்ட மன்னன் கோபம் கொண்டு நாவுக்கரசரை அழைத்து வரப் பணித்தான். "நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம்" என்று எடுத்துக் கூறி "நீர் அழைக்கும் அடைவில்லோம்" என்று அருள் செய்தார், பின் சென்றார்.

பல்லவன் வல்லமணரை நோக்கி என்ன செய்வது என்று கேட்டான். "நீற்றறையில் இடுக" என்று பயப்படாமல் கூறினர். மன்னன் அவ்வாறே கட்டளையிட்டான். ஏழு நாட்கள் பின்பு காரமணர் நீற்றறையைத் திறந்தனர். இறைவன் மீது கொண்ட அன்பால் சயமென்றார்.

நம் சமண சமய சாதகத்தால் இந்நிகழ்வு அதிசயமில்லை. கொடிய நஞ்சுதான் சரி என்று கூறினர். நஞ்சு கலந்த பால் சோறு அமுதாக மாறியது. பின்பு நாவரசர் மேல் கொலை களிற்றை ஏவினர். நாவுக்கரசர் ''சுண்ண வெண் சந்தனச் சாந்தும்'' என்ற திருப்பதிகத்தை மகிழ்வுடன் பாடினார். ''வீரட்டர் தம் அடியோம் அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்ச வருவதும் இல்லை'' என்று அருந்தமிழ் பாடினார். யானையிடம் தப்பி மீண்டும் கல்லுடன் பாசம் பிணித்துக் கடலில் பாய்ச்சினார். சிவனின் ஐந்தெழுத்து மந்திரத்தைத் துதித்து ''சொற்றுணை வேதியன்'' என்னும் நற்றமிழ் மாலையாகிய நமச்சிவாய பதிகத்தை உணர்வினில் பாடினார். கருநெடுங் கடலினுள் கல் மிதந்தது. இவைகளைக் கண்டு பல்லவ மன்னன் சைவனாகினான்.

யாத்திரை தொடங்குதல்

திருவதிகைக்கு அருகில் உள்ள திருவெண்ணெய் நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவலூர் முதலிய பதிகளை வணங்கிப் பெண்ணாகடம் அடைந்தார். திருப்பெண்ணாகடத்தில் தூங்கானை மாடத்திருந்த சுடர்க் கொழுந்தைப் பாடித் தம் தோளில் சூலமும் விடையும் இரு அச்சுக்களை தன் தோளில் பொறித்துக் கொண்டார்.

திருஞானசம்பந்தரைச் சந்தித்தல்

சீகாழி சென்று உமையம்மையின் பாலுண்ட திருஞானசம்பந்தரை நோக்கி அப்பர் என அழைக்கப்பட்டார்.

அப்பூதியடிகள் மகனுக்கு விஷம் தீர்த்தல்

திருநல்லுரினை அடுத்துத் திங்களூர் சென்றார். அங்கு அப்பர் மீது தீராத அன்பு கொண்ட அப்பூதியடிகள் தண்ணீர்பந்தல், தெரு, அங்காடி, அளவைகள் மற்றும் தம் குழந்தைகளுக்கு மூத்த திருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு எனப் பெயர் சூட்டினார். அப்பூதியடிகள் இல்லத்தில் உணவு உண்ணுமாறு வேண்டினர். வாழைக் குருத்தினை கொண்டு வரச் சென்ற புதல்வன் ஒரு நாகம் தீங்கிழைக்க, அப்பர் சிவன் கோயில் முன் சென்று ''ஒன்றுகொலாம்'' எனத் தொடங்கும் பதிகம் பாடி விடத்தை நீக்கினார்.

இறைவன் திருவடிப்பேறு

அப்பர் திருநல்லூரிலிருந்து நீங்கிச் சிவ தலங்கள் பலவற்றைப் பணிந்த பின் திருவாரூர் சென்றார். திருவானைக்காவல், திருவண்ணாமலை, திருக்கழுக்குன்றம், திருவான்மியூர், திருமயிலை, திருவொற்றியூர், பாசூர், திருப்பழையனூர், ஆலங்காடு என்னும் தலங்களை வணங்கிய பின் திருக்காளத்தியில் ''என் கண்ணுளானே'' என்ற பதிகம் பாடியருளினார்.

திருவையாற்றில் கைலைக் காட்சி

இறைவன் திருவருளைத் தலை மேற்கொண்டு "வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி" என்ற திருத்தாண்டகம் பாடினார். பொன்மலைக் கொடியுடன் அமர்ந்த வெள்ளிமலைப் போலச் சத்தியும் சிவமுமாகிய கோலத்துடன் அனைத்து உயிர்களும் பயிலக் கண்ட பணிந்து மாதவர் தம்பிரான் கோயில் முன் கயிலை மலையே நேரடியாக வந்து இறங்கி அப்பருக்கு காட்சி அளித்தது. சிவபெருமானை நேரில் கண்டதால் ஆனந்தக் கடலினில் மூழ்கிக் கைகுவித்து, எதிர்விழுந்து எழுந்து உடல் நடுங்கித் திருமுன்பு நின்று ஆடி, பாடி இன்புற்றார். தாம் கண்ட காட்சியினை "மாதர் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும்" என்று பாடி நின்றார்.

திருத்தொண்டின் பெருமை

தமிழ்நாட்டின் திருப்பதிகள் வணங்கிய பின்பு பூம்புகலூர் வந்தடைந்தார். அங்கு நாள்தோறும் திருமுன்றிலில் திருப்பணிகள் செய்து நின்ற திருத்தாண்டகம், தனித் தாண்டகங்கள், மன்றுறைவார் வாழ்பதிகள் வழுத்து திருத்தாண்டகம், குறைந்த திருநேரிசை, தனித்திருநேரிசை முதலாகத் தமிழ்த் தொடைகள் தொடுத்தார். பாவநாச திருப்பதிகம், தசபுராணத்தடைவு பாவநாசத் திருப்பதிகம், அறைகூவும் திருப்பதிகம் பிறவுமான பதிகங்களையும் பாடினார். அப்பர் நுழையும் இடமெல்லாம் பொன்னும், நவமணிகளும் நிறைந்தன. அனைத்தையும் புல்லோடும், கல்லோடும் ஒப்பாகவே கருதிக் குளத்தில் எறிந்தார்.

பொன்னாசை அற்ற நாவுக்கரசர் முன் அரமகளிர் விண்வழியாக வந்து அப்பரை மயக்க வேண்டி அமுத கீதம் பாடியும் பொற் கொடியினைப் போல் ஆடி காமக் கனல் மூட்டும் பலவிதமான செயல்களைச் செய்தார்கள். இவற்றிற்கெல்லாம் மயங்காமல் இம்மாய பிறவிக்குக் காரணமாக இருவினைகளை நோக்கி, "உம்மால் எமக்கு ஆக வேண்டியது என்ன? திருவாரூர் அம்மானுக்கு ஆளானேன், அலையேன் மின் நீர்!" என்று பொய்ம்மாயப் பெருங்கடலுள்" என்னும் திருத்தாண்டகம் புகன்றார். இதனைக் கண்டு தேவமகளிர் நீங்கினர்.

இறைவன் திருவடிப்பேறு

இந்நிலைமையை உலகு ஏழினில் உள்ளவர்கள் அறிந்து கொள்ளும் படி வாகீசர் மண்ணுலக முதலிய எல்லா உலகமும் ஏத்த, மன்னு திருத்தாண்டகத்தால், "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்" எனப் புகன்று நன்னரிய சிவானந்த ஞானவடிவேயாகி அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டவரசு அமர்ந்திருந்தார்.

68. நாவுக்கரசரின் மெய்யுணர்வு

தேவகி இராசமாணிக்கம், மதுரை.

சமயாசாரியர் நால்வருள் திருநாவுக்கரசரின் ஒண்தமிழ் மாலைகள், மாணிக்கவாசகருடைய பாடல்களை அடுத்து மெய்யுணர்வு கொண்டு விளங்குவனவாக உள்ளன. இங்குத் திருநாவுக்கரசரின் மெய்யுணர்வு பற்றி ஒரு சிறிது விளக்கப்படுகிறது.

மெய்யுணர்தல் : சொற்பொருள் விளக்கம்

உள்ள பொருள்களைப் பதி, பசு, பாசம் என மூன்றாகப் பகுப்பது சைவ சித்தாந்தம். பதி - சத்து; தானே அறியும் அறிவுப்பொருள்; என்றும் மாற்றமடையாமல் உள்ள பொருள். அவனே இறைவன். பாசம் - உலகப்பொருள்கள் - தோன்றி நின்று அழிந்து மாற்றத்திற்குள்ளாகும் பொருள்கள். இவை அசத்து எனப்படும். இவை அறிவித்தாலும் அறியாதவையாகும். பசு : உயிர் : அறிவிக்க அறிகின்ற சித்துப் பொருளாகும். அறிவுப்பொருள் ஆகிய உயிரின் அறிவை ஆணவம் மறைக்க, நிலையில்லாதவற்றை நிலையெனக் கருதி உலகப் பொருள் களில் ஆழ்ந்திருக்கிறது. இறையருளால் உண்மை உணர்ந்து இறைவனை உணர்கிறது. அத்தகைய உலகப் பொருள்களோடு கூடி அசத்தாகவும், சத்தாகிய இறைவனோடு கூடிச் சத்தாகவும் இருப்பதால் 'சதசத்து' எனப்படுகிறது (சிவஞான போதம், 7-ஆம் நூற்பா).

சுவரில் வரைந்த ஓவியங்கள், நம்மை மகிழ்வித்து நமக்குப் பற்றினை உண்டாக்குகின்றன. அவற்றை நோக்காது, அவற்றிற்கு ஆதாரமாய் உள்ள சுவரினை நோக்கினால், அவ்வோவியத் தோற்றம் தோன்றாது. பற்றுதல் இல்லையாகிறது. உலகப் பொருள்களைத் தனித்தனியே நோக்குவார்க்கு அவை, சிற்றின்பத்தினையும் பற்றினையும் உண்டாக்கும். ஓவியங்களுக்கு எல்லாம் சுவர் ஆதாரமாதல் போல, உலகங்களுக்கு எல்லாம் திருவருளே ஆதாரம் என்று உணர்ந்து, அத்திருவருள் ஒன்றையே நோக்குவார்க்கு உலகப்பற்று ஒழியும்; சிவம் ஒன்றே மெய்ப்பொருள் என்பது விளங்கும்.

"திருவருள் நாட்டம் கருணையிற் பெறலும்
யாவையும் எனக்குப் பொய்யெனத் தோன்றி
மேவரும் நீயே மெய்யெனத் தோன்றினை
ஓவியப் புலவன் சாயல்பெற எழுதிய

சிற்ப விகற்ப மெல்லாம் ஒன்றித்
தவிராது தடவினர் தமக்குச்
சுவராய்த் தோன்றும் துணிவு போன்றனவே''

(திருக்கழுமல மும்மணிக்கோவை - 10)

என்று இந்நிலையைக் கூறுகிறார் பட்டினத்தடிகள்.

சார்ந்ததன் வண்ணமாம் தன்மையுடைய உயிர், தத்துவங்களோடு கூடிய சகல நிலையில், உலகினைச் சார்ந்து வாழ்கிறது. தத்துவங்களை விட்டுவிலகிய நிலையில், தனது உண்மைச் சார்பாகிய இறைவனை உணர்ந்து அவனைச் சார்கிறது. இதுவே மெய்ஞ்ஞானம்.

இந்நிலையில், உயிர், தன் பணி நீத்து, எல்லாம் இறைசெயல் என்றிருக்கும் தன்மையாகும். இதனை,

''நாம்அல்ல இந்திரியம்; நம்வழியின் அல்ல;வழி
நாம் அல்ல; நாமும் அரன் உடைமை''

என்று சிவஞானபோதம் குறிப்பிடுகிறது. (உ.வே. 63)

உலகப்பற்று அற்றநிலை

உயிரின் கருவிகளாகிய இந்திரியங்கள், ஊசல் போன்றவை. ஆன்மா, அவ்விந்திரியங்களைப் பொருந்தி நின்று உலக வாழ்வில் ஆடிக் களிக்கின்றது. ஊசலில் ஒன்றி ஆடுகின்றவன், தன்னையே அச்செயலுக்குத் தலைவனாகக் கருதித், தனக்கு ஆதாரமாக உள்ள நிலத்தை அடியோடு மறப்பது போல, உயிரும், தத்துவங்களாகிய இந்திரியங்களையே தானாகக் கருதி, அவற்றோடு ஒன்றி நின்று, எல்லாச் செயல்களுக்கும் தானே தலைவன் எனத் தன்முனைப்புக் கொண்டு, தன் செயல்களுக்கு ஆதாரமாய்த் திருவருளே உள்ளது என்பதை மறந்து நிற்கின்றது.

எச்செயலுக்கும் தலைவனாகத் தன்னைக் கருதிக் கொள்ளுதல் யான், எனது எனும் செருக்கு ஆகும். 'யான்' என்பது அகப்பற்று, 'எனது' என்பது புறப்பற்று. இவ்விரு பற்றுக்களும் ஊசலின் இரு கயிறுகள் போன்றவை. கயிறுகள் வலிமையாக உள்ளவரையில் ஊசலில் ஆடுகின்றவன், தனக்குத் தெரிகின்ற உலகக் காட்சியைக் கண்டு, களிப்பானேயன்றித் தரையைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அது போலப் பற்றுக்கள் வன்மையாக உள்ள வரையில் ஆன்மா உலக வாழ்வில் திளைத்து நிற்குமேயன்றித் திருவருளை நினைத்துப் பார்ப்பதில்லை.

ஊசலின் கயிறு அறுந்த பொழுதே அதிலிருந்து ஆடியவன் தாய் போலத் தன்னை ஏற்றுகொள்ளும் நிலத்தைப் புகலாக அடைவான். அதுபோல, இந்திரியங்களைத் தன்னின் வேறாகக் கண்டு, பற்று அற்ற பொழுதே ஆன்மா இறைவனது அருளைப் புகலாக அடையும். இவ்வுவமையை மெய்கண்டார்,

"இவ்வான்மாத் தன்னை இந்திரியத்தின் வேறாவான்
காணவே தமது முதல் சீபாதத்தை அணையும் என்றது"
"ஊசல் கயிறு அற்றால் தாய் தரையேயாம் துணையான்"
(சிவஞானபோதம், உதாரண வெண்பா - 50)

என்பார். சீபாதம் என்பது இறைத்திருவருளைக் குறித்து நின்றது.

இவ் ஏதுவினால், ஊசலின் மேல் ஆடுதல், செயற்கையான நிலை என்றும், நிலத்தில் இருத்தலே இயற்கையான நிலை என்றும் அறியலாம்; அதுபோல, இந்திரியங்களாகிய தத்துவங்களில் அழுந்தியிருத்தல் ஆன்மாவுக்குச் செயற்கை என்பதும், இந்திரியப் பறவை இரிந்து ஓட இறையருளைச் சார்ந்து நிற்றலே ஆன்மாவுக்கு இயற்கை என்பதும் புலனாகும். எனவே, ஆன்மா, தன்னை இந்திரியங்களின் வேறாகக் காணின் இறையருளை அடைவதற்குச் சிறிதும் தடை இல்லை (ஆ. ஆனந்தராசன், சிவஞானபோதம் வழித்துணை விளக்கவுரை, ப. 214, 215)

உலகியல் வாழ்வில் மனித மனம் ஒன்றுவிட்டு ஒன்று பற்றி இடைவிடாது தாவும் நிலையைத் திருநாவுக்கரசர் தமது திருவதிகை வீரட்டானத் திருப்பதிகத்தில் குறிக்கின்றார்.

"உறுகயிறு ஊசல்போல ஒன்றுவிட்டு ஒன்றுபற்றி
மறுகயிறு ஊசல்போல வந்துவந்து உலவு நெஞ்சம்
பெறுகயிறு ஊசல்போலப் பிறைபுல்கு சடையாய் பாதத்து
அறுகயிறு ஊசலானேன் அதிகை வீரட்டனீரே" (4:26:6)

இறுதியில் தம் மனம் திருவருளாகிய நிலத்தின் மேல் தஞ்சமடைந்து அமைதியுற்றதையும், உயிர்களுக்குத் திருவருளே கடைசிப் புகலிடம் என்பதையும் உணர்த்துகின்றார்.

தன்னுள் இறைவனை உணர்தல்

வியாபக அறிவையுடைய உயிர், ஆணவ மல மறைப்பினாலே தன்னுள் இருந்து, தன்னை இயக்கும் இறைவனை அறியாது உலக வாழ்வில் தலைப்பட்டு உள்ளது. உயிருக்கு, ஞானத்தில் விருப்பம் இல்லாதபடிச் செய்வது ஆணவமே. ஆணவம் விருப்பு வெறுப்புக்களைத் தந்து வினையைத் தோற்றுவித்து, உயிருக்கு நுகர்வோனாம் தன்மையைக் கொடுத்து நிற்கும். வினை, உயிருக்கு இன்ப துன்பமாகிய போகத்தைக் கொடுத்து நுகர்விக்க, உயிர் இன்ப துன்ப உணர்வுகளில் அழுந்தி நிற்கிறது. இந்நிலையில் உயிர், ஞானத்தை விழையாது; தன்னுள் ஒளிந்திருக்கும் திருவருளை நோக்காது. உயிர், பற்பல பிறவிகளில் பட்டு அழுந்திய பின் ஆணவம் தன் சத்தி தேய்ந்து, மலபரிபாகம் உண்டாகி, அதனால், உலக நாட்டம் குறைந்து, இன்ப துன்பங்களில் விருப்பு வெறுப்பின்றி இரண்டையும், சமமாகக் கருதும் மனநிலை உண்டாகும். அந்நிலையில்

இறைத் திருவடிகளை அவாவும் மனம், அதிலேயே அழுந்தியிருக்க எண்ணுகிறது.

பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின் அருமைக்கும் ஒப்பின்மையான இறைவன், எல்லா இடங்களிலும் மேவி, உயிரையும் கோயிலாகக் கொண்டு விளங்குபவன். அட்டமூர்த்தனான அவனைத் தன் உள்ளத்தினுள்ளே கண்டு கொண்ட தன்மையைக் கூறுகிறார் நாவரசர். தம் ஞானத்தினால் அவனை அறிந்ததைப் பல இடங்களில் சுட்டுவார்.

''தேடிக் கண்டு கொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக்கண் டுகொண்டேன்'' (49:9:12)

இக்கருத்தையே மேலும்,

''நாடி நாரணன் நான்முகன் என்றிவர்
தேடியும் திரிந்தும் காணவல்லரோ!
மாடமாளிகை சூழ்தில்லை அம்பலத்து
ஆடிபாதம் என்நெஞ்சுள் இருக்கவே''

என்றும் அருளுகின்றார். மணிவாசகரும்,

''தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்து எனதுஉள்ளம் புகுந்து அடியேற்கு அருள்
செய்தான்'' (திருவேசறவு - 10)

என்று மெய்யுணர்வின் எல்லையில், இறைப் பேரின்பத்தைத் தேனாக, இன்னமுதமுமாக வருணிப்பதை யறியலாம்.

திருஞானசம்பந்தரும்,

''என் உள்ளம் கவர்கள்வன்''

என்று முதல் திருமுறை முதல் பதிகத்தில் அருளிச் செய்வதும் அறியலாம்.

இறைத்தொண்டே பிறவிப் பயன்

சைவம், இறைவனையடையும் நெறிகளைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்காகக் கூறும். இவற்றை மேலும் சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையிற் யோகம், சரியையிற் ஞானம்; கிரியையில் சரியை, கிரியையில் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம்; யோகத்தில் சரியை, யோகத்தில் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம், ஞானத்தில் சரியை; ஞானத்தில் கிரியை; ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் எனப் பதினாறாகப் பகுத்துக் கூறும். திருநாவுக்கரசரின் நெறி, ஞானத்தில் சரியையாகும்.

அரண் கோயிலை வலம் வருதலும், பூக்களைத் தொடுத்து அருச்சித்தலும் நம் உடம்பானது ஆற்றுவதற்குரிய திருத்தொண்டாகும். திருநாவுக்கரசரும்,

"ஆக்கையால் பயன்என் - அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி என்னாதஇவ்
ஆக்கையால் பயன்என்" (4:9:8)

எனவே யாக்கையின் பயன் அரன்கோயிலை வலம் வருதலும் மலர்களால் அருச்சித்தலும் என உலகவர்க்கு உணர்த்துகின்றார். மேலும் மனித உடம்பின் தலையில் தொடங்கி, ஒவ்வொரு அங்கமும் இறைவனைத் தொழுது அவன் அருள் பெற்றுப் பெருமை பெறல் வேண்டும் என்று திருஅங்கமாலை பாடியுள்ளார்.

ஞானத்தில் சரியை

இறைவனை உருவத்தில் வழிபடுதல் (புறத்தில்) சரியை நெறியாகும். இந்நெறியை உலகோருக்கு அறிவுறுத்தும் வண்ணமாகத் திருநாவுக்கரசர், பல பதிகங்களில் சிறப்பித்துப் பாடியுள்ளார். அவற்றில் ஒன்று:

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன் நெடுங்காலமே"

ஞானத்தால் தொழுதல்

பரிபூரணமாக விளங்கும் இறைவனை ஞானிகள் தம் ஞானத் தாலேயே தொழுவர் என்ற கருத்தினை,

"ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்
ஞானத்தால் தொழுவேன் உனை நானலேன்
ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு
ஞானத்தால் உனை நானும் தொழுவனே!" (5:91:3)

என்பதால் குறிப்பர். ஞானிகள் இறைவனைத் தொழுது ஏத்தும் வகை யினைக் கண்டு, மண்ணுயிர்களும், இறைவனை மனமுருகக் கசிந்து வணங்கினால், பதிஞான வடிவாக விளங்கும் முதல்வன் மண்ணுயிர்களுக்கு அனைத்தும் கருணையுடன் தருவான் என்று உணர்த்துகின்றார் திருநாவுக்கரசர்.

அஞ்ஞானத்தில் அழுந்தியிருந்த தம்மை, இறைவன் ஆட்கொண்டு அருளிய தன்மையை,

"என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்
தன்னை நானுமுன் ஏதும் அறிந்திலேன்
என்னைத் தன்னடியான் என்று அறிதலும்
தன்னை நானும் பிரான்என்று அறிந்தேனே" (5:91:8)

என்று உரைத்து, இறையருளால் தம்மை உணர்ந்து, தம் தலைவனான சிவபிரானையும் உணர்ந்த பெருநிலையை உலகோருக்கும் உணர்த்து கின்றார் திருநாவுக்கரசர்.

69. நாவுக்கரசரைப் போற்றும் சிவப்பிரகாசர்

செ. தேவராஜு, காஞ்சிக்கோயில்.

தமிழகத்தில் பல்லவர் காலத்தில் சைவ சமயப் பெரியவர்களான நாயன்மார்களும் வைணவ சமயப் பெரியவர்களான ஆழ்வார்களும் தோன்றி, தெய்வ உணர்வுமிக்க பக்திப் பாடல்களைப் பாடி, திருக்கோயில்கள் தோறும் சென்று பக்தி இயக்கத்தைப் பரப்பினர். அத்துடன் இவர்கள் மக்களோடு மக்களாகக் கலந்து, பக்தியையும், மொழியையும் மக்கள் இயக்கமாக்கினர். சைவசமயக் குரவர்களில் ஒருவரான நாவுக்கரசர், "தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்" எனத் தமிழோடு தம்மை இணைத்து அறிமுகப்படுத்திக் கொள்கின்றார். இவரைப் பற்றிச் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் விரிவாகக் குறிப்பிடுவார். இவரைப் பற்றி வீரசைவப் புலவரான சிவப்பிரகாசர் பெரிதும் பாராட்டிக் கூறுவார். இவர் சைவ சமயத்தின்பாற் கொண்ட ஈடுபாட்டினால் - பற்றினால் சைவக்குரவர் நால்வரைப் பற்றி 'நால்வர் நான்மணிமாலை' எனும் ஒப்பற்ற நூலைப் படைத்துள்ளார். இறைவனின் திருவருளைப் பெறுவதற்காக விரும்பிப் பாடப்பட்ட இந்நூலில், இறைவனின் திருவருளைப் பெற்ற நாவுக்கரசரின் மாண்பையும், அவர் மீது கொண்டுள்ள பேரன்பையும் பெருமதிப்பையும் கூறுகிறார்.

இறைவனுக்குப் பாமாலை

பக்தி மார்க்கத்தை உலகுக்குத் தந்தது தமிழ்நாடு ஆகும். அதுவும் காரைக்காலம்மையாரின் வழியாக, தனித்தமிழ் இசையோடு கலந்த பக்தி மார்க்கத்தைத் தமிழகம் வழங்கியது. பக்தி இயக்கக் காலத்தில் சமண - பௌத்த சமயங்களை எதிர்த்து, மக்களைத் திரட்டுவதற்காக ஆழ்வார்களாலும் நாயன்மார்களாலும் இசையோடு கூடிய பக்திப் பாடல்கள் பாடப்பட்டன. சைவக் குரவர் நால்வர் படைத்த தேவாரம், திருவாசகம் போன்ற நூல்கள் பக்திக் கருவூலமாகவும், தமிழ் இசைக்குக் களமாகவும், வழிபாட்டுக்கு ஊற்றுக் கண்ணாகவும் திகழ்ந்தன. இத்தகு சிறப்புடைய, வீடுபேற்றை அடைவதற்குக் காரணமாகும் தேவாரப் பாக்களைச் சிவனுக்கு அணிவிப்பவர் நாவுக்கரசர். இதை,

"வீட்டிற்கு வாயில் எனுந்தொடை சாத்துசொல் வேந்த" (பா.2)

என்பார் சிவப்பிரகாசர்.

இடைக்காலத்தில் இசைத்தமிழில் நாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் ஏற்படுத்திய மாற்றம் இசைத்துறையில் உண்டான ஒரு முன்னேற்றம் ஆகும். நாவுக்கரசர் பாடியவற்றுள் ஒரு பகுதி தாளத்துடன் கூடிய இசையோடு அமைந்த பாடல்கள். மற்றொரு பகுதி தாளம் இல்லாமல் இசையமைத்துப் பாடியவை. அவை திருத்தாண்டகமெனும் செய்யுளால் அமைந்தவை. இத்தாண்டகயாப்பைப் பின்பற்றித் திருமங்கையாழ்வார் திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் எனப் பாடியுள்ளார். நாவுக்கரசர் இப்பாடல்களைப் பாடுவதில் வல்லவராய்த் திகழ்ந்ததால் 'தாண்டகவேந்தர்' எனப் போற்றப் பட்டார். இப்பாடல்களின் இசை நெகிழ்வித்து நெஞ்சை உருக்குவதாகும். இது தமிழிசையில் நாவுக்கரசர் ஏற்படுத்திய மாற்றமாகும். காளையை ஊர்தியாக உடைய சிவபெருமான் அன்புகாட்டும்படி திருத்தாண்டகமெனும் தேவாரப் பாடல்களைப் பாடிய தாண்டக வேந்தரை,

> "வெள்ளேறு உடையான் தனக்கன்பு செய்திருத் தாண்டக வேந்த"
> (பா.6)

எனப் போற்றுகிறார் சிவப்பிரகாசர்.

சமய மாற்றம்

மனித மனத்தைப் பக்குவப்படுத்தி ஆன்ம விடுதலைக்கு இட்டுச் செல்வதே சமயம் என்பர். தான்-தனது என்பதை இழந்து, இறைவனோடு இரண்டறக் கலந்து கரைந்து போவதே சமயத்தின் உயிர்நோக்கம். அவ்வாறு உலகில் பல சமயங்கள் விரவிக் கிடக்கின்றன. இவைகள் மக்களையும் சமுதாயத்தையும் நல்வழிப்படுத்தக் கூடியன. தமிழகத்தின் பழம்பெருஞ் சமயமான சைவ சமயத்தில் இருந்து வந்த மருணீக்கியார், அச்சமயத்தை விட்டுச் சமண சமயத்திற்கு மாறினார். இவர் பாடலிபுரம் சென்று சமண நூல்களைக் கற்றுத் தேர்ந்து தருமசேனர் எனும் பெயரோடு சமயப்பணி செய்து வந்தார்.

திருவதிகையில் சிவத்தொண்டாற்றி வந்த திலகவதியார், தம் தம்பியின் சமயமாற்றம் அறிந்து, வருந்திப் பின் சிவனிடம் முறை யிடவே, சிவன் கருணையால் தருமசேனருக்குக் கடுமையான சூலைநோய் தோன்றி வருத்தியது. சமணர்களால் அந்நோயைக் குணமாக்க இயலாமற் போகவே, நோயின் துன்பத்தில் துவண்ட தருமசேனர், எவரிடமும் கூறாமல் இரவோடிரவாகப் புறப்பட்டுத் திருவதிகையை அடைந்து, தம் தமக்கையாரைப் பணிந்து வீழ்ந்தார். திலகவதியார் சூலைநோயால் வருந்திய தம்பியைக் காத்தருளுமாறு இறைவனிடம் வேண்டித் திருநீறு அளித்ததைச் சேக்கிழார், 'குன்றுடையான் திருநீற்றை அஞ்செழுத்தோதிக் கொடுத்தார்' (திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம், பா. 66) என்பார். திலகவதியார் அளித்த திருநீற்றை அணிந்து பதிகம் பாடிச் சிவனை

வேண்டவே, சூலைநோய் நீங்கியது. இந்நிகழ்வைச் சிவப்பிரகாசர் தம் நூலில் ஞானசம்பந்தர் நிகழ்வோடு பொருத்திக் கூறுவார். இதை,

"ஒருவற்கு ஞான அமுதுதவி
நாட்டிற் கிலாத குடர்நோய் நினக்குமுன் நல்கினுமென்
பாட்டிற்கு நீயும் அவனும் ஒப்பீர் எப்படியினுமே" (பா.2)

என்ற அடிகளால் அறியலாம். வைதிகத்தை எதிர்த்துத் தோன்றிய வீரசைவத்தைச் சார்ந்த சிவப்பிரகாசர் ஞானசம்பந்தரையும் வேளாண் குலத்தில் பிறந்த நாவுக்கரசரையும் ஒப்ப மதித்துப் போற்றும் திறம் ஆய்வுக்குரியதாகும். மாணிக்கவாசகர், சாதி, குலம், பிறப்பு எனத் திரியும் ஆதம் இழிநாயேன் என்பார். எனவே சிவனடியார்களுக்குள் சாதி, சமயம், குலம், பிறப்பு போன்ற வேறுபாடுகள் ஏதும் இல்லை என்பது புலப்படும். அதைச் சிவப்பிரகாசர் தம் பாடலில் வலியுறுத்திக் கூறுகிறார்.

சமயப் பூசல்

தமிழகத்தில் கடைச்சங்க காலத்திற்குப் பின் களப்பிரர்களின் ஆட்சி தோற்றம் பெற்றது. இவர்கள் காலத்தில் சமணம், பௌத்தம், வேத வைதிகம், சைவம் போன்ற சமயங்கள் ஒன்றையொன்று பகைத்து - கண்டித்து - முரண்பட்டு - வாதிட்டு வந்தன. களப்பிரர் காலத்தில் இந்நிலைமை தான் இருந்ததென்பர் வரலாற்று அறிஞர்கள். களப்பிரர்களின் வீழ்வுக்குப் பின் பல்லவர், பாண்டியர் காலங்களிலும் சமயப் பூசல்கள் தொடர்ந்தன. அதைச் சேக்கிழார் தம் நூலில் குறிப்பிடுவதன் வாயிலாக அறியலாம்.

திருநாவுக்கரசர் சைவ சமயத்தில் இணைந்ததைக் கேள்வியுற்ற சமணர்கள், தம் சமயம் அழியுமே என அஞ்சி மகேந்திரவர்ம பல்லவனிடம் முறையிடவே, அவனும் அவர்கள் சொற்கேட்டு நாவுக்கரசரைச் சுண்ணாம்புக் காளவாயில் அடைத்து வைத்தும், நஞ்சு கலந்த பால் சோற்றை உண்ணச்செய்தும், மதயானையை ஏவி மிதிக்கச் செய்தும், கடலில் கல்லைக் கட்டி மூழ்கச் செய்தும் பல இன்னல்களைத் தந்து அழிக்க முற்படுகிறான். ஆனால் அப்பர் பெருமானோ, சிவனின் திருவருளால் இத்தகு இன்னல்களிலிருந்து - இடையூறுகளிலிருந்து தப்பிப் பிழைக்கின்றார். பக்தி இலக்கியம் அப்பர் பெருமானைச் சமணர்களின் மறச் செயல்களைக் கடந்தவர் எனக் குறிப்பிடும். இவ்வாறு அப்பர் பெருமானுக்குச் சமணர்கள் செய்வித்த இன்னல்கள் ஒவ்வொன்றும் அவருடைய சமய வாழ்வின் ஒவ்வொரு வளர்ச்சிப் படிகளாகிப் பின்னர் மன்னர்களும் மாந்தர்களும் தலைவணங்கிப் போற்றத்தக்க அருளாளராக அப்பரை மாற்றியது எனலாம்.

பகைவரின் முப்புரங்களை எரித்துச் சாம்பலாக்கிய மேருமலையான வில்லையுடையவர் சிவபெருமான். இவரது திருப்பெயரான திருவைந்

தெழுத்தையே நற்றுணையாகக் கொண்டு கடலை நீந்திய நாவுக்கரசரைச் சிவப்பிரகாசர்,

> "செற்றார் புரமெரி செய்தலில் வீரன் திருப்பெயரே !
> பற்றாமறிவெண் டிரைக்கடல் நீந்திய பாவலனே" (பா.30)

என்பார். நாவுக்கரசர் திருப்பாதிரிப்புலியூர் அருகே கரையேறினார். இவ்வூருக்கு அண்மையில் இன்றும் கரையேறிய குப்பம் என்னும் ஊர் உள்ளது. இந்நிகழ்வுக்குப் பின் சமணம் சார்ந்திருந்த மகேந்திரவர்மன் தன் தவற்றை அறிந்து வருந்தி நாவுக்கரசப் பெருமானின் பெருமையை - சிறப்பை - பக்தியை - இறையருளை உணர்ந்து மனம் மாறிச் சமயமும் மாறினான். சைவத்திற்கு மாறிய இம்மன்னன் பாடலிபுத்திரம் இருந்த அமண்பள்ளிகளையும், பாழிகளையும் இடித்துக் கொணர்ந்து திருவதிகையில் கோதில் குணத்தானாகிய சிவபிரானுக்குக் கோயில் எழுப்பினான். அதற்குக் குணபரஈச்சரம் எனப் பெயரிட்டான்.

சமயப் பணி

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற பரந்த கொள்கையில், 'நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்; நரகத்தில் இடர்ப்படோம்' என்று வீரவாழ்வு - தவவாழ்வு வாழ்ந்து தனிமனித விடுதலை முரசு கொட்டியவர் அப்பர் பெருமான். இவர் திருவீழிமிழலையில் ஞானசம்பந்தரோடு இருந்தபோது, நாடெங்கும் கொடிய வறுமை நோய் ஏற்பட்டது. அடியார்கள் உணவின்றித் துன்புறவே, நாவுக்கரசர் திருவீழிமிழலைப் பெருமானை வேண்டிப் படிக்காசு பெற்று அடியாரை உண்பித்ததை, 'வாசி இல்லாக் காசுபடி பெற்று வந்தார் வாகீசர்' (திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம், பா. 260) எனப் பெரியபுராணம் கூறும். சிவப்பிரகாசரும் இச்செயலை,

> "கள்ளைக் குவளை யுமிழ்வீ ழியிற்படிக் காசொன்றுநீ
> வள்ளைக் குழையுமை பங்காளர் கையிலென் வாங்கினையே"
> (பா.10)

என்பார். இறைவன் ஞானசம்பந்தருக்கு வாசியுள்ள காசையும், நாவுக்கரசருக்கு வாசியில்லாத காசையும் கொடுத்தார். நாவுக்கரசருக்கு இறைவன் வாசியில்லாத காசு தந்த காரணம் அவர் உழவாரப் படையெடுத்துக் கைத்திருத்தொண்டு செய்ததாகும். அதனால் உழைப்பவருக்கு உடனே செல்லத்தக்க குற்றமில்லாத காசைத் தருகின்றார். இதனைச் சிவப்பிரகாசர் பெரிதும் பாராட்டிப் போற்றுகின்றார்.

நாவுக்கரசரும் அப்பூதியாரும்

'ஆண்டவன் அடியாருக்குள் ஒடுக்கம்' என்ற அரிய பெரிய உண்மையை உலகுக்கு உணர்த்திய நூலாகப் பெரியபுராணம் விளங்குகிறது. 'இறைவனை வணங்குதலும், இறையடியாரை வணங்குதலும் ஒன்றே'

என்ற உயர்ந்த சிந்தனையைத் திருத்தொண்டர் புராணத்தில் வரும் அடியார் பெருமக்கள், மக்கள் மனத்தில் வளர்த்ததுடன், தம் வாழ்க்கையிலும் வாழ்ந்து காட்டியுள்ளதைச் சேக்கிழார் பெருமான் கூறுவார். இந்நூலில் வரும் அடியாரான திருநாவுக்கரசருக்கு இறைவனால் இப் பெயர் ஏற்பட்டது. அவ்வாறு இறைவனால் பெயர் பெற்ற இறையடியாரான திருநாவுக்கரசரைப் பணிவதே தம் இறைவனைப் பணிவதற்கு ஒப்பாகுமெனக் கொண்டு வாழ்ந்தவர் அப்பூதியடிகள். உயர்ந்த குலத்தில் பிறந்த இவர், தம் குலத்தினும் தாழ்ந்த குலத்தில் பிறந்த திருநாவுக்கரசரைச் சிவனாகவே மதித்து வழிபட்டது பெரிதும் போற்றத்தக்க செய்தியாகும்.

'சோழ வளநாடு சோறுடைத்து' என்பர். அத்தகு சிறப்புடைய நாட்டில் திங்களூரெனும் ஊரில் இறைபக்தி மிக்கவராக வாழ்ந்து வந்த அப்பூதியடிகள், சிவனடியாரான திருநாவுக்கரசரின் மீது தீராப் பற்றுக் கொண்டிருந்தவர். அதனால் அவரின் திருப்பெயரைத் தம் குழந்தைகள், இல்லம், தான் அமைத்த அறச்சாலை மற்றும் தண்ணீர்ப் பந்தல் போன்றவைகட்கு இட்டார். இப்படி, 'எங்கும் திருநாவுக்கரசர்; எதிலும் திருநாவுக்கரசர்' எனத் திருநாவுக்கரசரின் திருப்பெயரைக் கொண்ட அப்பூதியடிகள் நாவுக்கரசரை நேரில் கண்டதில்லை. எனவே அவரைத் தம் வாழ்நாளில் ஒருமுறையாவது கண்டு தரிசித்திட வேண்டுமெனும் தீராத ஆசையோடு வாழ்ந்து வந்தார் அப்பூதியடிகள். இவர் திருநாவுக்கரசு எனும் ஒரு சொல்லையே தம் உயிருக்கு உறுதி தரும் மந்திரமாய் உச்சரித்து எக்காலத்தும் துன்பமிலா முக்தியைப் பெற்றார் என்பார் சிவப்பிரகாசர். இதை,

''சொற்றான் எழுதியும் கூறியுமே யென்றும் துன்பில்பதம்
பெற்றான் ஒருநம்பி அப்பூதி என்னும் பெருந்தகையே''

(பா. 38)

எனக் கூறுவதால் அறியலாம்.

மேலும் இவ்வுலகில் ஒரு மைந்தரைப் பெற்றால், உம்மைப் பெற்ற தாய் - தந்தையரைப் போன்றும், பிறப்புண்டாயின் உம்மைப் போல் ஒரு மைந்தனாகிப் பிறத்தலுமே சிறப்பென்பார் (பா.30) இது,

''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'' (236)

என்ற குறளை நினைவு கூருவதாய் உள்ளது.

ஞானசம்பந்தருடன் சில நாட்கள் தங்கியிருந்த நாவுக்கரசர், அவரிடம் விடைபெற்றுத் தலயாத்திரை புறப்பட்டார். திங்களூர் வழியே செல்லும்போது, தம்மிடம் அன்பு பூண்ட அப்பூதியடிகளைச் சந்தித்து, அவர் இல்லத்தில் உணவு உண்ணச் சென்றார். அங்கு உயிரிழந்து கிடந்த

அப்பூதியடிகளின் மூத்த மகன் சடலத்தைக் கொண்டு வருமாறு கூறவே, அப்பூதியடிகளாரும் தம் மகன் சடலத்தைத் தூக்கி வந்து நாவுக்கரசரின் காலடியில் கிடத்தினார். நாவுக்கரசர் சிவனைச் சிந்தையில் நினைத்து 'ஒன்றுகொலாம்' எனும் பாடலைப் பாடினார். அவனது சடலம் முழுவதிலும் திருநீற்றைப் பூசவே, அவன் தூக்கத்திலிருந்து விழித்தெழுவது போல எழுந்தான். இச்செய்தியைக் குறிப்பிட்டு இத்தகு இறையருளும் ஆற்றலும் மிக்க நாவுக்கரசரை வணங்க வேண்டும் என்கிறார் சிவப்பிரகாசர். அதாவது சிவநேசர்க்குரிய சிறப்பனைத்தும் வாகீசமூர்த்திக்கும் உண்டு என்கிறார். அவ்வாறு வணங்காதோரைப் பின்வருமாறு கூறுகிறார்.

"துடைவாழை மேன்மட வாரல்குல் பாம்பு தொடமயங்கி
நடைவாய் பிணமெனப்பட்டார்" (பா.26)

கோயில் கதவு திறத்தல்

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" (பா.4)

என்ற உலக நீதிப் பாடலடியும்,

"கோயில் விளங்கக் குடிவிளங்கும்"

என்ற பழமொழியும் தமிழக மக்களின் வாழ்வில் திருக்கோயில்கள் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றுள்ளன என்பதற்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பார் ஔவையார். அவ்வாறு மக்கள் தொழுவதற்குரிய ஆலயம் திருமறைக்காட்டில் பல காலமாக மூடப்பட்டிருந்தது. தேவமந்திரங்களால் மூடப்பட்டிருந்த திருமறைக்காட்டுக் கோயில் கதவத்தை ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் தமிழ் மந்திரத்தால் திறக்கவும் மூடவும் செய்த பெருமையினைச் செய்தனர். இறையருளால் இருவரும் இச்செயலைச் செய்தனர். சிவப்பிரகாசர் இதை,

"வாயிலின் ஆணவமாகும் கபாடமும் மன்திறந்து
நோயிலி யாகிய சொல்லிறை காட்டுவன் நோக்குதற்கே"
(பா.14)

என்பார்.

சேக்கிழார் பெருமான் கூறியவற்றிலிருந்து சில செய்திகளை மட்டுமே எடுத்துக் கொண்ட சிவப்பிரகாசர், நால்வர் வரலாற்றில் அப்பர் பெருமானின் தனிப்பெருஞ் சிறப்பாகத் திகழ்ந்த சிலவற்றை விதந்து எடுத்து ஓதுகின்றார். இவர் நாவுக்கரசரின் படைப்பையும் அவரின் தெய்வத்தன்மை மிக்க - அருட்திறமிக்க செயல்களையும், உள்ளன்போடு - பக்திச்சுவை ததும்பப் பாராட்டுதலை மேலே கூறிய செய்திகளைக் காணும்போது அறியலாம். உலகளாவிய வாழ்வியல் அறநூலான - வாழ்க்கை வரலாற்றுப் பக்திப் பெருநூலான பெரிய புராணத்தில் திருநாவுக்கரசரைப் பற்றிச் சேக்கிழார் கூறும் செய்திகளைச் சிவப்பிரகாசர் நினைவு கூருவதாக அமைந்துள்ளது எனலாம்.

70. நாவுக்கரசர் காட்டும் வினைக்கொள்கை

மு. நடராசன், திருச்செங்கோடு.

சங்க காலத்தில் காதலிலும் வீரத்திலும் ஈடுபட்ட தமிழர், பல்லவர் காலத்தில் பக்தியில் தம்மை அடிமைப்படுத்திக் கொண்டனர். சமணம், பௌத்தம் போன்ற புறச் சமயங்களை வீழ்ச்சியுறச் செய்து, சைவ வைணவ சமயங்கள் நிலைபெற்றன. நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றித் திருமுறைகளையும், திவ்வியப் பிரபந்தங்களையும் அருளினார்கள். திருமுறைச் சான்றோர்களுள், சைவ சமயக் குரவர்களுள் நாவுக்கரசர் வயதாலும் அனுபவத்தாலும் மூத்தவர். இறைவனின் இன்னருளைப் பெறுவதற்கு நாம் கடைப்பிடிக்க வேண்டிய சில ஒழுக்கங்களை நாவுக்கரசர் வலியுறுத்துகிறார். அவற்றின்படி ஒழுகினால் தீவினை ஒழிந்து பேரின்பத்தை அடையலாம் என்கிறார். அப்பர் அறிவுறுத்தும் வினைக்கொள்கைகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இறைவனை அடைய

தாண்டக வேந்தர், பாவநாசத் திருக்குறுந்தொகைப் பதிகத்தில், எவ்வெவ் வழிகளைப் பின்பற்றினாலென்ன? ஈசனை நினைந்து அவன் திருவடி தொழலே இறைவனின் இன்னருள் பெறுவதற்கான வழியாகும் என்கிறார்.

ஈசன் திருவடி தொழுதலன்றித் தூயநீர்க் கங்கையில் நீராடினாலும், காவிரியில் ஆடினாலும், குமரித்துறையில் குளிர்ந்து நீராடினாலும் அவனருளைப் பெற முடியாது என்பதை,

"கங்கை யாடிலென் காவிரி யாடிலென்
கொங்கு தண்குும ரித்துறை யாடிலென்
ஓங்கு மாகட லோதநீ ராடிலென்
எங்கு மீச னெனாதவர்க் கில்லையே"

என்னும் அடிகளில் அறிவுறுத்துகிறார்.

நால்வகை வேதங்களை நாள்தோறும் ஓதினாலும், ஆயிரமாய் வேள்விகளைச் செய்தாலும், இதுகாறுமுள்ள நீதிநூல் பலவற்றையும் நித்தம் நித்தம் ஓதினாலும் ஈசனை உள்ளத்தில் வைத்து உருகுபவர்க்கன்றிப் பிறருக்கு அவனருள் கிட்டாது.

காட்டிலும் நாட்டிலும் திரிந்தாலும், கடுமையான தவநெறியை மேற்கொண்டாலும், ஊன் உண்ணுதலை ஒழித்தாலும், உண்ணா நோன்பிருந்து உடலை வருத்திக் கொண்டாலும் இறைவனின் இன்னருளைப் பெறுதல் இயலாது. மனத்தால் சிந்தித்து உருகுவார்க்கே அவனருள் கிட்டும் என்கிறார். உண்மையான அன்போடு மனமுருகி வழிபட்டாலே போதும். பிறவகையில் தன்னுடலை வருத்திக்கொள்ளத் தேவை இல்லை.

கோடி தீர்த்தத்தைக் கலந்து குளித்துச் சிவன் சடையில் உள்ள கங்கையில் ஆடினாலும், மனமுருகி அவன் திருவடி தொழாமல் இருப்பாரேயானால் அவரது நிலை ஓடுகின்ற ஆற்றுநீரை ஓட்டைக் குடத்தில் நிரப்பி மூடிவைத்துவிட்ட மூர்க்கரது நிலையையே ஒக்கும். ஆதலால் மனமுருகுதல் முதன்மையானதாகிறது.

இறைவனிடத்துக் குறையாத அன்பு கொண்டு எப்பொழுதும் அவன் திருவடிகளைச் சிந்தித்து ஒழுகுதல் ஒன்றுதான் இறைவனின் இன்னருளைப் பெறுவதற்கான இனியவழி என்பதனை,

> "நன்று நோற்கிலென் பட்டினி யாகிலென்
> குன்ற மேறி இருந்தவஞ் செய்யிலென்
> சென்று நீரில் இனித்துத் திரியிலென்
> என்றும் ஈசன் என்பார்க்கன் றில்லையே"

என்னும் அடிகளால் விளக்குகிறார்.

தீவினை அகல

மனித மனம் வினைகளின் உறைவிடம். தீவினைகளும் அவ்விடத்தில் தங்கி இருக்கும். அத்தீவினைகள் அகன்றாலே உள்ளம் தூய்மை பெறும். மாசு நிறைந்த உள்ளமும் அமைதிபெறும். உள்ளத்தில் அமைதி தோன்றினால் அறிவு தெளிவு பெறும். அறிவு தெளிந்தால்தான் பேரின்ப நிலை எய்த முடியும்.

நம் உள்ளத்தில் உறைந்து கிடக்கும் கள்ள நெறிகளைக் களைந்தெறிய வேண்டும். இறைவனைத் தேடிக் கண்டுணர்வதில் கவனம் செலுத்துதல் வேண்டும். அத்தேடல் பாசவினைகளகற்றி இதயம் முழுவதும் இறைவனோடு கலந்த தூய அன்பாக அமைதல் வேண்டும். அவனது பாத கமலங்களைத் தொழுது ஏத்த வேண்டும். அவ்வாறு வழிபட்டு உள்ள நெகிழ்வுடன் தேட ஆரம்பித்தால் கருணை வடிவான இறைவன் மனம் கனிந்து நம்மை நாடுவான். நம் துன்பம் நீக்குவான்.

கண்டம் கறுத்தவன், காலன் ஆருயிர் பண்டு கால் கொண்டு பாய்ந்த பரமன், திருவண்ணாமலை வாழும் அருணாச்சலனின் திருவடி மலர்களைத்

தொழுது வணங்கினால் நம் மனதில் உள்ள தீவினைகள் பொசுங்கிப் போகும் என்பதனை,

"தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப் போம்நம துள்ள வினைகளே"

என்னும் அடிகள் தெளிவுபடுத்துகின்றன.

மனித வாழ்வு குறிக்கோளுடையதாய் அமைதல் வேண்டும். ஒவ்வொரு பருவத்திலும் குறிக்கோள் இல்லாமல் உழன்றுவிட்டு மூப்பெய்தி நாட்களைக் கழித்தல் கூடாது. பாலர் பருவத்தில் கழித்த நாட்களிலும், கோதையருடன் கழிந்த நாட்களிலும், முதுமையில் கோல் கொண்டு நடக்கும் நாட்களிலும் குறிக்கோள் இல்லாமல் கெட்டொழிந்தால் வாழ்வு பயனற்றுப் போகும். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை ஒளி யில்லாத விழியை ஒக்கும். வாழும் நாட்களில் இறைவனைக் காண்பது கண்ணுக்கு விருந்தாகும். கருத்துக்கும் விருந்தாகும்.

"பாலனாய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதைமார்தம்
மேலனாய்க் கழிந்த நாளும் மெலிவோடு மூப்புவந்து
கோலனாகக் கழிந்த நாளும் குறிக்கோள் இலாது கெட்டேன்
சேலுவாம் பழனவேலித் திருக்கொண்டீச் சுரத்துளானே"

என திருக்கொண்டீச்சுரப் பதிகத்தில் பாடுகிறார்.

குறையே இல்லாத முழுமையான மக்களைக் காண்பதரிது. குறையும் நிறையும் கலந்தே மனித வாழ்க்கை அமையும். அத்தகைய வாழ்வில் ஒருவர் குறைகளை மற்றவரிடத்தில் பேசுவது இழிந்த பண்பு. நாகரிகமும் அன்று. அதே போன்று ஒருவர் பண்பை நேரில் பாராட்டி முகஸ்துதி செய்தலும் கூடாது.

ஒருவர் குற்றம் செய்தாரேயானால் அவரிடமே குற்றத்தை எடுத்துக் கூறித் திருத்த முயலவேண்டும். அவருடைய நிறைகளை, நற்பண்பு களைப் பிறரிடத்தில் சொல்லி அவரைப் பாராட்டுதல் வேண்டும். அதுவே உயர் பண்பாளர்க்குரிய அடையாளமாகும்.

"குணங்கள் சொல்லியும் குற்றங்கள் பேசியும்
வணங்கி வாழ்த்துவர் அன்புடையா ரெலாம்
வணங்கி வான்மலர் கொண்டடி வைகலும்
கணங்கள் போற்றிசெக் குங்கரக் கோயிலே"

என்ற திருக்கடம்பூர் திருப்பதிகத்தில் மிக உயர்வான இப்பண்பை உணர்த்துகிறார். அப்பரடிகளின் இப்பண்பும் ஒப்பில்லாததாகும்.

நாவுக்கரசர் காலத்தில் சமயங்கள் பலவாகத் தமிழகத்தில் நிலவிய போதும், சமயப் பிணக்கர் தம்முள் முரண்பட்டு மோதி நின்றனர். சமயங் களுள் உயர்வு தாழ்வு கற்பித்துப் பூசலிடுவது முறையல்ல என விரும்பினார் நாவுக்கரசர். சம்பந்தரும் பிற சமயப் பழிப்பில் ஈடு பட்டபோதுகூட நாவுக்கரசர் தாம் சார்ந்திருந்த சமயத்தின் பெருமை களைக் கூறினாரே ஒழியப் பிற சமயப் பழிப்பில் ஈடுபடவில்லை.

அவர் காலத்தில் அறுவகைச் சமயங்கள் தமிழகத்தில் இருந்தன. அறுவகைச் சமயத்தாரும் தமக்குள் வேறுபட்டு நின்றனர். அவ்வேறுபாட்டில் நாவுக்கரசருக்கு உடன்பாடில்லை. அதனைக் களைவதற்குச் 'சமயமவை ஆறினுக்கும் தலைவன்தான் காண்' எனவும், 'விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்தே, எரிவினால் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்' என்று கூறியுள்ளார்.

இதே கருத்தைப் பிற பதிகங்களிலும் வலியுறுத்தியுள்ளார். 'மிக்க சமயங்கள் ஆறின் உருவாகி நின்ற தழலோன்' எனவும், 'ஆறொன்றிய சமயங்களின் அவ்வவர்க்கு அப்பொருள்கள் வேறொன்றிலாதென' எனவும், 'அறுசமயத்து அவரவரைத் தேற்றும் தகையன' எனவும் பலவாறு கூறியுள்ளார்.

அக்காலத்தும் மக்களிடம் குலம் கோத்திரம் என்னும் பெயராலும், பிற வகைகளாலும் வேறுபாடுகள் இருந்தன. சமய அடியார்களும் மக்களிடையே இவ்வேறுபாட்டைக் கையாண்டனர். உண்மையான இறைத்தொண்டில் ஈடுபடும் இறையடியார்களிடத்து இவ்வேற்றுமை இருத்தல் கூடாது. இருந்தால் அவருடைய இறைத்தொண்டு முழுமை அடையாது எனக் கருதி அதைக் களையும் முயற்சியில் ஈடுபட்டார். 'சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்; கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர், பாத்திரம் சிவம் என்று பணிதிரேல் மாத்திரைக்குள் அருளும் மாற்பேறரே' என்று மக்களுக்கு அறிவுறுத்துகிறார்.

இறையடியார்களே ஆயினும் மக்களே ஆயினும் இறைவன்பால் உண்மையான அன்பும், பிற உயிர்களிடத்து சிறந்த அருளும் இல்லாமல் இருப்பார்களேயானால் அவர்களுடைய செயல்களால் எள்ளளவும் பயனில்லை. மெய்வருத்தியும், பிற வழிகளிலும் இறைவனைத் தொழுவதனைக் காட்டிலும் இறைவனிடத்து மாறாத அன்பு கொண்டு எப்போதும் அவன் திருவடிகளைச் சிந்தித்துத் தொழுதல் ஒன்றுதான் இறைவனின் அருளைப் பெற இனிய வழி என்கிறார். பொய்யாகத் தொழாமல் மெய்யாக நினைப்பவர்க்கே அருள் கிட்டும். அவ்வருளைப் பெறுதற்கு வினைக் கொள்கைகளை வகுக்கிறார் நாவுக்கரசர்.

71. தாண்டக வேந்தர் நாவுக்கரசர்

செ. நாகநாதன், காந்திகிராமம்.

உலகம் போற்றும் தேவார மூவருள் பன்னெடுங்காலம் வாழ்ந்து தமிழ்ச்சைவம் தழைக்கச் செய்தவர் திருநாவுக்கரசர். மருணீக்கியாராகப் பிறந்த இவர், சமணரால் தருமசேனர் என்றும், சிவபெருமானால் திருநாவுக்கரசர் என்றும், சம்பந்தரால் அப்பரென்றும், சேக்கிழாரால் வாகீசர் என்றும், ஆளுடைய அரசு என்றும் பல பெயர்களால் சிறப்பிக்கப் படுகிறார்.

பெரியபுராணத்தில் சேக்கிழாரால் "தாண்டகச் சதுரர்" என்றும், நால்வர் நான்மணிமாலையில் "தாண்டக வேந்தர்" என்றும் திருநாவுக்கரசர் அழைக்கப்படும் காரணம் பற்றி யாப்பு வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

திருத்தாண்டகமும் திருநாவுக்கரசரும்

"தாண்டகம்" என்பது ஒருவகை யாப்பு. இவ்வகை யாப்பில் அமைந்தது 'தாண்டகம்' என்னும் இலக்கிய வகையாகப் பெயர் பெறுகின்றது. பன்னிரு திருமுறையில் திருநாவுக்கரசர் அருளிய ஆறாம் திருமுறைப் பாடல்கள் முழுவதும் தாண்டகயாப்பில் அமைந்துள்ளன. 981 பாடல்கள் கொண்ட 99 பதிகங்களும் "திரு" என்னும் அடையுடன் "திருத்தாண்டகம்" என்ற பெயரில் வழங்கப்படுகின்றன. சைவ இலக்கியப் பரப்பில் வேறு எவரும் இவ்வகை யாப்பினைக் கையாளவில்லை. வைணவ இலக்கியத் தொகுப்பான நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தில் இரண்டாம் ஆயிரத்தில் திருமங்கையாழ்வார் திருக்குறுந்தாண்டகம் (20 பாசுரங்கள்) திருநெடுந் தாண்டகம் (30 பாசுரங்கள்) என்ற பெயர்களில் 50 பாசுரங்களை அருளியுள்ளார்.

தாண்டகம் - இலக்கணிகள் கூற்று

தாண்டகம் என்பது தமிழ்யாப்பு என்றும், வடமொழி இலக்கணத்தை அடியொற்றி வந்தது என்றும் இருவேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

வடமொழியில் "தண்டக (Dandaka) என்று ஒருவகை யாப்பு உண்டு. இஃது அளவொத்த நான்கு அடிகளைக் கொண்டதாக அமையும் என்று கி.பி 2 அல்லது கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகக்

கருதப்படும் "பிங்கல சந்தம்" என்னும் நூல் கூறுகின்றது. இவ்வகையான யாப்பில் அடி ஒன்றுக்கு 27 முதல் 999 வரை எழுத்துக்கள் இடம்பெறும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் லகு, குரு என்னும் எழுத்தலகுகள் கொண்டும், ராகம் என்ற அடிப்படையிலும் அமைப்பு அடிப்படையில் அனங்கசேகரா, அப்தா, அர்னா, அர்னநவா, அசோகபுஷ்பமஞ்சரி, உத்கலிகா, உட்டாமா, கங்கேலி, காமபான, குசுமஸ்தாரனா, கேளி, கண்டா, கண்டகாலா, கண்டவேகா, ஜிமுதா, டம்போளி, பன்னகா, பிராக்சிதா, புஜங்கா, புஜங்கவிலாசா, மட்டமாடங்கா, மாலதி, மேகமாலா, லிலக்கரா, லிலவிலாசா, வர்னகா, வாடா, வியாலா, ஸங்கா, ஸமுத்ரா, ஸிம்கா, ஸிம்மவிக்ரிதா, ஹேளாவதி என்னும் 33 தாண்டக வகைகளை வடமொழி யாப்பியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும், வடமொழியைப் போலவே திராவிட மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய வற்றிலும் "தண்டகம்" என்றே இவ்வகை யாப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

வடமொழித் தாண்டகத்தின் அடிப்படையிலேயே வீரசோழியமும், யாப்பருங்கலவிருத்தியும், தாண்டகத்திற்கு இலக்கியம் கூறுகின்றன. இதில் வீரசோழியம் "தண்டகம்" எனக் குறிப்பிட, யாப்பருங்கல விருத்தியில் "தாண்டகம்" எனக் குறிப்பிடப்படுகின்றது.

அடிக்கு 27 முதல் 47 எழுத்து வரை கொண்டு நான்கு அடிகளிலும் ஒரே எண்ணிக்கையில் எழுத்துக்கள் அமைந்துவரின் அஃது அளவியல் தாண்டகம் என்றும், மாறுபட்ட எண்ணிக்கையில் எழுத்துக்கள் அமைந்து வரின் அஃது அளவழித் தாண்டகம் என்றும் யாப்பருங்கலவிருத்தி குறிப்பிடுகின்றது. மேலும், இதில் உள்ள எடுத்துக்காட்டுப் பாடல்களிலும் திருநாவுக்கரசரின் பாடல்கள் எவையும் பயன்படுத்தப்படவில்லை என்பதும் நோக்கத் தக்கது.

மேலும், யாப்பருங்கலவிருத்தி குறிப்பிடும் 27-47 என்ற எழுத்து வரையறை திருநாவுக்கரசரின் திருத்தாண்டக அடிகளில் எங்கும் பொருந்தி வரவில்லை.

பன்னிரு திருமுறை வரலாற்றின் முதற்பகுதியில் (ப. 419) க. வெள்ளைவாரணன் தாண்டக யாப்பு தமிழ் மரபினதே என்கிறார். தொல்காப்பியம் செய்யுளியலில் கூறப்பட்டுள்ள இதனை எண்சீரான் வந்த கொச்சக ஒருபோகு என்கிறார். ஒற்றும் குற்றுகரமும் நீக்கி நான்கு எழுத்து முதல் இருபது எழுத்து ஈறாக வகுத்துரைக்கப்பட்ட பதினேழு நிலத்து ஐவகையடிகளிலும் கழிநெடிலடிக்குரிய மேலெல்லையாகிய இருபதெழுத்தென்னும் வரையறையைத் தாண்டி வருவது தாண்டகம்

ஆகும் என்று விளக்குகிறார். மேலும், அடிதோறும் 1,2,5,6-ஆம் சீர்கள் பெரும்பான்மை காய்ச்சீராகவும், சிறுபான்மை மாச்சீர் அல்லது விளச்சீராகவும், 4, 8 ஆகிய சீர்கள் தேமாவாகவும், 3,7 ஆகிய சீர்கள் பெரும்பான்மை தேமாவாகவும், சிறுபான்மை புளிமாவாகவும் வருதல் வேண்டும் என்றும் விளக்குகிறார். இவ்வரையறைகளுக்குட்பட்டுத் திருநாவுக்கரசர் பாடல்கள் அமைவதாக வெள்ளைவாரணர் குறிப்பிடுகிறார்.

''மூவிரண் டேனும் இருநான் கேனும்
சீர்வகை நாட்டிச் செய்யுளி னாடவர்
கடவுளர்ப் புகழ்வன தாண்டகம் அவற்றுள்
அறுசீர் குறியது நெடியதுஎண் சீராம்''

என்று பன்னிரு பாட்டியல் (சூத்திரம் - 196) இலக்கியம் வகுக்கிறது. சீர் அடிப்படையில் இலக்கியம் கூறப்படும் இதில் எழுத்தெண்ணிக்கை பற்றிய குறிப்பு இல்லை. திருநாவுக்கரசர் காலத்திற்குப்பின் தோன்றிய இதில் திருநாவுக்கரசரின் தாண்டகங்கள் பற்றிய செய்தி எதுவும் இல்லை. எனவே, பன்னிரு பாட்டியலின் வரையறைகளை நாவுக்கரசரின் படைப்புடன் ஒப்பு நோக்க இடமில்லை.

திருநாவுக்கரசரின் திருத்தாண்டகங்கள்

ஆறாம் திருமுறையில் அமைந்துள்ள திருநாவுக்கரசரின் திருத்தாண்டகங்கள் 64 தலங்களில் அருளப் பெற்றவை. 11 பாடல் களைக் கொண்ட 23 பதிகமும், 10 பாடல்களைக் கொண்ட 68 பதிகமும், 9 மற்றும் 8 பாடல்களைக் கொண்ட பதிகங்கள் தலா இரண்டும், 7,6,2,1 பாடல்களைக் கொண்ட பதிகங்கள் தலா ஒன்றுமாக மொத்தம் 99 பதிகங்கள் உள்ளன.

பன்னிரு திருமுறை வரலாற்றில் வெள்ளைவாரணர் குறிப்பிடும் கருத்துக்கள் இவற்றிற்குப் பொருந்துகின்றன.

தாண்டகங்களின் அமைப்பு

திருநாவுக்கரசரின் எல்லாப் பதிகங்களிலும் நான்காம் அடி ஒத்திருக்கின்றது. 33 பதிகங்களில் அடிகளின் ஈற்றுச் சீரும் 'தேமா'வில் அமைந்து சொற்களும் ஒத்திருக்கின்றன. நூல் முழுமைக்கும் எச்சங்களை வருவித்து அடுக்கிக் கூறும் தொடர்ச்சிப் போக்கு காணப்படுகிறது.

(சான்று)

''அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தம் கோனை மற்றைக்

கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனை கடலைக் குலவ்ரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே''

(ஆறாம் திருமுறை - 1)

''தாண்டகம் என்ற இசைப்பாட்டில் சிறப்பாகக் கையாளப்படும் இலக்கியக் கொள்கை இறைவனிடம் விண்ணப்பம் செய்து கொள்வதற்கு இசைப்பாட்டைப் பயன்படுத்துவதாகும்'' என்ற முனைவர் சுப. அண்ணாமலை அவர்களின் கருத்து இங்கு நோக்கத் தக்கது.

திருநாவுக்கரசரின் திருத்தாண்டகப் பாடல்களை இசைத் தொடர்போடு நோக்கும் பொழுது இவை விருத்தப்பாடல் வகையைச் சேர்ந்தன. இவற்றிற்குத் தாளமில்லை. மரபுவழியாகக் கோயில்களில் அரிகாம்போதி இராகத்தில் பாடப்பெறுகின்றன. பொருளைச் சிதைக்காமல் இருப்பதற்காக அரிகாம்போதியில் பாடப்படுவதாகப் பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை ப. சுந்தரேசனார் கூறுகிறார்.

திருநாவுக்கரசரின் பதிகங்கள் பெரிய திருத்தாண்டகம், புக்க திருத்தாண்டகம், ஏழைத் திருத்தாண்டகம், அடையாளத் திருத்தாண்டகம், போற்றித் திருத்தாண்டகம், காப்புத் திருத்தாண்டகம், சேத்திரக்கோவைத் திருத்தாண்டகம், நின்ற திருத்தாண்டகம், தனித்திருத்தாண்டகம், வினாவிடைத் திருத்தாண்டகம், மறுமாற்றித் திருத்தாண்டகம் என அவற்றின் பொருள் அடைவு அடிப்படையில் எனப் பெயரிடப் பட்டுள்ளன. வடமொழியில் தாண்டகங்கள் உருவ அமைப்பு அடிப்படையில் வகைப்படுத்தப்படுவது இங்கு நோக்கத்தக்கது.

திருத்தாண்டகப் பாடல்களின் உள்ளடக்கமாக, இறைவன் புகழ், இறைவனின் உருவச் சிறப்பு, தோற்றப் பொலிவு, சிவத்தலப் பெருமைகள், கழிவிரக்கம், தலவரிசை அடைவு ஆகியன உள்ளன.

1. தமிழ் இலக்கியப் பரப்பில் தாண்டக யாப்பினை முதலில் அறிமுகப் படுத்தி, அதிக எண்ணிக்கையில் பாடல்களை (981) இயற்றியவர் திருநாவுக்கரசரே. இதனால் இவர் தாண்டக வேந்தர் என்றும் தாண்டகச் சதுரர் என்றும் சிறப்பிக்கப்படுகிறார்.

2. தமிழில் திருநாவுக்கரசரை அடுத்துத் திருமங்கையாழ்வாரைத் தவிர (50 பாசுரங்கள்) வேறு எவரும் தாண்டக யாப்பினைக் கையாள வில்லை.

3. திருநாவுக்கரசரின் திருத்தாண்டகத்திற்கு வடமொழி இலக்கணத்தை ஒட்டி யாப்பருங்கலவிருத்தி, வீரசோழியம் முதலியன கூறும் வரையறைகள் பொருந்தவில்லை.

4. சீர் அடிப்படையில் வகைமை செய்யும் பன்னிரு பாட்டியலிலும் தாண்டக யாப்பு பற்றி விரிவாகக் குறிப்பிடப்படவில்லை.

5. லகு, குரு என்னும் அசை அடிப்படையில் (அமைப்பு ரீதியாக) வகைமை செய்யப்பட்டுக் கூறப்பட்டுள்ள வடமொழி யாப்பு வகைகள் வரையறைகள் திருநாவுக்கரசரின் திருத்தாண்டகத்திற்குப் பொருந்தவில்லை.

6. தொல்காப்பியர் செய்யுளியலில் குறிப்பிடும் எண்சீரான் வந்த கொச்சக ஒரு போகு என்னும் அமைப்பு திருத்தாண்டகத்திற்குப் பொருந்தி வருகிறது.

7. தாண்டக யாப்பினைப் பற்றிய வரையறைகள் தமிழ் இலக்கணி களிடம் மாறுபட்டும் தெளிவின்றியும் காணப்படுவதால் இதனை முழுமையாக அறிய முடியவில்லை.

8. திருநாவுக்கரசரின் திருத்தாண்டகங்களில் எல்லாப் பதிகங்களிலும் ஈற்றுச் சீரும் (பெரும்பான்மை) ஈற்றடிகளும் ஒத்திருக்கின்றன.

9. திருநாவுக்கரசரின் திருத்தாண்டகங்கள் அவற்றின் பொருளடைவு அடிப்படையிலே பெயரிடப்பட்டுள்ளன.

72. சிவவழிபாட்டு முறைகள்

கா. நாகராசு, கோவை.

உலகத்து உயிர்கள் எல்லாம் இன்பத்தையே எப்போதும் விரும்பு கின்றன; இன்பத்திற்கு மாறான துன்பத்தைக் கண்டு அஞ்சுகின்றன. துன்பம் தம்மைத் தாக்காமலிருக்கப் பலவகையான முன்னேற்பாடுகளைச் செய்யவும் முற்படுகின்றன. அப்படியும் துன்பக் கடலில் வீழாமல் அவை தப்பிக்க முடிவதில்லை. எனவேதான் பிறவியைத் திருக்குறள் முதலிய அறநூல்களும் "பிறவிப் பெருங்கடல்" என்று கடலாக உருவகிக் கின்றன. மனித வாழ்க்கையில் நிலைத்த இன்பத்திற்கு வழியில்லை. செல்வம், இளமை, யாக்கை என எல்லாமே ஒரு குறிப்பிட்ட காலத் திற்குள் அழிந்து விடுகின்றன. அப்படியென்றால் பிறவிகள் எடுப்பதே துன்பக் கடலில் விழுந்து அழிவதற்குத்தானா? என்ற வினா எழுகின்றது. இவ்வினாவிற்குத் திருக்குறள்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்" (குறள் - 10)

என்று அழுத்தமாக விடையளிக்கிறது. இதிலிருந்து இறைவன் திருவடிகளை எப்போதும் நினைப்பவர் பிறவித் துன்பத்திலிருந்து நிலையாக விடுபடுவர் என்ற அரிய உண்மை தெளிவாகின்றது. மேலும் இறைவனைச் சிந்தியாதவர் பிறவிக்கடலிலிருந்து நீந்திக் கரையேற மாட்டார்; தொடர்ந்து பிறந்தும் இறந்தும் துன்புறுவதே அவர்கள் அடையும் பயன் என்ற உண்மையும் பெறப்படுகின்றது. எனவே கிடைத்த பிறவியின் பயன் இறைவனை வழிபட்டு உய்வடைவதே என உயிர்கள் எண்ணி அதற்கு முயல வேண்டும்; நிலை யற்றவற்றை நிலையானவையாகக் கருதி அதற்காகக் காலத்தையும் உழைப்பையும் வீணாக்கக் கூடாது என்பது புலப்படுகின்றது. உயிர்கள் உய்வடைய இறைவனை வழிபட வேண்டுமென்றால் எவ்வாறு வழிபடுவது என்ற வினா தோன்றும். அதற்கு அருளாளர்கள் பலவகையான வழிபாட்டு முறைகளை அருளியுள்ளனர். அம்முறையில் 'அப்பர் தேவாரம்' காட்டும் சிவவழிபாட்டு முறைகளை இக்கட்டுரை சுருக்கமாக எடுத்துரைக்கின்றது.

வழிபாட்டிற்கு அடிப்படையானவை

அசைக்கமுடியாத நம்பிக்கையும் அன்பும் அச்சமின்மையும் இறைவழிபாட்டிற்கு அடிப்படையாக அமைவன. எத்தகைய சூழலிலும் இறைவன் மீதுள்ள உறுதியான பிடிப்பைத் தளரவிட்டு விடக்கூடாது.

நம்பிக்கையே இறைவனை ஈர்க்கும் வலுவான ஆற்றலாகும். இறைவன் வழிபடும் அடியார்கட்கு அருள் புரிவதில் நிகரற்றவன் என்ற நம்பிக்கையை அப்பர் தேவாரம் பலவிடங்களில் ஊட்டுகின்றது.

"பற்பல காலம் பயிற்றிப் பரமனைச்
சொற்பல காலநின் றேத்துமின் தொல்வினை
வெற்பில் தோன்றிய வெங்கதிர் கண்டஅப்
புற்ப னிக்கெடு மாறது போலுமே" (5-97-23)

"சங்கொத்த மேனிச் செல்வா சாதல்நாள் நாயேன் உன்னை
எங்குற்றாய் என்ற போதா இங்குற்றேன் என்கண்டாயே"
(4-75-8)

"பவனெனு நாமம் பிடித்துத் திரிந்துபன் னாளழைத்தால்
இவனெனைப் பன்னாள் அழைப்பொழி யானென் றெதிர்ப்படுமே"
(4-112-9)

போன்ற பாடல்கள் நம்பி வழிபடும் அடியவர்களை இறைவன் ஒருபோதும் கைவிடமாட்டான் என்பதை எடுத்துரைக்கின்றன.

இறைவழிபாட்டிற்கு இன்றியமையாதவற்றுள் தலையாயது தூய அன்பு. எனவேதான் திருமந்திரமும், "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" (பா.எ. 270) என்று எடுத்துரைக்கின்றது. அப்பர் பெருமானும் இறைவனிடத்து உயிர் கொள்ள வேண்டிய அன்பு குறித்து விளக்கமாக எடுத்துரைத்துள்ளார். இவ்வன்பே பக்தி எனப்படுவதாகும். இறைவன் தன்னிடத்து அன்பு செலுத்துவோருக்கு மிக அருகில் உள்ளான் என்பதை அப்பர்,

"அன்பாகி நின்றார்க்கு அணியாய் போற்றி...." (6-56-2)

"அத்தாவுன் அடியேனை அன்பா லார்த்தாய்...." (6-95-8)

போன்ற அடிகளில் சுட்டுகின்றார். மேலும் அன்பில்லாதவர் செய்யும் வழிபாடு எப்பயனையும் அளிக்காது என்பதை,

"கோடி தீர்த்தம் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக்கன் பில்லையேல்
ஓடும் நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே" (5-99-9)

என்னும் பாடலில் அறுதியிட்டு எடுத்துரைக்கின்றார்.

அச்சமின்மை என்பது அடியார்களுக்கு ஓர் அணிகலன் ஆகும். இறைவனைத் தவிர யாருக்கும் எதற்கும் அஞ்சாமல் பக்தி செய்வதே இங்கு அச்சமின்மை எனப்படுகிறது. தனக்கு நெருக்கமானவனாக இறைவன் இருக்கின்றான் என்ற நம்பிக்கை உள்ளவனே அச்சமில்லாதவனாக விளங்க முடியும். எனவே இறைநம்பிக்கையும் அச்சமின்மையும் நாணயத்தின்

இரண்டு பக்கங்கள் போன்றவை. அப்பர் அரனடியார்கள் அஞ்சாமல் வாழ வேண்டும் என்பதைப் பல பாடல்களில் வலியுறுத்துகின்றார்.

"தப்பி வானந் தரணிகம் பிக்கிலென்
ஒப்பில் வேந்தர் ஒருங்குடன் சீறிலென்
செப்பமாஞ் சேறைச் செந்நெறி மேவிய
அப்ப னாருளர் அஞ்சுவ தென்னுக்கே" (5-77-6)

என்று அடியார்கள் உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதும், உலகமே அசையாமல் நின்றுவிட்டபோதும், உலகத்து மன்னர்கள் எல்லாம் ஒன்று திரண்டு தாக்க வந்தபோதும் இறைவன் இருக்கிறான் என்று அஞ்சாமல் இருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றார். இதே போன்ற கருத்தைக் கீழ்வரும்,

"வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ் சுண்டு
ஊனமொ ன்றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே"
(4-112-8)

"மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பால் திசை கெட்டிருசுடர் விழினும் அஞ்சல் நெஞ்சே"
(4-94-9)

போன்ற பாடல்களிலும் பிரதிபலிப்பதைக் காண முடிகிறது.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்"

எனத் தொடங்கும் மறுமாற்றத் திருத்தாண்டகத்தின் மையப் பொருளே அச்சமின்மையாகத் திகழ்வதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

வழிபாட்டு முறைகள்

நம்பிக்கை, அன்பு, அஞ்சாமை முதலியவற்றைக் கைக்கொண்ட உயிர்கள் அவற்றின் அடிப்படையில் இறைவனை வழிபட்டு உய்ய முயலவேண்டும். வழிபாடு இன்றி இறைவனை அடைய வழி எதுவும் கிடையாது. தோத்திர நூல்களான திருமுறைகளும், சாத்திர நூல்களான மெய்கண்ட சாத்திரம் போன்றனவும் வழிபாட்டை மிகவும் வலியுறுத்திக் கூறுகின்றன.

சைவத்தில் இறைவழிபாட்டு முறை நான்காக வகுக்கப்பெற்றுள்ளது. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. அப்பர் பெருமானைச் சரியை நெறியை விளக்க வந்த அருளாளர் என்பர். அதே போலச் சம்பந்தரைக் கிரியைக்கும், சுந்தரரை யோகத்திற்கும், மாணிக்கவாசகரை ஞானத்திற்கும் கூறுவர். இவற்றை முறையே தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என்றும் எடுத்துரைப்பர். இவற்றிற்குரிய பயன்களாகச்

சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் முதலியவற்றையும் சொல்வர். அப்பர் தேவாரம் இந்நான்கு நெறிகளையுமே விரிவாக எடுத்துரைத் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சரியை நெறி

சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயில்களைத் தூய்மை யாக்குதல் (திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல்) அங்கு நறும்புகையிடுதல், திருவிளக்கிடுதல், சிவாலயத் திருக்குளங்கள், நந்தவனங்கள் முதலியவற்றைத் தூய்மையாகப் பேணுதல், சிவனடியார்கள் தங்கும் திருமடங்களிலும் தூய்மை பேணல், கோயில் கட்டுதல், புதுப்பித்தல் முதலியன சரியை நெறி வழிபாடு என்ப்படும். சிவஞானபோதப் பேருரையில் சிவஞான முனிவர் சரியை நெறி வழிபாட்டையும் சரியையில் சரியை, சரியையில் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என நான்காக வகுத்துள்ளார். இதே போல ஏனைய மூன்று வழிபாடுகளையும் அவர் நந்நான்காகப் பிரித்து விளக்குவது இங்குச் சுட்டத்தக்கது.

அப்பர் தேவாரம் சரியை நெறி வழிபாட்டு முறைகளைப் பின்வரும் பாடலில் பட்டியலிட்டு விளக்குகின்றது.

"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே
நீவா நித்தலு மெம்பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல் சேர் செஞ்சடையெம் ஆதீயென்றும்
ஆரூரா என்றென்றே அலறாநில்லே" (6-31-3)

இதில் இவ்வழிபாட்டால் உயிர் நிலைபெறும் என்று அப்பர் குறிப்பிடுகிறார். மண்ணுலகில் உயிர் நிலைபெறவியலாது. ஆகவே நிலை பெறுதல் என்பது இறைவனுடைய உலகில் உயிர் நிலை பெறுதலையே குறிக்கும். இதையே சாலோகமடைதல் என்று கூறுவர். இதில் திருக்கோயிலைப் பெருக்குதல் (திருவலகு) முதற்கண் கூறப்படுகின்றது. இப்பணியை எவரும் எளிதில் செய்யலாம்; இதன் மூலம் கிடைத்தற்கரிய பேறு பெறலாம் என்று அப்பர் அனைவரையும் சரியைக்கு ஆற்றுப்படுத்துகிறார்.

திருமாலும் நான்முகனும் சிவபெருமானுடைய அடிமுறை காண முயன்று தோற்ற புராண வரலாற்றை ஒரு பதிகத்தில் (இலிங்கபுராணத் திருக்குறுந்தொகை) அப்பர் தேவாரம் எடுத்துரைத்து அவர்கள் தோற்றமைக்கான காரணங்களைப் பட்டியலிடுகிறது. அப்பதிகத்தில் பலவகையான சரியை நெறி வழிபாட்டு முறைகள் எடுத்துரைக்கப் பெற்று, அவற்றை இருவரும் மேற்கொண்டிருந்தால் எளிதில் இறைவனது

அடிமுற்ற கண்டிருக்கலாம் என்று குறிப்பிடுகின்றார். திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், நந்தவனத் திருப்பணி, திருசங்கம் முழங்குதல், திருநீறு, உருத்திராக்கம் அணிதல் முதலியவற்றைச் செய்யாமையே அவர்கள் இறைவனது அடிமுடி காண முடியாமைக்குரிய காரணங் களாக அப்பதிகம் குறிப்பிடுகின்றது. இப்பதிகவழி சரியை நெறி விரிவாக விளக்கப்படுகிறது. அதே சமயத்தில் அதனால் கிட்டும் அளவற்ற பயனும் மிகவுயர்வாக எடுத்துரைக்கப் பெறுகிறது. திருக்கோயில்களில் நறும்புகையிடுதல், திருவிளக்கிடுதல் போன்றவற்றையும் அவற்றால் கிட்டும் பேறுகளையும் அப்பர்,

"விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்...." (4-77-3)

"....வெள்ளத்தைக் கழிக்க வேண்டில்
விரும்புமின் விளக்குத் தூபம்..."

"விரும்பிநல் விளக்குத் தூபம்
விதியினால் இடவல் லார்க்குக்
கரும்பினிற் கட்டி போல்வார்
கடவூர்வீ ரட்டனாரே" (4-31-1,4)

என்றெல்லாம் எடுத்துரைக்கின்றார்.

கிரியை நெறி

கிரியை நெறி என்பது சிவ வழிபாட்டிற்குத் தேவையான திருமஞ்சனம், திருப்பள்ளித்தாமம் (மலர்கள், இலைகள், வேர்கள் முதலியன) சேகரித்தல், சிவலிங்கத்தை முறையாக வழிபாடு செய்தல், அகத்தே இறைவனை வழிபடுதல் (அந்தரி யாக பூசை) முதலியவற்றை உள்ளடக்கியது. இவ்வழி பாட்டு முறையை அப்பர் தேவாரம் பல பாடல்களில் எடுத்துரைக்கின்றது.

சண்டேச நாயனார் கிரியை நெறியில் நின்று வழிபாடு செய்த சிறப்பை,

"நிறைந்தமா மணலைக்கூப்பி நேசமோ டாவின் பாலைக்
கறந்து கொண் டாட்ட..." (4-73-5)

"தழைத்ததோர் ஆத்தியின்கீழ்த் தாமரை மணலாற் கூப்பி
அழைத்தங்கே ஆவின் பாலைக் கறந்து கொண் டாட்ட.." (4-49-3)

முதலியவிடங்களில் அப்பர் எடுத்துரைத்து அதன்வழி சண்டீசர் பெற்ற பெரும்பதத்தைச் சுட்டுகின்றார்.

மலர்கொண்டு சிவபெருமானைப் போற்றுவதை அப்பர் பெருமான் பல பாடல்களில் மிக உயர்வாகக் கூறுகிறார்.

"பூக்கள் கொண்டவன் பொன்னடி போற்றினால்
காப்பர் நம்மைக் கறைமிடற் றண்ணலே" (5-42-3)

"நறுமலர் நீருங்கொண்டு நாடொறு மேத்தி வாழ்த்தி..."
(4-62-8)

"கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வன்"

"தொண்டர்தாம் மலர்தூவிச் சொன்மாலை புனைகின்ற
இண்டைசேர் சடையான்...." (4-7-3,4)

என்றெல்லாம் மலரிட்டு வழிபடுவது போற்றப்படுகிறது. சிவபெருமானுக்குரிய எட்டுமலர்களில் (அட்டபுட்பம்) சிறப்பும் அவற்றைக் கொண்டு வழி படுவதால் கிட்டும் பெரும்பயனும் ஒரு பதிகம் முழுமையும் விளக்கப் பெறுகின்றது. (திருவதிகைவீரட்டம், எட்டுநாண்மலர் எனத் தொடங்கும் பதிகம்) மேலும், மார்க்கண்டேயர், நான்முகன், திருமால் முதலியோர் மலரிட்டுச் சிவபெருமானை அருச்சித்து வழிபட்ட சிறப்பும் பல பாடல்களில் எடுத்துரைக்கப் பெற்று அதனால் அவர்கள் அடைந்த பயனும் சுட்டப் பெறுகின்றது.

"தோடுலா மலர்கள் தூவித் தொழுதெழு மார்க்கண் டேயன்.."

"நக்குலா மலர்பன் னூறு கொண்டுநன் ஞானத் தோடு
மிக்கபூ சனைகள் செய்வான்...." (4-65-1,9)

"ஆதியிற் பிரமனார் தாம் அர்ச்சித்தார் அடியி ணைக்கீழ்..."
(4-49-1)

போன்ற பாடலடிகள் அத்தகையன. கற்போரைக் கிரியை நெறியில் செலுத்தும் பாங்கில் இத்தகைய பாடல்கள் அமைந்திருப்பது சுட்டத்தக்கது.

கிரியை நெறி முறைகளில் சிறப்பான ஒன்று, மனத்திற்குள்ளேயே செய்யும் அகப்பூசை (உள்வழிபாடு) ஆகும். இதைச் செய்ய வேண்டிய முறை குறித்தும் அதனால் உயிர் அடையும் பயன் பற்றியும் அப்பர் சில பாடல்களில் விளக்கியுள்ளார். அவை வருமாறு;

"மெய்யுளே விளக்கை யேற்றி வேண்டள வுயரத் தூண்டி
உய்வதோர் உபாயம் பற்றி உகக்கின்றேன்..." (4-54-9)

"காயமே கோயில் ஆகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மை ஆகமண மணி இலிங்கம்ஆக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே" (4-76-4)

"சிந்திப் பார்மனத் தான்சிவன் செஞ்சுடர்
அந்தி வான்நிறத் தான்அணி யார்மதி

முந்திச் சூடிய முக்கண்ணி னானடி
வந்திப் பாரவர் வானுல காள்வரே" (5-97-1)

"உள்ளம் பெருங்கோயில்..." எனத் தொடங்கும் திருமந்திரப் பாடல் (பா.எ. 1823) இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. கிரியை நெறியின் இறுதி நிலை இறைவனை அகத்தில் வழிபட்டு பெறும் அனுபவ உணர்வே ஆகும். இவ்வுணர்வு நிலையே உயிர் ஈடேறப் பெருந்துணை புரிவது என்பது இங்கு சுட்டத்தக்கது.

யோக நெறி

சிவயோகிகள் சிவத்தை யோகநெறியில் வழிபட்டு உய்வர். யோகவழிபாட்டு முறை எட்டு உறுப்புக்களைக் கொண்டது. அவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. யோகநெறியும் நிராலம்ப யோகம், சாலம்ப யோகம் என இருவகைப்படும். இறைவனது மூவகைத் திருமேனிகளில் அருவத்தைப் பற்றி இயற்றப்படும் யோகம் நிராலம்பம் என்றும், உருவம், அருவுருவம் ஆகிய திருமேனிகளைப் பற்றி இயற்றப்படும் யோகம் சாலம்பம் என்றும் கூறப்படும். அதாவது பற்றுக்கோடின்றி மேற்கொள்ளப் பெறுவது நிராலம்ப யோகம் பற்றுக்கோடு உடையதாய் மேற்கொள்ளப் பெறுவது சாலம்பம் ஆகும். இத்தகைய யோக நெறியையும் அப்பர் எடுத்துரைத்துள்ளார்.

"கொடித் தாமரைக் காடே நாடுந் தொண்டர் குற்றேவல் தாம்
மகிழ்ந்த குழகர் போலும்...." (6-21-1)

"ஊழி யளக்கவல் லானும் உகப்பவர் உச்சியுள் ளானும்..."
(4-4-5)

"உயிரா வணமிருந் துற்றுநோக்கி உள்ளக் கிழியினுரு வெழுதி
உயிரா வணஞ் செய்திட் டுன்கைத் தந்தால்
உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி..." (6-25-1)

"முண்டத்தின் முளைத்தெழுந்த தீயானானை..." (6-79-1)

"சந்தி யானைச் சமாதிசெய் வார்தங்கள்
புந்தி யானை..." (5-44-2)

"...என் தலையி னுச்சி யென்றுந் தாபித் திருந்தானை"
(6-19-10)

போன்ற பாடலடிகள் யோகநெறியையும் அந்நெறி நின்றார்க்கு இறைவன் வெளிப்பட்டு அருள்தலையும் விளக்குகின்றன.

ஞானநெறி

ஞான நூல்களை தக்காரிடத்துக் கேட்டல், அவற்றின் பொருள்களைச் சிந்தித்தல், அவற்றின் பொருளைத் தெளிவாக உணர்தல், நிட்டை கூடல்

என்பன ஞானநெறியில் மேற்கொள்ளப் பெறும் வழிபாட்டு முறைகளாகும். இந்நெறியே சிவசாயுச்சியம் என்னும் வீடுபேற்றை வழங்க வல்லது. ஞானம், ஞானியர் இயல்பு, ஞானநெறி முதலியன குறித்து அப்பர் பலவிடங்களில் எடுத்துரைத்து அவற்றின் பெருமைகளைக் காட்டு கின்றார். சிவஞானத்தினாலேயே இறைவனை அறிய முடியும். எனவேதான் அப்பர் இறைவனை, "ஞானத்து ஒளியானான் காண்" (6-8-9) "கற்றிருந்த கலைஞானம் ஆனாய் நீயே", "ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே", (6-38-6,7) "உத்தமர்க்கு ஞானச் சுடராய் நடுவே யுதிப்பன...", ஓதிய ஞானமும் ஞானப் பொருளும்.... ஐயாறன் அடித்தலமே" (4-92-14,17), "ஞான மூர்த்தி..." (4-62-2) "நன்மனம் வைத்திடு ஞானமாம் ஒன்றான்.." (5-98-7), "நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்" (5-90-2) என்றெல்லாம் குறிப்பிடுகிறார். சிவஞானியார் நான் என்பது ஒழிய இறைவன் உணர்வில் ஒடுங்கியவர் என்று கீழ்வரும் பாடலடிகளில் சுட்டுகிறார்.

"நானெனிற் றானே யென்னு ஞானத்தார் பத்தர் நெஞ்சுள்
தேனும்இன் னமுதுமானார் திருச்செம்பொன் பள்ளியாரே"
(4-29-1)

மேலும், ஞானியர் ஞானத்தளையால் இறைவனைத் தம்மோடு பிணைத்து வைப்பர் என்றும் ஞானத்தாலேயே அவர்கள் இறைவனைத் தொழுவார்கள் என்றும் அதுபோல ஞானத்தாலேயே இறைவனைத் தொழ வேண்டும் என்றும் எடுத்துரைக்கின்றார். (5-91-2,3)

சிவ வழிபாட்டின் இறுதிநிலை சிவஞானம் அடைதலே. அவ்வாறு உயிர் சிவஞானம் பெற்றுச் சிவகதியடையச் செய்ய வேண்டியது குறித்தும் அப்பர் தேவாரம் அழகாக ஒரு பாடலில் எடுத்துரைக்கின்றது.

"மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப்
பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகிற் சிவகதி விளையு மன்றே" (4-76-2)

என்பது அப்பாடல். இதுவே அனைவருக்கும் அப்பர் காட்டும் அரிய நெறியாகும்.

இதுவரை கண்டவற்றால் உயிர்கள் சிவவழிபாடு செய்து உய்வு பெற வேண்டுமென்று அப்பர் பெருமான் கருதுவதும் அதற்காகப் பலவகையான வழிபாட்டு முறைகளை விளக்கி எடுத்துரைத்திருப்பதும் புலனாகின்றன. மேலும் அப்பர் காலமான தொடக்ககாலப் பல்லவர் காலத்தில் சைவ சமயத்தில் வழக்கிலிருந்த சிவ வழிபாட்டு முறைகளையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

73. திருநாவுக்கரசர் வரலாறு

தீ. அர. நாராயணசாமி, கோவை.

தமிழ்நாட்டில் பலப்பல அழகிய நாடுகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று திருமுனைப்பாடி நாடு. அத்திருநாட்டில் திருவாமூர் என்றொரு திருப்பதியுண்டு. அதன்கண் வேளாளர் மரபில், குறுக்கையர் குடியில் தோன்றிய புகழனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மாதினியார் என்ற பெண்மணியை மணந்து இல்லறம் நடாத்தி வந்தார். விருந்தோம்புவதிலும், சுற்றங்களைத் தாங்குவதிலும் அவர் பேர் பெற்றவர்.

திலகவதியார் - மருணீக்கியார் தோற்றம்

புகழனார்க்கும் மாதினியார்க்கும் முதலில் திலகவதியார் என்ற புதல்வியார் பிறந்தார். சில ஆண்டு கடந்த பின்னர் அவர்கள்பால் மருணீக்கியார் என்பவர் தோன்றினார். புகழனார் மருணீக்கியாரை அன்புடன் வளர்த்துக் கலைகளைப் பயிற்றுவித்தார். திலகவதியார்க்குப் பன்னிரண்டு வயதாயிற்று.

அந்நாளில் கலிப்பகை நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் வேளாளர், சிவனடியார், சேனாதிபதி. அந்நாயனார் திலகவதியாரை மணம் புரிய விரும்பிச் சில பெரியோர்களைப் புகழனாரிடம் அனுப்பினார். அவர்கள் புகழனாரிடம் போந்து மணம் பேசி முடித்தார்கள். திருமணம் நிகழ்வதற்கு முன் வடபுலத்தில் போர் மூண்டது. அப்போர் நெடுநாள் நடந்து வந்தது.

இதற்கிடையில் திருவாமூரில் புகழனார் பிணிவாய்ப்பட்டு விண்ணெய்தினார். அவர் தம் மனைவியராகிய மாதினியாரும் அவருடன் உயிர் துறந்தார். திலகவதியாரும், மருணீக்கியாரும் துயரக் கடலில் அழுந்தினர். உறவினர் தேற்றத் தாய் தந்தையர்க்கு இறுதிக் கடன் ஆற்றினார்கள்.

தம்பியார் பொருட்டுத் தமக்கையார் உயிர் தாங்குதல்

கலிப்பகையார் வீரப்போர் புரிந்து போர்க்களத்தில் மாண்டார். அச்செய்தி திலகவதியார்க்கு எட்டியது. என்னருமைத் தாய் தந்தையர் என்னை அவருக்கு மணம் பேசி முடிவு செய்திருந்தனர். இவ்வுயிர் அவருடையதாயிற்று. ஆதலால் இவ்வுயிரை அவ்வுயிரோடு இசைவிப்பேன்

என்று துறவு கொண்டார். அந்நிலையில் மருணீக்கியார் அம்மையாரை வணங்கி நம் தாய் தந்தையர் சிவலோகம் அடைந்த நாள் தொட்டு உம்மையே அவராகக் கருதி வாழ்ந்து வருகிறேன். என்னைத் தனியனாகக் விடுத்துச் செல்லத் துணிவீராயின் முதலில் என் உயிரை விடுகிறேன் என்று புலம்பினார். திலகவதியார் "தம்பியார் உலகில் வாழ்தல் வேண்டும்" என்னும் தயா உடையவரானார். அதனால் அம்மையார் பொன்மணி நூல் பூணாது அனைத்துயிர்க்கும் அருள் பூண்டு இல்லத்திலேயே தவம் புரியலானார்.

மருணீக்கியார் தருமசேனராதல்

பின்னே மருணீக்கியார் உலக நிலையாமை முதலியவற்றை உணர்ந்து அறநெறியில் நின்றார். அறச்சாலைகள், தண்ணீர்ப் பந்தல், சோலைகள் அமைத்தல், குளங்கள் வெட்டுதல், விருந்தளித்தல், நாவலர்க்கு உதவுதல் சமய ஆராய்ச்சி முதலியவற்றில் ஈடுபட்டார்.

மருணீக்கியார் சமண சமயத்தில் பற்றுள்ளங் கொண்டு பாடலிபுத்திரம் போந்து, சமண் பள்ளி அடைந்தார் அங்கே சமணர்கள் "வீடறியும் நெறி தங்கள் நெறியே" என்று மருணீக்கியாருக்கு அறிவுறுத்தினார்கள். மருணீக்கியார், சமண சமய கலைகளை நன்றாக ஓதியுணர்ந்தார். அவர் தம் புலமை கண்ட சமணர்கள் அவருக்குத் தருமசேனர் என்னும் பெயர் சூட்டி அவரைக் குருவாகக் கொண்டார்கள். தருமசேனர் புத்தர்களை வாதில் வென்று சமண சமயத்தை வளர்த்து வந்தார்.

திலகவதியார்க்குத் தம்பியார் நினைவு தோன்றல்

திலகவதியார் சிவநெறியில் நின்று சிவனருள் பெறத் திருவதிகை வீரட்டானஞ் சேர்ந்து திருத்தொண்டு செய்து வந்தார். ஒருநாள் அவருக்குத் தம்பியார் நினைவு தோன்றிற்று. அவர் துயருற்றுத் திருவதிகைப் பெருமானைத் தொழுது "பெருமானே!.. என்னை ஆண்டருள்பவர் நீராயின் இக்காலச் சமணப் படுகுழியில் வீழ்ந்து கிடக்கும் என் தம்பியாரை அதனின்றும் எடுத்தாளல் வேண்டும்" என்று பன்முறை விண்ணப்பித்தார். சிவபெருமான் அம்மையார் கனவில் தோன்றி "உன் மனக்கவலையை ஒழிப்பாயாக, உன் தம்பி முன்னமே முனியாகி நம்மை அடையத் தவஞ் செய்தவன். அவனிடம் சூலை நோய் செலுத்தி அவனை ஆண்டருள்வோம்" என்று அருளிச் செய்தார்.

சூலை நோய்

எல்லாம் வல்ல இறைவனருளால் தருமசேனர் வயிற்றில் சூலை நோய் புகுந்தது. வருந்தி வருந்திப் பாழி அறையில் மயங்கி வீழ்ந்தார். அவர் தாம் சமண சமயத்தில் தாம் கற்ற மந்திரங்களால் நோய் தீர்க்க முயன்றார். நோய் மேன்மேலும் கொடியதாகிறது என்று துயருழந்தார்.

பல முறையில் சமணர்கள் மந்திரித்தும் "இது நம்மால் போக்க அரிது" என்று சொல்லிக் கைவிட்டனர்.

தருமசேனர் என் செய்வார், நன்னெறி நின்று ஒழுகும் திலவதியார் திருவடி அடைவேன் என்று உறுதி பூண்டார். சமணக் கோலங்களை நீக்கி, வெள்ளாடை அணிந்து திருவதிகையில் உள்ள திருமடத்தைச் சேர்ந்தார். தமக்கையாரைப் பார்த்து "நங்குலஞ் செய்த நற்றவப் பயனே! அடியேன் சூலை நோயால் பெரிதும் வருந்துகிறேனே; பொறுக்க முடியவில்லை. உய்யும் வழி உணர்த்தியருள்க" என்று திருவடியில் வீழ்ந்தார்.

திலகவதியார், சிவபெருமான் திருவருளை நினைந்து கைதொழுதார். தொழுது "பர சமயப் படுகுழியில் வீழ்ந்து வருந்தும் தம்பியாரே! எழுந்திரும்" என்றார். மருள்நீக்கியார் எழுந்து தமக்கையாரை வணங்கி நின்றார். தம்பியாரை உடனழைத்து சென்றார். வீரட்டானேசுவரர் திருக்கோயிலைத் தொழுது வலம் வர சிவநாதன் அருளால் சூலை நோய் ஒழிய உலகம் உய்யவும் "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்ற திருப்பதிகத்தைப் பாடினார். சூலை நோய் ஒழிந்தது.

திருநாவுக்கரசராதல்

அடியவர் அன்புருவாய் நின்று விழுந்து புரண்டு எழுந்து "இப்பெரு வாழ்வைப் பெறச் செய்த சூலைநோய்க்கு என்ன கைமாறு செய்வேன்" என்கிறார். அப்பொழுது ஆண்டவன் அருளால் "இனிய பதிகத்தை நீ பாடியதால் நாவுக்கரசு என்னும் பெயர் ஏழுலகங்களிலும் வழங்குவதாக" என்றொரு வானொலி எழுந்தது. யாவரும் வியப்புற்றனர். திருநாவுக்கரசருக்கு மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களாலும் தொண்டு செய்தல் வேண்டும் என்னும் பேரவா எழுந்தது. அவர் மனத்தால் ஆண்டவனைத் தியானித்து, வாயால் அவன் புகழைப் பாடியும், கையால் உழவாரத் தொண்டு செய்தும் வரலானார்.

மாற்றார் சூழ்ச்சி

திருநாவுக்கரசர் திருவருள் பெற்ற செய்தி பாடலிபுரத்தில் பரவிற்று. இங்குள்ள சமணர்கள் புழுங்கினார்கள். அவர்கள் "தருமசேனர்க்குற்ற சூலை நோயை தீர்த்தல் நம்மால் முடியாமற் போயிற்று. அவர் திருவதிகைக்குப் போய் முன் போல சைவரானார். இனி நமது சமயம் ஒழிந்தது" என்று பலவாறு கூறிச் சமணர்கள் சூழ்ச்சியில் இறங்கினர். இதைப் பல்லவ மன்னனிடம் கூறினர். மன்னன் அடிகள்மாரை நோக்கி இவனை என்ன செய்வது என்று கேட்க "நீற்றறையிலிடுக" என்றனர். நீற்றறையில் இட்டுக் கதவைத் தாளிட்டனர். திருநாவுக்கரசர் தாண்டவமூர்த்தியின் தாள் நிழலைத் தலை கொண்டு ஏற்றார். அது குளிர்ந்து இறைவன் திருவடி நிழலெனக் குளிர்ந்தது.

திருநாவுக்கரசர் மாசில் வீணையும் என்னும் பாடலை ஓதி இனிது வீற்றிருந்தார்.

ஏழுநாள் கழித்து திறந்து பார்த்தான். அங்கே அருளாளராக நாவரசர் ஒரு துன்பமுமின்றி இருந்தார். இஃதென்ன அதிசயம் என்று வியந்தனர். பிறகு நஞ்சூட்டுமாறும், யானையை ஏவியும், கல்லொடு பிணித்துக் கடலில் விட்டும் துன்புறுத்தினர். திருநாவுக்கரசர் எத்துன்ப மாயினும் அதைப் பரிசாக ஏற்று ''எப்பரிசாயினும் ஆக யான் எந்தை ஏத்துவன்'' என்று 'சொற்றுணை வேதியன்' எனத் தொடங்கும் நமச்சிவாயப் பதிகத்தைப் பாடியருளினார். கடல் மீது கல் மிதந்தது. கருங்கல்லே சிவிகையாக அதை வருணன் தாங்கித் திருநாவுக்கரசரைத் திருப்பாதிரிப் புலியூர் அருகே விடுத்தான். சுவாமிகள் கோயிலுக்குச் சென்று ''ஈன்றாளுமாய்'' என்னும் தமிழ் மாலையைச் சாத்தினார். திருவதிகையை அடைந்தார்.

பல்லவன் நல்வரவு பெற்று, உண்மை தெளிந்து, திருநாவுக்கரசு சுவாமிகளை வணங்கி, சைவனாகி, பாடலிபுரத்திலுள்ள சமணப் பள்ளிகளை இடித்து, குணபரவீச்சரம் என்னும் சிவாலயம் கட்டினான்.

சிவமாக விளங்கும் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவெண்ணெய் நல்லூர் முதலான தலங்களை தொழுது, தில்லையில் ஆனந்தக் கூத்தாடும் ஸ்ரீ நடராஜப் பெருமானைப் பணிந்து பாடியும், சீர்காழி திருஞான சம்பந்தரைச் சந்தித்தும், அப்பூதி அடிகளுக்கு அருளியும், திருவாரூர் பெருமையைப் பாடியும் முருகநாயனார் மடத்தில் தங்கியும், குங்குலியக் கலையர் இல்லத்தில் விருந்துண்டும், திருமறைக்காட்டில் திருக்கதவுகளைத் திறக்கச் செய்தும், திருவாய்மூரில் சிவக்காட்சியைக் கண்டும், வடதளியில் சிவலிங்கப் பெருமான் பொதி சோறுண்டும், திருக்காளத்தி அடைந்து கண்ணப்பரைத் தொழுதும், திருஞானசம்பந்தருக்குச் சிவிகை தாங்கியும் மகிழ்ந்தனர்.

அப்பர் சுவாமிகளின் நன்னிலையை உலகுக்குக் காட்ட உழவாரப் படையில் புல் செதுக்கும் போது, இறைவர் பொன்னும் மணியும் பொலிந்து இருக்குமாறு செய்தார். கல்லோடும், மண்ணோடும் இருந்த பொன்மணிகளை ஒன்றாக எண்ணி எறிந்தார். ஓட்டையும், பொன்னையும் ஒன்றாகவே பார்த்தார்.

அன்புருவாக விளங்கும் திருநாவுக்கரசர் ''புகலூர் பெருமானே! என்னை இனிச் சேவடிக் கீழ் சேர்த்தருள்க'' என்று திருவிருத்தங்கள் பல பாடினார். ஒரு சித்திரையில் சதயம் கூடிய திருநாளில் ''எண்ணுகேன்'' என்னும் திருத்தாண்டகத்தை எடுத்துப் ''புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்'' என்று ஓதி ஞானவடிவைப் பெற்றுச் சிவபெருமான் சேவடியில் அமர்ந்தார்.

74. நாவுக்கரசரும் சைவ சமயமும்

வயி. நாராயணசாமி, புதுவை.

'அன்பின் வழியது உயிர்நிலை' என்கிறார் வள்ளுவப் பெருமான். இந்த 'அன்பு' என்னும் வார்த்தையின் பல்வேறு பரிணாம வளர்ச்சிதான் 'நட்பு', 'காதல்', 'பாசம்', 'பக்தி' என்பனவாகும். தெரியாத ஒருவரிடம் பழகி அன்பை வளர்த்துக் கொள்வதை 'நட்பு' என்றும், ஆண் - பெண் அல்லது கணவன் - மனைவியரிடையே முகிழ்ப்பதைக் 'காதல்' என்றும், இரத்தக்கலப்பு உள்ளவர்களிடம் காட்டுவதைப் 'பாசம்' என்றும், அடியவர் ஆண்டவனிடம் காட்டுவதைப் 'பக்தி' என்றும் கூறுகிறோம்.

வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள்

மனித வாழ்க்கையில் மேற்கூறியவற்றில் எது சிறந்தது என்று நாம் அறுதியிட்டுக் கூற முடியாது. 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்று வள்ளுவர் கூறும் வகையில் பார்த்தால், உலகில் வாழவேண்டிய முறைப்படி இல்வாழ்க்கை நடத்துபவன், விண்ணில் இருக்கும் தெய்வங்களுள் ஒரு தெய்வம்போல் மதிக்கப்படுவான். ஆதலின் இல்லற வாழ்க்கை இன்றியமையாதது என்று கூறுவோர் மக்கள் தொகையில் அதிகமாகக் காணப்படுகின்றனர். ஆனால், இறை அனுபவத்தில் ஒன்றித் தன்னை நாயகியாகக் கருதி, இறைவனை நாயகனாக நினைத்து, அவன்பால் காதல் கொண்டு, அவனுள்ளே ஒன்றி, ஒரு தெய்வீகத் தன்மையை, ஓர் இணைப்பை, பாசத்தை ஏற்படுத்திக் கொண்டு வாழ்ந்த பெருமக்களைத்தான் நாம் 'வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள்' என்று உண்மையில் கூறலாம். அவ்வாறு வாழ்ந்தவர்களே நம் நால்வர் பெருமக்கள். அவர்களே சைவநெறி உலகில் இன்றுவரை நிலைத்து நிற்கப் பாடுபட்டவர்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

சைவத்தின் தொன்மை

சைவ சமயத்தின் வரலாற்றையும், காலவெள்ளத்தில் அதன் பெருமை குறைய ஆரம்பித்தபின் திருநாவுக்கரசர் ஞானசம்பந்தர் ஆகியவர்களால் மீண்டும் ஏழாம் நூற்றாண்டில் நிலை நிறுத்தப்பெற்ற வரலாற்றையும் நாம் சிறிது அறிந்து கொள்வோம்.

'சைவம்' என்ற சொல் 'சிவம்' என்னும் செந்தமிழ்ச் சொல்லின் அடியாகப் பிறந்தது எனவும், 'சிவ' என்னும் சொல், சிவப்பு, நன்மை,

மங்கலம் என்னும் பொருளைக் குறிப்பிடுவது எனவும், 'சமையம்' என்ற சொல் 'சமயம்' என்று மருவிற்று எனவும், அச்சொல் 'நெறி' என்னும் பொருளைத் தருவது எனவும், ஆகவே 'சைவ சமயம்' என்பது செம்மை + நெறி = 'செந்நெறி' என்ற பொருளைத் தரும் எனவும், சைவ சமயத்தை ஆராய்ந்த அறிஞர் பெருமக்கள் கூறுகின்றனர்.

கிறித்து பிறப்பதற்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பே சிவவழிபாடு இருந்திருக்கிறது என்று புதைபொருள் ஆய்வறிஞர் சர் ஜான் மார்ஷல் என்பவர் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறே தமிழ் நாட்டிற்கு வந்து தமிழ்மொழி கற்று, அதை ஆராய்ந்த ஜி.யு. போப் அவர்களும் "சைவம் வரலாற்றுக்கு முற்பட்ட சமயம்; அது ஆரியர்கள் இந்தியாவிற்குள் வருவதற்கு முற்பட்ட காலத்திலிருந்தே வழக்கில் இருந்து வந்திருக்கிறது" என்று தனது ஆய்வு மூலம் நிறுவுகிறார். பிற மதத்தைச் சார்ந்த இவர்கள் கருத்தை நாம் உறுதியாக ஏற்றுக் கொள்ளலாம்.

கடவுள் என்ற சொல்லாட்சி

திருமந்திரத்தில் 'கடவுள்' என்ற சொல் இடம்பெற்றுள்ளதை நாம் காணலாம். அத்திருமந்திரம் வருமாறு:

"ஒழிந்தேன் பிறவி; உறவு என்னும் பாசம்
கழிந்தேன்; கடவுளும் நானும் ஒன்று ஆனேன்;
அழிந்தாங்கு இனிவரும் மார்க்கமும் வேண்டேன்;
செழுஞ்சார்பு உடைய சிவனைக் கண்டேனே".

திருமந்திரம் அருளிய திருமூலர் வாழ்ந்த காலம் கி.மு. 6000-க்கும் கி.மு. 3100-க்கும் இடைப்பட்ட காலம் என்று பேராசிரியர் க. வெள்ளைவாரணர் குறிப்பிடுகிறார். இதிலிருந்து இன்றைக்கு எட்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே 'கடவுள்' என்னும் சொல், தமிழர்கள் வழக்கத்தில் இருந்திருக்கிறது என்பதும், அக்கடவுள் 'சிவபெருமானே' என்பதும், இதன் வாயிலாகச் 'சைவம்' என்னும் சமயமும் வடமொழி வேதங்கள் தோன்றுவதற்குப் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்பே விளங்கியிருந்திருக்கிறது என்பதும் புலப்படும்.

கிறித்து பிறப்பதற்கு முன்னால் சங்க காலம் 9990 ஆண்டுகள் நிலைத்திருந்தது என்று ஆய்வாளர் கூறுவர். இதில் கடைச்சங்க காலத்தில் தோன்றிய இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களுள், சிலம்பில் சமயத் தாக்குதல் இல்லை என்பதனையும், மாறாக சமயப்பொதுமை போற்றப்பட்டது என்பதனையும் நாம் கருத்தில் கொள்ளலாம். ஆனால், மணிமேகலை, தன் சமயத்தைப் பரப்ப தமிழில் எழுந்த முதல் காப்பியம் என்பதனை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். பௌத்த சமயக் கருத்தை விளக்கி அதுவே சிறந்தது என்று வற்புறுத்துவதை மணிமேகலையில் நாம் காணலாம்.

புத்த சாதகக் கதைகளும் பிறசமயக் கதைகளும் மணிமேகலையில் இடம்பெற்றுள்ளன. சமயத் தாக்குதல் மிகுதியாக அதில் உண்டு.

சைவத்தின் சரிவு

இதைத் தொடர்ந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வேற்றுப் புலத்தவராகிய களப்பிரர் மற்றும் பல்லவர் ஆகியோரால் பிறமொழிகளாகிய பாலியும், பிராகிருதமும், வடமொழியும் போற்றப் பெற்றமையாலும், பிற சமயங்களாகிய பௌத்தமும், சமணமும் செல்வாக்குப் பெற்றமையாலும், சைவ சமயமும், தமிழர்தம் மொழியும் பொலிவிழந்து நலியத் தலைப்பட்டன. களப்பிரர் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த பௌத்தம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் வீழத் தலைப் பட்டது. அதே காலத்தில் சமணம் வளர்ச்சி பெற்றது.

சைவத்தின் புண்ணியக் கண்கள்

வேத காலத்திற்கு முன்பே தோன்றிச் செழித்திருந்த சைவமானது பௌத்தமும், சமணமும் தலையெடுத்த பின்னர் குறுகிய காலத்திலேயே செல்வாக்கிழந்துவிட்டதைக் கூர்ந்து நோக்கினால்தான் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் செய்த சைவப்பணிகள் எவ்வளவு உன்னதமானவை என்பதை உணர முடியும். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரால் தான் கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குப்பின் சைவமும், கி.பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்து வைணவமும் செழிக்க ஆரம்பித்தன என்பதனை யாரும் மறுக்க இயலாது.

திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய இந்நால்வரும் தலைசிறந்த, பதிகங்களைப் பாடி, ஊர்தோறும் சென்று மக்களிடம் சிவபெருமானின் பெருமைகளைக் கூறி, சிவநெறியில் மக்களெல்லாம் வாழ வழிவகுத்துத் தந்தனர்.

இந்நால்வருள் நாவுக்கரசர் என்னும் அப்பர் பெருமான் தனித் தன்மை பெற்றவர். அக்காலத்தில் 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்ற கருத்துக்கேற்ப மன்னன் எந்த மதத்தைப் பின்பற்றுகின்றானோ அம்மதத்தையே மக்களும் பின்பற்றினர். நாவுக்கரசர் சிறுவயதில் சமணராகத் திகழ்ந்தவர். மன்னன் சமண மதத்தைச் சார்ந்தவனாக இருந்தமையும் இதற்கோர் காரணமாக இருக்கலாம். ஆனால், அவரது தமக்கை 'சைவத் திலக'வதியாரால் நாவுக்கரசு மதம் மாறிச் சைவரானார்.

சைவம் காக்கும் அறப்போர்

சைவ மதமாறிய திருநாவுக்கரசர் அதனால் பல துன்பங்களுக்கு ஆட்பட்டார். இவர் சைவராக மாறியதைப் பொறுக்க முடியாத சமணர் கூட்டம் மன்னன் முன் சென்று "தருமசேனன் பிணியுற்றாராய்ச் சடையானுக்கு ஆளாய் நின்சமயம் ஒழிந்தார்" எனக் கூறவும், மன்னன்

வெகுண்டு எழுந்தான். அவரைத் தன்முன் கொண்டு வந்து நிறுத்த ஆணையிட்டான். அவ்வாணையைக் கேட்ட திருநாவுக்கரசர்,

"நாமார்க்கும் குடியல்லோம், நமனை யஞ்சோம்,
நரகத்தில் இடர்ப்பட்டோம், நடலை யில்லோம்,
ஏமாப்போம், பிணியறிவோம், பணிவோ மல்லோம்,
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை,
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச்சே வடிஇணையே குறுகினோமே"

(திருநாவு. தேவாரம் 6-ஆம் திருமுறை)

என்று முழக்கமிட்டார். பிற மதத்தின் வல்லாண்மையை எதிர்த்துச் சைவம் தொடங்கிய முதல் அறைகூவல் இதுவே. ஆட்சியின் அடக்குமுறைகளை எதிர்க்காமல் ஏற்றுத் தாங்கித் தம் சைவ நெறியைக் காக்கும் அறப்போராட்டத்தை அப்பர் பெருமான் முதன்முதலாகத் தமிழகத்தில் தொடங்கிவைத்தார். அரசனின் ஆணையால் அவர் வெம்மை நீற்றறையில் அடைக்கப் பெற்றபோது,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே".

(திருநா. தேவாரம் 5-ஆம் திருமுறை)

எனும் பதிகத்தைப் பாடி ஆனந்த வெள்ளத்தில் அவர் மிதந்திருப்பதைக் கண்டு மக்கள் வியப்புற்றனர்.

அடுத்தடுத்துச் சமணர்கள் அரசன் மூலம் பல்வேறு கொடுஞ் செயல்களைச் செய்த போதும் சிவனருளால் அழிவின்றி மீண்டு, சமணனாக இருந்த மன்னனையும் சைவநெறியைத் தழுவச் செய்தது அவரது புகழை மிளிரச் செய்தது.

இந்த அறப்போராட்டத்தை அப்பர் பெருமான் தேவைப்படும் இடங்களில் எல்லாம் கடைப்பிடித்தார். பழையாறை வடதளிக் கோயிலைத் தரிசிக்க சென்றபோது அதனைக் கண்டு தொழமுடியாதபடி சமணர்கள் தங்கள் கோயில் விமானத்தைக் கட்டியிருப்பதைக் கண்டு மனம் புழுங்கினார். "நான் உம்மை வணங்கி அன்றிப் போவேன்" என்றுக் கூறித் தம் "எண்ணம் முடிக்கும்வரை வாகீசர் அமுது செய்யாதிருந்தார்".

இறைவன் மன்னன் கனவில் தோன்றி 'அமணர் வஞ்சனையை நீக்கு' என்று கூற, அரசன் அமண் ஆயிரம் நீக்கினார். ஈசனுக்கு விமானம் கட்டினான். அதன் பின்னர் திருநாவுக்கரசர் அங்குச் சென்று வழிபாடு

செய்தார் என்பதும் நினைவு கூரத்தக்கது. இவ்வாறு திருநாவுக்கரசர் பண்சுமந்த பாடல்களைப் பாடிப் பக்தி இலக்கியம் மூலம் சைவ சமயத்தைப் புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றார் என்பது கண்கூடு.

தொண்டால் சைவத்தை வளர்த்தல்

திருநாவுக்கரசர் மேதையாகத் திகழ்ந்தார். சிறந்த பாவலராக, தத்துவ அறிஞராக விளங்கினார். அத்துடன் இல்லாமல் பொதுவாழ்விலும் ஈடுபட்டார். அறங்கள் பல செய்தார்; அறச்சாலைகள் அமைத்தார்; தண்ணீர்ப்பந்தல் வைத்தார்; பூங்காக்களைத் தோற்றுவித்தார்; குளங்கள் பல வெட்டினார்; பசித்தவர்களுக்கு விருந்தும் அளித்தார். இதனைச் சேக்கிழார்,

"மாசின்மனத் துயரொழிய மருணீக்கி யார்நிரம்பித்
தேசநெறி நிலையாமை கண்டறங்கள் செய்வாராய்க்
காசினிமேற் புகழ்விளங்க நிதியளித்துக் கருணையினால்
ஆசில் சாலைகளும் தண்ணீர்ப்பந்தரும் அமைப்பார்".

"காவளர்த்தும் குளந்தொட்டும் கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக நல்கியும்நா னிலத்துள்ளோர்
யாவர்க்குந் தவிராத ஈகையினைத் துணைநின்றார்"

(பெரிய புராணம்-1300, 1301)

என்று கூறுவதிலிருந்து அறிந்து கொள்கின்றோம்.

திருநாவுக்கரசரின் வாழ்விலிருந்து ஒரு உண்மையை நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. சைவ நெறியைப் பின்பற்றுபவர்கள் இறை வழிபாட்டில் சிவபெருமானை மட்டும் தொழுதுகொண்டிருப்பார்கள் என்றில்லாமல், சமூகத் தொண்டையும் செய்து வருவார்கள் என்ற உண்மைதான் அது. அத்தகைய சைவர்கள் வாழும் ஊர் எவ்வாறு விளங்கியது என்பதற்குத் திருவாரூரைக் குறிப்பிடும்போது சேக்கிழார்,

"மெய்வளங்கள் ஓங்கவரும் மேன்மையான ஆங்கவற்றுள்
சைவநெறி ஏழுலகும் பாலிக்குந் தன்மையினால்
தெய்வநெறிச் சிவம்பெருக்கும் திருவாரூர் திருவாரூர்"

என்று தொண்டு நெறியால் சிவம் பெருக்கும் சைவப் பெருமக்கள் வாழும் ஊராக அதன் பெருமையைக் குறிப்பிடுவது இங்கு நினைக்கத்தக்கது.

திருநாவுக்கரசர் அவதரித்த திருவாரூரின் சிறப்பு என்னவென்றால் அது ஒரு வளமான ஊர். உடல் நலம் பேண உணவு தேவை; உள்ளம் வளர உண்மை தேவை; உயிர் வளர சிவநெறி தேவை; இவை அனைத்தும் அவ்வூரில் நிறைந்திருந்தன.

பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், பாதுகாப்பு முதலிய வளங்கள் இருப்பது மட்டும் ஓர் ஊரையோ அல்லது ஒரு நாட்டையோ

வளமுள்ளதாக்கிவிடாது. ஏனெனில் இவையனைத்தும் உடல் சார்ந்த வளங்களாகும். ஒரு நாட்டு மக்கள் உள்ளம் சார்ந்த வளங்களாகிய உண்மை, அன்பு, ஒழுக்கம் முதலிய உண்மையான வளங்களைப் பெற்றிருக்க வேண்டும். இவற்றுடன் அமையாது உயிர் சார்ந்த வளங்களாகிய தெய்வ நெறியும், தொண்டு நெறியும் அன்பு சிறந்து விளங்கவேண்டும். அதுதான் சிறந்த ஊராகும்; சிறந்த நாடாகும்; இந்த மூவகை வளங்களும் மேன்மைபெற்றிருந்த காரணத்தினால்தான் சேக்கிழார், திருநாவுக்கரசர் அவதரித்த திருத்தலத்தைத் ''திருவாமூர், திருவாமூர்'' என்று வருணித்துச் சிறப்பிக்கின்றார்.

சைவத்தால் பண்பாட்டை வளப்படுத்தல்

''ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்'' என்று திருநாவுக்கரசர் முழங்கியதன் வாயிலாக நம் தமிழ் இனத்தை மொழிவழி தேசிய இனமாக அன்றே பிரகடனப்படுத்திவிட்டார். 'தமிழன்' என்ற சொல்லைக் கூறிய முதல் தமிழர் இவர் எனப் பெருமையோடு நாம் கருதலாம். சைவ மதம் இன்றும் தமிழரின் மதமாகவே போற்றப்படுகின்றது.

சைவப் படைக்கலன்கள் வழங்குதல்

பதி, பசு, பாசம் என்ற மூன்றும் சைவ சித்தாந்தத்தின் அடிப்படைகளாகும். பதி என்பது கடவுளைக் குறிக்கும்; பசு என்பது உயிர்களைக் குறிக்கும்; பாசம் என்பது தளை எனப்பெறும் வினையைக் குறிக்கும். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் பாசம் ஆகும். மனிதர்கள் அடையும் துன்பங்களுக்கும், குறைபாடுகளுக்கும் இறைவனை அடைய முடியாமைக்கும், மும்மலங்கள்தான் காரணம். மும்மலங்களை நீக்கினால் இறைவனைக் காணலாம்.

திருவைந்தெழுத்தாகிய 'நமசிவாய' என்ற நாம மந்திரத்தை ஓதினால், இறைவன் அகக்கண்ணிற்கும், புறக்கண்ணிற்கும் புலப்படுவான் என்பதனைத் திருநாவுக்கரசு சுவாமிகள்.

''விண்ணி னார்மதி சூடிய வேந்தனை
எண்ணி நாமங்கள் ஓதி எழுத்தஞ்சும்
கண்ணி னால்கழல் காண்பிடம் ஏதெனில்
புண்ணி யன்புக லூரும்என் நெஞ்சமே''

எனத் தம் அனுபவத்தைக் கூறுகிறார். திருத்தொண்டர் புராணத்தில் திருநாவுக்கரசு நாயனார் சரித்திரத்தைக் கூறும் சேக்கிழார் பெருமானும்,

''சொற்றுணை வேதியன்'' என்னுந் தூய்மொழி
நற்றமிழ் மாலையா நமச்சிவாய என்று
அற்றமுன் காக்கும்அஞ் செழுத்தை அன்போடு
பற்றிய உணர்வினால் பதிகம் பாடினார்''

என்று கூறுவதும் இங்கு எண்ணத்தக்கதாகும்.

திருநாவுக்கரசர் சைவப் பெருமக்களுக்கு அளித்த படைக்கலன் உழவாரக் கருவியாகும். தொண்டு நெறியை வலியுறுத்த அதனை அவர் என்றும் தாங்கி நம்மையும் தாங்கவைத்தார். எடுத்துக்காட்டாக தலைவனாக விளங்கித் தொண்டர்களைத் தொண்டு செய்ய வைத்தார்.

அத்துடன் நில்லாமல் நமக்கு உண்மையான ஞானப் படைக்கலன் ஒன்றையும் காட்டி அருளினார். அதுவே 'நமச்சிவாய' என்னும் படைக்கலனாகும். மீண்டும் நம்மைப் பிறவியில் வீழ்த்தவரும் எல்லாத் தீமைகளிலிருந்தும் நம்மைக் காக்கும் ஒப்பற்ற படைக்கலனாகும் அது.

"படைக்கல மாகஉன் நாமத்து எழுத்துஅஞ்சுஎன் நாவில்
கொண்டேன்;
இடைக்கலம் அல்லேன் எழுபிறப் பும்உனக்கு ஆட்செய் கின்றேன்;
துடைக்கினும் போகேன்; தொழுது வணங்கித் தூநீறு அணிந்துஉன்
அடைக்கலம் கண்டாய், அணிதில்லைச் சிற்றம் பலத்தானே"

என்ற திருப்பாடல் மூலம் நமக்கறிவுறுத்தியுள்ளார்.

சைவ இலக்கை அடைய வழிகாட்டல்

இறைவன் படைப்பின் இலக்கு சைவ சமயத்தில் இறைவன் திருவடியைச் சேர்தல் என்பதனையும் அதை அடைய நினைவு தப்பும்வரை அவன் திருவடியையே நினைத்திருத்தலாகும் என்பதனையும் தமது திருத்தாண்டகத்தில்,

"எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணினன் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணிய உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே"

என நாவுக்கரசர் கூறுகிறார்.

இறைவன் தன்னை விரைவில் தன் திருவடிக்கீழ் சேர்த்துக் கொள்வான் என முன்னாலேயே உணர்ந்திருந்தார் என்பதும், அவ்வாறே சித்திரைச் சதயத் திருநாளில் திருப்புகலூரில் சிவனடிச் சேர்ந்தார் என்பதும் வியக்கத்தக்கன.

சமண மதத்தால் இருண்டிருந்த தமிழ்நாடு சைவ ஒளிபெற்று, இறைநெறிக்கு எதிரான சமணம் வேரோடு வீழ்ந்து, சைவம் ஏழாம் நூற்றாண்டிலிருந்து இன்றளவும் நின்று ஓங்க வித்திட்ட திருநாவுக்கரசரையும் அதே காலத்தில் வாழ்ந்த திருஞானசம்பந்தரையும், எந்நாளும் நம் மனத்தில் நிறுத்தி வணங்கி வருவது நம் நன்றிக் கடனாகும்.

75. திருநாவுக்கரசரின் தமிழ்ச்சுவை

தா. நீலகண்ட பிள்ளை, கன்னியாகுமரி.

அழகு கூத்தாடும் இயற்கைச் செல்வத்தை அறிந்து உணர்ந்து பாராட்டிசைக்கும் பண்பு பாவலனிடத்தே உண்டு. பாவலன் உலக அழகினைத் தன் சொற்களால் காவியமாக்குகின்றான். இதற்குக் காரணம் கவிஞனின் கலைநோக்கு, கவிஞனின் பார்வை, ஊடுருவிச் செல்லக் கூடியது. அகக் காட்சியில் ஆழ்ந்து நிற்பது. இதனால் மற்றவர்கள் நுகர கவிஞனால் கவிதை, புனைய இயலுகின்றது. நம் உணர்வோடு கூடிய கவிதையை இடையறாது சுவைக்கக் கவிஞர்கள் பல கவிதைகளைத் தந்துள்ளனர். வேறு உலகக் காட்சியை நமக்குக் காட்டுவதில் கவிஞர்கள் தம் உணர்வைக் கூர்மையாக்கி உள்ளனர். விண்ணுக்கும் மண்ணுக்கும் உணர்வால் உயிர்ப்பால் நுழைந்து கற்பனை வடிவங்களைக் காட்டி நிற்கின்றனர்.

திருநாவுக்கரசரின் பாடல்கள் அருளே வடிவான இறைவனை அகமுருகப் பாடின. பக்தியை விளைவிப்பன, பண் இசையோடு கூடியன. பண்பட்ட முதிர்ந்த தமிழ்ப்புலமை மிக்கன. அவர் பாடல்கள் கல் நெஞ்சினரையும் கசிய வைக்கும் தன்மையது. பொருள் சிறப்பும் பொருளாழமும் உடையன. சேக்கிழார் பெருமான் நாவுக்கரசரை 'தமிழ்மொழித் தலைவர்' என சிறப்பிக்கின்றார். மேலும் 'இன்தமிழ்க்கு மன்னனான வாகீசத் திருமுனி', 'உடையவரசு உலகேந்தும் உழவாரப் படையாளி', 'வாக்கின் பெருவிறல் மன்னர்' என்றெல்லாம் குறிப்பிடுகின்றார்.

தாண்டகவேந்தர்

வாகீசர் தம் கவிதைகளில் தமிழ் இலக்கண உலகம் ஏற்கும் யாப்பினைப் பயன்படுத்தி உள்ளார். இவையன்றிச் சந்தவிருத்த வகைகள், கலி விருத்தங்கள், கட்டளை கலித்துறை, தாண்டகம் என்னும் புதுவகை யாப்பினையும் பயன்படுத்தியுள்ளார். ஆறாம் திருமுறை முழுவதும் தாண்டக யாப்பில் அமைந்துள்ளது. அளவியல் தாண்டகம், அளவழித் தாண்டகம், குறுந்தாண்டகம், நெடுந்தாண்டகம் என்னும் பிரிவுகளை இலக்கணிகள் குறிப்பிடுகின்றனர். தாண்டக வேந்தர், இதனை அழகு படுத்திக் கையாண்டுள்ளார். 7-ஆம் நூற்றாண்டுக்கு முன் அடையாத செல்வாக்கை இவ்யாப்பு பெற்றது. பின்னால் வந்த திருமங்கையாழ்வாரும் இதனைப் பின்பற்றியுள்ளார்.

காதல் உணர்வு

நாவுக்கரசர் இறைவன் திருவருளில் தோய்ந்து நின்று பல அகத்துறைப் பாக்களைப் புனைந்துள்ளார். தலைவியின் காதல் நிலை கண்டு இரங்கிக் கூறும் தாய் அல்லது தோழியின் கூற்று, தலைவியின் கூற்று ஆகிய இரு துறைகளில் இவ்வகைச் செய்திகள் அமைந்துள்ளன. காதல் உணர்வைக் கடவுள் உணர்வாக மாற்றித் தருவன இவை.

தமிழ்க்கலை உணர்வு

தான் உணர்ந்த கலைகளை அருள் திறத்தால் நன்குணர்ந்து அவற்றால் சிறந்து விளங்கும் தமிழையும் சிவபெருமானாகக் கண்டு சிந்தை குளிர்ந்து கனிந்து பாடுகின்றார். அவரது பாடல்கள் அவர் கலைகள் மீதும், தமிழின் மீதும் கொண்ட காதலை விளக்குகின்றது.

"இளம்பிறையும் முதிர்சடைமேல் வைத்தான் கண்டாய்
எட்டெட்டிருங் கலையுமானான் கண்டாய்" (6-73-79)

"வானவன் காண் வானவர்க்கும் மேலானான் காண்
வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும் ஆனவன் காண்"
(6-87-1)

'மொழி வழி இனம்' என்ற புது மரபினைத் தோற்றுவித்து அப்பரடிகளே முதன்முதல் 'தமிழன்', 'ஆரியன்' என்ற சொற்களை ஆய்ந்து கூறியுள்ளார்.

"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணாமலை யுறையெம் மண்ணல் கண்டாய்" (6-23-5)

என்னும் வரிகளில், இன்று நாம் தமிழர் எனப் பெருமிதத்துடன் பேசுவதற்கு அன்றே வித்திட்ட பெருமை அப்பர் அடிகளுக்கே உரியது என்பதை மறுக்கவியலாது.

அப்பரின் தமிழ்ப் பண்கள்

இலக்கியம் பண்ணோடு அமைவது. பாடலுக்குப் பண் இன்றியமை யாதது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து பண்களைச் சங்க இலக்கியங்களில் காணமுடிகின்றது. இப்பண்களைத் தோற்கருவிகள், துளைக் கருவிகள், நரம்புக் கருவிகள் என்ற மூவகைப் பட்ட இசைக்கருவிகள் வழி வளர்த்தனர். சமணர்கள் இசைத்தமிழைப் பழித்து வந்த காலகட்டத்தில் திருநாவுக்கரசர் பண், இசை மற்றும் பாடல்களால் சைவம் பரப்ப முற்பட்டார்.

"பண்ணின் இன்மொழி கேட்கும் பரமனை" (5-18-4)

"பண்ணிற் பாடல்கள் பத்தி செய்வித்தற்கு
அண்ணித்தாகும் அமுது" (5-44-8)

கொல்லி, காந்தாரம், பியந்தைக் காந்தாரம், சாதாரி, பழந்தக்கராகம், பழம் பஞ்சுரம், சீகாமரம், குறிஞ்சி, இந்தளம், காந்தார பஞ்சமம் ஆகிய பதிகங்கள் மற்றும் திருநேரிசை, திருவிருத்தம் முதலிய பதிகங்களையும் பாடி உள்ளார்.

உவமை அழகு

கவிதையில் உவமை கருத்து விளக்கமும், அழகும் தருகின்றது. அப்பர் பாடல்களில் பெரும்பாலான உவமைகள் வினை உவமைகளாக உள்ளன.

'காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால்
கரைநின்றவர் கண்டுகொள் என்று சொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை ஒன்றறியேன்' (4-1-5)

என்னும் வரிகளில் பிறிதுமொழிதல் உவமை பயின்று வந்துள்ளது. தாம் சைவத்திலிருந்து சமணம் புகுந்து இடர்ப்பட்டதை இதில் விளக்குகின்றார்.

காணும் பொருள் யாவையும் சிவமாகக் காண்பவர் அப்பரடிகள். திருவையாற்றுப் பதிகத்தில், காந்தாரப் பண்ணில் அவர் பாடிய வரிகளில் இயற்கையாகவே விலங்கினங்களைக் காணுகின்றார். அதனில் சிவத்தையும் சக்தியையும் கண்டு களிக்கின்றார்.

'கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்'

என இசைக்கின்றார்.

பழமொழிகள்

பழமொழிகள் பொருள் தெளிவுடையன. சொல்ல வந்த கருத்தைத் தெளிவுபட உரைப்பன. பாமர மக்களும் எளிதில் உணரக் கூடியன; அவர்,

"கனியிருப்பக் காய் கவர்ந்த கள்வனேனே"

"முயல்விட்டுக் காக்கைப் பின் போனவாறே"

"அறமிருக்க மறம் விலைக்குக் கொண்டவாறே"

"இருட்டறையில் மலடு கறந்து எய்த்தவாறே"

"கரும்பு இருக்க இரும்பு கடித்து எய்த்தவாறே"

என்ற பழமொழிகளில் திருவாரூர் இறைவனை வணங்காது சமண சமயம் சார்ந்து இடருற்றமையை, சமணத்தில் மயங்கி இருந்தமையைக் குறித்துக் கழிவிரக்கம் கொண்டு பாடியுள்ளார்.

இறைவன் அருளைப் பெற 'அவனருளாலே அவன்தாள் வணங்க வேண்டும்' எனக் குறிப்பிடுவர். தாண்டகவேந்தர், கோடி தீர்த்தங்கள்

கலந்து குளித்து அவை ஆடினாலும் அரனுக்கு அன்பில்லையேல் பயனில்லை என்கிறார். ஓடும் நீரினை ஓட்டைக் குடத்தில் கொட்டி மூடி வைத்தது போலும் அச்செயல் என்பதை,

"கங்கை ஆடிலென், காவிரி ஆடிலென்
கொங்கு தண் குமரித்துறை ஆடிலென்
ஓங்கு மாகடல் ஓதநீர் ஆடிலென்
எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே"

எனும் வரிகளால் விளக்கப்படுகின்றன.

உவமனில்லி

இறைவனை உவமைத் திறத்தால் அழகுபட பாடிய நாவுக்கரசர், இறைவன் உவமைகள் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு விளங்குபவன் என்பதைத் தானும் உணர்ந்து மற்றவர்க்கும் உணர்த்துகின்றார்.

"மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னினல்லான்
ஒப்புடையனல்லன் ஒருவனல்லன்
ஓரூரனல்லன் ஒருவமனில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணாகக் காணினல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" (6-97-10)

வள்ளுவர் கூறும் தனக்குவமையில்லாதான் என்று கூறும் கருத்தை அனுபவத்தில் உணர்ந்து உரைக்கின்றார்.

கற்பனை

மனம் அல்லது ஆன்மாவின் சக்தியே கற்பனை; அது புலன் உணர்வு, நினைவு, உணர்ச்சி, பகுத்தறிவு என்ற அனைத்திலும் வேறுபட்டது. கற்பனை இவற்றுள் வேறாயினும் இவற்றின் துணை கொண்டே வளருகிறது. கற்பனை இலக்கிய அழகுகளில் சிறந்தது. கற்பனை, ஆக்கக் கற்பனை, நினைவுக் கற்பனை என இருவகைப்படும். ஆக்கக் கற்பனையே விரிந்ததும் ஆழமானதுமாகும்.

"கிடந்த பாம்பருகு கண்டரிவை பேதுறக்
கிடந்தபாம் பவளையோர் மயிலென் றையுறக்
கிடந்த நீர்ச் சடைமிசைப் பிறையும் ஏங்கவே
கிடந்துதான் நகுதலைக் கெடிலவாணரே" (4-10-8)

சிவனின் தலையில் பாம்பும் பிறையும் உள்ளன. சிவன் கரத்தில் நகுதலையும் உள்ளது. அம்மையொருபாகத்தில் உள்ளாள். இக்காட்சியைக்

கண்ட அடிகளின் கற்பனை இது: அம்மை பாம்பைக் கண்டு அஞ்சுகின்றாள். அம்மையை நீலமயிலோ என்று அப்பாம்பு ஐயுற்று அஞ்சுகிறதாம். பிறை அம்மையின் நுதலைக் கண்டு இவ்வழகு தனக்கு இல்லையே என எண்ணி ஏங்குகிறதாம். சிவன் கையிலுள்ள கபாலம் இதனைக் கண்டு நகுகிறதாம். அச்சம், ஐயம், ஏக்கம், நகை ஆகிய பண்புகளை இணைத்து அற்புதமான அழகை உருவாக்கியுள்ளார். இது அறிவுக் கண்ணுக்கு (இறைவி அஞ்சுவது) பொருந்தாது. எனினும் கற்பனை, கலை, உணர்வுக் கண்ணுக்கு ஒத்த காட்சியாகவே உள்ளது.

அகப்பொருள்

அகப்பொருள் கற்பனையையும் தம் பாடலில் அமைத்துள்ளார். முதலில் தலைவனின் பெயரைப் பிறர் கூறக் கேட்டாள். பின்னர் அவனிருக்கும் வண்ணம் கேட்டாள். அதன் பின்னர் அவன் ஊர் வளம் கேட்டாள். காதல் ஊன்றி பித்தானாள், உலகியல் ஒழுக்க நெறிகளை மறந்தாள். தன்னை மறந்து தன் நாமமும் கெட்டுத் தலைவன் தாள் தலைப்பட்டாள் என்கிறார். உயிர் இறைவனைத் தோய்ந்து இன்புறும் பேரின்ப நெறியை இங்கு இலக்கிய அழகுபட உரைப்பது இனிமை யானது. இம்மெய்ப்பாட்டைத் தொல்காப்பியம் 'உறுபெயர் கேட்டல்' என உரைக்கும்.

"முன்னை யவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
....
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே" (6-25-7)

என நாவுக்கரசரின் அகத்துறைப் பாடல்கள் யாவும் இலக்கிய அழகுடனும் கற்பனைக் கருவூலமாகவும் விளங்குகின்றன.

சொல்லாட்சி

கவிதைக்குச் சிறப்பு சொல்லழகு. நாவுக்கரசரின் பாடல்களில் சொற்செட்டு மிக அருமையாய் அமைந்துள்ளது. "சொற்குறுதிக் கப்பரெனச் சொல்லு" என்ற வெண்பாவடிகள் அவரது சொல்லாட்சித் திறத்தைக் கூறும். சொற்களை இடமறிந்து தரமறிந்து எடுத்தாளுவதில் அப்பர் பெருமான் வல்லவர். நாவுக்கரசரின் பாடல்களில் இனிய, எளிய தமிழ்ச் சொற்களே அமைகின்றன. முன்னூல் கருத்துக்களை எடுத்தாண்டுள்ளார். ஏற்ற சொல்லை, ஏற்ற இடத்தில் பயன்படுத்தி இனியதொரு பொருளைப் பெற வைப்பதை, மேலைநாட்டார் சொல்லாட்சிச் சிறப்பு எனப் போற்றுவர். (Poetic diction)

"நம்புவார்க் கன்பர் போலும் நாகஈச் சுரவனாரே" (4-66-4)

நம்பு, மேவு என்னும் சொற்கள் நசை என்ற பொருளைக் குறிப்பன. இவை பழந்தமிழ் உரிச்சொற்களாகும். மேற்கண்ட அடியில் வரும் நம்புவார் என்னும் சொல் நச்சுவார் எனும் பொருளிலேயே எடுத்தாளப் பட்டுள்ளது. உறைப்பு எனும் சொல்லை உறுதி எனும் பொருளில் வழங்குகின்றார். தாம் கையாளும் சொற்களைத் தமிழ்ப்பழமையும் உறுதியும் அழகும் உடையவனாக அமைத்துக் கொண்டார். பெரும்பாலும் வடசொற் கலப்பினைத் தவிர்த்துள்ளார்.

தொல்காப்பியர் கூறும் எண்வகை வனப்புகளையும் தம் பாடலில் நாவுக்கரசர் கையாண்டுள்ளார். திருக்குறுந்தொகை நூல் அம்மை எனும் வனப்பில் அடங்கும். மற்ற வனப்புகள் அவரது பல பாடல்கள் வழி புலனாகின்றன.

திருநாவுக்கரசரின் பாடல்கள் உவமை, உருவகம், கற்பனை, சொல்லாட்சி, வனப்பு என பல இலக்கிய இயல்புகளை உடையனவாக உள்ளன. தமிழ்ச்சுவையும் தரமான உணர்வும், அழகும் அருளும் நிரம்பியனவாக அமைந்துள்ளன.

76. திருநாவுக்கரசரின் அனுபவங்கள்

இரா. பரிமளம், கோவை.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் "திருநாவுக்கரசு நாயனார்" குறிப்பிடத்தக்கவர். மண்ணையும், பொன்னையும் ஒருங்கே கண்டு, அகமனத்தையடக்கிய அருட்பேராளர் இவர்.

'அனுபவம்' மனிதனுக்கு வாழ்க்கையை உணர வைக்கின்றது. 'பக்தி அனுபவம்' மானுடத்தின் எல்லையைக் காட்டுகின்றது. காணும் பொருட்கள் யாவற்றிலும் இறையன்பையே முதன்மையாகக் கண்ட நாவுக்கரசரின் அருட்தொண்டுகள் சைவ சமயத்தின் பக்தி வழியில் ஏற்பட்ட புரட்சி எனலாம்.

திருநாவுக்கரசர்

"திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்" (7:39:4)

என்று நம்பியாரூரர் திருத்தொண்டத் தொகையில் பாடிய பெரும்பேற்றுக் குரியவர் நாவுக்கரசர். திருமுனைப்பாடி திருவாமூரில், குறுக்கையர் குடியில் புகழனாருக்கும், மாதினியாருக்கும் திருமகனாகத் தோன்றினார். இவருடைய இயற்பெயர் மருணீக்கியார். திலகவதியார் என்பவரைத் தமக்கையாகக் கொண்ட சிறப்பிற்குரியவர்.

இளமைக் காலந்தொட்டு அன்புடன் வளர்த்து, நன்னெறிப்படுத்தியவர் திலகவதியாரே என்று சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார்.

திருநாவுக்கரசர் வாழ்வில் நிகழ்ந்த பல்வேறு அனுபவங்களை ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

1. திலகவதியாருடன் நாவுக்கரசரின் அனுபவங்கள்
2. சமணர்களுடன் நாவுக்கரசரின் அனுபவங்கள்
3. சிவனடியார்களுடன் நாவுக்கரசரின் அனுபவங்கள்
4. திருத்தலங்களில் நாவுக்கரசரின் அனுபவங்கள்
5. இறையருள் பெற்ற நாவுக்கரசரின் அனுபவங்கள்

இவ்வகையில் அனுபவங்களை ஆராய்வது திருநாவுக்கரசரின் வாழ்வியல் கூறுகளையும், வாழ்க்கை முறையினையும் தெளிவுபடுத்துவதாக அமையும்.

1. திலகவதியாருடன் நாவுக்கரசரின் அனுபவங்கள்

நாவுக்கரசரின் தாயாகவே இருந்தவர் திலகவதியார். பொன்னும், மணியும் பூணாது அருளை மட்டுமே அணிகலனாகக் கொண்டு நாவுக்கரசரை

வளர்த்தார். தமக்கையாரை, அம்மையாக நினைத்து, சைவம் போற்றியவர், பின் சமண சமயத்தால் ஈர்க்கப்பட்டுத் தருமசேனர் ஆனார். திலகவதியாரின் போற்றுதற்குரிய பணி, இவரை மீண்டும் சைவ சமயத்திற்குக் கொண்டு வந்தமையாகும்.

"யாண்டருளும் நீராகி யடியேன்பின் வந்தவனை
யீண்டு வினைப் பரசமயக் குழிநின்று மெடுத்தாள வேண்டும்"

(பெரிய. 1311)

என்று தம்பிக்காக இறைவனிடம் விண்ணப்பம் செய்தார். திலகவதியாரின் விண்ணப்பத்திற்கேற்ப இறைவன் நாவுக்கரசரைச் சைவராக்கும் பொருட்டுச் 'சூலைநோயைக்' கொடுத்து ஆட்கொண்டருளினார். இக்கருத்தை,

"கண்டருநெற் றியரருளக், கடுங்கனல்போ லடுங்கொடிய
மண்டுபெருஞ் சூலையவர் வயிற்றினிடைப் புக்கதால்"

(பெரிய. 1314)

என்ற வரிகள் தெளிவுபடுத்துகின்றன.

திலகவதியாரைப் பணிதல்

சூலை நோயின் கொடுமையைத் தாங்க மாட்டாதவரான நாவுக்கரசர், 'இம்மை மறுமை வாழ்வுக்குச் சிறிதும் ஒவ்வாத இச்சமண சமயத்தால் தவிராத சூலைநோயின் துயர்கெடச் செம்மை நெறியிலொழுகும் திலகவதியாருடைய திருவடிகளை வணங்கி உய்வேன்" எனக் கருதித் திலகவதியார் தாள் சேர்ந்தார். இதனை,

"ஒவ்வாவிப் புன்சமயத் தொழியாவித் துயரொழியச்
செவ்வாறு சேர்திலக வதியார்தாள் சேர்வனென"

(பெரிய. 1327)

எனும் பாடலடிகளால் அறியலாம்.

2. சமணர்களுடன் நாவுக்கரசரின் அனுபவங்கள்

சமணமும், சைவமும் போட்டியிட்ட காலங்களில் சமயத் தலைவர்களிடையே பூசல்கள் அதிகமாகக் காணப்பட்டன.

நாவுக்கரசர் சமண சமயம் சார்ந்த பொழுது அச்சமயத்தின் அருங்கலை நூற்களைக் கற்றுச் சிறந்தார். மகிழ்வுற்ற சமணர்கள், தங்களில் மேம்பட்ட நாவுக்கரசருக்குத் 'தருமசேனர்' என்னும் பெயர் கொடுத்தனர். சமண சமயத்தின் அரிய நூல்களை நாவுக்கரசர் கற்றுத் தேர்ந்தார்.

சமய மாற்றம்

சமண சமயத்தவர் இட்ட 'தருமசேனர்' என்ற பெயர் சமணர்களிடையே வழங்கிய பெருநிலை குறிக்கும் பெயர்களுள் ஒன்றாகும். ஒரு சமயத்திலிருந்து மற்றொரு சமயம் புகும்போது, பெயரை மாற்றி

வைத்துக் கொள்வது மரபு. சைவ சமயத்தில் இம்மரபு நெடுநாள் தொட்டே 'தீட்சாநாமம்' என்ற பெயரில் வழங்கப்பட்டு வருகின்றது.

நாவுக்கரசர் உற்ற இடர்கள்

நாவுக்கரசரின் அருட்திறம் கண்டு சமணர்கள் பொறாமை கொண்டு பல இன்னல்கள் புரிந்தனர்.

1. நீற்றறையில் இடுதல்
2. பாலமுதத்தில் நஞ்சு கலத்தல்
3. யானையை ஏவுதல்
4. கல்லுடன் கட்டிக் கடலில் வீசுதல்

இவை போன்ற அனுபவங்கள் நாவுக்கரசரின் மனத்தில் சைவ சமய ஈர்ப்பை வலுப்படுத்தின.

அதனால்தான்

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்" (6:98)

என்று தெளிவும் உறுதியும் கொண்டார்.

3. சிவனடியார்களுடன் நாவுக்கரசரின் அனுபவங்கள்

நாவுக்கரசர் வாழ்ந்த காலத்தில் திருஞானசம்பந்தர், சிறுத்தொண்டர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், முருக நாயனார், குங்கிலியக்கலயர், அப்பூதியடிகள் போன்ற பத்து சிவனடியார்கள் வாழ்ந்தனர்.

அடக்கமும், அகந்தையுமற்ற தன்மையையும் கொண்டிருந்த நாவுக்கரசர் திருஞானசம்பந்தர் போற்றித் தொழும் நிலையிலும், அப்பூதி அடிகள் தெய்வமாக வழிபடும் பெரும் அருட்திறத்தையும் பெற்றவர்.

அப்பூதியடிகளும் நாவுக்கரசரும்

அப்பூதியடிகளால் குலதெய்வமாக வணங்கக் கூடிய அருட்திறம் பெற்றவர் இவர். திங்களூரில் அப்பூதியடிகளின் புத்திரனான மூத்த திருநாவுக்கரசின் விடத்தை நீக்கி அருளியவர். விடத்தைப் போக்க,

"ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்" (4:18)

என்ற பதிகத்தைப் பாடினார்.

4. திருத்தலங்களில் நாவுக்கரசரின் அனுபவங்கள்

நாவுக்கரசர் சென்று வழிபட்ட தலங்கள் பலவாகும். அத்திருத்தலங் களில் சில 1. திருவதிகை, 2. திருப்பாதிரிப்புலியூர், 3. திருமாணிகுழி, 4. திருத்தினை நகர், 5. திருச்சேறை, 6. திங்களூர், 7. திருவிளமர், 8.

திருப்புகலூர், 9. திருவீழிமிழலை, 10. திருச்சிராப்பள்ளி.... இத்திருத்தலங்கள் தோறும் சென்று திருப்பாடல்கள் பாடி, சமூகப் பணிக்கும், பக்தி வழிபாட்டிற்கும் அடிகோலியவர் நாவுக்கரசர் என்பது தெளிவு. இவர் பாடிய தேவாரப் பதிகம் பன்னிரு திருமுறைகளுள் 4,5,6-ஆம் திருமுறை களாக இடம்பெற்றுள்ளன.

திருஞானசம்பந்தரோடு சேர்ந்து, ஊர் ஊராகச் சென்று தமிழோடு இசைபாடி மக்களைத் திரட்டி, வழிபாட்டில் புரட்சியை ஏற்படுத்தினார்.

"தங்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே"

எனும் வரிகள் நாவுக்கரசரின் அனுபவ முதிர்ச்சியையும் தொண்டுள்ளத்தையும் காட்டுகின்றன.

5. இறையருள் பெற்ற நாவுக்கரசரின் அனுபவங்கள்

சூலைநோயிலிருந்து இறையருளால் மீண்டு சைவ சமயத்திற்குப் புத்தொளியாய்த் தோன்றியவர் நாவுக்கரசர். இறையருளால் பல அற்புதங்கள் அப்பர் வாழ்வில் நிகழ்ந்தன.

இறையருளால் நிகழ்ந்தவை

1. தூங்கானை மாடத்துப் பெருமான் அருளால் தம் தோளில் சூலமும், விடையும் பொறிக்கப் பெற்றமை.
2. நல்லூர்ப் பெருமான் அருளால் சென்னிமிசைப் பாதமலர் சூட்டப் பெற்றமை.
3. பைஞ்ஞீலியில் இறையருளால் பொதிசோறு பெறுதல்.
4. திருவையாற்றில் திருக்கயிலைக் காட்சி காணுதல்.

இறையருளால் நிகழ்த்தியவை

1. அப்பூதியடிகளின் மகன் பெரிய திருநாவுக்கரசின் விடம் தீர்த்தது.
2. திருவீழிமிழலையில் காசு பெற்றது.
3. திருமறைக்காட்டில் திருக்கதவு திறக்கப் பாடியது.

சைவ சமயக் குரவர் நால்வருள் இறைவனிடம் தாச மார்க்கத்தை மேற்கொண்டவர் நாவுக்கரசர்.

கையில் உழவாரப் படையேந்தி வாழ்வின் போக்கைப் பக்தி வழிக்குப் திருப்பி, அனுபவத்தின் மூலம் இலக்கிய நிலையில் இன்பம் கண்டவர்.

"அலகில் கலைத்துறை தழைப்ப
அருந்தவத்தோர் நெறிவாழ வந்துஅவதரித்தவர்" (பெரிய. 18)

என்ற வரிகளில் நாவுக்கரசரின் சிறப்பை அறியலாம்.

77. நாவுக்கரசர் காட்டும் நம்பிக்கைகள்

சு. பழனிகுமார், திருச்செங்கோடு.

தமிழ் இலக்கிய வரலாறும் சைவ வரலாறும் ஒன்றையொன்று தழுவி அமைபவை. சைவ இலக்கியங்கள் காலங்கடந்து நிற்பவை. சமயக் குரவர்களால் இயற்றப் பெற்றவை. கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை சைவ சமயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணை செய்தவை.

சைவ சமயம்

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகப் போற்றிப் பரந்த சமயம். சிவ சம்பந்தமுடையது சைவம். சிவனை எண்ணி எண்ணி உள்ளத்து உணர்வால் போற்றி வழிபடும் புண்ணிய நெறியாகும். சிவம் என்ற சொல்லுக்குப் பல பொருள் உண்டு. முக்தி என்ற பொருளும் உண்டு செம்மை என்ற பொருளும் உண்டு. சிவமே 'சைவம்' எனப்படும்.

சிவநெறி

சிவநெறியே சைவநெறியாகும். இந்நெறியின் முதல்வன் சிவன். சிவனும் சக்தியும் கலந்து அன்று முதல் ஆற்றும் அலகிலா விளையாடல் களைப் பாடுவனவே சைவ சமய நூல்கள். சிவபெருமான் உருவமாகவும், அருவமாகவும், அருவு உருவமாகவும் அடியார்களுக்கு அருள்பாலித்து உய்வகை செய்த பெருமைகளையெல்லாம் சிவனடியார்கள் பாமாலை யாகத் தொகுத்துப் போற்றிய பதிகங்கள் தேவாரத் திருமுறையாகும். பக்திச் சிறப்பையும் நிலையையும் விளக்குபவை.

சைவ சமயக் கொள்கை

இறைவனது திருக்காட்சியைக் கண்டு உணர்வதற்கான வழிமுறைகள் சைவ சமயத்தின் கொள்கையாகக் கருதப்படுகின்றது. சரியை, கிரியை, யோகம் என்னும் முவ்விகச் செயல்களினால் ஞான மார்க்கத்தைத் தழுவி, பதி, பசு, பாசம் என்னும் மும்மலங்களை நீக்கி, இறைவனுடன் ஆண்டான் அடிமை என்னும் தாசமார்க்கம் கொண்டும், தந்தை குழந்தை என்னும் சத்புத்ர மார்க்கம் கொண்டும், ஞான மார்க்கத்தில் நின்றும், சன்மார்க்க நெறி கொண்டும் போற்றிப் பரவிய பாடல்கள் சைவத்தின் கொள்கைகளாகக் கொள்ளப்படுகின்றன.

நாவுக்கரசர்

சைவ சமயக் குரவர் நால்வருள் அப்பர் என்றழைக்கப்பட்ட பெருமையுடைய தாண்டகவேந்தர் இறைவனுடன் தாசமார்க்கம் கொண்டு உழவாரப்படை நடத்தித் தேவாரத் திருப்பதிகங்கள் பாடி இறைவனைப் போற்றி ஒழுகினார். தம் இளவயதில் தமக்கையரால் வளர்க்கப்பெற்ற மருள்நீக்கியார், தந்தை தாயாரை இழந்து துன்புற்ற வேளையிலும், பின்னர், சமண சமயம் தழுவிச் சைவத்திற்கு மாறியபொழுதும், நம்பிக்கையினை இழக்காத நிலை பாடல்கள் வழி அறியப்படுகின்றது.

நம்பிக்கை

தன்னை நம்பும் செயல் நம்பிக்கை என்று அழைக்கப்படுகின்றது. ஒரு செயலை செய்யும் முன் மனிதன் தான் கொண்டிருக்கும் மனவுணர்வுகள் நம்பிக்கை என்றழைக்கப்படுகின்றது. மனிதனின் மனவுணர்வுகள் இறைவனுடன் இரண்டறக் கலந்த நிலையில் தோன்றும் பக்திநெறி நம்பிக்கை நெறியாகும். அத்தகைய நெறியின்வழி, அடியார்களுக்குத் துன்பம் ஏற்பட்ட வழி, நம்பிக்கை ஊட்டும் வண்ணம் அமைந்த பாடல் களின் வழியாக, நாவுக்கரசரின் நம்பிக்கை புலனாகின்றது.

நோய் நீங்கியது

திருவாமூரை விட்டு நீங்கிய நாவுக்கரசர் சமண சமயத்தைத் தழுவினார். திலகவதியார் தமது தம்பி புறச்சமயத்தைத் தழுவியதால் சூலை நோய்க்கு ஆட்பட்டுத் துன்புறுவதைக் கண்டு மனம் வருந்தினார். சமணர்கள் தங்களுக்குத் தெரிந்த மருந்துகளை எல்லாம் கொடுத்தனர். நோய் தீர்ந்தபாடில்லை. திலகவதியார் 'தம்பி எழுந்திரு' என்று கூறி ஐந்தெழுத்து மந்திரமான "நமசிவாய" என்றோதி திருநீற்றை அளித்தார். சூலை நோய் நீங்கியது.

"கூற்றாயின வாறு விலக்ககலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்"

என்ற பதிகம் பாடியமையால் "நாவுக்கரசு" என்னும் பெயர் பெற்று இறைவனுக்குத் தொண்டு புரியும் கருத்தினராய் உழவாரப் படைதாங்கி உலவி வரலானார். நாவுக்கரசரின் சூலைநோய் நீங்கப்பெற்றதின் வழி திருநீற்றின் மீது கொள்ளும் நம்பிக்கை மேம்படுகின்றது.

திருவடி நம்பிக்கை

தருமசேனரான நாவுக்கரசர் சமணப் பள்ளிவிட்டு நீங்கிச் சைவ சமயம் சார்ந்ததை அறிந்த சமணர்கள் மகேந்திரவர்ம பல்லவனிடம் முறையிட்டனர். நாவுக்கரசரை அழைத்து வருமாறு கட்டளையிட்டான். திருவதிகை சென்று நாவுக்கரசரை அழைத்தபோது சிவபெருமானின்

திருவடியை நினைத்து அப்பொற்பாதங்களின் மீது கொண்ட நம்பிக்கையினை வெளிப்படுத்துகின்றது.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்...
.....கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொள்மலர்ச்சே வடியினையே குறுகி னோமே"

திருவருள் நம்பிக்கை

மகேந்திரவர்மன் சமணர்களின் தூண்டுதலினால் சுண்ணாம்பு நீற்றறையில் அடைத்துத் தாளிடச் சொன்னான். நாவுக்கரசர் இறைவனைத் தியானித்து யாதொரு துன்பமும் இன்றி இறைவன் மீது திருக்குறுந்தொகை பாடி திருவடி மீது கொண்ட நம்பிக்கையை,

"ஈசன் எந்தை இணையடி நீழலே"

என வெளிப்படுத்தினார்.

நாவுக்கரசர்க்கு நஞ்சு கலந்த பாற்சோற்றை அளித்தனர் சமணர்கள். நஞ்சுண்ட நாயகன் தனை நினைந்து "அடியார்க்கு நஞ்சும் அமுதமாகும்" என்று கூறி நஞ்சமுதையும் உண்டார். நஞ்சுண்டகண்டன் மீது கொண்ட நம்பிக்கையின்பால் உயிரைத் துச்சமென மதித்த தன்மை வெளிப் படுத்துகின்றது.

மகேந்திரவர்மன் நாவுக்கரசரை மதக்களிற்றின் காலினால் இடறச் செய்து கொல்வதற்கு ஆணையிட்டான். மதநீர்ப் பெருகியொழுக ஓடி வந்தது களிறு. வாகீசர் இறைவன் திருவருளை,

"சுண்ணவென் சந்தனச் சாந்தும் சுடர்திங்கட் சூளாமணியும்
வண்ண வுரிமை யிடையும் வளரும் பவளநிறமும்"

என நினைத்தார்.

"அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்ச வருவது மில்லை"

என்று ஓதியருளினார். சீறிவந்த மதயானை சினம் தணிந்து வலம்வந்து வணங்கிச் சென்றது.

நாவுக்கரசரைக் கல்லுடன் பிணித்துக் கடலில் எறிக என்று ஆணையிட்டான். அவ்வாறே செய்தனர். அப்பர்,

"கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயமே"

எனப் பதிகம் பாடினார். கருநெடுங் கடலினுள் கல் மிதந்தது. கருங்கல்லே சிவிகையாயிற்று. திருப்பாதிரிப் புலியூரின் அருகே கரை சேர்ந்தது.

மன்னன் அறிந்தான். மனம் மாறினான். சிறந்த சிவநெறியைச் சார்ந்தொழுகினான்.

முடிவுகள்

எத்தகைய துன்பம் நேரிடினும், அப்பர், சிவபெருமானின் மீது கொண்டிருந்த நம்பிக்கை புலப்படுகின்றது. நமசிவாய மந்திரத்தின் மீது கொண்ட நம்பிக்கையும் புலனாகின்றது. தூய அன்பின் வழி இறையருள் பெறமுடியும் என்பது நாவுக்கரசரின் நம்பிக்கையாகும். நம்பிக்கையின் காரணமாக, அப்பர்,

"அல்லல் என்செயும் அருவினை யென்செயும்
தொல்லை வல்வினை தொந்தம்தாந் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம்பல வனார்க்
கெல்லை யில்லா தோர் அடிமை பூண்டேனுக்கே".

என்று பாடுகின்றார்.

78. நாவுக்கரசர் ஊட்டும் நம்பிக்கை

சு. பார்வதி, கீழப்பாவூர்.

தனிமனித வாழ்க்கைக்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும், உலகத்தின் வளர்ச்சிக்கும் அடிப்படையாக இருப்பது நம்பிக்கை. மனித வாழ்வின் செம்மையைப் பொறுத்தே சமுதாய வாழ்வு செம்மையுறும். அப்பர் சமுதாயத்தோடு ஒருங்கிணைந்து வாழ்ந்தவர். எனவே அவர் பாடல் களில் நம்பிக்கைத் தூண்கள் நிறுத்தப்பட்டிருப்பதைக் காணலாம். சமய நெறியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு, முழுவதும் இறைவழி பாட்டிலேயே வாழ்நாளைக் கழிக்கும் அருளாளர்களுக்கும், சமுதாயத் தொண்டர்களுக்கும் இவரது பாடல்கள் நம்பிக்கை ஊட்டுவனவாக அமைகின்றன என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

உழைப்பு ஊட்டும் உண்மை

உழைப்பு என்பது தொண்டின் இன்றியமையாக் கருவியாகும். இக்கருவியில் அப்பர் மேற்கொண்டொழுகிய உடல் தொண்டு குறிப்பிடத் தக்கது. அயரா உழைப்பின் உருவாய், சின்னமாய்த் திகழ்பவர் நாவுக்கரசர். அப்பர் வயது முதிர்ந்த நிலையிலும் கூட, கைத்திருத்தொண்டு செய்து இறைவன் திருவடி அடைந்தமை மிகவும் குறிப்பிடத்தக்கது. தன்முனைப்பு இன்றி செயல்பட்டது பெரிதும் வியக்கத்தக்கது. உழைப்பே உயர்வைத் தரும் என்ற வாழ்வியல் உண்மையை நாவுக்கரசர் பாடல்கள் அப்படியே பிரதிபலித்துக் காட்டுகின்றன. உழைப்புதான் ஒரு மனிதனை மாமனிதனாக மாற்றும் என்பதனை உணர முடிகிறது.

தொண்டு நெறி ஊட்டும் தூய்மை

அப்பர் தொண்டு ஒன்றையே தம் வாழ்வுத் துணையாகக் கொண்டு வாழ்ந்துள்ளார். அப்பரது தொண்டும், அத்தொண்டே அவரது வாழ்க்கை நெறியாதலும், அத்தொண்டு நெறிக்கு இறைப்பற்றே ஊன்றுகோலாக அமைதலும் அவரது பாடல்களில் பல இடங்களில் வெளிப்படுகின்றன.

> **"தன் கடன் அடியேனையும் தாங்குதல்**
> **என் கடன் பணி செய்து கிடப்பதே"**

என்று அமையும் இவ்வரிகள் இவரின் தொண்டு உள்ளத்தின் தூய்மை யினை வெளிப்படுத்துகின்றன.

''திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டினெறி வாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர்''

என்று பெரியபுராணத்தில் சேக்கிழார் அப்பரின் தொண்டுள்ளத்தைப் பெருமையுடன் கூறுகிறார்.

மனிதப் பிறவியின் மகத்துவம்

நன்னெறியில் ஒழுகி, இறைவழியில் நிற்பதே மனித வாழ்வைச் செம்மைப்படுத்துவதற்கும், மனிதப் பிறவி ஈடேற்றம் பெறுவதற்கும் உரிய செயல் என்பது அப்பரின் நம்பிக்கை.

''வாய்த்தது நந்தமக்கீதோர் பிறவி மதித்திடுமின்''

என்று கூறி, பிறவி எடுத்ததன் பயன் இறைவனுக்கு ஆட்பட்டிருப்பதே என்று தெளிவுறுத்துகிறார். வாழ்க்கையாகிய பிறவிப் பெருங்கடலைக் கடக்க நமக்கு மிகவும் சிறப்பாக உதவுவது நல்ல மனமும், நல்ல தெளிவான அறிவும் ஆகும். மனம் தோணியாகவும், மதி அதைச் செலுத்தும் கோலாகவும் அமைய வேண்டும். தீய பண்புகள் அத்தோணியில் சரக்குகளாகும்போது ஆணவம் என்ற பாறையில் தாக்கி, தோணி மரிக்கின்றது அல்லது கவிழ்கின்றது. அப்போதும் இறைவனை நினைக்கும் புத்தியைத் தருக என வேண்டுகிறார். இப்படி நினைப்பதுவே மனிதத்தின் மகத்துவமாகக் கருதுகிறார்.

பணிவும், குழைவும்

பணிவும் குழைவுமே மனிதனின் வாழ்க்கையை நிர்ணயிக்கும் அட்சய பாத்திரங்கள். தத்துவஞானியாக விளங்கிய அவர், தம் ஞானத்தைப் பற்றிப் பெருமை கொள்ளாமல், கோயில் தொண்டு செய்து வந்த தமக்கையாரின் நெறியையே உயர்ந்ததாகப் போற்றினார். சம்பந்தரைச் சந்தித்தபோது, தாமே முன்வந்து வணங்கியது அவரது பணிவைக் காட்டுகிறது. அதோடு வாழ்வில் ஒவ்வொரு மனிதனும் பணிவைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதைப் புலப்படுத்துகிறார்.

சிவகதியின் சிறப்பு

உண்மையென்னும் உழவைச் செய்து விருப்பம் என்னும் விதையை விதைத்துப் பொய் என்னும் களையை நீக்கிப் பொறுமை என்னும் நீரைப் பாய்ச்சித் தம்மைத் தாமே நோக்கி உணர்ந்து, தக்க சன்மார்க்கம் எனும் வேலி அமைத்துச் சிறந்த நெறியில் நிற்பார்கள். அதனால் 'சிவகதி' என்னும் விளைவு ஏற்படும். அதற்கு உண்மை வேண்டும். விருப்பம் வேண்டும். பொய்யை அகற்றுதல் வேண்டும். பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். தம்மைத்தாமே உணர வேண்டும். சன்மார்க்க வேலியினை அமைத்தல் வேண்டும். அப்படியென்றால் சிவகதியை எளிதில் அடைவர் என்ற நம்பிக்கையைப் பிறப்பித்துக் காட்டுகிறார்.

சமய வாழ்வின் சரித்திரம்

சமயத்தின் அடிப்படையில்தான் சரித்திரம் உருவாகிறது. நம்பிக்கையின் அடிப்படையில் வழிபாடு செய்வது, கடவுள் உணர்வு பெற்று வாழ்வதும், கடமை உணர்ந்து செயலாற்றுவதும் சமய வாழ்வாகும். அவருடைய வாழ்விலிருந்தும், அவர் அருளிச் செய்த பாடல்களிலிருந்தும் வெளிப் பட்டுள்ள சைவ சமய வாழ்வுக் கூறுகள் நம்பிக்கையின் அடிப்படையில் மலர்ந்தன. தயா மூலதன்மம், மனத்திட்பம், புலனடக்கம், நடையறாப் பெருந்துறவு, நிலையாமை, அறிவுறுத்தல் என்ற பகுதிகள் மக்களுக்கு நம்பிக்கையை ஊட்டுவன. இவ்வாறு அறிவுறுத்தும் தத்துவங்கள் மனித மனங்களை ஒழுங்குபடச் செய்யும்.

உறுதியற்ற எண்ணங்களும், மனத் தடுமாற்றங்களும் அன்பும் அறமும் கூடிய வாழ்க்கைக்கு உறுதுணையாக அமையாது. கொண்ட குறிக்கோளை அடைய முடியும் என்ற அசையாத நம்பிக்கையும், அதன் அடிப்படையில் எழுகின்ற மனவுறுதியுமே வாழ்க்கையின் வெற்றிக்கு அடிப்படைகளாக அமையும்.

அப்பர், தம் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் தமக்கு ஏற்பட்ட சோதனைகளிலிருந்து தம்முடைய மன உறுதியில் வெற்றி பெற்றிருக் கிறார் என்பதனை அவருடைய பாடல்கள் வழி அறிய முடிகிறது.

'வினைத்திட்பம் என்ட தொருவன் மனத்திட்பம்
மற்றைய வெல்லாம் பிற'

என்ற குறள் நெறிக்கு ஏற்ப மனவுறுதி என்ற தன்னம்பிக்கையோடு வாழ்ந்துள்ளார்.

''நாம்ஆர்க்கும் குடிஅல்லோம் நமனை அஞ்சோம்;
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்;
ஏமாப்போம் பிணிஅறியோம் பணிவோம் அல்லோம்;
இன்பமே எந்நாளும் துன்பமில்லை;
தாம்ஆர்க்கும் குடிஅல்லாத் தன்மையான
சங்கர நற்சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச் சேவடி இணையே குறுகினோமே''

என்ற பாடலைக் கடைப்பிடித்தாலே வாழ்வில் எல்லாச் சிறப்புகளையும், நம்பிக்கைகளையும் பெற முடியும். தொண்டு செய்பவருக்கு முதலில் வேண்டுவது அஞ்சாமை அதனை இப்பாடல்வழி புல்ப்படுத்துகிறார்.

இறை நம்பிக்கையின் முறை

கோவில்களில் உருவங்களை வழிபடுவது பொதுவானது. ஒவ்வொருவரும் மனதையே கோவிலாக்கி வழிபடுவது சிறப்பானது.

இந்த நிலையில் அப்பர் பெருமான் மனக்கோவில் முறையை வற்புறுத்து கிறார். இறைவன் மனிதர்களின் பக்குவத்திற்கும், உணவிற்கும், நம்பிக்கைக்கும் ஏற்ப வெளிப்பட்டருளுவான் என்பது கருத்து.

"விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்நிற்குமே"

இறை தத்துவத்தின் இன்றியமையாமையை விளக்குகிறது. விறகு, பால், நெய், மணி போன்றவற்றுள் உள்ளடக்கிக் காட்டுகிறார். இறைத் தன்மையில்தான், ஒரு மனிதன் சமயத்தின் பொருளை ஒழுங்கான முறையில் வெளிப்படுத்துகிறான். இறை நம்பிக்கையின் பொருட்டுத் தான் தத்துவங்களும், கொள்கைகளும் உருவாகின்றன.

இறை நம்பிக்கையை ஊட்டும் சக்தி மந்திரத்தில்தான் அடங்கி யிருக்கிறது. 'நமச்சிவாய' எனும் ஐந்தெழுத்தின் மந்திரத்தை ஓதினால் எத்தனை பாவம் செய்தாலும் அது அவரை விட்டு ஒழியும். அதோடு, அம்மந்திரம், உள்ளத்தில் காணப்படும் ஆணவ இருளைப் போக்கிய விளக்கு ஆகும்.

"இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச் சிவாயவே"

என்ற பாடல் நமச்சிவாய மந்திரத்தின் மகத்துவத்தை விளக்குகிறது.

திருநீறு தரும் தீர்ப்பு

நாவுக்கரசருக்கு சூலை நோய் உண்டாக, சமணர்களால் முடியாது போகவே தமக்கையைத் தேடி வருகிறார் அப்பர். திலகவதியாரும் திருவதிகைப் பெருமானை வணங்கித் திருநீறு அணிவிக்கிறார். நோய் தீருகிறது. சூலைநோய் தீர்க்கும் வல்லமை திருநீறுக்கு மட்டுமே உண்டு என்பதனை அப்பர் பாடல் புலப்படுத்துகிறது. இந்த நம்பிக்கை அப்பர் வாழ்க்கையில் மட்டுமல்ல. தமிழ் நாட்டில் ஒவ்வொரு மனிதன் மனதிலும் இத்திருநீற்று நம்பிக்கை இருக்கிறது எனலாம். நெற்றியில் திருநீறு அணிவது சிவச்சின்னமாகும்.

"ஆணவம் முதலான மும்மலங்களைப் போக்கும்
சிவதத்துவப் பேற்றின் அறிகுறி திருநீறு"

என்று ஆறுமுக நாவலர் விளக்கும் கூற்று, திருநீற்றின் மகிமையை உணர்த்துகிறது.

குறிகள் மீது நம்பிக்கை

திருநீற்றின் அடிப்படையில் எழுந்தது குறிகள். சிவபெருமான் எழுந்தருளும் திருப்பதிகள் பலவற்றிற்கும் சென்று அப்பெருமானைப் பாடிப் பரவும் வேட்கையுற்றுத் திருவெண்ணெய் நல்லூர், திருக்கோவலூர் முதலிய திருப்பதிகங்களுக்குச் சென்று, திருத்தூங்கானைமாடம் என்னும் திருக்கோயில் உள்ள பெண்ணாகடம் அடைந்தார். அங்கே இறைவனை வணங்கித் தமக்கு மூவிலைச் சூலக்குறியும் இடபக் குறியும் பொறித்துத் தமது உடம்பைத் தூய்மை செய்ய வேண்டுமென வேண்டிக்கொண்டார். இறைவன் அருளால் அவர்க்கு அவர் விழைந்தவாறே சூலக்குறியும் இடபக் குறியும் பொறிக்கப்பட்டன. இந்தக் குறி மனதை மட்டுமல்ல மனிதனையும் தூய்மையாக்கும் என்பதனைக் காட்டுகிறது.

முடிவுகள்

1. அப்பர் பாடல்கள் சமய நம்பிக்கைக்குத் தூண்டுதலாக உள்ளன. அதோடு பொதுமக்களை ஈர்க்கும் கருவிகளாக உள்ளன.
2. அஞ்சாமை, அடக்கம், பணிவு, மனவுறுதி ஆகிய மானிடப் பண்பு களை மனித இனத்தின் மேம்பாட்டிற்காகப் பெருங் கொடையாக்கி யுள்ளார் அப்பர்.
3. சமுதாய நம்பிக்கைகளைத் தம் மேலிட்டுத் கொண்டு பாடுவதன் மூலம் ஒவ்வொருவரும் உலக நோக்கிலிருந்து இறைநோக்கிற்கு வருவர் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் தம் பாடல்களைப் பாடியிருக்கிறார்.
4. தொண்டு செய்யத் தொடங்கு; மகத்தான இறைவன் அருள் வந்து உன்னைச் சாரும் என்று இறைவன் இருப்பிடத்தை எளிதாக்கிச் சமூகத்திற்கு, ''தொண்டுதான் இறைவன், இறைவன்தான் தொண்டு'' என்ற நம்பிக்கையை ஆழமாக, அகலமாக, அடிப்படையாகத் தம் பாடல்களில் பகர்கிறார்.

79. மானிடர் பற்றிய சிந்தனைகள்

பி. பார்வதி, குற்றாலம்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து சிவனின் திருவருள் பேற்றைப் பெற்ற நால்வருள் குறிப்பிடத் தகுந்தவர் திருநாவுக்கரசர். சரியை முறையில் தொண்டாற்றி இறையருள் பெற்றவர். ஞானசம்பந்தரால் அப்பரே என அழைக்கப்பட்ட நாவுக்கரசரின் தேவாரப் பாடல்களில் மானிடர் பற்றிய கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. அப்பாடல்கள் உணர்த்தும் கருத்துக்கள் இவண் ஆராயப்படுகின்றன.

தேவாரப் பதிகங்களும் பாடல்களும் மனித மனத்தை மாண்புறச் செய்யவல்லன. இறைவனே உள் நின்று உணர்த்த அவன் அருள் வழிப் பட்ட ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் எனும் மூவரின் தேவாரப் பாடல்களில் 1470 பாடல்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு ''மூவர் தேவாரத் திரட்டு'' எனும் பெயரில் தொகுக்கப்பட்டு கழகப் பதிப்பகத்தால் கையடக்க நூலாக வெளியிடப்பட்டுள்ளது. அந்நூலில் இடம் பெற்றுள்ள அப்பர் பாடல் களில் 10 பாடல்கள் மானிடர் பற்றிய கருத்துக்களைக் கொண்டுள்ளன. இப்பத்துப் பாடல்களே இவ்வாய்வின் எல்லையாகும்.

சமகாலத்தில் வாழ்ந்து இறைத் தொண்டாற்றிய நாவுக்கரசர், ஞானசம்பந்தர் பாடல்களில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவற்றுள் குறிப்பிடத் தகுந்தது ''மனிதர்'' பற்றிய அடியவர்களின் சிந்தனைகளாகும். ஞானசம்பந்தர் மனிதர்கள் இறைவனைத் தொழ வேண்டும். இறையருள் பெற வேண்டும் எனக் கூற நாவுக்கரசர் அதற்கு எதிர்மாறாக மனிதப் பிறப்பின் நிலை, பிறந்த பின் சந்திக்கும் துயரங்கள், அத்துயரங்கள் தங்களை வந்து வருத்தாமலிருக்க யாது செய்ய வேண்டும் என்பது போன்ற கருத்துக்களைத் தமது பாடல்கள் வழி எடுத்துரைத்துள்ளார். இக்கருத்துக்களை 1. மனிதர் பற்றிய சிந்தனைத் தோன்றுவதற்குரிய காரணங்கள், 2. உடலமைப்பு பற்றிய சிந்தனைகள், 3. உயிரற்ற உடலுக்குச் செய்யப்படும் சடங்குகள், 4. மனித பிறப்பில் துன்பத்திற்குரிய காரணங்கள், 5. உடம்பைக் கோயிலாக்கும் வழிகள் என ஐந்தாக வகைப்படுத்தலாம்.

மனிதர் பற்றிய சிந்தனைத் தோன்றுதற்குரிய காரணங்கள்

இறைவனைப் புகழ்ந்து பாடும் அப்பர் மனித உடலமைப்பைப் பற்றியும் அதன் செயல்பாடுகள் பற்றியும் ஞான சம்பந்தரினின்றும்

வேறுபட்டுப் பாடுதற்கு அவரது வாழ்க்கை நிலையே அடிப்படைக் காரணம் எனலாம்.

திருமுனைப்பாடி நாட்டில் வேளாண் குலத்தில் குறுக்கையர் குடியில் பிறந்த மருணீக்கியார் வீட்டின் துன்பச் சூழலால் மனம் மாறி சைவ சமயத்தினின்றும் மாறி பரசமயராகிய சமணம் சார்ந்தார். சமண சமயத்தின் தர்க்க நூல்களையெல்லாம் ஆராய்ந்து கற்று தர்மசேனராகி தர்க்கவாதியானார். சமயப் போட்டிகளில் கலந்து கொண்டு சமண சமயத்தின் பெருமையை மக்களுக்கு உணர்த்தி வந்தார். சமண மதத் தலைவர்களுள் புகழ்மிக்கவராக விளங்கிய தருமசேனரை மீண்டும் சைவ சமயத்திற்கு மாற்ற வேண்டும் என்று எண்ணினார் அவரது தமக்கை திலகவதியார். சிவனிடம் திலகவதியார் வேண்டிக் கொண்டதால் சிவனும் நாவுக்கரசரைச் சோதிக்க சூலைநோயைக் கொடுத்தார். சமண மத நூல்கள் கூறும் மருந்துகளால் நோய் குணமாகாத மருணீக்கியார் தமக்கை இல்லம் வந்தார். தமக்கையின் வேண்டுதலுக்கு ஏற்ப திருவதிகை வீரட்டானத்தில் உள்ள சிவனிடம் தமது உடல் நோயின் கொடுமையைக் ''கூற்றாயினவாறு விலக்ககலீர்'' எனும் பதிகம் பாடித் தெரிவிக்க, இறைவனும் தனது அருளை வழங்கித் தனது தொண்டராக்கிக் கொண்டார். ''அழுதால் பெறலாமே'' என்ற தத்துவத்திற்கு இலக்கணமாகத் திகழ்ந்தார் நாவுக்கரசர்.

சூலைநோயால் அவதிப்பட்டு இறைவனிடம் மனமுருகக் கசிந்து அழுததால் நோய் நீங்கப்பெற்ற மருணீக்கியார் அதன் பின் கையில் உழவாரப் படையுடன் சிவன் கோவில்களில் திருத்தொண்டு செய்வதையே தமது இறைப் பணியாகக் கொண்டார்.

''வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினையேன் நெடுங்காலமே''

எனத் தன்னைப் பற்றிய கழிவிரக்கத்தோடு தலம் தலமாகச் சென்று சிவனைப் புகழ்ந்து பாடினார்.

சமணம் சார்ந்து, தர்க்கவாதியாகத் திகழ்ந்த மருணீக்கியார் சைவம் சார்ந்து சிவனின் புகழை நாளும் பாடிக் கொண்டு நீறணிந்த மேனியராய், நிறையன்புறு சிந்தையராய் சிவன் கோவிலை வலம் வந்ததால் சமண மதத் தலைவர்கள் துணுக்குற்றனர். சமண மதம் மக்களிடையே செல்வாக்கு இழந்து விடுமோ என அஞ்சினார். ''உடையார் ஆகிய தருமசேனர், பிணியுற்றார் போலப் பாசாங்கு பண்ணி, சடையானுக்கு ஆளாகி நம் சமயத்தை அழித்தார்'' என பல்லவ மன்னனிடம் சமண சமயத்தவர்

கூற கோபம் கொண்ட மன்னவன் சமண முனிவர்கள் கருத்திற்கு ஏற்ப நாவுக்கரசரைக் கொல்லத் துணிந்தான்.

நாவுக்கரசரின் மனவுணர்வுகளை மாற்றமுடியாத சமண முனிவர்கள் அவரின் உடலை வருத்த மன்னனிடம் வற்புறுத்தினார். நீற்றறையில் அடைத்தும், நஞ்சு கலந்த பாலைக் குடிக்கக் கொடுத்தும், பட்டத்து யானையைக் கொண்டு இடறச்செய்தும், கல்லில் அவரைப் பிணித்து கடலில் போட்டும் அவரது உயிரைப் பறிக்க முனைந்த சமண சமயத்தவர் இறுதியில் தோல்வியையே தழுவினார். இறைவனின் திருநாமத்தைக் கூறி பதிகங்கள் பாடி சமணரின் கொடுமைகளினின்றும் மீண்டதால் நாவுக்கரசரின் பாடல்களில் உடலைப் பற்றிய சிந்தனைகள் இடம் பெற்றிருக்கலாம்.

மூன்று வயதிலேயே ஞானப் பாலுண்டு இறையருள் பெற்றார் ஞானசம்பந்தர். நாவரசருக்கோ வயதான காலத்தில் தான் இறையருள் கிட்டியது. அதுவும் அவருடைய உடலை வருத்தியே இறைவன் அருள் கொடுத்தான். குடரொடு துடக்கி முடக்கியிட, நஞ்சாக வந்து நலிந்த சூலை நோய்க்கு ஆற்றமாட்டாமல் வருந்திய அடிகள்,

''முன்னம் அடியேனறியாமையினான்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னை அடியே னுமக்காளும் பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருள்வீர்
தன்னை யடைந்தார் வினை தீர்ப்பதன்றோ
தலையா யவர் தன்கடனாவது'' (1041)

என இறைவனிடம் வேண்டி அருள் பெற்றார். இதனாலும் அவரது பாடல்களில் உடலைப் பற்றிய சிந்தனைகள் இடம் பெற்றுள்ளன எனலாம்.

மனித உடலமைப்பு பற்றிய சிந்தனைகள்

சமணர்கள் நாவுக்கரசரின் உடலுக்குத்தான் துன்பம் தந்தனர். எனவே இவ்வுடம்பின் தன்மையை அவர் தமது பாடல்களில் நான்கு இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

எலும்புக்கூட்டால் ஆன உடலில் கால் கொடுத்து, இரு கைகளை அமைத்து, மாமிசத்தால் மேய்ந்து, அதன் மீது தோலைப் போர்த்து, உதிரநீரால் சுவர் கட்டி இரண்டு பெரிய வாசல்களையும், ஏழு சாளரங் களையும் அமைத்து அதற்கு உயிரையும் உலக மயக்கத்தையும் கொடுத்த இறைவன் திருமறைக்காட்டில் உள்ள சிவனே என்ற கருத்தில்,

''கால்கொடுத் திருகையேற்றிக் கழிநீரைத் திறைச்சி மேய்ந்து
தோல்படுத் துதிரநீரால் சுவரெடுத் திரண்டு வாசல்

ஏலவுடைத் தாவமைத்தாங் கேழுசாலேசம் பண்ணி
மால் கொடுத்து ஆவி வைத்தார் மாமறைக் காடனாரே"

(பா. 854)

என்ற பாடலைப் படைத்துள்ளார். இவ்வுடலை ஒரு வீட்டின் தன்மையோடு ஒப்புமைப்படுத்தியும் பார்க்கிறார். ஒரு வீடு கட்ட நான்கு கால்கள் வேண்டும். அதன் மேல் கம்புகளைப் பிணைத்துக் கட்டி அதில் ஓடு அல்லது ஓலையை மேய்ந்து, அவை காற்றில் பறந்து விடாமல் இருக்க அதன் மீது கம்புகளை வைத்துக் கட்டுவர். அதனை ஒத்ததே மனித உடலமைப்பு என்ற கருத்தில்,

"கால்கொடுத்து எலும்பு மூட்டி கதிர் நரம்பாக்கை ஆர்த்துத்
தோலுடுத்து திரமாட்டித் தொகுமயிர் மேய்ந்த கூரை"

(பா. 564)

என்ற பாடல் வரிகளை இயற்றியுள்ளார்.

வீட்டின் அமைப்போடு மனித உடலை ஒப்புமைப்படுத்திய நாவுக்கரசர் அதனை "புழுப்பெய்த பண்டி" என்றும் அழைக்கின்றார். இவ்வுடம்பில் உள்ள உயிர் போனால் அது புழுக்கள் தங்குகின்ற இடமாக மாறும் என்ற கருத்தை இச்சொல் வாயிலாக கூறுகிறார். தோலால் போர்த்தப்பட்டு ஒன்பது வாசல்களையுடைய இவ்வுடம்பில் உள்ள ஐம்புலன்களும் ஒன்றுபட்டு நில்லாது அதனதன் தன்மைக்கேற்பச் செயல்படுவதால் பல்வேறு சங்கடங்களை இவ்வுடல் அனுபவிக்கிறது என்ற கருத்தில்,

"புழுப்பெய்த பண்டி தன்னைப் புறமொருதோலால் மூடி
ஒழுக்கறா ஒன்பது வாய் ஒற்றுமை ஒன்றுமில்லை
சழக்குடை யிதனுளைவர் சங்கடம் பலவும் செய்ய
அழிப்பனாய் வாழ மாட்டேன்" (பா. 679)

என ஆரூர் இறைவனிடம் முறையிடுகின்றார்.

மனித உடலின் அமைப்பை வீட்டோடும், பிறவற்றோடும் ஒப்புமைப் படுத்திய நாவுக்கரசர் அது எவ்வாறு உருப்பெறுகிறது என்பதையும் கூறத் தவறவில்லை. தாயின் கருப்பையில் நிணநீருக்குள் உருவாகி மூளையை முதலில் பெற்று நரம்புகளையும், எலும்புகளையும் தோலையும் படிப்படியாகப் பெறும் விதத்தை,

"கருவாகிக் குழம்பியிருந்து கலித்து மூளை
கருநரம்பும் வெள்ளெலும்பும் சேர்ந்தொன்றாகி
உருவாகிப் புறப்பட்டிங்கொருத்தி தன்னால்
வளர்க்கப்பட்டு உயிராருங் கடைபோவாரால்" (பா. 692)

என்ற பாடல் வரிகளில் கூறுகிறார். இன்றைய காலத்தில் அறிவியல் வளர்ச்சியின் உச்ச கட்டத்தில் இருக்கும் நாம் தாயின் கருப்பைக்குள்

குழந்தை எவ்வாறு உருவாகி வளர்ந்து வருகிறது என்பதை ஸ்கேன் (Scan) எனும் கருவி வாயிலாகக் கண்டு கொள்வதை, 6,7-ம் நூற்றாண்டில் வாழ்ந்த நாவுக்கரசர் எந்தவிதக் கருவியும் இல்லாமல் கண்டு கூறியதை மேற்கூறிய பாடல் உணர்த்துகிறது.

உயிர் போன உடம்பிற்கு மரியாதை இல்லை

மனித உடலின் அமைப்பை நான்கு பாடல்களில் கூறிய நாவுக்கரசர் உயிர் போன பின் அவ்வுடம்பிற்கு மரியாதை இல்லை என்பதையும் சுட்டத் தவறவில்லை. மனிதர்கள் வாழும்பொழுது இறையருளைப் பெற வேண்டும் என எண்ணுவது இல்லை. உயிராகிய ஆன்மா இறைவனைச் சென்றடைய மனிதனாக இருக்கும் போதே முயல வேண்டும் என்கிறார். இதனை,

''ஐயினான் மிடறடைப்புண் டாக்கை விட்டு
ஆவியார் போவதுமே அகத்தார் கூடி
மையினாற் கண்ணெழுதி மாலை சூட்டி
மயானத்தில் இடுவதன்முன் மதியஞ்சூடும்
ஐயனார்க்கு ஆளாகி அன்புமிக்கு
அகங்குழைந்து மெய்யரும்பி அடிகள்பாதம்
கையினால் தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே'' (பா. 820)

என்ற பாடல் வழி உணர்த்துகிறார். அன்றைய காலத்தில் இறந்தவருக்குச் செய்யும் கருமங்களை இப்பாடல் வழி எடுத்துரைக்கிறார்.

உடம்பே துன்பத்திற்குக் காரணம்

மனிதர்கள் ஐம்புலன்களை அடக்காவிட்டால் துன்பத்தில் சிக்குண்டு தவிப்பர் என்ற கருத்துடையவர் நாவுக்கரசர். ஐம்புலன்களையும் கள்வர் என்றே அழைக்கின்றார். மனித உடலை ''புனம்'' என்றும் வர்ணிக்கின்றார். இறையருளைப் பயிராகவும், உடம்பை ஏற்றம் இறைந்து நீர் செல்லும் சாலாகவும், உள்ளத்தைத் தகழியாகவும், துயரத்தை ஏற்றமாகவும் உருவகிக்கின்றார்.

''உயிர்நிலை காலா உள்ளமே தகழியாகத்
துயரமே ஏற்றமிகத் துன்பக்கோல்அதனைப் பற்றிப்
பயிர்தனை அழிய விட்டுப் பாழ்க்கு நீர் இறைந்தது மிக்க
அயர்வினால் ஐவர்க் காற்றேன்''

என் தன் நிலையைக் கூறி, தனது ஐம்புலன்களும் இறையருளைப் பெற ஒன்றுபட்டு நிற்காத தன்மையை எடுத்துரைக்கிறார். மேலும் இவ்ஐம்புலன்களும் தூய நெறியில் செல்வதற்குரிய அறிவை சூறை கொண்டு செல்வதாகவும், அதனைத் தடுத்து நிறுத்த இறைவன் அருள் செய்ய

வேண்டும் என்றும் வேண்டுகிறார். இதன் வழி உயிர் நிலை பெற்ற உடம்பு இறையருளைப் பெறுதற்கு உறுதுணையாக நிற்க வேண்டும் என்றும், ஐம்புலன்களின் கட்டுப்பாட்டில் உடல் நிற்காது. ஐம்புலன் களையும் கட்டுப்படுத்தும் கருவியாகத் திகழ வேண்டும் என்ற தனது கருத்தை 1385, 1391-ஆம் பாடல்கள் வழி எடுத்துரைக்கிறார் எனலாம். சமண சமயம் சார்ந்து தான் பட்ட அல்லல் நிலையே இத்தகு பாடல்களை அப்பர் இயற்றக் காரணமாயிருக்கலாம்.

உடம்பைக் கோயிலாக்கும் வழிமுறைகள்

''அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது'' என்றார் ஔவையார். இம்மானிடப் பிறவியில் இறையருளைப் பெற்று பிறவாப் பேரின்பம் பெற வேண்டும் என்ற கருத்துடைய நாவுக்கரசர் உடம்பை இறைவன் குடிகொள்ளும் கோயிலாக மாற்ற வேண்டும் என்ற கருத்தை இரண்டு பாடல்கள் வழி எடுத்துரைக்கிறார்.

மனித உடம்பு எனும் வயலில் மெய்மை எனும் உழவைச் செய்ய வேண்டும். அதில் இறைவன் அருளைப் பெறவேண்டும் எனும் வித்தினை விதைக்க வேண்டும். அவ்வித்து செழித்து வளர பொறுமை எனம் நீரைப் பாய்ச்சி, பொய்மை எனும் களையை எடுத்து வளர்க்க வேண்டும். இப்பயிரை பிறர் கவர்ந்து செல்லாத வகையில் தகவு எனும் வேலியிட்டு செம்மையாகக் காப்பாராகில் அதில் சிவகதி எனும் பயிர் கண்டிப்பாக விளையும் என்று கூறுகிறார்.

சமண சமயத்தவர் தனக்குத் துன்பங்கள் கொடுத்தபோதும் அதனைத் தாக்குப்பிடித்து இன்று உயிரோடு இருப்பதற்குக் காரணம் தனது உடம்பை இறைவன் குடியிருக்கும் கோவிலாக மாற்றியதே என்கிறார்.

''காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்ற இக்காட்டினோமே'' (ப. 1381)

எனத் தான் கடைப்பிடித்த நெறிமுறைகளைக் கூறி உலக மக்களிடம் உடம்பைக் கோயிலாக்க வேண்டுகிறார். நாயினுங் கடைப்பட்ட தன்னை நன்னெறி காட்டி ஆண்டு கொண்ட இறைவனின் சிறப்பை எடுத்துரைத்து மற்றவர்களிடம் இறைப்பற்றை தூண்டியதோடு

''மந்திர நமச்சிவாயவாக நீறணியப் பெற்றால்
வெந்துறும் வினையும் நோயும் வெவ்வழல்
விறகிட்டதற்கு ஒப்பமாயும்''

எனவும் கூறுகிறார். மேலும் உடம்பு எனும் மனையகத்து உள்ளத்தைத் தகளியாகக் கொண்டு, இறைவனை வழிபடவேண்டும் எனும் உணர்வாகிய

நெய்யை ஊற்றி உயிரெனும் திரியைத் தூண்டி ஞானமாகிய நெருப்பை ஏற்றி இறைவனை வணங்க முற்பட்டால் இறைவனடியைக் காண முடியும் என்ற கருத்தில்,

"உடம்பெனு மனையகத்து
உள்ளமே தகளியாக
மடம்படும் உணர் நெய்யட்டி
யுயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத் தீயால்
எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை
கழலடி காணலாமே" (பா. 1378)

என்ற பாடலைத் தந்துள்ளார். இப்பாடலிலும் உடம்பை மனையாகக் கூறியுள்ளார்.

உடம்பு என்பது எலும்பு, நரம்பு, தோல், சதை, இரத்தம் ஆகிய வற்றால் ஆனது. இவ்வுடம்பில் உள்ள ஐம்புலன்களையும் அடக்கத் தெரிந்தால் இன்பம் விளையும். ஐம்புலன்களையும் அடக்காவிடில் இன்னல்களுக்கு ஆளாக்கி துன்பக் கேணியில் வீழ்த்திவிடும். அவ்வாறில்லாமல் இக்காயம் இறைவன் குடிகொள்ளும் கோயிலாக மாறினால் பிறவா பேரின்பத்தைப் பெற முடியும் என்ற தமது சிந்தனைகளை நாவுக்கரசர் தமது தேவாரப் பாடல்களில் புகுத்தியுள்ளார். அவரது இத்தகு சிந்தனைகளுக்கு சமணர்கள் அவருக்குச் செய்த துன்பங்களும், அவற்றிலிருந்து அவர் மீண்ட தன்மைகளும் காரணங்களாகும்.

80. நாவுக்கரசர் நிகழ்த்திய அற்புதங்கள்

அரங்க. பாரி, அண்ணாமலைநகர்.

உலகில் அறம் குறைந்து மறம் மிகுந்து தீமைகள் பரவலானபோது ஒழுக்க நெறியை நிலைநாட்ட அருளாளர்கள் தோன்றுகின்றனர். அவர்களது அறவுரையால் பாவச்செயல்கள் குறைகின்றன. தர்மம் தழைக்கிறது.

அருளாளர்களின் சொற்களை மக்கள் நம்ப வேண்டுமானால் - சொற்படி நடக்க வேண்டுமானால் அவ்வருளாளர்கள் சில அற்புதங் களை நிகழ்த்தியாக வேண்டியிருக்கின்றது. அந்த அற்புதங்களைக் கொண்டுதான் அருளாளர்களின் பெருமையை மக்கள் உணர்ந்து அவர்கள் கூறும் அறவழிகளைப் பின்பற்றுகின்றனர். இவ்வகையில் சைவசமயச் சான்றோரான திருநாவுக்கரசரும் சில அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார். அவற்றைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

திருநாவுக்கரசர் நிகழ்த்திய அற்புதங்கள்

திருநாவுக்கரசர், சம்பந்தர் வாழ்ந்த காலத்தில் உடன் வாழ்ந்தவர். இருவரும் பல தலங்களுக்கும் யாத்திரை செய்து வழிபட்டுத் தேவாரப் பதிகங்கள் பாடி, பல அற்புதங்கள் நிகழ்த்தினர் என்பதைப் பெரியபுராணம் விரித்துரைக்கின்றது.

நாவுக்கரசர் மகேந்திர பல்லவனுக்கு அஞ்சாது நின்று, 'நாமார்க்கும் குடியல்லோம்' என்று உரிமைக்குரல் எழுப்பினார். சமணர் அருத்திய விடத்திற்குச் சாகாமல் தப்பினார். நீற்றறையைக் குளிர்வித்தார். கருங்கல்லைத் தெப்பமாகக் கொண்டு மிதந்து கரை சேர்ந்தார். உழவாரப் படை கொண்டு திருப்பணி செய்தார். பாம்புகடித்து மாண்ட அப்பூதி அடிகளின் மைந்தனை உயிர் பெற்று எழச் செய்தார். திருமறைக் காட்டில் மறைக்கதவம் திறப்பித்தார்.

கயிலைக்கு நடந்தே சென்று அங்கு ஒரு சுனையில் மூழ்கி ஐயாற்றில் குளத்தில் எழுந்து கயிலைக் காட்சியைக் கண்டு தரிசித்தார். மூவரில் நீண்ட காலம் 81 வயது வரை வாழ்ந்தவர் இவரே.

மற்ற அருளாளர்களை விட இவருக்கு ஒரு தனிச்சிறப்பு என்னவெனில் இவர் நிகழ்த்திய அற்புதங்கள் பலவற்றிற்கு அகச்சான்றுகள் உள்ளன.

நாமார்க்கும் குடியல்லோம்

எல்லாம் வல்ல ஆற்றலையுடைய சர்வாதிகாரம் படைத்த ஒருவல்லரசை எதிர்த்து "நாமார்க்கும் குடியல்லோம்" என்று வரலாற்றிலேயே முதன் முதல் உரிமைக்குரல் எழுப்பியவர் நாவுக்கரசர். சமணர் தூண்டுதலால் அவரை அழைத்து வருமாறு அலுவலரை அனுப்பினான் பல்லவன்.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்!"
"பாராண்டு பகடேறி வருவார் சொல்லும்
பணி கேட்கக் கடவோமோ பற்றற் றோமே!"

எனக் கூறித் துணிவுடன் மறுத்தார் நாவுக்கரசர்!

நீற்றறை குளிர்ந்தது

சமணர்கள் நாவுக்கரசரைக் கொல்ல நீற்றறையில் (சுண்ணாம்புக் காளவாய்) அடைத்தனர். இறைவன் திருவருளை எண்ணி, எத்தகைய துன்பமும் இல்லாமல் அங்கிருந்தார்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே!"

என்ற பாடலைப் பாடி இனிது தங்கினார்.

நஞ்சை உண்டு உயிர் பிழைத்தல்

தமது சமயம் திருநாவுக்கரசரால் அழியக்கூடும் என்றஞ்சிய சமணர்கள் நஞ்சு கலந்த பாற்சோற்றை அளித்து அவரை உண்ணச்செய்தனர். இறைவன் அருளை எண்ணி அப்பாற்சோற்றை உண்டு எவ்விதத் தீங்கும் இன்றி உயிர் பிழைத்தார் அப்பரடிகள். இதனை,

"துஞ்சிருள் காலை மாலை
தொடர்ச்சியை மறந்தி ராதே
அஞ்செழுத் தோதின் நாளும்
அரனடிக் கன்ப தாகும்
வஞ்சனைப் பாற் சோறாக்கி
வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமுது ஆக்கு வித்தார்
நனிபள்ளி அடிக ளாரே!"

என்ற அவரது பாடலால் அறிகிறோம்.

மதயானையை ஏவல் பெற்றது

சினமிக்க மதயானையை அடிகளைக் கொல்லுமாறு தூண்டிச் சமணர்கள் ஏவினர். நாவுக்கரசர் அதுகண்டு அஞ்சாது இறைவன் தமர்

நாம்! அஞ்சுவது யாதொன்றும் இல்லை. அஞ்ச வருவதும் இல்லை என்ற எண்ணத்தோடு "சுண்ண வெண் சந்தனச் சாந்தும்" என்ற திருப்பதிகத்தைப் பாடி அஞ்சாமல் நின்றார். அவரது துணிவையும், சிவவேடப் பொலிவையும் கண்ட யானை அவரை வலம் வந்து பணிந்து திரும்பிச் சென்றது.

நாவரசர் இந்த நிகழ்ச்சியை,

"தலைவ னாகிய ஈசன் தமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றி டுகிற்குமோ"

என்ற பாடலில் குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளார்.

கருங்கல் தெப்பமாக மிதந்தது

நாவரசர் நிகழ்த்திய அற்புதங்களை எல்லாவற்றிலும் குறப்பிடத் தக்கது கருங்கல்லைத் தெப்பமாகக் கொண்டு நீந்திக் கரையேறியது தான்! பல்லவ மன்னனைச் சமணம் விடுத்து சைவம் தழுவச் செய்ததும் இதுவே எனக் கருதலாம்.

பல வக்கைகளில் முயன்றும் நாவரசரைக் கொல்ல இயலாமை கண்ட சமணர்கள் இறுதியாக ஒரு பெரிய நீண்ட கருங்கல்லைத் தூக்கி வந்து அதனோடு நாவரசரை வைத்துச் சேர்த்துக் கட்டிக் கடலில் கொண்டுபோய்த் தூக்கி எறிந்தனர். கடலில் எறியப் பெற்ற நாவரசர் சிறிதும் கலக்கமின்றி,

"சொற்றுணை வேதியன் சோதிவானவன்"

என்னும் பதிகத்தைப் பாடினார். அக்கருங்கல் தெப்பமாக மிதந்தது. நீந்திக் கொண்டே வந்து கடலூரின் கிழக்கே கடற்கரையில் வந்து கரையேறினார். அந்த இடம் "கரையேறவிட்ட குப்பம்" என இன்று வழங்குகிறது.

இதனால் விளைந்த பெரும்பயன் குறிப்பிடத்தக்கது. பல்லவ வேந்தன் இந்நிகழ்ச்சிகளால் சமணத்தின் சிறுமையையும் சைவத்தின் பெருமையையும் உணர்ந்தான். நாட்டைக் கவ்விமூடியிருந்த சமணர் காரிருள் விலகிற்று. சைவத்தின் பேரொளி எங்கும் பரவிற்று.!

மகேந்திரவர்மன் தன் பழவினைப்பாசம் நீங்கப் பரிவாரங்களுடன் திருவதிகை வந்து திருநாவுக்கரசரை வணங்கினான்; சைவ சமயத்தைத் தழுவினான். பாடலிபுத்திரத்திலிருந்த சமணர் பள்ளிகளையும் பாழி களையும் இடித்துக் கொண்டு வந்து திருவதிகையில் 'குணபரஈச்சரம்' என்னும் சிவன் கோயிலை எழுப்பித்தான்.

சைவ சமய வரலாற்றில் இந்நிகழ்ச்சி ஒரு திருப்பு மையமாக அமைந்தது.

அப்பூதியடிகள் மகனுக்கு விடந்தீர்த்து எழுப்பியது

சோழநாட்டில் திங்களூரில் அந்தணர் குலத்தில் பிறந்து அருந் தொண்டுகள் செய்து வந்தவர் அப்பூதியடிகள். அவர் திருநாவுக்கரசரது பெருமைகளையும் சைவசமயத்திற்கு ஆற்றிவரும் தொண்டுகளையும் கேள்வியுற்று அவரையே தெய்வமாகக் கருதிப் போற்றி வந்தார்.

தமது குழந்தைக்குத் திருநாவுக்கரசர் பெயரை இட்டார். வீடு, தோட்டம், நிலம் முதலியவற்றுக்கெல்லாம் திருநாவுக்கரசர் பெயரையே வைத்து வழங்கினார். திங்களூரில் வழி நடைப்பாதையில் ஒரு பெரும் தண்ணீர்ப் பந்தர் வைத்து நடத்தி அதற்குத் திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தல் என்று பெயரிட்டார். ஒருமுறை தலயாத்திரையை மேற்கொண்ட நாவரசர் திங்களூர் வழியே வரும்போது அப்பந்தலில் தம் பெயர் பொறிக்கப்பட்டிருப்பது கண்டு அதிசயித்தார். அங்குள்ளவரை விசாரித்துக் கொண்டு அப்பூதியடிகள் இல்லத்தைச் சென்றடைந்தார்.

சிவனடியாராகிய அவர் வருகையைக் கண்ட அப்பூதியார் அவர் கால்களில் வீழ்ந்து வணங்கினார். ஆனால் அவர் திருநாவுக்கரசர் என அவர் அறிந்திலர். நாவரசர் சிவனடியார்கள் பொருட்டு நீர் வைத்த பெரும் தண்ணீர்ப்பந்தரில் உமது பெயரை வையாமல் வேறு ஒரு பெயரை வைத்தது ஏன்? என்று வினவினார்.

இது கேட்ட அப்பூதியாரின் சினம் அளவு கடந்து பெருகிறது. என்ன வார்த்தை கூறினீர்? மங்கலமான சிவ வேடத்துடன் இருந்து கொடிய மொழிகளைக் கூறினீர்! சமணர் வஞ்சனைகளை முறியடித்து மன்னனையும் சைவனாக்கிய திருநாவுக்கரசர் பெயரோ வேறு பெயர்? நீர் யார்? எங்கு உள்ளவர்? என்று வினவினார். இறைவனருளால் சூலை நோயால் தடுத்தாளப் பெற்றுப் புறச்சமய இருளினின்றும் கரையேறிய நாவரசன் தான் அடியேன்! என்றார் நாவரசர். இதுகேட்டு திடுக்கிட்ட அப்பூதியார் அவர் கால்களில் வீழ்ந்து மன்னிக்குமாறு வேண்டினார்.

நாவரசருக்கு உணவு அளிக்கப்பட்டது. உணவருந்த வாழையிலை பறிக்கச் சென்ற அப்பூதியடியாரின் தலைமகன் மூத்த திருநாவுக்கரசு பாம்பு தீண்டப் பெற்று மடிந்தான். இதனை அறிந்த நாவுக்கரசர் அவனைத் திருக்கோயிலுக்கு எடுத்து வரச் செய்து இறைவனை வேண்டி,

"ஒன்று கொலா மவர் சிந்தை உயர்வரை"

என்ற பதிகம் பாடி அவனை உயிர்ப்பித்தார்.

மறைக்காட்டில் கதவம் திறப்பித்தது

திருமறைக்காட்டில் வேதங்கள் பூசித்து இறைவன் திருக்கோயில் வாயிற் கதவை அடைத்து வைத்திருந்தன. சம்பந்தரோடு தலயாத்திரையை

மேற்கொண்டு அத்தலத்தை அடைந்த நாவரசர் பொதுமக்கள் சென்று வழிபட அது தடையாக இருப்பதை எண்ணி,

''கண்ணி னால்உமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே!''

என்று பாட மறைக்கதவம் திறந்தது.

இதுகாறும் எடுத்துக்காட்டிய குறிப்புக்களால் சமணர்கள் திருநாவுக்கரசரை நீற்றறையில் அடைத்தும், நஞ்சுகலந்த பாற்சோற்றை உண்பித்தும்; யானையைக் கொல்ல ஏவியும், கல்லில் கட்டிக் கடலில் பாய்ச்சியும் செய்த தீமைகள் அனைத்தையும் கடந்து அவர் உயர்ந்த செய்திகள் அகச்சான்றுகளோடு விளக்கப் பெற்றன. பல்லவ மன்னனைச் சமணத்தினின்றும் மாற்றிச் சைவனாக்கிய நிகழ்ச்சி வரலாற்று முதன்மை வாய்ந்ததென்பது விளக்கப்பட்டது.

81. உன் அடிக்கே போதுகின்றேன்

வை. பாலசுப்பிரமணியன், புதுவை.

சைவச் செம்பொருளையே உறுதியாகப் பற்றி, நாளும் அப்பெருமானுக்கே உள்ளத்தாலும் உடலாலும் உணர்வாலும் திருத்தொண்டு செய்து மகிழ்ந்த பெருமகனார் திருநாவுக்கரசர். சேக்கிழார் பெருமான் இப்பெருந்தகையை "ஒரு நாவுக்கு உரை செய்ய ஒண்ணாமை உணராதேன், பெருநாமச்சீர் பரவல் உறுகின்றேன்" எனப் போற்றி மகிழ்கிறார். சிறியேன் அவர்தம் ஆதியாகவும் அந்தமாகவும் திகழக்கூடிய ஒருசில திருத்தேவாரப் பதிகங்களை, அடியேன் பார்வையில் பட்டவண்ணம் விளம்ப முற்படு கிறேன். மூவர் தேவாரம் என்று முதல் 7 திருமுறைகளை இக்காலத்தில் கூறினாலும் நாவுக்கரசரின் பதிகங்கள் மட்டுமே தேவாரம் என்று அக்காலத்தில் வழங்கப்பட்டது. நாவுக்கரசரின் பதிகங்களாலேயே மற்ற இருவர் பதிகங்களும் தேவாரம் என பெயரிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

காலத்தின் சூழலால் சைவத்தினின்றும் தடம் மாறி, திசை மாறிய பறவையாய்த் திரிந்த மருள்நீக்கியாரைத் தம்வயப்படுத்திடவும், மெய்ப் பொருளாம் செம்பொருளை உணர்த்திடவும், மெய்ஞ்ஞானநெறி மேதினியில் தழைத்திடவும், புறச்சமயம் இருள்நிலை அகன்றிடவும் தமக்கையார் திலகவதியாரின் விண்ணப்பத்திற்கு இணங்கத் தருமசேனராம் மருள்நீக்கி யாருக்குக் கொடிய சூலை நோயைத் தந்தருளினார் இறைவர். தம் பலத்தை நம்பிப் பயன் அளிக்காததால் தமக்கையாரை நாடினார் மருள் நீக்கியார். தமக்கையாரும் குறிக்கோளிலாத பிற சமயக் குழியில் வீழ்ந்து, துயர் உழந்தீர், இதுவும் இறைவரின் திருவருளே இனிப் பற்றறுப்பார் தமைப்பரவிப் பணி செய்வீர் எனப் புகன்று கங்காளன் பூசும் கவசத் திருநீற்றைத் தம்பியின் நெற்றியில் அஞ்செழுத்துடன் சேர்த்து திலகவதியார் தரித்திடச் செய்தார்.

புலரும் பொழுதில், வீரட்டானப் புண்ணியரின் திருப்பள்ளி யெழுச்சியில் தம்பியுடன் தமக்கையும் திருக்கோயிலினை அணைந்து திருமுன்னர் வீழ்ந்து வணங்கினார்கள். திருவருளால் வீரட்டானன் மீது அன்பு பொங்க, சூலை நோயால் வாடிக் கொண்டிருக்கும் வள்ளலுக்கு திருப்பாமாலை சாத்தும் எண்ணம் எழும்ப,

"கூற்று ஆயினவாறு விலக்ககலீர்
கொடுமை பலசெய்தன நான்அறியேன்

ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என்வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே''

எனும் பதிகம் பாடிப் பரவினார். அவ்வளவில் சூலைநோய் முற்றிலும் நீங்கி இறைவனின் கருணை வெள்ளத்தில் ஆழ்ந்தார்.

இந்த அரிய செந்தமிழ்ச் சொல்மாலை உரைத்த மருள்நீக்கியார் முன், இறைவனின் திருவாய் வாக்கு வானில் விளங்கியது. "இனி நின்திருநாமம் நாவுக்கரசு என நண்ணுவதாக'' என்று.

இது, முதல் ஏழு திருமுறைகளாம் தேவாரத்தில் முதன்முதலில் தோன்றிய பதிகமாகும். இனி அப்படியே நாவுக்கரசரின் நிறைவுப் பதிகமாகிய பூம்புகலூர் பதிகத்திற்கு வருவோம்.

நாவுக்கரசர் திருஅதிகை வீரட்டானனின் அருள் பெற்றுப் பிறவா யாக்கைப் பெரியோனின் பல தலங்களையும் பாடிப் பரவிப் புறச்சமயக் கோட்பாட்டின் பொய்யினை ஒளியிட்டு விரட்டிச் சித்தாந்த சைவச் செந்நெறி தம்மிடம் நிலைத்திருக்க வேண்டும் என்ற உள்ளக்கிடக் கையில், இறைவனை, பொன்னார் திருவடிக்கு என்ற திருப்பதிகத்தால் வேண்டியதால், சிவகணங்களால் இடபக்குறியும், சூலமும் பொறிக்கப்பட்டு, நல்லூரில் திருவடி தீக்கை பெற்று, மறைக்காட்டில் மூடிய கதவினைத் திறந்தும் திங்களூரில் அப்பூதி அடிகளின் அரவந்தீண்டிய மகனை "ஒன்றுகொலாம் அவர் சிந்தை உயர்வரை'' என்னும் பதிகத்தைப் பாடி உயிர்ப்பித்தும், இப்படி இறைவன் துணை கொண்டு பல அரிய செயல்களாற்றியபின் திருப்புகலூரில் வந்தணைந்தனர். மதிசூடிய மாதொரு பாகத்தரின் பாதக் கமலங்களில் இணைந்திட விழைந்தனர்.

இவர்தம் திரு உள்ளத்தினை ஏனையோரும் அறிந்து உய்யக் கருதிய சிவபெருமான், புகலூர்ப்பதியில் இவர்தம் உழவாரம் நுழைந்த இடம்தோறும் பொன்னும் மணியும் பொலிவுற்று இலங்கச் செய்தார். செம்பொன்னும், நவமணிகளும் கல்லும் மண்ணும் போன்றவை எனக் குறித்து ஒக்க எடுத்து உழவாரத்தினில் ஏந்திப் பூங்கமலக் குளத்தினில் புக எறிந்தனர். புல்லும், கல்லும், பொன்னும், மணியும் வேறுபாடு இலாதநிலை கொண்டார். அதுகால் விண்ணிழிந்த மாதர்தம் ஆடலையும், பாடலையும் கேட்டு, "உம்மால் எமக்கு ஏதும் ஆகா, எண்ணறிய புண்ணியனின் திருப்பாதங்களை நண்ணியே எம் வாழ்நாள் கழியுமன்றி உங்களை எண்ணி அதை வீழ்நாளாக மாற்றேன்'' என நாவரசு புகன்றார்.

இறைவனுடன் இணையும் பக்குவத் தன்மை வரப்பெற்ற பெருந்தகையார்,

"எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ"...

எனத் தொடங்கி, நிறைவாக...

ஒருவரையும் அல்லாது உணராது உள்ளம்,
உணர்ச்சித் தடுமாற்றத்துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவு அறுத்தாய்க்கு இல்லேன் - ஏலக்
கருவரை சூழ்கானல் இலங்கை வேந்தன்
கடுந்தேர் மீது ஓடாமை காலாற்செற்ற
பெருவரையாய்! உன்அடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே!

எனப் புகல்கின்றார்.

"என் உள்ளம் தங்களையன்றி வேறொன்றையும் மனதில் நினைக்க இடம் தரமறுக்கிறது. உமைநினைந்து இருப்பினும் உணர்ச்சித் தடுமாறுகின்ற வகையில் எனை மாற்றுகின்ற நல்வினை, தீவினையாகிய இரண்டினையும் மும்மல பாசங்களையும் என்மீது மேலும் மேலும் தொடரா வண்ணம் நீக்கி அருள் செய்து விட்டீர். புண்ணியனே, உம்முடைய திருவடிக் கமலங்களில் அடியவனாகிய எம்மை இணைத்துக் கொள்ளுங்கள்" என்று இறைஞ்சுகின்றார். அவ்வாறே இறைவனின் இணையடி நீழலில் இரண்டறக் கலந்தும் விட்டார்.

நாவரசுப் பெருமகனார் உலகியல் சூழலில் உழன்றும், அதனின்றும் மீண்டு இறைவனின் இன்னடியாராக மாறினார். தம் முதல் பதிகத்தின் மூலம் இறைவனின் இன்னடியாராக இருந்து இறைவனின் சேவடியில் சேர்ந்தார் தன் நிறைவுப் பதிகம் மூலம்.

சைவட திரும்பும் முன் சமணத்தில் உழன்றாலும் புகழுடன் விளங்கினார். அதுபோலவே இறைவனுடன் இணையும் முன் அவர்தம் பேரருள் கருணைத்துணை கொண்டு பல அரிய செயல்களையும் அடியார்கள் பொருட்டுச் செய்து மகிழ்ந்தார்.

சூலை நோய் தந்து அதன் மூலம் சைவ நெறியே செந்நெறி - மெய்ந்நெறி என அப்பருக்கு இறைவன் உணர்த்தினார். அதுபோலவே மீண்டும் பிறவா நெறியை அடைவதே இம்மனித குலத்தில் நோக்கமாக இருக்க வேண்டும்; பொன்னும், மணியும் முத்தும் இறைவனை அடைய விடாத தடைக்கற்களாகும் என்பதை நிறைவாக உணர முடிகின்றது.

அதனினும் மேலாக "அறியாமையின் காரணமாக நான் பல கொடுமைகள் செய்தேன். ஆனால் இப்போது என் நெஞ்சத்தினை உமக்கு இடமாக வைத்துள்ளேன். முன்னம் நான் அறியாமையால் பாவங்கள் செய்திருப்பாயினும் என் பாவங்களைக் கரையச் செய்பவர் தாங்கள் ஒருவரே. உமக்கு, சலம், தூபம், பூவோடு இசைபாடல் கொண்டு வழிபட விழைகின்றேன். உமது ஐந்தெழுத்து மந்திரமே என்னாவில் எப்பொழுதும் பயில்வதாகும். எனவே துன்பம், கவலை, பிணி இவைகள் அடியேனை நணுகாமல் காக்க வேண்டியது, எம் பெருமானே, தாங்களல்லவா?" எனத் தவறுகளை வெளிச்சமிட்டுக் காட்டியும் இறைவனின் திருமுன்னர் பிரியாமல் இருப்பதே நன்னெறி எனவும் நமக்கு உணர்த்துகிறார்.

ஆளுடைய அரசு என்று போற்றப்பெறும் திருநாவுக்கரசுப் பெருந்தகையின் பதிகங்கள் பெரும்பாலும் பத்துப் பாட்டுக்களைக் கொண்டவையாகும். பத்தாவது பாட்டில் இராவணனைக் குறிப்பிட்டுப் பேசுவதைப் பதிகந்தோறும் காணலாம். இவ்வாறு இராவணனைக் குறிப்பிடுவதற்குக் காரணம், தம் வாழ்க்கையில் பெரும்பகுதிக் காலத்தையும் புறப்புறச் சமயச் சூழலில் கழித்த தம் அறியாமைக் குற்றத்தினை நினைந்து நினைந்து இரங்கியமையாலேயே ஆகும். இறைவனின் பெருமையை அறியாமல் பிழைசெய்த இராவணனை உய்வித்த அருளாளன் ஆகிய சிவபெருமான், குற்றம் புரிந்த தன்னையும் கோது நீக்கி ஆண்டு கொண்டான் என்பதை உலக மக்களுக்கு எடுத்துரைக்கும் முறையில் பதிகங்களின் இறுதிப்பாடலை ஆளுடைய அரசு அமைத்துள்ளார்.

இவருடைய பதிகங்கள் பல இறைவனை முன்னிலைப்படுத்திக் குறையிரந்து வேண்டும் நிலையில் அமைந்துள்ளன. ஐம்பொறிகளால் ஈர்க்கப்பட்டு அல்லற்படும் ஆன்மாக்களின் தளர்ச்சியை நீக்கி உய்யக் கொண்டு அருளும்படி இறைவனை வேண்டும் பதிகங்கள் பல உள்ளன. யாக்கையின் நிலையாமையையும் இளமை செல்வம் முதலியன நிலையா எனவும் கூறும் பதிகங்களும் உள்ளன. தமிழ்ச் சமூகம் சாதி வேறுபாட்டை ஒழித்து அனைவரும் சிவனடிக்கீழ் வாழ்வதாக எண்ணி வாழவேண்டும் என்னும் கருத்தமைந்த பதிகங்கள் பலவற்றை இவரது திருமுறைகளில் காணலாம்.

ஆளுடையபிள்ளை நம்பி ஆரூரர் ஆகிய இருவர் பதிகங்களிலும் காணப்பெறாத யாப்பு முறைகளை ஆளுடைய அரசின் பதிகங்களில் காணலாம். திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்னும் யாப்பமைப்புகளில் இவரது பதிகங்கள் அமைந்துள்ளன.

''தாண்டகம்'' என்னும் யாப்பிற்கு இவரது அருளிப்பாடே மூல இலக்கியமாக விளங்குகிறது. எனவே இவரைத் ''தாண்டக வேந்தர்'' என்று தமிழ் கூறும் நல்லுலகம் போற்றுகின்றது. திருத்தாண்டகங்களில் "போற்றித் திருத்தாண்டகம்" பெருஞ்சிறப்பினை உடையது. "இருநிலனாய்த் தீயாகி'' எனத் தொடங்கும் நின்ற திருத்தாண்டகம் வடமொழி வேதத்தில் உள்ள ''ஸ்ரீ உருத்திரம்'' என்னும் உபாசனைக்கு இணையானது. எனவே இஃது உருத்திரத் திருத்தாண்டகம் எனப்படுகிறது.

நாவுக்கரசரின் தொண்டு சிறப்பானது. ஆலயங்களிலே உழவாரப் பணியை முதன் முதலில் தொடங்கியவரே அவர்தான், ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்றார். சமணர்கள் அவரை நீற்றறையில் அடைத்த போதும் ''மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும்'' என்று ஆனந்தமாகப் பாடினார். கல்லில் கட்டிக் கடலில் வீசியபோதும் கூட ''நற்றுணையாவது நமச்சிவாயவே'' என்றும், ஈசன் மீது கொண்டிருந்த பக்தியினாலும் மனவுறுதியினாலும் ''நாமார்க்கும் குடிஅல்லோம் நமனை அஞ்சோம்'' என்று எமனையே துச்சமாக எண்ணிப் பதிகம் பாடியுள்ளார்.

நாவுக்கரசருடைய தேவாரப் பாடல்களில் எண்ணற்ற நல்ல கருத்துக்களைக் காணலாம். சிவபெருமான் ஒருவரே கடவுள், அவருக்கு ஒப்பானவர் வேறு ஒருவரும் இல்லை, அவருக்கு இணை அவரே என்னும் கொள்கையைத் தமது பாடல்களில் நிலைநாட்டியுள்ளார். மேலும் இறைவனை வணங்குவதற்கும் அவனது அருள் இருந்தால் தான் முடியும் என்பதனை நன்குணர்ந்த அப்பர் தமது ''ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே'' என்றும் ''காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே'' என்ற அடிகளிலும் குறிப்பிடுகிறார்.

நாவுக்கரசரின் தேவாரத்தில் மட்டுமே நமக்கு இறைவன் அளித்துள்ள ஒவ்வொரு உடல் அவயவத்தின் பயனையும் கூறுகின்றார். தலையே நீ வணங்காய் என்று தொடங்கி 4-ஆம் திருமுறையில் திருஅங்கமாலை பாடியுள்ளார். மேலும் நாவுக்கரசர் இறைவனை எப்படி எல்லாம் வணங்க வேண்டும் என்று கூறுகிறார். அருநோய்கள் கெட வெண்ணீறணிந்து, உண்பதன் முன் மலர் பறித்திட்டுப் பூசனை செய்து அவன் திருநாமம் அஞ்செழுத்தும் ஓதி திருக்கோவில் வலம் வரச் சொல்கிறார். நாவுக்கரசர் தேவாரம் தான் திருமுறைகளில் முதலில் பாடப்பட்டது என்பது ஒரு சிறப்பாகும்.

நாவுக்கரசரின் தேவாரத்தில்தான் திருஆரூரிலும் திருப்புகலூரிலும் திருமீயச்சூரிலும் உள்ள இளங்கோவில்களைத் துதித்துப் பாடியுள்ளார் என்பது மிகச் சிறப்பாகும். திருவையாறில் கயிலைக்காட்சியைக் கண்ட நாவுக்கரசர் ''வேற்றாகி விண்ணாகி நின்றாய்'' போற்றித்

திருத்தாண்டகத்தைப் பாடினார். நாம் கண்ட கயிலைக் காட்சியினை எல்லோரும் மகிழ்ந்து உணரும் வண்ணம் "மாதர்ப் பிறைக்கண்ணியானை" எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். இவ்வாறு நாவுக்கரசின் தேவாரத்தின் மூலம் தமது அனுபவ முதிர்ச்சியை வெளிப்படுத்தி யுள்ளார்.

நிறைவுப் பதிகத்தின் நிறைவுப் பாடலில் நமக்கெல்லாம் அப்பர் பெருமான் சொல்லும் கடைசிச் செய்தி நம்மையெல்லாம் சிந்திக்க வைக்கிறது. "உலக மக்களே! இவர் தேவர், அவர் தேவர் என தடுமாறித் திரியாதீர்கள். நம்முடைய நல்வினையையும் தீவினையையும் அத்தோடு மும்மலப் பாசங்களையும் நீக்கி நமக்கு நிலையான பேரின்ப வாழ்வாகிய திருவடிப் பேற்றினை அளிக்க வல்லவன் ஈசன் ஒருவனே அவனை அணுகுங்கள், அடையுங்கள், உய்கதி பெறுங்கள்" எனப் புகன்று புண்ணியனின் திருவடிக்கே போதுகின்றார்.

சேக்கிழார் பெருமானும் இத்திறத்தினை மிக வியந்து,

"மண்முதலாம் உலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தை"
'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்'

எனப் புகன்று

"நண்ணரிய சிவாநந்த ஞானவடிவேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டரசு அமர்ந்திருந்தார்"

எனப் பாடிப் பரவி மகிழ்கின்றார்.

82. நாவுக்கரசர் ஊட்டும் நம்பிக்கை

சு. பானுமதி, தூத்துக்குடி.

மனிதன் ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி உள்ளத்தை ஒருமுகப் படுத்திச், செயல்படும்போது நம்பிக்கை பிறக்கின்றது. வாழ்க்கை என்ற சக்கரம் தடையின்றி ஓட மனிதனுக்கு நம்பிக்கை கட்டாயம் வேண்டும். அந்த நம்பிக்கையே பின்னொரு நாள் நனவாகிறது. 'சந்திரமண்டலத்தியல் கண்டு தெளிவோம்' என்ற கவிஞரது நம்பிக்கை இன்று நனவாகிவுள்ளது. நம்பிக்கைதான் தனிமனிதனுக்கும், சமுதாயத்திற்கும் ஆணிவேர். ஒரு காலக் கட்டத்தில் அற்புதங்கள் நிகழ்ந்ததால்தான் மனிதன் எல்லையில்லாப் பெரும் சக்தியான இறைப்பொருளை நம்பினான். அதன் விளைவாகக் கிறிஸ்தவ, இஸ்லாமிய, இந்துமதச் சீடர்கள் பலர் பற்பல அதிசயங்களை நிகழ்த்தி இறை பக்தியைப் பரப்பலாயினர்.

உலகத்தில் மரண பயம் இருக்கும் வரை அதன் பலவீனத்தால் மனிதன் இதயத்திற்கு ஆறுதல் தேட இறைவனிடம் நம்பிக்கை வைப்பான் எனச் சுவாமி விவேகானந்தரும் குறிப்பிடுவார். எனவே பலவீனத்திலும், பயத்திலும்தான் மனிதனுக்கு நம்பிக்கை தோன்றுகிறது எனலாம். 'வாழ்க்கை நன்றாக இருக்கும்போது கடவுள் இல்லை'' வறுமை வரும்போது 'அவர் உடனே வருகிறார்'. அதாவது கடவுள் நம்பிக்கை என்பது ஏதாவது ஒரு வடிவத்தில் எல்லோருக்கும் இருந்தே தீருகிறது. இத்தகைய கடவுள் நம்பிக்கையை நாவுக்கரசர் ஊட்டும் தன்மையை அவரது தேவாரப் பாசுரங்கள் வழி இக்கட்டுரை ஆராய்கின்றது.

நாவுக்கரசர் ஊட்டும் நம்பிக்கை

நாவுக்கரசர் தம் பாடல்கள் வழி அறியலாகும் நம்பிக்கைகளைக் கீழ்கண்ட தலைப்புகள் எடுத்துரைக்கின்றன.

அஞ்சேல்

இயல்பாகவே மண்ணுயிர்கள் அச்சம் கொண்டவை. இறைவன் அடியவர்களிடம் தோன்றி 'அஞ்சேல்' என அன்பு பூண்டு அருள் செய்பவன். தஞ்சம் வேண்டி வருந்தி நின்ற அடியவர்களின் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து துயர் களைபவர். மனித உயிர்களின் ஊனம் போக்குபவர் என்பதை,

'வயிற்றொடு துடக்கி முடக்கியிட நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்தும் இடீர் அஞ்சலும் என்னீர்'.

என்ற பாடல் அடிகளில் அப்பர் குறிப்பிடுகின்றார்.

பிறப்பறுப்பவன்

பிறவாமை என்னும் பேற்றினை அளிப்பவன் ஈசன். இம்மை, பிராரத்தம், மறுமை ஆகிய மூன்று வாழ்க்கை நிலைகளிலும் வல்வினையைப் போக்கிப் பிறப்பறுத்து முக்தியைத் தரவல்லது 'நமச்சிவாய' என்ற மந்திரம் என்பதனை,

'நாப்பிணை தழுவிய நமச்சிவாயப் பத்து
ஏத்த வல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே'

'பிணிவுடை யாக்கை தன்னைப் பிறப்பறுத்து உய்ய வேண்டில்'

என்ற பாடல் அடிகளில் அப்பர் குறிப்பிடுகின்றார்.

சலமிலன்

உலகில் வாழ்கின்ற அனைத்து ஜீவன்களுக்கும் உயர்வு தாழ்வு இன்றி அவற்றின் வினைகளுக்கு ஏற்றவாறு அருள் புரிபவன் ஈசன். காலையும், மாலையும் அவனைக் கைதொழும் அடியார்களின் உளக்கோயிலாக விளங்குபவன். இதனை,

'சலமிலன் சங்கரன் சார்ந்த வாக்கலால் நலமிலன் நாள்தோறும் நல்குவான் நலன்' என்ற பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது.

யாக்கையின் பயன்

மனிதப் பிறவியின் பயன் அரன் கோயிலை வலம் வந்து அவன் தாள் வணங்குவதே. இதனை,

''தலையே நீ வணங்காய்''

என்ற பாடலடி குறிப்பிடுகிறது.

குறையில்லா வாழ்வு

தொண்டர் தம் உள்ளத்தில் துன்பம் சூழ்ந்து வருத்தும் போது இன்அருள் தருபவர் ஈசன். அவர் தம் பொற்கழலைப் பணிந்து ஏத்தக் குறை யாவும் விலகிச் செல்லும். ''புண்ணிய புனிதா உன்பொற் கழல் ஈங்கிருக்கப் பெற்றேன் என்ன குறையுடையேன்'' என்று நாவுக்கரசர் நம்பிக்கையூட்டுகின்றார்.

ஆதிரை நாள் வழிபாடு

ஆதிரை நாளில் சிவனைப் பக்தியுடன் வழிபட்டால் அவன் அருள் கிட்டும் என்ற நம்பிக்கையை,

'எம்மான் ஈசன் எந்தை என் அப்பன் என்பார்க்கு
அம்மான் ஆரூர் ஆதிரை நாளால் அது வண்ணம்'

என்ற பாடல் அடிகள் மூலம் உணர்த்துகின்றார்.

அன்பருக்கு அன்பர்

ஈசனின் திருவடியையே கதியாகக் கொண்டு பரவும் மெய் அடியவர்களுக்கு அருள் புரியும் பித்தன். பித்தருக்குப் பித்தனாய் நிற்பவன். விரும்பி ஏத்துபவர்க்கு அண்மையராகவும், ஏத்தாதவர்க்குத் தொலைவிலும் இருப்பவன். இதனை,

'வந்தடைய நின்ற அடுத்தியார்க்கு அன்பர்'

'வேண்டுவார் வேண்டிலார்க்கே அண்ணியார் பெரிதும் சேயார்'

என்று வெளிப்படுத்தியுள்ளார் நாவுக்கரசர்.

புலன் மாற்றுபவன்

காமம், பாசம் என்ற வெம்மை மிகுந்த நோயால் உடலைப் பாதுகாத்து, தீவினைச் சுமை நிரம்பப் பெற்றவர்கள் மனிதர்கள். ஐம்புலன்களும் தீய நெறியில் செல்லாவண்ணம் அவர்களை மாற்றி நன்னெறியில் செலுத்துபவன் ஈசன். இக்கருத்தினை விளக்கும் முகமாக,

'வென்ற ஐம்புலன்கள் தம்மை விலக்குதற்கு உரியீர்'

என்று புலன் வென்ற தன்மையினையும்,

'கழிந்திலேன் காமவெள்நோய் காதன்மை என்றும் பாசம்'

போன்ற நோயைக் கைவிட்டால் ஈசன் அருளைப் பெறலாம் என்றும் நம்பிக்கையூட்டுகின்றார்.

இளமையில் ஈசனை நினை

'இளமையில் கல்' என்ற பழமொழியினைப் போன்று இளமைக் காலத்தில் ஈசனை நினைத்து ஏத்தாது இளமைத் துடிப்புடன் கணீர் என்னும் ஒலிபெருக்கில் கருத்து அழிந்து மெய்ப்பொருளை நாடவேண்டும். தம்மைப்போல் முதுமைக்காலத்தில் நினைக்கக்கூடாது என்பதனை,

'முன்பெல்லாம் இளையகால மூர்த்தியை நினையாதோடிக்
கண்கண இருமிநாளும் கருத்தழிந்து அருத்தம்இன்றி'

எனக் குறிப்பிடுகின்றார். தானே யாவற்றிற்கும் தலைவன் எனச் செருக்குற்று, நற்கருத்தில்லாத கீழ்மையான குற்றம் உடையவன் இறைவனை அடைய முடியாது என அறிவுறுத்தவும் செய்கின்றார்.

மாயையை நீக்குபவர்

சிவ அடியார்கள் உள்ளத்தில் உள்ள இறையுணர்வைத் திரியாகக் கொண்டு தீபம் ஏற்றும் பொழுது மெய்யுணர்வும், ஞானமும் தோன்றும். உடம்பிற்குள் உள்ள மாயை அகலும்.

'பொள்ளத்த காயமாயப் பொருளினைப் போகமாதர்
வெள்ளத்தைக் கழிக்கவேண்டில் விரும்புமின் விளக்குத் தூபம்
உள்ளத்திரி யொன்று ஏற்றி'

என்று மெய்யன்பர்க்கு நம்பிக்கை ஒளி ஊட்டுகின்றார்.

வஞ்சனை நீக்குக

இவ்வுலகில் நன்கு வாழ கள்ளத்தனம், பகை, குரோதம், வஞ்சனை இவைகளை நீக்க வேண்டும். மற்றும் புனைதல், அலங்கரித்தல் போன்ற திருக்கோலம் தேவையில்லை. நல்லொழுக்கமும் நோன்பும் ஈசன் அருளைப் பெறத் தேவையானவை. இக்கருத்தினை,

'கள்ளத்தை ஒழிய கில்லீர் கோலமும் வேண்டா ஆர்வச்
செற்றங்கள் குரோத நீக்கில் சீலமும் நோன்பும் ஆவார்'

என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன.

நெஞ்சமே கோயில்

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதும் அன்பர்தம் உள்ளத்தில் ஈசன் கோயில் கொண்டிருப்பதனை,

'முகமெலாம் கண்ணீர்மல்க முன்பணிந்து ஏத்தும் தொண்டர்
அகமலால் கோயில் இல்லை ஐயன் ஐயாற னார்க்கே!'

என்ற அடிகளில் விளக்கியுள்ளார்.

ஆசையறுமின்

மண், பொன், பெண் போன்ற மூன்று ஆசைகளில் அழுந்திப் பாவம் செய்து காலதேவன் தண்டனைக்கு ஆட்படும் முன்பு ஈசனை வணங்க வேண்டும் என்ற நம்பிக்கையை,

'காமத்துள் அழுந்தி நின்று கண்டரால் ஒறுப்புண்ணாதே'

என்று எடுத்துரைக்கின்றார்.

சுற்றமும் நீ

அனைத்துச் சுற்றமும் ஈசனே. அப்பனாய், அம்மையாய், ஐயனாய், அன்புடை மாமனாய், மாமியாய், ஒப்புடை மாதராய், ஒண்பொருளுமாய், ஒரு குலமுமாய், சுற்றமுமாய் ஓர் ஊராய் இருப்பதனை,

'தந்தை தாயொடு தாரம் என்னும் தளைப் பந்தம் ஆங்கு அறுத்து'

'ஈன்றாளுமாய் எனக்கு எந்தையு மாய்உடன் தோன்றினராய்'

என்ற அடிகளில் உணர்த்தியுள்ளார்.

காலன் அணுகான்

நடராசப் பெருமானின் அடிமலரைத் தொழுத மெய்யன்பர்கள்பால் காலன் அணுகமாட்டான். மார்க்கண்டேயனைக் காலனிடமிருந்து காத்த ஈசன் நம்மையும் காப்பான் என்ற நம்பிக்கையைச் 'சிட்டர் சேவடிகை தொழச் செல்லும் அச்சிட்டர்பால் அணுகான் சென்று காலனே' என்று வெளிப்படுத்துகின்றார்.

வான் பொருள் கிட்டும்

ஈசனை வணங்கும் அடியார்க்கு வினை நீங்கி இப்பிறவியில் தேவர்களைப் போன்று செல்வம் பெருகும் என்பதை, 'இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்' என்ற அடி மூலம் உணர்த்துகின்றார்.

அருளாவிடில் – பழிசேரும்

மெய்யன்பர்களுக்கு ஈசன் அருள் புரியாவிடின் மக்களால் அது நகைப்பிற்கிடமாகும். அப்பழி இறைவனை வந்தடையும். எனவே போகாவிடில் மூவா முழுப்பழிமூடும் கண்டாய் என்று அடியவர்க்கு நம்பிக்கை யூட்டுகின்றார்.

திருத்தொண்டின் பலன்

மனதில் ஈசனைத் தியானித்து அவன் நாமம் உச்சரித்து, மெய்வருத்தி, திருத்தொண்டு செய்யும் பக்தர்களுக்கு அவன் அருள் புரிவான் என்பது நாவரசர் ஊட்டும் நம்பிக்கை. உழவாரக் கருவி மூலம் திருத்தலங்கள் தோறும் தொண்டு செய்த அனுபவம் அவரை இவ்வாறு பாட வைக்கின்றது.

'உழைத்தும் உள்ளியும் உள்ளத்துளேயுரு இழைத்தும்' என்று திருத்தொண்டின் சிறப்பினை இயம்புகின்றார்.

கள், காமம் விட்டொழியுங்கள்

அறிவை மயக்கும் கள், மனதை மயக்கும் மடந்தையர் நட்பு இவைகளை மரணப் படுகுழியில் வீழும் முன்பு, விட்டு எப்பொழுதும் ஈசனை நினையுங்கள் என்பதனை,

'மட்டுண் பார்கள் மடந்தையர் வாட்கண்ணால்
கட்டுண் பார்கள் கருதுவது என்கொலோ'

இப்பாடல் அடிகள் மூலம் எடுத்துரைக்கின்றார்.

நன்மையும் கெடுதியும் வாரா

சிவன் துணையிருந்தால் சேமித்து வைத்த செல்வமும், தான் விரும்பிய பெண்களும், ஒத்ததும், ஒவ்வாதும் நம்முடன் வாழும் சுற்றத்தார்களாலும் நமக்கு நன்மையும் கெடுதலும் செய்ய முடியாது

என்பதை, 'வைத்தமாடும் மடந்தை நல்லார்களும் ஒத்தொவ்வாத அற்றார்களும் என் செய்வார்' என அறிவுறுத்துகின்றார்.

குற்றம் களைபவர்

உலகத்து உயிர்கள் ஏழுபிறவிகள் எடுக்கும் என்பது நம்பிக்கை. சிவனை வழிபட்டால் ஏழுபிறவிகளிலும் அவ்வுயிர்களின் குற்றத்தை நீக்கி இறைவன் அருள்புரிவான். இக்கருத்தினை,

'மாசி னைக்கழித்து ஆட்கொளவல்ல எம்ஈசன்'

'ஏழு பிறப்பும் ஆளுடைய ஈசர்தாம்
வேதங்களோதி ஓர் வினையேந்தி'

என்ற பாடல் அடிகளில் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஆவா என்றருள் புரிபவன்

அடியவர்கள்பால் சிவன் பேரருள் கொண்டு பல்வேறு வடிவம் தாங்கி அவர்களை 'வா' என அழைத்து அருள் புரிபவன் என்பதை, 'ஆவா என்று அருள் செய்வானை' என்று போற்றுகிறார்.

மாயாது நிலைத்து நிற்பவன்

அமுதத்தின் தன்மை உண்டவர்களுக்கு இறவாத் தன்மையை அளிப்பது. அத்தகைய அமுதம் உண்ட தேவர்கள் மாய்ந்தாலும் தான் வருங்காலம், சென்றகாலம், நிகழ்காலம் என முக்காலமும் ஆகி மாயாமல் நிலைத்து நிற்பவர். இதனை,

'மற்றமரர் உலகத்தாலும் உலவாதானை'

என்று எடுத்துரைக்கின்றார்.

தன்மீது பக்தி கொண்ட அன்பர்களுக்கு 'அஞ்சேல்' என்று அபயம் அளிப்பவன் ஈசன். உயிர்களின் பிறப்பறுப்பவன். மனித உயிர்களுக்கு உயர்வு, தாழ்வு இன்றி அவர் அவர்களின் வினைப்பயனுக்கு ஏற்றவாறு அருள் புரிபவன். பித்தருக்குப் பித்தனாய் நிற்பவன். ஐம்புலன்கள் தீய நெறியில் செல்லா வண்ணம் மாற்றுபவர். தவம், விரதத்தில் நம்பிக்கை கொண்டு மாயையை நீக்கும் அன்பர் நெஞ்சில் கோயில் கொள்பவர். சிவ அடியவர்களைக் காலன் அணுகமாட்டான் போன்ற நம்பிக்கைகளை ஊட்டுகின்றார். நாவுக்கரசர்,

'மார்க்கண்டேயன் நம்பிக்கை என்றும் இளமையைக் கொடுத்தது
பிரகலாதன் நம்பிக்கை தந்தைக்கு முக்தியைத் தந்தது
திலகவதியார் நம்பிக்கை தமையனின் ஊனம் போக்கியது
நாவுக்கரசர் நம்பிக்கை நமையெல்லாம் வாழ வைக்கிறது'

83. நாவுக்கரசரின் நாநலம்

பு. பிரகாசம், சென்னை.

தமிழகம் கண்ட சமயப் பெரியோர்களுள் குறிப்பிடத் தகுந்தவர் சைவ சமயப் பெரியார் திருநாவுக்கரசர் ஆவார். சைவ சமய குரவர் நால்வருள் ஒருவர். அவனருளால் அவன்தாள் வணங்கியவர். மக்கள் தொண்டே மகேசன் தொண்டென வாழ்ந்து வரலாறு படைத்தவர். தீந்தமிழில் தேவாரம் பாடி இறைவனின் இன்னருளைப் பெற்றவர். பன்னிரு திருமுறையில் நான்கு, ஐந்து மற்றும் ஆறாம் திருமுறைகளை அருளிச் செய்தவர். திருஞானசம்பந்தருடன் இணைந்து வாழும் வாய்ப்பினைப் பெற்றவர். வேளாளர் குலத்திலே பிறந்த இவர் தமது தன்னலமற்ற தொண்டினால் இறையருளை முழுமையாகப் பெற்றவர். உழவாரப் பணிசெய்து உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர். தமிழகத்தின் எல்லைகளைத் தமது திருப்பாதங்களால் புனிதப் படுத்தியவர்.

இறையுணர்வோடு தமிழுணர்வும் ஒருசேரப் பெற்ற பெருமையை உடையவர். இவரது தேவாரப் பாடல்களில் இவ்விரு உணர்வுகளும் இணைந்து இழையோடுவதை உணரலாம். தாண்டக வேந்தர் என்று தமிழறிஞர்களால் அழைக்கப் பெற்றவர். இறை அனுபவத்தை எளிய தமிழில் எடுத்துரைக்கும் ஆற்றல் படைத்தவர். இவர் காலத்தில் வாழ்ந்த சிவனடியார் பலர் அப்பரிடம் பேரன்பும் பக்தியும் கொண்டிருந்தனர்.

அப்பரிடம் அன்பு கொண்ட அடியார் பலருள் அப்பூதியடிகளும் ஒருவர். தமது ஊரான திங்களூரில் திருநாவுக்கரசரிடம் கொண்டிருந்த அளவற்ற அன்பின் காரணமாகப் பல தான தருமங்களைத் திருநாவுக்கரசரின் பெயராலேயே செய்து வந்தார். ஒரு சமயம் அப்பர் திங்களூருக்கு வந்தார். அங்கே பல தரும காரியங்கள் தமது பெயரால் நடத்தப்பெறுவது கண்டு அங்கிருந்தோரிடம் அனைத்து விவரங்களையும் கேட்டறிந்து கொண்டு அப்பூதியடிகள் வீட்டுக்கு அப்பர் பெருமான் சென்றார். தம்மீது அப்பூதியடிகள் கொண்டிருந்த அன்பால் நெகிழ்ந்து அவருடைய இல்லத்தில் உணவருந்த ஒப்புக்கொண்டார். அப்பர் நீராடி இறைவனைத் தொழுது வருவதாகக் கூறிச் சென்றார். தமது உள்ளங்கொள்ளை கொண்ட அப்பருக்காக அப்பூதியடிகள் இல்லத்தில் அறுசுவை உணவு அன்புடன் உருவாக்கப்பட்டது. உணவு பரிமாற வாழை இலையைப் பறித்துவர அப்பூதியடிகளின் மகன் மூத்த திருநாவுக்கரசு தோட்டத்திற்குச் செல்கிறான்.

அங்கு அவனைப் பாம்பு கடித்து விடுகின்றது. ஆனாலும் அச்சிறுவன் வாழை யிலையைக் கொண்டு வந்து தாயிடம் கொடுத்துவிட்டு இறந்து போகின்றான்.

மகனையிழந்த அந்நிலையிலும் அப்பூதியடிகளுக்கு விருந்தளிக்கும் வாய்ப்பை இழக்க விரும்பாத அப்பூதியடிகள் தம்பதியினர் மகனின் இறப்பை மறைத்து அப்பருக்கு விருந்தளிக்க முடிவு செய்தனர். உணவருந்த வந்த அப்பர் பெருமான் சிறுவனைத் தம்மோடு உணவருந்த அழைக்கின்றார். அவன் நமக்கிங்கு உதவான் என்று மழலையின் மறைவை மறைத்து அப்பூதியடிகள் கூறுகின்றார். ஒளிக்காமல் உண்மையைக் கூறுமாறு அப்பர் வலியுறுத்தவே அப்பூதியடிகள் நடந்த உண்மையை எடுத்துரைக்கின்றார். பின்னர் சிறுவனின் உடலுடன் இறைவன் திருக்கோயிலுக்குச் சென்று விடம் தீர்த்து சிறுவனை உயிர்ப்பித்துத் தர வேண்டுகின்றார். அப்போது அப்பர் பாடிய விடம் தீர்த்த திருப்பதிகம் அவரது நா நலத்தினை – நற்றமிழ்த் திறத்தினை நமக்கு உணர்த்தும் வண்ணம் அமைந்துள்ளது.

அப்பர் இப்பதிகத்தில் இறைவனின் தோற்றத்தையும் இயல்புகளையும் சுவைபட எடுத்துரைக்கின்றார். எண்களின் வழியே தமது எண்ணங்களை விளக்குகின்றார். ஒன்று முதல் பத்து வரையில் ஒவ்வொரு எண்ணுக்கும் ஒரு பாடல் வீதம் பத்துப் பாடல்களில் பரமனின் புகழை அனுபவித்துப் பாடியுள்ளார். இப்பதிகத்தின் சிறப்புகள் இங்குத் தொகுத்துரைக்கப் பட்டுள்ளன.

ஒன்று

இறைவனின் அருள் எல்லையற்ற உயர்வினை உடைய ஒன்று. அவன் தலையில் அணிந்துள்ள நிலவும் ஒன்று. இறைவன் திருக்கரத்தில் ஏந்தியிருக்கும் மண்டை ஓடும் ஒன்று. விண்ணுக்கும் மண்ணுக்குமாக உயர்ந்து நின்ற இறைவனின் உயரமும் இவ்வுலகில் இல்லாத ஒன்று.

இரண்டு

இமையவர் தொழும் இறைவனின் பாதங்கள் இரண்டு. அவன் திருக்காதில் ஆடும் குழைகள் இரண்டு. அர்த்தநாரீஸ்வரனாக உள்ள இறைவனின் வடிவில் உள்ள உருவம் ஆண் பெண் என இரண்டு. அவன் திருக்கரத்தில் தாங்கியுள்ளவை மான் மழு என இரண்டு.

மூன்று

சிவபெருமான் கண்கள் மூன்று. அவன் கையில் உள்ள சூலத்தின் நுனி மூன்று. அவன் கையில் உள்ளவை வில், நாண், கணை ஆகிய மூன்று. அவன் அழித்த புரங்கள் மூன்று.

நான்கு

இறைவனின் திரு முகங்கள் நான்கு. அவனால் படைக்கப்பட்ட சனனம் முதல் தோற்றமும் நான்கு. அவன் ஊர்ந்து வரும் காளையின் கால்கள் நான்கு. அவன் புகழ் பாடும் வேதங்கள் நான்கு.

ஐந்து

அவனிடம் உள்ள பாம்பின் தலைகள் ஐந்து. அவன் வென்ற புலன்கள் ஐந்து. அவனால் எரிக்கப்பட்ட மன்மதன் கணைகள் ஐந்து. அவன் ஆடிய ஊழிக்கால நடனங்கள் ஐந்து.

ஆறு

அடியவர்களுக்காக இறைவனால் படைக்கப்பட்ட அங்கங்கள் ஆறு. அவனுடைய மகன் முருகனுக்கு முகங்கள் ஆறு. அவனுடைய தாரில் தேனுண்ணும் வண்டின் கால்கள் ஆறு. அவனால் உருவாக்கப் பட்ட சுவைகளும் ஆறு.

ஏழு

இறைவனால் உருவாக்கப்பட்ட ஊழிகள் ஏழு. கடல்களும் ஏழு. அவன் ஆளுகைக்கு உட்பட்ட உலகங்களும் ஏழு. இசையின் வண்ணங்களும் ஏழு.

எட்டு

எண்குணத்தான் என்று போற்றப்படும் இறைவனின் குணங்கள் எட்டு. அவன் அணியும் மலர்களும் எட்டு. அவனுடைய தோள்களும் எட்டு. அவனால் படைக்கப்பட்ட திசைகளும் எட்டு.

ஒன்பது

இறைவனால் படைக்கப்பட்ட உடலுக்கு வாசல்கள் ஒன்பது. அவன் மார்பில் அணிந்துள்ள நூலும் ஒன்பது. அவனது அழகிய சடையும் ஒன்பது.

பத்து

பரமனிடம் உள்ள பாம்பின் கண் செவி ஆகியவை பத்து. அவனால் ஒடுக்கப்பட்ட இராவணனின் தலைகள் பத்து.

இவ்வாறு எண்களின் வாயிலாக இறைவனின் தோற்றம், இயல்பு, அருள் முதலியவற்றை அப்பர் பெருமான் தம் நாவன்மையால் எடுத்துரைத் துள்ளார். பக்திச் சுவை பயப்பதோடு நில்லாமல், சிந்தைக்கு விருந்தாகவும் அமைந்துள்ள அப்பரின் விடம் தீர்த்த திருப்பதிகம் படித்துப் பயன் பெறுவோம்.

திருநாவுக்கரசர் தேவாரம்

IV : 18 விடம் தீர்த்த திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

1. ஒன்றுகொலாம் அவர் சிந்தை உயர்வரை;
ஒன்றுகொலாம் உயரும் மதி சூடுவர்;
ஒன்றுகொலாம் இடுவெண் தலை கையது;
ஒன்றுகொலாம் அவர் உயர்வது தானே.

2. *இரண்டுகொலாம்* இமையோர் தொழு பாதம்;
இரண்டுகொலாம் இலங்கு குழை; பெண், ஆண்,
இரண்டுகொலாம் உருவம்; சிறு மான், மழு
இரண்டுகொலாம் அவர் ஏந்தினதாமே.

3. *மூன்றுகொலாம்* அவர் கண் நுதல் ஆவன;
மூன்றுகொலாம் அவர் சூலத்தின் மொய் இலை;
மூன்றுகொலாம் கணை, கையது வில், நாண்;
மூன்றுகொலாம் புரம் எய்தனதாமே.

4. *நாலுகொலாம்* அவர்தம் முகம் ஆவன;
நாலுகொலாம் சனனம் முதல் தோற்றமும்;
நாலுகொலாம் அவர் ஊர்தியின் பாதங்கள்;
நாலுகொலாம் மறை பாடினதாமே.

5. *அஞ்சுகொலாம்* அவர் ஆடு அரவின் படம்;
அஞ்சுகொலாம் அவர் வெல் புலன் ஆவன;
அஞ்சுகொலாம் அவர் காயப்பட்டான் கணை;
அஞ்சுகொலாம் அவர் ஆடினதாமே.

6. *ஆறுகொலாம்* அவர் அங்கம் படைத்தன;
ஆறுகொலாம் அவர்தம் மகனார் முகம்;
ஆறுகொலாம் அவர் தார்மிசை வண்டின் கால்;
ஆறுகொலாம் சுவை ஆக்கினதாமே.

7. *ஏழுகொலாம்* அவர் ஊழி படைத்தன;
ஏழுகொலாம் அவர் கண்ட இரும் கடல்;
ஏழுகொலாம் அவர் ஆளும் உலகங்கள்;
ஏழுகொலாம் இசை ஆக்கினதாமே.

8. *எட்டுக்கொலாம்* அவர்ஈறு இல்பெரும் குணம்;
எட்டுக்கொலாம் அவர் சூடும் இன மலர்;
எட்டுக்கொலாம் அவர் தோள் இணை ஆவன;
எட்டுக்கொலாம் திசை ஆக்கினதாமே.

9. *ஒன்பதுபோல்* அவர் வாசல் வகுத்தன;
ஒன்பதுபோல் அவர் மார்பினில் நூல் இழை;
ஒன்பதுபோல் அவர் கோலக் குழல் சடை;
ஒன்பதுபோல் அவர் பார் இடம்தானே.

10. *பத்துக்கொலாம்* அவர் பாம்பின் கண், பாம்பின் பல்,
பத்துக்கொலாம் எயிறு நெரிந்து உக்கன;
பத்துக்கொலாம் அவர் காயப்பட்டான் தலை;
பத்துக்கொலாம் அடியார் செய்கைதானே.

திருச்சிற்றம்பலம்.

84. நாவுக்கரசர் உணர்த்தும் அறம்

ஆ. பிரபாகரன், மீஞ்சூர்.

"சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கினும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம் எந்நாவில் மறந்தறியேன்" (நாவுக்கரசர்)

அறமாவது சிவ தருமம். அறம் கொண்ட சிவதன்மம் உரைத்த பிரான் சிவபெருமான் ஆவார். அவர் சுத்தமாயை யாகும் கல்லால மர நிழற் கீழ் தென்முகக் கடவுளாய் வீற்றிருந்தருளி சனகாதி முனிவர் நால்வருக்கும், அரி அயற்கும், நந்தி தேவருக்கும், அகத்திய மாமுனிவருக்கும் பார்க்குமிடமெங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமயமாகி, தாமே தூய அறநெறியை சொல்லாமற் சொல்லி உணர வைத்ததை யாவரும் அறிவர்.

உயிர்களை உறுபசியும், ஓவாப்பிணியும், செறுபகையும், இறப்புத் துயரும், இயற்கைச் சீற்றங்களும் எக்காலத்தும் வாட்டி வதைக்கின்றன. உயிரை உடலோடு பிணிக்கும் அனைத்து வகைத் துன்பங்களுக்கும் விடை கொடுக்க உயிரின் தலைவனாகிய உத்தம இறைவனிடம் அதற்குப் பற்று ஏற்பட வேண்டும். தூய மனமும், ஒழுங்கான வழியிற் செல்லும் ஐம்புலன்களும் அடையப்பெறும்போது உள்ளத்தின் உள்ளே ஒளிந்து கொண்டிருக்கும் ஒப்பற்ற பேரொளியைக் கண்டு, உவந்து, கலந்து சிவானந்தப் பேற்றை அடைய முடியும் என்பது அனுபூதிச் செல்வர்களின் துணிபு.

நல்வினைகள் மனக்கோயிலில் விளக்கேற்றி, அலங்கரித்து, இறை தரிசனத்துக்கு வழி ஏற்படுத்துகின்றன. தீவினைகளோ மேலும் மேலும் அக இருளை அதிகப்படுத்தி மயக்கமும், குழப்பமும் உருவாக்கி வாழ்க்கையை பேதலிக்கச் செய்கின்றன.

தன் உள்ளத்தின் உள்ளே உலக நாயகனை தேடிக் கண்டுகொண்ட சீலமிகு திருத்தொண்டராகிய வாகீசப் பெருந்தகை, ஒவ்வொருவரும் அவ்வாறே கண்டு பணிந்து உய்வு பெற, அழகிய இன்தமிழ்ப் பாக்களால் ஆகிய காலம் வெல்லும் பொற்கல்வெட்டுக்களைச் செதுக்கியுள்ளார்கள். மேலும் ஊரூர் சென்று உழவாரப் பணிபுரிந்து காணும் உருவனைத்தும்

சிவமயமாகத் திருக்காட்சி கண்டு தாம் கண்டுணர்ந்த மெய்யறத்தை மேதினிக்கு வகுத்தளித்துச் சென்றுள்ளார்கள்.

அறமாவது மனம், புத்தி, சித்தம் போன்ற அகக் கருவிகளையும், பொறி, புலன்களாகிய புறக்கருவிகளையும் நன்மையும், தூய்மையும், மேன்மையும் கிட்டும் நெறிகளில் செலுத்துவதாகும். திருஅங்கமாலை போன்ற பதிகங்களில் திருநாவுக்கரசர் நயமுறக் கூறுவதாவது: கண்களால் இறைவனின் திருவடிவ அழகைக் கண்டு மகிழவும், இறைவனுக்காக ஏங்கிக் கண்ணீர் சிந்தவும் வேண்டும்; செவிகளால் இறைவனைப் புகழவும், ஐந்தெழுத்தை ஓய்வின்றி நவிலவும் வேண்டும்; கைகளால் இறைவனின் திருத்தாள் தொழுவதோடு, மலர் பறித்து மாலை கட்டி அவனுக்குச் சூட்டி மகிழவும் வேண்டும்; கால்களால் இறையருட் கோயில்களை நாடி வலம் வருதல் வேண்டும்; நெஞ்சத்தால் இறையருளை இடையறாது சிந்தித்தல் வேண்டும்.

''நகமெலாம் தேயக் கையால்
நாண்மலர் தொழுது தூவி
முகமெலாம் கண்ணீர் வார
முன்பணிந்து ஏத்தும் தொண்டர்
அகமலால் கோயில் இல்லை
ஐயன் ஐயா றனார்க்கே''

என்பதும் அவர் வாக்கு.

''வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே''

இத்தெய்வத் திருத்தொண்டர்க்கு பெற்றோர் இட்ட பெயர் மருள்நீக்கியார் அல்லவா? புறச்சமயப் படுகுழியில் அவர் வீழ்ந்தபோது அவர்கள் அளித்த பெயர் தருமசேனர் என்பதும் அல்லவா? அறியாமை எனும் மருள்நீக்க, அறம் நிலைக்க வழிகாட்டிய திருத்தொண்டர் வாழ்வு நினைக்க நினைக்க இன்பந் தரவல்லது; அழுது அழுது ஆட்பட்ட அன்பரல்லவா நாவினுக்கரையர்!

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளிலும் ஒவ்வொருவரும் வாழ்க்கையைத் தூய்மை செய்துகொள்ளுதல் வேண்டும். அடியவர்களின் பெருமைக்கு ஈடில்லை; இணையுமில்லை; அடியவர்க்கு அடியவனாக இறைவனே அருள் புரிவதைப் பல நிகழ்ச்சிகள் விளக்குகின்றன. தொண்டு புரிவதால் மட்டுமே ஒருவனுடைய முன்வினை பெரிதும் தேய்கிறது.

அடியார் பல திறத்தார். திருக்கோயில் திருவலகிடுவோர், மெழுக்கு வோர், மலர் பறிப்போர், மாலை தொடுப்போர், திருவிளக்கிடுவோர், இன்னிசை பாடுவோர், இசைக்கருவி இசைப்போர், மந்திரமாமறை ஓதுவோர், ஐந்தெழுத்திசைப்போர் இன்னோரன்ன பலர் பரமர்க்கு ஆளாகிப் பன்னாள் தொண்டாற்றி வருவார். இதில் தொண்டின் சிறப்பு அவர் செய்யும் பணியில் இல்லாமல், அவர்தம் மனப்பாங்கில் அமையும். அதனால் எச்சிறுதொண்டரையும் அவமதித்தல் ஆகாது. அனைவரையும் மதித்துச் சீரிய முறையில் நடந்து கொள்வதே அறமாகும்.

"இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே"

ஞானம் நிறைந்த அகமே நல்லகம். தொன்றுதொட்டு வரும் பழக்கத்தினால் புறத்தே விடயத்தே சென்று பற்றும் தன்னறிவை அவ்வாறு செல்லாது அடக்கி, அகத்தே ஐந்தெழுத்தின் கருப்பொருளின் சிறப்பைச் சிந்தித்தும் சேவித்தும் சிவமயமாதல் பிறப்பொழிக்கும் செந்நெறியாகும். படைப்பைக் காணுந்தோறும், படைப்பின் தலைவனாம் பரமனின் அருளாற்றலைச் சிந்தித்து, உணர்வில் அகவிளக்கொளியில் இறைவனுக்கு ஆட்பட்டு வாழும் வாழ்வே விடுதலைக்கு வழி. இயற்கையனைத்தும் இறைவனின் திருவடிவேயன்றி வேறில்லை. இயற்கையில் நிகழ்வுறும் யாவும் இறைவனின் திருவுளப்படி நிகழ்வன என்னும் ஞானமே ஆழ்ந்த அமைதியையும், ஆனந்தத்தையும், தெளிவையும், சேவை மனப்பான்மையையும், வேறுபாடு கருதாத சமநோக்கையும் நல்கி மக்கட் குலத்தை மேன்மைக்கு இட்டுச் செல்லும்.

'சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமிலன்'

என்பது வாகீசர் வாக்கு.

பேரொளிப் பிழம்பாகவும், அனைத்தறிவும், அனைத்தாற்றலும் நிறைந்ததாகவும், விழுமையான நன்மையின் திருவடிவாகவும், அறம், பொருள் விளங்கிய போதிலும் அதனைச் சாராதவர்க்கு நலம்பெற இயலாத தன்மையை, உண்மையை இச்சொற்களால் அப்பரடிகள் விளக்கியுள்ளார்கள். விளக்கிற்கு அருகில் செல்வோர்க்கு ஒளியும், வெப்பமும் கிட்டுமாறுபோல் இறைவனின் அருகில் நினைவாலும் செயலாலும் செல்லுவோர்க்குப் பயன் கிட்டுவது கண்கூடு.

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையின் விளக்கங்களைச் சைவ சித்தாந்தம் தெளிவுபடுத்தும். பதியும், பசுவும், அநாதி. இடையில்

வரும் பாசம், பதி உணர்த்த பசுவை விட்டு நீங்கும். அப்பரின் தன்னிலை அனுபவம்: 'எம் பட்டம் உடையானை', 'யாம் இவ்வுடற்கண்ணிருந்து ஆளும் உரிமையோடு விளங்கினோம். தியாகேசன் எம் உரிமையைத் தன்னுரிமையாய்ப் பற்றிக் கொண்டான்' என்கிறார் அப்பர் சுவாமிகள். பெத்தத்தில் உடலின் ஆட்சி உயிரினது. முத்தியில் அது கடவுளுடையது. ஏகனாகி இறைபணி நிற்கின்ற அனுபவம் உரியார்க்கே இவ்வுண்மை விளங்கும்.

இதனையே,

'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்.................
..................தலைப்பட்டாள் தலைவன் தாளே'

என்று திருநாவுக்கரசர் படர்க்கையில் தம்மை நாயகியாகப் பாவித்துத் தாம் பெற்ற அனுபவத்தைப் பாடியுள்ளார்கள்.

எல்லா அறங்களுக்கும் அறவாழி அந்தணனாகும் பரம்பொருளே ஆதாரம். தன்னலம் நீக்கி, பொது நலம் கருதி, அனைத்துயிரும் இன்புற்று வாழ, மனம், மொழி, மெய்களால் தூய்மையும், நன்மையுமானவற்றையே பயின்று வரவேண்டும். இதனால் மும்மலம் நீங்கும்; இதுவே முப்புர தகனம்.

நாவுக்கரசர் சிவகதி விளைக்கும் வழியைக் காட்டுகிறார்:

"மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையுமன்றே"

1. மெய்ம்மையாம் உழவைச் செய்தல் 2. விருப்பெனும் வித்தை வித்தல் 3. பொய்ம்மையாம் களை பறித்தல் 4. பொறை எனும் நீரைப் பாய்ச்சல் 5. தம்மையும் நோக்கிக் காண்டல் 6. தகவெனும் வேலியிடல். 7. செம்மையுள் நிற்றல் 8. சிவகதி விளைதல்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய மெய்ந்நெறி நான்கும் சிவகதியாகும். இவற்றை விளைக்க வழிகாட்டுகிறார் சொல்லின் செல்வர். இவர் காட்டிய வழியில் நடந்து சிவப்பேறு பெறுவோமாக.

சிவானந்தப் பேறு சிந்திக்க மூவகை யோக நெறிகளைச் சிந்தித்துணர்ந்து செயல்படவேண்டும். ஆன்மயோகம், ஞானயோகம், சிவயோகம் என்னும் மூவகை யோகத்துள் தன்னுயிர் தானறப் பெறுதல் ஆன்மயோகம். அவனருளே கண்ணாகப் பெற்று அருள்மயமாய் ஒளிர்தல் ஞானயோகம்.

அச்சிவ ஞானத்தால் சிவனைப் பெறுதல் சிவயோகம் (சிவானந்தப் பேறு) பாச ஞானத்தாலும், பசு ஞானத்தாலும் அளவிடற்கரிய பரம்பொருளுக்குப் பதி ஞானமே திருவுருவம் ஆகிறது.

தீக்கை, சிவாகம படனம், சரியை முதலியன உணர்த்தும் நூல்களில் நன்னெறி, ஆராய்ச்சிக் கேள்வி, நல்லொழுக்கம், உள்ளத் தூய்மை, நிலைபொருள், நிலையாப் பொருள்உணர்ச்சி, பிறப்பச்சம், வீடுபேற்று அவாப்பெருக்கம் என்னும் எட்டும் உடையோர்க்கு நூல்வழி இறையருள் நெறி புலப்படும்; அவருள்ளும் பக்குவம் மிக்கோர்க்கு குருவழி உபதேசம் கிட்டும். அவருள்ளும் சகலர்க்குப் படர்க்கையிலும், பிரளயாகலர்க்கு முன்னிலையிலும், விஞ்ஞானகலர்க்கு (உள் நின்று) தன்மையிலும் இறையருள் அனுபவங்கள் கூடும் என்று சாத்திரங்கள் வகுத்துரைத்துள்ளன.

எனினும் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் போன்ற அருள் அடியார்கள் வாழுங்காலத்தில் அவர்களுடன் பழகியும், பணிந்தும், அருளனுபவங்களை வியந்தும் பக்திப் பெருக்கில் தலைப்பட்ட திருத்தொண்டர்கள் பல்லோர் மிக எளிதில் பிறவிக் கடலைத் தாண்டி சிவானந்தப் பேறாம் முத்திக் கனியைப் பெற்றுள்ளதைத் தெய்வத்தமிழ் மறைகளால் உணரமுடிகிறது. எடுத்துக்காட்டாகத் திருஞானசம்பந்தரின் திருமணத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் முத்திக்கான வாயிலை அருட்பெருஞ்சோதி திறந்து அழைத்து ஆட்கொண்ட வரலாறு இங்கு எண்ணத்தக்கது.

''ஞானத்தை விளக்கையேற்றி நாடியுள் விரவவல்லார்
ஊனத்தை ஒழிப்பர்போலும் ஒற்றியூர் உடைய கோவே!''

''தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே'' (திருநாவுக்கரசர்)

85. சேக்கிழாரில் அப்பரும் சமணரும்

இரா. பிரியதர்சினி, கரூர்.

சோழப் பேரரசில் ஓர் அமைச்சராக இருந்த சேக்கிழாரால் இயற்றப் பட்ட நூல் பெரியபுராணம் ஆகும். தேவாரம் பாடிய மூவர் உள்ளிட்ட அறுபத்து மூன்று அடியார்களுடைய வரலாற்றினை இந்நூல் கூறுகிறது. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாவுக்கரசர் பற்றித் தெளிவாக விளக்குகிறார். நாவுக்கரசர் சமணத்தில் இருந்ததையும், பிறகு சைவத்திற்கு மாறியதால் சமணர்களால் அடைந்த துன்பத்தையும், இத்துன்பத்திலிருந்து அவர் விடுபட்ட அற்புதங் களையும் சேக்கிழார் வழி நின்று விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நாவுக்கரசரின் பிறப்பு மற்றும் வளர்ப்பு

நாவுக்கரசர் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் பிறந்தார். தந்தையார் புகழனார், தாயார் மாதினியார், தமக்கை திலவதியார். வேளாளர் குலத்தைச் சார்ந்த இவரது இயற்பெயர் மருணீக்கியார் ஆகும். இளம் வயதிலேயே பெற்றோரை இழந்த நாவுக்கரசர் தமக்கையரால் வளர்க்கப்பட்டார். தமிழ், வடமொழி இரண்டிலும் தேர்ந்த புலமை எய்தினார்.

மருணீக்கியாரின் வேறு பெயர்கள்

சமண சமயத்தில் இருந்தபோது "தருமசேனர்" எனவும், திருஞான சம்பந்தரால் "அப்பர்" எனவும், இறைவனால் "நாவுக்கரசர்" எனவும், மக்களால் "ஆளுடைய அரசு" என்றும், "வாகீசர்" என்றும் அழைக்கப் பட்டார். தாண்டகம் என்னும் செய்யுள் வகையைச் சேர்ந்த பாடல்களை இயற்றுவதில் வல்லவராதலால் "தாண்டக வேந்தர்" எனவும் பாராட்டப் பட்டார்.

சைவத்திலிருந்து சமணத்திற்கு மாறுதல்

திலகவதியாருக்கு நிச்சயிக்கப்பட்டிருந்து கலிப்பகையார் போரில் உயிரை விடுகிறார். இதனால் இறந்து போக முடிவெடுத்த தமக்கையிடம் மருணீக்கியார், தனியாக வாழ இயலாமல் தாமும் உயிர் விடுவதாகக் கூற, திலகவதியார் தம் முடிவை மாற்றிக் கொண்டு தம்பியை

வளர்ப்பதற்காக உயிர் வாழ்கிறார். இந்நிலையில் தருமச்சாலைகளையும், தண்ணீர்ப் பந்தல்களையும் அமைத்தும், குளங்களைத் தோண்டியும், மக்களுக்கும், புலவர்களுக்கும் வேண்டிய பொருள்களை வழங்கியும் கொடையில் சிறந்து விளங்கினார் மருணீக்கியார். இந்நிலையில் வாழ்க்கையில் நிலைத்து நிற்காத மண்ணுலகின் இயல்பைப் பார்த்து "நிலையா வாழ்க்கை அல்லேன்" என்று கூறி, சமண மதத்திற்கு மாறுகிறார். இதனைச் சேக்கிழார்,

> "கொல்லாமை மறைந்துறையும்
> அமண்சமயம் குறுகுவார்"

எனக் கூறுகிறார்.

சமணராக வாழ்தல்

பாடலிபுத்திரமாகிய திருப்பாதிரிப்புலியூர் என்னும் இடத்தை அடைந்து, சமணர்கள் வாழும் பள்ளியை அடைந்தார் மருணீக்கியார். அங்குச் சமணர்கள் "முத்தியைத் தெரிந்து கொள்ளும் வழி இதுதான்" என்று பல பொய் நூல்களைக் கற்பித்தார்கள்.

சமண சமய சாத்திரங்கள் அனைத்தையும் கற்றுப் பழகியதும் தருமசேனர் எனப் பெயர் பெற்றார். பின் தம் அறிவாற்றலால் பௌத்த சமயத்தவர்களை வாதத்தில் வெற்றி பெற்றுத் தம் புகழை நிலை நிறுத்தினார். "உலகின்கண் ஒளியுடைய வித்தகராய் சமண்சமயத் தலைமையினில் மேம்பட்டார்" என்ற சேக்கிழார் வரிகள் இக்கருத்தை விளக்குகிறது.

திலகவதியாரின் வேண்டுதல்

மருணீக்கியார் சமண சமயத்தவராக வாழ்ந்து வந்த சமயத்தில் திலகவதியார் திருமடத்தை விட்டு விலகித் திருவதிகை வீரட்டானேசுவரனுடைய திருவடிகளை அடைந்தார். அங்கு வாழும் மக்கள் புகழ்ந்து பாராட்டும்படி நல்ல பண்பினோடு திருப்பணிகள் பலவற்றைச் செய்தார். இந்நிலையில் சகோதரனின் மத மாற்றத்தால் துயரம் கொண்டு, இறைவனிடம் "அவமொன்று நெறிவீழ்வான் வீழாமே அருளும்" என வேண்டுகிறார். அதற்கு இறைவன் "சூலை நோய் தந்து அவனை ஆளாகக் கொள்வேன்" என உறுதியளிக்கிறார்.

சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறுதல்

இறைவனால் ஏற்பட்ட சூலை நோய் நாவுக்கரசரை வாட்டத் துவங்கியது. சமணர்கள் எவ்வளவோ முயன்றும் அந்நோயை தீர்க்க இயலவில்லை. அவர்கள் மேற்கொண்ட முயற்சிகளால் அந்நோயின் தீவிரம் அதிகமானதே தவிர குறையவில்லை. இதைச் சேக்கிழார் பின்வருமாறு கூறுகிறார்.

"புண் தலைவன் முருட்டமணர்
....
கண்டு மிகப் பீலிகொடு
கால் அளவும் தடவிடவும்
பண்டையினும் நோவுமிகப்
.................................."

நோயின் வேதனையை தாங்க இயலாத அப்பர் தமது தமக்கையின் உதவியை நாடுகிறார். திலகவதியாரின் அறிவுரையின்படி திருவதிகை வீரட்டானத்திற்குப் போய்ச் சுவைமிக்க வார்த்தைகளால் ஈசுவரருடைய பெருமைகளை அறிந்து பாட துவங்கினார். "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்ற பாசுரம் பாடியதன் மூலம் இறைவன் அருளால் சூலை நோயி லிருந்து விடுபட்டார் அப்பர்.

சமணர்களால் அப்பர் அடைந்த துன்பங்கள்

அப்பரின் மன மாற்றத்தை அறிந்த சமணர்கள் தங்களது சமயத்தின் செல்வாக்கு குறைந்துவிடும் என்ற அச்சத்தினால் பல்லவ மன்னனிடம் சென்று அப்பரை குறித்துக் குறை கூறினர். நாவுக்கரசரை அழித்து விடும்படி ஆலோசனைகளையும் வழங்கினர். நாவுக்கரசரைச் சுண்ணாம்புக் காளவாயில் இடுமாறு கட்டளையைப் பல்லவன் பிறப்பித்தான். ஆனால் அக்காளவாய் "ஐயர் திருவடி நிழல் அருளாகிக் குளிர்ந்ததே" என சேக்கிழார் கூறுகிறார். பின்பு பல்லவ மன்னன் பாம்பின் விடத்தை நாவுக்கரசருக்குக் கொடுக்க, அதனாலும் நாவுக்கரசர் எவ்விதத் துன்பத்தையும் அடையவில்லை. இதை "அடியார்க்கு நஞ்சமுதமும் ஆவதுதான் அற்புதமோ?" என சேக்கிழார் கூறுகிறார். பிறகு பட்டத்து யானையை அப்பர் மேல் ஏவினர் சமணர். இதிலும் துன்பம் அடையாத அப்பரைக் கல்லைக் கட்டி கடலில் எறிந்தனர். ஆனால் 'சொற்றுணை வேதியன்" என்ற பாசுரத்தை அப்பர் பாடக் கருங்கல் மூழ்காமல் மிதந்தது. பின்னர் அப்பர் கரையேறியதைச் சேக்கிழார், "ஏந்தியே கொண்டெழுந்தருளுவித்தனன் பூந்திருப் பாதிரிப் புலியூர்ப் பாங்கரில்" என்று கூறுகிறார். பின்பு பல்லவ மன்னனும் சமணத்தை விட்டுச் சைவத்திற்கு மாறிச் குணபரவீச்சரம் என்னும் கோயிலைக் கட்டினான்.

சமணர்களைச் சாடுதல்

"தவமென்று பாய் இடுக்கித் தலைபறித்து நின்றுண்ணும் அவமொன்று நெறி வீழ்வான் வீழாமே அருளும்", "பொய்தருமால் உள்ளத்துப் புன்சமணர் இடங்கழிந்து", "முதிரவரும் பாதகத்தோர்", "மாபாவிக் கடையமணர்" "பாவக்கொடு வினைமுற்றிய படிறுற்றிடு கொடியோர்" போன்ற சேக்கிழாரின் வரிகள் சமணர்களைச் சாடுவதாக அமைந்துள்ளன.

இதைப் போல் "அறந்தெரியா ஊத்தைவாய் அறிவில் சிந்தை ஆரம்பக் குண்டரோ டயர்த்து நாளும்", "தலையெலாம் பறிக் குஞ்சமண் கையருள்", குண்டரைக் குணமில்லாரைக் கூறையில் மிண்டரைத்", "முடையரைத் தலை முண்டிக்கும் மொட்டரைக் கடையரைக்", "ஒள்ளரிக்கணார் முன்னமண் நின்றுணும் கள்ளரைக்" போன்ற அப்பரின் வரிகளும் சமணர்களைச் சாடுவதாக உள்ளன.

நாவுக்கரசரைச் சேக்கிழார் பார்த்திருக்க முடியாது. ஏனெனில் இருவரும் 400 ஆண்டுகள் இடைவெளியில் வாழ்ந்தவர்கள். எனினும் நாவுக்கரசரை மனக்கண்ணில் கண்ட சேக்கிழார் தம் திறமையால் தெளிவாக அப்பரைப் படம்பிடித்துக் காட்டுகிறார். அப்பரின் சமய மாற்றத்தைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

86. பல்லவ உலகில் நாவுக்கரசர்

ரா. புஷ்பவல்லி, தஞ்சை.

"திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கு மடியேன்" என்று நம்பியாரூரால் போற்றப் பெறும் நாவுக்கரசர், அறுபான் மும்மை நாயனார் வரிசையில் பத்தொன்பதாம வராகவும், சைவ சமயாசாரியர் நால்வருள் இரண்டாமவராகவும் வைத்து ஏத்தப் பெறும் மாண்பினையுடையவர் ஆவார்.

மகேந்திர பல்லவர் காலத்தில் வாழ்ந்த மக்கள் மனநிலையை, அரசன் பாதித்ததைவிட அதிகமாக, ஒரு தனி மனிதர் நாவுக்கரசர் எவ்வாறு பாதித்தார் என்பதைப் பல்லவ உலகில் நாவுக்கரசர் என்ற இந்தத் தலைப்பின் கீழ் ஆராய முற்பட்டுள்ளேன்.

தொண்டை நாடு எனப்படும் பகுதியில் பல்வனாகிய சிம்ம விஷ்ணு (கி.பி. 575 முதல் 600 வரை) பல்லவராட்சியைத் தமிழகத்தில் நிலைக்கச் செய்தான். திருநாவுக்கரசர் அவதரித்த காலத்தில் வடக்கே பல்லவர் கை ஓங்கி நின்றது. பௌத்தர்களும், சமணர்களும் ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்தனர். தமிழகத்தே பரவிய சமணர்கள் வடக்கே மகேந்திரவர்ம பல்லவனையும் தங்கள் சமயத்துள் இழுத்துக் கொண்டது மிக்க சாதுர்யமான செயலாகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதி யிலிருந்து பக்தி இயக்கப் பேராறுகளின் சூழிகளில் மாட்டிப் பௌத்தம் தத்தளித்தது. பக்திப் பேராற்றில் அன்புத் துடுப்புடன் இனிய பாடல்களைப் பாடி, நாடு சுற்றி, அறிஞர்களாகவும், தொண்டர்களாகவும் சிவனடியார்கள் விளங்கினர். அவர்களுள் இறவாப் புகழ் பெற்ற நால்வருள், துன்பங் கண்டு கலங்காததுடன், அதனை எதிர்த்துக் கூட போராடாமல் அதனையும் புன்முறுவலுடன் ஏற்றுக் கொண்ட ஒரு வரலாறே திருநாவுக்கரசர் வரலாறாகும்.

நடு நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய திருமுனைப்பாடி நாட்டுத் திருவாமூரில் அவதரித்த மருள்நீக்கியாரின் தமக்கையார் திலகவதியார் வாழ்வில் நடந்த துயர நிகழ்ச்சிகள் யாவும் இவரது உள்ளத்தில் நிலையாமைத் தன்மையினை உணர்த்தவே, தம் உடைமைகள் அனைத்தையும் அறத்தின்பால் செலவிட்டார். பின் சமணசமயம் சார்ந்து பௌத்தர்களை வாதிட்டு வென்றதால், அவர்தம் புலமையையும் தெளிந்த அறிவினையும்

நன்குணர்ந்த சமணர்கள் அவருக்குத் தருமசேனர் என்னும் பெயரினைச் சிறப்பாக அளித்துப் போற்றினர்.

அப்போது பல்லவர்கள் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர். பல்லவ மன்னர்கள் சைவ, வைணவ மதங்களை ஆதரிப்பவர்களாக இருந்தபோதிலும், சமண, பௌத்த மதங்களுக்கும் ஆதரவளித்துப் போற்றினர். சில சமயங்களில் மன்னர்களே அச்சமயங் களைக் கடைப்பிடித்தனர். அதனால் நம் நாட்டு மதங்கள் நசுங்கிப் போயின. அத்தகைய இரங்கத்தக்க நிலை மருணீக்கியாரது காலத்திலும் இருந்தது. இவரது காலத்தில் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரன் சமணர்களுக்கு ஆதரவளித்ததோடு தானும் சமணனாகவே வாழ்ந்தான்.

மருள்நீக்கியார் சமண மதம் தழுவிய செய்தியைத் திருவதிகையில் சிவத்தொண்டு செய்து வந்த இவரது தமக்கையார் கேள்வியுற்று, வருந்திச் சிவபெருமானிடம் தம் தம்பி சைவம் புக, நாளும் வேண்டி நின்றார். இதன் காரணமாய் நாவரசருக்குச் சூலை நோய் வந்து யாவராலும் தீர்க்க முடியாது போகவே, பின் தமக்கையார்பால் வந்து சரணடைந்தார். திலகவதியார் திருநீற்றைக் கொடுத்து, திருவதிகை வீராட்டனேசுவரர் திருச்சந்நிதிக்கு அழைத்துச் சென்றார். அப்போது அவர் "கூற்றாயினவாறு விலக்ககலீர்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாட, நோய் விலகியது. அத்துடன் இவருக்குத் திருநாவுக்கரசு என்னும் பெயரை விண்மொழியால் சிவபெருமான் சூட்டினார். இதன் பின் சைவநெறி நின்று திருவதிகையில் தங்கியிருந்தார்.

இதனை உணர்ந்த சமணர்கள் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திர வர்மனிடம் முறையிட்டனர். நாவரசர் திருவதிகை வீரட்டானத்தில் தங்கியிருந்தபோது பல்லவ மன்னனின் ஆணையைக் கொணர்ந்த "ஏவலனை அவர் இகழாமல்",

> "நாமார்க்கும் குடியல்லோம் என்றெடுத்து நான்மறையின்
> கோமானை நதியினுடன் குளிர் மதிவாழ் சடையானை
> தேமாலைச் செந்தமிழின் செழுந்திருத் தாண்டகம்பாடி
> ஆமாறு நீர்அழைக்கும் அடைவிலம் என்றுஅருள் செய்தார்"

என்று கூறும் சேக்கிழார், அவர்கள் வேண்டியவுடன் தடை ஏதும் கூறாமல் அவர்களுடன் சென்றார் என்று பாடுகிறார். தம்மை அழைத்துச் செல்லாமல் தனியே சென்றால் அரச தண்டனை அவர்கட்குக் கிடைக்குமே என்ற கருணையால் அவர்கள் பின் சென்றார் என்று அறிய முடிகிறது. பல்லவ மன்னனின் பணியாட்கள் துயரம் அடையாமல் இருக்கத் தாம் துன்பத்தை ஏற்றுக் கொள்ளும் உயரிய பண்பை இச்செயல் அறிவிப்பதாகும்.

முதலாம் மகேந்திர பல்லவன் காலத்தில் வாழ்ந்த மக்கள் மன நிலையை அரசன் பாதித்ததை விட அதிகமாக ஒரு தனிமனிதர் நாவுக்கரசர் பாதித்தார். நாவுக்கரசர் வாழ்க்கை மன்னனையும் மக்களையும் எவ்வாறு பாதித்தது என்பதை அறியலாம். நாவரசரை அழைத்து வருக என ஆணையிடும் பல்லவ மன்னன்,

"தெருள் கொண்டோர் இவர்சொன்ன
தீயோனைச் செறுவதற்குப்
பொருள் கொண்டு விடாது என்பால் கொடுவாகும்"

என்று கூறினதாகப் பாடுவதிலிருந்து பல்லவர் ஆட்சியில் கையூட்டப் பட்டுப் பெறுபவர் பலர் இருந்தனர் என்பதை அறிய முடிகிறது. முதலாம் மகேந்திரவர்மன் இயற்றிய மத்த விலாசப் பிரகசனத்திலும் இப்படி ஒரு செய்தி கூறப்பட்டுள்ளது என்பதை முனைவர் இராசமாணிக்கனார் தம் நூலில் கூறியுள்ளார்.

முதலாம் மகேந்திர பல்லவனிடம் அழைத்துச் சென்ற நாவுக்கரசரை நீற்றறையில் இட்டும், நஞ்சு கலந்த உணவை உண்பித்தும், யானையை விட்டு இடறச்செய்தும், பல்கொடுமைகளைச் செய்ய இவை யாவற்றிலும் இடர் இன்றிச் சிவபெருமான் அருளால் தப்பினார். கடைசியாகக் கருங்கல்லில் கட்டி நடுக்கடலில் இவரை இட்டனர்.

"கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச் சிவாயமே"

என்று நாவுக்கரசர் பாட, இறையருளால் அக்கட்டு அவிழ்ந்து, அக்கல்லே தெப்பமாக மாறி இவர் திருப்பாதிரிப்புலியூரில் கரை சேர்ந்தார்.

இவ்வாறு பல்லவ முதலாம் மகேந்திரவர்மன் நாவுக்கரசரிடம் 'ஏன் சமயம் மாறினார்' என்று விசாரிக்காமல் தண்டனை வழங்கியது, குற்றமாக, சேக்கிழார் போன்றோரால் கருதப்பட்டது. ஓர் அரசன், அரச சட்டத்தை மீறித் தவறு புரிந்த ஒருவரை அச்சட்ட அடிப்படையில் விசாரணை செய்து, தேவை எனில், குற்றம் மெய்ப்பிக்கப்பட்டால், தண்டனை வழங்குவதே முறை. ஆனால் மகேந்திரவர்ம பல்லவன் அருகிலிருந்த புல்லறிவாளர்களாகிய துறவிகளைப் பார்த்து "மற்றிவனை செய்வதினிச் சொல்லும்" என்று கேட்டான். வழக்கைக் கொண்டு வந்த வாதிகளையே நீதிபதிகளாக ஆக்கிய பல்லவ அரசன், பிரதிவாதியை விசாரிக்காமலேயே, சமணர்கள் சொல்வதை எல்லாம் செய்த பல்லவ மன்னனை நினைக்கும்போது சேக்கிழாருக்குச் சினம் மூள்கிறது. எனவே பல்லவ மன்னனை கொடிய சமண் சார்பால் கெடுமன்னன், மற்றவர் தம் மொழி கேட்ட மதிகெட்ட மன்னன், பூபாலர் செயல் மேற்கொள் புலைத் தொழிலோன் என்று ஏசுகிறார்.

பல்லவ நாட்டை ஆளும் பொறுப்பு வாய்ந்த முதலாம் மகேந்திர வர்மன், நாவுக்கரசர் தாம் இதுவரை இருந்த சமயத்தை விட்டு வெளியே சென்றுவிட்டார் என்பதற்காக இந்த அளவு தண்டிக்க முன் வந்தால், அவன் அரசனாக இருக்கத் தகுதியற்றவன் என்பது அவரது எண்ணம். இதனைக் குற்றமென்று பல்லவ மன்னன் கருதினாலும் கூட, இவ்வளவு சிறிய குற்றத்திற்கு அவ்வளவு பெரிய தண்டனை வழங்குவது குற்றமாகும். சூழலும் வழக்கைக் கொணர்ந்த வாதிகளையே நீதிபதிகளாகக் கருதி என்ன தண்டனை வழங்கலாம் என்று கேட்பது பல்லவ மன்னனின் மற்றொரு குற்றமாகும்.

இவ்வாறு பல்லவ மகேந்திரவர்மன் சமணர்களின் சொற்கேட்டு, நாவுக்கரசருக்கு பல கொடுமைகளை இழைத்த போதிலும்; அவர் உறுதியுடன் இறைவனருளால் அவற்றை வென்றார், அதுகண்ட பல்லவ மன்னனும் மனம் மாறிச் சைவமானார் என்று கூறப்படுகிறது. இந்நிகழ்ச்சி சைவ சமய மறுமலர்ச்சிக்குப் பெரிதும் உறுதுணையாயிருந்தது. திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டில் முதலாம் மகேந்திர பல்லவன் சைவ மதத்திற்கு மாறியது குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தக் கல்வெட்டுக் குறிப்பிலிருந்து, முதலாம் மகேந்திரவர்மனின் சம காலத்தவரான அப்பர் என்ற திருநாவுக்கரசர் தாம் பல்லவ மன்னன் சைவ மதத்திற்கு மாறக் காரணமாக இருந்தார் என்று டாக்டர் நாகசாமி தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். மேலும் தற்கால வரலாற்றறிஞர்களின் கூற்றுப்படி, கி.பி. 590-லிருந்து 630 வரை 40 ஆண்டுகள் முதலாம் மகேந்திரன் பல்லவ நாட்டை ஆண்டான் என்றும், நாவுக்கரசரின் காலம் கி.பி. 580-லிருந்து 660 வரை என்றும் குறிப்பிடுவதால் பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனும், அவருக்குப் பின் அரியணையேறிய முதலாம் நரசிம்ம பல்லவனும், திருநாவுக்கரசரின் சம காலத்தவர்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

திருநாவுக்கரசர் பல்லவ மகேந்திரவர்மனைச் சைவ மதத்திற்கு மாற்றிய நிகழ்ச்சி சைவ மத வரலாற்றிலும் தென்னிந்திய வரலாற்றிலும் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. பல்லவ மன்னன் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறியதும் சமணர்கள் பல கொடுமைகளுக்கு உள்ளாக்கப் பட்டனர். திருப்பாதிரிப்புலியூர் (கடலூர்) சமணப் பள்ளி அழிக்கப்பட்டுத் திருவதிகையில் சிவன் கோயில் ஒன்று கட்டப்பட்டது. அதற்குக் குணபதீசுவரம் எனப் பெயரிடப்பட்டது. கற்றளிக்கோயில்கள் உருவாக்கப் பட்டன. பல்லவ மன்னன் பாறைகளைக் குடைந்து பல கோயில்களைக் கட்டினான்.

திருச்சிராப்பள்ளியிலுள்ள கல்வெட்டு மகேந்திர பல்லவன் லிங்க வழிபாட்டு முறையை மேற்கொண்டிருந்தான் என்பதைத் தெளிவுப்

படுத்துகின்றது. இப்பல்லவனால் கட்டப்பட்ட கோயில்கள் திருச்சிராப்பள்ளி, வல்லம், மகேந்திரவாடி, தளவானூர் ஆகிய இடங்களில் உள்ளன. சிவனுக்கும், விஷ்ணுவிற்கும் பாறைகளைக் குடைந்து பல குகைக் கோயில்கள் பல்லவ மன்னனால் அமைக்கப்பட்டன. இவ்வாறாக, திருநாவுக்கரசரால் பல்லவ மன்னன் சைவ மதத்திற்கு மாறிய நிகழ்ச்சி, தென்னிந்திய கோயிற்கலை வரலாற்றிலும், திராவிடக் கலை வரலாற்றிலும், சிற்பக் கலையிலும் ஒரு திருப்பு முனையாக அமைந்தது என்றால் மிகையாகாது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமயப்புரட்சி பல்லவ சமுதாயத்திலும் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. பக்தி இயக்கத்தின் ஆணிவேர்களான நாயன்மாருள் ஒருவரான திருநாவுக்கரசர் பல்லவ மகேந்திரனைச் சைவ மதத்திற்கு மாற்றியதால் பல்லவ மன்னரின் கீழ் வாழ்ந்த சிற்றரசர்கள், மக்களும் சைவத்தைப் போற்றினர். பல்லவ நாட்டில் பிராமணர்கள் ஆகமங்களையும், சிவ வழிபாட்டையும் ஏற்றுக்கொண்டனர். வேளாளராகிய நாவுக்கரசர் ஆகமம், தந்திரம் என்ற சொற்களைக் குறைவாகவே பயன்படுத்தினார். பல்வேறு மார்க்கங்களும் பல்லவ நாட்டில் புகுந்து இங்குள்ள அன்பு வழிபாட்டுடன் முரணிக் கால்கொள்ள முயன்ற வரலாறு கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டுவரை நிகழ்ந்த சமயப் போராட்ட வரலாறாகும். நாவுக்கரசர் காலத்தில் வைதிக - அன்பு நெறி வழிபாடு முறைகளுள் இருந்த போராட்டம் பற்றி விரிவாகப் பேசப்பெற்றது. இந்த அடிப்படையிலேயே பல்லவ சமுதாயத்தில் சாதி வேறுபாடுகள் பரவலாகப் பாதுகாக்கப் பெற்று வந்தன. முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் தனித்தனியே நின்ற வைதிகர்கள், ஆகம சைவர்கள் சமண ஆதிக்கத்தை வெல்ல முயற்சிகள் எடுத்ததன் பயனாக இவர்களுள் ஓர் இணைப்பு ஏற்படத் தொடங்கியது. அதன் பயனாகவே இரண்டாம் நரசிம்மவர்மன் காலத்தில் அவன் கட்டிய காஞ்சி கயிலாயநாதர் கோவிலில் தன்னைச் சைவ சித்தாந்தி என்று அவன் கூறிக்கொண்ட நிலைமை உருவாயிற்று. பல்லவர் காலத்தில் வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யங்கள் என்பனவற்றுடன் சிவாகமங்களையும் ஓரளவு இணைத்து ஓர் ஒருமைப்பட்ட சமய வழிபாட்டை உருவாக்கினர். இந்த இணைப்பின் பயனாக வைதிகர் - சைவர் போராட்டம் ஒழிந்தது, புதிய வைதிக சைவம் தழைத்தது.

திருநாவுக்கரசர் ஊர் ஊராகச் சென்று அந்தந்த ஊர்களிலுள்ள இறைவனைப் பாடுவதிலும் அங்குள்ள மக்கள் குறைகளைக் களைவதிலுமே தம் கவனத்தைச் செலுத்தினார்.

நரசிம்மன் காலத்தில் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தின்போது, நாவுக்கரசர் சிவபெருமானால் காசு பெற்று வறியவர்களுக்கு உதவினார்.

இவ்வாறு இரு பல்லவ மன்னர்களின் காலத்தவரான திருநாவுக்கரசரின் வாழ்க்கை மற்றவர்கட்கு எடுத்துக்காட்டாக அமைந்தது. தாங்கள் மேற்கொண்ட கொள்கைக்கு, குறிக்கோளுக்கு எத்தனை இடையூறுகள் வந்தாலும் உயிரைக் கொடுத்தாகிலும் கொள்கையை விடாமல் காத்தவர் என்பதை மக்கள் அறிவதுடன் உணரவும் செய்தனர். வாழ்க்கையில் எந்தத் துறையில் நின்றாலும் என்ன தொழிலைச் செய்தாலும், அதிலும் ஓர் அரிய குறிக்கோளை வைத்துக் கொண்டு வாழ்ந்து பெரியவர்களாக முடியும். பல்லவ மன்னன் போன்ற மன்னர் களைச் சைவத்திற்கு மாற்றி, பல்லவ உலகில் பெரும் புரட்சியை ஏற்படுத்த முடியும் என்பதை நிரூபித்துக் காட்டிய பெருந்தகை நாவுக்கரசர் என்றால் மிகையாகாது.

87. திருநாவுக்கரசர் தேவாரம்

சொ. பொன்னுசாமி, ஸ்ரீவைகுண்டம்.

சமணமும் பௌத்தமும் தங்களின் ஆதிக்க வேர்களை ஆழமாகத் தமிழகத்தில் ஊன்றிவிட முயன்று கொண்டிருந்த ஒரு சமயச் சூழலில் வீறு கொண்டு எழுந்த ஒரு ஒளி ஞாயிறு போலத் தோன்றியவர் நாவுக்கரசர் பெருமான். ஆளுடை அரசு, ஆளுடைப் பிள்ளையாகிய திருஞானசம்பந்தருடன் இணைந்து தொண்டாற்றிச் சைவ சமயத்தின் பெருமையை அழியாது காத்தார். "சமணமும் பௌத்தமும் தங்கள் தங்கள் நெறிகளால் தெளிவற்ற போக்கை மக்கள் மனத்திலே உருவாக்கி வைத்திருந்தன. அவற்றை மாற்றி மக்களின் மனத்தில் தெம்பையும், தெளிவையும் இவ்விரு பெருமக்களின் அறிவுரைகள் உருவாக்கின. சைவ சமயத்தின் மறுமலர்ச்சிக் காலமாக இவர்கள் காலம் அமைந்தது" என்கிறார் க. அன்பழகன் ("ஆளுடைப் பிள்ளையும், ஆளுடை அரசும்", "திருஞானசம்பந்தர் ஆய்வு மாலை", ப. 18)

சைவம் தழைத்தோங்க வந்துதித்த தெய்வ நூல் தேவாரம். திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவர் மாதொருபாகனை போற்றிப் பண்ணிசைத்துப் பாடிய பாடல்கள் தேவாரம் ஆகும். வழிபாடு எனும் பொருளில் வழங்கப்பெற்ற பாக்களின் தொகுப்பு காலப்போக்கில் தேவாரம் எனும் பெயர் பெற்றது. தே+ஆரம் = தேவாரம். தே=கடவுள் (தேவன்) ஆரம் = மாலை (பாமாலை) சிலர் தே+வாரம் என்று பிரித்து தே = கடவுள், வாரம் = அன்பு என்கிறார்கள்.

பதினான்காம் நூற்றாண்டின் முற்பகுதியில் "இரட்டைப் புலவர்கள்" பாடிய "ஏகாம்பரநாதர் உலா"வில்

"சிவபெருமானை ஆரம்போல அலங்கரிப்பது
சிவபெருமானிடம் பற்று உருவாக்குவது"

"மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரம் செய்த திருப்பாட்டும்"

எனும் பாடலடிகள் தேவார மூவரை "மூவர் முதலிகள்" என்று குறிப்பிடுகின்றன.

'மருள்நீக்கியார்' எனும் பெயருடன் சமணராக இளமையைத் தொடங்கிய அவர் 'தருமசேனர்' என்னும் பட்டத்தைப் பெற்றார். பின்ப

தம் தமக்கையார் திலகவதியாரால் சைவம் புகுந்து சிவத்தொண்டு புரிந்தவர் நாவுக்கரசர்.

சூலை நோய்க் கொடுமையால் துவண்டவர், தமக்கையின் கட்டளையால் திருவதிகை வீரட்டானத் திருத்தலம் சென்று "கூற்றாயினவாறு விலக்ககலீர்..." என்ற திருப்பதிகம் பாடி நின்றார். பாமாலையில் பரவசமடைந்த சிவபெருமான் மருள்நீக்கியாருக்குத் 'திருநாவுக்கரசு' எனும் திருப்பெயர் சூட்டினார். இறைவனை ஆண்டானாகவும், தன்னை அடிமையாகவும் கொண்டு தேவாரப் பாடல்கள் பாடி, நாவுக்கரசர் தாசமார்க்கத்தைக் கடைப்பிடித்து இறைவனை வழிபட்டதால் அவரது பாடல்களில் கொஞ்சு தமிழைக் காணலாம். சுந்தரர் பாடல்களிடம் தோழமை மார்க்கம் இருப்பதால் மிஞ்சு தமிழையும், ஞானசம்பந்தர் புத்ர மார்க்கத்தைக் கொண்டதால், திருஞானசம்பந்தரின் பாடல்கள் கொஞ்சு தமிழைக் காணமுடிகிறது.

'திருநாவுக்கரசரின் தேவாரம்' எனும் தலைப்பில், அப்பரடிகள் அருளிய தேவாரம் ஐந்தாம் திருமுறையின் கவிதை நயம்; இலக்கிய அணிகளின் சிறப்பு; கற்பனைகள்; திருத்தலங்களின் அமைவிடம்; சைவநெறியின் தத்துவ விளக்கம்; ஈசனின் பெருமையும்; உறைவிடமும்; கண்ணனில்; கீதை மீது அடிகளின் கருத்து; தமிழின் சிறப்பு; தமிழ் வழிபாட்டால் பெரும் பேறு போன்றவை இக்கட்டுரை வழியாக எடுத்து விளக்கப் பெறுகின்றன.

தேவாரத்தில் மிளிரும் உவமை நயம்

ஈன்ற மகவைக் கொஞ்சி மகிழும் அன்னை போன்று, திருநாவுக்கரசர் இறைவனை உயர் உவமைகளால் புகழ்ந்து போற்றுகிறார். உவமை நயத்துடன் இறைவனின் ஏற்றமும் புராணச் செய்திகளும் மிளிர்கின்றன.

"கரும்பொப் பானைக் கரும்பினிற் கட்டியை
விரும்பொப் பானை விண்ணோரும் அறிகிலா
அரும்பொப் பானை அரத்துறை மேவிய
கரும்பொப் பானை..." (பா. 23)

என இறைவனுக்கு உவமை கூறுகிறார்.

ஏது ஒத்த பாகுடையவன்; சூரியன் நிகர்த்த பரந்த ஒளியினன்; நெய்யனையன்; நெய்யிற் சுடர் போல்வதோர் மெய்யொப்பான்; பொன்னொப்பான்; பொன்னிற் சுடர் போல்வதோர் மின்னொப்பான்; விண்ணோடும் அறிகிலார்; தாயனையன்; கலையொப்பான்; கற்றோர்க்கோர் அமுதினை நிகர்த்தவன்; கயிலை மலை நிகர்த்தவன் என உவமைகளால் புகழ்கிறார் நாவுக்கரசர்.

ஈசனின் எழில் நலம் பாராட்டும் நாவுக்கரசர், திருவிடை மருதூரில் திகழும் ஈசன்,

"கனியினும் கட்டி பட்ட கரும்பினும்
பனிமலர்க் குழல்பா வைநல் லாரினும்
தனிமு டிகவிழ்த் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கு..." (பா. 144)

என்று நன்னெஞ்சும் நாவும் குளிர நாவுக்கரசர் ஈசனின் எழில் நலம் பாராட்டுகிறார். ஈசன் இசை வடிவானவன், ஏழிசையாய் இசைப் பயனாய்த் திகழ்பவன் என்பதை,

"ஆரி யம்தமி ழோடிசை யானவன்..." (பா. 176)

என்பதன் வழி உணர்த்துகிறார்.

இயற்கை எழில் கொஞ்சும் திருமறைக்காடு

திருமறைக்காட்டின் நீர்க்கால் வாயின் கரையில் தாழை மலர்ந்து மணம் தரும் தன்மையும், பூவின் நறுமணமொப்ப வேதாரண்ய ஈசனின் அருள் மணம் திகழ்ந்து, தொழுவோர்க்கு ஆக்கம் தரும் பாங்கும்,

"பூக்கும் தாழை புறணி அருகெலயும்
ஆக்கம் தானுடை மாமறைக் காடரோ" (பா. .85)

"புன்னை ஞாழல் புறணி அருகெலாம்
மன்னி னார்வலம் கொள்மறைக் காடரோ" (86)

"அட்ட மாமலர் சூடி அரும்பொடு
வட்டப் புன்சடை மாமறைக் காடரோ" (87)

"நெய்தல் ஆம்பல் நிறைவயல் சூழ்ந்தரும்
மெய்யி னார்வலர் கொள்மறைக் காடரோ" (88)

ஆகிய பாடல்களால் விளக்கப் பெறுகின்றன. நெய்தலுக்குரிய தாழையும் மருதத் திணைக்குரிய வயல் சூழ்ந்த பகுதியும் இணைக்கப் பெறுகின்றன. திணை மயக்க இலக்கிய இன்பம் மிளிர்கின்ற தன்மையை நாம் அறிய முடிகிறது.

மறைக்காட்டின் பெருமை

"சங்குத்தூள் தலைக்கும் தடம்கா னல்வாய்
வங்க மார்வலம் கொள்மறைக் காடரோ" (பா. 91)

எனத் தொடங்கும் பாடலில், சங்குகளை, அலைகளின் வாயிலாகக் கொண்டு வந்து சேர்க்கும் கப்பல்கள் வலம் வரும் சிறப்புமிகு மறைக்காடு என்று கடலும் கடல் சூழ்ந்த இடமுமாகிய நெய்தல் திணை குறிப்பிடப் படுகிறது. தெய்வத்துக்குச் சூட்டும் பாமாலையில் கோயில் கொண்ட

திருத்தலங்களின் அமைவிடமும் சிறப்பிக்கப்படுகிறது. உணர்த்தப் பெறுவதன் வாயிலாகச் சரித்திரச் சான்றுகள் உணர வாய்ப்புளது.

"திங்கள் தங்கிய செஞ்சடை மேலுமோர்
மங்கை தங்கும் மணாளன் இருப்பிடம்
பொங்கு சேர்மணற் புன்னையும் ஞாழலும்
தெங்கு சேர்கடம் பூர்க்கரக் கோயிலே" (199)

எனும் பாடலில் மருதத் திணையொழுக்கம், நெய்தல் திணையாக உரைக்கப் படுகிறது. அத்துடன் முல்லைக்குரிய முல்லையானது மட்டுமின்றி கொழுந்தகை மல்லிகை நிறைந்த ஊராகவும் திகழ்ந்ததென்பதை அறிய முடிகிறது.

பாம்பும் திங்களும் ஒன்றிணைந்து நிற்கும் திருத்தலம்

கங்கை கொண்ட முக்கண்ணனின் சடை முடியில் திகழும் சந்திரன், பாம்பினை ஏற்றிக் கொண்டு ஊர்ந்து செல்லும். அவ்வாறே அங்குள்ள பாம்பும் சந்திரனை ஏற்றிக் கொண்டு ஊர்ந்து செல்லும். அத்தகைய தன்மையில் திங்களையும் திங்களைக் கவ்வும் அரவையும் ஒன்றிணைத்த ஈசன் திருஅருள் வடியும் கோயில் கொண்ட திருத்தலத்தை,

"ஒற்றி யூரும் ஒளிமதி பாம்பினை
ஒற்றி யூருமப் பாம்பும் அதனையே
ஒற்றி யூறு யொருசடை வைத்தவன்
ஒற்றி யூர்தொழ தம்வினை ஓயுமே" (பா. 235)

எனும் பாடல் விளக்குகிறது. எதிரிகளையும் இணைப்பவன் இறைவன் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

அசையால் பெருமை பெறும் அற்புதத் தேவாரம்

பாடலின் நான்கடிகளிலும் முதல், இரண்டு அசைகளும் இணையச் செய்திருக்கும் கவிதை நயம் போற்றுதற்குரியது.

"ஒன்று போலும் உகந்தவர் ஏறிற்று
ஒன்று போலும் உதைத்துக் களைந்தது
ஒன்று போலொளி மாமதி சூடிற்று
ஒன்று போலுகந் தார்ரொற்றி யூரரே" (பா. 242)

என்பது போன்ற பாடல்கள் அசைகளின் மாட்சியால் தேவாரத்துக்கு அணி சேர்க்கின்றன.

இல்பொருள் உவமையால் ஏற்றம் பெற்ற தேவாரம்

திருவொற்றியூரில் வெம்மையில்லை, தண்மை நிலவுகிறது. மகிழ்ந்த அன்னங்கள், மலர்களில் அமைதி பெற்று உறங்குகின்றன. குளிர் நிலை கண்ட மயில்கள் அங்கே கார்மேகம் சூழ்ந்ததாகக் கருதிக்

கலாபம் விரித்தன. வான்மேக வனத்தால் ஏற்பட்ட தண்மையன்று என்பதைப் பின்புணர்ந்த மயில்கள் நாணின எனும் கருத்துள்ள பாடல் (எண் 241) இல்பொருள் உவமைக்குரிய எடுத்துக்காட்டாக அமைகிறது.

திருவொற்றியூரில் தியாகேசன் மலர்த்திருவடிகளில் உள்ள உயிர்கள் நிறைவும், மகிழ்வும் நிம்மதியும் கொள்கின்ற தன்மையானது உள்ளுறையாக உணர்த்தப்படுகின்றது.

வஞ்சப்புகழ்ச்சியால் வளம் பெற்ற தேவாரம்

அன்பர்க்கு அருள் அளிக்கும் அண்ணாமலை ஈசனைத் தூற்றுவது போல் போற்றிப் புகழும் இலக்கிய உத்தியான வஞ்சப் புகழ்ச்சியணி நாவுக்கரசர் பெருமானால் பரவலாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. பக்தியிலக்கியத்தில் நாயகன் - நாயகிப் பாவமும் பளிச்சிடுகிறது.

"நக்கம் வந்து பலியிடென் றார்க்கிட்ட
மிக்க தையலை வெள்வளை கொள்வது
தொக்க நீர்வயல் தோணி புரவர்க்குத்
தக்க தன்று தமதுபெ ருமைக்கே" (448)

எனும் பாடல் ஆண்டிக்கோலத்திலும் அழகனாகத் திகழ்ந்த அம்பலவாணன், அன்னமிட வந்தவளின் அகத்தில் குடிபுகுந்தான் என்ற பெருமையை விளக்குகிறது.

ஆற்றுப்படையால் அழகுற்ற தேவாரம்

மாந்தர்களே! முன்னர் துன்பப்பாதையில் முட்டிமோதி, முயன்று சென்றீர், மகேசனை மறந்தீர், துன்புற்றீர், பட்டுணர்ந்த பின்னர் அத்துன்பங் களினின்று விடுபட இவரை நினைத்தீர். புகழ்மிக்க ஐயாற்றின் உறையும் ஐயனை, உய்யும் வழியாகக் கொண்டு புனிதனைப் போற்றி வணங்குங்கள். அதுவே மெய்த்தவமாகி உங்களைப் பொய் வாழ்வினின்றும் ஈடேற்றும் என்பதைக் கூறி அப்பர் பெருமான் தேவாரத்தின் வாயிலாக ஆற்றுப் படுத்துகிறார்.

"முன்னை யாறு முயன்றெழு வீரெலாம்
பின்னை யாறு பிரியெனும் பேதைகாள்
மன்னை யாறு மருவிய மாதவன்
தன்ஐ யாறு தொழத்தவம் ஆகுமே" (பா. 272)

எனும் பாடல் உய்வதற்கு ஐயாற்றுக்கு ஆற்றுப்படுத்தும் ஆற்றுப்படைப் பாடலாகவே அமைந்துள்ளதெனலாம்.

எண் அலங்காரத்தால் எழில்கொஞ்சும் தேவாரம்

கவிஞர்கள் ஒன்று இரண்டு முதலான எண்ணுப் பெயர்களை அமைத்துத் தம் கவிதைப் பொருளைச் சிறப்பிக்கச் செய்வதுண்டு.

நாவுக்கரசரும் ஒன்று முதல் பத்து முடிய உள்ள எண் தொடர்ச்சியாக வருமாறு எண் அலங்காரக் கவிதை யாத்துள்ளது. புலமையுடையோர்க்குப் புத்தமுதாக உள்ளது. ஒவ்வொரு பாடலிலும் ஒன்று, இரண்டு என்ற எண்கள் நான்கு அடிகளிலும் இடம்பெற அமைக்கப்பட்டது இலக்கிய இன்பம் நல்குவதாக உள்ளது.

ஒன்று வெண்பிறைக் கண்ணியோர் கோவணம் 874
இரண்டுமாம் அவர்க்கு உள்ளன செய்தொழில் 875
மூன்று மூர்த்தியுள் நின்றிய ஓம் தொழில் 876
நாலின் மேன்முகம் சென்றது மன்னிழல் 877
அஞ்சும் அஞ்சுமோர் ஆடி அரைமிசை 878
ஆறுகால் வண்டு ஆகிய கொன்றை 879
ஏழு மாமலை யேழ்பொழில் சூழ்கடல் 880
எட்டு மூர்த்தியாய் நின்றிய லுந்தொழில் 881
ஒன்பது ஒன்பதி யான்னை யொளிகளிது 882
பத்து நூறவன் வெங்கண்வெள் ளேற்றகண்ணல் 883

சித்திரக் கவிதையின் சிறப்பொப்ப, அப்பர் அடிகளின் எண் அலங்காரக் கவிதை எண்ணி இன்புறத்தக்கதாக அமைகின்றது. கவிதைச் சிறப்புடன், காலனைக் காலால் அகற்றிய கைலை மலை வள்ளலின் தனிச் சிறப்பும் ஒன்றி நிற்கின்றது. அதனால்தான் தமிழை வளர்த்தது சைவம். சைவத்தை வளர்த்தது தமிழெனு மொழி அறிஞர்களும் சைவப் பெரியார்களும் கூறக் காண்கிறோம்.

திருத்தொண்டர் புகழ் போற்றும் தேவாரம்

தேவர் உலக வாழ்வும் அங்கு விளங்கும் பதவிகளும் மாண்புடையதாக யாம் கருதவில்லை. சிவனுக்குத் தொண்டு செய்து திகழும் திருத்தொண்டர் களின் திருவடிகளைச் சூடி மகிழ்தலையே பெருமையாகக் கொள்கின்றோம். அத்திருப்பணியே மகிழ்வு தருவதாகவும் கருதுகின்றோம் என்ற அப்பர் அடிகளின் கருத்து தொண்டர் தம் பெருமையைச் சொல்லவும் முடியுமோ? என்ற கருத்தொடு இணையக் காண்கிறோம். தொண்டர்க்குச் செய்யும் திருத்தொண்டு விண்ணுலகப் பேற்றினைவிடப் பெருமை மிக்கது என்பதை,

''அண்டர் வாழ்வும் அமரர் இருக்கையும்
கண்டுவீற் றிருக்கும் கருத்து ஒன்றிலோம்
வண்டுசேர் மயிலாடு துறையரன்
தொண்டர் பாதங்கள் சூடித் துதையிலே'' (388)

எனும் பாடல் உணர்த்துகிறது.

இறைவனின் புகழ் பாடும் தேவாரம்

தத்துவத்திற் கெட்டாதவன்

தத்துவங்கள் அனைத்தையும் அறிந்தவரில்லை. தத்துவங்களுக்ப்பால் நின்று, தத்துவத்தின் பரிபூரணமாகிய இறைவனைச் சிவஞானிகளே அறிதல் கூடும். மற்றவர்கள் அறிதற்கு அரிதானவன் அவன். தத்துவத்துக் கெட்டாத அற்புதத்தை,

"தத்து வந்தலை கண்டறி வாரிலைத்
தத்து வந்தலை கண்டவர் கண்டிலர்
தத்து வந்தலை நின்றவர்க்(கு) அல்லது
தத்து வனலன் தண்புக லூரனே" (பா. 463)

எனும் பாடல் உணர்த்துகிறது.

ஊழி கடந்தும் உறைகின்ற இறைவன்

சிவபெருமான் ஊழி கடந்தும் உறைபவர் என்பதை,

"நூறு கோடி பிரமர்கள் நொந்தினார்
ஆறு கோடி நாராயணர் அங்கனே
ஏறு கங்கை மணல் எண்ணில் இந்திரர்
ஈறுஇ லாதவன் ஈசன் ஒருவனே" (1008)

எனும் பாடலால் நாவுக்கரசர் விளக்குகிறார்.

உமையொரு பாகனின் உன்னதப் பண்புகள்

உமையொரு பாகனின் உன்னதப் பண்புகளைச் சிறந்த உருவகங் களால் உணர்த்துகிறார் நாவுக்கரசர்.

"பண்ணில் ஓசை பழந்தனில் இன்சுவை
பெண்ணொடு ஆணென்று பேசற்கு அரியவன்
வண்ணம் இல்லி வடிவு வே(று) ஆயவன்
கண்ணில் உண்மணி கச்சியே கம்பனே" (474)

எனும் பாடல், உலகின் உயர்பொருளின் உள்ளே ஒன்றி நிற்பவன், வெளித்தோற்றத்தால் கண்டுணர முடியாதவன். வண்ணம் இல்லாதவன் ஆனால் தீப்பிழம்பான வனப்பு மிக்கவன் கண்மணி நிகர்த்தவன் என்பது போன்ற இறைவனின் பண்புகளை எடுத்துக் காட்டுகிறது.

தேனைப் பாலினைத் திங்களை ஞாயிற்றை (918) என அடுக்கிச் செல்லும் அப்பரடிகள், இறைவன் முத்து ஒப்பான், கற்பகவித்து ஒப்பான், விளக்கிடை ஒளி யொப்பான், ஒளிபவளத் திரள் ஒப்பான் எனப் புகழ்கிறார்.

உணர்தற்கு அரியதோர் சோதியான்

உலகுக்கு ஒளியூட்டும் எட்டு மூர்த்தங்களில் ஒன்றாகிய சூரியனாகத் திகழ்கிறான். பல்வேறு சமயங்களின் ஆதி மூலம். கண்டார் மனம் ஈர்க்கும் நிலை பெற்றவன். பிறர் அறியாய் பெற்றியன் அவன். அவன் ஒருவனே தொழுதற்குரியவன் என்பதை,

"ஆதி யானை அமரர் தொழப்படும்
நீதி யானை நியம நெறிகளை
ஓதி யானை உணர்தற்கு, அரியதோர்
சோதி யானைக் கண்டீர் தொழற் பாலதே" (பா. 929)

என்னும் பாடலால் உணர்த்துகிறார்.

இறைவன் உறையுமிடம் பற்றி இயம்பும் தேவாரம்

அன்பாகிய உறவு கொண்டு, அடிமைத் தளையெனும் உணர்வில், ஞானக் கயிற்றால் உள்ளத்துள் கடைந்தால், பாத கடல் அமுதமாய்ப் பரம்பொருள் வெளிப்படுவான் என்கிறார். இதை,

"விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோல் நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே" (893)

எனும் பாடலால் அறிய முடிகிறது. அரிய தத்துவக் கருத்தைச், சிறிய பாடலில் - நான்கடியில்- தருவது நாவுக்கரசரின் கவிதையாற்றலையும் புலமைத்திறத்தையும் உணர்த்துவதாகிறது. இராவணனைப் பற்றிய செய்தியானது தேவாரப் பாடல்களிலும் இடம் பெற்றுள்ளது.

துன்பம் செய்தார்க்கும் இன்பம் செய்கின்ற வள்ளல்

ஆணவத்தால் கைலை மலையைப் பேர்த்தெடுத்த இராவணனின் ஆணவத்தை அழிக்க நினைத்த சிவன் தன் காலின் பெருவிரலால் மலையை அழுத்தி, இராவணனின் ஆற்றலையும் நெரித்தார். இராவணன், இறைவனை ஏழிசையால் சாமகானம் பாடி மகிழ்வித்தான். இராவணனுக்கு அவன் வேண்டிய வன்மை மிகுந்த வாளும் வற்றாத முக்கோடி வாணாளும் அளித்தார். இறைவன் ஈசன், துன்பம் செய்பவனுக்கும் அருள் சுரக்கும் வள்ளல் என்பதையும் இசைக்கு மயங்கும் இதயம் படைத்தவர் என்பதையும்,

"எடுத்த வாள்அரக் கன்திறல் வண்ணமும்
இடர்கள் போற்பெரி தாகிய வண்ணமும்
கடுத்த கைந்நரம் பால்இசை வண்ணமும்
அடுத்த வண்ணமும் ஆவர்ஐ யாறரே" (284)

என்னும் பாடல் எடுத்துக் காட்டுகிறது. செந்தணல் நிற சிவபிரானின் செழுகை நிறைபண்டிதருக்கும் சிறப்புமிகு தேவாரப் பாடல்.

ஈசனை எட்டார் எவர் எவர்?

தேவாரம் இறைவனை அடைய வழிகாட்டும் புனித நூல். புண்ணிய ஏடு, தமிழின் மாமறை. ஈசனை எட்ட முடியாதவர்கள் யார், யார் என்பதையும் பட்டியலிடுகிறது தேவாரம்.

''தன்னிற் றன்னை யறியும் தலைமகன்
தன்னிற் றன்னை யறிவில் தலைப்படும்
தன்னிற் றன்னை யறிவிலன் ஆயிடில்
தன்னிற் றன்னையும் சார்தற்கு அரியனே'' (987)

எனும் பாடல்வழி தன் தேவாரத்தின் சாரத்தினை உணர்த்திக் காட்டியுள்ளார்.

எங்கும் இருக்கின்ற ஈசனை உணராது, புறச்சடங்குகளில் பொழுதுபோக்குவோர், பிட்டுக்கு மண் சுமந்த பெரியானைக் காண முடியாது என்பதே தேவாரப் பாடல்களின் கருத்தாகும்.

''கங்கை ஆடிலென் காவிரி ஆடிலென்
கொங்கு தண்கும ரித்துறை ஆடிலென்
ஒங்கு மாகடல் ஓதநீர் ஆடிலென்
எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே'' (997)

இப்பாடல் புனிதனைத் தேடுபவர்க்குப் பொன்னுரையாகிறது.

''வேதம் ஓதிலென் வேள்விகள் செய்யிலென்
நீதி நூல்பல நித்தம் பயிற்றிலென்
ஓதி அங்கமோர் ஆறும் உணர்கிலென்
ஈசனை உள்குவார்க்கு அன்றி இல்லையே'' (999)

உள்ளன்போடு ஈசனை நினைப்போரே! இறைவனைக் கண்டுணர்ந்து மகிழ முடியும் என்கிறது நாவுக்கரசரின் தேவாரம்.

கீதையும் அப்பரும்

கீதையில் கண்ணனோ கொல்பவனும் கொல்லப்படுபவனுமாக இருப்பதாக உரைக்கிறான். ஆனால் அப்பரடிகள்,

''தருமந் தான் தவந்தான்தவத் தால்வரும்
கருமந் தான்கரு மான்மறிக் கையினான்
அருமந் தன்ன அதிர்கழல் சேர்மினோ
சிரமஞ் சேர்அழல் தீவினை யாளரே'' (976)

எனும் பாடலில், இறைவனோ அணிந்த ஆடலரசன் தருமமாகவும், தவமாகவும் தவப்பயனுடைச் செயலாகிய வினையாகவும் விளங்குபவர்

என்கின்றார். கண்ணன், கொல்பவன், கொல்லப்படுபவன், கொலைச் செயல் பேசி, கொலைச் செயலை நியாயப்படுத்துகிறான். அப்பரடிகளின் தேவாரத்தில் காட்டும் தெய்வம் தருமம், தவம், தவப் பயனாகிய வினை வடிவமாக அருட்காட்சி அளிக்கிறது.

கண்ணன் செயலில் கருத்தொவ்வா அப்பரடிகள்

ஐந்தாம் திருமுறை திருநாவுக்கரசரின் தேவாரப் பாடல்களின் இறுதியில் அடிகள் தம் அரிய கருத்தை உலகுக்கு அளிக்கின்றார். கண்ணன் தன்னைக் கொல்ல வந்த பூதகியாகிய அரக்கியின் உயிரைப் போக்கி மாயம் செய்தவன். அத்தன்மையில் சூழ்ச்சியுடையவர்கள், தாயினும் நல்லவராக இனிமையுடன் மேவும் சங்கரன்பால் அன்புடையவர் களுடைய உள்ளத்தில், இனிமையுடன் பொருந்துதல் இயலாது என்கிறார். இதை,

"தாயினும் நல்ல சங்கரனுக்கு அன்பர்
ஆய உள்ளத்து அமுதருந்தப் பெற்றோர்
பேயர் பேய்முலை உண்டுயிர் போக்கிய
மாயன் மாயத்துப் பட்ட மனத்தரே" (பா. 1014)

எனும் பாடல் விளக்கக் காண்கிறோம்.

நன்னெறி காட்டும் நமச்சிவாய மந்திரம்

"நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின்று ஏத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே" (885)

ஞானத்தின் மூலமந்திரம் நமச்சிவாய, பிறவாப் பேரின்ப வாழ்வுக்கு இட்டுச் செல்வது நமச்சிவாய எனும் மந்திரம் என்பதை அப்பரடிகள் தம்முடைய தேவாரப் பாடல்களின் வழி அறிவுறுத்துவதை நாம் அறிய முடிகிறது. பல்வேறு படிநிலைகளையும் பட்டியலிடுவது கல்வியின் சிறப்பையும் நன்னெறியின் இன்றியமையாமையும் உணர்த்துவதாக உள்ளது.

88. நாவுக்கரசர் பதிகங்களில் படிமம்

மு. மங்கையர்க்கரசி, ஸ்ரீவைகுண்டம்.

திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகங்களில் பண்ணமைந்த பதிகங்கள் அனைத்தும் (113) நான்காம் திருமுறையிலும், திருக்குறுந்தொகைப் பதிகங்கள் (100) ஐந்தாம் திருமுறையிலும், திருத்தாண்டகப் பதிகங்கள் அனைத்தும் (99) ஆறாந் திருமுறையிலும் அடங்குவனவாயின. இறைவனது திருவருட் பெருமையினை உலக மக்கள் உணர்ந்து போற்றும்படி வியப்புடைய அருட்செயல்கள் பல நிகழும் வண்ணம் பாடப்பெற்ற திருப்பதிகங்கள் அற்புதத் திருப்பதிகங்களாகும். 'கூற்றா யினவாறு விலக்ககலீர்' என்ற திருப்பதிகம் நான்காம் திருமுறையில் முதற் பதிகமாக அமைந்தது. ஐந்தாம் திருமுறையில், 'அன்னம்பாலிக்கும்' என்ற கோயில் திருப்பதிகம் முதலில் வைக்கப்பெற்றது. இறைவன் திருவடி நிழலை எய்தி இன்புறும் நிலையில் பாடிய, 'எண்ணுகேன் என சொல்லி எண்ணுகேனோ?' என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் ஆறாம் திருமுறையின் இறுதிக்கண் அமைந்தது. திருநாவுக்கரசர் திருப்பதிகங்கள் இறைவன் திருப்புகழைக் கவிதை நயத்துடன் இயம்புவன. அணிநயமும், சொல்நயமும், யாப்புத்திறனும் கொண்ட கவிதை நயமிக்கவையாக திருநாவுக்கரசர் பதிகங்கள் திகழ்கின்றன. திருநாவுக்கரசர் பதிகங்களில் படிமக் காட்சிகள் மிகுந்துள்ளன.

படிமம்

படிமம் இலக்கிய உத்திவகைகளுள் ஒன்று. இன்று புதுக்கவிதை களிலும் புனைவியல் கவிதைகளிலும் படிமம் ஆட்சி செய்கிறது. கவிஞர் டிரைடன் காலத்தில் படிமம் இலக்கியப் பயன்பாட்டிற்கு வந்தது என்பர். 'ஒரு சொல்லையோ, காட்சியையோ நேரில் காண்பது போன்று உணருமாறு செய்யும் விவரிப்பு முறையைக் குறிக்கிற அணி' என்று பதினெட்டாம் நூற்றாண்டு அகராதி விளக்கம் தரும். (மு. சுதந்திரமுத்து 'கவிதைப்படிமம்', ப. 7) சி.டே. லூயிஸ், 'படிமம் என்பது சொல்லோவியம். ஒரு தொடரிலோ பத்தியிலோ இடம்பெறுகிற ஓர் அடைமொழி, உருவகம், உவமை, வருணனை போன்றவற்றால் அது அமையும்' எனக் குறிப்பிட்டார். (சம்பத், இரா. 'புதுக்கவிதையில் இலக்கிய இயக்கம்', ப. 152) ஒரு நொடியில் ஏற்படும் அறிவு ரீதியான, உணர்வுரீதியான மனநிலை வெளிப்பாடே படிமம் என்கிறது, பிரின்ஸ்டன் கலைக்களஞ்சியம் படிமத்தை

மனப்படிமம், அணிப்படிமம், குறியீட்டுப் படிமம் என்று மூன்று பெரும் பிரிவுகளாக அது வகுத்துக் காட்டுகிறது. மனப்படிமங்களைக் காட்சிப் படிமம், ஓசைப் படிமம், நுகர்வுப் படிமம், சுவைப்படிமம், தொடுஉணர்வு படிமம் என்று புலன் உணர்வு அடிப்படையில் பிரின்ஸ்டன் அகராதி தொகுத்துக் கூறுகிறது. (சுதந்திரமுத்து, மு., 'கவிதைப் படிமம்', ப. 7)

திருநாவுக்கரசர் பதிகங்களில் படிமம்

திருநாவுக்கரசர் தலங்கள்தோறும் சென்று சிவத்தொண்டு புரிந்தவர். அவர் சிவபெருமானைப் பற்றிய காட்சிகளையும் திருத்தலங்களின் பெருமையையும் கோயில்களின் சிறப்பினையும் மனக்கண்முன் உருக்காட்சி களாகப் படியும்வண்ணம் கவித்திறன் மிக்க கவிதைகளை இயற்றியுள்ளார். இவர் கவிதைகளை கருத்துப் படிமம், அணிப் படிமம், குறியீட்டுப் படிமம், காட்சி படிமம் என்ற வகைமைகளில் ஆராய்ந்து காணலாம்.

கருத்துப் படிமம்

நுண்பொருட்களைப் பருப்பொருட்களாகக் காட்சிப் படுத்துவதே கருத்துப் படிமம். சிவபெருமானின் தோற்றமும், திருநடனம் ஆடும் காட்சியும், எண்வகை குணங்களும் கருத்துக்கு எட்டாதவைகளாகும். இச்சிறப்புகளையெல்லாம் திருநாவுக்கரசர் தம் பதிகங்களில் சொல்லோ வியமாக மனக்கண்முன் தோன்றும்படி காட்சிப் படுத்தியுள்ளார்.

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே."

என்று 'நமச்சிவாய' என்ற நாமத்தின் மீது தாம் கொண்ட நம்பிக்கை என்ற கருத்தை இத்திருப்பதிகத்தில் படியவைத்துள்ளார் திருநாவுக்கரசர். சிவனுடைய அமுத நடனம் கண்டு ஆனந்தமுற்ற உணர்வு நிலையைத் தம் பதிகத்தில் வெளியிட்டுள்ளார்.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும், பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்தமுடன் எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்தமாநிலத்தே."

என்ற இந்தப் பாடல் கூத்தவல்லானைக் கண்டு களிகொண்ட மனத்தின் ஆனந்த நிலையை அப்படியே மனத்தில் உருவாக்கிக் காட்டுகிறது.

காட்சிப் படிமம்

ஒரு காட்சிப் பொருளை மற்றொரு காட்சிப் பொருளுடன் ஒப்பிட்டுக் காட்டுவதே காட்சிப் படிமமாகும். இது கருத்துப் படிமத்திலிருந்து வேறு

பட்டது. கருத்துப் படிமத்தைப் பொறுத்த வரையில் நுண்பொருளைப் பருப்பொருளாகக் காட்டுவது. காட்சிப்படிமம் பருப்பொருளையே மற்றொரு பருப்பொருளாகக் காட்சிப்படுத்துவதாகும்.

"வெறிவிரவு கூவினநல் தொங்க லானை
வீரட்டத் தானைவெள் ளேற்றி னானை
பொறியர வினானைப், புள்ளூர்தி யானை
பொன்னிறத் தினானைப் புகழ்தக்கானை
அறிதற்கரிய சீர்அம்மான் தன்னை
அதியரைய மங்கை அமர்ந்தான் தன்னை
எறிகெடிலத் தானை இறைவன் தன்னை
ஏழையே னான்பண் டிகழ்ந்த வாறே."

என்று சிவபெருமான் திருக்கோயில் கொண்ட கோலத்தைக் காட்சிப் படிமம் ஆக மனதில் பதிய வைக்கிறார் திருநாவுக்கரசர்.

"அருள் தவத்தோர் தொழுதேத்தும் அம்மான் தன்னை
ஆராத இன்னமுதை அடியார் தம்மேல்
வருந்துயரம் தவிர்ப்பானை உமையாள் நங்கை
மணவாள நம்பியை என்மருந்து தன்னை."

என்று திருத்தாண்டகப் பாடலில் 'ஆரா அமுதன் உமையவளின் மணவாள நம்பி, எனக்கு மருந்து' என்று இறைவனைக் காட்சிப்படுத்துகிறார்.

அணிப்படிமம்

கவிஞன் ஒரு நிகழ்ச்சியை, ஓர் அனுபவத்தை, ஒரு காட்சியை உருக்காட்சியாக உருமாற்றிக் காட்ட உவமை, உருவகம் போன்ற அணிகளைப் பயன்படுத்துகிறான். திருநாவுக்கரசர் பொருத்தமான உவமை களையும், உருவகத்தையும், உருவகக் காட்சிகளையும் இணைத்துப் பதிகம் பாடி மனக் காட்சியில் படிமக் காட்சியைப் பதிய வைக்கிறார்.

உவமை விளக்கம்

ஒரு பொருளின் தன்மையைப் புலப்படுத்த உவமை பயன்படுகிறது. அறிமுகமில்லாத பொருளை அறிமுகம் உள்ள பொருளைக் கொண்டு விளக்குவதை உவமை எனலாம். ஓர் உவமை சிறப்புடையதாக மாற வேண்டுமெனில், விளக்குவதற்கு எடுத்துக் கொண்ட பொருளைத் தக்க ஒப்புமை கொண்டு விளக்கவேண்டும். 'சிறந்த உவமையானது பொருளின் தன்மையை விளக்குவதோடு அதனைச் சிறப்பிக்க வேண்டும்' என்பார் ஜான்சன்.

உவமைப் படிமம்

"உலையை ஏற்றித் தழல் எரிமடுத்த நீரில் திளைத்துநின்
றாடுகின்ற ஆமைபோல் தெளிவிலாதேன்."

"ஓடும் நீரினை ஓட்டைக்குடத்தட்டி மூடிவைத்திட்ட மூர்க்கன்."

"கரும்பிருக்க இரும்புகடித்து எய்த்தவாறே."

"பாம்பின் வாய்த்தேரை போல்."

"மத்துறு தயிரேபோல் மறுகுமென் உள்ளம்."

"முயல்விட்டுக் காக்கைப்பின் போனவாறே."

"வெற்பில் தோன்றிய வெங்கதிர் கண்ட எப்
புற்பனிக் கெடுமாறு
வைத்தமாடும் மனைவியும் மக்கள்நீர்
செத்தபோது செறியார் பிறிவதே."

"ஆற்றிற் கெடுத்துக் குளத்தினில்
தேடிய ஆதரைப் போல்."

"பாலின் கீழ் நெய்யுமானார்
பழனத்தெம் பரமனாரே."

"படைகள்போல வினைகள் வந்து பற்றிஎன் பக்கனின்று
விடகிலா ஆதலாலே விகிர்தனை விரும்பி ஏத்தும்."

"கரும்பொப்பானைக் கரும்பினிற் கட்டியை
விரும்பொப்பானை விண்ணோரும் அறியா
அரும்பொப்பானை அரத்துறை மேவிய
சுரும்பொப்பானை கண்டீர்நாம் தொழுவதே."

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் விங்கிள வேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே."

என்றெல்லாம் திருநாவுக்கரசர், சிவபெருமானைச் சிந்திக்காது சிற்றின்பம் நாடி, அலைபவர் வருத்தமும், இறைவன் பெருமையும், இறையடியார் துய்க்கும் இன்பமும் ஆகிய செய்திகளை எல்லாம் சீரிய உவமை களால் சித்திரித்துக் காட்டுகிறார்.

உருவகப் படிமம்

திருநாவுக்கரசர் திருப்பதிகத்தில் சிவபெருமானின் தோற்றப் பொலிவையும், அற்புதச் செயல்களையும், திருக்கோயில் பெருமையையும் விவரிக்கப் பல்வேறு உருவகத் தொடர்களையும், உருவக வர்ணனை களையும் பயன்படுத்தியுள்ளார். ஒரு செய்தியை, உருவகமாக, உருவாக்கிக் காட்டும்போது அது மனக்கண்முன் காட்சிப்படுத்தப்படுகிறது.

"உருகு மனத் தடியவர்கட் கூறும் தேனை
உம்பர் மணி முடிக்கணியை, உண்மைநின்ற
பெருகுநிலைக் குறியாளர் அறிவுதன்னை
பேணிய அந்தணர்க்கு மறைப் பொருளைப் பின்னும்
முருகுவிரி நறுமலர் மேல் அயற்கும் மாற்கும்
முழுமுதலை மெய்த் தவத்தோர் துணையை வாய்த்த
திருகுகுழல் உமைகங்கை பங்கன் தன்னைச்
செங்காட்டாங் குடியதனில் கண்டேன் நானே."

என்று இறைவன் திருக்காட்சியைப் பல்வேறு காட்சிகளாக உருவகப் படுத்திக் காட்டுகிறார் திருநாவுக்கரசர்.

உள்ளம் என்னும் அகலில் உணர்வு என்னும் நெய்யை ஊற்றி உயிராகிய திரியில் ஞானத் தீக் கொளுத்தி ஒன்றி நினைக்கும்போது அவனைக் காணலாம் என்கிறார்.

உடம்பென்னும் கோயிலில் மனமாகிய இலிங்கத்திற்கு நேயமென்னும் நீராட்டி, பூசை செய்யலாம் என்று அகப்பூசை செய்யும் முறையினைப் புலப்படுத்துவார்.

சிவகதியாகிய நற்பயிற் விளைவதற்கு உலக மக்கள் கடைபிடிக்கும் முறைகளை,

"மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பென்னும் வித்தை வித்தி
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சித்
தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற்
சிவகதி விளையு மன்றே."

என வரும் திருநேரிசையில் உருவகமாக விரித்துக் கூறி, மனத்தில் அக்காட்சியை உருவாக்குகிறார். அருளாளனாகிய இறைவனும் உயிர் களாகிய மாந்தர் விரும்பித் தங்குவதற்கேற்ற கவர்ச்சியுடையதாக யாக்கை யாகிய இந்த உடம்பைப் படைத்து வழங்கியுள்ளான். உடம்பாகிய இந்த இல்லம் உயிர் மட்டுமே நிலையாய்த் தங்குவதற்கேற்ற சொந்த வீடாக அமையாமல் ஐம்பொறிகள் தங்குவதற்குரிய உரிமையிடமாகவும் அவ்வைம்பொறிகளுக்கிடையே உயிர் ஒதுங்கிக் குடியிருக்க வேண்டிய் துச்சிலாகவும் அமைந்து, உயிர் வாழ்வுக்குப் பலவகைத் துன்பங்களை விளைவிக்கிறது.

"கால்கொடுத்து இருகை ஏற்றிக்
கழி நீரைத் திறைச்சி மேய்ந்து
தோல்படுத்து உதிர நீரால்
சுவரெடுத்து இரண்டு வாசல்
ஏல்வுடைத் தாவ மைத்தங்கு
ஏழுசா லேகம் பண்ணில்
மால்கொடுத்து ஆவி வைத்தார்
மாமறைக் காடனாரே,"

என்று விவரிக்கிறார் திருநாவுக்கரசர். மேலும்,

"ஒருமுழம் உள்ள குட்டம்
ஒன்பது துறையுடைத்தாய்
அரைமுழம் அதன் அகலம்
அதனில் வாழ் முதலை ஐந்து
பெருமுழை வாய்தல் பற்றிக்
கிடந்துநான் பிதற்றுகின்றேன்."

என்று ஐம்பொறி இன்பத்துக்கு ஆட்பட்டுத் துன்புறும் உயிர்களின் அவத்தையை உருவகிக்கிறார் திருநாவுக்கரசர்.

"ஓட்டை மாடத்தில் ஒன்பது வாசலும்
காட்டில் வேவதன் முன்னம் கழலடி
நாட்டி நாண்மலர் தூவி வலஞ்செயின்
வாட்டம் தீர்ந்திடும் வான்மியூர் ஈசனே."

என்று காலனடி சேரும் முன்னர், சிவன் திருவடியைச் சிந்தை செய்ய வேண்டும் என்கிறார் திருநாவுக்கரசர்.

"மனமெனும் தோணிபற்றி
மதியென்னும் கோலை ஊன்றிச்
சினமெனும் சரக்கை ஏற்றிச்
செறிகடல் ஓடும்போது
மதமெனும் பாறை தாக்கி
மரியும் போதறிய வொண்ணா
துனையுறும் உணர்வை நல்காய்
ஒற்றியூர் உடைய கோவே."

என்று இவ்வுலக வாழ்வை வெல்லும் வீழியையும், இறைவனை அடையும் நெறியையும் திருநாவுக்கரசர் உருவகத் தொடர்களால் இயைபு படுத்தி அரிய காட்சியாகப் படைத்துக் காட்டுகிறார்.

குறியீட்டுப் படிமம்

உவமானம் அதே உவமேயத்திற்குத் திரும்பத் திரும்ப ஒப்பீடாக ஆக்கப்படுவதும் ஒப்பீடு செய்கிறபோது உவமானத்தை மட்டும் குறிப்பிட்டுவிட்டு உவமேயத்தைக் குறிப்பிடாமேலேயே உணர்த்துவதும் குறியீடுகளாகும். கோயில் என்றாலே தில்லையைக் குறிக்கும். அங்குத் திருநடம் புரிகின்ற நடராசனின் திருக்கோலக் காட்சி குறியீடாக ஒவ்வொரு தத்துவத்தைக் குறிக்கும், அனல் வடிவமாகத் தன்னை நிறுத்தி கொண்டு, கையில் அனலை ஏந்திக் கொண்டு ஆடுவது, இறைவன் உயிர்களுக்கு ஞானத்தைத் தருவதற்குக் குறியீடாக அமைகிறது.

"முப்பதும் முப்பத்தாறும் முப்பதும் இடுகுரம்பை
அப்பர்போல் ஐவர்வந்து அதுதருக இதுவிடுகென்று
ஒப்பவே நலியலுற்றால் உய்யுமாறு எறிய மாட்டேன்
செப்பவே திகழுமேனித் திகப்புக லூரனீரே."

என்று பாடியுள்ளார் திருநாவுக்கரசர்.

முப்பத்தாறு தத்துவங்களையும் அறுபது தாத்விகங்களையும் ஆக 96-ஐக் கொண்டு அமைக்கப்பட்டது மனித உடம்பு, குரம்பை - குடில் - இது உடம்பினைக் குறிக்கும் ஐம்புல வேடர்கள் குடிலின் தலைவர் போல வந்த இதைச் செய், அதை விடுக என்று ஒரே சமயத்தில் துன்புறுத்துகிறார்கள். தத்துவர் நிலையில் இத்தகு சொற்கள் - குரம்பை - வேடர் - தலைவர் போன்றவை - குறியீடாக அமைந்து பிறிதொரு பொருள் உணர்த்துகின்றன.

திருநாவுக்கரசர் பதிகங்களில் எக்கருத்தையும் சுவைபடப் படிமக் காட்சியாகப் பாடியுள்ள பாங்கினைக் காணலாம். காட்சிப் படிமம், கருத்துப்படிமம், அணிப் படிமம், குறியீட்டுப் படிமம் ஆகிய படிம வகைகள் திருநாவுக்கரசர் கவிதைகளில் அமைந்து அவர்தம் கவித் திறனையும், இறையருள் நாட்டத்தையும் வெளிப்படுத்துகின்றன.

89. நாவுக்கரசரின் நறுந்தமிழ் வளம்

கடவூர் மணிமாறன், கரூர்.

சைவ சமயக் குரவர்களுள் முதல்வராக எண்ணி மதிக்கத் தக்கவர் திருநாவுக்கரசர். இசையால் இனிய தமிழால் பிறரை வயப்படுத்தும் இனிய அடியார்களில் தலைசிறந்தவர் இவர். மறைகள் பாடும் திருவாயை உடைய இறைவனையும் நற்றமிழ் பாடுங்கள் என நவில வைத்த செந்தமிழ்ச் செல்வர் நாவுக்கரசர். தமிழ் பண் உடையது; பண்பாடு உணர்த்துவது; அன்புடையது. ஆண்டவனையும் அடையவல்லது. தனித்தியங்கும் தன்மை பெற்றது என்பனவற்றை வெளிப்படுத்திய பெருமை நாவுக்கரசர்க்கு உண்டு. இத்தகு சீர்த்தி வாய்ந்த திருநாவுக்கரசரின் பாக்களில் மிளிரும் செழுந்தமிழ் வளத்தை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழ் சொல்வளம் மலிந்த மதுரத் தன்மையது. நாவுக்கரசர் பாடிய நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைப் பாடல்கள் அனைத்துமே நிரம்பிய சொல் வளமும், பொருள் வளமும் மிக்குப் பொலிந்து திகழ்வன. இனிமைத் தமிழால் இறைவனாம் நமச்சிவாயனைப் போற்றிப் பதிகங்கள் பாடி பேரின்பப் பெருவாழ்வுப் பெற்றவர் நாவுக்கரசர். பிறவி வேண்டாம் எனப் பேசுவதே அடியார் நிலை எனினும் பேரருள் உருவகமாகப் பிறங்கிடும் பெம்மானின் உருவைக் காணப் பிறவி வேண்டுமென்கிறார் நாவுக்கரசர்.

> "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
> பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
> இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
> மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

எனப் பாடும் நாவுக்கரசர் பாடல் முழுதுமே நறுந்தமிழ் வளத்தால் சிறந்து விளங்குவதாம். தம் இனிய எளிய ஏற்றமிகு பாடல்களால் தமது தளராத் தொண்டால் தன்னிகரற்ற உறுதியால், தாழாப் பக்தியால் சைவ சமயத்திற்குப் பெருமை சேர்த்தவர் நாவுக்கரசர்.

குடியல்லோம்

சமணத்தில் இருந்து மீண்ட நாவுக்கரசரை மன்னன் அமைச்சர்களை ஏவி வருமாறு அழைத்து வரப்பணித்தவர்களிடம் புன்னகை புரிந்த நாவுக்கரசர், அமைச்சர்களே! வேதங்கள் போற்றும் வித்தகனுக்குத்

தில்லையில் ஆடும் திருநீல கண்டனுக்கு இந்தத் திருவதிகையினும் குடி கொண்டிருக்கும் சிவபிரானுக்கு மட்டுமே நான் அடிமைப்பட்டவன். வேறு எவருக்கும் எக்காரணத்தாலும் நான் கட்டுப்படேன் என்று கூறிய அவர்தம் செம்மாப்பை, உறுதியை, உள்ளத்திண்மையை நயமும், தமிழ் வளமும் நிரம்பிய,

''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்ப மில்லை''

என்னும் பாடல் தெளிவு படுத்துகின்றது.

தண்ணார் தமிழுக்கு இறைவன் வயப்படுவார். கொழுந்து விட்டெரியும் நெருப்பையும் குளிர்தென்றலாக்கிக் காப்பார் என்பதனைத் தாம் சுண்ணாம்புக் காளவாயில் தள்ளப்பெற்றபோது என்றும் எதற்கும் துணை நிற்கும் கண்ணுதற் கடவுளை நாவுக்கரசர் நினைத்துப் பாடினார்.

''மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே''

என்னும் பாடலைப் பாடியமைந்த நாவுக்கரசர் எத்துன்பமும் இன்றிப் பகைவர்கள் அதிர்ச்சி அடையும் வண்ணம் புன்னகைத்தபடி அமர்ந் திருந்தார். வீணை, மாலை மதியம், தென்றல், இளவேனில், பொய்கை ஆகியனவற்றைப் போன்று குளிர்ச்சி மிக்கதே ஈசனின் திருவடி நிழலுமெனத் தமிழ் வளம் சிறக்க இப்பாடலைப் பாடியுள்ளார் நாவுக்கரசர்.

யானை வணங்கியது

நஞ்சு கலந்த சோறும் நாவுக்கரசருக்கு அமிழ்தம் ஆனது. பின்னர் யானையை விட்டு மிதிக்கச் செய்து கொன்றிட நினைந்த சமண சமயத் தலைவர்களின் போக்கினைக் கண்டு அப்போதும் தமிழ் வளம் சிறக்க ஒரு பாடலைப் பாடினார்.

''சுண்ணவெண் சந்தனச் சாந்தும் சுடர்திங்கள் சூழாமணியும்
வண்ண உரிவை உடையும் வளமும் பவள நிறமும்
அண்ணல் அரண் முரண் ஏறும் அகலம்வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையான் ஒருவர்தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்சவருவதும் இல்லை''

என மனத்திட்பத்தோடு நாவுக்கரசரை மிதிப்பதற்கு மாறாக மண்டியிட்டு அவரை வணங்கிச் சென்றது அவ்யானை.

நாவுக்கரசரைக் கல்லோடு கட்டிக் கடலில் வீசுமாறு சமணத் தலைவர்கள் ஆணையிட்டபோதும் நாவுக்கரசர் மனம் கவலவில்லை. நாவுக்கரசர் நாயகன் திருவருளை நினைந்து,

"சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயமே"

என்று பாடினார். பாட்டு வரிகள் ஒவ்வொன்றுமே வளம் சிறந்து இறைவனின் திருப்புகழைச் சாற்றுவதாய் அமைந்து விளங்குகின்றன.

மேலும் பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை! ஆவினுக்கு அருங்கலம் அரன் அஞ்சாடுதல், கோவிலுக்கு அருங்கலம் கோட்டம் இல்லது; நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே என்னும்போது நாவுக்கரசரின் நற்றமிழ் வளத்தைக் காண முடிகிறது.

நாவுக்கரசர் திருவாரூர் சென்று ஆரூரான் கோயிலை அடைந்து உள்ளம் உருகப் பாடினார்.

ஆயிரம் தாமரை போலும்
ஆயிரம் சேவடி யானும்
ஆயிரம் பொன்வரை போலும்
ஆயிரம் தோளுடை யானும்
ஆயிரம் ஞாயிறு போலும்
ஆயிரம் நீள்முடி யானும்
ஆயிரம் பேருகம் தானும்
ஆரூர் அமர்ந்த அம்மானே!

என்னும் பாடல் வழியே தாமரையைச் சேவடிக்கும் பொன்வரையைத் தோளுக்கும் ஞாயிற்றை நீள்முடிக்கும் உவமையாகக் கூறி உள்ளம் பெருமிதம் கொள்கின்றார்.

கயிலைக் காட்சி

கயிலைக் காட்சியைக் காண அருள் புரியுமாறு நாவுக்கரசர் இறைவனிடம் வேண்ட ஒரு பொய்கையைக் காட்டி இதில் மூழ்கினால் திருவையாற்றுத் திருக்குளத்தில் இருந்து வெளி வருவீர்! அங்கே கயிலைக் காட்சியைக் காணலாம் என்று இறைவன் கூற அவ்வாறே நாவுக்கரசர் இறைவன் கூறிய பொய்கையில் மூழ்கித் திருவையாற்றுத் திருக்குளத்தில் இருந்து கரை ஏறினார். தாம் காண்பன யாவும் சக்தியும் சிவமுமாய் விளங்குவதை அவர் கண்டார். திருக்கோயிலின் முன் அவர் வந்தபோது அதுவே அவருக்குக் கயிலையாகக் காட்சி தந்தது.

காணக் கிடைத்தற்கரிய கயிலைக் காட்சியைக் கண்டு நாவுக்கரசர் உளம் பூரித்து உவகை பொங்கப் பாடினார்.

"ஓசை ஒளியெலாம் ஆனாய் நீயே!
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே!
வாசமல ரெல்லாம் ஆனாய் நீயே!
மலையான் மருகனாய் நின்றாய் நீயே!
பேசப் பெரிதும் இனியாய் நீயே!
பிரான்அடி என்மேல் வைத்தாய் நீயே!
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே!
திருவையா றகலாத செம்பொற் சோதீ!"

எனப் பாடிய பாடலிலும் எளிமையும், இனிமையும் நல்ல தமிழ் வளமும் ஒருசேர அணி வகுக்கின்றன.

இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவாரத் திண் படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும் நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப்பாடல் தொடையறாச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும் சிறந்த நாவுக்கரசரின் பாடல்கள் ஒவ்வொன்றிலும் செழுந்தமிழ் வளம் பொதிந்து விளங்குகின்றது.

திருப்பதிகம்

பல்வேறு திருத்தலங்கட்கும் சென்று இறைவனை வணங்கிப் பாடிய பெருமைக்கு உரியவர் நாவுக்கரசர். சிவபெருமான் கோயில் கொண்ட திருமலைகளை வணங்கக் கருதித் திருவண்ணாமலையினை அடைந்து அங்கே தமக்கு நேர் நின்ற பெருமானை வணங்கிப் பிறப்பே வீட்டிற்கு மேலாம் பெருமையைத் தமது திருப்பதிகத்தில் பெற வைத்தார்.

ஓதி மாமலர்கள் தூவியுடையவள் பங்கா மிக்க
சோதியே துளங்கு மெண்டோள் சுடர்மழுப் படையினானே
ஆதியே அமரர் கோவே அணி அணாமலையுளானே
நீதியான் நின்னையல்லால் நினையுமா நினைவிலேனே!

என்று உள்ளம் நெக்குருகி உயரிய நோக்கமைந்த பாடலைப் பாடினார். நாவுக்கரசரின் திருத்தாண்டகப் பாடல்கள் அவர்தம் புலமை வளத்தைத் தெள்ளிதின் உணர்த்துவன. திருபூந்துருத்தி சென்று அவண் வீற்றிருக்கும் சிவபெருமானை ஆராத காதலுடன் வணங்கித் திருத்தாண்டகமும் திருக்குறுந்தொகையும், திருவிருத்தமும் திருவாய் மலர்ந்தருளினர்.

நில்லாத நீர்சடைமேல் நிற்பித் தானை
நினையாத என்நெஞ்சை நினைவித்தானைக்
கல்லா தனவெல்லாம் கற்பித் தானைக்
காணா தனவெல்லாம் காட்டினானைச்

சொல்லா தனவெல்லாம் சொல்லி யென்னைத்
தொடர்ந்திங் கடியேனை யாளாக் கொண்டு
பொல்லாவென் நோய் தீர்த்த புனிதன் தன்னைப்
புண்ணியனைப் பூந்துருத்திக் கண்டேன் நானே!

என்னும் பாடல் முற்றும் முத்தமிழ் வளத்தைப் பறைசாற்றுவதாய் அமைந்து இலங்குகின்றது. நிற்கவியலாத நீர்சடைமேல் நிற்கச் செய்தவன்! நினைக்க முடியாதவற்றையெல்லாம் நினைக்கச் செய்தவன்; கல்லாதன வற்றையெல்லாம் கற்பித்தவன்; காணாதனவற்றையெல்லாம் காணுமாறு செய்தவன்; சொல்லாதனவற்றையெல்லாம் சொல்லித் தொடர்ந்து எனை ஆட்கொண்டு பொல்லாத என் நோய் முழுதும் தீர்த்த புனிதன்; புண்ணியனைத் திருப்பூந்துருத்தியில் கண்டு பெருமகிழ்வில் திளைத்தேன் என்னும் பொருளுடைய இத்திருத்தாண்டகம் நாவுக்கரசரின் நறுந்தமிழ் வளத்தைப் புலப்படுத்துகின்றது.

உன்னடிக்கே போதுகின்றேன்

நாவுக்கரசர் திருப்புகலூரில் தங்கிய காலத்து ஒரு நாளில் திருநாவுக்கரசரது திருப்பணிப் பெருமையை உலகிற்கு விளக்கும் பொருட்டு அவர் உழவாரப் பணி செய்யுமிடம் எங்கும் பொன்னும் நவமணியும் நிறைந்து இலங்கும்படி இறைவர் திருவருள் செய்தார். அவற்றையும் பருக்கைக் கற்களையும் ஒரு தன்மையனவாகவே கருதி இருவகைக் கற்களையும் வாரிப் பொற்றாமரையில் எறிந்தார்.

இவ்வாறே ஒரு சித்திரைத் திங்கள் சதயத் திருநாளில் எய்துதற் கரிய சிவானந்த ஞான வடிவேயாகிப் பாடிய பதிகத்துள் ஒவ்வொரு பாடலில் இறுதிதோறும் புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் என்று புகன்று படைப்புக் கடவுளும் படைப்புப் பொருள்கள் யாவும் தத்தம் உள்ளத்திற் பெருமகிழ்ச்சி எய்தும்படி வானவர்கள் மலர்மாரி பொழிந்து பேரிசை ஒலிப்பச் சிவபெருமானது சேவடிக்கீழ் இரண்டறக் கலந்தார்.

நான் என்ன சொல்லி எண்ணுவேன்! எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால் கண்ணிலேன்; மற்றோர் களைகண் இல்லேன்; கழலடியைக் கைதொழுது காணின் அல்லால் ஒருடம்பில் ஒன்பது வாயில்களும் ஒருசேர அடைக்கும்போது உணரமாட்டேன், பூம்புகலூர் மேவிய புண்ணியனே! உன்னடிக்கே போதுகின்றேன் என உள்ளம் உருகப் பாடுகின்றார் நாவுக்கரசர்.

இரண்டு கால்கள் நட்டு இருமருங்குள்ளதாகலானும் நரம்பென்னும் கழிகளால் வரியப் பெற்றும் உதிரப் புலாலால் சுவர் வளர்க்கப் பெற்றும், தோல் இறைச்சியால் கூரைவேயப் பெற்றும் ஏழு பலகணிகளையும்

இரண்டு வாசல்களையும் உடையதாயும் இருத்தலானும் நமது யாக்கை வீட்டை ஒத்து இருக்கின்றது என்று பாடியுள்ளார் நாவுக்கரசர்.

இன்னும் உடம்பானது ஒரு முழ ஆழமும், ஒரு முழ நீளமும் அரை முழ அகலமும் உள்ள ஒரு குட்டமாகவும் ஒன்பது துறைகளை யுடையதாகவும் அதனில் ஐந்து முதலைகள் வாழ்வதாயும் வர்ணிக்கிறார் நாவுக்கரசர். உடம்பை திருக்கோயிலாகவும் திருவுள்ளம் இறைவரது இருக்கையாகவும் ஓரிடத்தில் விளக்கும் நாவுக்கரசர் பிறிதோரிடத்தில் உடம்பை வீடாகவும் உள்ளத்தை விளக்காகவும் குறிப்பிடுகின்றார்.

பாடல் நயம்

நாவுக்கரசர் தேவாரத்தில் கற்பனை நயமும் நகைச்சுவையும் மிக்க பாடல்கள் பல உள்ளன. சிவபெருமானது திருமுடியில் கங்கையும், பாம்பும், மதியும் இருப்பதைக் குறிப்பிடும் நாவுக்கரசர் பாம்பைக் கண்டு கங்கையாகிய மங்கை அஞ்சுவதாகவும், மங்கையை மயிலென்று பாம்பு அஞ்சுவதாகவும் பாம்பு தன்னை விழுங்கி விடுமென்று மதி அஞ்சுவதாகவும் நயம் தோன்றப் பாடி இருக்கின்றார்.

சிவநெறியாம் சைவ நெறி தழைப்பதற்குத் திருநாவுக்கரசர் ஆற்றிய தொண்டு அளப்பரியது. உழவாரப் பணியையும் தொடர்ந்து செய்து வந்தவர் நாவுக்கரசர். உழவாரக் கருவி கொண்டு கோவிலில் முளைத்து இருந்த புல்லையும், பூண்டையும் அவர் செதுக்கும்போது அங்கே பொன்னும், மணிகளும் நிறைந்து கிடைக்கும்படி சிவபெருமான் அருள்புரிய நாவுக்கரசரோ அப்பொன்னையும், மணிகளையும் கூழாங்கற்களாய்க் குப்பைகளாய்க் கருதி அப்பால் வீசியெறிந்தார். அதனைக் கண்டு தேவர்களும் வியந்து போற்றினர். அவர்தம் புகழ் உலகெங்கும் பரவியது. இத்தகு செந்நெறியாம் சிவநெறி செழித்தோங்கப் பாடுபட்ட நாவுக்கரசரின் பாடல்கள் அனைத்துமே நறுந்தமிழ் வளத்தைச் சுமந்தும் நிமிர்ந்தும் நிற்கின்றன.

90. திருவைந்தெழுத்தும் திருநாவுக்கரசரும்

ம. மருதமுத்து, திருவையாறு.

நாம் எவ்வளவோ சொற்களைப் பொருள் தெரியாமல் பயன்படுத்தி வருகின்றோம். ஆனால் அவற்றிற்கு ஆழ்ந்த பொருள் இருப்பதை நாம் அறிந்ததும் இல்லை, புரிந்ததும் இல்லை. நம்மை ஒருவன் அடிக்கடி தொந்தரவு செய்தால், நான் சிவனே என்று இருக்கிறேன்; ஏன் தொந்தரவு செய்கிறாய் என்று கேட்கிறோம். ஒருவன் ஒரு வேலையும் செய்யாமல் சும்மா இருந்தால், ஏன் சிவனேயென்றிருக்கிறாய்? என்று கேட்கிறோம். இதிலிருந்து சும்மாவென்று இருப்பது சிவனேயென்று இருப்பதாக வழக்கில் வந்துவிட்டது.

சிவன் நாமம்

"சிவன் என்னும் ஓசையல்லாது அறையோ!
உலகில் திருநின்ற செம்மையுளதே!"

என்று உள்ளம் உருகிப் பாடுகிறார் நாவுக்கரசர். அறையோ என்பது ஒரு வஞ்சினமொழி. வேணி அலங்காரரின் நாமமாகிய "சிவன்" எனும் சொல் ஓதப்படுவதால்தான் உலகில் நன்மை பெருகி மனிதன் சீரும் சிறப்புமாக வாழ்கிறான் என்று அப்பர், தாம் கண்ட உண்மைகளைக் கூறுகிறார்.

மதுரையில் சமணரோடு, சம்பந்தர் வழக்காடி வைகை நீரில் விட்ட ஓலையில் முதலாம் பாடல்,

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே!"

அரன் நாமமே சூழ்க வையகம் - என்று அருமையாகச் சிவனைக் குறிப்பிடுகின்றார். இதையே சேக்கிழார் பெருமான் தாம் எழுதிய பெரியபுராணத்திலும் வலியுறுத்துகின்றார்.

"ஆழ்க தீயதென் றோதிற் றயல்நெறி
வீழ்க வென்றது வேறெல்லாம் அரன்பெயர்
சூழ்க வென்றது தொல்லுயிர் யாவையும்
வாழி அஞ்செழுத் தோதி வளர்கவே!"

இதனால் திருவைந்தெழுத்து அரன் நாமமே என்பதும், உலக உயிர்களுக்கு உறுதி பயப்பது என்பதும் தெளிவாகிறது. இதை மனதால் மட்டுமின்றி நாவினால் சொல்லச் சொல்ல கருப்பஞ்சாறு போல தித்திக்கும் சொல்லாகவே உணர்கிறார் அப்பர் அடிகள்.

"ஆலை படுகரும்பின் சாறுபோல
அண்ணிக்கும் அஞ்செழுத்தின் நாமந்தான்காண்"

என்று பாடி மகிழ்கிறார்.

திருவைந்தெழுத்து

படைப்புக் காலத்தில் ஒலி வடிவமே முதன் முதலில் தோன்றுவது என்று சொன்னாலும், திருவைந்தெழுத்தும் முதன் முதலில் தோற்றம் செய்தது என்பது பொருந்தாது. இதில் நமக்குச் சிறு குழப்பமும், கேள்வியும் எழுகிறது. அதாவது எல்லா சாத்திரங்களுக்கும் மூலமாய் உள்ள திருவைந்தெழுத்து முதலில் தோன்றவில்லை. இதற்கு விடை கூறப்புகின், என்று சிவன் உள்ளானோ? அன்றே அவன் திருநாமமும் உள்ளது என்று கொள்வதில் தவறொன்றுமில்லை, என்றும் அழியாத பொருள் ஒன்று இருந்தால், அதன் பெயரும் அப்பொருளோடு ஒன்றி அழியாத தன்மையைப் பெற்றுத்தான் நிற்கும் என்பது உறுதி. சிவன் தன் பெயராயும் அதன் பெருமையாயும் தோற்றமளிக்கிறார். இது அப்பரின் அசையாத நம்பிக்கை.

"நீராகி நீளகலம் தானேயாகி
நிழலாகி நீள்விசும்பின் உச்சியாகிப்
பேராகி, பேருக்கோர் பெருமையாகிப்
பெருமதில்கள் மூன்றினையும் எய்தானாகி
ஆரேனுந் தன்னடைந்தாக தன்மையெல்லாம்
ஆர்கொள்ள வல்லஎம்ஈச னார்தாம்
பாராகிப் பண்ணாகிப் பாடலாகிப்
பரஞ்சுடராய்ச் சென்றடிகள் நின்றவாறே"

என்று கூறுகிறார்.

சிவபெருமான், திருவைந்தெழுத்தைத் தன் பெயராகக் கொண்டிருப்பதோடன்றி அத்திருவைந்தெழுத்தாகவும் அடியார்களுக்கு காட்சி தந்தருளுகின்றார் என்ற உண்மையை அப்பரடிகள் தெளிவுப்படுத்துகிறார்.

"வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சிவாயவே"

இதனால் பேரின்ப உலகில் அடியாருடன் கூடித் தரிசித்த அப்பருக்கு இறைவன் நமச்சிவாயமாய் நாடிவந்து காட்சி நல்கிய உண்மை இதிலிருந்து உணரப்படுகிறது. இத்திருவைந்தெழுத்து, இறைவனின் திருநாமமாகியும், திருவுருவமாகியும் இருப்பதோடு, அவ்விறைவனை சென்றடையும் நல்வழியாகவும் இருக்கிறது என்பதை நாம் அறிய வேண்டும். இந்நிலையில் நின்று நாம் யோசிக்கும் பொழுது சிவனது திருப்பெயராகிய திருவைந்தெழுத்தும் அவனுடைய இயல்புகளை விளக்கும் தன்மையிலேயே அமைந்திருப்பது தெளிவு, இவற்றையே வேத நூல்கள் யாவும் கூறுவதை நாம் அறிகிறோம்.

பதி, பசு, பாசம்

சைவ சித்தாந்த உண்மைப்படி பதிபசுபாசம் என்று சொல்லப்பட்ட மூன்றும் முதலும் அனாதியே நிலவி வருகின்றன. இதன் உண்மைத் தத்துவம் என்னவெனில் நடுவே நின்ற பசுவாகிய ஆன்மா பாசமாகிய மலத்தின்கண் பற்று வைத்தால் மலத்தின்பாற்படும் பதியாகிய சிவத்தின்கண் அன்பு செலுத்தினால் சிவகதி அடையும். மனவயப்பட்டால் துன்பமும் சிவ வயப்பட்டால் முக்தியும் அடைவர்.

ஆன்மாவின் அதிசய குணம்

இந்த ஆன்மாவினுடைய அதிசய குணம் என்னவென்றால், அது எதைப் பற்றுகிறதோ, அதை விடாது பிடித்துக்கொண்டிருக்கும். இதனைச் சார்ந்துதான் வண்ணமாம் தன்மை என்று கூறுவார்கள். தான் பற்றிக் கிடக்கும் ஒன்றைத் தானாக நீங்கும் தன்மை ஆன்மாவுக்கு இல்லை. அதில் எதைக் கலந்தாலும், அதனை இரண்டற்ற நிலையில் அத்துவிதமாகவே கலந்துவிடும் தன்மை கொண்டது. இதனைத் தாயுமானவர்,

"ஆணவத்தோடு அத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோடு அத்துவித மாகுநாள் எந்நாளோ?"

என்று பாடுகிறார்.

இன்பமும், துன்பமும்

ஆன்மாவுக்கு ஒரு பக்கம் இன்பம், ஒரு பக்கம் துன்பம். ஒரு பக்கம் சிவம், ஒரு பக்கம் மலம். இப்படி இரண்டுக்கும் இடைப்பட்ட ஆன்மா தானாக இயங்கும் வலியற்றது. இந்த ஆன்மாவை மலத்தின்பாலிருந்து இழுத்து உலகவிடங்களிலே புகச் செய்யும் சிவசக்திக்கு ஆதிசக்தி அல்லது திரோதான சக்தி என்று பெயர். (திரோதானம் - மறைப்பு). இந்த ஆன்மாவை ஒரு புறம் சிவசக்தியும், மறுபுறம் திரோதான சக்தியும் நின்று ஆட்டிவைக்கிறது. திரோதானம் ஆட்டி வைப்பது ஊன நாடகம். திருவருள் ஆட்டுவிக்கும் நாடகம் ஞான நாடகம். இதனை மாணிக்கவாசகர்,

''ஊனை நாடகம் ஆட்டு வித்தவா
உருகி நானுனைப் பருகி வைத்தவா
ஞான நாடகம் ஆட்டு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே''

என்று அழகாகப் பாடி மகிழ்கிறார்.

நமசிவாய சிவாய நம

''சிவாய நம என்று சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஒருநாளும் இல்லை'' முன் சொல்லப்பட்ட (பதிபசுபாசம்) மூன்று முதலும் ஐவகையாக நிற்கிறது. அதாவது, சிவன், அருட்சக்தி, ஆன்மா, திரோதான சக்தி, மனம் என்பனவாகும். இவ்வைந்தையும் குறிப்பதே சிவாயநம என்று சொல்லப்படும் இறைவன் திருப்பெயராகிய திருவைந்தெழுத்தாம்.

சிந்தாந்த நூல்களின் கொள்கைப்படி நமசிவாய என்பது உலகியலைக் குறித்துப் போகத்தை அளிப்பது. சிவாயநம என்பது வீட்டியலில் உய்த்து முக்தியை அளிப்பது.

நமசிவாய

நகாரத்தை முதலாகக் கொண்டு நமசிவாய என்று உச்சரிப்பதை தூல பஞ்சாக்கரம் என்றும், சிகாரத்தை முதலாகக் கொண்டு சிவாய நம என உச்சரிப்பதை சூக்கும பஞ்சாக்கரமென்றும், சிவாயவசி என உச்சரிப்பதை காரண பஞ்சாக்கரமென்றும், சிவ என்று மட்டும் உச்சரிப்பதை முத்தி பஞ்சாக்கரமென்றும் கூறுவது மரபாக உள்ளது. ஆக, நமசிவாய என்று உச்சரிப்பதைவிட சிவாய நம என்று காரண பஞ்சாக்கரத்தை உச்சரிப்பதே முத்தி கிடைக்கும் என சித்தாந்த நூல்கள் கூறுகிறது.

''சிவனருள் ஆவி திரோதமலம் ஐந்தும்
அவனெழுத் தஞ்சின் அடைவாம் இவனின்று
நம்முதலா லோதிலருள் நாடாது நாடுமருள்
சிம் முதலா லோதுநீ சென்று''

நம்முதலா - நகாரமுதலா - நமசிவாய
சிம்முதலா - சிகாரமுதலா - சிவாயநம

நாம் இந்த திருவைந்தெழுத்தை மனம், மொழி, காயம் (செய்கை) ஒன்றி உளமகிழ்வோடு ஓதிப் பயில வேண்டும். இதனை அப்பரடிகள் தம் தேவாரத்தில்,

''கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச்சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதிநீ பாதிரிப்புலியூர் அரனே!''

''சிவாயநமவென்று'' என்பதால் மனமும், மொழியும் செய்யும் காரியங்களிலும், ''நீறு அணிந்தேன்'' என்பதால் மெய்யின் தொழிலும் ஒன்றுபடும்.

திருநீற்றின் மகிமை

திருவைந்தெழுத்திற்கும், திருவெண்ணீற்றுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு இருப்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது கருமையாகிய சாணத்தை தீயாற் சுட்டு தூய வெண்ணீறாக்கித் தரித்தல், மெய்ஞ்ஞானத்தால் இருளாகிய மனத்தைக் களைந்து வெள்ளிய அருளொளி நிறைந்த சிவத்தன்மை அடைதலையே குறிக்கிறது. அதனால்தான், திருநீற்றை மெய்யமுத்தி அஞ்செழுத்தை நெஞ்சமுத்தி உய்வு பெற்றவர் என்பதைவிட, நாம் உய்வு பெற வழிகாட்டியவர் நாவுக்கரசர்.

இப்படிச் சைவம் தழைக்க தம்மையே அர்ப்பணித்துக் கொண்ட நாவுக்கரசருக்கு ஞானகுருவாக விளங்கி நல்நெறி காட்டியவர் அவருடைய தமக்கையான திலகவதியாராவார். அஞ்செழுத்தை ஓதி, திருநீற்றைக் கொடுத்ததே, நாவுக்கரசருக்கு செய்த உபதேசமாகும். இதனைச் சேக்கிழார் அழகாகக் கூறுகிறார்.

.... ''திருக்கயிலைக்
குன்றுடையார் திருநீற்றை அஞ்செழுத்தோ திக்கொடுத்தார்''

இதிலிருந்து ஒருவர் ஒருவருக்குத் திருநீறு வழங்கும்பொழுது திருவைந்தெழுத்தை ஓதியே கொடுக்க வேண்டும் என்பது போதரும்.

இவ்வாறு உணர்தற்கரியதாயினும் ஓதற்கெளிய திருவைந்தெழுத்தையும், அம்மந்திரத்தின் உட்பொருளையும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானே, ஞான குருநாதனாய்த் தோன்றி உபதேசிக்கக் கேட்டவர் நாவுக்கரசு பெருமானாவார். அப்படிப்பட்ட திருவைந்தெழுத்தை, கறைமிடறும், பிறைமுடியுமுடைய சிவனாரின் அடியை மனமார வழுத்துவோமாக.

ா

-பாடல் 49:4

-பாடல் 33:3

91. அப்பர் தேவாரத்தில் விலங்குகள்

பா. மல்லிகா, தாமரைக்குளம்.

பல்லவர் காலத்துத் தோன்றிய திருமுறைகளில் 4,5,6-ஆம் திருமுறைகள் அப்பரால் இயற்றப்பட்டவை. ஆறாம் திருமுறை முழுவதும் தாண்டகம் என்னும் யாப்பு வடிவால் அமைந்தது. 6 சீர் அல்லது 8 சீர்களால் இயன்ற 4 அடிகள் ஒத்து வருவதும் கடவுளரைப் புகழ்வதுமான பிரபந்த வகைதான் அது. ஆறாம் திருமுறையில் உள்ள முதல் பத்துப் பதிகங்களில் 106 பாடல்களில் காணப்படும் விலங்குகளைப் பற்றி ஆராய்ந்து கூறுவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

விலங்கு என்றால் என்ன?

விலங்கு என்பதற்கு மாவும் புள்ளும் என்று விளக்கம் நல்குகிறது செந்தமிழ் அகராதி. அப்பரின் பாடல்களில் 70 இடங்களில் விலங்கு களும் ஓரிடத்தில் பறவையும் குறிப்பிடப்படுகின்றன.

விலங்கினங்கள்

அப்பரின் பாடல்களில் ஏறு, பாம்பு, யானை, புலி, மான், ஆமை, கருடன் ஆகியவை இடம் பெறுகின்றன.

1. ஏறு (35)

சிவ[illegible]து கொடியாகவும், ஊர்தியாகவும் இடம் பெறுவது [illegible] பாடல்களில் 26 தடவை இடம்பெறுகிறது.

-பாடல் 14:4

-பாடல் 18:1

-பாடல் 22:1

-பாடல் 27:4

-பாடல் 34:1

-பாடல் 36:4

-பாடல் 43:2

-பாடல் 48:4

-பாடல் 51:1

10. கடுமுரனே றூர்ந்தான் -பாடல் 55:3
11. உருளுடைய தேர்புரலி யோடும் யானை
ஒன்றாலுங் குறைவில்லை யூர்தி வெள்ளேறு -பாடல் 91:1
12. வீறுடைய ஏறேறி -பாடல் 92:1
13. ஒன்றாலுங் குறைவில்லை ஊர்தி வெற்றேறு -பாடல் 94:1
14. பைங்கண் ஏற்றினார் -பாடல் 97-106:4 (10 தடவை)
15. போரேற்றினார் -பாடல் 99:1
16. ஏறேறி -பாடல் 105:1

என 25 இடங்களில் ஏறு என்ற சொல்லாட்சி இடம் பெற்றுள்ளது. அவ்வாறு கூறும் இடங்களில் எல்லாம் அப்பர் அதன் போர்த் தன்மையையும், கொல்லும் தொழிலையும் வெள்ளிய நிறத்தையும், உயர்ந்த தோற்றத்தையும், சினத்தையும், விரைவையும், பைங்கண்ணையும் அடைமொழியாக்கி அளித்துள்ளார். அது தவிர விடை, ஆன், பசு என்னும் சொற்களும் ஏற்றினைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், ஏறு என்பதைக் குறிக்கும் விடை என்னும் சொல்லை 8 முறை அப்பர் பயன்படுத்தி உள்ளார்.

1. போரார் விடையேறி -பாடல் 15:4
2. வெள்விடையைப் பாயவேறி -பாடல் 19:2
3. வெள்ளிக்குன்றன்ன விடையான் -பாடல் 23:3
4. விண்ணோர் விடையார் -பாடல் 70:3
5. நல்லவிடை மேல்கொண்டு -பாடல் 81:3
6. கடியதோர் விடையேறி -பாடல் 87:2
7. கடிய விடையேறி -பாடல் 89:1, 95:1 (2 தடவை)

அவ்வாறு கூறுமிடத்துப் போர்த் தன்மையையும், வெள்ளிய நிறத்தையும், விரைவையும் குறிக்கும் சொற்களை அடைமொழிகளாக்கி அப்பர் அலங்கரிக்கிறார்.

மேலும் ஆன் என்னும் சொல்லாட்சி

ஆடும் ஆன்ஐந்தும் உகப்பாய் -பாடல் 49:4

என ஓரிடத்தும் பசு என்னும் சொல்லாட்சி

பசுவேறு மெங்கள் பரமன் -பாடல் 33:3

என ஓரிடத்தும் வந்துள்ளது.

2. பாம்பு (19)

சிவனின் மார்பிலுள்ள அணியாகவும் அரையின் ஆடையாகவும் பாம்பு அப்பர் பாடல்களில் இடம்பெறுகிறது.

1. தூமதியும் பாம்பு முடையார் -பாடல் 13:1
2. பாம்பும் மதியும் புனலுந் தம்மிற்
பகைதீர்த் துடன்வைத்த பண்பா போற்றி -பாடல் 47:3

என இரண்டு இடங்களில் பாம்பு என்னும் சொல்லாட்சி இடம்பெற்றுள்ளது. அதுதவிர அரவம், நாகம், அரவு, படம், மாகணம் என்னும் சொற்களும் பாம்பைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

1. பொறிய ரவி னானை -பாடல் 22:2
2. படஅரவந் தடமார்பில் பயில்வித் தானே -பாடல் 34:2
3. பைங்கண் வெள்ளெயிற்றா டரவனே -பாடல் 36:1
4. கோளரவம் ஆட்டுங் குழகா போற்றி -பாடல் 48:2
5. அரவம் ஏற்றார் -பாடல் 100:2

என்று வரும் 5 இடங்களிலும் புள்ளிகளைக் கொண்டது, படத்தை உடையது, பசிய கண்ணினையும் வெள்ளிய பல்லையும் கொண்டது எனவும் கட்புலனுக்குரிய அடைமொழிகளை இட்டு அப்பர் அமைத்துள்ளது போற்றுதற்கு உரியது.

மேலும் நாகம் என்பது

1. புள்ளி வரிநாகம் பூண்டான் -பாடல் 23:2
2. கதநாகம் கொண்டாடும் காட்சி யானே -பாடல் 35:2
3. ஆட்டுவதோர் நாகம் அசைத்தாய் போற்றி -பாடல் 45:4
4. நாகம் அரைக்கசைத்த நம்பா போற்றி -பாடல் 49:3
5. படநாகக் கச்சையர் -பாடல் 90:1
6. நாகம் பூண்டார் -பாடல் 97:1, 102:3 (2 தடவை)

என ஏழு தடவை கையாளப்பட்டுள்ளது.

மேலும் அரவு என்னும் சொல்

1. கோலாம் படவரைநட் டரவு சுற்றி -பாடல் 40:3
2. அரவணையான் சிந்தித் தரற்றும்மடி -பாடல் 54:1
3. அணலுமிழும் ஐவா யரவு மார்த்தார் -பாடல் 105:3

என 3 இடங்களில் வந்துள்ளது.

மேலும்

1. படமன்னு திருமுடியார் -பாடல் 102:4

என்பதில் படம் என்றும்

1. ஐந்தலைய மாசுணங்கொண் டரையார்க் கும்மே - பாடல் 33:4

என்பதில் மாகணம் என்றும் பாம்பு குறிக்கப்படுகிறது. இவ்விடங்களில் எல்லாம் புள்ளிகளை உடையது, கோபமுடையது, ஆடும் இயல்புடையது, படமுடையது, ஐந்து தலை கொண்டது என்று பாம்பின் இயல்புகளை அடைமொழிகளாக்கி அமைத்துள்ள அழகு போற்றற்குரியது.

3. யானை (9)

யானையின் தோல் சிவபெருமானின் போர்வையாகக் கூறப்படுகிறது.

யானை என்னும் சொல்லாட்சி

1. உருளுடைய தேற்புரவி யோடும் யானை
   ஒன்றாலும் குறைவில்லை ஊர்தி -பாடல் 91:1
2. கடமன்னு களியானை யுரிவை போர்த்தார் -பாடல் 102:1

என யானை என்னும் சொல்லாட்சி இரண்டு இடங்களில் வந்துள்ளது. யானை என்னும் சொல்லாட்சி பேச்சு வழக்கில் ஆனை என்றாகிவிடுவது இயல்பு. இச்சொல்லினை அப்பர் ஓரிடத்துக் கையாண்டு உள்ளார்.

1. காரானை யீருரிவைப் போர்வையானை -பாடல் 8:1

அதுதவிரக் களிறு, வேழம், கரி என்ற சொற்களும் அப்பர் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

1. கலாவெங் களிற்றுரிவைப் போர்வை மூடி -பாடல் 18:2
2. மாலாகி மதமிக்க களிறு தன்னை
   வதைசெய்து மற்றதனின் உரிவை கொண்டு -பாடல் 40:1
3. களிற்றுரிவை மெய்போர்த்தார் -பாடல் 98:1

என்று களிறு என்னும் சொல் 3 இடங்களில் இடம்பெற்றுள்ளது.

வேழம் என்னும் சொல்

1. வேழத் துரிவெருவப் போர்த்தாய் போற்றி -பாடல் 49:2
2. வேழத் துரிமூடும் விகிர்தா போற்றி -பாடல் 50:2

என 2 இடங்களில் பயின்று வந்துள்ளது.

மேலும் கரி என்னும் சொல்

1. கரியுரிவை போர்த்துகந்த காபாலி -பாடல் 82:4

என ஓரிடத்தும் வந்துள்ளது.

4. புலி (3)

சிவபெருமானின் ஆடையாகப் புலித்தோல் கூறப்படுகிறது. புலி என்பது இரண்டு இடங்களில் வந்துள்ளது.

1. **புலித்தோல் வீக்கி** -பாடல் 20:4
2. **புலித்தோல் உடையினார்** -பாடல் 99:1

ஓரிடத்தில் மட்டும்

1. **கொல்வேங்கை யதளனே** -பாடல் 43:2

என்று வேங்கை என்னும் சொல்லாட்சி இடம்பெறுகிறது. கொல்லும் தன்மையை அடைமொழியாக்கி அப்பர் அமைத்துள்ளார்.

5. மான் (3)

சிவபெருமானின் ஆடையாக மான் தோல் கூறப்படுகிறது. மான் சிவபெருமானின் கையிலுள்ள பொருளாகவும் குறிப்பிடப்படுகிறது. மான் என்னும் சொல் 3 இடங்களில் பயின்று வந்துள்ளது.

1. **கருமானின் உரியதளே உடையாவீக்கி** -பாடல் 3:1
2. **மானின் தோலர்** -பாடல் 93:1
3. **மான்மறியோர் கையிலேற்றார்** -பாடல் 100:3

ஆண்மான் என்பதற்காகக் கரு என்னும் அடைமொழியை அப்பர் கையாண்டுள்ளார்.

6. ஆமை (1)

ஆமையோடு சிவபெருமானின் அணிகலனாகக் கூறப்படுகிறது.

1. **நூன்மேலோ ராமை பூண்டார்** -பாடல் 97:1

என்னுமிடத்து ஆமையோட்டை அணியாகக் கொண்டவர் சிவன் என்பது குறிப்பிடப்படுகிறது.

7. பறவை (1)

1. **புள் ளூர்தியானை** -பாடல் 22:2

கருட வாகனத்தை உடைய திருமாலாகவும் விளங்குபவர் சிவன் என்று வருணிக்குமிடத்துக் கருடப் பறவை கூறப்படுகிறது.

1. ஒருவரைக் காணும்போது உடை, அணிகலன், ஊர்தி ஆகியவை கண்ணில் முதற்கண் தோன்றும் பொருள்கள் ஆகும். அம்முறைக்கேற்ப யானை, மான், புலி முதலிய விலங்குகளின் தோலை ஆடையாக அணிந்தவர் சிவன் என்றும், பாம்பு, ஆமையோடு முதலிய

அணிகலன்களை அணிந்தவர் சிவன் என்றும், வெள்ளிய வேகமாகச் செல்லக் கூடிய ஏற்றினை ஊர்தியாக உடையவர் என்றும் அப்பர் விளக்கியுள்ளது பாராட்டுதற்குரியது.

2. திரும்பத் திரும்பப் பார்க்குமிடத்து ஒரு பொருளில் சிறப்புத் தன்மைகள் கண்ணில், மனதில் பதிவதுண்டு. அதற்கேற்பத்தான் அப்பர் அநேக இடங்களில் ஒரு சொல்லுக்குப் பல அடைமொழி களைக் கையாண்டு கூறியுள்ளார்.

3. ஒரு பொருளையே சொல்லும்போது சலிப்பு ஏற்படாமல் இருக்கவும், ஆர்வம் ஊட்டவும் வேறு வேறு சொற்களைக் கையாண்டு இருப்பது சிறப்புடையது.

நன்னூலில் பவணந்தி

ஒருபொருள் குறித்த பலசொல் லாகியும்
பலபொருள் குறித்த ஒருசொல் லாகியும்
அறிதுணர் பொருளை திரிசொல் லாகும் (ந.சூத். 272)

என்று குறிப்பிடுகின்றார். அதற்கு ஏற்பப் பசு என்பதைக் குறிக்க ஏறு, விடை, ஆன் ஆகிய சொற்களும், பாம்பைக் குறிக்க அரவம், நாகம், அரவு, படம், மாகணம் ஆகிய சொற்களும், யானையைக் குறிக்க ஆனை, களிறு, வேழம், கரி ஆகிய சொற்களும் அப்பரால் கையாளப்பட்டுள்ளன.

இது அப்பரின் தமிழ் ஆற்றலையும் கொள்வோர் மனதை அறிந்துரைக்கும் ஆற்றலையும் உணர்த்துகிறது.

4. புலி, பாம்பு, யானை போன்ற கொடூர விலங்குகளையும், ஏறு, மான், ஆமை போன்ற சாத்வீக விலங்குகளையும் இறைவனின் பொருள்களாகக் கூறுவதற்குக் காரணம் இறைவன் வலியவர், மெலியவர் என்ற பாகுபாடின்றி அருள்பவர் என்று உணர்த்து வதற்கே ஆகும்.

5. விலங்குகள் அதிகம் இடம்பெற்ற பதிகங்கள் பத்தாம் பதிகமும் நான்காம் பதிகமும் ஆகும். இறைவனைப் போற்றும் பத்தாம் பதிகத்தின் இருபத்தி ஒன்று இடங்களிலும் இறைவனின் அடையாளங்களைக் கூறும் நான்காம் பதிகத்தில் பதினொன்று இடங்களிலும் விலங்குகளின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

92. அப்பர் தேவாரத்தில் முருகன்

சீனு. மாணிக்கம், திருப்பனந்தாள்.

தமிழகத்தில் முருக வழிபாடு என்பது மிகப்பழமையானது. தொன்று தொட்டு நடத்தப்பெறுவது. குறிஞ்சி நிலத் தெய்வமாக முருகன் தொல்காப்பியத்திலேயே சுட்டப்பெறுகிறான். "சேயோன் மேய மைவரை உலகம்" என்பது தொல்காப்பியத் தொடர். அதனால் குன்றிருக்கும் இடமெல்லாம் குமரனாகிய முருகன் விரும்பியுறையும் இடங்கள் என வகுத்தனர். சங்க இலக்கியத்தில் ஆங்காங்கே வெறியாட்டு, வேலன் வெறியாடல், வேலன் வழிபாடு என இம்முருக வழிபாடு சுட்டப் பெறுகிறது. இம்முருகனையே முழுமுதற் பொருளாகக் கொண்டு முதன்முதலில் இயற்றப்பட்டது. பத்துப்பாட்டில் ஒன்றாகிய திருமுருகாற்றுப் படை, ஆற்றுப்படை நூலாக நக்கீரரால் எழுதப்பட்டது. இதிலும் முருகனை அதிகமாகக் குன்றினோடு இணைத்துப் பேசியிருக்கிறார். அதுமட்டுமல்லாமல் அறுபடை வீடுகள் பெரும்பான்மையும் குன்றுகளே எனலாம். எனவே இவ்வாறு வழிபட்டு வந்த முருக வழிபாடு சைவத்தில் ஒரு அங்கமாக இருந்து பின் 'கௌமாரம்' எனத் தனித்தன்மை பெற்றது. இம்முருகனை, சிவபெருமான் நெற்றிக் கண்ணிலிருந்து தோற்றுவித்ததாகப் புராணங்களும் பிற இலக்கியங்களும் பேசுகின்றன. எனவே சிவக்குடும்பம் எனப் பேசப்பெறும் நிலையில் சிவன், சக்தி, முருகன், விநாயகர் என்ற வரிசையில் முருகனை ஒரு அங்கத்தினராகச் சிவ வழிபாட்டில், சிவன் கோயில்களில் கொண்டாடும் மரபும் ஏற்பட்டது. சிவபெருமானைப் பாடுங்கால் சக்தியை இணைத்துப் பேசுவது போல விநாயகரையும், முருகனையும் சிவ மைந்தர்களாகப் பாடும் மரபும் ஏற்பட்டது. இவ்வகையில் ஏக தெய்வ வழிபாடு எனும் நிலையில் சிவபெருமான் ஒருவனே முழுமுதற்கடவுள் என்ற கொள்கையோடு தோன்றியது தமிழகத்துப் பக்தியியக்கம். இப்பக்தியியக்கம் சிவனைப் பாடுங்கால் சிவக்குடும்பத்து உறுப்பினர்களின் சிறப்புக்களையும் கூறி அப்பேற்பட்ட சிறப்பு பெற்ற உமையைப் பாகமாக உடையவன் எம் சிவன் என்றும், முருகனை மைந்தனாகக் கொண்டவன் என்றும் விநாயகர் வருவதற்கு அருளியவன் என்றும் சிலாகித்துப் பாடிச் சிவபெருமானுடைய பெருமையைப் பறைசாற்றின.

அவ்வகையில் பக்தியியக்க விளைவாகத் தோன்றிய திருமுறைகள் இவ்வாறு பாடுதலைச் சிறப்பாகக் கருதின. சைவ சமயத்து முதற்

தொண்டராகிய நாவுக்கரசரும் இவ்வாறு உமையம்மை, முருகன், விநாயகர் போன்றோரை தம் தேவாரத்தில் ஆங்காங்கே பொருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார். அவற்றில் சிலவற்றை எடுத்துக் காட்டுவது இக் கட்டுரையின் நோக்கமாகும்.

திருநாவுக்கரசருக்கும் முருகப்பெருமானின் இயல்பு, வரலாறு, பெருமை போன்றவற்றைக் கூறுவது நோக்கமன்றாயினும் முருகன் பற்றிய பெயர்களை, சிறப்புகளைத் தொகுத்தும், வகுத்தும் கூறியிருப்பது சிவபெருமானின் பெருமையை மிகுவிப்பதற்காகவே என்பது பொன்னிடை மணியெனத் தெற்றென விளங்கும். அவற்றுள் சில

"செல்வியைப் பாகம் கொண்டார் சேந்தனை மகனாக்கொண்டார்" (4:43:8)

"சூரட்ட வேலவன் தாதை" (4:104:5)

"ஏலநற் கடம்பன் தாதை" (4:43:2)

"நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்" (5:19:9)

"சமரசூரபன் மாவைத் தடிந்தவேற் குமரன் தாதை" (5:64:10)

"முருகவேள் தன்னைப் பயந்தாய் போற்றி" (6:5:10)

"செந்தின்மேய வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்" (6:23:4)

"குமரனையும் மகனாக வுடையார் போலும்" (6:53:2)

"அறுமுகனோடு ஆனை முகற்கப்பன் தன்னை" (6:74:7)

என வருவன முருகன் சிவபெருமான், உமாதேவியார் மகன் என்ற நிலையாலும்,

"விரிநீர் பரவைச் சூரட்ட வேலவன் தாதை
சமரசூரபன் மாவைத் தடிந்தவேற் குமரன்" (5:64:10)

என வருவன முருகன் சூரனைத் தடிந்தவன் என்ற நிலையிலும்,

"குறவிதோள் மணந்த செல்வக் குமரவேள்" (4:60:3)

"வள்ளி வளைத்தோள் முதல்வன்" (6:3:2)

"செந்தின்மேய வள்ளி மணாளன்" (6:23:4)

"குறவையுடையார் மனத்துளான் குமரன்" (6:42:6)

என வரும் பாடலடிகள் முருகன் வள்ளி மணாளன் என்ற நிலையிலும்,

"முன்னையார் மயில் ஊர்தி முருகவேள்" (5:16:7)

"ஆறுகொலாம் அவர்தம் மகனார்முகம்" (4:18:6)

"பன்னிரண்டு கண்ணுடையபிள்ளை தோன்றும்" (6:18:4)

"ஆறுமுகனொடு ஆனைமுகற்கு அப்பன்" (6:74:7)

"கோழிக் கொடியோன்தன் தாதை போலும்" (6:89:2)

என வருவன முருகனது வடிவைச் சுட்டுவதாகக் காணமுடிகிறது.

சிவபெருமானை முருகன் வணங்கும் செய்தி அப்பர் தேவாரத்தில் இடம் பெறுகிறது.

"நாரணன்னொடு நான்முகன் இந்திரன்
வாரணன் குமரன் வணங்கும் கழல்" (5:65:10)

மேலும்,

"சரவணத்தான் கைதொழுது சாரும்அடி" (6:6:1)

என வருவனவும் இதைக் காட்டுவன.

இவ்வாறு திருநாவுக்கரசர் தம் தேவாரப் பாடல்களில் பல இடங்களில் முருகப்பெருமானைச் சுட்டுகின்றார்; போற்றுகின்றார். அதேபோல விநாயகரும் சிவபெருமானின் மற்றொரு மகனாகத் தேவாரங்களில் இடம் பெறுகின்றார்.

எனவே திருநாவுக்கரசர் சிவபெருமான் எனும் ஏக தெய்வ வழிபாட்டையே சிலாகித்துப் பேசினும் சிவன், உமை, முருகன், விநாயகர் ஆகியோரிடையே வேற்றுமை பாராட்டவில்லை. பெயராலும், வரலாற்றாலும் வேறுபட்டாலும் அவர்களும் சிவபரம்பொருளின் வெவ்வேறு வடிவங்களே எனக் கொண்டு அவர்தம் பெருமைகளையும் விரித்துப் பாடியுள்ளார் நாவுக்கரசர்.

"யாதொரு தெய்வம் கொண்டீர்
அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் வருவார்"

என்னும் சைவ சித்தாந்தக் கோட்பாட்டிற்கு மூலமாக, முன்னோடியாக நமது நாவுக்கரசரின் திருமுறைகள் திகழ்கின்றன என்பதில் ஐயமில்லை.

93. ஆறாம் திருமுறை - தொடரியல் பார்வை

சிவ. மாதவன், புதுவை.

திருநாவுக்கரசர் ஏழ் எழுநூறு (7 x 700 = 4900) பதிகங்கள் பாடியவர் என நம்பியாண்டார் நம்பி கூறியுள்ளார். ஆயின் தற்போது 312 பதிகங்களே கிடைத்துள்ளன. இவற்றுள் ஆறாம் திருமுறையில் மட்டும் 99 பதிகங்கள் அடங்கியுள்ளன. (தருமையாதீனப் பதிப்பு - 1963) ஆறாம் திருமுறைப் பதிகங்கள் "தாண்டகம்" என்னும் பாவடிவில் அமைந்தவை. அதன் காரணமாகவே நாவுக்கரசருக்குத் "தாண்டகவேந்தர்" என்னும் சிறப்புப் பெயரும் ஏற்பட்டது; தாண்டகம் என்பது அறுசீர், எண்சீர் விருத்தத்தை ஒத்திருப்பதான பாடல் வகை என்னும் கருத்துக்கள் பெரும்பான்மையான அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை; ஆறாம் திருமுறைப் பாடல்கள் பலவும் சிவபரம்பொருளின் மேன்மையைப் போற்றிப் புகழ்வன. சில பாடல்கள் இறையருட் காட்சியினைக் காண வேண்டும் என்னும் விழைவை வெளிப்படுத்துவன; சில இறையருள் கிடைக்கப் பெற்ற திறத்தை விதந்து ஓதுவன. வேறு சில இறையருள் பெறுவதில் நாட்டமில்லாமல் வாழ்நாளை வீணே கழித்தோமே என்னும் ஏக்கவுணர்வைப் புலப்படுத்துவன; இப்படி இப்பதிகங்களின் ஊடே நாவரசரின் பக்தி அனுபவம் வெளிப்பட்டுச் சிறப்பதை உணர முடிகின்றது. அதனை விளக்கும் முயற்சி இவ்வெழுத்துரையில் மேற்கொள்ளப்படுகின்றது.

மூவிடங்களின் நிலையில் அமையும் தொடர்கள்

தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்று இடங்களிலும் நின்று பேசுவதாக அமையும் தொடரமைப்பினை ஆறாம் திருமுறையில் காணலாம். பேசுவோர் தன்னைக் குறித்துப் பேசுவது தன்மை; கேட்பவரைக் குறித்துப் பேசுவது முன்னிலை; பேசப்படுபவரைப் பற்றியது படர்க்கை. ஆறாம் திருமுறையில் உள்ள அனைத்துப் பதிகங்களையும் பாடல்களையும் தொடரமைப்பு நோக்கில் ஆய்வுக்குட்படுத்துவது மிகப் பெரிய ஆய்வாக விரிவடையும். எனவே காலம், பக்க வரையறை கருதி ஆறாம் திருமுறையின் சில பதிகங்களைத் தரவாகக் கொண்டு இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

தன்மை இடத்தொடர்

"ஏழைத்திருத்தாண்டகம்" என்னும் தலைப்பில் அமையும் மூன்றாம் பதிகப் பாடல்கள் முழுவதும் "ஏழையேன் நான் பண்டிகழ்ந்தவாறே"

என்னும் பயனிலையைக் கொண்டு முடிகின்றன. இறைவனின் உருவம் செயல் ஆகியவை அடுக்கிக் கூறப்பட்டு இத்தொடரின் எழுவாயாக அமைகின்றன.

சான்றாக ஒரு பாடலைக் குறிப்பிடுவது பொருந்தும்.

வெறிவிரவு கூவிளநல் தொங்க லானை
வீரட்டத் தானை வெள்ளேற்றி னானைப்
பொறியரவி னானைப் புள்ளூர்தி யானைப்
பொன்னிறத் தினானை புகழ்தக் கானை
அறிதற் கரிய சீரம்மான் தன்னை
அதியரைய மங்கை யமர்ந்தான் தன்னை
எறிகெடிலத் தானை இறைவன் தன்னை
ஏழையேன் நான்பண் டிகழ்ந்த வாறே. (6-3-1)

இப்பாடலில் தொங்கலானை, வீரட்டத்தானை, வெள்ளேற்றினானை, புள்ளூர்தியானை, பொறியரவினானை, பொன்னிறத்தினானை, சீரம்மான் தன்னை, எறிகெடிலத்தானை என வருபவை ஒரு பொருளைச் சுட்டி எழுவாயாக நின்று, இப்படிப்பட்ட சிறப்புகள் பொருந்திய இறைவனை முற்காலத்தில் - இளைய வயதில் அறியாது நான் இகழ்ந்தேனே என்னும் பயனிலையைப் பெறுகின்றன. ஒரு பாடல் முழுவதும் ஒரே தொடராக அமைதலை இதில் காண முடிகிறது. பாடலைப் படைத்த நாவுக்கரசர் தன்னைக் குறித்துப் பேசுவதால் இதனைத் தன்மை இடத்தொடர் என வழங்கலாம்.

இனி, இப்பதிகப் பாடல்களின் ஈற்றடியிலும் அமைகின்ற "இகழ்ந்த வாறே" என்னும் சொல்லில் இடம் பெறும் ஏகாரம் கழிவிரக்கப் பொருளைச் சுட்டி நிற்பதை உய்த்துணரலாம். செய்யத் தகாதவற்றைச் செய்ததால் ஏற்பட்ட வருத்தவுணர்வை வெளிப்படுத்தும் நுட்பமான பணியை ஏகாரம் செய்கின்றது.

அடுத்து, முப்பத்தேழாம் பதிகமாக உள்ள திருவையாற்றுப் பதிகமும் தன்மை இடத்தொடரில் அமைந்ததே. இப்பதிகப் பாடல்கள் யாவும் "என்றென்றே நானரற்றி நைகின்றேனே" என்னும் பயனிலையைக் கொண்டுள்ளன. இத்தொடரின் எழுவாயாக "நான்" என்பதே அமைகின்றது. எழுவாய் இல்லாவிட்டாலும் பயனிலை வழி எழுவாயை அறிந்து கொள்ள முடியும். முற்சுட்டிய பதிகத்திற்கும் இப்பதிகத்திற்கும் ஒரு வேறுபாடுள்ளது. முந்தையது ஒரு பாடல் ஒரே தொடரால் ஆயது. இப்பதிகமோ பாடல்தோறும் பல தொடர்களைப் பெற்று இறுதியில் அனைத்தையும் ஒருங்கிணைத்து ஒரு தொடராக முடிகின்றது.

அஞ்சுவண்ண வண்ணனே யென்றேன் நானே
　　அடியார் கட்காரமுதே யென்றேன் நானே
நஞ்சணி கண்டனே யென்றேன் நானே
　　நாவலர்கள் நான்மறையே என்றேன் நானே
நெஞ்சுணர வுள்புக்கிருந்த போது
　　நிறையும் அமுதமே யென்றேன் நானே
அஞ்சாதே யாள்வானே ஐயாறணே
　　யென்றென்றே நானரற்றி நைகின்றேனே. (6-37-3)

என்னும் பாடலில் "அஞ்சுவண்ண வண்ணனே என்றேன் நானே" முதலாக ஒவ்வோரடியும் ஒரு தொடராக் அமைந்து இறுதியில் 'ஐயாறனே என்றென்றே நானரற்றி நைகின்றேனே' என்னும் இறுதிப் பயனிலையைப் பெறுகின்றது. இப்பாடலில் 'என்றேன் என்றேன்' என வரும் பேசுபவரைச் சுட்டிநின்று எழுவாய்க்குரிய பணியைச் செய்துவிட்டபோதிலும் 'நானே நானே' என்னும் சொல் மற்றுமொரு (கூடுதல்) எழுவாயாக வருவது நோக்கத் தக்கது. இச்சொல்லில் உள்ள "ஏகாரம்" பிரிநிலை ஏகாரமாக அமைந்துள்ளது. தொடர் சுட்டக்கூடிய பணியை வேறொருவர் செய்யவில்லை. நானே செய்தேன் என்னும் பொருண்மை இதன்கண் அழுத்தமாக வலியுறுத்தப் படுதல் மிகவும் சிறப்பானது. இறுதிச் சொல்லான 'நைகின்றேனே' என்னும் சொல் அப்பர் பெருமான் மனமுருகி நின்றதைத் தெளிவுபடுத்தி உரைக்க வல்ல தேற்றேகாரமாக ஆளப்பட்டுள்ள திறமும் கூர்ந்து உணரத் தக்கதாகும்.

முன்னிலை இடத்தொடர்

கேட்போரைக் குறித்தது முன்னிலை, நாவுக்கரசர் இறைவனையும், அடியவர்களையும் தோழியையும் முன்னிலைப்படுத்தி உரைப்பதாக அமையும் பதிகங்கள் பல பாடியுள்ளார். போற்றி என இறைவனை வாழ்த்தி வணங்கும் பதிகங்கள் யாவும் முன்னிலை இடத்தொடர் களாகவே உள்ளன.

எல்லாம் சிவனென நின்றாய் போற்றி
　　எரிசுடராய் நின்ற இறைவா போற்றி
கொல்லார் மழுவாட் படையாய் போற்றி
　　கொல்லுங் கூற்றொன்றை யுதைத்தாய் போற்றி
கல்லாதார் காட்சிக் கரியாய் போற்றி
　　கற்றா ரிடும்பை களைவாய் போற்றி
வில்லால் வியனரணம் எய்தாய் போற்றி
　　வீரட்டங் காதல் விமலா போற்றி (6-5-1)

என வரும் ஐந்தாம் பதிகம் இறைவனை, நின்றாய், இறைவா, படைப்பாய், உதைத்தாய், அரியாய், களைவாய், எய்தாய், விமலா என விளித்துப்

போற்றுகின்றது. இப்பாடலில் வரும் ஒவ்வோரடியும் ஒரு முழுமை. பெற்ற தொடராகவே இருத்தல் அறிய முடிகிறது.

நான்காம் பதிகமும் திருவதிகை குறித்ததே. இப்பதிகம் 'அடையாளத் திருத்தாண்டகம்' என்னும் தலைப்பிலானது. அப்பரடிகள் இறைவனது அடையாளங்களை அனைத்துப் பாடல்களிலும் எடுத்துக் கூறியிருத்தலால் இப்பதிகம் இப்பெயர் பெற்றது. தான் கேள்விப்பட்ட செய்தியை அல்லது தகவலை, அது தொடர்பாக நன்கறிந்தவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுதல் என்னும் உலகியல் நெறிசார்ந்த போக்கை இப்பதிகத்தில் பார்க்க முடிகிறது. திருவதிகை வீரட்டானத்துத் தோற்றப்பொலிவை அதனைக் கண்டறிந்த ஒருவரிடம் வினவித் தெரிந்து கொள்ளும் முறையுடைய தொடரமைப்பை இப்பதிகம் கொண்டுள்ளது. இப்பதிகத் தொடர்கள் யாவும் வினாவாக - முன்னிற்பாரை வினவுவதாக இருப்பதே இதன் சிறப்பாகும்.

பாடுமே யொழியாமே நால் வேதம்மும்
படர்கடை மேல் ஒளிதிகழப் பனிவெண் டிங்கள்
சூடுமே அரை திகழத் தோலும் பாம்புஞ்
சுற்றுமே தொண்டைவாய் உமையோர் பாகங்
கூடுமே குடமுழவம் வீணை தாளம்
குறுநடைய சிறுபூதம் முழக்க மாக்கூத்
தாடுமே அந்தடக்கை அனலேந் தும்மே
அவனாகில் அதிகை வீரட்ட னாமே. (6-4-5)

என்னும் பாடலில் இறைவன் நால்வேதமும் பாடுவாராமே, படர்ந்த சடையின் மேல் திங்களைச் சூடியிருப்பாராமே என்னும் வினாக்களை அடுக்கி, இறுதியில் மேற்கூறப்பெற்ற அடையாளங்கள் காணப்படின் கண்டிப்பாக அத்தன்மையுடையவர் அதிகை வீரட்டனார்தாம் என்னும் விடையைத் தரும் பயனிலையோடு கூடிய தொடரமைப்பினை இதன்கண் காண முடிகிறது.

ஒன்பதாம் பதிகமாக உள்ள திருஆமாத்தூர் பதிகம் இறைவனையும் முன்னிற்பாரையும் விளித்துக் கூறுவதாக அமைந்துள்ளது. இப்பதிகம் கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கத்துப் பெருந்திணை வகையாக அருளிச் செய்யப்பட்டது என்னும் இதன் துறை தேறுதலொழிந்த காமத்து மிகுதியும் என்னும் மகாவித்துவான் சி. அருணைவடிவேல் முதலியார் குறிப்புரை தந்துள்ளார்.

இறைவனிடத்து உரையாடுகின்ற பாங்கில் அமைந்த பின்வரும் பாடல் குறிப்பிடத்தக்கது.

வெந்தார் வெண்பொடிப்பூசி வெள்ளை மாலை
விரிசடைமேற் றாஞ்சூடி வீணையேந்திக்
கந்தாரந் தாம் முரலாப் போகா நிற்கக்
கறைசேர் மணிமிடற்றீர் ஊரேதென்றேன்

நொந்தார்போல் வந்தெனை தில்லே புக்கு
நுடங்கே ரிடைமடவாய் நம்மூர் கேட்கில்
அந்தாமரை மலர்மேல் அளிவண்டி யாழ்செய்
ஆமாத்தூர் என்றடிகள் போயினாறே. (6-9-2)

இதில் தலைவி இறைவரைக் கண்டு, கறைசேர் மணிமிடற்றீர் உம் ஊர் எது என்று வினவுதல் ஒரு தொடர். கறைசேர் மணிமிடற்றீர் என்பதன் முன்னுள்ள தொடர் இறைவனுக்கு அடையாக அமைகின்றது. அதையும் தலைவியின் வினாத் தொடருடன் இணைத்துவிடலாம். 'நுடங்கேர் இடைமடவாய் நம்மூர் கேட்கில்.... ஆமாத்தூர்' என்று இறைவர் பதில் தருவது மற்றொரு தொடர். இவ்வாறு இறைவன் தன்னிடம் பதில் கூறிவிட்டு 'போய்விட்டாரே' என்று முன்னிற்பாரிடம் தலைவி பேசுவது மூன்றாம் தொடர். இம்மூன்று தொடர்களையும் இணைத்தால், ஊர் எது என்று கேட்ட என்னிடம் ஆமாத்தூர் என்று மட்டும் சொல்லிவிட்டு வேறு எதுவும் கூறாமல் என்னுடைய காதலைப் புறக்கணிப்பது போலச் சென்றுவிட்டார்; நீங்கள் அவரை என்னிடத்தில் கொண்டு வந்து சேர்த்துவிடுங்கள் என்னும் ஆழமான பொருள் கிடைக்கும். இதற்குத் தத்துவார்த்தப் பொருள் உரைக்கவும் வாய்ப்புண்டு.

இதே பதிகத்தில் மற்றொரு பாடல் இறைவனின் செய்கையைச் சுட்டிக்காட்டும் வகையில் முன்னிற்பாரை 'வந்து காணீர்' என அழைத்துப் பேசும் பாங்கில் அமைந்துள்ளது.

கையோர் கபாலத்தர் மானின் தோலர்
கருத்துடையர் நிருத்தராய்க் காண்பார் முன்னே
செய்ய திருமேனி வெண்ணீ றாடித்
திகழ்புன் சடைமுடிமேல் திங்கள்சூடி
மெய்யொரு பாகத் துமையை வைத்து
மேவார் திரிபுரங்கள் வேவச் செய்து
ஐயனார் போகின்றார் வந்து காணீர்
அழகியரே ஆமாத்தூர் ஐயனாரே. (6-9-7)

இறைவர் எனக்கு மையல் ஏற்படுத்திவிட்டு எதுவும் நடவாதது போல் போகின்றார். அவரை வந்து பாருங்கள். அவரது போக்கைத் தடுத்து நிறுத்துங்கள் என்னும் குறிப்புப் பாடலில் தொனிப்பதை உணரலாம். இதே பதிகத்தின் எட்டாவது பாடல் இறைவரின் எதிர் சென்று பேசுவது போல் அமைந்துள்ளது. 'ஆமாத்தூர் இறைவரே, உங்கள் ஊர் ஒற்றியூரா? ஊர்தி வெள்ளேறா? சரியாகக் கூறுங்கள். நெற்றிக் கண்ணைக் காட்டி எம் நிறையைக் கொண்டீர், எப்போதும் இடர் தருகின்றீர், எம்மைவிட்டு விலகிச் செல்கின்றீர். நாம் உமது இருப்பிடத்தை அறிந்து கொண்டோம். அது ஏகம்பம்தானே? என்று வினாத் தொடர்களாக அமைகின்ற இப்பாடல் அநீவயப்படுத்திப் பொருள் காணும் முறையில் ஆர்வத்தைத் தூண்டுவதாய் இலங்குகிறது.

படர்க்கை இடத்தொடர்

பேசப்படுபவரைக் குறிப்பது படர்க்கையிடமாகும். ஆறாம் திருமுறையில் பல பதிகங்கள் இத்தொடரமைப்பைக் கொண்டவையே. "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே", "காளத்தியான் அவன் என் கண்ணுளானே", "இடைமருது மேவிய ஈசனாரே" திருவாரூரான்காண் என் சிந்தையானே என வருகின்ற பாடலடிகளையுடைய பதிகங்கள் யாவும் சிவபெருமானின் திருக்கோலச் சிறப்பையும் விறல்மிக்க செய்கையினையும் பலபடப் போற்றியுரைப்பன.

அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
...
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே (6-1-5)

என்னும் இப்பாடல் இரண்டாம் வேற்றுமையுருபு பெற்ற பெயர்தொடர் களை எழுவாயாகக் கொண்டு, இத்தகு சிறப்புடைய இறைவனைப் பற்றிப் பேசாது விடுகின்ற நாள்கள் பிறவாத நாள்களே (பயனற்ற நாள்களே) என்னும் பொருள் முடிவைப் பெறுகின்றன. பாடப்படுகின்ற பொருளின் உயர்வை மிகுவித்துக் கூறும்பொருட்டு இத்தகு தொடர்கள் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

படர்க்கையிடத் தொடரமைப்பு கொண்ட பதிகங்களுள் குறிப்பிடத் தக்கது திருநல்லூர்ப் பதிகம். சிவபெருமான் நாவுக்கரசரின் சென்னியில் திருவடி சூட்டிய இடம் திருநல்லூர். சேக்கிழார் இதனை 'உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றேன் என்றவர்தம் சென்னிமிசை பாதமலர் சூட்டினான்' "சிவபெருமான்" என்று பாடியுள்ளார். இப்பதிகத்தின் எல்லாப் பாடல்களிலும் "நல்லூர் எம்பெருமானார் நல்லவாறே" என்னும் அடி இடம் பெற்றிருக்கக் காணலாம். இப்பதிக முதற்பாடல் 1. இறைவனின் தோற்றம், ஆற்றல், 2. இறைவனின் இயல்பு, 3. இறைவன் நாவுக்கரசருக்கு அருளிய திறம் 4. நாவுக்கரசர் அதனை வியந்து போற்றுதல் என்னும் நான்கு பொருள்களைச் சுட்டுகின்ற தொடர்களால் அமைந்துள்ளது.

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினந்துருகும் களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத் துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பல்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூர் எம்பெருமானார் நல்ல வாறே. (6-14-1)

இப்பாடலில் முதலில் இறைவன் பெயர் சுட்டப்பெறும் பகுதியை நோக்க வேண்டும். அவர் நல்லூர் எம்பெருமான். சினந்திருகு களிற்றுரிவைப்

போர்வை வைத்த அவரது ஆற்றலும் செழுமதியின் தளிர் வைத்த அவரது தோற்றமும் அடுத்துச் சுட்டப்படுகின்றன. இரண்டாவதாக இறைவனின் இயல்பு குறிக்கப் பெறுகின்றது. அடியாரை நெகிழச் செய்து மனமுருகி நிற்க வைத்தலும் அடியாரது துயரைப் போக்குதலும் அவருக்கேயுரிய இயல்புகள். அவ்விறைவன் நாவுக்கரசரின் தலைமீது திருவடி சூட்டி அருள்புரிந்த செய்தி மூன்றாவதாகக் கூறப்படுகின்றது. இறைவன் திருவடி எப்படிப்பட்டது என்பதை விளக்கும் அடைமொழி மிகவும் பெரிதாக உள்ளதால் இத்தொடரும் பெரிய தொடராகி விடுகின்றது. இறுதியாக இறைவன் தம் தலைமீது திருவடி சூட்டிய செய்கையானது நல்ல செய்கை என்று போற்றும் பொருளுடைய தொடராக உள்ளது. 'நல்லவாறே' என்னும் சொல் நல்ல செய்கை அல்லவா? என்னும் வினாப் பொருளையும் தரவல்லதாய் அமைகின்றது. இறைவன் திருவடிகளால் தீண்டப் பெற்ற செய்கை நல்லதுதானே என முன்னிற்பாரிடம் வினவி அங்கீகாரம் பெறுவது போன்று பொருள் கொள்ள இடம் தரும் தொடரமைப்பினை இப்பாடல் தன்னகத்தே கொண்டுள்ளது.

பாடல்களின் தொடரமைப்பினை நுணுகிக் காண்பதால் அவை சுட்டும் சரியான பொருளை அறிந்து கொள்ள முடியும். எந்தத் தொடர் எந்தத் தொடரினைத் தழுவி / அவாவி நிற்கிறது அல்லது நிற்க வேண்டும்; எப்படி நின்றால் பாடலின் பொருள் சிறக்கும். அதனால் பெறப்போகும் நயம், சுவை முதலான கோணங்களில் தொடரமைப்பினை அணுகுவது மிகவும் வேண்டப்படுவதாகும். பொருளற்ற சொற்கள் எனக் குறிக்கப் பெறும் இடைச்சொற்கள் குறிப்பால் பொருள் உணர்த்துவன. 'ஏ', 'ஓ' என்னும் இடைச்சொற்கள் பல இடங்களில் குறிப்புப் பொருள் உணர்த்தி நிற்கின்ற பாங்கினை ஆறாம் திருமுறைவழி அறிய முடிகின்றது. தொடரியல் பார்வையோடு அணுகும்போதுதான் அவற்றின் பொருள் நுட்பத்தை அறிய முடியும். அப்பரது பல பாடல்கள் உரையாடல் இயல்பு கொண்டவை. அவற்றைக் கவிதை உரையாடல் என்றே கூறலாம். அத்தகு உரையாடலை அறியவும் அதனை உணர்ந்து மகிழவும் கவிதையின் எழுவாய் பயனிலை இயைபை அறிவது மிகமிக அடிப்படையானது. உரைநடை போன்றே கவிதையும் பேச்சுக் கூறுகளைக் கொண்டது. அவற்றைப் பகுத்துக் காண தொடரியல் பார்வை துணை செய்யும். இந்தக் கோட்பாட்டின்படி நாவுக்கரசர் பாடல்களை ஆராய்கின்றபோது அவை தன்மை, முன்னிலை, படர்க்கை இடத்தொடர்களாக உள்ளமையும் ஏ, ஓ-முதலான இடைச்சொற்கள் குறிப்பில் பொருள் தருதல் என்னும் இலக்கண மரபினை ஒட்டியே அமைந்துள்ளமையும் காணவியலும். இவ்வணுகு முறையைப் பயன்படுத்தி மூவர் தேவாரப் பாடல்களை முழுமையாக ஆராய்வதற்கு நிறைய வாய்ப்புண்டு. அத்தகு ஆய்வு பக்தி இலக்கியத்தைச் செவ்வையாக உணரப் பெருந்துணை புரியும்.

94. நாவுக்கரசர் சுட்டும் புராணச்செய்திகள்

அ. மாதவி, திருநெல்வேலி.

சைவத்தொண்டும் தமிழ் இலக்கியத் தொண்டும் ஒருசேரக் கொண்டு தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர் திருநாவுக்கரசர். இறைவனைப் பாடுதலே இவரது நோக்கமாக இருப்பினும் அந்த நோக்கத்தை நிறைவேற்ற அப்பர் புதிய இலக்கிய வடிவம், யாப்பு வடிவம், புராணச் செய்திகளையும் உள்வைத்துத் தம் பக்திப்பனுவல் களை யாத்துள்ளார். இவ்வெழுத்துரை திருநாவுக்கரசர் பாடல்களில் காணலாகும் புராணச் செய்திகளுக்கு மட்டும் முதன்மை கொடுத்து அவற்றைத் தொகுத்துக் காண்பதாக அமைகின்றது. இறைவனின் அருளிச் செயல்களைப் புராணங்கள் வாயிலாக அப்பர் தெளிவுபடுத்துகின்றார். இறைவன் அடியார்க்கும் பிற உயிர்களுக்கும் எவ்வாறு உதவி செய்தான், தண்டனைகள் வழங்கினான் எவ்வாறு அருள் புரிந்தான் போன்றவற்றை அப்பர் சுட்டும் புராணங்கள் வாயிலாகக் காண்பதை இவ்வெழுத்துரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

புராணம் – விளக்கம்

இறைவன்து பெருமைகளில் அவன் அவ்வப்பொழுது ஆங்காங்கு வேண்டிய உருவத்தில் தோன்றி வேண்டுவார் வேண்டியவற்றை அருளிய பழைய வரலாறுகள் புராணம் எனப்படுகின்றன. புராண நூல்களில் அடங்கியுள்ள நிகழ்வுகள் பழமையானவையாக இருப்பினும் யார், எக்காலத்துப் படித்தாலும் அவ்வக்காலத்திற்குத்தக அவை பொருள்தந்து நிற்றலைக் காணமுடியும். தவறு செய்தால் தண்டனை கிடைக்கும். இறைவன் மீது அதிகமாக அன்பு (பக்தி) பாராட்டினால் தக்கசமயத்தில் அந்த நம்பிக்கை உதவி செய்யும். மிகச் சிறிய உதவியே செய்திருப்பினும் அது மலையளவு நன்மையை மீட்கும் தரும் போன்ற நம்பிக்கைகளை ஊட்டுவன இந்தப் புராணங்கள்

இக்காரணம் பற்றியே தமிழில் ஏராளமான புராணங்கள் தோற்றம் பெற்றுள்ளன. மக்கள் மனத்தில நம்பிக்கையை ஊட்டி அவர்களை நல்வழியில் செலுத்துதலையே இப்புராணங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன எனலாம்.

அப்பரும் புராணச் செய்திகளும்

அப்பரின் பாடல்களில் முப்பதுக்கும் மேற்பட்ட புராணச் செய்திகள் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன. இவையனைத்தையும் இங்குச் சுட்டிக்காட்ட வேண்டுமென்றாலும் பக்க வரையறைக்குட்பட்டு மீண்டும் மீண்டும்

சுட்டிக் காட்டப்பெற்ற அருச்சுனற்குப் பாசுபதம் தந்தது, இராவணன் கயிலையைப் பெயர்த்தது, உமை தழுவிக் குழைந்தது, சிவன் நஞ்சுண்டது, மன்மதனை எரித்தது, முயலகனை அடக்கியது, யானைத்தோல் போர்த்தது போன்ற புராணச் செய்திகள் தவிர்க்கப்பெற்றுச் சில செய்திகள் மட்டும் இவ்வெழுத்துரையில் எடுத்துக்காட்டப் பெறுகின்றன.

அப்பர் சுட்டும் புராணச் செய்திகள் - இடம்பெறும் நூல்கள்

அப்பர் ஆங்காங்கு ஒருசில வரிகள், தொடர்கள், சொற்கள், பாடல்கள் மூலம் விளக்கும் புராணச் செய்திகள் பல்வேறு தனித்தனி புராண நூல் களில் காணப்படுகின்றன. கந்தபுராணம், கோயில்புராணம், சிவபராக்கிரமம், காஞ்சிப்புராணம், திருவாலங்காட்டுப் புராணம், திருவிளையாடற்புராணம், பாகவதம், திருவையாற்றுப்புராணம், சேதுபுராணம், வேதாரண்யபுராணம் போன்ற புராண நூல்களில் விரிவாகப் பேசப்படும் செய்திகள் அப்பரால் சுருக்கமாகக் கையாளப்பட்டுள்ளன.

சிவபெருமானின் பெருமை கூறும் புராணச் செய்திகள் - அப்பர் வழி

அப்பரின் பாடல்களில் இடம்பெறும் புராண வரலாறுகளில் ஒருசில மட்டும் பின்வரும் பகுதிகளில் பேசப்படுகின்றன.

ஆலின் கீழறமுரைத்தது

சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் முதலிய நான்கு முனிவர் களும் தவஞ்செய்தும் ஞானநிலையை அடைய இயலாதவராய்க் கயிலையை அடைந்து இறைவனிடம் சிவாகமத்து உட்பொருளை உணர்த்தி யருள வேண்டினர். இறைவனும் 'தட்சிணாமூர்த்தியாய்'க் கல்லால மரநிழலில் எழுந்தருளி ஆகமத்தின் ஞானத்தை 'ஞானமுத்திரை' அமைந்த திருக்கரத்தைத் தம் மார்பில் வைத்து ஒருகணம் யோகம் செய்வார்போல இருந்து உணர்த்தியருளினார். இதனையே அப்பர்,

'மடற்பெரிய வாலின்கீழ் அறநால்வர்க்
கன்றுரைத்தான்' (4-6-10)

என்றும்,

'ஆலின் நீழ லறம் பகர்ந் தார்' (5-25-10)

என்றும்,

'ஆலத் தார்நிழ லில்லற நால்வர்க்குக்
கோலத் தாலுரை செய்தவன்' (5-59-2)

என்றும் குறிப்பிடுகின்றார். இதன்வழி ஞானமாகிய நல்லறத்தை முனிவர் களுக்கு வழங்க இறைவன் தட்சணாமூர்த்தியாய்த் தோற்றமளித்தமை பெறப்படுகிறது.

உபமன்யுவிற்குப் பாற்கடலீந்தது

உபமன்யு வியாக்கிரபாத முனிவரின் புதல்வர். வசிட்டரின் காமதேனுவினது பாலை உண்டு வளர்ந்தார். அத்தகைய பால் வேண்டுமென

அவர் தாயைக் கேட்கத் தாய் மாவைக் கரைத்துப் பாலெனக் கொடுத்தாள். இதையுணர்ந்த குழந்தை தாயைப் பார்க்கத் தாய் தந்தையைப் பார்க்கத் தந்தை புதல்வரிடம் எல்லாமுடையானான இறைவனை நோக்கித் தவம் புரிக என, அதன்படி தவம் புரியலானார். சிவன் அவரது பேரன்பைக் கண்டு பாற்கடலைக் காட்டினான். இப்புராணச் செய்தியை அப்பர், திருக்கடவூர் வீரட்டப் பதிகத்தில்,

'பாலனுக் காயன்று பாற்கடலீந்து' (4-108-6)

என்றும், திருக்கோளிலிப் பதிகத்தில்,

'ஆவின் பால்கண் டளவி லருந்தவப்
பாலன் வேண்டலுஞ் செல்லென்று பாற்கடல் கூவினான்'
(5-56-6)

என்றும் கூறியுள்ளமையை உணர முடியும். பால் என்ற பாலகனுக்குப் பாற்கடலையே காட்டிய பெருமானின் ஆற்றலும் பேரருளும் இதன் மூலம் புலப்படுத்தப்படுகிறது எனலாம்.

உமைகாண நடனமாடியது

சிவன் என்றாலே 'நடராஜர்' கோலத்தில் அவன் நடனமாடும் சிறப்பும் பலராலும் போற்றப்படுதலைக் காணலாம். அவ்வகையில், ஆன்மாக்கள் அநாதியாகத் தொடர்ந்துள்ள பாசம் போக்கி முக்தி அடைதற்பொருட்டு அருள் வடிவாகிய அம்மையார், அடியார்களுக்கு அருள் புரிய பஞ்சாக்கர வடிவமாகிய ஆனந்தத் திருநடனத்தை இடப்பாகத்திலிருந்து தரிசிப்பர் என்கின்றது உண்மை விளக்கம். இதனை உள்ளடக்கியே அப்பர் பாடல் பின்வருமாறு அமைகின்றது.

'தேய்பொடி வெள்ளைபூசி யதன்மேலொர் திங்க
டிலகம் பதித்த நுதலர்
காய்கதிர் வேலைநீல வொளிமா மிடற்றர்
கரிகாடர் காலொர் கழலர்
வேயுடனாடு தோளி யவள்விம்ம வெய்ய
மழுவீசிவேடி வுரிபோர்த்
தேயிவராடு மாறு மிவள்காணுமாறு
மிதுதானிவர்க் கொரியல்பே' (4-8-3)

உலக உயிர்கள் உய்யவே உமைகாண நடனமாடினான் என்பதைப் போலவே தாருகனை அழித்துச் செருக்குற்றிருந்த காளி நாண ஊர்த்தவத் தாண்டவம் ஆடினான் (4-100-2) என்பதையும் சுட்டுகின்றார் அப்பர்.

காலனை உதைத்தது

'நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்' என்று செருக்குற்று செம்மாப்புடன் பாடிய பெருமைக்குரியர் அப்பர். இதனால்தான் இறைவன்

காலனை உதைத்த புராண நிகழ்வு அப்பருக்குப் பெரிதும் விருப்பமாய் இருந்தது போலும். சிவனை வணங்கினால் காலனையும் வெல்லலாம் என்பதை உணர்த்தும் புராணச் செய்தியே சிவன் காலனை உதைத்த நிகழ்வாகும். மிருகண்டு தம்பதியர் 16 வயதுவரை வாழும் நற்குணங்கள் வாய்க்கப்பெற்ற மகனைப் பெற்றனர். மார்க்கண்டேயனுக்கு உரிய வயது வந்ததும் அவன் இறந்துவிடுவானோ என்று தாயும் தந்தையும் வருந்துவதைக் கண்டு அவர்களைத் தேற்றி இறைவனுக்கு நாள்தோறும் பூசனைகள் செய்து வந்தான்.

பதினாறாம் வயது முடிந்து இயமன் வந்து அழைக்க, வாராமையால் பாசக்கயிற்றை வீசி இழுக்க, சிவன் மார்க்கண்டேயனை அஞ்சற்க என்று கூறி இடது பாதத்தால் யமனை உதைத்தான். யமன் இறந்தான். மார்க்கண்டேயன் என்றும் பதினாறு வயதுடையவனானான்.

'பாலனை யோடவோடப் பயமெய்துவித்த
வுயிர்வவ்வுபாசம் விடுமக்
காலனை வீடுசெய் கழல்போலும்' (4-14-6)

என்றும்,

'மருட்டுயர் தீரவன் றர்ச்சித்த மாணிமார்க் கண்டேயற்காய்
இருட்டிய மேனி வளைவா ளெயிற்றெரி போலுங்குஞ்சிச்
சுருட்டிய நாவில்வெங் கூற்றம் பதைப்ப வுதைத்துங்ஙனே
உருட்டிய சேவடி யான்கட வூருறை யுத்தமனே' (4-108-1)

என்றும் பல இடங்களில் இந்நிகழ்வைப் படம் பிடிக்கின்றார் அப்பர். ஒரு சிறுவனுக்காய் யமனை உதைத்த ஈசனின் கருணை இங்குக் கருதத்தக்கது.

யாழ், வீணை வாசித்தது

இறைவன் திருக்கைலையில் வீற்றிருக்கும்போது தும்புருநாரதர், சுகர் முதலிய முனிவர்கள் இசையறிவையடையவும் சாமகீதத்தை வீணையில் இசைக்கவும் அருள்புரிய வேண்டினார். இறைவர் நால்வகை இசைக் குற்றத்தையுண்டு பண்ணும் மரங்களை நீக்கி நல்மரங்களால் செய்யப் பெற்ற நால்வகை யாழ்களிலும் அவ்வவற்றுக்குரிய நரம்புகளைத் தொடுத்து எண்வகையான இசைகளைப் பாடவேண்டும் என்று அருளினார். இதற்கடையாளமாகத் தானே யாழேந்தி இசையெழுப்பினார். இதனைத் திருக்கழிப்பாலைப் பதிகத்தில் அப்பர், 'தங்கையின் யாழும் வைத்தார்' - (4-30-1) என்றும் திருவெண்காட்டுப் பதிகத்தில், 'வேதத்தொலி கொண்டு வீணை கேட்பார்' (6-35-2) என்றும்,

'வருங்கடன் மீளநின்றெம் மிறைநல் வீணை வாசிக்குமே'
(6-113-7)

என்றும் கூறுமிடங்களை வைத்து உணரமுடியும்.

கங்கையைச் சடையில் தரித்தது

ஒரு சமயம் சிவன் கண்களை உமாதேவி தம் கைகளைக் கொண்டு மூடினார். இதனால் உலகம் இருளில் மயங்கியது. ஆன்மாக்களுக்கு அருள் புரியும் இறைவன் தனது நெற்றில் ஒரு கண்ணைத் தோற்றுவித்து ஒளி உண்டாக்கினான். இதையுணர்ந்து பார்வதி பிரமித்து இருகைகளையும் எடுக்கும்போது ஏற்பட்ட அச்சத்தால் பத்து விரல்களிலும் வியர்வை தோன்றி பத்துகங்கைகளாகப் பெருக்கெடுத்து உலகம் முழுவதையும் மூடி கடலுக்குச் சென்றது. திருமால் முதலிய தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட இறைவனும் அவ்வெள்ளத்தை வருக என அழைத்துத் தம் சடையில் தரித்தார். இதனையே அப்பர்,

'தரித்தானை கங்கை நீர்தாழ் சடைமேல்' (4-7-8)

என்று குறிப்பிடுகின்றார்.

நந்திக்கருளியது

சிவன் நந்திக்கருளிய நிகழ்ச்சி திருவையாற்றுப் புராணத்தில் விரிவாகப் பேசப்படுகிறது. செப்பியேச்சுரர் திருவையாற்றில் உள்ள இறைவனை ஐவகை தீர்த்தங்களால் அபிஷேகஞ் செய்து வழிபட்டார். இதனால் மகிழ்ந்த இறைவன் அவருக்கு மூன்றுவித தீட்சைகளும் திருவடி தீட்சையும் செய்து 'நந்திதேவர்' என்று பெயரும் சூட்டிச் சனற்குமாரருக்கு இவரைக் கொண்டு சிவஞானோபதேசமும் செய்வித்தான். பின் திருக்கயிலையின் காவலுரிமையையும் சிவகணங்களுக்குத் தலைமையையும் கூட இறைவன் இவருக்கு அருளினான். இதனையே அப்பர்,

''நந்திக் கருள் செய்தாய் நீயே யென்றும்'' (6-41-5)

என்று குறிப்பிடுகின்றார்.

மாவலி சக்கரவர்த்தியானது

திருமறைக்காட்டுக் கோயிலில் அர்த்தசாம வழிபாட்டிற்குப்பின் இறைவன் திருமுன் இருந்த விளக்கு அணையும் நிலையிலிருந்தது. அப்பொழுது விளக்கிலிருந்த நெய்யை உண்ண வந்த எலி திரியைத்தள்ள விளக்குச் சுடர்விட்டு எரிந்தது. இவ்வெலிக்கு இறைவன் மூவுல காட்சியையும் தந்தான். அந்த எலியே மாவலி சக்கரவர்த்தியாகப் புகழ்பெற்றது. இதனையே நாவுக்கரசர், திருக்குறுக்கை வீரட்டப் பதிகத்தில் பின்வருமாறு குறித்துள்ளார்.

''நிறைமறைக் காடுதன்னி னீண்டெரி தீபந்தன்னைக்
கறைநிறத் தெலிதன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடன் மண்ணும் விண்ணும் நீண்டவா னுலகுமெல்லாம்
குறைவறக் கொடுப்பர்போலுங் குறுக்கைவீ ரட்டனாரே''

(4-49-8)

சந்திரனை சடையில் தரித்தது

தட்சன் தன்னுடைய 27 நட்சத்திரப் பெண்களைச் சந்திரனுக்கு மணம் முடித்துக் கொடுத்து இவர்களிடத்தில் நீ வேறுபாடின்றி அன்பு செலுத்த வேண்டும் என்றான். ஆனால் சந்திரனோ ரோகிணியுடன் மட்டும் அதிக அன்புடையவனானான். இதனால் ஏனைய பெண்கள் வருத்தமுற்று தந்தையிடம் சென்று முறையிட, தட்சன் சந்திரனை நாளுக்கொரு கலையாய்க் குறைந்து அழிவாய் எனச் சபித்தான்.

சாபத்தால் கலைகளை இழந்த சந்திரன் சிவபெருமானிடம் சென்று தன் குறையைப் போக்க வேண்டினான். எஞ்சியிருந்த ஒரு கலையைத் தன் தலையில் சூடிய சிவபெருமான் உனது கலைகளில் ஒன்று என் சடைமுடியில் இருத்தலால் 'நாளுக்கொரு கலையாக வளர்ந்தும் தட்சன் சாபத்தால் நாளுக்கொரு கலையாய்க் குறைந்து இருப்பாய் என்று அருளினார். இச்செய்தியை அப்பர்,

'திங்களைத் திகழவைத்தார் திசைதிசை தொழவும் வைத்தார்'
(4-38-1)

என்று கூறுவதன் மூலம் எல்லாத் திசைகளிலும் திங்களைத் திகழவும் எல்லா உயிர்களும் தொழவும் செய்தார் என்று குறிப்பிடுகின்றார்.

வெள்ளையானை வழிபட்டது

சூரபன்மன் முதலான அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் போர் நிகழ்ந்தபோது தந்தங்கள் ஒடியப்பெற்ற வெள்ளையானை (ஐராவதம்) திருவெண்காட்டையடைந்து சிவலிங்கம் தாபித்து வழிபட்டது. பெருமான் அருளால் தந்தங்கள் மீண்டும் வளர்ந்தன. இவ்வரலாற்றை அப்பர்,

'திறலால்மிக்க
வித்தகத்தால் வெள்ளானை விள்ளாஅன்பு
விரவியவா' (6-83-6)

என்று குறிப்பிடுகின்றார். சிவனை வழிபட்ட யானையும் தன் குறை நீங்கப்பெற்றது இங்குக் கருதத்தக்கது.

இவ்வாறு இறைவன் மனிதர்களுக்கு மட்டுமல்லாது ஏனைய உயிர்களுக்கும் இரங்கி அருள்புரிந்து செருக்குற்ற காலத்து அழித்து ஆட்கொண்ட செய்திகள் புராணங்களில் மிகுதியாகப் பேசப்பட்டுள்ளன. இப்புராணச் செய்திகளைத் தாம் கையாண்டுள்ளதன் மூலம் அப்பர் உணர்த்தும் செய்தி, இறைவனை யார், எந்த வடிவில் எந்த இடத்தில் எதை வேண்டி வழிபட்டாலும் அருளக் கூடியவன். வழிபடாமல் இருந்தாலும் உரிய செயலைச் செய்தாலும் பேரருள் புரியக் கூடியவன் என்பதை உணர்த்தவே எழுதியுள்ளார் எனலாம்.

95. சைவ நலம் போற்றும் நாவுக்கரசர்

பா. மாலினி, சிதம்பரம்.

திருஞானசம்பந்தரால் "அப்பரே" என அழைக்கப்பெற்ற பேறும், செந்தமிழின் சொல்வளப் பதிகத் தொடை பாடிய பான்மையினால் "நாவுக்கரசு" என்று "உலகேழினும் நின் நன்னாமம் நயப்புற மன்னுக" என்று யாவரும் வியப்பு எய்துமாறு கேட்கப் பெற்ற தவவாழ்வும் பெற்று வாழ்ந்த "தாண்டக வேந்தரே" அப்பரடிகள்.

நாவுக்கரசரின் நால்வகை வெற்றி

சமண் சமயத்தவர் உரையின் அடிப்படையில், திருநாவுக்கரசரை நீற்றறையில் இடுகவென ஆணையிட்டான்.

சுட்ட கிளிஞ்சல்கள் நிறைந்து சுண்ணாம்புத் தழல் வீசும் அறையில் நாவுக்கரசை உள்ளே தள்ளிப் பூட்டினர். அந்நிலையில் அப்பரடிகளுக்கு நீற்றறையானது சிவனுடைய திருவடி நீழலாய் இன்பம் தந்தது.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே"

என்பது ஐந்தாம் திருமுறையில் 90-ஆவது பதிகமாக நின்ற தனித் திருக்குறுந்தொகையின் முதல் திருப்பாட்டு.

இத்திருப்பதிகத்தின் மூலம் மக்களையும், அவர்தம் வாழ்வையும் நெறிப்படுத்தும் முறையில் திருநாவுக்கரசர் பெரிதும் வற்புறுத்துவது மனத்திண்மை. இரண்டாவது அவர் வன்மையாக உரைப்பது நடலையல்லோம் என்பது.

"மண்பாதலம் புக்குமால் கடல்மூடி மற்றேழுலகும்
விண்பால் திசைகெட்டு இருசுடர் வீழினும் அஞ்சல் - நெஞ்சே
திண்பால் நமக்கொன்று கண்டோம் திருப்பாதிரிப் புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட் சுடரான் கழலிணையே"

என்பது கல்லே தெப்பமாகக் கொண்டு கரையேறி, திருப்பாதிரிப் புலியூரை அடைந்தவுடன் தோன்றாத் துணையாகயிருந்த இறைவனைப் பாடி வணங்கும் பதிகத்தில் அமைந்த ஒன்பதாம் திருப்பாட்டு.

அடுத்து 'நடலையல்லோம்' என்பதை மறுமாற்றத் திருத்தாண்டகத்து முதல் திருப்பாட்டிலேயே அமைத்தருளுகின்றார். நடலை என்பது கால்நடைகள் என்ற பொருளில் வந்தது. நாமார்க்கும் குடியல்லோம், ஆனால் தாமார்க்கும் குடியல்லாச் சங்கரனுக்கே மீளா .ஆளாய்க் கொய்மலர்ச் சேவடியினையே கருதினோம் என்று சொல்லும்போது, நாம் அவனுக்கு அடிமையேயாயினும் கால்நடை போன்ற அடிமையன்று, காரண காரிய நிலையில் அறியவும், ஆட்படவும், அவன் திருவடியை நின்று துய்க்கவும் ஆகிய உரிமைகளைக் கொண்டுள்ளோம் என்றும் அறிவுறுத்துகின்றார்.

நீற்றறையில் அடிகளை ஏழு நாட்கள் பூட்டி வைத்திருந்தனர் என்பர். திருவடி அனுபவம் எவ்வாறு என்பதைச் செம்மையுறத் தெரிவிக்கும் திருப்பாட்டாக இருப்பது ''மாசில் வீணையும்'' என்பதே.

வெம்மையுடைய நீற்றறையானது தண்மையுடைய பொய்கையாக இருந்தது. சுண்ணாம்பு எரியும்போது எழும் ஒலியும், ஒளியும் முறையே மாசில் வீணையும் மாலை மதியமும் தரும் ஒலியையும் ஒளியையும் போல இருந்தன.

துய்க்கும் நிலையில் நம்மால் பெரிதும் வரவேற்கப்படுவனவாகிய தென்றலும் இளவேனிலும் போல இருந்தது.

பொய்கையில் வண்டு பாடும் நிலை அமைந்து இனிமை உறுத்துதல் போல நீற்றறையிலும் இன்னொலி அனுபவம் இருந்தது. திருவடியின் இன்பம் ஐவகைப் புலன் அனுபவங்களுக்கும் இடந்தந்து துய்க்க வைக்கும் இனிய இன்ப அனுபவம் என எடுத்துக்காட்டினார்.

சமண சமயத்தில் முன் இருந்தபோது கற்ற மந்திர வித்தையினால் இவ்வாறு பிழைத்திருந்தார் என மன்னவனிடம் கூறி, நஞ்சினை அமுதாகக் கொடுக்கும் இரண்டாம் கொடுமைச் செயலில் தலைநின்றனர். தமக்குச் சமணர்கள் நஞ்சினை உணவாகத் தந்ததையும், அதனை அமுதாக மாற்றிய அருள் திறத்தையும் நினைந்து இறைவனை நன்றியுணர்வுடன் உருகிப் பாடும் நிலையில்,

''வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா அமணர்தந்த
நஞ்சமு தாக்குவித்தார் நனிபள்ளி அடிகளாரே''

எனத் திருநனிப்பள்ளித் திருப்பதிகத்திற் குறிப்பிட்டுக் கூறுவாராயினர்.

திருநாவுக்கரசருக்கு நஞ்சும் ஊறு செய்யாமை கண்டு, பட்டத்து யானைக்கு வெறியூட்டி, அதனை ஏவி, மிதித்துக் கொல்லுமாறு செய்ய வேண்டும் என மன்னனிடம் கூறி அவ்வாறே செய்யும் செயற்பாட்டு நிலையையும் உண்டாக்கினர். பட்டத்து யானையானது கொலை வெறியுடன்

தம்மை நோக்கி வரும்போது பாடிய பதிகமாகச் ''சுண்ணவெண்'' என்ற தொடக்கத்தினையுடைய திருப்பதிகத்தைக் காட்டுவது மரபு. இப்பதிகத்தில் வரும் திருப்பாட்டுக்கள் ஒவ்வொன்றிலும்,

''உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை''

என்ற முடிநிலை அமைக்கப் பெற்றுள்ளது.

இனி நாலாவது நிலையில் அமையும் கொடுமையே திருநாவுக்கரசரைக் கல்லிற் கட்டிக் கடலில் வீழ்த்தியபோது அவர் பாடியுய்ந்த திருப்பதிகம் நமச்சிவாயப் பதிகம். அப்பதிகத்து முதல் திருப்பாட்டு

''சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச் சிவாயவே''

என்று அமைந்துள்ளது.

தம்மைக் கல்லிற் பிணித்துக் கடலில் போட்டதையும் அப்போது தாம் எவ்வாறு உய்ந்தோம் என்பதையும் எடுத்துக் கூறும் வகையில்,

''கல்லினோ டெனைப் பூட்டிய மண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கஎன் வாக்கினால்
நெல்லும் நீள்வயல் நீலக் குடியரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந்தே னன்றே''

என்ற திருநீலக்குடித் திருப்பதிகப் பாட்டினை அமைக்கின்றார். கல்லே தெப்பமாக அமைய, இன்றைய தென்னாற்காடு மாவட்டத்துக் கடலூர் என்னும் பெயருடைய திருப்பாதிரிப் புலியூருக்கு அண்மையில் ஒரு கல் தொலைவில் உள்ள இடத்தில் கரையேறுகிறார். அப்பரடிகள் கரையேறிய காரணத்தால் அது, அன்று முதல் இன்று வரையில் கரையேறவிட்ட குப்பம் என வழங்கப்பெற்று வருகிறது. கரையேறியவுடன் சென்று திருப்பாதிரிப் புலியூர் இறைவனைக் கண்டு வணங்கி ''ஈன்றாளுமாய்'' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளுகிறார். திருப்பாதிரிப் புலியூரே பாடலிபுத்ரம் என நின்று சமண் பாழிகளை உடையதாயிற்று. அங்கேதான் திருநாவுக்கரசரும் தருமசேனராக இருந்த காலத்தில் தங்கியிருந்தார். கா. சுப்பிரமணியபிள்ளை எழுதிய ''அப்பர் சுவாமிகள் சரித்திரம்'' என்ற நூலில், இந்நான்கு கொடுமைகளிலிருந்தும் நாவரசர் எவ்வாறு உய்ந்தார் என்பதற்குக் காரணம் கூறுகிறார்.

1. ஈசன் அடியார்க்கு ஏதும் இடையூறு விளையாது.
2. அப்பரடிகள் இறைவன் திருவடிக்கண் தம் செயலற்றுத் தாமற்று முதல்வன் இணையடிகளில் ஏகமாய் நின்றே, தமது முற்செய்

வினைக்கு ஈடாக வருவனவற்றை உணர்ந்தமையால் நேர்ந்த பேரிடையூறுகள் யாவும் சிவபோகமாகவே விளைந்தன.

3. துரியநிலை கடந்து அதீதத் தன்மையுற்றுச் சிவபோகத் தேன் பருகுதலிலேயே ஆழ்ந்த சிந்தையுடையோர் தமது வெளியுடம்பிற்கு வரும் இடையூறுகளைச் சிறிதும் உணரார்.

4. ஒரே உடம்புதானும் மனநிலை காரணமாகவும், திருவருள் இயக்கத் தாலும் மாறிப் பல இயல்புகளை எய்துதல் இயலாததொன்றன்று.

மேலே குறிப்பிட்ட நான்கு காரணங்களை அவர் எடுத்துக் காட்டி யுள்ளார்.

திருநாவுக்கரசர் மருள்நீக்கியராக இருந்த காலத்தே அறந்திகழ் நாவரசு எனத் திகழ்ந்தவர். தம்மை நோக்கி வருவாருக்கு நலஞ்செய்தல், ஈதல் முதலிய அறங்களை மிகுதியாகச் செய்தவர். தனி வாழ்வில் சிறந்த அறமாகக் ''கொல்லாமை'' என்ற ஒன்றை ஏற்கிறார். அதனை முதன்மை அறமாக ஏற்றமையாலேயே சமண் சமயம் சார்கிறார். அவர் உணர்ந்த தலையாய அறங்கள் இரண்டு, செய்ந்நன்றியறிதலும், வாய்மையும்.

திருவாரூர்ப் பெருமானை வணங்கிப் பாடும் நிலையில்,

''பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப் புகழ் புரிந்தார்க் கருள்செய்யும்
ஐயஞ்சின் அப்புறத்தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே''

என்று பொய்மைக்கு அஞ்ச வேண்டும் என்று கூறிய அப்பரடிகள்,

''கையினால் தொழா தொழிந்து கனியிருக்கக் காய் கவர்ந்த
கள்வனேனே''

என்று இவ்வாறு பத்துத் திருப்பாட்டுக்கள் இணைந்த பழமொழிப் பதிகம் அருளிச் செய்கிறார். அதில் ஒன்று

''என்பிருத்தி நரம்புதோல் புகப் பெய்திட்டு
என்னையோர் உருவமாக்கு
இன்பிருத்தி முன்பிருந்த வினை தீர்த்திட்டு
என்னுள்ளங் கோயிலாக்கி
அன்பிருத்தி அடியேனைக் கூழாட் கொண்டு
அருள் செய்த ஆரூரர்தம்
முன்பிருக்கும் விதியின்றி முயல்விட்டுக்
காக்கைப் பின் போன வாறே''

என்பது இரண்டாம் திருப்பாட்டு.

தம் வாழ்க்கையை நினைத்து, செய்ந்நன்றி கொன்ற செயலை எண்ணி உருகுகிறார். எலும்பை முதலில் வைத்து அதன் மேல் நரம்பு

தோல் இவைகளைப் புகச் செய்து முதன்முதலில் எனக்கு இந்த உருவத்தை அமைத்துக் கொடுத்தான். நான் வினைகளை அனுபவிக்க முற்பட்டபோது தானே முன்பிருந்து வினை நீக்கி என்னுள்ளங் கோயிலாக்கி ஆட்கொண்டான். இப்படி, யான் நினையா முன்னே அவன் என்னை நினைந்து அடிமை கொண்டு, என் இடர் கெடுத்து என உடம்பு முதலியவைகளை அமைத்துக் கொடுத்த முன்னவனை யான் மறந்து புறம் போந்தேன். பண்டு இகழ்ந்தேன் என்று கூறி வருந்துகிறார்.

செய்ந்நன்றி மறவாமை என்ற அறமானது திருநாவுக்கரசரை உருக வைத்துச் செயல் மேற்படுத்திய அறம் அவரை உறுதியுடன் வாழ்வியலில் நிற்க வைத்த பேரறம் வாய்மை. கொல்லாமை என்ற அறம் திருநாவுக்கரசரை ஈர்த்துச் சமண் சமயஞ் சாரச் செய்தது போலவே "பொய்யாமை" என்ற அறமே அவர்கள் மேல் வெறுப்புக் கொள்ளவும் வைத்தது.

சமணர் செய்த தீமைகளிலிருந்து தம்மைக் காப்பாற்றியமையினால் சைவ நெறியின் மெய்மையை அனுபவத்தால் உணர்ந்த அப்பரடிகள், தமக்கு உடம்பு முதலியன கொடுத்து, அவ்வப்போது உடனிருந்து நல்லன செய்து காப்பாற்றி வரும் சிவபரம் பொருளுக்குத் தொண்டாற்ற வேண்டியது கடமை என எண்ணுகிறார்.

திருஞானசம்பந்தர் செந்தமிழ் உறைப்புடன் பாட வல்லவர் என்று மதிப்பீடு செய்தவர் திருநாவுக்கரசர். ஆனால் திருத்தொண்டின் உறைப்புடையவர் திருநாவுக்கரசர். கைத்திருத்தொண்டு செய் கடப்பாடு என்பது திலகவதி அம்மையார் அமைத்துத் தந்த தொண்டு மரபு.

திருநாவுக்கரசரைப் பற்றி அப்பூதி அடிகள் கூறும் மொழிகளை நினைவிற் கொள்ள வேண்டும். அப்பூதியடிகள் வைத்த தண்ணீர்ப் பந்தலில் திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தல் என எழுதப் பெற்றுள்ளது. அதைக் கண்ட திருநாவுக்கரசர், நீர் வைத்த தண்ணீர் பந்தலில் நும் பெயர் எழுதாது வேறொரு பேர் முன்னெழுத வேண்டிய காரணம் என்ன எனக் கேட்டார். திருநாவுக்கரசர் என்ற பெயரை "வேறொரு பேர்" என்று சொன்னமைக்காக நிலையழிந்த சிந்தையரானார் விழுந்து புரண்டு அழுகிறார் அப்பூதியடிகள்.

> **"நன்று ருளிச் செய்திலீர்" நாணில் அமண் பதகருடன்**
> **ஒன்றிய மன்னவன் சூட்சிதிருத் தொண்டன் உறைப்பாலே**
> **வென்றவர் தம் திருப்பேரோ வேறெருபேர்?**

என்று சினங்கொண்டார். பின்னரும்,

"நன்மை உடையவர் கழற்கீழ் நயந்த திருத்தொண்டாலே இம்மை யிலும் பிழைப்பதென எம்போல்வாரும் தெளியச் செம்மைபுரி திருநாவுக்கரசர்"

என்றும் திறனாய்வு செய்தவர் அப்பூதியடிகள். அதுவும் திருநாவுக்கரசரின் திருமுன்பிலேயே; அவர் யார் என்று தெரியாமல், அவர் தம் செயலைத் திறனாய்வு செய்கிறார்.

> "மன்னவன் செய்த சூட்சிகளைத் திருத்தொண்டின்
> உறைப்பினால் வென்றவர்"

> "திருத்தொண்டினால் இம்மையிலும் பிழைப்பது
> என என்னைப் போன்றவர்களும் தெளிந்து
> கொள்ளுமாறு செம்மை புரிபவர்"

என்று இரண்டு செய்திகளை அமைத்துத் தந்துள்ளார்.

அவற்றுள் "திருத்தொண்டினால் இம்மையும் பிழைப்பது" என்பது ஆய்வுக்குரியது. இப்பிறவியில் வாழும் ஒருவர் தமக்கு முன்வினை காரணமாக வரும் இடையூறுகளையும் சூழ்ச்சிகளால் வரும் தொல்லை களையும் பிழைபடுமாறு செய்து, அவற்றின் இடையூறுகளிலிருந்து பிழைத்து வாழ முடியும். அவ்வாறு பிராரப்த கன்மத்தால் வரும் துன்பங் களையும், பிறவற்றையும் நீக்கி வாழ வைக்கவும் நல்லின்பத்தில் வாழ வைக்கவும் உரிய ஆற்றல் திருத்தொண்டுக்கு மட்டுமே உண்டு. அவர் வென்று வாழ்ந்ததுடன் நாம் அவ்வாறு வென்று வாழ்வதற்காகவும் உரிய செம்மையைச் செய்து வாழ்பவர் - திருத்தொண்டனைச் செய்து வாழ்பவர் திருநாவுக்கரசர். சைவ நலம் பெற்றதோடு, எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகிய நிலையில் அந்தண்மையுடையவர் ஆகிறார். அதுவும் அப்பூதியடிகள் என்ற அந்தணர் போற்றும் அந்தண்மையாளர் ஆகிறார்.

'திருநாவுக்கரசு' என்ற மறைமொழியால் இந்நிலவுலகத்தில் நிறைமொழி மாந்தராக வாழ்ந்தவரே வாகீசர் எனவும், வளர் திருத்தொண்டின் நெறி வாழவரு ஞானத்தவ முனிவரே அவர் எனவும் உணர்த்தி, அவர் தம் திருப்பெயர் மறைமொழியாதலின் அதனைப் பன்முறையும் உச்சரித்து அதன் சீர் பரவலுறுகின்றேன் எனவும் அமைத்து திருக்குறள் நீத்தார் பெருமையில் அமைந்த,

> "நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
> மறைமொழி காட்டி விடும்"

என்ற அறக்கோட்பாட்டினைச் சேக்கிழார் நினைவுறுத்துவாராயினார்.

பல்லவமன்னனுடைய சமணர்கள் செய்த நால்வகைக் கொடுமை களை வென்று, திருவதிகை வீரட்டானஞ் சேர்ந்தார் திருநாவுக்கரசர். திருத்தொண்டின் உறைப்பாலே வென்றவர் என அப்பூதியடிகள் திருநாவுக்கரசரை விளக்கமுறுத்துகின்றார். மேலும் அவர் திருநாவுக்கரசரை,

> "இம்மையிலும் பிழைப்பது எனஎன் போல்வாரும் தெளியச்
> செம்மைபுரி திருநாவுக்கரசர்"

என்ற சிறப்புமுறையிலும் விளக்க முற்பட்டார்.

"திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரசர்" எனத் திருநாவலூரரால் அறிமுகம் செய்து அருளப் பெற்ற செம்மையும், சைவமாம் பெருநெறி உலகந் தழுவிய பொதுமைத் தொண்டு நெறி என்பதைத் தம் வாழ்வின் மூலம் உணர்த்திய காரணத்தால் "திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டின் நெறி வாழ வரு ஞானத் தவமுனிவர்" எனச் சேக்கிழார் பெருமானால் நிறைவு செய்தருளப் பெற்ற சீர்மையும் இரு பக்கங்களில் நிற்க இடைநின்ற பெருமைக்குரியராகத் திகழ்ந்த அப்பரடிகள், தம் தம்பியாரை "உளர்" ஆக வைத்த தயையுடைய பெருந்தகையாகியத் திலகவதியம்மையை முன்னிட்டுப் பின் போதும் திருவருள் பெற்ற திருநெறியத் தமிழாளியார் ஆவர்.

செய்ந்நன்றி உணர்வு, வாய்மை என்ற இரண்டு அடிப்படை அறங்கள் வாழ்வியல் அறங்களாக நிற்க, கொல்லாமை போன்ற நல்லறங்கள் துணை நிற்க, திருநாவுக்கரசர் அறத்தினைச் செயற்படுத்தி வாழ்வதற்கு மூல முதற் பொருளாக நின்று விளங்கும் "செம்மை" என்ற ஒன்றை, இன்னது என ஆய்ந்து காணவும், ஆய்ந்து காணப்பெற்ற "செம்மை" என்ற தனிநிலைப் பொருளில் நின்று தொண்டாற்றவும் வல்லமை பெற்றிருந்தார். செம்மை என்ற நடுநிலைப் பொருளில் உயர் செம்பொருளில் நின்றே உலகத்துயிர்களுக்கெல்லாம் திருத்தொண்டு பேணினார்.

96. வாகீசர் காட்டிய விழுமியங்கள்

எம்.எம். மீறான் பிள்ளை, திருவனந்தபுரம்.

வாழ்வும் வாக்கும்

வாழ்வாங்கு வாழ்ந்து காட்டும் வலியவர்களின் வாழ்வும் வாக்கும் இருவேறுபடாது இணைந்து செல்வனவாகும். சொல்லியபடி செல்வது என்பது எல்லோராலும் இயலாததாகும். சொல்லும் செயலும் ஒரே பாதையில் செல்கின்றவர்கள் வாழ்வுப் பயணத்தின்போது நல்ல பல மாதிரிகளைச் சுவடுகளாகப் பதித்துச் செல்வர். இவை வீழ்ந்து கிடப்பார்க்கு எழுச்சியூட்டும் விழுமியங்களாகும். இவற்றை முன்மாதிரியாகக் கொண்டு வாழ்ந்தால் 'ஒருமாதிரியான' மனிதர்கள் கூட, சமூக ஒளிச் சிந்தும் மாதிரி மனிதர்களாக மாறுவது திண்ணம்.

மருள்நீக்கியார்

சிறந்த சைவச் சான்றோர்களில் ஒருவர் திருநாவுக்கரசர், அப்பர், வாகீசர் என்றறியப்படுகின்ற மருள்நீக்கியார். பெயருக்கேற்றாற்போல் பெயரளவுக்கன்றி பேரளவுக்கு வாக்கிலும் நோக்கிலும் 'அரசராகத் திகழ்ந்தவர் இவர். அவரது வாழ்வில் சொல்லிச் செய்துக் காட்டப்பட்ட உயரியக் கருத்துக்களை திறமுடன் தேர்ந்து தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். வாழ்வில் மருளும் இருளும் போக்கி அருளும் பொருளும் காட்டும், ஊட்டும் விழுமியங்கள் இங்குக் கண்டறியப்படுகின்றன.

வாழ்வுப் பட்டறை

செயற்கு அரியச் செய்வார் பெரியர்; சிறியரோ செயற் 'கரியக்' காரியங்களைச் செய்து விடுவர். "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்னும் நோக்கில் கைம்மாறு கருதாது, விளம்பரம் வேண்டாது விளம்பும் அறங்களை விளக்கம் பெறுமாறு செயற்படுத்துவது பெரியோர் இயல்பு. சமணராக வாழ்ந்து சைவராகத் தொடர்ந்து நாள்தோறும் நாடின் பதிகளை நாடிச்சென்று பதிகம் பாடிநின்று பதியச் செய்த வாகீசரின் வாழ்வுச் செயற்பாடுகள் வழி தெரியலாகும் விழுமியங்கள் இங்கே வரன்முறைப் படுத்தப்படுகின்றன.

இருவகை விழுமியங்கள்

வாழ்வில் நாம் ஏற்றிப்போற்றும் உயர்க்கருத்துக்களையே விழுமியங்கள் என இயம்புகிறோம். இவை இருவகையில் அமைகின்றன. ஒருவகை

நம் உணர்வோடு ஒன்றியவை. உளப்பாங்கோடு பேரளவுத் தொடர்புடையவை. பக்தி, அன்பு, பாசம், கொள்கையுறுதி, மெய்மை, நீதியுணர்வு, பொறுமை, பணிவு, நிலையாமை ஆகிய குணங்கள் இவ்வகையைச் சார்ந்தவை. இவற்றை உணர்வு நிலை விழுமியங்கள் எனலாம்.

இரண்டாவதாக அமைந்தவை உடற்செயற்பாட்டோடு தொடர்புடையவை. நற்பணி, உழைப்பு, கூட்டுறவு, ஈகை, விருந்தோம்பல் ஆகியனவற்றை இப்பகுதியில் உட்படுத்தலாம். இவ்விரு வகைகளும் உள்ளத்தால் தூண்டப்பட்டு செயற்படுத்தப் படுவனவாகும். இவை ஒவ்வொருவர் வாழ்விலும் தாழ்ந்தும் உயர்ந்தும் தாக்கம் பெறும். இவற்றின் தாக்க அளவிற்கு வாழ்வுச் சூழ்நிலையும் போக்கும் காரணிகளாக அமைகின்றன. ஆன்மீக அடியாராக அறநெறி வழிநின்று வாழ்ந்து காட்டிய வாகீசர் வாழ்வில் இவ்விழுமியங்களின் தாக்கம் பேரளவு அமைந்துள்ளமைக் காணலாம்.

உணர்வு நிலை விழுமியங்கள்

பக்தி

இயற்கை, உயிரினங்கள் ஆகியவற்றின் தாக்குதல்களிலிருந்து பாதுகாவல் தேடும் பொருட்டு முதன் முதலில் மனிதன் கடவுளர்களை வழிபடத் தொடங்கினான். ஆனால் ஆன்மீகப் பெரியோர்கள் தம்மைப் படைத்தவனுக்கு நன்றி செய்யும் நோக்கில் பக்தி கொண்டு சமயப் பணிகளில் ஈடுபடுவது இயல்பு வாகீசர் கடவுட் பணியிலேயே காலம் கழித்தவராவர். சமூகத் தொண்டே சர்வரட்சகனுக்கானத் தொண்டு என்பது அவரது பக்தி இலக்கு. எண்ணம்போல் எண்ணற்ற பதிகளுக்குச் சென்று பண்ணோடு பதிகம் பாடி வழிபாடுகளில் மூழ்கிச் சிறக்கும் போது இவரது பக்தி, விளக்கம் பெறுவது காணலாம்.

மொழியுணர்வு

பெற்ற தாயும் உற்ற மொழியும் உயிரினைவிட உயர்ந்தனவாகும். தாய்மொழிப் பற்று ஊனோடும் உதிரத்தோடும் இரண்டறக் கலந்ததாகும். வாகீசர் வாழ்வின் பெரும்பகுதி தாய்மொழியில் தேவாரப் பண்ணிசைக்கும் வாய்மொழிப் பணியிலேயே கழிந்தது குறிப்பிடத்தக்கது. தமிழ் மொழிப் பற்று காரணமாக உள்ளமொடு ஒன்றி வெள்ளப்பிரவாகமாக எண்ணற்ற தேவாரப் பாசுரங்களை அவர் பாடியளித்துள்ளது காணலாம்.

அன்பு

பகுத்தறிவு படைத்த அனைவர்க்கும் பொதுவாக அமையும் உன்னத உணர்வு இது. அன்பே இரக்கமாக நட்பாக, பாசமாக, பக்தியாக, காதலாக உருவாக்கம் பெறுகின்றது. சாதாரண மனிதர்களைவிட ஆன்மீகச் சான்றோர் களிடம் இது பேரளவில் சுரப்பது இயல்பு. மனித மா நேயத்தின் மகத்தான

ஆற்றலில் விளைந்த அன்புணர்வே வாகீசரின் வாழ்வின் அடிப்படையாக அமைந்தது என்றால் மிகையாகாது. "நேசமாகி நினை மடநெஞ்சே!" எனும் தேவாரப் பாடல் வரி வாகீசரின் நேச நெஞ்சைக் காட்டுவதாகும். அன்பில் கனிந்த இவ்வுணர்வே நற்பணி, கூட்டுறவு, ஈகை, விருந்தோம்பல் போன்ற விழுமியங்களை நோக்கி வாகீசரை இழுத்துச் சென்றது எனலாம்.

பாசம்

பெற்றோர், புதல்வர், சகோதரர், நெருங்கிய உறவினர்களிடையே கட்டுப்பட்டுக் கிடக்கும் ஓர் உயரிய அன்புணர்வே பாசம். தமது தாய், தந்தை, தமக்கை உறவினர்களால் பாசப் பிணைப்புண்டு வாழ்ந்தார் வாகீசர். தமக்கையார் திலகவதியை மணப்பதாகக் கூறியிருந்த தளபதி கலிப்பகையார் களத்தில் இறந்து விடுகிறார். இத்துயர் நீங்குமுன் தாய் தந்தையர் இறப்பெய்தினர். அதிர்ச்சியும் கலக்கமும் கொண்ட திலகவதியார் உயிர்விடத் துணிகிறார். இது கண்ட வாகீசர், "என்னை விட்டுச் செல்வீராயின் யானும் உயிர் நீப்பேன்" என பாசம் மீதூர தமக்கையாரிடம் உருக்கமாகக் கூறினார். இறுதியில் பாசம் வென்றது. தம்பியை அணைத்துக்கொண்டு "உனக்காக வாழ்கிறேன்" என நா தழுதழுக்க உறுதி கூறினார் சகோதரி. இந்நிகழ்ச்சி பாசத்தின் ஆற்றலைப் புலப்படுத்துவதாகும்.

கொள்கையுறுதி

கொண்ட கொள்கையில் திடம் கொண்டவராக அமைகிறார் வாகீசர். தொடக்கத்தில் சில தூண்டுதல்கள் காரணமாக சமணத்தைத் தழுவி வாழ்ந்தவர், பின்னர் உணர்ந்தபோது மீண்டும் சைவத்திற்குள்ளே நுழைகிறார். தொடர்ந்து மன்னன் மகேந்திரவர்மப் பல்லவனின் அதட்டலுக்கும் பயமுறுத்தலுக்கும் எதிராகத் துணிவு கொண்டார். நீற்றறையில் இட்ட போதும், நச்சுப் பாலடிசில் ஊட்டப்பட்டபோதும், மதம்பிடித்த யானையின் காலால் இடறப்பட்டபோதும், கல்லுடன் கட்டி கடலில் எறிந்த போதும் இம்மியளவும் இதயத் தடுமாற்றமின்றி அஞ்சா நெஞ்சங் கொள்கிறார். அவரது மனோதிடமும் வைரம் பாய்ந்த குணமும் மன்னனையே மனது மாறச் செய்துவிட்டது. "நாமார்க்கும் குடியல்லோம்; நமனையஞ்சோம்" தேவார வரிகள் வாகீசரின் கொள்கையுறுதியையும் நம்பிக்கையையும் எடுத்துக் காட்டுவதாகும்.

மெய்மை

பொய்மைக் கறைப் போக்கி மெய்மைத் தன்மையை வாழ்வில் நிலைநிறுத்தியவர் வாகீசர். "பொய்யினைத் தவிர விட்டு புறமெலாம் அடிமை செய்ய" விரும்பும் அவரை தேவாரப் பதிகங்கள் படம்பிடிக்கின்றன. "வாய்மையுடன் மெய்யுற்ற திருப்பணி", "வாய்மை திறம்பா வாகீசர்" என்பன பெரியபுராணச் சான்றுகளாகும். "பொய் தொழாது", "பொய்மாயப்

பெருங்கடல்", "பொய்யனைத்தையும் விட்டவர்" எனும் திருப்பதிகத் தொடக்கத் தொடர் மெய்மையை சித்தரிப்பனவாகும். கடவுளை "பொய்யேதுமில்லாத மெய்யன்'' எனச் சுட்டுவதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

நீதியுணர்வு

நிலமெங்கும் நீதி நிலைபெற வேண்டும் என நாடும் தன்னெஞ்சிற் குரியவர் வாகீசர். ஆதலின் ''நீதியால் நினைசெய் நெஞ்சே'' ''எனக் கட்டளையிடுகிறார். கடவுளையும் நீதியாகவே காணும் நிலையும் பாடல்களில் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

பேராசையின்மை

அழிவின் ஆழிக்கு ஆளை இழுத்துச் செல்லும் அடங்கா ஆசையை விட்டு விசையுடன் வெளியேறி விஜயம் கொய்தவர் வாகீசர். அவரது ஆசையின் எல்லை, அருளறம் பூண்டு அடியார்க்குப் பணி செய்ய வேண்டும் என்பதே எனலாம்.

''புல்லோடும் கல்லோடும் பொன்னோடும் மணியோடும்
சொல்லோடும் வேறுபாடிலா நிலைமை''

எனும் பெரியபுராண வரிகள் அவரின் ஆசை கடந்த உளநிலையை உள்ளபடியே உரைப்பனவாகும்.

பணிவு

எளிய ஆடையணிகள்; இனிமையான ஆனால் அடக்கமானப் பேச்சு, யாரும் எளிதில் அடையமுடியாத ஆன்மீக அறிவு முதிர்ச்சியின் அடையாளங்கள் இவை. காலை மாலை எனப் பாராது கலக்கமின்றி காலார நடந்து பணிசெய்தவர் வாகீசர். ''பணிந்து பரவி பணிசெய்தார்'' ''ஆர்வமுறப் பணிந்தேத்தி'' என வரும் பெரியபுராணத் தொடர்கள் பணிவின் அணியை எடுத்துக் காட்டுவனவாகும்.

பொறுமை

அகப்புறத் தாக்குதல்களுக்கு ஆட்படுத்தப்பட்டு அலைக்கழிக்கப் படும்போதும் அசையாத உள்ளத்துடன் அடக்கத்துடன் பொறுமை காப்பது சான்றோரின் பேரியல்பாகும். வாகீசரும் சமணரால் பலவாறாகப் பழித்துரைக்கப்பட்டபோதும், துன்புறுத்தப்பட்டபோதும் பதறாது மனம் சிதறாது பொறுமை காத்து நின்றதை அறியலாம்.

''மாயைச் சாலம் மிகவல்லார்
அவர் மற்றென்னை முன்செய்த
தீய தொழிலும் பல கெட்டேன்
சொல்ல இசையேன் யான்என்றார்''

என அமையும் பெரியபுராண பாடல் வரிகள் வாகீசரின் பொறுத்தலையும் ஒறுத்தலையும் ஒருசேர எடுத்துக்காட்டுவதாகும்.

நிலையாமை

அன்றாடம் நின்றாடும் நம் வாழ்வு அன்றொரு நாள் நின்றுவிடும் என்பது கசப்பான உண்மையாகும். விசுக்கென வந்த வாழ்வு பொசுக்கென போகும்போது காண்பார் கலங்கி நின்று விடுவார். கிரகணமின்றி பரிபக்குவ மனக்கிரணம் பெற்றவர் மட்டுமே மனம் திறந்து மகிழ்ச்சி யுடன் மரணத்திற்கு வரவேற்பு வளையமிடுவர். இதனைப் பார்த்து கேட்டு உணர்ந்த வாழ்வின் அனுபவ நிலையில்,

"இன்றுளேன் நாளையில்லேன்
என்செய்வேன் தோன்றினேனே!"

என்று நிலையாமையின் நிலைத்த நிலைமையை இயலாமையுடன் எடுத்துரைப்பது காணலாம்.

செயல் நிலை விழுமியங்கள்

உழைப்பு

உள்ளத்திற்கும் உடலுக்கும் ஒருசேர உற்சாகமும் சுறுசுறுப்பும் தருவது உடல்வருந்தி உழைக்கும் முயற்சியாகும். வாகீசரும் வெறுமனே மடங்களில் வீற்றிருக்காது, ஊர்தோறும் உவகையுடன் நடந்து சென்று பல்வேறு இன மக்களைச் சந்தித்து பணிசெய்தார். இவரது ஆன்மீகப் பண்பாட்டுப் பயணங்கள் சமய சமூக நோக்கில் பெரும் சாதனை விளைவித்ததை நாமறிவோம். "நாடும் பதிகள் பல மிகவும் காதல் கூற சென்றிறைஞ்சி" என பெரியபுராணம் குறிப்பிடுவதும் காண்க.

நற்பணி

"மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்பதே சான்றோரின் வாழ்வு லட்சியமாகும். வாகீசரும் நலிந்தவர்களுக்கான நற்பணியையே தலையாய அணியாகக் கருதியராவார். மனிதர்க்கும் பிற உயிரினங்களும், தாவரங்களும் பயன்படுமாறு அன்னச் சத்திரங்கள், நீர்ப்பந்தல்கள், நிழற் சோலைகள், நீர்நிலைகள் ஆகியனவற்றை மனிதமா நேயத்துடன் ஏற்படுத்தியமையை பெரியபுராணம் எடுத்தியம்புவது குறிப்பிடத்தக்கது.

கூட்டுறவு

தனித்துச் செய்வதைவிட இணைந்து செய்வது காலச் சிறந்தது. கூடியுழைத்தால் கோடி நன்மை கூடிவரும். ஒட்டுறவால் கூட்டுறவு கூடி வரும். இம்மொழிகளை மெய்ப்பிக்கும் வண்ணம் பதிகள் தோறும் சென்று பல்வேறு மக்களோடு இணைந்து நின்று பணிகளில் மூழ்கியவர்

வாகீசர் என்பதனை "தொண்டு குழாம் புடை சூழ" போன்ற பெரியபுராணத் தொடர்கள் சுட்டி நிற்கின்றன.

ஈகை

எச்சிற்கையை ஈயின் முன்னே கூட உதறாத உதவாக்கரைகளுக்கு ஈகை பற்றி என்ன தெரியப் போகிறது? ஆனால் உயர்க்குணம் உடையோர் பணத்தை உடைமைப் பொருளாகப் பூதம் காத்ததுபோல் காக்க மாட்டார்கள். மாறாக வரும் பொருளை பெரும்பொருளாகக் கருதாமல் ஏழை எளியவர்களுக்கு தரும் பொருளாக்குவார்கள். "காசினிமேற் புகழ் விளங்க நிதியளித்து", "யாவர்க்கும் தவிராத ஈகை வினைத் துறை நின்றார்" என வரும் பெரியபுராண வரிகள் வாகீசரின் வள்ளன்மையை தெள்ளிதின் உணர்த்துவனவாகும்.

விருந்தோம்பல்

எண் சாண் உடலையும் ஆட்டிப்படைப்பது ஒரு சாண் வயிறாகும். வயிறு காலியானால் எல்லா உறுப்புக்களும் காலியாகும்; காலியாக மாறவும் கூடும். ஆதலின் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தவராக உயர்வாக மதிக்கப்படுவார். நாடி வருவோர்க்கும் தேடி வருவோர்க்கும் ஓடிச்சென்று உணவளித்து தாகத்தையும் பசியையும் போக்கி உளத்தை ஊக்கி குளிரச் செய்வது வாகீசரின் வழக்கமாகும். "மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்" என பெரியப்புராணம் குறிப்பிடுவது நோக்க.

விழுமிய ஏந்தல்

விழுந்து எழும் தோன்றல்களிடையே விழாத விழா ஏந்தலான வாகீசரின் வாழ்வுப் பயணத்தில் வெளிப்பட்டச் செயற்பாடுகளிலிருந்தும் சிந்தனைகளிலிருந்தும் பெறப்பட்ட விழுமியங்களில் விரிவஞ்சி முக்கிய மானவை மட்டும் இங்கே வழங்கப்பட்டுள்ளன.

ஆன்மீக மனிதப் புனிதர்கள்
வான மான வாழ்வுகள்!
வாக்கும் போக்கும் இணைய
மெய்ஞ்ஞானக் கம்பியில்
யாத்திரை செய்யும்
ஆகாய ரயில்கள்!
தடம் புரள இங்கே
தண்டவாளமும் இல்லை
வழுக்கி விழ வண்டவாளமும்!

சில நெறிகளின் சோலையான வாகீசர் வாழ்வை கவிஞர் திருவேந்தனாரின் இந்தக் கவிதையோடு பொருத்திக் காண்பது இன்னும், இன்னும் ஆழமான பொருளும் அழகும் நல்குவதாகும்.

97. திருநாவுக்கரசர் தமிழ்

இரா. முத்துக்குமாரசாமி, சென்னை.

அருள்மிகு திருநாவுக்கரசர் யார்? திருநாவுக்கரசர் தமிழ் என்ற சொல்லின் பொருள் யாது? அச்சொல்லின் பகுப்பாய்வுப் பிணைப்பாக்கப் பொருள்கள் யாவை? அவை திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்களில் எங்கெங்கு எவ்வாறு அமைந்துள்ளன. திருநாவுக்கரசர் தமிழ் இக்கால அறிவியல் தமிழுக்கு ஏற்புடையதா? அவர் தமிழ், இக்காலக் குழந்தைக் கல்வி உயர்வுக்கு உதவுமா? அத்தமிழிலுள்ள கற்றல் புதுமைகள் யாவை? அவைகளை எவ்வாறு நடைமுறைக்குக் கொண்டு வரும் உயர் தொண்டு செய்யலாம்? என்ற எட்டு ஆய்வுக் கேள்விகளுக்குரிய விடைகளைத் திருநாவுக்கரசர் தேவாரம்வழி, பெரியபுராணம்வழி மொழியியல் அறிவியல்வழி ஒப்பிட்டராய்ந்து, திருநாவுக்கரசர் தமிழின் பெருமையை நிலை நிறுத்துவது இக்கட்டுரை ஆய்வின் நோக்கமாகும்.

ஆவுடையான் திருவருள் பெற்ற சைவநெறிக் காவலராக விளங்கியவர் திருநாவுக்கரசர். இப்பெயர் வீரட்டானத்தில் அசரீரியாக இறைவனால் இவர்க்கு இடப்பட்டது. தேவாரம் பாடிய மூவருள் நடுவண் அரசாகத் திகழ்பவர். 4,5,6 என்ற மூன்று திருமுறைகளைப் பாடியவர். பல்லவ மன்னனையும் ஏனையோரையும் சைவர் சைவசமயம் சார்ந்தோராய் ஆக்கிய பெருந்தகையார்; புகழனார்; மாதினியாரின் அருமருந்தன்ன அருந்தவப் புதல்வர்; திருவாமூர்; வேளாண் மைந்தர்; திலகவதியாரின் திருத்தம்பி; தாண்டக வேந்து; தாண்டகச் சதுரர்; உளங்கொள் திருவிருத்தங்கள் ஓங்கு திருக்குறுந்தொகைகள், தாளங்கொள் சந்தநிறை திருநேரிசைகளைச் சிந்தை கரைந்து உருகிப் பொங்குதமிழ்ச் சொல் விருத்தத்தில் பாடியவர் திருநாவுக்கரசர் என்று பன்னிரண்டாம் திருமுறை ஆசிரியர் சேக்கிழார் தம் பெரியபுராணத்தில் திருநாவுக்கரசர் யார் என்பதற்கு விளக்கம் தருகிறார்.

இறைவன் இட்ட பெயரான திருநாவுக்கரசர் தமிழ் என்னும் சொற்றொடரில் பன்னிரண்டு எழுத்துக்கள் உள்ளன. அவற்றினுள் அ, உ, ம் என்ற மூன்று எழுத்துக்களும் நமசிவய என்ற ஐந்தெழுத்து மந்திர எழுத்துகளும் 'அ' என்ற ஒடுக்கப் பிரணவமும் ஓம் என்ற மந்திரச் சொல்லும் விரிபிரணவமும் ஒளிந்துள்ளன. எனவே மந்திர எழுத்துக்களையும்

சொல்லையும் தம்மகத்தேயுடையவர் என்ற பொருள்பட, திருவீரட்டானீசுவரர், திருநாவுக்கரசர் என்ற பெயரைத் தருமசேனர்க்குச் சமண சமயத்திலிருந்து சைவமாகத் திருநீறு அணிந்ததும் அசரீரி ஒலிவழி அளித்ததால் "நாவுக்கரசென்று உலகேழினும் நின்னாமம் நயப்புற மன்னுக" என மஞ்சுறை வானிடையே ஒரு வாய்மை எழுந்ததுவே. (பெ.பு. 1339) எனச் சேக்கிழார் திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் நவில்கிறார்.

ஈசன் திருவருளால் திருநாவுக்கரசர் என்னும் பெயர் பெற்ற அப்பரது தமிழ் என்பது திருநாவுக்கரசர் அருளிச் செய்த தேவாரப் பதிகங்களின் தமிழ் என்ற முப்பது எழுத்துக்கள் கொண்ட ஒரு சொற்றொடரின் சுருக்கமே திருநாவுக்கரசர் தமிழ் என்பதாம். இது பன்னிரண்டு எழுத்துக் களையுடையது. திருநாவுக்கரசை மையமாக வைத்த தமிழ் திருநாவுக்கரசரால் பாடப்பெற்ற தமிழ், திருநாவுக்கரசர்க்கு அரசரான அரனைக் காண உதவும் தமிழ், திருநாவுக்கரசரின் திருநாவினின்றும் நாமகளருளால் பிறந்த தமிழ் திருநாவுக்கரசரது தமிழ், திருநாவுக்கரசரின் கண் தங்கிய தமிழ் திருநாவுக்கரசரே தமிழ், தமிழே திருநாவுக்கரசு என்பது சொல்லிலக்கணப் பொருளாகும்.

உயர் உயிர்த் தலைவராம் அரசி அகத்தியனாரின் சொல் சொற்றொடர் பகுப்பாய்வு பிணைப்பாக்கம் எனும் அகப்புலவரின் அகத்தியக் கற்பிக்கும் முறைப்படி **'அருள்மிகு திருநாவுக்கரசு நாயனாரின் தமிழே போற்றி! வாழ்க—ஓம்'** என்ற சொற்றொடரைப் பகுப்பாய்வு பிணைப்பாக்கம் முறையில் இச்சொற்றொடரின் உள்ளே உள்ள எழுத்துக்களைத் தனித்தனியாக உயிர், மெய் ஆகப் பிரித்து அவற்றை இணைத்தால் 108 தமிழ்ப் பொருள் தோன்றுவது விந்தையிலும் விந்தையாகும். அப்பொருள்கள் வருமாறு. அயன், அரன், அரி—(திரிமூர்த்தி) தமிழ், ஓம் தமிழ், நாமகள் தமிழ், அருள் தமிழ், அரசு தமிழ், சுரர் தமிழ், தேவர் தமிழ், அமரர் தமிழ், அமிழ்துத்தமிழ், அன்னைத் தமிழ், தாய்த் தமிழ், ஈசுவரன் தமிழ், ஈசுவரி தமிழ், அகரன் தமிழ், அரகரன் தமிழ், அகத்தியத் தமிழ், அத்தித் தமிழ், யானைத் தமிழ், பனையன் தமிழ், மனைத் தமிழ், காவகத் தமிழ், நாவகத் தமிழ், பாவகத் தமிழ், ஆதிதமிழ், பாதத் தமிழ், பாதித் தமிழ், நாதத் தமிழ், நதித்தமிழ், பதித்தமிழ், மதித்தமிழ், பரமன் தமிழ், பரவுதமிழ், பத்தி தமிழ், புதன் தமிழ், புத்தி தமிழ், தளித் தமிழ், தருமமிகு தமிழ், திருநீற்றுத் தமிழ், ஊற்றுத் தமிழ், ஆற்றுத் தமிழ், இறப்புதீர் தமிழ், சூழ்ச்சி தீர் தமிழ், இறைசூழ் தமிழ், இறைத்தமிழ், உறைத்தமிழ், முத்திதமிழ், முதிய தமிழ், புதிய தமிழ், சரசுவதித் தமிழ், மீத்தமிழ், மூத்த தமிழ், முத்துத் தமிழ், அம்மைத் தமிழ், இம்மைத் தமிழ், உம்மைத் தமிழ், குகன் தமிழ், குகைத் தமிழ், குழவித் தமிழ், தனித்தமிழ், புனிதன் தமிழ், மனிதன் தமிழ், மன்னன் தமிழ், நயனத்தமிழ், நியமத்தமிழ்,

இமயத் தமிழ், இமைத்தமிழ், இமையாத் தமிழ், மிதப்புத்தமிழ், திருக்குளத்துத் தமிழ், மறை தமிழ், பாவம் தீர்தமிழ், நாகர் தமிழ், நகைத் தமிழ், யானைத்துயர் தீர்த்தமிழ், மறைந்த தமிழ், திருநீற்றறைத் தமிழ், அறமிகு தமிழ், மாயத் தமிழ், மாயாத் தமிழ், மான் தமிழ், கான் தமிழ், போதித்த தமிழ், திதித் தமிழ், தித்தித்த தமிழ், தீம் தமிழ், நாமத் தமிழ், கோள் தமிழ், புத்தேளிர் தமிழ், பக்தர் தமிழ், தத்துவத் தமிழ், சமயத் தமிழ், சிகரத் தமிழ், சிவன் தமிழ், சிவைத் தமிழ், அகவரசித் தமிழ், பாகனார் தமிழ், உமைத் தமிழ், ஆழித் தமிழ், நமசிவயத் தமிழ், காளித் தமிழ், ஊழித் தமிழ், காசித்தமிழ், ஆசித் தமிழ், திருமுறைத் தமிழ், திருமுருகன் தமிழ், குமரன் தமிழ், குமரித் தமிழ். 108-க்கும் மேற்பட்ட பொருள் உளவேனும் ஓர் எல்லை கருதி 108 ஆக ஆக்கப்பட்டன. இறைவன் தன்னிருப்பிடத்தை 12 இராசிகளில் 27 விண்மீன்களிடையே 108 பாதங்களில் அமைத்திருப்பது போல இங்கு பொருள் வரையறுக்கப்பட்டன. படத்தில் விளக்கம் காண்க.

ஊர்தி ஏறுடையான் தமிழே திருநாவுக்கரசர் தமிழ் அத்தமிழ் அப்பரால் பாடப்பட்ட தேவாரப் பதிகங்கள் 49,000 அனைத்திலும் அமைந்துள்ளன. அவற்றுள் நமக்கு இப்போது கிடைத்துள்ள 312 பதிகங்களிலும் நிறைந்துள்ளன. அவற்றுள் சிலவற்றைச் சுட்டிக் காட்டுவதும், திருநீற்றுத் தமிழ் – சூலை நோய் தீரப்பாடிய திருவதிகை வீரட்டானப் பதிகத்திலும், திருநீற்றறைத் தமிழ் – ஏழுநாள் சுண்ணாம்பு நீற்றும் காளவாயில் இட்டு வைத்தகாலை தனி – திருக்குறுந்தொகைப் பதிகம் – மாசில் வீணை என்று தொடங்கும் பாடல் முதல் விறகில் தீயினன் என்று தொடங்கும் பாடல் முடிய உள்ள பதிகங்களிலும் யானை துயர்தீர் தமிழ் திருக்கெடவட வீரட்டானம் – சுண்ணவெண் சந்தனச்சாந்து என்று தொடங்கும் பாடல் முதல் நரம்பு எழுகைகள் என்று தொடங்கும் பாடல்கள் வரையுள்ள பகுதியிலும், நமச்சிவாயத் தமிழும் மிதப்புத் தமிழும் நமச்சிவாயப் பதிகம் – சொற்றுணை வேதியன் என்று தொடங்கும் பாடல் முதல் மாப்பிணை தழுவிய என்று தொடங்கும் பதிகங்கள் வரையிலும், அமிழ்துதமிழ், விடந்தீர்த்த திருப்பதிகம் ஒன்று கொலாம் என்று தொடங்கும் பாடல் முதல் பத்துக்கொலாம் என்று தொடங்கும் பாடல்கள் வரையிலும், திருக்குளத்துத்தமிழ் திருவையாறு, மாதர்ப் பிறைக் கண்ணியானை என்று தொடங்கும் பாடல் முதல் வளர்மதிக் கண்ணியினானை என்று தொடங்கும் பாடல்கள் வரையிலும் அமைந்துள்ளமையை அறியலாம். ஏனையவற்றை வரிவான ஆய்வு மூலம் அறிக.

எம்பிரான் திருவருளால் பாடிய திருநாவுக்கரசர் தமிழ் இக்கால அறிவியல் தமிழுக்கு எவ்வாறு பொருந்தும் என்பதை ஒன்றிரண்டு எடுத்துக்காட்டுகளால் கூறுதும். கணித அறிவியலின் அடிப்படை எண்களை அவ்வெண்கள் ஒன்று முதல் பத்து விடந்தீர்த்த திருப்பதிகத்தில் திருநாவுக்கரசர்

கூறியுள்ளமையும், இக்கால அறிவியல் ஆனது கணித வான் அறிவியல், மொழி, அறிவியல் தொல்லியல் அறிவியல் எனப் பலவகைப்படும் வான்கணித அறிவியல் அண்டவெளி 360° எனக் கூறுகிறது. சைவ சமயதத்துவம் 36 எனக் கூறுகிறது. 360-ஐ 36-ஆல் வகுத்தால் கிடைப்பது 10° நடுக்கோட்டிற்கு வடக்கு 10° தெற்கு 10° 12 இராசிகள் 27 விண்மீன்கள் 108 பாதங்கள் அமைந்துள்ளன. சூரியன், சந்திரன், விண்மீன் மூன்றும் சேர்ந்தால் 30 ஆகும். 'அதிகை வீரட்டான அம்மான்' என்ற சொற்றொடரில் அ–ன்– 30 தமிழ்மொழியியல்படி திருநாவுக்கரசா் தமிழ், அமைந்துள்ளமை இக்கால அறிவியலுக்குப் பொருந்தும். எண்ணாகி, எண்ணுக்கோர் எழுத்துமாகி, சொல்லாகி சொல்லுக்கோர் பொருளாகி என்று திருநாவுக்கரசா் கூறும் வரிகளுக்குப் புத்துரை, அறிவியலின்படி எடுத்துரைப்பின் அரசா் தமிழ் அறிவியலுக்குப் பொருந்தும் என்பதை நிலை நாட்டும் – எ.கா. எண் 0, 1,2,3,4,5,6,7,8,9,10, எழுத்து க–1, உ–2, ரு–5,எ–7, அ–8, அ>1,2,3,4,5,6,7,8,ௐ,10 சொல்லாகி, சொல்லுக்கோர் பொருளாகி என்பதற்கு விளக்கம் மேலே கண்டோம். மேன்மொழித்த கருத்து திருநாவுக்கரசா் தமிழின் ஒரு கூறு இக்கால அறிவியல் தமிழுக்கு ஏற்புடையது என்பதைப் பறைசாற்றும்.

ஏற்ற இறைவன் ஓரிறைவன் திருமுருகனின், தாதைத் தமிழ் திருநாவுக்கரசா் தமிழ் என்ற சொல்லினுள் குழவித் தமிழ் ருக – 5+1=6 ஆறுமுகத்தமிழ் மேடம் முதல் கன்னிவரை ஓா் ஆறுமுகம் அல் (இரவு) ஆறுமுகம்; துலாம் முதல் மீனம் வரை இன்னொரு ஆறுமுகம் பகல் ஆறுமுகம் ஆறு அகவைக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க அரசா் தமிழ் உதவும். தமிழ், கணிதம், அறிவியல் (சூழ்நிலை), கலைகள் போன்ற பாடங்களை உள்ளடக்கிய குழந்தைக் கல்விக்கு அங்கமாலையில் வரும் கலை, கண், செவி, மூக்கு, வாய், நெஞ்சு, கை, கால்கள் உடலறிவியல் அறிவையும் எண் மாலை எனப்படும் விடந்தீா்த்த பதிகத்தில் வரும் ஒன்று முதல் பத்து எண்களால் தொடங்கப்படும் பாடல்கள் எண்ணறிவையும், நீணிலவும் அத்தியும், நீரும் நெறி இலங்கும் இரு காலும் (காற்று, ஆகாசமும், வானிலவு தாரகையும் மண்ணும் விண்ணும் மன்னுயிரும் என நாவுக்கரசா் கூறும் சொற்றொடா் சூழ்நிலை அறிவியல் அறிவையும் கற்பிக்கப் பெரிதும் உதவும். சமய இலக்கிய அறிவோடு தூய பயனறி வியலையும் அறவியலையும் தத்துவ இயலையும் வரலாற்றியலையும் கற்பிக்கவும் பெரிதும் உதவும். குழந்தைக் கல்வி உயா்வுக்கும் பெரிதும் உதவும். விளக்கத்தை விளக்கப் படத்தில் காண்க.

ஐயாறப்பன் (5x6=30 எழுத்து) தமிழே திருநாவுக்கரசா் தமிழ் ஐ என்றால் வியப்பு மெய்ப்பாடுகளுள் ஒன்று. சிறுமை, பெருமை, புதுமை ஆக்கம் கொண்டது. பிற மெய்ப்பாடுகள் நகை, அழுகை, இளிவரல்,


மருட்கை, (வியப்பு) அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற எண் வகை மெய்ப்பாடுகள் குழந்தைகளிடம் ஏற்படுத்தும் விதத்தில் குழந்தைக் கல்வி அமைவதே கற்றல் புதுமைகளாகும். இதற்கு ஏற்ப திருநாவுக்கரசர் வாழ்க்கை வரலாறும், அவரது தமிழும் அமைந்துள்ளன. மெய் உயிர், இன்புறு, வியப்புறு கல்வியே திருநாவுக்கரசர் தமிழ் காட்டும் புதுமைக் கல்வி. அக்கல்விப் புதுமைகளுள் அனைத்துக் கல்வித் தொழில் நுணுக்க உத்திகளும் அடங்கும். கல்வி நுணுக்கத்தின் 14 வகை உத்திகளும் 77 கற்றல் திறன்களும் நாவுக்கரசர் தமிழில் அடங்கும்.

ஒப்பற்ற திருநாவுக்கரசர் தமிழை, சமய, தத்துவ, மொழியியல், அறிவியல், சமூக அறவியல், கலை இலக்கிய, வரலாறு புவியியல் தமிழை வளர்க்கக் கோயில்தோறும் குழந்தைக் கல்வி, வானறிவியலின் படி 27 திருமடங்களிலும் தலைமையிடமான ஆடுதுறை, தருமபுரம், காசிமடம் திருநாவுக்கரசர் சம்பந்தர் மடம் போன்றவைகளில் சமுதாயக் கல்லூரி அமைத்து ஆசிரியர் கல்வி, குழந்தைக் கல்வி, தொழிற்கல்வி, கலைக் கல்வி, பெற்றோர் கல்வி பிரிவை ஏற்படுத்தி இக்கட்டுரையாளர் குழுவினர் இதுவரை 18 ஆய்வுக் கட்டுரைகளில் கூறியவற்றையும் நடமாடும் கண்காட்சி, கருத்தரங்கு, பணிப்பட்டறை, சிறுநூல் வெளியீடு போன்றவை வாயிலாக நாவுக்கரசர் தமிழை நடைமுறைக்குக் கொண்டு வரும் உயர் தொண்டு செய்யலாம்.

ஓம் ஓங்காரத் தமிழ், நாவுக்கரசர் தமிழ் பரப்பும் உயரிய தொண்டு நிறுவனங்கள் புரவலர் குழுக்கள் அறங்காவலர்கள் பற்றி யார் எவர் என்ற நூலினை இதழ்கள் வாயிலாக அண்ட அகல் அலை வாயிலாகத் தொகுத்து நல்லோர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து ஒப்பிலி அப்பன் திருவருள் கொண்டு நாவுக்கரசர் தமிழை வளர்க்கலாம் பரப்பலாம். திருநாவுக்கரசர் தமிழின் பெருமையை, திருஞானசம்பந்தர் சுந்தரர் தமிழோடு ஒப்பிட்டு உணரலாம். விளக்கப்படம் 2-ல் விளக்கம் காண்க.

ஔடத அமிழ்துத் தமிழைத் திருநாவுக்கரசர் தமிழை அவ்வுலகிலும் உவ்வுலகான உம்பர் தேவர் உலகிலும் விண்ணகத்திலும் மண்ணகத் திலும் திருநாவுக்கரசர் தமிழைத் தந்த இறைவன் இறைவி, இறை உயிர்த் தமிழை அவர்களின் திருவருள் பெற்று வளர்த்திட; எட்டுக் கேள்விகளை எண்குணன் அருளால் எழுப்பப் பெற்று அதற்குரிய விடைகளை ஒப்பாய்வு மூலம் கண்டறிந்து திருநாவுக்கரசர் தமிழின் பெருமையை நிலை நாட்டியுள்ளோம். மேலும் விரிவாகக் குழு ஆராய்ச்சி மூலம் அறிந்து திருநாவுக்கரசர் பெருமையை அண்டங்கள் முழுதும் அவனி முழுதும் பறைசாற்றி ஞாலப் புகழ் ஏற்படுத்துவோம். எண்ணும் எழுத்துமான இறைவன் திருவருளைப் பெறுவோம். பெறத் திருநாவுக்கரசரின் நீதித் தமிழ்ப் பொன் மொழிகளை, "தீதவை செய்து

தீவினை விழாதே, நாடி நந்தமரான தொண்டர்காள் ஆடுமின் அழுமின் தொழுமின் அடி பாடுமின், பரமன் பயிலுமிடம் கூடுமின் பரவுமின் பணிமின் பணிவாரொடே விரவுமின், விரவாரை விடுமின்; அல்லலாக ஐம்பூதங்களாட்டினும் வல்லவாறு சிவாய நம வென்று நல்ல மேவிய நாதனடி தொழ செல்ல வந்த வினைப்பகை வீடுமே; ஒன்றியிருந்து நினை மின்கள் உந்தமக்கு ஊனமில்லை; மெய்மையாம் உழவைச் செய்து விருப்பு எனும் வித்தை வித்திப் பொய்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப் பாய்ச்சித் தம்மையும் நோக்கிக் கண்டு தகவெனும் வேலியிட்டுச் செம்மையுள் நிற்பராகில் சிவகதி விளையுமாறே" நெஞ்சகத்தில் கொண்டு நமசிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க என்றும், தலையே நீ வணங்காய், கண்காள் காண்மின்களே, செவிகாள் கேண்மின்களோ, மூக்கே நீ முரலாய், வாயே வாழ்த்து கண்டாய், நெஞ்சே நீ நினையாய், கைகாள் கூப்பித் தொழீர் என்றும் பாடிக் குற்றாலத் துறை கூத்தனை நினைத்து வழிபட்டு, பொதியின் மேய புராணனான அகத்தியனை மனத்தில் வைத்து, நெஞ்சினைத் தூய்மை செய்து, காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக, வாய்மையே தூய்மையாக மனமணியிலிங்கமாக; நேயமே நெய்யும் பாலா நிறைய நீரமைய ஆட்டிப் பூசனை ஈசனார்க்குச் செய்து கொண்டே திருநாவுக்கரசர் தமிழ்த் தொண்டின் 32 சைவ அறச்செயல்களாக மாற்றி அறக்கட்டளை அமைத்துத் திருநாவுக்கரசர் தமிழ்த் தொண்டினை செய்து இன்புறுவோமாக.



இன்றுள்ள தேவாரத் திருப்பதிகத் தொகை - படவிளக்கம்

98. அப்பர் கண்ட கயிலைக்காட்சி

க. முருகேசன், கோவை.

மனித சமுதாயத்திற்கு நலம் பயப்பனவாகவும், அகமுகத்தே இறைவனைக் காணவும், அத்திருவருளிலே தோய்ந்து இன்புறவும், மெய்ப்பொருளைக் கண்டு தோயவும், இறைத்தொண்டில் இன்பம் காணவும், தூய்மையான இறையன்பில் இன்பம் காணவும் துணை புரிபவை சமயச் சான்றோர்கள் அருளிய அருள்மொழிகளாகும். சைவ சமயக்குரவர்களில் அப்பர் தெய்வத் தமிழகத்தின் வளங்கள் மலிந்தோங்கும் திருமுனைப்பாடி நாட்டு ஊர்களில் சிவநெறி பெருக்கும் திருவாமூரில் தோன்றினார். சைவமே தம் உயிராகவும், சிவமே தம் வடிவமாகவும், சமுதாயத் தொண்டே தம் வாழ்வாகவும் கொண்டு வாழ்ந்த அப்பர் பெருமானை,

"தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப்
பாய்வதுபோல் அன்புநீர் பொழிகண்ணும் பதிகச் செஞ்சொல்
மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே....."

என்று சொல்லோவியமாகத் தீட்டுகின்றார் சேக்கிழார். மாசில் வீணையும் மாலை மதியமும் வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்ற ஈசனின் இணையடிகளைக் கண்டு இன்புற்ற நாவுக்கரசர், கயிலையில் உறையும் பெருமானாகிய கயிலைநாதனைக் காண விருப்பம் கொண்டார். நாவுக்கரசரின் கயிலைப் பயணத்தையும், அவர் கண்ட கயிலைக்காட்சியையும் விளக்கிக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கம்.

திருக்கயிலையின் சிறப்புக்கள்

'கயிலை' என்னும் சொல் வடசொல் திரிந்த தமிழுருவம். 'கைலாய்' என்ற சொல் 'கயிலாயம்' எனத் தமிழில் வந்து வழங்கிக் 'கயிலை' என்றாயிற்று. இதில் 'கை' என்பது வானத்தைக் குறிக்க வடமொழியில் 'கே' என்பது 'க' எனத் திரிந்து 'கயிலாய்' என்றாகியது. 'கயிலாயம்' என்பதை 'வானளாவிய மலை' என்று பொருள்படுத்தலாம். இமயத்தில் இறைவன் வீற்றிருக்கும் கயிலை மலையானது,

"பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது

தன்னை யார்க்கும் அறிவுஅரியான் என்றும்
மன்னி வாழ் கயிலைத் திருமாமலை''

என்ற பாடலில் சேக்கிழார் பெருமானால் (திருமலைச் சருக்கம் - 1) போற்றப்படுகின்றது. கயிலை மலை இயற்கையாகவே பொன்நிறமாக விளங்குவதையும், அதன்மேல் பனி படிந்தநிலை பொன்மேனியில் திருநீறு பூசியது போலத் தோற்றமளிப்பதையும் சேக்கிழார் பதிவு செய்துள்ளார்.

காணுமிடமெல்லாம் கவின்மிகு வனப்புகளையுடையது இமயம். ''மலை உச்சிகளை மூடிக்கிடக்கும் பனிப்பாறைகள்; அங்கிருந்து உருமிய வண்ணம் பெருமுழக்கத்துடன் பாய்ந்து வரும் வற்றாத மலையருவிகள்; சான்றோர் உள்ளமெனப் பொங்கும் குளிர்ந்த நீர்ஊற்றுகள்; வானோங்கி நிற்கும் மலைக்குவடுகள்; அக்குவடுகள் மேல்நிற்கும் பனிப்படலங்கள்; அப்பனிப்படலங்கள் மேல் வீசும் கதிரவன் ஒளியால் எழும் வண்ண ஜாலங்கள்; மலைச்சாரல்களில் வளர்ந்து மூடிக்கிடக்கும் பெருங்காடுகள்; அவற்றிடையே வாழும் எண்ணற்ற விசித்திர விலங்குகள்; விந்தைமிகு பறவையினங்கள்; வானோங்கி நிற்கும் அகில் தேவதாரு சால் கருங்காலி போன்ற மரங்கள் வண்ண பூக்கள் குலுங்கி நிற்குபம் மலர்ச் சோலைகள்; கதிரவன் ஒளியால் பலவகை வண்ணங்களுடன் ஒளிவீசும் பாறைகள்'' என்று வருணிக்கின்றார் அ. சிவபெருமான். காலைக் கதிரவனின் ஒளியில் செவ்வண்ணமாகத் திகழும் பனிப்பாறைப் பரப்புகளைச் செம்மேனி எம்மானாகிய சிவபெருமானது செஞ்சடைக் கற்றையாகவும், வானோங்கிய மலைச்சிகரங்கள் எம்பெருமானின் திருமுடியாகவும் கண்டு, 'சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம்மான்....' என்று போற்றினர் சைவப் பெரியோர்கள்.

வடக்கே உள்ள இமயமலையின் பரந்த பரப்பளவில் ஒரு பகுதியாக விளங்குவது கயிலாயமலை. சிவபெருமான் திருத்தலத்திற்குச் சென்று வலமாக வந்து பசுநெய்யில் தாமரை நூலிட்டு விளக்கேற்றி வந்தால் 'கயிலாயம்' சென்று இறைவனைக் காணும் பேறுகிட்டும் என்று தண்டலையார் சதகம் குறிப்பிடுவதிலிருந்து சிவபெருமான் உறையும் தலங்களில் சிறப்பு வாய்ந்தது கைலை என்பது விளங்கும்.

இலக்கியங்கள் காட்டும் கயிலைமலை

சங்க இலக்கியங்களில் பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு, அகநானூறு ஆகியவற்றிலும், காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகியவற்றிலும் கயிலை பற்றிய குறிப்புகள் காணக் கிடக்கின்றன. பக்தி இலக்கியக் காலகட்டத்தில் சைவ சமயச் சான்றோர்கள் பாடிய ஏராளமான அருட்பாக்களில் சிவப்பரம்பொருளின் பெருமையோடு அவர் உறையும் கயிலைமலையின் சிறப்பும் போற்றிப் பாடப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்தர் காளத்தியில் இருந்தபடியே தேவர்கள் வழிபடும் திருக்கயிலையை மனத்தால் நினைந்து 'காவும் பொழிலும் கடுங்கற்சுனைசூழ் கயிலை......' என்ற பதிகத்தையும், 'மன்னீர் மடுவும் படுக்கல்லறையின் உழுவை சினங்கொண்டு கன்னீர் வரைமேல் இரைமுன் தேடும் கயிலை......' என்ற பதிகத்தையும் பாடினார். தேவரும் முனிவரும் சென்று இறைவனது அடிகளை நாளும் தொழுது நிற்கும் கயிலை; கற்றவர்கள் சொற்றொகையினால் முற்றும் ஒளிபெற்ற கயிலாய மலை; கருத்தற்ற அரக்கனை நிருத்த விரலால் நெரிந்த கயிலை என்று பலவாறு கயிலையைப் புகழ்ந்து பாடி, கயிலைப் பதிகப் பாடல்களைச் சிந்தை செய்பவர் வினைகள் நீங்கிச் சிவலோகம் அடைவது உறுதி என்றும் பாடுகின்றார்.

திருக்கயிலையும் அப்பரும்

கயிலை மலையைத் தம் நெஞ்சில் நிறுத்திய அப்பர், கயிலைப் பயணத்தைத் துணிந்து மேற்கொண்டவர். ஆயிரக்கணக்கான மைல் தூரத்தை நடந்தே சென்று கயிலைநாதனைக் கண்டவர். சரக்கறைத் திருவிருத்தப் பதிகத்தில் தம் நெஞ்சினை சரக்கறை என்றும், அவ்வறையில் எப்பொழுதும் நிறைந்திருப்பது சிவமலையாகிய கயிலையே என்றும் குறிப்பிடுகின்றார்.

"பொடிகொள் உருவர் புலியின் அதளர் புரிநூல் திகழ்மார்பில்
கடிகொள் கொன்றை கலந்தநீற்றர் கறைசேர் கண்டத்தர்
இடியகுரலால் இரியும்மடங்கல் தொடங்கு முனைச்சாரல்
கடியவிடைமேல் கொடிஒன்றுடையார் கயிலை மலையாரே"

என்ற பாடலில் திருக்கயிலாய மலையின் சிறப்பினையும், அம்மலையில் வீற்றிருக்கும் கயிலைநாதரின் தோற்றத்தையும் சித்தரிக்கின்றார். ஒன்றாகவும், பலவாகவும் ஆகிய வேடந்தாங்கிய ஒருவராய் இருப்பவர்; அவர் திருவடியை விரும்பியவர்கள் பெரிதும் நினைந்து கருதற்கு உரியவர்கள்; இத்தகைய இறைவர், கூட்டமாகக் கூடித்திரண்டு எல்லா இடங்களிலும் கறுத்த இருளில் திகைத்த ஆண்யானைகள், குளிர்ந்த மலைச்சாரலின் வழியாக ஓடிக் கன்றும் பிடியும் வாழ்கின்ற அடிவாரத்தைச் சேர்தற்கு இடமான கயிலை மலையில் உறைவதாகப் பாடுகின்றார்.

"கந்தமா தனம்கயிலை மலைகே தாரம்
காளத்தி கழுக்குன்றம் கண்ணார் அண்ணா
மந்தமாம் பொழிற்சாரல் வடபர்ப் பதம்
மகேந்திரமா மலைநீலம் ஏமகூடம்
விந்தமா மலைவேதம் சையம் மிக்க
வியன்பொதியின் மலைமேரு உதயம் அத்தம்

இந்துசே கரன்உறையும் மலைகள் மற்றும்
ஏத்துவோம் இடர்கெடநின் றேத்து வோமே''

என்ற இப்பாடலில் இடம்பெற்றுள்ள உதயம், அத்தம் ஆகியவை உதய மலையையும், அத்தமன மலையையும் குறிக்கின்றன. கந்தமாதனம், கயிலை, கேதாரம், வடபர்பதம், ஏமகூடம், விந்தமாமலை, மேருமலை ஆகிய இவையெல்லாம் வடநாட்டுத் திருமலைகளாகும். அண்ணா என்பது திருவண்ணாமலையையும், நீலம் என்பது நீலகிரி மலையையும் குறிக்கின்றது. இமய மலையின் பகுதிகளான மேருவும் கேதாரமும் குறிப்பிடப் பட்டுள்ளன.

திருநெய்த்தானம் திருத்தாண்டகத்தில் சிவனை 'ஆதிக்கயிலாயன் நீயே' என்று குறிப்பிட்டு, அப்பதிகத்தின் பத்துப்பாடல்களிலும் கயிலையே வான்கயிலை, ஆதிக்கயிலை, வெண்கயிலை, முன்கயிலை, தலையார்கயிலை, பூங்கயிலை என்று பலவாறு சிறப்பித்துப் பாடியுள்ளார்.

''பாசம் நீக்கித்தன் பாற்படு நல்லருள்
ஈசன் நல்கும் இயல்பென எய்தினோர்
தேசு மாற்றிச் சிறந்ததன் மெய்யொளி
வீசு கின்றது வெள்ளியங் குன்றமே''

என்ற பாடலில் உலகிலுள்ள உயிர்களிடத்தில் தோன்றும் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மல அழுக்குகளை நீக்கிநல்லருள் வழங்கும் ஈசனைப் போல், தன்பால் வந்து சேர்ந்தவர்களின் மெய்யொளியை மாற்றித் தன்ஒளியைத் தரவல்லது கயிலைமலை என்று கந்தபுராணம் கூறுகின்றது. அம்மெய்யொளியைப் பெறுவதற்காக நாவுக்கரசர் அயராது துவண்டு போகாது தமது கயிலைப் பயணத்தைத் திருக்காளத்தி மலையிலிருந்து தொடங்கி, 'காளத்தி யானவனென் கண்ணுளானே.....' என்னும் தாண்டகம் பாடிப் பின்பு புறப்பட்டு ஸ்ரீசைலத்தை அடைந்தார். தெலுங்கு, கன்னடம், மாளவம் ஆகிய நாடுகளைக் கடந்து கங்கை யாற்றையும் தாண்டிக் காசிநகரை அடைந்தார்.

காசியிலிருந்து கயிலைக்குச் செல்லும் வழி மிகக் கடுமையான தாகையால், தம்முடன் வந்தவர்களை அங்கு விடுத்துத் தாம் மட்டும் கயிலைப் பயணத்தைத் தொடர்ந்த நாவுக்கரசர், வானளாவிய மரங்கள் அடர்ந்த காடுகளையும், மனிதர் கடக்க இயலாத பாதைகளையும் கடந்து, கிழங்கு, கனிகள் ஆகியவற்றை உண்பதையும் கைவிட்டு, உள்ளத்தில் கொண்ட உரத்தையே துணையாகக் கொண்டு மலை ஏறினார். கால்தசைகள் தேய்ந்துபோக, கைகளால் தாவிச்செல்ல, கைகள் மணிக்கட்டு அளவும் தேய்ந்தன. அப்போதும் அவர் மனம் தளராமல் மார்பினால் உந்தி உந்திச் சென்றார். மார்பின் தசைகள் தேய்ந்து எலும்புகள் வெளிப்பட்டு

முறிந்தன. அதன்மேல் உடம்பு முழுவதும் தேயும்படியாகப் புரண்டு சென்றார். உடம்பும் தேய்ந்துபோக, மேற்கொண்டு செல்ல முடியாமல் செயலின்றி ஓரிடத்தில் கிடந்தார். இக்காட்சியைச் சேக்கிழார்,

> "மார்பமும் தசை நைந்துசிந்தி வரிந்த என்பு முரிந்திட
> நேர்வரும் குறிநின்ற சிந்தையின் நேரம் ஈசனை நேடும் நீடு
> ஆர்வம் அங்கு உயிர்கொண்டு உகைக்கும்; உடம்பு
> அடங்கவும் ஊன்கெடச்
> சேர்வு அரும் பழுவம் புரண்டு புரண்டு சென்றனர் செம்மையோர்"

என்று காட்சிப்படுத்துகின்றார். அவன் அருளாலே அவன்தாள் வணங்கி, அவன் அருளைப் பெற்றவர்க்கு எந்த இடையூறும் நேராது என்ற வாக்கிற்கிணங்க அப்பெருமானின் அருள்வேண்டி இடையூறுகளைப் பொருட்படுத்தவில்லை. இதனை,

> "வானம் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்
> தானம் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும்
> மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலைநஞ்சுண்டு
> ஊனமொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே"

என்னும் பாடலடிகளில் தெளிவாக்குகின்றார் அப்பர்.

இம்மண்ணில் என்றும் நிலைபெறும் தீந்தமிழ்ப் பாடல்களை அப்பர் பாடிப் போற்ற வேண்டும் என்ற திருவுள்ளம் கொண்ட இறைவன் அப்பர்முன் ஒரு முனிவர் வடிவில் தோன்றி, 'உடல் தேயும்படி இக்கொடிய காட்டில் வந்தது ஏன்?' என்று வினவ, 'வண்டுலாம் குழல் மலைமகளுடன் வடகயிலையில் அண்டர் நாயகன் வீற்றிருக்கும் பரிசு காண வந்தேன்' என்று விடையளித்தார். 'கயிலை மலையை அமரரும் அடைவது அரிது; அப்படியிருக்க மானுடர் காண்பதற்கு எளிதாகுமோ?' என்று முனிவர் கூற,

> "ஆடும் நாயகன் கயிலையில் இருக்கை கண்டல்லால்
> மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்"

என்று நாவுக்கரசர் மறுத்துரைத்தார். அவருடைய மனஉறுதியையும், பக்தியையும் கண்ட முனிவர் வானில் மறைந்து அசரீரியாய், 'ஊங்கு நாவினுக்கரசனே எழுந்திரு, என்றுரைக்க, உடலின் எத்தீங்கும் இன்றி ஒளியோடு எழுந்தார்.

> "அண்ணலே! எனை ஆட்கொண்டு அருளிய அமுதே
> விண்ணிலே மறைந்தருள்புரி வேத நாயகனே
> கண்ணி னால்திருக் கயிலையில் இருந்த நின்கோலம்
> நண்ணி நான்தொழ நயந்து அருள்புரி"

என்று பணிந்தார். உடனே இறைவர் தம் திருவாக்கால் "இங்குள்ள இப்பொய்கை முழுகி, நம்மை நீ கயிலையில் இருந்த அம்முறைமை பழுதுஇல் சீர்திருவை ஆற்றில் காண்" என்று அருளினார்.

திருவையாற்றில் கண்ட கயிலைக் காட்சி

கயிலைத் தலைவனின் அருள்வாக்கைத் தலைமேல் கொண்ட நாவுக்கரசர், திருவைந்தெழுத்தை ஓதியவண்ணம் அங்குள்ள பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் உள்ள தடாகத்தில் எழுந்து கரையேறினார். அப்போது அவர் கண்ட இறைக்காட்சி சக்தியும் சிவமும் இணைந் தியங்குவதே உலக இயக்கம் என்பதை உணர்த்தியது. அக்காட்சியை,

"மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாம லையா றடைகின்றபோது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டேனவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்"

என்று பாடி, உலகம் சக்தியும் சிவமுமாய்க் கலந்து நின்று ஆணும் பெண்ணும் அன்போடு கூடி இன்பமாய் வாழ்வதே ஆண்டவனின் திருக்கோலம் என்பதை உலகிற்கு உணர்த்தினார். பரம்பொருளோடு இணைந்து நிற்கும் சக்தி வடிவத்தினை,

"வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்
தெள்ளு பேரொளிப் பவள வெற்பென இடப்பாகம்
கொள்ளும் மாமலையாளுடன் கூடவீற்றிருந்த வள்ளலார்"

என்று சித்தரிக்கின்றார் தெய்வச் சேக்கிழார்.

அப்பர் கண்ட காட்சியில் இறைவன் சிவசக்தி வடிவமாக இருக்கும் தன்மையினையும், அதன் தத்துவத்தையும் பல பாடல்களில் விதந்தோதுகின்றார்.

"போழிளங் கண்ணியி னானைப் பூந்துகி லாளொடும் பாடி
வாழியும் போற்றியென் றேத்தி வட்ட மிட்டாடா வருவேன்
ஆழி வலவனின் றேத்து மையா றடைகின்றபோது
கோழி பெடையொடுங் கூடிக் குளிர்ந்து வருவன கண்டேன்
கண்டேனவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்"

என்றும், 'வரிக்குயில் பேடையோ டாடிவைகி வருவன கண்டேன்' என்றும் பாடுகையில் கைலைநாதனை எங்கும் காணலாமே என்று வரிசைப் படுத்துகையில் ஐயாற்றிலும் இறைவனைக் காணலாம் என்கின்றார். நாவுக்கரசருக்குத் திருவையாற்றுத் திருக்கோயில் கயிலை மலையாகக் காட்சியளிக்க, அம்மலையில் தேவர்களுடன் சிவபெருமான் வெள்ளி

மலைமேல் பவளமலை ஒன்று மரகதக்கொடியுடன் விளங்குவது போல நீலமேனி நேரிழையாகிய உமாதேவியாருடன் வீற்றிருக்கும் காட்சியைக் கண்டு,

"முற்பிறைக் கண்ணியி னானைமொய்குழ லாளொடும் பாடிப்
பற்றிக் கயிற்றுக் கில்லேன் பாடியு மாடா வருவேன்
அற்றருள் பெற்றுநின் றுஜயா றடைகின்றபோது
நற்றுணைப் பேடையோ டொடி நாரை வருவன கண்டேன்
கண்டேனவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்"

என்று போற்றுகின்றார். 'கருங்கலைப் பேடையொ டாடிக்கலந்து வருவன கண்டேன்', 'பைங்கிளி பேடையொ டாடிப்பரந்து வருவன கண்டேன்' என்று தான் கண்ட காட்சியைப் போற்றி உள்ளம் உருக, ஆனந்தக் கண்ணீர் பொழிய, தலையின்மேல் கைவைத்து இறைஞ்சி வேண்டி,

"வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆள்என்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி"

என்ற திருத்தாண்டகத்தைப் பாடினார்.

பொன்மலையாகிய கயிலையில், புல் முதல் மக்கள் ஈறாக உள்ள எல்லா உயிர்களும் பெண் ஆண் மயமாகவே இருக்கின்றன. காரிய உலகம் பெண் ஆண் மயமாக இருப்பதால் அதைக் காரியப்படுத்தும் காரணமும் பெண் ஆண் மயமாக இருத்தல் வேண்டும் என்பது கயிலை மலைக்காட்சி உணர்த்தும் உட்பொருளாகும். இதனால் பரம்பொருள் நீக்கமற நிறைந்துள்ள தன்மையும், அப்பரம்பொருள் அர்த்தநாரீசுவர வடிவாகவுள்ள தன்மையும் உணர்த்தப்படுகின்றது. கயிலைக்கோலம் அப்பருக்கு சராசரம் முழுவதும் சக்தி சிவமே என்பதைக் காட்டுகின்றது. சராசரத்துள்ள ஒவ்வொரு பெண்ணும் சக்தியாகவும், ஒவ்வோர் ஆணும் சிவமாகவும் அப்பருக்கு விருந்தாகின்றது. எண்ணும் எழுத்துமாய், பண்ணின் இசையாய், விண்ணும் நிலனும் தீயாய், கண்ணின் மணியாகி நிற்கும் கயிலை மலையான் ஆணெல்லாம் இறைவன் பெண்ணெலாந் தேவி என்ற வாக்கிற்கிணங்க அப்பருக்குக் காட்சியளித்தருளினார்.

99. அப்பரின் அற்புதத் திருப்பதிகம்

கு. மோகனாபாய், சென்னை.

நமச்சிவாயப் பதிகம் - ஓர் அறிமுகம்

சமண குருமார்களின் சொற்படி, பல்லவமன்னன் திருநாவுக்கரசரைக் கல்லொடு பிணைத்துக் கடலில் தள்ளுமாறு கட்டளையிட்டான். கடலில் இடப்பெற்ற திருநாவுக்கரசர் உண்மைத் தொண்டின் உறைப்பினால் எந்தை பிரானையே ஏத்தி இறைஞ்சுவன் என்று திருவைந்தெழுத்தைத் துதித்துச் ''சொற்றுணை வேதியன்'' (4-11-1) என்னும் திருப்பதிகம் பாடிக் கல்லே புணையாகச் சேர்ந்தார். திருவைந்தெழுத்தின் பெருமையை அருளிச் செய்தார். இருவினைக் கயிறுகளால் மும்மலக்கல்லில் கட்டிப் பிறவிப் பெருங்கடலில் போடப்பெற்ற உயிர்களைக் கரையேற்றவல்ல திருவைந்தெழுத்தின் பெருமையால் கல்தெப்பமாகக் கடலில் மிதந்தது. கயிறு அறுந்தது. கடல் மன்னனாகிய வருணன் திருநாவுக்கரசரை அலைகளாகிய கைகளால் திருமுடிமேல் தாங்கிக் கொண்டு வந்து திருப்பாதிரிப் புலியூரை அடுத்த கரையேறவிட்ட குப்பத்தில் கொண்டு வந்து சேர்த்தான். இது நமச்சிவாயத் திருப்பதிகம். பண்: காந்தாரப் பஞ்சமம்.

''கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே'' (4.11.1)

'கல்லி னேடெனைப்பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கஎன் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக்குடி அரன்.
நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேனன்றே' (5.72.7)

'நெடு நீரில் நின்றேற நினைந்தருளி
ஆக்கின வாறடியேனே.'

என்பன அகச் சான்றுகள். நம்பியாண்டார் நம்பிகளும் இதனைப் போற்றுவர்.

''தெண் கடலிற் பிணியன கல்மிதப்பித்தன.
நாவுக்கரசர் பிரான்றன் அருந்தமிழே''.

(திருமுறை - 4, த.ஆ. ப. 277)
திருமுறை - 11 திருத்தொண்டர் திருவந்தாதி

திருவைந்தெழுத்து

சிவபிரானைச் சரியை, கிரியை, யோகங்களால் வழிபட்டு வினை நீங்கப் பெறுதற்கும், பின்னர்ச் சிவஞானம் பெற்றுச் சிவனை அனுபவமாகக்

கண்டு, அந்நிலையே நிலைத்து நிற்றற்கும் துணையாய் இருப்பது திருவைந்தெழுத்தே என்பது சிவநெறியின் முடிந்த முடிவு. அதனை அப்பரடிகள் மிக நன்றாக வலியுறுத்தியருளிச் செய்துள்ளார். நமச்சிவாயத் திருப்பதிகம் அதன் கருவூலமாகும். அது நாவுக்கரசர், தமது அனுபவத்தில் வைத்து அருளிச் செய்தது.

'நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே'. (5.90.2)

இன்னும், திருவைந்தெழுத்தைச் 'சிகாரம் முதலாக வைத்து ஓதுதல் சிறந்தது' என்பர். அதனையும் நாயனார்,

"வைத்த பொருள் நமக் காமென்று மனத்தடைத்துச்
சித்தம் ஒருக்கிச் சிவாய நமஎன் றிருக்கினல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வா ரவர் பாதிரிப்புலியூர்
அத்த னருள் பெற லாமோ அறிவிலாப் பேதை நெஞ்சே"
(4.94.5)

என்று அருளிச் செய்தார். இது சுவாமிகள் நமச்சிவாயத் திருப்பதிகத்தை அருளிச்செய்து, கல்லே மிதப்பாகக் கடலைக் கடந்து கரையேறியவுடன் அருளிச் செய்ததாதல் அறியத்தக்கது. (திருமுறை - 6, த. ஆ. பதிப்பு ப. 130).

மறையின் முதல்வன் மறையில் கூறிய சொற்களின் பொருள் வடிவானவனும், பரஞ்சோதியும், அழியாதவிட்டுலகின்னாய் உள்ள அம்மையப்பனின் பொலிவும் செம்மையும் மிக்க திருவடிகள் இரண்டையும் சேர்த்து உள்ளம் பொருந்த உச்சிமேல் கைகுவித்து வணங்கினால் கல்லைத் துணையாகச் சேர்த்து அதனோடு இணைத்துக் கடலில் தள்ளிவிட்டாலும் சிவனுடைய திருவைந்தெழுத்தாகிய திருவடிகளே நம்மைக் காப்பதாகும். (4.11.1)

பூக்களுள் தாமரையும், அரன் ஆடும் அஞ்சு (பஞ்சகவ்வியம்) பசுவிற்கும், செங்கோல் வளையாமையாகிய ஆட்சி, மன்னற்கும் விலை மதிப்பற்ற அணிகலன்போல நாவிற்கு நமச்சிவாய மந்திரமே அருங்கலனாகும். (4.11.2)

விண்ணளவும் மிகுமாறு அடுக்கி வைக்கப்பட்ட விறகுக்குவி யிலிடையே கொடிய நெருப்பு அவற்றை உண்பதற்கு உள்ளே புகுந்தால் எல்லா விறகுகளையும் எரித்து எல்லாம் சாம்பலாகும். அதுபோல் மக்கள் பல பிறவியிலும் பலகாலும் பண்ணிப்பயின்ற பாவங்களையெல்லாம்

முற்றிலும் ஒழிக்க வல்லது சிவனின் நாமம். நமச்சிவாய மந்திரத்தை நினைத்து ஓத வேண்டும். (4.11.3)

எவ்வளவு துன்பம் வந்தாலும், துன்பத்திற்குக் காரணம் நாம் செய்த தீவினையாதலாலும், உயிர்களுக்கு வினையை ஊட்டுபவன் சிவனே யாதலாலும், நாம் சிவனைத் தவிர மற்றச் சிறு தெய்வங்களிடம் போய்த் துன்பத்தைப் போக்கு என்று கேட்கக்கூடாது. இராவணனைப் போல் மலையின்கீழ் அகப்பட்டுத் துன்புற்றுக் கிடந்தாலும் அருளினால் நமக்கு ஏற்படும் நடுக்கத்தை நீக்குவது திருவைந்தெழுத்தாகும். (4.11.4)

திருநீறு யாவர்க்கும் மெய்ப்பொருளை நினைப்பிக்கும் அருட்பொருள் ஆதலின், அதனினும் அருங்கலம் பிறிதில்லை. 'பராவணம் ஆவது நீறு' ஆதலின் அதுவே வண்ணம் நிறைந்த அருங்கலம். நான்மறை ஆறங்கம் ஓதுதல், அந்தணர்களுக்குச் சிறந்த அணியாகும். பிறைக்குச் சிவனுடைய திருமுடி சிறந்த அணியாகும். எம்மைப் போன்ற அடியவர்களுக்குச் சிறந்த அணி திருவைத்தெழுத்தாகும். 'சைவ பூடணம்' எனப்படும் திருநீறும் கண்டிகையும் புறத்து அருங்கலம். திருவைந்தெழுத்து நாவினுக்கும் அகத்தினுக்கும் உயிர்க்கும் உணர்விற்கும் உரிய அகத்து அருங்கலம். (4.11.5)

மனக்கோட்டம் இல்லாது எல்லோர்க்கும் நன்மையைச் செய்யும் சிவன் தன்னையே பற்றுக் கோடாகச் சார்ந்த அடியவர்களைத் தவிர மற்றவர்களுக்கு உயர் நலன் செய்யான். அவர்களுக்கு நாள்தோறும் விரும்பியதனை நல்காது வினைப்பயன்படி நுகருமாறு விடுப்பான். உயர்ந்த குடும்பத்தில் அடியவர்கள் பிறந்தவர்கள் அல்லாராயினும் நற்குலத்துக்குரிய நன்மைகளை மிகவும் கொடுப்பது எம்பெருமானுடைய திருநாமமாகும். (4.11.6)

திருவைந்தெழுத்து வீடுபேற்றைத் தரவல்லது. திருநாவுக்கரசர் இச்சிறப்பினைத் தம் அநுபவமாகக் கீழ் வருமாறு தெரிவிக்கிறார். "முழு முதலே, சிவநெறியை, அமரர் தொழும் நாயகனைக் கூடினர் விழுமிய தொண்டர்கள். கூடிச் சென்றவுடனே யானும் ஓடினேன். ஓடிச் சென்று உருவம் கண்டேன். கண்டவுடன் நாடினேன் நமசிவாய மந்திரத்தை, நாடிய என்னை அதுவும் நாடிற்று'' என்பது அவரது அனுபவம்.

திருவைந்தெழுத்துள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளைக் குறித்தலின், அதனதன் உருவம் தெரிந்து கணித்தல் வேண்டும். "உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன்' (4.94.6) என்பர் அப்பரடிகள். அவர் பயின்ற நாமம் 'சிவாயநம' என்பதாகும். இதனைச் 'சிவாயநம என்று நீறணிந்தேன்' என்பதனால் அறியலாம். (4.11.7)

ஒப்பற்ற விளக்கு

திருவைந்தெழுத்து ஓர் ஒப்பற்ற விளக்கு. சுட்டறிவு இறந்து ஞானத்தான் நேயத்தைக் கண்டு எங்கும் தானாக நிட்டை கூடிய வழியும், தொன்று தொட்டு வரும் ஏகதேசப் பழக்கம் பற்றிப் புறத்தே விடயத்திற் சென்று பற்றுவதாகிய தம் அறிவை அங்ஙனம் செல்லாது மடக்கி, அகத்தே ஒரு குறியின்கண் நிறுத்தி, நிட்டை கூறி நிற்கும் முறைமையை அஞ்செழுத்து ஓதும் முறைமையில் வைத்துக் கண்டு சிந்திக்கச் சிந்திக்கச் சிவதரிசனத்தை விளக்குவதால் விளக்கு எனப்பட்டது என்பார் அருள்திரு தொண்டைமண்டலம் 229-ஆவது ஆதீனம் ஞானப்பிரகாச சுவாமிகள். அஃது அக விளக்கு. உயிர்க்குத் துச்சில் உடல். அதன் உள்ளே விளங்கி விளக்கும் விளக்கு. அகமாகிய இல்லின் விளக்குமாம். புறத்து இருளைப் போக்கும் விளக்கே போல் அகத்து இருளை அழிப்பது, சொல்லின் அகத்தும் நின்று விளக்குவது. சோதி உள்ளது. ஏனைய சோதிகளுக்கு அச்சோதி முன் இல்லாது பின் வந்ததாம். திருவைந்தெழுத்தின் சோதி முக்காலத்தும் உள்ளது. உயிர்கள் எண்ணில்லாதன. அவற்றின் அகமெல்லாம் விளக்கும் ஒளியாதலின் 'பல்லக விளக்கு' ஆயிற்று. எல்லாச் சமயத்தாரும் தம்மையறியாமலே காண நிற்பது. அழியாதது யகாரம், நகாரம், மகாரம் மூன்றில் மற்றெல்லாச் சமயங்களும் அடங்கி விடுகின்றன.

நல்லக விளக்கு

வகாரம், சிகாரம் இரண்டும் சைவத்திற்கே உரிய தனிச் சிறப்புடையன. ஞானம் நிறைந்த அகமே நல்லகம். 'ஆன்மாப் பாசம் ஒருவி ஞானக் கண்ணினிற் பதியைச் சிந்தை நாடுக' என விதித்த விதியின்படியே ஓதும் திறத்திற்குரியது, முத்தி பஞ்சாக்கரம். அஞ்செழுத்து ஓதும் முறையால் ஒரு குறியின் வைத்து அன்றி முதல்வனைக் காண்டல் செல்லாது (மாபாடியம், நூ. 9, அதி.3). வாத்னை வய்த்தால் புறத்திற் சென்று பற்றும் ஏகதேச அறிவைப் பற்றறத் துடைத்துப் பூரண நிலையிற் கொண்டு செல்வதால் அது வாசனையை நீக்குவதற்குரிய சிறந்த சாதனமாம். உணர்விற்கு விடயமாகக் காணப்படும் பசு பாசங்களோடு ஒப்ப வேறு காணப்படாத பதிப்பொருளாகிய முதல்வனைத் தன் அகத்தின்கண் அஞ்செழுத்தும் ஓதும் முறையால் காணும் ஆயின், கோலை நட்டுக் கயிற்றினால் சுற்றிக் கடையவே விறகினின்றும் தோன்றும் தீயைப் போல் அம்முதல்வன் அங்குத் தோன்றி அறிவிற்கு அறிவாய் விளங்கி நிற்கும். ஆதலின், 'நல்லக விளக்கு' எனப்பட்டது. (4.11.8)

வீடுபேற்றுக்கு வழி

முந்துற முன்னம் வீடுபேற்றிற்கு வழிகாட்டிய முதல்வன் முக்கட் பிரானாவான். அவன் அருளிய வழியே உறுதியான பற்றுக் கோடாவது,

அந்த வழியே சென்று அப்பெருமானுடைய திருவடிகளை அடைபவருக்கு எல்லாம், சிறந்த வழியாக உதவுவது திருவைந்தெழுத்து மந்திரமே. உயிர்கட்கு வீடுபேறு உண்டாக வேண்டின், முன்னெறியாகிய முக்கண்ணன் நெறி (முதல்வன்றன் நெறியே) சரணாதல் திண்ணம். அந்நெறியே சென்று அங்கு அடைந்தவர் எல்லார்க்கும் நமச்சிவாயவே நன்னெறியாவது. நன்மையெனப்படுவன எல்லாவற்றுள்ளும் சிறந்த நன்மை எனப்படுவது வீடுபேறு என்பர். அதனைத் தலைப்படுதற்கு ஏதுவாய்ச் சிறந்த நெறியாகலின், ஞானம் 'நன்னெறி' எனப்பட்டது. (மாபாடியம் சூ. 8). ஞானம் வேறு நமசிவாயம் வேறு ஆயினும், ஞானம் விளங்கி நேயம் காட்சிப்பட்ட இடத்தும் பயிற்சி வயத்தான் முன்னர்த் தான் நோக்கிய பாசத்தை நோக்கும் நோக்கமாகிய வாசனையை நீக்குதற்குரிய சாதகம் ஆகிய திருவைந்தெழுத்தும் ஞானத்திற்கு ஒப்பாதலின் 'நன்னெறி'யாயிற்று (மாபாடியம் சூ. 9).

துயரைத் தடுக்கும் தடைச்சுவர்

இத்தகைய சிறப்புகளையுடைய திருவைந்தெழுத்து நலன்கள் தருவதோடு துயரம் வராமல் காப்பதும் ஆகும். இதனை நமச்சிவாயப் பதிகத்தின் இறுதிப் பாடல் உணர்த்துகிறது. மான் குட்டியைக் கையிலேந்திய, பார்வதி பாகனுடைய பூமாலைகள் சார்த்தப் பெற்ற திருவடிகளை உள்ளம் பொருந்தக் கைதொழுவதற்கு நாவை இணைந்து தழுவிய திருவைந்தெழுத்தைப் பற்றிய இப்பத்துப் பாடல்களை வழி படவல்ல அடியவர்களுக்கு எத்தகைய துயரங்களும் ஏற்படமாட்டா" என்கிறார் திருநாவுக்கரசர்.

"மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்
தேத்தவல்லார் தமக்கிடுக் கணில்லையே" (4.11.10)

100. நான்காம் திருமுறையில் தில்லைக்கோயில்

கோ. ராதிகா, பறங்கிப்பேட்டை

சைவ சமயத்தில், சமயக் குரவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் நால்வர். அவர்களுள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகியோரால் அருளிச் செய்யப்பெற்ற திருப்பாடல்கள், தேவாரம் எனவும், திருநாவுக்கரசரால் இதில் பாடப்பெற்ற திருமுறைகளாக நான்கு, ஐந்து, ஆறு ஆகியவை காணப்படுகின்றன.

இவற்றுள் நான்காம் திருமுறையில் அமைந்துள்ள ஐம்பது திருத்தலங்களின் வரிசையில் இருபத்தைந்தாம் இடத்திலுள்ள தில்லைக் கோயில் பற்றிய நாவுக்கரசரின் பாடல்களைக் காண்போம்.

திருநாவுக்கரசர் பற்றிய ஆன்றோர் கருத்து

இந்நாவுக்கரசரின் முதல் திருப்பதிகத்தைச் செவிமடுத்து, மகிழ்ந்து, சூலைநோயைத் தவிர்த்த சிவபெருமான், "பாவுற்றலர் செந்தமிழின் சொல்வளப் பதிகத் தொடை பான்மையினால் நாவுக்கரசு என்று உலகு ஏழினும் நின் நல்நாமம் நயப்புற மன்னுக!" என அருளிச் செய்யலானார்.

நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்த திருத்தொண்டர் திருவந்தாதியில்,

"தூற்றவன் ஆமூரில் நாவுக்கரசெனும் தூமணியே"

(11-ம் திருமுறை, பாடல் - 24)

எனும் பாடலில் சிவனின் திருப்பாதம் தலையில் பட நற்றவம் பெற்ற சிறப்பிற்குரியவராகக் கருதப்படுகிறது.

நாவுக்கரசர், மெய்யுற்ற திருப்பணி செய்பவராய், விரவும் சிவசின்னம் விளங்கிடத் தியான உணர்வுடன், திகழும் உழவாரப்படை கைக்கொண்டு இருந்தனர் என்பது சேக்கிழார் சுவாமிகளின் திருவாக்காகச் சொல்லப்படுகிறது.

நான்காம் திருமுறையின் உட்பொருள்

நாவுக்கரசு சுவாமிகள் அருளியதான 4-ஆம் திருமுறையில் கூறப் பட்டுள்ள சாராம்சமானது, "இவ்வுயிரானது, இவ்வுலகில் வினையின் காரணமாகப் பிறவி கொண்டுள்ளது. இப்பிறவியானது இறைவன் அருளால் ஏற்பட்டது. இப்பிறவியை வாய்ப்பாகக் கொண்டு இறைவனை

வணங்கி, இனிப் பிறவாமையாகிய பெருநிலையை அடையவேண்டும் என்பதாகும்'' என்பதை நாவுக்கரசர் பாடலின் மூலம் அறியலாம்.

தில்லைத் திருத்தல விளக்கம்

நான்காம் திருமுறையில் 50 திருத்தலங்களைப் பற்றி ஓதும் 113 திருப்பதிகங்களில் 1070 திருப்பாடல்கள் உள்ளன. அவற்றுள் தில்லை பற்றி ஓதும் திருப்பதிகங்களாக 4 காணப்படுகின்றன. தில்லையைப் பற்றி மட்டும் 41 பாடல்களை நாவுக்கரசு சுவாமிகள் பாடியருளியுள்ளார்.

காவிரி வடகரைத்தலம் 63-இல், இது முதலாவது திருத்தலம். சிதம்பரம் என வழங்கப்படுவது, மூவர் பெருமக்கள் பாடல் பெற்றது. இக்கோயிலின் பெயர், தில்லை பஞ்சசபைகளுள் இது பொற்சபை; பஞ்ச பூதத் தலங்களுள் இது ஆகாயம்.

சுவாமி : திருமூலட்டநாதர், அம்பிகை : உமையம்மை, சுவாமி : நடராசர், சபாநாயகர், அம்பிகை : சிவகாமசுந்தரி, தலமரம் : தில்லை, ஆல், தீர்த்தம் : சிவகங்கை முதலியன.

பஞ்சபூதத் தலங்களுள் ஒன்றாகப் பூமியில் பொலிதலைப் பூந்தில்லை என்றேத்தப் பெற்றது. நெஞ்சில் கருதி ஏத்தும் சிறப்பும் திருவடியைத் தொழுது ஏத்தும் பேறும் நனிவிளங்கும் நிலையை, ''கருது சிற்றம்பலத்தே அடிகழல் ஆர்க்க'' எனும் திருமுறை (பாடல் - 220) நாவுக்கரசரால் பாடப்பெற்றது.

திருக்காட்சி விளக்கம்

'அஞ்ஞானத்தின் இருள் விலகிட' ஈசன் ஆனந்த நடேசராய்த் திருநடனம் புரிதலையும், அதனால் அஞ்ஞானத்தின் இருள்விலகி ஞானத்தீ விளங்குதலையும் உணர்த்தும் தன்மையுடையதாக, ''துஞ்ச அடைஇருள் கிழியத்துளங்கு எரி ஆடுமாறே'' (பாடல் - 218) எனப் பாடினார்.

'ஒருடலில் ஈருடல் கொண்ட ஈசன்' உமாதேவியை ஒருபாகமாக உடையவர், திருமாலை ஒருபாகமாகக் கொண்டு விளங்குபவர் என்றும் (பாடல்கள் - 221, 226) வயல்களின் வளம்மிக்க தில்லையின் காண் திகழ்ந்து மேவும் சிற்றம்பலத்தில் கைகளை வீசிக் கனலை ஏந்தி ஆடுபவராகக் காட்சி தருகிறார் என்றார். மேலும்,

''ஒருடம்பு இருவர் ஆகிய ஒளிநிலா வெறிக்கும் சென்னிப்
பாரிடம் பணிசெய்யப் பயின்ற எம்பரமமூர்த்தி''

(பாடல் - 223)

ஈசன், ஒருடம்பை உடையவர் என்பவராய்ச் சிவசக்தியாய் அர்த்தநாரி என இருவண்ணத்தில் திருக்கோலம் தாங்கியவராய்த் தில்லைச் சிற்றம்பலத்தில் எரியேந்தித் திருநடனம் புரிபவர் என்றும் சுட்டுகிறார்.

'விருத்தனாய் பாலனாய்' ஈசன், விருத்தனாகவும், பாலனாகவும் விளங்குபவர் எனவும் தில்லைச் சிற்றம்பலத்தில் உமாதேவியோடு திகழ்ந்து, கையில் தீச்சட்டியோடு நடனம் புரிபவராகவும் காட்சி புரிந்தார் என்பதை,

"விருத்தனாய்ப் பாலனாகி விரிநிலா வெறிக்கும் சென்னி
....
....
அருத்தமா மேனிதன்னோடு அனலெரி யாடுமாறே"

எனும் திருமுறை (பாடல் - 226-ல்) மூலமாகவும், 227-ம் பாடலில்,

"பாலனாய் விருத்தனாகிப் பனிநிலா எறிக்கும் சென்னிக்
காலனைக் காலாற் காய்ந்த கடவுளார்"

என்பார்.

நாவுக்கரசர் ஈசன், பாலனாகியும், விருத்தனாகியும் திருக்கோலம் தாங்கித் திருவிளையாடல் புரிபவர் எனவும், குளிர்ந்த நிலவொளி வீசுகின்ற பிறைச் சந்திரனைச் சூடியோனுமாகிய இறைவனை மார்க்கண்டேயருக்காக இயமனைக் காலால் காய்ந்தவர் என்றும் இக்காட்சியைக் கண்ட நாவுக்கரசர் நம் கண்களுக்கு விருந்தாக்கியுள்ளார்.

'அதிசயமாய் நின்ற ஈசன்' தண்ணொளி பரவும் திங்களின் ஒளியும் திருக்கரத்தில் தீ ஏந்தித் திருநடனம் புரியும் தன்மை இராவணனின் தோள் நெரியுமாறு திருப்பாத விரலால் அழுத்தினார். இதனை, நாவுக்கரசர் அதிசயம் எனக் குறிக்கும் பாங்கினில், சிற்றம்பலத்தே அதிசயம் போல நின்று அனலெரியாடுமாறே என்றும் ஈசனின் திருவடிவ மானது, அதிசயமாக விளங்கி உள்ளத்தை ஈர்த்தலை உணர்த்துகிறார்.

தரிசிக்க முத்திப்பேறு

"வையகந் தன்னில்மிக்க மல்குசிற் றம்பலத்தே
பையநுன் னாடல்காண்பான் பரமநான் வந்தவாறே"

எனும் திருமுறைப் பாடல் 235-ல் நாவுக்கரசுப் பெருமான் தாம் கொண்ட பற்றினை எல்லாம் நீக்கிப் புறம்போகல் ஒட்டாதபடி அடிமை செய்வதற்கு, என் ஐயனே! ஆதியே! ஆதிமூர்த்தி! அருள் புரிவீராக எனவும்,

எல்லாச் சிறப்பும் மிகுந்த இப்பூவுலகில் திகழும் சிற்றம்பலத்தில் தேவரீரின் திருநடனத்தைக் கண்டு முக்திபெற வந்தேன் எனவும் கூறுகின்றார்.

"தினைத்தனை வேதங்குன்றாத் தில்லைச்சிற் றம்பலத்தே"

எனும் பாடல் 236-ல் வேதநெறியிலிருந்து சிறிதளவும் தவறாது விளங்கும் தில்லைச் சிற்றம்பலத்தில் ஆடல்புரியும் நாதனே! தேவரீரின் நடனக் காட்சியில் விளங்கும் அருளின் இலயத்தைக் காண்பதன் பொருட்டு யான் வந்தேன் அருள்புரிவீராக எனப் பாடுகிறார்.

பேரானந்தத்தைத் தரிசிப்போர்க்கு வழங்கும் வெற்றியானது "நவின்ற சிற்றம்பலம்" எனப் பாடல் - 219-ல் பாடப்பெற்றது. இத்தலம் தரிசிக்க முத்திப்பேறு வழங்கும் என்பதை இத்தேவாரப் பாடலால் அறியலாம்.

"பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி" எனும் இத்திருப்பாடலானது நடராசப் பெருமானைத் தரிசனம் செய்கின்ற அன்பர்களுக்கு அருள் வழங்கிடும் சிறப்பினை உணர்த்திற்று. மேலும் இறைவனைப் பக்தனாய்ப் பாடியழைக்கமாட்டேன் என்றும் இத்தலம் தரிசித்த உடன் முக்தி தரும் ஈசனின் அன்புள்ளத்தையும் வெளிக்காட்டும் தில்லைத் திருத்தலமாகும் என்கிறார்.

பிறவிப் பயனான தில்லை

நாவுக்கரசர் நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தாகிய ஒண்பொருளானது பிற்காலத்திற்காகச் சேர்த்து வைக்கப்பெறும் பொருளாகும் என்றெண்ணித் தியானித்தேன், அச்சத்தை ஒழித்தேன். இத்திருநாமத்திற் குரிய ஈசனை தில்லையில் கண்ட என் கண்கள் பிறிதொன்றைக் காண்பதற்கு யாது உள்ளது! (பாடல்கள்-772, 773, 775) என்கிறார்.

ஈசன், என்னுடைய மலமாகிய ஊனத்தை நீக்கி, உலகெலாம் அறியுமாறு ஆட்கொண்டவர், எனவும் தில்லைச் சிற்றம்பலத்தில் மேவும் எம்தலைவர் (பாடல் - 775) என்றும் இறைவனைப் பாதாதி கேசமாகவும், கண்ட திருக்கோலக் காட்சியானது,

பாடல் - 771	-	திருவடி	ந
பாடல் - 773	-	உந்தி	ம
பாடல் - 775	-	ஏனத்துஎயிறு - மார்பு	சி
பாடல் - 776	-	திருமுகம்	வ
பாடல் - 778	-	திருமுடி	ய

இப்பிறவியின் பயனாயிற்று என்றார்.

சிவனைச் சிந்தை ஒன்றி இருந்து நினைப்பீராக அது, பிறவி நோய் என்னும் ஊனத்தை விலக்கும் எனவும், (பாடல் - 783) இப்பிறவி யானது, நமக்கு வாய்த்த நற்பேறு என மதித்துப் பெருமை கொள்வீராக எனவும்,

தில்லை அம்பலக்கூத்தன், அப்பெருமானுக்கு அடிமை பூண்டு அன்புடையவனாக இருப்பதல்லவா நமக்குக் குழைந்து மேவும் பக்திமையாகும்! எனவும் (பாடல் - 784) பாடுகிறார்.

சிவபெருமான், என்னுடைய நெஞ்சில் குடிகொண்ட பெருமைதான் என்னே! எனவும் ஈசனின் திருவடியை ஏத்தித்தொழும் பத்தராக விழையும் பேரன்பால் எழுபிறப்பும் உனக்கு ஆட்செய்கின்றேன் (பாடல் - 787) எனவும் நாவுக்கரசர் பாடி மகிழ்கின்றார்.

திருநாவுக்கரசர் தேவாரம் 4-ம் திருமுறையின் வாயிலாக இப்பிறவி யானது இறைவனால் அளிக்கப்பட்டது என்றும் இப்பிறவியைக் கொண்டே தில்லைச் சிற்றம்பலத்தில் திருநடனம் புரியும் ஈசனைக் கண்டு தரிசிக்க வேண்டும் என்றும், எத்தனை பிறப்பெடுப்பினும் அவ்விறைவனை மறவாதிருக்க வேண்டுமென்றும் பெறப்படுகிறது. இதன் வாயிலாகத் தில்லைக் கோயிலில் இறைவன் திருநடனம் புரியும் காட்சியையும் திருநாவுக்கரசர் பெற்ற பேற்றினையும் இங்கே அறிய முடிகிறது.

101. அப்பர் பெருமானின் சைவநெறி

என். ருக்மணி அம்மாள், புதுவை.

அப்பர் பெருமானின் தோற்றம்

முற்காலத்தில் மூவேந்தர் ஆண்ட நாளில் 'நடுநாடு' என்றழைக்கப் பட்டதில் ஒரு பகுதி தென்னாற்காடு மாவட்டம் ஆகும். இம்மாவட்டத்தில், பெண்ணையாற்றின் கரையோரம் அமைந்தது 'திருவாமூர்' என்னும் சிற்றூர். இவ்வூரிலே ஒழுக்கமான, உயர்குடியான வேளாளக் குலத்திலே பிறந்தக் குடிமகனார் புகழனார்க்கும் அவரது மனைவியார், மனைக்கும் மனதுக்கும் இனியவராக விளங்கிய 'மாதினி'யார்க்கும் மகவாக வந்து உதித்தவர். இவருக்கு முன்பிறந்த இவரது தமக்கையார் 'திலகவதி' என்னும் மாதரசி. இளமையிலே இவரது திருநாமம் 'மருள்நீக்கியார்'. மக்களின் மன இருளைப் போக்கவந்த புனிதரின் பெயர் மருள்நீக்கியார். மிகுந்த பொருத்தமான பெயராகும். தமக்கை திலகவதியாருக்குத் திருமணம் முடிக்க எண்ணம் கொண்ட பெற்றோர், தம் குலத்திற்கும், குடிக்கும் ஒத்தவராயும், இறைபக்தி உடையவராயும், அரசனிடத்திலே படைத்தளபதியாக உள்ளவருமான 'கலிப்பகை'யாருக்கு கடிமனம் செய்து கொடுக்க நிச்சயித்தனர்.

இந்நிலையில், அருமை மகளின் திருமணத்தை நடத்திப் பார்த்து மகிழ்வு கொள்ள இறைவன் திருவருள் இல்லாமையால் புகழனார் இறைவனடி சேர்ந்தார். அந்நாளைய வழக்கப்படி கணவனிறந்தப்பின் உயிர்வாழ விரும்பாத தாயான மாதினியாரும் உடன் இறந்தார்.

அந்நிலையில் ''துன்பம் வந்தால் தொடர்ந்து வரும்'' என்பதற்கேற்ப அரச ஆணையின் நிமித்தமாகப் போருக்குச் சென்ற கலிப்பகையார், போரிலே வீரமரணம் எய்தினார். தனது திருமணம் இரங்கற்படுவிதமாக நின்றுபோனதால் திலகவதியம்மையார் மனமுடைந்துத் தாமும் மரணத்தைத் தழுவ முயன்றார்.

அதுபோது இளவலான மருள்நீக்கியார் தமக்கையின் திருவடிகளிலே வீழ்ந்து அழுது, அக்காய்! தங்களின் அன்பும், ஆதரவும் உண்டேன் யான் உயிர் வாழ்வேன். இன்றேல், உமக்கு முன் நான் இறப்பேன்! என்று கதறும் காலை திலகவதியார் மனம்மாறி, உயிர்துறக்கும் எண்ணம் விட்டு தம்பிக்காக வாழ்வதாகக் கூறி 'இளந்துறவு' மேற்கொண்டார்.

சின்னாளில் திருவாரூருக்கு அடுத்த பண்ருட்டி எனும் சிற்றூர் அருகிலுள்ள திருவதிகை என்னும் தலத்தை அடைந்து அதிகை உறையும் வீரட்டேஸ்வரனே துணை என்று அவருக்கும், அம்மை பெரியநாயகிக்கும் ஆலயத் தொண்டு செய்து வரலானார். இதுபோது, மருள்நீக்கியார் ஆன்மாக்கள் உய்யும் சிவமதமாம் சைவ மதம் விட்டு "கொல்லாமை மறைந்துறையும்" சமண மதத்தை நல்ல சமயம் எனக் கருதி அதைச் சார்ந்தார். பாடலிபுத்திரம் சேர்ந்தார்.

சமண மதத்தைத் தழுவிய மருள்நீக்கியார், தனது இனிய நாமமும் துறந்தார். "தருமசேனர்" என்ற பெயரோடு சமணர்களின் அன்புக்கும் தோழமைக்கும் உகந்தவராக விளங்கினார்.

பொல்லாச் சமணர்களும் அவரைத் தம் நெறிமுறைகளுக்குட் பகுத்தி தங்களின் தலைவராக ஏற்றுக் கொண்டார்கள். அவரும் சிறந்த தலைவராக அம்மதத்திலே மேம்பட்டு விளங்கினார்.

அப்பரின் பக்தி

தன்பொருட்டு உயிர் வாழ இசைந்த தமக்கை திலகவதியாரின், இசைவுக்கு மாறாக சமணத்தைத் தழுவியத் தன் சகோதரனை நினைத்து அம்மையார் கலங்காத நாளில்லை! வேதனையடையாத வேளையில்லை! அனைத்துத் துயரங்களையும் அதிகையானிடம் கூறி முறையிடாத நேரமில்லை.

"அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால் இறைவன்
வாளாங்கிருப்பாரோ?"

வேளை வந்தது! வீரட்டேசன் தருமசேனரைத் தடுத்தாட்கொள்ளும் வேளை வந்தது! அதிகையான் தருமசேனரின் வயிற்றிலே கடுமையான சூலைநோய் தோன்றச் செய்தான். கொடுமையான வலி.

குடரோடு முடக்கி, இடக்கி; இரவும் பகலும் 'கூற்று' எனவாறு துடித்திட வைத்த குன்ம நோய் தாங்காது வருந்தினார், அரற்றினார்.

சூலை நோயை மயிற்பீலி கொண்டு விசிறியும், தடவியும், மந்திர தந்திரங்கள் சபித்தும் போக்க நினைத்த சமணர்களைப் "போக்குக் காட்டியது - அப்பொல்லாத நோய்'.

அல்லும் பகலும் நோய்க் கொடுமையால் தவித்துத் தளர்ந்தவராய் இருந்தவர், தமக்கையின் திருஉள்ளப்படி அவரது ஆணையை மேற்கொண்டு திருவதிகை வருகிறார்.

தமக்கையின் திரு உள்ளப்படி, வீரட்டேஸ்வரன் சன்னதியில் சைவ நெறியை மேற்கொள்ளுகிறார். சூலை நோய் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிட்டது!

அன்று முதல் வேதநெறித் தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க வந்த சைவ சமய குரவருள் ஒருவராக மேம்பட்டு விளங்கினார்.

தமக்கையின் அன்பாணைப்படித் திருநீறு அணிந்தும், திரு உத்திராக்க மணிமாலை அணிந்தும் திருவைந்தெழுத்து ஓதியும் சீவதீக்கைப் பெற்று விளங்கினார். இறைவனிடம் மாறாத பக்தி கொண்டவரானார்

ஈன்றாளுமாய் 'எனக்கு எந்தையுமாய்
உடன் தோன்றினராய் என்று தனக்கு எல்லா
உறவுகளும் இறைவனே'

என்று பாடுகிறார்.

தனக்கு சமணர்களால் கொடுந்துன்பம் உண்டான போதெல்லாம் இறைவனே துணை ஈசனே புகலிடம் என்ற பக்தி வைராக்கியத்தோடு வாழ்ந்தார்.

அப்பரின் தொண்டு

''மனுஷ்யானாம் சகஸ்ரேஷீ
கஸ்தியததி ஸித்தமே
யததாம்பி ஸித்தனாம்
கஸ்ஸின்மாம் வேதத்தி தத்வத்''

(பகவத் கீதை - அத்தியாயம் - 7, பாதம் - 3, பூரணத்தின் ஞானம்)

பொருள் : பல்லாயிரக்கணக்கான மக்களுள் பக்குவமடைய முயற்சி செய்பவர் யாரேனும் ஒருவரே! அவ்வாறு பக்குவமடைந்த வரிலும் கூட யாரேனும் ஒருவரே இறைவனாம் பரம்பொருளை உள்ளது உள்ளபடி அறிவார்! மனிதர்களிலே, பெரும்பாலானோர் உண்ணுதல், உறங்குதல், இன்பம் காணல், உயிர் வாழ்தல் போன்ற மிருக இயல்புகளிலே ஈடுபாடு கொள்கின்றனர்.

அவர்களுக்கு உடல், ஆன்மா, இறைபக்தி என்பவற்றைப் போன்ற ஆன்மீக விஷயங்களில் எவ்வித ஆர்வமுமில்லை. இதைத்தான் மணிவாசகப் பெருமானும்,

''அவனருளாலே அவன்தாள் வணங்கி''

என்று பாடுகிறார்.

ஆக எஞ்சியுள்ள சிலரிலும் எங்கோ ஒருவரே இறைவனிடம் தூய பக்தி செலுத்துகிறார்.

அத்தகைய தூய பக்திக்கு மகிழ்ந்து இறைவனும் அவனுக்குத் தன்னை உணர்த்துகிறார்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை பக்தியுள், அப்பர் கிரியை என்னும் இறைத் தொண்டினை மேற்கொண்டார். சிவத்தொண்டு மேற்கொண்டு உழவாரம் ஏற்றி இறையுறையும் ஆலயப்புறங்களிலேத் துப்புரவு செய்தும், சலம், பூவோடு தூப, தீபம் காட்டியும், பதிகம் பாடியும், வணங்கி வருகிறார். இதையே நமக்கும்,

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பார் ஆகில்
தீவண்ணர் திறம் ஒருகால் பேசார் ஆகில்
ஒருகாலம் திருக்கோயில் சூழார் ஆகில்
உண்பதற்கு முன் மலர்பறித்திட்டு உண்ணார் ஆகில்
அருநோய்கள் கெடவெண்ணீறு அணியார் ஆகில்
அறி அற்றார் பிறந்தவாறு ஏதோ என்னில்
பெரு நோய்கள் மிக நலியப் பெயர்த்தும்
செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே

என்று அறிவுறுத்துகிறார். மனம், மொழி, காயம் இவைகளால் வணங்கு முறையையும் தமதுத் திருத்தாண்டகத்தில் அழகுற நமக்கு சொல்லித் தருகிறார்.

அப்பரின் பதிகங்கள்

அப்பரது பதிகங்கள் இறைவனது அதீத குணநலன்களையும், அருள் திறத்தையும் சுட்டிக்காட்டுகின்றன. திருவதிகையில் தித்திக்கும் தேன் தமிழால் தேவாரம் பாடக்கேட்டு மகிழ்ந்த வீரட்டேசன் "நாவுக்கரசன் நீ" என்று அன்போடு வாழ்த்துகிறார்.

நாவுக்கரசர் ஈசன்பால் கொண்ட நேசத்தைப் பல பதிகங்களில் விளக்குகிறார்.

அரியானை அந்தணர் தம்சிந்தை யானை
அருமறையின் அகத்தானை
அணுவறியாத்தத்துவனை தேனைப்பாலைத்
திகழ் ஒளியைத் தேவர்கள் தம் கோனை - மற்றைக்
கரியானை, நான்முகனை, கனலைக் காற்றைக்
குரைகடலை, குலவரையைக் கலத்துநின்றப் பெரியானை
பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத
நாளெல்லாம் பிறவா நாளே!

என்று அவனது உயர்வை மெய்யுணர்ந்துப் பாடுகிறார்.

நாவுக்கரசரின் தேவாரப் பாடல்கள் 4,5,6 திருமறைகளாக சைவத்தில் கொள்ளப்பட்டிருக்கிறது. நாவுக்கரசரின் பதிகங்கள் ஏழ் எழுநூறு (7+700) அதாவது 49,000 என்று நம்பியாண்டார் நம்பிகள் வகுத்துரைப்பதி லிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. எனினும், இப்போது உள்ளது

சுமார் 312 (முன்னூற்று பனிரெண்டு) பதிகங்களே என்பதை அறியும்போது சைவ சமயத்தின் துர்பாக்கியத்தை எண்ணி வருந்த வேண்டியிருக்கிறது.

அவரது பதிகங்களில் அந்நாளைய நம் தேசத்தின் இயற்கை வனப்புகளை, அரசர்களின் ஆட்சித் திறத்தை, மக்களின் நாகரீகத்தை, பக்தியின் மேன்மையை, சைவநெறியின் தத்துவங்களை சிவனடியார் களிடம் அவருக்குள்ள மதிப்பை, நட்பை அறிய முடிகிறது. மேலும், வாழ்க்கை நிலையாமை, இறைபக்தியால் வரும் ஞானம், வைராக்கியம் இவற்றால் வரும் நற்பேறு இவைகளையும் காண முடிகிறது.

அப்பரின் சைவ நெறி

நாவுக்கரச பெருமான் திருவதிகையில் சைவநெறி மேற்கொண்டதி லிருந்து சிறிதும் நெறி பிறழ்ந்தார் இல்லை. சைவ நெறியின் தத்துவங் களான எளியத் தோற்றம், திருநீறு அணிதல், பக்தி, ஒழுக்கம் இறைத் தொண்டாற்றல், திருவைந்தெழுத்தோதுதல், அல்லும் பகலும் அவன் இணையடியேச் சரண் என்றிருத்தல் என்று சைவ நெறியின் இலக்கணமாகத் திகழ்ந்தார்.

சமணர்கள் அவரை நீற்றறையில் இட்டனர். நஞ்சமுது கொடுத்தனர், யானையைக்கொண்டு இடறச்செய்தனர், கல்லில் பூட்டிக் கடலில் இட்டனர் இவையனைத்தையும் இறையருளாலும், மாறாத உள்ள வைராக்கியத் தாலும் சீலமான சைவ நெறியாலும் வென்றார். எவ்விடர் யாராலும் வரினும் "நற்றுணை நமக்கு நமச்சிவாயமே" என்று உறுதிப்பாட்டுடன் விளங்கினார்.

விரிசடையான் விளங்கும் கோவில் தோறும், சென்று செந்தமிழால் அவனைப் பாடினார். சைவப் பெரியார்களின் தோழகை கொண்டுத் தலங்கள் தோறும் அவர்களுடன் சென்று பதிகங்கள் பாடி வணங்கினார். பல அற்புதங்கள் நிகழ்த்தினார். சம்மந்தப் பெருமானுடன் திருமறைக்காடு சென்று திருக்கதவைத் திறக்கப் பாடினார். திங்களூர் சென்று அப்பூதியடி களின் பக்தியையும் பாசத்தையும் உணர்ந்து மகிழ்ந்து அவரது இல்லத்தில் உணவறுந்த இசைந்தபோது வினைப் பயனாக அப்பூதி அடிகளின் மகனை அரவம் தீண்ட அதை அறிந்த பெருமான்,

"ஒன்றுகொலாம் அவர் சிந்தையுயர்வரை
ஒன்று கொலாமுயரும் மதி சூடுவர்
ஒன்றுகொலாமவர் வெண்டலை கையது
ஒன்றுகொலாமவர் ஊர்வது தானே"

என்று தொடங்கும் பதிகம் பாடி அம்மகனை உயிர்பெறச் செய்கிறார்.

நாட்டிலே பஞ்சம் வந்து மக்கள் நலிவடைவதைக் கண்டுக் காணப் பொறாமல் திருவீழிமிழலைப் பெருமானைப் பாடிப் பொற்காசுப் பெற்று மக்களின் பசிப்பிணிப் போக்க உதவுகிறார். அவருடைய தளராத வைராக்கியத்திற்கு ஒரு சான்று:

திருநாவுக்கரசு பெருமான் பழையாறை என்னும் தலத்தை அடைந்து பரமனைத் தரிசிக்க எண்ணும் கால் "வடதளி" என்னும் அக்கோயிலின் விமானம் சமணர்களால் மறைத்துக் கட்டப்பட்டிருப்பதைப் பற்றிக் கேள்விப்பட்டு மனம் பொறாதவராய், அவ்வாலயத்தின் ஓர் இடத்தில் அமர்ந்து அம்மறைப்பினை அகற்றிச் சிவபெருமானின் திருமேனி தரிசனம் கண்டு வணங்காமல் இவ்விடம் விட்டகலேன் என்று உண்ணா நோன்பு மேற்கொண்டார்.

பக்தனின் வைராக்கிய உணர்வினால் நெகிழ்ந்தப் பரமனும் பழையாறு மன்னன் கனவிலே தோன்றி, கோபுர மறைப்பைப் போக்கிட ஆணையிடுகிறான். வேந்தனும், தன்சேனைகளுடன் சென்று சமணர்களை வென்று பொய் விமானம் நீக்கி இறைவனின் மெய்விமானம் தோன்றும்படி செய்தான். அதாவது சமணர்களின் விமானத்தை அழித்து தன் ஆட்களைக் கொண்டுத் திருப்பணி செய்து புதிய கோபுரம் கட்டினான். தனக்கு இப்புனிதப் பணியை ஈந்தத் திருநாவுக்கரசரின் திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினான். இப்போது எல்லோரும் எதற்கும் கைகொள்ளும் உண்ணா நோன்பினை முதன்முதலாக நமக்குத் தொடங்கி வைத்தவர் அப்பர் அடிகள்தான்.

அப்பர் பெருமானும் ஆளுடைப் பிள்ளைப் பெருமானும் சிறுத்தொண்டர், திருநீலநக்கர், முருகநாயனார் ஆகிய சைவ சமயப் பெரியார்களோடு, பல தலங்களில் இறைவனைத் தரிசித்தார்கள். நாவுக்கரசரின் ஞான வைராக்கியத்தை அவர் உள்ளத்தின் உறுதிப்பாட்டை உலகுக்கு எடுத்துக்காட்ட திருஉளம் கொண்டான் சிவபெருமான்!

திருப்புகலூரில் திருக்கோயிலில் அவர் உழவாரப்பணி செய்தபோது ஆலய வளாகமெங்கும் பொன்னும் மணியுமாக சிதறிக் கிடக்கச் செய்தான். "ஓடும் பொன்னும் ஒக்க நோக்கும்" உள்ள உறுதி கொண்ட அப்பர் பெருமான் அவற்றைக் கற்களோடு கற்களாகச் சேர்த்து அருகில் உள்ளத் தடாகத்தில் வீசியெறிந்தார்.

அழகிற்சிறந்த அரம்பை, ஊர்வசி போன்ற தேவமாதர்கள் வந்து மயக்கியபோதும் மனமயங்கினார் இல்லை. இறைவனைத் தவிர வேறெந்தப் பொருளும் அவர் கண்களுக்குப் பொருளாகப் பொருட்டாகத் தோன்ற வில்லை. எந்நிலையிலும் பிறைமதி சூடிய பெருமானே தான் வணங்கும் முழுமுதற் கடவுள் என்ற ஞான வைராக்கியம் கொண்டவராக விளங்கினார்.

நந்தமிழ் நாட்டிலே, பக்தியும், ஞானமும் பண்பாடுகளும், அறநெறி களும், மேலைநாடுகளிலும் போற்றப்படுகிறது. சைவ மதம் கடல் கடந்து முற்காலத்தைப் போலவே பெருமையுடன் பரவி வருவதைப் பார்க்கும் போதும், கேட்கும்போதும் படிக்கும் போதும் இறையருளை எண்ணி, மகிழவும் பெருமை கொள்ளவும் செய்கிறோம்.

எனினும், இன்றைய இந்து சமுதாய மக்களிடையே மத, நல்லிணக்கம் வேண்டும்; மதங்களிலே 'நெறி' வேண்டும். 'வெறி' வேண்டாம் என்று மக்களை வேண்டத் தோன்றுகிறது.

மதப்பற்று வேண்டும் ஆனால், அதில் தீவிரம் வேண்டாம். இந்தத் தீவிரம் தான் நெறி கடந்து சென்று நற்பண்புகளை இழக்கச் செய்கிறது.

நம் சைவ சமயப் பெரியார்கள், சாதிவெறி, சமயவெறி இவைகளைத் தவிர்த்து சன்மார்க்க நெறியுடன் சகோதரத்துவத்துடன் வாழ்ந்தார்கள் என்பதை அவர்களின் வரலாறுகளைப் படிக்கும்போதும், கேட்கும் போதும் உணரவேண்டும்.

ஒருவனின் இறை மார்க்கத்தைக் கூட இறைவனேத் தீர்மானிக் கிறான். அதை அவரவர்களின் குடிபிறப்பு, சமயம், மார்க்கம் ஆகியவை உணர்த்துகிறது. அதை உணர்ந்து அவரவர்கள் சமய நெறி முறைகளில் உண்மையானப் பற்று வைத்து, அதே சமயம் பிற மதங்களையும் அவர்கள் நெறிமுறைகளையும் மதித்து செயல்படுபவன் தான் உண்மையான மனிதன். இதைத்தான் இன்றைய மக்கள் சமுதாயம் உணரவேண்டும். இதைத்தான் இறைவனும் விரும்புவான்.

102. பதிகங்களின் வழி நாவுக்கரசர்

இரா. ரெங்கம்மாள், பழநி.

சமண சமயத்தின் ஊழின் வலிமை என்ற இரும்புப் பிடியிலிருந்தும், பௌத்த மதத்தின் அளவு கடந்த தியாக வாழ்வின் வற்புறுத்தலிலிருந்தும் மக்களுக்கு ஒரு விடுதலையையும், "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்ற நம்பிக்கையையும் அளித்த பக்தி மார்க்கம் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மிகப் பெரிய தொண்டைச் செய்துள்ளது.

திருக்கோயிலை, திருமேனியினை, திருநாமத்தைப் பாடி இறைவனோடு ஒன்றி வாழ்ந்தவர்கள் சைவ சமயக் குரவர்கள், நால்வரும் நாள்தோறும் தமிழோடு இசைபாடல் பாடிப் பரவிப் போற்றினர். அந்நால்வருள் ஒருவராகப் போற்றப் பெறுபவர் திருநாவுக்கரசராவார். இந்நிலவுலகில் மிக நீண்டகாலம் வாழ்ந்த பெருமை இவருக்குண்டு. இவர் அருளிய தேவாரப் பாக்கள் 4, 5, 6 என்னும் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப் பட்டுள்ளன. மொத்தப் பாக்கள் 3064 ஆகும்.

நாவுக்கரசரின் ஞான அனுபவம்

'கூற்றாயினவாறு' எனத் தொடங்கும் அப்பர் சுவாமிகளின் முதற் பதிகம் அவரது தனி வாழ்க்கை நிகழ்ச்சியின் ஞான அனுபவத்தையே வெளிப்படுத்துகிறது. சூலை நோயிலிருந்து விடுபடத் துடிக்கும் துடிப்பு இப்பதிகம் முழுவதும் தெளிவாக ஒலிக்கிறது.

"முன்னம் அடியேனறி யாமையினான்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னையடியேன் உமக்காளும் பட்டேன்,
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்,
தன்னையடைந்தார் வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கடனாவது தான்"

என்ற பாடலும்,

"நீத்தாய கயம்புக நூக்கியிட நிலை
கொள்ளும் வழித்துறை ஒன்றறியேன்"

என்ற பாடல் அடியும் நாவுக்கரசரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தெளிவாக விளக்குகின்றன.

நாவுக்கரசரின் இறைநெறி

நாவுக்கரசர் 'ஆன்மாக்கள் புறச்சமயப் படுகுழியில் வீழாது' சைவமே சற்சமயம் என்று தெளிந்து அதன் வழி நின்று சிவனை வழிபட்டு உய்யும் பொருட்டு, தமது செயல்களாலும், திருவாக்குகளாலும் மெய்யறிவுச் சுடர் கொளுத்திய சமயக் குரவராயினார் என்பர்.

"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாதொருபோது மிருந்தறியேன்
சலம்பூவொடு தூபமறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்"

என்று அப்பதிகத்திலேயே வரும் வேறு சில பாடல்களும் நாவுக்கரசர் எப்போதுமே இறை பக்தியிலிருந்து விலகியதே இல்லை எனவும் தெரிகிறது.

அகப்பூசையும், திருவடி தரிசனமும்

இறைவனின் திருவடிப் பேறே வாழ்க்கையின் குறிக்கோள் என்று கூறும் நாவுக்கரசர், அத்திருவடி தரிசனம் எவ்வாறு கிடைக்கிறது என்பதை ஒரு பாடலில் விளக்குகிறார்.

"உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்வுநெய்யட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள விருந்து நோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே"

இப்பாடலில் ஞானத்தின் பேரொளியிலேயே இறைவன் திருவடிகளைக் காணமுடியும் என்கிறார். இப்பேரொளி அகத்தே உள்ளது. ஒளிவீசும் மனை உடம்பு, விளக்கு உள்ளம், அறியாமையை அகற்றும் விவேகமே நெய், ஆன்மாவே விளக்கத்தைத் தந்து நிற்கும் திரி. இதில் தோன்றுவதே ஞானத்தீ. ஆன்மாவில் ஒளி வீசி நிற்கும் சிவஞானமே இறைவன் திருவடிகளைத் தரிசிக்க உதவுவது. இப்பாடல் நாவுக்கரசர் மேற்கொண்டிருந்த வழிபாட்டினை விளக்குகிறது.

அகத்தே உள்ள இறைவனைப் பூசை செய்யும் முறை

ஞானச்சுடரேற்றும் வழிபாடே அகப்பூசை. இதுவே இறைவனுக்குச் செய்யும் பூசையாகும் என்பர் நாவுக்கரசர்.

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைய நீரமைய வாட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்ற விக் காட்டினோமே"

இப்பாடலில் உடம்பே கோயிலாகிறது. பொறிகளால் அலைக்கழிக்கப்படாத மனம் குற்றேவல் செய்வதையும், வாய்மையையே தூய்மையாகக் கொண்டு

மனத்திலேயே ஒளி வடிவமான இலிங்கத்தினைப் பிரதிட்டை செய்து, திருமுழுக்குக்கு ஏற்ற பொருள்களான நெய்யும் பாலாகத் தூய அன்பையே மிகுதியாகச் சொரிந்து அதன்பின் அகத்தே கோயில் கொண்டிருக்கும் ஈசனுக்குப் பூசை செய்யலாம் என்கிறார்.

இப்பாடல் அக வழிபாட்டினை உருவக நிலையில் கூறுகிறது. அகப்பூசனையினை விளக்கும் பல பாடல்களை நாவுக்கரசர் பாடியுள்ளார்.

நாவுக்கரசர் காட்டும் பக்தியும் ஞானமும்

சைவ வைணவ நெறிகள் பக்தி, ஞானம் என்ற இரண்டன் பிணைப்பு என்பர். 'ஞானத்தின் புறத்தோற்றம் - ஞானத்தின் புலப்பாடு பக்தி' எனல் வேண்டும்.

> "ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு
> ஞானத்தாய்! உனை நானும் தொழுவேன்"

என்று பாடி, பக்தி செலுத்துவதற்கு ஞானத்துடன் தொழுதால், யாராக இருந்தாலும் உய்யலாம் என்கிறார்.

நாவுக்கரசர் காட்டும் இறைவனின் அருவநிலை

மின் விளக்கு புற இருளை அகற்றுவது போல விளங்கித் தோன்றும் அருள் திருமேனியும், அடியவர் பலரின் அக இருளை அகற்றி, அவர்களைத் தம்பால் இணைத்துக் கொள்கிறது. இறைவன் அருளையே கண்ணாகக் கொண்டு அவனது அருட் திருக்கோலத்தை அருவ நிலையில் காட்டியுள்ளார்.

> "மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி மயானத்தான்
> வார்சடையான் என்னினல்லான்
> ஒப்புடையனல்லன், ஒருவனுமல்லன், ஓரூரல்லன், ஒருவனல்லி
> அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும் அவனருளே
> கண்ணாகக் காணின் னல்லால்
> இப்படியன், இந்நிறத்தான் இவ்வண்ணத்தன் இவனிறைவன்
> என்றெழுதிக் காட்டொணாதே"

என்று எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனின் அருவ நிலையைப் புலப்படுத்துகிறார்.

இறைவனே பிறவியைத் தந்து ஆட்கொள்கிறார்

சைவம், வைணவம் ஆகிய இரண்டும் அருள் நெறிகளே. இவ்வருள் இரண்டு நிலைகளில் வெளிப்படுகின்றது. 1. இறைவன் தம்பொருட்டு இறங்கி வருதல், 2. கீழ்நிலையில் இருக்கும் ஆன்மாக்களைத் தன் நிலைக்கு உயர்த்துதல். மனித வாழ்வு முழுவதையும் இறைவனே இயக்குகின்றான் என்பதே சைவத்தின் சாரமாகும்.

"...
அருளான் ஆனந்தத்து ஆரமுதூட்டி
அருளால் என்நந்தி அகம் புகுந்தேனே"

என அந்நிலையினைத் திருமூலர் விளக்கியுள்ளார். இக்கருத்தினையே நாவுக்கரசர் தம் பதிகங்களில் பாடியுள்ளார்.

சாதிப் பாகுபாட்டினை நீக்குக எனல்

தெய்வ வழிபாட்டில் சாதிப் பாகுபாட்டினை நீக்க வேண்டுமென்கிறார்.

"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்"

என்று சாடுகிறார். சிவனடியாராக இல்லாவிட்டால் மேல்வகுப்பில் பிறந்தாலும் சிறப்பில்லை. சிவனடியார் கீழ்வகுப்பில் பிறப்பினும் சிறப்பே என்பதை,

"ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரத்தார்க் கன்பராகில்
அவர் கண்டீர் யாம்வணங்கும் கடவுளாரே"

என்றும் தெளிவுபடுத்தி, தெய்வ அன்பில் சாதி வேறுபாட்டை முற்றிலும் நீக்க வேண்டும் என்றார்.

உள்ளன்பில்லாத பூசையைக் கடிகிறார்

ஞானத்தால் விளைந்த தூய அன்பினையே தெய்வப் பேற்றுக்கு கருவியாக வற்புறுத்தினார். அதன் விளைவாகச் சடங்குகள், கிரியைகள், கடுந்தவங்கள் ஆகியவற்றை வற்புறுத்தவில்லை. இவற்றை உண்மை அன்பால் வென்று சிறக்க வேண்டும் என்பர்.

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்குநிற்பவன் பொன்னார் சடைப்புண்ணியன்
பொக்கம் மிக்கவர் பூவும் நீருங்கண்டு
நக்கு நிற்பன் அவர்தமை நாணியே"

என்று உள்ளன்பில்லாத பூசையைக் கடிந்து கூறும் அப்பர் இறைஞானமாகிய அன்பு இன்றித் தீர்த்தத்துறை படிதலில் எவ்விதப் பயனுமில்லை என்றார்.

"கங்கை யாடிலென் காவிரியாடிலென்
....
எங்கு மீசன் எனாதவர்க் கில்லையே"

என்றும்,

"கோடி தீர்த்தங் கலந்து குளித்தவை
ஆடினாலும் அரனுக்கன் பில்லையேல்

ஓடுநீரினை ஓட்டைக்குடத் தட்டி
மூடிவைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே''

என்றும் பாடுகிறார்.

வேதம் ஓதுதல், வேள்வி செய்தல், தவம் செய்தல், ஊனுண்ணா திருத்தல் போன்ற செயல்கள் எல்லாம், இறைவனிடம் உள்ளன்பு இல்லாது போனால் எப்பயனையும் தராது எனத் தெளிவுபடுத்துகிறார்.

நாவுக்கரசரின் கவிதைவீறும் அனுபவத் துடிப்பும்

நாவுக்கரசரின் பல பாடல்களில் இறைவனை நினையாது வாழ்ந்த வாழ்க்கை நிகழ்ச்சிகள் பலவாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

''முன்னைஎன் வினையினாலே மூர்த்தியை நினையமாட்டேன்
பின்னைநான் பித்தனாகிப் பிதற்றுவன் பேதையேன் நான்
என்னுளே மன்னி நின்ற, சீர்மைய தாயினானை
என்னுளே நினையமாட்டேன் என்செய்வான் தோன்றினேனே''

இவ்வாறு பாடும் அவரது பாடல்களில் கவிதை வீறு, அனுபவத் துடிப்பு நெஞ்சைத் தொடுகின்றது.

உலகியல் வெம்மையும் இறைவன் திருவடித் தன்மையும்

அனுபவத்தால் தாம் வாழ்வில் உணர்ந்த உலகியல் வெம்மையும் ஞானத்தால் உணர்ந்த திருவடி நீழல் தன்மையும், நாவுக்கரசரின் உள்ளத்தில் ஏற்படுத்திய போராட்டத்தின் விளைவாகவே, உலகியல் வெம்மையிலிருந்து விடுபடத் துடிக்கும் துடிப்பு அவர் பாட்டின் உயிர் நாடியாக அமைந்துள்ளது.

'உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூருடைய கோவே'

என்றும்,

''பெரியான், பெரியார் பிறப்பறுப்பான் என்றுந் தன்பிறப்பை
அரியான், அடிநிழற் கீழதன்றோ என்ற னாருயிரே''

என்றும் பாடிய நாவுக்கரசரின் அனுபவத் துடிப்புக்கு முழுமையான காரணம், உலகியல் வெம்மையில் அழுந்தியபின் இறைவன் திருவடி நீழலைத் தரிசித்ததே ஆகும். இறைவன் திருவடிக்கு ஆளாகி உய்ந்த பின் பாடியனவே அப்பர் பாடல்கள்.

கழிவிரக்கத்தைப் புலப்படுத்தும் அப்பரின் இலக்கிய உத்தி

இறைவனை மறந்து வாழ்ந்த வாழ்க்கையினைப் பலவாறு பாடுகிறார்.

''என்பிருத்தி நரம்புதோல் புகப்பெய்திட்டு
என்னையோர் உருவமாக்கி

இன்பிருத்தி முன்பிருந்த வினைதீர்ந்தி
டென்னுள்ளங் கோயிலாக்கி
அன்பிருத்தி அடியேனைக் கூழாட்கொண்டருள்
செய்த ஆரூரர் தம்
முன்பிருக்கும் வீதியின்றி முயல்விட்டுக்
காக்கைப்பின் போனவாறே''

கழிவிரக்கத்தைப் புலப்படுத்தும் நாவுக்கரசரின் இப்பாடல் உருக்கத்தோடு வெளிவருகிறது.

'முயல்விட்டுக் காக்கைப்பின் போனவாறே'

'இருட்டறையில் மலடுகறந் தெய்த்தவாறே'

'விளக்கிருக்க மின்மினித்தீ காய்ந்தவாறே'

'கரும்பிருக்க இரும்புகடித் தெய்த்தவாறே'

எனும் ஈற்றுத் தொடர்கள் அவர் கருத்தை வெளிப்படுத்த பயன்படுத்திய இலக்கிய உத்தியாகும்.

ஐம்புல ஆட்சியினைச் சாடுதல்

தம்மை இறை முயற்சியில் செல்லவிடாது தடுத்த ஐம்புலன்களின் ஆட்சியினை வேதனையோடு பாடுகிறார்.

''..........மாயமும் தெளியகில்லேன்
அழிவுடைத்தாய வாழ்க்கை ஐவரால் அலைக்கப்பட்டுக்
கழிலிடைத்தோணி போன்றேன் கடவூர் வீரட்டனீரே''

என்றும் வருந்துகின்றார். இவ்வாறு உலகியல் வெம்மையின் குரல் நாவுக்கரசரின் கவிதைகளில் சிறப்பாக ஒலிக்கிறது. அவரது முதல் பதிகமே இத்துன்ப ஒலியை வெளிப்படுத்தி நிற்கிறது.

'நான்' என்னும் செருக்கு அழிய வேண்டும்

''திசை தெரியாது செல்லும் வாழ்க்கைத் தோணி 'நான்' என்னும் செருக்கால் அழிந்து விடாது, 'நீ' என்னும் ஞானத்தால் கரை சேர வேண்டும். 'எல்லாம் நீ' என்று உனை நினைக்கும் ஞானத்தை நீதான் எனக்கருள வேண்டும்'' என்று வேண்டுகின்றார். மேலும் ''இவ்வுலகிலிருந்து நான் பிரியும்போது, உன் திருவடிக்கீழ் எனக்கோர் இடம் கொடுத்து விடு, மேலும் மேலும் என்னைத் துன்பத்திற்கு உள்ளாக்காதே'' என்று பணிந்து வேண்டுகிறார்.

ஈசன் என்னும் இன்பக்கனி

தெய்வீக இன்பத்தில் நாவுக்கரசர் திளைத்த வேகம் நன்கு வெளிப் படுத்தப்பட்டுள்ளது. பெரும் ஈடுபாட்டோடு இறை இன்பத்தைப் பலபட விரித்துப் பாடுவதற்கும் இதுவே அடிப்படையாகும்.

"மனிதர்காள்! இங்கேவம் மீனொன்று சொல்லுகேன்
கனிதந்தால் கனி உண்ணவும் வல்லீரோ,
புனிதன் பொற்கழல் ஈசன்எனுங்கனி
இனிது சாலவும் ஏசற்ற வர்கட்கே"

என்று பாடி இறைவன் திருவடிச் சிந்தனையே இன்ப உணர்வைக் கிளறச் செய்கிறது என்றார்.

இனிமையிலும் இனியன் இறைவன்

இறைவன் சிந்திப்பதற்கரியவன். அன்புடன் சிந்திப்பவர்க்கு சிறந்த செந்தேனினன், முக்தி கொடுப்பவன், பழ வினை தீர்ப்பவன்; கனியினும், கட்டிபட்ட கரும்பினும், பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும், முடிகவிழ்த்து அரசாளும் அரசினும் தன்னையடைந்தார்க்கு இனியன் என்று இறைவன் தம்மோடு பிரிப்பன்றி நிற்பதை உணர்ந்து ஞானத்தால் இறைவனை விடவும் இனியவர் எவருமில்லை" என்றும் பேசுகிறார்.

"என்னிலும் இனியான் ஒருவனுளன்
....
என்னுள்ளே நிற்கும் இன்னம்பர் ஈசனே"

என்பன அப்பாடலடிகள்.

மனிதப்பிறவி வேண்டுமெனல்

பலவாறு உலகியல் வெம்மையைப் பாடினாலும், இறை இன்பத்தை உணர்ந்து உய்ந்துவிட்ட நிலையில் துன்பத்தைத் தந்த பிறவிதானும் நாவுக்கரசருக்கு இனிதாகத் தோன்றுகிறது.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்,
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்தமாநிலத்தே"

என்றிவ்வாறு பாடியதோடு, 'தில்லைச் சிற்றம்பலம் கண்டின்புற இன்னும் பாலிக்குமோ இப்பிறவியே' என்று வேண்டுகிறார்.

நாவுக்கரசரின் பெருமித வீறுணர்ச்சி

முற்கூறப்பட்ட இன்ப உணர்வே அன்றி இறைவனைச் சேர்ந்து வாழ்வதில் பெருமிதமும் கொண்டார். மேலும் 'ஒன்றிலும் குறையுடையோம் இல்லை, புண்ணியனை நண்ணிய புண்ணியத்துள்ளோம்' என்று கூறிப் பெருமிதமடைந்தார்.

"நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலையில்லோம்

ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமில்லை''

நாவுக்கரசரிடம் காணப்படும் இப்பெருமிதமே தாண்டக யாப்பைச் சிறப்பாகப் பயன்படுத்தக் காரணம் ஆயிற்று. 'வேலை நஞ்சுண்டு ஊன மொன்று இல்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கும் தில்லை மாநகர்ச் சிற்றம்பலனார்க்கு எல்லை இல்லாதோர் அடிமை பூண்டோர்க்கும் அல்லல் என் செயும் அருவினை என் செயும், தொல்லை வல்வினைத்தான் என்ன செய்ய முடியும்'' என்று வினவுகிறார்.

நாயகன் நாயகி பாவம்

இறைவனின் திருக்கோல ஈடுபாட்டில், இறைவனிடத்தில் காதலுணர்வைப் பிறப்பிக்க அகத்துறைப் பாடல்களைப் பாடினர். சம்பந்தர் தேவாரத்தை விட எண்ணிக்கையில் குறைவாகவே நாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படுகிறது. நாவுக்கரசரின் உணர்ச்சி வேகம் அகத்துறைப் பாடல் களிலும் தெளிவாகத் தனி முத்திரையைப் பதித்துச் செல்வதைக் காணலாம்.

''...............குயிலினங்காள் சொல்லீரே!
....
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிசென்னிப்
பொன்மாலை மார்பன்என் புதுநலமுண் டிகழ்வானோ''

என்று தலைவி உணர்வில் நின்று தலைவனிடம் தூதுவிடும் பாங்கில் பாடினாலும்,

''மறங்கிளர்வேற் கண்ணுள் மணிசேர் மிடற்றவனே என்கின்றாளால்
கறங்கோத மல்கும் கழிப்பாலைச் சேர்வானைக்
கண்டாள்கொல்லோ''

என்று 'தாய் அல்லது தோழி உணர்வில் நின்று தலைவியின் காதலை வெளிப்படுத்தினாலும் அவ்வுணர்ச்சி வேகம் படிப்போர் உள்ளத்தைத் தொடுகிறது' என்பர்.

நாவுக்கரசரின் உணர்ச்சிமிக்க அகப்பாடல்

பக்தி இலக்கிய கவிதைகளிலேயே சிறந்த கவிதையாகக் கருதத்தக்க அகத்துறைப் பாடலை நாவுக்கரசர் பாடியுள்ளார்.

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
....
தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே''

என்பது அப்பாடல்.

எல்லாமுமாய் நிற்கும் இறைவனின் தோற்ற நிலை

நாவுக்கரசர் திருக்கோயில்களுக்குச் சென்று பாடினாலும், தன்னிடத்தும் எல்லாப் பொருள்களிடத்தும், எல்லாவற்றையும் கடந்து, இறைவன் நிலை கொண்டிருந்ததைத் தம் ஞானக் காட்சியில் கண்டார்.

"நீரானே தீயானே நெதியானே கதியானே
ஊரானே உலகானே உடலானே உயிரானே
பேரானே பிறைசூடி பிணிதீர்க்கும் பெருமானென்று
ஆறாத ஐயாறர்க் காளாய் நான்உய்ந்தேனே"

என்றும் கண்ணாகவும், மணியாகவும், கருத்தாகவும், எண்ணாகவும், எழுத்தாகவும், விண்ணாகவும், விண்ணிடையே புரமெரித்த வேதியனாகவும், எல்லாமுமாகவும் விளங்கும் இறைவனின் தோற்றத்தைக் காட்டுகிறார்.

நாவுக்கரசரின் அற்புத நிகழ்ச்சிகள்

நாவுக்கரசர் பல அற்புத நிகழ்ச்சிகளை நிகழ்த்தியுள்ளார். அ. நீற்றறை குளிர்ந்தது, ஆ. நஞ்சு அமுதானது, இ. கொலைக்களிறு வணங்கியது, ஈ. கல் கடலில் தெப்பமாக மிதந்தது, உ. திருப்பெண்ணாகடத்தில் தூங்கானை மாடத்துப் பெருமான் அருளால் தம் தோளில் சூலமும், விடையும் பொறிக்கப்பெற்றமை, ஊ. நல்லூர்ப் பெருமான் அருளால் சென்னிமிசைப் பாதமலர் சூட்டப்பெற்றமை, எ. பைஞ்ஞீலியில் இறையருளால் பொதிசோறு பெற்று அருந்துதல், ஏ. அப்பூதி அடிகளின் மகனுக்கு விடம் தீர்த்தல், ஐ. வீழிமிழலையில் வாசியில்லாக் காசு பெற்றது, ஒ. மறைக்காட்டில் திருக்கதவம் திறந்தது போன்ற இவ்வற்புத நிகழ்ச்சிகள் யாவும் இறையருளால் நாவுக்கரசர் நிகழ்த்தியனவாகும்.

103. திருநாவுக்கரசரும் சமணமும்

இரா. ரேணுகாதேவி, உடுமலை.

திருநாவுக்கரசர் சமண சமயத்தைச் சார்ந்திருந்தபோது பெற்ற அனுபவங்கள் எவை? சைவ சமயத்திற்கு அவர் மாறக் காரணங்களாக அமைந்தவை எவை என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம். நாவுக்கரசர் சமண சமயத்தில் பெற்ற அனுபவங்கள், சைவக் கடவுளான சிவபெருமானின் தோற்றம், அவருடைய பெருமைகள், நாவரசரின் மனமாற்றத்திற்குக் காரணம் என்னும் உட்தலைப்புகளில் இக்கட்டுரையின் போக்கு அமைகின்றது.

நாவுக்கரசரின் சமண சமய அனுபவங்கள்

நாவுக்கரசர் சமண சமயத்தில் இளமைக் காலந்தொட்டு இருந்து முதுமை எய்திய பின்னரே சைவ சமயத்தைக் கடைப்பிடித்தார் (பாடல் - 190) என்பது அவரது திருமுறைகளின் வாயிலாகத் தெரிகிறது. தாம் சமண சமயத்தில் இருந்தபோது பெற்ற அனுபவங்களை வெறுத்துப் பேசுவதுடன் சமணர்களைத் தீயவர்களாவும் காட்டுகிறார்.

'சமண் குண்டர்கள்',
''பாசிப்பன் மாசுமெய்யர் பலமிலாச் சமணரோடு
நேசத்தால் இருந்த நெஞ்சை நீக்குமாறறிய மாட்டேன்''

(திருமுறை - 4, பா.228.) (ப. 30, 31)

என்றும், பல் துலக்காதவர், 'துவர்வாய்க் கொண்டு' (திருமுறை - 4, பாடல் - 5, வரி - 5), 'கண் அழலத் தலையறிந்தும் கையாலுண்டு' (திருமுறை - 4.5;7), 'அமணே நின்று உண்குண்டர்' (திருமுறை - 5.171-5), பெண்டிர் உணவினைக் கையிலிட நாணமின்றி வாங்கி உண்ணும் குண்டர் மூக்கினால் முரன்று ஓதுபவர் (திருமுறை - 5.171-2) மாசு பூசிக் கொள்பவர்கள் பற்று இல்லாதவர் என்றெல்லாம் பழித்தல் பேசுகிறார். இது போன்றே இவர் சார்ந்திருந்த சமண சமயத்தினைப் பற்றி எண்ணற்ற பாடல்களில் இழித்தும் பழித்தும் பேசியிருக்கிறார். மேலும், இச்சமணர்கள் கூறும் சொற்களைக் கேளாதீர் என்பதனை முடிந்த முடிவாகக் கூறுகிறார்.

ஒரு பிறப்பி லானடியை உணர்த்தும் காணார்
உயர்கதிக்கு வழிதேடிப் போகமாட்டார்

வருபிறப் பொன் றுணராது மாசு பூசி
வழிநாணா தவர்போல்வார் மனத்தானாகி
அருபிறப்பை அறுப்பிக்கும் அதிக யூரன்
அம்மான்றன் அடியிணையே அணைந்து
இருபிறப்பும் வெறுவியராய் இருந்தார் சொற்கேட்டு
ஏழையேன் நான்பண் டிகழ்ந்தவாறே

(திருமுறை - 6, ஒலி - 3.5)

என்ற பாடலால் சமணர் மனம் போல யான் வாழ்ந்து சிவபெருமான் அடியினையைத் தொழுது வாழாது. இம்மை மறுமை என்ற இரண்டும் கெட்ட அச்சமணர் சொற்கேட்டு இகழ்ந்து கெட்டேன். எனவே, சமணர் சொற்கேளாதீர் என்று அறிவுறுத்துகின்றார். இந்நிலையில் பிராய்டின் உளவியல் கோட்பாடான, "குழந்தைப் பருவ உணர்வுகள், அச்சம், சினம், கழுவாய் தேடும் முயற்சி ஆகியவற்றின் ஒருங்கிணைவால் இத்தற்காப்பு முயற்சிக்கு எதிரான தற்காப்பு முயற்சியை விரும்புகிறார்கள். இத்தற்காப்பு முயற்சியை விரும்பாதவர்கள் தன்னைத் தற்காத்துக் கொள்ள வேறொரு முயற்சியை நாடுகிறார்கள். இவை, சார்த்தியுரைத்தல் (Projection), தனிமைப் படுத்தல் (Isolation), நிகழ்வை மறுத்தல் (Denial) ஆகியனவாகும்" (இலக்கியமும் உளவியலும், ப.61) என்ற கருத்து ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது. இளமையில் நாவுக்கரசருக்கு ஏற்பட்ட அனுபவங்கள் அவ்வனுபவத்தின் வாயிலாக ஏற்பட்ட தனிமையுணர்வு, இவையே எதிரான தற்காப்பு முயற்சிக்குத் தூண்டியிருக்க வேண்டும். அத்தூண்டலின் பேரிலேயே சிவபெருமான் மீது அவருக்குப் பற்று ஏற்பட்டிருக்க வேண்டும்.

சிவபெருமானின் தோற்றம்

நடராசப் பெருமானின் தோற்றத்தில் ஈடுபாடு கொண்ட நாவரசர், இறைவன்பால் பேரன்பு பூண்டார்.

'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்
வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியில் பால்வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்த பொற்
பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே'.

குனித்த புருவம், கொவ்வைப் பழம் போன்ற சிவந்த இதழ்களில் முகிழ்த்த சிரிப்பும் பரந்து விரியும் சடை முடியும் வெண்ணீறைப் பூசிய மேனியையும் காண இம்மனிதப் பிறவியாலேயே இயலும். மிக அழகிய நடராசப் பெருமானின் தோற்றமே நாவரசரைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது என்பது

மேலும், ஒரு பாடலால் உறுதிப்படுகின்றது. ''பட்டுடுத்துப் பவளம் பொன்மேனியெல்லாம் பசுஞ்சாந்தங் கொண்டணிந்து பாதம் நோவ இட்டெழுந்து நடமாடியிங்கே வந்தார்க்கு'' என்ற இவரது பாடலிலும் சிவபெருமானின் நடனமாடும் மூர்த்தமே சுட்டப்படுகின்றது.

இளமையில் இவர் சார்ந்திருந்த சமயம் சமணம். இச்சமயத்தில் இறைவன் என்ற உரு இல்லை என்பதனை இல்லாத் தெய்வம் பொத்தி (297-7) என்ற உறுதியில்லாதவர்கள் என்ற சிவக்கவிமணி அவர்களின் உரையினாலும் புலப்படுகின்றது. (திருத்தொண்டர் புராணம், திருநாவுக்கரசர், புராணவுரை, ப. 354)

இதிலிருந்து நாவுக்கரசர் இறைவன் ஒருவன் உண்டு என்றும் அவனுக்கு உருவம் உண்டு என்றும் நம்பாத சமயத்திலிருந்து வந்தவர். எனவே, சைவத்திற்கு மாறிய பின்னர், சிவபெருமானின் அழகிய கலைத்திறம் நிரம்பிய சிவபெருமானின் நடனமாடும் தோற்றம் அவரைப் பெரிதும் கவர்ந்திருக்க வேண்டும். சிவபெருமானின் பெருமையும் நாவுக்கரசரின் மனமாற்றத்திற்குக் காரணம்.

சமணர்கள் நாவுக்கரசருக்குச் செய்த தீமைகளாகச் சோற்றிலே நஞ்சிட்டது. கல்லோடு பிணித்துக் கடலில் இட்டது. யானையின் காலால் இடறச் செய்தது போன்றவற்றை கூறுகிறார். சிவனை வழிபட்டதாலேயே தம்மைச் சமணர்கள் அழிக்க முற்பட்டனர் என்பது அவருடைய பாடல்களின் மூலம் தெரிய வருகின்றது. தமக்கு ஏற்பட்ட துன்பங்களை வரிசைப் படுத்தும் பொழுது,

'வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமு தாக்குவித்தார் நனிபள்ளி அடிகளாரோ'

தம்மைக் கொல்ல இட்ட நஞ்சினையும் அமுதாக மாற்றிய பெருமை யுடையவர்கள் சிவபெருமான். மேலும் கல்லினைப் பூட்டிக் கடலில் இட்டனர்.

''கல்லினோ டென்னைப் பூட்டி அமண் கையர்
ஒல்லை நீர்புக நூக்கஎன் வாக்கினால்
....அரன்
நல்ல நாமம் நவிற்றி உய்ந்தேனன்றே''

என்ற இதுபோன்ற பாதிப்புகள் நாவரசரின் மனதில் ஆழமாகப் பதிந்து ஒரு தீவிரமான உணர்வாக மாறியிருக்கக் கூடும். இவ்வுணர்வு மாற்றத்திற்குக் காரணம் கூற வந்த பிராய்டு,

''எழுத்தாளனின் கற்பனை ஒரு தீவிரமான உணர்விலிருந்து உருவாகிறது. ஒரு நிகழ்கால மன பாதிப்பால் (இது) ஏற்படுகிறது. இப்பாதிப்பு ஒரு விருப்பத்தை அல்லது ஒரு விழைவை உருவாக்குகிறது''

என்று கூறியுள்ளார். (இலக்கியமும் உளவியலும், ப. 39) திருநாவுக்கரசருக்கு நிகழ்காலப் பாதிப்பு இறைவன் மீது பற்றாக மாறியது. அப்பற்றே சிவபெருமானின் அரிய செயல்களைப் பாராட்டும் மனநிலையைத் தந்தது. எவ்வாறெனில்,

"வஞ்ச நஞ்சிற் பொலிகின்ற கண்டத்தர்
தீதாய் வந்த நஞ்சமுது செய்தானை
கடல் நஞ்சுண்டான் நஞ்சுண்டு கண்டம் கறுத்தவர்"

என்று பல பாடல்களில் நஞ்சுண்ட நிகழ்வைப் பாடிப் பரவசமடைகிறார்.

மேலும், ஒரு படைப்பாளியின் கவிதையில் மூன்று காலங்களும் ஒருங்கிணைக்கப்படும் என்று பிராய்டு கூறுகிறார்.

எழுத்தாளனின் விழைவுகளில், இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவை ஒருங்கிணைக்கப் படுகின்றன. (இலக்கியமும் உளவியலும், ப. 35)

இதன்படி திருநாவுக்கரசருடைய அனுபவமாகிய இறந்த காலமும் சிவபெருமான் மீது கொண்ட அன்பாகிய நிகழ்காலமும் அவருடைய விழைவு என்னும் இழைகளால் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளமை புலப்படுகின்றது.

நாவுக்கரசருக்குச் சமணர்கள் இழைத்த துன்பங்கள், அவற்றை அவர் எதிர்கொண்ட திறம் ஆகியவைகளைக் கண்ணுறும் பொழுது அக்காலத்தில் சைவ சமணப் போராட்டத்தின் போக்கு புலனாகின்றது. எம்மதம், அரசியல் செல்வாக்குப் பெற்றிருந்ததோ அதுவே, நின்று நிலை பெற்றிருந்திருக்கிறது எனத் தெரிகிறது.

நாவரசர் சமணர்களால் துன்புறுத்தப்பட்டு அதிலிருந்து, சிவபெருமான் அருளால் மீண்டு வந்தவர். நஞ்சின் கடுமையை அதன் தீமையை நன்கு உணர்ந்தவர். தீயின் கொடூரத்தைத் தானே அனுபவித்தவர். இவருக்கு ஏற்பட்ட இவ்வனுபவமே; கொடிய ஆலகால விடத்தினை அள்ளி உண்ட இறைவன் மீது பற்றாக மாற வழி வகுத்தது. இறைவன் இத்தியாகம் மட்டுமின்றி,

"கருப்பனைத் தடக்கை வேழக் களிற்றினை உரித்த கண்டன்"

"மதயானை யுரிபோர்த்து, பேய்வாழ் காட்டகத்து ஆடும்
பிரான்தன்னை"

என்ற பாடலடிகளாலும், "கையினால் ஏந்தியாடும் கானவன் காண், கையார் தழலார் விடங்கா போற்றி" எனப் போற்றியிருப்பதாலும் கீழ்க்காணும் உண்மைகள் நமக்குப் புலப்படுகின்றன.

மதயானையினையே கொன்று அதன் தோலை உரித்து ஆடையாகப் போர்த்துக் கொண்டதும் அனலைக் கையில் ஏந்தி நின்ற காட்சியும் நாவுக்கரசரை வியந்து பார்க்கச் செய்திருக்க வேண்டும். அத்துடன் தமக்கு ஏற்பட்ட கொடிய நோயினை மாற்ற வேண்டிக் கொண்ட நிலையிலேயே இறைவன் அந்நோயினை நீக்கிவிட்டார் எனவும் தெரிவிக்கிறார்.

உடலுள்ளுறு சூலைதவிர்த் தருளாய்
அலந்தேன் அடியேன்

எனவும்,

"சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்"

எனவும் வேண்டுகிறார். இவருடைய வேண்டுகோளை ஏற்று இறைவனும் அந்நோயினைத் தீர்த்தார் என்பதனைத்,

"தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னை"

என வாழ்த்துகிறார்.

இங்ஙனம் பல்வேறு அற்புதங்களையும் இறைவன் நிகழ்த்திக் காட்டியமையே நாவுக்கரசருக்குச் சிவபெருமான் மீது பக்தியும் சமணத்திலிருந்து சைவ மதத்திற்கு மாறக் காரணமாகவும் ஆயிற்று என்று கூற இடமுண்டு.

திருநாவுக்கரசர் சமண சமயத்திலிருந்து பெற்ற அனுபவங்கள், சைவ சமயத்திற்கு முற்றிலும் மாறுபட்ட கொள்கைகள், கோட்பாடுகள் இவை நாவுக்கரசரை மதம் மாறத் தூண்டியிருக்கிறது. நாவுக்கரசரின் எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள், ஆசைகள் அனைத்திற்கும் சைவ சமயம் நிறைவளிப்பதாக இருந்திருக்கின்றது. இவையனைத்திற்கும் மேலாகச் சிவபெருமானின் தோற்றம், அவரைப் பற்றி வழங்கி வந்த கதைகள், உமையம்மையோடு காட்சி தருவது மட்டுமின்றி உமையொரு பாகனாக நின்றமை, பெண்களை ஒதுக்கிய சமண மதத்திலிருந்து மிகவும் வேறுபட்ட காட்சிகளும் ஆகும். இத்தகு சூழ்நிலைகளே நாவரசரைச் சமண சமயத்திலிருந்து சைவத்திற்கு மாறச் செய்திருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது.

104. நாவுக்கரசரில் இசைக்கருவிகள்

எஸ். லலிதா, தமிழூர்.

தேவாரப் பாடல்கள் மானுட உலகுக்குக் கிடைத்த அரிய பொக்கிஷம். திருநாவுக்கரசர் தேவாரம் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாக அமைகின்றன. திருநாவுக்கரசர் தேவாரத்தில் இசைச்சிறப்பு, இசைக்கருவிகள் பற்றிய குறிப்புகள், தேவாரம் ஓதும் முறைகள், இறைவன் இசைக்கு மகிழும் செய்தி போன்றவை உள்ளன. அவற்றைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

திருக்கோயில்களில் ஓதுவார்களால் இன்றும் தேவாரம் முறையுடன் ஓதப்பட்டு வருகின்றது. தேவாரம் கற்கும்போது சுத்தாங்க முறையில் கற்பது மரபு. சுத்தாங்கம், பண்ணாங்கம் என்பனவாகிய முறைகளில் பாடப்பெற்று வருகின்றது. சுத்தாங்கம் என்பது இசைக்கருவிகளின்றி சரியான உச்சரிப்புடனும், பாடல்களின் பொருளைப் புரிந்து கொண்டும் ஓதும் முறை ஆகும். திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை போன்ற பாடல்கள் சுத்தாங்கமாகப் பாடுவது மரபு.

சுத்தாங்கமாகப் பாடும் முறை பத்தியுணர்வு மேம்படத் துணைபுரிகின்றது. இறைவன் இசைவடிவமாகவுள்ளவன். உணர்வுகளுடன் ஒன்றி இன்பம் தருபவன். சுந்தரர் பாடியுள்ள ''ஏழிசையாய், இன்பப் பயனாய் என்னுடைய தோழனுமாய்'' என்ற பாடல் இதனை உறுதி செய்கின்றது.

இசையும் இறைவனும்

இறைவன் இசை பாடுவர்களின் பாடலில் மகிழ்வதாகவும் அறிகிறோம்.

''பாடுவார் பாடல் உகப்பாய் போற்றி'' (2692)

''பாண்டிறல் கேட்டுகந்த பரமராப்பாடி யாரே'' (4629)

என்ற பாடல் வரிகள் இசை பாடுபவர்களின் மனத்திலும் அமைதியையும் மகிழ்ச்சியையும் அடைவர் எனக் குறிப்பிடுகின்றன.

இசைக்கருவிகள் பயின்று வரும் பாடல்கள்

இசைக்கருவிகள் இசைத்து இறைவனைப் பாடி இன்பங் கண்டவர்களாக வானவர், மானுடர், இயக்கர், பூதர், அரக்கர் ஆகியவர்களைத் தேவாரப் பாடல்கள் உணர்த்துகின்றன. இசைக்கருவிகளுடனும் தாளக்கட்டுடன்

இணைந்து இசைக்கும் இசைமரபு பண்ணாங்கம் எனப்பெறுகிறது. திருநெய்த்தானம் தலத்திற்குரிய பதிகத்தின் நான்காம் பாடலில் கொட்டு, முழவம் போன்ற கருவிகளுக்கேற்ப இறைவன் நடனமாடும் செய்தி காணப்பெறுகிறது. இறைவனின் நடனமாடுகின்ற தோற்றத்தை நம் கண்முன் இப்பாடல் சித்திரிக்கின்றது.

"கொட்டு, முழவு அரவத்தொடுகோலம் பல அணிந்து
நட்டம் பல பயின்று ஆடுவர் நாகம் அரைக்கு அசைத்துச்
சிட்டர் திரிபுரம் தீ எழச்செற்ற சிலையுடையான்
இட்டம் உமையொடு நின்றநெய்த்தானத்து இருந்தவனே."

என்பது மேற்கண்ட கருத்தமைந்த பாடலாகும். திருவேதிகுடி தலப்பதிகத்தில் வானவர் பரவிய செய்தி அமைந்துள்ளது.

"எண்ணும் இசை எழுத்தும் குறியும் அறிபவர்தாம்மொழிய
பண்ணிய இசை மொழிபாடிய வானவர் தாம் பணிவார்"

என்ற பாடல் வரிகள் வானவர்கள் இசையால் பரவிய செய்தியைப் புகல்கின்றது. "பார் கொண்டு மூடி" எனத் தொடங்கும் பதிகம் திருக்கழுமலம் தலத்தைச் சேர்ந்தது. இப்பதிகம் திருக்கழுமல இறைவனின் திருவடிகள் நம்மை ஆள்பவை. இவற்றை என்றும் ஏத்தி வழிபட வேண்டும் எனக் குறிப்பிடுகின்றவை. இப்பதிகத்தின் நான்காம் பாடல் பூதங்கள் பறை என்ற இசைக்கருவியை ஒலித்து வழிபட்டதைத் தெரிவிக்கின்றது.

விரிக்கும் அரும்பத வேதங்களோதும் விழுமியநூல்
உரைக்கிலரும் பொருளுள்ளவர் கேட்கிலுலகமுற்றும்
இரிக்கும் பறையொடு பூதங்கள்பாடக் கழுமலவன்
திருத்தம் பழம் படியாடுங்கழல்நம்மை யாள்வனவே
பறையினோசையும் பாடலினோசையும் (3374)

என்ற பாடல் இக்கருத்தை அணி செய்கிறது. மேலும் கோயில் என்ற தலைப்பில் அமைந்த பதிகத்தின் ஆறாம் பாடலும் பூதகணங்கள் பரவியதைக் குறிப்பிடுகிறது.

"பூத்தன பொற்சடை பொன்போன் மிளிரப் புரிகணங்கள்
ஆர்த்தன கொட்டி யரித்தன பல் குறட் பூதகணம்"

இறைவன் கையிலே அணிசெய்த இசைக்கருவி துடி என்பது ஆகும். இதனையும் கோயில் என்ற தலைப்பின் பதிகத்தின் ஏழாம் பாடலில் காணப்படுகிறது.

"கறங்கு துடியல் முழக்கும்" (4174)

'துடிகொண்ட கையும் துதைந்தவெண்ணீறும்'

ஆருயிர்த் திருவிருத்தம் என்ற தலைப்பின் பதினோராவது பாடலில் பாணி, குழல், முழவு ஆகிய இசைக்கருவிகள் ஒலித்து இலங்கை மன்னன் பரவியதைக் குறிப்பிடுகின்றது.

பழக வொரூர் தியரன் பைங்கட் பாரிடம் பாணிசெய்யக்
குழலு முழவொடு மாநடமாடி யுயுரிலங்கைக்
கிழவனிருவரு தோளு மொருவிரலாலிறுத்த
அழகனடி நிழற் கீழதன் றோவென்னாருயிரே

வீணையில் பல வகை இருந்துள்ளது. கூடுமே குடமுழவம் வீணை தாளம் என்ற பாடல் குடமுழவு வீணை பற்றிப் பேசுகிறது. இசைக்கருவிகளில் தொன்மையான வீணை, இதற்கு யாழ் என்ற பெயரும் உண்டு. திருநாவுக்கரசர் தேவாரத்தில் பல பாடல்களில் யாழ், வீணை போன்ற இசைக்கருவிகள் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது.

''பாணில் வீணை பயின்றவன்
பண்ணார்ந்த வீணைபயின்ற விரலவனே'' (4-4215-6)
(4-4177-9)
யாழின் மொழியவளஞ்ச
(திருவதிகை பாடல் - 1)
மழலை வீணையர்
(4252 - வரி - 2)
வீணையோடிசைந்து மிருபாடல் மிக்க
(4-4410 - 2)
கோடலா வேடத்தன் கொண்டதோர் வீணையினன்

என்பவனாகிய பாடல் வரிகள் சான்றாகின்றன. வானவர்கள், அரம்பையர் போன்ற பல்திறத்தவர்களும் இசையாலும் இசைக்கருவிகளாலும் பரவிட வீணை பயன்பட்டதாகத் தெரிகிறது. சாமவேதம் பாட சங்கு, பறை, கொக்கரை, மொந்தை, பாணி, சல்லரி, கொட்டு, முழவு போன்ற கருவிகளும் இறைவனை வழிபடப் பேருதவியாக இருந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

கின்னரம் என்ற சொல் ஒருவகை யாழ், இசை எழுப்பும் பறவை, நீர்வாழ் பறவை, ஆந்தை என்பவனாகிய பொருள்கள் உடையது.

''கிளரும் பேரிசைக் கின்னரம் பாட்டறா'
கீதம் கின்னரம் பாடக் கெழுவினாள்

என்ற பாடலடிகளினால் மிகப் பழமையான ஒருவகை யாழ் கின்னரம் என்பது தெரிகிறது. இத்தகைய கருவி பேரொலி வாய்ந்ததாக இருந்துள்ள தாகக் கருத முடிகிறது.

இசைக்கருவிகளில் ஒன்றாகச் சங்கும் பங்கு பெற்றுள்ளது. காலை யிலும் மாலையிலும் இறைவனை வழிபடுங்கால் சங்கு ஒலித்து வழி பட்டுள்ளனர்.

"சங்கு ஒலிப்பித்திடுமின்"

எனத் திருஆரூர்ப் பதிக இறுதிப் பாடலில் காணப்படுகிறது.

இசைக்கருவிகளில் தாளக்கருவிகளாலும் நரம்பியற் கருவிகளாலும், காற்றுக் கருவிகளாலும் இசை ஒலியின் இசைத்து இறைவழிபாடு செய்துள்ளனர்.

திருஆரூர்ப் பதிகத்தில் பழமையான இசைக்கருவிகள் பேசப்படுகின்றன. இதனை,

கொக்கரை, குழல், வீணை, கொடுகொட்டி
பக்கமே பகுவாயன பூதங்கள்

என்ற முதற்பாடலில் அறிகிறோம்.

இதே கருவிகள் விடையும் விடைப் பெருகும் எனத் துவங்கும் திருப்பதிகத்திலும் காணமுடிகிறது. இப்பதிகம் சரக்கறைத் திருவிருத்தம் என்று அழைக்கப்படுகிறது. இப்பதிகத்தின் எட்டாம் பாடலில் பலவகையான இசைக்கருவிகளும் குறிப்பிடப் பெற்றுள்ளன. அவை இன்றைய வழக்கில் ஒலிக்கப் பெறுகின்றனவா என அறிய இயலவில்லை.

விடுபட்டி ஏறு உகந்து ஏறி என் விண்ணப்பம் மேல்இலங்கு
கொடு கொட்டி கொக்கரை, தக்கை, குழல் தாளம் வீணை மொந்தை
வடுவிட்ட கொன்றையும் வன்னியும் மத்தமும் வாள் அரவும்
தடுகுட்டம் ஆடும் சரக்கு அறையோ என் தனிநெஞ்சமே

இவ்வாறு கொடு கொட்டி, கொக்கரை தக்கை, தாளம் யாழ், வீணை, குழல் மொந்தை போன்ற இசைக்கருவிகள் ஒரு சில பாடல்களிலேயே பயின்று வந்துள்ளன. திருப்பாலைத்துறை பதிகத்தின் ஏழாம் பாடல்,

குரவனார், கொடுகொட்டியும் கொக்கரை,
விரவினார் பண்கெழுமிய வீணையும்
மருவுநாள் மலர் மல்லிகை செண்பகம்
பரவுநீர் பொன்னப் பாலைத்துறையரே

கண்டுகொள்ளா யானை எனத் தொடங்கும் பதிகம் இறைவனை வழிபடுவதால் உண்டாகும், பலன்களைக் குறிப்பிடுகின்றன. முதற்பாடலில் மேற்கண்ட இசைக்கருவிகள் பேசப்படுகின்றன. கொண்ட பாணி, கொடுகொட்டி தாளம் கைக்கொண்ட தொண்டரைத் துன்னிலும் சூழலே.

திருநாவுக்கரசரின் திருத்தாண்டகப் பாடல்களிலும் இவ் இசைக் கருவிகள் பேசப்படுகின்றன.

சந்திரனை மாகங்கை எனத் தொடங்கும் திருவதிகை வீரட்டானத் திற்குரிய பதிகம் சிவபிரானின் அடையாளம் இப்பதிகத்தில் பேசப் பெறுகின்றது. எனவே இதற்கு அடையாளத் திருப்பதிகம் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. இப்பதிகத்தின் ஏழாம் பாடல்,

குடமுழவம், கொக்கரை, கைத்தாளம், மொந்தை
குறள் பூதம் முன்பாடத் தான் ஆடும்மே

எனத் தொடங்குகின்றது. ஐந்தாம் பாடலிலும் குடமுழவம், வீணை, தாளம், குறுநடைய சிறுபூதம் முழக்க மாகநத்து ஆடுமே எனக் காணப்படுகிறது.

இவற்றால் பூதங்கள் இசைக்கருவிகளை இறைவன் ஆடும் தகுதிக்கேற்ப முழக்கும் இசைத்திறன் வாய்ந்தனவாக உள்ள அற்புதம் தெரிய வருகின்றது.

திருஆரூர்ப் பதிகத்திலும் இசைக்கருவிகள் பயின்று வந்துள்ளன.

''குழல் மொந்தை தாளம், வீணை
கொக்கரையில் சச்சரியின் பாணியானை''

என்ற வரிகளில் சச்சரி என்ற பாணி குறித்துப் பேசப்பெறுகின்றது. சச்சரி என்பதனை 108 தாளங்களில் ஒன்றாகவும் கருதலாம் என முனைவர் அங்கயற்கண்ணி தமது 'திருநாவுக்கரசர் தேவாரப் பாடல்களில் இசை' என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

திருவாய்மூர்ப் பதிக ஏழாம் பாடலில் இசைக்குறிப்பும் இசைக் கருவிகள் பற்றிய குறிப்பும் காணப்பெறுகின்றன.

'கொக்கரையும் சச்சரியும் கொள்கைகண்டேன்
இழைஆர் புரிநூல் வலத்தே கண்டேன்
ஏழ்இசை யாழ் வீணை முரலக்கண்டேன்
தழைஆர் சடைகண்டேன்'

தக்கையோடு தாளம் கறங்கக் கண்டேன் இப்பாடல் கொக்கரை, சச்சரி, யாழ், வீணை, தக்கை, தாளம் போன்ற இசைக்கருவிகள் வழக்கிலிருந்ததைப் பேசுகின்றது.

இறைவன் ஒலிவடிவமாக உள்ளான். காற்று ஒலியை வேறு படுத்துகையில் இசை ஏற்படுகிறது. இறைவனை நாதவடிவமாக நம் முன்னோர் பணிந்து வந்துள்ளனர்.

வேதத்தாய் கீதத்தாய், விரவி எங்கும்

(திருக்கழிப்பாலை பதிகம், வரி - 1)

ஓசை ஒலிஎலாம் ஆனால் நீயே (திருஐயாறு பதிகம்)

தமிழோடு இசைபாடல்மறந்தறியேன்
பண்ணில் ஓசைநீ. (திருவீரட்டானம்)

என்பவனாகிய பாடல் வரிக்ள் இசையின் மேன்மையினையும் இறைவன் இசையுடன் இரண்டறக்கலந்து அருள் பாலிக்கும் தன்மையையும் உணர்த்துகின்றன.

மிகப் பழமையான காலத்தில் இறைவனை இசை பாடி வழிபடும் மரபு மேற்கொள்ளப்பட்டதை அறிய முடிகிறது. நாவுக்கரசர் வாழ்ந்த காலத்தில் சமய மறுமலர்ச்சி ஏற்பட்டுச் சைவம் தழைத்தது. இவ்வாறு சைவ சமயப் புத்துணர்ச்சி ஏற்பட இசை வழிபாடுகள் காரணமாக இருந்ததாகக் கொள்ளமுடிகிறது.

எழுவகைப் பண்களையும் பாடி இசை வழிபாடு நிகழ்ந்த சோழ, பல்லவ, பாண்டிய மன்னர்களும் பேருதவி புரிந்துள்ளனர்.

மேற்கண்டவற்றால் பலவகை இசைக்கருவிகளிருந்ததையும் நரம்புக் கருவிகளில் யாழ் போன்ற மரத்தால் செய்யப்பெற்ற கருவிகள் இருந்ததையும் அவை நாதக்கருவிகளின் இருபிரிவுகளாகச் செயல்பட்டதையும் அறிகின்றோம். இசையைப் பண் வழி ஒலிக்கும் கருவிகளாக யாழ், வீணை, குரல், சங்கு போன்றவை இருந்தன எனவும் தாள வழி ஒலிக்கும் கருவி களாக கொட்டு, கொக்கரை, கொடுகொட்டி, பறை, மொந்தை, பாணி, சச்சரி, சல்லரி, முழவு ஆகியவையும் இருந்தனவாக அறிய முடிகிறது.

இசையின் பயன்கள் தவறிழைத்த இராவணன் மன்னிப்பு, மூத்த திருநாவுக்கரசு உயிர் பெற்றமை, திருமறைக்காட்டின் திருக்கதவம் திறக்கப்பெற்றமை, இறைவனிடம் வாசி தீரக் காசு பெற்று உலகின் பஞ்சம் தீர்த்தமை ஆகிய உதாரணங்களாகும்.

105. யாப்பு வளர்ச்சியில் நாவுக்கரசர்

நா. லோகநாதன், வளவனூர்.

திருநாவுக்கரசர், இறைவனைக் காதலால் கசிந்து கசிந்து கண்ணீர் மல்க, அருளாண்மை நிறைந்த அமுதப் பாவினால் பரவி வழிபட்டார். அவர் முன்னோர் நூல்களைக் கசடறக் கற்றவர். அவர் பாடிய பாடல் களை மூன்று திருமுறைகளாக ஆன்றோர்கள் பகுத்துள்ளனர். அவை நான்காம் திருமுறை, ஐந்தாம் திருமுறை, ஆறாம் திருமுறையாகும். அவர் பாடல்களிலமைந்த யாப்பியலமைப்பை ஆய்வதே ஆய்வின் நோக்கமாகும்.

அவர்தம் பாடல்களைப் பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகிய இருவரும்,

"தரவு இன்றாகித் தாழிசை பெற்றும்
....
யாப்பினும் பொருளினும் வேற்றுமையுடையது
கொச்சக ஒருபோகு ஆகும்என்ப" (தொ.செ.148)

என்ற விதிக்கிணங்கக் கொச்சக ஒருபோகு என்ற பா அமைப்பில் அடக்குவர்.

தொல்காப்பியர் தாம் கூறினதுபோக, கூறாதனவற்றையும் கூறியதோடு சிறிது ஒத்துவருமாயின் அவற்றோடு இணைத்துக் கூறிக் கொள்க என்ற நிலையில்,

செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி
இழைத்த இலக்கணம் பிழைத்தன போல
வருவ உளஎனினும் வந்தவற் றியலால்
திரிபின்றி முடித்தல் தெள்ளியோர் கடனே. (தொ.செ. 241)

என்றார்.

அப்பர் தம் பாடல்கள்

அப்பருடைய பாடல்களில் உள்ளம் தோய்ந்த சேக்கிழார், அவர் பாடிய பாடல்களைத் திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில்,

விளங்குபெருந் திருமுன்றின் மேவுதிருப் பணிசெய்தே
உளங்கொடிரு விருத்தங்க ளோங்குதிருக் குறுந்தொகைகள்

களங்கொடிரு நேரிசைகள் பலபாடிக் கைதொழுது
வளங்கொடிருப் பதியதனிற் பலநாள்கள் வைகினார்
(பெ.பு.தி.நா.நா.பு. 337)

என்றும்,

திருவாலங் காடுறையும் செல்வந்தர் மெனச்சிறப்பின்
ஒருவாத பெருந்திருத்தாண் டகமுதலா வோங்குதமிழ்ப்
பெருமை வாய்மைத் தொடைமாலை பலபாடிப் பிறபதியு
மருவார்வம் பெறவணங்கி வடதிசைமேல் வழிக்கொள்வார்
(பெ.பு.தி.நா.நா.பு. 342)

என்றும் கூறிச் சென்றுள்ளார்.

அப்பரடிகள் உளங்கொள் திருவிருத்தங்கள், ஓங்கு திருக்குறுந்தொகைகள், திருநேரிசைகள், திருத்தாண்டகங்கள் ஆகிய பாமாலைகளைப் பாடியுள்ளார். மேலும் சந்த விருத்தங்கள், திருவங்கமாலை போன்றவற்றைப் பாடியுள்ளார்.

பா மாற்றங்கள்

தொல்காப்பியர் காலத்திற்கு முன் அகப்பாடல்களைக் கலிப்பாவிலும் பரிபாடலிலும் புலவர்கள் பாடினர் என்று நாடக வழக்கினும்...(தொல். அகத். 53) என்ற பாமூலம் தொல்காப்பியர் சுட்டுகிறார். சங்ககாலப் புலவர்கள் சங்ககாலத்தில் எட்டுத்தொகை, பத்துப்பாடல்களை ஆசிரியப் பாவிலேயே அகம் புறம் பாடினர். சங்க மருவிய காலத்தில் வெண்பாவைத் தேர்ந்து அப்பாவிலேயே அறம், அகம், புறம், இறையாண்மை, சமயம் ஆகிய பொருண்மைக் கூறுகளைப் பாடினர். பல்லவர் காலத்தில் பக்தியிலக்கியப் பாடல்களைக் கலிப்பாவில் மிகுதியாகப் பாடினர். தேவாரப் பாடல்கள் கலியோசை தழுவிய விருத்தப் பாக்களின் மாறுபட்ட வடிவங்களே ஆகும். ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு பா, பாவினங்கள் செழுமையுற்றிருந்த நிலையை உணரலாம்.

நான்காம் திருமுறை

அப்பர் இத்திருமுறையில் பல்வகைப் பண்களில் பல்வகைப் பா, பாவினங்களை இயற்றியுள்ளார். இத்திருமுறையில் அவர் பயன்படுத்திய பண்கள் கொல்லி, காந்தாரம், பியந்தைக் காந்தாரம், சாதாரி, காந்தாரப் பஞ்சமம், பழந்தக்க ராகம், பழம் பஞ்சரம், இந்தளம், சீகாமரம், குறிஞ்சி ஆகியனவாகும். மேலும் அவர் பாடிய அருள் பாமாலைகள் தரவு கொச்சகம், கலித்தாழிசை, கலித்துறை, கட்டளைக் கலித்துறை, ஆசிரிய இணைக் குறட்டுறை, அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம் ஆகியனவாகும்.

தரவு கொச்சகம்

அப்பர்தம், தரவு கொச்சகத்தை இருவகையாக வகுக்கலாம்.

1. வெண்டளையும் கலித்தளையும் இணைந்து வரல்
2. வெண்டளை மட்டும் வரல்.

சான்று :

1. "தேனோக்கும் கிளிமழலை உமைகேள்வன் செழும்பவளம்
   தானோக்கும் திருமேனி தழலுருவாம் சங்கரன்"
   .... (4.7.2)

இப்பாவில் கலித்தளை, வெண்டளை இணைந்துள்ளது.

சான்று :

2. காரமுது கொன்றை கடிநாறு தண்ணென்ன
   நீரமுது கோதையோடு ஆடிய நீள்மார்பன்
   .... (4.19.195)

காய்ச்சீர் பயின்ற நாற்சீரடியிடையே, மாச்சீர், விளச்சீர் விரவி; வெண்டளை பெற்று வந்துள்ளது.

கலித்துறை

முதற்சீர் நான்கும் மாச்சீர் விளச்சீர் கலந்து ஈற்றுச்சீர் காய்ச்சீராய் ஐஞ்சீரடி பெற்று வரும்.

சான்று :

"குணங்கள்	பேசி	கூடி	பாடித்	தொண்டர்கள்
பிணங்கித்	தம்மில்	பித்தைப்	போலப்	பிதற்றுவார்"
புளிமா	தேமா	தேமா	தேமா	காய்ச்சீர் (4.27.4)

இந்நிலையிலுள்ளவை பத்து உள்ளன.

கட்டளைக் கலித்துறை

இலக்கணம்

"அடியடி தோறு மைஞ்சீ ராகி,
முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்
கடையொரு சீரும் விளங்கா யாகி
நேர்பதி னாறே நிரைபதி னேழென்
றோதினர் கலித்துறை யோரடிக் கெழுத்தே"

என்ற விதிப்படி முதல் நான்கு சீர்கள் ஈரசைகள், ஐந்தாம் சீர் விளங்காய்ச் சீராக வரல் வேண்டும்.

சான்று :

"கைத்தலை மான்மறி யேந்திய கையன் கனல்மழுவன்"
(90.2.1)

இவ்வடி நேரசையாக இருப்பதால் பதினாறு எழுத்துக்கள் உள்ளன.

சான்று :

"எரியும் மழுவினன் எண்ணிய மற்றொரு வன்தலையுள்"
(90.8.1)

இவ்வடி நிரையசையால் தொடங்குவதால் பதினேழு எழுத்துக்கள் உள்ளன.

கலித்தாழிசை

முதலடி நாற்சீராய் இரண்டாமடி முதலடியைவிட ஒரு சீர் மிக்கு ஈரடி பாசுரமாய் அமைதல்.

சான்று :

மூக்கேநீ முரலாய்முது காடுறை முக்கணனை
வாக்கேநோக் கியமங்கை மணாளனை மூக்கேநீ முரலாய்
(4.9.4)

முதலடியைவிட அடுத்த அடி ஒரு சீர் மிக்குளது.

ஆசிரிய இணைக்குறட்டுறை

முதலடி மூன்றாமடிகள் அறுசீர் பெற்று மற்றையடிகள் நாற்சீர், மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர், கனிச்சீர் பெற்று வருவது ஆசிரிய இணைக்குறட்டுறையாகும்.

சான்று :

"பூங்கழல் தொழுதும் பரவியும் புண்ணிய புனிதாஉன் பொற்கழல்
ஈங்கிருக்கப் பெற்றேன் என்னகுறை யுடையேன்" (4.20.4)

இப்பாடலில் முதலடி அறுசீராக மற்றையடி நான்கு சீராக அமைந்துள்ளது. ஆதலால் இஃது ஆசிரிய இணைக்குறட்டுறையாகும்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இலக்கணம்

"அறுசீர் எழுசீர் அடிமிக நின்றவும்
குறைவில் நான்கடி விருத்தம் ஆகும்" (அவி. 90)

அப்பர்தம் பாடல்களில் அறுசீர் விருத்தங்கள் அமைந்த நிலை.

1. முதற்சீரும் நான்காம் சீரும் கனிச்சீர்கள் மற்றவை மா/காய்ச்சீர்கள்
2. முதற்சீரும் நான்காம் சீரும் காய்ச்சீர்/விளம் மற்றவை ஈரசைச் சீர்கள்
3. முதற்சீரில் விளச்சீர் கலந்து இடையே காய்ச்சீர் பெறல்
4. காய்ச்சீர் நான்கு மாச்சீர் இரண்டு வரல்
5. முதற்சீர் விளச்சீர்/மாச்சீர் நிற்றல்
6. விளம் / காய்ச்சீர் மா / விளம் தேமா
7. காய்ச்சீர்/விளம் காய்ச்சீர்/மா தேமா.

ஆகிய நிலைகளில் உள்ளன.

சான்று :

''வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மனம் ஒன்றும் இலாமையி னால்'' (4.1.8)

முதற்சீரும், நான்காம் சீரும் கனிச்சீர்களாகவும் இரண்டாம் சீரும் ஐந்தாம் சீரும் மாச்சீர்களாகவும் மூன்றாம் சீரும் ஆறாம் சீரும் காய்ச்சீர் களாகவும் வந்துள்ளன.

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

விளச்சீர், விளங்காய் மாச்சீர்/காய்ச்சீர், மாச்சீர்/காய்ச்சீர்/ மாச்சீர், மாச்சீர் மாச்சீர் என்ற நிலையில் வரும்.

சான்று :

''கணிவளம் வேங்கையோடு கடிதிங்கள் கண்ணி
கழல்கால் சிலம்ப அழகார்'' (8.6.1)

இப்பாடலில் விளம், விளங்காய், காய்ச்சீர், மாச்சீர் மாச்சீர் மாச்சீர் மாச்சீர் ஆகிய சீர்கள் வந்துள்ளன.

கலிவிருத்தம் : ஐந்தாம் திருமுறை

அப்பர் பாடல்கள் ஒரு மா கூவிளம் கூவிளம் கூவிளம் என்ற அமைப்பில் நான்கடிகளைக் கொண்டு வருவதோடு, சிறுபான்மை காய்ச்சீரோடு வருதலுமுண்டு. முதற்சீர் நீங்கலாக மற்ற சீர்கள் வெண்டளை பெற்று வரும். இஃதோர் சிறப்பாகும்.

சான்று :

நாடி நாரணன் நான்முகன் என்றிவர்
மா கூவிளம் கூவிளம் கூவிளம் (5.1.10)

இப்பாடல் வெண்டளை பிறழாமல் வந்துள்ளது. ஐந்தாம் திருமுறை முழுவதும் இவ்வகைப் பாடல்களே.

தாண்டகம் : ஆறாம் திருமுறை

அப்பரடிகளால் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட பா தாண்டக மாகும். தாண்டவமாடுகின்ற இறைவனைத் தாண்டகப் பாக்களால் அப்பரடிகள் மனமுருகிப் பாடுகிறார். இவர் தம் பாடல்கள் தன்னுணர்ச்சி இறையாண்மைப் பாடல்களாகும்.

தாண்டகப் பா என்பது எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தை ஒருவாறு ஒக்கும். தொல்காப்பியர் எண்சீரடியைப் பற்றி யாண்டும் இயம்பிலர். சங்க இலக்கியங்களில் எண்சீரடியமைந்த பாக்கள் யாண்டும் காணவில்லை. சிலப்பதிகார வரிப்பாடல்களில் கூட எண்சீரடி இல்லை.

காக்கைபாடினியார் முதன் முதலில் எண்சீரடிக்கு இலக்கணம் வகுக்கிறார்.

''இரண்டு முதலா எட்டீ றாகத்
திரண்ட சீரான் அடிமுடி வுடைய
இறந்தன் வந்து நிறைந்தடி முடியினும்
சிறந்த அல்ல செய்யு ளுள்ளே'' (கா.பா)

கி.பி. 6-ஆம் நூற்றாண்டினிடையில் திருநாவுக்கரசரால் எண்சீர் யாப்பு அறிமுகப் படுத்தப்படுகிறது. காக்கைபாடினியார் கூறிய எண்சீர் இலக்கணத்திற்குத் திருநாவுக்கரசரால் இலக்கியம் படைக்கப்படுகிறது.

தாண்டக இலக்கணம்

தாண்டகச் செய்யுளுக்குக் காலத்தால் பிற்பட்ட பன்னிருபாட்டியல் இலக்கியம் கண்டு இலக்கணம் வகுக்கின்றது.

''மூவிரண் டேனும் இருநான் கேனும்
சீர்வகை நாட்டிச் செய்யுளின் ஆடவர்
கடவுளர்ப் புகழ்வன தாண்டகம் அவற்றுள்
அறுசீர்க் குறியது நெடியது எண்சீராம்''

(ப.பா.இ. 112)

தாண்டகச் செய்யுள்கள் இருவகையின. நேரடிச் செய்யுளில் அடிதோறும் அறுசீரமைவது குறுந்தாண்டகம். அளவடிக்கண் எண்சீரமைவது நெடுந் தாண்டகம். இதன் பொருண்மைக் கூறுகள் இறைவர், ஆடவர் புகழ்தலாகும்.

காலத்தால் பிற்பட்ட முத்துவீரியம் தாண்டகச் செய்யுளில் அடிதோறும் இருபத்தேழு எழுத்துக்கள் மேல் வருமியல்பு இதற்குரித்து என்கிறது. நான்கடிகளில் எழுத்தெண்ணிக்கை ஒத்துவருமாயின் அஃது அளவியல் தாண்டகம். நான்கடிகளில் எழுத்தெண்ணிக்கை ஒத்துவராவிட்டால் அளவழித் தாண்டகம் ஆகும்.

இருபத்தேழு	எழுத்து	ஆதி	யாக
உயர்ந்த	எழுத்து	அடியினவாய்	எழுத்தும்
குருவும்	லகுவும்	ஒத்து	வந்தன
அளவியல்	தாண்டகம்	எனவும்	அக்கரம்
ஒவ்வாது	எழுத்தலகு	ஒவ்வாது	வந்தன
அளவழித்	தாண்டகம்	எனவும்	பெயர்பெறும்

(மு.வீ.யா.ஒ. 154)

அப்பரடிகள் இவ்வமைப்பில் ஆறாம் திருமுறையைப் பாடியுள்ளார்.

அப்பர்தம் தாண்டகப் பாடல்களைக் கீழ்வரும் நிலையில் அமைக்கலாம். அரையடிக்கு

1.	ஒருமா	புளிமா	புளிமா	தேமா
2.	காய்ச்சீர்	காய்ச்சீர்	மா	தேமா
3.	விளம்	தேமா	தேமா	புளிமாங்காய்
	தேமா	புளிமாங்காய்	தேமா	புளிமா

மூன்றாம் நிலையில் உள்ள அமைப்பு; இரட்டிக்காத தாண்டகச் செய்யுளாகும். சான்று பதினான்காம் பதிகமாகும்.

சான்று :

அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்

(6.1.1)

இப்பாடல் காய்ச்சீர் காய்ச்சீர் மா தேமா என்ற அமைப்பில் உள்ளது.

எதுகை மோனை

அப்பர், தம் பாடல்களில் தலையாகெதுகைகளைப் பெரும்பாலான பாடல்களிலமைத்து ஓசையின்பத்தை மிகுவிக்கிறார். சீரளவில், ஏழுவகை மோனைகளோடு, முரண்தொடைகளும் அமைத்துள்ளார். ஆறாம் திருமுறைத் தாண்டகச் செய்யுளில் 27 பாடல்களில் ஈற்றுச் சீர்கள் நிரையசையாக வந்துள்ளன. ஒரு பாடலில் நேரசையாக வந்துள்ளது. இசைப் பாடல்கள் ஆதலால் இந்நிலை போலும். பாடல்களின் ஒவ்வோர் அடியின் ஈற்றுச்சீர் அடுத்த அடிகளின் ஈற்றுச் சீரோடு ஒத்து உள்ளன. இஃதியைபாகும். இவ்வியைபுகள் பல பாடல்களில் அமைந்து ஓசை இன்பத்தை நல்கா நிற்கின்றது.

புதுமைகள்

விடம் தீர்த்த திருப்பதிகத்தில் (18-ஆம் பதிகம்) உள்ள பாடல்கள் அனைத்தும் ஒன்று இரண்டு எண்ணிக்கையில் பத்து முடிய உள்ள

பாடல்களனைத்தும்; எண் அளவிலமைந்து; அப்பாக்கள் கலிவிருத்த அமைப்பிலுள்ளன. இஃதோர் புதுமையாகும்.

தலை, கண், மூக்கு, செவி, வாய், நெஞ்சு, கை, யாக்கை, கால் ஆகிய உறுப்புக்களை ஒவ்வோர் பாடலிலும் வைத்து விளிக்கும் நிலையில் கலித்தாழிசையில் பாடியுள்ளார். இஃதும் ஒரு புதுமையாகும். இதற்குத் திருவங்கமாலை எனப் பெயரிடப்பட்டுள்ளது.

தாண்டகச் செய்யுள் எண்சீர் விருத்தத்தை ஒத்த நிலையிலோடு எழுத்து எண்ணிக்கையும் கொண்டியங்குகின்ற அமைப்பிலுள்ளது. இஃதோர் புதுமையாகும்.

பழமொழிகளை வைத்து அப்பரடிகள் பல பாடல்களை இயற்றி யுள்ளார்.

தொல்காப்பியர் கூறிய அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு ஆகிய எண்வகை வனப்புகளுக்கு அப்பரடிகள் இனிய பாடல்களைப் பாடியுள்ளார்.

மூன்றாம் பதிகத்தில் அறுசீர் விருத்தத்தில் நான்கடிகளோடு மேலும் ஓரடியைப் பாடிப் புதுமை செய்துள்ளார்.

அப்பர் பாடல்களின் அமைப்பியல்

கலிவிருத்தப் பாடல்கள் 1066 (34.77%). தாண்டகப் பாடல்கள் 980 (31.96%)அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தப் பாடல்கள் 625 (20.39%), கட்டளைக் கலித்துறைப் பாடல்கள் 302 (9.84%), தரவுகொச்சகப் பாடல்கள் 41 (1.37%), எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப் பாடல்கள் 11 (0.35%), எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தப் பாடல்கள் 10 (0.33%), கலித்துறைப் பாடல்கள் 10 (0.33%), கலித்தாழிசைப் பாடல்கள் 10 (0.33%), ஆசிரிய இணைக்குறட்டுறைப் பாடல்கள் 10 (0.33%) ஆக 3065 பாடல்களை அப்பரடிகள் பாடியுள்ளார்.

அப்பரடிகள் யாப்பியலில் பல்வகையான புதிய பாக்களை உருவாக்கியுள்ளார். அவர் இசையோடு அமைந்த பாடல்களைப் பாடி இறைவனை வழிபட்டு வாழ்ந்து வந்தார்.

106. நாவுக்கரசரின் பக்தியும் அற்புதமும்

எம். லோகநாயகி, சென்னை.

சமணமும் பௌத்தமும் தலைநிமிர இந்து சமயம் இருண்டிருந்த வறண்ட கால கட்டத்தில் நாயன்மார்களாய் - ஆழ்வார்களாய் வந்துதித்தனர் இந்து சமயச் சான்றோர்கள். ''பக்தி இயக்கம்'' மலர, இந்து சமயம் மறுமலர்ச்சியுற்றது.

திருநாவுக்கரசரின் வாழ்வும் வரலாறும்

திருமுனைப்பாடித் திருவாமூரில் மாதினி - புகழனாரின் மகனாய் வந்துதித்தது நல்முத்து; சைவச்சொத்து, தமக்கென மணம் பேசப்பெற்ற "கலிப்பகையாரின்" மரணத்தால் தாமும் மாய்ந்துபோக நினைத்த தமக்கை திலகவதியார், "அருள்நோக்கர் மருணீக்கியாம் - தம் தம்பிக்காய் - தவவாழ்வு வாழலானார். சமய தாகத்துடன் உண்மைச் சமயம் அறிய விரும்பிய மருணீக்கியார் சமணத்தில் பற்றுக்கொண்டார்; தருமசேனரானார். தம்பியின் நிலைக்கிரங்கிய திலகவதியார் ஈசனிடம் வேண்ட, மருணீக்கியைச் சூலைநோய் பற்ற, சிவனருளால் மீண்டும் சைவரானார் மருள்நீக்கியார்.

திருநாவுக்கரசரின் பக்திச் சிறப்பும், அற்புத நிகழ்வுகளும்

மனிதனையும் தெய்வத்தையும் இணைக்கும் பாலமே பக்தி. தாயன்பு, தந்தையன்பு, குருபக்தி, காதலன்பு போன்றதே இறைவனிடம் நாம் செலுத்தும் அன்பு. அவ்வன்பே ''பக்தி'' எனப்படுகிறது. பக்தனது உள்ளத்தில் எண்ணெய் ஒழுக்குப் போன்று சுரக்கும் இறை அன்புணர்வே பக்தியாகிறது.

இறைவனுக்கு அடிமையாய் தன்னைக் கருதியிருக்கும் நிலை தாசபக்தி; இறைவனைத் தோழனாய்க் கருதிப் பக்தி செய்தல் தோழபக்தி; இறைவனைக் குழந்தையாய்க் கருதி பக்தி செய்தல் தாய்மைபக்தி; இறைவனைத் தன் நாயகனாகக் கருதி அன்பு செய்தல் மதுரபக்தியாகும்.

சிவனாகிய எம்பெருமானைத் தம் ஆண்டானாகவும் தம்மை அவனது அடிமையாகவும் கொண்டு சிவபக்தி செலுத்தியவர் நாவுக்கரசர்.

"மெய் உரு ஞானத்திரள்
மனம் உருகா நெக்
கழுங்கண் உழவாரப்படை கையினரான

அப்பர், தமக்கை திலகவதியார் திருநீற்றுப் பிரசாதம் அளித்திடப் பெற்று, ஆலயம் தொழுது வலம் வந்து, சிவனருளால் "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்று பதிகம் பாடிட, அவரது சூலைநோய் விட்டு ஓடிட, "நாவுக்கரசு" என்று உலகு ஏழினும் நின்நாமம் நயப்புற நண்ணுக" என்று வான்ஒலி ஒலித்திட "அவனருளால் அவன்தாள் வணங்கப்பெற்றது; நாவரசு வாழ்வில் அற்புதம் ஆரம்பமானது. நாவரசுவின் தாஸ்ய பக்தி, அவரது வாழ்வில் தொடர்ந்து அற்புதங்களை நிகழ்த்தியது. தாஸ்ய பக்தர் திருநாவுக்கரசரை அற்புத நாதராக்கியது.

"நறுமா மலர்கொய்து நீரில்மூழ்கி
நாடோறும் நின்கழலே ஏத்தி வாழ்த்தித்
துறவாத துன்பம் துறந்தேன்"

என்று சிவபக்தியால் துன்பம் - துயர்களைக் கடக்கலாம் என்று தம்மனுபவத்தைக் காட்டிப் பக்தியின் மேன்மையை வலியுறுத்துகிறார் நாவுக்கரசர்.

திருநாவுக்கரசர் 'மீண்டும் சைவன் ஆனார்' என்பதனை அறிந்த சமணர்கள், மன்னன் மகேந்திரவர்மனைத் தூண்டி, நாவுக்கரசருக்கு, அளவில்லாத் துன்பங்களை அடுக்கடுக்காய்த் தந்தனர். முதலில் நாவுக்கரசரை நீற்றறையிலிட்டனர். ஆனால் நீற்றறையோ,

"வெய்யநீற் றறையதுதான்
வீங்கிளவே னிற்பருவம்
தைவருதண் தென்றலனைத்
தண்கழுநீர்த் தடம்போன்று
மெய்யொளிவெண் ணிலவலர்ந்து
மூன்றயாழ் ஒலியினதாய்
ஐயர்திரு வடிநீழல்
அருளாகிக் குளிர்ந்ததே" (திருநாவுக்கரசர், செ. 98)

என்றபடி, நாவுக்கரசரின் சிவபக்தியால் - சிவஅன்பால் - "இளவேனிலாய், தென்றலாய், வெண்ணிலவாய், யாழொலியாய், இறைதிருவடி நீழலாய் - குளிர்ந்தது; இன்பமாயிருந்தது; பக்தியால் இவ்அற்புதம் நிகழ்ந்தது.

சமண சமய மந்திரவலியால் நாவுக்கரசர் நீற்றறையில் துன்பமின்றி இனிதே இருந்தார் என்று மன்னனை நம்பவைத்த சமணர்கள், "நாவுக்கரசருக்கு நஞ்சமுது தந்தனர்". நீலகண்டனின் பக்தருக்குச் சிவனதருளால் அந்நஞ்சும் அமுதமானது; அற்புதத் திருவிளையாடல் நிகழ்ந்தது.

"..... சமணர் தந்த
நஞ்சமு தாக்குவித்தார்
ஈண்டு....... நனிபள்ளி படிகளாரே"

பிரகலாதருக்கு இரணியன் தந்த துன்பங்கள் நினைவுகூரத்தக்கன.

அப்பருக்குச் சமணர்கள் இழைத்த தீமைகள் நன்மைகளாயின; துன்பங்கள் இன்பங்களாயின.

"அவர் சொல்ல ஆகும்
அவர் கட்டளையிட நிற்கும்"

என்ற விவிலிய வசனப்படி, நாவுக்கரசரின் துன்பங்கள் யாவும் அவரது தாஸ்ய பக்தியால் - சிவசக்தியால் இன்பங்களாய் - நன்மைகளாய் மாறின; அற்புதங்களாய் நிகழ்ந்தன.

நாவுக்கரசரை அழிக்கச் சமணர்கள் மன்னனைக் கொண்டு யானையை ஏவ, யானையோ அப்பரைத் தொழுதது; தொழுது அகன்றது.

"மலையே வந்து விழினும் மனிதர்காள்!
நிலையினின்று கலங்கப் பெறுதிரேல்
தலைவனாகிய ஈசன் தமர்களைக்
கொலைசெய் யானைதான் கொன்றிடு கிற்குமே" (5-91-5)

சமணரால் கல்லில் பிணித்துக் கடலில் வீழ்த்தப் பெற்றார் நாவுக்கரசர். நாவுக்கரசரின் மனம் சிவத்தில் ஆழ, அவரது சிவபக்தியால் அற்புதம் நிகழ்கிறது. மூழ்கும் கல்லானது மிதக்கும் தெப்பமானது.

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயமே"

நாவுக்கரசருக்கு ஏற்பட்ட துன்பங்கள் யாவும் சிவபெருமானை ஆண்டானாகவும் தம்மை அவனது அடிமையாகவும் கொண்ட அவரது தாசபக்தியால் - சரணாகதியால் நீங்கின.

"பேயனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே"

"பித்தனாய் ஒழிந்தேன் எம்பிரானுக்கே"

என்று குலசேகராழ்வார் திருமாலிடம் சரணடைவது போல் அப்பரும்,

"மருவாகி நின்னடியே மறவேன் அம்மான்
மறித்தொருகால் பிறப்புண்டேல் மறவாவண்ணம்
திருவாரூர் மணவாளா திருத்தெங்கூராய்
செம்பொன் ஏகம்பனே திகைத்திட்டேனே" (239:6)

என்று சிவனிடம் உருகுகிறார்; தாசபக்தராய் மிளிர்கிறார்.

ஆக, தாசபக்தரான நாவுக்கரசரின் தாஸ்ய பக்தி அவரது துன்பங்களை இன்பங்களாய் ஆக்கியது; அப்பரை அற்புதங்களின் நாதராக்கியது என்பது மிகையாகாது.

107. இடர்களும் இன்னல்களும்

செ. வள்ளிநாயகம், தஞ்சாவூர்.

இடையறாப் பேரன்பும் மழைவாரும்
இணைவிழியும் உழவாரத்திண்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீச
பெருத்தகைதன் ஞானப்பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப்
பொலிவழகும் துதித்து வாழ்வாம் (காஞ்சிப்புராணம்)

"நினைந்துருகும் அடியாரை நையவைத்தார்"

என்பது அப்பர் வாக்கு.

ஆண்டவன் மெய்யடியவர், அல்லல் என்னும் நெருப்பில் புடமிட்ட பொன்னென விளங்குபவர். இது எச்சமயத்தாரும் கண்ட உண்மை. அத்தகைய துன்பம் வரும் வேளையில் உள்ளம் தளராது வாழ்பவரே மெய்யடியார்கள்.

"நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ, இதற்கு நாயகமே"

என்ற மணிமொழியாரின் வாக்குப்படி அனைத்தும் அவன் செயல் என வருவதை ஏற்று அந்த வேளைகளில் அவனடி மறவாது நிற்றலே மெய்ஞான நல்வாழ்வு. அப்படிப்பட்ட நல்வாழ்வை நாவுக்கரசர் தன் வாழ்வில் எப்படி அடைந்தார் என்பதே இக்கருத்துரையின் நோக்கம்.

அகில உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தையும் இரண்டு வகையாகப் பிரிக்க இயலும். ஒன்று, நாவினால் பேசுகின்ற உயிர்கள், மற்றொன்று நாவினால் பேசாத உயிர்கள், பேசுகின்ற உயிர்கள் உயர்திணை, பேச இயலாத உயிர்கள் உயர்வு அல்லாத திணை, அதாவது அஃறிணை. உயிர்களுக்கு உயர்வு வருவது வாய்திறந்து பேசுவதால், மனிதன் பேசுகிறான் அதனால் உயர்திணையாகிறான். மனிதனை விட வலிமை உடையவை மிருகங்கள். மனிதனை விட செய்தொழில் வல்லமை உடையவை சிலந்தியும், குருவியும் மனிதனை விட நன்றியுடையது நாய் இருந்தும் இவை அனைத்தும் அஃறிணைகளே!

ஆகவே, உயர்வு என்பது வலிமையாலும், தொழிலாலும், அழகாலும், அறிவாலும் இல்லை, பேச்சினால் அமைகிறது. பேசுவது வாயன்று நாக்கு. எனவே உயர்வு என்பது நாவினால் ஏற்படுகிறது.

ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு தலைவன் வேண்டும். தலைவனை அரசன் என்பது மரபு. எனவே நாவினால் பேசுகிற சக்தியினைப் பெற்ற அனைத்து மனித உயிர்களுக்கும் அரசர் நாவுக்கரசர். இறைவனின் திருநாவால் திருநாவுக்கரசர் என்று அழைக்கப்பட்டவர்.

''நாவுக்கர சென்றுல கேழின்நின்
நன்னாம நயப்புற மன்னுக என்று
யாவர்க்கும் வியப்புற மஞ்சுறை
வானிடையே ஒரு வாய்மை யெழுந்ததுவே''

நாவுக்கரசர் முதல் பிறவியில் ''வாகீச முனிவராக'' அவதரித்தவர். தவத்தின் திண்மையினால், மனதால் ஈசனின் உள்ளம் கவர்ந்தவர். எனவேதான் அடுத்த பிறவியில் அவர் தம் நாவால் ஈசனைப் புகழ்ந்து ஈடில்லாப் புகழை அடைந்தார்.

அதனால்தான் சேக்கிழார் பெருமான்,

''திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைநெறி
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குறைசெய்ய ஒண்ணாமை யுணராதேன்''

என்று வியந்து பாடுகிறார்.

திருமுனைப்பாடி நாட்டிலே, திருவாமூர் என்கிற ஊரில், வேளாண் குடும்பத்தில், குறுக்கையர் குடி என்ற பெருமையுடைய குடியிலே தோன்றியவர் புகழனார். அவரது மனைவியார் மாதினியாரின் மணிவயிற்றில் அவதரித்தவர் மருள்நீக்கியார்.

இவர் தவ ஒழுக்கத்தில் தலைசிறந்த திலகவதியாரின் தம்பியும் ஆவார். தாயையும், தந்தையையும் இழந்த நிலையில் தமக்கையார் அரவணைப்பால் வளர்ந்துள்ளார் மருள்நீக்கியார். தம்பியின் மீதுள்ள கருணையினால் திலகவதியார் உயிர் விடத் துணிந்ததைக் கைவிட்டார். கைம்பெண் விரதம் பூண்டு, கருணை புரிந்து தவம் இருந்து வாழ்ந்து வந்தார்.

மருள்நீக்கியார் நிலையாமையை உணர்ந்து விட்டார். யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வ நிலையாமை இவைகளைச் சிந்தித்து உணர்ந்தார். ஆகவே நல்லறங்கள் புரியவேண்டும் என்று

துணிந்தார். நிறைய அறச்சாலைகளும், தண்ணீர் பந்தலும் அமைத்தார். நீர்க்குளங்கள் பல வெட்டினார். புலவர்கள் வறுமையின்றி வாழப் பரிசில்கள் அளித்தார். இவ்வாறு அவர் பலப்பல தருமங்களைப் புரிந்து வாழ்ந்து வந்தார்.

நிலையில்லாத இவ்உலக இயல்பைக் கண்டு அறவே துறந்த மருள்நீக்கியார், கொல்லாமைக்குள் .மறைந்துறையும் சமண சமயங் குறுகினார். திருப்பாதிரிப்புலியூர் சென்று சமணப்பள்ளியில் சேர்ந்தார். அங்கு சமண சமயக் கலைகளையெல்லாம் கற்றுணர்ந்து வல்லுநரானார். புலமை பெற்ற மருள்நீக்கியாருக்குச் சமண குருமார்கள் தருமசேனர் என்று பெயர் சூட்டினார்கள். தருமசேனர் தமது மதிநுட்பத்தால் பௌத்தர் களை வாதில் வென்றார். சமண சமயத்தின் தலைமையைப் பெற்றார்.

தவ ஒழுக்கத்தில் நின்ற திலகவதியார் தம்பியார் சமண சமயம் புகுந்ததால் மனம் உளைந்தார்; வேண்டுவோர், வேண்டியதை, வேண்டியவாறு அளிக்கும் விடையவரிடம் என் தம்பியைப் பரசமயப் படுகுழியினின்றும் எடுத்து அருள்புரிய வேண்டும் ஐயனே! என இறைவனிடம் இறைஞ்சி நின்றார். அம்மையாரின் வேண்டுதலை நிறைவேற்ற இறைவன் மருள்நீக்கியாருக்கு சூலை நோய் தந்து ஆட்கொண்டார்.

மருள்நீக்கியார் வேறு செயல் இன்றி, ஒழியாத துன்பம் ஒழிய, புன்சமயத் தொடர்பை விடுத்து தமக்கையார் திருவடிகளை அடையத் துணிந்தார். இரவில் புறப்பட்டு திருவதிகையடைந்தார். திலகவதியார் திருமடம் சேர்ந்தார். கருணை நிறைந்த திலகவதியார் இறைவனுடைய திருவருளை நினைந்து கைதொழுதார். பற்றறுக்கும் பரமனது பணிசெய்வாய் என்று திலகவதியார் பணிதருளி அஞ்செழுத்தோதி திருநீறு அணிவித்தார்.

புரமெரித்த பெருமானின் திருக்கோயிலை மருள்நீக்கியார் வலம் வந்து வணங்கினார். தம்பிரான் திருவருளால் தமிழ்ப் பாக்கள் புனையும் உணர்வு அவருக்கு உதித்தது. உணர்ச்சி ஊற்றுப்போல் சுரந்தது.

கூற்றா யினவாறு விலக்ககலீர் கொடுமைபல
செய்தனநான் அறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும்பகலும் பிரியாது
வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
குடரோடு தொடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீராட்டானத் துறையம் மானே!

என்று கண்ணீர் விட்டுக் கதறித் திருவருளில் மூழ்கினார்.

மருள்நீக்கியாரின் கசிந்துருகும் பான்மையைக் கண்ணுற்ற இறைவன் அவர் நோய் தீர்த்து இனி நீர் 'திருநாவுக்கரசு' என்ற நாமத்தால் ஏழுலகும் ஏத்தப் பெறுவாய் என, வானின் வழி திருஒலி நல்கி மறைந்தார்.

திருநாவுக்கரசர் திருநீறும், கண்டிகையும் புனைந்தார். அவரது நெஞ்சம் அஞ்செழுத்தையும், வாக்கு தமிழ்ப் பதிகத்தையும் பாடியது. காயம், உழவாரப் படை கொண்டு திருத்தொண்டு புரிய சிவ வடிவாய் வாழ்ந்து வந்தார்.

இறைவன் திருவடி பற்றிய திருநாவுக்கரசர் தம் உடலுக்கும் உள்ளத்துக்கும் நிகழ்ந்த சோதனைகளை அவன் அருளால் சாதனையாக மாற்றி நீங்கா புகழை ஈட்டினார்.

நீற்றறை குளிர்ந்தது

சமண சமயத்தினைத் துறந்து மீண்டும் சைவத்தில் சிறந்து நின்ற திருநாவுக்கரசு சுவாமிகளைச் சமணர்களின் தூண்டுதலால் சுண்ணாம்பு சுடப்படும் அறையினுள் (நீற்றறை) அடைத்துத் தாளிட்டுக் காப்புகள் அமைக்கச் செய்தான் பல்லவ மன்னன். சுவாமிகள் அந்நீற்றறையினுள் அணைந்தபோது அம்பலத்தடியின் தாள் நிழலையே அடைக்கலமாகப் புகுந்து "ஈண்டு வருந்துயருளவோ ஈசனடியார்க்கு" என்று துணிந்த மனத்துடன் அத்திருத்தாளினையே உற்று நோக்கித் தொழுதிருந்தார். அந்த வெம்மையான நீற்றறையும் இளவேனிற்ப்ருவம், தென்றல்காற்று, குளிர்ந்த நீர்த்தடாகம், வெண்ணிலவொளி ஆகியவற்றின் தன்மைகள் பொருந்தி ஐயருடைய திருவடி நிழல் அருளக் குளிர்ந்தது.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

இறைவனின் திருவடிக் கருணையாலும், நாவுக்கரசரின் திண்மையான பக்தியாலும் நிகழ்வுற்ற இவ்வரும்பெரும் செயலைச் சேக்கிழார் பெருமான் விவரிக்கும்போது,

மாசின்மதி நீடுபுனன் மன்னிவளர் சென்னியானைப்
பேசவினி யானையுல காளுடைய பிஞ்ஞகனை
ஈசனையெம் பெருமானை யெவ்வுயிருந் தருவானை
ஆசையிலா ராரமுதை யடிவணங்கி யினிதிருந்தார்.

வெய்ய நீற்றறையின் கொடுமை, துன்பம் இறைவன் திருவடி நிழலாகிக் குளிர்ந்த காரணத்தால் அவருக்கு நன்மையேயாகி இன்பத்துடன் இருந்தார் என வியந்து பாராட்டுகிறார்.

கொடுவிடம் அமுதமானது

நீற்றறையில் உயிர் தப்பிய திருநாவுக்கரசருக்கு அடுத்த சோதனை கொடிய விடம்: சமணர்கள் நஞ்சு கலந்த பாலன்னத்தை நாவுக்கரசருக்கு கொடுத்தனர்.

நஞ்சு என்று அறிந்தும் நாவுக்கரசரின் நெஞ்சம் வருந்தவில்லை. "நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கு" என்று உண்டார்.

பொடியார்க்கும் திருமேனி புனிதர்க்குப் புவனங்கள்
முடிவாக்கும் துயர் நீங்க முன்னைவிடம் அமுதானால்
படியார்க்கும் அறிவரிய பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சமுதம் ஆவதுதான் அற்புதமோ?

(பெரியபுராணம்)

நீலகண்டனின் அடிபற்றியவருக்கு விடம் அமுதமானதில் என்ன ஆச்சரியம்? இந்நிகழ்வு நாவுக்கரசருக்கு இரண்டாவது சோதனை. இறைவனின் கரம் பற்றி நடந்தவருக்கு சோதனைகள் எல்லாம் சாதனைதானே!.

கொலைக் களிறு கொல்லாது தொழுதது

சமணரது மையலில் சிக்குண்ட பல்லவ மன்னன் நாவுக்கரசரை நீற்றறையிலிட்டும் விடம் கொடுத்தும் கொல்ல முயற்சிக்க இறைவன் திருவருளால் அரசுகளுக்கு எவ்வித துன்பமும் நேராதிருந்ததைக் கண்டு மீண்டும் சமணரது தூண்டுதலின்மேல் கொலைக் களிற்றை நாவுக்கரசர் மேல் விடும்படி ஏவினான். மிகுந்த ஆரவாரத்துடன் தம்மை நெருங்கி யானை வந்தபோது, அடிகளார் சிறிதும் அஞ்சாது இடப வாகனத்தாரின் பொற்பதங்களையே தொழுதிருந்தார். "சுண்ணவெண் சந்தனத் சாந்து" என்ற திருப்பதிகத்தால் பாய்ந்து வந்த யானை, அரசுகளை வலம் வந்து வணங்கி எழுந்து நின்றது.

சுண்ணவெண் சந்தனச் சாந்தும் சுடர்திங்கட் சூளாமணியும்
வண்ண வுரிவை யுடையும் வளரும் பவள நிறமும்
அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய வரவும்
திண்ணென் கெடிலப் புனலும் உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை யஞ்ச வருவது மில்லை.

செந்தமிழ்ப் பதிகம் பாடிச் சிவ சிந்தையுடன் இருந்த ஆளுடைய அரசரைக் கண்ட யானை அவரை வலமாக வந்து எட்டு திசைகளில் உள்ள யாவரும் காணுமாறு நிலத்தில் வீழ்ந்து வணங்கி எழுந்தது.

அதுமட்டுமன்று அம்மத யானை தன்னை ஏவிய பாகர்களையும் கொன்றுவிட்டது. சமணர்கள் மீதும் பாய்ந்து மிதித்துக் கொன்றது. தப்பிப் பிழைத்த சமணர்கள் ஓடி மன்னன் மலரடி மீது வீழ்ந்து புலம்பினார்கள்.

கடலில் கல் தெப்பமாய் மிதந்தது

யானையினை ஏவியும் இறையருளால் பதிகம் பாடித் தப்பிய திருநாவுக்கரசு சுவாமிகளைக் கடைசியாகச் சமணர்கள் ஒரு கல்லோடு சேர்த்துக்கட்டி கடலில் அழுத்தினார்கள். அதுகாலை சிந்தனை உறைப்புடைய மெய்தொண்டராகிய வாகீசர் "எப்பரிசாயினுமாக" எம்பிரானை ஏத்துவேன் என்று அருட்கடலில் மூழ்கி அருந்தமிழ் முத்தெடுத்து ஈசர்க்கு மாலை தொடுத்தார்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே!.

என உயிர் உருக, ஊனுருக நாவுக்கரசர் ஐந்தெழுத்தை ஓதியதால் கல்லும் உருகித் தெப்பமாகிறது. தெப்பமாகி மிதந்த கல்லின் மீது அரசு வீற்றிருந்தார் நாவுக்கரசர்.

இறைவன் வேண்டுதல் வேண்டாமை இலாதான், தனக்குவமை இல்லாதான். பொதுவாக எல்லோருக்கும் அருந்துணையாக இருக்கிறான். சிறப்பாகத் தன்னையடைந்த அடியார்க்குப் பெருந்துணையாக இருந்து அருள்புரிகிறான்.

அருந்துணையை அடியவர்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல்ஞானத் தகத்துள் தோன்றி
வருந்துணையும் சுற்றமும் பற்றும் விட்டு
வான்புலன்க ளகத்தடக்கி மடவா ரோடும்
பொருந்தனைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்
பொதுநீக்கித் தனைநினைய வல்லோர்க் கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

இவ்வாறாகத் திருநாவுக்கரசர் அருந்தமிழ் மாலை பல சாத்திப் பணி செய்து கொண்டிருந்தார். இவ்வற்புதங்களைக் கேட்ட பல்லவ மன்னன் சமண சமயத்தின் இழுக்கினை யறிந்தான்; திருவதிகை வந்து நாவுக்கரசரைத் தொழுது சமண சமயத்தை விடுத்து சைவசமயம் சேர்ந்தான். பல இடர்களை விளைவித்த மகேந்திர பல்லவன் நாவுக்கரசரின் மலரடி வீழ்ந்து வணங்கியபோது அருள் வடிவாகிய அடிகள் அவனை வெறுக்காது தாய்போல் அணைத்து அருள் புரிந்தார். இதனை,

பல்லவர் கோன்வந்து பணியக் கருணை செய்தார்
தொல்லை நெறி வாகீசர் சேமேசா – கொல்ல

இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

என்பர் மாதவச் சிவஞான யோகிகள்.

நாவுக்கரசர் தம் இளமை முதற்கொண்டு முதுமைவரையிலும் எண்ணற்ற இன்னல்களையும், இடர்களையும் கண்டவர். தம் மனத்திண்மை யாலும், இறையருளாலும் அவற்றை வென்றவர்.

மனிதன் தன் வாழ்நாளில் இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவிக் கிறான். துன்பமே மிகுதியாக இருப்பதாக உணர்கிறான். உடலுக்கு நோயும், பசியும், வறுமையும் துன்பத்தைத் தருவன. உள்ளத்துக்கு அறியாமையும், கவலையும், தீயகுணங்களும் துன்பத்தைத் தருவன. உயிருக்கு பிறப்பும், இறப்பும் இன்னலைத் தருவன. இவையனைத்துக்கும் ஒரே மருத்துவம் என்னவெனில் இறையருள் ஒன்றேயாகும்.

இறைவனுடைய அருளைப் பெற்றால் எல்லா வகையான இடர் களும் நீங்கும், மனத்திண்மை பெருகும். அதனால் எடுத்த காரியம் இனிது நிறைவேறும்.

''முன்னவனே முன்னின்றால் முடியாத பொருள் உளதோ?''

என்பது சேக்கிழார் திருவாக்கு.

இவ்வரிய உணர்வை தம் வாழ்வாலும் வழிகாட்டுதலாலும் உலகுக்கு உணர்த்தியவர் நாவுக்கரசர். இப்பெருமானின் வழிநிற்போருக்கு வாழ்வில் துன்பம் நேரிடின் அது தொலைந்துபோகும். ஈசனின் திருவடி நிழல் கவசம்போல் காத்து நிற்கும்.

108. அப்பர் காட்டும் வழிபாட்டு முறைகள்

மு. வள்ளியம்மை, அண்ணாமலைநகர்.

உயிர்கள் இறைவனை அடைவதற்கு வழிபாடு தேவை. அவ்வழிபாடு தான் உயிர்களின் பாதுகாவலுக்கும், கல்வி, அறிவு, பொருள், புகழ் முதலான சீரிய செல்வங்கள் சேர்வதற்கும், வழிவழி மரபு சிறந்து மேம்படுவதற்கும் வழி வகுக்கின்றன. இதனைத் தொல்காப்பியர்,

''வழிபடு தெய்வம் நிற்புறங்காப்ப
பழிதீர் செல்வமொடுவழிவழி சிறந்து பொலிமின்''
(தொல். புறநிலை வாழ்த்து)

என்னும் நூற்பாவில் விளக்குவார். வழிபாட்டின் தேவையையும், வழிபாட்டின் விளைவையும் இந்நூற்பா விளக்குகிறது. அப்பர் தேவாரத்தில் வழிபாட்டில் மேற்கொள்ள வேண்டிய முறைகள் நன்கு விளக்கப்பட்டுள்ளன.

நால்வகை நெறி

இறையருளைப் பெற்று உயிர்கள் இன்புறச் சைவ மரபில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை நெறிகள் போற்றப்படு கின்றன. அப்பர் சரியையாகிய தொண்டுநெறியில் நின்றவராயினும், அவர் பாடல்கள் நான்கு நெறிகளைச் சார்ந்த உணர்வுகளையும் புலப்படுத்துகின்றன.

''நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா'' (6:31:3)

என்ற பாடல் சரியையினையும்,

''கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்'' (4:7:3)

என்ற பாடல் சரியையோடு கிரியைச் செய்திகளையும்,

''உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக'' (4:75:4)

என்ற பாடல் யோக நெறியினையும்,

ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள் (5:91:3)

என்ற பாடல் ஞானநெறியினையும் உணர்த்துகின்றன. இங்ஙனம் பல பாடல்கள் நால்வகை நெறிகளையும் வெளிப்படுத்துகின்றன. இவையாவும் வழிபடு முறைகளின் படிநெறிகள்.

பூசை முறை

உழவாரப் படை கொண்டு திருப்பணி செய்து நீராட்டுதல் முதலாக இறைவனுக்குச் செய்யும் பணிகளை விளங்கக் கூறுகிறார் நாவுக்கரசர். கன்றாப்பூர்த் திருத்தாண்டகம் இப்பூசை முறையை நன்கு தெளிவுபடுத்தி யுள்ளது (6:61) ஞானநெறிநின்று சிவபூசை செய்யும் முறையையும் கூறுகிறார் (4:76:4) வைகறைக்குமுன் கோவிலை அலகிட்டு மெழுகித் தூய்மைசெய்தல் (6:31:3) காலைப் பொழுதில் சங்கொலித்தல் (4:102:10) பறை முழுக்குதல் (5:92:2) கொன்றைமாலை சூட்டிப் பூக்களால் அர்ச்சனை செய்தல் (1:65:6) முதலான பல பூசை முறைகள் அப்பர் பாடல்களில் விளக்கம் பெறுகின்றன.

பாடித்தொழுதல்

அப்பர் 'தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்' என்று ஊர்தோறும் சென்று திருப்பணி செய்ததோடு தமிழ்ப்பணியும் செய்திருப்பது கருதத்தக்கது. தமிழ் மாலைகளால் நாம் படிமக்கலம் செய்து தொழுதும் (4:102:3) என்று தம் நெஞ்சுக்குச் சொல்வது போன்று, தம்மால் இயலும் பணி பதிகப்பணி என நவில்கின்றார்.

திருவைந்தெழுத்தின் பெருமை

திருவைந்தெழுத்தின் பெருமைகளை அப்பர், நற்றுணையாவது நாவினுக் கருங்கலமாவது, நல் அகவிளக்காவது, நன்னெறியாவது, குலநலம் கொடுப்பது என்று ஒரு தனிப்பதிகத்தில் விளக்கிக் கூறி அதனை எடுத்து மொழிவாருக்கு 'இடுக்கண் இல்லை' என்று அப்பதிகத்தின் பயனையும் (4:11) சிறக்க மொழிந்துள்ளார். இவ்விதம் ஐந்தெழுத்தின் ஆற்றல் பற்றி அப்பர் பாடல்கள் தரும் செய்திகள் பல.

திருநீற்றுப் பெருமை

அந்த வளப்பொடி, சாம்பல், சுடலை நீறு, தணல் முழுகுபொடி, வெண்ணீறு எனப் பல பெயர்களில் திருநீற்றைக் குறிப்பிட்டுள்ளார். தூநீறு, சோதிவிளக்கு நீறு, விலைபெரிய வெண்ணீறு என்பன அப்பரின் திருநீற்றுப் புகழ் மொழிகள்.

"விச்சையாவதும், வேட்கைமையாவதும்
நிச்சலும் நீறணிவாரை நினைப்பதே" (5:92:8)

என்று நீறணிவதும், நீறணிவாரை நினைப்பதும் சிறப்பு என்று சுட்டியுள்ளார்.

விண்ணப்பங்கள்

அப்பர், தம் பதிகங்களில் தன்னிரக்கத்தோடு இறைவனிடம் வேண்டுகிறார். இந்த வேண்டுதல்கள் அவர்தம் உள்ளக் கிடக்கையை

உணர்த்தவல்லன. உயிர்களின் ஈடேற்றங் கருதியும், அடியவர்களின் நன்னலம் கருதியும் அப்பர் செய்கின்ற விண்ணப்பங்கள் (4:52:8; 4:57:1; 109:2; 4: 51:8; 4:96:8). அவர்தம் பொதுநலப் போக்கையும், பரந்த மனப்பாங்கையும் புலப்படுத்துவனவாய் உள்ளன.

போலிச் சடங்குகளைக் கடிதல்

இறைவழிபாட்டில் அன்பு, உயிராக அமைவது; அப்பர் அன்பின்றிச் செய்யும் வழிபாடுகளை வெறுத்தார். பாவநாசத் திருக்குறுந்தொகையில் அவர்தம் காலத்தில் நிலவிய போலிச் சடங்குகளைத் தொகுத்துக் கூறும் வகையிலும் வெறுத்துக்கூறும் முறையிலும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது (5:99) சடங்குகளை ஆர்வமாகச் செய்வதைவிட இறைவனிடம் அன்பை முறையாகச் செலுத்துவதே சிறந்தது என்பது அப்பர் கூறும் அறிவுரை. மெய்ப்பொருளை உள்ளவாறு உணர்ந்து நுண்ணுணர்வோடு இறைவனை வணங்கும் ஞானிகட்குச் சாதனங்கள் தேவையில்லை (5:39:8) என்பதனையும் அப்பர் அறிவுறுத்தியுள்ளார்.

அப்பர் கூறும் வழிபாட்டு முறைகள் பணிவு, கனிவு, அன்பு, உண்மை, நேர்மை, உழைப்பு, மனத்தூய்மை, மனஒருமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு திகழ்கின்றன. அவரது வழிபாடு பொதுநலப் போக்குடையதாய் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

109. இறை நம்பிக்கையும் பழமொழியும்

சி. வாசுகி, பழநி.

பழமொழிகள் சமுதாயத்தின் அனுபவ முதிர்ச்சியையும் அறிவுக் கூறுகளையும் விளக்கும் சிறந்த சான்றுகளாகும். இவை மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்து விட்டவை. இவற்றின் மூலம் மக்களின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் அறிந்து கொள்ளலாம். இவை சுருக்கம், தெளிவு, பொருத்தம் ஆகிய இயல்புகளால் மாறாத அமைப்புடன் தமிழ் இலக்கியங்களில் பயின்று வருகின்றன.

பழமொழியின் விளக்கம்

உலகுக்கு உணர்த்தும் உண்மையை ஒரு சிறிய வாக்கியத்தின் மூலம் சுருக்கிக் கூறுவதே பழமொழியாகும். அப்பழமொழி முழுமையாக இல்லாவிடினும் அதை விளக்கிக் கூறும்போது முழுக்கருத்தும் வெளிப்படும் என்கிறார் துர்கா பகவத். எல்லோருக்கும் தெரிந்த உண்மைகளைச் சிறு வாக்கியத்தில் வெளிப்படுத்துவன பழமொழிகள் என ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி இயம்புகின்றது. அறிவு வளர்ச்சியிலே பிறந்து, சுருக்கம், தெளிவு, பொருத்தம் ஆகிய பண்புகளால் என்றும் இறவாமல் பழமொழிகள் இவ்வுலகில் வாழ்கின்றன என்கிறார் அரிஸ்டாட்டில்.

பழமொழி – தொல்காப்பியர் விளக்கம்

தொல்காப்பியர் பழமொழியை 'முதுசொல்', 'முதுமொழி' என்று குறிப்பிடுகின்றார்.

"அங்கதம் முதுசொலோடு அவ்வேழ் நிலத்தும்"

(தொல். செய். 391)

எனவும்,

"நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும்
மென்மை என்றிவை விளங்கத் தோன்றிக்
குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்
ஏது நுதலிய முதுமொழி" (தொல். செய். 165)

எனவும், வரும் நூற்பாக்கள் அதற்குச் சான்று பகர்கின்றன. நுட்பம், சுருக்கம், விளக்கம், எளிமை ஆகிய இயல்புகளுடன் குறிப்பிட்ட பொருளைக்

காரணத்துடன் உணர்த்தவல்லது பழமொழி எனத் தொல்காப்பியர் வரையறுத்துள்ளார்.

தமிழ்ப் பழமொழிகள்

அற இலக்கியங்களுள் ஒன்றான 'பழமொழி நானூறு' முதல் 'பழமொழி விளக்கம்' அல்லது 'தண்டலையார் சதகம்' எழுந்துள்ளது. மேலை நாட்டாரின் வருகைக்குப்பின் சிறந்த பழமொழித் தொகுப்புக்கள் தோன்றியுள்ளன. இவற்றைத் தவிர வாய்மொழியாகவே சில பழமொழிகள் இன்றும் வழங்கி வருகின்றன. இவை பற்றிய ஆராய்ச்சி இக்காலத்தில் வளர்ந்து வருகின்றன. மேன்மேலும் இதனை வளர்ச்சி பெறச் செய்வது இன்றைய ஆய்வாளர்களின் கடமையாகும். அதனடிப்படையில் நான்காம் திருமுறை என அழைக்கப்படுகின்ற திருநாவுக்கரசரின் தேவாரத்துள் இடம் பெற்றுள்ள 'திருவாரூர்ப் பதிகத்துள்' வெளிப்படும் பழமொழிகளின் நுட்பத்தை ஆராயும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பதிக விளக்கம்

காவிரித் தென்கரைத் தலம் 127-இல் திருவாரூர் 87-வது திருத்தலமாகும். மூவர் முதலிகளால் பாடப்பெற்றது. பஞ்சபூதத் தலங் களுள் இது பிருத்துவித் தலம்; பிறக்க முத்தி தரும் தலமுமாகும். 'திருவாரூர்ப் பிறந்தார் எல்லார்க்கும் அடியேன்' எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பாடப்பட்ட பெருமையுடையது. திருவாரூர்ப் பதிகம் எனப் பெயர் சூட்டப்பட்டு பாடப்பட்டுள்ள பத்துப் பாடல்களிலும் பழமொழிகள் இடம் பெற்றுள்ளதால் இஃது பழமொழிப் பதிகம் எனவும் பெயர் பெற்றுள்ளது.

பதிகத்தில் பழமொழிகள்

திருவாரூரரை மக்கள் அனைவரும் பணிந்தேத்த வேண்டும் என்பது திருநாவுக்கரசரின் விருப்பம். இதனை உணர்த்தத் தன் பதிகங்கள் முழுவதும் இறைவனின் சிறப்பை எடுத்தியம்பியுள்ளார். இந்நோக்கில்தான் பழமொழியையும் கையாண்டுள்ளார். இறைவனைத் தொழாது ஒழிந்தால் என்ன தன்மை அடைவோம் என்பதை உணர்த்தும் நோக்கில் இவை கையாளப்பட்டுள்ளன. இதனை,

1. கனியிருக்கக் காய் கவர்தல்
2. நேர்வழியைக் கடைப்பிடித்தல்
3. அறியாமையில் உழல்தல்
4. இழிந்தவனாதல்
5. வினைசெயல் வகை

என்ற கருத்துக்களின் அடிப்படையில் பகுத்துக் காணலாம்.

1. கனியிருக்கக் காய் கவர்தல்

கனியை விடுத்துக் காய் கவர்தல் பற்றித் திருக்குறள் கூறுகின்றது. மனித நேயத்திற்கு அடித்தளம் அமைக்கும் இனிய சொற்களையே எப்பொழுதும் பேச வேண்டும் என்பதே தெய்வப் புலவரின் அவா. **'இனியவை கூறல்'** என்ற அதிகாரம் முழுவதும் இதனையே வலியுறுத்தி யுள்ளார். சமுதாயத்திலிருந்து முகிழ்ப்பதுதான் இலக்கியம். அச்சமுதாயத்துள் காற்றோடு காற்றாகக் கலந்திருக்கும் திருக்குறள் கருத்தைத் திருநாவுக்கரசர் எளிமையாகக் கையாண்டு இறைத்தன்மையை உணர்த்தப் பயன்படுத்தி யுள்ளார்.

''மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் தாள்தொ ழாதே
உய்யலாம் என்றெண்ணி
.... ஆரூரரைக்
கையினால் தொழாது ஒழிந்து கனியிருக்கக்
காய்கவர்ந்த கள்வ னேனே'' (4:5:1)

'நெஞ்சமே! திருவெண்ணீற்றைக் குழையப் பூசிய திருமேனியராகிய சிவபெருமானுடைய திருவடியைப் பணிந்து தொழாது, பிற நெறியில் சார்ந்தனையே!' எனத் துயருற்ற அவர் இந்நிலையை மக்களுக்கு உணர்த்த, **'கனியிருக்கக் காய் கவர்ந்த கள்வனைப்போல் ஆயிற்று'** எனும் பழமொழியைக் கையாள்கின்றார். அற இலக்கியங்கள் சங்கமருவிய காலத்துத் தோன்றியவை. இவை அறம் போதிப்பதையே முதன்மையாகக் கொண்டவை. இறைவனைத் தொழுதால் மக்கள் அறத்தினின்று வழுவார் எனும் நோக்கில் இத்தகைய பழமொழிகள் பின்பற்றப்பட்டுள்ளன.

உள்ளவற்றுள் உயர்ந்த பொருளையே பெரும்பாலும் கள்வன் விரும்புவான். ஆனால் தன்னைக் கள்வன் எனச் சுட்டும் திருநாவுக்கரசரோ, **'உயர்ந்த பொருளைக் கவரத் தவறிய கள்வன்'** எனத் தன்னைத் தானே சாடுகிறார். இறைவனின் அருள் உயர்ந்தது. அதைப் பெறத் தவறியதால் தன்னைக் **'கனியிருக்கக் காய் கவர்ந்த கள்வன்'** என்கிறார். சமுதாய அறநெறியை விளக்கப் பயன்பட்ட பழமொழி பக்தியின் மேலீட்டால் இவ்விடத்தில் இறைத் தன்மையை விளக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அறன் வலியுறுத்தல்

''சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு'' (குறள் - 31)

எனும் குறள் மூலம் உலகில் வாழும் மனிதர்களுக்கெல்லாம் சிறப்பையும் செல்வத்தையும் தருவது அறவழி ஒன்றே என்கிறார் வள்ளுவர்.

அவ்வறவழி இறைவனை வணங்குதலே என்கிறார் திருநாவுக்கரசர். இப்பதிகத்துள் நான்கு பாடல்களில் இதனை வலியுறுத்துகின்றார்.

"......... முயல்விட்டுக்
காக்கைப்பின் போன வாறே" (4:5:2)

இப்பழமொழியில் முயல், காக்கை இரண்டின் இயல்புகளும் எடுத்தியம்பப் பட்டுள்ளன. முயல் அறத்தின் குறியீடு, காக்கை குறுக்கு வழியில் செல்லும் இயல்பு உடையதால் அறமற்றதன் குறியீடு, இறைவனைத் தொழுதல் அறச் செயலாகும். மாறாகத் தொழாதிருத்தல் பாவச் செயல் புரிதலுக்கு ஒப்பாகும். இதனை உணர்த்தவே மேற்கண்ட பழமொழி எடுத்தாளப்பட்டுள்ளது.

அடுத்ததாக இறைவனை வழிபடுவதற்குக் கரும்பு, இரும்பு ஆகிய இரண்டும் அறம், பாவம் ஆகியவற்றின் குறியீடுகளாகப் பயன் படுத்தப்பட்டுள்ளன. 'ஈசனை வணங்கிச் செல்ல மறுத்துக் கயிலையைப் பெயர்க்கத் தொடங்கிய இராவணனின் பத்துத் தலைகளும் இருபது தோளும் தாடையும் நெரியுமாறு செய்தவர் சிவபெருமான். அவர் தாமரையில் வீற்றிருக்கும் பிரமனின் ஐந்து தலைகளில் ஒன்றைக் கொய்தவர். அன்புக்குரிய தலைவர்'. அவரை வணங்காது இருப்பது இன்சுவை தரும் கரும்பை விடுத்து சுவையற்ற இரும்பைக் கொள்வது போன்றது என்கிறார். இதனை,

"........ கரும்பிருக்க
இரும்பு கடித்து எய்த்த வாறே" (4:5:10)

என்னும் பழமொழி உணர்த்துகின்றது.

முன்னர் கண்ட பழமொழிகளுள் அறம், மறம் இரண்டையும் விளக்க குறியீடுகளைப் பயன்படுத்தினார். ஆனால் இனிவரும் பழமொழிகளுள் நேரடியாகவே கூறுகின்றார்.

"........ அறம் இருக்க
மறம் விலைக்குக் கொண்ட வாறே" (4:5:3)

அறநெறியைப் பின்பற்றுதலாவது பிணி தீர்த்தருளும் இறைவனைத் தொழுதலாகும். அவனைத் தொழாமல் இருப்பதே மறச் செயலாகும்.

"....... தவமிருக்க
அவம் செய்து தருக்கி னேனே" (4:5:9)

எனும் பழமொழியின் வாயிலாக ஒருபடி மேலே சென்று இறைவனை வணங்குதல் தவச் செயலைப் பின்பற்றுதல் போன்றது என்றும், வணங்காமல் இருத்தல் தவத்தை மறக்கும் அவச்செயலைப் போன்றது என்றும் உரைக்கின்றார். இறைத் தன்மையை உணர்த்த மறம், அறம்,

தவம், அவம் ஆகிய பல்வேறு படிநிலைகளை உயர்த்திக் கொண்டே செல்கின்றார்.

மக்களின் சிந்தனைத் திறனுக்கு ஏற்பப் பழமொழிகளைக் கையாண்டுள்ளார். ஆழ்ந்த இறைப்பற்று மிக்கவராக இருப்பினும், சமுதாயத்தின் இயல்பை முற்றிலும் அறிந்தவராக; இயைந்து வாழ்ந்தவராக இருப்பதால்தான் இத்தகைய பழமொழிகளைக் கையாண்டுள்ளார். அதனால்தான் அவற்றுள் முயல், காக்கை, கரும்பு, அறம், மறம், தவம், அவம் போன்ற சொற்களைக் கையாண்டுள்ளார்.

3. அறியாமையில் உழல்தல்

நெடுநாட்கள் அறியாமையில் உழன்றதால்தான் அருள் சொரியும் பெருமானுடைய பெருமையை அறியாது காலத்தைப் போக்கினதாகத் தன்னைத் தானே அவர் கூறிக் கொள்கின்றார். அவ்வறியாமையைப் பிறருக்கு உணர்த்த,

"....... பனி நீரால்
பாவை செயப் பாவித் தேனே" (4:5:4)

எனும் பழமொழியைக் கையாள்கிறார். பனி நீரால் பாவை செய்ய எப்பொழுதும் இயலாது. அதனை உணராது ஒருவன் பாவை செய்ய முற்பட்டால் அச்செயல் நிறைவடையாது. அதுபோல இறைவனின் அருள்பெற முயலாது வீணாகக் காலத்தைக் கழித்தால் இப்பிறவிப் பெருங்கடலைக் கடத்தல் இயலாது. இப்பொருள் படவே,

"......... இருட்டறையின்
மலடு கறந்து எய்த்த வாறே" (4:5:6)

என்னும் பழமொழி கையாளப்பட்டுள்ளது. ஆரமுதாய் விளங்கும் ஆரூரரைத் தொழாது வாழ்வது

'இருட்டறையில் மலட்டு மாட்டில் பால்கறத்தலை ஒத்தது'

என்கிறார். தன் அறியாமையை வெளிப்படுத்த இருட்டறை, மலட்டு மாடு ஆகிய இரண்டும் ஒப்புமையாக்கப்பட்டுள்ளன.

அறியாமையையும் குற்றத்தையும் போக்கி ஆட்கொண்ட பெருமானின் அருள் தன்மையை அறியாது இருத்தலை விளக்க,

"......... பாழூரிற்
பயிக்கம்புக்கு எய்த்த வாறே" (4:5:8)

என்னும் பழமொழி பயன்படுகின்றது. பாழடைந்து நைந்து அழிந்துள்ள ஊரில் பிச்சை ஏற்கச் சென்று அலைந்து திரிந்தால் வருத்தந்தான் மிஞ்சும். அதுபோல மனமும் உடம்பும் கெட்டு அழியும் நிலையில் இறைவனை நினைத்தால் எந்தப் பயனையும் அடைய இயலாது.

இறைவனின் அருளைப் பெற விழையும் அடியார்கள் தங்களை மிகவும் தாழ்த்திக் கொள்வது இயல்பு. இந்நோக்கிலேயே திருநாவுக்கரசர் தன்னை அறியாமை நிறைந்தவராகக் கூறுகின்றார். வாழ்வியல் நெறிகளை அறிந்தவராதலால் தன் நிலையைப் பிறர்க்கு எளிமையாகவும் சுருக்க மாகவும் உணர்த்த மேற்கண்ட பழமொழிகளைக் கையாண்டுள்ளார்.

4. இழிந்தவனாதல்

ஆரூரரின் அருள் பெறாது கழிந்த காலத்தில் தான் ஒரு கொடிய நாகத்தைப் போன்று திரிந்தவன் என்றும் தீய பண்புகளை உடையாரின் சொற்களையே மதித்தவன் என்றும் இருகையேந்திப் பிச்சையேற்று உணவுண்டு இழிந்தவனாகத் திரிந்தவன் என்றும் கூறுகின்றார். இதனை,

''...... ஏதன் போர்க்கு
ஆதனாய் அகப்பட்டேனே'' (4:5:5)

என்னும் பழமொழி உணர்த்துகின்றது. தன் நிலையில் தாழ்ந்தவர் எந்நிலையிலும் உயர முடியாத அளவிற்குச் சமுதாயச் சூழல் மாற்றிவிடும். இந்நிலை மாற இறையன்பு தேவை என்பதும் இதன் மூலம் வலியுறுத்தப்படுகின்றது.

5. வினை செயல் வகை

ஒரு செயலில் ஈடுபடுவதற்கு முன்பு அதற்குத் தேவையான பொருள், ஏற்ற கருவி, காலம், மேற்கொள்ளப் போகும் செயல் முறை, உகந்த இடம் ஆகிய ஐந்தையும் குறைவில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பது வள்ளுவர் வாக்கு. இதனை,

''பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்'' (குறள் - 675)

என்னும் குறளால் அறியலாம். வினையை அறிந்திருந்தும் அறியாதவர் போல் செயல்படுவதாகத் திருநாவுக்கரசர் பாடுகின்றார். தீக்காயும் நோக்கில் விளக்கினைத் தேராது, மின்மினிப் பூச்சியைக் கொண்டு முயற்சி செய்ததாகக் கூறுகின்றார். வாழ்வில் இன்பத்தைப் பெறுவதற்கு இறைவனை வழிபடாது போலியாக இன்பம் தரும் வேறு காரியங்களில் ஈடுபட்டுத் திரிவோர்க்குப் பாடம் புகட்டும் நோக்கில்,

''..... மதியிலியேன் விளக்கிருக்க
மின்மினித் தீக் காய்ந்த வாறே'' (4:5:7)

என்னும் பழமொழியினைப் பயன்படுத்துகின்றார்.

திருவாரூரரின் சிறப்பியல்புகளை எடுத்தியம்பி மக்கள் அனைவரும் அவரை வழிபடச் செய்வதே திருநாவுக்கரசரின் நோக்கமாகும். இதனைப்

பிற பதிகங்களில் வெவ்வேறு முறைகளில் கூறியுள்ள இவர் இப்பதிகத்துள் பழமொழிகள் மூலம் உணர்த்தியுள்ளார். இது புதுமையானதொரு அணுகுமுறையாகும். பாமரர் முதல் கல்வியாளர் வரை அனைவரும் அறிந்த தெளிவும் சுருக்கமும் நிறைந்த பழமொழிகளைத் தேர்ந்து பாடலின் தொடக்கத்தில் பயன்படுத்தி இறைவனின் சிறப்பியல்புகளைக் கூறியுள்ளார். பின்னர் அவ்விறைவன் அருள் பெறாததால் துயருற்றுத் தாழ்ந்த நிலையை அடைந்ததாகக் கூறியுள்ளார். அந்நிலையிலிருந்து மீள வேண்டுமெனில் சிறப்புமிக்க இறைவன் அருளைப் பெறவேண்டும் எனக் கூறும் பாங்கில் பல்வேறு பழமொழிகளைக் கையாண்டுள்ளார். இப்பழமொழிகள் அனைத்தையும் திருநாவுக்கரசரின் பக்தி இயக்கக் கோட்பாடுகள் என்றே நாம் கொள்ளலாம்.

110. நாவுக்கரசரின் திருத்தொண்டு நெறி

தெ. வாசுகி, நாகப்பட்டினம்.

தொண்டு என்பது நம்மால் இயன்ற வரை எதிர்பார்ப்பின்றி பிறருக்குச் செய்யும் செயலே ஆகும். இத்தொண்டினைச் சைவ அடியார்கள் விரும்பிச் செய்து உயர்வு பெற்றனர். இவ்வடியார்களில் ஒருவரான திருநாவுக்கரசர் செய்த தொண்டால் சமுதாயத்தில் இன்றும் அவர் நிலை பெற்று நிற்கின்றார். இவர் இறைவனால் 'நாவுக்கரசர்' என்றும், திருஞானசம்பந்தரால் 'அப்பர்' என்றும் அழைக்கப்படுகின்றார். சமயம் நாயன்மார்களின் உயிர்நாடியாகும். இச்சமயத்தை உலகின் மக்கள் மத்தியில் பரப்ப சைவ சமயக் குரவரான திருநாவுக்கரசர் அரும்பாடுபட்டுள்ளார்.

வாழ்க்கையில் பல துன்பங்கள் பட்டு, அனுபவ முதிர்ச்சி பெற்ற அடியார், "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற பரந்துபட்ட கொள்கையில் 'நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்' என்ற வீர வாழ்வு - தவ வாழ்வு வாழ்ந்தவர். இவர் கலைத்துறை தழைத்தோங்கவும், அருந்தவத்தாரின் செந்நெறி சிறந்து வாழவும், உலகத்தின் பொய்மை யிருள் அகன்றோடவும் செய்தார். இவர் பாடல்கள் மந்தர ஆற்றல் மிக்கதாகப் பல அற்புதங்களைச் செய்துள்ளதைக் காணமுடிகிறது. சைவ சமயத்தைப் பரப்புவதன் வாயிலாக நாவுக்கரசர் ஆற்றிய திருத்தொண்டினை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும். கோயில்களுக்கு ஆற்றிய தொண்டு, அடியார்க்குப் புரிந்த தொண்டு, சமூகத்திற்கு ஆற்றிய தொண்டு, சமயம் பரப்புவதில் மேற்கொண்ட தொண்டு போன்றவை திருநாவுக்கரசர் தேவாரப் பாடல்களில் காணமுடிகிறது.

கோயில் தொண்டு

திருநாவுக்கரசர் மனம், வாக்கு, காயம் என்னும் முக்கரணங் களாலும் திருத்தொண்டு செய்து வந்தார். மேலும் இவர் உழவாரத் தொண்டுப்படையான களைக்கொட்டுக்கருவி கொண்டு கோயில்களின் சுற்றுப்புறங்களையும் தெருக்களையும் தூய்மைப்படுத்தினார். இடிந்து தகர்ந்த கோயில்களைச் செப்பனிட்டார். இடிந்த தலம் பல சென்று சிவ வழிபாடு இயற்றினார்.

திருமறைக்காட்டில், பல நாட்களாக அடைக்கப்பட்டிருந்தது சிவன் கோயில் கதவு. "திருமுன்புள்ள இக்கதவின் திருக்காப்பு நீங்கவும், கதவு திறக்கவும் நீர்பாடும் எனச் சம்பந்தர் கூற, நாவுக்கரசர்,

பண்ணினேர் மொழியாள் உமைபங்கரோ!
மண்ணினார் வலஞ் செய்ம் மறைக் காடரோ!
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம் மினே! (அப்பர் தேவாரம்)

என்ற பாடலையும்,

அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்
இரக்க மொன்றிலீர் எம்பெரு மானரே!
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரே!
சரக்க இக்கதவம் திறப்பிம்மினே! (நாவுக்கரசர் தேவாரம்)

என்று பாடினார். உடனே திருமறைக்காட்டு திருக்காப்பு நீங்கி மணிக்கதவம் திறந்தது. இவ்அற்புதச் செயல்களைக் கண்டு அடியார் கூட்டமெல்லாம் அதிசயித்து, புளங்காகிதம் அடைந்து, பக்திப் பரவசத்தால் ஆனந்தக் கண்ணீர் பொழிந்து இணையற்ற இரு நாயன்மாரின் பாதங்களைத் தொழுதனர்.

திருப்பழையாற்றில் சமணர்கள் சிவபெருமான் எழுந்தருளியுள்ள கோவிலை மறைத்து வைத்திருப்பதைக் கண்டு அப்பர் மனம் கலங்குகிறார். அவர்கள் வஞ்சனையை மாற்ற இறைவனை வேண்டுகிறார். "வண்ணம் கண்டு நான் உம்மை வணங்கியன்றிப் போகேன்" என்று உறுதியோடு உண்ணா நோன்பு மேற்கொண்டு "தலையெல்லாம்" எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினார். இறைவன் ஆணையால் மறைத்து வைக்கப்பட்ட சிவலிங்கப் பெருமான், நாவுக்கரசரும் மக்களும் வணங்கும் தெய்வமாகக் காட்சியளித்தார்.

சமூகத் தொண்டு

திருநாவுக்கரசர் உற்ற வயதடைந்ததும் உலகின் நிலையாமையை அறிந்து அவர் நல்லறங்கள் பல செய்தார். அவர் சிவ உலகில் புகழ் நிலை பெற்று விளங்கும்படி கருணையோடு அறச்சாலைகளையும், தண்ணீர்ப் பந்தல்களையும் அமைத்தார். சோலைகளை வளர்த்துக் குளங்களை வெட்டினார். நேர்மை தவறாமல் தம்மிடம் வந்தவர்களுக்கெல்லாம் அவர்கள் வேண்டுவனவற்றை மகிழ்ந்தளித்தார். அன்புடன் விருந்திட்டு விருந்தினர்களைப் பேணினார். புலவர்களைப் போற்றி நாவலருக்கு வளம் பெருக நன்கொடை வழங்கினார். இவ்வுலகத்தில் உள்ள அனைவருக்கும் தளராமல் கொடை வழங்கி ஈகைத் துறையில் நின்றார். திருவீழிமிழலையில் சிவபெருமான் கொடுத்த படிக்காசுகளைச் சைவ அடியார்களுக்குக்

கொடுத்து அவ்வூர் மக்களின் வறுமையைப் போக்கினார். "ஞாலம் அறியப் படிக்காசு வைத்தார் மிழலைநாயகனார்" என்ற பாடல் வரி வறுமை ஒழிப்பை விளக்கி நிற்கிறது எனலாம். இதனை,

"விண்ணின் றிழிந்த விமானத்தின் கிழக்கும் மேற்கும் பீடத்தில்
அண்ணல் புகலி ஆண்டகையார் தமக்கும் ஆண்ட அரசினுக்கும்
நண்ணும் நாள்கள் தொறுங் காசு படி வைத்தருள்"

(திருநாவுக்கரசர் - 258)

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம். மேலும் படிக்காசு பெற்றமைக்கான சான்றுகள் வாயிலாகவும் அறிய முடிகிறது.

"பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு
வாடி வாட்டம் தவிர்ப்பார் அவரைப் போல"

(அப்பர் தேவாரம் - 5-ஆம் திருமுறை)

திருவாய்மூர் திருக்குறுந்தொகை என்ற பாடல்,

"இருந்துநீர் தமிழோடு இசை கேட்கும்
இச்சையால் காசு நித்தல் நல்கினீர்"

(சுந்தரர் - திருவீழிமிழலை)

என்ற பாடல் வரிகளால், அப்பர் இறைவனிடம் படிக்காசு பெற்று மக்களின் பசிப்பிணி நீக்கினார் என்பதை அறியமுடிகிறது.

அடியார்க்கு செய்த தொண்டு

அப்பரிடம் ஆத்ம நேயம் பூண்டிருந்த அப்பூதியடிகள் தம் உள்ளத்தில் திருநாவுக்கரசரைக் குருவாகக் கொண்டார். அந்தப் பேரன்பினால் அவர் தம் புதல்வர்களுக்கும் அறச்சாலை, கிணறு, குளம், நிழல் தரும் மரங்கள், தண்ணீர் பந்தல் முதலான பலவற்றிற்கும் திருநாவுக்கரசரின் பெயரைச் சூட்டி அவர் பெயராலேயே பல தரும காரியங்களையும் செய்து வந்தார். இதனைக் கேள்வியுற்ற திருநாவுக்கரசர் உடனே அப்பூதியடிகள் வீட்டிற்கு வந்தார். அடியார்க்குச் செய்யும் தொண்டு ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டாகக் கருதினார். இந்நிலையில் அப்பூதியடிகள் அப்பரின் மீது வைத்திருந்த அன்பின் முதிர்வால் திருவமுது படைக்க முற்பட்டார். அப்பொழுது அடிகளாரது மகனை அரவம் தீண்ட அவனின், விடம் நீக்கி அப்பர் உயிர்ப்பித்தார். இதனை,

"ஒன்று கொலாம் எனப்பதிகம் எடுத்துடையான் சீர்பாடப்
பிள்ளை விடம் போய் நீங்கப்பிள்ளை உணர்ந்தெழுந்திருந்தான்"

(திருநாவுக்கரசர் - 206)

என்ற பாடல் வரிகள் மூலம் அறிய முடிகின்றது.

மகன் உயிர்த்தெழுந்தானே என மகிழ்ச்சியடையாமல் விருந்து படைக்கக் காலம் தாழ்த்தினானே என அப்பூதியடிகளும், அவர் மனைவியும் வருந்தினர். இவ்வாறு அடியவர்களின் உடற்பிணி போக்கும் மருத்துவராக, தொண்டு புரிந்த அப்பரின் பரந்த மனப்பான்மையை இவண் காணமுடிகிறது.

சமயத் தொண்டு

சமயம் என்பது மக்களின் வாழ்க்கையை நெறிப்படுத்தும் களமாகும். இச்சமயம் எங்கும் நிறைந்திருக்கும் இறையருளை உணர்த்தும் தன்மையன.

தொடக்கத்தில் சைவ சமயத்தின் தன்மையை உணராமல் பின் உணர்ந்த நாவுக்கரசரின் தொண்டுடன் கூடிய சமய நெறி பரப்பும் உத்தியை,

"சார்வான திருமணமும் உழவாரத் தனிப்படையும் தாமும்ஆகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவிச்
செல்வார்"

என்ற வரிகள் மூலம் அறிய முடிகிறது.

நாவுக்கரசர் காலத்தில் சமண சமயம் மேலோங்கி நின்றது. அம்மதமே அரசு மதமாக அங்கீகரிக்கப்பட்டது. மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழியில் நின்றனர். அதன்படி நாவுக்கரசரும் சமண மதத்தில் பேரும் புகழும் விளங்கச் சிறந்திருந்தார். அவ்வமயம் சிவபெருமான் அப்பருக்குச் சூலைநோய் கொடுத்து தடுத்தாட் கொண்டார். இதனால் அப்பர் சமணத்தை விடுத்துச் சைவரானார். இறையருள் பெற்ற அப்பர் இறைவன் மீது இசைபாடத் தொடங்கினார். இதனை அறிந்த அரசனும் சமணத்துறவிகளும் பல இடர்களைத் தந்தனர். அப்பர் திருப்பதிகம் பாடி இறைவன் அருளால் அவற்றிலிருந்து விடுப்பட்டு வெற்றி கொண்டு உழவாரத் திருப்பணி செய்தார். இதனைக் கண்ணுற்ற பல்லவ மன்னன் சமண சமயச் சார்பை விட்டுச் சைவராகித் திருவதிகையில் நாவுக்கரசரைக் கண்டு பணிந்து வணங்கிச் சிவனடியாரானான். மேலும் மன்னன் பாடலிபுத்திரத்தில் சமண பள்ளிகளை இடித்துக்கொண்டு வந்து திருவதிகையில் சிவபெருமான் எழுந்தருளும் "குணபரவீச்சரம்" என்னும் திருக்கோவிலைக் கட்டினான். சமயத் தொண்டு வாயிலாக அப்பர் கால அரசியல் நிலை, சமயம் பரப்பும் விதம், சமண மன்னன் சைவனாக மாறிய நிலை ஆகியவற்றை அறிய முடிகிறது. அப்பர் மேற்கொண்ட தொண்டு நெறிகளால் தான் தம் வாழ்க்கையில் இன்றளவும் புகழ்பெற்று உயர்ந்து நிற்கின்றார் என்பதை அவர் தம் தேவாரப் பாடல்கள் மூலம் அறிகிறோம்.

இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட திருநாவுக்கரசு உடலில் சிவ சின்னங்கள் விளங்கவும், உள்ளம் சிவனைத் தியானிக்கவும், வாய்

சிவன் திருப்புகழைப் பாடவும், கை உழவாரப்படை கொண்டு திருக்கோவில் திருத்தொண்டு புரிந்துள்ளார். மேலும் திருப்பூந்துருத்தியில் திருமடம் அமைத்து தொண்டு செய்து வந்துள்ளார். பாண்டி நாடு சென்று பல பதிகளையும் வணங்கி பூம்புகார் வந்தடைகின்றார். அங்குத் திருத்தொண்டு செய்து வரும்போது, இறைவன், அப்பர் பெருமானின் நிலைமையினை உலகுக்குணர்த்த, உழவாரப்பணி செய்து வந்த இடத்தில் பொன்னும் நவமணியும் பொலிந்திலங்கச் செய்கிறான். அவற்றைப் பருக்கைக் கற்களோடு நீர்நிலையில் வீசுகிறார். தேவமகளிர் தோன்றிச் காம உணர்வைத் தூண்ட முயன்ற போதும், சித்த நிலை திரியாது தம் திருத்தொண்டிலேயே கருத்தூன்றி இருந்தார்.

திருநாவுக்கரசர் இறைவன் எழுந்தருளியுள்ள திருத்தலங்கள் தோறும் புனிதப் பயணத்தை மேற்கொண்டு மக்களை இறையன்பில் மூழ்கச் செய்யும் திருப்பணிகளில் ஈடுபட்டார். சமுதாயத்தில் காணப்பெறும் சாதிவேறுபாடுகளும் வகுப்புப் பிரிவுகளும் இறைவனிடத்து அன்பு செலுத்துவதற்கும், இறைவனை வழிபட்டு உயர்நிலையை அடைவதற்கும் தடை அல்ல என்ற புரட்சிச் சிந்தனையைப் பரப்பியுள்ளார்.

இவ்வாறு திருநாவுக்கரசின் நமச்சிவாயப் பதிகம் அவரைக் கடலிலிருந்து கரை சேர்க்கிறது. திருமறைக்காட்டு அடைக்கப்பட்ட திருக்கதவம் திறக்கிறது. மேலும் அவர் பாடல் பாம்பு கடித்த அப்பூதியடிகள் மகனை நஞ்சு இறங்கப் பெற்று எழச் செய்கிறது. திருவீழிமிழலையில் ஏற்பட்ட பஞ்சம் நீங்க படிக்காசு பெற்று தருகிறது.

இம்மண்ணுலகில் மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை இயங்கும் தன்மை பெறுகிறான். இவ்வியக்கத்தில் நல்வினை தீவினை என்ற இரு வினைகள் நிகழும். இவ்வினையால்தான் மறு பிறப்பு கிடைக்கிறது. இப்பிறப்பில் இருந்து விடுபட்டு வீடுபேறு என்ற முக்தியை உயிர்கள் அடையவேண்டும் என்பது சைவ சமயத்தின் நோக்கமாக உள்ளது. எனவே இவ்வீடுபேற்றை அடைய மக்கள் தங்கள் வாழ்க்கையில் உயர்ந்த கொள்கைகளையும் தொண்டு நெறிகளையும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை திருநாவுக்கரசர் தேவாரம் புலப்படுத்துகின்றது. இவருடைய சமயத்தொண்டு என்றென்றும் நிலைத்து நிற்கும். புகழ், காலம் உள்ளளவும் நிலைத்து நிற்கும்.

111. திருநாவுக்கரசர் வாழ்வும் வாக்கும்

நா. விசாகமூர்த்தி, கோவை.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று வாழ்ந்த திருத்தொண்டர் திருநாவுக்கரசர். இறைவன் திருப்பணியும் மக்கள் தொண்டுமே அவருடைய உயிர் மூச்சாக இருந்தன. ஏழாம் நூற்றாண்டில் சைவ எழுச்சிக்குக் காரணமாக இருந்தவர். சம்பந்தரைக் காட்டிலும் வாகீசர் வயதில் மிகவும் மூத்தவர். சீர்காழியில் அவரால் "அப்பரே" என அழைக்கப் பெற்றவர். அப்படி இருக்கத் திருப்பூந்துருத்தியில் தமது வருகையை ஒருவரும் அறியாதபடி சென்று, சம்பந்தரின் சிவிகை சுமப்பாரோடு, தாமும் சேர்ந்து கொண்டார் என்றால் அப்பர் பெருமானின் தொண்டுள்ளத்தையும் ஈசன் பக்தியையும் என்ன சொல்லிப் புகழ முடியும்? தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே!. அப்படிப்பட்ட நாவரசரின் வாழ்வும் வாக்கும் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

அப்பர் வாழ்வு

தமிழ்நாட்டில் சைவ சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட சமயக்குரவர் நால்வருள் அப்பர் பெருமானுக்குத் தனிச்சிறப்புண்டு. அவர் தமிழகம் முழுவதும் பயணம் செய்து சைவ நெறி தழைத்து வளரப் பாடுபட்ட பெருந்தகையாளர். சமயத் தொண்டினைச் சமுதாயத் தொண்டாக மாற்றிய மாட்சிமையாளர். துணிவு, கனிவு, தெளிவு ஆகிய முறையில் தம்முடைய வாழ்வை அமைத்துக் கொண்டு "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று வாழ்ந்தவர்.

அப்பர் பெருமானின் வாழ்வு செயற்கரிய செயல்கள் நிறைந்த பெருவாழ்வு. சமயம் மற்றும் சமுதாயம் சார்ந்த செய்திகளைக் காட்டும் நல்வாழ்வு, சிறப்பாகச் சைவ சமய நெறிகள், சைவக் கோயில் வழிபாடுகள், சைவ மரபினர் மனநிலைகள் ஆகியவற்றை விளக்கும் சீரிய வாழ்வு.

அருளாளர்களிடத்தில் தோன்றலாகும் அற்புத நிகழ்ச்சிகள் அவ்வச் சமய மக்களுக்கு, இறையீடுபாட்டையும், சமய நம்பிக்கையையும் உருவாக்கும் உத்திகளாகத் திகழ்கின்றன. தேவார முதலிகள் மூவருள்ளும், நாவுக்கரசர் வாழ்வில் காணப்படும் அற்புத நிகழ்வுகளின் எண்ணிக்கை குறைந்தே காணப்படுகின்றது.

அற்புத நிகழ்ச்சிகளைக் காட்டி மக்களைச் சைவத்திற்கு ஈர்ப்பதைக் காட்டிலும், அரனியல்பை உணரச் செய்து, அவர்களைச் சைவத்தில் நிலை நிறுத்துவதே தக்கது எனும் திண்மை உடையவர் அப்பராதலின், இவர் வாழ்வில் அற்புத நிகழ்ச்சிகள் அருகியே காணப்படுகின்றன. அவையும் வாழ்வில் ஏற்பட்ட இன்னல்களில் இருந்து அவர் விடுபடுவதற்கு, இறைவன் நிகழ்த்திய அருட்செயல்களாகவே அமைந்துள்ளன.

வாழ்வின் முடிபு

அப்பரின் இளமை வாழ்வில் நேர்ந்த துன்பச் சூழல்கள், அவற்றால் தோன்றிய நிலையாமை உணர்வுகள் ஆகியவை அவரைச் சமண சமயம் புகச் செய்தன.

திலகவதியாரின் வேண்டுதலும் அப்பருக்கு ஏற்பட்ட சூலை நோயும் அப்பர் மீண்டும் சைவராவதற்கு வழி வகுத்தன.

அப்பர் திண்ணிய மனத்தராய் அஞ்சாமை கொண்டு சமண வீழ்ச்சிக்கும் சைவ எழுச்சிக்கும் பாடுபட்டார். அப்பர் பயணம் செய்த திருத்தலங்கள் பலவாகும்.

அப்பர் வாக்கு

சமணர்கள் அப்பர் திருவதிகை சென்று நோய் நீங்கப் பெற்றார் என்பதை அறிந்தார்கள். அரசனிடம், "நமது சமயத்தைத் துறந்த அவனைத் துன்புறுத்த வேண்டும்" என்றனர். அரசன் அமைச்சர்களை அழைத்து "இப்போதே புறப்பட்டுச் சென்று அவனைக் கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டான். அவ்வாறே அமைச்சர்கள் திருவதிகை சென்று திருநாவுக்கரசரை அழைத்துபோது,

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" (6.98.1)

என்னும் மறுமாற்றத்தைத் திருத்தாண்டகமாகப் பாடியருளினார்.

அரசன் சமண முனிவர்களின் தூண்டுதலின் பேரில் நாவுக்கரசரைச் சுண்ணாம்புக் காளவாய் (நீற்றறை) ஒன்றில் அடைத்துக் கதவைத் தாளிடச் சொன்னான். நாவுக்கரசர் இறைவனைத் தியானித்து யாதொரு துன்பமும் இன்றி,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்" (5.90.1)

என்ற குறுந்தொகையை அருளினார். அவரை அடைத்திருந்த நீற்றறை குளிர்ந்ததாக ஆயிற்று.

நஞ்சை அருந்தச் செய்தனர். யானைக் காலில் இடறச் செய்தனர். இக்கொடுமைகளுக்கெல்லாம் நாவுக்கரசர் பிழைத்திருப்பது கண்டு மன்னன்

திகைத்தான். ''அரசே! அவன் நாட்டில் இருக்கத் தகுதியற்றவன். அவன் இருப்பதால் கஷ்டங்களே அதிகரிக்கும். ஆகவே, கல்லில் அவனைப் பிணித்துக் கடலில் எறிந்து விடுங்கள்'' என்றனர்.

மன்னன் அதற்கிசைந்து அவ்வாறே நாவுக்கரசரைக் கற்பாறையுடன் பிணித்துக் கடலில் எறிய உத்திரவிட்டான். ''இதுவும் ஈசன் திருவுளமோ'' என மகிழ்வுடன் அத்தண்டனையையும் ஏற்றுக் கொண்டார் வாகீசர்.

''சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ'' (4.11.1)

என்னும் நமச்சிவாயப் பதிகத்தைப் பாடினார்.

வாகீசரைப் பிணித்திருந்த கல் கடல் நீரில் அமிழாமல் மிதக்கத் தொடங்கியது. அவரைக் கட்டியிருந்த கட்டுக்கள் தாமே அறுந்தன. கருங்கல்லே படகாக மாறியது. நாவுக்கரசரைத் தாங்கி வந்த படகு, திருப்பாதிரிப் புலியூர் அருகில் கரையில் வந்து ஒதுங்கியது. வாகீசர் கரையேறினார். இறைவனைப் போற்றித் தொழுதார்.

அரசன் வியப்புற்று, சைவ சமயமே மெய்சமயமென உணர்ந்து சைவன் ஆனான். அதற்கு அறிகுறியாகத்தான் ஈச்சுரம் என்னும் கோயில் ஒன்றையும் கட்டுவித்தான்.

இறை உண்மை

இந்திய நாட்டில் தோன்றிய சமயங்களில் கடவுள் இல்லை என்னும் கருத்துடையனவும், ''கடவுள் உண்டு'' என்னும் கருத்துடையனவும் இருந்தன. கடவுள் உண்மையை அடிப்படையாகக் கொண்ட சமயங்களுள் சைவ சமயமும் ஒன்று. சைவ சமய நாயன்மார்களுள் குறிப்பிடத் தக்கவராகிய அப்பர் இறை உண்மையைப் பல விஷயங்களில் எடுத்துக் கூறியுள்ளார்.

''தானலா துலக மில்லை'' (4.40.1)

தோன்றாத் துணையா யிருந்தனன் தன்னடி யோங்களுக்கே (4.94.1)

புந்தி வட்டத்திடைப் புக்கு நின்றானையும் பொய்யென் பனோ'' (4.98.1)

''உள்ளத்தில் ஒளியைக் கண்ட துள்ளமே'' (5.98.3)

என்னும் பாடற் பகுதிகளில் உலகம் முழுவதும் தானாய்ப் பரவி நின்ற பரம்பொருளின் உண்மையைச் சுட்டித் தோன்றாத் துணையாய் அப்பரம்பொருள் இருக்கும் இயல்பினையும் சுட்டி, அத்தகைய உள்பொருளைத் தம் உள்ளத்துள்ளே கண்டு கொண்டதாக அப்பர் மகிழ்ந்து அவர் வாக்காக கூறுகின்றார். (4.9.12)

வினைப்பயன்

"பண்டு செய்த பழவினை யின்பயன்
கண்டுங் கண்டுங் களித்தி காண் நெஞ்சமே" (5.47.1)

என வரும் பாடலில் வருவினை, நிகழ்வினை, பழவினை ஆகிய மூன்றையும் குறிப்பிட்டுள்ளமை காணலாம். இவ்வினைகள் தாமே இயங்கா, வினைகளை உயிர்களிடம் செலுத்தி அவற்றிற்குரிய பயனைச் சேர்ப்பவன் இறைவனே ஆவான். உயிர்கள் மீது அருள் வைத்து இருவினைகளை நீக்கும் பணியையும் அவனே செய்கின்றான். இதனை "சிவஞானபோதம்" முயற்சியின் பயனை விளைவிக்கும் நிலம் போல வினை செய்வார்க்கு அவரவர் வினைப்பயனை இறைவன் கூட்டுவிப்பான் என்பதனை அப்பர் வாக்கில்,

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
....
பொழிலாரூ ராவென்றே போற்றா நில்லே. (6.31.7)

என்ற பாடற்பகுதியில் வினை நீக்கம் பெறச் "சிவனே கதி" என அப்பர் வழிகாட்டியுள்ளார்.

முடிவுகள்

அப்பர் வாழ்விலும் வாக்கிலும்,

1. இறையியல் இறைவனைப் பற்றியாக மட்டுமன்று மனிதனையும் உள்ளடக்கியது.
2. பல்வேறு சமயங்கட்கும் பரம்பொருளாய்த் திகழ்வது "சிவபரம் பொருளே" என்பது அப்பர் வாக்கு.
3. பேராற்றலும் பேரருளும் நிறைந்த நிலையைச் சிவனின் எண்குணத் தன்மையைக் காட்டுகிறது.
4. தனி மனித இன்பத்திற்கும், மனித சமுதாய அமைதிக்கும் அப்பர் பெருமானின் வாழ்வியல் நெறிகளும் இறையியல் உண்மைகளும் நேரிலே வழிகாட்டுதல்களாகத் திகழ்கின்றன.

112. சித்தாந்த நெறியும் நாவுக்கரசரும்

உ. விஜயலட்சுமி, விக்கிரமசிங்கபுரம்.

திருநாவுக்கரசு சுவாமிகள், சிந்தையில் சிவபெருமான்பால் கொண்ட இடையறா அன்பும், செவ்வாயில் பெருமானின் புகழ்பாடும் தீந்தமிழ் மாலைகளும், திருக்கண்களில் பெருமானை நினைந்து நினைந்து உருகியதனால் பொழிந்த கண்ணீர் மழையும், திருக்கையில் சீர் உழவாரப் படையும், திருமேனி தன்னில் திருவேடப் பொலிவும் கொண்ட ஞானத் தவமுனிவர் ஆவார். செந்தமிழின் சொல்வளப் பதிகத்தொடை பாடிய பான்மையினால் நாவுக்கரசர் என்று நாதனால் திருநாமம் சூட்டப்பட்டவர். அவர் சிவபரம்பொருள்பால் பெருத்தெழு காதலோடும் திறம்பாதே பணி செய்த சீரடியார். மலையரையன் பொற்பாவை பாகத்தனான ஈசனாரின் திருக்கோவில்களில் எல்லாம் மேவுற்ற திருப்பணிகள் நாளும் விருப்புடன் செய்து வந்தார். வார்ந்து சொரியும் கண்ணருவியோடு வாய்மை திறம்பா வாகீசர், இறைவன் பொற்றாளினைச் சென்னிமிசை சூடியவர்.

சித்தாந்த நெறியானது கடவுளுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு, கலப்பு, உறவு, அன்பு ஆகியவற்றைப் பற்றியும், அவனிடமிருந்து நாம் பெறக்கூடிய அருள், உரிமை, சிவபோகம், சிவப்பேறு இவை பற்றியும், இவற்றை அவனிடமிருந்து பெற்ற சீவன்முத்தர் தன்மை பற்றியும், நாம் அவற்றைப் பெற முடியாதபடி இடையே நிற்கும் மலம், அதன் வலிமை பற்றியும், நமக்குத் தெள்ளத்தெளிவாக, விரிவான ஆராய்ச்சியுடன் விளக்கம் தரும் நன்னெறியாகும். திருமுறைகளின் சாரமே சைவ சித்தாந்தம்.

இத்தகைய சைவ சித்தாந்தத்தின் இலக்கிய நாயகனாகத் திகழ்கிறவர் திருநாவுக்கரசு பெருமான். திருநாவுக்கரசு நாயனாரின் வாழ்வியல் நெறியே சித்தாந்த நெறி ஆகியது எனலாம். திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், நெஞ்சுவிடு தூது போன்ற சைவ சித்தாந்த நூல்கள் காட்டும் சித்தாந்த நெறிகள் வாகீசப் பெருந்தகையின் வாழ்விலும், வாக்கிலும் இருந்து வழங்கி வந்தன என்பதனையே இக்கட்டுரை கணிக்கின்றது. சொல்லரசரின் நெறியினைச் சித்தாந்த நோக்கில் பல கோணங்களில் கண்டு நாம் உய்யும் நெறி

அடையலாம் என்பதில் ஐயமே இல்லை. அவற்றுள் சில நெறிகள் பற்றிச் சிந்திப்போம்.

தோன்றாத் துணையைத் தொட்டுக் கொண்டே நின்ற அப்பர்,

"எட்டுக் கொண்டார் தமைத் தொட்டுக்கொண்டே நின்றார்
விட்டார் உலகம் என்று உந்தீபற.
வீடே வீடாகும் என்று உந்தீபற" (திருவுந்தியார், பாடல் - 24)

என்பது திருவுந்தியார் கூறும் சித்தாந்த நெறியாகும். இறைவன் ஐம்பூதங்கள், உயிர், சூரியன், சந்திரன் ஆகிய எட்டு மூர்த்தமாய் நின்று உலகினை இயக்குகிறான். அப்பெருமானைப் பிடித்துக்கொண்டே இருப்பவர் களுக்கு இந்த உலகமே திருவடி இன்பம் அளிக்கும் இடமாகும். திருநாவுக்கரசு பெருமானின் வாழ்க்கையில் அவர் இறைவனைத் தொட்டுக் கொண்டே நிற்பதையும் அவருக்கு இந்த உலகமே பேரின்பம் அளிக்கும் வீடாகியதையும் காணலாம். ஆடுவதும், அடங்குவதும், ஓடுவதும், உருகுவதும், பாடுவதும், பணிவதும், காண்பதும் ஆகிய அத்தனை இயக்கங்களும் சிவபரம்பொருளால் தான் நிகழ்கிறது என்றிருக்கும் அப்பர் பெருமான் "கூற்றுவன் வந்து குமைப்பதன் முன் பூவார் திருவடி என் தலைமேல் வைப்பாய்" என்று நாதனை வேண்ட உம்பர்பிரானும் "உன்னுடைய நினைப்பதனை முடிக்கிறோம்" என்று அவர்தம் சென்னிமிசை பாதமலர் சூட்டினான். இது நிகழ்ந்தது இந்நிலவுலகில். திருவடி தீக்கையையும், திருவுந்தியார் கூறும் "வீடே வீடாகும்" என்ற சிவானுபவத்தையும் இங்கேயே பெற்றார். இது மட்டுமா? திருபைஞ்ஞீலி எனும் திருத்தலத்திற்குச் செல்லும் பொழுது, அந்தணன் வடிவில் வந்த பரமன் அவரைப் பார்த்து "மிகவும் வழிவந்து இளைத்திருந்தீர். இங்கு என்பாலே உள்ள பொதிச்சோறு உண்டு, தண்ணீர் இக்குளத்தில் குடித்து இளைப்புப் போக்கிப் போவீர்" எனப் புகன்றார். அவ்வாறே செய்து தளர்ச்சி நீங்கிய அப்பர் பெருமான், ஆடல் புரிந்தான் அளித்த கருணை இது! எனப் பாடல் புரிந்து கண்ணீர் மழை பொழிந்தார். இந்நெறியானது. அவர் தோன்றாத் துணைவனாகிய பிரானைத் தொட்டுக்கொண்டே நின்ற நெறியாகும்.

வாக்கின் மன்னவரும் அம்மையப்பரும்

இம்மூவுலகுக்கும் அம்மையும் அப்பனுமாய் இருக்கும் அம்மை அப்பரை,

"முன்னே உரைத்தால் முகமனே ஒக்கும். இம்மூவுலகுக்கு அம்மையும்
அப்பனும் ஆவாய் அழல்வணா நீயலையோ"-
(திருமுறை - 4, தலமுறை பதிக எண் - 112, பாடல் எண் - 3)

என்றும், ''அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ'' – என்றும் அன்போடு அளவளாவி நிற்கிறார் நம் ஆளுடை அரசு. இதே நெறியானது திருக்களிற்றுப்படியார் எனும் சாத்திர நூலிலும்,

''அம்மை அப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்று அறிக''
(திருக்களிறு–1)

என்று பேசப்படுகிறது.

ஆளுடை அரசும், வினைக் கொள்கையும்

நம் வினைகள் பிராரத்தம், ஆகாமியம், சஞ்சிதம் என மூன்று வகைப்படும். தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனார்க்கு அடிமை பூண்ட தம்மை இந்த மூன்று வினைகளும் எதுவும் செய்யா என்பது ஆளுடை அரசின் உறுதிப்பாடு. இதனை,

''அல்லல் என்செயும் அருவினை என் செயும்
தொல்லை வல்வினை தொந்தந்தான் என் செயும்'' (5–1–4)

எனும் அவர் அருட்பாடல் விளக்கும். இந்தக் கொள்கையை ஞானக் கதிரவனாம் மெய்கண்ட தேவநாயனார், சிவஞான போதத்துள், ''எந்த உடம்பினுள் இருந்தாலும் இறைபணியார்க்கு வினை இல்லையாம்'' எனும் பொருள்பட,

''எத்தனுவின் நின்றும் இறைபணியார்க்கு இல்லை வினை''
(சிவஞானபோதம், சூத்திரம் - 10,
முதல் அதிகரணம், வெண்பா - 2)

என்று பகர்கிறார்.

மேலும், திருவருளைத் துணையாகக் கொண்டவர்களுக்கு வினைத் துன்பங்கள் வந்தடையா.

''அவிழ இருக்கும் அறிவுடன் நின்றவர்க்கு அவிழும்
இவ்வல்லல் என்று உந்தீபற'' (திருவுந்தியார் – 27)

என்று திருவுந்தியாரும் எடுத்தியம்பும். இதனையே,

''மும்மை தரும் வினைகள் மூளாவாம் மூதறிவார்க்கு
அம்மையும் இம்மையே ஆம்'' (திருவருட்பயன் – 99)

என்கிறது திருவருட்பயன்.

தம்மில் சிவலிங்கம் கண்ட தாண்டக வேந்தர்

''காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக

நேயமே நெய்யும் பாலா நிறைய நீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டினோமே'' (4–76–4)

என்பார் தாண்டக வேந்தர். ஊனுடம்பை ஆலயமாக்கி, சீவனைச் சிவலிங்கமாக்கிய அவர் தன்மையினை,

''தம்மில் சிவலிங்கம் கண்டு, அதனைத் தாம் வணங்கித்
தம் அன்புால் மஞ்சனநீர் தாம் ஆட்டி''

(திருகளிற்றுப்படியார் – 44)

என்று திருகளிற்றுப்படியார் ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் வருணிக்கிறார்.

நாவுக்கரசரும் இனியான் கலப்பும்

இறைவன் ஒவ்வொரு உயிருள்ளும் ஒன்றாயும், வேறாயும், உடனாயும் கலந்து நிற்கும் தன்மையை,

''அவையே தானேயாய் இருவினையின் போக்குவரவு புரிய
ஆணையின் நீக்கமின்றி நிற்கும் அன்றே''

(சிவஞானபோதம், சூத்திரம் - 2)

என்று பொய் அகற்றி மெய் காட்டும் மெய்கண்டார் சிவஞானபோதத்துள் அருள்கிறார். இறைவனின் இக்கலப்பினை உணர்ந்த சிவஞானியன ஆளுடை அரசு

''என்னில் ....
....
என்னுள்ளே உயிர்ப்பாய்ப் புறம் போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே'' (5–21–1)

என்றிசைக்கிறார்.

அப்பரின் அரன் கழல் பேணும் அயரா அன்பு

திருநாவுக்கரசு நாயனார், இறைவன் நமக்கு அருளும் காட்டும் உபகாரத்தையும், காணும் உபகாரத்தையும் தாம் உணர்ந்து அவன் குருவருளைத் தொழுது, நயப்புறு காதலில்,

''ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
....
காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே'' (6–95–3)

என்று திளைத்துப் பாடியது இத்திருத்தாண்டகச் செந்தமிழ் மாலை. அப்பர் பெருமானின் ''காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே'' எனும் சொற்றொடரை இருபா இருஃபது எனும் சாத்திரநூல்,

''காண்பார் ஆர்கொல் காட்டாக்கால்'' (பாடல் - 2)

என்று எடுத்தாள்கிறது. இந்த நெறியினை,

"காணும் கண்ணுக்குக் காட்டும் உளம் போல்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே"
(சிவஞானபோதம், சூத்திரம்–11)

என்று சிவஞானபோதம் பகரும். இது மட்டுமல்ல. இடையறாத அன்போடு சிவத்தைப் பொருந்தி நிற்போர் அந்த அதீத நிலையிலேயே நிற்பர். இதனைப்

"பாசிப்படு குட்டத்தில்.........
....
நேசமொடும் திருவடிக்கீழ் நீங்காதே தூங்கும்
நினைவுடையோர் நின்றிடுவர் நிலையதுவே ஆகி"
(சித்தியார், சூத்திரம் – 8, 291)

என்று தெள்ளிதின் விளக்குகிறது சிவஞான சித்தியார். சார்ந்தவர்களுக்கு இன்பம் தரும் ஐயன் திருவடிக்கீழ் ஆரா அன்பு பூணும் இச்செந்நெறி நம் சொல்லரசரின் வாழ்வில் சுடர் விடுகிறது. இதனை அவர் பக்தியோடு பாடிய பரிவுறு செந்தமிழ் மாலைகளான

1. "கருவுற்ற நாள் முதலாக உன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென் உள்ளமும் நானும் கிடந்து அலந்து எய்த்தேன்"
(4–99–6)
2. "வேதியா .... ஒருங்கி நின் கழல்கள் காண
.... அப்பனே அருள் செயாயே" (4-62-1)
3. "வழுவிலாதுன்னை .... உன் செழுமலர்ப் பாதங்காண
.... அப்பனே அருள் செயாயே" (4-62-7)
4. "புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன் அடி என்
மனத்தே வழுவாதிருக்க வரந்தர வேண்டும்" (4-94-8)

எனும் இவை தெளிவாக்குகின்றன.

வாகீசத் திருமுனியின் முத்திக்கலப்பின் சுவை

சிவஞானச் செய்தி உடைய வாகீசத் திருமுனிக்கு எம்பெருமான் தேனாகவும், பாலாகவும், தீங்கரும்பின் சுவையாகவும், தித்தித்தான். இச்செய்தியை அவரே,

"திருமணியைத் தித்திக்கும் தேனைப் பாலைத் தீங்கரும்பின்
இன்சுவையைத் தெளிந்த தேறல் குருமணியை ...."
(6-29-1)

என்று திருத்தாண்டகச் செந்தமிழ் சாற்றினார். இதனை அருள் நந்தி சிவாச்சாரியாரும்,

"இரும்பைக் .... கரும்பைத் தேனைப் பாலைக் கனியமுதைக்
கண்டைக் கட்டியை ஒத்திருப்பான் அந்த முத்தியினில் கலந்தே"
(சித்தியார் - 321)

என்று தெளிவுப்படுத்துகிறார்.

நாவினுக்குத் தனியரசரின் ஆனந்தக் களிப்பு

"உண்மை விளக்கம்" நூலாசிரியர் மனவாசகம் கடந்தார் எந்தையின் பரதத்தைப் பற்றி அருளும் பொழுது,

"மாயைதனை உதறி, வல்வினையைச் சுட்டு
மலம் சாய அமுக்கி, அருள் தான் எடுத்து -
நேயத்தால் ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத்
தான் அழுத்தல் தான் எந்தையார் பரதம்தான்"
(உண்மை விளக்கம் - 36)

என்று ஞானமொழி மொழிந்தார்.

நாவினுக்குத் தனியரசரோ தன் அருள் அனுபவத்தைத்

"தன்னைச் சரணென்று தாளடைந்தேன் தன் அடியடையப்
புன்னைப் பொழிற்புகலூர் அண்ணல் செய்வன கேண்மின்களோ
என்னைப் பிறப்பறுத்து என் வினை கட்டறுத்து ஏழ் நரகத்து
என்னைக் கிடக்கவொட்டான் சிவலோகத்து இருத்திடுமே"
(4-105-1)

என்று நலஞ்சிறக்கப் பாடினார். இதில் "என்னைப் பிறப்பறுத்து" என்பது மாயைதனை உதறி, மலம் சாய அமுக்கலையும், "என் வினை கட்டறுத்து" என்பது வல்வினையைச் சுடுதலையும், "தன் அடியடைய" என்பது அருள்தான் எடுத்தலையும், "சிவலோகத்திருத்தல்" என்பது ஆனந்த வாரிதியில் அழுத்துதலையும் சுட்டும் எனலாம். நாவுக்குத் தனியரசரின் நன்னெறியும் சித்தாந்த நெறியும் இவ்வாறாக ஒருங்கிணைந்துச் செல்கின்றன.

கண்ணில் தெண்ணீரருவிப் பெருக நிற்கும் ஞான அரசர்

நெஞ்சில் பெருகிய மகிழ்வும், காதலும், நிறை அன்பொடும் உரை தடுமாற, கனகசபையில் நடம் நவிலும் ஆரா அமுதைத் தொழுது நிற்கின்றார் ஞான அரசர். அப்பொழுது என்னவெல்லாம் நிகழ்கின்றன. சேக்கிழார் பெருமான் அத்திருக்காட்சியைச் சித்தரிக்கிறார்.

"கையுந் தலைமிசை புனை அஞ்சலியன;
கண்ணும் பொழிமழை ஒழியாதே, பெய்யும் தகையன;
கரணங்களும் உடன் உருகும் பரிவின; ...."
(12 - திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம்-167)

ஞான அரசரின் இந்நிலையினை, அருள் ஞானமுதல் கொற்றவன்குடி அடிகளான உமாபதிசிவம், சிவப்பிரகாசம் எனும் ஞானப்பனுவலில், "இந்த உலகியல் வாழ்விலேயே முத்தி நிலை அடைந்த சீவன்முத்தர்கள் விழிகளில் வெண்முத்தென நீர் ததும்பி வழிய, மொழி தடுமாற, மெய்ப்பொருளாகிய சிவத்தையே கண்டு கொண்டிருப்பர்" எனும் பொருள்பட,

"தொண்டர்கள் தாமும் ... . வெண்தரளங்கள் சிந்த விழி,
மொழி குளற மெய்யே கண்டுக் கொண்டிருப்பர்
ஞானக்கடல் அமுது அருந்தினோரே" (சிவப்பிரகாசம் - 98)

பாடினார். நெஞ்சுவிடு தூது எனும் நூலிலும்,

"தெண்ணீரருவி விழச் சிந்தை மயக்கந் தெளிந்து
உண்ணீர்மை எய்த உரோமமெலா - நண்ணும்
புளகம் புனை மெய்யர்"

என்றும் உமாபதிசிவம் விதந்தோதுகிறார்.

ஞான முனிவரின் சிவஞான இறுமாப்பு

"கண்ணின் கருமணியாம் கண்ணுதல்
கடவுளின் திருவடியைத் தலைக்கூடப்
பெற்றமையான் யாவருக்கும் மேலானோம்,
யாருக்குமே பின்னடைய மாட்டோம்"

என்று முழக்கமிடுகிறார் கோதில் மொழிக் கொற்றவனான அப்பர் பெருமான்.

"என்றும் நாம் யாவர்க்கும் இடைவோமல்லோம் இருநிலத்தில்
எமக்கெதிரா வாருமில்லை" (6-98-5)

"நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம்" (6-98-1)

என்பன ஞானமுனிவரின் ஞான வாக்காகும். சிவஞான சித்தியாரோ இந்த உறைப்பினைச்

"செங்கமலத்தாள் .... எங்கும் யாம் ஒருவருக்கும்
எளியோம் அல்லோம் யாவர்க்கும் மேலானோம் என்று
இறுமாப்பு எய்தி திங்கள் முடியார் அடியார் அடியோம்
என்று திரிந்திடுவர் சிவஞானச் செய்தி உடையோரே"
(சித்தியார் - 322)

என்று இயம்புகிறது.

புலன் அடக்கும் புண்ணியர்

உலக விடயங்களில் புலன்களைச் செல்லவிடாது உள்முகமாகத் திருப்பி, தம் முதலாகிய சிவபரம்பொருளைப் புகலிடமாகக் கொண்டு, பிரிய விடாது மனதினுள் நிறுத்திய வாகீசப் பெருந்தகை,

"கைப்போது மலர் தூவி............. ஐம்புலனும் அகத்தடக்கி எப்போதும்
இனியானை என் மனத்தே வைத்தேனே'' (4-7-3)

என்று பாடுகிறார். இந்நெறியானது திருவருட்பயனில் உமாபதி சிவத்தால்,

''புலனடக்கித் தம்முதற்கண் புக்குறுவர் போதார்
தலன்நடக்கும் ஆமை தக'' (திருவருட்பயன் - 94)

என்று எடுத்தாளப்படுகிறது.

இறை நிலைமையாம் எண்குணங்களையும் பெற்று சித்தத்தைச் சிவமாக்கிய சிறப்புடையவர் ஆளுடை அரசு. சிவஞான சித்தியார் கூற்றுப்படி ஓட்டையும், தமனியத்தையும் (பொன்னையும்) ஒன்றாக நோக்கிச் சங்கரனோடு ஒக்க உறைபவர் திருநாவுக்கரசுப் பெருந்தகை. அன்பு நிலையில் விளைந்த தலையான இன்பமான முத்தி இன்பத்தை இம்மையில் பெற்றவர் ஆளுடை அரசு. அம்பலத்து ஆனந்த தாண்டவம் புரிந்தருளும் தாள் நிழலைத் தலைக் கொண்டவர் அவர். பாவிசை பதிகம்பாடி கொடு நாக விடம் தீர்த்த அருளாளர். நன்னாம திருவிருத்தம் நலஞ்சிறக்கப் பாடிய அவர், அன்பு நிறை உணர்வினால் ஆண்டவனைப் பற்றியவர். சைவப் பெருநெறிக்கே அணியென விளங்கும் திருநாவுக்கரசுப் பெருந்தகைதன் அருட்பாடலும், சித்தாந்த செந்நெறியாளர்களின் சீர் வாக்கும், நமக்கு உய்யும் நெறி காட்டுவிப்பன.

113. திருநாவுக்கரசரும் சம்பந்தரும்

ந. வெங்கடேசன், சிதம்பரம்.

சைவ சமய குரவர்கள் எனப் போற்றப்படுபவர் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்போராவர். இவர்களில் அப்பர் எனப்படும் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் என வரலாற்றாசிரியர் கூறுவர்.

இவர்கள் இருவரும் தமிழகத்தை மூடியிருந்த புறச்சமய இருளை அகற்றித் தமிழரின் தொன்றுதொட்ட சமயமாகிய சைவத்தைச் செழிக்கச் செய்த பெருமையை உடையவர்கள். இவ்விருவரும் செய்த தொண்டினையும் நிகழ்த்திய அற்புதங்களையும் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

திருநாவுக்கரசர்

திருநெறிய தமிழாகிய சைவத்திரு முறைகளில் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளைப் பாடியவர் திருநாவுக்கரசர். இப்பாடல்கள் துதிப்பாடல்களாக விளங்குவதோடன்றிச் சைவ சித்தாந்தக் கோட்பாடு களின் பிழிவாகவும் விளங்குகின்றன. இப்பெருமை நோக்கியே,

"திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்"

என்று பாடிப் போற்றினார் நம்பியாரூரர்.

முதல் புரட்சியாளர்

மற்ற மூவருக்கும் இல்லாத ஒரு தனிச்சிறப்பு திருநாவுக்கரசருக்கு உண்டு. நாவரசர் வாழ்ந்த காலம் முடியரசு தழைத்திருந்த காலம்.

பல்லவர்களின் கொடி தமிழகத்தின் வடபகுதியில் வானளாவப் பறந்து கொண்டிருந்த காலம் அது. அக்காலத்தில் மன்னனை எதிர்த்து நின்று தனி ஒருவராகத் துணிவுடன் நிமிர்ந்து நின்று அவன் ஆணையை மறுத்த புரட்சியாளர் திருநாவுக்கரசர் என்று கூறலாம்.

சமணரின் சொற்களைக் கேட்டு அவரைத் தண்டிப்பதற்காக அழைத்து வரச் சொன்னான் பல்லவவேந்தன். அமைச்சர்களும் அலுவலர்களும் வந்து நாவரசரை அழைத்தனர்.

"நாம் துறவி; இறைவன் ஒருவனுக்கே நாம் கட்டுப்பட்டுள்ளோம்! நாடாளும் மன்னரே அழைத்த போதிலும் யாம் வருவதற்கில்லை! நாமார்க்கும் குடியல்லோம்! நமனுக்கும் அஞ்சோம்!" என்று முழங்கினார் அவர்.

"நும்மை அனுப்பியவன் தொண்டை நாட்டை ஆளும் பல்லவ வேந்தன்; அவனேயன்றி இந்நாவலந்தீவு முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆள்கின்ற வேந்தர் வேந்தனே நும்மை எம்பால் விடுத்தான் என்றாலும் யாம் அவனைப் பொருளாக மதிக்க மாட்டோம்!" என்று அவர் கூறியதை,

"நாவலந்தீ வகத்தினுக்கு நாத ரான
காவலரே ஏவி விடுத்தா ரேனும்
கடவ மலோம் கடுமையொடு களவற்றோமே"

எனவும்,

"பாராண்டு பகடேறி வருவார் சொல்லும்
பணிகேட்கக் கடவோமோ பற்றற் றோமே"

எனவும் அவர் இயற்றிய பாடல்கள் புலப்படுத்துகின்றன. அவரது வாழ்க்கையை அறிய இவை அகச்சான்றுகளாகத் திகழ்கின்றன.

நாவரசர் தொண்டு நெறியில் நின்று இறைவனை வழிபட்டவர். இறைவனுக்குத் தொண்டு செய்தாரேயன்றி மானுடர் எவர்க்கும் அவர் அடிமைத்தொண்டு செய்ததாக வரலாறு கூறவில்லை.

சம்பந்தர் - நாவரசர் சந்திப்பு

இறைவனால் சூலை நோய் தந்து தடுத்தாளப் பெற்ற நாவரசர் திருப்பதிகங்கள் பாடும் உணர்வு கைவரப் பெற்றார். இறைவன்மீது பல இனிய தேவாரப் பாமாலைகளைப் பாடிய வண்ணம் பலப்பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவாரூர் சென்றடைந்தார்.

அந்நாளில் சைவத்தலங்களில் திருவாரூர் பெருஞ்சிறப்புப் பெற்றிருந்தது. அதற்கு இணையாகத் தில்லைச் சிற்றம்பலம், தில்லை மூவாயிரவர் செய்த திருப்பணிகளின் பயனாகப் பெரும்புகழ் பெற்று விளங்கி வந்தது. நாவரசருடைய கவனத்தை முதன் முதலில் ஈர்த்த திருத்தலம் தில்லை.

நாவரசர் பல தலங்களையும் வணங்கிக் கொண்டு, திருக்குறுந்தொகைப் பாடல்கள் பல பாடிய வண்ணம் தில்லையம்பதியை அடைந்தார். அங்கே தில்லைக்கூத்தனை வழிபட்டு,

"அரியானை அந்தணர்தம் சிந்தையானை"

எனத் தொடங்கும் பெரிய திருத்தாண்டகம் பாடித் திருக்கோயிலினுள் புகுந்து இறைவனது ஆனந்தத் திருக்கூத்தினைக் கண்டு மகிழ்ந்தார்.

மேலும் பல பதிகங்கள் பாடி அங்கே உழவாரப் பணிசெய்து தங்கியிருக்கும் நாளில் சீகாழிப் பதியில் திருஞானசம்பந்தர் பிறந்து மூவாண்டில் இறைவி தந்த ஞானப்பாலை உண்டு இறைபணி செய்து தங்கியுள்ளார் என்ற செய்தியை அடியார்கள் சொல்லக் கேள்வியுற்றார். கேட்டதும் அவரைக் காண வேண்டும் என்ற பெருவிருப்புடன் அங்கிருந்து சீகாழி நோக்கிப் புறப்பட்டார்.

சூலைநோயினைத் தந்து நேரே சிவபெருமானால் தடுத்தாளப் பெற்ற திருநாவுக்கரசப் பெருந்தகையார் தம்மைக் காண வருகின்றார் எனக் கேள்வியுற்ற சம்பந்தர் அடியார்களுடன் எதிர் சென்றழைத்தார்.

திருஞானசம்பந்தரைக் கண்டு அளவிலா ஆர்வமுற்ற திருநாவுக்கரசர் எதிர்சென்று அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். ஆளுடைய பிள்ளையார் தமது மலர்போன்ற மெல்லிய கரங்களால் நாவரசரைத் தூக்கி எடுத்து 'அப்பரே' என்று அன்புடன் அழைத்தார். அவரும் 'அடியேன்' என்றார்.

"பெருமக்கள் பெருமக்களையே நாடுவர்"

"பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றி யாங்கு என்றும் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பாலரா குபவே"

என்ற பாடலுக்கு இலக்காக இருபெரு சைவப் பெருமக்களும் ஒன்று சேர்ந்தனர். இவர்களது இணைப்பு வரலாற்றுப் புகழ் வாய்ந்தது.

சமணக் காரிருளால் மூடப்பெற்றுத் தென்னாட்டில் சைவம் பெருந் தளர்ச்சியுற்றிருந்தது. மக்கள் பலர் சைவம் விடுத்துச் சமணம் சாரத் தொடங்கினர். திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் தோன்றிச் சமயப் பணி செய்யாமல் இருந்திருப்பார்களேயானால் தமிழகம் சமணப் பெருங்குழியில் வீழ்ந்து பாழ்பட்டிருக்கும்.

சைவத் திருக்கோயில்கள் பல சிதைந்திருக்கும். 'பெரிய புராணம்' என்ற பெறற்கரிய கருவூலம் தோன்றாமலே மறைந்திருக்கும். தஞ்சை இராசராசேச்சரமோ கங்கை கொண்ட சோழீச்சரம் போன்ற திருத்தளிகளோ எதுவும் தோன்றி இரா. தமிழ் நாட்டில் சைவம் பெருமளவு பாதிக்கப் பட்டிருக்கும்.

இதனை, "கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதிவரை சமணம் தமிழகத்தை ஆட்சி புரிந்தது என்றால் தவறாகாது. பல்லவர் -

பாண்டியர் இச்சமணத்தைப் பெரிதும் ஆதரித்தனர். அதன் பயனாகத் தமிழ்நாட்டுப் பழைய சமயங்களான சைவமும் வைணமும் பேரளவு கவனிப்பாரற்றுக் கிடந்தன. அந்தச் சமயத்தில் தோன்றியவர் தாம் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும். இவர்கள் தொண்டினால் கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் பிற்பாதி முதல் சைவமும் வைணவமுமே நாடெங்கும் வளர்ச்சி பெறலாயின'' என்பார் கூற்று நன்கு புலப்படுத்தும்.

அப்பரும் சம்பந்தரும் இவ்வாறு சந்தித்து அளவளாவிச் சந்தித்த முதல் சந்திப்பு இது. இதுபோன்று மூன்று முறை இவர்கள் சந்தித்து அளவளாவியது பற்றிப் பெரிய புராணம் கூறுகிறது.

இரண்டாம் சந்திப்பு

அப்பர் சம்பந்தரிடம் விடை பெற்றுப் பல தலங்களுக்கும் சென்று இறைவனை வழிபட்டுப் பதிகங்கள் பாடியவாறு திருவாரூர் சென்றடைந்தார். அங்கே புற்றிடங் கொண்ட புராதனனை வழிபட்டுத் திருத்தாண்டகங்கள் பல பாடித் துதித்தார். அப்பொழுது ஆரூரில் திருவாதிரைத் திருநாள் சிறப்பாக நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு மகிழ்ந்த அப்பரடிகள் அங்கிருந்து புறப்பட்டுப் பல தலங்களையும் வழிபட்டவண்ணம் திருப்புகலூரை அடைந்தார்.

அங்கே முருக நாயனார் மடத்தில் தங்கியிருந்த திருஞானசம்பந்தரைக் கண்டு வணங்கி அளவளாவி மகிழ்வுடன் தங்கினார்.

"அப்பரே நீவிர் திருவாரூரில் நிகழ்ந்த ஆரூர் விழாப் பெருமையை எமக்குக் கூறும்'' என சம்பந்தர் வேண்ட தான் அங்கு கண்ட ஆதிரை விழாப் பெருமையை அப்பர் விரித்துரைத்தார்.

வீதிவிடங்கப் பெருமானது திருவளர் ஆதிரை நாள் விழாப் பெருமையை,

> **"முத்து விதான மணிப் பொற் கவரி முறையாலே**
> **பத்தர்க ளோடு பாவையர் சூழப் பலிப்பின்னே**
> **வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்**
> **அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்"**

எனவரும் திருப்பதிகத்தில் சிறப்பாகப் பாடி சம்பந்தர்க்கு அறிவித்தார். நாவரசர் பாடல்களில் இப்பதிகம் சிறப்பிடம் பெறுகின்றது.

சில நாட்கள் சென்றபின் அப்பரும் திருஞானசம்பந்தரும் திருப்புகலூரினின்றும் புறப்பட்டுத் திருஅம்பர் என்னும் திருப்பதியை அடைந்து வழிபட்டனர். பின்னர் திருக்கடவூர் சென்று குங்கிலியக் கலய நாயனாரால் உபசரிக்கப் பெற்றுத் திருக்கடவூர்த் திருமயானம், ஆக்கூர்

தான் தோன்றி மாடம் என்னும் தலங்களை வழிபட்டுத் திருவீழி மிழலையை அடைந்தனர்.

இருவரின் சமுதாயத் தொண்டு

சமூகத்துக்கு ஆற்றும் தொண்டுகளில் வருந்திவந்தோர் அரும்பசி மாற்றும் அறமே சிறந்ததென அறநூல்கள் சாற்றுகின்றன.

பசிப்பிணி தீர்க்கும் அறத்தை வலியுறுத்தித் தமிழில் 'மணிமேகலை' என்னும் ஒரு காப்பியமே எழுந்தது.

''நீரில் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே''

என்பர் குடபுலவியனார்.

இருவரும் திருவீழிமிழலையில் தங்கியிருந்த போது பருவமழை பொய்த்தமையால் பஞ்சம் உண்டாயிற்று. விளை பொருள்கள் கிடைக்காமையால் மக்கள் பசியால் வாடினர். அது கண்டு வருந்திய இருவரும் இறைவனை வேண்டினர். இறைவன் அவர்கள் கனவில் தோன்றி,

''வருந்தாதீர்கள்! கோயிலில் எமது கருவறை பீடத்தின் படியில் நாள்தொறும் இரண்டு பொற்காசுகள் வைப்போம். அவற்றை எடுத்து மாற்றி உணவுப் பொருள் பெற்று அடியவர்களின் பசியை மாற்றுங்கள்''

என்று கூறினார்.

அதன்படி கிடைத்த இரு காசுகளையும் பெற்று அவற்றின் உதவியால் அடியவர்களுக்கும் வறியவர்கட்கும் உணவிட்டு அரும்பசி போக்கினர். மக்கள் இவர்களை வாழ்த்தினர்.

மறைக்கதவம் திறப்பித்தல்

மற்றும் இருவரும் புறப்பட்டுப் பல தலங்களையும் வழிபட்டு வரும்போது திருமறைக்காட்டில் வேதங்களால் பூசித்து அடைக்கப் பட்ட கோயில் கதவு நெடுங்காலமாகச் சார்த்தப்பட்டே கிடந்தது. மக்கள் நேரே செல்லமுடியாமல் கோயில் பொலிவிழந்து கிடந்தது.

அதுகண்ட திருநாவுக்கரசர் ''பண்ணின் நேர்மொழியாள்'' எனத் தொடங்கும் பத்துப் பாடல்கள் கொண்ட பதிகத்தைப் பாட மறைக்கதவு திறந்தது. பின்னர் சம்பந்தர் 'சதுரம் மறை' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாட முதற்பாடலிலேயே கதவம் பழையபடி மூடிக் கொண்டது.

114. நாவுக்கரசரில் இசைக்கருவிகள்

ந. வெங்கடேசன், வில்லியனூர்.

அந்தமில் சோதித் தன்மை இருசுடரும் ஆயினானை, ஊன் கருவின் உண்ணின்ற சோதியானை, எண்டிசைக்கும் ஒண் சுடராய் நின்றானை, நாவுக்கரசர், "தமிழோடு இசைபாடல் மறந்தறியேன் நலம் தீங்கிலும் உன்னை மறந்தறியேன், உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்" என்றார். அவர்தம் தேவாரப் பாடல்களில் காணப்படும் இசைக் கருவிகள் பற்றிக் காண்போம்.

கலைகள்

ஆயக் கலைகள் 64. அவற்றுள் இசைத்தமிழ் ஒன்று. இது இயற்றமிழுக்கும், நாடகத் தமிழுக்கும், நடுநாயகமாகத் திகழ்ந்தது. எனவே பழைமையானது. சங்க நூல்களில் இசையும், இசைக்கருவிகளும் பேசப்பெறுகின்றன. பண்டைநாளில் இசையில் வல்லவராய்த் திகழ்ந்தோரை இசைப்பாணர் என்றனர். கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் 9-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் இசைப்பாணர்கள் இருந்தனர். கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் இசைப்பாணர்கள் அருகினர். சமணரும், பௌத்தமும் தமிழகத்தில் தலை தூக்கிய காலத்தே இசையும் நாடகமும் அருகியது.

நாவுக்கரசர் காலத்தில் திருநீலகண்ட யாழ்ப்பாணரும், திருமால் அடியாரான திருப்பாணாழ்வாரும், வரகுணபாண்டியன் காலத்துப் பாணபத்திரரும் இசைத் தொண்டு புரிந்தோர் ஆவர்.

பஞ்சபாரதீயம் என்ற நூலை நாரதர் இயற்றினார். அந்நூல் இன்று இல்லை என்று அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் கூறியுள்ளார். பஞ்சமரபு என்ற இசைத்தமிழ் இலக்கண நூலை அறிவனார் என்பவர் இயற்றினார். பதினாறு படலம் என்னும் இசைநூல் இருந்ததாக அரும்பத உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இந்திரகாளியம் என்னும் இசை நூலை அடியார்க்கு நல்லார் கூறியிருக்கிறார். இசையை இசைவிக்க இசைக் கருவிகளும் துணை நிற்கின்றன.

இசைக் கருவிகள்

இசைப் பாட்டிற்கு இசைக் கருவிகள் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. தோல் கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி, கஞ்சக்

கருவி, மிடறு (கழுத்து) இவற்றால் உண்டாகும் ஓசையால் இசையை வளர்த்தனர். மரத்தோடு தோலையும் பயன்படுத்தினர்.

தோற்கருவி

பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவலையம், மொந்தை, முரசு, கண்விடு தூம்பு, நிசாளம், துடுமை, சிறுபாறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப் பறை, துடி, பெரும்பறை என்பனவாகும்.

இவற்றில் - மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை, படகம், குடமுழா ஆகியன இசைப்பாடலுக்குப் பக்க வாத்தியங்களாக அமைக்கப் பெறுவன. இவற்றை அகமுழவு என்பர்.

தண்ணுமை, தக்கை, தகுணிச்சம் என்பன மத்திமான கருவிகள். இவற்றை அகப்புற முழவு என்பர்.

மத்தளம், சல்லிகை, கரடிகை என்பன ஓசையினால் பெற்ற பெயர்கள்.

குடமுழா தோற்கருவிகளில் ஒன்றாகக்கூடிப் பெற்றது. இன்று குடமுழா என்றால் கடம் (குடம்) என்கின்றனர்.

ஆனால், குடமுழா என்பது பஞ்சமுக வாத்தியம் என்று கூறப் பெறும் இசைக் கருவியாகும். இது இப்போது மறைந்துவிட்டது. இது இன்று அருங்காட்சியகத்திலும், சிற்ப வடிவத்தில் கோயில்களிலும் காணலாம். சிதம்பரம் நடராசர் ஆலயத்தில் சபைக்கு எதிர் மண்டபத்தின் நடுப் பகுதியில் இன்றும் காணலாம்.

துளைக் கருவிகள் குழல், நாதசுரம், முகவீணை, கஞ்சக் கருவிகள்: இவை வெண்கலத்தால் செய்யப் பெற்றிருக்கும். தாளம்; குண்டு தாளம், பிரமதாளம், ஜாலர் முதலியன.

பண் ஆராய்ச்சி

தமிழ் இசைச் சங்கம் தேவாரப் பண்ணாராய்ச்சி செய்து வருவது பாராட்டத்தக்கது. "திருஞான சம்பந்தர் பாடிய 'மாதர் மடப்பிடி....' என்று தொடங்கும் தேவாரப் பாடல் யாழ்முரிப் பண்ணாகும். இதை, அடானா இராகத்தில் பாடுகிறார்கள். 50 ஆண்டுகளுக்கு முன்பு மேகராகக் குறிஞ்சிப் பண்ணினால் பாடப்பட்டது" என்பது ஆய்வினால் வெளிப்பட்டது என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

தமிழிசை வளர்ச்சிக்குப் புத்துயிர் அளித்த பெருங்கொடை வள்ளல் பல்கலைக்கழகம் கண்ட டாக்டர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார்

என்பதைத் தமிழகம் மறந்துவிடவில்லை. இவரின் முயற்சியால், இராவ்சாகெப் - கு. கோதண்டபாணிப் பிள்ளை அவர்களைக் கொண்டு 'பழந்தமிழ் இசை' என்ற ஆய்வு நூல் 1959-இல் வெளியிடப்பட்டது.

இசைதரும் பண்பாடு

தமிழர் இசையைக் கருப்பொருள்களுள் ஒன்றாகக் கொண்டனர்.

இசை உணர்வும் பொறியுணர்வேயாகும். இசை நுகரும் செவி உணர்வு தூயது. மாசற்ற துறவிகளும் இசையை விரும்பினர். இசையை இறை வழிபாட்டுடன் இசைவித்தனர்.

"இகலொடு செற்றம் நீக்கிய மனத்தினர்",

"காமமொடு கடுஞ்சினம் கடிந்த காட்சியர்"

"இடும்பையாவது மறியா வியல்பினர்",

"துனியில் காட்சி முனிவர் தாமும் நல்யாழ்"

நவின்ற நயம்படு இசையுடன் ஒன்றி வழிபாடியற்றும் காட்சியைத் திருமுருகாற்றுப் படையில் கற்று மகிழலாம்.

நாவுக்கரசர்

இசையில் தோய்ந்து தோய்ந்து அதன் வழியே உயர்ந்தும், தான் என்பது அழிந்து, இசை வேறு தான் வேறு என்று கருதாது இரண்டறக் கலந்த நிலையில் அப்பர் பெருமான் இறைவன் இணையடி நீழலில் இரண்டறக் கலக்கும் நிலையைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே".

இசை, செவிக்கு உணவாகி, மனத்துக்கு உணவாகி, உயிருக்குதவும் உணவாக அமைவதைக் காண்கின்றோம்.

நாவுக்கரசர் தேவாரத்தில் இசைக் கருவிகள்

கல்லலகு, கல்லவட்டம், கின்னரம், குடமுழவம், குழல், கொக்கரை, கொடு கொட்டி, சங்கு, சங்கம், சச்சரி, தக்கை, தகுணிச்சம், தமருகம், தாளம், துடி, பறண்டை, பறை, பிடவம், முரசம், முழவு, மொந்தை, யாழ், வீணை மற்றும் பலவகை வாத்தியங்களாக ஐந்து வாத்தியங்கள், ஏழு வாத்தியங்கள், பல்லியம் ஆகிய இசைக் கருவிகளைத் திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கல்லலகு

"கல்லலகு நெடும்புருவக் கபாலம் ஏந்திக்
கட்டங்கத்தோடு உறைவார் காப்புகளே" (220-1)

என்ற அதிகை வீராட்டானம் பதிகத்திலும்,

"கல்லலகு தாம் கொண்டு, காளத்தீ(ய்) யாய்,
கடிய விடை ஏறி, காணக்காண" (222-9)

என்ற திரு ஆமாத்தூர் பதிகத்திலும்,

"கடித்தாமரை ஏய்ந்த கண்ணார் போலும்,
கல்லலகு பாணி பாணி பயின்றார் போலும்" (234-1)

என்ற திரு ஆக்கூர்த்தான் தோன் மாடம் பதிகத்திலும் கல்லலகு எனும் இசைக்கருவியைக் கூறியுள்ளார்.

கல்லவடம்

"நடுக்கத்துள்ளும், நகையுளும், நம்பற்குக்
கடுக்கக் கல்லவடம் இடுவார்கட்குக்" (205-2)

என்ற பாடற்பகுதியில் கல்லவடம் குறிப்பிடப்படுகிறது.

கின்னரம் (ஒருவகை யாழ்)

'விண்ணினார், விண்ணின் மிக்கார், வேதங்கள் விரும்பி ஓதப்
பண்ணினார், கின்னரங்கள் பக்தர்கள் பாடி ஆடக்'

என்ற திருமறைக்காடு பதிகத்திலும்,

'பண்ணிடைச் சுவையின் மிக்க கின்னரப் பாடல் கேட்பார்',

என்ற திருக்கச்சி மேற்றளிப் பதிகத்தாலும் கின்னர இசைக்கருவி சிறப்பித்துப் பேசப்படுகிறது.

குடமுழவம்

"சுற்றுமே, தொண்டைவாய் உமை ஓர்பாகம்
கூடுமே, குடமுழவம் வீணை தாளம்" (217-5)

என்ற திருவதிகை வீரட்டானம் பதிகத்தில் குடமுழவம் எனும் இசைக்கருவியைக் கூறுகிறார்.

ஆனால் குடமுழா தோல்கருவிகளில் ஒன்றாகக் கூறப்பெற்றது. இன்று குடமுழா என்றால் கடம் (குடம்) என்கின்றனர்.

குடமுழா என்பது பஞ்சமுக வாத்தியம் என்று கூறப்பெறும் இசைக்கருவியாகும். இது இப்போது இசைக்கப்பெறுவது இல்லை.

இது, அருங்காட்சியகத்திலும், சிற்பவடிவில் கோயில்களிலும் காணலாம். சிதம்பரம் நடராசர் ஆலயத்தில் பொன்னம்பலத்திற்கு எதிரே இருக்கும் மண்டபத்தில் நடுப்பகுதியில் சிற்பமாகக் காணலாம்.

குழல்

'நிழல் உமிழ் சோலை சூழ நீள் வரி வண்டு இனங்கள்
குழல் உமிழ் கீதம் பாடும் கோடிகா உடைய கோவே!' (51-7)

என்ற திருக்கோடிகாப் பதிகத்தில் குழல் பேசப்பெறுகிறது.

கொக்கரை

'கொக்கரை, தாளம், வீணை, பாணிசெய் குழகர்போலும்,
அக்கு அரை அணிவர் போலும், ஐந்தலை அரவர் போலும்'
(66-9)

என்ற திருநாகேச்சுரத்தில் கொக்கரை இசைக்கருவி சொல்லப் பெறுகிறது.

கொடுகொட்டி

'விடுபட்டி ஏறு உகந்து ஏறி! என் விண்ணப்பம், மேல் இலங்கு
கொடுகொட்டி, கொக்கரை, தக்கை, குழல், தாளம், வீணை,
மொந்தை' (111-8)

என்ற சரக்கறைத் திருவிருத்தப் பதிகத்தில் கொடுகொட்டி பேசப்பெறுகிறது.

சங்கு - சங்கம்

'கொடி, கொள் விதானம், கவரி பறை, சங்கம், கைவிளக்கொடு
இழவு இல்பெருஞ் செல்வம் எய்துவர், எய்தியும் ஊனம் இல்லா'
(102-6)

என்ற திருஆரூர்ப் பதிகத்தில் சங்கைக் கூறுகிறார்.

சச்சரி

'குருமணியை, குழல் மொந்தை தாளம் வீணை
கொக்கரையின் சச்சரியின் பாணியானை' (242-1)

என்ற திருஆரூர்ப் பதிகத்தில் சச்சரியைக் குறிப்பிட்டுப் பாடுகிறார்.

தக்கை

'தழைஆர் சடை கண்டேன், தன்மை கண்டேன்,
தக்கையொடு தாளம் கறங்கக் கண்டேன்' (290-1)

என்ற திருவாய்மூர்ப் பதிகத்தில் தக்கை என்ற இசைக் கருவியை எடுத்தாண்டுள்ளார்.

தகுணிச்சம்

'வீந்தார் தலைகலன் ஏந்தீ! என் விண்ணப்பம், மேல் இலங்கு
சாந்து ஆய வெந்த தவள - வெண்நீரும், தகுணிச்சமும்'
(111-3)

என்ற சரக்கறைப் பதிகத்தில் தகுணிச்சம் எனும் இசைக்கருவி பயிலப் பெறுகிறது.

தமருகம்

'நீற்றவன் காண், நீர் ஆகித் தீ ஆனான் காண்,
நிறை மழுவும், தமருகமும், எரியும், கையில்' (277-3)

என்ற திருக்கச்சி ஏகம்பம் பதிகத்தில் தமருகத்தைப் பற்றிப் பாடுகிறார்.

தாளம்

'கொழுங்குவளைக் கோதைக்கு இறைவர் போலும்,
கொடுகொட்டி, தாளம், உடையார் போலும்' (222-10)

என்ற திருஆமாத்தூர்ப் பதிகத்தில் தாளம் பற்றிச் சொல்கிறார்.

துடி

'கரந்தன கொள்ளி விளக்கும், கறங்கு துடியின் முழக்கும்
பரந்த பதினெண் கணமும், பயின்று அறியாதன பாட்டும்'
(2-6)

என்ற திருஅதிகை வீராட்டானம் பதிகம் துடிபற்றி இசைக்கின்றது.

பறண்டை

'பாடும் பறண்டையும் மொந்தையும் ஆர்ப்ப பரந்து பல்பேய்
கூடி முழவக் குவி கவிழ் கொட்ட, குறுநரிகள்' (92-9)

என்ற திருஐயாறு பதிகம் வழிப் பறண்டை எனும் இசைக்கருவியை அறிகிறோம்.

பறை

'கட்டும் அரவு அதுதான் உடையான், கண்டியூர் இருந்த
கொட்டும் பறை உடை - கூத்தனைஆம், அண்டர் கூறுவதே'
(93-8)

என்ற திருக்கண்டியூர்ப் பதிகத்தில் பறையைப் பகர்கின்றார்.

பிடவம்

'உறுபிணியும் செறுபகையும் ஒற்றைக் கண்ணால்
பீடு உலாம் தனை செய்வார், பிடவம், மொந்தை' (223-2)

என்ற திருப்பந்தணைநல்லூர்ப் பதிகத்தில் பிடவம் எனும் இசைக்கருவியைக் குறிக்கின்றார். இங்கே திருக்குறள் அடியை எடுத்தாளுகின்றார்.

முரசம்

'வார் கொள் மென் முலை மங்கை ஓர் பங்கினன்
வார் கொள் நல் முரச(ம்) அறைய(வ்) அறை' (172-5)

என்ற திருமாற்பேறு பதிகத்தில் முரசம் எனும் இசைக்கருவியைக் குறிக்கின்றார்.

முழவு - முழகம்

'கொட்ட மாமுழவு, ஓங்கு குரக்குக்கா
இட்டம் ஆய் இருப்பார்க்கு இடம் இல்லையே' (188-5)

என்ற திருக்குரக்குக்காப் பதிகத்தில் முழவு எனும் இசைக் கருவியைக் குறிக்கின்றார்.

மொந்தை

'குழலோடு, கொக்கரை, கைத்தாளம், மொந்தை
குறள் பூதம் முன்பாடத் தான் ஆடு(ம்)மே' (217-7)

என்ற திருஅதிகை வீரட்டானம் பதிகத்தில் மொந்தை எனும் இசைக்கருவியைச் சொல்கிறார்.

யாழ்

''அறை கலந்த குழல், மொந்தை, வீணை யாழும்
அந்தரத்தின் கந்தருவர் அமரர் ஏத்த'' (253-2)

என்ற திருமழபாடி பதிகத்தில் யாழை அமரர்களே புகழ்கின்றதைச் சொல்கின்றார்.

யாழ் என்னும் இசைக் கருவியைப் பண்டைக் காலத்தில் இந்தியா முழுவதும் மீட்டி மகிழ்ந்தனர். கி.பி. 11-ஆம் நூற்றாண்டளவில் மறைந்ததாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

யாழுடன் சம்பந்தமுடைய பழைய பண்கள் தேவாரத்தில் வெகுவாக உள்ளன. அப்பர், சம்பந்தர், சுந்தரர், திருப்பாணாழ்வார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், பாணபத்திரர் முதலியோர் காலத்திலும் யாழ் வெகுவாக வாசிக்கப்பெற்றது.

'யாழ் நூல்' என்னும் இசையாராய்ச்சி நூலை முத்தமிழ் வித்தகர் உயர்திரு விபுலாநந்த அடிகள் முயன்று இயற்றியுள்ளார். தமிழகத்தில் யாழ் ஒலி மீண்டும் எழுப்பிடச் செய்ய வேண்டும்.

யாழைக் குறித்த பிற நூல்கள்

'வண்டு யாழாக இன்பல் இமிழிசை கேட்டு' (அகம். 82, 6, 7)

'யாழிசை கொண்ட இனவண்டிமிர்ந்தார்ப்ப' (கலித். 131, 9)

'ஏழ்புழை ஐம்புழை யாழ் இசை கேழ்த்தன்ன இனம்
வீழ் தும்பி வண்டொடு மிஞிறார்ப்ப' (பரிபாடல் - 8, 22, 23)

'பூவூது வண்டினம் யாழ் கொண்ட கொளை கேண்மின்'
(பரிபாடல் - 125)

'அரவ. வண்டினம் யாழ் செய', 'இளவண்டு யாழ் செய', 'பல்வண்டு யாழ் செய' (சிலம்பு. 12, 26,-112, 27-194)

'அரவ வண்டொடு தேனினம் யாழ் செயும்' (சீவக. 1196)

'பாடல் வண்டு யாழ் செய' (சீவக. 1207)

'மழலை வண்டினம் நல்யாழ் செய்ய' (மணிமே. 4-4)

'பொங்கர் வண்டினம் நல்யாழ் செய்ய' (மணிமே. 19-58)

'அரவ் வண்டினம் யாழென ஆர்ப்ப' (பெருங். 5-2-18)

'யாழிசை இன வண்டார்ப்ப' (முல்லை - 8)

'வண்டு யாழாக' (திணைமாலை - 111)

'யாழின் வண்டார்க்கும் புனலூர்' (பழமொழி - 221)

'யாழில் எழும் ஓசையுடன் இருவர் மிடற்றிசை ஒன்ற'
(சம். 136)

எனவரும் பெரியபுராணக் கருத்தும் உளங்கொளத்தக்கது.

'குழல் இனிது யாழ் இனிது...' (திருக்குறள்)

யாழ் கேள்வி என்றே பெயர் பெறுவதாயிற்று இசைச் 'சில் செவித்தாகிய கேள்வி' என்று புறம் 18-ஆம் பாடல் குறிக்கும்.

'கேட்டார் பலரும் அறிதற்கரிதாய் அறிவார் சிலராதலின் சில் செவிக் கண்ணதாகிய யாழை' என்று இதற்குப் பொருள் கூறினார் பழைய உரையாசிரியர்.

இசையை நுட்பமாக உணர வல்லார் சிலரே. சில செவிகளுக்குப் புலப்படா. ஆதலின், தொல்காப்பியரும் இவற்றை மறைபொருள் ('நரம்பின் மறைய') என்றார்.

வீணை

'மடமான்மறி, பொன்கலையும், மழு, பாம்பு, ஒருகையில் வீணை
குடமால் வரைய திண்தோளும், குனிசிலைக் கூத்தின் பயில்வும்'
(2-4)

என்று திருஅதிகை வீரட்டானம் பதிகத்தில் வீணையாகிய இசைக் கருவியைச் சொல்லுவார் நாவுக்கரசர்.

சீவகசிந்தாமணியில்

'சூழ்மணிக் கோட்டு வீணைச் சுகிர்புரி நரம்பும் நம்பி
ஊழ்மணி மிடறும் ஒன்றாய்ப் பணி செய்தவாறு' (சீவக. 728)
'நரம்பொடு வீணை நாவின்
நவன்ற தோ! என்று நைந்தார்' (சீவக. 658)

'இவர் தம் பவளம் அன்ன செவ்வாயைத் திறந்தான் பாடினாரோ. அன்றி நரம்போடு கூடிய வீணையேதான் நாவினால் படிற்றோ! என்னும் ஐயமே அனைவர்க்கும் உண்டாயிற்று' என்று பொருள் கொள்ளலாம்.

நாவுக்கரசர், பலவகை வாத்தியங்களையும் சொல்லியிருக்கின்றார்.

ஐந்துவகை வாத்தியங்கள்

'பீடு உலாம்தனை செய்வார், பிடவம், மொந்தை
குடமுழவம், கொடுகொட்டி, குழலும் ஓங்கப்' (223-2)

என்று ஐந்து இசைக்கருவிகளை ஒருசேரக் கூறியுள்ளார்.

எழுவகை வாத்தியங்கள்

'விடுபட்டி ஏறு உகந்து ஏறி! என் விண்ணப்பம், மேல் இலங்கு
கொடுகொட்டி, கொக்கரை, தக்கை, குழல், தாளம, வீணை,
மொந்ஙத' (111-8)

என்ற சரக்கறையில் கூறியுள்ளார்.

பல்லியம்

'உகப்பார் காணப்பண்ணாரப் பல்லியம் பாடினான்காண்'
(221-11)

என்று திருக்காளத்திப் பதிகத்தில் பலவகை வாத்தியங்களை இசைத்தனர் என்கிறார்.

தமிழ் மக்களின் பண்பாட்டோடு ஒன்றிய இசையையும், இசைக் கருவிகளையும் நாவுக்கரசர் கூறியுள்ளார். ஒருநாட்டின் பண்பாட்டைப் புலப்படுத்த இசையும் துணைபுரிகிறது. இசை உடற்பிணியும் உள்ளப் பிணியும் தீர்க்கும், இசையால் உயிர் வளரும், உடல் வளரும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசையால் தாவரங்கள் வளர்கின்றன என்பதைக் கண்டறிந்தனர். இசையால் மதங்கொண்ட யானையும் அடங்கும் எனில் யாரே இசையில் மயங்காதார். இசைக்குக் கல்லும் கசிந்துருகும் (நாரதன் அனுமன் இசைப்போட்டி) நன் மருந்தாகும். வாழ்க நாவுக்கரசர் தொண்டு! மீண்டும் தமிழகத்தில் புத்துயிர் பெறுக இசைக்கருவிகள்!

115. தொண்டை நாட்டில் நாவுக்கரசர்

இராம. வேணுகோபாலன், சென்னை.

சமயக் குரவராகவும் கவிஞராகவும் இருந்தாலும் அப்பர் சமுதாயக் கவிஞராக வாழ்ந்தார். நாவுக்கரசருக்கு ஆன்மீகம் மூச்சாக இருந்தாலும் அவரது பேச்சிலும் எழுத்திலும் பாமர மக்களின் வாழ்வும் பிரதிபலிக்கும் நிலையைக் காணலாம்.

தேவாரப் பாடல் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்கள் 32. இவற்றுள் திருநாவுக்கரசர், திருக்கச்சி ஏகம்பம், திருக்கச்சி மேற்றளி, திருமாற்பேறு, திருவாலங்காடு, திருப்பாசூர், திருக்காளத்தி, திருஒற்றியூர், திருவன்மியூர், திருக்கழுக்குன்றம் ஆகிய ஒன்பது ஊர்களில் உள்ள இறைவன் மீது பாடல்கள் தொடுத்துள்ளார்.

இத்திருத்தலங்களில் பாடப் பெற்ற திருநாவுக்கரசரின் பாடல்களில் கண்ட சில செய்திகள் இங்கே தரப்பட்டுள்ளன.

நாவுக்கரசர் தாம் செல்லும் திருக்கோயில்களின் பெருமைகளை அழகுற வர்ணிக்கும் ஆற்றல் பெற்றவர். காஞ்சி மாநகர் பற்றிக் கூறுமிடங்களில் 'கல்வியைக் கரையிலாத காஞ்சி மாநகர்', 'கருமுகில் தவழும் மாடக் கச்சி', 'கொடி மாமதில் சூழ் கச்சி', 'செறி தீம்பொழில் கச்சி', 'வண் எழிலார் கச்சி' எனச் சிறப்பித்துக் கூறுவார். திருமாற்பேறு பற்றிக் கூறும்போது, 'பைம்பொழில் மாற்பேறு', 'வண்டு சேர் பொழில் சூழ் திருமாற்பேறு', 'மாடம் நீடுயரும் திருமாற்பேறு' எனப் போற்றுவார்.

திருவன்மியூர் பற்றிக் கூறுகையில் 'வண்டுசேர் பொழில் வன்மியூர்', 'மருளறுத்திடும் வன்மியூர்', 'வாதை தீர்த்திடும் வன்மியூர்' என்று போற்றுவார். 'ஒளி திகழும் ஒற்றியூர்', 'விடுங்கலங்கள் நெடுங்கடலுள் நின்று தோன்றும், திரை மோதக் கரையேறிச் சங்கம் ஊருந் திருவொற்றியூர்', 'அலைகொள் முந்நீர் மல்லல் திரைச் சங்க நித்திலங்கொண்டு வம்பக் கரைக்கே ஒல்லைத் திரை கொணர்ந்து எற்றும் ஒற்றியூர்', 'தேனகம் நாறும் ஒற்றியூர்', 'ஆலைக்கரும்பொடு செந்நெற்கழனி அருகணைந்த சோலைத் திருவொற்றியூர்' என்று போற்றுகின்றார். இப்பகுதிகளில் எல்லாம் திருநாவுக்கரசரின் கவித்துவத்தைக் காணலாம். பக்தியை மட்டும் பாடாமல் இயற்கையையும் பாடிய அப்பர் அடிகள் இயற்கையே

இறைவன் என்பதை உணர்ந்தவர். திருப்பாசூர் பற்றிக் கூறும்போது அவர் 'பாரோரும் விண்ணோரும் பரசும் பாசூர்' எனப் பாடுவார்.

புலனடக்கம்

பக்தி நெறிக்கு இன்றியமையாத அடிப்படையாக அமைவது புலனடக்கம். அதனால்தான் திருமூலர் 'ஈசனோடாயினும் ஆசை அறுமின்' என்றார். ஐம்புலன்களை அடக்க வல்லவரே பற்றறுத்து இறைவனை எளிதில் காண இயலும். இதனை நாவுக்கரசர் பல இடங்களில் வலியுறுத்துகின்றார்.

'ஒரு முழம் உள்ள குட்டம் ஒன்பது துறையுடைத்தாய்
அரைமுழம் அதன் அகலம் அதனில் வாழ் முதலை ஐந்து
பெருமழை வாய்தல் பற்றிக் கிடந்துநான் பிதற்றுகின்றேன்'

என்று கூறுகின்றார். இறைவனைத் தொழுதால் நம் கட்டவிழ்ப்பான். கட்டு-தளை இருக்கும்வரை இறைவனை அடைதல் இயலாத செயல். ஐம்புலன்களின் கட்டு அவிழ அவனை வணங்குதல் வேண்டும். அவனருளால் மட்டுமே அவன்தாள் வணங்க முடியும் என்பார்.

'மூக்கு வாய் செவி கண் உடல் ஆகிவந்து
ஆக்கும் ஐவர் ஆப்பை அவிழ்த்தருளும்'

ஆற்றல் இறைவனுக்கே உண்டு. பொறிப் புலன்களைப் போக்கறுத்து உள்ளத்தை நெறிப்படுத்த நினைந்தவர் சிந்தையுள் இறைவன் அறிப்புறும் அமுதாக வந்து ஊர்வான். மேலும் இறைவனைப் புலன்களில் இருந்து விலகித் தொழுதால் மட்டுமே இறைவன் நம் வசப்படுவான்.

''ஓட்டை மாடத்தில் ஒன்பது வாசலும்
காட்டில் வேவதன் முன்னங் கழலடி
நாட்டி நாண்மலர் தூவி வலஞ் செயில்
வாட்டந் தீர்த்திடும் வான்மியூர் ஈசனே''

என்ற அடிகளில் பிறவி வாட்டத்தினைத் தீர்க்கும் ஆற்றல் பெற்றவன் இறைவன் ஒருவனே என்பார்.

இறையன்பு ஊற நல் மனம் வேண்டும். 'ஐம்புலனும் அகத்தடக்கி எப்போதும் இனியானை என் மனத்தே வைத்தேனே' என்பார் நாவுக்கரசர். புலனடக்கம் பக்தி நெறிக்கு இன்றியமையாதது என்று இதனால் புலப்படும்.

நாவுக்கரசர் போற்றும் சிவபெருமான் தோற்றம்

தொண்டை நாட்டுத் தலங்களைப் பாடும் இடங்களில் எல்லாம் நாவுக்கரசர் இறைவனின் பல்வகைத் தோற்றத்தைப் புகழ்ந்துரைக்கின்றார். 'தூநீறணியும் சவண்டர்', 'தழலுருவாய் நிமிர்ந்தவர்', 'பண் இயலும்

பாடல் உகப்பார்', 'காற்றாக வீசுவார்', தீ யாக வானாக வளர்ந்தோங்கி நிற்பார். மதியாகக் குளர்வார். அனலுடன் கூத்திடுவார். பாம்பு, கொன்றை, மதி, நதி ஆகியவற்றைத் தலையில் சூடிக்கொண்டிருப்பார். செம்மேனிப் பெம்மான் பணைமுலையாள் பாகத்தான். பாவுற்ற பாடல் உகப்பான். பூவுற்ற நாற்றமாய் நிற்பான். புனிதப் பொருளாகி அருள்வான். செஞ்சடையன். நெற்றிக்கண்ணன். ஏறு உகந்தவன். ஓடு கையில் ஏந்தியவன். சடைமுடிக்கற்றையன். சூலாயுதப்படையன் என்றெல்லாம் அவன் தோற்றத்தில் திளைத்த நாவுக்கரசர் அவனைப் போற்றுவார்.

சிவன் பெருமைகள்

சிவன் எண், எழுத்து, கண், மணி, பண், அமுது, வேதம், வித்து, மாரி, கொண்டல், சுடர் எனப் பல பெருமைகளுக்கு உரியவன். திரிபுரம் எரித்தும், இலங்கைக்கோனைத் தன் விரல்களால் மிதித்தும் தன் ஆற்றலைக் காட்டியவன். மாலும் பிரம்மனும் தேடிக்காணாப் பேருருவினன். பார்த்தனுக்கு அருள் வேடனாய் வந்த அருளினன். காளியுடன் நடமிட்டு தான் எனும் அகந்தையை அழித்தவன். வேதம் வேதப்பொருள் அனைத்தும் உணர்ந்தவன். சிலந்திக்கும் ஆனைக்கும் அருள் செய்தவன். தேவர்கள் நலன் கருதி ஆலகாலம் உண்டவன். அடியவர்க்காய் எமனை உதைத்தவன்.

நாவுக்கரசரின் அறிவுரைகள்

அப்பரின் வாக்கு அனுபவ வாக்கு. பிறவிப் பிணி ஒழித்து இறைவன் திருவடி சேர்தற்கு தம் அனுபவத்தின் வாயிலாகப் பல நற் செய்திகளைக் கூறி நம்மை நெறிப்படுத்த முயல்வார். சிவன் தன்னைச் சரண் என்றோர்க்கு அன்பனாவான். அவனே தோத்திரம், அவனே சாத்திரம். 'தொண்டராய்ப் பணிவார்க்கு அணியார்' என்பார் அப்பர் அடிகள். ஆனால் அகந்தை கொண்டு திரிவார்க்கு அகப்படாது ஒளிக்கும் உள்ளத்தான், 'மாலும் தாமரையானும் தேட தழலுருவாய் நிமிர்ந்தான்' என்பார் நாவுக்கரசர். இறைவனைக் கைப்போது மலர் தூவிக் காதலித்து வணங்கினால் நமக்கு எப்போதும் இனியன் என்பார். சிவன் தொண்டர்தாம் மலர் தூவிச் சொல்மாலை புனைகின்ற இண்டைசேர் சடையன். கையினால் தொழ வல்லார்க்குக் கடுவினைகளைக் களைபவன். அவனுடைய திருநாமம் மகிழ்ந்துரைத்து அழவல்லார்க்கு அன்பு செய்து இன்போடும் வழுவிலா அருள் செய்பவன். அவனைக் காதல் செய்யின் குருடர்க்கு முன்னே குடிகொண்டிருக்கும் வள்ளல். அவனுடைய அன்பர்கள் தீது செய்து தீவினை வீழாது அவரிடம் காதல் செய்து அவர்தம் கருத்தினில் நிற்பவன்.

தொண்டர்களின் தோழன்

தொண்டர்களுக்கு மாநிதியம் போன்று பயன்படும் ஆற்றல் மிக்கவன், அவன் பிணிபோக்கும் மருத்துவன் ஆவான். பக்தர்களுக்கு மாற்றிலாச் செம்பொன் ஆவான். அடியவரின் வாட்டம் தீர்த்து வையம் ஆளவைப்பான். பொய்யனைத்தும் விட்டவர் பந்தியுள் மெய்யனாய் வந்து நிற்பான். சொல்லும் பொருளுமாய் நிற்பவன். கற்று அறிவிலாதவரும் ஐந்தெழுத்து மந்திரம் சொன்னால் தானும் தன் துணையும் தோன்றி வாழ்க்கைத் தேவைகளைத் தருவான் என்பதை,

'ஏதும் ஒன்றும் அறிவிலராயினும்
ஓதி அஞ்செழுத்தும் உணர்வார்கட்குப்
பேதமின்றி அவரவர் உள்ளத்தே
மாதுந் தாமும் மகிழ்வார்'

என்ற அடிகளில் தெளிவுறுத்துவார் நாவுக்கரசர்.

சிற்றின்பம் தவிர்

பெண்ணின்பம் என்னும் சிற்றின்பம் இறையின்பம் என்னும் பேரின்பம் பெறத் தடையாய் இருக்கும் என்பது ஆன்றோர் வாக்கு. எனவே சான்றோரான நாவுக்கரசரும் பெண்ணின்பத்திலிருந்து விலகி வாழுமாறு வேண்டுகின்றார்.

'இடுகு நுண்ணிடை ஏந்திள மென்முலை
வடிவின் மாதர் திறம் மனம் வையன் மின்'

எனவும்

'ஆலு மாமயில் சாயல் நல்லாரோடும்
சால நீயுறு மால்தவிர் நெஞ்சமே'

என்றும் வேண்டுகோள் வைக்கின்றார்.

இறைவன் விரும்பி வாழும் சில திருக்கோயில்கள்

சிவபெருமான் உறையும் பல தலங்களுக்கும் சென்று வந்த நாவுக்கரசர் மனத்தில் ஒரு சில தலங்கள் மட்டும் அடிக்கடி வந்து நின்று அவரின் வாக்கில் வந்து வீழும், ஐயாறு, ஆரூர், ஆனைக்கா, சிதம்பரம், காஞ்சிபுரம், திருவொற்றியூர் முதலான தலங்களை அவர் அவ்வப்போது நினைந்து பாடுவார். வேறு தலங்களில் இருந்தபோது கூட அவர் இத்தலங்களை நினைந்து பாடியிருக்கின்றார்.

பழந்தொடர்பு

சைவராப் பிறந்து பின் சமணராக மாறிப் பின் சைவராக மாறியவர் அப்பரடிகள். இவருக்கும் இறைவனுக்கும் பழந்தொடர்பு இருந்ததால்தான்

இப்படி இவரைப் பற்றி நின்று இறைவன் ஆட்கொண்டதாகக் கூறுவார். இவரது இருள்கெடச் சென்று கைதொழுதேத்தியவர் சிவபெருமான் என்பது அவரது எண்ணம். மேலும்,

'கருவுற்ற நாள்முதலாக உன் பாதமே காண்பதற்கு
உருகிற்று என்உள்ளமும் நானும் கிடந்து அலந்து
....
.... எய்த்து ஒழிந்தேன்'

என்பார். பின்னர்,

'ஓதுவித்தாய் முன் அறவுரைகாட்டி அமணரோடே
காதுவித்தாய் கட்ட நோய் பிணி தீர்த்தாய்'

எனத் தம் வாழ்க்கை அனுபவங்களை எடுத்துச் சொல்லித் தனக்கும் இறைவனுக்கும் உள்ள பழந்தொடர்பை வெளிப்படுத்திக் காட்டுவார் அப்பரடிகள். அவர்க்கு மனத்தளர்ச்சி ஏற்பட்டபோதெல்லாம் சிவபெருமான் தோன்றாத் துணையாகவும் தோன்றுந் துணையாகவும் இருந்து அருள் செய்தது போலவே அன்பர்க்கும் அருள்செய்வான் என்பதை,

'ஈட்டு மாநிதி சால இழக்கிலும்
வீட்டுங் காலன் விரைய அழைக்கிலும்
காட்டில் மாநட மாடுவாய் காவெனில்
வாட்டந் தீர்க்கவும் வல்லவர்'

என்பார்.

புரட்சியாளர்

சனாதன நெறியில் வந்தோர் சாதிக்கொரு நீதி பேசித் திரிவர். சமயத்தின் பெயரால் பல சடங்குகளை உருவாக்கிக் குறிப்பிட்ட கூட்டத்தார்க்கே சமயம் உரித்தென்று உரிமை பாராட்டுவர். பாமரர் பரமன் அடி தொழப் பலத் தடைகளைத் தோற்றுவிப்பர். இது நாவுக்கரசர் கால நிலை போலும். இதைக் கண்டதால்தான் நாவுக்கரசர், இறைவன் முன்னே சாத்திரமும் கோத்திரமும் எடுபடாது என்று பாடினார்.

'சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்
பாத்திரம் சிவம் என்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளும் மாற்பேறேரே'

என்று புரட்சிக் கருத்துகளைத் தூவினார் அப்பர் பெருமான்.

நகைச்சுவை

முற்றும் துறந்த முனிவராயினும் தம் கவித்துவத்தைக் காட்ட ஒரு சில நகைச்சுவைப் பாடல்களையும் பாடியுள்ளார் அப்பர். சிவபெருமானை

ஒன்றரைக் கண்ணன் என்று கேலி பேசுகின்றார். சிவபெருமானுக்குக் கண்கள் மூன்று. ஆனால் அவர் திருமணம் செய்து கொண்டவுடன் தமது உடலில் சரி பாதியைத் தம் மனைவிக்குத் தந்ததால் ஒன்றரைக் கண்ணராக மாறி விட்டார் என்பார்.

'இன்று அரைக்கண்ணுடையார் எங்கும் இல்லை. இமயம் என்னும்
குன்றறைக் கண்ணன் குலமகட் பாவைக்குக் கூறிட்டநாள்
அன்றரைக் கண்ணுங்கொடுத்து உமையாளையும் பாகம்வைத்த
ஒன்றரைக் கண்ணன் கண்டீர் ஒற்றியூர் உறை உத்தமனே'

என்பது நாவுக்கரசர் வாக்கு.

அகத்துறைப் பாடல்கள்

நாவுக்கரசர் பக்திநெறிப் பாடல்களைப் பாடினாலும் தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்று கற்றுத் தேர்ந்தவர் என்பதை அவரது அகத்திணை சார்ந்த பாடல்கள் கொண்டு அறியலாம். தாண்டகம் என்னும் புதுக் கவி நெறி காட்டியவர் அவர். எனவே பழைய இலக்கணங்களை நன்கு கற்றுத் தேர்ந்தவர் என்று உணரலாம். இறைவனிடம் காதல் கொண்ட ஒரு பெண் இறைவனைத் திருடர் என்றும் நீதி கெட்டவர் என்றும் பழித்துப் பேசுவாள். கொண்ட பொருளைத் திருப்பித்தராத காரணத்தினால் அவரை நீதி கெட்டவர் என்று நிந்தனை செய்கிறாள். அந்த அகப் பாடல் வருமாறு:

வேதம் ஓதி வந்துஇல் புகுந்தார் அவர்
காதில் வெண்குழை வைத்த கபாலியார்
நீதி ஒன்றறியார் நிறை கொண்டனர்
பாதி வெண்பிறைப் பாகூ ரடிகளே'

என்ற பாடல் அடிகள் அவரது இலக்கியப் புலமைக்குச் சான்று. மேலும், திருவொற்றியூர் தலத்திலிருந்து பாடப்பெற்ற ஒரு தாண்டகப் பாடலிலும் காதல் கொண்ட ஒரு தலைவியைக் காட்டி நம்மை வியக்க வைக்கின்றார். தானாக வந்து என்னைக் கண்டபோது நான் அவனைத் தவற விட்டுவிட்டேன். இனியொரு முறை இங்கு அவன் வந்தால் நான் அவனை விட மாட்டேன் என்று தலைவனைப் பிரிந்தேங்கும் தலைவியின் நிலையில் வைத்துப் பாடியுள்ள பாடல் கருத்தோட்டம் மிக்கது.

'நிலைப் பாடே நான்கண்ட தேடீ கேளாய்
நெருநலை நற்பகலிங் கோரடிகள் வந்து
கலைப்பாடும் கண்மலரும் கலக்க நோக்கிக்
கலந்து பலியிடுவேன் எங்குங் காணேன்
சலப்பாடே இனியொருநாள் காண்பே னாகில்
தன்னாகத் தென்னாகம் ஒடுங்கும் வண்ணம்

உலைப்பாடே படத் தழுவிப் போகல் ஒட்டேன்
ஒற்றியூர் உறைந்திங்கே திரிவா னையே'

யோகி ஒருவர் போக நிலை தன்னை உணர்த்தியது அதிசயம்தான்.

கண்ணுளான் கணநாதன்

சிவபெருமானை எண்ணுந்தோறும் அப்பரடிகளுக்கு இறைவன் பெருமைகள் அருவியாய்க் கொட்டுகின்றன. எல்லாம் சிவம் என்னும் தத்துவம் அவர் நெஞ்சில் நிலைபெறுகின்றது. அனைத்தும் சிவனே என்பதை உணர்ந்த அவர்,

'நாரணன் காண் நான்முகன் காண் நால்வேதன் காண்
ஞானப் பெருங்கடற்கோர் நாவாய் அன்ன
பூரணன் காண் புண்ணியன் காண் புராணன் காண்
புரிசடைமேற் புனலேற்ற புனிதன்தான் காண்
சாரணன் காண் சந்திரன் காண் கதிரோன்தான் காண்
தன்மைக்கண் தானேகாண் தக்கோர்க் கெல்லாம்
காரணன் காண் காளத்தி காணப்பட்ட
கணநாதன் காண் அவன்என் கண்ணுளானே'

என்று இறைவனைத் தொழும் அப்பர் அடியொற்றி நாமும் கணநாதனைத் தொழுவோம், பணிவோம், பரமனருள் பெறுவோம்.

116. நாவுக்கரசரின் தல யாத்திரை

அ. ஜம்புலிங்கம், சிதம்பரம்.

சமய உலகில் மூன்று பெரும் பொருள்கள் முதன்மை வகிக்கின்றன. 1. மூர்த்தி, 2. தலம், 3. தீர்த்தம் என்னும் மூன்று தளங்களில்தான் சமய ஒழுகலாறுகள் இயங்குகின்றன. இறைவனை நாடித் துறவு பூண்டோர் தீர்த்த யாத்திரையை மேற்கொள்ள வேண்டும்; புண்ணியத் துறைகளில் நீராடவேண்டும்; அவ்வவத் தலங்களில் எழுந்தருளியுள்ள இறைவனைத் தரிசிக்க வேண்டும் என்ற நியதி இருந்தது. இப்பொழுதும் இருக்கின்றது; இதனை,

''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினார்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே''[1]

என்ற தாயுமானவர் பாடல் புலப்படுத்துகின்றது.

தமிழ் நெறிச் செல்வரான திருநாவுக்கரசர் இம்மூன்றையும் தம் அனுபவத்தில் மேற்கொண்டவர். அவர் செய்த தலயாத்திரை பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது. அதற்கு ஆதாரமான கருத்துக்கள் பெரிய புராணத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்றன.

தல மகிமை

தலம் என்பது இறையருள் நிரம்பியுள்ள இடம். இதன் பெருமையை, ''சிவபெருமான் திருவுள்ளங்கொண்டு தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டு எண்ணில்லாத முக்கியத் தலங்களை பூமியில் அமைத் தருளினார். அவைகளுள்ளே 68 தலங்கள் சிறந்தன. அந்த அறுபத்தெட்டினுள் ஆறு தலங்கள் மிகச் சிறந்தன. அந்த ஆறுக்குள் திருவாரூர், காசி, சிதம்பரம் என்னும் மூன்று தலங்கள் சிறந்தன'' என்னும் அவதூத சுவாமிகளின் வாக்கு தலங்களின் மகிமையை உணர்த்தும்.[2]

நாவரசரின் தல யாத்திரை

பாண்டிய நாட்டிலிருந்து பருப்பதம் வரை, கன்னி முனையிலிருந்து கயிலை மலை வரை கால்களால் நடந்தே தலயாத்திரை செய்தவர் திருநாவுக்கரசர். அவர் வாழ்ந்த பொழுது பல்லவப் பேரரசு கொடி கட்டிப் பறந்த காலம். சமணர்களின் சொற்கேட்டு அவருக்குத் தொல்லை தந்தவன் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் என்பர்.[3] அவன் ஆண்ட

காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு ஆகும். இக்காலம், தமிழ்நாட்டில் போக்குவரத்து வசதிகள் சீர் பெறாத காலம் என்பது குறிப்பிடத்தக்கது.

நாவரசரின் தல யாத்திரையை இரண்டு வகையாகப் பகுத்துணரலாம்.

1. ஞானசம்பந்தருடன் கூடிச் செய்த யாத்திரை.
2. நாவரசர் மட்டும் தனித்துச் செய்த யாத்திரை. இவ்விரண்டிலும் இவர் பாடிய பதிகங்கள் - 312. பாடிய பாடல்கள் 3066. யாத்திரை செய்த தலங்கள் - 126.

கொங்கு நாடு, தொண்டை நாடு, சோழ நாடு, துளுவ நாடு, நடு நாடு, பாண்டிய நாடு, வட நாடு ஆகிய நாடுகளில் இவர் யாத்திரை செய்துள்ளார் என்பதை இவர் பாடிய பாடல்கள் புலப்படுத்துகின்றன. இவர் செய்த யாத்திரைகளுள் வரலாற்றுப் புகழ்பெற்றது கயிலை மலை யாத்திரை. இதனைப் பெரியபுராணம் விரிவாக எடுத்துக்காட்டுகின்றது.

சோழநாட்டுத் தலயாத்திரை

நாவரசர் முதலில் தொடங்கியது சோழநாட்டுத் தலயாத்திரை.

சீகாழிப் பதியில் திருஞானசம்பந்தரைக் கண்டு அளவளாவித் தங்கியிருந்த நாவுக்கரசர், அவரிடம் சோழ நாட்டுத் தலங்களைத் தரிசித்துப் பதிகம் பாட வேண்டும் என்ற பெருவிருப்பம் தனக்கு உளதாதலைத் தெரிவிக்க அவரும் அதற்கிசைந்தார்.

இருவரும் திருக்கோலக்காவுக்குச் சென்று இறைவனை இறைஞ்சிப் பதிகம் பாடிப் போற்றினர். பின்னர் நாவரசர், ஞானசம்பந்தர்பால் விடை பெற்று, அங்கிருந்து புறப்பட்டுத் திருக்கருப்பறியலூர், திருப்புன்கூர், நீடூர், குறுக்கை, திருநின்றியூர், திருநனிபள்ளி ஆகிய தலங்களைப் பணிந்து பதிகம் பாடிப் போற்றினார்.

காவிரியாற்றின் இருகரைகளிலுமுள்ள செம்பொன் பள்ளி, திருமயிலாடுதுறை, திருத்துருத்தி, வேள்விகுடி, எதிர்கொள்பாடி, கோடிகா, திருவாவடுதுறை, திருவிடைமருதூர், திருநாகேச்சரம் ஆகிய தலங்களை வணங்கிக் கொண்டு திருச்சத்தி முற்றத்தைச் சென்றடைந்தார். அங்கே கோயில் கொண்டிருக்கும் சிவக்கொழுந்தீசரை வணங்கி,

''எம்பெருமானே! கொல்லும் தொழிலை உடைய கூற்றுவன் என்னுயிரை உடம்பினின்றும் கவர்ந்து செல்வதற்கு முன்னமே உமது செந்தாமரை மலர் போன்ற திருவடிகளை எனது சென்னியில் சூட்டியருள்வீராக'' என்னும் கருத்தமைந்த,

''கோவாய் முடுகி அடுதிறல்
கூற்றம் குமைப்பதன் முன்

பூவார் அடிச்சுவடு என்மேல்
பொறித்துளவ; போக விடில்
மூவா முழுப்பழி மூடுங் கண்டாய்
முழங்குந் தழற்கைத்
தேவா! திருச்சக்தி முற்றத்
துறையும் சிவக் கொழுந்தே!"[4]

என்ற பாடலைப் பாடினார். இவ்வேண்டுகோளை ஏற்ற சிவபெருமான், "உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம், நல்லூருக்கு வா!" என்று கூறி அவரது சென்னிமேல் பாதமலர் சூட்டியருளினார். இதனை,

"நற்றவன் நல்லூர்ச் சிவன் திருப்பாதம்தன்
சென்னிமிசை வைக்கப் பெற்றவன்"[5]

என நம்பியாண்டார் நம்பிகள் தமது திருத்தொண்டர் திருவந்தாதியில் குறித்துள்ளார்.

ஞானசம்பந்தருடன் தலயாத்திரை

முருக நாயனார் திருமடத்தில் திருஞானசம்பந்தருடன் தங்கியிருந்த நாவரசர். தலயாத்திரை செய்யும் வேட்கையால் அவருடன் புறப்பட்டு தரு அம்பர் என்னும் தலத்தை அடைந்து வழிபட்டார். பின்னர் திருக்கடவூர்த் திருமயானம், ஆக்கூர், தான்தோன்றி மாடம் முதலிய பதிகளை வழிபட்டார். திருவீழிமிழிலை சென்றடைந்து படிக்காசு பெற்று பஞ்சந்தீர உதவினார். திருமறைக்காடு சென்று வேதங்களால் அடைக்கப்பட்ட திருக்கதவம் திறக்கப் பாடி உதவினார். திருவாய்மூர் சென்ற இறைவன் அம்மையுடன் ஆடிய நடனக் கோலத்தைக் கண்டு மகிழ்ந்தார். அப்போது பாண்டியமாதேவி மங்கையர்க்கரசியாரிடமிருந்து மதுரைக்கு வரும்படி ஞானசம்பந்தருக்கு வேண்டுகோள் வந்தது. அவர் மதுரைக்குப் புறப்படத் தயாரானார். அப்போது திருநாவுக்கரசர் தொண்டை நாட்டுத் தலங்கட்கு யாத்திரை செல்ல துணிந்தார்.

திருக்கயிலாய யாத்திரை

தொண்டை நாட்டு யாத்திரையை மேற்கொண்ட நாவரசர், காஞ்சிமாநகரை அடைந்து கச்சி ஏகாம்பரரைப் பணிந்து பாடிப் போற்றினார். அங்கிருந்து புறப்பட்டுத் திருக்கழுக்குன்றம். திருவான்மியூர், மயிலாப்பூர், திருவொற்றியூர், திருப்பாசூர், திருவாலங்காடு முதலிய தலங்களை வழிப்பட்டுத் திருக்காளத்தி மலையை அடைந்தார். அம்மலைமேல் உள்ள குடுமித் தேவர்க்குத் திருப்பணிகள் செய்த குறிப்பினால் வடதிசையில் உள்ள திருக்கயிலை மலையில் வீற்றிருக்கும் இறைவனது திருக்கோலத்தைக் கண்டு தொழ வேண்டுமென்ற எண்ணம் அவர் மனத்தில் தோன்றியது என்பர்.[6] அவ்வுந்துதலால் அவர் வடதிசை நோக்கிக் காலால் தலயாத்திரையை மேற்கொண்டார்.

திருக்காளத்தி நாதரை வணங்கி, அங்கிருந்து புறப்பட்டு மலை, ஆறு, காடு, நாடுகள் பலவற்றைக் கடந்து திருப்பருப்பதத்தை அடைந்தார். பின்னர் தெலுங்கு, கன்னடம் ஆகிய நாடுகளைக் காலால் நடந்து சென்றே மாளவ தேயத்தை அடைந்தார். அங்கிருந்து வெப்பம் மிகுந்த பாலைநில வழிகளை எல்லாம் கடந்து இலாடம், பைதிரம் ஆகிய தேசங்களைக் கடந்து கங்கையாறு பொங்கி பாயும் காசியம்பதியினை அடைந்தார்.

தம்முடன் வந்த அடியவர்களை அங்கேயே நிறுத்திவிட்டுத் தான் மட்டும் அதற்கும் வடக்கேயுள்ள கற்சுரத்திலும் மனிதர்கள் சென்றறியாத காடுகளிலும் நடந்து சென்றார். இலை, கிழங்கு, காய், கனி முதலியவற்றை உண்பதையும் தவிர்த்து, இரவு பகல் என்று பாராமல் இடைவிடாத முயற்சியோடு நடந்தார். அதனால் அவருடைய பாதங்கள் பரட்டளவும் தேய்ந்தன; அங்ஙனம் தேய்ந்தும் முயற்சி தளராமல் கயிலைப் பெருமானைக் காண வேண்டுமென்னும் பேரார்வத்தோடு தம்முடைய கைகள் இரண்டையும் கீழே ஊன்றித் தாவிச் சென்றார். அந்நிலையில் கைகளின் மணிக்கட்டு களும் சிதைந்தன. மேலும் ஆர்வ மிகுதியால் பரல்கற்கள் நிரம்பிய அவ்வழியில் மார்பினால் நகர்ந்து சென்றார். மார்பும் தேய்ந்து நைந்து தசை சிந்தி எலும்புகளும் முரிவவாயின. அப்போதும் மனம் தளராமல் உடம்பால் உருண்டு புரண்டு சென்றார். உடம்பும் நகர முடியாமல் தேய்ந்ததால் அப்பர் பெருமான் அவ்வழியிலேயே செயலற்றுக் கிடந்தார். கல்லையும் கசிந்து உருக்கும் இக்காட்சியை,

''பங்கயம்புரை தாள் பரட்டளவும்
பசைத் தசை தேயவும்...
தங்கரங்கள் இரண்டுமே கொடு
தாவி ஏகுதல் மேவினார்''[7]

''மார்ப மும்தசை நைந்து சிந்தி
வருந்த என்பு முரிந்திட
நேர்வ ருங்குறி நின்றசிந் தையின்
நேசம் ஈசனை நேடுநீடு
ஆர்வ மங்குயிர் கொண்டு கைக்கும்
உடம்ப டங்கவும் ஊன்கெடச்
சேர்வரும் பழுவம்பு ரண்டு
புரண்டு சென்றனர் செம்மையோர்''[8]

என்ற பாடல்களில் ஓவியப்படுத்துவர் சேக்கிழார்.

அவ்வாறு கிடந்த நாவரசர் முன் இறைவன் ஒரு விருத்த வேதியர் வடிவில் தோன்றி, ''உமது அங்கங்களெல்லாம் சிதைய இக்கொடிய காட்டில் ஏன் வந்தீர்?'' என்றார்.

அதுகேட்டு உணர்வு வரப்பெற்ற அப்பர், ''முனிவர் பெருமானே! வடகயிலையில் இறைவன் உமையம்மையோடு எழுந்தருளியுள்ள கோலத்தைக் கண்டு தொழும் விருப்பத்தோடு வந்தேன்'' என்றார். அதற்கு முனிவர்,

திருக்கயிலாய மலை என்பது தேவர்களும் அணுகுதற்கரியது. நிலவுலக மனிதர்களால் அடைவதற்கான எளிமை உடையதன்று; இங்கிருந்து மீண்டு செல்லும்!'' என்றார்.

''திருக்கயிலையில் எம்பெருமான் வீற்றிருக்கும் திருக்கோலத்தைக் கண்டல்லது மாளக்கூடிய இவ்வுடல் கொண்டு மீளேன்!'' என்று உறுதியாகக் கூறினார் நாவுக்கரசர்.

அப்போது இறைவன் விண்ணிலே மறைந்து நின்று, ''ஓங்கு நாவினுக்கரசனே! எழுந்திரு'' என்றார். அதுகேட்ட அப்பரடிகள் சிதைந்த தன் உறுப்புகளெல்லாம் முன்போல் நிரம்பப் பெற்று, தீங்கு நீங்கப் பெற்ற உடலுடன் எழுந்து நின்றார்.

திருக்கோலக் காட்சியைக் காட்டியருள வேண்டுமென்று இறைவனை வேண்டி நின்றார். அப்போது இறைவன் அசரீரியாக, ''நீவிர் அதோ உள்ள பொய்கையில் மூழ்கினால் திருவையாற்றை அடைவாய், அங்கே நாம் கயிலையில் வீற்றிருக்கும் காட்சியைத் திருவையாற்றில் கண்டு மகிழ்வாய்!'' என்று கூறியருளினார். அவ்வாறே அப்பொய்கையில் மூழ்கித் திருவையாற்றை அடைந்த நாவரசர் அங்கே சக்தியும் சிவமுமாக இறைவன் வீற்றிருக்கும் காட்சியைக் கண்டு தொழுது பதிகம் பாடி வழிபட்டார்.

மேற்கோள் எண் விளக்கம்

1. தாயுமானவர், பராபரக் கண்ணி - 156.
2. ஸ்ரீமத் சுயம்பிரகாச பிரம்மேந்திர சரஸ்வதி அவதூத சுவாமிகள், சிதம்பர மகிமை, ப. 261.
3. டாக்டர். மா. இராசமாணிக்கனார், பெரியபுராண ஆராய்ச்சி, ப. 79.
4. திருநாவுக்கரசர் தேவாரம், 4-96-1.
5. நம்பியாண்டார் நம்பி, திருத்தொண்டர் திருவந்தாதி, 24.
6. க. வெள்ளைவாரணனார், பன்னிரு திருமுறை வரலாறு I, ப. 189.
7. பெரியபுராணம், திருநாவுக்கரசு நாயனார் புராணம், செய். 357.
8. மேலது, செய். 359.

117. நாவுக்கரசரும் பௌத்தமும்

பா. ஜம்புலிங்கம், தஞ்சை.

இந்தியாவில் தோன்றிய சமயங்களுடன் மிகப் பழமையானதும் சிறப்பானதும் சைவ சமயமாகும். ஆண்டாண்டு காலமாக இந்தச் சைவ சமயத்தின் வளர்ச்சியானது பல்வேறு நிலைகளில் இருந்து வந்துள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பக்தி இயக்க காலத்தில் நாயன்மார் மற்றும் ஆழ்வார்கள் முறையே சைவம் மற்றும் வைணவத்தின் ஏற்றத்திற்கு அதிகம் பாடுபட்டார்கள். நாயன்மாரில் பாடல் பெற்ற திருத்தலங்கள் காவிரியின் இரு கரையிலும் காணப்படுகின்றன. அவர்களில் தேவார முதலிகள் எனப்படும் ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் முக்கியமான இடத்தைப் பெறுகின்றார்கள்.

அன்றைய தமிழகச் சூழல்

களப்பிரர்கள் காலத்தில் பௌத்தம் மற்றும் சமணத்தின் வளர்ச்சி சைவ மற்றும் வைணவத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தியிருந்தது. புகழ் குன்றியிருந்த சைவத்தின் பெருமையைத் தமிழகமெங்கும் பரப்ப வித்தாக இருந்தவர் நாயன்மாரில் முதலிடத்தைப் பெறும் ஞானசம்பந்தர் ஆவார். சைவ சமயத்தை எங்கும் பரப்ப முனைந்த ஞானசம்பந்தப் பெருமான் தம் பாடல்களில் பௌத்தர்களையும் அவர்களுடைய கொள்கை களையும் அதிகமாகச் சாடியுள்ளார். அவர் சாடியுள்ள அளவிற்கு பிற நாயன்மார் சாடவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். ஞானசம்பந்தரின் அருஞ்செயல்களில் அனல் புனல் வாதில் வென்ற அற்புதம், புத்தநந்தியின் அழிவு, சாரிபுத்தனின் தோல்வி போன்றவையும் அடங்கும். மெய்யுணர்வு இல்லாத சமணர்களை வாதிலே வெல்வோம், பாண்டியனுக்குத் திருநீறு அணிவிப்போம் என்று சூளுரைத்து அதைச் சாதித்தும் காட்டினார் அவர் சைவ சமயத்தையும், முழுமுதற்கடவுளான சிவபெருமானையும் போற்றும் அவர், அந்தக் காலகட்டத்தில் செழிப்பான நிலையில் இருந்த பௌத்த மற்றும் சமண சமயத்தைத் தமது பாடல்களில் பல இடங்களில் சுட்டு கின்றார். அவர்களுடைய பழக்க வழக்கங்களைக் கூறும் அவர்களுடைய சொற்களை யாரும் கேட்கவேண்டாம் என்று கூறுகின்றார். அவர்களை விட்டு ஒதுங்கக் கூறுகின்றார். முதல் மூன்று திருமுறைகளிலும் இவ்வாறு அவர் சாடுகின்றார்.

நாவுக்கரசரின் வாழ்வு

ஞானசம்பந்தரைப் போலவே நாவுக்கரசரும் பௌத்தத்தையும் சமணத்தையும் அதிகமாகச் சாடியுள்ளார். ஞானசம்பந்தருக்கும் நாவுக்கரசருக்கும் இந்தச் சாடலில் சிறிது வேறுபாடு காணப்படுகிறது. மருள்நீக்கியார் என்ற பெயரில் அவதரித்த அவர், சமணர்களால் தருமசேனர் எனப் பெயர் பெற்றார். அதில் தலைவராகி புத்தர்களை வாதில் வென்றார். திருவதிகையில் அவர் நாவுக்கரசாக மாறுகிறார். ஞானசம்பந்தப் பெருமானால் அப்பர் என்று அன்போடு அழைக்கப் பட்டார். சமண சமயத்திலிருந்து அவர் மறுபடியும் சைவ சமயத்திற்குத் திரும்புவதற்கு இறைவனும் திருவருளும், அவருடைய தமக்கையாரின் அன்புமே காரணமாகும்.

நாவுக்கரசரின் தேவாரம்

அவரது பாடல்கள் நான்கு, ஐந்து, ஆறாவது திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. வீதிகளையும், கோயில்களையும் தம் உழவாரப் படை கொண்டு தூய்மை செய்துகொண்டே இருந்தார். அவரது பாடல்கள் மிக இனிமையானவை. அவை மதுரவாக்கு என்று கூறுகிறார் சேக்கிழார். நாவுக்கரசர் வாயில் நல்லவைகளே இருக்கின்றன. நல்ல சொற்களே வருகின்றன. நல்ல கருத்துக்களே வருகின்றன. அதனால்தான் தமிழ்ப் பதிகங்கள் சேருகின்ற வாய் என்று சொல்கிறார். அவருடைய எண்ணம் எப்போதும் இறைவன் திருவடிகளைச் சிந்தித்துக் கொண்டே இருக்கும். அதனால்தான் செம்பொன் தாளே சார்வான திருமனமும் என்று கூறுகிறார். அவரது உழவார தனிப்படை உழைப்பின் வடிவினைக் காட்டுகிறது. புறத்தூய்மை அமைந்தால் அகத்தூய்மை அமையும் என்பது அவர் கருத்தாகும். அதோடு இந்த உலகம் முழுவதும் சிறப்பாக வாழ வேண்டும் என்று நினைக்கிறார். அதைத்தான் பார்வாழத் திருவீதிப் பணிசெய்து என்று கூறுகிறார் சேக்கிழார். திருவைந்தெழுத்தை ஓதிக் கல்லைத் தெப்பமாக்கிக் கரையேறியவர் நாவுக்கரசர்.

நாவுக்கரசரும் பௌத்தமும்

ஞானசம்பந்தர் சாடிய அளவிற்கு நாவுக்கரசர் பௌத்தத்தையும் சமணத்தையும் சாடவில்லை. இரு சமயங்களையும் அவர் தாக்கும்போது அவரது வீச்சு ஞானசம்பந்தரைவிடச் சற்றுக் குறைவாகவே உள்ளது எனலாம். சமணத்திற்குச் சென்று மறுபடியும் சைவத்திற்குத் திரும்பிய நாவுக்கரசர் சமணர்களை அதிகமாக தமது பாடல்களில் சாடுகின்றார். திருஐயாறு மற்றும் பழையாறையில் பாடப்பட்ட அனைத்துப் பதிகங் களும் சமணர்களைச் சாடுவதாகவே உள்ளன.

நாவுக்கரசர், இளமைப்பருவத்திலேயே சமண சமயத்தில் புகுந்து அவர்களோடு கூடி இருந்தவராகையால், சமணருடைய பழக்க வழக்கங்

களையும் இயல்பையும் நன்கு அறிந்திருந்தார். அச்சமயத்தைவிட்டு வெளியேறி மீண்டும் சைவ சமயத்திற்கு வந்தபின் சமணருடைய திறத்தில் அவருக்கு அருவருப்பு தோன்றியது இயல்பே. சமணர்களின் இழிதான இயலையும், செயலையும் பல இடங்களில் கூறியிருக்கும் அவர், அந்நெறியில் தாம் செய்த செயல்களுக்குத் தம்மைத் தாமே நொந்து நிந்தித்துக் கொள்கின்றார்.

சமணர்களையும், அவர்களுடைய பழக்கவழக்கங்களையும் பற்றிப் பலவாறாகக் கூறும் நாவுக்கரசர் பௌத்தர்களைப் பற்றியும் கூறுகிறார். உடல் மூடுவார், ஊமர், சாக்கியர், சினைபொதிந்த சீவரத்தர் தங்கள் பொய்யும்...., துவரால் உடம்பை மூடி தருமவ்வூமர், புத்தர், பொய்யெலாம் உரைக்கும்... சாக்கியர் கையன்மார், விலையுடைக் கூறைபோர்க்கும் ஒற்றர் என்பவை போன்ற சொற்களை நாவுக்கரசர் பயன்படுத்துகிறார்.

சமணர், பௌத்த சொற்களைக் கேட்காதீர்கள் என்று கூறும்போது நாவுக்கரசர், கடுவாயிட்டவர் கட்டுரை கொள்ளாதே..., சமணர் புத்தர் குறியறியாது நின்று கண்டதே கருதுவார்கள், சாக்கியத்தொடு மற்றும் சமண்படும்..., மெய்யின் மாசுடையார், உடல்மூடுவோர்...., என்றவாறு பலவாறான சொற்களைப் பயன்படுத்துகின்றார்.

சமணரைச் சாடிய நாவுக்கரசர், புத்தரையும் சாடியுள்ளார். உதாரணமாக மெய்யில் மாசு உடையவர் என்றும், உடலை மூடுபவர் என்றும், பொய்யை மெய் என்று கூறித் திரிபவர்கள் என்றும் பலவாறாகக் கீழ்க்கண்ட பாடலில் கூறுகிறார்.

மெய்யில் மாசு உடையார், உடல் மூடுவார்
பொய்யை மெய்என்று புக்கு உடன்வீழன்மின்!

(அப்பர் தேவாரம் - 197:7:1-2)

புத்தரைச் சாடும் இவர், பிறிதொரு பாடலில் ஊமர் என்று சுட்டுகின்றார். இப்பாடலில் அவர்கள் ஆடை அணியும் விதத்தையும் சுட்டுகிறார். அவை பின்வருமாறு அமையும்.

உரிந்த உடையார் துவரால் உடம்பை மூடி
உழிதரும் அவ்ஊமர்..... (298:8:1-2)

புத்தரைப் பல இடங்களில் சாக்கியர் என்றே கூறுகின்றார். ஞானசம்பந்தரும் இவ்வாறே புத்தரைச் சாக்கியர் என்றே கூறியுள்ளார்.

ஏழை அமண்குண்டர், சாக்கியர்கள் - ஒன்றுக்கு
அல்லாதார் - திறந்து ஒழிந்தேன்..... (260:9:6-7)

பொதுப்படையாகவே மேற்கண்ட பாடலில் இருவரையும் அவர் சாடுகின்றார். சமணர்களைக் குறிப்பிடும்போது இப்பாடலில் அமண்குண்டர் என்று கூறுகிறார்.

சமணர்களுடைய உண்ணும் முறையைக் கேலி செய்யும்போது புத்தரையும் சாடுகின்றார். அவர்களைக் கல்லாதவர்கள் என்றும் கூறுகிறார்:

கையில் உண்டு உழல்வாரும் சாக்கியரும்,
கல்லாத வன்மூடர்க்கு..... (299:9: 1-2)

சமணர்களால் அவர் அதிகம் பாதிக்கப்பட்டவர் என்பதைப் பல பாடல்கள் உணர்த்தும். அவற்றுள் கீழ்க்கண்ட பாடலும் அமையும். அவர்களுடைய பொய்யினை மெய் என்று கருதவேண்டாம் என்று இப்பாடலில் அவர் அறிவுரை கூறுகின்றார்.

மனை துறந்த வல்அமணர் தங்கள் பொய்யும்,
மாண்பு உரைக்கும் மனக்குண்டர் தங்கள் பொய்யும்,
சினை பொதிந்த சீவரத்தர் தங்கள் பொய்யும்,
மெய்என்று கருதாதே, போத, -நெஞ்சே... (235:10 3-4)

இதைப் போலவே பொய் எலாம் உரைக்கும் சமண், சாக்கியரின் உரையைக் கேட்கவேண்டாம் என்று கூறுகின்றார்.

பொய்எலாம் உரைக்கும் சமண்சாக்கியக்-
கையன்மார் உரை கேளாது எழுமினோ! (193:9: 1-2)

அரைச்சமணர் என்று கூறும் மற்றொரு பாடலில் புத்தரை நாவுக்கரசர் விலை உடை கூறை போர்க்கும் ஒற்றர் என்று கூறுகின்றார்.

வெற்று அரைச் சமணரோடு விலை உடைக் கூறை போர்க்கும்
ஒற்றரைச் சொற்கள் கொள்ளார் குணங்களை உசுப்பர் போலும்;
(68:9:1-2)

பௌத்தரையும் சிவனையும் பற்றிப் பேசும்போது நாவுக்கரசர் பின்வருமாறு கூறுகிறார்.

சித்தர், தேவர்கள், மாலொடு, நான்முகன்
புத்தர்தேர் அமண்கையர் - புகழவே,
மத்தர்தாம் அறியார், மணஞ்சேரிஎம்
அத்தனார்; அடியார்க்கு அல்லல் இல்லையே... (200:9: 1-4)

சமணர், புத்தர் சொற்களைக் கேட்க வேண்டாம் என்று பல இடங்களில் கூறுகின்றார். உதாரணத்திற்குச் சில இடங்களைக் காணலாம்.

இடுவார் இட்ட கவனம் கவர்ந்து இரு
கடுவாய் இட்டவர் கட்டுரை கொள்ளாதே... (175:9:1-2)

குண்டரே, சமணர் புத்தர்; குறிஅறியாது நின்று
கண்டதே கருதுவார்கள் கருத்து எண்ணாது ஒழிமின், நீர்கள்!...
(42:9: 1-2)

நெடுங்காலத்திற்குப் பின்னரே சமணரின் மொழி கேட்டதால் தாம் பெருந்தீங்கு அடைந்ததை திருநாவுக்கரசர் உணர்ந்தார். தாம் நேரில் பட்டு அறிந்த உண்மையை உலகர்க்குக் கூறவேண்டும் என்ற அருளினால் பின்வருமாறு பாடியுள்ளார்.

ஒருபிறப்பி லானடியை உணர்ந்து காணார்
உயர்கதிக்கு வழிதேடிப் போக மாட்டார்
வருபிறப்பொன் றுணராது மாசுபூசி
வழிகாணா தவர்போல்வார் மனத்தனாகி
அருபிறப்பை அறுப்பிக்கும அதிகை யூரான்
அம்மான்றன் அடியிணையே அணைந்து வாழாது
இருபிறப்பும் வெறுவியராய் இருந்தார் சொற்கேட்டு
ஏழையேன் நான்பண் டிகழ்ந்தவாறே...

மேற்கண்ட பாடலால் சமணர் மனம்போல் தான் வாழ்ந்து, சிவபெருமான் அடியினைத் தொழுது வாழாது, இம்மை மறுமை என்ற இரண்டுங் கெட்ட அச்சமணர் சொற்கேட்டு இகழ்ந்துகெட்டதாகக் கூறுகிறார். அதனால் சமணர் சொற்களைக் கேளாதீர் என்று நாவுக்கரசர் அறிவுறுத்துகிறார்.

சாக்கியத்தொடு மற்றும் சமண்படும்
பாக்கியம் இலார் (161:6:1-2)

என்ற அடிகள் மூலமாகப் புத்தரையும் சமணரையும் பாக்கியம் இல்லாதவர் என்று கூறுகின்றார். ஞானசம்பந்தப் பெருமானும்,

சாக்கியப்பட்டும் சமணுரு வாகி யுடையொழிந்தும்
பாக்கியமின்றி இருதலைப் போகமும் பற்றும் விட்டார்

(சம்பந்தர் - 116:10)

என அவர்களைக் கூறியுள்ளார். பாக்கியம் இல்லார் என்பது திருநீக்கப்பட்டார் என்றும், இருதலைப்போகம் என்பது இம்மை மறுமை இரண்டிலும் நுகரும் இன்பங்கள் என்றும் பொருள்படும்.

இவ்வாறாக பல நிலைகளில் சமணத்தைப் போலவே பௌத்த சமயமும் நாயன்மாரின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் செல்வாக்கு இழந்தது. இவ்வாறாக, செல்வாக்கு இழந்த பௌத்த சமயம் சோழர் களின் காலத்தில், கி.பி.9-ஆம் நூற்றாண்டின் இறுதி தொடங்கிச் சற்றுத் தலைதூக்க ஆரம்பித்தது. தற்போது அய்யம்பேட்டை, அரியலூர், ஆயிரவேலி அயிலூர், ஆலங்குடிப்பட்டி, இடும்பவனம், இராஜராஜேச்சரம், இலையூர், ஒகுளூர், கரூர் (பொன்பற்றி அருகே), காவேரிப்பூம்பட்டினம், கிள்ளியூர், கீழக்குறிச்சி, கீழக்குளத்தூர், குடவாசல், குழுமணி, கும்பகோணம், குறும்பூர், குத்தாலம், கோட்டப்பாடி, தாராசுரம், திருநாகேஸ்வரம், பரவாய், பழையாறை (பட்டீஸ்வரம், சோழன்மாளிகை,

திருவலஞ்சுழி, கோபிநாதப் பெருமாள்கோயில், முழையூர்), புட்பவனம், புத்தமங்கலம், புதூர், பெரண்டாக்கோட்டை, பெரிய திருக்கோணம், பெருஞ்சேரி, பேட்டவாய்த்தலை, மங்கநல்லூர், மங்கலம், மதகரம், மணல்மேல்குடி, மன்னார்குடி, மானம்பாடி, முசிறி, முத்துசேர்வைமடம், வலங்கைமான்புத்தூர், விக்ரமம், வெள்ளனூர் (திருச்சி), வெள்ளனூர் (புதுக்கோட்டை), ஜெயங்கொண்டம், ஜெயங்கொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் காணப்படுகின்ற புத்தரது கற்சிலைகள் பௌத்த சமயம் நாயன்மாரின் தாக்குதலுக்குப் பின் பரவியிருந்த நிலையை இன்றும் எடுத்துரைக்கும் சான்றுகளாகக் காணப்படுகின்றன. ஒருங்கிணைந்த தஞ்சாவூர், ஒருங்கிணைந்த திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங் களை உள்ளடக்கிய மேற்கண்ட பகுதிகளில் இக்கட்டுரையாளரால் சுமார் 60 இடங்களில் இதுபோன்ற புத்தரது சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டு, அச்சிலைகளின் புகைப்படங்கள் அவரது முனைவர் பட்ட ஆய்விற்காக தொகுக்கப்பட்டுள்ளன. இந்தச் சிலைகள் இங்குப் புத்தக் கோயில்களோ விகாரங்களோ அந்த அளவிற்கு இருந்தன என்பதை எடுத்துரைக்கும் சான்றாக இன்றும் உள்ளன. இவ்வாறாகக் காணப்படுகின்ற புத்தரது சிலைகள் பௌத்த சமயத்திற்கு மன்னர்கள் தந்த ஆதரவினை உறுதிப் படுத்துகின்றன. இதன் அடிப்படையில் உற்று நோக்கும்போது பௌத்த சமயம் தன் பதிவினைப் பதிக்க முயன்ற காலகட்டத்தில் அது இங்கு நிலைபெறா வகையில் ஆக்கிய பெருமை ஞானசம்பந்தரைப்போல நாவுக்கரசருக்கும் உண்டு என்பதில் சிறிதும் ஐயமில்லை.

118. திருநீற்றுச் சிறப்பும் திருநாவுக்கரசரும்

க. ஜீவஜோதி, திருச்சி.

சிவபரம்பொருளை முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்கள் அறுபான் மும்மை நாயன்மார். இவர்களுள் 'திருநாவுக்கரசு' என இறை வாக்கால் அழைக்கப்பட்டவர் திருநாவுக்கரசர் ஆவார். இவரது பெருமையை ஒரு நாவால் பேசவொண்ணாது என்பார் சேக்கிழார். சுந்தரர் இவரது அடியார்க்குத் தம்மை அடியவராகக் குறித்துள்ளமையால் திருநாவுக்கரசர் பெருமை இனிது விளங்குகின்றது. இவர்து திருவுருவத்தைச் சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார். "தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனி" எனத் தொடங்கும் அப்பாடலில் நாவரசரின் நீறணிந்த மேனிக்கே முதன்மை தரப்பட்டுள்ளது.

சைவசமயம் - திருவைந்தெழுத்து, திருநீறு, கண்டிகை என்னும் மூன்றையும் முத்திச் சாதனங்களாகக் கொண்டுள்ளது. சூலை நோயுடன் தமது தமக்கையாரை அணுகிய மருள்நீக்கியாருக்கு முதலில் வழங்கப்பட்டது திருவாளன் திருநீறேயாகும். தமக்கையாரால் தமக்கு வழங்கப்பட்ட திருநீற்றைத் திருநாவுக்கரசர் தமது பதிகங்களில் ஆங்காங்கே குறித்துள்ளார்.

திருநீற்றின் சிறப்பு

பசுவின் சாணத்தால் தயாரிக்கப்படுவது திருநீறு. இதன் வகை களையும் பெருமைகளையும் சேக்கிழார், "முழநீறு பூசிய முனிவர்" புராணத்துள் விரிவாகக் கூறுகின்றார். திருஞானசம்பந்தரே முதன் முதலில் பதிகம்வழி திருநீற்றின் பெருமையை உலகிற்கு உணர்த்தினார். மந்திரமாவது நீறு எனத் தொடங்கும் பாடலில் திருநீறு தந்திரமாகவும் விளங்குகின்றமை சம்பந்தரால் போற்றப்படுகின்றது. சத்தியின் வடிவமாகத் திருநீறு விளங்கு கின்றது என்பது, "பராவண மாவது நீறு" என்னும் தொடரால் குறிக்கப்பட்டுள்ளது.

திருநாவுக்கரசர் திருமுறைகளில் விரவிக் கிடக்கும் திருநீற்றின் சிறப்புக்கள்.

1. ஆண்டவன் அணியும் திருநீறு
2. அடியவர் பூசும் ஒளிநீறு
3. அப்பர் அணிந்த வெண்ணீறு

என்னும் மூன்று நிலைகளில் இங்குச் சுட்டப்படுகின்றன.

1. ஆண்டவன் அணியும் திருநீறு

சிவபெருமானே திருநீறு அணிந்த கோலத்தில் காட்சியளிக்கின்றான்.

"கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே"

எனத் திருமூலர் குறிப்பிட்டுள்ளார். திருநீறு இறைவனால் அணியப் பட்டுக் கவசமாகவும் காத்து நிற்கின்றது என்பது திருமூலர் கருத்து.

சிவபெருமான் தன் மேனி முழுமையும் திருநீறு அணிந்துள்ளான். சிவந்த மேனியின்கண் திருநீற்றுப் பொலிவு செம்மையுடன் விளங்குகின்றது. திருத்தில்லையில் ஆடும் பெருமானின் மேனி, பவளத்திற்கு ஒப்பிடப் பட்டு அதன்கண் அவன் பால்வெள்ளை நீற்றைப் பூசியுள்ளான் என்பது "பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்" என அப்பரடிகளால் பாடப்பட்டுள்ளது. திருவாரூர்ப் பதிகத்தின்கண் மெய்யெல்லாம் திருநீற்றுப் பூச்சுடன் பெருமான் விளங்குதலை "மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான்...." என்னுந் தொடரால் குறிப்பிட்டுள்ளார்.

தூண்டப்பட்ட விளக்கினது ஒளிபோலும் திருமேனியில் தூய திருநீறு தரித்தவன் என்னும் கருத்தில் "தூண்டு சுடர்மேனித் தூநீறாடி"... என்றும் திருவெண்காட்டுத் திருத்தாண்டகத்திலும் போற்றியுள்ளார்.

திருநீறணிந்த தோளன்

சிவாகமங்களில் திருநீறு அணியப் படவேண்டிய உறுப்புக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. "இவை சிரம், நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து என்னும் பதினாறுமாம். இவைகளுள் விலாப்புறம் இரண்டையும் நீக்கிக் காதுகள் இரண்டையும் கொள்வது உண்டு. முழங்கைகளையும் மணிக்கட்டுக்களையும் நீக்கிப் பன்னிரண்டு தானங் கொள்வதும் உண்டு" என ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரால் விளக்கப்படுகின்றன. இங்கே குறிக்கப்பட்டுள்ள உறுப்புக் களின்கண் சிவதீக்கை பெற்றவர்கள் திருநீற்றை அணிதல் வேண்டும் என்பது சைவ அனுட்டான விதி ஆகும். இவ்விதி சைவர்க்குரியது ஆகும்.

அப்பர் சிவபெருமான் திருத்தோளின் கண்ணும் திருநீற்றுப் பொலிவு காணப்படுகின்றது என்னும் பொருளில் "....தூநீறு சேர்ந்து இலங்கு தோளா...." எனத் திருத்தாண்டகத்துள் பாடியுள்ளார். அடியார்க்குரிய விதி ஆண்டவனுக்கும் பொருந்தும் போலும்.

பூதிப்பையர்

சிவனடியார்கள் திருநீற்றுப் பொலிவோடு காட்சி தருவர். தம்மை வணங்கும் அடியவர்க்கும் திருநீற்றை வழங்கியருளுவர். இதன் பொருட்டு இவர்கள் தமது மடிக்கண் திருநீற்றுப்பையை எப்போதும் வைத்திருப்பர். இவ்வாறே சிவபெருமானும் திருநீற்றுப் பையை உடையவனாய் விளங்குகின்றான் என்பது பின்வரும் திருத்தாண்டகப் பாடலடியால் விளக்கப்படுகின்றது.

"பொடி நாறு மேனியர் பூதிப் பையர்"

என்பது அப்பாடலடி ஆகும். அப்பர் அடியவர்கள்பால் காணப்படும் இயல்பைச் சிவபெருமான் மீது ஏற்றிப் பாடியுள்ளார். தம்மை வணங்கும் அடியவர்களுக்குத் திருவருள் பிரசாதமாக அளித்தல் பொருட்டுப் பெருமான் திருநீற்றுப்பையை ஏந்தியுள்ளார் போலும்.

2. அடியவர் பூசும் ஒளிநீறு

அப்பர் தேவாரத்துள், சிவனடியார்கள் அணிகலனாகப் பூதியைப் பூசி மகிழ்வர் என்னும் கருத்துப் பல இடங்களில் காணப்படுகின்றது. இது குறித்துப் பின்வருமாறு விளக்கப்படுகின்றது.

மாணிக்கவாசகரின் அச்சம்!

திருநீறு, 'சைவ பூஷணம்' என்றும் 'சைவாபரணம்' என்றும் சைவர் களால் மதித்துப் போற்றப்படுகின்றது. சிவவேடப் பொலிவில் முதற்கண் தோன்றுவது வெண்ணீறே ஆகும்.

மாணிக்கவாசகர், பிணிக்கூட்டங்கட்கு அஞ்சவில்லை; பிறப்பு இறப்பு என்னும் சுழிக்கும் அஞ்சவில்லை; அடியார்கட்கு அன்பராகி, மாலறியா பெருமையுடைய பெருமானின் திருவடியை நினைந்து திருவெண்ணீறு அணிகிலாதவரைக் கண்டு அஞ்சுகின்றார். திருநீற்றின் பெருமை உணர்ந்து அதை அணிய மறுப்பவரைக் கண்டே மாணிக்கவாசகப் பெருந்தகையார் அச்சம் கொள்கின்றார்.

"பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோடு இறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியி னான்தன் தொழும்ப ரோடு அழுந்தி அம்மால்
திணிநிலம் பிளந்தும் காணாச் சேவடி பரவி வெண்ணீறு
அணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே"

என்னும் பாடல் மாணிக்கவாசகர் திருநீற்றின்மீது கொண்ட பேரன்பைப் புலப்படுத்துகின்றது.

திருநாவுக்கரசர், சிவனடியார்களுக்குத் திருநீறு அணிகலனாகவும் விளங்குகின்றது என்பதை "வெந்த நீறு அருங்கலம் விரதிகட்கு எல்லாம்"

என்பதை நமச்சிவாயத் திருப்பதிகத்தில் குறித்துள்ளார். இத்தொடரில் விரதத்தை மேற்கொண்டவர்களை விரதிகள் என்னும் சொல்லால் அப்பர் குறித்துள்ளார். இத்தொடருக்கு, ''விரதங்களால் உள்ளம் முதலிய உட்கருவிகள் தூயன ஆய வழி உணர்வு தோன்றும். அவ்வுணர்வு மெய்யுணர்வு. அவ்வுணர்வால் உணரப் பெற்றது மெய்ப்பொருள். அப்பொருளை மறவாது நினைப்பூட்டுவது திருவெண்ணீறு. அதனால் விரதிகட்கு எல்லாம் திருவெண்ணீறு அருங்கலம் ஆயிற்று. திருநீறணிந்த விரதிகளைக் கண்ட நல்வினை, யாவர்க்கும் மெய்ப்பொருளை நினைப்பிக்கும் அருட்பொருள் ஆதலின், அதனினும் அருங்கலம் பிறிதில்லை. பராவணம் ஆவது நீறு, ஆதலின் அதுவே வண்ணம் நிறைந்த அருங்கலம்'' என முத்து சு. மாணிக்கவாசகனார் உரை வரைந்துள்ளார். இவ்வுரையால் திருநீறு குறித்துத் திருநாவுக்கரசரின் திருவுள்ளம் புலனாகின்றது.

திருவேடமும் திருநீறும்

நெற்றியின்கண் திருநீறு தரித்தவராகவும் உருத்திராக்கம் முதலிய சிவசாதனங்களைத் தாங்கியவராகவும் விளங்குகின்றவர்கள் "சிவவேடம்" தாங்கியவர்கள் ஆவர். இவர்கள் எத்தகைய குற்றமுடையவராயினும் திருவேடம் தாங்கிய காரணத்தால் சிவபிரானோடு ஒப்ப மதிக்கத் தக்கவராவார். இவர்களிடத்து மனம் வேறுபடாமல், இவர்களைத தொழும் அடியார்கள் நெஞ்சில் கன்றாப்பூர் நடுநறி இறைவனைக் காணலாம் என்பது திருநாவுக்கரசர் கருத்து.

சிவபெருமான் திருவேடமே தானாய் நின்று அருளுவன் என்னும் பொருளில் அப்பரடிகள் இவ்வாறு குறித்துள்ளார். இப்பாடலில், ''திருநீறு'', ஒன்றே திருவேடமாக அமையும் என்பதை விளக்கக் கருதிய திருநாவுக்கரசர் அதனைப் பிற சைவ சாதனங்களிலிருந்து பிரித்து ஓதியுள்ளார். இதன் வழி திருநீற்றிற்கு நாவுக்கரசர் அளித்துள்ள முதன்மை உணரப்படுகின்றது. இக்கருத்தை ''எவரேனும் தாமாக இலாடத்திட்ட திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி....'' எனத் தொடங்கும் திருத்தாண்டகப் பாடலால் அறியலாம்.

3. அப்பர் அணிந்த வெண்ணீறு

அப்பரடிகள் திருநீற்றைப் போற்றிய விதம், திருநீறு தரிக்கப்படும் முறைமை, நல்வழியின் கடவுள் வாழ்த்துப் பாடலோடு அப்பரடிகளின் பாடல் ஒப்பீடு என்னும் அளவில் அப்பர் அணிந்த வெண்ணீறு என்னும் உட்தலைப்பின் விளக்கம் அமைகின்றது.

திருநீறு தரிக்கப்படும் முறைமை

''திருநீற்றை, கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் இருந்து கொண்டு தரித்தல் வேண்டும். நிலத்திலே சிந்தா வண்ணம்

அண்ணாந்து "சிவசிவ" என்று சொல்லி வலக்கையில் நடுவிரல் மூன்றினாலும் நெற்றியிலே தரித்தல் வேண்டும்'' எனத் திருநீறு அணியப்பெறும் விதத்தை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குறித்துள்ளார்.

குமரேச சதகப் பாடல் ஒன்று திருநீறு தரிக்கும் முறையைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

''பத்தியொடு சிவசிவா என்று திருநீற்றைப்
பரிந்து கையால் எடுத்துப்
பாரினில் விழாதபடி அண்ணாந்து
செவியொடு பருத்த புயமீதில் ஒழுக
நித்தமும் விரல்களால் நெற்றியில் அழுந்தலுற
நினைவாய் தரிப்பவர்....''

இப்பாடல் திருநீறு தரிப்பவர் பெறும் பயன்களையும் விளக்குகின்றது.

திருநாவுக்கரசர் விடியலுக்கு முன்னரே நீராடிப் பின்னர் நீறணிந்தார் என்பதை''

''நீராண்ட புரோதாயம் ஆடப்பெற்றோம்;
நீறணியும் கோலமே நிகழப்பெற்றோம்''

என்னும் மறுமாற்றத் திருத்தாண்டக அடியால் உணர்த்தியுள்ளார்.

அப்பர் - வேண்டல்

ஔவையார், விநாயகப் பெருமான் மீது நல்வழியில் கடவுள் வாழ்த்தாக ஒரு வெண்பாப் பாடியுள்ளார்.

''பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்
சங்கத்தமிழ் மூன்றும் தா!''

ஔவையார் பால், தேன், பாகு, பருப்புமாகிய நான்கைத் தந்து தமக்கு மூன்றாகிய சங்கத்தமிழைச் தருமாறு விநாயகரை வேண்டுகின்றார்.

''கருவாய்க் கிடந்துன் கழலே நினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய்ப் பொலிய சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலியூர் அரனே''

அப்பர் சுவாமிகள் திருநீற்றை எவ்வாறு தரித்தார் என்பதற்கு இப்பாடல் அகச்சான்றாக விளங்குகின்றது. மேலும் அப்பரடிகள் ஔவையாரைப் போன்று நான்கினைத் தந்து மூன்றை வேண்டவில்லை. மாறாக மூன்றைத் தந்து ஒன்றை மட்டுமே வேண்டுகின்றார். அப்பர், தாயின்

கருவில் கிடந்த நாள்முதல் பெருமானை நினையும் கருத்தினர்; உருவாய்த் தெரிந்த நாள் முதல் சிவநாமம் பயின்றவர்; 'சிவாயநம' என்று திருவாய் பொலியத் திருநீறு அணியப் பெற்றவர். இவ்வாறு மனம், மொழி, மெய் என்னும் மூன்றும் பொருந்துமாறு வழிபட்ட தமக்குச் சிவகதியாகிய ஒன்றை மட்டும் தருமாறு பாதிரிப்புலியூர் இறைவனை வேண்டுகின்றார்.

திருநீறு முத்திச் சாதனங்கள் மூன்றினுள் புறச் சின்னமாக அமைவது. சைவ முழுமுதற் கடவுளே வெண்ணீறு சண்ணித்த மேனியனாகக் காட்சி நல்குகின்றான். அடியவர்களுக்கு அணிகலனாகத் திகழ்வது திருநீறு. அப்பரடிகள் திருநீற்றை மனம், மொழி, மெய் துணை கொண்டு அணிந்தமையை அகச்சான்றுவழி அறிய முடிகின்றது.

119. அப்பரும் நாட்டுப்புற இலக்கியமும்

க. ஜெயலெட்சுமி, மதுரை.

நாட்டுப்புற இலக்கியம்

உலகில் உள்ள அனைத்து இனங்களிலும் நாட்டுப்புற இலக்கியங் களைக் காண்கிறோம். நாட்டுப்புற மக்களின் பழக்க வழக்கங்களையும் பண்பாடுகளையும் நம்பிக்கைகளையும் ஆராயும் இயலே நாட்டுப்புற வியலாகும். நாட்டுப்புற மக்களது உணர்வுகளையும் கவிதை புனையும் ஆற்றலையும் கற்பனை வளத்தையும் அவர்களது பாடல்களிலே காணலாம். வாய்மொழி இலக்கியங்களே உலகில் முதலில் தோன்றின என்பதையும் எழுத்து முறை வழக்கிற்கு வருமுன்னர் எல்லா இலக்கியங் களும் வாய்மொழி இலக்கியங்களாகவே இருந்தன என்பதையும் வரலாறு நமக்குக் காட்டுகின்றது. ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தை பண்பாட்டை, பழக்க வழக்கங்களை, வரலாற்றை, உண்மையான முறையில் நமக்குப் படம் பிடித்துக் காட்டுவன நாட்டுப்புற இலக்கியங்கள். இப்பாடல்கள் தாளக்கட்டு, சொல், தொடை நயமிருந்தாலும் இலக்கண வரம்பிற்கு உட்படாதன. பெரும்பாலான நாட்டுப்புறப் பாடல்கள் மக்கள் பாடல்களாகும். ஏட்டிலக்கியமாகவும் பாட்டிலக்கியமாகவும் விளங்கும் நாவுக்கரசர் தேவாரத்தில் நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு இருந்தது.

பேச்சு வழக்குச் சொற்கள்

பொதுவாகச் செவ்வியல் இலக்கியங்களில் சொற்களைத் தேர்வு செய்கின்றபோது பேச்சு வழக்கிலுள்ள சொற்களை எடுத்தாள்வது இல்லை. ஆனால் நாட்டுப்புறப் பாடல்களில் பேச்சு வழக்குச் சொற்கள்தாம் அதிகம் இடம் பெறும். இத்தகையதொரு அமைப்பு நாவுக்கரசர் தேவாரத்தில் இடம் பெறுகிறது. பக்தி இலக்கியமாகையால் படிப்பவர்க்கு எளிமையாக அமையும் வகையில் அமைந்திருக்கின்றது.

தட்டி முட்டித் தள்ளாடி : (5.21.2)

கணகண இருமிநாளும் (4.28.1)

தெத்தே என (4.17.1)

துண்ணெணத் தோன்றி (5.77.5)

நெறு நெறு என அடர்த்திட்ட (6.18.1)

நிச்சல் - 5.60.2 (நித்தல்)

சிரிச்சு (5.1.3) (சிரித்து)

விரிச்சு (6.51.10) (விரித்து)

வைச்சு (5.60.2) (வைத்து)

பிச்சு (6.25) (பித்து)

உய்ஞ்சு (5.60.2) (உய்ந்து)

நைஞ்சு (5.31.5) (நைந்து)

எனப் பேச்சு வழக்குச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பழமொழிகள்

பழமொழிகள் பழங்காலத்தில் தோன்றியது என்பதை அதன் பெயரே உறுதிப்படுத்தும், பழமொழியை மலையாளத்தில் 'பழஞ்சொல்' என்றும் தெலுங்கில் 'நாண்ணுடி' என்றும் ஆங்கிலத்தில் proverb என்றும் வழங்குகின்றனர். பழமொழி என்ற சொல் மூதுரை, முதுமை, மொழிமை, முன்சொல், முதுசொல், பழஞ்சொல் என்ற ஆறு பொருளைத் தருவதாகச் சேந்தன் திவாகரம் கூறுகின்றது. பழமொழிகள் சமுதாயத்தின் அனுபவ முதிர்ச்சியை விளக்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

நாவுக்கரசர் தேவாரத்தில் பழமொழிகள்

அப்பர் தேவாரத்தில் 32 பழமொழிகளைக் காணமுடிகின்றது. மெய் எலாம் வெண்ணீறு எனத் தொடங்கும் திருவாரூர்ப் பதிகம் ஒன்றிலேயே பத்துப் பழமொழிகள் இடம் பெற்றுள்ளன. சமண சமயம் புகுந்து பாழ் பட்டதையெண்ணி உருகும் பதிகமாக இஃதமைகின்றது. இது தவிர வேறு சில பழமொழிகளையும் பிற பதிகங்களில் அமைத்துப் பாடியுள்ளார்.

'மெய்எலாம் வெண்நீறு சண்ணித்த மேனியான் தாள் தொழாதே
உய்யல் ஆம்என்று எண்ணி உறிதூக்கி உழிதந்தேன் உள்ளம்விட்டு
கொய்உலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயில்ஆடும் ஆரூரைக்
கையினால் தொழாது ஒழிந்து, கனிஇருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே (4.5.1)

இப்பாடலில் "கனியிருக்கக் காய் கவர்தல்" என்னும் பழமொழி கூறப்படுகின்றது. இதனைச் சைவமிருக்க அதை விடுத்துச் சமணம் சார்ந்த தம் செயலோடு ஒப்பிட்டு உவமையாகப் பாடுகின்றார்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" (திருக்குறள் - 100)

என்று திருவள்ளுவரும் இப்பழமொழியைக் கையாண்டுள்ளார். இனி இப்பதிகத்தில் அமைந்துள்ள பிற பழமொழிகள் வருமாறு:

முயல் விட்டுக் காக்கைப் பின் போனவாறே (4.5.2)
அறமிருக்க மறத்தை விலைக்குக் கொள்வது (4.5.3)
பனிநீரால் பாவை செயப் பாவித்தேன் (4.5.4)
ஏதன்போர்க்கு ஆதனாய் அகப்பட்டேன் நானே (4.5.5)
இருட்டறையில் மலட்டுமாட்டைக் கறத்தற் போல (4.5.6)
விளக்கிருக்க மின்மினித் தீக்காய்ந்தவாறே (4.5.8)
தவமிருக்க அவம் விலைக்கு செய்து தழுக்கினேனே (4.5.9)
கரும்பு இருக்க இரும்பு கடித்து எய்த்தவாறே (4.5.10)

என்பன போன்ற பழமொழிகள் சைவம் விட்டுச் சமணம் சென்ற தன்மைக்கு வருந்திப் பாடியதாகும்.

நெஞ்சைக் குறிப்பன

அருகயிறு ஊசல் போல ஆனேன் (4.26.6)
உழுதசால் வழியே உழுவான் (5.90.8)

முதலான பழமொழிகள் தமது நெஞ்சைக் குறிப்பிடுவதுபோலப் பாடுகிறார்.

உள்ளத்தைக் குறிப்பன

இருதலைக் கொள்ளியின் இடையகப்பட்ட எறும்புபோல (4.75.6)
பாம்பின் வாய்த் தேரை போல (4.46.1)
மத்துறு தயிரே போல மறுகும் (4.52.9)

என்று தம் உள்ளத்தைக் குறித்துப் பாடுகிறார்.

ஐம்புலன்களைப் பற்றியன

ஐம்புலன்களால் தாம் அடைந்த தொல்லை பற்றி மூன்று பழமொழிகளில் விளக்குகிறார்.

உலைநீரில் திளைத்து விளையாடின
ஆமைபோலத் தெளிவிலாதேன் (4.79.6)
கழியிடைத் தோணி போன்றேன் (4.31.6)
பாழுக்கே நீரிறைத்து (4.52.7)
மோத்தையைக் கண்ட காக்கை போல (4.75.7)

உற்றலால் கயவர் தேறார் (4.31.8)

மன்றத்துப் புன்னை போல மரம்படு துயரம் (4.26.8)

காம்பிலா மூழை போல (4.46.1)

விளக்கத்தில் கோழி போன்றேன் (4.31.5)

என்றும் பொதுவாகக் கூறுகின்றார். மக்கள் உலகப் பற்றுக்களில் தம் நினைவைச் செலுத்தி, அல்லல் உறுவதனையும் இறைவன் பெருமை களை அறியாமல் வீணே காலத்தைக் கழிப்பதையும் பழமொழிகள் மூலம் விளக்குகிறார்.

ஆற்றிலே கெடுத்துக் குளத்திலே தேடுதல் போல (4.97.6)

இன்றுளார் நாளை இல்லை (5.99.9)

ஓடும் நீரினை ஓட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கன் (5.99.9)

கூவலாமை குரை கடலாமையைக்
கூவலோ டொக்கமோ கடல் என்றல் (5.100.5)

கையில் உள்ள நெல்லிக்கனிபோல (5.12.2)

தழலை நீர் மடிக் கொள்ளன்பின் (5.12.2)

நரிவரால் கவ்வச் சென்ற நற்றசை இழந்தொத்த (4.27.5)

நுவலவும் வேண்டுமோ நுண்ணுணர்ந்தோர் கட்கே (5.39.8)

போன்ற பழமொழிகள் உலகத்தவரை நோக்கிக் கூறுவதாக அமைகின்றன. உலகப் பற்றுக்களில், தம் நினைவைச் செலுத்தித் துன்புறுவதனையும், இறைவன் பெருமைகளை அறியாமல் வீணே காலத்தைக் கழிப்பதனையும் இப்பழமொழிகள் நமக்குத் தெரிவிக்கின்றன.

நீதி வாக்கியங்கள்

நாவுக்கரசர் பாடல்களில் பல நீதி வாக்கியங்களைக் காணமுடிகிறது.

அரன் பொற்கழல் உள்ளிருக்கும்
உணர்ச்சியில்லாதார் நள்ளிருப்பர் நரகக்குழியிலே (5.79.1)

அருநோய்கள் கெட வெண்ணீறணியாராகில்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றரே (6.95.6)

ஆவினுக் கருங்கலம் அரனஞ்சாடுதல் (4.11.2)

ஆனைக்காவில் அம்மானை அணைகிலார்
ஊனைக் காவி உழிதர்வர் உளரே (5.13.1)

இம்மை அம்மை என இரண்டுமிவை
மெய்ம்மை தானறியாது விளம்புவர் (5.26.4)

உற்றார் ஆர்உளரோ உயிர்கொண்டு போம்பொழுது (4.9.10)

ஒருக்காலும் திருக்கோயில் சூழாராகில்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே (6.95.6)

கற்றுக் கொள்வன வாயுள நாவுள (5.91.6)

கூற்றம் வந்து குமைந்திடும் போதினில்
தோற்றம் வந்து தெளிவுறலாகுமே (5.86.4)

கொல்லத்தான் நமனார் தமர் வந்தக்கால் இல்லத்தார்
செயல் ஆவதென் ஏழைகாள் (5.43.1)

கோடி காலனைக் கருத நாளெல்லாம்
பாடி காவலிற் பட்டுக் கழியுமே (5.78.6)

சிவனென்னும் ஓசையல்லது.....
உலகின் திருநின்ற செம்மை உளதோ (4.8.1)

தன்னை நோக்கித் தொழுதவர்க்கெல்லாம்
பின்னை என்னார் பெருமான் அடிகளே (5.38.2)

திங்களுக் கருங்கலம் திகழு நீண்முடி (4.11.5)

நங்களுக் கருங்கலம் நமச்சிவாயமே (4.11.5)

நமன் என்பார் நாகர்க்கு
நமக்கெல்லாம் சிவனென்பான் (5.97.18)

நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே (4.11.2)

நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் (4.1.2)

இறைவனின் உருவம் பற்றியும், பிறவிப்பணி அகற்ற யாது செய்ய வேண்டும் என்பது பற்றியும், தவச்சிறப்பு, திருவடிச் சிறப்புக்களையும், நீதி வாக்கியங்களாகப் படைக்கிறார்.

ஈற்றடிகள் அமைந்த பாங்கு

நாவுக்கரசர் பாடல்களில் ஈற்றடியானது ஒரே மாதிரியாக அமைந்துள்ளது. சில சொற்கள் தொடர்கள், அடைமொழிகள், திரும்பத் திரும்ப பல பாடல்களில் சொல்லப்பட்டுள்ளன. அப்பர் தேவாரத்தில் திரும்பத் திரும்ப வரும் இத்தொடர்கள் நாட்டுப்புறப் பாடல்களின் அமைப்பை நமக்கு நினைவுபடுத்துகின்றன. இறைவன் மீது போற்றிப் பாடல்களாக அமையும் இப்பாடல்கள், படிப்பவர்க்கு எளிமையாக அமையவேண்டும் என்ற பயன் கருதி அவ்வாறு அமைந்திருக்க வேண்டும். திருநாவுக்கரசரின் பெரும்பாலான திருத்தாண்டகப் பதிகங்கள் ஒரே மாதிரியான ஈற்றுத் தொடரைப் பெற்றுத் திகழ்கின்றன. சான்றாக, "அரியானை அந்தணர்தம்"

எனத் தொடங்கும் திருத்தாண்டகப் பதிகத்தின் முதல் பதிகம் கோயில் தலத்திற்குரியது. பத்துப் பாடல்களைக் கொண்ட இப்பதிகம், இறைவனைப் பலவாறு புகழ்ந்து வருணிக்கும் வகையில் அமைந்துள்ளது. ஒவ்வொரு பாடலும் "பெரும்பற்றப் புலியூரானை பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே" என்று நிறைவு பெறுகிறது. இஃது பெரிய திருத்தாண்டகம் என்னும் சிறப்புப் பெயர் கொண்டது. ''மங்குல் மதி தவழும் மாடவீதி'' எனத் தொடங்கும் பதிகம் கோயில் தலத்திற்குரியது. பதினொரு பாடல்கள் கொண்ட இப்பதிகம் புக்க திருத்தாண்டகம் என்னும் சிறப்புப் பெயர் கொண்டது. ஒவ்வொரு பாடலும் ''புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார் தாமே'' என்னும் இறுதி வரியுடன் நிறைவு பெறுகிறது.

''வெறி விரவு கூவிளநல்'' எனத் தொடங்கும் பதிகம் திருஅதிகை வீரட்டானம் தலத்திற்குரியது. பதினொரு பாடல்கள் கொண்ட இப்பதிகம் ''ஏழைத்திருத்தாண்டகம்'' எனச் சிறப்புப் பெயர் கொண்டது. இப்பாடல்கள் அனைத்தும், ''ஏழையேன் நான்பண்டு இழந்த ஆறே'' என்னும் இறுதி வரியுடன் நிறைவு பெறுகின்றன.

''சந்திரனை மாகங்கை'' எனத் தொடங்கும் பதிகம் திருஅதிகை வீரட்டானம் தலத்திற்குரியது. இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலும், ''அவன் ஆகில் அதிகை வீரட்டன் ஆமே'' என்ற தொடருடன் நிறைவு பெறுகிறது. இதுபோல வேறு பல ஈற்றுத் தொடர்களையும் காண்கிறோம்.

''தலைப்பிள்ளை ஆண் பெறுவீர்
தகப்பனார் பெயரிடுவீர்
மறுபிள்ளை பெண் பெறுவீர்
மாதா பெயரிடுவீர்''

என்று இறுதி வரிகள் ஒரே மாதிரியாக அமைந்துள்ளது. நாட்டுப்புறப் பாடல்கள் நினைவில் வைத்துப் பாடப்படுவதாலும், பாடியது மறவாமல் இருக்கவும், சில அடிகள் திரும்பத் திரும்பப் பாடப்படும். நாட்டுப்புற இலக்கியச் செல்வாக்கு எழுத்திலக்கியத்திலும் உண்டென்பதற்கு நாவுக்கரசர் தேவாரம் சிறந்த சான்றாகும்.

120. பதிக வரலாறும் கோயில் வரலாறும்

ஸ்ரீஸ்ரீ ஜெயந்தி, கோவை.

நாவுக்கரசரின் வாழ்க்கையில் பட்ட துன்பத்தினால் அவர் சைவ சமயத்தைத் தழுவி மிகவும் பேறு பெற்றவர். அவரின் பதிக வரலாறு பற்றியும், கோயில் வரலாறு பற்றியும் இக்கட்டுரையில் சில செய்திகள் அமைந்துள்ளன.

மருணீக்கியார்

சைவமும் தமிழும் தழைத்தினிதோங்க, ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்து, ஏழாம் நூற்றாண்டின் முற்பாதிவரை எண்பத்தோர் ஆண்டுகள் வாழ்ந்து ஆயிரம் பிறை கண்ட அப்பர் பெருந்தகை அவதரித்த தலம் நடு நாட்டின் ஒரு பகுதியாக விளங்கிய திருமுனைப்பாடி நாட்டுத் திருவாமூராகும். இவரது தந்தையார் வேளாண் குலத்துதித்த புகழனார். தாயார் மாதினியார். தமக்கையார் திலகவதியார். இளமையில் பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் மருள்நீக்கியார் ஆகும்.

திலகவதியார்

இவரது தமக்கை திலகவதியாருக்கு வயது பன்னிரெண்டாண்டில் மணமுடிக்க நிச்சயித்திருந்த திறல் வீரர் கலிப்பகையார். திருமண முடியும் முன் போர் மேற்சென்றார். இதன் பின் பெற்றோர் மறைந்தனர். மற்றும் போர் மேற்சென்ற கலிப்பகையாரும் போரில் உயிர் துறந்தார். இதனால் திலகவதியார் உயிரை விட முற்பட, மருள்நீக்கியார் தடுத்து உயிர் வாழச் செய்தார்.

தருமசேனர்

இந்நிகழ்ச்சிகள் யாவும் மருள்நீக்கியார் உள்ளத்தில் நிலையாமைத் தன்மையினை உணர்த்தவே, தம் உடைமைகள் அனைத்தையும் அறத்தின் பால் செலவிட்டார். அத்துடன் சமயங்களானவற்றின் நல்லாறு தெரிந்துணர, நம்பர் அருள் இல்லாமையால் கொல்லாமை மறைந்தொழுகும், சமண சமயம் சார்ந்து தருமசேனர் என்னும் பெயருடன் பாடலிபுத்திர நகரில் சமண்பாழியில் இருந்து அச்சமய ஆக்கத்தின் தலை நின்றார்.

திருநாவுக்கரசர்

இதனால் திருவதிகையில் சிவத்தொண்டு செய்து வந்த இவரது தமக்கையார் வருந்திச் சிவபிரானிடம் தம் தம்பி சைவம் புக, நாளும் வேண்டி நின்றார். இதன் காரணமாய் நாவரசருக்குச் சூலை நோய் வந்து யாவராலும் தீர்க்க முடியாது போகவே, பின் தமக்கையர்பால் வந்து சரணடைந்தார். திலகவதியார் திருவாளன் திருநீற்றைக் கொடுத்து, திருவதிகை வீரட்டானேசுவரர் திருச்சந்நிதிக்கு அழைத்துச் சென்றார். அப்போது இவர், ''கூற்றாயினவாறு விலக்ககலீர்'' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாட, நோய் விலகியது. அத்துடன் இவருக்குத் "திருநாவுக்கரசு" என்னும் பெயரை விண்மொழியால் சிவபிரான் சூட்டினார். இதன் பின் சைவநெறி நின்று திருவதிகையில் தங்கியிருந்தார்.

பதிகம் : பெயர் வழக்கு

பதிகம் என்னும் அமைப்பு முறையானது பதிற்றுப்பத்தில்தான் முதற்கண் காணப்படுகிறது. ஒவ்வொரு பத்துப் பாடல்களுக்குப் பின்னர் தொகுப்புப் பின்னுரையாக இப்பதிகம் அமைந்துள்ளது.

பின்னர் கி.பி. நான்காம் நூற்றாண்டின் இறுதி அல்லது ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த காரைக்காலம்மையார், ''திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள்'' என்ற பெயரில் இரு பதிகங்கள் பாடியுள்ளார். இவற்றுள் திருக்கடைக் காப்புச் செய்யுளையும் சேர்த்துப் பதினொரு பாடல்கள், எஞ்சியுள்ள பத்துப் பாடல்களே இங்குப் 'பதிகம்' என்ற இலக்கிய வகையாகக் குறிக்கப்படுகின்றன.

பத்துப் பாடல்களைக் கொண்டு பயன் கூறும் பாடலான திருக்கடைக்காப்புப் பாடலொன்றையும் சேர்த்துப் பதினொரு பாடல் களைக் கொண்டு பக்தி அடிப்படையில் அமைந்து விளங்குவனவே 'பதிகம்' ஆயின என்று கூறலாம்.

'பதிகம்' என்பது பாயிரத்தினைக் குறிக்கும் பல பெயர்களில் ஒன்று என்பர் நன்னூலார்.

''பதிகக்கிளவி பல்வகைப் பொருளைத் தொகுதியாகச் சொல்லுதல் தானே'' என்பர் சிவஞான முனிவர்.

பக்தி இலக்கியப் பதிக அமைப்பு

நாயன்மார், ஆழ்வார் காலத்தில் 'பதிகம்' என்பது இறைவனைப் போற்றிப் பாடிய பத்துப் பாக்களின் தொகுதியாக வழங்கியது.

இனிப் ''பாயிரம் நாந்தி பதிகம் மென்ப'' என்னும் விதிப்படி திருஞானசம்பந்தரும் நம்பியாரூரரும் இறுதியில் நாந்தி (திருக்கடைக்காப்பு)

கூறலாகிய பாயிரம் உரைத்தலால் பதிகம் எனப் பெயர் பெற்றதாகக் கருதுவாரும் உளர்.

இங்ஙனம், இவர்களுடைய திருமுறைப் பதிகங்கள் பதிகங்களாகவே அந் ''நாந்தி'' இல்லாத திருநாவுக்கரசர், தேவாரங்களும் இனம் பற்றிப் பதிகம் ஆயிற்று என்பர். இது ஒரு முறையாகும்.

மூவர் அருளிய தேவாரத்தில் பத்துப்பாக்கள் கொண்ட பாஅமைப்பு 'பதிகம்' என்று அழைக்கப்பட்டது. எனினும், பயன் கூறும் பாவோடு பதினொரு பாக்கள் கொண்டதும் 'பதிகம்' என்றே அழைக்கப்படுகிறது. பத்துப்பாக்களில் கூடச் சில பாக்கள் குறைந்தும், சில பாக்கள் பதினொன்றுக்கு மேற்பட்டும் காணப்படுகின்றன. அவையும், 'பதிகம்' என்றே வழங்கப்படுகின்றன. பிற்காலத்தில் 'பதிகம்' என்பது தேவாரப் பாக்களையே உணர்த்துவதாகி விட்டது எனலாம்.

பாசுரம், பதிகம் என்பன ஒரு பொருட் சொற்கள் என்று சிலர் கொள்வர். ஆயின் பாசுரம் என்பது செய்யுட்கும் பதிகம் என்பது அச்செய்யுள் பத்துக் கொண்ட ஒரு தொகுதிக்கும் பெயராதல் வேண்டும். இப்'பதிகம்' என்பதே பின்னர் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுப் பல பதிக இலக்கியங்கள் தோன்றுவதற்கு வித்திட்டது எனலாம்.

ஒரே காலத்தில் வாழ்ந்த சம்பந்தர், அப்பர் அருளிய பதிகங்களில் பல வேறுபாடுகளைக் காணமுடிகிறது. சம்பந்தர் தேவாரத்தில் பத்துப் பாடல்களும், பதினொராவது பாடலாகத் திருக்கடைக்காப்பும் ஆகப் பதினொரு பாடல்கள் காணப்படுகின்றன. ஆயின் அப்பர், பாக்களில் இவ்வமைப்பு முறை காணப்படவில்லை. பதினொன்று, பன்னிரண்டு இருபது, முப்பது பாக்கள் வரை காணப்படுகின்றன. மேலும் அவருடைய தேவாரத்தில் திருக்கடைக்காப்புப் பாடல்கள் அருகியே காணப்படுகின்றன. சில பதிகங்களில் பத்துப் பாக்களுக்கும் குறைவாகவே பாக்கள் உள்ளன. அவற்றையும் 'பதிகம்' எனும் பெயராலேயே அழைத்தனர் ஆன்றோர்.

பதிகம் என்பது இறைவன் மீது பக்தி அடிப்படையில் பாடப் பட்டிருத்தல் வேண்டும். பாடல் எண்ணிக்கைக்கு அளவில்லை. பதிகப்பலன் கூறும் பாடல் இருக்க வேண்டுமென்ற விதி தேவையில்லை. இப்பதிகம் என்பதே பக்தி இலக்கியங்களுக்கு உரியதாகப் பிற்காலத்தில் வழங்கப் பட்டன.

தலத்தின் பெயர்களே பதிகத்தின் பெயர்களாக அமைந்துள்ளன. பொதுப் பதிகங்கள் அப்பர் தேவாரத்திலேயே அதிகமாகக் காணப்படு கின்றன. பெரும்பாலான பாக்கள் ஏகாரத்திலேயெ முடியுமாறு பாடப் பட்டுள்ளன. சில பதிகங்களின் சிறப்புக் கருதி அத்தலப் பெயருடன் வேறு சில தலைப்புக்களும் அப்பதிகங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

இரண்டு பதிகங்களில் மட்டுமே பதிகப் பலன் சொல்லப்பட்டுள்ளது. சம்பந்தர் தம்மைப் பற்றிய பதிகப் பலன்களில் கூறுவார். ஆயின் அப்பர் தம்மை விட இறைவனையே முதன்மையாக்க கருதினமையால் பதிகம் பலனைச் சொல்லவில்லை. மாறாக இறைவன் உறையும் தலங்களின் பெருமைக்கே முதலிடம் கொடுத்துப் பாடியுள்ளார். பதிகத்தில் இறுதிப் பாடலில் இராவணனை இறைவன் அடர்ந்து அருள் புரிந்த செய்தியையே கூறுவதனால் அப்பாடலை 'முடிக்கும் பாடல்' என்று கூறலாம்.

கோயில் வரலாறு

யாத்திரையின் தனிச்சிறப்பு

நாவரசர் பல தலங்களுக்குச் சென்று பல பதிகங்களைப் பாடியுள்ளார். கந்தை மிகையாம் கருத்துடைய நாவுக்கரசரின் யாத்திரை முறைமை, பற்றற்ற நிலையான துறவு நெறிக்கேற்ற வகையில் அமையப் பெற்ற தாகும். அவ்வகையில் சம்பந்தர், சுந்தரர் ஆகியோரின் யாத்திரை முறைமை யினின்றும் இவரது யாத்திரை வெகுவாக மாறுபட்டுள்ளது எனின் அது மிகையன்று.

நாவரசர் சென்று தரிசித்த நாடுகள் சோழநாடு, பாண்டிய நாடு, கொங்கு நாடு, நடுநாடு, தொண்டை நாடு, துளுவ நாடு, வட நாடு என்னும் ஏழு நாடுகளில் உள்ள 125 தலங்கள் பற்றி 312 பதிகங்கள் பாடியுள்ளார். நடுநாட்டில் உள்ள பாடல் பெற்ற தலங்கள் பற்றிய பதிகங்கள் பற்றி இங்குக் காண்போம்.

நடுநாடு

நாவரசர் நடுநாட்டில் உள்ள திருஆமூர் திருவதிகை வீரட்டம் என்னும் ஊரில் சூலை நோய் தீர்த்து ஆட்கொள்ளப்பெற்று, முதல் பாடல் பாடப்பெற்ற தலம். திருவதிகை ஈடுபாடு தனிப்பெருமை வாய்ந்தது. இதற்குக் காரணங்கள் உள்ளன.

திருவதிகை வீரட்டானம் சிவபிரான் வீரச் செயல்புரிந்த எட்டுத் திருத்தலங்களுள் ஒன்று. அது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றினாலும் சிறப்புடையது. நடுக்கடலினுள் பாடிய "சொற்றுணை வேதியன்" என்ற திருப்பதிகம் பாடியருளப் பெற்றது.

திருப்பாதிரிப்புலியூர்

புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாத முனிவர் பூசித்த தலம். அவர் தவஞ் செய்திருந்து திருநடங்கண்டு பேறு பெறும் "தில்லை"ப் புலியூரினின்றும் பிரித்துணரும் பொருட்டு இதன் தலமரமாகிய பாதிரி என்றதுடன் சேர்த்து இது பாதிரிப்புலியூர் எனப் பெயர் வழங்கப் பெறும்.

அடியோங்கட்குத் தோன்றாத் துணையாய் இருந்தனன் இறைவன் என்பது பதிகக் கருத்தாம். இறைவன் தண்ணருள் செய்து இடர்களை யெல்லாம் நீக்கி யாட்கொண்ட கருணைத் திறத்தினை வியந்து பாராட்டியதாம்.

திருக்கோவலூர் (வீரட்டங்களுள் ஒன்று)

''செத்தையேன் சிதம்ப நாயேன்''

என்ற திருப்பதிகம் இப்பிறவியின் தீமையை உணராது மயங்கியும், புலன்களுக்கேவல் செய்தும் உலக இன்பங்களுள் அழுந்தியும், மக்கள் மனைவி சுற்றம் என்னும் கூட்டத்திடை யாட்டப்பட்டும் துன்பமுறும் மனிதர்கள் அவற்றிற் செலுத்தும் சிந்தையை மாற்றி இரப்பவர்க்கீந்தும், இறைவனைப் பேணிப் போற்றி நினைந்துமிருந்தால் நன்மையும் இன்பமும் அடைகுவர்.

தொடர் யாத்திரையாகப் புறப்பட்டு வருதல்

திருஆமாத்தூர்

அஞ்ஞானத்தால் தாமாகத் தேடியறியப்படாத சிவனை ''அருளாய்'' என்று வணங்கி அயன், மாலுங் கண்டனர். அவனைச் சிந்தியாதவர் தீவினையாளரேயாம் தான் உள்ளே நினைந்தேன். நினைதலும் வஞ்சவாறுகள் வற்றின. பத்தி வெள்ளம் பரந்தது: அவன் எமையாளுடை யீசன்: ஆனஞ்சாடுபவன் அவனிருக்குமிடம் ஆமாத்தூர்.

திருத்தூங்கானை மாடம்

தூங்கானை மாடம் அமைப்பினால் போந்த பெயர். ஒரு யானை படுத்திருப்பது போலும் வடிவாக இத்திருக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது காணலாம். கோயிலின் முன்புறம் யானையின் முகம் போலுயர்ந்தும், பின்புறம் யானையின் பின்பாகம் போலப் பருத்து வட்ட வடிவமாயும் அமைந்துள்ளது.

வெளிப்படை ''பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்'' என்று தொடங்கியது.

சமண் சமயத் தொடக்குண்ட இவ்வுடலுடன் உயிர் வாழத் தரியேன். ஆதலின் இவ்வுடலில் உனது இலச்சினைகளாகிய சூலம், இடபம் இவைகளைப் பொறித்தருளுக!

திருநெல்வாயில் அரத்துறை

நடுநாட்டுத் தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் முதலில் வைத்தெண்ணப்படுவது. இது கொங்கு நாட்டெல்லை தாண்டி மேற்கிருந்து நடுநாட்டுக்குள் வந்தபோது முதலில் காணவுள்ள தலம்.

''விண்ணோருமறிகிலார்'' என இப்பதிக முழுதும் முழுதும் வருவது காண்க. ஒப்பாரியிலாதார்க்கு ஒப்பனை பலவும் சொல்லிய ஒப்பற்ற கருத்துடைய பதிகம்.

திருமுதுகுன்றம்

இது பழமலை, விருத்தாசலம், விருத்தகிரி முதலிய பல பெயர் களாலறியப்படும் ''முத்தாயுலகுக்கெல்லாம் முதுகுன்றம்'' (நம்பிகள் தேவாரம்) என்றபடி உலகத்தில் மலைகள் படைக்கப்படுவதன் முன் சிவன் படைப்பிலே உண்டாக்கப்பட்ட மலையாதலின் இப்பெயர் பெற்றது.

திருமுதுகுன்றினை உடைய சிவபெருமானைத் தீவினையினால் முன்னம் அறியாமல் திகைத்துத் திரிந்தவாறு தான் என்னே என்றிரங்கியது. பழம் பொருட்கெல்லாம் பழமையாய் நின்ற அவரையும் அறியாதிருந்தது எனது தீவினையும் அறியாமையும் ஆகியவற்றின் மிகுதி என்று எண்ணிய ஆற்றாமை.

திருநாவுக்கரசரின் பதிக வரலாறு பற்றிய சில செய்திகளையும் அவர் தலயாத்திரை சென்ற நாடுகளில் நடுநாட்டில் உள்ள கோயில்கள் பற்றிய செய்தியும் இக்கட்டுரையில் அமைந்துள்ளன.



திருநாவுக்கரசர்

இடையறாப் பேரன்பும் மழைவாரும் இணைவிழியும் உழவாரத்திண்
படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும்
நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப்பாடல்
தொடையறாச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும் துதித்து வாழ்வாம்